Library
TDC
30/843
30/843

# தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை

## 1988-89

# தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை

## 1988-89.

## முன்னுரை.

1988–89 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநில நிருவாகம் குறித்த இந்த அறிக்கை மாநில அரசின் பல்வேறு துறைகளின் செயல்பாடு பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது.

2. தென்மேற்குப் பருவ மழை இயல்பாகப் பெய்வதைக் காட்டிலும் அதிகமாக, அதாவது 380.4 மி.மீ. மழை பெய்திருந்தபோதிலும், சரியான சமயத்தில் பெய்ச வில்லை. இதனால் பாசனப் பகுதிகளில் உள்ள நீர் சேமிப்பு, அளவு குறைந்தது. மேலும் மானாவாரியில் விதைப்பு செய்வதில் கால தாமதம் ஏற்பட்டது. வடகிழக்குப் பருவ மழை போதிய அளவு மழையை அளிக்கத் தவறி விட்டது. எனினும், நெற்பயிருக்கு சத்துள்ள இடு பொருள்களை உரிய அளவு பயன்படுத்தியது. திறமையான நீர் நிருவாகம், தேவையை அடிப்படையாகக் கொண்ட பயிர் பாதுகாப்பு முதலியவற்றின் மூலம் இம்மாநிலம் 57 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை உற்பத்தி செய்தது.

3. பொது விநியோக முறையை விரிவாகவும், திறமையாகவும் செயற்படுத்தி அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், பாமாயில் முதலிய இன்றியமையாப் பொருள்கள் நியாயமான விலைகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

4. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டுக் கழகம், 1988–89 ஆம் ஆண்டில், சூரிய சக்தி, காற்றுச் சக்தி, குப்பைக்கூள எரிசக்தி தொடர்பான திட்டங்கள் பற்றி தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. எரி பொருளாகப் பயன்படும் மரங்களை வளர்த்தல் போன்ற புதிய திட்டங்களை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. பெரிய அளவில் சாண எரிவாயு நிறுவனங்களைப் பிரபலப்படுத்துவதற்கும், கிராமப் பகுதிகளில் கூள எரிசக்தியை ( Biomass ) அதிக அளவில் பயன்படுத்துவதற்காக ஸ்டர்லிங் எஞ்சின் கேசிபயர் ( Gassifiers ) போன்ற சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும் தனிக் கவனம் செலுத்தியுள்ளது.

5. தொழில் துறையில் 1988–89 ஆம் ஆண்டில் (1989 ஜனவரி நிலவரப்படி) 9,631 சிறு தொழில் பிரிவுகளும், 5,047 கைத்திறத் தொழில் பிரிவுகளும் பதிவு செய்யப் பட்டன. இதனால், 10 இலட்சத்திற்கும் அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது.

6. இவ்வாண்டில் 645 பேரூராட்சிகளில் 236 பேரூராட்சிகள் குடிநீர் வழங்கல் விரிவான திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

7. கல்வித் துறையில் தமிழ்நாட்டில் 6–11 வயதுத் தொகுதியில் 100 சதவீதமும் 11–14 வயதுத் தொகுதியில் 76.63 சதவீதமும் கல்வித் தகுதி பெற்றவர்கள். தொடக்கப்பள்ளி நிலையில், பாதியில் படிப்பை நிறுத்திவிடுவோரின் எண்ணிக்கை மிக அதிக அளவுக்குக் குறைந்துள்ளது. மேல்நிலைப் பள்ளி நிலையில் வாழ்க்கைத் தொழில் கல்வியை அளிப்பதில் தமிழ்நாடு முன்னிலையில் விளங்குகிறது. ஆய்வாண்டில் கல்வித் துறை தொடர்ந்து உயரிய முன்னுரிமை பெற்று வருகிறது. கல்வி மேம்பாட்டிற்காக செய்யப்பட்ட செலவு சுமார் ரூ. 742 கோடியாகும்.

8. கிராம சுகாதார மையங்கள், கிராம மக்களுக்கு நோய்த் தடுப்பு, சிகிச்சைப் பணிகளை அளிக்கின்றன. 31–3–1989 ஆம் நாள் நிலவரப்படி இம்மாநிலத்தில் 72 சமுதாய சுகாதார மையங்கள் உட்பட 1,222 தொடக்க சுகாதார மையங்கள் செயல்படுகின்றன. பார்வையின்மையைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டம் 145 தொடக்கச் சுகாதார மையங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

9. 1988–89 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 5,155 இலட்சம் செலவிடப்பட்டது. இதனால் வறுமைக் கோட்டிற்கும் கீழ்நிலையில் மிகவும் வாடிய 87.320 குடும்பங்கள் பயனடைந்தன. மொத்தம் 1,27,191 ஆதி திராவிடர்/பழங்குடியினர், இதில் மகளிரின் எண்ணிக்கை 87,765.

10. கிராம மேம்பாட்டுத் தேசிய திட்டத்தின்கீழ் கிராம இளைஞர்களின் பயனுக்காக ரூ, 8,814.68 இலட்சம் செலவிடப்பட்டது. இவ்வாண்டில் 12.957 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களில் 4,817 பேர் சுயமாகத் தொழில் புரிகின்றனர்.

11. ஆதி திராவிடர்/பழங்குடியினரின் பயனுக்காக 41,480 தொகுதி வீடுகள் கட்டப்பட்டன. கிராமப்புறங்களில் சுகாதார கழிப்பிடங்கள் 448 கட்டப்பட்டன.

12. தனிக் கவனம் செலுத்தல் பெற்ற மற்றொரு பணி ஆதி திராவிடர் நலமாகும். மருத்துவம், பொறியியல், ஏனைய தொழில் படிப்புகள் ஆகியவை உட்பட கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு போதிய எண்ணிக்கையில் சேர்த்துக்

கொள்ளப்படுவதற்கு உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு பாட முறையிலும் ஆதி திராவிடருக்கு/பழங்குடியினர்க்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு, மெட்ரிக் படிப்புக்கு பிந்திய படிப்பு ஆகியவற்றுக்கு, படிப்புதவித் தொகையும் கலப்பு திருமணம் செய்து கொள்வோருக்குத் தேசிய சிறு சேமிப்பு பத்திரங்களில் ரூ. 1,000 முதல் ரூ. 4,000 வரை ரொக்கத் தொகையும் அளிக்கப்படுகிறது. குடிநீர் கிணறுகள் தோண்டுதல், வீடு கட்டுதல், கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குதல், பால் கூட்டுறவுச் சங்கங்களையும் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களையும் ஏற்படுத்தல் ஆகியவை ஆதி திராவிடர்களின் பயனுக்காக செயற்படுத்தப் பட்ட சில திட்டங்களாகும். இரு சக்கர வாகனங்களைப் பழுது பார்த்தல், முழுவது மாகச் சோதித்தல் ஆகியவற்றில் 525 ஆதி திராவிடர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

13. சட்டத்தைச் செயற்படுத்துதல், ஒழுங்கைப் பேணுதல், குற்றங்களைத் தடுத்தல், கண்டுபிடித்தல் ஆகியவை கட்டுப்பாட்டிற்குள் உள்ளன.

14. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல்வேறு துறைகளின் பணிகள், சாதனைகள் பொதுமக்களுக்குப் பயனுள்ள அடிப்படைத் தகவல்களாக அமையும் என கருதப் படுகிறது.

தலைமைச் செயலகம்,
சென்னை,
1992 ஜூன், 5.

டி. வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப.,
தலைமைச் செயலர்,
தமிழ்நாடு அரசு.

## உள்ளடக்கம்.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **அத்தியாயம் 1—பொது :** | | |
| 1 | 1988—89-ஆம் ஆண்டில் சீர் பெருமக்கள் வருகை | 1–9 |
| 2 | நிருவாகம் | 10 |
| 3 | மேதகு ஆளுநரின் சுற்றுப்பயணம் | 11–15 |
| **அத்தியாயம் 2—ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை :** | | |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் .. | 16–27 |
| **அத்தியாயம் 3—பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை :** | | |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 28–29 |
| **அத்தியாயம் 4—வேளாண்மைத்துறை :** | | |
| 6 | வேளாண்மை | 30–31 |
| 7 | வேளாண்மைப் பொறியியல் | 31–33 |
| 8 | வேளாண்மை விளைப்பொருள் விற்பனை | 34 |
| 9 | வேளாண்மை பல்கலைக்கழகம் | 34–38 |
| 10 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் | 38–39 |
| 11 | எண்ணெய் வித்துக்கள் | 39–40 |
| 12 | விதைச் சான்றிதழ் | 40–42 |
| 13 | தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் .. .. .. .. | 42–45 |
| 14 | தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் .. .. .. .. | 46–47 |
| **அத்தியாயம் 5—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை :** | | |
| 15 | கால்நடை பராமரிப்பு | 48–50 |
| 16 | பால்வளம் .. .. .. .. | 50–53 |
| 17 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் | 54–55 |
| 18 | மீன்வளம் | 55–59 |
| **அத்தியாயம் 6—வணிகவரி மற்றும் அறநிலையத்துறை :** | | |
| 19 | வணிகவரிகள் .. | 60–61 |
| 20 | இந்து சமய அற நிறுவனங்கள் | 61–63 |
| 21 | (1) ஆவணப் பதிவு | 64–65 |
| | (2) சீட்டு நிதி .. | 65–71 |
| 22 | முத்திரைத்தாள்கள் (அஞ்சல் சாராதவை) .. | 72–77 |
| 23 | தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 77–78 |
| 24 | வக்ப்கள் | 78–79 |

பக்கங்கள்.

அத்தியாயம் 7—கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை :


25 கூட்டுறவு 80—83

26 குடிமைப் பொருள் 83—86


அத்தியாயம் 8—கல்வித்துறை :


27 பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி .. 87—88

28 அழகப்பா பல்கலைக்கழகம் 89—93

29 அண்ணா பல்கலைக்கழகம் 93—96

30 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 96—97

31 பாரதியார் பல்கலைக்கழகம் 98—101

32 பாரதிதாசன் பல்கலைக்கழகம் 101—104

33 கல்லூரிக் கல்வி 104—105

34 அரசுத் தேர்வுகள் 105—107

35 தொலை உணர்வு மையம் 108—110

36 சட்டக்கல்வி 110—111

37 சென்னைப் பல்கலைக்கழகம் 111—115

38 மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 115—120

39 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 120—121

40 தேசிய மாணவர் படை 122—123

41 பொது நூலகங்கள் 127—131

42 பள்ளிக் கல்வி 121—134

43 விளையாட்டும் இளைஞர் பணிகளும் 131—134

44 தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 134—137

45 தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 137—138

46 தமிழ் பல்கலைக்கழகம் 138—139

47 தொழில் நுட்பக்கல்வி 140—141

48 கன்னிமரா (மாநில மைய) பொது நூலகம் 141—143

49 தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் 143—144

50 தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பக்குழு .. 144—145


அத்தியாயம் 9—சுற்றுப்புற சூழ்நிலைக் கட்டுப்பாடு மற்றும் வனத்துறை :


51 சின்கோனா .. 146—148

52 வனங்கள் 149—150

53 மரம் வளர்ப்பு — 150

பக்கங்கள்


அத்தியாயம் 10—நிதித் துறை :

| | | |
|---|---|---|
| 54 | கூட்டுறவுத் தணிக்கை | 151 |
| 55 | கருவூலங்கள் மற்றும் கணக்குகள் | 151—152 |
| 56 | அரசு தகவல் தொகுப்பு மையம் | 152—154 |
| 57 | உள்ளாட்சி நிதித்தணிக்கை | 154—156 |
| 58 | சிறு சேமிப்பு | 157—158 |
| 59 | அரசு வணிகத்திட்டங்கள் | 158—160 |
| 60 | தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம் | 161 |
| 61 | மாநில நிதி | 162—171 |
| 62 | நிறுவன நிதி | 171—173 |

அத்தியாயம் 11—கைத்தறித்துணிகள் மற்றும் கதர்த் துறை :

| | | |
|---|---|---|
| 63 | கைத்தறியும் பஞ்சாலையும் | 174—176 |
| 64 | பட்டு வளர்ப்பு | 176—178 |

அத்தியாயம் 12—நல்வாழ்வு இந்திய மருத்துவம் ஓமியோபதி மற்றும் குடும்பநலத் துறை:

| | | |
|---|---|---|
| 65 | பிறப்பு இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவு .. ... | 179—180 |
| 66 | (1) தொற்றுநோய்க் கட்டுப்பாடு .. ..<br>(2) பிறப்பு மற்றும் இறப்பு புள்ளி விவரங்கள் ... .. | 180—186 |
| 67 | 'டானிடா' உதவி பெறும் தமிழ்நாடு பகுதி திட்டம்.. .. | 187—189 |
| 68 | கிங் நோய் தடுப்பு மருந்து நிறுவனம் .. | 190—194 |
| 69 | மருத்துவக்கல்வி .. | 194—198 |
| 70 | (1) மருத்துவப் பணிகள் ..<br>(2) குடும்ப நலம் .. .. | 199—202 |
| 71 | டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் .. | 202—204 |
| 72 | மனநோய் நலம் .. .. | 204—205 |
| 73 | ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 206—207 |
| 74 | மாநில மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம் | 207—208 |
| 75 | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து .. | 209 |
| 76 | இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி | 209—214 |

அத்தியாயம் 13—உள் துறை :

| | | |
|---|---|---|
| 77 | திரைப்படங்களும் மற்றும் வீடியோ .. .. | 215—216 |
| 78 | உரிமையியல் நீதி மன்றங்கள்.. | 216—223 |
| 79 | குடிமைப் பாதுகாப்பு.. | 224 |
| 80 | குற்றவியல் நீதி | 225—227 |

| | | பக்கங்கள். |
|---|---|---|
| **அத்தியாயம் 13—உள்துறை—தொடர்ச்சி.** | | |
| 81 | நியனைப்பு படையினர் .. | 228–229 |
| 82 | தடய அறிவியல் | 229–230 |
| 83 | சென்னை மாநகர காவல் .. | 230–233 |
| 84 | சிறைகள் மற்றும் நன்னடத்தைப் பிரிவு | 233–235 |
| 85 | தமிழ்நாடு காவல் | 234–241 |
| 86 | இயக்கு ஊர்திகளின் நிர்வாகம் | 241–245 |
| **அத்தியாயம் 14—வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை :** | | |
| 87 | இட வசதிக்கட்டுப்பாடு .. .. | 246 |
| 88 | வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் .. | 246–247 |
| 89 | நகர ஊரமைப்புத் திட்டம் .. | 248–250 |
| **அத்தியாயம் 15—தொழில் துறை :** | | |
| 90 | சர்க்கரை .. | 251–253 |
| 91 | மின்னியல்—மின்னணுவியல் பிரிவு | 254–255 |
| 92 | தொழில் மற்றும் வணிகம் | 256–258 |
| 93 | மாநில புவியியல் மற்றும் சுரங்கம் .. | 258–260 |
| **அத்தியாயம் 16—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை :** | | |
| 94 | செய்தி மற்றும் மக்கள் தொடர்பு | 261–267 |
| 95 | சுற்றுலா | 267–269 |
| 96 | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை .. | 270 |
| **அத்தியாயம் 17—தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறை :** | | |
| 97 | தொழிலாளர் நலம் .. .. .. | 271–273 |
| 98 | தொழிற்சாலைகள் சட்டம் .. .. .. | 274–276 |
| 99 | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் .. | 277 |
| 100 | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 278 |
| 101 | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி | 279–284 |
| **அத்தியாயம் 18—சட்டத் துறை :** | | |
| 102 | சட்டம் இயற்றுதல் ... | 285–287 |
| **அத்தியாயம் 19—சட்டமன்றப் பேரவைச் செயலகம் :** | | |
| 103 | தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை . | 288–290 |

| | | பக்கங்கள். |
|---|---|---|
| **அத்தியாயம் 20—நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை :** | | |
| 104 | கோயம்புத்தூர் மாநகராட்சி.. | 291 |
| 105 | சென்னை மாநகராட்சி | 292–294 |
| 106. | மதுரை மாநகராட்சி | 295–299 |
| 107 | நகராட்சி நிர்வாகம் | 300–304 |
| 108 | நகராட்சி தேர்தல்கள் | 305 |
| **அத்தியாயம் 21—பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை :** | | |
| 109 | குடிமுறைப் பணியாளர் பயிற்சி .. | 306 |
| 110 | குடிமுறைப்பணிகள் கூட்டுக் குழு | 306–307 |
| 111 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 307–308 |
| 112 | ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம் | 309 |
| 113 | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு | 309–311 |
| 114 | அண்ணா மேலாண்மை நிறுவனம் | 311–312 |
| 115 | (1) பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் துறை ..<br>(2) பரிவுள்ள நிருவாகம் .. | 312–315 |
| 116 | தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் | 315 |
| **அத்தியாயம் 22—திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் துறை :** | | |
| 117 | மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி | 316–318 |
| 118 | மாநிலத் திட்டக் குழு | 319 |
| 119 | விலைவாசிப் புள்ளிகள் | 319–328 |
| **அத்தியாயம் 23—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை :** | | |
| 120 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை .. | 329 |
| **அத்தியாயம் 24—பொதுத் துறை :** | | |
| 121 | கர்நாடக உதவித் தொகை | 329 |
| 122 | மக்கள் தொகைக் கணக்கெடுப்பு | 329–330 |
| 123 | முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் பிரிவு | 330–331 |
| 124 | முறையீட்டுப் பிரிவு .. .. | 331–332 |
| 125 | தேர்தல்கள் .. .. | 332–333 |
| 126 | முன்னாள் படைவீரர்கள் நலம் | 333–336 |
| 127 | பிரதேச இராணுவப் படை .. .. | 336–339 |
| 128 | பர்மா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோரின் மறுவாழ்வு. | 339–340 |

பக்கங்கள்

அத்தியாயம் 25—பொதுப்பணித் துறை :

129 கொதி கலன்கள் 341
130 மின் ஆய்வுத் துறை 342
131 நிலத்தடி நீர் 342—345
132 பாசனம் 345—347
133 பொதுப் பணித் துறை (கட்டிடங்கள்) 347—354
134 தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் 354—356

அத்தியாயம் 26—வருவாய்த் துறை :

135 வேளாண்மை வருமான வரி 357
136 நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்களை ஒப்படை செய்தல் 357—358
137 வெள்ளமும் புயலும் 358—359
138 நிலச்சீர்திருத்தங்கள் 359—360
139 நில வரி 360—361
140 மனுநீதி திட்டம் 361
141 நில அளவையும் நிலப் பதிவேடுகளும் 362—365
142 எஸ்டேட் நிலவரித் திட்டம் 365 366
143 நகர்ப்புற நில வரி மற்றும் நகர்புறப் நில உச்சவரம்பு 366—371

அத்தியாயம் 27—ஊரக வளர்ச்சித் துறை :

144 பூமிதானமும் கிராமதானமும் 372—373
145 பஞ்சாயத்துக் காடுகள் 374—375
146 ஊராட்சி வளர்ச்சி 376—380
147 பேரூராட்சிகள் 380—384

அத்தியாயம் 28—சமூக நலத் துறை :

148 சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணி 385—388
149 முதியோர் உதவித்தொகை 388—391
150 சமூக நலம் 392—405
151 தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் 405—407

அத்தியாயம்—29. தமிழ் வள்ர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை.

152 தொல்பொருள் இயல் 408—410
153 அரசு அருங்காட்சியகம் 410—411
154 உலக தமிழாராய்ச்சி நிறுவனம் 412
155 தமிழ் வளர்ச்சி 412—414
156 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 415—416
157 தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு 417—418
158 மொழி பெயர்ப்புகள் 418—419

அத்தியாயம்—30. போக்குவரத்து துறை

159 சாலைப் போக்குவரத்து நிறுவனம் 420—421
160 நெடுஞ்சாலைகள் மற்றும் ஊரகப் பணிகள் தேசிய நெடுஞ்சாலைகள் 421—434
161 சிறு துறைமுகங்கள் 434—435
162 தமிழ்நாடு இயக்குநர்திகளின் இயக்ககம் 435—436




பதிவு எண்: 58-2/89-1070.

நிலஅளவை மத்திய அலுவலகம், சென்னை-5.

## அத்தியாயம் 1.

### பொது.

### அதிமுக்கியப் பிரமுகர்களின் வருகை.

| அதிமுக்கிய பிரமுகர்கள் பற்றிய விவரம். | வருகைபுரிந்த நாட்கள். | வருகை புரிந்த இடங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் | 06-04-1988 முதல் 08-04-1988 | மதுரை, காந்திகிராமம், சென்னை மற்றும் காஞ்சிபுரம். |
| இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் | 12-04-1988 மற்றும் 13-04-1988 | திருச்சி |
| இலங்கை பிரதமர் | 19-04-1988 முதல் 22-04-1988 | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் மகாபலிபுரம். |
| இந்தியப் பிரதமர் | 22-04-1988 முதல் 24-04-1988 | மன்றமல்லைநகர், திருவான்மியூர். |
| இந்தியக் குடியரசுத் தலைவர் | 26-04-1988 முதல் 28-04-1988 | மதுரை, திருச்சி, பட்டுக்கோட்டை, வேதாரண்யம் மற்றும் அண்ணாமலை நகர். |
| இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் .. | 07-06-1988 | (மாறுதல் வருகை). |
| இந்தியப் பிரதமர் | 18-06-1988 முதல் 21-06-1988 | கோயம்புத்தூர், தர்மபுரி, மேட்டூர், ஈரோடு, பழனி, மேலூர் மற்றும் மதுரை. |
| இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் .. | 22-07-1988 | சென்னை ''ஆதிபராசக்தியின்'' ஆன்மீக மாநாடு. |
| இந்தியப் பிரதமர் .. | 04-08-1988 முதல் 06-08-1988 | சென்னை, தென்னாற்காடு, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி. |
| இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் .. | 20-08-1988 மற்றும் 21-08-1988 | சென்னை. |
| இந்தியக் குடியரசுத் தலைவர் | 28-08-1988 முதல் 31-08-1988 | கோயம்புத்தூர், சேலம், வடஆற்காடு மாவட்டம் மற்றும சென்னை. |
| இந்தியப் பிரதமர் | 02-10-1988 முதல் 05-10-1988 | மதுரை, காந்திகிராம், மண்டபம், இராமேஸ்வரம், இராமநாதபுரம். விருதுநகர், சிவகாசி. இராஜபாளையம், தென்காசி திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| இந்தியப் பிரதமர் — — — | 24–10–1988 முதல் 07–10–1988 | திருச்சி, திருச்செங்கோடு, இராசிபுரம், சேலம், மதுரை, தேனி, போடி, சிவகங்கா, தேவக்கோட்டை, அறந்தாங்கி மற்றும் புதுக்கோட்டை. |
| இந்தியப் பிரதமர் — — | 10–10–1988 முதல் 12–10–1988 | திருச்சி, கிருஷ்ணகிரி, வாணியம்பாடி வேலூர், இராணிப்பேட்டை ஹோசூர், சென்னை, மேல்மருவத்தூர், வந்தவாசி, காஞ்சிபுரம், அரக்கோணம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர். |
| இந்தியப் பிரதமர் | 28–11–1988 | சென்னை. |
| கவர்னர்—ஜெனரல் ஆப் மொரீசியஸ் | 19–11–1988 முதல் 22–11–1988 | சென்னை மற்றும் திருச்சி. |
| இந்தியப் பிரதமர் — | 28–12–1988 | திருச்சி, விருதுநகர் மற்றும் மதுரை. |
| இந்தியப் பிரதமர் — | 06–01–1989 மற்றும் 07–01–1989 | மதுரை. |
| இந்தியப் பிரதமர் | 10–01–1989 முதல் 12–01–1989 | நாகர்கோவில், கன்னியாகுமரி, ஆலங்குளம், தூத்துக்குடி, கீழக்கரை, தொண்டி, உத்தமபாளையம் மற்றும் நிலக்கோட்டை. |
| இந்தியப் பிரதமர் — | 16–01–1989 முதல் 19–01–1989 | மதுரை, இராஜபாளையம், தாராபுரம், ஊத்துக்குளி, திருப்பூர், சூலூர், சிங்காநல்லூர், கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், உதகமண்டலம், அரவக்குறிச்சி, நாமக்கல், துறையூர், கள்ளக்குறிச்சி மற்றும் மதுராந்தகம். |
| இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் | 16–02–1989 | சென்னை (மாறுதல் வருகை.) |
| இந்தியக் குடியரசுத் தலைவர் | 20–02–1989 | சென்னை. |
| 1. திரு. டிங்டாவோ, பத்திரிக்கை ஆசிரியர், சைனீஸ் விக்லி. | 01–04–1988 மற்றும் 02–04–1988 | சென்னை. |
| 2. திரு. தொண்டமான் (அமைச்சர்), ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர், இலங்கை மற்றும் ஐவர் ஸ்ரீலங்கா. | 31–03–1988 முதல் 04–04–1988 | சென்னை. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 3. திரு. ஏ.பி. துவா, இந்திய உதவி ஹைகமிஷனர், இலங்கை. | 12–04–1988 மற்றும் 13–04–1988 | சென்னை. |
| 4. ஆண்டர்விவிங் (பிரான்சு நாட்டு தூதர்). | 13–04–1988 முதல் 17–04–1988 | சென்னை. |
| 5. திரு. ஜே.என். டிக்ஸீட், இந்தியன் ஹைகமிஷனர், கொழும்பு. | 19–04–1988 | சென்னை. |
| 6. திரு. டி.பி. விஜயதுங்கா, அமைச்சர், உணவு மற்றும் விவசாயத்துறை, இலங்கை. | 28–04–1988 மற்றும் 29–04–1988 | சென்னை. |
| திரு. கே.எச்.ஜே. விஜயதாசா, பிரதம மந்திரியின் செயலர், இலங்கை. | | |
| 7. திரு. ஆர்.பி. துவா, இந்திய உதவி ஹைகமிஷனர், இலங்கை. | 27–04–1988 மற்றும் 28–04–1988 | சென்னை. |
| 8. திரு. லாட் கலிநார்தர், வெளியுறவுத் துறை அமைச்சர், பிரிட்டன். | 21–04–1988 மற்றும் 22–04–1988 | சென்னை. |
| 9. திரு. ஜான் உட்ஸ், ஆஸ்திரேலியா உதவி ஹைகமிஷனர், புதுடெல்லி. | 04–05–1988 முதல் 06–05–1988 | சென்னை. |
| 10. திரு. எஸ். தொண்டமான், ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர், இலங்கை மற்றும் ஜவர் ஸ்ரீலங்கா. | 02–05–1988 முதல் 05–05–1988 | மதுரை. |
| 11. திரு. ஜே.என். டிக்ஸீட், இந்தியன் ஹைகமிஷனர், கொலம்போ. | 06–05–1988 | சென்னை. |
| 12. திரு. சி. ராஜதுரை, அமைச்சர், இந்து அறநிலைய வளர்ச்சித்துறை, இலங்கை. | 07–05–1988 | சென்னை. |
| 13. திரு. பி. ஜெயசங்கர், முதல் செயலாளர், ஹைகமிஷனர், கொழும்பு. | 08–05–1989 | சென்னை. |
| 14. திரு. காமினி திசநாயாக்கே, அமைச்சர், நில வளர்ச்சி, ஸ்ரீலங்கா. | 11–05–1988 | சென்னை. |
| 15. திரு. அகமத் ஸாத்திர், அமைச்சர், மத வளர்ச்சி துறை, மாலத்தீவு. | 24–05–1988 முதல் 26–05–1988 | சென்னை. |
| 16. திருமதி லட்சுமிபுரி, சான்சுலர், இந்தியத் தூதரகம், கொழும்பு. | 17–05–1988 மற்றும் 18–05–1988 | சென்னை. |
| 17. திரு. ஜே.என். டிக்ஸீட், இந்தியன் ஹைகமிஷ்னர், கொழும்பு. | 03–06–1988 முதல் 07–06–1988 | சென்னை. |
| 18. மூன்று நபர்கள், உயர்மட்டக்குழு, மாலத்தீவு. | 07–06–1988 மற்றும் 08–06–1988 | சென்னை. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 19. திரு. கே.கே. பார்கவா, ஐ.எப்.எஸ்., இந்தியன் ஹைகமிஷனர், மொரிசியஸ். | 19-06-1988 முதல் 22-06-1988 | சென்னை. |
| 20. திரு. ஏ.எம்.ஏ. வாஹீத், தலைவர், மத்திய போக்குவரத்துக் கழகம், இலங்கை. | 16-06-1988 | சென்னை. |
| 21. திரு. ஸ்டேன்லி ஜெயவர்தனே, தலைவர், ஸ்ரீலங்கா, ஷாவாலஸ் நிறுவனம். | 01-07-1988 மற்றும் 02-07-1988 | சென்னை. |
| 22. திரு. கிருஷ்ணசாமிராவ் சாகிப், உலகவங்கியின் தலைவர், நிர்வாக இயக்குநர். | 07-07-1988 முதல் 11-07-1988 | சென்னை. |
| 23. இலங்கை நீதித்துறை அமைச்சர், திரு. நிஸ்ஸார்கா, விஜயரத்னேயின் மகன் திரு. நிரன்ஜன் விஜயரத்னே. | 24-06-1988 மற்றும் 25-06-1988 | சென்னை. |
| 24. திரு. ஜே.என். டிக்ஸீட், இந்தியன் ஹைகமிஷனர், கொழும்பு. | 28-06-1988 | |
| 25. திரு. எச்.இ. அப்துல்லா ஜமீல், சுகாதார அமைச்சர், மாலத்தீவு. (மாறுதல் வருகை.) | 28-06-1988 | சென்னை. |
| 26. செல்வி அப்டா டிக்ஸீட், த/பெ. திரு. ஜே.என். டிக்ஸீட், இந்தியன் ஹைகமிஷனர், கொழும்பு. | 29-06-1988 | சென்னை. |
| 27. மோனிக்கா அகர்வால், இந்திய தூதரக அதிகாரியின் மகள். | 30-06-1988 | சென்னை. |
| 28. திரு. பிஜியாஜி, சீனாவின் தூதரக அதிகாரி, புதுடெல்லி. | 08-07-1988 | சென்னை. |
| 29. திரு. ஜே.என். டிக்ஸீட், இந்தியன் ஹைகமிஷனர், கொழும்பு. | 21-07-1988 முதல் 30-07-1988 | சென்னை. |
| 30. திரு. பி.எம். ஓசா, முன்னாள் இந்தியன் அம்பாசிடர், ஸ்வீடன். | 26-07-1988 முதல் 28-07-1988 | சென்னை. |
| 31. திரு. எம்.எஸ். செல்லசுவாமி, அமைச்சர், சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்துறை, இலங்கை. | 24-07-1988 | சென்னை. |
| 32. திரு. எச்.இ. ஒய்.பி. டாடு, மொகமட் அப்துல் காஜி, அமைச்சர், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, மலேசியா. | 27-07-1988 முதல் 04-08-1988 | சென்னை. |
| 33. திரு. ஜே.என். டிக்ஸீட், இந்தியன் ஹைகமிஷனர், கொலம்போ. | 28-07-1988 | சென்னை. |
| 34. திரு. எச்.இ. அஹமட் சாத்திர் மூசா, துணை அமைச்சர், அறநிலைய வளர்ச்சித்துறை, மாலத்தீவு. | 31-07-1988 முதல் 02-08-1988 | சென்னை. |
| 35. திரு. சென்கிங் கோவி, ஹைகமிஷனர் சிங்கப்பூர். | 11-08-1988 முதல் 13-08-1988 | சென்னை. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 36. திரு. ரஸ்கோட்டியா, இந்தியன் ஹைகமிஷனர், பிரிட்டன். | 08–08–1988 முதல் 11–08–1988 | சென்னை. |
| 37. எச்.இ. திரு. டெயிஸ்ஸீ கிம், அம்பாசிடர், கொரியா. | 07–08–1988 முதல் 11–08–1988 | சென்னை. |
| 38. திரு. எஸ். தொண்டமான், ஊரகத்தொழில் வளர்ச்சி அமைச்சர், இலங்கை. | 10–08–1988 முதல் 28–08–1988 | சென்னை. |
| 39. எச். இ. திரு. ஏ. ஏ. நோகனார், துணைக் குடியரசுத் தலைவர், யு.எஸ்.எஸ்.ஆர். | 17–8–1988 முதல் 20–08–1988 | சென்னை. |
| 40. டாக்டர் கார்லி-எரிக் கண்ட்சன், தென் மத்திய ஆசிய மண்டல இயக்குநர், யூனிசப். | 09–08–1988 மற்றும் 10–08–1988 | சென்னை. |
| 41. திரு. ஏ. பரசுராமன், கல்வி அமைச்சர், மொரிசீயஸ். | 18–08–1988 முதல் 21–08–1988 | சென்னை. |
| 42. திரு. ஜே. என். டிக்ஸீட், இந்திய ஹைகமிஷனர், கொலம்போ. | 13–08–1988 மற்றும் 14–08–1988 | சென்னை. |
| 43. திரு. ஏ. ரிஸ்வி சின்னாலிபீ, பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை. | 26–08–1988 | சென்னை. |
| 44. திரு. ஜானு சி. சிவிட்கோஸ்கி, அம்பாசிடர், போலந்து. | 03–09–1988 முதல் 08–09–1988 | சென்னை. |
| 45. திரு. அகமட் அப்துல்லா, அம்பாசிடர், மாலத்தீவு. | 06–09–1988 முதல் 13–09–1988 | சென்னை. |
| 46. திரு. எம். எச். மொகமட், எம்.பி., போக்குவரத்துத்துறை அமைச்சர், மற்றும் திரு. மகேந்திரா இளைய பெருமாள், செயலர், போக்குவரத்து அமைச்சகம், ஸ்ரீலங்கா. | 08–09–1988 | சென்னை. |
| 47. டாக்டர் பிரான்சிஸ் அக்குவா, அமைச்சர், தொழில் மற்றும் விஞ்ஞான வளர்ச்சித்துறை, கானா. | 16–09–1988 முதல் 18–09–1988 | சென்னை. |
| 48. மாலத்தீவின் இரண்டு உறுப்பினர்கள் | 14–09–1988 முதல் 23–09–1988 | சென்னை. |
| 49. திரு. எஸ். தொண்டமான், ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர், இலங்கை மற்றும் இவர், ஸ்ரீலங்கா. | 14–09–1988 | சென்னை. |
| 50. திரு. செல்லய்யா ராஜதுரை, ஸ்ரீலங்கன் வட்டார வளர்ச்சி மற்றும் இந்துமத வளர்ச்சி அமைச்சர், | 15–09–1988 | சென்னை. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 51. ஆறு உறுப்பினர் கொண்ட சோவியத் குழு மற்றும் திரு. ஏ. பி. புடுப்ஸ்கி, துணை அமைச்சர், மின்சாரம். | 30–09–1988 முதல் 02–10–1988 | சென்னை. |
| 52. திருமதி மனோன்மணி நாயுடு மற்றும் அவரது மகள் திருமதி எஸ். மெய்டோ, தென்னாப்பிரிக்கா. | 04–10–1988 முதல் 07–10–1988 | சென்னை. |
| 53. திரு. ச. ராஜதுரை, ஸ்ரீலங்கா அமைச்சர், வட்டார வளர்ச்சி மற்றும் இந்து மத வளர்ச்சி அமைச்சர். | 01–10–1988 முதல் 08–10–1988 | சென்னை. |
| 54. திரு. மைக்கேல் கேம்டிசிவாஸ், நிர்வாக இயக்குநர், அவரது மனைவி மற்றும் இரண்டு அலுவலர்கள், உலக வங்கி. | 06–10–1988 மற்றும் 07–10–1988 | சென்னை. |
| 55. திரு. அப்துல்லா ஜமீல், அமைச்சர், சுகாதாரம், மாலத்தீவு மற்றும் இரண்டு உயர் அதிகாரிகள். | 09–10–1988 முதல் 13–10–1988 | சென்னை. |
| 56. திரு. சி. ராஜதுரை, வட்டார வளர்ச்சி மற்றும் இந்துமத வளர்ச்சி அமைச்சர், ஸ்ரீலங்கா. | 21–10–1988 | சென்னை. |
| 57. திரு. டபிள்யூ. எம். பி. பி. மெண்கிடி வாலா, ஸ்ரீலங்கன் குடியரசுத் தலைவரின் செயலர் மற்றும் அவரது குடும்பம். | 22–10–1988 முதல் 25–10–1988 | சென்னை. |
| 58. எச். இ. திரு. மார்வின் டூடின், தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் இரண்டு அலுவலர்கள், ஜோர்டான். | 25–10–1988 மற்றும் 26–10–1988 | சென்னை. |
| 59. திரு. நிக்டின், பெட்ரோலியம் துணை அமைச்சர், யு.எஸ்.எஸ்.ஆர். | 25–10–1988 முதல் 27–10–1988 | சென்னை. |
| 60. திரு. அப்துல் சாண்ட், அஸ்கார், ஆப்கானிஸ்தான் அம்பாசிடர். | 03–11–1988 முதல் 05–11–1988 | சென்னை. |
| 61. திரு. கே. டி. எம். சி. பண்டாரா, அமைச்சர், விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி, ஸ்ரீலங்கா. | 27–10–1988 | சென்னை. |
| 62. திரு. எல். பி. படுக்கிவிட்ஸ், அமைச்சர், உலோகத்துறை, யு.எஸ்.எஸ்.ஆர். | 28–10–1988 மற்றும் 29–10–1988 | சென்னை. |
| 63. சர் டேவிட் குட்டால், பிரிட்டிஷ் ஹைகமிஷனர், புதுடில்லி. | 03–11–1988 முதல் 06–11–1988 | சென்னை. |
| 64. திரு. அப்துல் சமத் அஸ்கார், அம்பாசிடர், ஆப்கானிஸ்தான். | 03–11–1988 முதல் 05–11–1988 | சென்னை. |
| 65. திரு. எச். இ. சர். வீராசாமி ரிங்காடோ, கவர்னர் ஜெனரல், மொரிசியஸ். | 19–11–1988 முதல் 22–11–1988 | சென்னை. |
| 66. திரு. ஏ. கே. பானர்ஜி, இந்தியன் ஹைகமிஷனர் மாலத்தீவு. | 31–10–1988 மற்றும் 01–11–1988 | சென்னை. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 67. எட்டு உறுப்பினர்கள் கொண்ட யு.எஸ்.எஸ்.ஆர். செய்தியாளர் குழு | 16–11–1988 மற்றும் 17–11–1988 | சென்னை. |
| 68. திருமதி பென்னி ஜெயவர்த்தனே, ஸ்ரீலங்கன் குடியரசுத் தலைவரின் மருமகள். | 29–11–1988 | சென்னை. |
| 69. திரு. சி. ராஜதுரை, ஸ்ரீலங்கா வட்டார வளர்ச்சி மற்றும் இந்துமத வளர்ச்சி அமைச்சர். | 29–11–1988 | சென்னை. |
| 70. திரு. எஸ். தொண்டமான், ஸ்ரீலங்கா ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர், இலங்கை மற்றும் ஐவர், ஸ்ரீலங்கா. | 03–12–1988 | சென்னை. |
| 71. திரு. டாக்டர் எஞ்சினியர் ரோசர், துணை அமைச்சர், தொழில்துறை, கிழக்கு ஜெர்மனி. | 30–11–1988 முதல் 02–12–1988 | சென்னை. |
| 72. திருமதி ஊர்மிலா தேவி, க/பெ. டிவா, இந்திய உதவி ஹை கமிஷனர், கொழும்பு, ஸ்ரீலங்கா. | 04–12–1988 முதல் 05–12–1988 | சென்னை. |
| 73. சர் எட்மண்ட் இல்லாரி, நியூசிலாந்து ஹை கமிஷனர். | 07–12–1988 முதல் 09–12–1988 | சென்னை. |
| 74. ஸ்ரீலங்காவின் இறகு பந்துக்குழு | 10–12–1988 முதல் 20–12–1988 | சென்னை. |
| 75. திரு. ஆர். கல்பா மற்றும் இந்திய தூதரக அதிகாரிகள், மண்சண்டா அவர்களின் குடும்பம். | 13–12–1988 முதல் 14–12–1988 | சென்னை. |
| 76. ஒன்பது உறுப்பினர் கொண்ட ஜெர்மன் நாட்டு பாராளுமன்ற குழு. | 14–12–1988 முதல் 16–12–1988 | சென்னை. |
| 77. திரு. மொகமட் செரீப் மற்றும் திரு. அப்துல்லா ரஸ்த், இயக்குனர். | 24–12–1988 முதல் 25–12–1988 | சென்னை. |
| 78. திரு. ஏ. பரசுராமன், அமைச்சர், கல்வி, கலை மற்றும் பண்பாடு துறை துறை அமைச்சர், மொரீசியஸ். | 27–12–1988 முதல் 03–01–1989 | சென்னை. |
| 79. திரு. கிருஷ்ணசாமி ராவ் சாகிப் மற்றும் அவரது மனைவி, நிர்வாக இயக்குநர், உலக வங்கி. | 04–01–1989 | சென்னை. |
| 80. திரு. ரமேஷ் சந்தர், இரண்டாவது ஹைகமிஷனர், கொலம்போ. | 15–01–1989 முதல் 16–01–1989 | சென்னை. |
| 81. திரு. தொண்டமான், அமைச்சர், ஊரகத்தொழில் வளர்ச்சி அமைச்சர், இலங்கை மற்றும் ஐவர், ஸ்ரீலங்கா. | 11–01–1989 முதல் 19–01–1989 | சென்னை |
| 82. திருமதி சோனு கோசார், பிரான்ஸ் நாட்டு இந்திய தூதர். | 04–02–1989 முதல் 11–02–1989 | சென்னை. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 83. திரு. ஜி. பி. ஸ்ட்ரான்னோ, துணைத் தலைவர், திட்டக்குழு. | 02–02–1989 முதல் 07–02–1989 | சென்னை. |
| 84. எச்.இ. டி. ஒய். மில்லோஸ்லபவ் ஜாஸில், அம்பாசிடர், செக்கோஸ் லோவிக்கியா. | 02–02–1989 முதல் 07–02–1989 | சென்னை. |
| 85. எச்.இ. திரு. ஜென்சோஸ்டென்பீல்டு, அம்பாசிடர், நெதர்லாந்து. | 06–02–1889 முதல் 08–02–1989 | சென்னை. |
| 86. ராணி டோனா சோபியா, அவரது தங்கை இளவரசி ஈரணி மற்றும் பாதுகாப்பு அலுவலர், ஸ்பெயின். | 05–02–1989 | சென்னை. |
| 87. நான்கு உறுப்பினர் கொண்ட தாய்லாந்து அலுவலர்கள் திரு. குட்டி காந்திமித். | 09–02–1989 முதல் 12–02–1989 | சென்னை. |
| 88. திரு. ஜே. சி. சர்மா, அம்பாசிடர், வியட்நாம். | 14–02–1889 முதல் 17–02–1989 | சென்னை. |
| 89. மூன்று உறுப்பினர் கொண்ட சோவியத் குழு திரு. நெனாசோவ், தலைவர், ரஷ்யா. | 15–02–1989 முதல் 17–02–1989 | சென்னை. |
| 90. எச்.இ. மேடம் ஏ. பி. பிரியுகோவா, துணை பிரதம அமைச்சர், யு.எஸ்.எஸ்.ஆர். | 16–02–1989 முதல் 17–02–1989 | சென்னை. |
| 91. டாக்டர் என்ஜினியர் எச். ஜே. லாக், அமைச்சர், கனரகத் தொழில், கிழக்கு ஜெர்மனி. | 28–02–1989 முதல் 02–03–1989 | சென்னை. |
| 92. எச்.இ. திரு. ஜேம்ஸ், ஜி. கரீஸ், ஹைகமிஷனர், கனடா மற்றும் அவரது மனைவி. | 03–03–1989 | சென்னை. |
| 93. மாண்புமிகு டாடுக் லியோ மோகி, அமைச்சர், எரிசக்தி மற்றும் தகவல் தொடர்பு, மலேசியா. | 04–03–1989 | சென்னை. |
| 94. ஜவாகர்லால், இணைச் செயலர் மற்றும் இந்தியன் அம்பாசிடர், வெளியுறவுத் துறை. | 02–03–1989 | சென்னை. |
| 95. எச்.இ. திரு. பீர்கோநாத், துணைப் பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சர், பொருளாதாரம், திட்டம் மற்றும் வளர்ச்சி, மொரீசியஸ். | 17–03–1989 முதல் 20–03–1989 | சென்னை. |
| 96. எச்.இ. திரு. குவோலி, அம்பாசிடர், சைனா. | 15–03–1989 முதல் 18–03–1989 | சென்னை. |
| 97. திரு. கசில் முனிசிங்கி, முதல் அமைச்சர் மேற்கு பிராந்தியம், ஸ்ரீலங்கா. | 20–03–1989 முதல் 19–03–1989 | சென்னை. |

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 98. திரு. வொல்ப்கேங் கெர்பர், கான்சுலேட் ஜெனரல், கிழக்கு ஜெர்மனி மற்றும் அவரது மனைவி. | 16–03–1989 முதல் 19–03–1989 | சென்னை. |
| 99. எச்.இ. திரு. எர்கிஸ்ட்டோ மெலின்டிஸ், கியூபா நாட்டின் பொருளாதார வளர்ச்சி அமைச்சர். | 20–03–1989 முதல் 21–3–1989 | சென்னை. |
| 100. திரு. எஸ். தொண்டமான், அமைச்சர், ஊரகத்தொழில் வளர்ச்சி அமைச்சர் இலங்கை மற்றும் இவர், ஸ்ரீலங்கா. | 23–03–1989 முதல் 25–03–1989 | சென்னை. |

## நிருவாகம்.

1. டாக்டர் பி. சி. அலெக்சாண்டர், அவர்கள் 17-2-1988 அன்று தமிழ்நாட்டின் ஆளுநராகப் பொறுப்பேற்று இவ்வறிக்கை காலம் முழுவதும் தொடர்ந்து பதவி வகித்து வருகிறார்.

2. 30—1—1988 முதல் தமிழ்நாடு அரசு குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டதால் கீழ்க்கண்ட மூன்று அலுவலர்கள் ஆளுநர் அவர்களால் அவரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டு, அவர்கள் மூவரும் 6—7—1988 வரை ஆலோசகர்களாகப் பணியாற்றினர் :—

(1) டாக்டர் எஸ். எஸ். சித்து.

(2) திரு. ஜி. வி. இராமகிருஷ்ணா.

(3) திரு. ஆ. பத்மநாபன்.

3. டாக்டர்எஸ். எஸ். சித்து அவர்கள் வெளிநாட்டில் புதிய பதவியை ஏற்பதற்காக 6—7—1988 முதல் ஆலோசகர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

4. பொதுத்தேர்தல் நடந்து முடிவுகள் வெளியாகும் வரை அதாவது 27—1—1989 வரை கீழ்க்கண்டவர்கள் ஆளுநரின் ஆலோசகர்களாக இருந்தனர் :—

(1) திரு. ஜி. வி. இராமகிருஷ்ணா.

(2) திரு. ஆ. பத்மநாபன்.

5. பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு கீழ்க்கண்டவர்களைப் புதிய அமைச்சரவையின் உறுப்பினர்களாக 27—1—1989 முற்பகல் முதல் ஆளுநர் அவர்கள் நியமித்தார் :—

(1) டாக்டர் மு. கருணாநிதி.

(2) பேராசிரியர் கா. அன்பழகன்.

(3) திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.

(4) திரு. நாஞ்சில் கி. மனோகரன்.

(5) திரு. எம். கண்ணப்பன்.

(6) திரு. கோ. சி. மணி.

(7) திரு. ஆற்காடு என். வீராசாமி.

(8) திரு. கே. பி. கந்தசாமி.

(9) திரு. பொன் முத்துராமலிங்கம்.

(10) திரு. வீரபாண்டி ஆறுமுகம்.

(11) திரு. துரைமுருகன்.

(12) திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன்.

(13) டாக்டர் எ. இராமகிருஷ்ணன்.

(14) டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி.

(15) திரு. கே. என். நேரு.

(16) டாக்டர். கே. சந்திரசேகரன்.

(17) திரு. எஸ். தங்கவேலு.

6. மேற்கண்ட அமைச்சரவை இவ்வறிக்கை காலம் முழுவதும் தொடர்கிறது.

### மேதகு ஆளுநரின் சுற்றுப் பயணம்.

(1) தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் :

1988 ஏப்ரல்.— திருச்சிராப்பள்ளியில் குடியரசு துணைத் தலைவர் அவர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த '' வேதாரண்யம் உப்பு யாத்திரையை '' மீண்டும் தொடங்கி வைத்த நிகழ்ச்சியில் ஆளுநர் அவர்கள் கலந்து கொண்டனர். மதுரையில் 26 ஆம் தேதியன்று வந்திறங்கிய குடியரசு துணைத் தலைவர் அவர்களை வரவேற்று, தலைவர் காமராஜ் அவர்கள் உருவச் சிலையை திறந்து வைக்க, அவருடன் மதுரை—காமராஜ் பல்கலைக் கழகத்திற்கு சென்றார். வரலாற்று சிறப்பு மிக்க '' உப்பு யாத்திரை '' தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேதாரண்யத்திற்குச் குடியரசு தலைவர் அவர்களுடன் சென்றிருந்தார். தஞ்சாவூரில் 27—ஆம் தேதியன்று தமிழ் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த விழாவில் அவர் கலந்து கொண்டார்.

மே.— மதுரை—காமராஜ் பல்கலைக்கழகத்தில் 4—ஆம் தேதியன்று நடைபெற்ற ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு ஆளுநர் அவர்கள் தலைமை தாங்கினார். மதுரையில் 5—ஆம் தேதியன்று தேசியக் கல்வி இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். அன்று மாலை யில் காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு தலைமைதாங்கினார்.

உதகமண்டலத்தில் மே திங்கள் 15—ஆம் தேதியிலிருந்து 20ஆம் தேதி வரையிலும் ஆளுநர் அவர்கள் தங்கியிருந்தார். 18-ஆம் தேதியன்று நீலகிரி இயற்கை வளக் காப்புக் குழு ' ஏற்பாடு செய்திருந்த விழாவில் அவர் கலந்துகொண்டார். 24-ஆம் தேதியன்று நடைபெற்ற மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் மாநாட்டிற்கு அவர் தலைமைதாங்கினார். 25-ஆம் தேதியன்று, கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்கினார். 26 ஆம் தேதியன்று சிறுதொழில் பற்றிய கருத்தரங்கையும் இந்திய வணிகத் தொழில் குழுவின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தையும் தொடங்கி வைத் தார். அன்று மாலையில் பாரதியார் பல்கலைக்கழக ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்கினார்.

ஜூன்.—ஆளுநர் அவர்கள் காந்திகிராமத்தில் 12-ஆம் தேதியன்று தேசிய ஒருங் கிணைந்த இளைஞர் முகாம் நடத்திய நிறைவு விழாவில் கலந்துகொண்டார். கோயம் புத்தூரில் 18-ஆம் தேதியன்று, பிரதமமந்திரி அவர்கள் தொடங்கி வைத்த மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அவர் கலந்துகொண் டார். 20-ஆம் தேதியன்று மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அவர் விருந்தளித்தார். 21-ஆம் தேதியன்று, அவர் மதுரைக்குச் சென்று, டில்லிக்குத் திரும்பும் பிரதமமந்திரி அவர்களை வழியனுப்பி வைத்தார். 24-ஆம் தேதியன்று, கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் நடத்திய ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்கினார். 12-ஆம் தேதியன்று திண்டுக்கல்லில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளா கத்தை கட்டுவதற்கு அவர் அடிக்கல் நாட்டினார். 25-ஆம் தேதியன்று சிவகங்கையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தை திறந்துவைத்தார்.

ஜூலை.—ஆளுநர் அவர்கள் 14-ஆம் தேதியன்று மண்டபம், இராமநாதபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்றார். இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டி டத்தை திறந்துவைத்ததோடு, மண்டபத்தில் பாம்பன் பாலத் திட்டப் பணியையும் பார்வையிட்டார். 15-ஆம் தேதியன்று, விருதுநகரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடத்தை திறந்து வைத்தார். விருதுநகரில் காமராஜர் பிறந்த நாள் விழாக்களில் பங்கேற்றார்.

ஆகஸ்டு.—பிரதம மந்திரி அவர்கள் 6-ஆம் தேதியன்று கரூரில் தொடங்கிவைத்த கரூர்-திண்டுக்கல் அகல ரயில் பாதை திட்டவிழாவிற்கு ஆளுநர் தலைமை தாங்கினார். ஆகஸ்டு 21 முதல் 25-ஆம் நாள் வரை கன்னியாகுமரி, சிதம்பரனார், திருநெல்வேலி மாவட்டங்களுக்குச்சென்றார். 28 ஆம் தேதியன்று கோயம்புத்தூரில், P.S.G. கல்லூரியில் தலைசிறந்த கல்விமானாக விளங்கிய மறைந்த திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களின் உருவச் சிலையை குடியரசுத் தலைவர் திறந்து வைத்த விழாவிற்கு ஆளுநர் அவர்கள் தலைமை தாங்கினார். 29-ஆம் தேதியன்று குடியரசுத் தலைவர் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட இரு விழாக்களுக்கு தலைமை தாங்கினார். குடியரசுத் தலைவர் அவர்கள், அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியை, பல்கலைக்கழகம் சார்ந்த தாக அறிவித்த விழாவிலும் இவர் கலந்துகொண்டார். 29, 31-ஆம் தேதிகளில் சேலம், வேலூர் ஆகிய இடங்களுக்கும் குடியரசுத் தலைவருடன் அவர் சென்றார்.

செப்டம்பர்.-ஆளுநர் அவர்கள் 20-ஆம்தேதியன்று ஒசூர் தொழிற்பேட்டையிலுள்ள சில தொழிற் பிரிவுகளைப் பார்வையிட்டார். 27-ஆம் தேதியிலிருந்து 5 நாட்களுக்கு உதக மண்டலத்தில் இருந்தார். அங்கு பல்வேறு விழாக்களில் கலந்துகொண்டார்.

அக்டோபர்.—ஆளுநர் அவர்கள் 2ஆம் தேதியன்று மதுரையில் பிரதம மந்திரி அவர்களை வரவேற்று, அவருடன் காந்தி கிராமம், மண்டபம் ஆகிய இடங்களுக்குச் சென்று, மண்டபத்தில் அன்னை தெரசா இந்திரா காந்தி பாலத் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

24ஆம் தேதியன்று அவர் திருச்சிராப்பள்ளியில் பாரத பிரதமரை வரவேற்று அவருடன் சேலத்திற்கு சென்றார். 25ஆம் தேதி சேலத்தில் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்குப் பாரதப் பிரதமர் அடிக்கல் நாட்டிய விழாவில் அவர் கலந்துக் கொண்டார். 28ஆம் தேதி, சிவகெங்கையில் பாரதப் பிரதமர், கிராஃபைட் தொழிற் சாலையைத் தொடங்கிவைத்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

நவம்பர்.—மாநில ஆளுநர், நவம்பர் 21, 22, 23 தேதிகளில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு வருகை புரிந்தார். மொரீஸியஸ் தீவின் கவர்னர் ஜெனரலான சர். வீராசாமி ரிங்கடு (Sir. Veerasami Ringadoo) அவர்களுக்குச் சட்டப் படிப்பில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்ட பாரதிதாசன் பல்கலைக் கழகச் சிறப்பு பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கினார். பின்னர், மாநில ஆளுநர் திருச்சிராப்பள்ளியில், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆண்டு பட்டமளிப்பு விழா விற்குத் தலைமை தாங்கினார். 24ஆம் தேதி அவர் செங்கற்பட்டில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடத்தை திறந்து வைத்தார்.

டிசம்பர்.—மாநில ஆளுநர் அவர்கள், 20ஆம் தேதி சிதம்பரத்தில் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங் கினார்.

1989 ஜனவரி.—மாநில ஆளுநர், ஜனவரி 2ந் தேதியன்று திருச்சிராப்பள்ளிக்குச் சென்று பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அனைந்திந்திய தாவரவியல் மாநாட்டில் பங்குகொண்டார். ஜனவரி 3ந் தேதி, தஞ்சாவூர், சரஸ்வதி மகால் நூல கத்தைப் பார்வையிட்டார். தமிழறிஞர்களைக் கௌரவிக்கும் வகையில், தமிழ்ப் பல்கலைகழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

மாநில ஆளுநர் 6ஆம் தேதி மதுரையில் பாரதப் பிரதமர் அவர்களை மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்தி அறிவியல் காங்கிரஸ் நிகழ்ச்சியில் அவருடன் கலந்து கொண்டார். 8ஆம் தேதி இராஜபாளையம் வர்த்தகக் கழகத்தின் பொன்விழாக் கொண்டாட்டத்தில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பிப்ரவரி.—மாநில ஆளுநர், பிப்ரவரி 4, 5ஆம் தேதிகளில் மதுரைக்குச் சென்றார் 4 ஆம் தேதி ஆர்மீனிய நிலநடுக்க நிவாரணத்திற்கு நிதி திரட்டும் நிகழ்ச்சியில் முக்கியப் பிரமுகராகக் கலந்து கொண்டார். 6ஆம் தேதி திருச்சிராப்பள்ளி, சாவித்திரி வித்யா சாலா இந்து மகளிர் மேல்நிலைப் பள்ளியின் பொன் விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார்.

அவர் பிப்ரவரி 16, 17 ஆகிய நாட்களில் கோயம்புத்தூருக்குச் சென்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பாரதியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆண்டு பட்டமளிப்பு விழாக்களில் தலைமை வகித்தார்.

மார்ச்சு.—மாநில ஆளுநர் மார்ச்சு 16ந் தேதி மதுரைக்குச் சென்று மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்தார். 22ந் தேதி அவர் காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்தார்.

(ii) வெளி மாநிலங்கள் :

1988 ஏப்ரல்.— மாநில ஆளுநர் ஏப்ரல் 16ந் தேதி நெல்லூரில் (ஆந்திரப் பிரதேசம்) வி. ஆர். கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்.

மே.— மாநில ஆளுநர் மே, 31ந் தேதி டில்லியில் பாரதப் பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் சந்தித்துப் பேசினார்.

ஜூலை.— மாநில ஆளுநர், ஜூலை 31ந் தேதி ஐதராபாத்தில், ஆந்திரப் பிரதேச ஆளுநராகக் கூடுதல் பொறுப்பேற்றார்.

ஆகஸ்ட் :—மாநில ஆளுநர், ஆந்திரப் பிரதேச ஆளுநர் என்ற முறையில் ஆகஸ்டு 11ந் தேதி சித்தூர் மாவட்டத்தில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அவர் 16ந் தேதி புதுச்சேரிக்குச் சென்றார். அங்கு தென் மண்டல கலாச்சாரமையம் பொறுப்பேற்ற ஃபெட்டே டி பாண்டிச்சேரி (Fete-de-Pondicherry) என்ற கலை விழாவைத் தொடங்கி வைத்தார். 18ந் தேதி அவர் புதுடில்லியில் சென்று பாரதப் பிரதமருடன் மத்திய உள்துறை அமைச்சருடனும் கலந்துரையாடினார். அவர் ஆகஸ்டு 27ந் தேதி ஐதராபாத்தில் குடியரசுத் தலைவரை வரவேற்றார். குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்த ஒருங்கிணைந்த ஏவுகணை வளர்ச்சித் திட்டத் தொடக்க விழாவிற்குத் தலைமை வகித்தார்.

செப்டம்பர் .—மாநில ஆளுநர் 19ந் தேதி பெங்களூருக்குச் சென்று காவிரி நீர் பிரச்சினை பற்றி, கருநாடக மாநில முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அக்டோபர் .—மாநில ஆளுநர், 9-ந் தேதியிலிருந்து மூன்று நாட்கள் டில்லியில் இருந்தார். அங்கு அவர் அனைத்து மாநிலங்கள் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் ஆளுநர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, விவாதத்தில் பங்கேற்றார்.

நவம்பர் .—ஆளுநர் அவர்கள் 8, 9, 10, 11, 12 ஆகிய நாட்கள் கேரளத்தில் தங்கி இருந்தார். இந்நாட்களில் கோழிக்கோட்டில் மலையாள மனோரமாவின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தார். எர்ணாகுளம் பாரதிய வித்யா பவனில் தாமோதர மேனன் நினைவுச் சொற்பொழிவாற்றினார். 13-ந் தேதியன்று திருவனந்தபுரத்தில் தமிழ்நாடு அரசின் தமிழ்த் திரைப்பட விழாவைத் தொடங்கி வைத்தார்.

அவர் 25-ஆம் தேதியன்று டில்லி சென்று 1988-ஆம் ஆண்டு இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு தின விழாவைத் தொடங்கி வைத்தார்.

1989 பிப்ரவரி .—மேதகு ஆளுநர் அவர்கள் பிப்ரவரி 2, 15 ஆகிய நாட்களில் டில்லிக்குச் சென்றார். 2-ந் தேதியன்று பிரதமரைச் சந்தித்தார். 15-ஆம் தேதியன்று "இந்திராகாந்தி தேசிய கலைகள் மையப் பொறுப்புக் கழகத்தின் (Indira Gandhi National Centre for the Arts Trust) நிருவாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## II. மாநகரில் மேதகு ஆளுநர் அவர்களின் முக்கிய அலுவல்கள் :

மேதகு ஆளுநர் அவர்கள் ஏப்ரல் 1-ஆம் நாளன்று சோவியத்து இரஷ்ய கலைஞர்களின் பண்பாட்டு நிகழ்ச்சிகளில் தொடக்க நாள் விழாவிற்குத் தலைமை விருந்தினராக வந்து தொடங்கி வைத்தார். 8-ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காவல் துறை சூப்பிரண்டெண்டுகள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். 15-ஆம் தேதியன்று தாஜ் கோரமண்டலில் தொழில் மேம்பாட்டு கருத்தரங்குக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் 24-ஆம் தேதியன்று சென்னை மாநகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் பவள விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவைத் தொடங்கி வைத்தார்.

மே .—10-ஆம் தேதியன்று மேதகு ஆளுநர் அவர்கள் இங்கு வருகைதந்த குடியரசுத் தலைவர் அவர்களை வரவேற்றார். ஒரு பள்ளிக் கட்டிடத்தின் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்கினார். கலாஷேத்திரத்தில் ருக்மணி தேவியின் சிலையைத் திறந்து வைத்தார். 11-ஆம் தேதியன்று குடியரசுத் தலைவர் கலந்துகொண்டு தொடங்கி வைத்த "பிர்லா கோளரங்கம் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்கினார். தொடர் கருத்தரங்கு மையத்திற்கு (Centre for the Continuing Diologue) அடிக்கல் நாட்டினார். 12-ஆம் தேதியன்று விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனத்தில் நடந்த விழாவிலும் அம்பத்தூர் தொழில் தயாரிப்பாளர் சங்க வெள்ளி விழாவிலும் ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவிலும் குடியரசுத் தலைவருடன் கலந்து கொண்டார். அவர் 14-ஆம் தேதியன்று சென்னை மாநகராட்சியின் அல்லிக்குளம் பேரங்காடிக் கட்டிடத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டினார்.

ஜுன் .—மேதகு ஆளுநர் அவர்கள் 15-ஆம் தேதியன்று சென்னை ஒய்.எம்.சி.ஏ. நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார். அவ்வமயம் நூற்றாண்டு விழா நினைவுக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். 16-ஆம் தேதியன்று அனைத்திந்திய வானொலி பொன் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

ஜுலை .—மேதகு ஆளுநர் அவர்கள் ஜுலை முதல் தேதியன்று சென்னை தொலைக்காட்சியின் இரண்டாவது அலைவரிசை தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்தார். 2-ஆம் தேதியன்று தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக்

குழுவின் பொதுக்குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அவர் 9-ஆம் தேதி யன்று எத்திராஜ் கல்லூரியில் நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் குறித்த கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். 22-ஆம் தேதியன்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவரை வரவேற்றார். அவர் "ஆதிபராசக்தி மருத்துவம், கல்வி பண்பாட்டு அறப்பொறுப்புக் கழகத்தின்" ஆதரவில் இயற்கை ஆதாரங்கள் மேம்பாட்டுக்காக நடத்தப்பட்ட ஆன்மீக மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். அவர் 27-ஆம் தேதியன்று ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவைத் தொடங்கி வைத்தார். அவர் ஜூலை 29-ஆம் தேதியன்று புலனாய்வுப் பிரிவின் நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

ஆகஸ்டு.—மேதகு ஆளுநர் அவர்கள் 23-ஆம் தேதியன்று சென்னையில் மலையாளத் திரைப்பட விழாவைத் தொடங்கி வைத்தார். அன்றே இராஜாஜி மண்டபத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிட்டார். அவர் 14-ஆம் தேதியன்று "போதை மருந்துகளின் பிடியிலிருந்து விடுதலை" என்னும் இயக்கத்தின் தொடக்க விழாவில் கலந்துகொண்டார். அன்றே வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற இந்திய சுதந்திர தினத்தின் 40-ஆம் ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார. 15-ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்றினார். அன்று மாலை ஆளுநர் மாளிகையில் விருந்து அளித்தார். அவர் தொலைக் காட்சி நிலையத்தில் தொலைக்காட்சி வட்டாரப் பணியைத் தொடங்கி வைத்தார். அவர் 26-ஆம் தேதியன்று ஸ்ரீ சத்ய மூர்த்தியின் 101-ஆம் பிறந்த நாள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். 30-ஆம் தேதியன்று குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்த சென்னை உயர்நீதிமன்றத்தின் 125-ஆம் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கினார். மனுநீதிச் சோழனின் சிலையையும் திறந்து வைத்தார்.

செப்டம்பர்.—மேதகு ஆளுநர் அவர்கள் 5—9—1988-ஆம் நாளன்று நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு மாநில அரசின் விருதுகளை வழங்கினார். 21—9—1988-ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் அந்த ஆண்டிற்கான பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டார். 24—9—1988 ஆம் நாளன்று பாரதிய வித்தியாபவனில் நடைபெற்ற ஸ்ரீகோவிந்த வல்லப பந்த் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டார்.

அக்டோபர்.—மேதகு ஆளுநர் அவர்கள் 14–10–1988ஆம் நாளன்று நடை பெற்ற "தூய நிருவாகம்" என்ற தலைப்பின்கீழ் நடைபெற்ற கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார். 15–10–88-ம் நாளன்று அனைத்து இந்திய தயாரிப்பாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்த ஒரு விழாவில் கலந்துகொண்டு "டாக்டர், விஸ்வேஸ் வரையா விருதினை" வழங்கினார். "நாட்டின் தொழில் – பொருளாதார வளர்ச்சி யில் சிறு தொழில் துறையின் பங்கு" என்ற தலைப்பில் 22–10–1988-ம் நாளன்று நடைபெற்ற கருத்தரங்கில் அவர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். "அணு சக்தியை சமாதானம் நிலவப் பயன்படுத்தல்" என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்கு ஒன்றை அவர் 28–10–1988ஆம் நாளன்று தொடங்கி வைத்தார். அதே நாளன்று மாலை சோவியத் ஐக்கிய சோசலிஸ்ட் குடியரசில் IVஆம் கட்ட விழாவைத் தொடங்கி வைத்தார். 21–10–1988ஆம் நாளன்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தேசிய மறு அர்ப்பணிப்பு நாள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

நவம்பர்.—மேதகு ஆளுநர் 3–11–1988-ஆம் நாளன்று சென்னை சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தைப் பார்வையிட்டு, அங்கு 14 கோடி ரூபாய் செலவிலான "ப்ரோ பைலீன்" தொழிற்சாலையைத் தொடங்கிவைத்தார். 18–11–1988ஆம் நாளன்று தலைமைச் செயலகத்தில் அனைவரும் தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழி எடுத்துக் கொள்ளும் விழாவில் பங்கேற்றார். அவர் மொரீஷியஸ் நாட்டு கவர்னர் ஜெனரலை வரவேற்று, 19–11–1988ஆம் நாளன்று அவருக்கு விருந்து ஒன்று அளித்தார்.

டிசம்பர்.—21–12–1988-ஆம் நாளன்று மேதகு ஆளுநர் சென்னை புதிய (ஷெரீப்) மாநகரண்ணல் அவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் முதலாண்டு நினைவு நாளன்று சென்னை மெரினா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவுச் சின்னப் பணிகளைத் தொடங்கிவைத் தார். "சோவியத் ஐக்கியக் குடியரசின் அர்மீனியா பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தி னால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடர் உதவி" குறித்து மாநில அளவில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். 31–12–1988ஆம் நாளன்று நடைபெற்ற புனித ஜான் ஆம்புலன்ஸ் சங்கத்தின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

ஜனவரி 1989.—மேதகு ஆளுநர் அவர்கள் 5–1–1989-ஆம் நாளன்று அனைத் திந்திய சுற்றுலா–தொழில் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்தார். 17–1–1989 ஆம் நாளன்று சங்க இலக்கியங்களில் ஆங்கில மொழிபெயர்ப்பினை அவர் வெளியிட்டார். குடியரசு நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். மேதகு ஆளுநர் 27–1–1989ஆம் நாளன்று வள்ளுவர் கோட்டத்தில் புதிய அமைச்சரவைக்குப் பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

பிப்ரவரி.— 1–2–1989-ஆம் நாளன்று அவர் சட்டப் பேரவை இடைக்காலத் தலைவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 10–2–1989ஆம் நாளன்று இந்தியக் கடல் உணவு வர்த்தகப் பொருட்காட்சியை ''தாஜ் கொரமாண்டல்'' ஓட்டலில் தொடங்கி வைத்தார். தொழில் பொறியியல் பயிற்சியளிப்பதற்காக தேசிய நிலையத்தின் சென்னை விரிவாக்க மையமொன்றை 11–2–1989-ஆம் நாளன்று சென்னை கன்னிமாரா ஓட்டலில் திறந்து வைத்தார். 19–2–1989-ஆம் நாளன்று அவர் ''தாஜ் கொரமண்டல் ஓட்டலில் ரோட்டரி இண்டர் நேஷனல் டிஸ்டிரிக் கான் பெரன்சைத்'' தொடங்கி வைத்தார். 27–2–1989-ஆம் நாளன்று அவர் சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆண்டுப் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

மார்ச்.— மேதகு ஆளுநர் அவர்கள் 4–3–1989-ஆம் நாளன்று வைரம் வைடூரிய இரத்தின ஆபரணங்கள் செய்முறை எந்திரப் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார். தத்துவம் தொடர்பாக ஆழ்ந்தகன்ற கல்விக்காக டாக்டர். இராதாகிருஷ்ணன் கல்வி மையம் ஏற்பாடு செய்திருந்த '' சங்கராச்சாரியா '' என்னும் பொருள்பற்றிய பன்னாட்டு பண்பாட்டுக் கருத்தரங்கில் அவர் 6–3–1989ஆம் நாளன்று கலந்து கொண்டார்.

# அத்தியாயம் 2.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்.

1981ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தின் மொத்த மக்கட் தொகை 484 இலட்சமாகும். இதில், ஆதி திராவிடர்களின் எண்ணிக்கை 98.81 இலட்சமாகும். இது 18.35 சதவிகிதம் ஆகும். பழங்குடியினரின் எண்ணிக்கை 5.20 இலட்சமாகும். இது மாநிலத்தின் மொத்த மக்கட் தொகையில் 1.87 சதவீதமாகும். ஆதி திராவிடர்களில், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 29.67 சதவீதமாகும்; பழங்குடியினரில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 20.45 சதவீதமாகும்; அனைத்து வகுப்பாரையும் சேர்ந்த எழுத படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 44.76 சதவீதமாகும்.

ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலனுக்கென்று மேற்கொள்ளப்பட்ட முதன்மையான மேம்பாட்டுப் பணிகள் பின்வருமாறு:—

(1) கல்வி
(2) வேலைவாய்ப்பு—பொருளாதார மேம்பாடு;
(3) சுகாதாரம், வீட்டுவசதி—பிற திட்டங்கள்.
(4) பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்.

1. <u>கல்வி :</u>

கல்வித் துறையில், அரசு மேற்கொண்டுள்ள முக்கியப் பணிகள், படிப்புதவித் தொகை வழங்குதல், பள்ளிகள் பராமரிப்பு, மாணவர் இல்லங்களைத் திறத்தல், பராமரித்தல், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டப்படி, உணவு வழங்குதல், புத்தகங்கள், உடைகள் ஆகியவற்றை வழங்குதல், உணவு மாணியம் அனுமதித்தல் ஆகியவையாகும். அகில இந்தியப் பணிக்குப் போட்டித் தேர்வு எழுதப் போகும் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு தேர்வுக்கு முந்தைய பயிற்சி மையம் ஒன்றை, இத்துறை சென்னையில் நடத்தி வருகின்றது. பல்வேறு கல்வித் திட்டங்களுக்காக 1989-90 ஆம் ஆண்டுக்கென்று ரூ. 4497.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர்களுக்கென்று 1,001 பள்ளிகளும், பழங்குடியினருக்கென்று 203 பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 2.42 இலட்சமாகும். பள்ளிகள்/கல்லூரிகள் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கென்று தங்குமில்ல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

''கல்வி'' என்பதன்கீழ் பல்வேறு செயல் நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை விவரம் வருமாறு :—

1989-90-ல் ஒதுக்கீடு.

| | திட்டம் | திட்டத்தில் சேராதவை. | மொத்தம். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| படிப்புதவித் தொகை | 967.74 | 343.99 | 1,311.73 |
| பள்ளிகள் | 356.10 | 1,447.69 | 1,803.79 |
| மாணவர் இல்லங்கள் | 524.68 | 822.71 | 1,347.39 |
| தனிப்பயிற்சித் திட்டம் | 19.56 | 14.77 | 34.33 |

ஆதி திராவிடர் மாணவர் இல்லங்கள் :—

| | மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கல்லூரி மாணவர் இல்லங்கள் | 50 | 4,489 |
| 2. உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள் | 716 | 45,432 |
| 3. தொழிற்பயிற்சி நிறுவன மாணவர் இல்லங்கள் | 8 | 583 |
| | 774 | 50,504 |

பழங்குடியினர் மாணவர் இலங்கள் :—

| | | |
|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள் | 21 | 1,008 |

## படிப்புதவித் தொகைகள் :

மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பு.—இத்திட்டத்தின்படி, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை நடத்தி வருகின்ற பள்ளிகள் தவிர, அரசால் ஏற்பளிக்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும், 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, இந்துமுறையும்; 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கல்வித்துறையும் புத்தகங்கள் வழங்கி வருகின்றன. பள்ளிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு, 1988–89 ஆம் ஆண்டு முதல் நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்டப் படிப்பு.—மத்திய அரசு வரையறுத்துள்ள விதிமுறைகளின்படி, மேல்நிலைப்பள்ளி வகுப்பு, பட்ட மேற்படிப்பு, கலை, அறிவியல் படிப்புகள், தொழிற்கல்வி ஆகியவை பயிலும் மாணவர்களுக்கு விடுதியில் தங்கிப் பயில்வதற்கான படிப்புதவித் தொகைகளும், வெளியிலிருந்து வந்து படிப்போருக்கான படிப்புதவித் தொகைகளும் (Residential and Non-Residential Scholarships) வழங்கப்படுகின்றன. இப்படிப்புதவித் தொகைகள் பெறுவதற்கு, மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு உட்பட்டிருக்க வேண்டும். மத்திய அரசு வழங்கும் படிப்புதவித் தொகையை பெறத் தகுதியில்லாத ஆதிதிராவிட மாணவர்களுக்கும் (இந்துக்கள்) பழங்குடி மாணவர்களுக்கும் மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் மாநில அரசு படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 12,000 ஆகும்.

இது தவிர, காந்தி நினைவுப் பரிசு, தகுதி-வழிவகைப் பரிசு, தனித் தகுதி மானியம், கடன் படிப்புதவித் தொகை ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

பட்டப்படிப்பில்/பட்டமேற்படிப்பில்/தொழிற்படிப்பில் முதல் முறையில் தேறி 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் வாங்கியுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 1983–89 ஆம் ஆண்டிலிருந்து பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்.—துப்புரவுப் பணி உட்பட (அகற்று முறைக் கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல்) கழிப்பிடங்களைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களின் (அவர்கள் எந்த இனத்தை, மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி) குழந்தைகளுக்கு மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்கான பரிசு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய குழந்தைகளின் நலனுக்கென்று, அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் ஆண்களுக்கென்று ஒன்றும், வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரில் பெண்களுக்கென்று ஒன்றும் ஆக இரு மாணவர் இல்லங்கள் (ஒவ்வொன்றுக்கும் 30 என்கிற அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையுடன்) நடத்தப்பட்டு வருகின்றன.

புதுடில்லியிலுள்ள மத்திய அரசு தேர்வாணை கழகம் நடத்துகின்ற, அகில இந்தியப் பணி, இந்தியக் காவல் பணி மற்றும் ஏனைய மத்திய அரசுப் பணிகளில் சேருவதற்கான போட்டித் தேர்வுகள் எழுதுகின்ற ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில், 1966 ஆம் ஆண்டில், தேர்வுக்கு முந்தைய பயிற்சி மையம் தொடங்கப்பட்டது. அம்மையம் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகின்றது. இதில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 60 ஆகும்.

வேலைவாய்ப்பும் பொருளாதார மேம்பாடும்.—ஆதிதிராவிடர், பழங்குடியினரின் வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றுக்காகச் செயலாக்கப்பட்டு வருகின்ற திட்டங்கள் வருமாறு :—

உழவு மாடுகள் வாங்க உதவித்தொகை.—ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்கும், திருத்த முறையில், உழவு மாடுகள் வாங்க உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திருத்த துறையின்படி, உழவு மாடுகளின் விலையில் 1/3 பாகம் அதாவது ரூ. 800-க்கும் மேற்படாதத் தொகை உதவித் தொகையாகவும் மீதமுள்ள தொகை 2/3 பாகம் அதாவது ரூ. 1,600 வங்கிகள் மூலம் கடனாகவும் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கம்.—இம்மாநிலத்தில், பழங்குடியினரை பல்வேறு சுரண்டல்களிலிருந்து விடுவிக்கவும், அவர்கள் சேகரிக்கும் காடுபடு பொருள்களை இலாபகரமாக விற்பனை செய்யவும், அவர்களது பொருளாதார நிலைகளை மேம்படுத்தவும், அரசு பழங்குடியினருக்காக பெரும் அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல நோக்குக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், ஐந்தையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டையும் ஏற்படுத்தியுள்ளது.

<u>பால்வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.</u>— ஏழை ஆதிதிராவிடர்களுக்கு உதவி செய்யும் , அவர்களுக்கு நல்லஆதாயம் தரும்வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கவும் பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஆதிதிராவிடர் ஒவ்வொருவரும் கால்நடை ஒன்றுக்கு ரூ. 2,500 வீதத்தில் நிதியுதவி பெறத் தகுதியுடையவர் ஆவர். இத்தொகையில் கால்நடை ஒன்றுக்கு ரூ. 833 வீதத்தில் ஆதிதிராவிடர் நல நிதியிலிருந்து உதவித் தொகையாகவும் ரூ. 1,667 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடனாகவும் வழங்கப்படுகிறது. ஒவ்வொருவரும் இரண்டு கால்நடைகளை மட்டுமே வாங்க மேற்படி நிதியுதவியைப் பெற முடியும். இத்திட்டம், சென்னை பால் உற்பத்தி பால்வள ஆணையர் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

<u>குடிசைத் தொழில்கள்.</u>— குடிசைத் தொழில் பயிற்சி மையங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இந்த மையங்கள், நிருவாக வசதிக்காக, சென்னை, சமூக நலத் துறை இயக்குனரின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் துறை, இந்த மையங்களை நிருவகிப்பதற்குத் தேவையான நிதிகளை அளிக்கிறது. ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை பேச்சிப்பாறையில் (கன்னியாகுமரி) தையல்-நெசவுப் பயிற்சி மையம் ஒன்றையும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

<u>தொழில்நுட்பப் பயிற்சிப் பெற்ற ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்கு கருவிகள் சாதனங்கள் இலவசமாக வழங்குதல் :</u>

தொழில் நுட்பக் கல்வித் தகுதி பெற்றுள்ள ஆதிதிராவிடர்க்ள், அத்தகுதியைக் கொண்டு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொள்ள ஏதுவாக அவர்களுக்கு கருவிகள்.—சாதனங்கள் இலவசமாக வழங்கும் திட்டம், 1958–59 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்டது. சமூகநலத்துறையின் 15–2–1969 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்டது. சமூகநலத்துறையின் 15–2–1969 ஆம் நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையின் படியும், சமூக நலத் துறையின் 16–9–1975 ஆம் நாளிட்ட 733 ஆம் எண் அரசாணையின்படியும், பழங்குடியினருக்கும், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் முறையே 1968–69, 1975–1976 முதல் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. இச்சலுகையைப் பயன்படுத்திக் கொள்ள விழைவோர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லது கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். ஒருவர் எத்தொழில் தொடங்க உதவித் தொகைக் கோருகிறாரோ, அத்தொழிலில் அவர் தொழில்நுட்பப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்; எந்த ஒரு பயிற்சி நிலையத்திலும் அவர் ப்யிற்சி எதனையும் பெறவில்லையாயின் தனியார் நிறுவனம் ஒன்றில் அல்லது அணிக்களறியில் நடைமுறை அனுபவம் அல்லது பயிற்சிப் பெற்றிருக்க வேண்டும். நிதி உதவி அளிக்கும் இச்செயற் நோக்கத்திற்காக 21 தொழில்களுக்கு ஒப்புதல் பளிக்கப்பட்டுள்ளது.

2. பயன் பெறக்கூடியவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக அரசு குழு ஒன்றை அமைக்க வேண்டும். ஆதிதிராவிடர்— பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள தொழில் நுட்பப் பயிற்சிப் பெற்றவர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கத்தேவைப்படக்கூடிய கருவிகள்— சாதனங்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்து, பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய பிறகு பொருள்களை மொத்தமாக வாங்க வேண்டும்; ஒவ்வொரு மாவட்டத்திற்குரிய தேவைகளை, ஒப்புதலளிக்கப்பட்ட நபர், மாவட்டத் தலைமையிடங்களில் வழங்குவார். இத்திட்டத்தை, மாவட்டத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செயல்படுத்துகிறார்.

ஆதி திராவிடர்களுக்கு ரூ. 12 இலட்சமும், பழங்குடியினருக்கு ரூ. 1.00 இலட்சமும், கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு ரூ. 1.50 இலட்சமும் ஆண்டு தோறும் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1988—89 ஆம் ஆண்டில் 1989 மார்ச் வரையில் இச்செயற் நோக்கத்திற்காக ரூ. 76,813.10 செலவிடப்பட்டுள்ளது.

<u>மத்திய அரசு அளிக்கும் சிறப்பு நிதியுதவி.</u>—மத்திய அரசு ஆதி திராவிடர்களின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்காக, மத்திய நிதியுதவித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. திட்டத்தைச் செயல்படுத்தும் துறைக்கு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சித்துறை மூலமாகத் தொகை வழங்கப்படுகிறது.

<u>சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் ஏனைய திட்டங்கள்.</u>—சுகாதாரம் மற்றும் வீட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசு குடிநீர் கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், நிலமட்ட நீர்தேக்கங்கள், இணைப்புச் சாலைகள், இடுகாடுகளுக்குச் செல்லும் நடைபாதைகள், வீட்டு மனைகள், நடமாடும் மருத்துவப் பிரிவுகள் முதலியவற்றிற்கு நிதியொதுக்கம் செய்துள்ளது.

<u>வீட்டுவசதி.</u>—ப்படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுவசதிகளை அளிப்பதற்காக, 1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. ஆதி திராவிடர்

களுக்கு வீட்டுவசதி அளிப்பது மட்டுமன்றி, இக்கழகம் மாணவர் இல்லக் கட்டிடங்கள் பள்ளிக்கட்டிடங்கள், ஆசிரியர் குடியிருப்புகள் கட்டும் பணி, சமுதாயக் கூடங்கள் முதலியன கட்டும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இக்கழகம், இதுவரையில் சுமார் 71,036 வீடுகளைக் கட்டியுள்ளது. ஒரு வீடு கட்டுவதற்கு சமதளப் பகுதியில் ரூ. 9,000-ம், கரிசல் நிலப்பகுதியில் ரூ. 10,800-ம் மலைப்பகுதியில் ரூ 13,000-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

<u>தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி ஆதி திராவிடர்களுக்கு பழங்குடியினருக்கு வீட்டு மனைகளை இலவசமாக வழங்குதல்.</u>—ஆதி திராவிடர்களுக்கு பழங்குடியினருக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டம் 1988-89 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டில் 20,004 பட்டாக்கள் வழங்கப்பட்டன. இதன்கீழ் ரூ. 124.03 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31–3–1989 முடிய ஆதி திராவிடர்களுக்கும், பழகுடியினருக்கும் 4,87,942 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன; இதற்காக ரூ. 18.98 கோடி செலவிடப்பட்டுள்ளது.

<u>ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிகள் அளித்தல்.</u>—ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிகள் அளிப்பது, அடிப்படை வசதிகளில் ஒன்றாகும். ஆதி திராவிடர் குடியிருப்புகளில் இவ்வசதிகளை செய்து கொடுக்கும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. ரூ. 7,500 செலவில் புதிய குடிநீர்க்கிணறுகள் தோண்டப் படுகின்றன. (சமூக நலத்துறையின் 20—3—1981 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணை) அவசியமான இடங்களில் ரூ. 15,000 செலவில் நிலமட்ட நீர்த் தேக்கங்கள் அமைக்கப்படுகின்றன. நிலமட்ட நீர்த்தேக்கங்கள் கட்டும் பணியை விரைவு படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப் பட்டுள்ளன (காண்க :—சமூக நலத்துறையின் 11—2—1978 ஆம் நாளிட்ட 168 ஆம் எண். அரசாணை). ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 20—8—1977 ஆம் நாளிட்ட 1443 ஆம் எண் அரசாணையின்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் துடன் கலந்தாலோசித்து, I, II ஆம் வகைகளின் கீழ் வரும் ஆதி திராவிடர் குடி யிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு உயர் முன்னுரிமை அளிக்குமாறு மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரிகளுக்குக் கட்டளையிடப்பட்டது. இந்த ஆண்டில், இச்செயல் நோக்கத்திற்காக, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 21.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>சலவைக் கூடங்கள் கட்டுதல்.</u>—கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த வண்ணார்களுக்குச் சலவைக் கூடங்கள் கட்டும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் இத்துறையால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், 1979–80ஆம் ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. ஒவ்வோராண்டும் சலவைக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1988–89 ஆம் ஆண்டில், இச்செயல் நோக்கத்திற்காக, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள தாமரைக்குளம், செம்பூர் குடியிருப்புகளுக்கு ரூ. 20,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், இப்பணிகளைத் தொடங்குவதற் காக, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கடனாக 10,000 ரூபாயும் 50 சதவீத உதவித் தொகையாக ரூ. 5,000-மும் வழங்கப்பட்டது.

<u>கழிப்பிடத் துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.</u>—துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ள பெருக்குபவர்கள், கழிப்பிடப் பணியாளர்கள் ஆகியோருக்கு, வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ், 1981–82 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள 31 பேரூராட்சிகளில், குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 5,060 என்ற செலவு வீதத்தில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 100 வீடுகளைக் கட்டுவதற்கு, சமூக நலத்துறையின் 17–3–1982ஆம் நாளிட்ட 1080ஆம் எண்ணிட்ட ஆணையில், அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற் காக, இத்தொகை பெறப்பட்டு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம் பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டது.

2. துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ள பெருக்குபவர்கள், கழிப்பிடப் பணி யாளர்களின் பணியை நாகரிகமானதாக்கும் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்திலுள்ள பேரூராட்சிகளில், 58 பேரூராட்சிகளுக்கு, 288 சக்கரக் கைவண்டிகள் (Wheel Barrow) 337 குப்பை அள்ளும் கருவிகள் (Scoaper) 339 கூடைகள் (Pans) ஆகிய வற்றை வழங்குவதற்கு, அரசின் 75 சதவீத உதவித் தொகை வகையினா. ரூ. 3.25 இலட்சம் செலவிற்கு, அரசு 1987—88 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகை, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, பேரூராட்சி நிருவாக இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டது.

<u>கலப்புத் திருமண தம்பதியினருக்குப் பரிசு வழங்குதல்.</u>—கலப்புத் திருமண தம்பதி களுக்குச் சலுகைகள் வழங்கும் திட்டம், 1987—88 ஆம் ஆண்டில் தொடரப்பட்டது. இவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழும்வழங்கப்படுகின்றது. இவ்வாறு கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருடைய ஒருங்கிணை[illegible]ண்டு வருமானம்

ரூ. 12,000-மும் அதற்குக் குறைவாகவும் இருக்குமாயின், அவர்கள் (திருமணச் செலவுக்காக) ரூ. 1,000 ரொக்க மானியம் பெறத் தகுதியுடையவர்களாவர். அத்துடன் நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனுமொரு வங்கியில் இத்தம்பதியினரின் பெயர்களில் கூட்டுக் கணக்கில் தேசிய சேமிப்புப் பத்திரத்தில் 6 ஆண்டு முதலீடு செய்ய ரூ. 4,000 தொகை பெறவும் தகுதியுடையவர்களாவர்.

தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசு வழங்குதல்.—தீண்டாமை கொடுமையை ஒழிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியில் கிராம மக்களுக்கிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும் பொருட்டும், இப்பணியில் உண்மையிலேயே நல்ல ஆர்வத்தையும், அக்கறையையும் ஏற்படுத்தும் பொருட்டும் சென்னை மாநகர் நீங்கலாக, தீண்டாமை ஒழிப்புப் பணியில் முன்னணியிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கிராமங்களுக்கு இரு பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசு ரூ. 2,000—ம், இரண்டாம் பரிசு ரூ. 1,000—ம் ஆகும். இத்திட்டத்திற்கு 1988—89 ஆம் ஆண்டில், வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

துப்புரவாக வைத்துவரும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி பரிசாக வழங்குதல்.—தீண்டாமைக் கொடுமையை வெகு விரைவில் நீக்குவதற்குரிய ஓர் நடவடிக்கையாக ஒவ்வொரு வட்டத்திலும், நல்ல முறையில் துப்புரவாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் வானொலிப் பெட்டி ஒன்று பரிசாக வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர் வார விழா.—ஒவ்வோராண்டும், ஜனவரித் திங்கள் 24-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் வரையில், ஆதி திராவிடர் வார விழா கொண்டாடப்படுகிறது. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோரின் நிலைமையை உயர்த்துவதற்கு, துறை மேற்கொள்ளும் பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் பற்றிய நாளேடுகளில் சிறப்புச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. 1988-89-ஆம் ஆண்டில் அரசு ரூ. 20,500 அனுமதித்தது.

சமூக நல மையங்கள்.—இம்மாநிலத்தில், 25 சமூக நல மையங்கள் இயங்கி வருகின்றன. குடும்ப நலத்தையும், குழந்தை முன்னேற்றத்தையும் ஒருங்கிணைத்து மேம்படுத்துவதே இந்த மையங்களின் முக்கிய நோக்கமாகும். இந்த மையங்களில் ஆதி திராவிடரும், ஆதி திராவிடர் அல்லாத ஏனையோரும் எவ்வித பேதமுமின்றி இணைந்து செயல்படுகின்றனர். இந்த மையங்களில் சிறார்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. இந்த மையங்களைச் சேர்ந்த ஆதி திராவிட சிறார்களுக்கு, தீபாவளிப் பண்டிகைக்கும், பொங்கல் திருவிழாவுக்குமென இரு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன. இந்த மையத்தை சமூகச் சேவகர் ஒருவரும், சமூகச் சேவகி ஒருவரும், பெண் உதவியாளர் ஒருவரும் நிருவகித்து வருகின்றனர். ஆதி-திராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் 1—2—1989-ஆம் நாளிட்ட 142-ஆம் அரசாணையில் இந்த மையங்களை ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் கட்டுப்பாட்டிற்கு மாற்றி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1955-ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்துதல்.— 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களை விசாரிப்பதற்கென்றே திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் (கும்பகோணத்தில்) ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒன்று வீதம் நீதி மன்ற முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் பதவிகள் நான்கை ஏற்படுத்துவதற்கு, அரசு ஓர் (நீதிமன்றங்கள்—) துறையின் 13—11—1981-ஆம் நாளிட்ட 2688-ஆம் எண் ஆணையில், அனுமதி வழங்கியுள்ளது. இத்தனி நீதிமன்றங்கள் 1982 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படத் தொடங்கின.

ஆதி திராவிடர், பழங்குடியினர் உறுப்பினர்களுக்கெதிரான வன்முறைகள், அட்டூழியச் செயல்கள் ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இம்மாநிலத்தில் 23 காவல்துறை நடமாடும் படைப்பிரிவுகள் இயங்கி வருகின்றன. நடமாடும் காவல் படைப்பிரிவு, காவல் கண்காணிப்பாளர் ஆகியோரின் உதவியுடன் சென்னை, காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் (குடியுரிமை பாதுகாப்புச் சட்டம்) 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் பல்வேறு விதிதுறைகளை இம்மாநிலத்தில் செயல்படுத்துகிறார். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்தவும் தீண்டாமையை ஒழிக்கவும் இம்மாநிலத்தில் விளம்பர அலுவலர் ஒருவர், உதவியாளர் ஒருவர், திரைப்படச் சாதனங்களுடன் திரைப்பட இயக்குபவர் ஒருவர், நடமாடும் வேன் ஆகியவை அடங்கிய விளம்பரப் பிரிவு ஒன்று தனியாக இயங்கி வருகிறது. இம்மாநிலத்தில் தீண்டாமையை கடைப்பிடிக்கும் கிராமங்கள் குறித்து 1985-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் கணக்கெடுக்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 1985-ஆம் ஆண்டில் தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் 564 கிராமங்கள் இருந்ததாகக் கண்டறியப்பட்டது. 1986-1987-ஆம் ஆண்டில் 523 கிராமங்களிலும், 1988-ஆம் ஆண்டில் 414 கிராமங்களிலும் தீண்டாமைப் பழக்கம் இருப்பது கண்டறியப்

பட்டது. தீண்டாமை கொடுமை கடைப்பிடிக்கப்படும் கிராமங்களில், அனைத்து அடிப்படை வசதிகளும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள முனைப்பான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இடுகாடுகள், இடுகாட்டுப் பாதை ஆகியவற்றிற்கு நிலங்களைக் கையகப்படுத்தும் பணி கண்காணிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தீண்டாமைக் கொடுமையை ஒழிப்பதற்கான பிரச்சாரப் பணிகள்.— தீண்டாமைக் கொடுமை பற்றியும், அதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகள் பற்றியும் மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்காக 1984-85-ஆம் ஆண்டில் அரசு ரூ. 3.10 இலட்சம் செலவில், ''தீர்த்த யாத்திரை'' (புனிதப்பயணம்) என்ற தலைப்பில் செய்திப்படம் ஒன்றை தயாரித்தது. இத்திரைப்படம், அரசு நடத்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் மக்களுக்கு திரையிட்டுக் காட்டப்பட்டது. தீண்டாமைக் கொடுமையைப் பற்றி மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன், பொது மக்களுக்கு இந்த செய்திப் படத்தை திரையிட்டு காட்டுவதற்காக, அரசு ரூ. 2.10 இலட்சம் செலவில் விளம்பர வேன் ஒன்றை வாங்கியது.

இந்த ஊர்தியில் (வேனில்) பொருத்துவதற்காக, ரூ. 0.11 இலட்சம் செலவில் திரைப்படக்கருவி ஒன்று வாங்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்குச் சென்று இசைக் கருவிகளோடு கூடிய வாய்ப்பாட்டின் மூலம் தீண்டாமைக் கொடுமைபற்றி விளக்குவதற்காக மாவட்டங்களில் (வில்லுப்பாட்டு குழுவைச் சேர்ந்த) கலைஞர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு பணியாளர்கள், சாதனங்களுடன் கூடிய கூடுதல் விளம்பரப் பிரிவு ஒன்றை ரூ. 3.15 லட்சம் ஒதுக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையை முழுவதுமாக ஒழிக்கப்பாடுபடும் 2 கிராமங்களுக்கு இரண்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசுத் தொகை ரூ. 2,000 இரண்டாவது பரிசுத் தொகை ரூ. 1,000 ஆகும்.

2. கனரக வண்டி ஓட்டுநர்கள் பயிற்சி.— ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த இருநூறு நபர்களுக்கு ஒருவருக்கு ரூ. 2,000 செலவில் அரசுப் போக்குவரத்து கழகங்களில் கனரக வாகனங்கள் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

சமுதாயக் கூடங்கள் :— சமுதாயக் கூடம் ஒவ்வொன்றும் ரூபாய் 1 இலட்சம் செலவில் படிப்படியாகக் கட்டப்படுகின்றன. இதற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு கழகத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1988-89 ஆம் ஆண்டில் ரூபாய் 10.85 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

கணிப்பொறி பயிற்சித் திட்டங்கள்.— சென்னை-44, குரோம்பேட்டையிலுள்ள எம். ஐ. டி.-யில் 1988-89 ஆம் ஆண்டில் இந்து ஆதி திராவிடர்களுக்கு ஆறு திங்கள் கால அளவு கணிப்பொறி பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இந்தப் பயிற்சி வகுப்பின் பயன்களை மதிப்பிட்ட பின்னர் சென்னையிலுள்ள எம்.ஐ.டி-ஐத் தவிர மேலும் ஆறு மையங்களில் இந்த பயிற்சி வகுப்புகளை நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அளிக்கப்படுகின்ற நிதியுதவிகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

பயிற்சியாளர் ஒருவருக்கு பயிற்சிக் காலம் முழுவதற்கும் படிப்புக் கட்டணம் ரூ. 1,500.

பயிற்சியாளர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 140 என்ற விதத்தில் ஆறு திங்களுக்கு உணவுக் கட்டணம்.

பயிற்சியாளர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 20 விதம் ஆறு திங்களுக்குப் போக்குவரத்துக் கட்டணம்.

பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ. 4,000 என்ற விதத்தில், 400 ஆதிதிராவிட விண்ணப்பதாரர்களுக்குப் பயிற்சியளிக்க, மத்திய தனி உதவி நிதியிலிருந்து 100 சத விகித உதவித் தொகையாக அளிக்கப்படும் ரூ. 16 இலட்சம் தொகையை வழங்குவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயிற்சியாளர்கள் இந்து ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்தின் நிருவாக இயக்குநரின் பொறுப்பில் தொகை அளிக்குமாறு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் நிருவாக இயக்குநருக்கு எழுதப்பட்டுள்ளது.

தேர்வு முன் பயிற்சி மையங்களில் அடிப்படை வசதிகள் :—இந்திய ஆட்சிப்பணி இந்திய காவல் பணி முதலிய பணிகளுக்குரிய தேர்வுகளை எழுதுவதற்காகப் பயிற்சி யளிக்கப்படும் ஆதிதிராவிடர் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு சென்னையில் உள்ள தேர்வு முன் பயிற்சி மையத்தில் அடிப்படை வசதிகளை அளிப்பதற் காக பின்வரும் எட்டு இனங்களை வாங்குதவற்காக அரசு ரூ. 2,54,058-க்கு ஒப்புதல் அளித்துள்ளது :—

வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி.

நகல் எடுக்கும் எந்திரம்.

வரை படங்கள், விளக்கப்படங்கள் ஆகியவற்றை வாங்குதல்.

கரும் பலகை வழங்குதல்

திரைப்படம், விளம்பரப்படங்கள் காட்டும் கருவி திரைகள் வாங்குதல்

காட்டிவைப்பதற்கான பலகைகள்.

அண்மையில் தொகுத்து வெளியிடப்பட்ட என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா கலைக் களஞ்சிய தொகுதிகளை வாங்குதல்.

புத்தகம் கட்டும் மின்னணுவியல் இயக்கக் கருவி.

தற்போது வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டியும், நகல் எடுக்கும் எந்திரமும் வாங்கப்பட்டுள்ளன. புத்தகம் கட்டும் மின்னணுவியல் இயக்கக் கருவி, வரைபடங்கள் விளக்கப் படங்கள் என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா கலைகளஞ்சிய தொகுதிகள் ஆகியவற்றை வாங்குவதற்கு தேவைக்குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

செவிலிப்பணி உதவியாளர் பயிற்சி வகுப்பு.—ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 30 மகளிரின் பயனுக்காக அடையாறு, தொண்டு சுகாதாரப் பணி நிறுவனத்தில் (Voluntary Health Service, Adayar) ஓராண்டு செவிலிப்பணி உதவியாளர் பயிற்சியளிக்கும் திட்டத்திற்கு அரசு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் 23–9–1989ஆம் நாளிட்ட 1856ஆம் அரசாணையில் ஒப்புதலளித்துள்ளது. பயிற்சி நடைபெறவிருப்பதைக் குறித்து உள்ளூர் செய்தித்தாள்களின் மூலம் நன்றாக விளம்பரம் செய்யும் பொருட்டு, எந்நாளிலிருந்து பயிற்சி வகுப்பு தொடங்குகிறது என்பதைத் தெரிவிக்குமாறு அடையாறு தொண்டு சுகாதாரபணி நிறுவனத்திற்கு எழுதப்பட்டுள்ளது.

முன்னோடி மாதிரி உருவாக்கப் பயிற்சி மையம்.—மத்திய தனி உதவி நிதியி லிருந்து (Special Central Assistance) உதவித் தொகையாக ரூ. 9,600 மொத்த மூலத் தொகையுடன், சென்னை முன்னோடி மாதிரி உருவாக்கப் பயிற்சி மையத்தில் முன்னோடி மாதிரி உருவாக்கப் பயிற்சியில் 20 ஆதி திராவிட மாணவர்களுக்கு மூன்று மாதம் பயிற்சியளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. முன்னோடி மாதிரி உருவாக்கப் பயிற்சி மையத் துணை இயக்குநர் வகுப்பை நடத்துகிறார்.

வணிகக் கப்பல்—வானொலி அதிகாரிகள் பயிற்சி வகுப்பு.—மத்திய தனி உதவி நிதியிலிருந்து உதவித் தொகையாக ரூ. 14,64,000 மொத்த மூலதனத் தொகையுடன் சென்னை அடையாற்றிலுள்ள ரமணா கப்பல் மின்னணுவியல் சோதனைப்பயிற்சி நிறுவனத்தில் ஓராண்டுக்கு கப்பல் வானொலி அதிகாரிகள் பயிற்சி வகுப்பில் 200 இந்து ஆதி திராவிட மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக அரசு ஒப்புதலளித்துள்ளது. இப்பயிற்சி வகுப்பு 27–11–1989-லிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

நீதி நிருவாகத்தில் சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி.— ஆதி திராவிடர்/பழங் குடியினர் வகுப்பைச் சேர்ந்த சட்ட பட்டதாரிகள் 20 பேருக்கு நீதி நிருவாகத்தில் நான்காண்டுகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 20 விண்ணப்பதாரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, புகழ் பெற்ற 10 வழக்கு ரைஞர்களிடம் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். இத்திட்டத்தில் பங்கு கொள்ள புகழ்பெற்ற வழக்குரைஞர்களை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 மதிப்பூதியம் அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு மாதமொன்றுக்கு ரூ. 500 பயிற்சி உதவித் தொகை பெறத் தகுதி யுடையவர்கள். இத்திட்டம், மாற்றியமைக்கப்பட்டு, 21 மாவட்டங்களின் தலைமை யிடங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அந்த 21 மாவட்டங்களிலும் முதுநிலை வழக்குரைஞர் ஒருவருக்கு ஒரு சட்டப் பட்டதாரி என்ற வீதத்தில் 42 இளம் ஆதி திராவிட சட்டப் பட்டதாரிகள் இத்திட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர். இத்திட்டத் திற்காகும் செலவு ரூ. 78 இலட்சம் ; இத்தொகை மத்திய தனி உதவி நிதியிலிருந்து செலவிடப்படும்.

இரு சக்கர வண்டிகளைப் (ஸ்கூட்டர்/பைக்) பழுது பார்க்கும் பணி :— அனைத்து மாவட்டங்களிலும் இரு சக்கர வண்டிகளைப் பழுது பார்த்துப் பராமரிக்கும் பணியில் ஆறு மாத காலத்திற்குப் பயிற்சியளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. மத்திய தனி உதவியிலிருந்து உதவித் தொகையாக ரூ. 16,27,500 மொத்த முதலீட்டுத் தொகையுடன் 525 இந்து ஆதி திராவிடர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப் படுகிறது. விண்ணப்பதாரர்களையும், பயிற்சியளிப்பதற்கு ஆர்வமுள்ள தக்க முகவரமைப்பையும் தெரிந்தெடுக்குமாறு மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தட்டச்சு—சுருக்கெழுத்து திட்டம் குறித்த குறிப்பு : மத்திய தனி உதவி நிதியிலிருந்து செலவு செய்வதன் மூலம் ஆதிதிராவிட மாணவர்களுக்குத் தட்டச்சு—சுருக்கெழுத்து பயிற்றுவிக்கும் திட்டத்தைச் செயற்படுத்துமாறு அரசு கட்டளையிட்டுள்ளது. இத்திட்டம், 1988–89ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. சென்னை-10, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் நிருவாக இயக்குநர் இந் நோக்கதிற்காக ஒதுக்கப்பட்ட தொகையை அளிக்க வேண்டியுள்ளது. இந் நோக்கத்திற்காக 1988—89, 1989–90 ஆகிய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1988–89 | ரூ. 6,54,400 |

இத்தொகை ஏற்கெனவே சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சட்டப் பட்டதாரிகளுக்கு நிதியுதவி.—1989–90ஆம் ஆண்டுக்கு 100 சதவிதம் உதவித் தொகையாக ஒவ்வோருவருக்கும் ரூ. 3,000 என்ற வீதத்தில் 100 இந்து ஆதி திராவிடர் சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி அளிப்பதற்காக மத்திய தனி உதவி நிதியிலிருந்த ரூ. 3.00 இலட்சம் வழங்குவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகளுக்கு மத்திய தனி உதவி நிதியிலிருந்து உதவி அளிப்பதற்கான நிபந்தனைகள் வருமாறு:

இந்து ஆதிதிராவிடர் சட்டப் பட்டதாரிகளுக்கு மட்டும் உதவி வழங்கப்படலாம்.

உதவி 100 சதவீதம் உதவித் தொகையாக அளிக்கப்படலாம்.

விண்ணப்பதாரர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம், மத்திய அரசு படிப்புதவித் தொகை பெறுபவர்களுக்குப் பொருந்தும் அளவான, ஆண்டொன்றுக்கு ரூ. 12,000 என நிர்ணயிக்கப்படலாம்.

சென்னை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் நிருவாக இயக்குநர் 100 சட்டப் பட்டதாரிகளுக்கு ரூ. 3.00 இலட்சம் வழங்கியுள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் 3 கிராமங்களிலுள்ள ஆதிதிராவிடர் குடும்பங்களுக்காக ரூ. 2,04,230 மொத்த முதலீட்டுத் தொகையுடன் சுயவேலைவாய்ப்பு பயிற்சி உற்பத்திப் பிரிவுத் திட்டத்தைச் சமுதாய அமைப்பு-மக்கள் கல்விச் சங்க இயக்குநர் (Director Society for Community and People Education Scope) வகுத்துள்ளார். தையல் வேலை, பாய் பின்னுதல் ஆகிய தொழில்களில் 100 கிராமப் பெண்களுக்கு இரண்டாண்டுக் காலத்திற்கு நான்கு தொகுதிகளில் பயிற்சியளிப்பதற்காக அரசு ஒப்புதலளித்துள்ளது.

திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்தில் இரு கிராமங்களில் 75 ஆதிதிராவிட இளையோர்களுக்கு முக்கியமாக பெண்களுக்கு விசைத்தறியிலும் செயற்கைக்கற்களுக்குப் பட்டை தீட்டுவதில் பயிற்சியளிப்பதற்காக ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் 28–2–1989 ஆம் நாளிட்ட 204 ஆம் எண் அரசாணையில் அரசு ரூ. 2,90,250க்கு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டம், குளித்தலை வட்டம், கல்வி, கிராம நடவடிக்கை—மேம்பாட்டுச் சங்கம் (சேவை) மூலமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கொத்தடிமை ஒழிப்பு.—இத்திட்டம் பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் 6வது அம்சமாகும். இத்திட்டம் வருவாய்-காவல்துறை பணியாளர்களின் துழைப்புடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகச் செயற்படுத்தப்படுகிறது.

2. 1976 ஆம் ஆண்டு கொத்தடி முறை (ஒழிப்பு) சட்டம் தமிழ்நாட்டில் 1976 ஆம் ஆண்டிலிருந்து கடுமையாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31-12-1989 வரை மொத்தம் 38734 கொத்தடிமை தொழிலாளர் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களில் 36544 பேர்களுக்கு புது வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 24,945 பேர் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் மலைகளிலுள்ள ஜாகிர் தார்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாவர் எஞ்சிய கொத்தடிமைத் தொழிலாளர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்படுகிறது.

3. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் புது வாழ்வுக்காக 1976 ஆம் ஆண்டிலிருந்து 31-3-1989 வரை ரூ. 77.85 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

4. 1989-90 ஆம் ஆண்டில் 711 கொத்தடிமைத் தொழிலாளர்களைக் கண்டு பிடித்து விடுவித்து புதுவாழ்வு அளிக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

5. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்குப் பின்வரும் திட்டங்களின் மூலமாக புதுவாழ்வு அளிக்கப்படுகிறது :—

(1) வீட்டுமனைகள், நிலங்கள் வழங்குதல்.

(2) கறவை மாடுகள், கோழிப்பண்ணைகள், உழவு மாடுகள் முதலியவற்றை வழங்குதல்.

(3) கல் உடைக்கும் கருவிகள் வேளாண்மைக்கருவிகள், வைரக்கற்கள் அறுக்கும் சாதனங்கள் வழங்குதல்.

6 இத்திட்டங்களை மேலும் திறம்படவும் பயனுள்ளவகையிலும் செயற் படுத்தும் பொருட்டு இவை தேசிய கிராம வேலை வாய்ப்புத்திட்டம்/ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதி திட்டம்/ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் போன்று ஏனைய திட்டங்களுடனும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

கல்ராயன் மலைகள் போன்ற பழங்குடியினர் வாழும் பகுதிகளில் பட்டுப்புழு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகிய திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இட ஒதுக்கீடு விதிகளைச் செயற் படுத்தல்.

நேரடி ஆள் தேர்வில் 18 சதவீதமும் பின்வரும் பதவித்தரங்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதைப் பொறுத்தமட்டில் 18 சதவீதமும் இட ஒதுக்கீட்டு விதிக்கு உட்பட்டதாகும். உயர்மட்டக்குழு இட ஒதுக்கீட்டு விதி செயற் படுத்தப்படுவதைக் கண் காணித்து வருகிறது :—

(1) மாவட்டத்துணை ஆட்சித் தலைவர்கள்.

(2) துணை வட்டாட்சியர்கள்.

(3) வணிகவரி அதிகாரிகள்.

(4) உதவி வணிக வரி அதிகாரிகள்.

(5) கோட்ட உதவிப் பொறியாளர்கள்.

(6) சார் பதிவாளர் நிலை 11.

(7) இளநிலைப் பொறியாளர்.

(8) நில அளவை நிலப் பதிவேடு இயக்கத்தில் உள்ள பதவிகள் :- உதவி இயக்குநர்.

(9) அச்சுருபடியெடுக்கும் உதவியாளர்கள் (Reproduction Assistants).

தெரிந்தெடுப்பதற்கு ஆதிதிராவிட பழங்குடி விண்ணப்பதாரர்கள் இடைக்காததால் ஏற்படும் பதவிக் காலியிடங்கள் மொத்தம் 4 ஆள் தேர்வு ஆண்டுகளுக்கு (அதாவது ஆள் தேர்வு செய்யப்பட்ட ஆண்டும் அதற்கடுத்த 3 ஆண்டுகளும்) செயலில் இருக்கும் அரசு, பணியாளர்/நிருவாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர்— 4-3-1988 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு அடுத்துவரும் 3 ஆள் தேர்வு ஆண்டுகள் முடிந்த பின்னர் தான் காலங்கடந்ததாகும்.

1–4–1989 முதல் அம்மாநிலத்தில் A, B, C, D. தொகுதிகளின்கீழ் வரும் பதவிகளுக்கு நேரடி ஆள் தேர்வு செய்யும்போது ஆதி திராவிடர் பழங்குடியினருக்காகச் செய்த இட ஒதுக்கீட்டை ஆதிதிராவிடர் பழங் குடியினர் நலத்துறையின் 27–7–1989 ஆம் நாளிட்ட 1352 ஆம் எண் அரசாணை யில் மாற்றியமைத்துள்ளது. இடஒதுக்கீட்டை தேவையான இடங்களில் 18 சதவீதம் அளவிற்குக் கொண்டு வர இயலும் வகையில் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்காக, 31–3–1990 வரை அனைத்து வகைப் பதவிகளுக்கும் தனி ஆள்தேர்வு நடத்த அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மருத்துவம், பொறியியல், ஏனைய தொழில் பயிற்சி வகுப்புகளில் சேருவது உட் பட, ஆதிதிராவிடர்கள் பழங்குடியினருக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிப்பதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு பாடப்பிரிவிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்.—1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கள் தொகையான 484.08 இலட்சத்தில், 5.20 இலட்சம் பேர் பழங்குடியினர் ஆவர். மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினர் 1.07 சதவீதம் ஆவர். இப்பழங்குடி மக்கள் வகுப்புகளில் கிட்டத்தட்ட 36 துணைப்பிரிவுகள் உள்ளன.

2. 1976 ஆம் ஆண்டு பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் வகுக்கப் பட்டது. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின்கீழ், 10,000க்-குக் குறையாத மக்கள் தொகை கொண்ட பகுதிகள் அதில் 50 சதவீதத்திற்கும் குறையாமல் பழங் குடியினரைக் கொண்டிருக்க வேண்டும்.—ஒருங்கிணைந்த பழங்குடியின் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வருடமும் இந்த முனைப்புத் திட்டத்தின் வாயிலாக 50 சதவீத பழங்குடியினருக்கு வறுமை நிலையிலிருந்து விடுபட்டுவர உதவி புரிவதும் அவர்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதுமே பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின் நோக்கமாகும். மீதமுள்ள 3.22 இலட்சம் பழங்குடி யினர் இத்திட்டப் பகுதிக்கு அப்பால் உள்ள பகுதிகளில் வாழ்கிறவர்களாவர்.

பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின் அணுகுமுறை வளர்ச்சி நோக் குடையது. பழங்குடியின குடும்பங்களின் பொது மேம்பாடும், பழங்குடியினர் பகுதி மேம்பாடும். இத்திட்டத்தின் குறிப்பிட்ட திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதுடன் மற்ற துறைகள் பழங்குடியினரின் நலனுக்காக செயற்படுத்துவதன் வாயிலாக நிறை வேறிவருகிற பல்வேறு திட்டங்கள் மூலம் பழங்குடியினருக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகளுக்கும் இத்திட்டப் பணிகள் வகை செய்கின்றன.

தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, நில மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்த்தல், கனிகளைப் பதப்படுத்தல் போன்ற கிராமத் தொழில்களும், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் அடங்கும். இவற்றுக்குத் தேவையான இடுபொருட்கள் கல்ராயன் மலை (தென் ஆற்காடுமாவட்டம்) நீங்கலாகஏனைய பகுதிகள் அனைத்திலும் 50 சதவீதம் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. (தென் ஆற்காடு மாவட்டம்) கல்ராயன் மலைப் பகுதியில் மட்டும் 75 சதவீதம் குறைந்த விலைக்கு இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன; மேலும் ஒருங்கிணைந்த பழங் குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதி என அறிவிக்கப்பட்ட எல்லா இடங்களிலும் தோட்டக் கலைத் திட்டத்தின் கீழ் இடுபொருட்கள் 100 சதவீத மானிய (இலவச) அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, கிராமத் தொழில் ஆகிய திட்டங்களின் மூலம் குடும்ப வருமானத்தைப் பெருக்கக் கூடிய முனைப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதன் வாயிலாக, குறைந்த பட்சம் 50 சதவீதம் பழங்குடியினர் குடும்பங்களை வறுமைக் கோட்டிலிருந்து விடுவிக்கும் வகையிலும் இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காகவும் 6 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறிப்பிட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. கொள்ளை வட்டிக்கு பணம், தரும் லேவாதேவிக்காரர்களின் பிடியிலிருந்து பழங்குடி மக்களை மீட்கவும் அந்த லேவாதேவிக்காரர்கள் பழங்குடி மக்களைச் சுரண்டிப் பிழைப்பதைத் தடுக்கவும் பழங்குடியினரின் நலனுக்காகவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 16 பேரளவுப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் ( LAMP ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பிறஇடங் களில் 2 கூட்டுறவுச் சங்கங்களையும் கூட்டுறவுத் துறை நடத்தி வருகிறது. பண்ணை இடுபொருட்கள், வேளாண் தொழில் கருவிகள், நுகர்வோர் பொருட்கள் ஆகியவற்றை பேரளவுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குவதோடு மட்டுமன்றி, பண்ணைப் பொருட்கள், வனப பொருட்களை உபரியாக கொள்முதல் செய்து அவற்றிக்கு நியாய விலையையும் கொடுக்கின்றன. உற்பத்தி செய்வதற்கும், நுகர் பொருட்களை வாங்கவும் இச்சங்கங்கள் கடன் வசதியும் அளிக்கிறது. இத்திட்டப் பணிகள் 7 ஆம் ஐந்தாண்டுத் திடடக் காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 46,979 குடும்பங்களுக்குப் பொருளாதார உதவியளிக்கப்படும். 7 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்கள் வறுமை நிலையைக் கடந்து விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

<u>பழங்குடியினருக்கான ஏனைய நலத் திட்டங்கள்:</u>

கல்வி.— தமிழ்நாட்டில் பழங்குடியினர் மாணவர்கள் தங்கிப் படிக்கும் வசதியுடைய அரசினர் பள்ளிகள் 202 உள்ளன. இவற்றில் மொத்தம் 13,450 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர். இவையன்றி, மாணவர் தங்கிப் படிக்கும் வசதியற்ற பள்ளி ஒன்றும் அங்குள்ளது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டிலும் பழங்குடியினர் மாணவர்கள் தங்கிப் பயிலும் வசதியுடைய புதிய அரசினர் பள்ளிகள் 10 திறக்கப்படுகின்றன. 1,005 மாணவர்கள் கொண்ட பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் 22 உள்ளன.

இது மட்டுமன்றி, உள்ளடங்கிய வனப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலனுக்காக, 15 பள்ளிகளையும் வனத்துறை நடத்தி வருகின்றது.

பழங்குடியினர் தங்கிப் படிக்கும் வசதியுடைய அரசினர் பள்ளி மாணவர் இல்லங்களிலும் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக உணவும் உறைவிட வசதி வழங்கப்படுகின்றது. பழங்குடியின மக்களின் பாடப் புத்தகங்கள் குறிப்பேடுகள், சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தேவையான இடங்களில் பழங்குடியினருக்கான பள்ளிகளும்/மாணவர் இல்லக் கட்டிடங்களும் புதிதாகக் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேலை வாய்ப்பும், பொருளாதார முன்னேற்றமும்:

உழவு மாடுகளை வாங்குவதற்கும், பாசனக் கிணறுகளைத் தோண்டுவதற்கும் உதவித் தொகை வழங்குதல்:—

பழங்குடியினர் மக்களிடையே பயிர்த் தொழிலை மேற் கொண்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. உழவு மாடுகளை வாங்குவதற்காக ரூ. 800-க்கு மிகாமல் அவற்றின் விலையில் மூன்றில் ஒரு பங்கு உதவித் தொகையாகத் தரப்படுகின்றது.

குடிசைத் தொழில்கள்:— கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை என்னுமிடத்தில் பழங்குடியினர் பெண்களுக்காக தையல், நெசவுப் பயிற்சி, நிலையம் ஒன்றுள்ளது.

பயிற்சி உற்பத்தி மையங்கள்.— பழங்குடியினருக்குத் தொழில் நுட்ப அறிவைக் கற்றுக் கொடுக்கவும், வேலை வாய்ப்பு வசதிகளை அளிப்பதற்காகவும், தையல் துறையில் பழங்குடியினருக்கான பயிற்சி உற்பத்தி மையம் ஒன்று, சென்னை, சமூகநல இயக்குநர் அவர்களால் நடத்தப்படுகின்றது.

தொழிற் பயிற்சிப் பெற்றவர்களுக்கு உதவித் தொகை அளித்தல்:— பழங்குடி மக்களிடையே தொழிற் பயிற்சிப் பெற்றவர்களுக்குக் கருமான், தச்சு, தையல் மற்றும் ஏனைய 18 தொழில்களுக்குத் தேவையான கருவிகள், உபகரணங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

சிறு தொழில்கள்:— மிதி வண்டிக் கடைகள், உணவகம், மளிகைக் கடை, அச்சகம் போன்ற சிறுதொழில்களை நடத்தப் பழங்குடியினர் மக்களுக்குச் சிறு தொழிலுக்கான கடன் அளிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதியுதவி பெறக்கூடிய 31 தொழில்களின்பட்டியல் ஒன்றிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. 1984—85-லிருந்து 25 சதவீத உதவித் தொகையுடன் இத்திட்டம் சீரமைக்கப்பட்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

குடிநீர் கிணறுகளுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்.— குடிநீர் ஆதாரங்கள் பற்றாக்குறை காரணமாகவும், எண்ணற்ற பழங்குடியினர் குடியிருப்புகள் முக்கிய வருவாய் கிராமங்களிலிருந்து நெடுந் தொலைவுக்கப்பால் பரவலாக அமைந்துள்ளதாலும், பழங்குடியினர் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவது மிகவும் கடுமையாக இருந்தது. தேவையான இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, 7,500 ரூபாய் செலவில் குடிநீர்க் கிணறுகள், 15,000 ரூபாய் செலவில் நிலத்தடி நீர், ஆதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

வீட்டு வசதி.— பழங்குடியினர் நலனுக்காக வீட்டு வசதித் திட்டங்களும் செயலாக்கப்பட்டு வருகின்றன. பழங்குடியினருக்காக மலைப் பகுதிகளில் 9,000 ரூபாய் செலவில் வீடுகளும், மற்ற இடங்களில் 6,000 ரூபாய் செலவில் வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரம்.— மலைப் பகுதியிலும், ஏனைய பகுதிகளிலும் பரவலாகவுள்ள குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்ற பழங்குடி மக்களின் மருத்துவத் தேவையை நிறைவு செய்யும் வகையில், நடமாடும் மருத்துவப் பிரிவுகள் 10 செயல்படுகின்றன. இது மட்டுமன்றி, அரசினர் மருத்துவமனைகள் 17-ம் சுகாதார துணை மையங்கள் 50ம், சித்த மருந்தகங்கள் 7-ம் நடமாடும் சித்த மருத்துவப் பிரிவு 1-ம் பழங்குடியினர் பகுதியில் செயல்பட்டு வருகின்றன.

போக்குவரத்து வசதிகள்.— போக்குவரத்து வசதிகளுக்காக பழங்குடியினர் வாழும் இடத்திலிருந்து அண்மையிலுள்ள நகரம், கிராமம் மற்றும் அங்காடிகளுக்கு எளிதில் செல்லக் கூடிய வகையில் பழங்குடியினர் பகுதிகளில் சாலைகள், இணைப்புச் சாலைகள், மதகுப் பாலங்கள் முதலியவற்றை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆதிவாசிகளாகிய பழங்குடியினர்.— ஆதிவாசிகளாகிய பழங்குடியினர், விவசாயத் தொழில் நுட்பத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவராவர்; அவர்களிடையே எழுத்தறிவும் மிகக்குறைவாகும்.

தமிழக அரசு தனது செயற்குறிப்பில் அனுப்பிவைத்த பழங்குடியினரின் 17 வகை ஆதிவாசிக்குழுக்களில் மத்திய அரசு கீழ்வரும் 6 ஆதிவாசிப் பழங்குடி வகையினருக்கு மட்டுமே அங்கீகாரம் அளித்துள்ளது; அவை :—

(1) தோடர்கள்.

(2) கோடர்கள்.

(3) பணியர்கள்.

(4) குரும்பர்கள்.

(5) இருளர்கள்.

(6) காட்டு நாயக்கர்கள்.

இதுவரையில், பாலர் பள்ளி 47-ம், தோடர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி மையம் ஒன்றும் பேரளவுப் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டும் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு மூர்ரா எருமைகளும், கறவை மாடுகளும், செம்மறியாடுகளும் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு வீடுகளும் கட்டித்தரப்படுகின்றன.

பரவலாகவுள்ள பழங்குடி இனங்கள்.— மிகக் குறைந்த அளவில் உள்ள இவர்கள் மாநிலம் முழுவதும் பரவலாக உள்ளனர். எனவே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறையில் செயல்படுத்தப்படுகின்ற வழக்கமான திட்டங்களின்கீழ் அவர்கள் பயனடைகின்றனர். இவர்களுக்காக 1986–87இல் தங்கிப் பயிலும் வசதியுடைய பள்ளிகள் 2 திறக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு நைலான் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.

அரசியலமைப்புச் சட்டத்தின் 275 (1)ஆம் பிரிவு.— பழங்குடியினர் பகுதிகளின் நிருவாக நிலையை உயர்த்துவதற்கும், பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின் கீழ் வராத பழங்குடியினர் பகுதிகளில் முக்கியத் திட்டங்களைச் செயலாக்கும் பொருட்டும், மத்திய அரசு, மாநில அரசுக்கு மானிய உதவி வழங்கியுள்ளது.

2. 1987-88ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு ரூபாய் 19.35 இலட்சம் வழங்கியது. பழங்குடியினருக்காக நீலகிரி மாவட்டத்தில் 68 வீடுகளும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 30 வீடுகளும், தருமபுரி மாவட்டத்தில் 30 வீடுகளும் கட்டிக் கொடுப்பதற்காகவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருளர் குடும்பங்கள் 30-க்குக் கறவை மாடுகள் வழங்குதல். தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள பொத்தமுருலாளம் என்னும் கிராமத்தில் மூங்கில் கூடை முனைவோர்க்கான குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் போன்ற பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் இத்தொகை பயன்படுத்தப்பட்டது.

## அத்தியாயம் 3.

### பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர்மரபினர் நலத் திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்காக 1969-ல் ஒரு இ.ஆ.ப. தலைமையில் இயங்கத் தோற்றுவிக்கப்பட்டது. திட்டங்களை செயல்படுத்த துணை ஆட்சியர் அளவில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். 13–3–1989 முதல் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர் நலத் திட்டங்களைச் செயற்படுத்த தனியே ஒரு துறை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களும் மதுரையில் கள்ளர் சீரமைப்பு தனித்துணை ஆட்சியரும் இத்துறையின் கீழ் பணியாற்றுகின்றனர்.

இந்த நலத் திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம் :

1. கல்வி.
2. பொருளாதார மேம்பாடு.
3. சுகாதாரம் வீட்டு வசதி மற்றும் திட்டங்கள்.

கல்வி :

உபகாரச் சம்பளம்.—பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர் மாணவர்களுக்கு பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மிகாமல் இருந்தால் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. உபகார சம்பளம் படிப்பு கட்டணம், தனிக் கட்டணம், புத்தகக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் உண்டி உறையுள் கட்டணத்தை உள்ளடக்கி நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படுகிறது.

பள்ளிப் படிப்பு :

பள்ளிப் படிப்பு.—சீர் மரபினர் மாணவர்களுக்கு 4-ம் வகுப்பு முதலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 9-ம் வகுப்பு முதலும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பெறும்.

கல்லூரிப் படிப்பு.—கல்லூரி மாணவர்களுக்கு பணமாக உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

1988-89-ம் ஆண்டில் ரூ. 4,2524 இலட்சம் செலவழிக்கப்பட்டது. பயனடைந்தோர் 70,000.

மதிய உணவுத் திட்டம் (சத்துணவுத் திட்டம்).—5 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகட்கு 278 சீர்மரபினர் பள்ளிகளில் சத்துணவு வழங்கப்படுகிறது. 1988-89ல் ரூ. 40.94 இலட்சம் செலவிடப்பட்டது. பயனடைந்தோர் 44,680.

விடுதிகள்.—பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர் நலனுக்கு 671 விடுதிகள் பராமரிக்கப்படுகின்றன. 4-ம் வகுப்பு முதல் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். அனுமதிக்கு பெற்றோர் ஆண்டு வருவாய் ரூ. 6,000-க்கு உட்பட்டிருக்க வேண்டும். இலவச உண்டி, உறையுள் வசதி அளிக்கப்படுகிறது. 38,449 மாணவர்கள் பயன் பெற்றனர். ரூ. 607.41 இலட்சம் செலவிடப்பட்டது.

பள்ளி/கல்லூரி/தொழிற் பயிற்சி மாணவர்களுக்காக நடத்தப்படும் இவ்விடுதிகளில் சேர்க்கைக்கு பெற்றோர் ஆண்டு வருவாய் ரூ. 6,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். 5 கி.மீ. தூரத்திற்கு மேல் வசிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இட வசதி அளிக்கப்படும். பெண்களுக்குத் தொலைவு விதி இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 10 மாதங்களுக்கும், இதற்கு மேலும் உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது. கட்டண விதம் வருமாறு :

| | | சென்னை நகரம். ரூ. | இதர இடங்கள். ரூ. |
|---|---|---|---|
| கல்லூரி விடுதிகள் | .. | 140 | 135 |
| தொழிற் பயிற்சி விடுதிகள் | .. | 140 | 135 |
| பள்ளிப் படிப்பு | .. | 85 | 85 |

671 விடுதிகளில் 90 விடுதிகள் சீர் மரபினருக்கும், 581 பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் நடத்தப்படுகின்றன. இவைகளில் 52 கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி மாணவர்களுக்கும் 23 கல்லூரி மாணவியருக்கும் 596 பள்ளி மாணவ/மாணவியருக்கும் நடத்தப்படுகின்றன. விடுதிகள் 38,449 மாணவ/மாணவியருக்கு ரூ. 607.41 இலட்சம் செலவில் நடத்தப்படுகின்றன.

உணவு மானியம்.—38 தனியார் விடுதிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 70 வீதத்தில் 2,019 உணவு மானியங்கள் வழங்கப்பட்டன. 1988-89-ல் ரூ. 11.83 இலட்சம் செலவிடப்பட்டது.

சீருடை.—பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பள்ளிகளில் படித்து வரும் மாணவ/மாணவியர்கட்கு விடுதிகளில் தங்கியிருந்த மாணவ மாணவிகளுக்கும் இரண்டு செட் சீருடை வழங்கப்பட்டது. 1988-89ஆம் ஆண்டில் ரூ. 46.95 இலட்சம் செலவிடப்பட்டது. 80,076 பயனாளிகள் பயனுற்றனர்.

பள்ளிகள்.— 1988-89 ஆம் ஆண்டில் 278 பள்ளிகள் சீர் மரபினர் மாணவர்கட்காக நடத்தப்பட்டது. 73,959 பயனாளிகளுக்கு ரூ. 28.336 இலட்சம் செலவிடப்பட்டது.

பாடப் புத்தகங்கள்/கரும் பலகைகள் வழங்குதல்.— சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு அருந்தும் 8 ஆம் வகுப்பும் அதற்கு கீழ் வகுப்புகளிலும் பயின்ற மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப் பெற்றன. 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை பயின்ற மாணவர்கட்கு கரும் பலகைகளும் பத்தாம் வகுப்பு வரை பயின்ற மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்களும் வழங்கப்பட்டன. 1989 ஆம் ஆண்டில் ரூ. 14.75 இலட்சம் செலவிடப்பட்டது. 47,000 பேர் பயனடைந்தனர்.

மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குதல்.— மேல் நிலை பள்ளியிறுதி வகுப்பு எட்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்களை பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர் மாணவர்களுக்கு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பரிசுகள் வழங்கப்பட்டன. ரூ. 1.58 இலட்சம் செலவிடப்பட்டது. 244 பரிசுகள் வழங்கப்பட்டன.

பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு/தந்தை பெரியார் நினைவு பரிசு.— மேல்நிலைத் தேர்வில் முதலாவதாகவும், அடுத்தும் அதிக மதிப்பெண்கள் பெற்று தொழிற் கல்விப் படிப்பு (பி.ஈ., எம்.பி.பி.,எஸ்.) பயிலும் மாணவர்களுக்கும் பள்ளியிறுதி தேர்வில் முதலாவதாகவும் அடுத்தும் மதிப்பெண்கள் பெற்று பாலிடெக்னிக்குகளில் டிப்ளமோ படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும் ரூ, 1,000 வீதம் பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன.

தொழிற் கருவிகள் வழங்குதல்.— சலவைத் தொழிலாளர்கட்கு 3,530 தேய்ப்புப் பெட்டிகளும், சவரத் தொழிலாளர்களுக்கு 500 சவரக் கருவிப் பெட்டிகளும், போயர் இனத்தவர்களுக்கு 350 கல் உடைக்கும் கருவிகளும் ஜீவனத்தை நடத்துவதற்கு வழங்கப்பட்டன. ரூ. 26.43 இலட்சம் செலவிடப்பட்டது.

சீர் மரபினருக்கு தொழிற் பயிற்சி.— சீர் மரபினர்களுக்கு 3 பொது நோக்கு தொழிற் பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டன. ரூ. 17.69 இலட்சம் செலவிடப்பட்டது. சமூக நல இயக்குநர் மூலம் 7 தையல் பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டு ரூ. 0.54 இலட்சம் செலவிடப்பட்டது.

சலவைத் துறை.— 1988-89 ஆம் ஆண்டில் 7 சலவைத் துறைகள் ரூ. 6.04 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

வீட்டு மனைகள் வழங்குதல்.— ஒட்டர், வண்ணார், நாவிதர் மற்றும் நரிக்குறவர்களுக்கு நிலம் கையகப்படுத்தி வீட்டுமனைகள் வழங்கப்பட்டன. ரூ. 12.00 இலட்சம் செலவிடப்பட்டது.

வேலை வாய்ப்புப் பயிற்சி விடுதிகள்.— பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர் மாணவ/மாணவியர்கட்கு வேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. 100 மாணவர்களும் 50 மாணவிகளும் கணிப் பொறி பயிற்சி அளிக்கப்பட்டது. 2 விடுதிகள் நடத்தப்பட்டு ரூ. 4.24 இலட்சம் செலவிடப்பட்டது.

சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு பயிற்சி.— 20 பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர் சட்ட மாணவர்களுக்கு சீனியர் வழக்கறிஞர்களிடம் பயிற்சி அளிக்கப்பட்டது. மாணவர்களுக்கு பயிற்சி காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 வீதமும் சீனியர் வழக்கறிஞர்களுக்கு மதிப்பூதியம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5,001 வீதமும் வழங்கப்பட்டது. ரூ. 0.56 இலட்சம் செலவிடப்பட்டது.

நுழைவுத் தேர்வு.— பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர் மாணவர்களுக்கு தொழிற் படிப்பில் சேர நடத்தப்படும் நுழைவுத் தேர்வில் பங்கேற்க சிறப்புப் பயிற்சி 4 மையங்களில் நடத்தப்பட்டன. 217 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ. 57,000 செலவிடப்பட்டது.

சலவையகங்கள்/முடி திருத்தகங்கள்.— சலவையாளர்களுக்கும், சவரத் தொழிலாளர்கட்கும் சலவையகம்/நடமாடும் சலவையகம் முடி திருத்தகம் நடத்துவதற்கு முறையே ரூ. 5,000 மற்றும் ரூ. 2,000 வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டது. இவ்வுதவி வங்கிக் கடனாகவும் மானியமாகவும் வழங்கப்பட்டது. 400 பேர் பயனடைந்தனர். ரூ. 3.00 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.— இக்கழகம் ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையின் கீழ் நடந்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர்களுக்கு தொழிற் கூட்டுறவு மையங்கள் நடத்த வங்கிக் கடனும் மார்ஜின் தொகையும் வழங்கப்படுகிறது. 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 16.65 இலட்சம் செலவிடப்பட்டது.

## அத்தியாயம் 4.

## வேளாண்மைத்துறை

### வேளாண்மை.

இம்மாநிலத்தில் பொருளாதார நிலையில் வேளாண்மை தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைகளுக்கேற்ப உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கிட வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப் படுகிறது.

பொதுவாக 1988–89ஆம் ஆண்டின் பருவநிலை பயிர் உற்பத்திக்கு சாதகமானதாக இல்லை. தென்மேற்கு பருவ மழை இயல்பாக 308.4 மி.மீ.க்கு கூடுதலாகவே 380.4 மி.மீ. மழையை கொணர்ந்த போதிலும், சரியான சமயத்தில் பெய்யாததால் மானாவாரி சாகுபடி பரப்பு குறைந்ததோடு, நீர் நிலைகளில் தண்ணீர் வரத்தும் குறைந்தது. இதன் காரணமாக, அணைகளிலிருந்து குறித்த நேரத்தில் தண்ணீர் திறந்துவிட முடியவில்லை. குறிப்பாக, காவிரி பாசனப் பகுதிகளில் நெல் சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட முடியாமல் 55 நாட்கள் தாமதமாகத் தண்ணீர் விட்டபடியால் கணிசமான குறுவை நெல் பரப்பு குறைந்ததோடு மகசூலும் குறைவு பட்டது. கார், குறுவை, சொர்ணவாரி, கோடை சாகுபடி பரப்பு இயல்பான 4.16 இலட்சம் எக்டேர் பரப்பில், 2.00 இலட்சம் எக்டேரில்தான் சாகுபடி செய்யப்பட்டது. மேட்டூரில் தண்ணீர் ஆகஸ்ட் 7ஆம் நாளில் திறந்துவிடப்பட்டதாலும், தென்மேற்கு பருவ மழையால் சாதகமான நிலை காணப்பட்டதாலும் இயல்பான வடகிழக்கு பருவ மழை பெய்யும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது.

ஆனால், வடகிழக்குப் பருவ மழை இயல்பாக பெய்யும் 447.4 மி.மீ. மழையை விட 214.1 மி.மீ. மழை மட்டும் பெய்ததோடு, தாமதமாக நவம்பர் 2ஆம் நாள் பெய்து பொய்த்தும் விட்டது. இந்தக் குறைவான மழையினால் சம்பா, நவரை நெல் சாகுபடி மிகவும் பாதிக்கப்பட்டதுடன், ராபி பருவ பயிர்களுக்கு சரியான சமயத்தில் தண்ணீர் கிடைக்காமல் உற்பத்தியில் தடை ஏற்பட்டது.

இருப்பினும், வேளாண்மைத்துறையில் தகுந்த நடவடிக்கையினாலும், தகுந்த தொழில்நுட்பங்களை கையாண்டு உற்பத்தித்திறன் அளவை அதிகப்படுத்தியபடியால், சிறு தானியத்தைத் தவிர மற்ற பயிர்களில் உற்பத்தி குறைவுபடவில்லை.

1988–89 ஆம் ஆண்டு அடைந்த ஆயநிலையான உற்பத்தி நிலை வருமாறு :—

| (1) | ஆழ்நிலையான உற்பத்தி. (2) | |
|---|---|---|
| நெல் (அரிசி) .. | 57.00 | இலட்சம் டன்கள். |
| சிறு தானியங்கள் | 14.65 | |
| பயறு வகைகள் | 4.52 | |
| கரும்பு (வெல்லம்) .. | 22.00 | ,, |
| பருத்தி (பஞ்சு) | 5.20 | இலட்சம் பொதிகள். |

1988–89ஆம் ஆண்டில் குறிப்பிடத்தச் சாதனைகள் :

1. இதுவரை அதிகப்பட்சமான ஏக்டருக்கு 2,969 கிலோ அரிசி உற்பத்தித் திறன் அடைந்தது.

2. சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் 8 தேர்வு செய்த மாவட்டங்களில்ரூ.3.17 கோடி நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. முக்கிய இடுபொருட்களான விதை, களைக்கொல்லிகள், பூச்சி மருந்துகள் மானியத்தில் விநியோகிக்கப்பட்டது.

3. தரிசு மற்றும் பயன் குறைந்த நிலங்களை நன்முறையில் பயன்படுத்துவதற்காக ஸ்வீடன் நாட்டு உதவியுடன் வேளாண் காடுகள் திட்டம் (சிடா) ஆரம்பிக்கப்பட்டது. ரூ. 50 இலட்சம் செலவழித்து ரூ. 52.97 இலட்சம் மரக்கன்றுகள் விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

4. சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் மூலம் சிறந்த நீர் நிர்வாகத்திற்கும் வறட்சி நிலையை போக்கிடவும், ரூ. 46.79 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

5. பண்ணை மகளிர் பணியின் முக்கியத்தை உணர்ந்து சாகுபடிப் பணியில் அவர்களது தொழில் நுட்பத் திறனை அதிகரிக்க டானிடா திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப் பட்டது. இத்திட்டத்தில் 2,880 பண்ணை மகளிரை 6 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்க ரூ. 1.684 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

6. சென்ற ஆண்டைப் போன்று, ஆதிதிராவிட விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்த 25 விழுக்காடு மானியத்தில் நெல்/சிறு தானிய விதைகள் பூச்சி மருந்துகள் தொடர்ந்து விநியோகித்திட ரூ. 29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, முதல் தடவையாக இந்த ஆண்டு இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் வேளாண் கருவிகள் வழங்கிட ரூ. 40 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. உள்ளாட்சி மன்றங்கள் மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிப்பதாலும், நெருங்கிய தொடர்புடையதாக இருப்பதாலும் அரசு வேளாண் துறையின் விரிவாக்கம், இடுபொருள் பிரிவு பணியாளர்களை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்துள்ளது.

இது வரையில், முக்கியத்துவம் இல்லாதிருந்த பண்ணை மகளிர் பங்கு, வேளாண் காடுகள், நீர் நிர்வாகம் மற்றும் உள்ளாட்சி மன்றங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள நடவடிக்கைகள் ஆகியவற்றை புதியதாக இத்துறை மேற்கொண்டது.

வேளாண்மைப் பொறியியல்.

நீர் பாசனம் என்பது தமிழகத்தில் தொன்றுதொட்டு பழக்கத்தில் உள்ளதாகும். பாசன ஆதாரங்களை உருவாக்குவதற்காக பல் கோடி ரூபாய் மூலதனத்தில் பெரிய மற்றும் நடுத்தர பாசன திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்வாறு உருவாக்கப்பட்ட பாசன ஆதாரத்திற்கும் அவற்றை பயன்படுத்தும் அளவிற்கும் இடையே ஒரு இடைவெளி காணப்படுகிறது. பண்ணை மட்டத்தில் முறையான பாசன வழிகளை மேற்கொள்ளாத காரணத்தாலும், முக்கியமாக ஒரு வயலில் பாயும் நீர் வடிந்து அடுத்த வயலில் பாயும் முறைகள் காணப்படுவதாலும் நமது நாட்டில் பாசன நீர் உபயோகிப்புத் திறன் மிகவும் குறைந்து காணப்படுகிறது. இதனால் வேளாண்மையில் மகசூலும் பாதிக்கப்படுகிறது. இந்தக் குறைபாடுகள் கண்டறியப்பட்டதின் காரணத்தால் மத்திய அரசு 5-வது ஐந்தாண்டு கால திட்டத்திலிருந்து பாசன பகுதிகளில் பாசனப் பகுதி மேம்பாட்டு திட்டங்களை அமுலாக்கத் துவங்கி தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2. பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் :

(1) நில மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைப் பணிகள் மூலம் பாசனப் பகுதியை விரிவடையச் செய்தல்.

(2) கிடைக்கக்கூடிய பாசன நீரின் அளவு, மண்ணின் தரம் மற்றும் இதர தன்மைகளைக் கருத்தில் கொண்டு அவற்றிற்கேற்ற பயிரிடும் முறையை கையாண்டு விதிகள் மகசூலைப் பெறுதல் .

(3) விவசாயிகள் சங்கங்கள் ஏற்படுத்தி கூட்டு நடவடிக்கை, நடவடிக்கை எடுக்கும் எண்ணத்தை விவசாயிகளிடையே உருவாக்குதல்.

(4) ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பாசன நீரைப் பெறும் வரிமுறைக்குப் பதிலாக ஒவ்வொரு வயலுக்கும் பண்ணைப் பாசன வாய்க்கால்கள் மூலம் நீரை பாய்ச்சிடச் செய்வதும், சமநீர் பங்கீட்டிற்கு வழிவகுத்தலும் கடைமடை நிலத்திற்கும் நீர் வழங்குவதுமாகும்.

(5) அளவுக்கு அதிகமாக நீர் பாசனம் செய்வதை தவிர்ப்பது பாசன நீரை வீணாக்குவதையும் மற்றும் தவறான வழியில் பயன்படுத்துவதையும் தடுப்பது.

(6) கிடைத்தற்கரிய நிலம் மற்றும் நீர்வளங்களை ஆங்காங்கு கிடைக்கும் நிலத்தடி நீரையும் சேர்த்து தேவையான இடு பொருட்களுடன் உயரிய முறையில் பயன்படுத்துதல்.

3. முக்கிய பண்ணை மேம்பாட்டுப் பணிகள் கீழ்வருமாறு :

(அ) பண்ணை வாய்க்கால்களில் உள்ள அளவுக்கு மீறிய நீர் வெளியேற்று முனைகளை கட்டுப்படுத்தி, தேவையான அளவுக்கு நீர் பாசனத்தைக் கட்டுப்படுத்தும் சாதனங்கள் அமைத்தல்.

(ஆ) ஒரு வயலிலிருந்து மறு வயலுக்கு படர்ந்து பாயும் நீர்ப்பாசன முறையை நீக்கி, புதிய பண்ணை வாய்க்கால்களை அமைப்பது.

(இ) பாசன வாய்க்கால்களில் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் காரை பதித்தல்.

(ஈ) கட்டுப்பாட்டு கட்டுமானங்களைக் கட்டுதல்.

(உ) முறை நீர்ப்பாசனம் (வாரபந்தி) அறிமுகப்படுத்த விவசாயிகள் குழுக்களை ஏற்படுத்துதல்.

4. செயல்முறைகள் :

கீழ்க்கண்டவாறு பாசனப்பகுதி மேம்பாடு திட்டங்கள் தமிழகத்தில் நிறைவேற்றப் படுகின்றன :—

(1) காவிரி, கீழ்பவானி திட்டம், சாத்தனூர் நீர் தேக்கத் திட்டம் மற்றும் பரம்பிகுளம்-ஆழியாறு திட்டம் ஆகியவற்றின் பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மத்திய அரசின் ஆதரவு பெற்ற பாசனப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செய்யப்படுகின்றன. இத்திட்டப் பணிகளின் செலவுகளை மத்திய மாநில அரசுகள் சரிசமமாக ஏற்றுக்கொள்கின்றன. பெரியார் வைகை திட்டப் பாசனப் பகுதியில் உலக வங்கியின் நிதி உதவியுடன் இப்பணிகள் செய்யப்படுகின்றன.

(2) இப்பொழுது காவிரி, கீழ்ப்பவானி திட்டம் ஆகியவற்றின் பாசனப் பகுதிகளில் முறைப்பாசனம் (வாரபந்தி) ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தி கூட்டு நடவடிக்கை எடுக்கும் எண்ணம் விவசாயிகளிடையே (திட்டத்தினால் பயனடைவோர்) உருவாக்கப்படுகிறது. எந்தவொரு திட்டமும் அத்திட்டத்தினால் பயனடைவோர் அந்த திட்டம் அமுலாக்கப் படுவதில் பங்கேற்றால்தான, வெற்றி பெறமுடியும். ஆகவே விவசாயிகளை இத் திட்டத்தில் பங்கேற்க ஒரு புதிய உத்தி தற்போது கையாளப்படுகிறது.

(3) இந்த வகையில் ஒரு முன்னோடியாக கீழ்பவானி திட்டத்தின் திண்டல் கால்வாய் பாசனப்பகுதியில் உள்ள விவசாயிகள் பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் அமுலாக்கத்தில் எடுத்துக்கொண்ட பங்கு ஒரு மைல் கல்லாக அமைந்திருக்கிறது. ஆகவே இதை மற்றப் பாசனப் பகுதிகளிலும் விரிவுபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது.

5. பணி முன்னேற்றம் :

பணி முன்னேற்றம் திட்ட இலக்கு மற்றும் சாதனை விபரங்கள் கீழே தரப் பட்டுள்ளன.

பணி முன்னேற்றம் :

இலக்கு மற்றும் சாதனைகள்.

| வரிசை எண்ணும் மேம்பாடு தலைப்பும். | 1988-89 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூபாய் இலட்சத்தில் (இலக்கு) அரசு ஆணை எண். 1391— வே. துறை, நாள் : 26—7—1988. | 31—3—1989 முடிய சாதனை நிதி (ரூபாய் இலட்சத்தில்.) | 1988—89 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட செயல் இலக்கு (ஹெக்டேரில்) அரசு ஆணை எண். 1391, வேளாண்மைத் துறை, நாள் : 26—7—1988. | 31—8—1989 தேதி முடிய சாதனை செயல் (ஹெக்டேரில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. சரிசமபங்குடன் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்கள் (திட்டங்களின் முழுச்செலவு கொடுக்கப்பட்டுள்ளது). | | | | |
| 1. காவேரி பாசனப் பகுதி | 352.44 | 344.141 | 216,00 | 229.53 |
| 2. கீழ்பவானித் திட்டம் | 162.23 | 148.809 | 5,500 | 5,205 |
| 3. சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் .. .. .. | 92.06 | 95.310 | 3,300 | 3,111 |
| 4. பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் .. | 309.80 | 322.712 | 11,000 | 11.476 |
| 5 முறைப்பாசனம் (வாரபந்தி).— | | | | |
| 1. காவிரி பாசனப்பகுதி | 6,07 | 6.295 | 2,000 | 2.072 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2. கீழ்பவானி திட்டம் | 5.95 | 6.152 | 2,000 | 1,531 |
| 3. பெரியார் வைகை திட்டம்— (தற்போது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டத்தின்கீழ் கொண்டு வரப் பட்டது) .. .. | 3.14 | 3.950 | 2,000 | 1,238 |
| 5. வமையிடத்தில் தொழில் நுட்பர்குழு .. .. | 1.05 | 1.40 | | |
| 11. வெளியிலிருந்து உதவி பெற்ற திட்டம். | | | | |
| 1. பெரியார் வைகை திட்ட பாசனப் பகுதியில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள்** | 149.870 | 147.966 | 7,000* | 8,039 |
| 2. கதிரடிக்கும் களப் கட்டுதல் | 56.00 | 37.340<br>7.330<br>(முந்தையப் பணிகள்). | 100*<br>எண்கள். | 102<br>எண்கள். |

திட்டம் 88–89 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்துவதற்கான இலக்கு செயல் 5,000 ஹெக்டேர் பணிச் செலவு ரூ. 125 இலட்சம்.

*நிதி ஒதுக்கீட்டில் ரூ. 56 இலட்சம் குறைக்கப்பட்டதால் இலக்குகள் குறைக்கப்பட்டன.

## நதி பள்ளதாக்கு திட்டம், மதுரை :

மத்திய அரசு உதவியுடன் குந்தா மற்றும் கீழ்பவானி நதி பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ் நீர்பிடிப்பு பகுதிகளில், மண் வள பாதுகாப்பு பணிகள் 1976 ஆம் ஆண்டு முதல் வேளாண்மை பொறியியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முறைகேடான நில உபயோகிப்பு மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில் திறமற்ற பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவைகளே நிலத்தின் வளமிக்க மேல்மண் அரிப்பிற்கும் நீர்த்தேக்கங்களில் அதிகப்படியான வண்டல் மண் படிவிற்கும் காரணங்களாகும். நதி பள்ளதாக்கு திட்ட பணிகளை செயல்படுத்துவதன் மூலம் மேற்கூறிய பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

2. நோக்கங்கள் :

(1) தேவையான மண்வளபாதுகாப்பு பணிகளையும் காடு வளர்க்கும் செயல்களையும் நீர்பிடிப்பு பகுதிகளில் செயல்படுத்தி, நீர் பிடிப்பு பகுதிகளிலிருந்து வெளியேறும் வண்டல்மண் ஓட்டத்தை மட்டுப்படுத்துவதன் மூலம் நீர் தேக்கங்களில் வண்டல் மண் படிவை தடுத்து நீர்த்தேக்கங்களின் உபயோக காலத்தை அதிகரித்தல்.

(2) தேவையான மிகுந்த நில உபயோக நிர்வாகம் மூலமாக நிலவளம் குன்றுவதை தடுத்தல் மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில் உற்பத்தியை பெருக்குதல்.

(3) வேலையற்ற வேலைவாய்ப்பு குறைந்த தொலைதூர பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்தல். நதி பள்ளத்தாக்கு திட்டத்தின்கீழ் நடைபெறும் பலவகைப்பட்ட பணிகள் பின்வருமாறு :—

பட்டா நிலங்களில் மரங்கள் நடுதல், மேய்ச்சல் நிலங்கள் பெருவாரியாக்குதல், தேயிலை பயிரிடுதல், அகேன் வளர்த்தல், படிமட்டங்கள், சம உயர வரப்புகள், சமஉயர வாய்க்கால், சிதறுவாய்க்கால், ஓடைகரை பாதுகாப்பு சுவர், வண்டல் தேக்கம் சமஉயர கற்சுவர்கள், தடுப்பணைகள் மற்றும் கசிவு நீர் குட்டைகள் அமைத்தல்.

3. நிதி ஆதாரம் .— திட்டப்பணிக்கான இலக்கும் மொத்த செலவும் 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சத விகிதம் மாநில அரசுக்கு கடனாகவும், மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பணிகள் செயலாக்கப்பட்டு முடிந்த பிறகு, பணிச்செலவில் 50 சதவிகிதம் உதவித் தொகையாகவும், 50 சதவிகிதம் கடனாகவும் வசூலிக்கப் படுகிறது.

4. பணிமுன்னேற்றம் .—1988–89-ம் ஆண்டிற்கானது :

| (1) | இலக்கு. (2) | சாதனை. (3) |
|---|---|---|
| (அ) செயல் (ஹெக்டேரில்) .. | 3570 | 3679 |
| (ஆ) செலவு (ரூபாய் இலட்சத்தில்) | 135.50 | 135.6 |

## வேளாண்மை விளைப்பொருள் விற்பனை

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.—வேளாண் பொருள்களுக்கு நல்ல விலை பெற்றுதரும் நோக்கத்துடன் தமிழகத்தில் 14 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 272 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், 25 துணை விற்பனைக் கூடங்களும் செயல் பட்டு வருகின்றன. துல்லியமான எடை, போட்டி விலை, உடனடி விற்பனை மற்றும் பணப்பட்டுவாடா, இடைத் தரகர்கள் குறுக்கீடு இல்லாமை இலவசத் தரம் பிரிப்பு மற்றும் சேமிப்பு கிடங்கு வசதிகள் போன்ற முக்கிய பயன்களை, ஒழுங்குமுறை, விற்பனைக்கூடங்களுக்கு விளை பொருட்களை கொண்டு வரும் விவசாயிகளுக்கு அளிக்கப் படுகின்றன.

ஊரகக் கிட்டங்கி கட்டும் திட்டத்தில் இதுவரை 89 கிட்டங்கிகள் கட்டப்பட் டுள்ளன. இந்த ஊரகக் கிட்டங்கிகளில் விலை வீழ்ச்சியுறும் காலங்களில் சேமித்து வைத்துக்கொண்டு நல்ல விலை கிடைக்கும் சமயம் விற்று பயன்பெறவேண்டும் என்ற நல்நோக்குடன் அமைக்கப்பட்டுள்ளன.

அக்மார்க் தரம் பிரிப்பு.—மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் உணவுப் பொருட் களை தமிழகத்தில் உள்ள 35 அக்மார்க் ஆய்வகங்கள் மூலம் பரிசோதித்து தரமான வற்றிற்கு "அக்மார்க்" முத்திரையிட்டு கலப்படமின்மை மற்றும் தரத்திற்கு உத்திரவாதமளிக்கப்படுகிறது. மேற்படி ஆய்வகங்களின் தரம் பிரிப்புகளை சரிபார்க்கும் வகையில் மறு பரிசீலனை செய்ய ஒரு முதன்மை ஆய்வகம் திருச்சியில் செயல்பட்டு வருகிறது.

வணிகமுறை தரம் பிரிப்பு.—விவசாயிகள் ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களுக்கு கொண்டு வரும் விளை பொருட்களின் தரத்திற்கேற்ற நல்ல விலை பெற இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டம் 102 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இயங்கிவருகிறது. வேளாண் விளைபொருட்களை இலவசமாக தரம் பிரித்து விவசாயி கள் நல்ல விலை பெற உதவுகிறது.

பருத்தி தரம் பிரிப்பு.—தமிழகத்தில் பருத்தி அதிக அளவில் உள்ள 11 இடங்களில் நவீன விஞ்ஞான கருவிகளைக் கொண்டு பருத்தி தரம் பிரிப்பு செய்து உழவர் பெரு மக்கள் தங்கள் பருத்தி தரத்திற்கேற்ற நல்ல விலை பெற உதவுகிறது.

புகையிலை தரம் பிரிப்பு.—புகையிலை அதிகம் வரத்து வரக்கூடிய புஞ்சை புளியம் பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புகையிலைக்கான ஒரு தரம் பிரிப்பு மையம் செயல்பட்டு வருகிறது.

தரம் பிரிப்பு பயிற்சி மையம்.—இவ்வியக்ககத்தால் செயல்படுத்தப்படும் பயிற்சி மையத்தில் விற்பனைக் குழுக்களில் உள்ள மேற்பார்வையாளர்கள் மற்றும் துறை உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு அக்மார்க் மற்றும் வணிகமுறை தரம் பிரிப்பு குறித்து மூன்று மாத பயிற்சி அளிக்கப்படுகிறது.

பருத்தி சான்றுரையும் சட்ட அமலும்.—பருத்தி விதைகளில் சுத்தத் தன்மையைப் பாதுகாக்கவும் பருத்தி அரவை மற்றும் அழுத்தும் தொழிற்கூடங்களில் பருத்தி விதை பஞ்சில் கலப்பினங்கள் ஏற்படுவதைத் தடுக்கவும், தமிழகத்திற்கு தேவைப்படும் பருத்தியின் அளவை ஆய்ந்து, பிறமாநிலங்களிலிருந்து தருவிக்கப்படும் பருத்தி மற்றும் பஞ்சின் அளவினை கண்காணித்தும் செயல்பட இத்திட்டம் உதவுகிறது.

மாநில வேளாண்மை விளை பொருள் விற்பனை வாரியம்.—இவ்வாரியம் பல்வேறு மாவட்ட விற்பனைக் குழுக்களின் பணிகளை இணைத்து விவசாயிகளுக்கு விற்பனை யில் உதவி புரிய சிறந்த வழிமுறைகளை வகுத்து வருகிறது. மேலும் விற்பனை குழுக் களின் பிரச்சினைகளை அரசுக்கு விளக்கி சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

## வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணியின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பற்றிய சுருக்கமான விபரங்கள் வருமாறு :—

புதிதாக வெளிவருகின்ற பல புதிய நிலைகளில் விஞ்ஞானிகளை உருவாக்கு வதற்காக, உயிரியல் தொழில் நுட்பம், கால்நடை பொருளாதாரவியல் மற்றும் வணிக மேம்பாட்டியல் போன்ற பாடங்களில் மூதறிவியல் பட்டப்படிப்பு துவங்கப் பட்டது. உணவு மற்றும் சத்துணவுவியலில் டாக்டர் பட்டப்படிப்பு மதுரை வேளாண்மைக் கல்லூரியில் துவங்கப்பட்டது.

வேளாண்மை மற்றும் சார்புடைய பிரிவுகளில் இயங்கி வருகின்ற நடப்புத் திட்டங்கள், பல்வேறு பயிர்களின் விளைச்சலையும், கால்நடை சம்பந்தப்பட்ட பொருள்களின் வளர்ச்சியையும், மேம்பாட்டையும், அதிகரிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. பயிர்த் தொழிலில் இடுபொருள் செலவைக் குறைப்பதற்காகவும், இடுபொருள்களின் திறனை அதிகப்படுத்துவதற்காகவும், பல்வேறு தொழில் நுட்பத்தில் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முந்திய வருடங்களைப் போலவே, மாநில அளவில், தொழில் நுட்ப பொருளாதார ஆய்வுகள் நடத்தப்பட்டன. இவ்வாய்வுகளில், முக்கியமான பயிர்களின் உற்பத்தி, வரவு-செலவு, கிராமத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்புகள் ஆகிய பிரச்சினைகள், வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, பால்பண்ணை, சத்துணவு போன்ற அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. சிறப்புத் திட்டங்களின் மூலம், மகளிர்களுக்கு மேலாண்மையில் பயிற்சியளிக்கப்பட்டு, கிராம வளர்ச்சியில் அவர்களுடைய பங்குகள் ஊக்குவிக்கப்பட்டன.

பல்கலைக்கழகம், நிலஅளவுகளை பெருக்கமுடியாத இடர்பாட்டினையும், நீர் அளவைப் பெருக்க இயலாச் சூழ்நிலையையும், பருவமழை பொய்ப்பதனையும், தொடர்ந்து பெருகி வருகின்ற மக்கள் தொகைப் பெருக்கத்தையும் கவனத்தில் கொண்டு, இதற்கேற்றவாறு ஆராய்ச்சித் திட்டங்களை வகுத்து வருகின்றது.

இந்தத் திட்டங்கள் பண்ணையைச் சார்ந்தவைகளாகவும் விரைவில் கிராமப் பொருளாதாரத்தின்மீது பயனளிக்கக் கூடியவைகளாகவும் அமைந்துள்ளன. ஏற்கனவே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்த பிரிவு சார்ந்த ஆராய்ச்சித் திட்டங்கள், மண்டல ஆராய்ச்சிக் குழுக் கூட்டங்கள் மற்றும் விரிவாக்கக் கூட்டங்களின் மூலம் மேம்படுத்தப்பட்டன. வேளாண்மைப் பருவகால பகுதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சித் திட்டங்களின் மூலம், ஒவ்வொரு பகுதிக்கான தனியான பிரச்சினைகளைத் தீர்ப்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், கால வரம்புக்குட்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களை வகுப்பதற்கும் உதவி புரிகின்றன. இவைகளுக்கும் மேலாக, பல்கலைக்கழகம், ஒவ்வொரு பகுதியிலும் உழவர் தின விழாக்களையும், பண்ணை விழாக்களையும், பொருட்காட்சிகளையும் நடத்தி, நிறைய வெளியீடுகளைக் கொண்டு வந்து, தொழில் நுட்பங்களை உழவர்களுக்குப் பரப்புவதில் முனைந்தது.

மண்டல ஆராய்ச்சிக் குழுக் கூட்டங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் மாநாடு போன்றவைகள் ஆராய்ச்சியாளர்களுக்கும், விரிவாக்கப் பணியாளர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்ய வழிவகுத்தன. இவைகளின் மூலமாகத்தான், ஆராய்ச்சிகளின் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்ட தோடல்லாமல், கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் விரைவாக விரிவுபடுத்தப்பட்டன.

ஒருங்கிணைந்த உர நிர்வாகம், உயிர்த்தொழில் நுட்பவியல, பணனை சார்ந்த ஆராய்ச்சி, ஒருங்கிணைந்த பண்ணைமுறை, சுற்றுப்புற அறிவியல், மானாவாரி உழவியல், வேளாண் வனவியல், பட்டுப்பூச்சி வளர்ப்பு, நீர் நிர்வாகவியல், கால்நடை மற்றும் கோழியின மரபியல் முன்னேற்றம், கால்நடை நலம் மற்றும் முன்னேற்றம், மீன் வள முன்னேற்றம் மற்றும் லாபம், புதிய பண்ணைக் கருவிகளின் வடிவமைப்பும் மேம்பாடும், மகளிர் சார்புடைமையும், பின்தங்கியவர்கள் மற்றும் ஆதிவாசிகளின் மேம்பாடும் முக்கியமான அம்சங்களாகும். இளமறிவியல் மற்றும் முதறிவியல் பாடத் திட்டங்கள், கல்வித்திறனை உயர்வடையச் செய்யும் வண்ணம் அமைக்கப்பட்டன.

வேளாண்மை அறிவியல் மையங்கள், பயிர் மருத்துவ மையங்கள், கால்நடை, கோழியின மற்றும் செம்மறியாட்டு ஆய்வு மற்றும் மேம்பாட்டு மையங்கள் ஆகியவைகள் மூலமாக, விரிவாக்கக் கல்விக்குத் தேவையான வசதிகளை பெருக்கி, பண்ணைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், பயனுடைய பயிற்சிகளைக் கொடுப்பதிலும் முனைந்தன. இவைகள் அறிவியல் சார்புடைய பண்ணை அமைப்புகளுக்கு வழிகோலின.

ஆண்டுதோறும் நடைபெறும் ஆராய்ச்சியாளர்கள் மாநாடு, பயிர் விஞ்ஞானிகள் மாநாடு, கருத்தரங்கங்கள் ஆகியவைகளின் மூலமாக, பல்வேறு முன்னேற்றத் துறைகளோடு கலந்து கருத்துப் பரிமாற்றம் செவ்வனே செய்யப்பட்டன.

கல்வி ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சாதனைகள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

கல்வி :

* இவ்வாண்டில் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆறு வளாகங்களில், இளமறிவியலுக்கு 724 மாணவர்களும், முதறிவியல் பட்டப்படிப்பிற்கு 302 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர்.
* புதிய டாக்டர் பட்டப்படிப்பு, உணவியல் துறையிலும், கால்நடை உற்பத்தி மேலாண்மையிலும் துவங்கப்பட்டன.

* முதறிவியல் பட்டப்படிப்பு, வணிகவியல் மேலாண்மை (எம்.பி.எம்.) மற்றும் உயிர்சார் நுட்பவியல் முதலிய பாடங்களில் துவங்கப்பட்டன.

* விளையாட்டுக் கல்வியில் புதிய பாடமொன்று அனைத்து இளமறிவியல் மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.

* எம். எஸ்ஸி. மாணவர்களுக்கான உதவித்தொகையின் எண்ணிக்கை 91-லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது. மாதம் ரூ. 1,200 பெறுமான 30 புதிய உதவித்தொகை பி.எச்.டி. மாணவர்களுக்காக அளிக்கப்பட்டன.

* மாணவர்கள் ஆலோசனை மற்றும் வேலைவாய்ப்புப்பிரிவு மாணவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டது.

* வனவியலில் புதிய எம். எஸ்ஸி. பட்டப்படிப்பும், துறையும் துவங்கப்பட்டன.

* கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை வளம் ஆகிய மையங்கள் அமைக்கப்பட்டு, மாநில முன்னேற்றத்துறைகளோடு ஆய்வுகளும், ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

* கிள்ளிகுளத்தில் அமையப்பெற்ற மூன்றாவது வேளாண்மைக் கல்லூரிக்கான கல்வி சார் செயல்களும், தேவைகளும், ஐந்தாவது பகுதியாக மேம்படுத்தப்பட்டன.

* நாமக்கல்லில் அமைந்துள்ள இரண்டாவது கால்நடைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கான கல்வித் தேவைகளும், வசதிகளும் நான்காவது கட்டமாக மேம்படுத்தப்பட்டன.

## ஆராய்ச்சி :

கீழ்க்கண்ட புதியதிட்டங்கள் 1988–89-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

## பல்கலைக்கழகத் திட்டங்கள் :

* தொலை தூர உணர்வு அமைப்புப் பிரிவு கோவையில் அமைக்கப்பட்டது.

* மானாவாரி மற்றும் உப்புத்தாங்கி வளரக்கூடிய திராட்சை ரகங்களைத் தேர்ந்தெடுத்தலும், சம்பந்தப்பட்ட வேளாண் நுட்பங்களை வடிவமைத்தலும் (கோவை)

* வணிகவியல் வேளாண்மையில் முதறிவியல் பட்டப்படிப்பினைத் துவக்குதல் (கோவை).

* மலைப்பழங்கள் மற்றும் காய்கறிகளில் பூச்சிகள் (நீலகிரி).

* சிறந்த தீக்குச்சி மரங்களில் தன்மைகளைக் கண்டறிதலும், பரப்புவதும் (மேட்டுப்பாளயம்).

* தோட்டக்கலைப் பயிர்களில் வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்தும் வேளாண்மை (சேலம்).

* கரும்பினை மேம்படுத்தும் திட்டம், சிறுகமணி, மேலாலத்தூர்.

* மீன்களை ஒட்டுமுறையில் பெருக்குதல் (பவானிசாகர்).

## இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் திட்டங்கள் :

* பண்ணைகளில் நீர் நிர்வாக ஆய்வுகள், பவானிசாகர்.

* பனை மரத்தில், அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம், மற்றும் ஆழியார்நகர்.

* பண்ணையிலிருந்து ஆய்வகத்திற்கான திட்டம், கோவை.

* எண்ணெய் வித்துக்களில் பண்ணையில் செயல்முறைத்திட்டம், விருத்தாசலம்.

* உப்பு மற்றும் அமில நிலையைத் தாங்குகின்ற நீலப்பச்சைப் பாசியைத் தேர்வு செய்யும் ஆய்வுகளும், தழைச்சத்தை நெல் வயல் சூழ்வில் உறுதிப்படுத்துதலும் (கோவை).

* தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் எண்ணெய் வித்துப் பயிருக்கான பண்ணை ஆய்வுகள், கோவை, ஆழியார்நகர், பவானிசாகர், திண்டிவனம்.

* தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் சோயாமொச்சை பண்ணை ஆய்வுகள், கோவை.

* சிறப்பு உணவுப் பொருள் உற்பத்தித் திட்டம்—தானியங்கள் மற்றும் பயறு வகைகளில் ஆதாரத்தை உற்பத்தி செய்தல் (கோவை).

* பச்சைப்பயறு, உளுந்து ஆகிய பயறு வகைகளில் வைரஸ் நோய்களின் மேலாண்மை, கோவை.

இந்திய அரசின் திட்டங்கள் :

* வேளாண்மை உயிர் நுட்பவியல் முதறிவியல் பட்டப்படிப்புத் துவங்குதலும், பயிற்சியளித்தலும், கோயமுத்தூர்.

* நீலகிரியில் மாசுபடிதலில் அளவினை அளப்பதற்கான திட்டம் கோயமுத்தூர்.

* நீர் நுட்பவியல் மேலாண்மையில் பயிற்சிக்கான உயர்மையத்தை அமைத்தல், கோவை.

* தேசிய மருந்து ஆய்வகம், பூனாவில் வடிவமைக்கப்பட்ட 'கார்போபியூரான்' மருந்தின் திறனை அறிதல்.

* நீர் ஊற்றுக்களுக்கும், அடிமட்ட நீருக்குமுள்ள தொடர்பின் மூலம், சுற்றுப்புறச் சூழலைக் கொடைக்கானல் பகுதியில் பாதுகாக்கும் திட்டம், கோவை.

* உயிர் நுட்பவியலில் செய்தி மையம் அமைத்தல், கோவை.

* 'மைக்கோரைசே' பூசனத்தின் மூலம் வனப்பயிர்களின் வளர்ச்சித் திறனை அதிகப் படுத்தும் திட்டம், கோவை.

* கால்நடைச் சாணம், மனிதக்கழிவு, பன்றிக்கழிவு மற்றும் ஜவ்வரிசித் தொழிற் சாலைக் கழிவுகளிலிருந்து மீதேன் வாயுவை உற்பத்தி செய்வதற்கான திட்டம், கோவை.

மற்ற நிறுவனங்களின் திட்டங்கள் :

* சிட்டா சமூகநலக்காடுகள் திட்டம், கோவை.

* ஹீலியாத்திஸ் ஆர்மிஜிரா மற்றும் ஸ்போடாங்டிரா லிட்டுரா புழுக்களைக் கட்டுப் படுத்துவதற்கான நுண்ணுயிர்களை உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள், கோவை.

* வாசனைப் பயிர்களில் பூச்சி மருந்துகள் தெளிப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றிய ஆய்வுகள், கோவை.

* மண் மற்றும் நீர்வசதிகளைப் பெருக்கி கரும்பின் உற்பத்தியைப் பெருக்கு வதற்கானத் திட்டங்கள், மதுரை.

* கால்நடைத் தீவனங்களை, பதனஞ்செய்முறைகளை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள், சென்னை.

புதிய இரகங்கள் வெளியீடு :

பல்கலைக்கழகத்தின் தீவிர ஆராய்ச்சிகளின் மூலம் பதினான்கு புதிய ரகங்கள் வெளியிடப்பட்டன :—

| | | |
|---|---|---|
| நெல் | : | ஏடிடி. 40 |
| | : | எம்.டி.யு. 3 |
| | : | ஏ.என்.டி. 17 |
| | : | பையூர். 4. |
| மக்காச்சோளம் | : | கோ. எச். 2. |

| | |
|---|---|
| சோளம் | கே. 8 |
| பச்சைப்பயறு | வி. பி. என். 1 |
| அவரை | கோ. 11 |
| நிலக்கடலை | வி. ஆர். ஐ. 2 |
| திவனப்பயிர் | கோ. 1 |
| வெள்ளரி | கோ. 1 |
| முருங்கை | பி. கே. எம். 1 |
| கீரை | : கோ. 4 |
| சாமந்தி | : கோ. 2 |

புதிய இரகங்கள் தவிர புதிய வேளாண் நுட்பங்களும் 1988–89-ல் கண்டுபிடிக்கப்பட்டன.

## தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்.

தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பை சரியான வழிமுறைகளைப் பின்பற்றி அதிகப்படுத்தும் பொருட்டு தனியாக 1979 ஆம் ஆண்டில் தோட்டக்கலைத் துறை தோற்றுவிக்கப்பட்டது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்களின் அபிவிருத்திக்கெனவே தொடங்கப்பட்ட இத்துறை இந்த ஆண்டிலும் பரப்பளவை அதிகப்படுத்துதல், தரமான விதைகள், பழச்செடிகள் விநியோகித்தல், நவீன சாகுபடி முறைகளை கடைப்பிடித்தல், முகாம் நடத்தி சிறந்த தொழிற்நுட்ப அறிவுரைகள் வழங்குதல் ஆகியவற்றின்மூலம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களின் தரம் மற்றும் உற்பத்தியை பெருக்கி உழவர்களுக்கு மனநிறைவை அளித்துள்ளது.

பணிகள்.—இத் துறையின்கீழ் இயங்கும் 54 பண்ணைகளிலிருந்து சுமார் 180 லட்சம் பலவகைப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களின் தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1.67 லட்சம் உயர்ரக வாழைக்கன்றுகள் மூன்று சிறிய வாழைத் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வாழை சாகுபடி பரப்பை மேம்படுத்தும் பொருட்டு விநியோகிக்கப்பட்டன. மேலும் சுமார் 2.19 லட்சம் தரமான அன்னாசி கன்றுகள் இரண்டு அன்னாசி நாற்றங்காலிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. வீரிய ஒட்டு மிளகு பன்னியூர்-1 ரக வேர்க்குச்சிகள் சுமார் 3.19 லட்சமும், மற்ற வாசனை திரவிய பயிர்களின் நடவுச் செடிகள் 6.38 லட்சமும், உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

வாழைக்கட்டுக்கோப்பு சாகுபடித் திட்டத்தின்மூலம் சிறந்த தொழிற்நுட்ப முறைகளை விளக்கும் வகையில் 195 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பாத்திக்கும் ரூ. 325 பெறுமான இடுபொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இந்த ஆண்டு மட்டும் தமிழ்நாட்டில் கூடுதலாக 1969 ஹெக்டேர் பரப்பளவு வாழை சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 54 மெட்ரிக் டன் காய்கறி, சான்றிதழ் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும் கருமருந்துறையில் அமைக்கப்பட்டுள்ள காய்கறி விதை உற்பத்தி மையத்தில் 2.8 மெ. டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதுதவிர 106 மெ. டன் உருளைக் கிழங்கு விதைகளும் நீலகிரி மாவட்டம் பண்ணைகளின் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் சுமார் 6,830 ஹெக்டேர் பரப்பில் கூடுதலாக பழப்பயிர் சாகுபடி கொண்டுவரப்பட்டது.

மத்திய அரசின் நிதி உதவியுடன் இத் துறை அமுல்படுத்தும் முந்திரி மேம்பாட்டுத் திட்டத்தில் 545 முந்திரி செயல்விளக்கப் பாத்திகள் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்பட்டன. இப் பாத்திகள் நவீனத்திருந்திய சாகுபடி குறிப்புகளைப் பின்பற்றி முந்திரி மகசூலைப் பெருக்க உதவும் நோக்கத்தோடு அமைக்கப்பட்டன. மேலும் 7,000 ஹெக்டேர் பரப்பில் முந்திரி பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 250 மான்யமாக மேற்கொள்ளப்பட்டன. ஒருங்கிணைந்த வாசனை திரவிய அபிவிருத்தித் திட்டத்தில், வாசனைத் திரவிய பயிர்களின் பொருளாதார முக்கியத்துவத்தை விவசாயிகளிடம் தெரியப்படுத்தி அதிக பரப்பளவில்

இப் பயிர் சாகுபடி செய்ய உதவும் வகையில் முழு மான்யத்தில் ஒவ்வொரு மினி கிட்டுகளும் ரூ. 75 மதிப்புள்ள 3,950 மினி கிட்டுகளும் 50 சத மான்யத்தில் 30 தெளிப்பான்களும் இப்பயிர் சாகுபடிக்கேற்ற குறிப்பிட்ட பகுதிகளில் விநியோகிக் கப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மட்டும் 83.8 லட்சம் தேயிலை பதியன்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு சுமார் 898.8 ஹெக்டேர் பரப்பளவு இவ்வாண்டு கூடுதலாக தேயிலை சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டது. நீலகிரி மாவட்டத்திலும், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் கொடைக்கானல் தாலூகாவிலும் பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின் கீழ், தோட்டக்கலை விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்பட்டது.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பழம் மற்றும் வாசனை திரவியப் பயிர்களின் நடவுச் செடிகள் விநியோகம் செய்யப்பட்டு, 2,091 ஹெக்டேர் பரப்பளவுக்கு இவ்வாண்டு பல்லாண்டு பயிர்கள் சாகுபடி அதிகரிக் கப்பட்டது.

ஆதிவாசிகளின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் 13 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதிவாசிகளின் பகுதிகளில் சேலம், தருமபுரி, திருச்சி, வடஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 3,250 ஆதிவாசிகளின் நிலங்களில் சுமார் 3,250 ஏக்கர் பரப்பில் தனி நபர் பழத்தோட்டம் அமைக்கப்பட்டது. 1,285 ஆதிவாசிகளுக்கு திருந்திய நவீன சாகுபடி குறிப்புகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. 650 ஆதிவாசிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தோட்டக்கலைப் பயிர்கள் முக்கியத்துவம் பெற்றுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் விவசாயச் சுற்றுலாமூலம் அழைத்துச் செல்லப்பட்டு பல்வேறு தோட்டக்கலை தொழில்நுட்பங்கள் பின்பற்றும் முறை பற்றியும் நேரில் கண்டறிந்தனர்.

மேலும் மலைவாழ் மக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் சேலம் மாவட்டம், சின்னக்கல்ராயன்மலை, வட ஆற்காடு மாவட்டம், தகரக்குப்பம் ஆகிய இடங்களில் இரு மாபெரும் பழப்பண்ணைகள் அமைக்கப்பட்டு மாதிரித் தோட்டங்களாக இப் பகுதி ஆதிவாசிகளுக்கு பயன்படுகிறது.

## எண்ணெய் வித்துக்கள்.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் 1980-ல் எண்ணெய் வித்துத் துறை அமைக்கப்பட்டது.

எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்திக்காக கீழ்வரும் செயல்முறைகள் இத் துறை யினரால் பின்பற்றப்படுகின்றன:—

நீர்ப் பராமரிப்பிற்காக நில நிர்வாக முறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தித் திறனைக் காரிப் பருவத்தில் அதிகரிக்க மானாவாரி நிலச் சாகுபடி முறைகளைக் கடைப்பிடித்தல்.

எண்ணெய் வித்துக்களில் பூச்சி கண்காணிப்பின் மூலம் தேவைக்கு ஏற்ற பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல்.

விரிவாக்கப் பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல் மற்றும் விரிவான முறையில் விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல்.

1988–89ஆம் ஆண்டின் உற்பத்தி :

13.44 இலட்சம் ஹெக்டேர் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டு கணக்கிடப்பட்ட உற்பத்தி அளவான 15.59 இலட்சம் மெட்ரிக் டன் கீழ்க்கண்டவாறு அடையப்பட்டுள்ளது :—

| பயிர். | பரப்பு (இ.எ) | | உற்பத்தி (இ. மெ.டன்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| நிலக்கடலை | 12.33 | 11.15 | 15.22 | 14.17 |
| எள் | 1.60 | 1.68 | 0.78 | 0.78 |
| சூரியகாந்தி | 1.43 | 0.28 | 0.90 | 0.16 |
| ஆமணக்கு | 0.25 | 0.31 | 0.10 | 0.17 |
| சோயா | ... | 0.02 | .. | 0.01 |
| | 15.61 | 13.44 | 17.00 | 15.59 |

1.86 இலட்சம் ஹெக்டேர் தென்னை பயிரிடப்பட்டு 197 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

தரமான விதை உற்பத்தி :

1988–89ஆம் ஆண்டில் தரமான விதை விநியோகம் பின்வருமாறு :—

| பயிர். | இலக்கு. | சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நிலக்கடலை | 12,330 | 13,654 |
| எள் | 120 | 132 |
| சூரியகாந்தி | 1,072 | 338 |
| ஆமணக்கு | 75 | 68 |

தென்னங் கன்றுகள் :

1988–89–ல் 8.49 இலட்சம் நெட்டை, 4.08 இலட்சம் நெட்டை மற்றும் குட்டை மற்றும் 0.13 இலட்சம் குட்டை மற்றும் நெட்டை தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இடுபொருள் விநியோகம், விதை உற்பத்திக்கு உதவி ஆகியவற்றிற்கு தேசிய எண்ணெய்வித்து அபிவிருத்தித் திட்டம் மற்றும் எண்ணெய்வித்து உற்பத்தி உந்துகை திட்டம் ஆகியவற்றின் மூலம் உதவிகள் ரூ. 606.231 இலட்சத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ரூ. 9.5 இலட்சம், சிறப்பு சிறுதளைகள் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் 1988–89-ல் செலவிடப்பட்டுள்ளது.

விதைச் சான்றிதழ்.

தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோக நடைமுறையில் விதை சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968ஆம் அடிப்படையில் விதைச் சான்றளிப்புத் திட்டம் செயலாற்றி வருகிறது. உற்பத்தி செய்த சான்று பெற்ற விதைகள் வேளாண் பெருமக்களுக்கு உரிய முறையில், விநியோகம் செய்யப்படுதல் அவசியம். கலப்படம் செய்யப்பட்ட முளைப்புத் திறன் அற்ற, காலாவதியான விதைத்தரம் குறைவான விதைகளை விற்பனை செய்யாமல் கவனிப்பதும் அவசியம். இதற்கென்றே சான்றளிப்புத் துறையின் பணிகள் விதை உற்பத்தி முதல் விநியோகம் வரை சீராக விதைச் சட்டத்தின் விதிகள் மூலம் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

1. விதைச்சான்று இயக்குநரின்கீழ் கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன :—

(1) விதைச் சான்று

(2) விதை ஆய்வு

(3) விதைப் பரிசோதனை

(4) விதைச்சான்று பயிற்சி

2. 1988–89ஆம் ஆண்டின் விதைச்சான்றளிப்பு இலக்கு மற்றும் சாதனை:

பரப்பு : ஹெக்டேரில்
அளவு : மெட்ரிக் டன்னில்.

| வரிசை எண். | பயிர். | இலக்கு 1988–89 சான்றளிப்பு பரப்பு. | விதைச் சான்றளிப் பின்கீழ் பதிவு செய்த பரப்பு. (1988–89) | சான்ற ளிக்கப் பட்ட விதை அளவு. (1988–89) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | நெல் | 6,500 | 7,658 | 12,903 |
| 2 | வீரிய சிறுதானியங்கள் | 200 | 416 | 237 |
| 3 | ரக சிறுதானியங்கள் | 1,200 | 1,143 | 871 |
| 4 | வீரிய பருத்தி | 200 | 266 | 24 |
| 5 | ரகப் பருத்தி | 3,300 | 4,798 | 1,939 |
| 6 | பயறு வகைகள் | 8,500 | 9,674 | 1,501 |
| 7 | எண்ணெய்வித்துப் பயிர்கள் | 2,600 | 1,474 | 984 |
| 8 | காய்கறிப் பயிர்கள் | 300 | 321 | 43 |
| | மொத்தம் | 22,800 | 25,750 | 18,502 |

3. 1988–89ஆம் ஆண்டில் விதை ஆய்வுப் பணிகள் பற்றிய விபரம் :

| வரிசை எண். | விபரம். | 1988–89 ஆண்டு இலக்கு. | சாதனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | விற்பனை நிலையங்கள் ஆய்வு | 7,600 | 7,696 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தல் | 7,600 | 7,897 |
| 3 | தடையுத்தரவு வழங்கப்பட்ட விதைக் குவியல்களின் எண்ணிக்கை. | | 1,110 |
| 4 | விதைச் சட்டத்தை மீறுவோர்மீது எடுக்கப்பட்ட வழக்குகள். | | 29 |
| 5 | வழக்கில் அபராதம் விதிக்கப்பட்டவை | | 25 |

4. 1988–89-ஆம் வருடத்தில் விதைப் பரிசோதனை செய்த விதை மாதிரிகள் :

| வரிசை எண். | விதைப் பரிசோதனை நிலையம். | விதை மாதிரிகள் பரிசோதனை செய்த எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | கோவை .. .. .. .. | 9,305 |
| 2 | மதுரை .. .. .. | 8,386 |
| 3 | குடுமியான்மலை .. .. .. | 7,865 |
| | மொத்தம் — | 25,556 |

5. இனத்தூய்மை பரிசோதனை.— அரசு விதைப் பண்ணை, கண்ணம்பாளையத்தில் வீரிய ஒட்டு பருத்தி மற்றும் தாயாதி விதைகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை செய்யப்படுகிறது. இவ்வருடம் 327 மாதிரிகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

6. கண்ணாடி ஆய்வுக்கூடம் :— இனத்தூய்மை பரிசோதனை நடத்திடவும், பயிர்களின் வெளிப்புற குணாதிசயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு கோவையில் கண்ணாடி ஆய்வுக் கூடம் ஒன்று கட்டி முடிக்கப் பெற்று பரிசோதனை நடைபெற்று வருகின்றது. பல்வேறு பயிர்களின் அறிவிக்கப்பட்ட ரகங்களின் இனத் தூய்மையைப் பாதுகாக்க இனத்தூய்மை ரகக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் 3–2–1972 அன்று மாநிலத்தளவிலான வேளாண்மைப் பொறியியல் மையங்களின் இணையமாகப் பதிவு செய்யப்பட்டு 23–2–1972 முதல் செயல்படத் தொடங்கியது.

2. நிர்வாக அமைப்பு :—கூட்டுறவு அமைப்பின் கீழ் வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு சங்கங்களைத் துவக்கி இயக்கி வரும் சீரிய பணியில் தமிழ்நாடு முன்னணியில் விளங்கி வருகின்றது. விவசாயிகளுக்குத் தேவையான வேளாண்மைப் பொறியியல் சேவைகளை நல்ல முறையில் செய்வதும் வேலையற்ற பொறியாளர்களுக்கும், தொழில் நுட்பச் சான்று பெற்றுள்ள தொழிலாளர்கட்கும் வேலை வாய்ப்பினை நல்குவதும் இதன் குறிக்கோளாகும். வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக அமைப்பு கீழ்வருமாறு :—

(1) மாநில அளவிலான வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம்

(2) (அ) மிகுந்த வியாபார அளவுகளுடன் செயல்படும் 12 மாவட்ட அளவிலான வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுச் சங்கங்கள்.

(ஆ) வட்டார அளவிலான 169 வட்டார விவசாயப் பொறியியல் கூட்டுறவு சங்கங்கள்.

எண்கோபெட்டின் நிர்வாகக் குழு மறுமுறை அமைக்கப்பட்டு 14–11–1988 முதல் 13–10–1989 வரை கீழ்க்கண்ட நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர்:—

| | |
|---|---|
| (1) அரசு செயலாளர் (கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வு), வேளாண்மைத் துறை, சென்னை-9. | தலைவர். |
| (2) நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம், சென்னை-17. | இயக்குநர். |
| (3) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை-5 | இயக்குநர். |
| (4) வேளாண்மை இயக்குநர், சென்னை-5 .. | இயக்குநர். |
| (5) அரசு துணைச் செயலர், வேளாண்மைத் துறை, சென்னை-9. | இயக்குநர். |
| (6) அரசு துணைச் செயலர், நிதித்துறை, சென்னை-9 | இயக்குநர். |
| (7) அரசு துணைச் செயலர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை-9. | இயக்குநர். |

4. இணையத்தின் பங்குத் தொகையும் உறுப்பினர்களும்.—இணையத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் ஒரு கோடியாகும். இதில் 31-3-1989 வரை 282 உறுப்பினர்களால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 11.24 இலட்ச ரூபாயாகும். மேலும் 31-3-1989-ல் 'ஏ' வகுப்பு மற்றும் 'பி' வகுப்பு உறுப்பினர்களும் பங்கு மூலதனமும் முறையே 80-ம் ரூ. 8,000 ஆகும்.

5. இணையத்தின் வியாபார நடவடிக்கைகள்.—(அ) இணையத்தின் விவசாய இயந்திரங்கள் வழங்கும் சேவையை மதித்து அரசு, நிலவள வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்களுக்குத் தேவையான டீசல் என்ஜின், மின்சார மோட்டார் பம்ப் செட்டுக்களை ஒருங்கிணைத்து வழங்குவதற்கான ஏகபோக உரிமையை இவ்விணையத்திற்கு அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் இவ்வருடமும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. 1988-89 இல் 272 டீசல் என்ஜின் பம்ப் செட்டுகளையும் 107 மின்சார மோட்டார் பம்ப் செட்டுகளையும் வழங்க இவ்விணையம் முகவராகச் செயற்பட்டது.

இதன் மூலம் ரூ. 0.25 இலட்சம் சேவைக் கட்டணமாக ஈட்டியுள்ளது.

பல்வேறு அரசுத்துறை நிறுவனங்களுக்கு ரூ. 14.08 இலட்சம் மதிப்புள்ள பம்ப் செட்டுக்கள் வழங்கப்பட்டன.

1988-89 ஆம் ஆண்டில் அரசுத் துறைகள், மாவட்ட மற்றும் வட்டார மையங்களுக்கு இவ்விணையம் ரூ. 83.09 இலட்சங்கள் மதிப்புள்ள 11,487 எண்கள் விசை மற்றும் கைத்தெளிப்பான்கள் வழங்கியது.

தொழிற் கூடங்கள் கட்டுவதற்காக மாவட்ட மற்றும் வட்டார மையங்களுக்கு ரூ. 27.49 இலட்சங்கள் மதிப்புள்ள சிமெண்ட்த் தகடுகளும் எஃகு தளவாடங்களும் வழங்கியுள்ளது.

சார்பு மையங்கள் மூலமாக ரூ. 138.29 இலட்சம் மதிப்புள்ள உரங்கள் வழங்கியுள்ளது.

ரூ. 53.37 இலட்சம் மதிப்புள்ள குழாய் உபகரணங்கள் டயர், ட்யூப்கள் மற்றும் பேட்டரிகள் இவ்வாண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

6. ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குதலும் மற்றும் வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் சங்கங்களும்.—இந்திய அரசால் ரூபாய் ஐந்து இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு 155 வட்டார மையங்கள் இத்திட்டத்தின்கீழ் துவக்கப்பட்டது. இவைகள் விவசாயிகளின் தேவைகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்து வருகிறது. அவர்களுக்குத் தேவையான விவசாய இடுபொருட்களை தரம் வாய்ந்த விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், டீசல் எண்ணை, விசைத் தெளிப்பான்கள், விவசாயக் கருவிகள் மற்றும் உதிரி பாகங்கள், உயவு எண்ணெய்கள் முதலியவற்றை வழங்கி வருகிறது. இந்த மையங்களில் விவசாய இயந்திரங்களைப் பழுது பார்க்கவும் செப்பனிடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், டிராக்டர், தெளிப்பான்கள், போன்றவை வாடகைக்குத் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பாரத ஸ்டேட் வங்கி வட்டார மையங்களுக்குக் கடன் உதவியளித்தது. மையத்திற்கு ரூ. 2 இலட்சம் விதம் ரூ. 6 கோடி அளவிற்கு (அசல் மற்றும் வட்டியுட்பட) அரசு, பாரத ஸ்டேட் வங்கிக்கு இதற்காக உறுதியளித்துள்ளது.

31-3-1989ல், 122 மையங்கள் ரூ. 89.30 இலட்சம் அளவிற்குக் கடனுதவி பெற்று 154 டிராக்டர்களும் அவைகளுக்கு ஏற்ற கருவிகளும் வாங்கி வாடகைக்கு விடும் பணியைச் செய்து வருகின்றன. இந்த மையங்கள் 1988-89ல் கீழ்க்கண்ட அளவில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளன :—

| | ஏற்படுத்தப் பட்ட வேலை வாய்ப்பு. | 31-3-89-ல் பொறுப்பி விருந்தவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பொறியியற் பட்டதாரிகள் .. .. | 220 | 6 |
| 2. பொறியியல் டிப்ளமோ பெற்றவர்கள் .. .. | .. | 132 |
| 3. ஐ.டி.ஐ. படித்தவர்கள் .. .. .. | 31 | 23 |
| 4. மற்றவர்கள் (படித்தவர் படிக்காமலேயே தொழில் நுட்பம் பெற்றவர் மற்றும் படிக்காமலும் தொழில் நுட்பம் பெறாதவர்). | 634 | 402 |
| மொத்தம் | 885 | 563 |

இந்த மையங்களின் முக்கிய நடவடிக்கை, விவசாயத்திற்குத் தேவையான இடு பொருட்களை விற்பனை செய்வதும், விவசாயிகளுக்கு விவசாய இயந்திரங்களை வாடகைக்கு விடுதலுமாகும். 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 1,852.87 இலட்சம் மதிப்புக்கு மேல் விவசாய இடு பொருட்கள் இம்மையங்களால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இம்மையங்கள் வாடகைக்கு விடும் பணியில் ரூ. 74.78 இலட்சம் ஈட்டியுள்ளன.

31-3-1989-ல் 35 மையங்கள் மொத்த இலாபத்திலும் 124 மையங்கள் நடப்பு ஆண்டு இலாபத்திலும் இயங்கி வருகின்றன.

7. மாவட்ட கூட்டுறவு விவசாய சேவைச் சங்கங்கள் :—விவசாயச் சாதனங்களை வாடகைக்கு விடுதல், விவசாய இயந்திரங்களைப் பழுது பார்த்தல், விவசாய இடு பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் மொத்த அளவில் பூச்சி மருந்து அடித்தல், மதிய உணவுக் கூடங்கள் அமைத்துக் கொடுத்தல் போன்ற செயல்களைத் தொடர்ந்து மாவட்ட அளவிலான 12 மாவட்ட வேளாண்மைச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயப் பெருங்குடியினருக்குச் செய்து வருகின்றன.

மேலும். 31—3—1989 ஆம், 1988-89-ஆம் வருடத்தில் எல்லாச் சங்கங்களும் இலாபத்தில் இயங்கின. குன்னூர், ஈரோடு, நாகர்கோவில் முதலிய இடங்களிலுள்ள வட்டார வேளாண்மைப் பொறியியல் சங்கங்களை மாவட்ட அளவிலான சங்கங்களாக நீலகிரி, பெரியார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்குச் சேவை செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

1986-87 ஆம் ஆண்டின் நிதி நிலைமை (நிதியாண்டில்) (ரூபாய் இலட்சத்தில்).

| சங்கங்கள். | வியாபாரம் உற்பத்தி மற்றும் ஏனைய நடவடிக்கைகள். | வாடகைக்கு விடும்பணி. | இலாபத்தில் இயங்கும் மையங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. மாவட்டச் சங்கங்கள் 12 .. | 1,852.87 | 74.78 | 12 |
| 2. வட்டார மையங்கள் 169 | .. | .. | 124 |
| 3. இணையம் 1 .. | 674.42 | .. | 1 |
| | 2,527.29 | 74.78 | 137 |

8. வாடகைக்கு விடுதல்.—விவசாயிகளுக்குத் தேவையான உழும் கருவிகளுடன் டிராக்டர்கள் ஆயில் என்ஜின் பம்ப்செட்டுக்கள், தெளிப்பான்கள், தார்ப்பாய்கள் முதலியவற்றை நியாயமான வாடகைக்கு விவசாயிகளுக்கு தருவது வேளாண்மை பொறியியல் பணிக்கூட்டுறவு சங்கங்களை நிறுவியதன் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். 154 டிராக்டர்கள், 124 ஆயில் என்ஜின்கள், 208 விசைத் தெளிப்பான்கள், 14 பாறை உடைக்கும் இயந்திரங்கள், 1 துளையிடும் கருவி, 81 விசை உழுவைகள், 432 கைத் தெளிப்பான்கள், 72 கால் தெளிப்பான்கள், 72 ராக்கர் தெளிப்பான்கள் முதலியவற்றை இந்த மையங்கள் உடைமையாக்கிக் கொண்டு தங்கள் தேவைக்கு ஏற்பத் தரப்படுகின்றன. மேலும் நிறைய மையங்களுக்கு இது போன்ற இயந்திரங்கள் பெறப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

9. தானிய சேமிப்புக் குதிர்கள் தயாரிப்பும் விற்பனையும்.—1988-89-ல் ரூபாய் 15.11 இலட்சங்கள் மதிப்புள்ள 4,065 எண்ணிக்கையுள்ள தானியக்குதிர்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்கப்பட்டன.

10. உரம் மற்றும் விதையிடும் கருவி உற்பத்தி செய்தல். விவசாய பல்கலைக் கழகம் தயாரித்த மாதிரி உரம் மற்றும் விதையிடும் கருவியினை தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விவசாய சேவை சங்கத்தின் மூலம் தயாரித்து விநியோகிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

11. சாலை உருளைகள் .—கிராமங்களை அணுக நல்ல சாலை வசதிகள் செய்து கொடுக்கும்பொருட்டு இணையம் 6 சாலை உருளைகளைத் தன்னிடம் வைத்துள்ளது. இவைகள் ஊராட்சி ஒன்றியங்கள்/ஊராட்சிகளுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. 1988-89-ல் ரூபாய் 1.82 இலட்சம் ரூபாய் வரை சாலை உருளைகள் மூலம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

12. மற்ற நடவடிக்கைகள் :— இந்த ஆண்டிலும் சார்பு மையங்கள், பண்ணைக்குத் தேவையான டீசல், கெரசின், உயவு எண்ணெய் முதலியவற்றை விவசாயிகளின் நன்மைக்காகவிற்பனை செய்துள்ளன. பண்ணைக்கு தேவையான எரிபொருள் வழங்கும் பொருட்டு மாதனூர், பேராவூரணி, மணமேல்குடிஆகிய வட்டாரக் கூட்டுறவு மையங்கள் மற்றும் தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவுச் சங்கம்,கடலூர் ஆகிய சார்பு மையங்களில் உள்ள விநியோக நிலையங்கள் மூலம் அந்தப் பகுதியில் வாழும் விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப எரி எண்ணெய், உயவு எண்ணெய் முதலியவற்றை விற்பனை செய்து வருகின்றன.

13. மத்திய அரசு சார்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் வேளாண் மையங்கள் நிறுவுதல் :— 1984-85-ல் அரசு மத்திய சார்பு திட்டத்தின்கீழ் விவசாயிகள் வேளாண் சேவை மையங்கள் நிறுவ அனுமதித்து உள்ளது. இத்திட்டத்தில் முக்கிய அம்சங்களாவன :—

(அ) விவசாயிகள் வேளாண் சேவை மையங்களை நிறுவி வாடகைப் பணிக்கான கருவிகளை வழங்குவது ;

(ஆ) மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள் மற்றும் கைக் கருவிகளின் செயல் முறை விளக்கங்கள் செய்து காட்டுவது ;

(இ) மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள் மற்றும் கைக்கருவிகள் ஆகியவற்றை பிரபலப்படுத்துவதும் மானியத்தில் விநியோகிப்பதும் ஆகும்.

1984-85 முதல் 1988-89 வரை உள்ள ஆண்டுகளில் இத்திட்டம் பின்வருமாறு வெற்றிகரமாக அமலாக்கப்பட்டது:—

| வருடம். | நிறுவப்பட்ட விவசாயிகள் வேளாண் சேவை மையங்கள். | வேளாண் கருவிகள் வழங்கியது. | கைக்கருவிகள் வழங்கியது. | செயல் முறை விளக்கங்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1984-85 | 72 | 4,649 | 11,237 | 2,868 |
| 1985-86 | .. | 9,781 | 14,890 | 2,880 |
| 1986-87 | 32 | 4,044 | 3,758 | 1,536 |
| 1987-88 | 32 | 4,398 | 3,455 | 1,536 |
| 1988-89 | 18 | 5,530 | 4,001 | 580 |

14. ஆழ்குழாய் தோண்டும் பணிகள் :— 1988-89-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இணையம் மூலம் தமிழ்நாடு முழுவதும் ஆழ்குழாய் தோண்டும் பணியை ஒப்படைத்தது. மொத்தமாக ஏப்ரல் 1988-ல் 2,388-க்கும் மேற்பட்ட ஆழ்குழாய் தோண்டும்பணி ஒப்படைக்கப்பட்டு அதை அந்தக் காலக் கெடுவுக்குள் பணி முடிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

15. பம்ப் செட்டுகள் குறை நிவர்த்தி செய்தல் :— 1987-88 ஆம் ஆண்டு முதல் 1989-90 ஆம் ஆண்டு வரை 4,000 டீசல் என்ஜின் பம்பு செட்டுக்கள் குறை நிவர்த்தி செய்யும் திட்டத்திற்காக பிரேரணை ஒன்று இணையத்தால் அரசுக்கு அனுப்பப்பட்டு இப்பிரேரணை மத்திய அரசின் ஒப்புதல் எதிர் நோக்கப்படுகிறது.

1988-89-ல் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணியான 300 டீசல் என்ஜின் பம்ப் செட்டுகளை பழுது பார்க்கும் பணி முடிவடைந்துள்ளது. மீண்டும் இந்நிறுவனத்தால் 1989-90-ல் 150 டீசல் என்ஜின் பம்ப் செட்டுகள் பழுது பார்க்கும் பணி இணையத்திற்கு கொடுக்கப்பட்டு பணி தொடரப்பட்டுள்ளது.

16. நிதி நிலை அறிக்கை :—1988-89-ஆம் ஆண்டு இவ்விணையம் இலாபமாக ரூபாய் 47.50 இலட்சமும் நிகர இலாபமாக ரூபாய் 55.85 இலட்சமும் (தோராயமாக) ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம்.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள், தேசிய பால்வள வாரியத்தின் எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் அபிவிருத்தித் திட்டங்களை தேசிய பால்வள வாரியத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் அமுல்படுத்தும் இணைப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

இத்திட்டம் எண்ணெய் வித்துக்கள், தாவர எண்ணெய்களின் உற்பத்தி, கொள் முதல், எண்ணெய் பிழிதல், விற்பனை ஆகியவற்றை ஒருங்கிணைத்து கூட்டுறவு அடிப் படையில் செயல்படுத்தும் திட்டமாகும்.

நோக்கங்கள் :

(1) கிராமங்களில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங் களை அமைத்து சங்கங்கள் இணைக்கப்பெற்று மாநில அளவில் ஒரு தலைமை நிறுவன மாகவும், இவை இரண்டுக்குமிடையே மண்டல ஒன்றியமாகவும் செயல்பட உள்ளது.

(2) செம்மைப்படுத்தப்பட்ட வேளாண்மை நடைமுறைகளை மேற்கொண்டு எண்ணெய் வித்துக்கள் குறிப்பாக மணிலா உற்பத்தியைப் பெருக்க உறுப்பினர்களுக்கு உதவுதல்.

(3) உற்பத்தியாளர்களுக்குரிய விலையினை பெறுவதற்கு வேண்டிய சீரிய எண்ணெய் பிழிதல், விற்பனை ஆகியவற்றை ஏற்படுத்தித் தருதல்.

(4) நுகர்வோருக்கு நியாய விலையில் சமையல் எண்ணெய் கிடைக்கச் செய்தல்.

பங்கு மூலதனம்.— இவ்விணையத்தில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடி யாகும். இதில் இணையத்தின் திட்டப் பகுதியில் உள்ள எண்ணெய் வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களும், தேசிய பால்வள வாரியமும் உறுப்பினர் களாக இருக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதில் தேசிய பால்வள வாரியம் ரூ. 88,88,500 பங்கு மூலதனமாகவும், மீதித் தொகையான ரூ. 8,51,000 எண்ணெய் வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர்களின் சங்கங்கள் பங்கு மூலதனமாக பெறப் பட்டுள்ளது.

திட்ட முதலீடு.— இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 15·60 கோடியில் ரூ. 8.40 கோடி கடனாகவும், ரூ. 7.20 கோடி மான்யமாகவும், 54:46 என்ற விழுக்காட்டில் தேசிய பால்வள வாரியம் இணையத்திற்கு வழங்குகிறது.

மேலும், தேசிய பால்வள வாரியம், இணையத்தின் எண்ணெய் வித்துக்கள் கொள்முதலுக்கு 11.5 சதவீதம் விழுக்காட்டில் குறைந்த கால கடனுதவிகளை அளித்து வருகின்றது.

வட்டார உழவியல் மையம்/பயிற்சி மையம்.—தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் சுமார் 102 ஹெக்டேர் நிலப்பரப்பில் வட்டார உழவியல் மையமும் பயிற்சிப் பணிகளை கவனிக்க பயிற்சி மையமும், ஊழியர்கள் குடியிருப்பும் ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு திறம்பட செயல்பட்டு வருகிறது.

கொள்முதல்.—இவ்விணையத்தின் மணிலா காய்களின் கொள்முதல் 1985-86 முதல் சீரான பாதையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. கடந்த 1987–88 ஆம் ஆண்டு சுமார் 30,000 டன் மணிலா காய்கள் கொள்முதல் செய்யப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் 45,000 டன் மணிலா காய்கள் கொள்முதல் செய்ய மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது.

இணையம் மணிலா எண்ணெயை பியூர்நெட் என்ற பெயரிலும், சுத்திகரிக்கப் பட்ட மணிலா எண்ணெயை 'வின்னர்' என்ற பெயரிலும் விற்பனை செய்கிறது.

அட்டவணை 1.

| வரிசை எண். | வருடம். | பதிவு செய்யப் பட்ட எண்ணெய் வித்து உற்பத்தி யாளர் கூட்டுறவு சங்கங்கள். | உறுப்பினர் சேர்க்கை. | உறுப்பினர்களின் எண்ணெய் வித்து பரப்பு (ஹெக்டேர்) | கொள்முதல் டன். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 1985–86 | 216 | 24,155 | 47,047 | 10,427 |
| 2 | 1986–87 .. | 251 | 33,489 | 63,180 | 20,651 |
| 3 | 1987–88 .. | 324 | 46,252 | 87,055 | 28,129 |

## அட்டவணை 2.

### மணிலா பொருட்கள் (உற்பத்தி டன்).

| வரிசை எண். | வருடம். | மணிலா எண்ணெய். | சுத்திகரிக்கப்பட்ட மணிலா எண்ணெய். | பிண்ணாக்கு. | பிண்ணாக்குகளிலிருந்து எடுத்த எண்ணெய். | எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 1985–86 | 2,304 | 94 | 3,130 | | |
| 2 | 1986–87 | 3,485 | 681 | 5,447 | | |
| 3 | 1987–88 | 6,471 | 878 | 10,627 | 281 | 3,705 |

# அத்தியாயம் 5

## கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை.

### கால்நடை பராமரிப்பு.

கால்நடைப் பராமரிப்புத் துறை வட்டார அடிப்படையில் பல்வேறு பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மாநில அளவில் இத்துறையின் பணிகள் அனைத்தும் சென்னை, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் கட்டளைப்படியும், மேற்பார்வையின் கீழும் மேற்கொள்ளப்பட்டன. நிர்வாக வசதிக்காக இம்மாநிலம் 15 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரமும், வட்டாரக் கால்நடை பராமரிப்பு இணை இயக்குநர் ஒருவரின் தலைமையில் இயங்குகிறது.

<u>கால்நடை மேம்பாடு.</u>—கால்நடை மேம்பாட்டுப் பணிகளின் முக்கிய நோக்கம், மாநிலத்தில் பால் உற்பத்தியைப் பெருக்க உள்ளூர் கால்நடைகளின் பால்வளத்தைப் பெருக்குவதேயாகும். இம்மாநிலத்தில் 1982 கணக்கெடுப்பின்படி 103.66 இலட்சம் மாடுகள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை 31.12 இலட்சம் ஆகும். இனப்பெருக்கம் செய்யக்கூடிய மாடுகள் 34.88 இலட்சமும் மற்றும் எருமைகள் 17.20 இலட்சமும் ஆகும். ஜெர்ஸி, ப்ரிசியன் காளைகள், முர்ரா எருமைகள் போன்ற அயலினக் கால்நடைகளைக் கொண்டு இனப்பெருக்கம் செய்வதன் மூலம் உள்ளூர் கால்நடைகளின் தரத்தை உயர்த்தும் திட்டமொன்றை அரசு செயல்படுத்தி வந்துள்ளது. மாநிலத்தில் கால்நடை மேம்பாட்டில், செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் முறையும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கிராமங்களில் பசுக்கள், எருமைகள் ஆகியவற்றைச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதற்கான வசதிகளைச் செய்து தரும் பணியில் இம்மாநிலத்தில் மொத்தம் 2,737 நிலையங்கள் ஈடுபட்டு வருகின்றன. செயற்கை முறை கருத்தரிப்புப் பணியில் உறை விந்து உத்தியினால் கூடுதல் பயன் கிட்டுகிறது. இம்முறையில் விந்துவை நீண்ட காலத்திற்குச் சேமித்து வைக்கவும் நீண்ட தொலைவுக்கு எடுத்துச் செல்லவும் முடியும். இம்மாநிலத்தில் பசுக்கள், எருமைகள் இனப்பெருக்கத்தில் விந்து உறை வைப்புத் தொழில்நுட்ப உத்தியை இத்துறையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்துறை இம்மாநிலத்தில் உள்ள 1,719 நிலையங்கள் மூலம் உறைய வைக்கப்பட்ட விந்துக்களைக் கொண்டு செயற்கை முறை கருத்தரிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறது. இம் மாநிலத்தில் 1,017 நிலையங்களில் குளிரூட்டப்பட்ட விந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்துறை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 56 காளை வளர்ப்பு நிலையங்களை நடத்தி வருகிறது. அங்கிருந்து குளிரூட்டப்பட்ட விந்து அப்பகுதியிலுள்ள பசுக்கள், எருமைகளை இனப்பெருக்கம் செய்வதற்கு கால்நடை செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் இத்துறை தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் ஒன்றும், திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம் அபிசேகப்பட்டியில் ஒன்றுமாக இரு உறை விந்து சேமிப்பு வங்கிகளை நடத்தி வருகின்றது. அங்கு ஜெர்ஸி, பிரிசியன், முர்ரா காளைகள் வளர்க்கப்பட்டு உறைய வைக்கப்பட்ட விந்து செயற்கை முறை கருத்தரிப்புப் பணிக்காக மாநிலத்தில் பல்வேறு பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. ஈச்சங்கோட்டை, அபிசேகப்பட்டி உறைவிந்து நிலையங்களில் 90 கால்நடை மருத்துவர்களும், 232 கால்நடை ஆய்வாளர்களும் அறிக்கை ஆண்டில் பயிற்சி பெற்று உள்ளனர். அறிக்கையாண்டில் 23.76 இலட்சம் பசுக்களுக்கும், எருமைகளுக்கும் செயற்கைமுறை கருத்தரிப்பு செய்யப்பட்டன. இம்மாநிலத்தில் உயர் பால் வளமுள்ள 5.65 இலட்சம் (கலப்பின) கன்றுகள் பிறந்துள்ளன. உறைவிந்தைக் கொண்டு 12.09 இலட்சம் கருத்தரிப்புகளும் குளிரவைக்கப்பட்ட விந்தைக் கொண்டு 11.67 இலட்சம் கருத்தரிப்புகளும் செய்யப்பட்டன. மாநிலத்தின் நடப்பாண்டு பால் உற்பத்தி 3,238 ('000') மெட்ரிக் டன் ஆகும். இதனால் நபர் ஒருவருக்கு 164 கிராம் பால் கிடைக்கும்.

<u>கால்நடைப் பண்ணைகள்.</u>—இம்மாநிலத்தில் கால்நடை இனப்பெருக்கப் பணிக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட வகை கால்நடைகளை வளர்க்கும் நோக்குடன் 8 கால்நடைப் பண்ணைகளை கால்நடைப் பராமரிப்புத் துறை தொடர்ந்து நடத்தி வருகிறது. ஈச்சங்கோட்டை, அயலின கால்நடை இனப்பெருக்கப் பண்ணை இம்மாநிலத்தில் இனப்பெருக்கத்திற்குத் தேவைப்படும் ஜெர்ஸி கால்நடைகளை இனப்பெருக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட உறை விந்து சேமிப்பு வங்கி உதகமண்டலம் மாவட்டக் கால்நடை பண்ணையில் 1989-90 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முர்ரா காளைகளின் திறனை மதிப்பிடுவதற்கு இப்பண்ணையில் கன்று வழித்தோன்றல் சோதனை திட்டமும், சிந்தி காளைகளின் திறனை மதிப்பிடுவதற்கு ஒசூரில் அது போன்ற திட்டமும் நடப்பாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. நடப்பாண்டில் கன்று வளர்ப்புத் திட்டம் ஒன்றுக்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது. அதனை கால்நடை வளர்ப்புத் துறை செயல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் உழவர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நிதியுதவி பெற்று ஒவ்வொன்றிலும் 5 கலப்பினக் கன்றுகளை கொண்ட பிரிவுகளை வளர்ப்பதற்கு ஊக்கப்படுத்தப்பட்டனர். வங்கியிலிருந்து கடன் பெறுதல், நல்ல கலப்பினக் கன்றுகளை வாங்குதல் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள கன்றுகளுக்கு மருத்துவ வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில் உழவர்களுக்கு கால்நடை வளர்ப்புத்துறை உதவியளித்தது. நடப்பாண்டில் இத்திட்டத்தில் 4,465 கன்றுகளை கொண்ட மொத்தம் 893 பிரிவுகள் தோற்றுவிக்கப்

பட்டன. இத்திட்டம் உழவர்களிடையே மிகவும் பிரபலம் அடைந்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவது இம்மாநிலத்தில் பால் உற்பத்தியை பெருக்குவதற்கு பெரிதும் உதவும்.

செம்மறியாடு வெள்ளாடு மேம்பாடு.—அறிக்கையாண்டில் தென்ஆற்காடு மாவட்டத்தில் சின்ன சேலத்தில் ஒன்றும், காமராசர் மாவட்டத்தில் சாத்தூரில் ஒன்றுமாக இரண்டு செம்மறியாடு வளர்ப்புப் பண்ணைகளும், ஒசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் 4 செம்மறியாடு வளர்ப்பு பிரிவுகளும் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. இப்பிரிவுகள் அறிவியல் முறையில் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் இனப்பெருக்கம் செய்து உள்ளூர் செம்மறியாடுகள், வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக மாநிலத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள உழவர்களுக்கு வழங்கும் பணியில் ஈடுபட்டன. கலப்பினமற்ற உள்நாட்டு செம்மறியாடுகளை இனப்பெருக்கம் செய்ததுடன் நடப்பாண்டில் புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில், கீழக்கரைசல் செம்மறியாடுகளையும், டார்செட் கலப்பின கடாக்களையும் கலந்து கலப்பினப் பெருக்கமும் செய்யப்பட்டது. இதன் பயன் ஊக்கமளிப்பதாயிருக்கிறது. இப்பண்ணைகளில் இனப்பெருக்கம் செய்யப்பட்ட செம்மறியாடுகள் பல்வேறு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்ட கால்நடை பண்ணையிலுள்ள வெள்ளாடு இனப்பெருக்கப் பிரிவில், தெள்ளிச்சேரி வெள்ளாடுகளைக் கொண்டும் சின்னசேலம் செம்மறியாடு வளர்ப்புப் பண்ணையில் உள்ள வெள்ளாடு இனப்பெருக்கப் பிரிவில் ஜம்னபாரி வெள்ளாடுகளைக் கொண்டும் நடப்பாண்டில் இனப்பெருக்கம் செய்யப்பட்டது. வெள்ளாடுகளில் குறிப்பிட்ட வகை இனப்பெருக்கம் இந்த ஆண்டில் மும்முரப்படுத்தப்பட்டு உள்ளூர் வெள்ளாடுகளை உயர்ரக வெள்ளாடுகளாக உயர்த்துவதற்கு கிராமங்களிலுள்ள உழவர்களுக்கு 202 வெள்ளாடுகள் வழங்கப்பட்டன.

கோழியின வளர்ப்பு.—இத்துறை ஒசூரிலும் காட்டுப் பாக்கத்திலும் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையங்கள் இரண்டையும் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் கோழிப்பண்ணை விரிவாக்க நிலையங்கள் 27-யையும் நடத்தி வந்தது. இக்குஞ்சு பொரிப்பு நிலையங்கள், கோழிப்பண்ணை விரிவாக்க நிலையங்களுக்கு வழங்குவதற்காகக் கலப்பினமற்ற கோழி குஞ்சுகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டன. கோழிப் பண்ணை விரிவாக்க நிலையங்களில் அக்கோழிக்குஞ்சுகள் 12 வாரங்கள் வரை வளர்க்கப்பட்டு உழவர்களுக்கு விற்கப்பட்டன. கலப்பினமற்ற இக்கோழிக் குஞ்சுகளினால் தனிப்பட்ட அனுகூலம் ஒன்று உண்டு. இக்கோழிகள் இடும் முட்டைகளைக் கொண்டு உழவர்கள் தாமே குஞ்சுகளைப் பொரிக்க வைக்கக்கூடும். இவ்வாறு பொரிக்கப்படும் கோழிக் குஞ்சுகள் தாய்ப்பறவைகள் போன்றே இனவிருத்தி செய்யும். எனினும் இக்கோழிக் குஞ்சுப் பொரிப்பு நிலையங்களில் உற்பத்திச் செய்யப்படும் கலப்பினமற்றக் கோழிக் குஞ்சுகளின் திறனை மேம்படுத்தும் நோக்குடன் குஞ்சுப்பொரிப்பு நிலையங்களிலிருந்த தாய்ப்பறவைகளுக்குப் பதிலாக பெங்களூர், ஹெஸ்ஸர் காட்டாவிலுள்ள மத்திய அரசு கோழிப் பண்ணையிலிருந்து அதிக முட்டை இடும் 260 கோழிகள் பெறப்பட்டு வளர்க்கப்பட்டன. இந்தப் புதிய வகை கோழிகள் சிறியவையாகவும் அதிக அளவு முட்டைகளை இடக்கூடியதாயும் இருந்தன. அதனால் உழவர்களுக்கு ஆதாயம் கிடைத்தது.

பன்றி வளர்ப்பு.—கால்நடை பண்ணைகள் நான்குடன் இணைந்த பன்றி வளர்ப்புப் பிரிவுகள் நான்கும் சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனையுடன் இணைந்து பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்றும், வெள்ளை 'யார்க்ஷயர்' பன்றிகளைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. உள்நாட்டு வணிக பன்றிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக பன்றி வளர்ப்போருக்கு இன விருத்திக்காக நல்லதரமான பன்றிகள் வழங்கப்பட்டன.

தீவன உற்பத்தி மேம்பாடு.—இத்துறை தீவனப்பயிர் விதை, தீவனப் பயிர் நாற்றுகள், கன்றுகள் ஆகியவற்றின் உற்பத்திக்காக எட்டு தீவனப் பயிர் விதை உற்பத்திப் பிரிவுகளைச் செயல்படுத்தி வருகிறது. மக்காச்சோளம், கம்பு என்.பி. 21 மணப்புல் முதலிய பல்வேறு தீவனப் புல்வகைகளை மாவட்ட கால்நடை வளர்ப்புப் பண்ணைகளும் உற்பத்தி செய்து வந்தன. இம்மாநிலத்தின் பல்வேறு பாகங்களில் குறிப்பாக தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மையக் கிராம நிலையங்கள் ஆகியவற்றின் கீழ் வருகின்ற பகுதிகளில் உழவர்களுக்கு முறையான வகையில் தீவனப் பயிர்சாகுபடியைச் செய்வதற்கு ஊக்குவிக்கின்ற வகையில் இவ்வாண்டில் 1,100 உழவர்களுக்கு தீவனப் பயிர் வளர்ப்புக்கான இடு பொருட்கள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் உழவர்களுக்கு மொத்தம் 89.04 இலட்சம் தீவனப் பயிர் நாற்றுக்கள், 11.15 மெ.டன் தீவனப் பயிர் வகைகள் 3.00 இலட்சம் தீவனப் பயிர் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை மருத்துவப் பணிகள்.—இம்மாநிலத்திலுள்ள கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிப்பது கால்நடை பராமரிப்புத் துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி அளிக்க 806 மருத்துவ நிலையங்களும், 2,226 கிளை மருத்துவ நிலையங்களும் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள கால்நடை கோழியினங்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்து

கொடுக்கின்ற பணிகளில் ஈடுபட்டுள்ளன. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோய் பரவுவதைக்கண்காணிக்கவும்; நோய்க்கான காரணங்களைக் கண்டறியவும், மாவட்டத் தலைமையிடங்கள் 11-ல் கால்நடை நோய் தகவல் சேகரிப்பு பிரிவுகள் 11 செயல்பட்டு வந்தன. கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு வெகு தொலைவிலுள்ள கிராமங்களில் நோயால் பாதிக்கப்படுகின்ற கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்க இவற்றுடன் 50 கால்நடை இயங்கும் மருத்துவப் பிரிவுகளும் இயங்கி வந்துள்ளன.

கால்நடைகளுக்கு வருகின்ற மிகக் கொடிய நோயான கோமாரி நோய் கால்நடைகளைப் பழி வாங்குவதன் மூலம் உழவர்களுக்கு மிகப் பெரிய அளவில் இழப்பினை உண்டாக்குகிறது. இந்நோயை கட்டுப்படுத்த அனைத்து சிறப்பு நடவடிக்கைகளை இத்துறை தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது. கால்நடைகளுக்கிடையே வருகின்ற வெக்கை நோயினைச் கட்டுப்படுத்தும் திட்டம், தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. அத்திட்டத்தில் குறித்த காலத்திற்கொரு முறை இலவசமாக கால்நடைகளுக்கு வெக்கை நோய் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது.

வெறி நாய்க்கடி நோய்த் தடுப்பிற்கு வளர்ப்பு நாய்கள் அனைத்திற்கும் முறையாக தடுப்பு ஊசி போட கோயம்புத்தூரில் வெறிநாய்க்கடி நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று செயல்பட்டுவந்தது.

<u>சிறப்புத் திட்டங்கள்</u>.—கால்நடைப் பராமரிப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் 900 செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகளும் 25 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களிலுள்ள 2,013 கன்றுகள் அறிக்கை ஆண்டில் கன்று வளர்ப்புக்கான உதவித் தொகைப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் 50 சதவீத உதவியுடன் தீவனப்பயிர் கன்றுகள், விதைகள் ஆகியவற்றை வாங்கவும் வழங்கவும் அரசு ரூ. 1 இலட்சத்தை அனுமதித்துள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலத்தின் மாவட்ட கால்நடைப் பண்ணையில் உறைவிந்து சேமிப்பு வங்கியை ஏற்படுத்த ரூ. 50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறு உழவர்கள்/ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்கள், வேளாண் தொழிலாளர்கள் ஆகியோருக்கு 50 சதவீத மத்திய அரசின் நிதியுதவியுடன் குறிப்பாக விவசாயப் பணி நிகழாத காலங்களில் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள இயலும் வகையில் நல்ல தரமான கறவைமாடுகள், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றிகள் முதலியன வழங்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றனர்.

வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின் கீழ் 1988-89ல் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கால்நடை வளப்புத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற வகையில ரூ. 5.43 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

<u>பால்</u>.—1977-78-ல் 1.68 மில்லியன் டன்னாக இருந்த இம்மாநிலத்தில் பால் உற்பத்தி 1988-89-ல் 3.24 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. நபர் ஒருவருக்கு கிடைக்கின்ற பாலின் அளவு 1977-78-ல் நாளொன்றுக்கு 98 கிராமாக இருக்க, 1988-89-ல் 164 கிராமாக உயர்ந்துள்ளது.

<u>முட்டை</u>.—1977-78-ல் இம்மாநிலத்தின் மதிப்பிடப்பட்ட முட்டை உற்பத்தி 683 மில்லியனாகும். இது 1988-89ல் 2287 மில்லியனாக உயர்ந்துள்ளது ஆண்டொன்றுக்கு தனிநபர் ஒருவருக்குக் கிடைக்கிற முட்டையின் எண்ணிக்கை 1977-78ல் 15 ஆக இருக்க, 1988-89ல் 42ஆக உயர்ந்துள்ளது.

## பால்வளம்.

தமிழ் நாட்டில் பால் உற்பத்தித் திட்டங்கள் குஜ்ராத் மாநிலத்திலுள்ள பால் கூட்டுறவு சங்கங்களின் அமைப்பை ஒட்டி செயல்படுத்தப்படுகின்றன. அதாவது கிராமங்களில் ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், மாவட்டந்தோறும் ஒரு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் பெருநகரில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற அடிப்படையில் செயலாக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 8,241 பால் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், புறநகரில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள், பால் புழங்கும் சங்கங்கள், பால் வழங்கும் ஒன்றியங்கள் மற்றும் நுகர்வோர் பால் கூட்டுறவு சங்கங்கள்

என, பல்வகை பால் கூட்டுறவு அமைப்புகள் உள்ளன. - மேற்கூறிய மொத்த அளவை சங்கங்களில் 6,421 சங்கங்கள்/ஒன்றியங்கள் செயற்படும் சங்கங்களாகவும், மீதமுள்ளவை செயலற்ற சங்கங்களாகவும் உள்ளன. மாவட்டங்களில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் என 17 பால் கூட்டுறவு ஒன்றியங்களும் மாவட்ட அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேலும், 17 துணைப்பதிவாளர் (பால் பதம்) அலுவலகங்கள் மேற்கூறிய 17 பால் கூட்டுறவு ஒன்றியங்களுடன் இணைத்து பால் உற்பத்திக்கான பணிகளை கவனித்து வருகின்றனர். தற்போது சராசரியாக நாளொன்றுக்கு 12.57 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

2. <u>குறிக்கோள்கள் :</u>

(அ) பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு லையான விலை நியாயமான நிர்ணயம் செய்தல்.

(ஆ) நுகர்வோருக்கு நியாயமான விலையில் பால் மற்றும் பால்பொருட்களை விநியோகித்தல்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்ட திருத்த விதி முறைகளின் அடிப்படையில் பால் கூட்டுறவு சங்கங்களை செயல்படுத்துதல்.

3. <u>செயல்முறை.</u>—மேற்சொன்ன குறிக்கோளின் அடிப்படையில்பால் பெருக்குத் துறையில் கீழ்குறித்த முக்கிய பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன :—

(அ) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு, கால்நடை மருத்துவர்கள் மூலம் கால்நடை மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல் மற்றும் சமநிலைப் படுத்தப்பட்ட கால்நடைத் தீவனம் வழங்குதல், இதன் மூலம் உறுப்பினர்கள் பால் உற்பத்தியின் பயனை முழுமையாக பெறுதல்.

(ஆ) பால் உற்பத்தி தடங்கள், பால்குளிரூட்டும் நிலையங்கள், பால் பதப் படுத்தும், தொழிற்சாலை, பால் பவுடர் தொழிற்சாலை மற்றும் நுகர்வோரின் அத்திய வசிய தேவைக்கேற்ப அனைத்து உள்ளமைப்புகளும் ஏற்பாடு செய்தல்.

(இ) அனைத்து மாவட்டங்களிலுள்ள பால் கூட்டுறவு சங்கங்களை/ஒன்றியங்களை முழுமையான அளவில் செயல்படுத்துவதற்கும், அந்தந்த மாவட்டங்களிலுள்ள துணைப் பதிவாளர் (பால்பதம்) அவருக்குள்ள தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகளிலுள்ள சட்ட விதிமுறைகளின்படி நேரடியாக கண்காணித்து அறிவுரை வழங்குதல்.

4. அனைத்து மாவட்டங்களிலுள்ள மொத்த 19.26 லட்ச பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களில் 5 லட்ச உறுப்பினர்களிடமிருந்து உற்பத்தி செய்யப்படும் பாலை சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் பால் வழங்கும் சங்கங்களுக்கு அனுப்பப் படுகிறது. மேற்படி உற்பத்தி செய்யப்பட்ட பாலினை உள்ளூர் விற்பனை செய்யப் பட்டு, அதிகப் படியாக உள்ள பாலினை மாவட்டபால் நுகர்வோரின் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அனுப்பப்படுகிறது.

5. முதன்மை சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பாலிற்கு, கொழுப்பு சத்தின் அடிப்படையில் பாலிற்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 3 சதவீதம் கொழுப்பு சத்து அடங்கிய பசும்பாலிற்கு லிட்டருக்கு குறைந்த பட்ச விலை 3.36-ம் 5.5 சதவீத கொழுப்பு சத்து அடங்கிய பசும்பாலிற்கு அதிக பட்சமாக ரூ. 3.86 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. அதேபோன்று 6.6 சதவீத கொழுப்பு சத்து அடங்கிய எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 4.04-ம், 10 சதவீத கொழுப்பு சத்து அடங்கிய எருமை பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூ. 5.98 என நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது.

6. <u>திட்டங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள்:</u>—தமிழகத்திலுள்ள 20 மாவட்டங்களில் 14 மாவட்டங்களில் இந்திய பால்வள நிறுவனத்தின் மூலம் கடன் மானியம் பெற்று பல்வேறு பால் உற்பத்தி திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அம்மாவட்டங்களாவன, சென்னை, செங்கை—அண்ணா, தென்னாற்காடு, வடாற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, திண்டுக்கல்-காயிதே-மில்லத், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை, மேற்கூறிய நிறுவனம் மூலம் 70:30 என்ற விகிதத்தின் அடிப்படையில் கடன்/மானியம் பெற்ற பால் உற்பத்தி திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

மீதமுள்ள பிற மாவட்டங்களான ராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அரசு மாநில திட்டங்கள் ஊரக ஒருங்கிணைப்பு வளர்ச்சி திட்டங்கள் மற்றும் வறட்சி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்று பால் வளர்ச்சி திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

7. ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் திட்டத்தலைப்பின்கீழ் பால் உற்பத்தி திட்டங்களுக்கு ரூ. 500 லட்சங்கள் இத்துறைக்கு குறிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கீடு இரு அவற்றில் செலவிடப்பட்ட மொத்த செலவினங்கள் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | செலவினம். |
|---|---|
| (1) | (2) |
| | லட்சங்கள். |
| 1985–86 | 39.53 |
| 1986–87 | 35.40 |
| 1987–88 | 83.19 |
| 1988–89 நிதி ஒதுக்கீடு .. | 92.82 |

ஆறாம் ஐந்தாண்டு திட்ட சாதனைகள் மற்றும் ஏழாம் ஐந்தாண்டு திட்டங்களின் கீழ் முதல் நான்கு ஆண்டு சாதனைகள் :

| வரிசை எண். | பொருள். | ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தின் முடிவில் (அதாவது 1984-85ல்) | ஏழாம் ஐந்தாண்டு திட்டம். 1985-86 | 1986-87 | 1987-88 | 1988-89 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | பால் கூட்டுறவு தொடக்க சங்கங்கள் எண்ணிக்கை. | 5,301 | 5,536 | 5,804 | 6,024 | 6,346 |
| 2 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள். | 15 | 16 | 16 | 17 | 17 |
| 3 | பால் உற்பத்தி/லட்சங்கள்/ லிட்டர் (நாளொன்றுக்கு). | 8.83 | 10.75 | 11.00 | 11.05 | 12.57 |

8. ஒருங்கிணைந்த பால்பெருக்கு திட்டத்தின் கீழ் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி :

கழக உதவியுடன பால்பண்ணை அமைக்கும் திட்டம்: திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ. 705 லட்சம் செலவில், ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக்கழக நிதி உதவியுடன் பால்பண்ணை அமைக்க அரசு அங்கீகாரம் செய்து ஆணை வழங்கப்பட்டது. மேற்கூறிய திட்டத்தின் மொத்த தொகையில் 70 சதவீத தொகை ரூ. 493.50 லட்சங்கள் கடனாக தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தாரிடமிருந்து பெற்றும், 30 சதவீத தொகை ரூ. 211.50யை மாநில அரசு நிதியிலிருந்து மான்யம் பங்கு மூலதனமாக வழங்குவது என கருதி இத்திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஐந்தாண்டிற்குள் அதாவது 1992-ல் முடிவு பெற வேண்டும்.

திட்டத்தின் சாராம்சம் :

(1) புதியதாக 651 பால் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குதல்.

(2) 73,000 கால்நடைகளை கூட்டுறவு பால்உற்பத்தி திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

(3) 651 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

(4) சங்கரன்கோவில் மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் பால் குளிரூட்டு நிலையங்கள் நிறுவுதல்,

(5) நாளொன்றுக்கு தற்போதுள்ள 50,000 லிட்டர் லட்சங்கள் கொள்ளளவு கொண்ட பால் பண்ணையிலுள்ள 1,00,000 லிட்டருக்கு உயர்த்துதல்.

(6) நாளொன்றுக்கு விற்பனையில் 75,000 லிட்டர் இத்திட்டத்தின் மூலம் 53,000 விவசாயிகள் பயன்பெறுவர், பால் உற்பத்தியினை நாளொன்றுக்கு 28,000 லிட்டரிலிருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்துதல்.

(7) மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.—மலைவாழ் பகுதியில் பால் உற்பத்தியினை பெருக்குவதற்கு ரூ. 7.85 லட்சம் அரசு வழங்கியுள்ளது. இத்தொகையில் 50 சதவீத மூலதனமாகவும், மீதமுள்ள 50 சதவீத கடன் உதவியாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு வழங்கிய நிதி விபரங்கள் வருமாறு :—

| | ரூபாய் லட்சம். |
|---|---|
| (அ) கால்நடை சிகிச்சை .. .. .. .. .. | 4.00 |
| (ஆ) கால்நடை வளர்ப்பு .. .. .. .. .. | 1.50 |
| (இ) உதகையிலுள்ள நியூக்ளியர் ஜெர்சி மற்றும் பொலி காளைப் பண்ணையினை வலுப்படுத்துதல். | 2.35 |
| மொத்தம் | 7.85 |

(8) மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தித்திட்டம்.— இத்திட்டத்தின்கீழ், கோவை மாவட்டத்திலுள்ள அன்னூரில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்டு ஒரு பால்குளிரூட்டும் நிலையம் ரூ. 25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1986–87-ல் ரூ. 7 லட்சமும் 1987–88-ல் ரூ. 14 லட்சமும் வழங்கப்பட்டு தற்போது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(9) வறட்சிக்கான மேம்பாட்டுத் திட்டம்.—இத்திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்திலுள்ள தென்கனிகோட்டை என்னுமிடத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ரூ. 13 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

(10) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம்.—(அ) இத்திட்டத்தின்கீழ் பெரியார் மாவட்டத்திலுள்ள தாளவாடி என்னுமிடத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 10 லட்சம் (50 சதவீத மானியம்) செலவில் கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள சிவகங்கையில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 16 லட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1988 நவம்பர் திங்களில் ரூ. 9 லட்சம் (50 சதவீத மானியத்தொகை) வழங்கப்பட்டு பால் குளிரூட்டும் நிலையம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) காமராஜர் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூரில் ரூ. 11.30 லட்சம் செலவில், சிறிய பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏற்கப்பட்டு, அத்தொகையில் (மானியம் 50 சதவீதம்) ரூ. 5.65 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பணி நடைபெற்று வருகிறது.

(VII) ஆதிதிராவிடர் நல திட்டங்கள்/சிறப்பு மத்திய நிதி உதவி.—இத்திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவு சங்கங்களிலுள்ள ஆதி திராவிட இனத்தினைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு கறவை மாடு வாங்குவதற்கு கடன் வசதி வழங்கப்படுகிறது. இதன் மூலம் கறவை மாடு வாங்குவதற்கு ரூ. 2,500 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு இதில் 33–1/3 சதவீதம் ஆதி திராவிட உறுப்பினர்களுக்கு மான்யமாக அரசு வழங்கியுள்ளது. மீதமுள்ள தொகையினை தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் கடனாக வழங்குகிறது. 1—12—1988 முதல் கறவை மாட்டின் விலையினை ரூ. 3,200 என மதிப்பீடு செய்து மேற்படி மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

1988–89-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கென வழங்கப்பட்ட மான்யத்தொகை கீழ்க்கண்டவாறு :—

| திட்டங்கள். | நிதி குறியீடு. | பயனடைவோரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களின் நலன் (ஆதிதிராவிடர் வரவு–செலவு திட்டம்) | 42.000 | 4,686 |
| 2. சிறப்பு மத்திய நிதி உதவி (தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்). | 228·942 | 27,484 |
| மொத்தம் | 270.942 | 32,170 |

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான, நிலையான விலையை அளிக்கவும், வாடிக்கையாளர்களுக்கு தரமான பால் மற்றும் பால் பொருள்களை நியாயமான விலையில் வழங்குவதற்கும், பால் உற்பத்திப் பெருக்கும் பொருட்டு மாநில அரசு கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களையும், மாவட்ட அளவில் ஒன்றியங்களையும், மாநில அளவில் இணையத்தின் தலைமை அமைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் 15-12-80 அன்று பதிவு செய்யப்பட்டு 1-2-81 முதல் தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் பணிகளை மேற்கொண்டது.

2. இணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் :

(1) பால்பண்ணையையும் பால் பண்ணைப் பணிகளையும் மேம்படுத்த .

(2) பால், பால்பொருள்கள் விற்பனையை மேம்படுத்தல்.

(3) பாலில் தன்னிறைவு ஏற்படுத்துவதற்காக கிராமப் பகுதிகளில் பால் பண்ணையில் உற்பத்தியைப் பெருக்குதல்.

(4) வாடிக்கையாளர்களுக்கு தரமான பாலுடன் நியாயமான விலையும், சரியான அளவையும் அளிப்பதற்கு வசதி செய்வதுடன் உற்பத்தியாளர்களுக்கும் ஆதாயம் தரத்தக்க விலையை அளித்தல்.

தற்போது பால்வள திட்டங்களை அந்தந்த மாவட்ட பால் உற்பத்தி கூட்டுறவு ஒன்றியங்களே தேசிய பால்வளவாரியத்தின் தொழில் நுட்ப உதவியுடனும், இவ்விணையத்தின் உதவியுடனும் செயல்படுத்தி வருகின்றன.

3. இத்திட்டத்திற்கு தேசிய பால்வள வாரியம் (முன்னாள் இந்திய பால்பண்ணைக் கழகம்) திருப்பி செலுத்தக்கூடிய கடன் மற்றும் மான்யம் 70:30 என்ற விகிதத்தில் அளிக்கின்றது. இவ்விணையம் பால்வளத் திட்டங்களை பால்பெருக்கு திட்டங்களின் கீழ் தேசிய பால்வள வாரியத்தின் நிதிஉதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள 14 மாவட்டங்களில் தமிழக அரசு சிறப்பு திட்டங்களான மேற்குமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதி திராவிடர் நலத் திட்டம் ஆகியவற்றின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. மேலும் இவ்விணையம் உறுப்பினர் ஒன்றியங்களுக்கு தேவையான திரவ நைட்ரஜன், உறைவிந்து நிலையம், பொலி காளைப் பண்ணை, கால்நடைத் தீவனம் முதலிய பொதுவான வசதிகளை அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது. இது தவிர இவ்விணையம், பெருநகர் பண்ணைகளில் பெறப்படும் பாலை, சென்னையில் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்தும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களை தமிழகத்திலும் மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்ய உதவி புரிகிறது.

4. பால் கொள்முதல்.—10.42 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் அடங்கிய 5,657 கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில், உள்ளூர் தேவையை நிறைவு செய்த பின்னர் கொள்முதல் செய்யப்பட்டு பதப்படுத்துவதற்காக அருகிலுள்ள பாலை குளிரூவைக்கும் மையங்கள் மற்றும் பால்பண்ணைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு பால் கெடாமல் பதப்படுத்தப்பட்டு பின்னர் அம்பத்தூர், மாதவரத்திலுள்ள பெருநகர் பால் பண்ணைகளுக்கு டேங்கர்களிலும், இரயில் டேங்கரிலும் கொண்டு செல்லப்படுகிறது.

1988–89-ம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரியாக 9.38 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. திட்ட கால இறுதியில் (1993—94-ல்) பால் கொள்முதல் நாளொன்றுக்கு 13.77 இலட்சம் லிட்டராக அதிகரிக்கும். கிராம ஒன்றியங்களில் உள்ள பால் பண்ணைகளின் கொள்திறனை நாளொன்றுக்கு 8.22 இலட்சம் லிட்டர்களிலிருந்து நாளொன்றுக்கு 17.00 இலட்சம் லிட்டர்களாகவும், சென்னை பெருநகர்ப் பண்ணைகளின் கொள்திறனை நாளொன்றுக்கு 4.75 இலட்சம் லிட்டர் களிலிருந்து நாளொன்றுக்கு 8.00 இலட்சம் லிட்டர்களாகவும் திட்ட இறுதியில் 1994-ல் அதிகரிக்கப்பட உள்ளது.

5. பால், பால்வள உற்பத்திப் பொருள்கள் வழங்குதல்.—நாளொன்றுக்கு 5.32 இலட்சம் லிட்டர் நிலைப்படுத்திய பால் 525 பால் வழங்கும் நிலையங்கள், 50 பாலகங்கள், பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள், 125 தானியங்கி பால் வழங்கு பிரிவுகள் ஆகியவை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பால், இத்திட்ட கால இறுதியில் நாளொன்றுக்கு 8.50 இலட்சம் லிட்டராக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பால் நுகர்வோரின் நலனுக்காகவும் அவர்களுக்கு

இன்னும் சிறந்த முறையில் பணியாற்றும் கருத்துடனும் 31 நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர மாவட்ட ஒன்றியங்கள் தயாரித்த தரமான பால்பொருட்கள் மாநிலத்திற்கு வெளியேயும், மாநிலத்திற்குள்ளும் நியாயமான விலையில் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது. பாலாடைக்கட்டி மற்றும் செப்டிக் பாக்கில் பால் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

6. கால்நடைத் தீவனம்.—கால்நடைகளின் மேம்பாட்டிற்காக சத்தான தீவனம் மலிவான விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்காகக் கால்நடை தீவன ஆலைகள் சென்னை, ஈரோடு (சித்தோடு), ஆம்பூரில் (ஆம்பூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது) அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலைகளில் 1988—89–ல் 40,965 டன்கள் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது. 1988–89–ம் ஆண்டில் கால்நடை தீவன விற்பனை 41,336 டன்கள் ஆகும்.

7. இவ்விணையம் சத்தான கால்நடை கலப்பு தீவனம் உற்பத்தியை தவிர, தரிசு நிலங்களைப் பச்சை தீவனம் பயிரிடவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. 1988— 89–ம் ஆண்டில் 2,013 ஹெக்டேர் நிலப்பரப்பில் தீவனம் பயிரிடப்பட்டுள்ளது.

பால்விலை :

பால் கொள்முதல் விலை.— பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் பராமரிப்பு செலவு அதிகரித்ததால் கொள்முதல் விலை விவசாயிகளுக்கு அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டது. தற்போது (3— 11— 1988 முதல்) எருமைப்பாலின் கொள்முதல் விலை ஒரு கிலோ கொழுப்பு சத்துக்கு ரூ. 58ம் பசும்பால் ஒரு கிலோ மொத்த சத்துக்கு ரூ. 28ம் ஆக உள்ளது. பால் கொள்முதல் விலையை 88–1989-ம் வருட தொடக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது எருமைப்பால் கொள்முதல் விலை ஒரு கிலோ கொழுப்பு சத்துக்கு ரூ. 50-ம், பசும்பால் ஒரு கிலோ மொத்த சத்துக்கு ரூ. 24-ம் ஆக இருந்தது.

9. விற்பனை விலை.— அதிகப்படியான கொள்முதல் விலையை உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்தாலும், பால் விநியோகம் போக்குவரத்து செலவு மற்றும் பாலிதின் பை விலை அதிகரித்ததாலும், விற்பனை விலையை அவ்வப்போது மாற்றப்பட்டது. பாலிதின் பைகளில் விற்கும் பால் லிட்டர் ஒன்றுக்கு 16—11— 1988 முதல் ரூ. 5.00 ஆகவும் ரொக்கத்திற்கும் ரூ. 5.20 ஆகவும் தானியங்கி நிலையங்களில் விற்கும் பால் ரூ. 4.90 ஆகவும் விற்கப்படுகிறது.

## மீன்வளம்.

தமிழ்நாடு 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையும், 41,412 சதுர கிலோ மீட்டர் கடல்படுநிலத் தொடரையும் பெற்றுள்ளது. 3.7 லட்சம் எக்டேர் நிரந்தர, நீண்ட பருவகால மற்றும் குறுகிய பருவகால நன்னீர் நிலைகளும் உள்ளன. 1988–89-ல் தமிழக கடல் மீன் உற்பத்தி 2.78 லட்சம் உள்நாட்டு மீன் உற்பத்தி 0.82 லட்சம் டன்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளன.

1. தமிழக மீன்துறையின் பிரதான நோக்கங்கள் :

(அ) மீன் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு நியாயமான விலையில் மீன் கிடைக்கச் செய்தல்.

(ஆ) ஏழை மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலைமையை முன்னேற்றுதல்.

1.2. இக்குறிக்கோள்களை அடைய தமிழக மீன்துறை கீழ்க்கண்ட பிரிவில் பெரிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது :—

(1) கடல் மீன்வளம்

(2) உள்நாட்டு மீன்வளம்

(3) கடலோர நீர் உயிரின வளர்ப்பு

(4) மீனவர் மேம்பாட்டிற்கு சமூக பொருளாதாரத் திட்டங்கள்.

2. கடல் மீன்வளம்.—தமிழகத்தின் கடலோரப் பகுதியில் மொத்தம் 50,298 படகுகள், மற்றும் கட்டுமரங்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் 3,647 மரத்தாலான மற்றும் கண்ணாடியிழை இயந்திரப் படகுகளும், 1,304 உள் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளும், 2,258 வெளி இயந்திரம் பொருத்தப்பட்ட

கட்டு மரங்களும், 35,960 கட்டுமரங்களும், 6,917 நாட்டுப் படகுகளும், 212 மாசுலா படகுகளும் அடங்கும். கடல் மீன்பிடிப்பை முறைப்படுத்தவும், மீன் வளத்தைப் பாதுகாக்கவும் தமிழ்நாடு மீன்பிடிப்பு ஒழுங்கு சட்டம், 1983–ல் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

நாட்டுக் கலன்களை இயந்திரமாக்குதல்.— 1988–89 ஆம் ஆண்டில் நாட்டுப் படகுகளை இயந்திரமாக்குவதற்காக 25 சதவீதம் மான்யமாக மாநில அரசு ரூ. 22.50 இலட்சமும் ஒப்பளித்துள்ளது. அத்துடன் மத்திய அரசும் 25 சதவீதம் மானியமாக ரூ. 22.50 இலட்சம் வழங்கி உள்ளது. ஆக மொத்தம் ரூ. 45.00 இலட்சம் இதற்காக செலவிடப்பட்டு வருகிறது.

இத்தொகையில் 28— 2— 1989 வரை 600 வெளி மற்றும் உள்பொருத்தும் இயந்திரங்கள் வாங்க ரூ. 42,68,220 பயன்படுத்தப்பட்டுள்ளது.

கரையேற்றும் படகுகள்.— 1988— 89 ஆம் ஆண்டு மொத்தம் 5 கரையேற்றும் படகுகள் வாங்கி கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வழங்க கடன் தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

படகு தங்குதளம் மற்றும் இறங்குதள வசதிகள்.— மத்திய மற்றும் மாநில அரசு சமபங்கு செலவுடன் தக்க இடங்களில் இயந்திரப் படகுகள் தங்குவதற்கும், அவை பழுதுபார்க்கவும், கரையில் படகுகளில் இருந்து மீன்களை இறக்கவும், பதப்படுத்தவும், எடுத்துச் செல்லவும், வலைகள் பின்னவும் ஏற்ற வகையில் மீன்பிடித் துறைமுகங்கள் படகு தங்குதளங்கள், இறங்கு தளங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாறிலும் மீன்பிடி துறைமுகம் கட்டவும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் மற்றும் தொண்டியில் இறங்கு தளங்கள் அமைக்கவும் அரசு 902.10 இலட்சம் (திருத்திய மதிப்பீடு) அனுமதித்துள்ளது. பழையாறு மீன்பிடித் துறைமுகம் கட்டிமுடித்து நவம்பர் 1986 முதல் செயல்பட்டு வருகிறது. மற்ற இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அடிப்படை வசதிகள்: மீனவர்கள் பிடித்த மீன்களை நல்ல முறையில் கரையில் கையாளவும், அவைகளை தக்கபடி எடுத்துச் செல்லவும், பதப்படுத்தவும் தேவைப்படும் ஆதார வசதிகளான பதனக் கூடங்கள், பணிமனைகள், இணைப்பு சாலைகள், சமூகக் கூடங்கள், ஏலக் கூடங்கள், வலை பழுது பார்க்கும் கூடங்கள், தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் தகுந்த முக்கிய இடங்களில் செய்து தரப்படுகின்றன. இவ் வசதிகள் பழையாறு, தொண்டி, வாலி நோக்கம் ஆகிய இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இது போன்ற அடிப்படை வசதிகளை இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் ரூ. 25 லட்சத்திலும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டத்தில் ரூ. 12.60 இலட்சத்திலும் அமைக்க அரசு அனுமதித்துள்ளது. இச் செலவை மத்திய அரசும் தமிழக அரசும் சமமாக ஏறகும்.

படகு பழுது பார்க்கும் நிலையங்கள்.— இயந்திர மீன்பிடி படகுகளில் இயந்திரங்களைப் பழுது பார்க்க மீன் துறையின் படகு பழுது பார்க்கும் நிலையங்கள் இராமேஸ்வரத்திலும், தூத்துக்குடியிலும் செயல்பட்டு வருகின்றன. மல்லிப்பட்டினத்திலுள்ள நிலையம் அங்குள்ள மீனவ கூட்டுறவு சங்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

வழிக்காட்டி விளக்குகள்.— மீனவர்கள் பாதுகாப்பாக கரை சேர உதவும் வகையில் கரையோர கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க ஒப்பளிக்கப்பட்ட ஐம்பத்தெட்டு கிராமங்களுள் இதுவரை 47 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்பதன அறை.— கிடைத்த மீன்களை கெடாமல் பாதுகாக்கவும், சேமித்து வைக்கவும் இத்துறையின் கட்டுப்பாட்டில் ஐந்து குளிர்பதன அறைகளுடன் கூடிய பனிக்கட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்றும் இரண்டு நிலையங்கள் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

முந்தைய ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட கடலரிப்புத் தடுப்புப் பணிகள் கன்னியாகுமரி, சிதம்பரனார் மாவட்டங்களில் 1989–90-ம் ஆண்டிலும் தொடரும்.

வட சென்னை, எண்ணூர் நெடுஞ்சாலையில் 1988–89-ல் கீழ்க்கண்ட கடலரிப்புத் தடுப்புப் பணிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

| நில அளவை மற்றும் தெற்கில் ஆரம்பித்து அளவு. (1) | | நீளம் (மீட்டரில்) (2) | ஒப்பளிக்கப்பட்ட தொகை (இலட்சத்தில்) (3) |
|---|---|---|---|
| 4/900—5/500 | .. | 600 | 25.00 |
| 5/500—5/650 | .. | 150 | 5.20 |
| 5/650—6/120 | .. | 470 | 19.50 |
| ஐ1. எல். எஸ். 2520—3120 | .. | 600 | 15.90 |
| மொத்தம் | .. | 1,820 | 65.60 |

சங்கு குளிப்பு மற்றும் முத்தெடுத்தல்.—1988–89-ல் சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் சங்கு குளிப்பு 28—10—1988 முதலும் திருச்செந்தூர் தங்கு கடல் சங்கு குளிப்பு 1—2—1989 முதலும் நடைபெற்று வருகின்றது. 3—4—1989 வரை இவ்விடங்களில் கீழ்க்கண்டவாறு சங்குகள் பெறப்பட்டன:—

| | |
|---|---|
| முழு அளவு தரம் 1 (75 மி.மீ. மேல்) | 37,248 |
| முழு அளவு தரம் 2 (64 முதல் 75 மி.மீ. வரை) | 1,96,673 |
| பூச்சி அறித்த சொத்தைச் சங்குகள் | 1,19,572 |
| சிறு அளவு சங்குகள் | 38,654 |
| | 3,92,147 |

இராமநாதபுரம் மாவட்டத்தில் இவ்வாண்டு கன்னிராஜபுரம் சங்கு குளிப்பு 31—10—1988-ல் துவங்கி 25—1—1989-ல் முடிவடைந்தது. இராமேஸ்வரத்தில் 21—3—1989 துவங்கி நடைபெற்று வருகிறது. கன்னிராஜபுரத்தில் கீழ்க்கண்டவாறு சங்குகள் கொள்முதல் செய்யப்பட்டது:—

| | |
|---|---|
| முழு அளவு தரம் 1 (75 மி.மீ. மேல்.) | 2,032 |
| முழு அளவு தரம் 2 (64 முதல் 75 மி.மீ. வரை) | 20,744 |
| சொத்தைச் சங்குகள் | 11,230 |
| சிறு அளவு சங்குகள் | 8,865 |
| | 42,871 |

இயற்கைச் சூழ்நிலை சாதகமின்மையால் இந்த வருடம் முத்துக் குளிப்பு நடைபெறவில்லை.

அண்மைக்கடல் மீன்பிடி மற்றும் அளவாய்வு. சென்னை, கடலூர், மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரியில் உள்ள அண்மைக்கடல் மீன் பிடிப்பு மற்றும் அளவாய்வு நிலையங்கள் 20 பாகம் ஆழ் வரையிலான கடல் பகுதிக்குள் இயந்திரப்படகு மீன் பிடிப்பிற்கேற்ற இடங்களை ஆய்வு செய்தும், நவீன மீன்பிடி முறைகளை செயல்படுத்திக் காட்டியும் வருகின்றன. இந்த ஆய்வுகளின் மூலம் முடிவு எடுக்கப்பட்டு அதனால் ஏற்படும் பலன்களை அவ்வப்போது நமது அண்மைக் கடல் பகுதியில் சிறந்த முறையில் மீன்பிடி நடத்த உதவும் வகையில் மீனவர்களுக்கு விளக்கியும் வருகின்றன.

மீனவர் பயிற்சி.—சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய ஊர்களிலுள்ள மீனவர் பயிற்சி நிலையங்கள் மீனவ இளைஞர்களுக்கு நவீன மீன்பிடி தொழில் நுட்பம், படகு பராமரிப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கின்றன. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 75 உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இந்நிலையங்களில் இவ்வாண்டு 203 மீனவ இளைஞர்கள் பயிற்சி பெற்றார்கள். மேலும் 55 பேர் தூத்துக்குடி, குளச்சல் மற்றும் நாகையில் இளைநிலை கம்மியர் பயிற்சியும் பெற்றுள்ளனர்.

## 3. உள்நாட்டு மீன்வளம்.

உள்நாட்டு மீன்வள மேம்பாடு.—இந்திய மீன்வளச் சட்டம் 1897 சென்னை திருத்தச் சட்டம், 1929 மற்றும் தமிழ்நாடு மீன்பிடி உரிமச் சட்டம் 1972-ன் கீழ் பெரு நீர்த்தேக்கங்கள், ஆறுகள். அரசுடைமையாக்கப்பட்ட நீர்நிலைகளின் மீன்வளம் முறைப்படுத்தப்படுகின்றன.

மீன் குஞ்சு உற்பத்தி.—மீன்துறையின் 10.65 எக்டேர் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாடுகளில் உள்ள 6.22 எக்டேர் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் 14 எக்டேர் பரப்பளவுள்ள பண்ணைகளில் கரு தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு 142.78 மில்லியன் மீன் குஞ்சுகள் மீன்துறை பண்ணைகளிலும், 18.80 மில்லியன் மீன் குஞ்சுகள் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை பண்ணைகளிலும், 69.57 மில்லியன் மீன் குஞ்சுகள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்பட்டன. இது தவிர இத்துறையின் இயற்கை மீன்குஞ்சு சேகரிப்பு தேசிய மீன்விதைப் பண்ணைகள் ஒன்று பவானிசாகரிலும், மற்றொன்று மணிமுத்தாரிலும் ரூ. 180 லட்சம் செலவில்

கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் பவானிசாகர் பண்ணையில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. வேலூர், சாத்தனூர், விழுப்புரம், சிதம்பரம் மற்றும் திருமங்கலம் ஆகிய இடங்களில் மிதக்கும் கூண்டுகளில் மீன்குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன.

பெருநீர்த்தேக்க மீன்வளம்.—தமிழகத்திலுள்ள 50 பெரும் நீர்த்தேக்கங்களில் எட்டு நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு வணிக ரீதியில் மீன் பிடிப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. நீர்த்தேக்கங்களில் விரைவில் வளரக் கூடிய தரமான மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் மற்றும் மீன்பிடிப்பை மீன்துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மேட்டூர் போன்ற சில நீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமை சீட்டு வழங்குவதும் நடைமுறையில் உள்ளது. இந்த ஆண்டு மொத்தத்தில் 224.962 லட்சம் மீன் குஞ்சுகள் நீர்நிலைகளில் இருப்பு செய்யப்பட்டு 2,023 டன்கள் அளவில் மீன் பிடிக்கப்பட்டன.

தீவிர உள்நாட்டு மீன் உற்பத்தி மற்றும் விற்பனை. மதுரை மாவட்டத்தில் 10,700.30 எக்டேர் மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தில் 22,651 எக்டேர் பரப்பளவுள்ள பாசன நீர் நிலைகளில் தீவிர மீன் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த நீர் நிலைகளில் இந்த ஆண்டு மொத்தம் 220 டன்கள் மீன் பிடிக்கப்பட்டது.

மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்.—தமிழகத்தில் தற்போதுள்ள 13 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுள் 11 மத்திய அரசு நிதி உதவியுடனும், 2 முழுவதும் மாநில அரசு நிதியுடனும் மீன் உற்பத்தி அதிகரிக்க செயல்பட்டு வருகின்றன. 4,065.5 எக்டேர் பரப்பளவுள்ள நீர் நிலைகள் உள்ள குளங்கள் மீன் வளர்ப்பிற்காக 4,413 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. 1988–87-ம் ஆண்டு இம்முகமைக் குளங்களில் சுமார் ரூ. 177.81 லட்சம் மதிப்புள்ள 2,245 டன் மீன்கள் பிடிக்கப்பட்டன.

## 4. உவர் நீர் மீன்வள மேம்பாடு.

தமிழகத்தில் 56,000 எக்டேர் அளவு உவர் நீர் பரப்புள்ளது. இரால் வளர்ப்பு நுணுக்கத்தை எடுத்துக் கூறவும், தனியார்களை இரால் வளர்ப்பில் ஈடுபடச் செய்யவும், கடலோரப் பகுதிகளில் ஒவ்வொன்றும் ஒரு எக்டேர் பரப்புள்ள ஒன்பது மாதிரி இரால் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர கிள்ளையில் ஒரு 5 எக்டேர் இரால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து பண்ணைகளிலும் 1988–89 இலக்கான 8 டன்களில் 8.066 டன் இரால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

5. மீனவ சமூகப் பொருளாதார மேம்பாடு கூட்டுறவு மூலம் மேம்பாடு. — தமிழகத்தில் சுமார் 4.80 லட்சம் கடல் மீனவர்களும் 1.55 லட்சம் உள்நாட்டு மீனவர்களும் உள்ளனர். இதில் முழுநேர கடல் மீன்பிடிப்பில் 1.05 லட்சம் பேரும், உள்நாட்டு மீன் பிடித் தொழிலில் சுமார் 0.28 லட்சம் மக்களும் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு சமூக நல திட்டங்களை நிறைவேற்ற 307 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்களும், 249 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களும் 46 மீனவ மகளிர் கூட்டுறவு சம்மேளனங்களும், 5 இரால் வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களும், ஒரு படகு கட்டும் சங்கமும், 16 மீன் விற்பனை சங்கங்களும் உள்ளன. மொத்தத்தில் 31–3–1989 வரை 634 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 1,42,418 மீனவ அங்கத்தினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழக உதவி.—கடன் மற்றும் மான்யம் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்தின் மூலமும், படகு மற்றும் உபகரணங்கள் வாங்கிட மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. 1988–89-ம் ஆண்டு 36.26 லட்சம் 6 மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 468 லட்சம் ரூபாய் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

பங்கு மூலதனக் கடன்.—இந்த ஆண்டு ரூ. 5 லட்சம் பங்கு மூலதனக் கடனாக மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

நாட்டுப் படகு மீனவர்களுக்கு நைலான் வலைகள் விநியோகம். 1981–82 முதல் 1987–88 முடிய ரூ. 8 லட்சம் மதிப்புள்ள நைலான் வலைகள் ஒவ்வொரு ஆண்டிற்கும் 20 சதவிகிதம் மான்யமும் 80 சதவிகிதம் வங்கிக் கடனும் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. மீனவர்களிடமிருந்து இந்தக் கடன் மிக குறைந்த அளவே வசூல் ஆவதால் அரசு இத்திட்டத்தை 1988–89 முதல் கீழ்க்கண்டவாறு திருத்தியுள்ளது :—

மீனவர்களின் பங்கு 20 சதவிகிதம்

வங்கிக் கடன் 60 சதவிகிதம்

மான்யம் 20 சதவிகிதம் (ஒரு மீனவருக்கு அதிகப்பட்சம் ரூபாய் 500 வரை).

1988–89ஆம் ஆண்டிற்கு 20 சதவிகிதம் மான்யமாக ரூ. 1.60 லட்சம் அரசு ஒப்பளித்துள்ளது. இதன்படி 320 மீனவர்கள் பயனடைந்தனர்.

பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் 1988–89-ல் ரூ. 5.00 இலட்சத்தை மான்யமாக வழங்க அரசு அனுமதித்துள்ளது. இதனால் 1,000 மீனவர்கள் பயனடைவர்.

. மீனவர் கூட்டு காப்புறுதித் திட்டம்.—இத்திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. தொழில் செய்யும்போது விபத்தில் இறந்து போகும் மீனவர் குடும்பத்திற்கு ரூ. 15,000-மும், ஊனமுற்றோருக்கு ரூ.7,500–ம் வழங்கப்படுகிறது.

மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி.—மீன்பிடிப்பு குறைவான காலத்தில் மீனவர்களின் சிரமத்தைப் போக்கிட அரசு, தமிழ்நாடு கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி என்னும் நிதியை உருவாக்கியுள்ளது. 1988–89–ஆம் ஆண்டு மொத்தம் 51,672 மீனவர் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைந்துள்ளனர். அவர்களுக்கு அரசின் பங்காக ரூ. 45,17,660 வழங்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் சாலை வசதி .—மீனவர் இலவச வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட 12,090 வீடுகளில் இதுவரை 11,517 வீடுகள் கட்டி வழங்கப் பட்டுள்ளன. 1988–89-ம் ஆண்டில் மட்டும் 573 வீடுகள் கட்டி இலவசமாக வழங்கப் பட்டுள்ளன. இது தவிர இணைப்பு சாலைகள், சுகாதார வசதிகள், மின் இணைப்பு கள், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளும் மீனவ குடியிருப்புகளுக்கு படிப்படியாகச் செய்யப்பட்டு வருகின்றன.

நெல்லை–கட்ட பொம்மன் மாவட்டம் கூடுதாழை கிராமத்தில் மணல்மேடு அகற்றல்.—நெல்லை–கட்ட பொம்மன் மாவட்டத்தில் கூடுதாழை கிராமம் தென் மேற்கு பருவக் காற்று அரபிக் கடலினைக் கடந்து மேற்கு மலைத் தொடரின் ஊடே வரும்போதும், தென்மேற்கு பருவக்காற்று இலங்கை தரைப் பகுதியின் மேல் வருவ தாலும், மணல்மேடு உண்டாகி பாதிக்கப்படுகிறது. ரூ. 4.00 லட்சம் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்விற்காகவும், மணல் மேடுகளை அகற்றவும் ஒப்பளிக்கப் பட்டுள்ளது.

இப் பணி நெல்லை–கட்ட பொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவரால் வெற்றிகர மாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மீனவ மகளிர் விரிவாக்கத் திட்டம்.—இம்மாநிலத்தில் மொத்தம் 46 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள், 650 அங்கத்தினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்களுக்கு நிர்வாக உதவி மற்றும் சங்க மூலதனக் கடன் உதவி வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மீன் விற்பனை, வலை பின்னுதல், சிறுசேமிப்பு, தையல், நியாய விலைக்கடைகள், வலை பின்னுதல் குழந்தை காப்பகங்கள், வயது வந்தோர் கல்வி, சுகாதார நிலையங்கள் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் மீனவ மகளிர் வருமானத்தைப் பெருக்குவதுடன் அவர்களது சமூக பொருளாதார நிலையையும், கல்வி அறிவையும் உயர்த்த உதவுகிறது.

## அத்தியாயம் 5

### வணிகவரி மற்றும் அறநிலையத் துறை

### வணிக வரிகள்.

இத்துறை 1988–89 ஆண்டிலும் கீழ்க்கண்ட சட்டங்களைத் தொடர்ந்து நிர்வாகம் செய்தது :—

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959.

(ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் 1970.

(இ) தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் 1971.

(ஈ) மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956.

(உ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் 1939.

(ஊ) தமிழ்நாடு உள்ளாட்சி நிர்வாக நிதிச்சட்டம் 1961.

(எ) தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம் 1935.

(ஏ) தமிழ்நாடு ஆடம்பர விடுதிகள் மற்றும் தங்கும் இல்லங்கள் மீதான வரிச் சட்டம் 1981.

(ஐ) தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம் 1983.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959.—தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 1987–88-இல் 2,66,709 ஆக இருந்த பதிவு பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 1988–89-ல் 2,51,324-ஆகக் குறைந்துள்ளது. மேலும் 1987–88–ல் 1,57,975-ஆக இருந்த வரி விதிப்புக்குட்பட்ட வணிகர்களின் எண்ணிக்கை 1988–89-ல் 1,28,012 ஆகக் குறைந்துள்ளது.

தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் 1970.—கூடுதல் வரி விகிதம் 1.25 சத விகிதம் விழுக்காடுகள் என்ற அளவில் ரூ. 10 லட்சம் முதல் 40 லட்சம் வரையிலான விற்பனைத் தொகையின் மீதும், ரூ. 40 இலட்சத்திற்கு மேற்பட்ட விற்பனை தொகையின் மீது 1.50 விழுக்காடுகள் என்ற அளவிலும் விதிக்கப்பட்டு வருகிறது. இச் சட்டம் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-க்குத் துணைச் சட்டமாகும்.

தமிழ்நாடு உபரி வரிச் சட்டம் 1971.—இச் சட்டத்தின்கீழ் முதன் முதலாக சென்னை நகரத்தில் செலுத்தப்படும் விற்பனை வரியின் மீது 5 விழுக்காடுகள் என்ற அளவிலும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய நகரங்களிலும் மற்றும் அதனைச் சார்ந்த புறநகர்ப் பிரிவுகளிலும் அமுல்படுத்துவதோடு நகராட்சி ஆகிய இடங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இச் சட்டம் 1981-ன்கீழ் கூடுதல் உபரி வரி 5 விழுக்காடு என்ற அளவில் முதன் முதலில் சென்னை மற்றும் அதனையொட்டி 32 கிலோ மீட்டருக்குள் வரும் புறநகர் பகுதிகளிலும் 10—6—1981 முதல் அமுலில் உள்ளது. இச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப் படும் தொகையின் 65 விழுக்காடு சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்படுகிறது.

மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956.— இச் சட்டம் மாநிலங்களுக்கிடையேயான வியாபாரம் மற்றும் வாணிகத்தின் மீது விதிக்கப்படும் வரியை ஒட்டியதாகும். 1987–88-ல் இச் சட்டத்தின்கீழ், 1,21,340 ஆக இருந்த பதிவு பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 1988–89-ல் 1,61,749 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் 1939 (மற்றும்) உள்ளாட்சி நிறுவன நிதிச் சட்டம் 1961.— இவ்விரு சட்டங்களும் திரையரங்குகள் (மற்றும்) குதிரைப் பந்தையங்கள் நுழைவு கட்டணத்தின் மேலான வரிவிதியை முறைப்படுத்துகின்றன. தமிழ்நாடு உள்ளாட்சி நிதி நிறுவன சட்டம் (நகராட்சிகள், மாநகராட்சிகள், ஊராட்சிகள்) ஆகிய இடங்களில் தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் மேல் வரி விதிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் பெரும்பான்மையான வருவாயும் உள்ளாட்சி நிதி சட்டத்தின்கீழ் வரும் முழுவதும் மேலே சொல்லப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

தமிழ்நாடு பந்தைய வரிச் சட்டம் 1935.—சென்னை மற்றும் உதகை ஆகிய நகரங்களில் குதிரைப் பந்தயம் நடைபெற்று வருகிறது. மேலும் பெங்களூர், பம்பாய், கல்கத்தா மற்றும் ஐதராபாத் ஆகிய நகரங்களில் நடைபெற்று வரும் குதிரைப் பந்தையங்கள் மீதான நிகழ்விட பந்தையங்கள் நடைபெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆடம்பர விடுதிகள் மற்றும் தங்கும் இல்லங்கள் மீதான வரி விதிப்பு சட்டம் 1981.—இச் சட்டத்தின்கீழ் உணவு விடுதிகள் மற்றும் தங்கும் இல்லங்கள் அளிக்கும் ஆடம்பரத்தின் மீது வரி விதிக்கப்படுகிறது.

தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம் :—திரையரங்குகளில் காண்பிக்கப்படும் விளம்பரப் படம் மற்றும் விளம்பர ஸ்லைடுகளின் மீதும் வரி விதிப்பதற்கு இச் சட்டம் வகை செய்கிறது.

தணிக்கைச் சாவடிகள் :—இம்மாநிலத்தில் உள்ளேயேயும் மற்றும் அதன் எல்லைப் புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. மொத்த தணிக்கைச் சாவடிகளின் எண்ணிக்கை 48.

பல்வேறுப்பட்ட வணிகவரி சட்டங்களின் வருவாய் விவரம் பின்வருமாறு :

| (1) | ரூபாய் (இலட்சத்தில்) (2) |
|---|---|
| 1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் அதனையொட்டிய சட்டங்கள் .. .. .. .. | 1,21,885.51 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956 .. .. .. | 21,300.25 |
| 3. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் 1939 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவன நிதிச் சட்டம் 1961 .. | 6,321.13<br>471. 97 |
| 4. தமிழ்நாடு பந்தைய வரிச் சட்டம் .. .. .. | 471.97 |
| 5. தமிழ்நாடு ஆடம்பர விடுதிகள் மற்றும் தங்கும் இல்லங்கள் மீதான வரி விதிப்பு சட்டம் 1981 .. .. | 286.79 |
| 6. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம் .. .. | 7.44 |
| மொத்தம் | 1,50,273.09 |

## இந்து சமய அறநிலைய நிர்வாகம்.

அறநிலையங்கள், அதாவது, திருக்கோயில், மடம், மற்றும் அவைகளைச் சார்ந்த குறிப்பிட்ட கட்டளைகள், தவிர, அறக்கட்டளைகள் மற்றும் ஜெயின் அறநிலையங்கள் சட்டப்படி அறிவிப்பு செய்யப்பட்டவை. நிர்வாகம் தமிழ்நாடு சட்டம் 22 1959-ன்படியும், அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதியின் படியும் நடத்தப்படுகிறது.

அறங்காவலர்களும் மற்றும் செயல் அலுவலர்களும் அறநிலையங்கள் அன்றாட நிர்வாகத்தை பொறுப்பு வகிக்கின்றனர். தமிழ்நாட்டில், 35,150 அறநிலையங்கள், அறக்கட்டளைகள் மற்றும் ஜெயின் திருக்கோயில்கள் உள்ளன. சட்டப்படி உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு இவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய ஆண்டு வருமானம் ரூ. 32.24 கோடி.

இந்த அற நிலையங்களுக்கான இனம் வாரியான விவரம் இதனடியில் கொடுக்கப்படுகிறது :—

| (1) | (2) |
|---|---|
| (1) திருக்கோயில் .. | 33,112 |
| (2) மடம் .. | 56 |
| (3) மடத்தைச் சார்ந்த திருக்கோயில் | 55 |
| (4) குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| (5) அறக்கட்டளைகள் | 189 |
| (6) ஜெயின் நிறுவனங்கள் .. .. | 17 |
| மொத்தம் | 35,150 |

இலாகா நிதி (வரவு-செலவு). — இலாகா வரவினங்கள், திருக்கோயில்களிலிருந்து 3 முதல் 14 சதவீதம் வரை வருமானத்திலிருந்து பெறப்படும் உதவித் தொகை, தணிக்கைக் கட்டணம் தவிர சென்டேஜ் கட்டணம், செயல் அலுவலர் சம்பளம் திரும்பப்பெறல் மற்றும் கோர்ட்டுச் செலவு வசூல் ஆகியவைகளும் அடங்கியவை.

இலாகாச் செலவுகள் அரசால் முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படும் அறநிலைய நிதிக் கணக்கில் செலவு எழுதப்படுகிறது. மேற்கண்ட வசூல் தொகை வரவு வைக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் மொத்த வரவு ரூ. 3,99,50,187.16 மற்றும் மொத்தச் செலவு ரூ. 4,71,82,548.32. இது போலவே முந்திய ஆண்டுகளிலும் வரவு குறைவாகவும் செலவு அதிகமாகவும் இருந்து வந்ததால் இந்தக் கணக்கில் சுமார் ரூ. 8.45 கோடி பற்றாக்குறையில் இருந்து வருகிறது.

மராமத்து மற்றும் அறநிலையங்கள் திருப்பணி.— இத்துறை, ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்ற பழைய திருக்கோயில்களைப் பழுது பார்ப்பதை முக்கியமாகக் கவனிக்கிறது. கும்பாபிஷேகம். மேற்படி திருக்கோயில்களில் நடைபெறவும் ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஆண்டில், 63 திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. 4.05 கோடி செலவில் 343 வேலைகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளது. இந்த காலத்தில், 616 வேலைகள் ரூ. 1.94 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. தவிர, 28 பெரிய திருப்பணி வேலைகள் ரூ. 4.05 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த காலத்தில், 51 திருக்கோயில்களுக்கு, அரசு மானியம் ரூ. 35 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஆணையர் பொது நல நிதியிலிருந்து 8 திருக்கோயில்களுக்கு மொத்தம் ரூ. 1.22 இலட்சம் திருப்பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கிராமக் கோயில் திருப்பணியிலும் இத்துறை பின் தங்கவில்லை. இந்த ஆண்டு 262 கிராமக் கோயில்கள் ரூ. 10,000 வீதமும், 2 கோயில்கள் ரூ. 5,000 வீதமும் மொத்தம் ரூ. 26.34 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, இதற்கென பழநி திருக்கோயிலில் நிர்வகிக்கப்படும் ஒரு கோடி அளவிலான நிதியின் வட்டியிலிருந்து வழங்கப்பட்டது.

நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள் பாதுகாப்பு நடவடிக்கை.— திருக்கோயில்களின், சிலைகள், நகைகள் மற்றும் பொக்கிஷங்களை பாதுகாப்பில் இத்துறை மிக்க கவனம் செலுத்தி வருகிறது. ஓய்வு பெற்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் இவைகள் பாதுகாப்பது குறித்து ஆலோசனை வழங்க, அரசால் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த ஆண்டு, இந்தக் குழு 22 திருக்கோயில்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்து, அவை கொடுத்த ஆலோசனை நடைமுறைபடுத்தப்பட்டது. பழம் பொருள் மற்றும் பொக்கிஷங்கள் சட்டம் 1972-ன் கீழ் இந்த ஆண்டு மொத்தம் 20,970 சிலைகள் பதிவு செய்யப்பட்டன. இவைகள் 2,010 திருக்கோயில்கள் சம்பந்தப்பட்டவை. தவிர, 3,722 திருக்கோயில்களிலுள்ள விக்கிரங்களின் புகைப்படங்கள் தொகுப்பு தயாரிக்கப்பட்டன. பெரிய திருக்கோயில்களில் "பர்க்கலர் அலாரம்" வைக்கப்பட்டன. கிராமங்களில் உஷார் பிரிவு விக்கிரக திருட்டைத் தவிர்க்க ஏற்படுத்தப்பட்டன.

நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள் மதிப்பீடு :— இந்த காலத்தில் 422 திருக்கோயில்களின் நகைகள் முதல் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டது. 129 திருக்கோயில்கள் நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள் துணை மதிப்பீடு செய்யப்பட்டன. மற்றும் 196 திருக்கோயில்கள் சம்பந்தப்பட்டவை மறு மதிப்பீடு செய்யப்பட்டன.

ஒரு கால பூஜைத்திட்டம். — 1984 ஆம் ஆண்டு, 5 கோடி வைப்பு நிதியைக் கொண்ட திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின், நோக்கம், ஒரு கால பூஜை கூட நடத்த முடியாத திருக்கோயில்களுக்கு, பூஜைக்கு நிதி உதவுவது மற்றும் ஒரு கோடி நிதி ஒன்றும் திருக்கோயில் பணியாளர்களின் சம்பளம் பாக்கிக்கு உதவி நிறுவப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில், ரூ. 19.12 இலட்சம் 765 திருக்கோயில்களுக்கு கணக்கு ஒரு கால பூஜைக்கு நிதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 25,000 வீதம் 12 கோயில்களில் பூஜைக்கு வைப்பு நிதியும் வைக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள். —28.48 இலட்சம் ரூபாய், 952 கோயில்களில் பணிபுரியும் 2,380 திருக்கோயில் சிப்பந்திகள் சம்பளப் பாக்கியினைக் கொடுப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, ஊழியர் நலத்திற்கென உள்ள ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியிலிருந்து பெறப்பட்டதாகும்.

திருக்கோயில் பணியாளர்கள். — மாநிலத்தில், 47,776 திருக்கோயில் பணியாளர்கள் உள்ளனர். 1987 ஆம் ஆண்டு, இந்த திருக்கோயில் பணியாளர்கள் பயனடைய குடும்பநல திட்டம் ஒன்று அமல்படுத்தப்பட்டது. அதன்படி, இறந்த பணியாளர் குடும்பத்துக்கு ரூ. 10,000 பட்டுவாடா செய்யப்படும். இந்த ஆண்டு திருக்கோயில் பணியாளர்கள் குடும்பங்கள் இதனால் பயனடைந்தன.

ஓதுவார் ஓய்வூதியம்.—இந்த ஆண்டு ஓதுவார் ஓய்வூதியத் திட்டம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஓதுவாருக்கும் ஓய்வூதியமாக மாதம் ரூ.250 அனுமதிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, மொத்தம் 95 ஓதுவார்கள் இதனால் பயனடைந்துள்ளனர்.

பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்யாண மண்டபங்கள்.—திருக்கோயில்கள், மத வழிபாட்டு இடங்களாக மட்டும் இல்லாமல், வழிபடும் பெருமக்கள் சமூக சேவை தேவைகளுக்கும் பயன்படும் வகையில், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், கல்யாண மண்டபங்கள், வைத்தியசாலைகள் போன்ற சமூக சேவை நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றன. இவைகளில் இனவாரியான விவரங்கள் பின் வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) கல்லூரிகள் | 8 |
| (2) மேல்நிலைப் பள்ளிகள் | 5 |
| (3) உயர்நிலைப் பள்ளிகள் | 15 |
| (4) நடுநிலைப் பள்ளிகள் | 5 |
| (5) ஆரம்பப் பள்ளிகள் | 3 |
| (6) மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் | 1 |
| (7) வேத ஆகமப் பாடசாலைகள் | 6 |
| (8) வேத பாடசாலைகள் | 7 |
| (9) நாதஸ்வரம், தவில் பள்ளிகள் | 3 |
| (10) அனாதை இல்லங்கள் | 41 |
| (11) சித்த வைத்தியசாலைகள் | 19 |
| (12) மியூசியம் ... | 1 |

விசேஷ பூஜை மற்றும் சமபந்தி போஜனம்.—ஒவ்வொரு ஆண்டும், சுதந்திரத் தினத்தன்று, தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களில் விசேஷ பூஜை மற்றும் சமபந்தி போஜனம் நடத்தப்படுகின்றது. அம்மாதிரி இந்த ஆண்டும் முதல் தடவையாக 'அண்ணா நினைவு நாள்' அதாவது 3–2–1989-ல் மேற்கண்ட விசேஷ பூஜை மற்றும் சமபந்தி போஜனம் நடத்தப்பட்டது. விசேஷ பூஜை மற்றும் சமபந்தி விருந்து நடத்தப்பட்ட திருக்கோயில் விவரங்கள், செலவுகள் போன்றவை இதனடியில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| (1) | 15-8-1988 சுதந்திரத் தினச் செலவு விவரம். (2) | 3-2-1989-ல் 'அண்ணா நினைவு நாள்' செலவு விவரம். (3) |
|---|---|---|
| 1. பொது விருந்து நடைபெற்ற ஆலயங்கள் | 1,335 | 723 |
| 2. பொது விருந்தில் கலந்து கொண்டு ஆதிதிராவிட வகுப்பினர். | 2,98,928 | 1,49,515 |
| 3. பொது விருந்தில் கலந்து கொண்ட இதர வகுப்பினர். | 2,36,529 | 1,49,463 |
| 4. பொது விருந்தில் கலந்து கொண்ட மொத்த நபர்கள். | 5,35,457 | 2,98,978 |
| 5. பொது விருந்துகளில் ஏற்பட்ட மொத்தச் செலவுகள் | 12.80 இலட்சம். | 7.85 இலட்சம். |

திருக்கோயில்.—இத்துறை, "திருக்கோயில்" என்கிற மாத வெளியீடு பிரசுரம் செய்கிறது. இதன் விலை ரூ. 3/— எல்லா பெரிய திருக்கோயில்களிலும் இந்த வெளியீடு வழிபடும் பொது மக்கள் படிக்கும் பொருட்டு, அனுப்பப்படுகிறது.

ஆவணப் பதிவு மற்றும் சீட்டு நிதி

## (1) ஆவணப்பதிவு.

1. தலைமை முத்திரை வருவாய்க் கட்டுப்பாடு அதிகாரி.— பதிவுத் துறைத் தலைவர் அறிக்கை காலத்தில் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியாக பணி யாற்றினார். முதன்மை வருவாய் கட்டுப்பாடு அதிகாரியாக இக்காலத்தில் 170 மேல் முறையீடுகள் பெறப்பட்டு 104 வழக்குகளின் மீது இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 56(1)-ன் படிஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றத்தில் ஆணை கோரப் பட்ட வழக்குகள் எதுவும் இல்லை.

2. முத்திரைத் தீர்வை மூலம் வருவாய்.—(அ) உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மிகுவரி உட்பட 1987-88-ல் ரூ. 143-08 கோடியாக இருந்த பதிவான ஆவணங்கள் மீது செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை அறிக்கை காலத்தில் 1988-89ல் ரூ. 176.43 கோடியாக உயர்ந்துள்ளது.

இத்தொகையில் ரூ. 49.77 கோடி மிகுவரியாக வசூலிக்கப்பட்டது.

3. புள்ளி விவரங்கள்.— பதிவுகள்— அறிக்கைக்கு முந்திய காலத்திற்கு 10,50,728 இல் இருந்த ஆவணங்களின் பதிவு எண்ணிக்கை, அறிக்கை காலத்தில் 10,36,671 ஆக குறைந்துள்ளது.

4. ஆவண வகைகள்.— பதிவுச் சட்டத்தின்கீழ் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை 9,07,860-லிருந்து 9,44,182 ஆக அதிகரித் துள்ளது. அறிக்கை காலத்தில் குறிப்பிடத்தக்க அல்லது புதுமையான ஆவணங்கள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

5. உயில் மற்றும் தத்து ஆவணங்கள்:— அறிக்கைக் காலத்தில் பதிவான உயில் களின் எண்ணிக்கை 24,072. கடந்த ஆண்டில் இவ்வெண்ணிக்கை 25,676.

அறிக்கைக் காலத்தில் பதிவான தத்து ஆவணங்களின் எண்ணிக்கை 724. இது கடந்த ஆண்டில் 39.

அறிக்கைக் காலத்தில்391 உயில்களடங்கிய உறைகள் பாதுகாப்புக்குத் தாக்கல் செய்யப்பட்டன. கடந்த ஆண்டில் இவ்வெண்ணிக்கை 240.

6. பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சொத்து மதிப்பு.— இக்காலத்தில் பதி வான ஆவணங்களின் மொத்தச் சொத்து மதிப்பு ரூ. 2,294.28 கோடியாகும். சென்ற ஆண்டில் இது 2,776.93 கோடி.

அறிக்கைக்காலத்தில் பதிவான ஒரு ஆவண சொத்தின் சராசரி மதிப்பு ரூ.73,705.25-லிருந்து ரூ. 86,405.60 ஆக உயர்ந்துள்ளது.

அறிக்கை காலத்தில் பதிவான ஒரு ஆவணத்தின் சராசரிப் பதிவுக் கட்டணம் ரூ. 262.55. சென்ற ஆண்டில் ரூ. 204.25.

7. தேடுதல்களும் நகல்களும்.— அறிக்கை காலத்தில் வில்லங்கச் சான்றுக்கான மனுக்களின் எண்ணிக்கை 5,85,078. சென்ற ஆண்டில் 6,92,930.

அறிக்கைக்காலத்தில் தனித்தேடுதல் மனுக்களின் எண்ணிக்கை 1,49,481. சென்ற ஆண்டில் 1,70,723.

அறிக்கைக் காலத்தில் நகல் மனுக்களின் எண்ணிக்கை 1,56,768.சென்ற ஆண்டில் 1,68,937.

அறிக்கைக் காலத்தில் பலவகை தேடுதல் மனுக்களின் எண்ணிக்கை 15,526 சென்ற ஆண்டில் 12,383.

அறிக்கைக் காலத்தில் பலவகை நகல் மனுக்களின் எண்ணிக்கை 8,128. சென்ற ஆண்டில் 12,311.

8. கூட்டுறவு சங்கங்கள், நிலவள வங்கிகள் மற்றும் வணிக வங்கிகளுக்காக ஆற்றிய பணிகள்.— அறிக்கை காலத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கும், நிலவள வங்கிகளுக்கும் இத்துறை ஆற்றிய பணிகளுக்காக ஈடு செய்யப்பட்ட தொகை ரூ. 16.40 லட்சங்கள், சென்ற ஆண்டில் ஈடு செய்யப்பட்ட தொகை ரூ. 20.59 லட்சங்கள்.

வணிக வங்கிகளுக்காக ஆற்றிய பணிக்கென ரூ. 14,418.50. சென்ற ஆண்டில் ரூ. 1.89 லட்சம்.

9. வருமானம்.— அறிக்கை காலத்தில் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 19.01 லட்சம், சென்ற ஆண்டில் ரூ. 22. லட்சம்.

அறிக்கை காலத்தில் வருமான தேடுதல் கட்டணம் ரூ. 180.78 லட்சம். சென்ற ஆண்டில் 168.52 லட்சம்.

அறிக்கை காலத்தில் வருமான நகல் கட்டணம் ரூ. 16.62 லட்சங்கள், சென்ற ஆண்டில் ரூ. 17.18 லட்சம்.

அறிக்கை காலத்தில் பதிவுச் சட்டப்படி இதர இனங்களுக்காக வசூலான தொகை ரூ. 184.48 லட்சம். சென்ற ஆண்டில் ரூ. 119.16 லட்சம்.

அறிக்கை ஆண்டில் இத்துறையின் மொத்த வருமானம் ரூ. 22.81 கோடி. சென்ற ஆண்டில் ரூ. 24.42 கோடி.

## (ii) சீட்டுநிதி

1982-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டம் மைய சட்டம் 40/1982 13-4-1984 முதல் தமிழ்நாடு பூராவிலும் நடைமுறையில் இருந்து வருகிறது. மேற்படி சட்டப் பிரிவு 90 (2)-ன்படி 1961-ம் ஆண்டு தமிழ்நாடு சீட்டுநிதிச் சட்டப்படி நடைமுறையில் உள்ள சீட்டுகள், அவைகள் முடிவுபெறும்வரை தொடர புதிய சீட்டுநிதிகள் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. 1961-ம் ஆண்டு தமிழ்நாடு சீட்டுநிதிச்சட்டப்படி பதிவு செய்யப்பட்ட சீட்டுகள் நடைமுறையிலுள்ளன. 1975-ம் ஆண்டு 14-ம் எண்ணுள்ள சட்டத்தால் பிரிவு 12 திருத்தப்பட்டதால் சீட்டு நடத்துபவரின் பிணையத் தொகை பணமாக கருவூலத்தில் பாதுகாப்பில் வைக்க வகை செய்யப்பட்டது. இத்திருத்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுக்கள் 6-12-1976-ல் சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் சீட்டு நடத்துபவர்கள் மேல்முறையீடு இந்திய உச்ச நீதிமன்றத்திலும் பலர் சென்னை உயர்நீதிமன்றத்திலும் நீதிப்பேராணை மனுக்கள் கோர்வை செய்து இந்த திருத்தத்திற்கு தடை உத்திரவு பெற்றுள்ளனர். இவ்வாறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட 1,357 நீதிப்பேராணை மனுக்கள் தற்போது நிலுவையிலுள்ளது.

3. கட்டண உயர்வு :

பதிவுத்துறை அலுவலக கடித எண். 60311/ஏ1/80, நாள் 5-9-1980-ல் அனுப்பப்பட்ட செயற்குறிப்பை ஏற்று அரசு சீராய்வு செய்து செலுத்தவேண்டிய கட்டணம் பற்றி ஆணை பிறப்பித்துள்ளது. (அ.ஆ.ப.வ. எண். 1073/வ.வ.ம.அ.நி., துறை நாள் 23-9-1987). இக்கட்டண மதிப்பை எதிர்த்து 71 சீட்டு நடத்துபவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர்.

நீதிப்பேராணை எண். 9471/82 மற்றும் 43 அணிகள் ஆக 84 வழக்குகள் குறித்த சென்னை உயர்நீதிமன்றத்தில் 20-3-1985 நாளைய தீர்ப்பில் 1964-ம் ஆண்டு சீட்டுநிதிகள் விதிகள் இணைப்பு 11 விதிமுறைகள் 1,8ஏ ஆகியவற்றிற்குத் திருத்திய கட்டண விகிதம் செல்லாது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்ப்பாணை மீது முறையீடு செய்ய டெல்லி உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுகோர்வை செய்யவும் அவ்வாணை குறித்த தடையாணை பெற மனுவும் டெல்லி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. 1961-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டம் மற்றும் 1982ஆம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டத்தின்கீழ் பணிவிபரம் அட்டவணை 1 முதல் 6-ல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 1.

1961-ம் ஆண்டு தமிழ்நாடு சீட்டுநிதிச்சட்டத்தின்கீழ் பணிவிபரம்.

| பொருள். (1) | 1988–89 தமிழ்நாடு சீட்டுநிதிச் சட்டம். (2) |
|---|---|
| 1. சீட்டுகள். | |
| அ. வருட ஆரம்பத்தில் நடப்பிலுள்ள சீட்டுகளின் எண்ணிக்கை. | 1,094 |
| ஆ. இவ்வாண்டில் துவங்கப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை | [illegible] |
| இ. முடிக்கப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை .. .. .. .. .. .. | [illegible] |
| ஈ. வருட முடிவில் நடைமுறையிலுள்ள சீட்டுகளின் எண்ணிக்கை .. .. .. .. .. .. | [illegible] |

உ. வருட முடிவில் நடப்பிலுள்ள சீட்டுகளின் மொத்த தொகை .. .. .. .. .. .. 1,29,00,254

ஊ. வருட முடிவில் சீட்டுப் பதிவாளரிடம் உள்ள மொத்த பிணையம் .. .. .. .. .. .. 1,40,89,556

2. துணை விதிகள்.

அ. இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்ட துணை விதிகளின் எண்ணிக்கை .. .. .. .. .. ..

ஆ. பதிவு செய்யப்பட்ட துணை விதி திருத்தங்களின் எண்ணிக்கை .. .. .. .. .. ..

இ. பதிவு செய்யப்பட்ட சீட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ..

ஈ. பிணையத்தொகை செலுத்துவதற்கு பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை .. .. .. .. ..

உ. இவ்வருடத்தில் வழங்கப்பட்ட துவக்கச் சான்றுகளின் எண்ணிக்கை .. .. .. .. .. ..

ஊ. சட்டரீதியாக கோர்வை செய்யப்பட வேண்டிய இதர ஆவணங்கள் .. .. .. .. .. .. 1,434

3. ஆய்வு.

அ. சீட்டுநடத்துபவரின் பதிவேடுகளை பிரிவு 37-ன் கீழ் ஆய்வு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை .. .. 145

ஆ. ஆய்வு செய்யப்பட்ட சீட்டு கணக்குகளின் எண்ணிக்கை (பிரிவு 51) .. .. .. .. .. .. 167

4. தணிக்கை.

அ. தணிக்கை செய்யப்பட்டு கோர்வை செய்யப்பட்ட ஐந்தொகை தாட்களின் எண்ணிக்கை .. .. .. 371

ஆ. மேலே கண்ட (அ)-ல் சீட்டுத்தணிக்கையாளரால் ஆய்வு செய்யப்பட்ட ஐந்தொகை தாட்களின் எண்ணிக்கை .. இல்லை.

இ. மேலே கண்ட (அ)-ல்இதர தணிக்கையாளர்களால் .. ஆய்வு செய்யப்பட்ட ஐந்தொகை தாட்களின் எண்ணிக்கை .. .. .. .. .. .. 7

5. பிரிவு 59-ன்படி பல இடங்களில் சென்று பதிவுறா சீட்டுகளைத் தேடியவைகளின் எண்ணிக்கை .. .. ..

6. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. .. .. 2

7. அ. தேடுதல்களின் எண்ணிக்கை ..

ஆ. நகல்களின் எண்ணிக்கை —

## அட்டவணை 2.

## 1961-ம் ஆண்டு தமிழ்நாடு சிட்டுநிதிச் சட்டத்தின் கீழ் வரவின் அறிக்கை

| கட்டணம். | 1988–89 தமிழ்நாடு சிட்டுநிதிச் சட்டம். |
|---|---|
| (1) | (2) |
| 1. அ. துணை விதிகளுக்கும் அவைகளின் திருத்தங்களுக்கும் .. | |
| ஆ. மற்றவைகளின் கோப்புக்கு | 13,409.00 |
| இ. பிரிவு 37, 51(4)-ன்படி ஆய்வுக்கு .. | 6,807.00 |
| 2. அ. ஐந்தொகைத்தாட்களின் தணிக்கை செய்ய .. | 4,905.00 |
| ஆ. கணக்குத் தணிக்கை செய்ய .. .. .. | .. |
| 3. தேடுதல்களும் ஆய்வுகளும்.— | |
| அ. தேடுதல்களுக்கு .. — — — | .. |
| ஆ. நகல்களுக்கு .. .. .. .. .. | 28.00 |
| 4. பலவகை வரவு (இனக்கட்டணம்) .. | .. |
| | 25,149.00 |

## அட்டவணை 3.

## 1961-ம் ஆண்டு தமிழ்நாடு சிட்டுநிதிச் சட்டம் 1982-ம் ஆண்டு மைய சிட்டுநிதிச் சட்டம் மற்றும் 1984 சிட்டுநிதி விதிகளுக்கான கூடுதல்.

| .. .. | 1988—89 |
|---|---|
| 1. 1961-ம் ஆண்டு சிட்டுநிதிச் சட்டத்தின்கீழ் மொத்த வரவு .. .. .. .. | 25,149.00 |
| 2. 1982-ம் ஆண்டு சிட்டுநிதிச் சட்டத்தின்கீழ் மொத்த வரவு .. .. .. .. | 32,16,794.00 |
| | 32,41,943.00 |
| 3. 1961-ம் ஆண்டு சிட்டுநிதிச் சட்டத்தின்கீழ் மொத்த செலவு .. .. .. .. | |
| 4. 1982-ம் ஆண்டு சிட்டுநிதிச் சட்டத்தின்கீழ் மொத்த செலவு .. .. .. .. | 25,58,132.00 |
| கூடுதல் | 25,58,132.00 |
| மொத்த வரவு (1+2) .. | 32,41,943.00 |
| மொத்த செலவு (3+4) | 25,58,132.00 |
| | 6,83,811.00 |

## அட்டவணை 4.

1982-ம் ஆண்டு சிட்டுநிதிச் சட்டத்தின்கீழ் பணி விவரம்.

| | 1988—89. |
|---|---|
| **1. சிட்டுகள்—** | |
| அ. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சிட்டுகளின் எண்ணிக்கை | 99,336 |
| ஆ. நடைபெறும் சிட்டுகளின் மொத்தத் தவணை தொகை .. | 34,08,50,181.00 |
| இ. வங்கியில் கையடை செய்யப்பட்ட நிலையான வைப்புத் தொகை .. .. .. .. .. .. | 33,74,30,365.00 |
| ஈ. அரசாங்க பிணையம் | 1,29,500.00 |
| உ. அசையாச் சொத்து | 81,20,341.00 |
| **2. உடன்படிக்கைகள்—** | |
| அ. பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை. | 5,632.00 |
| ஆ. பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கை திருத்தங்களின் எண்ணிக்கை .. .. .. .. .. .. | 1,854.00 |
| இ. வழங்கப்பட்ட துவக்கச்சான்றுகளின் எண்ணிக்கை | 9,191.00 |
| ஈ. நடைமுறையில் உள்ள சிட்டுக்களின் எண்ணிக்கை | 14,742.00 |
| உ. முடிவுற்ற சிட்டுகளின் எண்ணிக்கை | 6,831.00 |
| ஊ. ஆண்டு முடிவில் நடைமுறையில் உள்ள சிட்டுகளின் எண்ணிக்கை .. .. .. .. .. | 18,850.00 |
| **3. பிணைகள்—** | |
| அ. விடுவிக்கப்பட்ட பிணையங்கள் .. | 7,184.00 |
| ஆ. வங்கியில் கையடை செய்யப்பட்ட நிலையான தொகை.. | 12,74,27,860.00 |
| இ. அரசாங்க பிணையம் | 1,36,900.00 |
| ஈ. அசையாச் சொத்து .. | 25,18,290.00 |

## அட்டவணை—5.

| கட்டணம். | 1988–89 |
| --- | --- |
| 1. முன் ஒப்பளிப்பு வழங்க கட்டணம் பட்டியல் விதிமுறை 1-ன்படி .. .. .. .. .. .. .. | 20,65,371.00 |
| 2. சீட்டு உடன்படிக்கை பதிவு விதிமுறை 2-ன்படி | 66,674.00 |
| 3. உறுதிமொழி கோர்வை மற்றும் துவக்கச்சான்று வழங்குவது விதிமுறை 3-ன்படி .. .. .. .. .. | 17,275.00 |
| 4. நிகழ்ச்சிக்குறிப்பு மற்றும் ஏனைய ஆவணங்கள் கோப்பு செய்தமைக்கு கட்டணம் (விதிமுறை 5-ன்படி) .. .. | 4,76,241.00 |
| 5. ஐந்தொகை தணிக்கை சீட்டு தணிக்கையரால் தணிக்கை செய்தது (விதிமுறை 6-ன்படி) .. .. .. .. | |
| (அ) கணக்குத் தணிக்கை சீட்டு தணிக்கையரால் தணிக்கை செய்ய (விதிமுறை 8-ன்படி) .. .. .. .. | 1,24,515.00 |
| (ஆ) தணிக்கை செய்யப்பட்ட ஐந்தொகைகள் கோப்பு செய்ய (விதிமுறை 7-ன்படி) .. .. .. .. | 2,38,876.00 |
| (இ) மனுக்கள் மறுகட்டணம் வசூல் | 1,61,518.00 |
| 6. ஆவணங்கள் பார்வையிடல் மற்றும் நகல்கள் வழங்குதல் (விதிமுறை 18) .. .. .. .. .. | 275.00 |
| 7. ஒத்திவைப்பு நடவடிக்கை மனுக்கள் (விதிமுறை 14) | 58,382.00 |
| 8. பலவகை வரவு (இணக்கக்கட்டணம் உட்பட) | 7,767.00 |
| | 32,16,794.00 |

## அட்டவணை—6.

**1981-ம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிச்சட்டம் 1982-ம் ஆண்டு மைய சீட்டுநிதிச் சட்டம் மற்றும் 1984-ம் ஆண்டு சீட்டுநிதி விதிகளுக்கான கூடுதல்.**

| | 1988–89 |
| --- | --- |
| 1. 1961-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டத்தின்கீழ் மொத்த வரவு .. .. .. .. | 25,149.00 |
| 2. 1982-ம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் மொத்த வரவு .. .. .. .. | 32,16,794.00 |
| | 32,41,943.00 |
| 3. 1961-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டத்தின்கீழ் மொத்த வரவு .. .. .. .. | |
| 4. 1982-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டத்தின்கீழ் மொத்த செலவு .. .. .. .. ... | 25,58,132.00 |
| | 25,58,132.00 |
| மொத்த வரவு (1, 2) | 32,41,943.00 |
| மொத்த செலவு (3, 4) — — — — | 25,58,132.00 |
| நிகர வரவு ... | 6,83,811.00 |

சீட்டு நிதி கழகம், தமிழ்நாடு :

5. இக்கழகம் 11-1-1984 முதல் சென்னையில் செயல்பட்டு வருகிறது. அதன் பதிவு எண். 10586/1984, 1982-ம் ஆண்டு மையச் சீட்டுநிதிச் சட்டம் மற்றும் 1984 தமிழ்நாடு சீட்டுநிதி விதிகள் ஆகியவைகளுக்கு விலக்க ஐந்து ஆண்டுகளுக்கு அ.ஆ. எண். 447, வ.வ.ம. அ.நி. துறை, நாள் 22-5-1985-ன்படி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சீட்டுநிதி கழகம் அரசு கடித எண். 25033/ஜி2/89-1-படி. அறநிலையத்துறை, நாள் 11-5-1989-ன் கீழ் நடைமுறையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. 1982-ம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற பணி விவரங்கள்.

(அ) 1988–89-ம் ஆண்டில் முன் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை 9,936.

1987–88-ம் ஆண்டில் முன் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை 11,276.

(ஆ) 1988–89-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு உடன்படிக்கைகளின் எண். 10,783.

1987–88-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சீட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை 9,695.

(இ) 1988–89-ம் ஆண்டில் வழங்கப்பட்ட துவக்கச் சான்றுகள் எண்ணிக்கை 8,191.

1987–88-ம் ஆண்டில் வழங்கப்பட்ட துவக்கச் சான்றுகள் எண்ணிக்கை 9,393.

(ஈ) 1988–89-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் திருத்தங்களின் எண்ணிக்கை 1,854.

1987–88-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் திருத்தங்களின் எண்ணிக்கை 1,772.

(உ) 1988–89-ம் ஆண்டு துவக்கத்தில் நடைமுறையில் உள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 14,742.

1987–88-ம் ஆண்டு துவக்கத்தில் நடைமுறையில் உள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 17,858.

(ஊ) 1988–89-ம் ஆண்டில் முடிவுற்ற சீட்டுகளின் எண்ணிக்கை 6,831.

1987–88-ம் ஆண்டில் முடிவுற்ற சீட்டுகளின் எண்ணிக்கை 5,987.

(எ) 1988–89-ம் ஆண்டில் முடிவில் நடைமுறையில் உள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 7,184.

1987–88-ம் ஆண்டு முடிவில் நடைமுறையில் உள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 5,987.

7. 1988–89 ம் ஆண்டில் முன் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை 9,936.

| | | |
|---|---|---|
| 1 | சீட்டுகளுக்காக மொத்தத்தொகை .. .. | ரூ. 34,08,50,181 |
| | அ. வங்கியில் கையாடல் செய்யப்பட்ட நிலுவையான வைப்புத் தொகை .. .. .. .. .. .. | ரூ. 33,74,30,365 |
| | ஆ. அரசாங்க பிணையம் .. | ரூ. 1,29,500 |
| | இ. அசையாச் சொத்து | ரூ. 81,20,34 |

| | |
|---|---|
| 8. அ. 1988—89-ம் ஆண்டில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. .. | 1,731 |
| 1987—88-ம் ஆண்டில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. | 1,545 |
| ஆ. 1988—89-ம் ஆண்டில் பிரிவு 46(1)-ன்படி ஆய்வு செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை .. .. | 8,147 |
| 1987—88-ம் ஆண்டில் பிரிவு 46(1)-ன்படி ஆய்வு செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை .. .. | 9,112 |
| இ. பிரிவு 46(2)-ன்படி சீட்டு முன்பணியின் இடத்தில் ஆய்வு செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை .. .. | |
| 1988—89 .. .. .. .. .. .. | 3,392 |
| 1987—88 .. .. .. .. .. .. | 6,326 |
| 9. 1982-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டத்தின்கீழ் குற்ற வழக்குகள்.— | |
| அ. 1988—89-ம் ஆண்டு பிடிக்கப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. .. | 212 |
| ஆ. 1988—89-ம் ஆண்டில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. | 150 |
| இ. 1988—89-ம் ஆண்டில் நீதிமன்றத்தில் முடிவுற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. | 70 |
| ஈ. 1988—89-ம் ஆண்டில் பிரிவு 81-ன்படி குற்றங்களின் இணக்கம் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை .. | 684 |
| உ. பெறப்பட்ட அபராதம் .. .. .. .. | 40,630 |
| ஊ. 1988—89-ம் ஆண்டில் நீதிமன்றத்தில் குற்றவாளி இல்லை என விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. | 5 |

10. நிதிநிலை :

1988—89-ம் ஆண்டு வரவு செலவுகளின் விவரங்களும் முடிவுகளும் கீழ்க்கண்டவாறு உள்ளது:—

| | |
|---|---|
| மொத்த வரவு | 32,16,794.00 |
| மொத்த செலவு | 25,58,132.00 |
| | 6,58,662.00 |

1987—88-ம் ஆண்டு வரவு-செலவுகளின் விவரங்களும் முடிவுகளும் கீழ்க்கண்டவாறு உள்ளன:—

| | ரூ. |
|---|---|
| மொத்த வரவு | 27,78,033.40 |
| மொத்த செலவு | 22,60,277.55 |
| | 5,18,755.85 |

# அத்தியாயம் V.

## முத்திரைத்தாள் (அஞ்சல் அல்லாதவை).

பொது: முத்திரைத்தாள் நிர்வாகம் என்பது கீழ்க்கண்ட இரு பெரும் பணிகள் அடங்கியதாகும்:—

1. முத்திரைத்தாள் வருவாய்க் கட்டுப்பாடு.

2. முத்திரைத்தாள் வரவு மற்றும் விநியோகம்.

முத்திரைத்தாள் வருவாய் கட்டுப்பாடு, நீதித் துறை வில்லைகள் மற்றும் தாள் களைப் பொறுத்தவரை வருவாய் ஆணையர் அவர்களாலும், நீதிசாரா முத்திரைத் தாள்களைப் பொறுத்தவரை பதிவுத் துறைத் தலைவர் அவர்களாலும் மேற்கொள் ளப்படுகிறது.

முத்திரைத்தாள் விநியோகம், கருவூலக் கணக்குத் துறை இயக்குநரின் கட்டுப் பாட்டின்கீழ் இயங்கும் முத்திரைத்தாள் கண்காணிப்பாளரால் மேற்கொள்ளப்படுகிறது. முத்திரைத்தாள்கள் நாசிக்கிலிருக்கும் பாதுகாப்பு அச்சகத்திலிருந்தும், ஐதராபாத் பாதுகாப்பு அச்சகத்திலிருந்தும் பெறப்பட்டு மாவட்டக் கருவூலகங்களிலும் (அகக் கிடங்கு), சார் கருவூலங்களிலும் (துணைக் கிடங்கு) இருப்பு வைக்கப்படுகின்றன.

இவ்விநியோகம் பற்றிய முத்திரைத்தாள் கண்காணிப்பாளரின் பணிகள் பின் வருமாறு:—

(1) தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டக் கருவூலங்களுக்கும் தேவையான அனைத்து முத்திரைத்தாள் வகைகளையும், நீதிசாரா முத்திரைத் தாட்களில் உயர்ந்த மதிப்பு இனங்களுக்கான தேவைக் கோரிக்கையினை நாசிக் பாதுகாப்பு அச்சகத்திற்கும் நீதிசாராமுத்திரைத்தாட்களில்குறைந்த மதிப்பு இனங்களுக்கான தேவைக் கோரிக்கையினை ஐதராபாத் பாதுகாப்பு அச்சகத்திற்கும் அனுப்புதல்.

(2) தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டக் கருவூலகங்களுக்கும் நாசிக் மற்றும் ஐதராபாத் பாதுகாப்பு அச்சகங்களிலிருந்து வரும் முத்திரைத்தாள் வரவைக் கண் காணித்தல்.

(3) நாசிக் மற்றும் ஐதராபாத் பாதுகாப்பு அச்சகங்களிலிருந்து தயார் செய் யப்பட்டு, தமிழ்நாடு மாநிலத்திலிருந்து விநியோகம் செய்யப்படும் முத்திரைத் தாள் களுக்கான உற்பத்திச் செலவை, சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அச்சகங்களுக்கு வழங்கு தல்.

(4) ''2030 மற்றும் 0030'' என்ற தலைப்புகளில் மதிப்பீடுகள், திருத்திய மதிப்பீடுகள், இறுதி மன்ற மதிப்பீடுகள், மற்றும் இறுதிச் சரண்கருத்துக்கள் அனுப்பு தல்.

(5) வரவு செலவுக்கான கணக்குகளை மாநிலக் கணக்காய்வுத் தலைமையகத் திலுள்ள ஏடுகளை ஒப்பிட்டு சான்றிதழ் வழங்குதல்.

(6) இருப்பு விவரங்களை கூர்ந்தாய்வு செய்து தேவைக்கேற்ப மாவட்டங்களுக் கிடையே அகமாற்றங்கள் செய்தல்.

(7) முத்திரைத் தீர்வையைக் குறைக்கும் நோக்கோடு, சொத்து மதிப்பினைக் குறைத்துக் காட்டும் நிலையைத் தவிர்க்க அரசு 10 மாவட்டாட்சியர்கள் அலுவலகத் தில் தனித்துணை ஆட்சியர்களை நியமித்துள்ளது.

மேற்சொன்ன பணிகள் நீங்கலாக இந்திய முத்திரைச் சட்டம் விதி எ்ண 9(1) ன்படி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரின்கீழ் பணிபுரியும் உதவி முத்திரைத்தாள் கண்கா ணிப்பாளர், ''முறையான அலுவலராக'' நியமிக்கப்பட்டுள்ளார். இதன்படி அவர் சிறப்பு ஒட்டு வில்லைகளில் இருப்பு வைத்து, பொது மக்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் சிறப்பு ஒட்டு வில்லைகள் ஒட்டி முத்திரையிட்டுத் தருவார்.

செயல்முறைத் திட்டம்.— பாதுகாப்பு அச்சகத்தில் பொது மேலாளர், முத்திரைத் தாள் அச்சுக்குத் தேவையான மூலப் பொருட்களை காலத்தே சேரிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 15ஆம் தேதி முந்தைய மூன்று ஆண்டுகளின் விற்பனை, அதன் சராசரி நடப்பு ஆண்டுத் தேவை, கையிருப்பு, வரும் ஆண்டுத் தேவை ஆகிய விவரங்கள் அடங்கிய முன்னறி மதிப்பீடு அறிக்கை அனுப்பப்படுகிறது. மேலும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அனைத்துவகை முத்திரைத்தாள்களுக்கும் தேவைக் கோரிக்கை கீழ்க்காணும் தேவைதிகளில் நாசிக் மற்றும் ஐதராபாத் அச்சகங்களுக்கு அனுப்பப்படுகிறது:—

காலாண்டு:— நாசிக் மற்றும் ஐதராபாத் அச்சகத்திற்கு அனுப்பும் நாள்:—

(1) சனவரி முதல் மார்ச் முடிய காலாண்டிற்கான தேவைப்பட்டியல் முந்தைய ஆண்டின் செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

(2) ஏப்ரல் முதல் ஜூன் முடிய காலாண்டிற்கான தேவைப்பட்டியல் முந்தைய ஆண்டின் டிசம்பர் மாதம் 15ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

(3) நடப்பு ஆண்டிற்கான ஜூலை முதல் செப்டம்பர் முடிய காலண்டிற்கான தேவைப்பட்டியல் இந்த ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

(4) நடப்பு ஆண்டிற்கான அக்டோபர் முதல் டிசம்பர் முடிய காலாண்டிற்கான தேவைப்பட்டியல் அந்த ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி அனுப்பப்படுகிறது.

இத்தேவைக் கோரிக்கை அனுப்பும்போது எல்லா மாவட்டக் கருவூலங்களிலும் சார்நிலைக் கருவூலங்களிலும் போதுமான இருப்பு உள்ளதா என்பதை ஆய்வு செய்யப் படுகிறது. இதற்கான விலைப்பட்டியல்கள் வரப்பெற்று மாவட்டக் கருவூல அலுவலர்களின் சான்றிதழின்பேரில் நாசிக் மற்றும் ஐதராபாத் அச்சகங்களுக்கு உற்பத்தி செலவிற்கான பணம் உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரால் வழங்கப்படுகிறது.

முத்திரைத்தாள் விநியோகம்.—பொது மக்களுக்குக் கீழ்க்காணும் முறைகளில் முத்திரைத்தாள் விநியோகம் செய்யப்படுகிறது:—

(1) பதிவுத் துறை அலுவலர்களால் உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் விற்பனை உச்சவரம்பு ஒரு தனி நபருக்கு ஒரு நாளில் ரூ. 6,000 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் முத்திரைகளைச் சார்ந்த கருவூலங் களிலிருந்து பெறுகின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நீதிசாரா முத்திரைத்தாள் மற்றும் நிதித்துறை முத்திரைத்தாள் வகைகளில் ரூ. 2,000 மதிப்புள்ள இனங்கள் வரை கழிவுத் தொகையுடனும், அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரை முத்திரைத் தாட்களுக்கு கழிவுத்தொகை இல்லாமலும் முத்திரைத் தாட்களைப் பெற்று பொது மக்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

(2) நாசிக் அச்சகத்திலிருந்து தேவைப்பட்டியல்களின்படி நீதிசாரா முத்திரைத் தாட்களில் சரக்கு அனுப்பப்படாததால், நீதிசாரா முத்திரைத்தாட்களில் உயர்ந்த மதிப்பு இனங்கள் பெறுவதில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இப்பற்றாக்குறையைத் தவிர்க்க கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் அவர்கள் சென்னை, சேலம், திருச்சி, மதுரை ஆகிய நான்கு மாவட்டக் கருவூலங்களை மையக் கருவூலங்களாக இயங்கவும் அம்மையக் கருவூலங்களில் முத்திரைத்தாட்களை ஒட்டு மொத்தமாகப் பெற்று அம்மையக் கருவூலங்களுக்கு அருகே உள்ள மற்ற மாவட்டக் கருவூலங் களுக்குப் பிரித்துக் கொடுக்கக் கருத்து தெரிவித்துள்ளார். நாசிக்கிலிருந்து தொடர்ந்து சரக்கு பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் நாசிக்கிலிருந்து குறைந்த அளவில் முத்திரைத்தாள் சரக்கு நேரடியாக கருவூல அலுவலர்களுக்கு அனுப்புவது தொடரப்பட்டுள்ளது. நீதிசாரா முத்திரைத்தாட்களை குறைந்த மதிப்பு இனங்களாக ரூ. 1 முதல் ரூ. 5 வரையிலான முத்திரைத்தாட்கள் ஐதராபாத் பாதுகாப்பு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நேரடியாக எல்லா கருவூல அலுவலர் களுக்கு அனுப்பப்படுகிறது. நீதிசாரா முத்திரைத்தாட்களின் குறைந்த மதிப்பு இனங்களிலும் நீதிமன்ற முத்திரைகளிலும் எல்லா மாவட்டக் கருவூலங்களிலும் போதிய இருப்பு உள்ளது. நீதிசாரா முத்திரைகளிலும் எல்லா மாட்டக் கருவூலங் களிலும் போதிய இருப்பு உள்ளது. நீதிசாரா முத்திரைத்தாட்களில் உயர்ந்த மதிப்பு இனங்களிலும் மற்றும் எல்லா வகை முத்திரைகளிலும் தமிழகத்தில் எல்லா மாவட்டக் கருவூலங்களிலும் போதிய இருப்பு பெற கருவூலக் கணக்குத் துறையால் எல்லா துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

(3) மேலும் அரசு, இந்திய முத்திரைச் சட்டம் 1925 வது 9 (1)-ன்கீழ் எல்லா சார்பதிவாளர்களையும் "முறையான அலுவலர்களாக" நியமித்து சிறப்பு ஒட்டு வில்லைகள் விற்பனை செய்ய அதிகாரம் அளித்துள்ளது.

(4) நாசிக்கிலிருந்து பெறப்படும் முத்திரைத்தாள் வரவு, மாவட்டக் கருவூலங்களிலுள்ள முத்திரைத்தாள் இருப்பு ஆகியவை அரசாலும், பதிவுத்துறை தலைவர் அவர்களாலும் கருவூலக் கணக்குத்துறை இயக்குநர் அவர்களாலும், உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளராலும் ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(5) நீதிசாரா முத்திரைத்தாட்களில் உயர்நத மதிப்பு இனங்கள் முத்திரைத்தாள் விற்பனையாளர்களிடம் கிடைக்காததால் அனைத்து சார்நிலைக் கருவூல அலுவலர்களும் பதவி வழி விற்பனையாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயர்மதிப்புள்ள தாள்களை பொதுமக்களுக்கு நேரடியாக விற்பனை செய்கின்றனர்.

(6) சார்பதிவாளர்களுக்கு ரூ. 1,000 வரை பணமாகவே முத்திரைத் தீர்வையாக வசூலிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(7) வட்டாட்சியர்கள் ரூ. 10,000 மதிப்பிற்கும், பதிவு அலுவலகங்களில் முத்திரைத்தாள் விற்பனை அரசாணை எண் பல்வகை 1428, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, 31—12—1987-ன்படி பதிவு அலுவலகங்களில் இருப்புத்தொகை அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

| வரிசை எண். | பதிவு அலுவலகம். | தற்போதைய அளவு. | உயர்த்தப்பட்ட அளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சார்பதிவாளர் அலுவலகம் .. .. | 10,000 | 20,000 |
| 2 | மேல்நிலைப்படுத்திய சார் பதிவாளர் அலுவலகம். .. | 10,000 | 30,000 |
| 3 | மாவட்டப் பதிவாளர் அலுவலகம் .. | 10,000 | 30,000 |
| 4 | மேல்நிலைப்படுத்திய மாவட்ட பதிவாளர் அலுவலகம். | 10,000 | 50,000 |

ரூ. 1,000 மதிப்பிற்கு நீதிமன்றக் கட்டண வில்லைகள் இருப்பு வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்ய அனுமதிப்பட்டுள்ளனர். சார்பதிவாளர் மேற்படி தொகையில் ரூ. 2,500 மதிப்பிற்கு சிறப்பு ஒட்டு வில்லைகள் இருப்பு வைத்து விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(8) சென்னை நகரத்தில் உயர்நீதிமன்றத்திலும், கோட்டை, தண்டையார் பேட்டை தாலுகா சார்நிலைக் கருவூலத்திலும் அரசு ஊதியம் பெறும் முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(9) 1925 ஆம் ஆண்டு இந்திய முத்திரை விதிகள் 9 (1) விதியின்படி ஆவணங்களில் முத்திரை வில்லைகள் ஒட்டவும், முத்திரை பொறிக்கவும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எல்லா கருவூல அலுவலர்களும், சார்நிலைக் கருவூல அலுவலர்களும், உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரும், எல்லா சார்பதிவாளர்களும் இத்தகைய தகுதி அலுவலர் ஆவர்.

(10) முத்திரைத் தீர்வையைக் குறைக்கும் நோக்கோடு சொத்து மதிப்பீடுகளை குறைத்துக் காட்டும் கோட்பாட்டைத் தவிர்க்க அரசு கோவை, சேலம், கடலூர், வேலூர் ஆகிய 4 மாவட்ட ஆட்சியர்கள் அலுவலகங்களுக்கு தனி அலுவலர்களை நியமித்துள்ளது.

இப்பணிக்காக அரசாணை வணிகவரி மற்றும் அறநிலையத்துறை 1563, நாள் 29—12—1988-ன்படி 3 பதிவகங்களின் ஆய்வாளர்கள் பணியிடங்களை ஒப்பளித்தது. இத்துடன் மதுரை, திருச்சியிலிருந்து 4 பதிவகங்களின் ஆய்வாளர் பணியிடங்களையும் சேர்த்து கீழ்க்கண்டவாறு இப்பணியினை செய்திட பணித்தொகுப்பு மாற்றியமைக்கப்பட்டது :—

| வ.எண். | பணிப்பெயர் தலைமையிடத்துடன் | ஆட்சி எல்லை மாவட்டம்வருவாய் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பதிவகங்களின் ஆய்வாளர், சென்னை | சென்னை. |
| 2 | பதிவகங்களின் ஆய்வாளர், தூத்துக்குடி | வ. உ. சி. |
| 3 | பதிவகங்களின் ஆய்வாளர், விருதுநகர் | காமராசர், பசும்பொன் முத்து ராமலிங்கம், ராமநாதபுரம். |
| 4 | பதிவகங்களின் ஆய்வாளர், திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை |
| 5 | பதிவகங்களின் ஆய்வாளர், தஞ்சாவூர் | தஞ்சாவூர். |
| 6 | பதிவகங்களின் ஆய்வாளர், மதுரை | மதுரை, காயிதேமில்லத். |
| 7 | பதிவகங்களின் ஆய்வாளர், திருநெல்வேலி | திருநெல்வேலி— கட்டபொம்மன். கன்னியாகுமரி. |

(11) உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு முத்திரைத் தாட்கள் விற்பனை செய்யும்போது முத்திரைத்தாள் விதித்தொகுப்பில் உள்ள விகிதங் களின்படி கழிவுத்தொகை அனுமதிக்கப்படுகிறது.

• முத்திரைத்தாள் வருவாய்க் கணக்குகள். முத்திரைத் தீர்வை, ஆவணத்தைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் தாள்கள் அல்லது வில்லைகளின் வாயிலாக வசூலிக்கப் படுகிறது. அதோடு சில சமயங்களில் இத்தீர்வை முத்திரைத்தாள் பற்றாக்குறை ஏற்படும்போது சார்பதிவுத்துறை அலுவலர்களால் ரூ. 1,000 வரை பணமாக வசூலிக் கப்படுகின்றது. சொத்து மதிப்பைக் குறைத்து பதிவான பத்திரங்கள் முத்திரைச் சட்டப் பிரிவு 47-ன் கீழ் அனுப்பப்படுகிறது. அத்தகைய ஆவணங்களின் பேரில் செலுத்த வேண்டிய மிகைத் தீர்வை பணமாகவே பிரிவு 47-ன் கீழ் மாவட்டாட்சியர் களால் வசூலிக்கப்படும். இவ்வருவாய்கள், டாதத்திற்கான தொகுப்பு வருவாய் அறிக்கைகளைத் தயாரிக்கும் பொருட்டு உதவி முத்திரைத்தாள் கண்காணிப் பாளருக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அத்தொகுப்பு அறிக்கைகள் மாவட்டக் கருவூலத்திலும் மற்றும் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் ஆகியோரின் கணக்குகளோடு ஒத்திசைவு செய்யப்படுகின்றது.

நாசிலிருந்து முழு அளவில் எல்லா முத்திரை வகைகளிலும் சரக்கு பெற எல்லா துரித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முத்திரைத்தாள் மற்றும் வில்லைகள் உபரியாக உள்ள மாவட்டக் கருவூலகங்களிலிருந்து தேவைப்படும் கருவூலகங் களுக்கு அகமாற்றம் செய்யப்படுகின்றது. சொத்துக்களின் விலை உயர்வைக் காரண மாக முத்திரைத் தீர்வையின் மூலம் வசூலாகும் வருவாய் ஆண்டுக்காண்டு ஏறுமுக மாகவே உள்ளது. சொத்து மதிப்பீட்டிற்கு வழிமுறை விதிகள் வகுத்து, நடப்பு மதிப்பை நிர்ணயம் செய்யத் தனி அலுவலர்கள் நியமித்ததவால் முத்திரைச் சட்டப் பிரிவு 47-ன் கீழ் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களிலிருந்து வரும் வருவாய் அதிகரித்து வருகிறது.

முத்திரைத்தாள் நிர்வாகம் இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டது, (1) நீதி மன்ற முத்திரைகளின் விற்பனை (2) நீதிசாரா முத்திரைத் தாட்களின் விற்பனை இத்துடன் இணைத்திருக்கும் வரவு அறிக்கையிலுள்ள 1988-89 ஆம் ஆண்டின் நீதிமன்ற முத்திரைகளின் விற்பனையை 1987-88 ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்கும் போது, 1988-89 ஆம் ஆண்டில் நீதிமன்ற முத்திரைகளில் விற்பனை உயர்ந்துள்ளது. மேலும் நீதிசாரா முத்திரைத்தாட்களின் விற்பனை (2) ஆவணங்களில் மீதான முத்திரை மதிப்பினை பதிப்பதற்கான தீர்வை என்று பிரிக்கப்படுகிறது. முத்திரை களின் விற்பனை என்பது உண்டி முத்திரைத்தாட்கள், வருவாய் வில்லைகள் மற்றும் இதர முத்திரைகளின் விற்பனையாகும். இதர முத்திரைகளின் விற்பனை என்பது நீதிசாரா முத்திரைத்தாட்கள் பங்கு மாற்று வில்லைகள், அயல்நாட்டு வில்லைகள், காப்பீட்டு வில்லைகள், சான்றுறுதி வில்லைகள் மற்றும் தரகர் வில்லைகளின் விற்பனை யாகும். சார்பதிவாளர்கள் வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமாக வசூலிக்கப்படும் தீர்வை மற்றும் சிறப்பு ஒட்டு வில்லைகளின் விற்பனை ஆவணங்களின் மீதான முத்திரை மதிப்பினை மதிப்பதற்கான தீர்வையாக கருதப்படுகிறது. இத்துடன் கீழ்கண்ட வரவு அறிக்கையிலுள்ளவாறு 1988-89 ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்கும்போது 1988-89 ஆம் ஆண்டில் நீதிசாரா முத்திரைத் தாட்களின் விற்பனை உயர்ந்துள்ளது. எனவே 1988-89 ஆம் ஆண்டில் மொத்த நிகர வருவாயை 1987-88 ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்கும்போது 1988-89 ஆம் ஆண்டில் நிகர வருவாய் அதிகரித்துள்ளது.

மொத்தத்தில் முத்திரைத்தாள் நிர்வாகம் 1988-89 ஆம் ஆண்டில் மனநிறை வளிக்கும் வகையில் செயல்பட்டுள்ளது.

இரு தொடர் ஆண்டுக்களுக்கான "0030 வருவாய்" மற்றும் "2030 செல வினங்களுக்கான, பட்டியல் ஒப்பு நோக்கத்திற்காக இத்துடன் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

1988-89 ஆம் ஆண்டிற்கு ரூ. 166.9 கோடிகள் முத்திரை வருவாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ் ஆண்டில் இத்தலைப்பில் ரூபாய் 174.43 கோடிகள் ஈட்டப் பட்டுள்ளது.

"முத்திரை" என்ற தலைப்பின் கீழ் 1987-88 மற்றும் 1988-89 ஆண்டுக்கான வரவு-செலவு விவரங்கள் :—

| | 1987-88 | 1988-89 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 00.30 ஆ. வில்கைள்—மன்ற வில்லைகள்.— | | |
| 01. நீதிமன்ற வில்லைகள் | 13,37,85,587.05 | 13,58,50566.10 |
| 02. திருப்பிக் கொடுத்தவை நீதிமன்ற வில்லைகள் (—) | 42,51.305.34 (—) | 47,58,482.12 |
| | 12,95,34,281.71 | 13,10,92,083.98 |

| (i) | 1987-88 (2) | 1988-89 (3) |
| --- | --- | --- |
| 0030. ஆ. வில்லைகள்— நீதிமன்ற வில்லைகள்.— | | |
| அஆ. முத்திரைகள் விற்பனை | | |
| 01. நகல் முத்திரைத்தாட்கள் (+) | 10,42,098.10 (+) | 23,33,342.85 |
| | 13,05,76,379.81 | 13,34,25,426.83 |
| 02. திருப்பிக் கொடுத்தவை— | | |
| 1. பழுதடைந்த முத்திரைகள் | (+) | 2,92,942.70 |
| 2. பல்வகை | | |
| | 13,05,76,379.81 | 13,31,32,484.13 |
| 0030. ஆ. வில்லைகள்—நீதிமன்றம்— | | |
| அஇ. இதர வரவுகள்— | | |
| 01. தண்டப்பணம் மற்றும் தண்டத்தொகை (+) | 7,465.45 (+) | 5,198.85 |
| 02. பல்வகை (+) | 4,74,343.20 (+) | 2,483.20 |
| 03. திருப்பிக் கொடுத்தவை | .. (+) | 40,826.25 |
| | 13,10,58,188.46 | 13,30,99,339.93 |
| 0030 அ. முத்திரைத்தாள்— நீதிசாரா முத்திரைகள் அஅ. முத்திரைத்தாள் விற்பனை— | | |
| 01. உண்டி முத்திரைத்தாட்கள் (+) | 30,25,202.00 (+) | 35,92,373.50 |
| 02. இதர நீதிசாரா முத்திரைகள் | | |
| 1. வருவாய் வில்லைகள் (+) | 3,67,16,635.00 (+ | 4,93,C3,452.60 |
| 2. இதர முத்திரைகள் (+) | 102,77,57,479.75 | 141,10,38,282.20 |
| | 119,85,57,595.21 | 159,70,33,448.23 |
| 03. திருப்பிக் கொடுத்தவை— | | |
| 01. பல்வகை முத்திரைகள் இறந்த முத்திரைத்தாள் விற்பனையாளரிடமிருந்து பெறப்பட்டது (—) | 17,304.30 | |
| 02. பழுதடைந்த முத்திரைகள் (—) | 45,42,815.45 | 68,93,295.60 |
| 03. பல்வகை (—) | 1,68,85,766.95 | 1,25,15,556.45 |
| | 117,71,11,708.51 | 157,76,18,596.18 |
| 0930இ. முத்திரைகள் அஆ. முத்திரைகள் முத்திரையிட்ட ஆவணங்களுக்கு தீர்வை | | |
| 01. இதர முத்திரைகளின் வரவு (+) | 4,827.00 | |
| 02. ஆன்ஸ்டாம்ப்டு ஆர். இன்சஃபிஷியன்ட்லி ஸ்டாம்ப்டு டாகுமெண்ட் (+) | 30,31,31,965.74 (+) | 27,52,80,824.79 |
| 03. இதர வரவுகள் (+) | 9,21,02,221.05 (+) | 9,62,65,019.05 |

| (1) | 1987—88<br>(2) | 1988—89<br>(3) |
|---|---|---|
| 0030 இ. முத்திரைகள் நீதிசாரா— | | |
| அஇ. இதர வரவுகள் | | |
| 01. தண்டப்பணம் மற்றும் தண்டத்தொகை (+) | 57,294.20 (+) | 52,830.76 |
| 02. பலவகை (+) | 18,72,307.34 (+) | 88,03,434.00 |
| | 163,42,80,323.84 | 195,80,23,704.78 |
| ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கியவை (—) | 44,06,51,419.65 (—) | 54,35,68,291.85 |
| | 122,36,28,904.19 | 141,44,55,412.93 |
| 2030. முத்திரைகள்-செலவுகள் முத்திரைத்தாள்கள் விற்றதில்— தள்ளுபடி (—) | 67,74,225.37(—) | 75,179,84.35 |
| சம்பள விவரம் | 22,79,839.05 (—) | 21,28,055.35 |
| நாசிக் அச்சகத்திற்கு வழங்கிய உற்பத்தி செலவு (—) | 98,98,444.25 (—) | 91,59,852.00 |
| நிகர வரவு விவரம் | 120,48,76,394.62 | 139,56,49,521.23 |
| நிகர வருவாய் நீதிமன்றம் | 13,10,58,188.46 | 13,30,99,339.93 |
| நீதிசாரா முத்திரைகள் | 109,25,70,715.73 | 128,13,56,073.00 |
| | 122,36,28,904.19 | 141,44,55,412.93 |

## தமிழ்நாடு விற்பனை வரிமேல் முறையீட்டு தீர்ப்பாயம்.

தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம், தமிழ்நாடு விவசாய வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் மற்றும் மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள்.

விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்.—இத்தீர்ப்பாயம் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம் மற்றும் தமிழ்நாடு மேல்வரிச் சட்டம் ஆகியவற்றின்படி இயங்கும் இரண்டாம் நிலை தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயம் செயல்முறைகளிலும் வரைமுறைகளிலும் 1988-89 நிதியாண்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

தமிழ்நாட்டில் மொத்தம் நான்கு தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன. இதில் மாநில தலைநகரான சென்னை மாநகரத்தில் முதன்மை தீர்ப்பாயமும் ஒரு கூடுதல் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர மதுரை கோயம்புத்தூர் ஆகிய இரு பெரு நகரங்களிலும் தலா ஒரு ஒவ்வொரு கூடுதல் தீர்ப்பாயம் இயங்கி வருகின்றன.

1-4-1988-ம் தேதியில் 4,500 மேல்முறையீடுகளும், 20 தீர்ப்பாய பரிசீலனை மனுக்களும் நிலுவையாக அனைத்து தீர்ப்பாயங்களிலும் இருந்தன. கடந்த நிதியாண்டில் 2,229 மேல்முறையீடுகளும் 20 பரிசீலனை மனுக்களும் பதிவு பெற்றன. இதனால் தீர்வு காண வேண்டிய முறையீடுகள் 6,729 ஆகவும் பரிசீலனை மனுக்கள் 49 ஆகவும் உயர்ந்தன. இவற்றில் 2,523 முறையீடுகளும் 17 பரிசீலனை மனுக்களும் தீர்வு காணப்பட்டன. 31-3-1989 தேதியில் 4,206 முறையீடுகளும் 32 பரிசீலனை மனுக்களும் தீர்வுக்காக வேண்டி நிலுவையில் உள்ளன.

விவசாய வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்.—இத்தீர்ப்பாயம் தமிழ்நாடு விவசாய வருமான வரி சட்டம் 1955-ன் கீழ் இயங்கும் இரண்டாம் நிலை முறையீட்டு தீர்ப்பாயம் ஆகும். கடந்த நிதியாண்டில் ஆரம்பத்தில் (1-4-1988) 189 மேல் முறையீடுகள் நிலுவையாக இருந்தன. இந்த ஆண்டில் 172 முறையீடுகள் பதிவு பெற்றன. இதன் மூலம் மொத்தம் 361 மேல் முறையீடுகள் தீர்வு காண்பதற்கு வந்தன. இவற்றுள் 194 மேல்முறையீடுகள் முடிக்கப்பட்டன. 31-3-1989 நாளில் 167 முறைகள் நிலுவையிலுள்ளன.

தமிழ்நாட்டில் 17 வணிகவரி மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் உள்ளனர். இவர்களிடம் தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டம், மத்திய விற்பனை வரி சட்டம், கூடுதல் விற்பனை வரி மற்றும் உபரிவரி ஆகியவற்றின் கீழ் மொத்தம் 17,829 முறையீடுகள் நிலுவையாக 1-4-1988-ல் இருந்தன. நிதியாண்டில் மொத்தம் 15,749 முறையீடுகள் வரப்பெற்றன. முடிவுற வேண்டிய மொத்த முறையீடுகள் எண்ணிக்கை 33,578 ஆகும். இவற்றுள் 16,167 முறையீடுகள் முடிக்கப்பட்டன. 31-3-1989-ல் 17,411 முறையீடுகள் நிலுவையிலுள்ளன.

வக்ப்கள்.

தமிழகத்தில் 1954-ம் வருடத்திய வக்ப் சட்டம், 1955-ம் வருடம் சனவரி மாதம் 15-ம் நாள் முதல் அமுலுக்கு வந்தது. வக்ப் மற்றும் வக்ப் சொத்துக்களின் கணக்கெடுப்பு 1957-ல் முடிவுற்றது.

1958 பிப்ரவரியில் முதல் வாரியம் உருவானது. தற்போதைய வாரியம் 29-5-89-ல் அமைக்கப்பட்டது.

வக்ப்கள்.—தமிழகத்தில் மொத்தம் 6,094 வக்ப்கள் உள்ளன. அவற்றில் 53 வக்புகள் ஷியா பிரிவினருக்கானவை. மொத்த வக்ப்களில் 2,560 வக்ப்களின் வருட வருமானம் ரூ. 100-க்கும் குறைவாக உள்ளது. 3,534 வக்ப்களின் வருட வருமானம் ரூ. 100-க்கும் அதிகமாக உள்ளது.

1-4-1988 முதல் 31-3-1989 வரையிலான கேட்பு வசூல் மற்றும் நிலுவை பட்டியல் வருமாறு :—

| | ரூபாய். |
|---|---|
| கேட்பு : | |
| 31-3-1988 வரையிலான நிலுவையில் .. | 21,03,356.46 |
| 1-4-1988 முதல் 31-3-1989 வரையிலான நடப்பில் .. .. | 18,09,816.61 |
| மொத்தம் .. | 39,13,073.07 |
| வசூல் : | |
| நிலுவையில் | 11,80,789.02 |
| நடப்பில் | 14,29,746.23 |
| மொத்தம் | 26,10,535.25 |
| நிலுவை : | |
| நிலுவையில் | 8,09,823.73 |
| நடப்பில் | 3,75,785.78 |
| மொத்தம் .. | 11,86,609.51 |

தணிக்கை.—ஆண்டு வருமானம் ரூ. 100-க்கும் அதிகமாக ஆனால் ரூ. 5,000-க்குக் குறைவாக உள்ள வக்ப்களின் தணிக்கை வாரிய அலுவலர்களாலும் ரூ. 5,000-க்கும் அதிகமாக ஆண்டு வருமானம் இருக்கும் வக்ப்களின் தணிக்கை தல நிதி தணிக்கைக் குழுவாலும் செய்யப்படுகிறது.

வழக்குகள்.—பாராதீனம் செய்யப்பட்ட வக்ப் சொத்துக்களை மீட்க வாரியம் தொடுத்த சுமார் பதினோராயிரம் வழக்குகளில் 1,920 வழக்குகள் நிலுவையில் உள்ளது. வாரியத்திற்கெதிராக முத்தவல்லிகள் மற்றும் நிர்வாகிகளால் தொடுக்கப்பட்ட வழக்குகளில் 31-12-1988 வரை 1,124 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஆக்கிரமிப்புகள்.—தமிழகத்தில் 34 வக்ப் சொத்துக்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

*புனரமைப்பு மானியம்.*— தமிழக அரசால் வாரியம் மூலமாக வக்ப் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் புனரமைப்பு நிதி 1973–74 முதல் 1982–83 வரை 798 எளிய வக்ப் நிறுவனங்களுக்கு ரூ. 35,00,000 வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அரசு 1983–84-ல் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியது. அதில் ரூ. 50,00,000, 1,026 வக்ப் நிறுவனங்களுக்கு 1983–84 மற்றும் 1984–85-ல் வழங்கப்பட்டது. மீதி தொகையான ரூ. 50,00,000-ம் 31–3–1989 வரை 538 வக்ப் நிறுவனங்களுக்கு ரூ. 45,79,000 வழங்கப்பட்டுள்ளது.

*நகர்ப்புற வக்ப் சொத்துக்கள் அபிவிருத்திக் கடன்.*— நகர்ப்புற வக்ப் சொத்துக்களின் மேம்பாட்டுக்காக தமிழக அரசு 1976–77 முதல் ரூ. 46,00,000 கடனாக வழங்கியுள்ளது. அதிலிருந்து 31-3–1989 வரை 43 வக்ப் நிறுவனங்களுக்கு ரூ. 45,05,000 வழங்கப்பட்டுள்ளது.

இதுபோல் மத்திய வக்ப் கழகம் வழங்கிய கடன் தொகையான ரூ. 1,44,73,000 14 வக்ப் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

*நலப்பணிச் செயல்பாடுகள்.*— தமிழ்நாடு வக்ப் வாரிய நல்வாழ்வு நிதி என்ற ஒரு நிதி ஆதாரம் பொது மக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடையிலிருந்து உருவாக்கப்பட்டு மனிதாபிமான அடிப்படையில் இதுவரை 379 ஏழைகளுக்கு திருமண உதவி, மருத்துவ உதவி மற்றும் கல்வி உதவி போன்ற தேவைகளுக்கு ரூ. 2,20,904.15 வழங்கப்பட்டுள்ளது.

*உபகார சம்பளம்.*— மத்திய வக்ப் கழகம் உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக ரூ.15,000 வழங்கியது. வாரியமும் அதற்கு சமமான தொகையாக ரூ. 15,000-யை ஒதுக்கியது. முஸ்லிம் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக ஒரு உபகாரி ரூ. 5,000 நன்கொடையாக வழங்கினார். மொத்த தொகையான ரூ. 35,000-யை வாரியம், தொழிற்கல்வி பயிலும் 7 மாணவர்களுக்கு ரூ. 600 விதமும் மேல்நிலைக் கல்வி பயிலும் 43 மாணவர்களுக்கு ரூ. 300 விதமும் இஸ்லாமியக் கல்வி பயிலும் 59 மாணவர்களுக்கு ரூ. 300 விதமும் வழங்கியது. இவ்வாறாக மத்திய வக்ப் கழக தமிழ்நாடு வக்ப் வாரிய உபகாரச் சம்பளம் திட்டத்தின் மூலம் 1988–89-ம் ஆண்டில் மொத்தம் 109 மாணவர்கள் பயனடைந்தனர்.

# அத்தியாயம் 7.

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.

### கூட்டுறவு.

தமிழ்நாட்டில் 1904 ஆம் ஆண்டு கூட்டுறவு இயக்கம் அரசு ஆதரவுடன் தொடங்கப் பட்டது. மக்களின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த கூட்டுறவுத் துறை ஒரு பாலமாக இருந்து வருகின்றது. இத்துறை மாநில அளவில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரையும் மாவட்ட அளவில் மண்டல இணைப் பதிவாளர்களையும் கொண்டு துறைப் பணிகளை செயலாக்குகிறது. 1955 ஆம் ஆண்டுக்கு பிறகு இவ்வகை கூட்டுறவுச் சங்கங்கள் இதர துறைகளின் தலைவர்களுக்கு மாற்றப்பட்டதால் கூட்டுறவுச் சங்கங் களின் பதிவாளர் நீங்கலாக 15 ஏனைய துறைத் தலைவர்கள் கட்டுப்பாட்டிலும் கூட்டுறவுச் சங்கங்கள் இயக்கி வருகின்றன. மொத்தமுள்ள 30,000 கூட்டுறவு நிறு வனங்களின் கூட்டுறவு சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் சுமார் 11,000 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படுகின்றன.

வேளாண்மை உற்பத்தி மற்றும் அபிவிருத்திக்கு கடனுதவி அளித்தல், நகர்ப்புற கடன் வசதியளித்தல், வேளாண்மை பொருட்களை பதப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தலுக்கு உதவுதல், வேளாண்மை இடு பொருட்களை விநியோகித்தல், மாநிலம் முழு மைக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நுகர்வோர் பொருட்களை வழங்குதல், கூட்டுறவுக் கல்வி மற்றும் விளம்பரம் ஆகியவை பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணிகளாகும்.

**பணிகள் :**

வேளாண்மை உற்பத்தி மற்றும் அபிவிருத்திக் கடனுதவி அளித்தல், நகர்ப்புறக் கடன் வசதியளித்தல், வேளாண்மைப் பொருட்களைப் பதப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தலுக்கு உதவுதல், வேளாண்மை இடு பொருட்கள் விநியோகித்தல், மாநிலம் முழு மைக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நுகர்வோர் பொருட்களை வழங்குதல் ஆகியவை பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணி களில் அடங்கும்.

கூட்டுறவுத் துறையின் கீழ்க்கண்ட சட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தாவா மனுக்கள் மூலம் தீர்வு செய்தல் நிறைவேற்று நடவடிக்கைகள் மேற் கொள்ளுதல் மற்றும் தண்டத்தீர்வை நடவடிக்கை ஆகிய போன்ற நடவடிக்கைகளை கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் மூலம் மேற்கொள்ளுதல் பிரிவு 81 அல்லது பிரிவு 82 ஆகியவற்றின் கீழ் சங்கத்தின் அமைப்பு, நிர்வாகம், மற்றும் நிதி நிலை ஆகியவைகள் குறித்து மேற்கொள்ளப்படும் விசாரணை பிரிவு 137ல் மேற்கொள்ளப்படும் கலைத்தல் நடவடிக்கை ஆகியவைகளே அச்சட்டப் பூர்வ பணிகளாகும்.

மேற்படி சட்டபூர்வ பணிகளில் 1988–89ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வருமாறு :—

| வரிசை எண்ணும் விவரமும். | 31–3–1988-ல் | 1988–89ல். | மொத்தம். | 1988-89ல் தீர்வு செய்தது. | 31-3-1989ல் தீர்வு செய்ய வேண்டிய நிலுவைகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 தாவா மனுக்கள் | 35,362 | 2,48,905 | 2,84,267 | 2,22,551 | 671,716 |
| 2 நிறைவேற்று மனுக்கள். | 330,460 | 80,931 | 4,19,491 | 65,501 | 3,53,990 |
| 3 தண்டத் தீர்வை வழக்குகள். | 496 | 294 | 780 | 337 | 453 |
| 4 விசாரணை | 265 | 363 | 628 | 430 | 198 |
| 5 ஆய்வு | 123 | 224 | 347 | 244 | 103 |
| 6 கலைத்தல் நட வடிக்கை. | 878 | 410 | 1,288 | 157 | 1,131 |

பல்வேறு திட்டங்களின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம் :

வேளாண்மைக் கடன்கள் (குறுகிய மற்றும் மத்தியக் காலக் கடன்கள்).—தமிழ்நாட்டில் உள்ள 4,655 தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளில் இம் மாநிலத்திலுள்ள மொத்த நில உடமையாளர்களில் 74.4 சதவீத அளவிற்கு உறுப்பினர்களாக உள்ளனர். அறிக்கை ஆண்டில் குறுகியகாலக் கடன்கள் வழங்குவதற்கான குறியீடான ரூ. 215 கோடி மற்றும் மத்திய காலக் கடன்கள் வழங்குவதற்கான குறியீடான ரூ. 30 கோடியில் இச்சங்கங்கள் ரூ. 205.04 கோடி அளவிற்கு குறுகிய காலக் கடன்களும் உழவு மாடுகள் மற்றும் கறவை மாடுகள் வாங்குதல், ஆடு வளர்ப்பு கோழிப் பண்ணை அமைத்தல் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான கருவிகள் வாங்குதல் போன்ற வேளாண்மை தொடர்பான துணைத் தொழில்கள் களுக்காக ரூ. 40.14 கோடி அளவிற்கு மத்திய காலக் கடன்களும் வழங்கியுள்ளன.

தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள் வழங்கிய மொத்த குறுகிய காலக் கடன்களில் 7.0 சதவீதமும் மத்திய காலக் கடன்களில் 20.0 சதவீதமும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு வழங்கியுள்ளன.

தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள் வழங்கிய மொத்த குறுகிய காலக் கடன்களின் 7.0 சதவீதமும் மத்திய காலக் கடன்களில் 20.0 சதவீதமும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு வழங்கியுள்ளன.

தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் பங்குத் தொகை (அரசுப் பங்குத் தொகை நீங்கலாக) 31—3—1989 அன்று ரூ. 118.22 கோடியாகும்.

பயிர் ஈட்டுறுதித் திட்டம்.

மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் 1—4—1985 முதல் இம்மாநிலத்தில் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் நெல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறு தானிய பயிர்களுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் வர்த்தக வங்கிகள், கிராமப்புற வங்கிகள் ஆகியவற்றில் வழங்கப்படும் பயிர் கடன் ரூ. 10,000-க்கு மிகைப்படாமல் 100 சதவீதம் ஈட்டுறுதி செய்யப்படுகிறது. நெல் மற்றும் சிறு தானிய பயிர்களுக்கு ஈட்டுறுதி செய்த தொகையில் 2 சதவீதமும்; எண்ணெய் வித்துப் பயிருக்கு ஈட்டுறுதி செய்த தொகையில் 1 சதவீதமும் பிரிமியமாக வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசின் சார்பாக பொது காப்பீட்டுக் கழகமும், மாநிலப் அரசின் சார்பாக மாநில அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதி குழுவும் இணைந்த பிரிமியம் மற்றும் ஈட்டுத் தொகையினை 2.1 என்ற விகிதத்தில் பங்கேற்று இத் திட்டத்தினைச் செயல்படுத்துகின்றன. இத்திட்டத்தில் இணையும் சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மான்யமாக அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினை மைய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்றுக்கொள்கின்றன.

1988—89 ஆம் ஆண்டில் ராபி பருவத்தில் பயிர்களுக்கு ஈட்டுறுதி செய்த விவரம் பின்வருமாறு :—

| விவரங்கள். | நெல். | பாசன நிலக் கடலை. | பாசன சோளம். | பாசன கம்பு. | பாசன கேழ்வரகு. | பாசன என். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| திட்டத்தில் இணைந்த விவசாயிகள். | 32,354 | 10,758 | 30 | 54 | 15 | 8 |
| நிலப்பரப்பு (ஹெக்டேரில்). | 59,092 | 20,247 | 52 | 56 | 21 | 11 |
| ஈட்டுறுதி செய்த தொகை (ரூ. இலட்சத்தில்). | 966.76 | 394.54 | 0.85 | 0.42 | 0.25 | 0.08 |
| வசூலிக்கப்பட்ட பிரிமியம் (ரூ. இலட்சத்தில்). | 19.33 | 3.94 | 0.02 | 0.01 | 0.01 | 0.01 |

காரிப் 1987 மற்றும் ராபி 1987-88 பருவங்களுக்கான ஈட்டுறுதித் தொகை ரூ. 122.67 லட்சம் 1988—89 ஆம் வருடத்தில் வழங்கப்பட்டது.

<u>நீண்ட காலக் கடன்கள்</u>.—தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மாநில அளவிலும் 181 பிரதம நிலவள வங்கிகள் வட்டம் அல்லது வட்டாரங்கள் அளவிலும் தமிழ் நாட்டில் ஈரடுக்கு முறையில் நீண்ட காலக் கடன்களை வழங்கி செயல்பட்டு வருகின்றன. பிரதான நிலவள வங்கிகள் விவசாயிகளுக்கு சிறு பாசனத் திட்டங்கள் மற்றும் தோட்டப் பயிர் பயிரிடுதல், ...கள் வளர்ப்பு, மாடுகள் வளர்ப்பு மற்றும் கோழிகள் வளர்ப்பு திட்டங்களாக சிறுபாசனம் அல்லாத பல்வேறு காரியங்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வாறான திட்டங்களுக்கு ரூ. 45.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ரூ. 9.72 கோடி 62 சிறுபாசன திட்டங்களிலும் ரூ. 45.09 கோடி 279 சிறுபாசனம் அல்லாத திட்டங் களிலும் செயல்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கு கடன் வழங்குவதுடன் பிரதம நிலவள வங்கிகள் சாதாரண திட்டத்தின் கீழும் கடன் வழங்குகின்றன.

பிரதம நிலவள வங்கிகள் நிலமற்ற விவசாயிகளுக்கு பல்வேறு காரியங்களுக்கு நில அடமானமின்றி கடன்கள் வழங்க ரூ. 6 கோடி அளவிற்கு அரசு உத்திரவாதம் வழங்கியுள்ளது.

1988–89ஆம் ஆண்டில் நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன்கள் வழங்கு வதற்கு அரசு நிர்ணயித்த மொத்த கடன் குறியீடான ரூ. 27 கோடிக்கு எதிராக பிரதம நிலவள வங்கிகள் சிறப்பு மற்றும் சாதாரண கடன் திட்டத்தின் கீழ் ரூ. 27.50 கோடி. அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன.

பிரதம நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி அவைகளின் முந்தைய ஆண்டில் கடன் வசூலைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. 31-3-1989-இல் பிரதம நிலவள வங்கிகளின் அங்கத்தினர்களின் கடன் நிலுவை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| (1) | (2) (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (அ) கேட்பு | 71.35 |
| (ஆ) வசூல் | 7.30 |
| (இ) நிலுவை | 64.05 |
| (ஈ) சதவீதம் | 89.8 (சதவீதம்) |

<u>கூட்டுறவு விற்பனை</u>: பிரதம கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு அவர்தம் வேளாண் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க பெரிதும் உதவு கின்றன. தமிழ்நாட்டில் இரண்டு கூட்டுறவு விற்பனை இணையங்களும் பதினொரு பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்களும் 478 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் செயல்படுகின்றன. இவ்வாண்டில் இச்சங்கங்கள் ரூ. 214.57 கோடி மதிப்புள்ள வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்துள்ளது. இது கடந்த ஆண்டின் சாதனையைவிட ரூ. 14.54 கோடி அதிகமாகும். இச்சங்கங்களால் விற்கப்படும் முழுமையான வேளாண் விளைபொருட்கள் நிலக்கடலை, பருத்தி, மிளகாய், மஞ்சள், சூரியகாந்தி விதைகள், உருளைக்கிழங்கு, கரும்பு மற்றும் காய்கறிகள் முதலியனவாகும். 14 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழக திட்டத்தின் கீழ் புத்துயிரூட்ட/மேம்பாட்டிற்காக ரூ. 1.00 இலட்சம் வீதம் பங்கு மூலதன நிதியுதவி வழங்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் துடியலூர் கூட்டுறவு விவசாய சங்கம் ஆகியவற்றின் மூலம் உரம், விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவை ரூ. 548.68 இலட்சத் திற்கு அறிக்கையாண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

<u>நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்</u>: தமிழ்நாட்டில் பொது மக்களின் தேவை களை நிறைவேற்றும் வகையில் 3,846 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும் செயல்பட்டு வருகின்றன. 1988–89 நிதியாண்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 1,024.57 கோடி மதிப்புற்ற நுகர்பொருட்களை விற்பனை செய்தன. 1987–88 நிதியாண்டில் விற்பனை ரூ. 873.43 கோடியாக இருந்தது. இவ்வாண்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல்வேறு மாநில அரசுத் திட்டங்களின் கீழ் ரூ. 90.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு ஆதரவு திட்டத்தின் கீழ் ரூ. 4.95 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கிராம பகுதி நுகர்வோர் திட்டத்தை செயலாக்க ரூ. 161.79 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. ரூ. 400.00 இலட்சம் மதிப்புள்ள தேசியமயமாக்கப்பட்ட பாட நூல்களையும் ரூ. 164.00 இலட்சம் மதிப்புள்ள மலிவு விலை நோட்டுப் புத்தகங் களையும் இச்சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை என்று துவக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 17,382 கிராமக் கடைகள் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. நட்டத்தில் இயங்கும் கிராமக் கடைகளுக்கு அரசு மானியத் தொகை வழங்குகிறது. 1988–89ஆம் ஆண்டில் கிராமக் கடைகள் மூலம் ரூ. 409.32 கோடியளவிற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் 21,134 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகள் மூலம் 128 இலட்ச குடும்ப அட்டைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகிறது.

## குடிமைப் பொருள்.

உணவுப் பொருள் நிலைமை.—தமிழ்நாட்டில் சுமார் 26 இலட்சம் ஏக்டேர் பரப்பில் நெல் பயிரிடப்படுகிறது. அதிலிருந்து கிடைக்கும் உற்பத்தி அரிசி சுமார் 55 இலட்சம் டன் ஆகும். இது இம்மாநிலத்தின் தேவைக்கு ஓரளவு போதுமானதாகும். 1988–89 ஆம் ஆண்டில் கிடைத்த உற்பத்தியளவு 55.00 இலட்சம் டன் அரிசியாக இருந்தது.

2. நெல்/அரிசி கொள்முதல்.—1988–89 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட நெல்/அரிசி கொள்முதல் முறை வருமாறு:—

| தொடர் எண். | கால அளவு. | கொள்முதல் செய்யும் முறை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) | 1–4–1988-லிருந்து 31–7–1988 வரை. | காவிரி வடிகால் பகுதியில் ஏகபோகக் கொள்முதல் திட்டமும், ஏனைய பகுதிகளில் 50 சதவீத வர்த்தகர் லெவி முறையும் செயலில் இருந்தன. |
| (2) | 1–8–1988-லிருந்து 14–9–1988 வரை. | மாநிலம் முழுவதிலும் 50 சதவீத வர்த்தகர் லெவி முறை மட்டும் செயலில் இருந்தது. |
| (3) | 15–9–1988-லிருந்து 31–3–1989 வரை. | காவிரி வடிகால் பகுதியில் மீண்டும் ஏகபோக கொள்முதல் திட்டமும், ஏனைய பகுதிகளில் 50 சதவீத வர்த்தகர் லெவி முறையும் செயலில் இருந்தன. |

தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார்கோவில், அறந்தாங்கி வட்டங்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிறி, லால்குடி, குளித்தலை, திருச்சிராப்பள்ளி, அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் ஏகபோகக் கொள்முதல் திட்டம் செயலில் இருந்தது. ஏகபோக கொள்முதல் மாவட்டத்திலுள்ள எஞ்சிய வட்டங்களிலும் ஏனைய மாவட்டங்களிலும் 50 சதவீத வர்த்தகர் லெவி முறை செயலில் இருந்தது.

1988–89 ஆம் ஆண்டில் செயலிலிருந்த நெல்/அரிசி கொள்முதல் விலை விவரம் வருமாறு :—

| தொடர் எண். | ரகம். | கால அளவும் குவிண்டால் ஒன்றுக்கான விலை விதமும். 1-4-1988-லிருந்து 30-9-1988 வரை. | 1-10-1988-லிருந்து 31-3-1989 வரை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 1. | நெல்: | | |
| | பொதுவான ரகம் | 150.00 | 160.00 |
| | சன்ன ரகம் | 154.00 | 170.00 |
| | நேர்த்தி ரகம் | 158.00 | 180.00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| அரிசி—புழுங்கல் அரிசி: | | | |
| | பொதுவான ரகம் | 236.35 | 251.15 |
| | சன்ன ரகம் | 242.30 | 265.95 |
| | நேர்த்தி ரகம் | 249.20 | 280.70 |
| பச்சரிசி: | | | |
| | பொதுவான ரகம் | 242.15 | 257.40 |
| | சன்ன ரகம் | 248.25 | 272.65 |
| | நேர்த்தி ரகம் | 254.35 | 287.90 |

ஏகபோக கொள்முதல் திட்டத்தின்கீழ் அரசுக்கு நெல்லை ஒப்படைக்கும் விவசாயிகளுக்கு கொள்முதல் விலையுடன், ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 35 ஊக்கத் தொகையும் கொடுக்கப்பட்டது.

இக்கால அளவில் 8.51 இலட்சம் டன் அரிசி (12.51 இலட்சம் டன் நெல்லும்) கொள்முதல் செய்யப்பட்டது.

3. <u>பொது விநியோக முறை.</u>—(1) தமிழ்நாட்டிலுள்ள பொது விநியோக முறையின் தனித்தன்மை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சில்லறை விற்பனை செய்யப்படுவதிலும், தனியார் வர்த்தகர்களை முற்றிலுமாக அகற்றியதும் ஆகும். சுமார் 128 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில், இம்மாநிலத்தில் 21,134 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 17,382 நியாய விலைக் கடைகள் கிராமப் பகுதிகளிலும், 3,752 கடைகள் நகர்ப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றன.

அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், பாமாயில், சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்கள், அவ்வப்போது அரசு வரையறுக்கக் கூடிய வழங்கல் அளவின்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன. குடும்ப அட்டைதாரர்கள் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அடிக்கடி கடைக்கு வராமல் அரிசி, மண்ணெண்ணெய் தவிர, அவர்களுக்குரிய ஏனைய இன்றியமையாப் பொருட்களின் ஒதுக்கீட்டளவை ஒரே தவணையில் வாங்க இயலும் வகையில் வழங்கல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. <u>உணவுப் பொருள் வழங்கல் கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயற்படுத்தல்.</u>—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகளை மீறியதற்காக எண்ணற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:—

| தொடர் எண். | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் வகை. | வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | கள்ளக்கடத்தல் | 1,656 |
| 2. | பதுக்கல் | 517 |
| 3. | கள்ளச் சந்தை விற்பனை | 365 |
| | மொத்தம் — | 2,538 |

1988–89 ஆம் ஆண்டில் நுகர் பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் கைப்பற்றிய உணவுப் பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 180.29 இலட்சமாகும். பறிமுதல் செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் மதிப்பு ரூ. 80 இலட்சமாகும். அவ்வாறே நுகர் பொருள் வாணிபக் கழகப் புலனாய்வுப் பிரிவு ரூ. 3.08 கோடி மதிப்புடைய இன்றியமையாப் பொருட்களைக் கைப்பற்றியது.

5. நுகர்வோர் பாதுகாப்பு.—நுகர்வோரின் உரிமைகளையும், நலனையும் மேம்படுத்திப் பாதுகாப்பது ''மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு''வின் நோக்கமாகும். ''மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின்'' கீழ் நான்கு துணைக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன. இத்துணைக் குழுக்கள், பொதுப் பயன்பாட்டுப் பணிகள், பொது விநியோக முறை, எடைகள், அளவைகள், மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள், உணவுக் கலப்படம், நுகர்வோர் கல்வி முதலியவை தொடர்பான பிரச்சினைகளை இந்தத் துணைக் குழுக்கள் ஆய்வு செய்து, தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு மாநிலக் குழுவிற்கு அறிக்கை அனுப்பியது. இந்தத் துணைக் குழுக்கள் இருமுறை கூடி அதாவது 25–4–1988, 10–10–1988 ஆகிய நாட்களில் கூடி, அரசுக்கு மதிப்பு வாய்ந்த சிறந்த கருத்துரைகளை வழங்கின. 'நுகர்வோர் கோட்பாடு' குறித்து மாணவர்களுக்கு அறிவுறுத்த, 1989–90 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ''நுகர்வோர் நலன் காத்தல்'' என்ற தலைப்பின்கீழ் ஒன்பதாம் வகுப்பிற்கான பாடத் திட்டத்தில் பாடம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

நுகர்வோர் நலனைப் பாதுகாப்பதை ஊக்குவிக்க, ''ஊழலை எதிர்த்துத் துணிகரப் போராட்டம்'' என்ற தலைப்பின் கீழ் சிறு அளவிலான திரைப்படம் ஒன்று இம்மாநிலம் முழுவதும் திரையிடப்பட்டது. ''பெட்ரோலிய எரி வாயு செய்தி'' என்று அழைக்கப்படும் மாத இதழ் ஒன்று தொடங்கப்பட்டு, பெட்ரோலிய எரி வாயுப் பயனீட்டாளர்களின் உரிமைகள் குறித்தும் நலன்கள் குறித்தும் அதில் விரிவாக அறிவுறுத்தப்படுகிறது. 1–4–1988லிருந்து 31–3–1989 வரையிலான கால அளவில் பயனீட்டாளர்களிடமிருந்து குறைபாடுகள் குறித்து வரப் பெற்ற மொத்தம் 1,001 கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது.

மத்திய, மாநில அரசுகள், நுகர்வோர் தொண்டு அமைப்புகளுக்குப் போதிய நிதியுதவி அளித்து வருகின்றன. திருச்சியில் நுகர்வோர் கல்வி குறித்து ஒரு நாள் பிரச்சாரத் திட்டத்தை நடத்துவதற்காக திருச்சியிலுள்ள நுகர்வோர் தொண்டு அமைப்புக்கு ரூ. 5,000 வழங்கப்பட்டது. 'நுகர்வோர் கோட்பாடு' குறித்த ஒரு நாள் கல்விப் பிரச்சாரத் திட்டத்தை நடத்துவதற்காக சென்னை மாநில நுகர்வோர் குழுவுக்கு ரூ. 5,000 அளிக்கப்பட்டது. 15–3–1989 அன்று மதுரையில் மாநில அளவில் மூன்றாம் மாநாடு நடத்தப்பட்டது. அன்றைய தினம் ''நுகர்வோர் நாளாகவும்'' கொண்டாடப்பட்டது. மேற்சொன்ன மாநாட்டை நடத்துவதற்காக, மத்திய அரசு ரூ. 30,000 அளித்துள்ளது.

நுகர்வோர் கோட்பாட்டுக் கல்விப் பிரச்சாரத்தில் தீவிரப் பங்கேற்கும் இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக, மத்திய அரசு இளைஞருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. மாநில அரசும் இதே போன்ற பரிசளிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

6. <u>தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம், 1988–89.</u>—இத்திட்டம் 1982 ஜூலை முதல் மாநிலம் முழுவதிலும், 5–9, 10–15 வயதுடைய பள்ளி செல்லும் அனைத்துக் குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 5–9, 10–15 வயதுடைய குழந்தைகளைப் பொறுத்த மட்டில், நுகர் பொருள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அரசிடமிருந்து தேவையான ஒப்புதலைப் பெற்ற பின்னர் மதிப்பீட்டு அதிகாரிகளின் அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நகராட்சி நிருவாகத்துறை இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் அளிக்கும் தேவைக் குறிப்புகளின்படி போதுமான நிதியை அளிக்க வகை செய்கிறார்.

இத்திட்டம் குறித்து ஏற்பட்ட மொத்தச் செலவும் இத்திட்டத்தினால் பயனடைந்தோரின் எண்ணிக்கையும் வருமாறு:—

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | |
| வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (1988–89) | 11,34,57 | 11,36,43 |
| 1988–89 ஆம் ஆண்டுக்கான செலவு | 8,12,91 | 10,57,18 |
| இத்திட்டத்தினால் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை. | 16,70,133 | 1,39,98,19 |

7. <u>1988–89 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டப் பணிகள்.</u>—தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு கிடங்கு வசதிக் கழகம் ஆகியவற்றுடன் சேர்ந்து இத்துறை செயற்படுத்திய திட்டங்கள், பின்வரும் மூன்று பெருந் தலைப்புகளின்கீழ் வருகின்றன.

(i) உணவு, சேமித்து வைத்தல், கிடங்கு வசதி.

(ii) நுகர்பொருள் வழங்கல்.

(iii) சத்துணவு.

(i) <u>உணவு, சேமித்து வைத்தல், கிடங்கு வசதி கூடுதலாகக் கிடங்குகளைக் கட்டுதல்</u>.— 1988–89 ஆம் ஆண்டில், தமிழ்நாடு கிடங்கு வசதிக் கழகம், ரூ.60 இலட்சம் செலவில் கூடுதலாக 1,38,000 மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் கொண்ட கிடங்குகளை கட்டக் கருதியது. இத்திட்ட இலக்கு முழுமையாக எய்தப்பட்டது. அரசு மேற் சொன்ன திட்டத்திற்கு மூலதனம் பங்குத் தொகையாக ரூ. 30 இலட்சம் நிதியுதவி அளித்தது. இவ்வாறு 2 இலட்சம் மெட்ரிக் டன் சேமிப்புத் திறனை ஏற்படுத்துவதற் கான ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட இலக்கு 1988–89 ஆம் ஆண்டிலேயே அதாவது ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காம் ஆண்டிலேயே எய்தப்பட்டது.

(ii) <u>நுகர்பொருள் வாணிபம்: நெறிப்படுத்தலும், நிருவாகமும்</u>.— (a) விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக, 1988–89-ல் அரசு தொடரின் மானியமாக ரூ. 3 இலட்சம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வட்டார மையத்திற்கு அனுமதித்தது.

(b) நெல் அரைப்போருக்கு உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொழில் பிரிவும் ரூ. 5,000 வீதம் 300 அரிசி ஆலைகள் உதவித் தொகை பெறும்; இந்த அரிசி ஆலைகளுக்கு உதவித் தொகையை மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் (50:50) வழங்கும். எஞ்சிய செலவுத் தொகையை ஆலை உரிமையாளர்கள் ஏற்பர். தமிழ்நாடு அரசு அதன் பங்கு உதவித் தொகையைச் சரிக்கட்டிக் கொள்வதற் காக மத்திய அரசு அதன் பங்கு உதவித் தொகை கடன் தொகை ஆகிய வகைகளில் அனுமதித்த தொகை ரூ. 15 இலட்சம் மாவட்ட ஆட்சியர்களின் பொறுப்பில் வைக்கப் பட்டது. மேலும், நவீனமாக்கும் திட்டம் 1988–89–ல் செயலாக்கப்பட்டது. எனினும், எந்திரங்களின் விலை அதிகரித்ததன் காரணமாக, மத்திய அரசு, உதவித் தொகையை அரிசி ஆலை ஒன்றுக்கு 7,500 ரூபாயாக அதிகரித்தது; அதன் காரணமாக பயனீட் டாளர்களின் எண்ணிக்கை 200 ஆகக் குறைக்கப்பட்டது. இலக்கிடப்பட்ட 200 அரிசி ஆலைகளில், 157 அரிசி ஆலைகளுக்கு 1988–89-ல் நவீன அரிசி ஆலை எந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன; 200 அரிசி ஆலைகளுக்கு நவீன எந்திரங்கள் வழங்க வேண்டு மென்கின்ற திட்ட இலக்கு 1989–90ல் எய்தப்படும். தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வழங்கிய உணவுப் பொருட்களின் விலை வேறுபாட்டுத் தொகைக்காக மேற்படி கழகத்திற்கு 1988–89–ல் ரூ. 2,974·34 இலட்சம் கொடுக்கப்பட்டது.

(iii) <u>உதவித் தொகைகள்</u>.— கொள்முதல் விலையைக் காட்டிலும் குறைந்த விலைக் குப் பொது விநியோக முறையின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்குதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விலை மேம்பாட்டுத் தொகையை உதவித் தொகையாக வழங்குதல் ஆகியவை பொது விநியோக முறையில் முக்கிய அம்சங்களாகும். 1988–89-ல், மேற்கூறிய வகையில், உதவித் தொகையாகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூ. 127.74 கோடி வழங்கப்பட்டது.

# அத்தியாயம் 8

## கல்வித்துறை.

### பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

பள்ளிசாரா கல்வி இயக்கமானது, எல்லோருக்கும் தொடக்கக் கல்வி, என்ற திட்டத்தின்கீழ் 1976 இல் நிறுவப்பட்டது. 6—14 வயதுக்குட்பட்ட எழுத்தறியா தோர்க்கும், பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டவர்களுக்கும், பள்ளியிலிருந்து தள்ளப்பட்டவர்களுக்கும் அடிப்படை எழுத்தறிவு தந்து, மீண்டும் அவர்களைப் பள்ளி கல்விக்குக் கொண்டு சேர்ப்பதை நோக்கமாகக்கொண்டு இவ்வியக்ககம் நிறுவப்பட்டது.

1978இல் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தினை மத்திய அரசு மாபெரும் இயக்கமாகத் தொடங்கியது. அத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் நிறைவேற்றும் பொறுப்பு இவ்வியக்ககத்திடம் விடப்பட்டது.

இவ்வியக்ககத்திற்கு 1987-88ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு 736 இலட்சமாகும்.

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர், மேற்படி கல்வி இலாகா விற்குத் தலைமை தாங்குவதுடன், பள்ளி சாராக் கல்வி மற்றும் வயதுவந்தோர் கல்வி வளர்ச்சிக்கான அரசுத் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு உள்ளவராக இருப்ப துடன், தொண்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், நேரு இளைஞர் நற்பணி மன்றங்கள் ஆகியவை செயல்படுத்தும் வயதுவந்தோர் கல்வித் திட்டங்களை வழிமுறைப் படுத்துபவராகவும் இருக்கிறார். மாநில வயதுவந்தோர் கல்வி வாரிய மானது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கு கிறது. இவ்வாரியமானது, பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்தளிக் கிறது. இவ்வாரியத்தில் அலுவல் வழிச் செயலராக, இயக்குநர் செயல்படுகிறார். தமிழக அரசின் கல்விச் செயலரைத் தலைவராகக் கொண்டு வழிப்படுத்துக்குழு ஒன்றும் இயங்குகின்றது.

பள்ளிசாராக் கல்வி.—6—14 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு, பள்ளிகளுக்கு வெளியே கற்றல் வாய்ப்புக்களை நல்கும் வகையில் 1976-77இல் பள்ளிசாராக் கல்வித் திட்டமானது, தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டது. படிக்காதவர்கள், படிப்பைத் தொடராதவர்கள், பள்ளியிலிருந்து தள்ளப்பட்டவர்கள், ஆகியோர் மீண்டும் பள்ளியிலே சேர்ந்து படிக்கும் வாய்ப்பை நல்கும் முறையில் இத்திட்டம் செயல்படுவ தால், பள்ளிக் கல்விக்கு இத்திட்டம் உறுதுணையாக விளங்குகிறது என்றே கூறலாம்.

இரண்டு பள்ளிசாரா கல்வித் திட்டங்கள், சென்னையில் ஒன்றும் சிவகாசிபகுதியில் ஒன்றும் 1—12— 1988 முதல் ஒவ்வொரு மையத்திலும் 25 கற்போர்கள் வீதம் செயல் படுகின்றன. மூன்றாண்டுகளில் இம்மையங்களில் 5ஆம் வகுப்பு அளவுக்கு கற்பிக்கப் படுகிறது. மேற்படி மையங்களின் உள்ள கற்போர் விவரம் :—

| | மாணவர். | மாணவி. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆதிதிராவிடர் | 1,175 | 3,825 | 5,000 |
| ஆதிதிராவிடர் | 694 | 1,221 | 1,915 |
| மலைவாழ் மக்கள் | | 25 | 25 |

ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்.—ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டமானது, மைய அரசின் முழு நிதி உதவியுடன் மாநில அரசின் வாயிலாக நடத்தப் பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் தற்போது 27 ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டங்கள் 8,100 மையங்களில் நடைபெற்று வருகின்றன. ஒரு திட்டத்திற்கு முத லாண்டு ரூ. 15.54 இலட்சமும் அடுத்து வரும் ஆண்டுகளில் ரூ. 13.89 இலட்சமும் செலவாகின்றது. இவ்வாண்டில் இத்திட்டம் மூலம் பயனடைந்தோர் விவரம் வரு மாறு :—

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கற்போர் | 98,888 | 1,77,580 | 2,76,468 |
| தாழ்த்தப்பட்டோர் | 46,304 | 69,619 | 1,15,923 |
| பழங்குடியினர் | 550 | 662 | 1,212 |

மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம்.—மாநில வயது வந்தோர் கல்வித்திட்டம் சென்னையைத் தவிர, 19 மாவட்டங்களில் 152 திட்டப் பகுதிகளில் நடைபெற்று வருகிறது. ஒரு மையத்திற்கு 30 கற்போர் வீதம், 100 மையங்கள் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் நடைபெறுகிறது. இவ்வடிப்படையில் தற்போது 15,200 மையங்கள், தமிழக அரசின் முழு நிதி உதவியுடன் நடைபெற்று வருகின்றது. திட்டச் செலவானது முதல் ஆண்டில் ரூ. 1.82 இலட்சமும், தொடர்ந்து வரும் ஆண்டுகளில் ரூ. 1.76 இலட்சமும் ஆகும்.

பயனடைந்தோர் விவரம் :

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கற்போர் | 1,60,025 | 3,56,879 | 5,16,904 |
| தாழ்த்தப்பட்டோர் | 70,747 | 1,33,846 | 2,04,593 |
| பழங்குடியினர் | 5,111 | 4,792 | 9,903 |

ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம்.—ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1987-88இல் ஐந்து திட்டங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டன. அவை சேலத்தில் (ஏற்காடும், கொல்லிமலையும்) இரண்டும், வடாற்காடு மாவட்டத்தில் ஒன்றும் (ஜவ்வாது மலை) தென்னாற்காட்டில் ஒன்றும், (கல்வராயன் மலை), திருச்சியில் (பச்சைமலை) ஒன்றும் ஆகும். இதன் மூலம் பயன் பெறுபவர்களின் விவரம் வருமாறு :—

வயது வந்தோர் கல்வி :

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கற்போர் | 2,682 | 758 | 3,440 |
| பழங்குடியினர் | 2,682 | 758 | 3,440 |
| பள்ளிசாராக் கல்வி : | | | |
| கற்போர் | 2,136 | 1,319 | 3,455 |
| பழங்குடியினர் | 2,136 | 1,319 | 3,455 |

உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம்.—நகர்ப்புறம் மற்றும் தொழிற் நகரங்களில் வாழும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யவும், திட்டமிட்டு செயலாற்றவும் உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம், மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டது. சென்னை நகரத்தில் 1982 திருச்சியில் 1986–லும் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது.

இம்மூன்று இடங்களிலுமாக இதுவரை 3,534 பயிற்சிகள், 1,14,511 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் நலன்களுக்காக நடத்தப்படுகின்றன.

தொடர் கல்வி நிலையங்கள் (ஜனசிக்ஷன் நிலையம்).—தொடர் கல்வி நிலையம், நிரந்தரமாகச் செயல்படும் அமைப்பாகும்.

மைய அரசின் நிதி உதவியுடன் 700 தொடர் கல்வி நிலையங்கள் 2–10–1988 முதல் தமிழகத்தில் தொடங்கப்பட்டன. புதிதாகக் கல்வி அறிவு பெற்றோர் மற்றும் மிகக் குறைந்த கல்வி அறிவு பெற்றுள்ளவர்கள் பயன் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் தொடர் கல்வி நிலையங்கள் நிரந்தர அமைப்பாக நிறுவப்பட்டுள்ளன. மேலும், 300 தொடர் கல்வி மையங்கள் தொடங்கவும் மைய அரசு அனுமதி அளித்துள்ளது. இவைகளைத் தொடங்க மாநில அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு தொடர்கல்வி மையமும் 10-12 வயது வந்தோர் கல்வி மையங்களுக்குச் சேவை செய்கிறது. செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவை கற்போரின் நலனுக்காக அளிக்கப்படுகின்றன.

1988-89இல் 10.00 இலட்சம் எழுத்தறியாதோரைக் கற்றவராக மாற்றுவதெனக் குறிக்கோள் வகுக்கப்பட்டது. ஆனால், 10.01 இலட்சம் எழுத்தறியாதோருக்கு கல்வி கற்பிக்கப்பட்டது.

அழகப்பா பல்கலைக்கழகம்

பல்கலைக் கழகத்தின் தோற்றம்.—தமிழக அரசு கொணர்ந்த சட்டத்தின் மூலம் 1985 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் நாள் தமிழகத்தின் பதினோராவது பல்கலைக் கழகமாக நிறுவப்பெற்ற அழகப்பா பல்கலைக் கழகம் :—

(1) அவ்வப்போது ஏற்படுத்தும் புதுத் துறைகளில் படிப்பும், பயிற்சியும் தருதல்.

(2) ஆராய்ச்சியும் அறிவு முன்னேற்றமும், அறிவு பரப்பலும் ஆகியவற்றுக்கு ஆவன செய்தல்

ஆகிய அடிப்படை நோக்கங்களுடன் செயற்பட்டு வருகின்றது.

" செயலிற் செம்மை " என்பது அழகப்பா பல்கலைக் கழகத்தின் குறிக்கோள் வாசகம். இது வெறும் குறிக்கோள் வாசகம் மட்டுமன்று ; அஃது ஒவ்வொருவரின் உயிர்ப்பிலும் எதிர்பார்க்கப்படுவது. எனவே, அழகப்பா பல்கலைக் கழகம் எல்லாத் துறைகளிலும் செயல் மேன்மைக் கோட்பாட்டையே தனது பணியின் எதிர் நோக்காகச் செயற்பட உறுதி கொண்டுள்ளது.

புலத் துறைகளும், கல்லூரிகளும், படிப்புகளும் — இப்பல்கலைக் கழகம் தோன்றிய போது கல்வியியற் கல்லூரி, உடற்கல்வியியற் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளையும், நான்கு முதுகலைத் துறைகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இப்பொழுது பயிற்றுதலும் ஆராய்ச்சியும் உடைய முழுமையான 10 புலத் துறைகள் உள்ளன. அவை தமிழியல், கணிதவியல், வணிகவியல், இயற்பியல், தொழிலக வேதியியல், கணிப்பாணியல், நிருவாகச் செயலரியியல், கல்வியியல் உடற்கல்வியியல், மகளிர் படிப்பியல் ஆகியன வாகும். அழகப்பா பல்கலைக் கழகக் கல்வியியற் கல்லூரியும், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியற் கல்லூரியும் பல்கலைக் கழகத்தின் இணைவுக் கல்லூரிகளாக செயற்பட்டு வருகின்றன.

இவ்வாட்டாரத்தின் தேவைகளை எதிர்கொள்ளும் அளவிலும், தேசிய அளவில் குறிக்கொண்ட முதன்மைப் பணிகளுடன் இணைந்து செல்லும் பான்மையிலும் இப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் முதுகலைப் பாடத்திட்டங்களும், செய்யப்படும் ஆராய்ச்சியின் பாடத்திட்டங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழியல், கணிதவியல், வணிகவியல், தொழிலக வேதியியல், கணிப்பான்- பயன் பாட்டியல், நிருவாகச் செயலரியியல், கல்வியியல், உடற்கல்வியியல், மகளிர் படிப்பியல் ஆகிய புலத் துறைகளின் பாடத் திட்டங்கள் இவ்வாறு வடிவமைக்கப் பெற்றுள்ளன. வேலை வாய்ப்பைக் கருதி, கல்வித் திட்டம் புத்தாக்கம் பெற்றுள்ளது. அறிவு பெறுதலில் இடையீடுகளை நீக்கும் வகையிலும், இவ்வட்டாரத்தின் முதன்மைத் தேவைகளைக் கண்டறிந்து செயற்படும் நிலையிலும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. உயர்கல்வி சமுதாயத்தின் நிகழ்காலத் தேவைகளை நிறைவாக்கும் வகையில், மனித ஆற்றல் வெளிப்பாட்டிற்கு ஏற்ற தொழில் பயிற்சி அளித்தல், திறமை வெளிப்பாடு, தனித்துறை பயிற்சி பெறல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு, முறையான கல்வித் திட்டமிடலாலும், பல்கலைக்கழகத்தின் நிதி ஆதாரங்களுக்கு ஏற்ற வகையில் ஒருங்கிணைந்த நிலையிலும், பாடத்திட்டங்கள் உருவாக்கப் பெற்றுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சுயவேலைவாய்ப்பு, தொழில் முனைவோர் திட்டம் ஆகியவற்றில் மாணவர்கள் ஈடுபட, வழிவகுக்க வேண்டி தொழில் முனைவோர்த் திட்டம், வணிகவியல் முதுகலைப் படிப்பில் சிறப்புப் பாடமாகவும், இயற்பியல் முதுகலைத் துறையில் கருவியாக்கம் சிறப்புப் பாடமாகவும் அமைக்கப் பெற்றுள்ளன.

தனித்தன்மை பெற்ற தொழிலக வேதியியல், கணிப்பான் பயன்பாட்டியல், நிருவாகச் செயலரியியல், கணிதவியல், இயற்பியல், கல்வியியல், உடற்கல்வியியல், தமிழும் கோயிற்கலையும் ஆகிய படிப்புக்களுடன், மகளிர் படிப்பியல் துறையும், முதியோர் கல்வி, முறைசாராக் கல்வித்துறையும் ஆகிய இரண்டும் கூடுதலாகத் தொடங்கப் பெற்றுள்ளன. மகளிரின் தனித்தன்மை, தகைமை, தொழில் முனையும் திறன், ஆற்றல், ஆகியவற்றை மகளிர் பெறுவதற்கும், வெளிக்கொணர்வதற்கும் ஏற்ற வகையில் மகளிர் படிப்பியல் பாடத் திட்டங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. முதியோர் கல்வி முறைசாராக் கல்வி படிப்பியல், பழிக்கேடான எழுத்தறிவின்மையை எதிர்த்துப் போராடும் பயிற்சி பெற்ற, ஊக்கமுடைய அலுவலர்களை நல்கும்.

நிறுவனச் செயலரியியற் படிப்பு தனித்தன்மை பெற்றதாகும். தொழிலக வேதியியல் துறை நல்கும் நெசவு வேதியியல், மீன் வேதியியல் ஆகியன செய்முறைத் தொடர்புடைய சிறப்பான தனித்தன்மை வாய்ந்த படிப்பாகும். மீன் வேதியியல் நெறிப்புப் பயிற்சி காரைக்குடியில் உள்ள மைய மின் வேதியியல் ஆய்வகத்தின் கூட்டுறவுடன் நடத்தப் பெற்று வருகிறது.

மாணவர் எண்ணிக்கை (1988--89) :

| வரிசை எண். | படிப்புத் துறைகள். | மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | எம்.ஏ., தமிழும் கோயிற்கலையும் .. | 4 |
| 2 | எம்.எஸ்.ஸி. கணிதவியல் .. | 21 |
| 3 | எம்.எஸ்.ஸி. இயற்பியல் .. | 20 |
| 4 | எம்.எஸ்.ஸி. தொழிலக வேதியியல் .. | 22 |
| 5 | எம்.காம். .. | 24 |
| 6 | எம்.பி.ஏ. .. .. .. | 40 |
| 7 | எம்.ஏ. நிறுவனச் செயலரியியல் .. | 23 |
| 8 | எம்.ஏ. முதியோர் கல்வி முறைசாராக் கல்வியியல் | 9 |
| 9 | எம்.ஏ., மகளிர் படிப்பியல் | 12 |
| 10 | எம்.பில். தமிழ் (முழு நேரம்) | 10 |
| | எம்.பில். தமிழ் (பகுதி நேரம்) | 10 |
| 11 | எம்.பில். கணிதவியல் (முழுநேரம்) | 15 |
| | எம்.பில். கணிதவியல் (பகுதிநேரம்) | 14 |
| 12 | எம்.பில். இயற்பியல் (முழுநேரம்) .. | 7 |
| | எம்.பில். இயற்பியல் (பகுதி நேரம்) | 8 |
| 13 | எம்.பில். தொழிலக வேதியியல் (முழுநேரம்) | 12 |
| | எம்.பில். தொழிலக வேதியியல் (பகுதிநேரம்) | 12 |
| 14 | எம்.பில். வணிகவியல் (முழுநேரம்) | 17 |
| | எம்.பில். வணிகவியல் (பகுதிநேரம்) | 11 |
| 15 | எம்.பில். நிறுவனச் செயலரியியல் (முழுநேரம்) | 6 |
| 16 | எம்.பில். கல்வியியல் (முழுநேரம்) .. .. | 8 |
| | எம்.பில். கல்வியியல் (பகுதிநேரம்) .. | 16 |
| 17 | எம்.பில். உடற்கல்வியியல் (முழுநேரம்) | 5 |
| | எம்.பில். உடற்கல்வியியல் (பகுதிநேரம்) .. | 15 |
| 18 | பிஎச்.டி. (அனைத்துத் துறைகளும்) | |
| | பிஎச்.டி. (முழுநேரம்) .. .. | 11 |
| | பிஎச்.டி. (அனைத்துத் துறைகளும்) (பகுதிநேரம்) | 3 |
| 19 | பிஎச்.டி. (பல்கலைக்கழக நிதியுதவியுடன்) | 12 |

இணைவுக் கல்லூரிகள் :

அழகப்பா பல்கலைக்கழகப் பயிற்சிக் கல்லூரி.

| | | |
|---|---|---|
| 20. | பி.எட். .. .. .. .. | 120 |
| 21 | எம்.எட். .. | 10 |

அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்விக் கல்லூரி

| | | |
|---|---|---|
| 22. | எம்.பி.எட். (ஈராண்டு— முதல்நிலை) .. .. | 36 |

தொலைக்கல்வித் தொடர்புத் திட்டம் :

| | | |
|---|---|---|
| 23 | கணிப்பானியல் பெருஞ்சான்றிதழ் | 322 |
| | மொத்தம் | 888 |

<u>ஆராய்ச்சி.</u>—இப் பல்கலைக் கழகத்தை ஓர் ஆராய்ச்சிப் பல்கலைக் கழகமாக் வளர்க்கும் தொலை நோக்கோடு பெரும் ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ள இப் பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது. இதற்குத் தக, செம்மையாக அமைந்த முதுகலை பட்டப்படிப்பை அடிப்படையாக உடைய ஒவ்வொரு துறையும் ஆராய்ச்சி நோக்குடையது.

இவ்வட்டாரத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் நீண்டகால குறுகிய கால கல்வி, அறிவியல், தொழிலியல், சமுதாயவியல், தேவைகளுக்கேற்பச் சிறப்பு நோக்கோடு பாடத் திட்டங்களும், ஆய்வுத் திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சார்ந்த புலத்துறை முனைவர்கள் அடங்கிய குழுக் களைக் கொண்டு அனைத்துத் துறைகளில் ஆய்வுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நெறிப் படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பல்துறையிடை ஆய்வுகளுக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழகம் தோன்றிய நான்காண்டுகளுக்குள், அழகப்பா பல்கலைக்கழகம் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கூட்டமைப்பிலும், காமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பிலும் ஓர் உறுப்பினராகி உள்ளது. இணை ஆராய்ச்சி, ஆசிரியர்/மாணவர் பரிமாற்றம், அறிவியல் கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றில் இணைந்து செயற்பட இப் பல்கலைக் கழகம் அமெரிக்க ஐக்கிய நாட்டு விஸ்கான்சின் பல்கலைக் கழகத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. யூகோஸ்லேவியாவில் 'குப்ரோவ்னிக்' என்னும் இடத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் முதுகலைத் துறைகளின் முதுகலை மையத்திலும் இப் பல்கலைக்கழகம் ஓர் உறுப்பினராக உள்ளது.

<u>பல்கலைக்கழக ஆய்வு மாணவியம்.</u>—ஒவ்வொரு துறையிலும் முதன்மைத் திற னுடைய ஆய்வு ஆர்வமுடைய முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவித் தொகையோடு கூடிய மாணவியல் இப் பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது. ஒவ்வொரு துறையும் எம்.பில்., பிஎச்.டி., ஆய்வுகளுக்கு வாய்ப்பளித்து வருகின்றது. முனைவர் பட்டத்திற்கு முழுநேர/பகுதிநேர ஆய்வாளர்களாக 61 பேர் ஆய்வு மேற்கொண்டுள்ள னர். வரும் கல்வியாண்டிலிருந்து (1989—90) கணிப்பான் பயன்பாட்டியல் துறையில் எம்.பி.-ல் ஆய்வுக்குத் திட்டமிடப் பெற்றுள்ளது. மகளிர் படிப்பியல் துறையிலும் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

முனைவர் பட்ட ஆய்வாளர் பதிவு :

| தொடர் எண். | துறை. | ஆண்டு. | பதிவு. | கூடுதல் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | தமிழியல் | 1987—88<br>1988—89 | 4<br>4 | 8 |
| 2 | கணிதவியல் | 1988—89 | 4 | 4 |
| 3 | இயற்பியல் | 1988—89 | 6 | 6 |
| 4 | வணிகவியல் | 1987—88<br>1988—89 | 5<br>2 | ..<br>7 |
| 5 | தொழிலக வேதியியல்<br>மையமின் வேதியியல் ஆய்வகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. | 1988—89 | 1<br>36 | 37 |
| 6 | கணிப்பான் பயன்பட்டியல் | 1988—89 | 1 | 1 |
| 7 | நிறுவனச் செயலரியியல் | 1988—89 | 6 | 6 |
| 8 | கல்வியியல் | 1988—89 | 3 | 3 |
| 9 | மகளிர் படிப்பியல் | | | . |
| 10 | உடற்கல்வியியல் | 198[illegible] | 5 | [illegible] |

1988—89 ஆம் ஆண்டில் நடைபெற்ற கருத்தரங்குகள்/பணிமனைகள் :

| | | |
|---|---|---|
| 1. | கோயிற்கலைக் கருத்தரங்கு | 8—4—1988<br>9—4—1988 |
| 2. | எதிர்வு இயல் விழிப்புணர்ச்சித் திட்டக் கருத்தரங்கு (இந்திய அரசு அறிவியல் தொழில் நுட்பவியல் துறையுடன் இணைந்து நடத்தப் பெற்றது). | 16—5—1988<br>18—5—1988 |
| 3. | கோயிற்கால கட்டிடக்கலை தேசியக் கருத்தரங்கு (பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதியுதவியுடன் நடத்தப் பெற்றது) | 8—10—1988<br>11—10—1988 |
| 4. | ஆராய்ச்சி நெறிமுறைகள் பணிமனை (இந்திய தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி மன்றத்துடன் இணைந்து நடத்தப் பெற்றது) | 8—12—1988<br>11—12—1988 |
| 5. | நிதி நிருவாகப் புதுப்புது போக்குகள் கருத்தரங்கு | 20—2—1989<br>21—2—1989 |
| 6. | அரசுப் பணித் தேர்வுகளில் தமிழக மகளிர் வீழ்நிலைக் கருத்தரங்கு. | 8—3—1989 |
| 7. | உடல்நல விழிப்புணர்ச்சி முகாம் | 9—3—1989<br>15—3—1989 |
| 8. | மேனிலைப் பள்ளிகளில் தற்கால நிகழ்போக்குகள் கருத்தரங்கு | 4—4—1989 |
| 9. | மகளிர் மேம்பாட்டுக் கருத்தரங்கு | 27—4—1989 |

கணிப்பான் மையம்.—பல்கலைக்கழக மானியக்குழு இப்பல்கலைக் கழகத்தில் கணிப்பான் மையம் அமைப்பதற்கு ரூ. 14 லட்சம் வழங்கியுள்ளது. ' விப்ரோ ' நிறுவனத்தாரிடமிருந்து பெற்ற முதல்தரமான கணிப்பான் பொறி இப்பல்கலைக் கழகத்தில் நிறுவப் பெற்றுள்ளது. ஆசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், விரிவாக்கப் பணிகளுக்கும் இம்மையம் பயன் நல்கி வருகின்றது. பல்கலைக்கழகத்தில் செய்தி சேகரிப்புக்கும், தேர்வு முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கும், ஆய்வுப்பணிகளுக்கும் இம்மையம் வழி வகுத்து வருகின்றது.

மகளிர் படிப்புகள்.—அனைத்து நிலைகளிலும் உள்ள இந்திய மகளிர் ஆற்றலை வளப்படுத்தவும், நெறிப்படுத்தவும் பல்முனை முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. தேசிய முன்னுரிமையும், கொள்கை அமைப்பும் உடைய இக்கருத்தினை மனத்திற் கொண்டு மகளிர் படிப்பு, கிராமப்புறத் தொழிலியல் மையம் 1987 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் அமைக்கப்பெற்றது. கற்பித்தல் ஆராய்ச்சி வாயிலாக மகளிர்நிலை, மகளிர்பங்கு, மகளிர்உரிமை முதலியவற்றில் சிறந்த மாற்றம் காண இம்மையம் இயங்கி வருகின்றது.

மகளிர் மேம்பாடு, ஆள்வினையுடைமை ஆகிய இரண்டும் இம்மையத்தில் இன்றியமையாக் களங்களாகும். மகளிர் வலிமையற்ற / உரிமையற்றவர் என்ற நிலையை மாற்றி திறன்மிகு முனைவர் என்ற நிலைக்குக் கொண்டு வருதலே இம் மையத்தின் குறிப்பிடத்தக்க நோக்கமாகும். இவ்வளாகத்தில் கிடைக்கும் ஆதாரங் களுக்கு ஏற்ப இக்கல்வியாண்டில் முதுகலை மகளிர் படிப்புகள் தொடங்கப் பெற்றுள்ளது; பல்கலைக்கழகத்தில் வணிகவியல், கல்வியியல், நிருவாகச் செய லரியியல், உடற்கல்வியியல் போன்ற பிற புலத்துறைகளும் இத்துறைக்குத் கற் பித்தலில் துணைபுரிந்து வருகின்றன. தொழில் முனைவோர்த் திட்டம் குறிப்பிடத் தக்கதாக உள்ளது. பட்டம் பெறுதற்கு முன்னர், பயில்வோர் திட்ட அறிக்கைப் பணித்தல் வேண்டும்.

பல்வேறு நிலைகளிலும் மகளிர் பங்கு பெறுதலை ஊக்குவிக்கவும், நெறிப் படுத்தவும் (1) ' அரசு அலுவலர் தேர்வுகளில் தமிழக மகளிர் வீழ்நிலை '—கருத் தரங்கு (2) மேனிலைப் பள்ளிகளில் நிகழ்முறைக் கருத்தரங்கு போன்ற பல திட்டங் களை இத்துறை மேற்கொண்டு வருகின்றது.

மேலும் மகளிர் மேம்பாட்டுக் கொள்கை அமைப்பாளர்களுக்கு அவர்தம் திட்ட நெறிப்படுத்துதலில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து களைய இம்மையமும் ஆய்வு முறை வழி உதவி வருகின்றது.

வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயற்படுத்த அண்மையிலுள்ள இலுப்பக்குடி கிராமத்தை இத்துறை ஏற்றுக் கொண்டுள்ளது. எம். பில்./பி.எச்டி. ஆய்வுகளுக்கும் இத்துறை திட்டம் மேற்கொண்டுள்ளது.

தேர்வுச் சீரமைப்பு.—கற்றல், கற்பித்தல், மதிப்பிடுதல் ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைப்பு காணும் வகையில் பருவமுறைத் தேர்வு, தொடர், மதிப்பீட்டு முறை—மைய மதிப்பீடு ஆகியன சீரமைக்கப் பெற்றுள்ளன. பாடத் திட்டங்களில் கூறுகள் பிரிக்கப்பட்டு, அக்கூறுகளில் இருந்து வினாக்கள் அமைவதால் மாணவர்கள் ஒவ்வொரு கூறிலும் கருத்தூன்றி முறையாகக் கற்க இயலுகின்றது.

ஒவ்வொரு கூறிலும் வினாவும் மாற்று வினாவும் அமையும். பரந்த முறையில் அமையாமல் குறிப்பிட்ட முறையில் அமைவதால் மாணவர் கற்பறிவு குறுகியதாக அமையாமல் ஆழமுடையதாக அமைகிறது. தேர்வுகள் தனியியலாக வேறுபாடின்றி, சிறந்த மேற்பார்வையின்கீழ் நடத்தப் பெற்று வருகின்றன. ஒழுங்கீனங்கள் இருப்பின் முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஊரக வளர்ச்சி இருக்கை.—ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக கனரா வங்கி ரூ. 5 லட்சம் வைப்பு நிதி வழங்கியுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வருவாய் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. கிராமப்புற மகளிருக்கும், கைவினைஞர்களுக்கும், பயன் நல்கும் பல்வேறு நலத்திட்டங்கள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

முதியோர் கல்வி.—பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் முதியோர் கல்வி மையமும், தொடர் கல்வி—விரிவாக்கக் கல்வி மையமும் தொடங்க விரிவான திட்டங்கள் வரையப் பெற்று, பல்கலைக்கழகம் அமைந்துள்ள சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராமங்களில் கல்வி அறிவின்மையைக் களைவதற்காக முயற்சி மேற்கொள்ளப் பெற்றுள்ளது. உரிய கால இடைவெளியில் கிராம மக்கள் நூற்றுக்கு நூறு விழுக்காடு எழுத்தறிவு பெறுவதற்காக பல்வேறு நிலைகளில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதல் நிலையில் சாக்கோட்டை ஒன்றியத்திலும், இரண்டாம் நிலையில் காரைக்குடி வட்டாரத்திலும், மூன்றாம் நிலையில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் முழுவதிலும் எழுத்தறிவின்மை நீக்கம் மேற்கொள்ளப் பெறும். எழுத்தறிவின்மை நீக்க நிகழ் நிலை வளர்ச்சிப் பணிகளில் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகின்றது.

பல்கலைக்கழக மானியக் குழு 50 முதியோர் கல்வி மையங்கள் அமைக்க இப்பல்கலைக் கழகத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இதற்கிடையில் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியில், சமுதாயக் கல்வித் தேவைகளைக் கண்டறிவதற்கும், எழுத்தறிவின்மை நீக்கத் திட்டத்தில் தக்க முறையில் உதவுவதற்கும் முன்னோடிப் பரப்பாய்வு மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

## அண்ணா பல்கலைக்கழகம்.

கல்வித்திட்டம்.—இவ்வாண்டில் 21 பட்டப்படிப்புகளும், 33 பட்ட மேற்படிப்புகளும், 5 பட்டமேற்பட்டயப் (P. G. Diploma) படிப்புகளும், மேலும் பல துறைகளில் (M. Phil) மற்றும் (Ph. D) பட்டங்களுக்குரிய திட்டங்களும் இப்பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டன.

புதிய பட்டப்படிப்புகள்.—இரப்பர் தொழில் நுட்பம் என்ற இளநிலை தொழில் நுட்ப பட்டப்படிப்பும் (M.sc). (ஆராய்ச்சிப்பட்டம்) என்ற அறிவியல் முதுநிலை பட்டமேற்படிப்பும், சுற்றுப்புறச் சூழல் அறிவியல் என்ற ஆய்வுமுதுவர் (M.Phil) என்ற புதிய படிப்புகளும் இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

மாணவர் சேர்க்கை.—1988-89 ஆம் வருடத்தில் இப்பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 4,865. அவர்களுள் 663 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர். 46 பேர் அயல்நாட்டு மாணவர்கள் மற்றும் 830 பேர் மாணவிகள். சேர்ந்துள்ள 4,865 மாணவர்களுள், 3,397 பேர் பட்டப்படிப்பையும், 1,468 பேர் மேற்பட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்பினையும் சார்ந்தவர்கள்.

பட்டம் அளித்தல்.—இப்பல்கலைக்கழக ஒன்பதாவது பட்டமளிப்பு விழா 1989-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி நடைபெற்றது. அவ்வமயம், பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தின் இயக்குநரும், மற்றும் பாரதப் பிரதமரின் அறிவியல் ஆலோசனைக் குழுவின் தலைவருமான பேராசிரியர் சி. என். ஆர். ராவ் அவர்கள் பட்டமளிப்பு விழா சிறப்புரையாற்றினார். 510 மாணவர்கள் நேரிலும், 769 மாணவர்கள் அஞ்சலிலும் பட்டங்களைப் பெற்றனர்.

## ஆராய்ச்சிச் செயல்பாடுகள் :

ஆராய்ச்சிப்படிப்பு.—இந்த ஆண்டு 62 ஆராய்ச்சி மாணவர்கள் ( Ph.D. ) பட்டத்திற்காக பதிவு செய்திருந்தனர்.

மையங்கள்/நிறுவனங்களின் ஆராய்ச்சி.—கோடிக்கணக்கான உழைப்பாளர்களை உள்ளடக்கிய ஒருங்கமைந்த பிரிவின் (Unorganised Sector) உற்பத்தித்திறனை அதிகரிக்கும் தொழில் நுட்பத்தை அளிக்கவும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கருவிகளின் பயன் முறை சிறக்கவும் வடிவமைப்புச் சார்ந்த ஆராய்ச்சிகள் அண்ணா பல்கலைக் கழகத்தில் முழு முனைப்புடன் நடத்தப்படுகின்றன.

## நீர்வள ஆய்வு மையம் :

* பாசன ஏரிகளை நவீனப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல்.

* பெரியாறு, வைகைத் திட்டத்தின் நீர்ப்பாசன முறையைக் கணிப்பொறி வழி ஆய்தல்.

* ஆரணியாறு—கொசத்தலையாறு வடிநிலத்தின் நிலத்தடி நீர் பாய்வுமுறை ஆய்வு.

* இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிறுவனத்திறனைப் பெருக்குகின்ற பாசன நிர்வாகம் மற்றும் பயிற்சித் திட்டம்.

* பிரம்மபுத்திரா நதியின் வெள்ளத்தணிப்பு ஆய்வு.

* தர்மபுரி, சேலம், வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் கசிவுக் குளங்களைப் பயன்படுத்தி நிலத்தடி நீரிழப்பை ஈடு செய்முறைகளின் திறம் குறித்து ஆய்வு.

* தமிழ்நாடு மற்றும் கர்நாடகத்தில் ஓடுகின்ற சிறு அருவிகளின் பாய்ச்சல் அமைவுகளை ஆராய்தல்.

## சுற்றுப்புறச் சூழல் ஆய்வு மையம் :

* தமிழ்நாடு அரசு குடிநீர் வழங்கு முறைகளின் தரம்.

* பெருநகர் குடிநீர் வழங்கு முறைகளில் நுண்ணுயிர் மற்றும் கடு நுண்ணுயிர்களின் நிலை.

* எளிய மற்றும் சிக்கன முறையில் கழிவு சீராக்கம் மற்றும் மறு பயனாக்கத் திட்டம்.

* காற்று, நீர், உணவு, இழைமம் ஆகியவைகளிலிருக்கும் கன உலோகங்களை ஆராயும் ஒருங்கிணைந்த சுற்றுப்புற சூழல் திட்டம்.

* சாக்கடை நீரகற்று வடிவமைப்பு முறையில் செலவைக் குறைத்தல்.

## தொலையுணர்வு நிறுவனம் :

* மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த இனங்களின் மதிப்பீடு.

* தமிழ்நாட்டில் ஏழு மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களுக்குரிய நிலப்படங்கள் தயாரித்தல்.

* மாவட்டங்களில் உள்ள நீர்வாய்ப்பு மண்டலங்களை அடையாளம் காணல்.

* குந்தா நீர்த்தேக்கத்தின் நிலக்கசிவு ஆய்வு.

* தமிழ்நாட்டுக் கடற்கரைப் பகுதிகளுக்குரிய நிலப்படம் தயாரித்தல்.

## உயிர்சார் தொழில் நுட்பமையம் :

* உயிர் பூச்சிக்கொல்லி தயாரித்தல்.

* கொசுப்புழு – யானைக்கால்நோய், மலேரியா மற்றும் மூளைக்காய்ச்சல் நோய் ஒழிப்புத் திட்டங்கள்.

* பயிர்ப்பூச்சிகள்— வேளாண்மைப் பாதுகாப்புத் திட்டங்கள்.

*யானைக்கால் நோயறியும், கருவிகளை உருவாக்குதல் யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம்.

*செயலிழக்கச் செய்யும் என்சைம்களையும் செல்களையும் கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு உருவாக்குதல்:—

*கழி கழிவுநீர் தூய்மைப்படுத்துதல்.

*கன உலோகக் கழிவுகள்.

*தோல் தொழில்கள்.

*பாதிச் செயற்கைப் பெனிசிலின்.

**மனித குடியமர்த்து மையம் :**

தமிழக அரசின் 3 மில்லியன் வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் அண்ணா மாவட்டத்தின் வீட்டுவசதியை ஆய்தல்.

அடுத்த 15 ஆண்டுகளுக்கான வீட்டுவசதிக்கும் தேவையான நிலங்களை மதிப்பிடுதல்— சென்னை பெருநகர விரிவாக்கக் குழுமம்.

**படிக வளர்ச்சி மையம் :**

மின்னணுத் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் 'சிலிகன்' மற்றும் காலியம் அக்கினைடு படிகங்களை உருவாக்குதல்.

செயற்கை மழையினை ஏற்படுத்தத் திறன்மிக்க பனிக்கட்டியை உருவாக்கும் பொருட்களைச் செயற்கையில் தயாரித்தல்.

மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதியுதவி.—1988–89 ஆம் வருடத்தில் மத்திய அரசிடமிருந்து புதுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 130.00 இலட்சமும் மற்றும் தொடர் செலவு வகையில் ரூ. 25.00 இலட்சமும் பெறப்பட்டன. அதன் விபரங்கள் கீழேகொடுக்கப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| 1. ஆறாவது திட்டத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களைச் சார்ந்த தொடர் செலவினத் தொகை. | 25.00 |
| 2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்ட புதிய திட்டங்கள் (1988–89). | |

| (1) | (ரூபாய் இலட்சத்தில்) (2) |
|---|---|
| 1. நவீன ஒளித் தொலை தொடர்பு மற்றும் பைபர் ஒளி ஆய்வுக்கூட வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட தொகை. | 10.00 |
| 2. பலநோக்கு சக்திப் பொறியியல் என்ற மையத்தை நிறுவுவதற்காக வழங்கப்பட்ட தொகை. | 10.00 |
| 3. பொதுவியல் பொறியியல் துறையில் பொருள் ஆய்வுக் கூடத்தை பயப்படுத்துவதற்காகவும் நவீனப்படுத்துவதற்கும் மற்றும் பழைய முறைகளை களைவதற்கும் வழங்கப்பட்ட தொகை. | 15.00 |
| 4. கருவிகள் ஆய்வுக் கூடத்தை நவீனப்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் வழங்கப்பட்ட தொகை. | 10.00 |
| 5. வானூர்தி பொறியியல் துறையில் கல்வி மற்றும் பயிற்சியளிப்பதற்கான வசதிகளை பலப்படுத்துவதற்கான தொகை. | 15.00 |
| 6. தொழில் கூடத்தை புது முறைப்படுத்துவதற்கும் மற்றும் பழைய முறைகளைக் களைவதற்கும் வழங்கப்பட்ட தொகை. | 10.00 |
| 7. தானியங்கி இயந்திரவியல் கூடத்தை நிறுவுவதற்காக வழங்கப்பட்ட தொகை. | 20.00 |

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) |
|---|---|
| 8. ஜெனிடிக் பொறியியல் துறையை போன்ற உயர்சார் தொழில் நுட்ப செயல்முறைகளை நிறுவுவதற்காக வழங்கப்பட்ட தொகை. | 15.00 |
| 9. நுண்ணுயிர் செயல்கட்டுப்பாட்டு கருவியமைப்பு ஆய்வுக் கூடத்தை நிறுவுவதற்காக வழங்கப்பட்ட தொகை. | 15.00 |
| 10. கட்டடக்கலை, திட்டமிடல் துறையில் உள்ள தொழிற்கூடம்/ஸ்டுடியோ மற்றும் நவீனப்படுத்துவதற்காக வழங்கப் பட்ட தொகை. | 10.00 |
| மொத்தம் | 130.00 |

நிதியுதவி.—1988–89 ஆம் ஆண்டிற்குத் தமிழக அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் இந்திய அரசும் முறையே ரூ. 466.68 இலட்சமும், ரூ. 242.24 இலட்சமும் ரூ. 172.01 இலட்சமும் நிதியுதவி அளித்துள்ளன.

1987–88 ஆம் வருடத்திற்கான செலவும் 1988–89 ஆம் வருடத்திற்கான திருத்திய மதிப்பீட்டுச் செலவும் முறையே ரூ. 940.97 இலட்சமும், 1,542.99 இலட்சமும் ஆகும்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இந்த நிதி ஆண்டில் பல்கலைக் கழகத்தின் சில துறைகளில் புதிய பாட வகுப்புகள் தொடங்கப்பட்டன :

(1) எம்.எஸ்.சி. உயர்வேதியல்

(2) எம்.டி.எஸ். பெடோடோண்டியா.

(3) எம்.டி.எஸ். பெரியோடோண்டியா.

(4) எம்.டி.எஸ். ஆர்தோடோண்டியா.

(5) ஆங்கிலம், வணிக இயல், கல்வி இயல் ஆகிய துறைகளில் கோடைகால தொடர் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பு. தொலைதூரக் கல்வி இயக்ககத்தைச் சேர்ந்த மாணவர்கள் பயனுக்காக பின்வரும் புதுவகுப்புகள் தொடங்கப்பட்டன :—

(1) இரண்டு ஆண்டு பி.ஜி.எல். பட்டம்.

(2) எம்.எஸ்.சி. தாவரவியல்.

(3) பி.ஏ. சமூகவியல் (தமிழ் வழி).

பல்கலைக் கழக கல்விக்குழு, ஆட்சிக்குழு கூட்டத்தில் வரும் 1989–90 ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் புதிய வகுப்புகள் தொடங்க அனுமதி வழங்கியது :—

(1) எம்.எஸ்.சி. (வேளாண்மை) மரபியல் மற்றும் பயிர் ஊட்டவியல்.

(2) சான்றிதழ்—வகுப்பு அரிசி பதப்படுத்தும் தொழில் நுட்பம் (மூன்று திங்கள் வகுப்பு).

(3) எம்.டெக். எதிர்காலக் கல்வி.

**தொலைதூரக் கல்வி இயக்ககம் :**

**1989-90-இல் தொடங்க இருக்கும் டிப்ளமோ வகுப்புகள் :**

(1) சான்றிதழ் படிப்பும் நெல் பதப்படுத்தும் தொழில்நுட்பம்

(2) கூட்டுறவு மேலாண்மை—மேல் நிலைப்பட்ட வகுப்பு.

(3) வங்கியியல் மேலாண்மை.

(3) வங்கியியல் மேலாண்மை—மேல் நிலைப்பட்ட வகுப்பு.

(4) அமைப்பியல் மேலாண்மை—மேல் நிலைப்பட்ட வகுப்பு.

ரூ. 40 இலட்சம் தொடரா நிதியும், ரூ. 9.5 இலட்சம் தொடரும் நிதியுமாக வழங்கி 30 மாணவர்களைக் கொண்ட களப்பாணியல் பி.ஈ. பட்ட வகுப்பு தொடங்கும் திட்டத்தை ஒத்துக்கொண்டுள்ளது.

பல்வேறு ஆய்வுத் திட்டங்களுக்காக மரபல்லாத ஆற்றல் மூலத்துறையும் இந்திய அரசும், நெய்வேலி, பழுப்பு நிலக்கரி நிலையமும், சிங்கரணி கோலியர்ஸ் கம்பெனியும் நிதி உதவி வழங்கியுள்ளன :—

(1) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிலையம் : நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிலையம் அமைந்துள்ள இடத்தில் காற்றின் தன்மையைப் பொறுத்தமட்டில் சுற்றுச் சூழல் பாதிப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்று காணல்.

2. சிங்கரேணி கோலியர்ஸ் கம்பெனி :

(1) கோதாவரி பள்ளத்தாக்கு நிலக்கரி வயல்களில் முன்கூட்டியே சுற்றுச் சூழல் திட்டத்தைத் தயாரித்தல்.

(2) ஆந்திரப் பிரதேசத்தில் எல்லண்டு, கொத்தக்கூடம், நிலக்கரி வயல்களில் சுற்றுச் சூழல் விவரங்களை அறிதல்.

3. மரபல்லாத ஆற்றல் மூலத்துறை.—கரும்பில் பில்டர் கேக்கை உயிர் எரிவாயுவாகப் பயன்படுத்துவதற்கான முன் ஆய்வு.

**பல்கலைக்கழகம் — ஒரு கண்ணோட்டம் :**

| | |
|---|---|
| தோற்றம் .. | 1929-இல் தோற்றுவிக்கப் பட்டது. |
| நிலப்பரப்பு .. | 760 ஏக்கர்கள். |
| வளர்புலங்களின் எண்ணிக்கை | 10 |
| துறைகளின் எண்ணிக்கை | 44 |
| வளர்மையங்களின் எண்ணிக்கை | 2 |
| இன்றைய மாணவர்களின் எண்ணிக்கை | 7,808 |
| ஆசிரியர் எண்ணிக்கை | 718 |
| மாணவர் விடுதிகளின் எண்ணிக்கை .. | 8 |
| விடுதி மாணவர்களின் எண்ணிக்கை .. | 4,684 |
| தொலை துாரக் கல்வி மூலம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை. | 48,472 |

**பல்கலைக் கழகத்தின் மேலாண்மையர்**

| | | |
|---|---|---|
| (1) ஆளவை மொத்த உறுப்பினர்கள் | 100 | |
| (2) கல்விக் குழு மொத்த உறுப்பினர்கள் | 285 | |
| (3) ஆட்சிமன்றக்குழு மொத்த உறுப்பினர்கள் | 19 | |
| (4) தேர்வுக்குழு | 5 | |
| (5) வளர்ப்புலங்களின் உறுப்பினர்கள் | 10 | (ஒவ்வொரு வளர் புலமும் தலைவர் உட்பட 21 உறுப்பினர்களுக்கு மிகாமல்). |
| (6) பாடத்திட்டக்குழு உறுப்பினர்கள் | 47 | (ஒவ்வொரு குழுவும் தலைவர் உட்பட ? உறுப்பினர்களுக்கு மிகாமல்). |

## பாரதியார் பல்கலைக்கழகம்.

பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம், 1981—இன்படி (1982 ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டம் 1) பாரதியார் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தொடங்கப்பட்டது. கல்வியகங்கள் கல்வி கொடுக்கும் கோயில்களாக அமைய வேண்டும் என்ற மகாகவி பாரதியாரின் கனவினை நனவாக்கும் உணர்வோடு 'உயர்வுக்குக் கல்வி' என்பது பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாகப் பொறிக்கப்பட்டது. கோவை, பெரியார், நீலகிரி ஆகிய மாவட்ட எல்லைகளுக்குட்பட்ட கல்லூரிகளுக்கு இணைப்பு தரும் பல்கலைக்கழகமாக இது விளங்குகிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதி உதவியினைப் பெறுவதற்காக 1985 மே மாதம் முதல் பாரதியார் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

இணைப்புக் கல்லூரிகள்.—பல்கலைக்கழகம் ஆற்றல் மிக்க நெறியாளரைத் தலைவராகக் கொண்டிருப்பதால் பல்கலைக்கழகத்தில் இணைப்புக் கல்லூரிகள் திறமையான வகையில் செயல்படுகின்றன. பல்கலைக்கழகத்திற்கு இணைப்பாக நாற்பது கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் 26 அறிவியல் கலைக்கல்லூரிகள், 9 பொறியியற் கல்லூரிகள், 3 கல்வியியல் கல்லூரிகள், 1 சட்டக் கல்லூரி மற்றும் 1 விமானப்படை ஆட்சித்துறைக் கல்லூரி. இவற்றுள் 23 கல்லூரிகள், இருபாலாரும் சேர்ந்து படிக்கும் நிறுவனங்கள், 9 ஆண்கள் கல்லூரிகள் மற்றும் 8 பெண்கள் கல்லூரிகள்.

தக்க கல்விசார் ஆட்சிக்குழு உறுப்பினர்களுடன் துறை வல்லுனர்களும் இணைந்து எங்கும் இல்லாத புதுப்புது வகையான படிப்புகளை பல்கலைக்கழகம் ஆரம்பித்துச் செயல்படுத்தி வருகிறது. பல்கலைக்கழகம் 19 புதிய வகைப் படிப்புக்களை கலைப்புலத்திலும், 33 வகை படிப்புக்களை அறிவியல் புலத்திலும், 8 வகை வர்த்தகப் புலத்திலும், 7 வகை கல்வியியற் புலத்திலும், 7 வகை சமூக அறிவியல் புலத்திலும் 49 வகை பொறியியல் மற்றும் தொழில்நுட்பப்புலங்களிலும் 3 வகை நீதிப்புலங்களிலும் 8 வகை மருத்துவப் புலங்களிலும் பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு நிலைகளில் துவக்கியுள்ளது. சராசரியாக ஆண்டொன்றுக்கு பட்டக் கல்வியில் 7,030 மாணவ மாணவியரும் பட்ட மேற்படிப்புக் கல்வியில் 1,155 மாணவ மாணவியரும் அறிவியல் தொழில் நுட்பக் கல்வியில் 3,183 மாணவ மாணவியரும் நீதித் துறையில் 260 மாணவ மாணவியரும் சேர்க்கப்பட்டு கல்வி பயிலுகின்றனர்.

தன்னாட்சிக் கல்லூரிகளும் ஆய்வு நிறுவனங்களும்.—பாரதியார் பல்கலைக்கழகம் தான் ஒன்பது கல்லூரிகளுக்கு முழு தன்னாட்சிப் பொறுப்பையும், ஒரு கல்லூரிக்கு ஓரளவு தன்னாட்சிப் பொறுப்பையும் வழங்கியுள்ளது. இக்கல்லூரிகள் புதுப்புது பாட வகுப்புகளைத் துவக்குவதில் மிக்க ஆர்வம் காட்டியுள்ளது. இக்கல்லூரிகளால் நடத்தப்படும் புது வகையான பாடங்களில் படிக்கும் மாணவர்கள் தங்களுடைய உயர் கல்வியைத் தொடரவும் வேலைவாய்ப்பு பெறவும் ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன.

இணைப்புக் கல்லூரிகள் ஆய்வில் ஈடுபடுவதற்குப் பல்கலைக்கழகம் தன்னாலான உதவியைத் தடையின்றி வழங்கி வருகிறது. தற்பொழுது இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் 64 துறைகள் ஆய்வுத் துறைகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்துறைகள் எம்.பில். மற்றும் பி.எச்.டி. ஆய்வுப் படிப்பினை முழு நேர அளவிலும், பகுதி நேர அளவிலும் நடத்தி வருகின்றன. இவை அல்லாமல் இப்பல்கலைக்கழகமாவது எம்.பில். மற்றும் பி.எச்.டி. ஆய்வு வகுப்புகளை நடத்துவதற்கென பத்து ஆய்வு நிறுவனங்களையும் அங்கீகரித்துள்ளது. இத்தகைய முயற்சிகளால் மனித சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய பற்பல ஆய்வுகள் இங்கு நிகழ்த்தப் பெறுகின்றன.

தேர்வு முறையும் சீர்திருத்தமும்.—இணைப்புக் கல்லூரிகளைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தின் சிறப்புக் கூறாக விளங்குவது அப்பல்கலைக்கழகத்தின் சிறப்பான நிர்வாக முறையும் தேர்வு முறையும் ஆகும். இப்பல்கலைக்கழகத்தின் தேர்வு முறை முற்றிலும் பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ற வகையில் அமைத்துள்ளது. எல்லாப் படிப்புகளுக்குமான வினாத்தாள்கள் 'இது அல்லது அது' என்ற மாதிரியின் அடிப்படையில் அமைந்துள்ளது. எல்லாப் படிப்புகளுக்குமான பாடத்திட்டம் அலகு அடிப்படையில் அமைந்துள்ளது.

தேர்வு விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், தேர்வு நுழைவுச் சீட்டு வழங்குதல், விடைத்தாள்களின் போலி எண்களுக்குச் சரியான எண்கள் வழங்குதல், மதிப்பெண் பட்டியல் வழங்குதல் போன்ற தேர்வு முறை தொடர்பான எல்லாவற்றையும் கணிப்பொறி வழியாக செயல்படுத்திடும் ஒரு சில பல்கலைக்கழகங்களுள் பாரதியார் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். பல்கலைக்கழகச் செயல்பாட்டின் உயிர் மூச்சான மாணவர் சேர்க்கை புதிய வகுப்புகளைத் திட்டமிடுதல், பாடத்திட்டங்களை வகுத்தல்,

கல்வி பயிற்றுதல், பட்டமளித்தல் போன்றவற்றை மிகவும் சீரிய விதத்தில் நிர்வகித்து வருவதனால் இப்பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகளுடன் மிகவும் செம்மையயான விதத்தில் இணைந்து செயல்பட்டு வருகிறது.

பல்கலைக்கழகத்துறைகள் :—முன்பு சென்னைப் பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி பட்டமேற்படிப்பு மையமாகக் கோவையில் இயங்கி வந்த ஒன்பது துறைகளைக் கொண்டு பாரதியார் பல்கலைக்கழகம் துவங்கப்பட்டது. அந்த ஒன்பது துறைகளாவன : வேதியியல், இயற்பியல், விலங்கியல், தாவரவியல், சமுதாயவியல், மனவியல், பொருளியல், கணிதவியல், மற்றும் புள்ளியியல் ஆகும். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியின் காரணமாக பல புதிய துறைகள் துவங்கப்பட்டன. தற்பொழுது இங்கு 15 துறைகளும் ஆள்வினை மற்றும் தொழில் முனைவோர் முன்னேற்ற ஆய்வுப்பள்ளி ஒன்றும் உள்ளன. புதுத் துறைகளை உருவாக்கும்பொழுது அந்துறையில் பயிலும் மாணவர்களும் அங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளும் அறிவியல் பயிலும் மாணவர் களும் அங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு வகை செய்வனவாக இருக்க வேண்டும் என்பதோடு நாட்டு வளர்ச்சிக்கு உறுதுணை யாக இருக்க வேண்டும் என்ற கருத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டது. புதிதாக துவங்கப்பட்ட துறைகள் மொழியியல், தமிழ், மக்கட்தொகைக் கல்வியல், கணிப்பொறி யியல், சுற்றுச் சூழல் அறிவியல், உடற் கல்வியியல் மற்றும் ஆள்வினை மற்றும் தொழில் முனைவோர் முன்னேற்ற ஆய்வுப் பள்ளி ஆகியனவாகும்.

மேலே கூறப்பட்ட துறைகளுள் 1987–88 ஆம் ஆண்டு வரை மொழியியல் தமிழ் சமுதாயவியல், மக்கட்தொகை கல்வியியல், கணிப்பொறியியல், மற்றும் மனவியல் ஆகிய துறைகளே பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்தி வந்தன எனினும் ஆய்வும், கல்வி புகட்டுதலும் இணைந்து சென்றால்தான் நல்ல முடிவுகளைப் பெற முடியும் என்ற கருத்தை மனதில் கொண்டு எல்லா துறைகளிலும் பட்ட மேற்படிப்பு வகுப்பு களைத் துவங்க திட்டமிட்டு முதல்நிலையாக 1988–89 ஆம் ஆண்டில் பொருளியல் மற்றும் கணிதவியல் துறைகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. 1989—90 ஆம் ஆண்டு எல்லாத் துறைகளிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவக்கப் பட்டுள்ளன.

பாடத்தைத் திட்டமிடுவதை மிகவும் கவனமாக மேற்கொள்வதனால் இணைப் புக் கல்லூரிகளில் அளிக்கப்படும் ஒரே வகையான கல்வி பல்கலைக் கழகத்திலும் அளிக் கப்படாமல் இருக்கும் விதத்தில் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இங்கு மேற்கொள்ளப் படும் எம்.பில். மற்றும் பி.எச்.டி. மிகவும் உயர்ந்த தரத்தைக் கொண்டனவாக அமைந்து, பல்கலைக்கழகத்திற்குப் பெயரையும், புகழையும் தந்து வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களும், ஆய்வாளர்களும் தத்தமது துறைகளின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். அவர்கள் தமது ஆய்வுகளையும், கண்டுபிடிப்புகளையும் பிராந்திய, தேசிய, மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும், செயல் அரங்குகளிலும், அரங்கேற்றி, பாராட் டினைப் பெற்றுள்ளனர்.

மாணவர் சேர்க்கை .—பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் 1988 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர் மற்றும் ஆய்வாளர்களின் எண் ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| மொத்த சேர்க்கை | 394 |
| மாணவியர் எண்ணிக்கை | 115 |
| தாழ்த்தப்பட்ட/மலை சாதியினர் எண்ணிக்கை | 30 |

பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கான ஆய்வூதியம்.—இந்த ஆண்டு ஆய்வாளர்கள் பெற்று வரும் ஆய்வூதிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| பல்கலைக்கழக ஆய்வூதியம் பெறுவோர் | 29 |
| யு.ஜி.சி. ஆய்வூதியம் பெறுவோர் | 28 |
| சி.எஸ்.ஐ.ஆர். ஆய்வூதியம் பெறுவோர் | 4 |
| டி.எஸ்.டி. ஆய்வூதியம் பெறுவோர் | 5 |
| டி.ஓ.இ. ஆய்வூதியம் பெறுவோர் | 6 |
| ஐ.சி.ஏ.ஆர். ஆய்வூதியம் பெறுவோர் | 1 |
| மொத்தம் | 73 |

<u>கணிப்பொறி மையம்:</u>—மாநிலத்தில் உள்ள தொழில் நுட்பவியல் சாராத பல்கலைக் கழகங்கள் கணிப்பொறியியலைத் தனியொரு துறையாக அறிமுகப்படுத்திய மிகச் சில பல்கலைக்கழகங்களுள் பாரதியார் பல்கலைக்கழகமும் ஒன்று. இத்துறையின் வளர்ச்சிக் கென பல்கலைக்கழக மானியக்குழு இதுவரை 12 இலட்ச ரூபாய்களை வழங்கிச் சிறப் பித்துள்ளது. இந்த நல்கையைப் பயன்படுத்தியும் பல்கலைக்கழகத்தின் பொது நிதி யைப் பயன்படுத்தியும், 23.5 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கணிப்பொறிச் சாதனங்கள் இப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளும், இம் மையத்தின் கணிப்பொறிகளைப் பயன்படுத்தி ஆய்வுத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இது மட்டுமல்லாது கணிப்பொறியியல் துறை நடத்தி வரும் எம்.பி.ஏ.,எம்.சி.ஏ.,பி.ஜி.டி.சி., மற்றும் சான்றிதழ் வகுப்புகளுக்கும் இம்மையம் உதவி வருகிறது. இம்மையத்தின் குறிப்பிடத்தகுந்த சாதனைகளுள் ஒன்றாக இப்பல்கலைக்கழகத்தின் தேர்வு முறையை கணிப்பொறி வழியாக்கியதை குறிப்பிடலாம்.

<u>ஆய்வுத் திட்டங்கள்.</u>—நல்கைகள் வழங்கி வரும் மாநில, மற்றும் நடுவண் அரசு நிறுவனங்களுக்கு ஆய்வுத் திட்டங்களை அனுப்பி நல்கைகள் பெறுவதில் பல் கலைக்கழகத் துறைகள் மிகுந்த ஆர்வமும், அக்கறையும் காட்டி வருகின்றன. இதன் விளைவாக யு.ஜி.சி., ஐ. சி. எஸ். எஸ். ஆர்., டி. எஸ். ஐ., டி. ஓ. இ. என், எஸ்.ஐ.டி.ஏ., சி. எஸ். ஐ. ஆர்., டி. என். எப். டி., டி. என். எஸ். சி. எஸ். டி. போன்ற நிறுவனங்கள் பல ஆய்வுத் திட்டங்களை ஏற்று நிதி உதவி அளித்துள்ளது.

<u>பல்கலைக்கழகத்தின் ஆய்வு வெளியீடுகள்.</u>—பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஆய்வு வெளியீடுகளின் எண்ணிக்கை சிறப்பாக இருந்து வருகிறது. 1988-ஆம் ஆண்டில் முடிந்த ஆறு வருடகாலத்தில் 700-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை தரம் நிறைந்த, புகழ் பெற்ற தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் வெளியிடப் பட்டுள்ளன.

<u>அளிக்கப்பட்ட ஆய்வுப் பட்டங்கள்.</u>—பல்கலைக்கழகத் துறைகளில் அளிக்கப் பட்டு வரும் ஆய்வுக் கல்வி சிறப்பாக உள்ளது. 1983-ஆம் ஆண்டுக்கும், 1988-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 800க்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் எம்.பில். பட்டம் பெற்றுள்ளனர். 15 க்கும் மேற்பட்டோர் பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ளனர். 1988-ஆம் ஆண்டு இறுதி வரை எம்.பில்., பி.எச்.டி. பட்டம் பெற்றோர் எண் ணிக்கை முறையே, 873 மற்றும் 26 ஆகும்.

<u>துறைகளால் நடத்தப்பட்ட கருத்தரங்குகள், மாநாடுகள் செயல் அரங்குகள் போன்றவை.</u>—பல்வேறு ஆய்வு வினாக்கள் குறித்து அத்துறையில் ஆய்வு மேற் கொண்டு வரும் அறிஞர்கள் பலரை ஓரிடத்திற்கு அழைத்து கருத்தரங்கு, மாநாடு, செயலரங்கு போன்றவற்றை நடத்தி, கலந்துரையாடுவதால் பல புதுப்புது தெளிவு கள் கிடைக்கின்றன. மேலும். இதன் மூலம் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை, வளர்கிறது. இப்பல்கலைக்கழகம் தனது துறைகள் இத்தகைய கருத்தரங்குகளை நடத்துவதற்கும், அதன் மூலம் நாட்டு வளர்ச்சியை மேம்படுத் தவும் மிகுந்த ஆக்கமும், ஊக்கமும், அளித்து வருகிறது. இக்கருத் தரங்குகள் போன்ற யாவும் யு. ஜி. சி., ஐ. சி. எஸ். ஆர். போன்ற பல்வேறு மாநில, மைய அரசு நிறுவனங்களின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன.

<u>கல்லூரி வளர்ச்சி மன்றம்.</u>—பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப கல்லூரி வளர்ச்சிக் கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக்கழகமானது இணைப்புக் கல்லூரிகளின் செயல்பாடுகளை பல்கலைக்கழகத்தையும் ஒருங்கிணைந்து வருகிறது. கல்வியின் தரத்தை உயர்த்தவும், பல்கலைக்கழக மானியக் குழு அவ் வப்போது தெரிவிக்கும் பரிந்துரைகளைச் செயல்படுத்தவும் இக்கழகம் முயற்சிக் கிறது. இணைப்புக் கல்லூரிகள் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து தேவை யான நிதி உதவிகளைப் பெற்றிடவும் உதவுகிறது. மேலும், கல்லூரிகள் தன்னாட்சி பெறுவதற்கான திட்டத்தை வரைவதற்கு இக்கழகம் வழங்கிடும் உதவி, சிறப் பானதாக உள்ளது. இச்செயற்பாட்டில் தொடர்ச்சியாக இக்கழகம் தன்னாட்சி கல்லூரிகள் கூட்டத்தை ஆண்டுக்கு இருமுறை கூட்டி கல்வி மற்றும் நிர்வாகத் தொடர்புடைய பிரச்சினைகளைக் கலந்து ஆலோசித்தது.

<u>கல்விசார் பணியாளர் கல்லூரி.</u>—பல்கலைக்கழக மானியக் குழுவானது பாரதி யார் பல்கலைக்கழகத்தைக் கல்விசார் பணியாளர் கல்லூரியை நடத்துவதற்குத் தேர்வு செய்துள்ளது. இதற்கென 8.5 லட்சம் ரூபாயை மானியக் குழு வழங்கி யுள்ளது. 1987-ஆம் ஆண்டு டிசம்பர் 29-ந் தேதி பாரதியார் பல்கலைக்கழகம் தனது கல்விசார் பணியாளர் கல்லூரியைத் துவக்கியது. கல்லூரி ஆசிரியர்கள் தமது துறைகளில் புத்தொளி பெறவும், ஆய்வுச் சிந்தனை பெறவும்., துவக்கப் பட்டதிலிருந்து இக்கல்லூரி மிகவும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

இதுவரை இக்கல்லூரியானது 7 புத்தொளி வகுப்புகளை நடத்தி 176 ஆசிரி யர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தியுள்ளது. இக்கல்லூரி பல்கலைக்கழக மானிய குழுவினரால் தாவரவியல் மற்றும், மனையியல் ஆகிய துறைகளில் உயர் ஆய்வு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தாவரவியல் துறை அளிக்கப்பட்டுள்ள

புத்தொளி பயிற்சியில், தாவர அமைப்பியல், உயிர்நுட்பவியல், தாவர சூழல் போன்ற துறைகளில் சிறப்பாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 54 கல்லூரி ஆசிரியர்கள் பயன்பெறும் விதத்தில் நடத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சி அரங்குகளை நடத்துவதெற்கென இந்தியா முழுவதிலும் இருந்து அறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர்.

நிதிநிலை,—தமிழக அரசும் பல்கலைக்கழக மானியக் குழுவும் இப்பல்கலைக் கழக வளர்ச்சிக்கென்று பின்வரும் பல்வேறு நல்கைகளை வழங்கியுள்ளன.

1. மாநில அரசு நல்கை :—

| | |
|---|---|
| (அ) நடைமுறைச் செலவினங்கள் | ரூ. 60 லட்சம். |
| (ஆ) கட்டிட செலவினம் | ரூ. 50 லட்சம். |
| (இ) பல்கலைக்கழக மானியக்குழு ஊதியச் செயல் பாட்டிற்கு. | ரூ. 75 லட்சம். |
| (ஈ) இணை நல்கை, கட்டிடங்கள் கட்ட | ரூ. 5 லட்சம். |

2. பல்கலைக்கழக மானியக்குழு நல்கை :—

| | |
|---|---|
| (அ) இளநிலை ஆய்வு ஊதியம் | ரூ. 2.5 லட்சம். |
| (ஆ) ஆசிரியர் ஆய்வு ஊதியம் | ரூ. 91,438.52. |
| (இ) எம். பி. ஏ. நிருவாகத் துறை | ரூ. 12,60,128.00. |
| (ஈ) கணிப்பொறி மையம் | ரூ. 5 லட்சம். |
| (உ) சாதனங்கள் | ரூ. 25 லட்சம். |
| (ஊ) மரபியல் ஆய்வு உபகரணம் | ரூ. 5 லட்சம். |
| (எ) கட்டிட நல்கை | ரூ. 74,68,750.00. |
| (ஏ) ஆய்வுத் திட்டங்கள் | ரூ. 1,54,761.00. |
| (ஐ) பல்கலைக்கழக மானியக்குழு அல்லாத பிற நிதி நல்கை நிறுவனங்களிடமிருந்து | ரூ. 1,46,200.00. |

## பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

பல்கலைக் கழக நல்கை குழுவிடமிருந்தும் ஏனைய முகவரைமைப்புகளிடமிருந்தும் பெற்ற நிதியுதவி.—அறிக்கையாண்டில் பல்கலைக் கழக நல்கைக் குழு பல்கலைக் கழகத்திற்கும் பின்வரும் நிதியுதவியை அறிவித்துள்ளது.

(1) பல்கலைக் கழகங்களுக்கான சாதனங்களுக்குக்காக சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(2) இப்பல்கலைக் கழகத்தில் தொலைக்காட்சிப் படத் தயாரிப்பு மையம் ஒன்றை ஏற்படுத்த பல்கலைக் கழக நல்கைக் குழு ரூ. 17 இலட்சம் அளித்துள்ளது.

(3) இப் பல்கலைக் கழகத்திற்குத் கூடுதலாக மூன்று இளநிலை ஆராய்ச்சி மாணவர்களுக்கு அனுமதியளிக்கும் செயற் குறிப்புக்கும் பல்கலைக் கழக நல்கைக் குழு அனுமதித்துள்ளது.

(4) பல்கலைக் கழக நல்கைக் குழு மட்டுமல்லாது மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பல்கலைக் கழகத்திட்டத்தில் பணிபுரியும் மகளிர் தங்கும் இல்லம் ஒன்றை பகல் வேளை, மழலைக் காப்பகத்துடன் கட்ட மத்திய அரசின் பங்குத் தொகையாக ரூ. 18,12,950-க்கு அனுமதி அளித்துள்ளது.

கல்லூரிகள் பல்கலைக் கழகத்துறைகள்.—தமிழகம் பண்பாட்டின் இதயப் பகுதியாக அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைத் தன் செயல் வரம்புப் பகுதிகளாகக் கொண்டுள்ள இப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆண்டு தொடங்கப்பட்ட பெரியார் மணியம்மை தொழில் நுட்பவியல் மகளிர் கல்லூரி அமைத்தல் மாதா கல்லூரி உட்பட 51 இணைந்த ஏற்பளிக்கப்பட்ட கல்லூரிகள் உள்ளன. இவற்றில் நான்கு கல்லூரிகள் அதாவது (1) தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி, தஞ்சாவூர் ; (2) அரசினர் இயல் மருத்துவக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி ; (3) பெரியார் மருந்தாக்க அறிவியல் மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, ஜோசப் கண் மருத்துவமனை கண் நோய் மருத்துவ நிலையம், திருச்சிராப்பள்ளி ஆகியவை தற்போது புதியதாக ஏற்படுத்தப்பட்டு சென்னை டாக்டர் எம்.-ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தேசியக் கல்விக் கொள்கைக்கு இணங்க தேவை வேலைவாய்ப்பு ஆகிய நோக்கங்களின் அடிப்படையிலான கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கு இப்பல்கலைக் கழகம் பெரும் முயற்சி எடுத்து வருகிறது. மேலே குறிப்பிடப்பட்ட இணைந்த ஏற்பளிக்கப்பட்ட கல்லூரிகள் மட்டுமல்லாது இப் பல்கலைக் கழகத்தில் பதின்மூன்று ஆய்வு ஆராய்ச்சித் துறைகளும் இருக்கின்றன.

இந்த ஆண்டு புதிய பாடத்திட்டப் பிரிவுகள் நல்கை இணைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரு பாடத்திட்டப் பிரிவுகள் தற்போது நடைமுறையில் இருக்கும் இருவேறு பாடத் திட்டப் பகுதி பிரிவுகளை மாற்றியமைத்துக் கொண்டுவரப்பட்டவையாகும்.

அத்துடன் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இயற்பியலிலும் தமிழிலும் நினைவுகூர் பயிற்சியை அளிக்க பல்கலைக் கழக நல்கைக் குழு இப் பல்கலைக் கழகத்தில் கல்விகள் பணியாளர் பயிற்சிக் கல்லூரி செயற்பட தேர்ந்தெடுத்தது. அதற்கிணங்க அறிக்கையாண்டில் கல்விகள் பணியாளர் பயிற்சிக் கல்லூரி அனைத்து இந்திய அளவில் இயல்பியல் பாடத் திட்டப் பிரிவுகளில் பல்கலைக் கழக நல்கைக் குழு பொறுப்பேற்றுள்ள வகையில் நினைவுகூர் பயிற்சியை நடத்தியது. மேலும் 1989-90-ஆம் ஆண்டிலும் அதிக அளவில் நினைவுகூர் பயிற்சித் திட்டங்களை இயற்பியல் பாடத் திட்டப் பிரிவிற்கும் தமிழ்ப் பாடத் திட்ட பிரிவிற்கும் நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் இப் பல்கலைக் கழகத்தின் இணைக்கப்பட்ட கல்லூரிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | |
|---|---|
| பட்டதாரி மாணவர்கள் | 10,303 |
| முதுகலை பட்டதாரி மாணவர்கள் | 2,985 |

ஆராய்ச்சி, பல்கலைக் கழகங்களின் நோக்கங்களில் ஆராய்ச்சி என்பது முக்கியமான நோக்கமாகும். இதற்குப் பாரதிதாசன் பல்கலைக் கழகம் முக்கியத்துவம் அளிக்கிறது. மொத்தத்தில் இப் பல்கலைக் கழகத்துறைகளிலும் சிறந்த மேல் நிலை ஆராய்சச்சி துறைகளிலும் 97 எம். பில்., ஆய்வாளர்களும், 31 பி.எச்.டி., ஆய்வாளர்களும் உள்ளனர். இவர்கள் தவிர பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள கல்லூரிகளில் எம். பில்., ஆய்வில் 220 ஆசிரியர்களும், பி. எச். டி. ஆய்வில் 106 ஆசிரியர்களும் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

எதிர்காலம் பற்றிய அறிவியல் மேம்பாடு என்பது நடப்பு அறிக்கையாண்டில் ஒரு பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டு 1988 செப்டம்பர் 16 முதல் 18 வரையில் தேசியக் கருத்தரங்கு ஒன்று இப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது.

ஆராய்ச்சித் திட்டம்.—பல்கலைக் கழக நல்கைக் குழு டி. எஸ்ட்டி, / அறிவியற் தொழில் ஆராய்ச்சி மற்றும்/ஐ.சி.எஸ்.,ஆர். ஐ., தமிழ்நாடு அரசு ஆகிய பல்வேறு முகவரமைப்புகள் நிதியுதவியளித்த ஆராய்ச்சித் திட்டங்களில் இப் பல்கலைக் கழக ஆய்வுப் புலங்கள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. 1988-89-ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 62,25,500-க்குக் கூடுதலான வரவு செலவுத் திட்டத்துடன் ஆறு பெரிய, சிறிய ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வழக்கம்போல் இந்த ஆண்டும் ஆய்வுப் புலங்களைச் சேர்ந்த அறிஞர்கள் பெரும்பாலோர் வட்டார/தேசிய பன்னாட்டு அளவிலான மாநாடுகள் கருத்தரங்குகள் முதலியவற்றில் கலந்து கொண்டு நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளனர்.

21-1-1988 அன்று ஐந்தாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இதில் 7,792 பட்டதாரிகளும், 1,632 முதுகலை பட்டதாரிகளும், 303 எம்.பில் பட்டதாரிகளும், 10 பி.எச்டி பட்டதாரிகளும், 37 சட்ட பட்டதாரிகளும் 43 மருத்துவப்பட்டதாரிகளும் தங்கள் பட்டங்களைப் பெற்றனர். (நேரடியாகவும் அஞ்சல் வழியாகவும்).

மொரிசியஸ் நாட்டு கவர்னர் ஜெனரல் மாட்சிமை பொருந்திய திரு. வீராசாமி ரிங்காடோ அவர்களுக்கு டாக்டர் ஆப்-லா (Doctor of Laws) என்னும் கௌரவ பட்டம் (HONORIS CADSA) அன்று நடைபெற்ற சிறப்பு பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டது.

நூலகம்.—அறிக்கையாண்டில் நூலகத்திற்காக 2,419 நூல்கள் வாங்கப்பட்டன. 165 பருவ இதழ் முறையாக வரவழைக்கப்படுகின்றன. நூலக உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,782-யை அடைந்துள்ளது. தற்போதைய திட்டக்காலத்தில் நூல்களும் பருவ இதழ்களும் வாங்குவதற்காகப் பல்கலைக் கழக நல்கைக் குழு ரூ. 10,00,000 ஒதுக்கியுள்ளது. வழக்கமான பணிகளைத் தவிர (குறிப்பு எடுத்தல், நூல் விவரப் பட்டியலைத் தொகுத்தல்).

படிப்போர் நூலகத்தைச் செம்மையாக்கவும் முழுமையாகவும் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில் நூல்களை வகைப்படுத்தி பணியினை எளிதாக்குவதற்காகக் கணிப்பொறி வழி நவீனப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

நாட்டுப்பணி திட்டங்கள் கல்வி அல்லாத விளையாட்டு போன்ற நாட்டு நலப் பணித் திட்டம் 44 கல்லூரிகளில் செயற்படுத்தப்படுகிறது. வழக்கமான பணிகள் சிறப்பு முகாம் திட்டங்கள் தவிர நாட்டு நலப் பணி மாணவ தொண்டர்கள் 40 ஆம் விடுதலை நாள் கொண்டாட்டங்களிலும் வேதாரண்ய உப்புச் சத்தியாக்கிரக யாத்திரையை மீண்டும் நிகழ்த்திக் காட்டியதிலும் கலந்து கொண்டுள்ளனர். பாரதிதாசன் பல்கலைக் கழக தேசிய பணித் திட்டம் பிரிவு, திருச்சிராப்பள்ளி பெல் வளாகத்தில் 1988 அக்டோபர் 25 முதல் 28 வரை மனித வள மேம்பாட்டு அமைச்சகம் புது டில்லி இந்திய பல்கலைக் கழகங்கள் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 1988 ஆம் ஆண்டு தென் மண்டலப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான இளைஞர் விழாவை நடத்தியுள்ளது. தன்பாத், இந்திய சுரங்கம் பள்ளியில் நடைபெற்ற 1989 ஆம் ஆண்டு இளைஞர் விழாவில் எல்லாவித போட்டிகளுக்குமான ஒட்டுமொத்த சாதனை வெற்றிக் கோப்பையை இப்பல்கலைக்கழகமும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களுக்கிடையேயான தேசிய இளைஞர் விழாவில் ஒட்டுமொத்த கலை நிகழ்ச்சிகளுக்குரிய பெருமை மிக்க அமராவதி கோப்பையைப் பாரதிதாசன் பல்கலைக் கழக கலைக்குழு வென்றது.

பாரதிதாசன் பல்கலைக் கழக நாட்டுநலப் பணி மாணவர் குழு 1–10–1988 முதல் 11–10–1988 வரை கருநாடகம் தென் கன்னட மாவட்டம் UJIRE தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் பங்கு கொண்டுள்ளது.

9–10–1988 அன்று புதுடில்லியில் நடைபெற்ற பூல்-வாலன்-கி. காயர் எனும் சிறப்பான விழாவில் தமிழ்நாட்டின் சார்பாக பாரதிதாசன் பல்கலைக் கழக நாட்டு நலப் பணிக் கலைக்குழு பங்கு கொண்டு விழாவில் பங்கு பெற்றவர்களிடையே முதல் பரிசை வென்றது.

1987–88 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் பரிசு பாரதிதாசன் பல்கலைக் கழக நாட்டுநலம் பணி மாணவரான (திருச்சிராப்பள்ளி) ஜமால் முகமது கல்லூரியைச் சேர்ந்த திரு. பி. இளங்கோவனுக்கு அளிக்கப்பட்டது. பதக்கமும் ரூ. 5,000-ம் அடங்கிய இப்பரிசு 10–1–1989 அன்று மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களால் அளிக்கப்பட்டது.

வயதுவந்தோர் கல்வியும் விரிவாக்கப் பணிகளும்.—பல்கலைக் கழக நல்கைக் குழு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் வயது வந்தோர் கல்வி விரிவாக்கப் பணிகளின் ஒரு பகுதியாக 40 வயது வந்தோர் கல்வி அமைப்புகளுக்கும், 7 மக்கள் தொகை கட்டுப்பாட்டுப் பிரச்சார அமைப்புகளுக்கும் ஒப்புதல் அளித்துள்ளது வயது வந்தோர் கல்வி மையங்கள் 4 கல்லூரிகளுக்கும், 4 மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு பிரச்சார அமைப்புகள் 7 கல்லூரிகளுக்குமாக ஒதுக்கப்பட்டுள்ளன. எழுதப் படிக்கத் தெரியாத 1,200-க்கும் மேற்பட்ட வயது வந்தோர் பயனடைவதற்காக கிராமங்களிலும், நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலும் 40 வயது வந்தோர் மையங்கள் செயற்படுகின்றன. பல்கலைக் கழகத்தில் இணைந்துள்ள 7 கல்லூரிகளில், மக்கள் தொகை கட்டுப்பாட்டுப் பிரச்சார அமைப்புகள் மக்கள் தொகை பிரச்சினை குறித்தும், மக்கள் தொகைக் கட்டுப்பாடு பிரச்சாரம் தொடர்பான முக்கிய பிரச்சினைகள் குறித்தும் மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகக் கருத்தரங்குகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், பலர் சேர்ந்து விவாதித்தல், வல்லுநர்களின் சொற்பொழிவு ஆகியவற்றை நடத்தியுள்ளன. முறைசாரா தொடர் கல்வி, விரிவாக்க மையங்களை மேலும் அதிகப்படுத்துமாறு பல்கலைக் கழக நல்கைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தில் இணைந்துள்ள கல்லூரிகள் மூலமாக 180 வயது வந்தோர் கல்வி மையங்கள் 40 ஜன் சிஷிக்ஷன் நிலையம் (நிலையான தொடர்கல்வி மையங்கள்) 18 மக்கள் தொகை கட்டுப்பாட்டு பிரச்சார அமைப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில், இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகப் பல்கலைக் கழக நல்கைக் குழு ரூ. 5 இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது.

1988 ஆம் ஆண்டு மக்களுக்கான நடைமுறைக் கல்வித்திட்டம்.— பாரதிதாசன் பல்கலைக் கழக இணைப்புப் பகுதியிலுள்ள 44 கல்லூரிகள், மக்களுக்கான நடைமுறை கல்வித் திட்டத்தில் பங்கு கொண்டன. மொத்தம் 8400 மாணவர்கள் இத் திட்டத்தில் பங்கு கொண்டனர். 1988 ஆம் ஆண்டில் வயதுவந்தோர் 155 பேருக்குக் கல்வியளிக்கப்பட்டது. மக்களுக்கான நடைமுறைக் கல்வித் திட்டப் பணிகள், பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளில் நாட்டுநலப் பணி தொண்டர்களால் வழக்கமான தேசிய திட்டப் பணிகளில் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டன.

## கல்லூரிக் கல்வி.

1965-ல் பொதுக் கல்வித்துறையிலிருந்து ( Public Instruction ) 92 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுடனும் 18 கல்வி இயல் கல்லூரிகளுடனுமாக மொத்தம் 110 கல்லூரிகளுடன் பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இக்கல்லூரிக் கல்வி இயக்ககம் ஆண்டுதோறும் வளர்ச்சி பெற்று இப்பொழுது 209 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுடன், 21 கல்வியியல் கல்லூரிகளுடனும் 15 கீழ்த்திசை கல்லூரிகளுடனும், 3 உடற்பயிற்சி கல்லூரிகளுடனுமாக 2 சமூகப் பணி கல்வி நிறுவனங்களுடனுமாக மொத்தம் 250 கல்லூரிகளுடன் சிறப்புற செயல்பட்டு வருகிறது.

இம்மாநிலத்திலுள்ள 250 கல்லூரிகளும் சென்னை பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் மற்றும் பாரதியார் பல்கலைக் கழகம் இவற்றுள் ஏதாவது ஒன்றுடன் இணையப் பெற்றுள்ளது.

சுயநிதி கல்லூரிகள்.— 12 ஆம் வகுப்பு (+2) தேர்வுகளின் வெற்றி பெறும் மாணவர்கள் எண்ணிக்கை கூடுவதையும் அதனால் கல்லூரிக் கல்வி பயிலுவோர் எண்ணிக்கை கூடுவதை ஈடுகட்டும் நோக்கத்துடன் அரசு உதவி பெறாத 23 சுய நிதி கல்லூரிகளை நிறுவ அரசு ஏற்பளித்துள்ளது. இவற்றுள் 1988–89-ல் ஆண்டில் அரசு அனுமதித்த ஆறு கல்லூரிகள் அடங்கும்.

தன்னாட்சி கல்லூரிகள்.— இதர மாநிலங்களை ஒப்பிடும்பொழுது நம்மாநிலத்தில் தான் தன்னாட்சி கல்லூரிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. என்பது குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

புதியபட்ட வகுப்புகள், புதியபாடங்களும்.— கூடுதல் வகுப்புகள் உயர் கல்வி நாடுவோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வரும் நிலைக்கு ஈடு கொடுக்கும் பொருட்டு அரசு மற்றுமோர் நடவடிக்கை எடுத்து இத்துறையை அனுமதித்துள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் திண்டுக்கல் அரசு மகளிர் கல்லூரியிலு கரூர் அரசு ஆடவர் கல்லூரியிலும் இளநிலை கணிமப் பொறியியல் பட்ட படிப்பு வகுப்பு புதிதாக துவங்கபபட்டது. தனியார் கல்லூரிகளின் புதிதாக 32 இளநிலை பட்ட வகுப்புகளுள் 32 நிறைநிலை வகுப்புகளும் துவங்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் வேலை வாய்ப்பு அதிகமுள்ள பாடங்களாக ( Job oriented ) உள்ளன என்பது கவனத்திற்குரிய முக்கிய தகவல் ஆகும்.

மானியம்.—1988–89 ஆம் ஆண்டில் இத்துறைக்கென வரவு செலவுத் திட்டத்தில் 67 கோடியே 70 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் (திட்டம் மற்றும் திட்டமில்லா தலைப்பில் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை பொது கல்விக்காக வழங்கப்படும் மானியம். அரசு கல்லூரிகளுக்கான கட்டிட செலவு மற்றும் மாணவ மாணவியர் களுக்கான கடன் உதவித் தொகை ஆகியவற்றுக்கும் செலவிடப்பட்டுள்ளது. 1988–89-ல் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களுக்கும் 16 கோடியே 42 இலட்சத்து 4 ஆயிரம் தொகுப்பு மானியமாக ( Block Grants ) அரசு ஒதுக்கியுள்ளது. ரூபாய் 2,52,41,000 ஒதுக்கப்பட்டு இந்நிதியாண்டில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

இதர சிறப்பு அம்சங்கள்.—பல்கலைக் கழக மான்யக் குழுவின் ஆசிரியர் படிப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (Faculty Improvement Programme) 1988–89 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ள 134 ஆட்சிரியர்கள் குறுகிய கால ஆராய்ச்சி பயிற்சி ஆகிய M. Phil-க்கும் 43 ஆசிரியர்கள் நீண்ட கால ஆராய்ச்சியாகிய Ph.D.-க்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

1984-85வது கல்வி ஆண்டிலிருந்து 1987-88ப் கல்வியாண்டு வரையான நான்கு கல்வி ஆண்டுகளில் சிறந்த முறையில் கல்விப் பணியாற்றிய பேராசிரியர்கள் முதல்வர்கள் ஆகியோருக்கு 5—3—1989ப் நாள் அன்று மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் கல்வித்துறை அமைச்சர் தலைமையில் நல்லாசிரியர் விருதுகள் பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு மகிழ்ச்சி அளிக்கும் மிகச் சிறந்த அம்சமாகும்.

புதிய தேசிய கல்வி கொள்கை அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள கீழ் காணும நான்கு கல்வியியல் கல்லூரிகளின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நான்கு அரசு கல்வியியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, வேலூர் அரசு கல்வியியல் கல்லூரி குமாரபாளையம், அரசு கல்வியியல் கல்லூரி, ஒரத்தநாடு ஆகிய மூன்றும் ஆசிரிய படிப்பு கல்லூரிகள் (Colleges of Teacher Education) என்ற நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேர்ந்த 4வது கல்லூரியான சென்னை சைதாப்பேட்டையிலுள்ள அரசு கல்லூரி படிப்பு உயர் கல்வியின் படிப்பு கல்வி நிறுவனம் (Institute of Advance Studies in Education) என்ற மிக சிறந்த நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

**அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் விபரம் :**

| | ஆண் | மகளிர் | கல்வியியல் | கீழ்த்திசை | உடற்பயிற்சி | சமூகபணி | மொத்தம் | தன்னாட்சி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| அரசு | 40 | 14 | 7 | — | — | — | 61 | 4 |
| அரசு உதவி பெறுபவை. | 94 | 38 | 14 | 15 | 3 | 2 | 166 | 31 |
| சுயநிதி | .. | .. | ... | ... | | 23 | *23 | ... |
| மொத்தம். | 134 | 52 | 21 | 15 | 3 | 25 | 250 | 35 |

| | | |
|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் | | 209 |
| கல்வியியல் | | 21 |
| கீழ்த்திசை | | 15 |
| உடற்பயிற்சி | — | 3 |
| சமூகப் பணி நிறுவனம் | — | 2 |
| மொத்தம் | ... | 250 |

## அரசுத் தேர்வுகள்.

இத் தேர்வுத் துறையை தனி இயக்குநரின் கீழ் பிப்ரவரி 1975 முதல் இயங்கி வருகிறது. இத் தேர்வுத் துறை 41 மாநிலம் தழுவிய தேர்வுகளை நடத்தி வருகின்றது. ஓர் ஆண்டில் சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட தேர்வர்கள் மேற்படி தேர்வுகளில் தேர்வெழுதுகின்றனர்.

மேல்நிலைத் தேர்வு: புதிய பாடத் திட்டமாக 10+2+3 அமுலாக்க, மேல் நிலைப் பள்ளி பாடத் திட்டமாக பிளஸ் 1(+1) மற்றும் பிளஸ் 2(+2) தமிழ் நாட்டில் உள்ள இடை நிலைப் பள்ளிகளில் 1978-79 மற்றும் 1979-80ல் அறிமுகப்படுத்தப்பட்டு மற்றும் பிளஸ் 2 பாடத் திட்ட முடிவிலான மேல்நிலைத் தேர்வு அரசு தேர்வு இயக்குநரால் மார்ச்/ஏப்ரல் 1980ல் முதல் தேர்வு நடத்தப்பட்டது.

**முறைசாராக் கல்வி தேர்வுகள்:**

(1) 1980-ம் ஆண்டு முதல் தனித் தேர்வர்களுக்கென்றே எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது.

(2) இந்த எட்டாம் வகுப்பு தேர்வில் ஆங்கில பாடத்துடன் தேர்ச்சி பெற்றவர்களும், பள்ளியில் படித்து எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் ஆண், பெண் தனித் தேர்வர்களாக நேரிடையாக எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வினை எழுதலாம் இவர்கள் 15 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும்.

(3) இவ்வாறு எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வினை தனித் தேர்வராக எழுதி தேர்ச்சி பெற்றவர்கள் மேல்நிலைத் தேர்வினை செய்முறை தேர்வு பாடங்கள் இல்லாமல் பொதுக் கல்வித் தொகுதியில் தேர்வு எழுதலாம். இவர்கள் 17 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும்.

இதர மாநிலச் சான்றிதழ் உடையோர்க்கு சலுகைகள்: இதர மாநில வாரியங்களின் 10-ம் வகுப்பு தேர்ச்சிக்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளவர்களுக்கு இம்மாநில வாரியத்தின் தேர்ச்சிக்கான 35 சதவிதம் மதிப்பெண்களை வலியுறுத்தாமல் இம்மாநில வாரியத்தால் நடத்தப்படும் மேல்நிலை தனித் தேர்விற்கு மாணவர்களாக அனுமதிக்கப்படுகிறது. இதனால் இதர மாநில வாரியங்களால் நடத்தப்படும் பல்வேறு விதமான தேர்வுகளில் தேர்ச்சி பெற்று சான்று பெற்றுள்ளவர்கள் எவ்வித இடையூறுமின்றி இம்மாநிலத்தில் தங்கள் கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்ள ஏதுவாகிறது.

விடைகள் அறுதியிடும் முதன்மைமுறை: முதன்முறையாக வினாக்களுக்கான விடைகளை அறுதியிட கிராமப்பள்ளி, நகரப்பள்ளி, அரசு உதவி பெறும் தனியார் பள்ளி மற்றும் அரசினர் பள்ளிகள் ஆகிய பல்வேறு சூழ்நிலைகளில் பணியாற்றும் முதிர்ந்த அனுபவமிக்க குழு சென்னை அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் ஒன்றுகூடி விவாதித்து ஒருமித்தக் கருத்துடன் விடைகளைத் தயாரிக்கின்றது. இதனால் ஒரே சீரான விடைகள் மாநிலம் முழுவதும் அளிக்கப்படுவதோடு மதிப்பீடு வேறுபாடற்றதாக அமையச் சீர்திருத்தப்பட்டுள்ளது. தரமும் நிலை நிறுத்தப்படுகிறது.

தேர்வு முடிவுகள் வெளியிட்ட மறுநாள் மதிப்பெண் சான்றிதழ்களை விநியோகித்தல்: மேல் நிலைத் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, ஆங்கிலோ-இந்தியன் தேர்வு மெட்ரிகுலேசன் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு மேற்படிப்பிற்கு விண்ணப்பிக்க தேர்வு மதிப்பெண்கள் தேவைப்படுவதால் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட மறு நாள் மதிப்பெண்களை தேர்வர்களுக்கு விநியோகிக்கும் முறை கொண்டு வரப்பட்டது. இம்முறை நடைபெற்று முடிந்த 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரப்பெற்றது.

அகில இந்திய அளவிலான தேர்வுகள்: தேசிய திறனாய்வு தேர்வு ஆண்டுதோறும் நடத்த இத் தேர்வுத் துறை பொறுப்பேற்றுள்ளதால் முதல் கட்ட தேசியத் திறனாய்வு தேர்வு 1986ல் பிப்ரவரி மாதம் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து வந்த மாணாக்கர்களுக்கு தேர்வு நடத்தி அதில் முன்னிலையில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களின் பெயர் பட்டியலை டில்லியிலுள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டது. இம்முறையில் முதல் கட்டத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இரண்டாம் கட்டத் தேர்வு டில்லி தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனம் நடத்துகிறது.

டில்லி மத்திய பணியாளர் தேர்வாணையம் இத்துறை அரசுத் தேர்வு இயக்குநரை ஒருங்கிணைப்பு மேற்பார்வையாளராக அமர்த்தி இந்திய ஆட்சிப் பணி ஆரம்பநிலை மற்றும் முக்கியநிலை தேர்வுகளையும் ஏனைய மத்திய பணியாளர் தேர்வாணைய தேர்வுகளையும் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளையும் இத்துறை செயல்படுத்து கிறது.

மேலும் இதே தொகுதியில் இத்துறை இயக்குநர் டில்லி இந்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (Union Public Service Commission) நடத்தும் தேர்வுகளை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளையும் மேற்கொள்கிறார்.

வினாத்தாள் பரிசீலனை செய்தல்.—எஸ். எஸ். எல். சி. மேல்நிலைத்தேர்வு ஆங்கிலோ—இந்தியன் தேர்வு மற்றும் மெட்ரிகுலேசன் தேர்வுகளில் சான்றிதழ்கள் மாணாக்கர்களுக்கு விநியோகித்தலும் அவர்கள் விடைதாள்களை மறுபரிசீலனை செய்யக் கோரி நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணமாக இந்திய அஞ்சல் ஆணை (அல்லது) செலுத்துச் சீட்டுகளுடன் பெறப்பட்டு அவர்களது விடைத்தாள்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மறுபரிசீலனை செய்யப்படுகிறது. அரசாணை நிலை எண். 1752, கல்வித்துறை, நாள் 9—11—1987—ன்படி அரசு புதிய கட்டண விகிதங்கள் அறிவித்துள்ளன. மார்ச் 1988 ஆண்டு தேர்வுக்கு அரசாணையின்படி செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தேர்வுப்பணிகளை இயந்திரமயமாக்குதல்.—அக்டோபர் 1972 முதல் தேர்வு பணிகள் கம்ப்யூட்டர் மூலம் இயந்திரமயமாக்கப்பட்டு எஸ்.எஸ்.எல்.சி. அக்டோபர் 1972 பொதுத் தேர்வு மற்றும் மார்ச் 1980—லிருந்து மேல்நிலைத்தேர்வு பணிகள் நடத்தப் பட்டது. ஒரே மாதிரி நடைமுறையினைத் தொடர்ந்து ஆங்கிலோ—இந்தியன் பள்ளி தேர்வு மற்றும் மெட்ரிகுலேசன் தேர்வுகளின் தேர்வின் முன்பணிகளும், பின்பணிகளும் மார்ச் 1988—லிருந்து சான்றிதழ்கள் கம்ப்யூட்டர் மூலம் அச்சடிக்கப்பட்டு தெளிவாக வழங்கப்படுகிறது.

மேல்நிலைத்தேர்விற்கு மாற்றுப் பதிவெண்முறை.—1988 ஏப்ரலில் முதன் முறையாக மேல்நிலைத்தேர்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடங்களுக்கு மட்டும் மாற்றுப் பதிவெண்கள் கொடுக்கப்பட்டு மதிப்பெண் மதிப்பீடு செய்யப்படும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் மதிப்பீடு மையங்களின் ஒழுங்கீனச் செயல்கள் பிழை மற்றும் சந்தேகங்கள் நடைபெறாவண்ணம் தடுக்க ஏதுவாகிறது.

மையமதிப்பீட்டு முறை.—எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் ஹையர் செகண்டரி தேர்வுகளில் விடைத்தாள்கள் மதிப்பீட்டு மையங்களில் திருத்தும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. மதிப்பீட்டு மையங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு பள்ளிகளில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையமும் ஆய்வு அலுவலர் தகுதியின் முகாம் அலுவலர் நிர்ணயிக்கப்பட்டு சுமார் 10 நாட்கள் நடத்தப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தேர்வில் விடைத்தாள்கள் மதிப்பீட்டு மையத்தில் முகாம் அலுவலரின் கண்டிப்பான நேரடி மேற்பார்வையில் மதிப்பீடு செய்யப்படுவதால் ஒரே சீரான மதிப்பீடும் மந்தணமும் மிகச்சிறிய முறையில் நடைபெறுவதுடன் அரசு புள்ளிவிவர வகைபாட்டு மையத்திற்கு மதிப்பெண் பட்டியல்களை அவ்வப்போது உடனுக்குடன் பணி தொடர்வதற்கேற்ப அனுப்ப இயலுகிறது.

இம்முறை மற்ற மாநிலங்களுக்கும் புதிய கல்விக் கொள்கையில் தேர்வு சீர்திருத்த முறைகளில் ஒன்றாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை மதிப்பெண் பட்டியல் வழங்குதல்.—மதிப்பெண் சான்றிதழ்களை உடனடியாக மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக மேல்நிலைப்பள்ளிகளுக்கு மதிப்பெண் பட்டியல் வழங்க அரசு நிலை எண். 577, கல்வித்துறை நாள் 29–5–1988-ல் ஆணையிடப்பட்டது.

சில முக்கிய தேர்வுகளின் புள்ளி விவரம்.—(1988 மார்ச் மற்றும் 1989 மார்ச்).—மேல்நிலை, எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியன் தேர்வுகளின் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் தனித்தேர்வர்களின் புள்ளிவிவரம் இணைக்கப்பட்டுள்ளது.

மார்ச் 1989–ல் மேல்நிலைத்தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி., ஆங்கிலோ இந்தியன் தேர்வு, மெட்ரிகுலேசன் தேர்வுகளில் பாடவாரியாக முதன்மை மதிப்பெண் பெற்றவர்களும், மொத்த பாடத்தில் சேர்த்து சிறப்பிடம் பெற்ற தேர்வர்களின் விவரங்களும் வெளியிடப்பட்டது.

அட்டவணை—I.

**1988–89-ல் நடைபெற்ற பெரிய அளவிலான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்வுகளின் பள்ளி விவரங்கள்.**

| தேர்வுகள். | மார்ச் 1988 | | அக்டோபர் 1988 | மார்ச் 1989 | |
|---|---|---|---|---|---|
| | வருகை புரிந்தவர்கள். | தேறியவர்கள். | வருகை புரிந்தவர்கள். | வருகை புரிந்தவர்கள். | தேறியவர்கள் சதவிகிதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ஆண் மற்றும் பெண்) | | | | |
| **எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு:** | | | | | |
| பள்ளி மற்றும் தனித் தேர்வர்கள் | 4,96,319 | — | 1,77,294 | 5,07,139 | — |
| பள்ளி மாணவர்கள் மட்டும் | 3,67,550 | 1,85,368 | — | 3,67,276 | 53.6 |
| ஆங்கிலோ-இந்தியன் தேர்வு | 3,479 | 2,927 | 636 | 3,625 | 8 |
| மெட்ரிகுலேஷன் தேர்வு | 10,365 | 9,232 | 1,213 | 12,518 | 87 |
| **மேல்நிலைத் தேர்வு:** | | | | | |
| பள்ளி மற்றும் தனித் தேர்வர்கள் | 2,14,877 | | 83,242 | 2,58,695 | — |
| பள்ளி மாணவர்கள் மட்டும் | 1,67,625 | 99,345 | — | 1,81,105 | 58.7 |
| இடைநிலை ஆசிரியர் பயிற்சித் தேர்வு (தொழிற்கல்வி) | 12,997 | 10,514 | 2,249 | 13,22 | 93.67 |

## தொலை உணர்வு மையம்.

தொலை தூர இயற்கை வள ஆய்வு என்பது, தொலைவிலிருந்து பொருட்கள் இருப்பதை அறிந்து, அவற்றின் அருகில் செல்லாமல் தொலைவிலிருந்தே அவற்றின் தன்மைகளைப் பதிவு செய்வது என்று எளிதாக விளக்கமளிக்கலாம்.

2. தொலை தூர இயற்கை வள ஆய்வுத் தொழில் நுட்பத்தில் கல்வி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தவும் இம்மாநிலத்தின், இந்நாட்டின் இயற்கை வளங்களை மேம்படுத்த அதனைப் பயன்படுத்தவும். தமிழ்நாடு அரசு வழங்கிய மானியத்தைக் கொண்டு, 1982-ல் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனம் அமைக்கப்பட்டது. தொலை தூர இயற்கை வள ஆய்வுத் தொழில் நுட்ப உத்திகளை மேலும் பயன்படுத்த பல்வேறு துறைகளுடன் திறம்படத் தொடர்பு கொள்ளவும் தொலை தூர இயற்கை வள ஆய்வு தொழில் நுட்பத்தில் மேலும் சோதனைகளை மேற்கொள்ளவும் இயலும் வகையில் தொலை தூர இயற்கை வள ஆய்வுப்பணி அதனைப் பயன்படுத்தும் துறைகளிடமிருந்து எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. தொலை தூர இயற்கை வள ஆய்வுத் தொழில் நுட்பம் பற்றிய, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை, தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ், 15—2—1984—ஆம் நாளிட்ட 19—ஆம் எண் ஆணைப்படி அரசு அமைத்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் தலைமையில், நிலை ஆலோசனைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள இவ்விரு குழுக்களின் மேற் பார்வையில் இந்நிறுவனம், ஒரு தன்னாட்சி உரிமை பெற்ற அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

3. நோக்கங்கள்.—தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(i) தொலை தூர இயற்கை வள ஆய்வுத் தொழில் நுட்ப உத்திகளால் பயன்படுத்துகின்ற பல்வேறு துறைகளின் அதிகாரிகளுக்கு இந்த ஆய்வுப் பயன்பாட்டில் பயிற்சி அளித்தல்;

(ii) தற்காலிக தகவல்கள் அடங்கிய தகவல் தொகுப்பு மையங்களை ஏற்படுத்துதல், இயற்கை வளங்கள் பற்றிய தகவல் முறைகளை உருவாக்குதல்;

(iii) இயற்கை வளங்களை உரிய அளவு பயன்படுத்திக் கொள்ளவும், அவற்றை நிருவகிக்கவும் தொலை தூர இயற்கை வள ஆய்வு மதிப்பீட்டு திட்டத்தை மேற் கொள்ளுதல்;

(iv) உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட துறை சம்பந்தப்பட்ட பிரச்சினை களில், பயன்பாட்டுத் துறைகளுக்கு உதவுதல்;

(v) தொலை தூர இயற்கை வள ஆய்வில் எம்.டெக். பட்ட மேற்படிப்புக்கு கல்வி வகை செய்தல்.

மேற்படிப்புக் கல்வி வசதி.— அண்ணா பல்கலைக்கழகம், தொலை தூர இயற்கை வள ஆய்வில் பட்டய மேற்படிப்பை முதற்கண் தொடங்கி பின்னர், எம். டெக். பட்ட மேற்படிப்பு என்கிற அளவிற்கு நிலை உயர்த்தப்பட்டுள்ளது. தொலை தூர இயற்கை வள ஆய்வில் பட்டமேற்படிப்பின் பாடத்திட்டம், பல்வேறு பயன்பாட்டுத் துறை களின் தேவைகளுக்கு உதவும் வகையில் நன்கு தயாரிக்கப்பட்டது. இந்தியாவில் இந்த ஒரு பல்கலைக்கழகத்தில் மட்டுமே, தொலை தூர இயற்கை வள ஆய்வில் பட்டமேற்படிப்பு வகுப்பு நடத்தப்படுகிறது.

தகவல் தொகுப்பு.— தமிழ்நாடு அரசு, இந்திய நில ஆய்வுத் துறை, விண்வெளி ஆய்வுத் துறை ஆகியவை தொடர்பான இட அமைப்பு விவர அட்டைகள், வான்வெளி நிழற்படங்கள், செயற்கைக்கோள் தகவல் தொகுப்பு போன்ற தகவல்களைத் தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனம் முறையாகப் பெற்று வருகிறது. பயன்பாட்டுத் துறைகள் இம்மாநிலத்தில் நலத்திட்டங்களைத் தயாரிக்கையில் அவற்றுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, சிறந்த தகவல் தொகுப்பு வங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைத் திட்டங்கள்.—தமிழ்நாட்டைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள பள்ளத்தாக்குகள் குறித்து விவரிக்கும் குறிப்புகளையும் வரைபடங் களையும் தயாரித்து, அவற்றையும் மாவட்டங்கள் பற்றிய அறிக்கைகளையும் ஒருங் கிணைத்து அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியம் அளித்த வழிகாட்டிக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு மாவட்டங்களில் உள்ள தரிசு நிலங்கள் குறித்த நிலப்படங்கள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன. தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனம் தேசிய அளவில் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக திகழ்வதால் இவ்விரு திட்டங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனத்திற்கான தர மேம்பாட்டுத் திட்டம்.— மிக உயர் நுட்பத்துடன் இயற்கை வளம் பற்றிய வரைபடங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்குரிய தொலை தூர இயற்கை வள ஆய்வுச் சாதனத்தின் ஒரு கூறாகத் திகழும் உயர் நுட்பம் வாய்ந்த ஒளிப்பட சாதனத்தை இந்நிறுவனத்திற்கு வழங்க ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு இசைவளித்துள்ளது. நவீன கம்யூட்டர் மூன்ற யா்ன வா்க்ஸ் 11/780 சாதனமும், ஒளிப்படம் எடுப்பதற்கு நவீன சாதனமும் ஏனைய சாதனங்களும் ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசிடமிருந்து வரப்பெற்று இங்கு அமைக்கப்பட்டுள்ளதால், தொலை தூர இயற்கை வளங்களை ஆய்வு செய்ய செயற்கைக் கோள், விமானம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் இந்நிறுவனம் நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது. தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனம், 1988–89-ஆம் ஆண்டில் நிறைவேற்றிய திட்டங்கள் பற்றிய விவரங்களின் அட்டவணை I-ல் அளிக்கப்பட்டுள்ளன.

பயன்படுத்தும் துறைகளுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்காக் கூடுதல் மனித ஆற்றலை ஏற்படுத்த, தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனம் பயிற்சித் திட்டங்கள் பலவற்றை நடத்தியுள்ளது. நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் பற்றிய விவரங்கள் அட்டவணை II-ல் அளிக்கப்பட்டுள்ளன. தொலை தூர இயற்கை வள ஆய்வு நிறுவனத்தின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான தேவை வேகமாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இதனால், இந்நிறுவனத்தை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, திட்டக்குழுவின் உறுப்பினரான திரு. சேஷன், இ.ஆ.ப., அவர்களைக் கலந்தாலோசித்து ஆம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 7 கோடி ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் திட்டக் குழுவிடம் அளிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை—I

## முடிக்கப்பட்ட திட்டங்கள்.

| தொடர் எண், திட்டத்தின் பெயர். | உதவி செய்யும் அமைப்பு. | திட்டத்தின் கால அளவு. | திட்டம் தொடங்கப்பட்ட மாதம் ஆண்டு. | செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. இராமநாதபுரம் மண்வள மதிப்பீடு நிருவாகம் (குடிநீர்க்குழு.) | தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பக்குழு. | 18 மாதங்கள் | 1988 ஜனவரி திங்கள் முதல் 1989 ஜூன் திங்கள் வரை—1989 செப்டம்பர் திங்கள் வரை நீட்டிக்கப்பட்டது. | 3.78 |
| 2. சென்னைப் பெருநகர் பகுதியை தொழில் மயமாக்கியதால் ஏற்பட்ட விளைவு. | மத்திய அரசின் சுற்றுச்சூழல் வன அமைச்சகம் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம். | 18 மாதங்கள் | 1988 ஏப்ரல் திங்கள் முதல் 1989 செப்டம்பர் திங்கள் வரை—1989 நவம்பர் திங்கள் வரை நீட்டிக்கப்பட்டது. | 5.51 |
| 3. குடிநீர் குறித்த தேசிய தொழில் நுட்பக்குழு மதுரை மாவட்டம், செங்கை—அண்ணா மாவட்டம், தமிழ்நாடு. | தொலை தூர இயற்கை வள ஆய்வு தேசிய நிறுவனம் மத்திய அரசு. | 18 மாதங்கள் | 1988 ஜூலை திங்கள் முதல் 1989 டிசம்பர் திங்கள் வரை. | 1.19 |

அட்டவணை II.

நடத்தப்பட்ட பயிற்சித் திட்டம் (சுருக்கம்).

| தொடர் எண். | பயிற்சி பெற்ற அதிகாரிகள். | பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தமிழ்நாடு அரசு அதிகாரிகள் | 25 | 237 |
| 2 | ஏனைய மாநில அரசுகளின் அதிகாரிகள் | 1 | 33 |
| 3 | மத்திய அரசு அதிகாரிகள் | 2 | 10 |
| 4 | பல்கலைக்கழகத்தின் கோடைக்காலப் பயிற்சிப் பள்ளியில் கலந்து கொண்டவர்கள் | 2 | 50 |
| 5 | பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் | 1 | 10 |
| | மொத்தம் | 31 | 340 |

சட்டக் கல்வி.

தமிழ்நாட்டில் சட்டக் கல்வித்துறை 1953 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக தொடர்ந்து பணியாற்றி வருகின்றது.

1891 ஆம் ஆண்டில் சென்னை சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. பின்பு 1974 ஆம் ஆண்டு மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியும், 1979 ஆம் ஆண்டில் திருச்சி மற்றும் கோவை ஆகிய இரு இடங்களிலும் தலா ஒரு சட்டக் கல்லூரி வீதம். மொத்தம் நான்கு அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

1983–84 ஆம் கல்வியாண்டு முதல் சட்டக் கல்லூரிகளில் மூன்றாண்டு சட்டப் படிப்பை தவிர ஐந்தாண்டு சட்டப் படிப்பும் தொடங்கப்பட்டுள்ளது. பிளஸ் 2 தேர்வுகளில் தேர்ச்சியடைந்த மாணவர்கள் ஐந்தாண்டு சட்டப் படிப்புக்கு சேரத் தகுதியுள்ளவர்கள். 1987–88 ஆம் கல்வியாண்டில் ஐந்தாண்டு சட்டப் படிப்பின் மூலம் பி. எல். படிப்பை ஒரு பகுதியினர் வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் 1986–87 ஆம் ஆண்டு முதல் சட்ட மேற்படிப்பு (எம்.எஸ்.) வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பணியிலிருப்போருக்காக 1966–67 ஆம் கல்வியாண்டிலிருந்து சென்னை சட்டக் கல்லூரியிலும், 1979 ஆம் ஆண்டிலிருந்து மதுரை சட்டக் கல்லூரியிலும் மூன்றாண்டு மாலை நேரச் சட்டப் படிப்பு தொடங்கப்பட்டு இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அறிவுரைகளின்படி 1979–80 ஆம் ஆண்டுடன் மாலை நேரச் சட்டப்படிப்பு நிறுத்தப்பட்டிருந்தது. பிறகு இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அனுமதியைப் பெற்று மீண்டும் 1983–84 ஆம் கல்வியாண்டு முதல் இத்துறையின் கீழ் இயங்கும் நான்கு அரசு சட்டக் கல்லூரிகளிலும் மூன்றாண்டு மாலை நேரச் சட்டப் படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டு செம்மையாக நடைபெற்று வருகின்றன.

இத்துறையில் ஆண்டுதோறும் சட்டக் கல்வி ஆண்டு மலர் (Year book of Legal Studies) வெளியிடப்படுகிறது. இவ்வெளியீட்டில் வழக்கறிஞர்கள், சட்டப் பேராசிரியர்கள் போன்றோர்களின் கட்டுரைகள் மற்றும் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் நான்கு அரசு சட்டக் கல்லூரிகளில் மொத்தம் 5,660 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மூன்றாண்டு பகல் மற்றும் மாலை நேரச் சட்டப் படிப்பு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அடியிற்கண்டவாறு தரப்பட்டுள்ளது :—

| வரிசை எண் மற்றும் கல்லூரியின் பெயர். (1) | மூன்றாண்டு சட்டப் படிப்பு (முழுநேரம்). (2) | மூன்றாண்டு சட்டப் படிப்பு (மாலை நேரம்). (3) | ஐந்தாண்டு சட்டப் படிப்பு. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| 1 சென்னை | 810 | 720 | 900 | 2,430 |
| 2 மதுரை | 480 | 360 | 750 | 1,590 |
| 3 திருச்சி | 240 | 180 | 400 | 820 |
| 4 கோவை | 240 | 180 | 400 | 820 |
| | 1,770 | 1,440 | 2,450 | 5,660 |

சட்டக் கல்லூரிகளில் இலவசச் சட்ட உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் சட்ட ஆலோசனைத் தேவைப்படும் ஏழை மற்றும் எளிய மக்கள் பயன் பெறுகிறார்கள்.

## சென்னைப் பல்கலைக் கழகம்.

பேரவை.—பல்கலைக்கழக பேரவைக் கூட்டம் மூன்று முறை நடைபெற்றது.

(1) சாதாரணக் கூட்டம் 22—10—1988 அன்று நிகழ்ந்தது.

(2) ஆண்டுக் கூட்டம் 25—3—1989 அன்று நடை பெற்றது.

(3) சிறப்புக் கூட்டம் 22—10—1988 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பட்டயங்களும் பெருஞ் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆட்சிக் குழு.—பல்கலைக் கழக செயல் திட்டங்களை நிறைவேற்றும் அமைப்பாகிய ஆட்சிக் குழு பதினொரு முறை கூடி இன்றியமையாத முடிவுகளை நிறைவேற்றியது. அத்துடன் சில அவசர முடிவுகளும் ஆட்சிக்குழுவின் சுற்றுக்கு விடப்பட்டு எடுக்கப் பெற்றன.

கல்வி அவை.—கல்வி அவை 24—9—1988 அன்றும் 25—2—1989 அன்றும் இருமுறை கூடியது.

பாடத்திட்டக் குழுக்கள்.—அறிக்கை ஆண்டு தொடக்கத்தில் 78 பாடத்திட்டக் குழுக்கள் இருந்தன. இந்த ஆண்டில் 21 பாடத் திட்டக் குழுக்கள் புதிதாக அமைக்கப் பெற்றன.

அரபிக், பெர்சியன் பாடத்திட்டக் குழுக்களும், உருது பாடத் திட்டக் குழுவும் ஒரே பாடத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டன.

எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதன் காரணமாக 1. மருந்தியல், 2. பல் அறுவையியல், 3. செவிலியல் ஆகிய மூன்று பாடத்திட்டக் குழுக்களும் திருத்தி அமைக்கப்படவில்லை.

31—3—1979-ல் மொத்தம் 75 பாடத்திட்டக் குழுக்கள் இருந்தன. அறிக்கை ஆண்டில் கம்ப்யூட்டர் அறிவியலுக்கென தனிப்பட்ட ஒரு பாடத்திட்டக் குழு அமைக்கப் பட்டது.

விதிகள்.—கீழ்க்கண்ட மாற்றங்களும், சேர்க்கைகளும் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேந்தரின் ஒப்புதலைப் பெற்றன :—

கீழ்க்கண்ட மூன்று புதிய துறைகளை தோற்றுவிப்பதற்கான பல்கலைக் கழகச் சட்டம் 8வது பிரிவு விதிகளோடு சேர்க்கப்பட்டன :—

(1) கிராமப் பொருளாதார ஆராய்ச்சி மையம் (எ இ.ஆர்.சி.) (15—5—1985) முதல்).

(2) சைவ சிந்தாந்தத் துறை (23—4—1986 முதல்).

(3) கம்ப்யூட்டர் அறிவியல் (1987-88) கல்வியாண்டு சட்டத்தின்படி அஞ்சல் வழிக் கல்வி நிறுவனத்துறைகள் விடுமுறையோடு கூடிய கல்வித் துறைகளாக மாற்றப் பட்டன.

பல்கலைக் கழகச் சட்டத்தின் 9 மற்றும் 24 ஆம் பிரிவுகளின் கீழ் சேர்க்கப்பட்ட விதிகளின்படி, பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகையில் இறக்கும் திருமணமாகாத ஊழியர்களின் (ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கள்) குடும்ப ஓய்வூதியம் பெற்றோர்களுக்கு 1—8—1970 முதல் வழங்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டம் 26-வது பிரிவு 2 முதல் 16 வரையிலான விதிகள், தன்னாட்சிக் கல்லூரி குறித்து மாற்றி அமைக்கப்பட்டன.

பல்கலைக் கழகச் சட்டத்தில் சேர்க்கையின்படி 37-வது பிரிவின் 1-அ எம்.எஸ்சி. முதுகலை சட்டம் சார் அறிவியல் பட்டத் தேர்வுக்கான தேர்வுக் கட்டணத்தை அறிவியல் புலத்திற்கேற்ப அமைத்தல்.

நிர்வாகச் சட்டங்கள்.—பின்வரும் நிர்வாகச் சட்டச் சேர்க்கைகள் ஆட்சிக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பேரவைக்கு அறிவித்து வேந்தர் முன்பு வைக்கப் பட்டன.

பல்கலைக்கழகச் சட்டம் 37-வது பிரிவு நிர்வாகச் சட்டம் 5-1 அறிவியல் புலத்தின் கீழ் (1) எம். எஸ். ஸி. சட்டம் சார் அறிவியல் முதுகலைப் படிப்பிற்கான பதிவுக் கட்டணம், நிர்ணயிக்கப்பட்டது.

2. அஞ்சல் வழிக் கல்வி நிறுவனத்தினரால் நடத்தப்படும் வகுப்புகளுக்கு, கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம், கூடுதல் கட்டணம் போன்றன.

விதிமுறைகள்.—1988—89-ல் கல்விக்குழுவால் கீழ்க்கண்ட இன்றியமையாத மாற்றங் களும், திருத்தங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1. புதிதாக சேர்க்கப்பெற்ற வகுப்புகள்/பிரிவுகள்/பாடங்கள் :

(1) மூப்பியல் மருத்துவம் எம்.டி.பிரிவு 24.

(2) இளங்கலை வணிகவியல் நிர்வாகம் (பி.பி.எ.)

(3) ஊனமுற்றோருக்கான இயக்க அறிவியல்.

(4) விளையாட்டுப் பயிற்சிகள் ; முதுகலை பெருஞ்சான்றிதழ்.

(5) டென்னிஸ் பயிற்சிக்கான முதுகலை பெருஞ்சான்றிதழ்.

(6) தாவர அறிவியலுக்கான முதுகலைப் பட்டம்.

(7) பாலிமர் அறிவியல் ஐந்து ஆண்டு முதுகலை.

(8) நுண்ணுயிரியல் முதுகலை.

(9) நிலவியல் முதுகலை பிரிவு ஏழு.

(10) மின்னணுவியல் அறிவியல் இளங்கலை.

(11) வங்கி மேலாண்மை இளங்கலை.

(12) நுண்ணுயிரியல் பிரிவு 13-4 இளங்கலை.

(13) மனித இயல் முன்னேற்றச் சான்றிதழ்.

(14) சைவ சித்தாந்த சான்றிதழ்.

(15) இளங்கலை அறிவியல், இயற்பியல் பாடத்திற்கு கணிப்பொறிப் பயிற்சியின் பயன்பாடு.

(16) இளங்கலை அறிவியல் தாவரவியல்—மூன்று புதிய சார்புப் பாடங்கள் (1) உணவுப் பாதுகாப்பும் வேதிமையும், (2) மலரியல், (3) தாவர மேம்பாடு.

(17) நூலக அறிவியல் முதுகலை—பருவத் திட்டம்.

<u>பட்டமளிப்பு விழா</u>.—1988ஆம் ஆண்டுக்கான ஆண்டுப் பட்டமளிப்பு விழா 21—9—1988—ல நடைபெற்றது. இந்திய அரசின் சட்ட நீதித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பி. சங்கரானந்து அவர்கள் பட்டமளிப்பு விழா உரையினை நிகழ்த்தினார். 24—2—1989 அன்று 1988—ஆம் ஆண்டுக்கான நூனைப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

<u>கோடைக்கால தொடர் எம்.ஃபில். படிப்புத் திட்டம்</u>.—1988, 1989 கோடைக் காலத்தில் வெவ்வேறு துறைகளில் தொடர் எம்.ஃபில். படிப்புத் திட்டத்தினை நடத்துவதற்கு 28 கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு 182 ஆசிரியர்கள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

<u>அஞ்சல் வழிக் கல்வி</u>.—அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் 1981—82 கல்வியாண்டில் நிறுவப்பட்டது. நாட்டின் முக்கியமான தொலைக்கல்வி மையமாக இது விளங்கி வருகிறது.

1—4—1988 முதல் 31—3—1989 வரையிலான காலத்தில் அஞ்சல்வழிக் கல்வி நிறுவனத்தில் பின்வரும் படிப்புப் பிரிவுகள் நடத்தப்பட்டன.

<u>1988–89 கல்வியாண்டு (படிப்புப் பிரிவுகள்).</u>

<u>(அ) மூன்றாண்டுப் பட்டப்படிப்புப் பிரிவுகள் :</u>

<u>முறைசார் மற்றும் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் :</u>

பி. ஏ. வரலாறு (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை)

பி. ஏ. பொருளியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை).

பி. ஏ. உளவியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை).

பி. ஏ. இந்திய இசையியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை).

பி. ஏ. தமிழ் (தமிழ் பயிற்றுமுறை)

பி. ஏ. ஆங்கிலம் (ஆங்கிலம் பயிற்றுமுறை)

பி. எஸ்.ஸி. கணிதவியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை).

பி. காம். (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை)

பி. லிட். தமிழ் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை):

<u>முறை சார் பட்டியல் :</u>

(அ) பி. ஏ. புவியியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை).

(ஆ) நிலுவை முறை—ஓராண்டு மட்டும் (திறந்த வெளி முறை மட்டும்.)

(இ) ஈராண்டுப் பட்ட மேற்படிப்புப் பிரிவுகள் :
(முறைசார் முறை மட்டும்)

எம். ஏ. வரலாறு (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை)

எம். ஏ. அரசியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்று முறை)

எம். ஏ. பொது ஆட்சியியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை)

எம். ஏ. பொருளியல் (ஆங்கிலம் மற்றும் பயிற்றுமுறை)

எம். ஏ. பாதுகாப்பியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை)

எம். ஏ. தமிழ் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை)

எம். ஏ. ஆங்கிலம் (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை)

எம். காம். (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை).

(ஈ) ஆண்டுப் படிப்புப் பிரிவுகள் (சனவரி முதல் டிசம்பர் வரை 1989):

(அ) நூலகம் மற்றும் செய்தியியல்—சான்றிதழ்ப் படிப்பு (ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை 3 மாதங்கள்).

(ஆ) நூலகம் மற்றும் செய்தியியல் பட்டப்படிப்பு (ஆங்கிலம் பயிற்றுமுறை—1 வருடம்).

(இ) நூலகம் மற்றும் செய்தியியல்—பட்ட மேற்படிப்பு (ஆங்கிலம் பயிற்று முறை—1 வருடம்).

(உ) பெருஞ்சான்றிதழ்ப் படிப்புப் பிரிவுகள் (1 வருடம்)

(1) தொழிலாளர் சட்டவியல் (ஆங்கிலம் பயிற்றுமுறை)

(2) வரியிட்டியல் (ஆங்கிலம்— பயிற்றுமுறை)

(3) காப்பீட்டுச் சட்டவியல் (ஆங்கிலம் பயிற்று முறை)

(4) வணிகச் சட்டவியல் (ஆங்கிலம் பயிற்றுமுறை)

(5) இந்தியச் சட்டத் தொகுதியியல் (ஆங்கிலம் பயிற்றுமுறை)

(6) சான்றாதாரம்உள்ளிட்ட குற்றச் சட்டவியல் (ஆங்கிலம் பயிற்றுமுறை)

(7) புவியியல் (தமிழ்/ஆங்கிலம் பயிற்றுமுறை).

(8) கல்வியியல் பட்டப்படிப்பு பி.எட்.

(ஆங்கிலம் மற்றும் தமிழ் பயிற்றுமுறை—1 வருடம்).

கல்வியியல்—பட்ட மேற்படிப்பு, எம். எட்., (ஆங்கிலம் பயிற்றுமுறை 1 வருடம்)

இந்த ஆண்டில் இந்நிறுவனம் 1,04,370 மாணவர்களைக் கொண்டு சிறப்பாகச் செயல்படுகிறது. கடந்த ஆண்டில் 92,737 மாணவர்களே இந்நிறுவனம் வழியாகப் பயின்றனர்.

ஆராய்ச்சித் திட்டங்கள்.— அறிக்கை ஆண்டில் 263 பேர் பி. எச். டி. பட்டமும் ஒருவர் டி.எஸ்.சி. பட்டமும் பெற்றனர். இவ்வாண்டில் 437 பேர் பி.எச்.டி. திட்டத்திலும் 806 பேர் எம்ஃபில் திட்டத்திலும் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

ஏற்பு அளிப்பு.— 1988-89 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழகம் பின்வரும் சுயநிதி கல்லூரிகள் தொடங்குவதற்கான இசைவினை நல்கியது.

1. கலை—அறிவியல் கல்லூரிகள் :

(அ) எம். ஜி. ஆர். கல்லூரி, கிருஷ்ணகிரி 635 001. தர்மபுரி மாவட்டம்.

(ஆ) ஆதிபராசக்தி அறிவியற் கல்லூரி, கலவை—632 506 வடஆற்காடு மாவட்டம்

2. தொழிற் கல்லூரிகள் (பொறியியல்)

(அ) சத்தியபாமா பொறியியற் கல்லூரி, சென்னை 600 021.

(ஆ) டாக்டர் எம்.ஜி.ஆர். பொறியியற் கல்லூரி, மதுரவாயல்—602 102.

1988-89 ஆம் கல்வி ஆண்டு வரை இப்பல்கலைக்கழகத்தின் இணைக்கப்பட்ட/ஒப்புக் கொள்ளப்பட்ட கல்லூரிகளில் மொத்த எண்ணிக்கை 110 (கலை அறிவியல் 74; பொறியியல் 15, கல்வியியல் 10, சட்டவியல் 2, உடற்கல்வியியல் 2, ஒப்புக் கொள்ளப் பட்டது.

மேற்குறித்த கல்வியாண்டிலேயே பல்கலைக்கழகம் பின்வரும் கல்லூரிக்கு 1988–89–ஆம் ஆண்டு முதல் தன்னாட்சி நிலை வழங்கியது.

(அ) சாரதா மகளிர் கல்லூரி, சேலம் 636 016.

(ஆ) சாரதா மகளிர் கல்வியியல் கல்லூரி, சேலம் 636 016.

(இ) கிறிஸ்தோபர் கலையியற் கல்லூரி, வேப்பேரி, சென்னை-7.

(ஈ) என். கே. டி. தேசிய மகளிர் கல்வியியல் கல்லூரி, திருவல்லிக்கேணி, சென்னை 600005.

1987–88 முதல் பகுதி நிலையில் தன்னாட்சி வழங்கப்பெற்ற (எம்.எஸ்.சி. கணிதம், எம்.ஏ. சமூகப்பணி) திருப்பத்தூர் இருதய கல்லூரிக்கும் எல்லாப் பட்ட மேற்படிப்பும் கல்விக்கும் தன்னாட்சி வழங்கப்பெற்றது.

நூலகம்–விவரத் தொகுப்பு:—

(அ) பல்கலைக் கழக நூலகம். 1989ஆம் ஆண்டில் 4907 தொகுதிகள் சேர்க்கப் பெற்றன. பல்கலைக் கழகத்திற்கு வகுப்பு நூல்கள் பற்றிய செய்தியினை அறிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு திங்கள் முதல் நாளன்றும் பல்கலைக்கழக நூலகத்திற்கு வரும் புதிய வெளியீடுகளில் பட்டியல் ஒன்று வழக்கம் போலவே வெளியிடப் பட்டது.

ஆய்வு மாணவர் அவரவர்க்குரிய ஆய்வுப் பொருள் பற்றி அறிந்து கொள்வதற்கான பணி தொடர்ந்து செயல் பெற்றது.

ஆ. துறை நூல்கள்.— பல்வேறு துறை நூலகங்களிலும் 3816 நூல்கள் சேர்க்கப் பெற்றன.

என். எஸ். எஸ். இக்கல்வியாண்டில் ஒரு கண்காட்சியையும் தேசிய ஒருமைப் பாட்டு முகாம் ஒன்றையும் ஏற்பாடு செய்தது.

2000 நாட்டு நலப்பணித் தொண்டர்கள் பங்கேற்ற ஒரு ஊர்வலம் நடைபெற்றது.

1987 ஜுன் மாதத்திலிருந்து ஜுலை வரை வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வேலூரில் அமைந்துள்ள கோட்டைப்பகுதி முழுமையும் சுத்தம் செய்யப்பட்டது; குப்பைகள் அகற்றப்பட்டன வேலூர் அகழியைத் தூர் எடுக்கவும், மீன் வளர்ப்பு, தோட்டம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

6. ஆளுமை வளர்ச்சித் திட்டம்— இத்திட்டத்தின் கீழ் நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்களுக்குப் பிற வேலைகள் தவிர, கீழ்க்கண்ட திறன்களிலும் பயிற்சி அளிக்கப் பட்டது.

(அ) கருத்துப் புலப்படுத்தத் திறன்கள்.

## மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பல்கலைக் கழகத்தில் இணைவிக்கப்பெற்ற, ஏற்புத் தெரிவிக்கப்பெற்ற கல்வி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டில் 117 ஆக இருக்க இவ்வாண்டில் 118 ஆகும். முதுநிலைப் பட்டப்படிப்புக் கல்லூரிகளின் எண்ணிக்கையை 63 ஆக உயர்த்துகின்ற வகையில் இவ்வாண்டு ஒரு கல்லூரி முதுநிலைப் பட்டப் படிப்பொன்றுக்கு இணைவிப்பு வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தில் கற்பித்தல் மற்றும் ஆய்வில் ஈடுபட்டுள்ள துறைகள் மொத்தம் 46 உள்ளன. இணைவிக்கப் பெற்ற மற்றும் ஏற்புத் தெரிவிக்கப் பெற்ற கல்லூரிகள், பல்கலைக் கழகத் துறைகள் அஞ்சல் வழிக் கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையம், வெளிப்பல்கலைக் கழக அமைப்பு, மாலைக் கல்லூரி ஆகியவற்றில் உள்ள மாணவர்களின் மொத்தத் தொகை 1,27,733.

துணை வேந்தர் —. டாக்டர் சினி. கிருட்டிணசாமி இப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்.

பதிவாளர்.—டாக்டர் தி. சிவகரன் பல்கலைக்கழகப் பதிவாளராகத் தொடர்ந்துள்ளார்.

ஆட்சிப் பேரவை.—ஆட்சிப் பேரவை இவ்வாண்டில் 1988 மார்ச் 21 அன்றும் 1988 டிசம்பர் 2 அன்றும் இருமுறை கூடியது.

ஆட்சிக் குழு.—இவ்வாண்டில் ஆட்சிக்குழு 14 முறைகள் கூடியது. சில வழக்க மான இனங்களைச் சுற்று மடல் வழியாக ஆட்சிக் குழு ஆராய்ந்து ஒப்புதலளித்தது.

கல்விப் பேரவை.—கல்விப் பேரவை இவ்வாண்டில் 1988 மார்ச்சு 10 அன்றும், 1988 செப்டம்பர் 7 அன்றும் இரு முறை கூடியது.

நிதிக்குழு.—நிதிக்குழு 1988 மார்ச்சு 2 அன்று கூடியது. மாணவர் நல்லொழுக்கம், நலவாழ்வு மற்றும் தங்குமிடம் பற்றிய ஆட்சிக் குழுவின் குழு.

மாணவர் நல்லொழுக்கம், நலவாழ்வு மற்றும் தங்குமிடம் பற்றிய ஆட்சிக் குழுவின் குழு.—குழு இவ்வாண்டில் பல்வேறு தேர்வு மையங்களிலிருந்து புகார் தெரிவிக்கப்பட்ட நெறியொழுக்க வழக்குகளை விசாரித்து முடிவெடுக்க மும்முறை கூடியது. கல்லூரிகளிலிருந்து விலக்கப்பட்ட மாணவர்களின் வழக்குகளும் ஆராயப் பட்டன.

பாடத்திட்டக் குழுக்கள்.—பல்கலைக் கழகத்தில் 52 பாடத்திட்டக் குழுக்கள் உள்ளன. இவையனைத்தும் இவ்வாண்டில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளன. பின்வரும் பாடத்திட்டக் குழுக்கள் கூடி நடவடிக்கைகளை மேற்கொண்டன:—

(1) தொழில் மேலாண்மை (இளநிலை)

(2) தொழில் மேலாண்மை (முதுநிலை)

(3) பொருளாதாரவியல் (இளநிலை)

(4) பொருளாதாரவியல் (முதுநிலை)

(5) பொறியியல் (தேர்வு மற்றும் முதுநிலை) இருமுறை

(6) பொறியியல் (தேர்வு மற்றும் முதுநிலை) (நுழைவுக்குழு)

(7) வரலாறு (இளநிலை)

(8) ஓமியோபதி (வல்லுநர் குழு)

(9) சட்டம் (திருச்சியில் கூட்டுக் கூட்டம்)

(10) கணிதவியலும் புள்ளியியலும் (முதுநிலை)

(11) நுண்ணுயிரியல்

(12) தமிழ் (தேர்வு நிலை) இருமுறை

(13) பி. டெக் (வல்லுநர் குழு)

புதிய துறை :

பொருள்கள் அறிவியல் துறை.—இத் துறையில் தொடங்கப்பட்டுள்ள பிற புதிய துறைகள் பின்வருமாறு.—

(1) லேசர் ஆய்வுத் துறை
(2) நுண்கணக்கிகள் மற்றும் கணிப்பான் துறை
(3) இதழியல் துறை

புதிய படிப்புகள்.—இவ்வாண்டில் பின்வரும் புதிய படிப்புகள் அறிமுகப்படுத்தப் பட்டன:—

பல்கலைக் கழகத் துறைகளில் :

(1) அறிவியல் தகவல் பரப்பில் இளநிலைப் படிப்பு.
(2) உடற்பயிற்சிக் கல்வியியலில் முதுநிலைப் படிப்பு.
(3) பொருளறிவியலில் எம்.ஃபில்., படிப்பு.

இணைவிக்கப்பெற்ற கல்லூரிகளில் :

(1) நுண்ணுயிரியலில் எம்.சயி.,

(2) காரைக்குடி மைய மின்வேதியியல் ஆய்வு நிலையத்தால் நடத்தப்படும் மின்வேதியியற் பொறியியல், தொழில் நுட்பவியலில் நான்காண்டுப் பி. டெக். பட்டப்படிப்பு.

புதிய கல்லூரி.—ஆய்வுக்குரிய இவ்வாண்டில் கீழக்கரை, தாசிம் பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரிக்குக் கணிப்பான் அறிவியல், மனை அறிவியல் ஆகியவற்றில் பட்டப்படிப்புகளும், பி. காம். படிப்பும் தொடங்க இணைவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எம்.ஃபில் பட்டப் படிப்பு.—பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளில் பல்வேறு படிப்புகளில் எம்.ஃபில் படிப்பிற்கு 240 புதிய மாணவர்களும் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 77 ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும் தமிழ், பொருளாதாரம், வரலாறு, அரசியலறிவியல், ஆங்கிலம், வணிக வியல் கணிதவியல் ஆகிய பாடங்களில் (பகுதி நேர) எம்.ஃபில். பட்டப்படிப்புகளில் இணைவிக்கப்பட்ட கல்லூரிகளிலிருந்து 113 ஆசிரியர்களும் 321 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் நன்மை கருதி கடந்த ஆண்டு தொடங்கப் பட்ட தொடர் எம்.ஃபில். திட்டம் இந்த ஆண்டும் தொடரப்பட்டது. இப் படிப்பால் 291 கல்லூரி ஆசிரியர்கள் பயன் பெற்றனர்.

நூல்கள்.—1988–89ஆம் ஆண்டிற்கு நூல்கள் வாங்குவதற்கும் ஆய்விதழ் கட்டும் சந்தா செலுத்துவதற்கும் ரூ. 21 இலட்சத் தொகை பல்கலைக் கழகம் ஒதுக்கியது.

பல்கலைக் கழக மானியக் குழு 7ஆம் திட்டத்தின் கீழ் நூல்கள் ஆய்விதழ்கள் வாங்குவதற்கு ரூ. 15 இலட்சங்கள் தொகையைப் பல்கலைக் கழக மானியக்குழு ஒதுக்கியுள்ளது.

கருத்தரங்குகள் மாநாடுகள், பணிக்களங்கள், பயிற்சித் திட்டங்கள்.—பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளால் மாநாடுகள், பணிக் கழகங்கள், பயிற்சிப் படிப்புகள் ஆகியன உலக அளவிலும் தேசிய அளவிலும் இவ்வாண்டு கீழே குறிப்பிட்டுள்ளவாறு நடத்தப்பட்டன :—

| | |
|---|---|
| மாநாடுகள் | 3 |
| கருத்தரங்குகள் | 10 |
| பணிக்களங்கள் | 4 |
| பயிற்சிப் படிப்புகள் | |
| கருத்துக்கோவை | |
| குறுகிய காலப்படிப்பு | . |
| பயிற்சிப் படிப்பு | 1 |
| புதுப்பிப்புப் படிப்பு | 1 |

பல்கலைக் கழக மானியக் குழு, ஐ.என். எஸ்.ஏ., சி.எஸ்.ஐ.ஆர்., இந்திய அரசு, பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடும் நிதியுதவியோடும் நடத்தப்பட்ட திட்டங்களில் 1641-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இவ்வறிக்கையின் இயல் இல் பல்கலைக் கழகத் துறைகள் நடத்திய மாநாடுகள் கருத்தரங்குகள் முதலியவற்றின் விரிவான விவரங்கள் தரப்பட்டுள்ளன.

மேலும் நாட்டுத் தொண்டுத் திட்டம், தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம், இளைஞர் நலத் துறை, உடற்பயிற்சிக் கல்வித் துறை ஆகிய துறைகளும விரிவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு கருத்தரங்குகளும், பணிக்களங்களும நடத்தின.

பட்டமளிப்பு விழா.—பல்கலைக் கழகத்தின் இருபத்தோராம் ஆண்டுப் பட்ட மளிப்பு விழா பல்கலை நகர், டாக்டர் மு. வ. அரங்கில் 1988 மே 4ஆம் நாள் நடைபெற்றது. புதுதில்லி, இந்திய அரசுத் திட்டக்குழு உறுப்பினர் பேராசிரியர். பி. என். ஸ்ரீ வாஸ்தவா பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். 269 பேர் பட்டமளிப்பு விழாவில் நேரில் கலந்து கொண்டு பட்டங்களைப் பெற்றனர். தமிழக ஆளுநரும் பல்கலைக் கழக வேந்தரும் ஆன மேதகு டாக்டர் பி. சி. அலெக் சாந்தர் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

ஆய்வுப் பட்டங்கள்.—இவ்வாண்டின்போது 41 ஆய்வு மாணவர்களும் 108 ஆசிரியர்களும் பி.எச்டி., பட்டத்திற்குப் பதிவு செய்யப்பட்டனர். இவ்வாண்டில் 88 ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுகள் டாக்டர் பட்டம் வழங்க. பல்கலைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஓர் ஆய்வாளர்க்கு எம். லிட். பட்டம் வழங்கப்பட்டது.

ஆய்வுத் திட்டங்கள்.—பல்கலைக் கழக மானியக்குழு, அறிவியல் தொழில் நுட்பவியல் துறை, அணு ஆற்றல் துறை, கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழு, சி.எஸ்.ஐ.ஆர்., ஐ.சி.எம். ஆர்.ஐ.சி.எல்.எஸ்.ஆர். போன்ற பல்வேறு நிதியுதவி நிறுவனங்கள் பல்கலைக் கழகத் துறைகளின் ஆய்வுத் திட்டங்கள் 158—க்குத் தொடர்ந்து நிதியுதவின. இந்நிறுவனங்கள் ஆய்வுத் திட்டங்கட்கு வழங்கியுள்ள மொத்தத் தொகை ரூ. 16,66,11,988 ஆகும்.

ஆய்வுக் கட்டுரைகள்.—பல்வேறு பல்கலைக் கழகத் துறைகளால் தேசிய மற்றும் உலக அளவிலான ஆய்விதழ்களில் 299 ஆய்வுக் கட்டுரைகள் இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

தற்காப்பு ஆய்வு மற்றும் வளர்ச்சி நிறுவனம், புது தில்லி.—புது தில்லி இந்திய அரசு, தற்காப்பு அமைச்சகத்தின் தற்காப்பு ஆய்வு மற்றும் வளர்ச்சி நிறுவனம், 1988—89ஆம் கல்வியாண்டிற்குக் கணிப்பான் அறிவியலில் எம். சயி-க்கு கணிப்பான் பயன்பொருளில் பயிற்சிக்காகப் பல்கலைக்கழகத்திற்கு ரூ. 28,46,000 வழங்கியுள்ளது. சைபர் 180/830ஏ எனும் மேனிலைக் கணிப்பான் அமைப்பு புது தில்லி, தற்காப்பு அமைச்சக ஆலோசகர் டாக்டர் வி. எஸ். அருணாசலம் அவர்களால் 1988 சூலை 30 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

ஆங்கிலப் பேச்சு மொழி நிலையம்.—இவ்வாண்டு இந்நிலையம் பின்வரும் படிப்புக்களை நடத்தியது:—

(1) தொடக்கப் பள்ளிகளில் பயன்மிக்க வகையில் ஆங்கிலம் கற்பித்தல்.

(2) திருத்த ஆங்கிலம்.

(3) தொடக்கப்பள்ளி ஆசிரியர்கட்கான தீவிரத் திட்டம்.

(4) போட்டித் தேர்வுகட்கு ஆங்கிலப் புலமை.

(5) இல்லத்தரசிகட்குப் பயன்மிக்க ஆங்கிலக் கருத்துப் பரிமாற்றப் பயிற்சி.

(6) வணிகர்கட்கு ஆங்கிலப் படிப்பு.

நிலையத்தின் ஆசிரியர்கள் பிரிட்டிஷ் கவுன்சில் நடத்திய பணிக்களங்கள் புத்தாக்கத் திட்டங்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டனர். முற்குறிப்பிடப்பட்ட வற்றிற்கு மேலும் நிலைய ஆசிரியர்கள் சிறப்புப் பயிற்சித் திட்டங்களை வழங்கப் பல பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிலையங்கட்குச் சென்றார்கள்.

ஒலி, ஒளி ஆய்வு மையம்.— பல்கலைக் கழகத்தின் ஒலி, ஒளி ஆய்வு மையம் பல்கலைக் கழக மானியக் குழுவின் பதினொரு கல்வித் தொலைக்காட்சி மையங்களுள் ஒன்று இவ்வாண்டில் 12 நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டன. இவற்றுள் 6 நிகழ்ச்சிகள் ஏற்கனவே தொலைக்காட்சி நிலையத்தால் பல்கலைக் கழக மானியக் குழுவின் நாடு தழுவிய கல்விக் கூடத் திட்டத்தின் கீழ் தேசிய ஒளிபரப்பில் ஒளி பரப்பப்பட்டது.

(1) ஓர் உலகம் ஒரு மொழி பகுதி-I.

(2) ஓர் உலகம் ஒரு மொழி பகுதி-II.

(3) அரிய இசைக்கருவி ஜலதரங்கம்.

(4) மரபிலிருந்து தூண்டுதல் சர் சி. வி. ராமன்.

(5) இந்திய அரசியல் சிந்தனையாளர்கள் பண்டித ஜவகர்லால்.

மீதமுள்ள 6 நிகழ்ச்சிகளும் ஒளிபரப்புவதற்காக பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

நேரு நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம்.—ஜவகர்லால் நேருவின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதற்குப் பல்கலைக் கழகம் குழு ஒன்றினை நியமித்தது. குழுவின் பரிந்துரைப்படி பல்கலைக்கழகம் ஜவகர்லால் நேருவைப் பற்றிய தொலைக் காட்சிப் படம் ஒன்றினைத் தயாரிக்கத் தீர்மானித்தது. இளநிலைப் படிப்புக்களின்

பிரிவு 1, 2 ஆகியவற்றின் கீழ் ஜவகர்லால் நேருவின் சில கட்டுரைகளைப் பாடப் பகுதிகளாக அறிமுகப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. ஜவகர்லால் நேருவின் கட்டுரைகள் சிலவற்றைத் தமிழில் வெளியிடவும் பல்கலைக் கழகத்திடம் திட்டமொன்றுள்ளது. உலகப் பல்கலைக் கழகப் பணி என்பதன்கீழ்க் கல்லூரிகட்குச் ஜவகர்லால் நேருவைப் பற்றிய கருத்தரங்குகளை நடத்த நிதியுதவி வழங்கப்பட்டது.

உலகத் தமிழ்ப் பணி :—புறநானூற்றுப் பாடல்களில் உறைந்துள்ள உலகப் பொது அறிவினைக் கொண்டிலங்கும் ''சங்கத் தமிழ்க் கதைகள்'' எனும் உலகத் தமிழ்க் குழந்தைகட்கான மூன்றாவது ஒலிப்பதிவு நாடாவின் முன்வடிவம் தயாராக உள்ளது. ஃபிஜித் தமிழ்க் குழந்தைகட்கான தமிழ்ப் பாட நூலின் 25 படிகள் 1 பிஜித் தீவுக்கு அனுப்பப்பட்டுள்ளன; மீதமுள்ளவையும் அனுப்பப்படும் நிலையில் உள்ளது.

பல்கலைக்கழக செய்தி மடல்.—இவ்வாண்டில் மூன்று இதழ்கள் வெளியிடப்பட்டன. பல்கலைக் கழக நூலகத்தில் புதியனவாக சேர்க்கப்பட்ட நூல்கள் பற்றிய விவரங்களும் மாணவர்கள், பொதுமக்கள் நன்மைக்காக வெளியிடப்பட்டன.

உயிரியல் கல்வி பற்றிய இதழ்.—1988-ஆம் ஆண்டிற்கான உயிரியல் கல்வி இதழ்கள் முறையாக வெளியிடப்பட்டன.

கணிப்பான் மையம்.—இம்மையம் ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், நிருவாகத்தினர் ஆகியோருக்குத் தன் தொண்டினைத் தொடர்ந்துள்ளது. புதிய அமைப்பாகிய விப்ரோ 386 இவ்வாண்டில் மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. மையம் 1988, ஆகஸ்டு 15 முதல் செப்டம்பர் 20 வரை ஆசிரியர்கட்கும், ஆய்வு மாணவர்கட்கும் கணிப்பான் திட்டமிடுதலில் ஒரு மாதக் குறுகிய காலப் பயிற்சியினை நடத்தியது.

விளையாட்டுகளும் போட்டிகளும்.—கல்வியாண்டின்போது உடற்பயிற்சிக் கல்வியில் முது நிலைப் படிப்பு (எம்.பி.இடி) தொடங்கப்பட்டு இதில் 17 மாணவர்கள் சேர்க்கப் பெற்றனர். இப்படிப்பினைப் பதிவாளர் டாக்டர் தி. சிவசங்கரன் தொடங்கி வைத்தார். பூப்பந்து, ஆக்கி, டென்னிஸ், பளு தூக்குதல் ஆகியவற்றில் பல்கலைக் கழக குழுக்கள் 1988 சனவரியில் நடத்தப்பட்ட 1987-88 ஆம் ஆண்டிற்கான பல்கலைக் கழகப் போட்டிகளில் பங்குகொண்டன. திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியைச் சேர்ந்த திரு. இ. சேர்மசேகரன் கட்டாக்கில் நடந்த அனைத்திந்தியப் பளுத்தூக்கும் போட்டியில் 60 கிலோப் பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்றார். தேவகோட்டை ஸ்ரீசேவுகன் அண்ணாமலைக் கல்லூரியைச் சேர்ந்த திரு. வி. சுந்தரமூர்த்தி பாட்டியாலாவில் நடந்த அனைத்திந்திய பல்கலைக் கழக ஓட்டப்பந்தயங்களில் இரண்டாமிடத்தைப் பெற்றார். பல்கலைக் கழக (ஆண்கள்) கைப்பந்துக் குழு மைசூரில் நடைபெற்ற தென்வட்டாரப் பல்கலைக் கழகக் கைப்பந்துப் போட்டியிலும் பகல்பூரில் நடைபெற்ற அனைத்திந்திய வட்டாரங்களுக்கிடையேயான கைப்பந்துப் போட்டியிலும் இரண்டாமிடத்தைப் பெற்றது. 1988 மார்ச்சு 19 அன்று பல்கலைக் கழகம், பல்கலைக் கழக மாணவர்களை உற்சாகப்படுத்தவும் விளையாட்டுணர்வைத் தூண்டுதல் பரிசுகளை வழங்கவும் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. துணைவேந்தர் டாக்டர் சீனி திருட்டிணசாமி தலைமையேற்று மாணவர்கட்குப் பரிசுப் பணங்களை வழங்கினார்.

1987–88 ஆம் ஆண்டிற்கான பல்கலைக் கழகக் கல்லூரிகட்கிடையே ஆண்கள் பெண்களுக்கான வட்டாரப் போட்டிகள் 1988 பிப்ரவரி மார்ச்சின்போது நடத்தப்பட்டன. 1988 ஆகஸ்ட் 8 முதல் 10 வரை மதுரை அமெரிக்கன் கல்லூரியில் சுதந்திரம்-40 தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கிடையேயான ஆக்கிப் போட்டிகளை நடத்தியது. இதனைப் பதிவாளர் டாக்டர் தி. சிவசங்கரன் தொடக்கி வைத்தார். திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரிக்குப் பல்கலைக் கழகங்கட்கிடையேயான போட்டிகளில் பல்கலைக் கழக அணிகட்கு உச்ச எண்ணிக்கையிலான விளையாட்டு வீரர்களை உதவியமைக்காக '' மு.வ. நினைவு அறக்கட்டளை வெள்ளிச் சுழற் கோப்பை '' வழங்கப்பட்டது.

தேசிய மாணவர் படை .—68 இணைவிக்கப்பட்ட கல்லூரிகளில் தற்போதைய தேசிய மாணவர் படையின் எண்ணிக்கை ஆண்கள் 4,042, பெண்கள் 960 ஆகும்

இளைஞர் நலத்துறை :—மதுரை பல்கலை நகரில் 1988 சனவரி 9 முதல் 11 வரை அனைத்திந்தியத் தென் வட்டாரப் பல்கலைக் கழகங்களின் இளைஞர் விழாவினைத் துறை நடத்தியது. திருச்சியில் 1988 அக்டோபர் 25 முதல் 28 வரை நடந்த அனைத்திந்தியத் தென் வட்டார விழாவில் இந்தியாவில் சோவியத் இளைஞர் விழாவின் ஒரு பகுதியாக 30 மாணவர்கள் 2 ஆசிரியர்கள், 2 தொழில் முறைக் கலைஞர்கள் கொண்ட குழுவொன்று கலந்து கொண்டது. சௌராஷ்ட்டிரா கல்லூரியைச் சேர்ந்த திரு மலர்மன்னன் தனிநிலை செவ்வியற் கருவிப் போட்டியில் முதல் பரிசு பெற்றார். இடத்திலேயே ஓவியம் தீட்டுதல் எனும் போட்டியில் பாத்திமா கல்லூரியைச் சேர்ந்த செல்வி அனிதா தமிழ்ச் செல்வி இரண்டாம் பரிசு பெற்றார். குற்றாலத்தில் 1988 ஏப்ரல் 23, 24 ஆகிய நாட்களில் கல்லூரிகளில் மாணவர் தொண்டுகளை ஊக்குவிக்கும் நோக்கில் கல்லூரி முதல்வர்கட்கென ஒரு கருத்தரங்கினைத் துறை நடத்தியது. புது தில்லியில் 1988 நவம்பர்

10–12 ஆகிய நாட்களில் உலக நிகழ்வுகட்கான இந்தியக் குழுவால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான விவாதப் போட்டியில் பங்குகொள்ள இரு மாணவர்கள் அனுப்பப் பட்டனர்.

நாட்டுத் தொண்டுத் திட்டம்.— இவ்வாண்டில் நாட்டுத் தொண்டுத் திட்ட மாணவர் தொகை 22,500 ஆகும். சுதந்திரம்-40 கொண்டாட்டம் தொடர்பாக 1988 ஆகஸ்ட் 12 அன்று சுதந்திரம்-40 நடைப் பயணம் ஒன்று நடத்தப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. தேவராஜ் நடைப் பயணத்தைத் துணை வேந்தர் டாக்டர் சீனி. கிருட்டிணசாமி முன்னிலையில் தொடங்கி வைத்தார். முன்னாண்டுகளிற் போலவே 1988 நவம்பர் 19 அன்று தேசியச் சூழ்நிலை இயக்கம் ஒரு மாத காலத்திற்கு நடத்தப்பட்டது. 1988 மார்ச்சு 12 முதல் 29 வரை திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரை அரசு ஏற்பாடு செய்திருந்த வரலாற்றுச் சிறப்பு டைய தண்டி யாத்திரையின் மறுநடப்பில் ஆறு தொண்டர்கள் கலந்து கொண்டனர். முன்னாண்டுகளிற்போல பல்கலைக் கழக எல்லைப் பரப்பி பல்வேறு கிராமங்களில் 1988 இளைஞர் வாரக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. 1988 டிசம்பர் 17 முதல் 19 வரை கொடைக்கானல் மலையில் நடத்தப்பட்ட நடைத் திட்டத்தில் மதுரை மாவட்டக் கல்லூரிகளைச் சேர்ந்த 42 பெண் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம்.—இத்திட்டத்தில் இப்பல்கலைக் கழகத்தின் 67 கல்லூரிகள் பங்கு பெறுகின்றன. சென்னை, முறைசாராக் கல்வி மூல மையத்தோடு இணைந்து 6—9—1988 அன்று செயல்முறை எழுத்தறிவுக்கான மாபெரும் திட்டம் பற்றிக் கல்லூரித் திட்ட அலுவலர்கட்கு ஒருநாள் பயிற்சித் திட்டமொன்று நடத்தப்பட்டது. அனைத்துலக எழுத்தறிவு நாளையொட்டி தேசிய எழுத்தறிவு இயக்ககம் பற்றிய கருத்தரங்கு ஒன்று 1988 செப்டம்பர் 8ஆம் நாள் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் நகரக் கல்லூரியைச் சேர்ந்த முதியோர் கல்வித் திட்ட அலுவலர்கள், மேலாளர்கள், பயிற்றாசிரியர்கள் 60 பேர் கலந்து கொண்டனர். மதுரை, கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மீனாட்சிபுரம் பஞ்சாயத்தைச் சேர்ந்த காந்தி நகரை வளர்ச்சிப் பணிக்குத் துறை தேர்ந்தெடுத் துள்ளது. 1988 பிப்ரவரி 9 முதல் 20 வரை வங்கிப் பணிச் சேர்ப்புக்கான போட்டித் தேர்வுகட்கு 10 நாள் பயிற்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தமிழக ஆளுநர் மாநிலத் தேசிய எழுத்தறிவு இயக்கத் திட்டத்தினை 1988 மே 5ஆம் நாள் துவக்கி வைத்தபோது மாநில அளவிலான நிகழ்ச்சியில் துறை முதியோர் கல்விக் கண்காட்சி ஒன்றை நடத்தியது. துறை, முதியோர் கல்வியில் முதுநிலைப்பட்டத்திற்கு மேற்பட்ட ஓராண்டு (முழுநேர) மேற்சான்றிதழ்ப் படிப் பினை நடத்தியது.

அஞ்சல் வழிக் கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையம்.— 44,631 மாணவர் களோடு இந்நிலையம் தனது 18 வது ஆண்டுக் கல்விப் பணியில் அடியெடுத்து வைத்துள்ளது.

மாலைக் கல்லூரி.—இவ்வாண்டில் பட்டப்படிப்பு, முதுநிலைப் படிப்பு, எம் ஃ பில். பகுதி நேரப் படிப்புகள் ஆகியவற்றில் கல்லூரி மாணவர் தொகை 1,374 ஆகும். 1988 பிப்ரவரி மாதத்தின்போது 40 மாணவர்கட்கு ஐ. ஏ.எஸ். முதனிலைத் தேர்வுக்கான வழிகாட்டுதல் வகுப்பு நடத்தப்பட்டது.

## அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்.

மகளிர் சிக்கல்களை ஆராயும் நோக்குடன் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஒரே பல்கலைக்கழகம் என்ற விதத்தில் உயர் கல்வி நிலைய அமைப்பில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் தனித்த ஓரிடத்தைப் பெறுகிறது. தமிழக அரசுச் சட்டம் 15 இன் கீழ் 1984 இல் அப்பல்கலைக்கழகம் மகளிரைப் பொறுத்த மட்டிலும் மாநில முன்றைமையிலான தொடர்புபடுத்தும் பொறுப்பு ஆலோசனை நல்கும் பணிகள் ஆய்வு ஏற்றுச் செய்தல் ஆகிய நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிரியலைப் பொறுத்த மட்டிலும் இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும், சிறப்புச் சொற்

பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யவும், ஆசிரியர்களைப் பரிமாறிக் கொள்ளவும் தக்க விதத்தில் காலப் போக்கில் அனைத்து உலகக் கல்வி மையமாக உருவாகும் கருத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக் கழகம் மகளிரியல் பற்றிய ஆய்வுடன் வேறு பல இன்றியமையாத நோக்கங்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. அந்நோக்கங்களாவன:—

(1) தேசிய நிலையில் மாநில அளவில் எல்லா நிலைகளிலும் மகளிர் கல்வியை செயல்படுத்துதல்.

(2) தேசிய நிலையில் மாநில அளவில் மகளிர் கல்வி முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை நல்குதல்.

(3) பின்தங்கிய பகுதிகளில் வாழும் மகளிர் கைவிடப்பட்ட மகளிர் மற்றும் வறுமையுற்ற மகளிர்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது.

வெளியீடுகள்—

1. மகளிர் கல்வி பற்றிய கட்டுரைகள்.

2. முறைசாராக் கல்விக்கான பால் பாகுபாடற்ற பாட நூல் குறிப்புகள்.

3. மகளிர் எழுத்தறிவின்மையை அகற்றும் ஒருங்கிணைந்த திட்டத்தை நோக்கி.

4. பால் வேறுபாடற்ற பாட நூல் ஆக்கம்.

5. தமிழகத்தின் பின்தங்கிய பகுதிகளில் வாழும் மகளிர் மற்றும் குழந்தைகளது உடலியல் நிலை.

6. கொடைக்கானலில் பெண் கல் உடைப்பாளர்கள் நிலை.

7. மீனவ மகளிர் வாழ்வில் தொழில் நுட்ப வளர்ச்சியில் தாக்கம்.

ஆராய்ச்சி.—

1. மேல் கொடைக்கானல் மலையில் பெண் விவசாயிகள் நிலைமை.

2. தமிழ்நாட்டின் பெண்களின் மூட நம்பிக்கைகள்.

3. தமிழ்நாட்டில் பெண் விடுதலை இயக்க போர் வீரர்கள்.

4. கொடைக்கானலில் பெண்கள் நிலைமை.

5. மீனவப் பெண்களின் பொறியியல் விளைவுகள்.

6. கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் பள்ளியிலிருந்து பாதியிலேயே விலகியவர்கள்.

7. முறைக் கல்விக்கான பால் பாகுபாடற்ற பாட நூல் குறிப்புகள்.

8. முறை சாராக் கல்விக்கான பால் பாகுபாடற்ற பாட நூல் குறிப்புகள்.

மாணவிகளின் எண்ணிக்கை—

1. பி.எச். டி. முழு நேரம்

2. பி.எச்.டி. பகுதி நேரம்

3. எம். பி.-ல் முழு நேரம்

4. எம். பி.-ல் பகுதி நேரம்

5. எம்.ஏ. முழு நேரம்

6. பி.ஜி.டி.சி.ஏ.

## தேசிய மாணவர் படை

1. அணி வகுப்புகள்.—அணிவகுப்புகளில் பங்கு கொள்பவர்களின் எண்ணிக்கை 1988–89 ஆம் ஆண்டில் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளதைப் பின்வரும் விவரங்களிலிருந்து காணலாம்:—

| (1) | முதுநிலைப் பிரிவு. (2) | இளநிலைப் பிரிவு. (3) |
|---|---|---|
| | (சதவீதத்தில்.) | |
| (a) காலாட்படைப் பிரிவு | 88 | 80 |
| (b) கடற்படைப் பிரிவு | 90 | 85 |
| (c) விமானப்படைப் பிரிவு | 80 | 96 |
| (d) மகளிர் பிரிவு | 95 | 90 |

2. ஆண்டு பயிற்சி முகாம்கள்.—இவ்வாண்டு மொத்தம் 34 முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் 19,272 மாணவர்கள் பங்கு கொண்டனர்.

3. மத்திய அரசு ஏற்பாடு செய்த முகாம்.—இந்த இயக்ககம், அனைத்திந்திய முகாம்கள் மூன்றிற்கு ஏற்பாடு செய்து நடத்தியுள்ளது. அதைத் தவிர, ஏனைய இயக்ககங்கள் ஏற்பாடு செய்த 22 முகாம்களிலும் மாணவர்கள் பங்கு கொண்டுள்ளனர். இம்முகாம்களில் 487 மாணவர்கள் பங்கு கொண்டுள்ளனர்.

4. தேசிய ஒருங்கிணைப்பு முகாம்.—இந்த இயக்ககம், இளநிலை பிரிவிற்கு, பெண்கள் பிரிவிற்கு ஒன்றும், இளநிலை ஆண்கள் பிரிவிற்கு இரண்டும் ஆக மூன்று தேசிய ஒருங்கிணைப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்து நடத்தியது. பீகார், தேசிய மாணவர் படை இயக்ககம் நடத்திய தேசிய ஒருங்கிணைப்பு முகாமிலும் மாணவர்கள் பங்கு கொண்டுள்ளனர். மொத்தம் 2,026 மாணவர்கள் இம்முகாம்களில் கலந்து கொண்டுள்ளனர்.

5. இராணுவ முகாமில் இணைத்துப் பயிற்சி அளித்தல்.—தேசிய மாணவர் படையைச் சேர்ந்த பகுதி நேர அலுவலர்கள் அறுவரும், காலாட்படைப் பிரிவு மாணவர்கள் (முதுநிலைப் பிரிவு) 326 பேரும், பல்வேறு இராணுவப் படைப் பிரிவுகளின் முகாமில் இணைத்து பயிற்சி பெற்றுள்ளனர்.

6. கடற்படைப் பிரிவைச் சேர்ந்த முதுநிலைப் பிரிவு மாணவர்கள் பன்னிருவர் கடற்படை அமைப்புகளின் முகாமில் இணைந்து பயிற்சி பெற்றுள்ளனர்.

7. விமானப் படைப் பிரிவைச் சேர்ந்த முதுநிலைப் பிரிவு மாணவர்கள் 16 பேர் விமானப் படையின் முகாமில் இணைந்து பயிற்சி பெற்றுள்ளனர்.

8. பெண்கள் பிரிவைச் சேர்ந்த (முதுநிலைப் பிரிவு) 29 மாணவியர், விமானப் படைப் பிரிவின் முகாமில் இணைந்து பயிற்சி பெற்றுள்ளனர்.

9. அனைத்திந்திய மலைவழி நடைப் பயணம்.—கோயம்புத்தூர் தலைமையிட தேசிய மாணவர் படை (பெண்கள் பிரிவு) அமைப்பின் கீழ் பெண்களுக்கான அனைத்திந்திய மலைவழி நடைப் பயணம் ஒன்று உதகமண்டலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இந்த இயக்கத்தைச் சேர்ந்த மாணவியர்களுடன், ஏனைய 15 தேசிய மாணவர் படை இயக்கங்களிலிருந்தும் மாணவியர் இம்மலை வழி நடைப் பயணதில் பங்கு கொண்டுள்ளனர். உத்தர பிரதேசம், கர்நாடகம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களிலுள்ள தேசிய மாணவர் படை இயக்ககங்கள் நடத்திய மலைவழி நடைப் பயணங்களிலும் மாணவர்கள் பங்கு கொண்டுள்ளனர். இந்த மலைவழி நடை பயணங்களில் இந்த இயக்கத்தை சேர்ந்த 665 மாணவர்கள் பங்கு கொண்டுள்ளனர்.

10. இளைஞர் பரிமாற்றத் திட்டம்.—முதுநிலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் இவரும், முதுநிலைப் பிரிவைச் சேர்ந்த மாணவியர் நால்வரும் 1988 ஆகஸ்ட் முதல் 1989 பிப்ரவரி வரை நடந்த கனடா இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

11. இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் பங்கு கொள்வதற்கான முதுநிலைப் பிரிவைச் சேர்ந்த ஒரு மாணவி இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

12. வீரதீரச் செயல்கள்.— சைக்கிள் பயணங்கள்.— இந்த இயக்ககத்தின் பல்வேறு பிரிவுகள் 13 சைக்கிள் பயணங்களுக்கு ஏற்பாடு செய்து நடத்தியுள்ளன. இப் பயணங் களில் மொத்தம் 229 மாணவர்கள் பங்கு கொண்டுள்ளனர். அவர்கள் 5,277 கி.மீ. பயணம் செய்தனர்.

13. மலையேற்றப் பயிற்சி.— ஏழு மாணவர்கள் மலையேற்றப் பயிற்சி நிலையங் கள் நடத்தும் மலையேற்ற அடிப்படைப் பயிற்சிகளை முடித்துள்ளனர்.

14. 'பாரா செய்லிங்' ( Para sailing ) விண்ட் சர்ஃபிங் ( Wind Surfing ) போன்ற வீர தீரச் செயல்களும் நடத்தப்பட்டுள்ளன. இக்கால அளவில் 'பாரா செய்லிங்' கில் 10 மாணவர்களுக்கும், விண்ட் சர்ஃபிங்கில் 4 மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

15. சமூகத் தொண்டு.— கிராமங்களைத் தத்தெடுத்தல், சாலைகள் அமைத்தல், பழுது பார்த்தல், போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல், மருத்துவ மனைகள் தொண்டு இல்லங்களுக்குச் சென்று பார்வையிடுதல், முதியோர் கல்வித் திட்டப் பணிகள், வரதட்சிணை ஒழிப்பு, தொழுநோய் ஒழிப்பு இயக்கங்களில் ஈடுபடுதல், இரத்த தானம், கண் தானம், மரம் நடுதல் போன்ற பல்வேறு சமூகத் தொண்டுகளில் இந்த இயக்ககத்தின் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் ஏற்கெனவே பங்கு கொண்டுள்ளனர்.

16. இரத்ததானம்.— 2,056 மாணவர்கள் 4,57,200 மி. லிட்டர் இரத்தம் தான மாகக் கொடுத்துள்ளனர்.

17. கண் தானம்.— 54 மாணவர்கள் தங்கள் கண்களைத் தானம் அளிப்பதாக உறுதி எடுத்துள்ளனர்.

## பொது நூலகங்கள்.

நூலகப் பணியின் சிறப்பை உணர்ந்து தமிழ்நாடு அரசு 1948-ல் தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை இயற்றி பரந்த கிராமிய நகர நூலகப் பணிக்கு வழிவகை செய்தது. தமிழ்நாடு பொது நூலக சட்டப்படி தற்போது தமிழ்நாட்டில் கீழ்க் காணும் பணிமுனைகள் செயல்பட்டு வருகின்றன:—

அரசுத் துறை.—

| | |
|---|---|
| மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம், சென்னை-8.) | 1 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்:— | |
| மாவட்ட மைய நூலகங்கள் .. | 18 |
| இயங்கு நூலகங்கள் | 9 |
| கிளை நூலகங்கள் | 1,515 |
| மொத்தப் பணிமுனைகள் .. | 1,543 |

## பொது நூலகத் துறை— புள்ளி விவரங்கள், 1988–89.

| வரிசை எண்ணும், பணி அலகுகளும். | பணி முனைகள். | பணியாளர்கள் விவரம் அனுமதிக்கப் பட்ட பணி இடங்கள். | நூல் இருப்பு. | வாசகர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 கன்னிமாரா பொது நூலகம். | 1 | 119 | 4,35,642 | 7,15,901 |
| 2 ஆணைக் குழுக்கள் நூலகம். | 1,543 | 3,141 | 1,41,61,902 | 4,36,81,876 |

| வரிசை எண்ணும், பணி அலகுகளும். | உறுப்பினர்கள். | படித்த நூல்கள். | இரவல் கொடுத்த நூல்கள். | மொத்தம் உபயோகப் படுத்தப் பட்ட நூல்கள். |
|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) |
| 1 கன்னிமாரா பொது நூலகம். | 38,824 | 22,12,432 | 2,02,512 | 24,14,944 |
| 2 ஆணைக் குழுக்கள் நூலகம். | 16,03,216 | 1,04,20,558 | 1,24,36,607 | 2,28,57,165 |

3. நிதி.—இம்மாநிலத்தில் நூலகப்பணிக்காக ரூ. 6.67 கோடி. செலவிடப்படுகிறது. அரசுத்துறை நூலகங்களுக்கும் நூலக ஆணைக் குழுக்களுக்கும் இத்தொகை செலவிடப் பட்டது.

6. மதிப்பீடு 1988–89 ;—

1. அடிப்படைச் செய்திகள் :

| | |
|---|---|
| மொத்த மக்கள் தொகை | 4,84,08,077 |
| மொத்தம் படித்தவர் தொகை | 2,26,37,659 |
| 2. மாநிலத்தில் மொத்த செலவினம் : | ரூ. 3,405 கோடி. |
| மொத்த மக்கள் தொகைக்கான சராசரி செலவினம் (செலவினம்—மக்கள் தொகை) .. .. | ரூ. 705.03 |
| 3. கல்விக்கான செலவினம் : | ரூ. 689 கோடி. |
| மொத்த மக்கள் தொகைக்கான சராசரி செலவினம் (செலவினம்—மக்கள் தொகை) .. .. | ரூ. 142.65 |
| மொத்த மக்கள் தொகையில் சராசரி கல்விக்கான செலவினம் : (செலவினம்— படித்தவர் தொகை) | ரூ. 311.76 |
| 4. நூலகப் பணிக்கான செலவுத் தொகை .. | ரூ. 6.67 கோடி. |
| மொத்த மக்கள் தொகைக்கான சராசரி செலவினம் (செலவினம்— மக்கள் தொகை) .. .. | ரூ. 138.10 |
| படித்தவர்களுக்கான சராசரி தலா செலவினம் (செலவினம்— படித்தவர் தொகை) .. .. | 302.81 |
| வாசகர்களுக்கான சராசரி தலா செலவினம் (செலவினம்—வாசகர்கள்) .. .. | 1.53 |
| உறுப்பினர்களின் சராசரி தலா செலவினம் (செலவினம்— உறுப்பினர்கள்) .. .. .. | ரூ. 41.60 |

| | |
|---|---|
| 5. மொத்த நூல் இருப்பு .. | 1,41,61,902 |
| மொத்த மக்கள் தொகைக்கான சராசரி நூல் இருப்பு (மொத்த நூல்கள்— இருப்பு— மக்கள் தொகை) .. .. .. .. .. | 0.29 |
| படித்தவர்களுக்கான சராசரி தலா நூல் இருப்பு (நூல்கள் இருப்பு—படித்தவர் தொகை) ... | 0.64 |
| ஒரு பணிமுனைக்கான சராசரி (நூல்கள் இருப்பு—பணிமுனைகள்) .. .. .. ... | 1,543 |
| 6. பணி முனைகள் : | |
| மொத்த பணிமுனைகள் : | |
| ஒவ்வொரு பணிமுனையையும் சுற்றியுள்ள சராசரி மக்கள் தொகை (மக்கள் தொகை— பணி முனைகள்) .. .. .. ... | 31,372 |
| ஒவ்வொரு பணிமுனையையும் சுற்றியுள்ள சராசரி படித்தவர்கள் எண்ணிக்கை (படித்தவர்கள்— பணிமுனைகள்) ... ... ... ... | 14,370 |
| 7. மொத்த வாசகர்கள் எண்ணிக்கை ... | 4,36,81,878 |
| மொத்த வேலை நாட்கள் ... | 285 |
| மொத்த மக்கள் தொகையில் சராசரி வாசகர்கள் வருகை (வாசகர்கள்— படித்தவர் தொகை) | 0.90 |
| மொத்தத்தில் ஒரு நாளைக்கான சராசரி படித்தவர் தொகையில் சராசரி வாசகர் வருகை (வாசகர்கள்— படித்தவர் தொகை) .. .. .. | 1.98 |
| மொத்தத்தில் ஒரு நாளைக்கான சராசரி வாசகர்கள் (வாசகர்கள்— பணிமுனைகள்) .. .. | 1,53,269 |
| மொத்தத்தில் ஒரு பணிமுனைக்கான சராசரி வாசகர்கள்— (வாசகர்கள்— பணிமுனைகள்) — | 28,309 |
| வாசகர்கள்— பணிமுனைகள்— வேலைநாட்கள் ... | 99 |
| 8. பயன்படுத்திய நூல்களின் எண்ணிக்கை | 1,04,20,558 |
| மொத்த வேலை நாட்கள் — — — | 285 |
| மொத்த மக்கள் தொகையில் ஒரு நபர் பயன்படுத்திய நூல்கள் (பயன்படுத்தப்பட்ட நூல்கள்— மக்கள் தொகை) .. ... ... ... — | 0.22 |
| படித்தவர்கள் தொகையில் ஒரு நபர் சராசரி பயன்படுத்திய நூல்கள் எண்ணிக்கை (பயன்படுத்தப்பட்ட நூல்கள்—படித்தவர் தொகை) — | 0.47 |
| ஒரு வாசகர் பயன்படுத்திய சராசரி நூல்கள் (பயன்படுத்தப்பட்ட நூல்கள்— வாசகர்) — | 0.24 |
| மொத்தத்தில் ஒரு நாளைக்கான சராசரி வாசகர்கள் (பயன்படுத்தப்பட்ட நூல்கள்— வாசகர்கள்— வேலை நாட்கள்) ... ... | 56,563 |
| மொத்தத்தில் ஒரு பணிமுனைக்கான சராசரி பயன்படுத்திய நூல்கள் (பயன்படுத்தப்பட்ட நூல்கள்—பணி முனைகள்) — .. .. | 6,753 |
| ஒரு பணிமுனையில் ஒரு நாளையில் சராசரி பயன்படுத்திய நூல்கள் (பயன்படுத்தப் பட்ட நூல்கள்—பணிமுனைகள்— வேலை நாட்கள்) — | 24 |

| | |
|---|---|
| 9. மொத்த நூலக உறுப்பினர்கள் | 16,03,216 |
| வேலை நாட்களின் எண்ணிக்கை | 285 |
| மொத்த மக்கள் தொகையில் சராசரி உறுப்பினர்களின் பங்கு (உறுப்பினர்கள்— மக்கள் தொகை) | 0.03 |
| படித்தவர்களின் தொகையில் சராசரி உறுப்பினர்களின் பங்கு விவரம் (உறுப்பினர்கள்— படித்தவர்கள் தொகை) .. .. .. .. ... | 0.07 |
| மொத்த உறுப்பினர்கள் ... | 1,543 |
| ஒரு பணிமுனையில் சராசரி உறுப்பினர்கள் (உறுப்பினர்கள்— பணிமுனைகள்) | 1,039 |
| 10. இரவல் கொடுத்த நூல்கள் எண்ணிக்கை | 1,24,35,607 |
| வேலை நாட்களின் எண்ணிக்கை ... | 285 |
| மொத்த மக்கள் தொகையில் நபர் ஒருவருக்கு கொடுத்த சராசரி இரவல் கொடுத்த நூல்கள் இரவல் நூல்கள்— மக்கள் தொகை) ... .. | 0.26 |
| படித்தவர்களின் தொகையில் நபர் ஒருவருக்கு சராசரி இரவல் கொடுத்த நூல்கள் (இரவல் கொடுத்த நூல்கள்— மொத்த வேலை நாட்கள்) | 43,637 |
| மொத்தத்தில் ஒரு பணிமுனைக்கான சராசரி இரவல் கொடுத்த நூல்கள் (இரவல் கொடுத்த நூல்கள்— மொத்த பணிமுனைகள்) .. | 8,060 |
| ஒரு நாளில் ஒரு பணிமுனைக்கான சராசரி இரவல் கொடுத்த நூல்கள் (இரவல் கொடுத்த நூல்கள்— பணிமுனைகளின் எண்ணிக்கை— வேலை நாட்கள்) .. .. .. .. .. ... | 28 |
| 11. உபயோகப்படுத்தப்பட்ட மொத்த நூல்கள் | 2,28,57,165 |
| வேலை நாட்களின் எண்ணிக்கை ... ... | 285 |
| மொத்த மக்கள் தொகையில் சராசரி நபர் ஒருவரின் உபயோகம் (உபயோகப்படுத்தப்பட்ட நூல்கள்—மக்கள் தொகை) .. .. .. | 0.47 |
| படித்தவர்களின் தொகையில் சராசரி நபர் ஒருவரின் உபயோகம் (உபயோகப்படுத்தப்பட்ட நூல்கள்—படித்தவர் தொகை) .. .. ... | 1.03 |
| மொத்த பணிமுனையில் ஒரு நாளுக்கான சராசரி (உபயோகப்படுத்தப்பட்ட நூல்கள்—மொத்த வேலை நாட்கள்) .. .. .. .. | 80,200 |
| ஒரு பணிமுனைக்கான சராசரி (உபயோகப்படுத்தப்பட்ட நூல்கள்—பணிமுனைகள்) .. .. | 14,813 |
| ஒரு நாள் ஒரு பணிமுனையில் சராசரி (உபயோகப்படுத்தப்பட்ட நூல்கள்—பணிமுனைகள் — மொத்த வேலை நாட்கள்) .. .. | 52 |

## பள்ளிக் கல்வி:

பள்ளிக் கல்வி மற்றும் மாநில கல்வி ஆராய்ச்சி நிறுவனம் சம்பந்தமாக திட்டமிடுதல், திட்டப் பணிகளை விரிவுபடுத்துதல் முதலான பணிகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களே முதன்மை நிர்வாக அலுவலர் ஆவார். பள்ளிக் கல்வி வளர்ச்சி சம்பந்தமான பணிகளை கவனித்துக் கொள்ளவும், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு உதவிபுரியும் பொருட்டு வருவாய் மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் உள்ளனர். முதல் நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி சம்பந்தமான பணிகளைக் கவனிக்கும் பொருட்டு மாவட்டக் கல்வி அலுவலர் மகளிர் பள்ளி ஆய்வாளர்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள் உள்ளனர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் நிர்வாகத்தை உதவிக் கல்வி அலுவலர் கவனித்து வருகிறார். உடற்பயிற்சி கல்வி சம்பந்தமான பணிகளை முதன்மை உடற்பயிற்சி ஆய்வாளர் கவனிக்கிறார். ஆங்கிலோ இந்தியப் பள்ளி, மெட்ரிக்குலேஷன் பள்ளி இவைகளை மேற்பார்வையிடும் பொருட்டு முறையே ஆங்கிலோ இந்திய பள்ளி ஆய்வாளர் மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆய்வாளர் உள்ளனர். இப்பள்ளிகளின் பொது நிர்வாகத்தைக் கவனிப்பதும் கல்விப் பற்றிய திட்ட பணிகளைத் தகுந்த முறையில் நடைமுறைப் படுத்துவதும் இந்த ஆய்வு அலுவலர்களின் பொறுப்பாகும்.

*30–9–1988* முடிய உள்ள பள்ளிகள் பற்றிய விவரங்கள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| தொடக்கப்பள்ளிகள் (1–5ஆம் வகுப்புகள்) | 29,359 | 1.18 | 53.63 |
| நடுநிலைப்பள்ளிகள் (1 முதல் 8 அல்லது 6–8 வகுப்புகள்) .. .. .. | 5,707 | 0.66 | 29.80 |
| | 35,066 | 1.84 | 83.43 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் பொதுவாக 6–10;6–12 வகுப்புகள்) | 4,709 | 1.10 | 36.20 |
| | 39,775 | 2.94 | 119.63 |

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ, மாணவியரின் எண்ணிக்கை வருமாறு :—

| வகுப்புகள். | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1–5 வகுப்புகள் | 40.89 | 34.86 | 75.75 |
| 6–8 வகுப்புகள் .. | 16.91 | 12.13 | 29.04 |
| 9–10 வகுப்புகள் .. | 6.57 | 4.05 | 10.62 |
| [illegible] .. | 2.47 | 1.75 | 4.22 |
| மொத்தம் .. | 66.84 | 52.79 | 119.63 |

தொடக்கக்கல்வி.—தேசியக் கல்விக் கொள்கை பின்வரும் இரு முக்கிய அம்சங்களை வலுயுறுத்துகிறது :—

(1) 18 வயது வரையிலுள்ள குழந்தைகள் அனைவரையும் தொடக்கப்பள்ளிகளில் சேர்த்து இடையில் நின்றுவிடாமல் கல்வி பயிலச் செய்தல்.

(2) தொடக்கக் கல்வியின் தரத்தைப் பெருமளவில் மேம்படுத்துதல் பள்ளி வயது சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை அளித்தல்.

ஏழாவது ஐந்தாண்டுத்திட்டக் கால இறுதிக்குள் (1989–90இல்) 6—11 வயது குழந்தைகளும் 100 சதவீதமும் 11—14 வயது குழந்தைகள் 75 சதவீதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்கு ஆகும். தமிழ் நாட்டில் 6—11 வயது தொகுதியினர் 100 விழுக்காடும் 11—14 வயதுத் தொகுதியின ரும் 79.63 விழுக்காடும்) பள்ளிகளில் சேர்க்கப்பட்டுவிட்டவர். தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1988–89-ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டோரின் எண்ணிக்கை வருமாறு :—

| வயதுத் தொகுதி. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 6—11 | 0.50 | 0.51 | 1.01 |
| 11—14 | 0.65 | 0.63 | 1.25 |
| மொத்தம் | 1.15 | 1.14 | 2.29 |

கல்வித்தரத்திற்கு அடித்தளமாக விளங்கும் ஆரம்பக் கல்வியை விரிவாக்குவதில் தீவிரக் கவனம் செலுத்தும் நோக்கத்தில் 1986 ஜூலை 12ஆம் நாளிலிருந்து ஆரம்பக் கல்விக்கு என தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் தற்போது ஓர் இளஞ்சிறார் பள்ளி வகுப்புகள் நடத்தப்படுகிறது. இளம் சிறுமியர் தங்கள் தம்பி, தங்கையரைக் கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் இவை உதவும். 1—2 வகுப்புகளில் பயிற்றுவிக்க மகளிரையே (ஆசிரியர்களாக) அமர்த்தப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

புத்தகக் கல்வி.—அநேகமாக அனைத்து பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் வழங்கும் புத்தகங்களைக் கொண்டும் பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும் இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :

ஏழை சிறுமியர் கல்வி வயது உதவித் திட்டம்.—கொடையுள்ளம் கொண்டவர்கள் 1 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் சிறுமியரைத் தத்து எடுத்து அச்சிறுமியரின் பெற்றோ ருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 250 வீதம் வழங்கும் வகையில் வளர்ப்பு பெற்றோர் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேர்ந்தவர்கள் தொடர்ந்து பயிலாமல் இடை யில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே அதிகமாக உள்ளது. இதனைச் சீர்செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மிகக் குறைந்த காலத்திலேயே 50,000 நன்கொடை யாளர்கள் இதற்கு உதவ முன் வந்துள்ளனர்.

கரும்பலகைத் திட்டம்.—1987–89ஆம் ஆண்டிலிருந்து மைய அரசு பொறுப்பேற் கும் திட்டமாக கரும்பலகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பக் கல்வி நிலையில் பெருமளவில் முன்னேற்றம் கொண்டு வருவதும் வசதிகளை பெருக்கு வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் முக்கியமான மூன்று அம்சங்கள் பின்வருமாறு.—

(1) ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவையான இடவசதிகளை அளிப்பது.

(2) ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக்குவது.

(3) அத்தியாவசியமான கற்பிப்பு உபகரணங்கள் அளித்தல்.

1988–89இல் தெரிவு செய்யப்பெற்ற 619 ஓராசிரியர் பள்ளிகளிலும் இரண்டாவது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கற்பிப்பு சாதனங்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அமைப்புகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. அனைத்து 8,212 ஆரம்பப் பள்ளிகளுக்கான மானியமும் மைய அரசால் தரப்பட்டுள்ளது. கட்ட டங்கள் தேவைப்படும் பள்ளிகளில் பெரும்பாலும் கட்டுமானப் பணி தொடங்கப்பட் டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி.—1988–89இல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினரான 18.91 இலட்சம் பேர்களும் 56.16 விழுக்காடாகிய 10.62 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1988–89 ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் விவரங்கள் வருமாறு :—

| | சாதாரண பள்ளிகள் (ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிக் குலேஷன் பள்ளிகள் உட்பட). | நடுவண் உயர் நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்ற வந்றோடு இணைந்தவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர்நிலைப் பள்ளிகள் | 2,821 | 101 | 2,922 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 1,710 | 77 | 1,787 |
| | 4,531 | 178 | 4,709 |

1988–89-ல் மேற்கண்ட பள்ளிகளில் வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | மாணவர் களின் எண்ணிக்கை (இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1—5 வகுப்புகள் | 3.00 |
| 6—8 | 13.38 |
| 9—10 | 15.62 |
| 11—12 | 4.[illegible] |
| மொத்தம் ... | 36.20 |

1988–89 ஆம் ஆண்டில் 47 உயர்நிலைப்பள்ளிகள் புதியதாக திறக்கப்பட்டன.

அறிவியற் கல்வி.— உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியற்கூடங்களை அமைப்பதற்கான இத்திட்டத்தின்கீழ் 1988–89 முடிய 1,163 உயர்நிலைப்பள்ளிகள் பயன்பெற்றுள்ளன. இத்திட்டத்தின்படி ஆய்வுக்கூட சாதனங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் மொத்தமாக வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. பள்ளி ஒன்றுக்கு ரூ. 25,000 மதிப்புள்ள சாதனங்கள் வழங்கப்படுகின்றன. அரசுப் பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக்கூட கட்டிட மதிப்பு ரூ. 1.00 இலட்சமாகும். உள்ளாட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடக் கட்டிடத்திற்காக கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது 60,000 ரூபாய் இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வி.— கல்வியில் எல்லா நிலைகளிலும் சுற்றுப்புறச் சூழல்பற்றி ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தேசியக் கல்விக் கொள்கை 1986 ஆம் ஆண்டில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வித் திட்டத்தில் ரூ. 34 இலட்சம் செலவில் செயல்படுத்த மைய அரசு பங்கேற்கும் திட்டமாக அனுமதித்து அவ்வரசு மார்ச் 1989 ஆம் ஆண்டில் ரூ. 18 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டம் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள 8 வருவாய் வட்டங்களில் செயல்படுத்தப்படும், பிற நடவடிக்கையோடு பள்ளிகளில் செடிகளை வளர்த்தலும் இச்சூழல் கல்வியின் முக்கியமான அம்சமாகும்.

<u>கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் பிற ஊக்குவிப்புப் பணிகள்</u>—தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவசமாகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்பு படிப்புதவித் தொகைகளையும் இதர சலுகைகளையும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறைகளிடமிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர்.

9—12 வகுப்பு மாணவியருக்கு இசைக் கல்வி காரணமாக எந்த அளவுக்கு படிப்பு கட்டணத் தொகை செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்படுகிறதோ அந்த அளவுக்கு கல்விக் கட்டணத் தொகையை ஒரு திட்டத்தின் கீழ் மைய அரசு வழங்கி வருகிறது. 1987–88 மற்றும் 1988–89 ஆம் ஆண்டுகளுக்கு இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 121 இலட்சம் வழங்கும்படி மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மாணவியர் கல்வி முன்னேற்றத் திட்டங்களுக்காக இத்தொகை செலவிடப்படுகிறது.

<u>மேற்பார்வை படிப்பு</u>.— ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடிப் பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுகிறது. 625 தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் இச்சமுதாயத்தைச் சார்ந்த 62,799 மாணவர்களுக்கும் 375 மேல்நிலைப் பள்ளிகளில் 24,057 மாணவர்களுக்கும் இத்திட்டம் பயனளித்து வருகிறது.

<u>பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி</u>.— ஆண்டு முடிவில் நடைபெறும் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே 1,000 மையங்களில் சிறப்பு பயிற்சி தரும் திட்டம் ஒன்று செயல்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் இரண்டு முழு நேர பி.டி. ஆசிரியர்கள் மூன்று மாதங்களுக்கு போதனை அளிக்கின்றனர். அந்த இடத்திலுள்ள தேவை மற்றும் வசதிக்கேற்ப பள்ளி நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலோ அல்லது பகல் வேளையிலோ இம்மையங்கள் இயங்குகின்றன. 18 வயதுள்ள மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம்.

<u>மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்</u>.— மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ்மாநிலத்திலுள்ள 14 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களாகத் தரமுயர்த்த இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது.

<u>மக்கட் தொகைக் கல்வி</u>.— 1982–83 ஆம் ஆண்டு முதல் மக்கட் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கியநாடுகளின் நிதியின் மூலம் தமிழ்நாட்டில் மக்கள் தொகைக் கல்வித் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு பேராசிரியர் திட்ட ஒருங்கிணைப்பாளர் திட்ட அலுவலர்கள் மூவர் மற்றும் ஓர் ஆராய்ச்சி அலுவலரைக்கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் ஊதியம் பற்றிய எல்லாச் செலவினையும் மாநில அரசு முதற்கண் ஏற்று, பின்னர் ஐக்கிய நாடுகள் நிதியிடமிருந்து (UNFPA) செலவுத் தொகையைப் பெற்றுக் கொள்கிறது. இந்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்குமிடையே உள்ள ஒப்பந்தப்படி இத்திட்டம் 1990 வரை நீட்டிக்கப்படும்.

<u>அனைவருக்கான அஞ்சல் முறைப்பள்ளி</u>.— உயர்நிலைப் பள்ளி நிலையில் பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு அனைவருக்குமான அஞ்சல் முறைப்பள்ளியை மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் தொடங்கியுள்ளது. ஏற்கனவே 8-வது வகுப்பு தேறி 15 வயது நிரம்பியவர்கள் இதில் சேரலாம். ஆண்டுதோறும் 2,500 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அஞ்சல் வழிப் பயிற்சியும் நேரடித் தொடர்பும் இணைந்து இப்பள்ளி 12 மாத காலம் நடத்தப்பட்டு பள்ளியிறுதி வகுப்புக்கு இணையான கல்வி தரப்படுகிறது. இப்படிப்பு மிகவும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அனைவருக்குமான (அஞ்சல்முறைப்) பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் ஐந்து அணியினர் படிப்பைமுடித்து இறுதித் தேர்வுகளை எழுதினர். 5,070 பேர் இதுவரை பயன் அடைந்துள்ளனர். வாழ்க்கைக்குதவும் தொழிற் கல்வியை அளிக்க வகை செய்யத் தக்க பாடத்திட்டத்தினை உருவாக்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

<u>மேல்நிலைப்பள்ளிக் கல்வி</u>.— 1987–88 மற்றும் 1988–89 ஆம் ஆண்டுகளில் புதியதாகத் 92 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன. (தனியார் 39 மெட்ரிக்குலேஷன் 53) 1988–89 ஆம் ஆண்டில் மேல்நிலை வகுப்புகளில் பயின்று வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பொதுப்பாடங்கள் | 2,03,087 | 1,75,341 | 3,28,428 |
| தொழிற் பாடங்கள் | 43,653 | 50,286 | 93,939 |
| மொத்தம் | 2,46,740 | 1,75,627 | 4,22,367 |

மேல்நிலைப் பள்ளி நிலையம் தொழிற் பாடங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் மொத்தம் 1,267 மேல்நிலைப் பள்ளிகளில் வகையான தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1988–89-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 4.22 இலட்சம் மாணவர்களில் 93,939 பேர் பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர்:—

| தொழிற் பாட வகை. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வேளாண்மை | 5,232 | 67 | 5,299 |
| 2. மனையியல் | 58 | 4,238 | 4,296 |
| 3. வாணிகத்துறை | 21,348 | 17,734 | 39,082 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும் | 16,818 | 1,278 | 18,096 |
| 5. உடல் நலம் | 197 | 4,701 | 4,898 |
| 6. ஆசிரியர் பயிற்சி | | 22,268 | 22,268 |
| மொத்தம் | 43,653 | 50,286 | 93,939 |

மேல்நிலை வகுப்புகளில் தொழில் சார்ந்த பாடங்கள் கற்பித்தலுக்கான மைய அரசு பொறுப்பேற்கும் [illegible] 100 பள்ளிகள் வீதம் மேல்நிலை வகுப்புகளில் தொழிற் கல்வி கற்பிப்பதற்கு மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. 1987–88-ல் இம்மாநிலத்துக்கு ரூ. 1.92 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 112 இலட்சத்தினை கட்டிடங்கள் உபகரணங்கள் முதலியவற்றுக்காக முதற்கட்டமாக மைய அரசு அளித்துள்ளது. இத்தொகை பள்ளிக்கல்வி இயக்குநருக்கும், தொழிற்நுட்பக் கல்வி இயக்குநருக்கும் அளிக்கப்பட்டுள்ளது. வகுப்பறை மற்றும் தொழிற்கூடங்கள் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. கருவிகளை தயாரிக்கும் பொறுப்பை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடம் பள்ளிக் கல்வி இயக்குநர் ஒப்படைத்துள்ளார். 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 225 இலட்சங்கள் செலவிட திட்டங்கள் அனுப்பப்பட்டு மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டும் இளைஞர் பணிகளும்.

போட்டி விளையாட்டுகளும் இளைஞர் பணிகளும்.—போட்டி விளையாட்டுக்கள்-இளைஞர் பணிகள் துறை, 1979 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டது. போட்டி விளையாட்டுக்கள் இளைஞர் பணிகள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அத்துறைக்கு இந்த ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு (1988-89) ரூ. 262.78 இலட்சமாகும்.

போட்டி விளையாட்டுத் திட்டங்கள்.—போட்டி விளையாட்டுப் பள்ளிகள், தங்கும் விடுதிகள், பல்வேறு திட்டங்களுக்கிடையே இளைஞர்களின் விளையாட்டுத் திறனை சிறுவயதிலேயே கண்டறிந்து, விளையாட்டுக் கல்வித் தகுதி பெற்ற பயிற்சியாளர்களை கொண்டு அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்து, அவர்களுடைய விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதில் சிறந்த பங்காற்றுகின்றன. இத்தகைய பயிற்சி தவிர, சத்துணவும் தங்குமிட வசதிகளும் இலவசமாக அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்தப் போட்டி விளையாட்டுப்பள்ளிகளில் மற்றும் விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு, விளையாட்டுப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பின்வரும் போட்டி விளையாட்டுப் பள்ளிகளும் விடுதிகளும் செயற்பட்டு வருகின்றன :—

(1) ஒய்.எம்.சி.ஏ. போட்டி விளையாட்டுப் பள்ளி, சென்னை-மாணவர்களுக்கு

(2) எஸ்.ஆர்.கே. மாருதி போட்டி விளையாட்டுப் பள்ளி: பெரிய நாயக்கன் பாளையம், கோயம்புத்தூர்—மாணவர்களுக்கு.

(3) நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் போட்டி விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி—மாணவர்களுக்கு.

(4) போட்டி விளையாட்டு மாணவர் விடுதி—திருச்சி.

(5) போட்டி விளையாட்டு மாணவர் விடுதி—மதுரை.

(6) போட்டி விளையாட்டு மாணவர் விடுதி—திருநெல்வேலி.

இத்துடன், கோயம்புத்தூர் வி.ஆர்.ஜி. போட்டி விளையாட்டுப் பள்ளியில் மகளிருக்கென்றே தனியாக போட்டி விளையாட்டுப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகின்றன.

இந்தப் போட்டி விளையாட்டுப் பள்ளிகளிலும், விடுதிகளிலும் ஆண்டுதோறும் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். போட்டி விளையாட்டுப் பள்ளிகளில் விடுதிகளில் உள்ள மாணவர்கள்/மகளிர், பள்ளி விளையாட்டுக்களிலும், அனைவருக்குமான திறமைப்போட்டிப் பந்தயங்களிலும் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர், இத்துறையில் செயலாக்கப்பட்டு வருகின்ற பிற திட்டங்கள் வருமாறு :—

(1) இந்தியப் பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்தும் போட்டி. விளையாட்டுக்கள் ; குடியரசுதின, பாரதியார் பிறந்த தின போட்டி விளையாட்டுக்கள்.

(2) 10 பள்ளிகள் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள்.

(3) நடுநிலைப்பள்ளி போட்டி விளையாட்டுக்கள்.

(4) சிறுவர்களின் குறிப்பிட்ட விளையாட்டுத் திறனை மிகச் சிறுவயதிலேயே கண்டறிந்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களைத் திறமைப் போட்டிக்கு அனுப்புதல்.

(5) இளைஞர்களின் குறிப்பிட்ட விளையாட்டுத் திறனைக் கண்டறிந்து அவர்களுக்கு பயிற்சி அளித்து விளையாட்டுப் போட்டிக்கு அனுப்புதல்.

(6) போட்டி விளையாட்டுப் பயிற்சி உதவித் தொகை.

(7) உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு நினைவுகூர் பயிற்சி அளித்தல்.

(8) வளர்ச்சி வட்டார அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டி.

(9) தனியார் போட்டி விளையாட்டு மன்றங்களுக்கு நிதி உதவி.

(10) போட்டி விளையாட்டுகள், உடற்பயிற்சி கல்வியில் ஆராய்ச்சிப் படிப்பு படிப்பவர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை.

போட்டி விளையாட்டுக்கென தனி இதழ்.—தமிழ்நாட்டில் நடக்கின்ற போட்டி விளையாட்டுகள் பற்றிய விவரங்களைக் கவனமாக தொகுத்து வைக்கும் நோக்கத்துடன், "தமிழர்களின் போட்டி விளையாட்டுகள்" என்கிற பெயரில் தனி இதழ் ஒன்று வெளியிடப்பட்டு வருகின்றது.

போட்டி விளையாட்டுத் திரைப்படச் சுருள் சேமிப்புகள்.—மாணவர்கள், மாணவர்கள் அல்லாதோர், பொதுமக்கள் ஆகியோரிடையே போட்டி விளையாட்டுகளில் ஆர்வத்தை ஏற்படுத்தி அவற்றைப் பரப்பும் நோக்கத்துடன், போட்டி விளையாட்டு உத்திகள், உடற்பயிற்சிகளைக் காட்டுகின்ற போட்டி விளையாட்டு திரைப்படங்கள் வாங்கப்பட்டு பல்வேறு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பிற அமைப்புகளிலும், திரையிட்டுக் காண்பிக்கப்படுகின்றன.

இந்தியாவில் பணியாளர்களுக்கான நீச்சல் போட்டிகளையும். கூடைப்பந்தாட்டப் போட்டிகளையும் தமிழ்நாடு மாநிலம் 1988–89ல் நடத்தியது. இம்மாநிலம், நாகபுரியில் நடந்த "கேரம்" போட்டி விளையாட்டில் ஒட்டு மொத்த "சாம்பியன்" பட்டத்தைப் பெற்றது. மேலும், போபாலில் நடந்த பளு தூக்கும் போட்டியில் 3 தங்கப் பதக்கங்களைப் பெற்றது.

## இளைஞர் நலன்.

நாட்டு நலப் பணித் திட்டம் : 1988–89ல் இத்திட்டத்தின் கீழ்வரும் மாணவர்களின் எண்ணிக்கை 90,000 ஆகும். மக்களுக்குப் பணிபுரியும்படி மாணவர்களுக்கு போதிக்கும் பொருட்டு, இத்திட்டம் மிகவும் முனைப்பாகத் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நம் நாட்டில், இத்திட்டத்தைச் செயலாக்குவதில் தமிழ்நாடு மாநிலம் முக்கியமானதொரு மாநிலமாக விளங்குகிறது.

பிற பணிகள் : தற்போது, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், தேசிய இளைஞர் மையங்கள் புதுடில்லியிலுள்ள தேசிய இளைஞர் மைய அமைப்பின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

மதுரையில் இளைஞர் இல்லம் கட்டும்பணி முடிவுறும் நிலையில் உள்ளது. தஞ்சாவூரில், இளைஞர் இல்லம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

காந்தி கிராமம் ஊரக நிறுவனத்தில் (பல்கலைக் கழகமாகப் கருதப்பட்டது) 1989 பிப்ரவரியில் இளைஞர் விழா நடத்தப்பட்டது.

1988-89ல் மொத்தம் 349 ஊரகப் போட்டி விளையாட்டு மையங்களுக்கு 6,09,400 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1988-89ல் மொத்தம் 124 இளைஞர் மன்றங்களுக்கு 1,09,120 ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

எட்டு மாவட்டங்களில் உள்ள மாவட்டப் போட்டி விளையாட்டு மன்றங்களில், எட்டு பொழுது போக்கு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், பொழுதுபோக்கு மையங்களுக்கு மொத்தத்தில் ரூ. 24,000 வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு மாநிலப் போட்டி விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் :

1988-89 ஆம் ஆண்டிற்கான போட்டி விளையாட்டுக்கள் : இம்மாநிலத்தில் போட்டி விளையாட்டுக்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநிலப் போட்டி விளையாட்டுக் கழகம் 1984-ல் தொடங்கப்பட்டது. 1988-89-ல் பின்வரும் போட்டி விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன.

இந்தியாவின் 40-ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவைக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு மாநிலப் போட்டி விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் 21 மாவட்டங்களிலுள்ள விளையாட்டுத் தலைமையிடப் பிரிவுகள் அனைத்திலும், ஒரே சமயத்தில் இந்தியப் போட்டி விளையாட்டு அதிகார மன்றத்தின் ஆதரவில் 7-8-1988 அன்று "40-ஆம் ஆண்டு விடுதலை நாள் ஓட்டப் பந்தயத்தை" நிகழ்த்தியது. ஒவ்வொரு மையத்திலும் சுமார் 5,000 பேர் பங்கேற்றனர்.

இந்தியாவின் 40-ஆம் ஆண்டு விடுதலை நாள் நிறைவு விழாவைக் கொண்டாடும் வகையில், சென்னையில், 17-8-1988 அன்று "நாற்பதாம் ஆண்டு விடுதலை நாள் ஓட்டப் பந்தயம்" நடத்தப்பட்டது.

மாநில அளவிலான பொங்கல் திருநாள் போட்டி விளையாட்டுக்களை 1988-89ல் 7 இடங்களில் நடத்தப்பட்டன.

பொங்கல் திருநாள் போட்டி விளையாட்டில் ஆடவரும் மகளிரும் சுமார் 2,500 பேர் கலந்து கொண்டனர்.

1988 பிப்ரவரியில் மொத்தம் ஆறு மையங்களில் உடற் பயிற்சி விளையாட்டுக்கள், கூடைப்பந்து, கைப்பந்து, கால் பந்து, மட்டைப் பந்து (ஹாக்கி), பளு தூக்குதல் ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் 21 நாட்களுக்குப் போட்டி விளையாட்டு மேம்பாட்டுத் திட்ட தங்குமிட பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி முகாம் மூலமாக சுமார் 810 சிறுவர் சிறுமியர் பயனடைந்தனர்.

உடற்பயிற்சி விளையாட்டு கூடைப்பந்து, கைப்பந்து, கால்பந்து, மட்டைப் பந்து (ஹாக்கி) போன்ற 5 முக்கிய விளையாட்டுக்களில், சென்னையில், 1988 மே திங்களில் 21 நாட்களுக்கு மாநில அளவிலான கோடைக்கால பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி முகாம் நடந்ததன் மூலமாக 16 வயதிற்குக் குறைவான சுமார் 200 சிறுவரும் சிறுமியரும் பயனடைந்தனர்.

தமிழ்நாடு மாநிலப் போட்டி விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் மேற் சொன்ன பயிற்சி முகாம்களை நடத்தியதுடன் பின்வரும் முக்கியமான தேசியத் திறமைப் போட்டிப் பந்தயங்களிலும் பங்கேற்றது.

தமிழ்நாடு மாநிலப் போட்டி விளையாட்டுக் கழகம், உடற் பயிற்சி, கூடைப்பந்து, கைப்பந்து, நீச்சல், கபடி ஆகிய விளையாட்டுப் பந்தயங்களில் கலந்து கொள்ள குழுக்களை அனுப்பியது. அக்குழுக்கள் பின்வரும் பரிசுகளைப் பெற்றன :

(1) கூடைப்பந்தாட்டம் (ஆண்கள்)—முதல் இடம்.

(2) கூடைப்பந்தாட்டம் (பெண்கள்)—முதல் இடம்.

(3) உடற் பயிற்சி விளையாட்டுக்கள் (ஆண்களும் பெண்களும்) :

தங்கப்பதக்கம்—4

வெள்ளிப்பதக்கம்—6

தேசிய விளையாட்டுத் தகுதிப் போட்டியில் நடைபெற்ற 10 வகை விளையாட்டுக்களிலும் தமிழ்நாடு பங்கேற்றது. இந்திய போட்டி விளையாட்டு அதிகார மன்றம் ஏற்றுக் கொண்ட பள்ளிகளில் சேர்த்துக் கொள்வதற்காக மொத்தம் 20 சிறுவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ராஞ்சி, பீகார் ஆகிய இடங்களில் 1989 பிப்ரவரியில் நடந்த, பெண்களுக்கான தேசிய விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாடு பங்கு கொண்டு பின்வரும் பரிசிடங்களைப் பெற்றது :

| | |
|---|---|
| (1) உடற்பயிற்சி விளையாட்டுகள் | முதல் இடம். |
| (2) கூடைப்பந்தாட்டம் | முதல் இடம். |
| (3) பூப்பந்தாட்டம் | இரண்டாம் இடம். |
| (4) வரிப்பந்தாட்டம் (டென்னிஸ்) | இரண்டாம் இடம். |
| (5) கைப்பந்தாட்டம் .. | மூன்றாம் இடம். |

சிறார்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கும் பொருட்டு, "அண்ணா நீச்சல் குளத்திலும், ஷெனாய் நகர் நீச்சல் குளத்திலும் "நீச்சல் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி முகாமினால் சுமார் 300 சிறார் பயனடைந்தனர்.

2. மாநிலப் போட்டி விளையாட்டுகள், விளையாட்டுச் சங்கங்கள் :— சங்கத்திற்கு மானியம் 1988–89-ல் மாநில / தேசிய உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பொருட்டும், அவற்றில் பங்கு கொள்ளும் பொருட்டும், பல்வேறு போட்டி விளையாட்டுகள், விளையாட்டுகள் சங்கத்திற்கு, தமிழ்நாடு மாநிலப் போட்டி, விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் மானியம் வழங்கியது.

## தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

1909 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அரிய மதிப்புள்ள அரசு ஆணைச் சேகரிப்புகளை தொடர்ந்து தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த மதிப்புள்ள ஆவணங்கள் நவீன விஞ்ஞான முறைகளில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்காப்பகம் தொடர்ந்து வரலாற்று ஆராய்ச்சி மையமாக பணிபுரிவதோடு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் தேவையினை பூர்த்தி செய்கிறது. கடந்த 3 ஆண்டுகளுக்குரிய ஆவணங்களைத் தவிர ஏனைய அனைத்து அரசு தலைமைச் செயலக ஆவணங்களை கையகப்படுத்தியதோடு, கடந்த பத்தாண்டுகளுக்குரிய ஆவணங்களைத் தவிர ஏனைய வருவாய் வாரிய ஆவணங்களும் கொண்டுள்ளது. இதன் சேகரிப்பில் சில துறைத் தலைவர் அலுவலக ஆவணங்களும், தமிழ்நாடு அரசு அரசிதழ்களும், வாக்காளர் பட்டியல்கள் மற்றும் அரசு புத்தகங்கள்/அறிக்கைகள் ஆகியவைகளும் அடங்கும். இங்குள்ள ஆங்கில மொழி ஆவணங்கள் 1670 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டன. இங்குள்ள ஆவணங்களுக்கு வழிகாட்டி, விவரப்பட்டியல்கள், அட்டவணைகள் போன்ற பார்வைக் குறிப்பு சாதனங்களும் உள்ளன.

முறையாக பழுதுபார்த்தல் மற்றும் நவீன விஞ்ஞான முறையில் சிறந்த ஆவணப் பாதுகாப்பு, ஆவண மேலாண்மை பயிற்சி அளித்தல், ஆராய்ச்சிக்குரிய வசதி அளித்தல், தேர்ந்தெடுத்த ஆவணங்களின் முறையான வெளியீடு போன்ற மிகுந்த பணிகள் செயல்பட்டு வருகின்றன. ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையர் இத் துறையின் தலைவர் ஆவார். மதுரை, சிதம்பரம் (தற்சமயம் கடலூருக்கு மாற்றப்பட்டுள்ளது). கோவை, திருச்சி மற்றும் சேலத்திலுள்ள மாவட்ட ஆவணக் காப்பகங்கள் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் கண்காணிப்பின் கீழ் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன.

<u>மாவட்ட ஆவணக் காப்பங்களைப் பற்றிய அறிக்கை.</u>—மாவட்டங்களிலுள்ள பல்வேறு மாவட்ட அலுவலகங்களில் உள்ள நிர்வாகம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களை பெற்று மையப்படுத்தி அவைகளை பாதுகாக்கவும், வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் தேவையினை பூர்த்தி செய்ய வழிவகை செய்யவும் மாவட்ட ஆவணக் காப்பகங்கள் தொடங்க முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் இதுவரை கோவை, மதுரை, தென்னாற்காடு மாவட்டம் (இருப்பு) கடலூர், திருச்சி மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்ட ஆவணக் காப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

அரசு மற்றும் பொது மக்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள்.—இவ்வாண்டில், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக பல்வேறு துறைகள், வருவாய் நிர்வாகம் மற்றும் நில நிர்வாகத் துறைகள், வனத்துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரிடமிருந்து ஆவணங்கள் வேண்டியும், தகவல் கேட்டும் பெறப்பட்ட கோரிக்கை மனுக்களின் மொத்த எண்ணிக்கை 55,606. அவற்றுள் 111 மனுக்கள் ஆவணங்கள் கண்டுபிடிக்கக் கோரியது. (Search Cases) 32,497-க்கு மேற்பட்ட ஆவணங்கள் தலைமைச் செயலக பல்வேறு துறைகள், வருவாய் நிர்வாகத் துறை மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கை காலத்தில் 34,344-க்கு மேற்பட்ட ஆவணங்கள் திரும்பப் பெறப்பட்டு உரிய கட்டுகளில் சேர்க்கப் பட்டன.

வரலாற்று ஆராய்ச்சி.—பிற மாநிலங்கள் மற்றும் அயல் நாடுகளில் இருந்து வருகை புரியும் ஆராய்ச்சியாளர்களுக்கு இக்காப்பகத்தில் உள்ள ஆவணங்கள் போன்றவை ஆராய்ச்சி செய்ய, வசதிகள் அளிக்கப்படுகின்றன.

வரலாற்று ஆவணங்கள் ஆய்வு மண்டலக்குழு.—தனியார் வசமுள்ள வரலாற்று மதிப்புள்ள ஆவணங்களைத் திரட்டி, பாதுகாத்து பட்டியலிட்டு அட்டவணைப் படுத்துவதே இக்குழுவின் குறிக்கோளாகும். மற்றும் அதன் மூலம் தேசிய பதிவுத் திட்டத்திற்கு விவரம் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசின் அறிவுரைகளுக்கிணங்க, 15 மாவட்டங்களில் மாவட்டக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டும், மீதமுள்ள 5 மாவட்டங்களில் மாவட்ட குழுக்கள் ஏற்படுத்த ஏற்பாடுகளையும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

சேலம், புதுக்கோட்டை, பெரியார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டக் குழுக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரைகள், இடங்கள் மற்றும் அரிய புத்தகங்கள் பற்றிய விவரங்கள் கொண்ட காலாண்டு இதழ்களை வெளியிடுகின்றன.

வரலாற்று ஆவணங்கள் ஆய்வு மண்டலக் குழுவால் தனியார் வசமுள்ள வரலாற்று சிறப்புமிக்க ஆவணங்களைத் திரட்ட தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம்.—தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டு ஆறு உறுப்பினர்களுடன் தொடர்ந்து இயங்கி வருகிறது.

மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் இம்மன்றத்தின் தலைவராவார். தமிழ்நாடு ஆவணக் காப்பக வரலாற்று ஆராய்ச்சி ஆணையர் இம்மன்றத்தின் உறுப்பினர்—செயலர். அரசு கல்வித்துறையின் செயலாளர் இம்மன்றத்தின் அலுவல் உறுப்பினர். டாக்டர் சி. இ. இராமச்சந்திரன், டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா மற்றும் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் இவ்வறிக்கை காலத்தில் தொடர்ந்து இம்மன்றத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

தமிழ்நாட்டின் வாழ்க்கை நிலை குறித்து அதன் கடந்த மூன்று நூற்றாண்டு கால வரலாற்றில் பிரதிபலிக்கும் பல்வேறு அம்சங்களை தொகுத்து எழுதும் தகுதியும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு ஆராய்ச்சிக்கான தேவையான வசதிகள் மற்றும் உரிய சூழ்நிலைகள் அளித்து ஊக்குவிப்பதே இம்மன்றத்தின் குறிக்கோளாகும். இம்மன்றம் ஒவ்வொரு வருடத்திற்கும் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் இப்பணியில் ஈடுபட வழிவகை செய்வதுடன், இதைத் தவிர குறிப்பிட்ட பொருளின் மீது தகுதி வாய்ந்த கட்டுரைகளை சமர்ப்பிக்கும் பத்து பொருளாராய்ச்சியாளர்களுக்கு உதவிப் பணமும் கொடுக்கப் பட்டு வருகிறது.

ஆராய்ச்சியாளர்களிடமிருந்து பெறப்பட்ட 5 ஆய்வுக் கட்டுரைகள் மன்றத்தின் உறுப்பினர்களுக்கு அவர்களின் கருத்துருவிற்காக அனுப்பப்பட்டது. இவ்வைந்து அறிக்கைகளில், இரண்டு அறிக்கைகள் வெளியிடுவதற்கான பரிந்துரையுடன் திரும்பப் பெறப்பட்டது. இதைத் தவிர மூன்று ஆராய்ச்சியாளர்கள் (1983-85) மற்றும் 1986-87 அவர்களது ஆராய்ச்சியை முடித்து அவர்களின் முடிவு அறிக்கைகள் எதிர் பார்க்கப்படுகின்றன. 1988-90 ஆண்டிற்காக கீழ்க்கண்ட இரண்டு ஆராய்ச்சியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் முறையே 30—9—1988 மற்றும் 3—10—1988 தேதிகளில் மன்றத்தில் சேர்ந்துள்ளனர்:

| | |
|---|---|
| (1) திரு. எம். சுந்தர்ராஜ் | தமிழ்நாட்டில் (சிதை) வரதட்சிணை சிக்கல்—அரசு முறை மற்றும் பொது மக்கள் கண்ட தோற்றம் 1920-88. |
| (2) திரு. பி. சிருஞ்ஞராஜ் | சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட இன தலைவர்களின் முதியோர் கல்வி மையங்கள், விரிவுரைகளில் பங்குகொள்வது பற்றி ஒரு ஆய்வு. |

ஆகிய வரலாற்றுக்கு தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் மலிந்துள்ள ஆவணங்களுக்கு, ஆவணங்களின் வழிகாட்டி தயாரித்தல்.—யுனெஸ்கோவின் ஆதரவிலும், ஆவணக் காப்பக பன்னாட்டு குழுவின் கூட்டாதரவின் பேரிலும் பாரிசில், நாடுகளின் தேசிய பாரம்பரிய வரலாற்றுக்கு உதவும் வகையில், தொகுப்பு அட்டவணை வரிசையில் வெளிக் கொணர, ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வமைப்பின் தலையாய நோக்கம் ஆவணக் காப்பக மற்றும் கை ஏட்டுப் பிரதிகளில் அடங்கியுள்ள பொருளை, சுருக்க விவரமான முறையில் அறிந்து அனைவரும் பலன் பெறுவதேயாகும்.

ஆதலால், அனைத்துலக ஆவணக் காப்பக குழுவின் அடியொற்றி, ஆவணங்களுக்கான ''ஆவண வழிகாட்டி'' தயாரிக்கப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், தேசிய அளவில் செயலாக்கப்பட வேண்டுமென, 1980-ல் மைய அரசால், தேசிய ஆலோசனை குழு நிறுவப்பட்டது. மேற்படி குழுவில், தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆணையர் அவர்கள் உறுப்பினராவர்.

ஆவணங்களுக்கான ''ஆவண வழிகாட்டி'' தயாரிக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தை புதுடில்லியில் உள்ள மைய அரசின் இந்திய தேசிய ஆவணக் காப்பகம் ஏற்று இதற்கு ஏற்படும் செலவினங்களுக்காக நிதி உதவியை 75 விழுக்காடும், மாநில அரசு 25 விழுக்காடுமாக பகிர்ந்து கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

மேற்படி தமிழ்நாடு அரசு ஆவணங்களின் வழிகாட்டி தயாரிப்பதற்கான சிறப்பு ஊழியர்களை அனுமதித்து, 6—1—1989-லிருந்து இப்பணி இக்காப்பகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

இயந்திரப் பிரிவு :—இவ்வறிக்கை காலத்தில் புகையூட்டுக் கருவி மூலம் 19,037 கட்டுகள் புகையூட்டப்பட்டன. 50,083 தாட்கள் ஜெராக்ஸ் நகலெடுக்கப்பட்டு, ஆராய்ச்சியாளர்களுக்கும், அலுவலக உபயோகத்திற்கும் வழங்கப்பட்டன. 1,40,156 தாட்கள் மின் அணு படிபெருக்கி இயந்திரம் மூலம் படி நகல்கள் எடுக்கப்பட்டன.

மின் அணு புகைப்பட பிரிவு :—மின் அணு புகைப்பட பிரிவினால் 35 எம். எம். படச்சுருளில் ஆராய்ச்சியாளர்களுக்காகவும், முக்கிய ஆவண பாதுகாப்புக்காகவும் 2,43,388 ஆவணப் பக்கங்கள் படமெடுக்கப்பட்டன.

வெளியீட்டுப் பிரிவு :—இவ்வறிக்கை காலத்தில் தேர்ந்தெடுத்த ஆவணத்தொகுப்புகளை வெளியிடும் பணி தொடர்ந்து செயல்பட்டு வந்தது. கீழ்க்காணும் மூன்று தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகள் முடிக்கப்பட்டு வெளியிடும் நிலையில் உள்ளது.

1. நகராட்சிகளின் தோற்றமும், வளர்ச்சியும்.
2. கூட்டுறவுகளின் தோற்றமும், வளர்ச்சியும்.
3. 1920-லிருந்து அரிசன சட்டமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய பங்கு.

கீழ்க்காணும் தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1. குடிநீர் வழங்குதல் மற்றும் வடிகால் வாரியத் திட்டம்.
2. சென்னை மாநகரத்தில் வேளாண்மை சட்டம் இயற்றல்.

கீழ்க்காணும் மாவட்ட வழிகாட்டி நூல்கள் மறு அச்சிடப்பட்டு அதன் நகல்கள் மாவட்ட ஆவணக்காப்பகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

1. கோயம்புத்தூர்.
2. நீலகிரி.
3. திருநெல்வேலி.

இவ்வறிக்கை காலத்தில் டாட்வெல்லின் '' சென்னை ஆவணங்கள் '' மற்றும் ஜெ. டால்பாய்ஸ் விலரின் '' சென்னை ஆவணங்களுக்கான கையேடு '' ( Madras Records ) ஆகியவை அலுவலக உபயோகத்திற்காக (தலா 10 நகல்கள்) மின்சார படிபெருக்கி இயந்திரத்தின் மூலம் மறுமுறை அச்சிடப்பட்டன.

ஆவண அமுதம். — தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் அலுவலக இதழ் '' ஆவண அமுதம் '' காலாண்டு தோறும் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

மாவட்ட விவரச் சுவடிகள் .— மாவட்ட விவரச்சுவடிகள் தயார் செய்யும் திட்டம் 1988-89 காலத்தில் தொடரப்பட்டது. தர்மபுரி மாவட்ட விவரச்சுவடி அரசினால் அங்கீகரிக்கப்பட்டு அச்சில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி வரைவு முடிக்கப்பட்டு அரசின் ஏற்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவரச்சுவடிகள் தமிழாக்கம் செய்யும் பணி முடிக்கப்பட்டு அச்சில் உள்ளன. நீலகிரி மாவட்ட விவரச்சுவடிக்கான புள்ளி விவரங்கள் மற்றும் பிற விவரங்கள் சேகரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் 4–3–1970 அன்று நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தமிழக அரசின் சார்பு நிறுவனமாக இயங்கி வருகிறது. அந்த நாளில் முன்னாள் அரசுத்துறை '' தமிழ் பிரசுரங்கள் '' என்பதும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடன் இணைக்கப் பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளி களில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் 1 முதல் 12 வகுப்புகளுக்கான தமிழ்வழி பாடநூல்களையும், 6 முதல் 12 வகுப்புகளுக்கான ஆங்கில வழி பாடநூல்களையும், 1 முதல் 10 வகுப்புகளுக்கான மலையாளம், கன்னடம், உருது மற்றும் தெலுங்கு வழி பாடநூல்களையும் அச்சிட்டு விநியோகித்து வருகிறது.

1. <u>பள்ளிப்பாடநூல் (புதிய கல்வி கொள்கை திட்டப்படி)</u>.— 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான பாடத்திட்டங்களை புதிய கல்விக் கொள்கைக்கேற்ப திருத்தியமைக்க டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு வழங்கிய நெறிமுறைகளின்படி புதிய பாடநூல்களுக்கான கையெழுத்துப்படி களை தயாரிக்க ஓர் உட்குழு அமைக்கப்பட்டது. இந்த உட்குழு 1988-89 ஆம் கல்வி யாண்டில் 1,3 மற்றும் 6 வகுப்புகளுக்கு தயாரித்தளித்த புதிய பாடநூல்களை இந் நிறுவனம் உரிய நேரத்தில் அச்சிட்டு விநியோகித்தது. 1989-90-ஆம் கல்வியாண்டில் 2, 4, 7, 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடநூல் களை தயாரித்து விநியோகம் செய்யப்பட்டது. 1990-91 ஆம் கல்வி ஆண்டில் 5, 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடநூல்கள் தயாரித்து வெளியிட கையெழுத்துப்படி தயாரிக்கும்பணி துவங்கப்பெற்றுள்ளது.

<u>குறிப்பேடு</u>.— குறிப்பேடுகள் தயார் செய்து வழங்கும் பொறுப்பை 1979-ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் ஏற்றுள்ளது. இக்குறிப்புகள் நடுவண் அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் சலுகை விலைத் தாளினால் தயார் செய்யப்பட்டு இந்நிறுவன வட்டாரக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூல மாகவும் அரசுத்துறை நிறுவனங்கள் மூலமாகவும் மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள மாணவர்களுக்குத் தேவையான குறிப்பேடுகள் தயாரிக்க ஆண்டு ஒன்றுக்கு சுமார் 10 ஆயிரம் டன் தாள் தேவைப்படுகிறது. ஆனால் நடுவண் அரசு ஆண்டு ஒன்றுக்கு 2,500 டன் சலுகைவிலைத்தாள் மட்டுமே இந்நிறுவனத் திற்கு ஒதுக்கீடு செய்கிறது. இதனால் மொத்தத் தேவையில் 25 விழுக்காடு மட்டுமே இந்நிறுவனம் பூர்த்தி செய்ய இயலுகிறது. மீதமுள்ளத் தேவையை பொதுச் சந்தையில் விற்பனை செய்யப்படும் தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் குறிப்பேடுகள் பூர்த்தி செய்கின்றன. 1988–89 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூபாய் 3.5 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், ஆதி திராவிட நலத்துறை, பிற் பட்டோர் நலத்துறை, கள்ளர் சீரமைப்புத் துறை மூலமாகவும் மாணவர்களுக்கு வழங்கியுள்ளது.

<u>கல்லூரி நூல்</u>.— ஆங்கில வழி பயிற்சியிலிருந்து தமிழ்மொழி வழி பயிற்சியினை கல்லூரிகளில் செயல்படுத்தும் முகமாய் நடுவண் அரசு எடுத்த தேசிய கொள்கையின்கீழ் 1968-ல் நடுவண் அரசு ரூபாய் 1 கோடியினை தமிழ்மொழி நூல்களை கல்லூரி மாணவர் களுக்கு தயாரித்து வழங்குவதற்காக தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கு அளித்தது. இத் தொகையைக் கொண்டு இந்நாள்வரை 910 தலைப்பின்கீழ் கலை, அறிவியல், சட்டம், பொறியியல், விவசாயம், மருத்துவம் மற்றும் கல்வி ஆகிய துறையின்கீழ் கல்லூரி மாணவர் களுக்கு பயனளிக்கும் வகையில் தமிழ்வழி நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இப்புத்தகங்களை விற்றுக் கிடைக்கும் தொகையிலிருந்து மேலும் 254 தலைப்புகளில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட நூல்களை மறுபதிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைகள் தவிர, மத்திய விவரச் சுவடியினை வெளியிடும் பொறுப்பையும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. தமிழ், தமிழகராதி மற்றும் சில சிறப்பு வெளியீடு களை இந்நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

<u>விநியோகம்</u>.— இந்நிறுவனம் தயாரிக்கும் பாட நூல்களை மாநிலம் முழுவதிலும் 58 மொத்த கூட்டுறவு விற்பனையாளர்கள் வாயிலாக 2,450 தனியார் துறை சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் 1,043 கூட்டுறவுத்துறை சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. 1985 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு முதலமைச்சரின் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ்

1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களுக்கு பாட நூல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1988–89 ஆம் கல்வி யாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 13 கோடி மதிப்புள்ள பாடநூல்கள் மாநிலத்திலுள்ள 421 பள்ளித் துணை ஆய்வாளர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நிதியுதவி.—இந்நிறுவனத்தின் நிதி நிலைமை திருப்திகரமாக உள்ளது. இந்நிறுவனம் தொடங்கியபொழுது அரசிடம் பெற்ற வழிவகை முன்பணம் ரூ. 23.83 லட்சம் ஆகும். இத்தொகை திருப்பியளிக்கப்பட்டது.

## தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் தஞ்சாவூரில் தொடங்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டு ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் ஆகின்றன.

உலகில் வாழ்வியலிலும் அறிவியலிலும் ஏற்பட்டுள்ள வியத்தகு வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, தமிழில் 14 தொகுதிகளில் வாழ்வியல் களஞ்சியம் ஒன்றையும் 20 தொகுதிகளில் அறிவியல் களஞ்சியம் ஒன்றையும் வெளியிடும் நோக்கில் அமைக்கப் பட்ட களஞ்சிய மையம் இதுவரை வாழ்வியலில் எட்டுத் தொகுதிகளையும் அறிவியலில் நான்கு தொகுதிகளையும் வெளியிட்டுள்ளது.

தமிழ்ப் பெருஞ்சொல்லகராதியொன்றை 10 தொகுதிகளில் வெளியிடுவதை நோக்கமாகக் கொண்ட பெருஞ்சொல்லகராதித் துறை, பெருஞ்சொல் அகராதியின் முதல் தொகுதியை வெளியிட்டுள்ளது. தூய தமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் துறையானது, தூய தமிழ் அகர முதலி, கலைச்சொல் அகர முதலி, கலைச் சொல்லாக்க அகரமுதலி எனும் மூன்று அகரமுதலிகள் தயாரிப்புப் பணியில் ஈடுபட் டுள்ளது.

தமிழ்மொழி, அறிவியல் சொல்வளத்தில் பின்தங்கிவிடாதிருக்க பிற மொழி களிலுள்ள பயனுள்ள நூல்கள், இதழ்கள், கட்டுரைகள் ஆகியவற்றை உடனுக்குடன் தமிழில் மொழிபெயர்க்கும் நோக்கில், கணிப்பொறி மையம் தானியங்கி மொழி பெயர்ப்பு ஆய்வில் ஈடுபட்டுள்ளது. தமிழ், மலையாளம், வங்காளம், இந்தி, கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய ஐந்து மொழிகளில் உடனுக்குடன் வரிவடிவ மாற்றம் செய்யும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கணிபொறி வழி சங்க இலக்கியப் பொருட்களஞ்சியத் தயாரிப்புப் பணி நிறைவுறும் நிலையிலுள்ளது. கணிப்பொறிவழி, சிற்ப சாத்திரச் சொல்லடைவு ஒன்றும் உலகெங் கிலுமுள்ள தமிழ் ஓலைச் சுவடிகளுக்கான ஐந்து தொகுதிகள் கொண்ட பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளன.

துறைகளில் நடைபெறும்/நிறைவுபெற்ற அரிய பணிகள்.—ஓலைச் சுவடிகள் பட்டிய லிடவென இவ்வாண்டு தேசிய ஆவணக் காப்பக நல்கை ரூ. 50,000 பெறப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. தேசிய ஆவணக் காப்பகம் வழங்கிய ரூ. 1.36 இலட்சம் நல்கைவழி மோடி ஆவண தமிழாக்கப்பணி நடைபெற்று வருகிறது. மேலும் தேசிய ஆவணக் காப்பகம் அரிய கையெழுத்துச் சுவடிகள் பராமரிப்பிற்கு ரூ. 0.66 இலட்சம் நல்கை வழங்கியுள்ளது.

கல்வெட்டுத் துறை நிகழ்த்திய கொடுமணல் அகழாய்வில் கிட்டிய தொல் பொருள்கள் வகைப்படுத்தப்பட்டு ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டன. கேரளக் கடற் கரையில் இரு தடவை இருபத்தைந்து நாட்கள் டோக்கியோ பல்கலைக்கழக வர லாற்றுத் துறையுடன் இணைந்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கண்ணனூர், பந்தலாயினி, கொல்லம், விழிஞம், கோழிக்கோடு, கொடுங்களூர் முதலிய பழைய துறைமுகப் பகுதிகளில் 13–16 ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த ஈழை நாட்டு வாணிகத் தொடர்புள்ள பல தொல்பொருள்கள் கிட்டின.

இராமநாதபுரம் சேதுபதி செப்பேடுகள் 100-ம் கல்வெட்டுகள் 34-ம் தொகுக்கப் பெற்று, அத்தொகுப்பு அச்சிடும் நிலையிலுள்ளது. புதுக்கோட்டைத் தொண்டமான், மஞ்சக்குடித் தொண்டைமான், சிவகெங்கை அரச மரபினர் ஆகியோரது செப்பேடுகள் பல தொகுக்கப்பட்டுள்ளன.

'அயல் நாடுகளில் தமிழர்' 'மொரிசியஸ் தமிழும், தமிழரும்' ஆகிய நூல்கள் முடிக்கப்பெற்றுள்ளன. அனைத்திந்தியப் பணி அலுவலர்க்கென தமிழ்ப் பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. 1988 டிசம்பரில் ''தமிழ்ப் பண்பாடு ஓர் அறிமுகம்'' எனும் 30 நாள் பயிற்சி வகுப்பில் மொரிசியசு, சிங்கப்பூர், மலேசியா, பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து எண்மர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

கீதாஞ்சலி மொழி பெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. சித்தமருத்துவ ஓலைச் சுவடித் தொகுப்புப் பணி நிறைவு பெற்றுள்ளது. ''தமிழ்நாட்டு மூலிகைகள் அறிவியல் ஆய்வுகள்'' எனும் நூலாக்கத் திட்டத்தின் கீழ் மூலிகை அகராதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. கீல்வாயு நோய்க்குச் சித்த மருந்துகளின் பயன் அறியும் திட்டம், சித்தமருந்துகளின் கொழுப்புயர்வைக் குறைக்கும் செயல் குறித்த ஆய்வு போன்றவை நடைபெற்று வருகின்றன.

''நுண்கலைகளும் இராகங்களும்'', ''புல்லாங்குழல் ஓர் ஆய்வு'', ''பழந்தமிழில் ஆடலில் இசை'' சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள் ஆகிய ஆய்வு நூல்கள் நிறைவு பெற்றுள்ளன.

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பாடல்கள் தக்காரைக் கொண்டு பாடச் செய்து ஒலிப்பதிவு செய்யப்பெற்றுள்ளன. தமிழிசை ஆவணக் காப்பகம் ஒன்று நிறுவப் பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

சமூகச் சிக்கல்கள் குறித்த பல நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல தயாரிக்கப்பட்டு வருகின்றன. சங்க காலத் தாவரங்கள், உயிரினங்கள், தலத்தருக்கள் குறித்த ஆய்வு நூல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பல்கலைக் கழக மானியக்குழு நிதியுதவி வழி 38,000 அறிவியல் கலைச் சொற்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. ரூ. 8 இலட்சம் சி.எஸ்.ஐ.ஆர். நல்கைவழி ''தென்னிந்தியக் கடல்சார் வரலாறு'' எனும் திட்டம் நடைபெற்று வருகிறது.

சங்க இலக்கியப் பொருள் களஞ்சியத்தின் நான்காம் தொகுதி நிறைவு பெற்றுள்ளது. இதன் முதல் இரண்டு பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில ஆக்கம் நிறைவு பெற்றுள்ளது.

அருங்காட்சியகத்திற்குப் பல்கலைக் கழக நல்கைக் குழு காட்சிப் பொருள்கள் வாங்க ரூ. -50,000மும் காட்சிப்படுத்தற்குரிய சாதனங்கவள் ாங்க ரூபாய் 50,000-மும் வேதியல் கூடக் கருவிகள் வாங்க ரூ. 1 இலட்சமும் அனுமதித்துள்ளது.

உதகையில் மலையின மக்கள் அருங்காட்சியகம் ஒன்று ஏற்படுத்த மைய, மாநில அரசுகள் 50 : 50 விழுக்காடு என்ற அளவில் ஐந்தாண்டுகளுக்கு ரூ. 2 கோடி தர ஒப்புக்கொண்டு முதல் தவணையாக ரூ. 20 இலட்சங்கள் வழங்கியுள்ளன. தஞ்சையில் ரூ. 3 கோடி அளவில் அருங்காட்சியகம் ஒன்று ஏற்படுத்த மைய, மாநில அரசுகளிடமிருந்து நல்கை பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தென்னிந்திய பண்பாட்டு மையம் ஒன்று ஏற்படுத்த மைய, மாநில அரசுகள் ஒப்புக்கொண்டு ஐந்தாண்டுகளுக்கு ரூ. 40 இலட்சங்கள் நல்கை அனுமதித்துள்ள .

வயது வந்தோர் கல்வித்துறை, தஞ்சையைச் சுற்றியுள்ள கிராமங்களில் 57 மையங்களில் 1,709 பேருக்கு வகுப்புகள் நடத்தியது. தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத்துறை மூலம் இதுவரை நூற்றுமுப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியாகி உள்ளன.

உதகை மலையின மக்கள் ஆய்வு மையம், கொல்லி மலையிலும் கல்ராயன் மலையிலும் மலையின மக்கள் சுழல் முகாம்கள் நடத்தியது.

துறைகளின் சார்பில் ஏறக்குறைய 53 கருத்தரங்குகள்/பணிப்பட்டறைகள் பயிற்சி வகுப்புகள்/மாநாடுகள் நடைபெற்றன. துறையினர் ஏறத்தாழ 204 கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றில் பங்கேற்றனர்.

1989 சனவரி 2,3 ஆகிய நாட்களில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவில், மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் கலந்து கொண்டு 15 தமிழ் எழுத்தாளர்க்குத் தமிழன்னை பரிசு ரூ. 5,000-மும் புத்தம் புதுத் துறைகளில் தமிழில் வளம் சேர்க்க வெளிவந்துள்ள ஏழு சிறந்த நூல்களுக்கு ரூ. 5,000மும் வழங்கினார்.

தமிழ்நாடு அரசு ரூ. 95 இலட்சங்கள் பராமரிப்பு நல்கையும் ரூ. 80 இலட்சம் கட்டட நல்கையும், களஞ்சியத் தயாரிப்புக்கென ரூ. 5 இலட்சம் நல்கையும் தமிழ்நாடு அரசுப் பணியில் உள்ள மொழிவழிச் சிறுபான்மையினருக்குத் தமிழ் பயிற்றுவிக்க ரூ. 0.20 இலட்சம் நல்கையும், பல்கலைக் கழக நல்கைக் குழு நல்கை வழி கட்டப்படும் கட்டடங்களுக்கெனத் தனது பங்குத் தொகையாக ரூ. 5.87 இலட்சம் நல்கையும் வழங்கியது. பல்கலைக் கழக நல்கைக் குழுவிடமிருந்து பல்வேறு இனங்களில் ரூ. 30.21 இலட்சமும் மைய அரசின் பல்வேறு நிறுவனங்களிலிருந்து ரூ. 1.97 இலட்சம் நல்கைகள் வரப்பெற்றன.

## தொழில் நுட்பக் கல்வி.

1988-89 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஐந்து ஒப்பளிக்கப்பட்ட பொறியியல் கல்லூரிகளில் 3 புதிய சுயநிதி ஆதார தனியார் பொறியியல் கல்லூரிகள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

(1) டாக்டர் எம். ஜி. ஆர். பொறியியல் கல்லூரி, மதுரவாயல், சென்னை.

(2) சத்யபாமா பொறியியல் கல்லூரி, படப்பை, செங்கல்பட்டு மாவட்டம்.

(3) பெரியார் மணியம்மை தொழில் நுட்பக் கல்லூரி, வல்லம், தஞ்சாவூர்.

(4) கே. எஸ். ரங்கசாமி தொழில் நுட்பக் கல்லூரி, திருச்செங்கோடு, சேலம்.

(5) ஏ. வி. எஸ். பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, நெடுங்கூர், திருச்சி மாவட்டம்.

வரிசை எண். 4, 5-ல் கூறியுள்ள பொறியியல் கல்லூரிகள் சம்பந்தப்பட்ட நிருவாகங்கள் அரசு குறிப்பிட்டிருந்த நிபந்தனைகளை நிறைவேற்றாமையினாலும் மற்றும் இவற்றிற்கான பல்கலைக் கழக அங்கீகாரம் கிடைக்கப் பெறாமையினாலும் துவக்க இயலவில்லை. ஒட்டு மொத்தமாக 1988-89-ல் மேற்கூறிய இரு கல்லூரிகளையும் தவிர்த்து 28 சுயநிதி கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

1988-89 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு இன்னமும் செயல்படாத சுயநிதி ஆதார பொறியியல் கல்லூரிகள் :

(1) நூருல் இஸ்லாம் பொறியியல் கல்லூரி, திருவிதாம்கோடு.

(2) பல்லவா பொறியியல் கல்லூரி, கனவாய்புதூர்.

அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவின் முன் அனுமதி பெற வேண்டி உள்ளதால் இப்பயிலகங்கள் இன்னமும் செயல்படவில்லை.

சுயநிதி ஆதார பாலிடெக்னிக்குகள் :

1987-88 ஆம் ஆண்டு வரை, 74 சுயநிதி பாலிடெக்னிக்குகள் துவக்கப்பட்டன. 1988-89 ஆம் ஆண்டில், அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவின் அங்கீகாரம் பெற்று 1989-90-ல் துவங்கும் வகையில் எம்.ஆர்.எல். பாலிடெக்னிக், மணலியில் துவக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

மாணவர் சேர்க்கை அதிகரிப்பு.—பொறியியல் கல்லூரிகள் இம்மாநிலத்தில் கூடுதலாக துவங்கப்பட்டதன் விளைவாக மாணவர் சேர்ப்பு எண்ணிக்கை 1988-89 ஆம் ஆண்டில் 6,710 ஆக அதிகரித்துள்ளது.

1988-89 ஆம் ஆண்டில் பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்ப்பு எண்ணிக்கையான 22,590-ல் எந்த மாற்றமில்லை.

புதிய கூடுதல் பொறியியல் கல்லூரிகள் துவக்கியுள்ளதால் ஏற்பட்ட கூடுதல் மாணவர் சேர்ப்பு எண்ணிக்கையினால் அதிக அளவில் மாணவர்கள்/மாணவிகள் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பயில முடிகிறது.

புதிய பாடங்கள்.—கீழ்க்கண்ட பயிலகங்களில் கம்ப்யூட்டர் சயின்ஸ் என்ற பாடம் டிகிரி, டிப்ளமோ மற்றும் போஸ்ட் டிப்ளமோ அளவில் துவக்கப்பட்டுள்ளது :—

(1) அரசினர் பொறியியல் கல்லூரி, சேலம்.

(2) அரசினர் பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி.

(3) அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

(4) அரசினர் மகளிர் பாலிடெக்னிக், சென்னை.

(5) அரசினர் மகளிர் பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.

நிதி ஒதுக்கீடு.—1988-89 ஆம் நிதியாண்டில் இத்துறைக்கென மாநில அரசால் ரூ. 495.99 லட்சங்கள் மாநில திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சோதனைக் கூடங்கள் மற்றும் தொழில் நுட்பக் கல்விப் பயிலக துறைகளை நவீனப் படுத்துதல்.— 1988-89 ஆம் ஆண்டு வரையில் நேரடி மத்திய உதவித் திட்டத்தின் (Direct Central Assistants Scheme) கீழ் ரூ. 850 லட்சம் தொழில் நுட்பக் கல்விப் பயிலகங்களில் உள்ள துறைகள் மற்றும் சோதனைக் கூடங்களை நவீனப்படுத்துவதற்காகப் பெறப்பட்டுள்ளது. 7-வது திட்ட காலத்தில் மேற்கூறிய திட்டத்திற்காக மாநில அரசும் ரூ. 250 இலட்சத்தில் ஒதுக்கியுள்ளது.

நேரடி மத்திய உதவி.— இந்திய அரசு சிறப்பு நேரடி மத்திய உதவித் திட்டத்தின் கீழ் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கான உதவியளிக்கிறது. 1987-88 ஆம் ஆண்டு இறுதி வரை நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 734 இலட்சம் வரை மத்திய உதவி பெறப்பட்டுள்ளது.

சமுதாய பாலிடெக்னிக்குகள்.— சில பாலிடெக்னிக்குகள் கிராமப்புற மக்களுக்குப் பயன்படும் வகையில் தொழில் நுட்பத்திறனை கற்றுத்தர சமுதாய பாலிடெக்னிக்குகளாக சமுதாய பாலிடெக்னிக்குகள் என்னும் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் பெயரிடப்பட்டுள்ளன. இவ்வகை சமுதாயப் பாலிடெக்னிக்குகளுக்கு அவைகளின் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்ற மத்திய அரசுநிதி உதவியளிக்கிறது.

ஆசிரியர் திறன் முன்னேற்றம்.— தர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் உயர்கல்வி கற்பிக்கும் ஐ.ஐ.டி. பெங்களூரிலுள்ள ஐ.ஐ.எஸ்.சி. போன்ற பயிலகங்களுக்கு முனைவர் பட்டம் பெற அனுப்பப்படுகின்றனர். டி.டி.டி.ஐ. யில் பயிற்சி பெற பாலிடெக்னிக்குகளிலுள்ள ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். தொடர் கல்வி திட்டத்தின்கீழ், குறுகிய கால கல்வி வகுப்புகள், கருத்தரங்குகள், ஆய்வகங்கள் மாநாடுகள் போன்றவற்றில் பங்குபெற ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

தன்னாட்சி.— பயிலக அளவில் 10 பயிலகங்களுடன் குறிப்பிட்ட சில துறைகள் அளவில் 5 பயிலகங்களுக்கும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் தன்னாட்சி வழங்கப்பட்ட பயிலகங்கள் ஏதும் இல்லை.

பணியமர்த்தும் பிரிவு.—கேரியர் கைடென்சின் ஒரு பகுதியாக அனைத்து அரசு, அரசு மானியம் பெறும் தொழில் நுட்பக் கல்வி பயிலகங்களிலும் பணியமர்த்தும் பிரிவுகள் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற உதவும் வகையில் அமைக்கப் பட்டுள்ளன.

## கன்னிமாரா மாநில மைய. பொது. நூலகம்.

சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் அது தோன்றுவதற்கு காரணமாக இருந்த கன்னிமாரா பிரபுவின் பெயரைக் கொண்டு ஆங்கிலோ இத்தாலிய கட்டிடப் பாணியில் கட்டப்பட்ட கட்டிடத்தில் 5—12—1896 அன்று சென்னை அரசால் ஆரம்பிக்கப்பட்டது.

1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த நூலகம் 1948-ம் ஆண்டின் தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி மாநில மைய நூலகம் ஆகியது. 1955-ம் வருடம் செப்டம்பர் திங்கள் 10-ம் நாளுக்குப் பிறகு இந்தியாவில் வெளியாகும் எல்லா மொழி பிரசுரங்களையும் இலவசமாக பெறும் நான்கு தேசிய சேமிப்பு நூலகங்களில் ஒன்றாக ஆகியது.

71,000 சதுர அடி இடவசதியும் 29,000 அடி கொள்ளளவுள்ள நூல் அடுக்கு கொண்ட இந் நூலகத்தில் ஒரே சமயத்தில் 350 வாசகர்கள் அமர்ந்து படிக்கலாம்.

சிறப்பு பிரிவு :— இந் நூலகம் 1956-ம் ஆண்டு யுனெஸ்கோ வெளியீடுகள் பெறும் மையமாகவும் மற்றும் ஐக்கியநாடுகள் அமைப்பில் வெளியீடுகளைப் பெறும் அமைப்பாகவும் விளங்குகிறது.

பணி.— கன்னிமாரா பொது. .நூலகம் கீழ்க்கண்ட பணிப் பிரிவுகளை தன்னகத்தே கொண்டு சிறந்த பணி ஆற்றி வருகிறது.—

(1) குறிப்புதவி பணி.

(2) பாட நூல் பணி

(3) வீட்டு நூல் விநியோகிக்கும் பணி.

(4) நூல்கள் இரவல் வழங்கும் பணி.

(5) நூற்றொகைப் பணி.

(6) பத்திரிகைப் பணி.

பிறப் பணிகள்.—மேற் கூறிய பணிகளை தவிர்த்து மேலும் சில பணிகளை இந் நூலகம் மேற்கொண்டுள்ளது:—

1. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில நூல்களில் காலாண்டு பட்டியலை தயார் செய்து தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்ட நூலகங்களுக்கும் இந்தியாவிலுள்ள பெரிய நூலகங்களின் குறிப்பிற்காக அனுப்பி வருகிறது.

2. ஒரு குறிப்பிட்ட தலைப்பின் சம்பந்தப்பட்ட புது புத்தகங்கள் வாசகர்களுக்கு தெரிவிக்கும் வரையிலும் அண்மையில் நூலகத்தில் சேர்க்கப்பட்ட நூல்களை அவ்வப் பொழுது வாசகர்களின் பார்வைக்கு காட்சியாக வைக்கப்படுகிறது.

3. சென்னைக்கு அப்பாற்பட்ட இடத்தில் வசிப்பவர்கள் இந் நூலகத்தில் உள்ள நூல்களை இரவலாக எடுத்துப் படிக்க வேண்டுமெனில் நூலக ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் மாவட்ட மைய நூலகத்தின் வாயிலாக எடுத்து படிக்கவும் அவர்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

4. மூன்று மாதத்திற்கு ஒரு முறை கல்வி கலாச்சாரம் பண்பாடு சம்பந்தப்பட்ட படக் காட்சிகள் வாசகர்களுக்கு இலவசமாக காட்டப்படுகிறது.

1—4—1988 முதல் 31—3—1989 வரை நூல்கள் இருப்பு வாசகர் இருப்பு வாசகர்கள் எண்ணிக்கை உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் நூல்களின் பயன் ஆகிய விவரங்கள் வருமாறு :—

| நூல்கள். | வாசகர்கள். | உறுப்பினர் கள். | நூல்கள் பயன்கள். | | |
|---|---|---|---|---|---|
| | | | உறுப்பினர். | குறிப்புதவியவை. | மொத்தம். |
| 4,38,216 | 7,15,901 | 38,824 | 2,02,512 | 22,12,422 | 24,14,934 |

வரப்பெற்றவை.

நூல்களும் வெளியீடுகளும்.

| (1) | 1988—89 (2) | 1987—88 (3) |
|---|---|---|
| **நூல்கள் விநியோகச் சட்டத்தின் கீழ் :—** | | |
| (அ) நூல்கள் | 7,579 | 7,503 |
| (ஆ) பருவ வெளியீடுகள் | 3,950 | 3,770 |
| (இ) செய்தித்தாள்கள் | 227 | 340 |
| (அ) நூல்கள் | 475 | 1,712 |
| (ஆ) பருவ வெளியீடுகள் (அயல் நாட்டினது) | 65 | 69 |
| **அன்பளிப்பு :** | | |
| (அ) நூல்கள் | 2,239 | 252 |
| (ஆ) பருவ வெளியீடுகள் | 120 | |
| **உறுப்பினர்கள் :** | | |
| ஆண்டு துவக்கத்தில் | 36,275 | 32,608 |
| சேர்த்தல் .. .. .. | 2,814 | 3,939 |
| நீங்கல் .. | 265 | 272 |
| ஆண்டு முடிவில் உறுப்பினர் | 38,824 | 36,275 |

| | 1988—89 | 1987—88 |
|---|---|---|
| வரவு | 1,24,482 | 2,65,285 |
| செலவு | 24,61,548 | 23,49,753 |

சிறப்பு வருகை புரிந்தவர்கள் :—

(1) மேதகு ஆளுநர் பி.சி. அலெக்சாண்டர் .. 13—2—1989

(2) டாக்டர் பி. சி. சீனிவாசன், ஆராய்ச்சியாளர், ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா. 9—5—1989

(3) நூலக பரிந்துரை கமிட்டி (கேரள சட்டசபை கமிட்டி ) .. 14—2—1989

(4) டேவிட், ஜே. வார்ட்லப்ட், நூலக இயக்குநர், லூதர்ன் தியா லிஜிக்கல் செமினரி பிடெல்பியா அமெரிக்க ஐக்கியநாடு.

(5) திரு. ஜே. ஜீனா, நூலகர், மத்திய குறிப்புதவித் நூலகம், கல்கத்தா 27.

## தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம்.

சென்னை கோட்டூரில் தந்தை பெரியாரின் நினைவாக ''பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம்'' என்ற நவீன அறிவியல் மையத்தை நிறுவ அரசு 20—2—1984 அன்று ஒப்புதல் அளித்துள்ளது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தினை நிறுவ அரசு ரூ. 385 லட்சம் தொகைக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. பின்னர் முதல் கட்டப்பணிக்கு மட்டும் ரூ. 401.25 இலட்சம் தொகைக்கு திருத்திய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முன்னோடி தொழில் அதிபர்களில் ஒருவராகிய திரு. சி. கே. பிர்லாவினால் நன்கொடையாக கோளரங்கம் ஒன்றினை ரூ. 159 லட்சம் செலவில் சென்னையில் அமைக்கவும், அக்கோளரங்கத்திற்கு திரு. சி. கே. பிர்லா கோளரங்கம் என பெயரிடவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இளைய தலைமுறையினரிடத்தில் அறிவியல் மனப்பான்மையும், அறிவியல் சிந்தனையையும் வளர்க்கும் நோக்கம் கொண்டதாகும். புதியனபற்றி அறியும் ஆற்றலையும், ஆர்வத்தினையும், கேள்வி கேட்கும் முறைகளையும் சமூக கலாச்சார தொழில் நுட்ப அறிவியல் இயற்கை சூழ்நிலைகளை திறனாய்வு செய்து பகுத்து ஆய்தலையும் ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டதாகும். சிக்கல்களை இனங்கண்டு கொண்டு அதற்கு தக்க தீர்வினையும் நோக்கி பணியாற்றுவதையும் விஞ்ஞான தொழில்நுட்பம் பற்றிய செய்திகளைத் தொகுத்துப் பரப்புவதையும் அன்னாரிடையே ஊக்குவிப்பதும் ஆகும்.

முதற்கட்டமாக, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் கீழ்க் குறிப்பிட்ட அரங்குகள் இடம் பெறும் :—

(1) போக்குவரத்து.

(2) இயல்பு அறிவியல்.

(3) மின்னணுவியல் மற்றும் தொடர்பியல்.

(4) உலோகவியல் மற்றும் குழந்தைகள் அரங்கு.

(5) கணிப்பொறி இயல்.

(6) விண்வெளி அறிவியல்.

(7) பங்கேற்கும் காட்சிப்பொருள்கள்.

இவைகள் தவிர பெரியார் அரங்கு ஒன்று மையத்தின் முகப்பில் அமையப்பெறும் இவ்வரங்கத்தில் தந்தை பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் கொண்டிருந்த எண்ணங்கள் மற்றும் கருத்துக்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும.

இந்த வருடத்தில் (1988—89) நிறைவேற்றப்பட்ட புதிய திட்டங்கள்.—236 இருக்கைகள் கொண்ட கோளரங்கம் ஒன்று 11—05—1988 அன்று மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதன் முதல் நிகழ்ச்சியாக ''சூரிய குடும்பத்தைப் பற்றிய ஓர் ஆய்வு'' என்ற தலைப்பில் காட்டப்பட்டது.

இதன் இரண்டாம் நிகழ்ச்சியான ''சுட்டுமீறிய பேரண்டம்'' 7—11—1988-ல் துவக்கப்பட்டது. மூன்றாம் நிகழ்ச்சியான ''இப்பேரண்டத்தில் நாம் தனித்தா இருக்கிறோம்'' 13—3—1989 அன்று துவக்கப்பட்டது. இக்கோளரங்க நிகழ்ச்சிகளை 2.5 லட்சம் மக்களுக்குமேல் பார்த்தனர்.

சிறப்புத் தகவல்கள்.—வரும் 1989-ம் வருட முடிவிற்குள் 8 அரங்குகளுடன் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் திறப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. நடமாடும் அறிவியல் ஊர்தி ஒன்று 24 பங்கேற்கும் காட்சிப்பொருட்களுடன் அருகிலுள்ள கிராமங்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவினை பரப்புவதற்காக விரைவிலேயே எடுத்துச் செல்லப்படவுள்ளது.

முடிவுரை .—பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் 2ம் கட்டப் பணிகள் நிதிநிலைமைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும். மேலும் நடுத்தர அளவிலான அறிவியல் மையங்கள் நிறுவுவதற்கும் வட்டார அறிவியல் மையங்களை திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் துவக்குவதற்கும் மேலும் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் படிப்படியாக விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பக் குழு.

மாநில அரசு கொண்டு வந்த தீர்மானம் ஒன்றின் மூலம் 31—2—1984ஆம் நாளன்று தமிழ்நாடு மாநில அறிவியல்—தொழில் நுட்ப மன்றம் நிறுவப்பட்டது. டாக்டர் மால்கம். எஸ். ஆதிசேஷையா இதன் தலைவராகவும், டாக்டர் வி. ஆனந்தராவ் உறுப்பினர்—செயலாளராகவும் முதலமைச்சரால் நியமிக்கப்பட்டனர். பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், மாநில-மத்திய அரசுத்துறைகள், பொதுத்துறை பொது நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 29 உறுப்பினர்கள் இம்மன்றத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

மாநில மன்றத்தின் நடவடிக்கைகள் பின் வருமாறு அமைய வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது :—

ஆராய்ச்சி—மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தல், ஆதரவளித்தல், கண்காணித்தல்.

அறிவியல்—தொழில் நுட்பத்தை மக்களிடையே பரப்புவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தல்.

தொழில் முனைவர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவு நல்குதல்.

தகவல்களைப் பரவச் செய்தல்.

கண்டறியப்பெற்ற தொழில் நுட்ப அறிவை அல்லது கருத்துக்களை உருவாக்குவோர் மற்றும் பயன்படுத்துவோர் இடையே குழு விவாதங்கள் நடைபெற மாநில அரசுத் துறைகளுடன் கலந்தாலோசித்து ஏற்பாடு செய்தல்;

ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக இளம் அறிவியலாளருக்கு ஊக்க உதவித் தொகைகள் வழங்குதல்.

ஆய்வரங்குகள்/கருத்தரங்குகள்/பணிப்பட்டறைகள்/மாநாடுகள் நடத்த நிதி உதவி வழங்குதல்.

ஆராய்ச்சி வளர்ச்சி நடவடிக்கைகள்: இம்மன்றம் தெரிந்தெடுத்துள்ள ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மாநில அரசின் வளர்ச்சித்துறைகளுடன் கலந்தாலோசித்தும் வல்லுநர்களின் உதவியுடனும் ஊக்கம் அளிப்பது இத்திட்டத்தின் முனைப்பு நோக்கமாகும்.

இந்த ஆண்டில் பின்வரும் ஆராய்ச்சி திட்டங்கள் தொடங்கப்பட்டன :—

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | தலைமை ஆய்வாளர் நிறுவனம். | கால அளவு ஆண்டுகள். | மொத்தத் திட்ட முதலீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (இலட்சம்.) |
| 1 | புன்செய் வேளாண்மை விளைச்சலைப் பெருக்க ஒருங்கிணைந்த மண் ஈரத்தன்மை—ஊட்டச்சத்து (நிருவாகம் குறித்த ஆய்வு). | தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறையின் கூடுதல் இயக்குநர் (ஆராய்ச்சி—வளர்ச்சி). | 3 | 5.75 |
| 2 | கால்நடைகளுக்குக் கிடைக்கின்ற உயர் அளவு நார்ப்பொருள் செறிந்த தீவனப் பொருட்களையும் சத்துச் செறிவுடையதாகச் செய்வதற்கான அறுவடைக்குப் பின்னர் மேற்கொள்ளும் தொழில் நுட்பம். | டாக்டர் ஆர். கதிர்வேல் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை. | | 13.00 |
| 3 | என்சைம்களால் தூண்டப்பெறும் நோய் எதிர்ப்புப் பொருளின் அளவைத் தீர்மானிக்கும் முறையின் அடிப்படையில் உள்நாட்டுத் தாவர வகை நச்சுப்பொருள்களால் ஏற்படும் நோய்க்குறியைக் கண்டறிதல். | டாக்டர் சி. தாமோதரன் தடய அறிவியல் துறை, சென்னை. | 3 | 2.50 |

இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப இயக்குநர் கேட்டுக் கொண்டதன்பேரில் மேற்கொள்ளும் சிறப்புத் திட்டங்கள் :

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | புதுப்பிக்கக்கூடிய ஆதாரங்களை நிருவகிப்பதற்கான செயல் திட்டம். | இயக்குநர் வளர்ச்சிப் பணி ஆய்வு நிறுவனம், சென்னை. | 1 | 0.72 |

அத்தியாயம் 9.

## சுற்றுப்புற சூழ்நிலைக் கட்டுப்பாடு மற்றும் வனத் துறை

### சின்கோனா.

சின்கோனாத்துறை, தமிழ்நாடு அரசின் ஒரு முன்னோடி நிறுவனமாகும். சின் கோனா பயிரிடுதலும், கொய்னாப் பொருட்கள் தயாரித்தலும் இத்துறையின் தலையாய பணிகள் ஆகும். இத்துறை வணிக நோக்குடன், மருந்து மற்றும் நறுமண செடிகளைப் பயிரிட்டு, உயர்ரக மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் தயாரித்து வருகிறது. இதனால் , இத்துறையின் வருவாய் பெருகுவதுடன், நீலகிரி, கோவை மற்றும் திண்டுக் கல்—காயிதே மில்லத் மாவட்டங்களிலுள்ள மலைவாழ் கிராமப்புற மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை அளித்துள்ளது.

ஜெரேனியம், சிம்பபோகன் விண்டரியனாஸ், யூக்லிப்டஸ் சிட்ரியோடோரா, யூகலிப்டஸ் குளோபுலஸ், சின்னமம் சைலானிக்கம் மற்றும் டயஸ்கோரியா போன்றவை நீலகிரி, கோவை, திண்டுக்கல்—காயிதேமில்லத் மாவட்டங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களில் பயிரிடப்படும் குறிப்பிடத்தக்க செடிவகைகளாகும்.

2. இத்துறையின் பயிரிடப்பட்ட பரப்புகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | ஆனைமலை. (எக்டர்.) | நீலகிரி. (எக்டர்) | கொடைக் கானல். (எக்டர்) | மொத்தம். (எக்டர்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. சின்கோனா | 1,463.96 | 504.12 | | 1,968.08 |
| 2. மருந்து வாசனைச் செடிகள். | 412.40 | 841.14 | 191.00 | 1,444.54 |
| 3. விறகு மரங்கள் | 468.72 | 155.38 | 34.00 | 658.10 |

1988—89-ல் கொய்னாப் பொருட்கள் உள்நாட்டு (ரூ. 12,70,819.53) மற்றும் வெளிநாட்டு (ரூ. 4,40,000.00) விற்பனை மூலம் இத்துறைக்கு கிடைத்த மொத்த வருவாய் ரூ. 17,10,819.53 ஆகும்.

இவ்வாண்டில் மருந்து மற்றும் வாசனை எண்ணெய்களின் விற்பனை மூலம் ரூ. 60,26,325.15 கிடைக்கப்பெற்றது.

இது தவிர இத்துறையின் பல்வகைப் பொருட்களான சின்னமம் சைலானிக்கம் இலைகள் மற்றும் பட்டை, குறுமிளகு, பைரத்ரம் பூக்கள், ஏலக்காய், டயஸ்ஜெனின் கஃபீன் ஆகியவற்றின் விற்பனை மூலமாக இவ்வாண்டில் கிட்டிய வருவாய் ரூ. 3,74,907.00 ஆகும்.

தமிழ்நாடு அரசு இலவச பற்பொடி வழங்கும் திட்டத்தின் மூலம் பல்வேறு மாவட்டங்களில் கிராமப்புற குழந்தைகளுக்கு பல்பொடி வழங்கியதில் ரூ. 14,29,050.00 வருவாய் கிடைத்துள்ளது.

1988—89 ஆம் ஆண்டில் இத்துறையில் சின்கோனா மற்றும் மருந்து மற்றும் வாசனைச் செடிகள் மற்றும் இதர பயிர்களின் நடுகை கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப் பட்டன. கொய்னாப் பொருட்களின் விலை வீழ்ச்சியால் சில ஆண்டுகள் கொய்னா செடிகள் பயிரிடல் நிறுத்தி வைக்கப்பட்டு, இவ்வாண்டு மீண்டும் பயிரிடப்பட்டது.

| | எக்டேர். |
|---|---|
| (1) ஜெரேனியம் | 21.00 |
| (2) சிம்பபோகன் விண்டரியனாஸ் | 9.00 |
| (3) யூகலிப்டஸ் குளோபுலஸ் | 0.30 |
| (4) யூகலிப்டஸ் சிட்ரியோடோரா | 11.10 |
| (5) டயஸ்கோரியா | 5.39 |
| (6) ரோஸ்மேரி | 2.75 |
| (7) சின்கோனா | 102.00 |

சின்கோனா அறுவடை :—1988—89 ஆம் ஆண்டில் 2,34,096 கிலோ சின்கோனாப் பட்டை (உலர்ந்தது) அறுவடை செய்யப்பட்டது.

மருந்து மற்றும் வாசனைத் தைலங்கள் (சுத்திகரிக்கப்படாதவை) கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறு உற்பத்தி செய்யப்பட்டன:—

| | கிலோ. |
|---|---|
| (1) யூகலிப்டஸ் சிட்ரியோடோரா ஆயில் | 4,922.600 |
| (2) யூகலிப்டஸ் குளோபுலஸ் ஆயில் | 2,803.850 |
| (3) ஜாவா சிட்ரோநல்லா ஆயில் | 3,907.675 |
| (4) ஜெரேனியம் ஆயில் | 2,108.335 |
| (5) சின்னமம் சைலானிக்கம் ஆயில் | 1.200 |
| (6) கற்பூர துளசி இலைகள் | 1,936.000 |
| (7) ஓசிமம் கிராட்டிசிமம் ஆயில் | 59.610 |
| (8) ரோஸ்மேரி ஆயில் | 64.250 |
| (9) பைரத்ரம் பூக்கள் | 120.000 |
| (10) குறுமிளகு | 32.500 |
| (11) பச்சோலி இலைகள் | 13.000 |
| (12) டயஸ்கோரியா கிழங்கு | 19,050 |
| (13) யூகலிப்டஸ் சுமிதி ஆயில் | 4.200 |
| (14) லெமன் கிராஸ் ஆயில் | 27.500 |
| (15) ஏலக்காய் | 1,288.850 |
| (16) யூகலிப்டஸ் ரேடியாட்டா | 12.50 |

ஆனைமலை அரசு கொய்னாத் தொழிற்சாலையில் கொய்னாப் பொருட்கள் உற்பத்தி செய்தலும், நடுவட்டம் மருந்து மற்றும் வாசனை எண்ணெய் தொழிற்சாலையில் நறுமணத் தைலங்கள் சுத்தப்படுத்துதல் மற்றும் தரம் பிரித்தல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதைத்தவிர இத்துறை பல்பொடி வழங்கும் திட்டத்தின்கீழ் பல்பொடி தயாரிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

30 கிராம் கொண்ட 36,67,500 பல்பொடி பாக்கெட்டுகள் தயாரிக்கப்பட்டு தமிழகத்தின் எட்டு மாவட்டங்களிலுள்ள கிராமப்புற குழந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டது நடுவட்டம் மருந்து மற்றும் வாசனை தொழிற்சாலையில் இவ்வாண்டில் மொத்தம் 2,015 கி. கஃபீன் உற்பத்தி செய்யப்பட்டது.

விற்பனை.—1988—89-ஆம் ஆண்டில் துறையின் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலமும் பலவகை வரவுகளும் சேர்ந்து மொத்தம் ரூ. 124.38 இலட்சங்களாகும்.

அரசு கொய்னாத் தொழிற்சாலை, சின்கோனா.—சில ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்ட கொய்னாப் பொருட்களின் உற்பத்தி மீண்டும் 27—2—1988-ல் தொடங்கப் பட்டு இவ்வாண்டில் மொத்தம் 1,99,840 கிலோ சின்கோனாப்பட்டை பதனம் செய்யப் பட்டு, கீழ்க்கண்டவாறு கொய்னாப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன :—

| | கிலோ. |
|---|---|
| (1) கொய்னா சல்பேட் | 2,816 |
| (2) சின்கோனா பெப்ரிபியூஜ் | 4,000 |
| (3) சின்கொனிடின் | 230 |
| (4) கொய்னா ஹைடிரேகுளோரைடு | 440.885 |
| (5) சின்கோனின் | 0.500 |
| (6) குனிடின் சல்பேட் | 20.000 |

தமிழ்நாடு ஸ்டிராய்டு தொழிற்சாலை—சின்கோனா.—இவ்வாண்டில் 19,050 கிலோ டயஸ்கோரியா கிழங்குகளிலிருந்து 100.000 கிலோ டயாஸ்ஜெனின் மருந்து கிடைக்கப் பெற்றது.

மருந்து மற்றும் நறுமண தொழிற்சாலை, நடுவட்டம்.—1988—89-ஆம் ஆண்டில் கீழ் கண்ட மருந்து மற்றும் வாசனை எண்ணெய்கள் சுத்திகரிக்கப்பட்டு, தரம் பிரிக்கப் பட்டு, சிப்பம் செய்யப்பட்டன :—

| | |
|---|---|
| | கிலோ. |
| (1) யூகலிப்டஸ் ஆயில் ஐ.பி. | 4,246.500 |
| (2) ஜெரேனியம் | 1,960.805 |
| (3) யூகலிப்டஸ் சிட்ரியோடோரா | 3,862.725 |
| (4) ஜாவா சிட்ரா நல்லா | 1,762.200 |
| (5) கற்பூர எண்ணெய் | 140.155 |
| | எண்கள். |
| (6) கற்பூர வில்லைகள் | 2,63,461 |
| | கிலோ. |
| (7) பச்சொலி எண்ணெய் | 2.850 |
| (8) ரோஸ்மேரி எண்ணெய் | 54.300 |
| (9) ஓசிமம் கிராட்டிசிமம் | 58.850 |
| | லிட்டர். |
| (10) சின்பிரஷ் | 1,50,200 |
| (11) சின்ஸ்பிரே | 251 |
| | கிலோ. |
| (12) சிநோமாஸ் | 17.000 |
| (13) சின்னமம் சைலானிக்கம் பட்டை | 80.000 |
| (14) சின்னமம் சைலானிக்கம் தூள் | 10.000 |
| (15) சின்னமம் சைலானிக்கம் இலைகள் | 6.625 |
| (16) லெமன் கிராஸ் ஆயில் | 34.400 |
| (17) பிட்டர் ஆரஞ்சு ஆயில் | 3.025 |
| (18) சின்னமம் சைலானிக்கம் ஆயில் | 2.775 |

திட்டப் பணிகள்.—ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் அரசு அனுமதித்துள்ள திட் டப் பணிகள் அனைத்தும் முனைப்புடன் செவ்வனே நடைபெற்றன. திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் கொடைக்கானல் பகுதியில், மேற்கு மலைத் தொடர் அபி விருத்தித் திட்டத்தின்கீழ் இரு இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதலும், ஆனைமலைப் பகுதியில் மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் டயஸ்கோரியா பயிரிடுதலும், நீலகிரி மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரோநல்லா பயிரிடுதலும் மேற்கொள்ளப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப் பட்ட திட்டங்களால் இத்துறை பின்தங்கிய வகுப்பினருக்கும் மலைவாழ் மக்களுக் கும் வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

## வனங்கள்

தமிழ்நாட்டில் மொத்தப் பரப்பு 130.057 சதுர கிலோ மீட்டராகும். இதில் காடுகளின் மொத்த பரப்பு 22,552 சதுர கிலோ மீட்டராகும். இது மொத்தப் பரப்பில் 17.34 விழுக்காடு ஆகும். காடுகளின் பரப்பு மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்காக்குவதே தேசிய வனக் கொள்கை. வனத் துறையால் நடத்தப்பட்ட ஆய்வுப்படி மொத்த வவப்பரப்பில் 30 விழுக்காடு அதாவது சுமார் 6,00,000 எக்டேர் வளர்ச்சிக் குன்றியதாக உள்ளது. துரித நடவடிக்கை மேற்கொண்டு வளர்ச்சிக் குன்றிய காடுகள் மற்றும் வன வளத்தைப் பாதுகாக்க நவீன முறையில் மரம் நடுதல் மற்றும் நிர்வகித்தல் போன்ற அம்சங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

வனத்துறையின் முக்கியமான பணிகள் கீழ்வருமாறு :—

(1) காப்பு வனம் மற்றும் வன விலங்குகள் வாழும் பரப்புகளிலுள்ள இயற்கை சூழல் அமைப்பினைப் பாதுகாத்தல்.

(2) தமிழ்நாடு வன பாதுகாப்புச் சட்டம், வன விலங்குகள் (காப்பாற்றுதல்) சட்டம், வனப்பராமரிப்பு சட்டம் ஆகியவை செயலில் கொண்டு வருதல்.

(3) காடுகளின் வனப்பரப்பினை முடிந்த அளவு பெருக்குதல்.

(4) முக்கியமான ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் குறிப்பாக வனப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செய்தல்.

(5) தமிழகத்தில் வன ஆதாரங்களை நம்பி துவக்கப்பட்டுள்ள தொழில்களின் வளர்ச்சிக்கும் மக்களின் தேவைக்கும் தேவையான மூலப் பொருட்களை வழங்குதல்.

(6) வனப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு வாழ்க்கை வசதிகளை அமைத்துத் தரும் பணியினை செவ்வனே செயல்படுத்துதல்.

**பணி முன்னேற்றம்-இலக்கு-சாதனை-செயல் மற்றும் நிதி.**

| திட்டம் | செயல்இலக்கு | சாதனை | இலக்கு நிதி (ரூபாய் இலட்சத்தில்) | சாதனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. மண்வளப் பாதுகாப்பு திட்டம் | 2,326 எக்டேர்<br>300 கி.மீ.<br>2.00 நாற்று வழங்குதல் (இலட்சம்) | 2,400 எக்டேர்<br>180 கி.மீ.<br>2.00 நாற்று வழங்குதல் (இலட்சம்) | 120.66 | 127.82 |
| 2. மாநில திட்டம் | 2,9408 எக்டேர்<br>1,175 கி.மீ.<br>6.90 நாற்று வழங்குதல் இலட்சம்<br>956 கி.மீ.<br>1300 மெலி தாக்குதல். | 2 7604 எக்டேர்<br>1,101 கி.மீ.<br>5.16 நாற்று வழங்குதல் இலட்சம்<br>1,132 கி.மீ.<br>1434 | 2250.42 | 2206.74 |
| 3. தன்னாட்சி பெற்ற நிறுவன உதவி திட்டம் | | | 3.18 | 2.97 |
| 4. மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் | | | 0.01 | 17.97 |
| 5. மத்திய மாநில அரசுகள் சமமாகப் பங்கேற்கும் திட்டம் | 6,000 எக்டேர்<br>15 கி.மீ. | 4,059 எக்டேர்<br>117 கி.மீ. | 236.72 | 308.15 |
| 6. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1070 எக்டேர் | 768 எக்டேர் | 220.00 | 158.00 |
| 7. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் | 540 எக்டேர் | 555 எக்டேர் | 160.70 | 189.53 |

சுருக்கம்.

| | வேலை. | | நிதி. | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (நிதி இலட்சத்தில்) | |
| 1. மரம் வளர்த்தல் | 39,344 எக். | 35,476 எக். | 2,981.89 | 3,011.26 |
| 2. சாலைத் தோட்டம் | 974 கி.மீ. | 1,294 கி.மீ. | | |
| 3. தீவிர பண்படுத்தும் பணிகள் (எக்.) | 1,975 எக். | 1,281 எக். | | |
| 4. அடர்த்தி குறைத்தல் (எக்டேரில்) | 1,300 எக். | 1434 எக். | | |
| 5. செடி விநியோகம் செய்தல் (இலட்சத்தில்) | 8.90 லட்சம் | 7.16 லட்சம் | | |

4. நடப்பு ஆண்டில் புதிய திட்டங்களைச் செயல்படுத்துதல்.—இந்த வருடத்தில் இரண்டு புதிய திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு.:—

1. ஆகாய விதைப்பு மூலம் உயிரியல் மேம்படுத்துதல் மற்றும் சூழலியலை முன்னேற்றும் திட்டம்.—நோக்கம்—ஆகாயத்திலிருந்து விமானம் மூலம் விதைத் தூவி தரங்குறைந்த வனங்களை செப்பனிடுதல் மற்றும் தரிசு நிலங்களின் சூழலியலை சமப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள். 1988–89 ஆம் ஆண்டு 1,000 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 6.51 இலட்சம் செலவில் ஆகாய விமானம் மூலம் விதைக்கப்பட்டது.

2. ஐம்பது லட்சம் செடி நாற்றுகளை இலவசமாக அரசுத் துறைக்கும் மற்றும் தன்னியல்வான நிறுவனங்களுக்கும் வழங்குதல் திட்டம்.—

நோக்கம்.—தோட்டங்களை எழுப்ப அரசுத் துறைகள் மற்றும் தன்னிறைவான நிறுவனங்கள் மூலம் செயல்படுதல். இத்திட்டத்திற்கு ரூபாய் 0.89 லட்சம் செலவிடப்பட்டது.

3. நிதி சம்பந்தமான முதலீடு, வரவு–செலவு விவரங்கள் மற்றும் பொருளாதார நிலைத்திருத்தல் நிலை.—1988–89 ஆம் ஆண்டில் வருவாய் மற்றும் செலவு முறையே 33.27 மற்றும் 41.41 கோடி ரூபாய் ஆகும்.

சிறப்பு விவரங்கள் (இருப்பின்).—மலை சாதியினரின் மேம்பாட்டிற்கு ரூ. 132.58 இலட்சம் செலவிடப்பட்டது. இது தமிழ்நாடு அரசு மலை சாதியினத்திற்குக் காட்டும் அக்கறையைக் குறிக்கிறது. மலை சாதியின் முன்னேற்றத்திற்காக வனத்துறை 19 பள்ளிக்கூடங்களை நடத்தி வருகின்றது.

மரம் வளர்ப்பு

மரம் நடு விழா என்பது தற்போது உலக வன நாள் விழாவாக 1989-ஆம் ஆண்டு மார்ச் 21-ந்தேதி/ 21—3—1989 முதல் 31—3—1989 வரை மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டது. மேற் குறித்த நாளில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவின்போது பொது மக்களுக்கும் பல்வகை நிறுவனங்களுக்கும் 1,097.72 இலட்ச மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மரம் வளர்த்தலின் பயன்கள் குறித்து அகில இந்திய வானொலி மற்றும் தொலைக் காட்சியிலும் சொற்பொழிவு, போட்டி, வினாவிடை நிகழ்ச்சி முதலியவை நடத்தப்பட்டன. மேற்குறித்த வேலைகளுக்கு ரூ. 10,000 ஒப்புதலளிக்கப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது.

அத்தியாயம் 10.

நிதித் துறை.

## கூட்டுறவுத் தணிக்கை

முன்னுரை.—இக்கூட்டுறவுத் தணிக்கைத் துறை தனியாக ஏற்படுவதற்கு முன் கூட்டுறவுத் தணிக்கைப் பணி பதிவாளர் கட்டுப்பாட்டில், தலைமைத் தணிக்கை அலுவலரின் கீழ், ஒரு தணிக்கைப் பிரிவாக செயல்பட்டு வந்தது. கூட்டுறவுத் தணிக்கை தனித்தன்மை பெறும் பொருட்டு தணிக்கைப் பிரிவினை கூட்டுறவுத் துறையிலிருந்து பிரித்து கூட்டுறவு, சர்க்கரை மற்றும் நூற்பாலைகள் உள்பட மாநிலத்தில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு கூட்டுறவுத் தணிக்கைத் துறை 1978-ல் ஏற்படுத்தப்பட்டது. இத்துறை அரசு நிதித்துறையின் நிர்வாக ஆளுகையில் உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை முன்னேற்றம்.—1987–88 ஆம் ஆண்டிற்கு தணிக்கை செய்யப்பட வேண்டிய 20,909 சங்கங்களில் 31—3—1989 வரை 18,703 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு, 2,206 சங்கங்களின் தணிக்கை நிலுவையாக உள்ளது. மேற்படி நிலுவையில் 353 சங்கங்களின் தணிக்கைப் புத்தகங்கள் தணிக்கைக்குக் கிடைக்காத இதர பல காரணங்களால் நிலுவையில் உள்ளது.

துறை வருவாய்.—கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை செய்யப்பட்டதற்கு அவற்றிடமிருந்து அரசால் நிர்ணயிக்கப்பட்ட தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி 127-ன் கீழ்க்கண்டவாறு கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. எனினும், சிலவகை கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டண விதிப்பிலிருந்து அரசால் விலக்களிக்கப்பட்டு வருகிறது.

### துறைவருவாய் வசூல்.

| வருடம் | தணிக்கைக் கட்டணம். | அடிப்படைவிதிக் கட்டணம். | மொத்தம். |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1986—87 | 12.07 | 236.12 | 248.19 |
| 1987—88 | 35.65 | 249.35 | 285.00 |
| 1988—89 | 65.64 | 243.73 | 309.37 |

## கருவூலங்கள் மற்றும் கணக்குகள்

இருக்கும் அலுவலகங்களின் நிலையை உயர்த்திடல் :

(1) சார் சம்பள கணக்கு அலுவலகம், சென்னை-9, முழு அளவிலான சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) சென்னை-9. ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(2) 19 மாவட்ட தலைமைச் சார் கருவூலங்கள் தெரிவு நிலைச் சார் கருவூலங்களாக உயர்த்தப்பட்டுள்ளன.

(3) ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை, உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், சென்னை ஆகிய பதவிகள் (பிரிவு 3 அலுவலர்) கருவூல அலுவலர் (அதாவது பிரிவு-2 அலுவலர்கள்) பதவித்தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

ஓய்வூதியம்.—தமிழ்நாட்டில் மத்திய, மாநில இராணுவ மற்றும் இதர ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 2,89,777 ஆகும். ரூ. 400 வரை ஓய்வூதிம் பெறும் அனைத்து தமிழ்நாடு ஓய்வூதியர்கள் 1—4—1988 முதல் பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் வழங்குவதற்காக ஓய்வூதிய முன்மாதிரித் திட்டத்தின் (Pension pilot scheme) கீழ் கொண்டு வரப்பெற்றுள்ளனர். 1—4—1988 முதல் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 245 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1—1—1986 முதல் இராணுவ ஓய்வூதியம் ரூ. 375–க்கு உயர்த்தப்பட்டு ஓய்வூதியத் தொகைகளின் வித்தியாசம் கணக்கிடப்பட்டு இராணுவ ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பணியிலிருந்து ஓய்வுபெற்ற நாளிலிருந்து பதினைந்து ஆண்டுகள் முடியப் பெற்றதும் ஓய்வூதியத்தின் தொகுப்புத் தொகை (Commuted amount of pension) திரும்ப அளிக்கப்படுகிறது. [Restored.]

அரசுக் கடன் ஈட்டுச் ஆவணங்கள் :—அரசுக் கடன் அலுவலகம் இந்திய சேமவங்கி (Public dept. office R.B.I.) யிடமிருந்து பெறப்படும் முகப்பு அறிவிப்புச் சீட்டுக்கள் (Enfacement advices) மற்றும் நீக்கப்பட்ட அறிவிப்புச் சீட்டுக்கள் (Cancelled advices) உரிய முறையில் பதிவேடுகளில் பதியப்பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கருவூல கணக்குகள்.—குறித்த நாட்களில் மாதாந்திர கருவூல கணக்குகள் மற்றும் செலவு விபரப்பட்டியல் 1 மற்றும் 2 அனுப்பப்பட்டுள்ளன. துறை கணக்கிற்கும் கருவூல கணக்கிற்கும் ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளன. மற்றும் ஒத்திசைவு செய்ய தவறியவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம்.—வரிப்பணம் கட்டப்பட்டதும் போக்குவரத்து அல்லாத வாகன உரிமைதாரர்களுக்கு மோட்டார் வாகன வில்லைகளின் மூலமும் அதன் பிரதி மண்டல போக்குவரத்து அலுவலர்களுக்கும் அளிக்கப்படுகின்றன.

சிறப்பு நிதி.—கிராமக் காவலர்கள்/கிராம பணியாளர்களுக்கான பதிப்பூதியம் ஒவ்வொரு மாதமும் வட்டாட்சியரால் சம்பந்தப்பட்ட சார் கருவூலத்திலிருந்து அலுவல் முன்பணம் (Imprest advance) பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் 1974.—இத்திட்டத்தின்கீழ் கணக்கு வைத்திருப்பவர்களிடமிருந்து கருவூலங்களால் மாதாந்திர சந்தாத் தொகை வசூலிப்பது 1—6—1982 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. தற்பொழுது இத்திட்டத்தில் பங்குபெறும் வங்கிகளால் மாதாந்திரச் சந்தாத்தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது. முதிர்ச்சியடைந்ததும் மாதாந்திர ஓய்வூதியம் சந்தாதாரர்களுக்கு வங்கி மற்றும் பண அஞ்சல் மூலம் ஒவ்வொரு மாதமும் காலந்தவறாமல் வழங்கப்படுகிறது.

பிராட்மா திட்டம்.—தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் பற்றுச்சீட்டுகள் மற்றும் ஓய்வூதிய பண அஞ்சல் படிவங்கள், பிராட்மா எந்திரங்கள் மூலம் அச்சிடப்பட்டு சார் கருவூலங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு தொழிற்சாலைத் தொழிலாளர் பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி.—இத்திட்டத்தை நிறைவேற்றிடும் 54,716 சந்தாதாரர்களைக் கொண்ட 305 அலகுகள் உள்ளன. இதில் பெறப்படும் சந்தா தொகை தனி வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

உள்தணிக்கை.—இத்துறை மண்டல துணை இயக்குநர்களால் பின்வரும் திட்டங்களுக்கு உள்தணிக்கை செய்யப்பட்டு வருகிறது :

(1) தமிழ்நாடு குடும்பநலத்திட்டம், 1974.

(2) தானே பணம் பெறும் அலுவலர்களின் சம்பளப் பட்டியல்கள்.

(3) தமிழ்நாடு அரசு ஊழியர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி பணிக்கொடைத் திட்டம் 1984.

(4) தமிழ்நாடு தொழிலாளர் ஈட்டுறுதி காப்பு மற்றும் ஓய்வூதிய பலன் திட்டம், 1984.

கருவூல முறை கேடுகள்.—இந்திய சேமவங்கி அல்லது மாநிலக் கணக்காயர், சென்னை-18, மாவட்டக் கருவூலம்/சார் கருவூலத்திற்கு 1988-ம் வருடத்தில் கருவூல முறைகேடு குறிக்கவில்லை. இருப்பினும் கருவூல அலுவலர் திருப்பூர் சார் கருவூல கருவூலத்தின் சார் முறைகேட்டைத் குறிப்பிட்டுள்ளார்.

## அரசு தகவல் தொகுப்பு மையம்.

1972-ஆம் ஆண்டு தமிழக அரசு நிதித் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் நிதித் துறை, கல்வித்துறை, வணிகத்துறை போன்ற துறைகளின் தகவல்களைத் தொகுத்து அவைகளை ஒருங்கே சேர்த்து சீராக்குவதற்காக இம் மையம் அமைக்கப்பட்டது.

2. நடைமுறையிலுள்ள தகவல் தொகுப்புகள் :

நிதி சம்மந்தப்பட்ட தகவல் தொகுப்புகள்.— அடிக்கடி துல்லியமாக மாறிக் கொண்டிருக்கும் நவீன வளரும் பொருளாதார நிலைக்கு ஏற்ப கணக்குவைப்பு முறையும் பொருத்தமாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இதன் தொடர்பாக நிதித்துறை சம்மந்தப்பட்ட தகவல்களைத் தொகுத்தளிக்க மின் கணிப்பான் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைப்படி தற்சமயம் தமிழகத்திலுள்ள 22 மாவட்ட கருவூலங்களும் 5 சம்பள கணக்கு அலுவலகங்களும் அரசு வரவு-செலவு பற்றிய தகவல் தொகுப்புகளை துணைக் கணக்குகள் மூலம் அனுப்புகின்றன.

பட்டியல்களின்றி காசோலைகள் மூலம் பெறும் துறைகளைப் பொருந்த வரையில் பொதுப்பணித்துறையினைச் சார்ந்த 165 செயற் பொறியாளரிடமிருந்தும் 2 நெடுஞ்சாலைத் துறையிடம் இருந்தும் 74 வனத்துறைக் கோட்ட அலுவலர்களிடமிருந்தும் மாதாந்திரக் கணக்குகள் பெறப்படுகின்றன. உள்ளீடுகளில் தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு மின்கணிப்பான் மூலம் பல்வேறு அறிக்கைகள் சேகரிக்கப்படுகின்றன. இதன் பயனாக வரி வசூலிப்பு பற்றிய நிலை, செலவினங்களை ஆய்தல் போன்ற பணிகளை திறம்பட நிதித்துறை செய்ய இயலும்.

இவ்வறிக்கைகளின் துணைகொண்டு சரியான வழிமுறைகளைக் காணுதற்கும் முன்னறிவிப்பு செய்வதற்கும் முடியும்.

3. வணிகவரி தொடர்பான புள்ளி விவரங்கள்.— வணிகவரி சம்பந்தப்பட்ட மூலாதாரங்கள் வடிவமைக்கப்பட்டு வருடாந்திர நடவடிக்கைகளைக் கொண்டு தகவல்கள் மூலம் பகுப்பாய்வு சார்ந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட உதவி செய்கின்றன. வரும் ஆண்டிற்கான வரி விதிப்பு மதிப்பீடு உத்தேசமாக நடப்பு ஆண்டு புள்ளி விவரங்களின் அடிப்படையில் செயல்படுவதால் ஆண்டிறுதியில்தான் வரும் ஆண்டிற்காக மதிப்பீடு செய்ய தகவல்களை தொகுக்க இயலும். இப்பகுதாய்வின் பிற்சேர்க்கையாக நடப்பு ஆண்டின் வரி விதிப்பு போன்றவைகளை வரவு-செலவு திட்ட அறிக்கைக்காக பரிசீலிக்க முதல் அரை ஆண்டில் நடப்பு ஆண்டில் புள்ளி விவர அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

4. தேர்வு அடிப்படையிலான புள்ளி விவர முறை.— பள்ளியிறுதித் தேர்வு முடிவுகள் பற்றிய தகவல்களை 1974 அக்டோபர் முதல் இம்மையம் தொகுத்தளித்து வருகின்றது.

இத்தொகுப்புகள் தேர்வுக்கு முன் தேவைப்படும் தகவல்களும் தேர்வுக்குப்பின் செயல்பட வேண்டிய தகவல்களாக இருபிரிவுகளாக உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டு மார்ச் மாதம்-அக்டோபரில் நடைபெறும் இரு தேர்வு முடிவுகளின் சம்மந்தப்பட்ட விவரங்கள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

பள்ளியிறுதித் தேர்வு மற்றும் மேனிலைக் கல்வித் தேர்வுகட்கு தேர்வு எண்கட்கு மாற்று எண்கள் (Dummy Numbers) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி மாற்று எண்களில் தவறேதும் நேராதவண்ணம் பாதுகாத்திட தக்க பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பாடத்திட்ட வாரியாக மாற்றெண்கள் மற்றும் மதிப்பெண்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான பதிவேடுகளும் தயாரிக்கப்பட்டு அரசு தேர்வுத் துறை இயக்குநரிடத்திற்கு அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி நுழைவுத் தேர்வு TNPCEE 1988 .— நுழைவுத் தேர்வு மாணவர்கள் எழுதிய (Objective type) தேர்வு விடைத்தாட்களைப் பார்த்து துளைப்பொறி மூலமும் பரிசீலனை செய்து அட்டை கோப்புகள்/நாடாக் கோப்புகள் வழியாகவும் தொகுத்தளிக்கப்படுகின்றன. மேற்படி அட்டை/நாடாக் கோப்புகள் பொறியியல்/மருத்துவம், விவசாயப் பொறியியல், சட்டத்துறை, மருத்துவ உயர்ப்பட்டப் படிப்பு சம்பந்தப்பட்டவை வாரியாக தொகுத்து அளிக்கப்படுகின்றன.

5. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை.— வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள தகவல் தொகுப்புகளை ஒழுங்கு படுத்துவதும் மற்றும் புள்ளி விவரங்களை கணிப்பான் மூலம் தொகுத்தளிப்பதும் முக்கிய நோக்காகும்.

பதிவு செய்துள்ள வேலை தேடுவோரின் பட்டியல்களையும் அவர்களின் வாய்ப்புகளை துல்லியமாக தொகுத்தளிப்பதும் முக்கிய பணியாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நேர்முகத் தேர்வுக்கழைக்கப்படும் பதிவு செய்து கொண்டோரை அழைப்பதற்குரிய குறிப்புகள் பழைய முறைக்கும் மின் கணிப்பான் முறையிலும் தேர்வு செய்யலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

அதற்கடுத்த கட்டமாக ஒன்பது வேலை வாய்ப்பகங்களிலும் பதிவு செய்து கொண்டது பற்றி படிப்படியாக கணிப்பான் மூலம் தொகுக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

6. தேர்வு அடிப்படையிலான புள்ளி விவர முறை.—இதுவரை மேனிலைக் கல்வி, பள்ளி இறுதி வகுப்பு ஆகிய தேர்வுகளுக்காக விடைத்தாள்களை திருத்தும் பணிக்காக மாநிலம் முழுவதும் தகுதிவாய்ந்த தேர்வாளர்களின் பணிகளைப் பயன் படுத்தவும் அவர்களின் தனிச் சிறப்புகளைக் கொண்டு வகைப்படுத்தவும், தேர்வு செய்து ஒருங்கிணைக்கப்படுகின்ற பணிகளை அரசு தேர்வுத்துறை இயக்குநரகம் செய்து வந்தது. இக்கடினப் பணியை எளிதாக்கும் முகமாக இம்மையத்தில் அரசு தேர்வுத்துறையில் மாபெரும் கூட்டு முயற்சியுடன் நன்கு நிறைவேற்றி முடிக்கத்தக்க வகையில் தேர்வு அடிப்படையிலான புள்ளி விவர முறை தயாரித்து அளிக்கப்படுகிறது.

7. போக்குவரத்து மேம்பாட்டு நிதியுதவி நிறுவனத்தின் குறித்தகால வைப்பீடு பணத்தை செயலாட்சி செய்வது குறித்த குறிப்புகள்.—தமிழ்நாடு போக்கு வரத்து மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம் பொது மக்களிடமிருந்து வைப்பு நிதிகளைப் பெற்று அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதியுதவி செய்து வருகின்றது. இதனை நன்முறையில் செயலாக்கம் செய்திட வைப்பு நிதி பற்றிய தகவல்களை 1979 அக்டோபர் முதலும் அவ்வைப்பீடு பணத்தை பன்மடங்காகப் பெருக்கும் திட்டம் பற்றிய புள்ளி விவரங்கள் 1980 செப்டம்பர் மாதம் முதலும் தொகுத்தளிக்கப்பட்டு வருகின்றன.

8. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன பொருள் விவரப்பட்டியல் தகவல் முறை.—நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனப் பொருள் விவரப் பட்டியல் தகவல் முறை, 1976 ஆம் ஆண்டு முதல் பழைய முறையிலும் மின்கணிப்பான் மூலமும் இரு வழியாகத் தொகுக்கப்பட்டது. பின்பு முழுவதுமாக மின்கணிப்பான் மூலமே தொகுக்கப்பட்டு வருகின்றது. 1978–79 ஆண்டிற்கு பிறகு முழுவதுமாக மின் கணிப்பான் மூலம் தொகுக்கப்பட்டு வருகின்றது.

நடப்பு ஆண்டில் மொத்தத் தொகுப்புகளின் மாற்றம் மற்றும் செயல் படுத்துதல் அரசு புள்ளி விவர மையக் கணிப்பான் துணையுடன் திட்டமிடுபவர் செயல்படுத்தி வருகிறார்.

9. தலைமைச் செயலக சுய சம்பளமெடுக்கும் அலுவலர்களின் ஊதியப் பட்டியல்.—தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக சுய சம்பளமெடுக்கும் 400 அலுவலர் கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் ஊதியம் மற்றும் சம்பளப் பிடிப்புகள் பற்றி தெளிவான தொகுப்புகள் வடிவமைக்கப்பட்டு இம்மையத்தினால் தொகுக்கப்படுகின்றன.

## உள்ளாட்சித் தணிக்கை.

சட்டப்பூர்வமான தணிக்கை மற்றும் தமிழக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறு வனங்களின் சட்டப்பூர்வமல்லாத தணிக்கை, குறிப்பாக தமிழக அரசின் சத்துணவுத் திட்டத் தணிக்கை ஆகிய பல்வேறு தணிக்கைகள், இத்துறைக்கு ஒப்படைக்கப்பட் டுள்ளன. மேலும், நகராட்சி ஊழியர்களின் ஓய்வூதியம், பேரூராட்சிகள், ஊராட்சி நகரியம் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களின் ஓய்வூதியம், உள்ளாட்சி நிறுவனங் களின் சேம நல நிதிப் பத்திரப் பாதுகாப்பு மற்றும் அறக்கட்டளை நிதிகள் ஆகியவை களையும் இத்துறை நிர்வகித்து வருகிறது. 1988–89ஆம் ஆண்டில் இத்துறையில் தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவுகளின் மொத்தம் ரூ. 1,672.31 கோடியாகும்.

1988–89-ம் ஆண்டில் இத்துறையினால், தணிக்கை செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களின் வரவு-செலவுகள் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் நிறுவனங்கள். | தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | ஆண்டு. | வரவு. | செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) (இலட்சங்களில்.) |
| 1. மாநகராட்சிகள் (சென்னை/மதுரை/கோவை) | 2 | 1986–87 | 7,114.75 | 7,219.70 |
| 2. நகராட்சிகள் | 52 | 1987–88 | 4,655.09 | 4,633.37 |
| 3. மின் உரிமத் திட்டங்கள் | 4 | 1986–87 | 1,771.59 | 1,702.61 |
| 4. ஊராட்சி ஒன்றியங்கள் | | | | |
| 1985–86 | 665.65 | 74.64 | | |
| 1986–87 | 13,662.40 | 10,592.99 | | |
| 1987–88 | 6,421.33 | 4,978.70 | | |
| | 20,149.38 | 15,646.33 | 20,149.38 | 15,646.33 |

| வரிசை எண்ணும் நிறுவனங்களும். | தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | ஆண்டு. | வரவு. | செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (இலட்சங்களில்.) | |
| 5. பேரூராட்சிகள்— | | | | |
| 1985–86 | 9.01 | 5.55 | | |
| 1986–87 | 2,498.00 | 2,375.00 | | |
| 1987–88 | 624.00 | 598.00 | | |
| | 3,131.01 | 2,998.55 | 3,131.01 | 2,998.55 |
| 6. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தணிக்கை. | 1 | 1986–87 | 8,391.00 | 8,227.00 |
| 7. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தணிக்கை. | 1 | 1986–87 | 3,787.00 | 3,477.00 |
| 8. பல்கலைக் கழகங்கள்— 1984–85 1, 1985–86 1, 1986–87 3, 1987–88 5 | 10 | | 9,339.00 | 9,235.00 |
| 9. தொழில் நுட்பக் கழகங்கள். | 30 | 1987–88 | | |
| 10. மாவட்ட நூலக ஆணைக்குழு. | 5 | 1987–88 | 16,598.00 | 12,791.00 |
| 11. இதர நிறுவனங்கள். | 285 | 1987–88 | | |
| 12. தமிழக அரசின் சத்துணவுக் கூடங்கள். | 64,945 | | 12,891.37 | 12,759.29 |
| 13. நொடித்தவர் சொத்தாட்சியர். | ... | ... | 229.53 | 278.18 |
| 14. அரசு பொறுப்புச் சொத்து ஆட்சியர் தணிக்கை. | | | 85.75 | 87.05 |
| 15. அரசு பொறுப்புச் சொத்து ஆட்சியர் தணிக்கை. | | | 16.81 | 16.18 |
| | | | 88,159.98 | 79,071.26 |

| | |
|---|---|
| வரவுகள் | 88,159.98 |
| | 79,071.26 |
| | 1,67,231.24 |

லட்சங்கள் அல்லது ரூ. 1,672.31 கோடிகள்.

மொத்த இழப்பீட்டறிக்கைகள்.

நடப்பு ஆண்டில் மொத்த இழப்பீட்டறிக்கைகள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது—

| | |
|---|---|
| (1) நகராட்சி ஆணையர்கள் .. | 15 |
| (2) ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் | 29 |
| (3) பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் | 21 |
| மொத்தம் | 65 |

3. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு மானியம் அதிகமாக வழங்கப்பட்டது பிடித்தம் செய்தல்.—இவ்வறிக்கையாண்டில் உள்ளாட்சி நிறுவனங்கட்கு அதிகமாக வழங்கப்பட்ட அரசு மானிய ரூ. 10,14,349.85 திரும்ப வசூலித்து அரசு நிதியில் செலுத்தப்பட்டது.

4. அறக்கட்டளை கணக்குகள் விவரம்.—இந்திய அரசின் அறக்கட்டளை பொருளாளரின் முகவராகவும், தமிழக அரசின் அறக்கட்டளை பொருளாளராகவும், முறையே 4 மற்றும் 901 அறக்கட்டளைகளை ஆராய்வாளர்கள் நிர்வாகித்து வருகிறார். அறக்கட்டளைகளின் மொத்த மதிப்பு 180 லட்சங்களாகும். முதலீடுகளில் இருந்து பெறப்பட்ட மொத்த வட்டி தொகை 21.17 லட்சங்களாகும். அதில் இருந்து அறக்கட்டளைகளுக்கு 6.77 லட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

5. ஓய்வூதியத் திட்டங்களின் நிர்வாகம்.—இரண்டு ஓய்வூதிய திட்டங்கள் ஆராய்வாளரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

(1) நகராட்சி பணியாளர்களின் ஓய்வூதியம்.

(2) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி பணியாளர்களின் ஓய்வூதியம்.

(அ) நகராட்சி ஊழியர்களின் ஓய்வூதிய நிதி.—1988–89ஆம் ஆண்டில் நகராட்சிகளிடமிருந்து ஓய்வூதிய பங்குத் தொகையாக மொத்தம் ரூ. 90.64 லட்சங்கள் வரவாயிற்று. இந்த ஆண்டில் மொத்தம் ரூ. 200.19 லட்சங்கள் ஓய்வூதியத்திற்கும், பணிக்கொடைக்கும் செலவிடப்பட்டுள்ளன. ஆகவே இந்தக் கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைக்காக ரூ. 120 லட்சங்கள் பாரத ஸ்டேட் வங்கி சென்னை-6 கிளையில் நிரந்தர வைப்புத் தொகை (MEPF) கணக்குகளில் இருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது.

1,316, ஓய்வூதிய முன் மொழிவுகளின் மீது தணிக்கை சான்றிதழ்களும் மற்றும் 132 இனங்களுக்கு ஓய்வூதிய கொடுப்பாணைகளும் வழங்கப்பட்டன. இதுபோக 269 ஓய்வூதியங்கள் தொகுத்து அளிக்கப்பட்டன. இந்த நிதியிலிருந்து 31—3—1989 அன்று அரசு முதலீட்டில் வைக்கப்பட்ட தொகை ரூ. 209 லட்சங்களாகும்.

175. தற்காலிகமான ஓய்வூதிய சான்றிதழ்கள் 1988–89-ம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. 14—01—1970-க்கு முன்னால் இறந்தவர்களுக்காக தற்காலிக ஓய்வூதியக் கொடுப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) ஊராட்சி ஒன்றிய மற்றும் பேரூராட்சி பணியாளர்களின் ஓய்வூதிய நிதி.—ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி பணியாளர்களின் ஓய்வூதிய நிதி அரசு 1976-ம் ஆண்டு அரசு ஆணையின்படி நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளிடமிருந்து மொத்தம் ரூ. 119·44 லட்சங்கள் ஓய்வூதிய பங்குத் தொகையாக வசூலாயிற்று. அரசு கணக்குகளில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளில் இருந்து ரூ. 131.88 லட்சங்கள் இந்த ஆண்டு வட்டியாக வசூலிக்கப்பட்டது. இந்த ஆண்டில் ரூ. 227.04 லட்சங்கள் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.

1988–89-ம் ஆண்டில் 864 ஓய்வூதிய கொடுப்பாணைகளும் வழங்கப்பட்டன. 31—3—1989 அன்றைய நிலையில் ஓய்வூதிய நிதியில் உள்ள தொகையாக ரூ. 1,784 லட்சங்களில் 1,762 லட்சங்கள் அரசு முதலீட்டில் உள்ளன.

6. உள்ளாட்சி நிறுவனங்களின் சேம நல வைப்பு நிதிகளும் மற்றும் வட்டி வழங்குதலும், உள்ளாட்சி நிறுவனங்களின் பணியாளர்கள் சேம நல நிதியும் முதலீடுகளும் 1967ஆம் வருடம் முதல் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத் தொகையின் மீதான வட்டியை பெறுதலும், மற்றும் முதிர்வடைந்த முதலீடுகளை காசாக்குதல் போன்ற பணிகள் ஆராய்வாளர் உள்ளாட்சி நிதிக் கணக்குகள் துறையால் செய்யப்பட்டு வருகின்றன.

1988-89ஆம் ஆண்டில் முதிர்வடைந்த முதலீடுகள் (வைப்புத் தொகைகள்) வாயிலாக 275 லட்சம் பெறப்பட்டு அரசு நிதியில் செலுத்தப்பட்டது. வைப்பு நிதி கணக்கின் மீது ரூ. 257 லட்சம் வட்டி பெறப்பட்டது. இவ்வாண்டு உள்ளாட்சி நிறுவனங்களின் சேம நல நிதியின் மீதான 943 வட்டிக்கான கருத்துருக்கள் பெறப்பட்டு சரிபார்க்கப்பட்டு வட்டி கணக்கிட்டு மொத்த ரூ. 375 லட்சங்கள் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிதியில் 31—3—1989 அன்றைய தேதியில் மொத்தம் ரூ. 2,992 லட்சங்களுக்கான முதலீட்டுப் பத்திரங்கள் (தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் போடப்பட்டுள்ள நிரந்தர வைப்புத் தொகைகள் உட்பட) முடிவு இருப்பதாக வைக்கப்பட்டுள்ளன.

## சிறுசேமிப்பு.

சிறு சேமிப்புத் துறை பல்வேறு நிலையிலுள்ள மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதற்காகவும், வீட்டுக்காக சேமிக்கும் பணத்தை நாட்டுக்காக பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. சேமிப்பு ஒரு தேசிய இயக்கம் என்பதை செயல்படுத்த இத்துறை பெரும் முயற்சி செய்து வருகிறது.

1988–89 ஆம் நிதி ஆண்டிற்கு அரசால் சிறுசேமிப்புக் குறியீடு மாநிலம் முழுவதற்கும் ரூ. 225 கோடி என நிர்ணயிக்கப்பட்டது. இத்தொகையில் ரூ. 170.26 கோடி (நிகர வசூல் தற்காலிகம்) எய்தி முடிக்கப்பட்டுள்ளது. இது குறியீட்டுடன் ஒப்பிடுகையில் 76 சதவீதம் ஆகும்.

விலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள் வருங்கால வைப்பு நிதியில் அதிகமாக உள்ள தொகையை சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து வந்த முறையை மைய அரசு மாற்றியமைத்ததும், திறன் கால வைப்புத் தொகை திட்டத்தை (Cumulativetime Deposit Scheme) மைய அரசு எடுத்துவிட்டதாலும் 1988–89 ஆம் நிதியாண்டில் சிறு சேமிப்பு வசூல் பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும் விலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள் முன்னரே முதலீடு செய்த தொகையினையும் மீள எடுத்து வேறு திட்டங்களில் முதலீடு செய்ததும், 1981–82 ஆண்டுகளில் முதன் முதலாக வெளியிடப்பட்ட தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆறு மற்றும் ஏழாவது வெளியீடு போன்றவை முதிர்வு அடைந்து, முதிர்வடைந்த தொகைகளை பணமாக்கியதும் சிறுசேமிப்பு வசூலுக்கு சாதகமல்லாத சூழ்நிலைகளை ஏற்படுத்தின.

1988–89 ஆம் நிதியாண்டில் புதிய சிறு சேமிப்புத் திட்டமான கிசான்விகாஸ் பத்திரங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

திட்டவாரியாக வசூல் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது.

### சிறுசேமிப்பு வசூல் விபரங்கள் 1988–89.

| சேமிப்பு வகைகள். | மொத்தம். | நிகரம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்). | |
| 1. என்.எஸ்.எஸ். .. .. | 38.49 | 33.43 |
| 2. எம்.ஐ.எஸ். | 15.60 | 15.28 |
| 3. சேமிப்பு வங்கிக் கணக்கு | 181·98 | (—)22.30 |
| முதலாம் ஆண்டு குறித்த கால வைப்புத் தொகை | 7.32 | (—)0.10 |
| 2 ஆண்டுகள் குறித்தகால வைப்புத் தொகை | 1.90 | 0.41 |
| 3 ஆண்டுகள் குறித்தகால வைப்புத் தொகை | 1.28 | (—)0.79 |
| 5 ஆண்டுகள் குறித்தகால வைப்புத் தொகை | 3.61 | (—)32.92 |
| 4 மொத்த குறித்தகால வைப்புத்தொகை | 14.11 | (—)33.40 |
| 5. திறன்கால வைப்புத் தொகை | 5.98 | (—)3.21 |
| 6. தொடர்கால வைப்புத் தொகை | 55.73 | 14.30 |
| 1 முதல் 6 வரையும் உள்ள கூட்டுத்தொகை .. | 311.89 | 9 10 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (1) தேசிய சேமிப்புப் பத்திரங்கள் இரண்டாவது வெளியீடு. | 0.77 | (—) 2.93 |
| (2) தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆறாவது வெளியீடு. | 63.90 | 39.20 |
| (3) தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஏழாவது வெளியீடு. | 5.67 | 2.10 |
| (4) இந்திராவிகாஷ் பத்திரம் | 76.97 | 76.97 |
| (5) கிசான்விகாஷ் பத்திரம் .. | 40.84 | 40.82 |
| (6) இதர தேசிய சேமிப்புப் பத்திரம் | | (—) 0.75 |
| பத்திரங்கள் மொத்தம் .. | 188.15 | 155.41 |
| 8. பப்ளிக் பிராவிடண்ட் பண்ட் (அஞ்சல் வங்கி) | 0.62 | 0.55 |
| 1 முதல் 8 முடிய மொத்தம் | 500.66 | 165.06 |
| 9. பப்ளிக் பிராவிடண்ட் பண்ட் (வங்கி) | 5.21 | 5.19 |
| அனைத்து மொத்தம் | 505.87 | 170.25 |

## அரசு வணிகத் திட்டங்கள்.

1988–89-ல் இத்துறையினரால் தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களின் மொத்த வரவு-செலவு விவரங்கள்:—

| வரிசை எண்ணும் நிறுவனமும். | இவ்வாண்டில் தணிக்கை முடிந்த நிறுவனங்கள். | வரவு. | செலவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (தொகை இலட்சத்தில்.) | |
| 1 தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம். | 3,913 | 5,452.20 | 5,977.10 |
| 2 வேளாண்மைக் கிடங்குகள் | 532 | 1,024.50 | |
| 3 எடை அளவுகள் | 113 | 30.37 | .. |
| 4 இராசாயன உரங்கள் | 8 | 81.93 | 86.54 |
| 5 தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் | 6 | 1,835.23 | 1,617.93 |
| 6 சின்கோனாத் துறை | 6 | 136.73 | 437.18 |
| 7 சங்கு குளிப்பு, தூத்துக்குடி | 2 | 36.72 | 30.42 |
| 8 தமிழ்நாடு இல்லம், புதுடில்லி | 1 | 9.52 | 54.59 |

| வரிசை எண்ணும் நிறுவனமும். | இவ்வாண்டில் தணிக்கை முடிந்த நிறுவனங்கள். | வரவு. | செலவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (தொகை இலட்சத்தில்.) | |
| 9 தமிழகம், உதகை | 1 | 3.33 | 7.16 |
| 10 விருந்தினர் இல்லம், சென்னை | 1 | 3.50 | 28.85 |
| 11 மாநில செய்தி மையம், சென்னை | 1 | 0.01 | .. |
| 12 செய்தி மையம், மதுரை | 1 | .. | 2.00 |
| | 4,586 | 8,613.94 | 8,241.77 |
| மொத்த நிறுவனங்கள் | 4,586 | | |
| மொத்த நடவடிக்கை (வரவு மற்றும் செலவு) | | | 16,855.71 |

இருப்பு பொருள் சரிபார்த்தல்.—இத்துறையினரால் அரசுத்துறை நிறுவனங்களில் முன்னறிவிப்பின்றி இருப்புப் பொருள் சரிபார்க்கப்படுகின்றது. மேலும் மதுரை மற்றும் சென்னை மாநகராட்சிகள், அனைத்துச் சிறப்புத் தேர்வு நிலை மற்றும் முதல் நிலை நகராட்சிகள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மரவேலை அலகு, தக்கைக்கல் உற்பத்திப் பிரிவு, சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றின் இருப்புப் பொருள் சரிபார்த்தல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1988-89-ல் இருப்புப் பொருள் சரிபார்த்தலில் பார்க்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை இருப்புப் பொருட் சரிபார்த்தலில் பார்க்கப்பட்ட பொருட்களின் உத்தேச மதிப்பு மிகையாகக் காணப்பட்ட பொருட்களின் உத்தேச மதிப்பு குறைவுப் பொருட்களின் மதிப்பு ஆகியவை பின்வருமாறு :—

| வரிசை எண். | நிறுவனங்களின் விவரம். | இருப்புப் பொருள் சரிபார்க்கப் பட வேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கை. | 1988-89ல் இருப்புப் பொருள் சரிபார்த்தலில் பார்க்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | சரிபார்க்கப் பட்ட பொருட்களின் உத்தேச மதிப்பு ரூ. லட்சத்தில். | குறைவுகளின் எண்ணிக்கை. | குறைவு மதிப்பு ரூபாய் (ரூபாய் இலட்சத்தில்) | கணக்கில் எடுத்துக் கொள்ளப் படாத இனங்கள் | மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | அரசு நிறுவனங்கள் | 5,930 | 254 | 2,598.95 | 4,190 | 11.27 | 888 | 4.62 |
| 2 | சிறப்பு தேர்வு மற்றும் முதல் நிலை நகராட்சிகள். | 60 | 52 | 1,846.00 | 3,298 | 18.49 | 831 | 7.26 |
| 3 | சென்னை மாநகராட்சி கீழ் உள்ள நிறுவனங்கள். | 1,104 | 118 | 1,039.00 | 315 | 2.68 | 234 | 0.01 |
| 4 | மதுரை மாநகராட்சி கீழ் உள்ள நிறுவனங்கள். | 308 | 2 | 125.00 | 20 | 2.75 | 14 | 0.09 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 383 | 9 | 131.00 | 196 | 4.00 | 19 | 1.40 |
| 6 | பேரூராட்சிகள் | 654 | 11 | 22.25 | 14 | 2.46 | 3 | 0.06 |
| 7 | சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம். | 210 | 19 | 825.00 | 96 | 0.95 | 197 | 0.20 |
| 8 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். | 87 | 71 | 4,173.76 | 1,217 | 15.03 | 1,371 | 14.80 |
| 9 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை. | 2 | | 151.00 | 253 | 2.67 | 2 | 0.28 |
| | | 8,738 | 538 | 10,911.96 | 9,579 | 60.30 | 3,589 | 29.32 |

## தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம்.

காலம் சென்ற முன்னாள் முதலமைச்சர் திரு. சி.என். அண்ணாதுரை அவர்களால் 15–8–1968 அன்று தமிழ்நாடு பரிசுச்சீட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 12–9–1975 முதல் தற்காலிகமாக இத்திட்டம் நிறுத்தப்பட்டது. பின் 7–8–1976 முதல் மீண்டும் இத்திட்டம் துவக்கப்பட்டு 30–9–1976-ல் முதல் குலுக்கல் நடத்தப்பட்டது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கம், பல்வேறு நல திட்டத்திற்கு இதன் மூலம் மாநில வருவாயைப் பெருக்குவதாகும்.

ஆரம்பத்தில் மாதத்திற்கு ஒரு குலுக்கல் நடத்தப்பட்டது. அதற்குப் பின் மே 1981-இல் 15 நாட்களுக்கு ஒரு குலுக்கலும் பின் மார்ச் 1982 முதல் மாதத்திற்கு மூன்று குலுக்கல்களும் நடத்தப்பட்டன. மேலும் தமிழ்நாடு பரிசுச் சீட்டுக்கு அதிக வரவேற்பு இருந்ததால் 1985 முதல் வார குலுக்கல்கள் நடத்தப்பட்டன. பின் 21–5–1986 முதல் வாரம் இரண்டு குலுக்கல்களும் 22–8–1986 முதல் வாரம் மூன்று குலுக்கலும் நடத்தப்பட்டன. மேலும் சாதாரண வாரக் குலுக்கலைத் தவிர மூன்று மாதத்திற்கு ஒரு முறை சிறப்புக் குலுக்கலும் நடத்தப்பட்டன. இம்முறை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சிறப்புக் குலுக்கலாக மாற்றப்பட்டது. தற்பொழுது மாதம் இரண்டு சிறப்புக் குலுக்கல்கள் மட்டும் நடத்தப்படுகின்றன.

அச்சிடப்படும் பரிசுச் சீட்டுக்கள் அனைத்தும் விற்கப்படவேண்டும் என்ற நோக்கத்தில் குறியீடும் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. பரிசுச்சீட்டு விற்பனை சந்தையில் நிலவரத்தைப் பொறுத்து விற்பனையில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. 1983–84-லிருந்து 1987–88 ஆண்டு வரையிலான வரவு-செலவு அட்டவணை1-ல் கீழே தரப்பட்டுள்ளது.

நிகர வருவாயின் 75 சதவீதம் பல சமூக நலத்திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. அவைகள் கிராமங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தல் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பொதுமக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தல் மற்றும் பல.

பல்வேறு நலத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்கள் அட்டவணை–2-ல் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை–1.

(1986–87 முதல் 1988–89 வரவு–செலவு விபரம்).

| வருடம். | மொத்த வரவு. | செலவு. | நிகர வரவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய்) | (ரூபாய்) | (ரூபாய்) |
| 1986–87 | 9,93,65,708.16 | 9,67,19,830.61 | 26,45,877.55 |
| 1987–88 | 11,65,73,353.50 | 9,35,70,888.45 | 1,30,02,465.05 |
| 1988–89 | | | |

அட்டவணை–2.

நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை விவரம்.

| வருடம். | கிராம தண்ணீர் வசதிக்காக. | சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம். | சிறப்பு நலத் திட்டம். | முன்னாள் படைவீரர் நல நிதிக்கு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய்) | (ரூபாய்) | (ரூபாய்) | (ரூபாய்) |
| 1986–87 | | | 19,84,408.50 | .. |
| 1987–88 | | .. | 97,34,945.85 | [illegible] |

## மாநில நிதி.

1988-89ஆம் ஆண்டுக்கான வருவாய்க் கணக்கு குறித்த வருவாய்-செலவு மூலதனக் கணக்கு குறித்த செலவு பற்றிய கணக்கு விவரங்கள் அட்டவணைகள் 1, 2, 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### ரொக்க—இருப்பு :

தமிழ்நாடு அரசின் ரொக்க இருப்பு 1—4—1988 அன்று ரூ. 60.74 கோடியாகும். 31—3—1989 அன்று (—) ரூ. 12.05 கோடியாகும்.

### வருவாய்க் கணக்கு :

1988-89 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநிலத்தில் மொத்த வருவாய் ரூபாய் 3,48,886.54 இலட்சமாகும். ஆனால், அந்த ஆண்டுக்கான செலவு ரூபாய் 37,63,04.04 இலட்சமாகும். வருவாய்க்குக் கூடுதலாக உள்ள செலவு (பற்றாக்குறை) ரூபாய் 27,417.50 இலட்சமாகும்.

### மூலதனக் கணக்கு :

மொத்த மூலதனச் செலவு ரூபாய் 1,90,28.58 இலட்சமாகும். இதில், வேளாண்மை, அது தொடர்பாக பணிகள் குறித்த மூலதனக் கணக்கில் செலவு ரூபாய் 4,018.53 இலட்சம். பாசனம், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் கணக்கின் செலவு ரூபாய் 4,623.18 இலட்சம். பாசனம் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதலக் கணக்கின் செலவு 6,23.18 இலட்சம். போக்குவரத்து குறித்த மூலதளக் கணக்கின் செலவு ரூபாய் 3,887.16 இலட்சமும், சமுக பணிகள் குறித்த மூலதனக் கணக்கின் செலவு ரூ. 3,165.09 இலட்சமும் முக்கிய இனங்களாகும்.

## தனி நிதிகள்.

### பஞ்ச நிவாரண நிதி :

இந்நிதி 1936 ஆம் ஆண்டு சென்னை பஞ்ச நிவாரண நிதிச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. இது கடுமையான வறட்சி, வெள்ளம், பஞ்சம் உட்பட ஏனைய இயற்கைச் சீற்றங்கள் ஆகிய துயர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. மேலும் பாசனத்திற்குப் பாதுகாப்பளிப்பது அல்லது பஞ்சத்தைத் தடுப்பதற்குரிய ஏனைய பணிகளை மேற்கொள்வதற்கான செலவுகளுக்கு பயன்படுத்துவதற்காக இந்நிதி ஏற்படுத்தப்பட்டது. 30—9—1953 அன்று இந்நிதியிலிருந்த இருப்புத் தொகை ரூபாய் 11.79 இலட்சமாகும். 31—10—1956 அன்று இந்நிதியில் முடிவு இருப்பு ரூபாய் 22.11 இலட்சமாகும். இதில் ரொக்கம் ரூபாய் 2.38 இலட்சமாகும். ஈட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூபாய் 19.75 இலட்சமாகும். (கொள்முதல் விலை) 1956 ஆம் ஆண்டு மாநில சீரமைப்புச் சட்டத்திற்கிணங்க, அடுத்தடுத்து வருகின்ற மாநில அரசுகளுக்கிடையே இந்த இருப்புத் தொகையை ஒதுக்கீடு செய்யும் வகையில் இருப்புத் தொகை அனைத்தும் சீரமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் கணக்குகளில் தற்காலிகமாக சேர்க்கப்பட்டுள்ளது. 1988-89 தொடக்கத்தில் இந்நிதியில் இருந்த இருப்பு ரூபாய் 20.00 இலட்சமாகும். இதில் ஈட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூபாய் 20.00 இலட்சமாகும் (கொள்முதல் விலை). 1988-89 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 875.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது : 31—3—1988 அன்று இந்நிதியில் இருந்த இருப்பு ரூபாய் 20.00 இலட்சமாகும். (கொள்முதல் விலை). எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, ஓராண்டில் செலவிடப்படாமல் உள்ள இருப்புத் தொகை அடுத்தாண்டில் கணக்குகளுக்குப் பெயரளவு கொண்டு செல்லப்பட வேண்டும். மத்திய அரசின் நிதியுதவியின் அளவைத் தீர்மானிக்கும் போது மத்தியக் குழு பஞ்ச நிவாரண நிதியில் செலவிடப்படாமல் உள்ள இருப்புத் தொகையை எடுத்துக் கொள்ளும்.

## பொது மக்கள், வங்கியில், நிறுவனங்களிடமிருந்து திரட்டப்படும் கடன்கள்.

**பொது :**

30–9–1953 அன்று சென்னை கூட்டு மாநிலத்தில் நிலுவை பொதுக்கடன், 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச் சட்டத்தின் ஏழாவது விவர அட்டவணையில் உள்ள விதித் துறைகளுக்கிணங்க ஆந்திர பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு அரசுகளுக்கிடையே ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. 1-11-1966 முதற்கொண்டு மாநில சீரமைப்பை அடுத்து, 31-10-1956 அன்று உள்ள நிலுவைக்கடன் 1956 ஆம் ஆண்டு மாநிலச் சீரமைப்புச் சட்டத்தின்படி கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு மத்திய அரசுகளுக்கிடையே மேலும் ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. வெளிச் சந்தைக் கடன்கள் மீதான பொறுப்புகள் அனைத்தும் தமிழ்நாடு அரசையே சாரும் ; ஆனால் ஆந்திர பிரதேச, கர்நாடக, கேரள அரசுகள் மத்திய அரசு ஆகியவை கடன் செலவுகளில் தங்களுடைய பங்கை தாங்கள் செலுத்த வேண்டிய போதெல்லாம் தமிழ்நாடு அரசுக்குச் செலுத்தும். மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு மாநில அரசும், கடன் செலவுகளில் தங்களுடைய பங்கை இந்திய அரசுக்கு உரிய நாட்களின் நேரிடையாக செலுத்தும் 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச் சட்டம், 1956 ஆம் ஆண்டு மாநில சீரமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் நெறிமுறைகளின்படி, பொதுக்கடன் குறித்து இறுதி ஒதுக்கீடு செய்யப்படும் வரையில், மக்கள் தொகை விகிதாச்சாரத்தில் கடன் செலவுகள் குறித்த தங்களுடைய பங்குகளில் தமிழ்நாடு ஆந்திரபிரதேசம் கர்நாடகம், கேரள அரசுகள் மத்திய அரசுக்கு தற்காலிகமாக தொகையைச் செலுத்தி வருகின்றன.

முன்னாள் திருவாங்கூர்–கொச்சின் மாநிலம் திரட்டிய வெளிச்சந்தை கடன் தொகைக்கான பொறுப்பு கேரள அரசையே முழுக்கச் சாரும் ஆனால் தமிழ்நாடு அரசு கடன் செலவுக்கான தனது பங்கினை செலுத்த வேண்டும்போதெல்லாம் கேரள அரசுக்குச் செலுத்தும் முன்னாள், திருவாங்கூர்-கொச்சியின் மாநிலம் மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் தொகையைப் பொறுத்த வரையில் தமிநாடு அரசு தன்னுடைய பங்கினை நேரிடையாக மத்திய அரசுக்குச் செலுத்தியுள்ளது.

### வெளிச்சந்தைக் கடன்கள்.

இவ்வாண்டில் தமிழ்நாடு அரசு இரண்டு நிலைகளின் ரூபாய் 1,84,63 இலட்சத்திற்கு வெளிச்சந்தை கடன்களைத் (தொகு மொத்தம்) திரட்டியது. இவ்வாண்டில் வெளியிட்ட நிதி நில உச்ச வரம்பு இழப்பீட்டுக் பத்திரங்களுக்காக தொகையைத் திருப்பிச் செலுத்துதல் உட்பட வெளிச்சந்தை கடன்களின் மொத்தத் தொகை ரூபாய் 2,543 இலட்சமாகும்.

அறிக்கை 1.

| | | வரவுகள் 1988-1989. (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| | வரி வருவாய். | |
| 0021 | கூட்டு நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமானம் மீதான வரிகள். | 2,07,42,74 |
| 0022 | வேளாண்மை வருமானம் மீது வரி | 6,77,99 |
| 0029 | நில வரி | 15,06,22 |
| 0030 | முத்திரைத்தாள்கள், பத்திரப் பதிவுக் கட்டணங்கள் | 1,64,65,35 |
| 0035 | வேளாண்மை நிலம் நீங்கலாக ஏனைய இயங்காச் சொத்து மீது வரி. | 1,38,14 |
| 0039 | மாநில ஆயத் தீர்வைகள் | 1,48,02,60 |
| 0040 | விற்பனை வரி | 14,14,36,27 |
| 0041 | மண்டிகள் மீது வரிகள் | 1,62,41,04 |
| 0043 | மின்சாரத்தின் மீது வரிகளும் தீர்வைகளும் | 7,61,08 |
| 0045 | பண்டங்கள்—பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும். | 73,94,15 |
| | மொத்தம்—வரி வருவாய் | 22,01,65,58 |

வரவுகள்
1988-1989.
(ரூபாய்
ஆயிரத்தில்).

## வரி அல்லாத வருவாய்கள்.

| | | | |
|---|---|---|---|
| 0047 | ஏனைய வரி விதிப்புப் பணிகள் | — | 2,63 |
| 0049 | வட்டி வரவுகள் | — | 78,68,97 |
| 0050 | ஆதாயப் பங்குகளும் ஆதாயங்களும் | — | 2,74,09 |
| 0051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | — | 18.26 |
| 0055 | காவல் | | 13,05,49 |
| 0056 | சிறைச்சாலைகள் | — | 4,52,53 |
| 0058 | எழுதுபொருள் அச்சு | — | 1,42,17 |
| 0059 | பொதுப் பணிகள் | — | 2.03,45 |
| 0070 | ஏனைய நிருவாகப் பணிகள் | — | 11,92;04 |
| 0071 | ஓய்வூதியம், ஏனைய ஓய்வு கால பலன் குறித்த பங்குத்தொகைகளும் வசூல்களும். | .. | 3,89,49 |
| 0075 | பல்வகைப் பொதுவான பணிகள் | — | 10,56,16 |

## சமூகப் பணிகள்.

| | | | |
|---|---|---|---|
| 0202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு | — | 12,79,99 |
| 0210 | மருத்துவம், பொதுச் சுகாதாரம் | — | 11,52,52 |
| 0011 | குடும்ப நலன் | — | 42,85 |
| 0015 | குடிநீர் வழங்கல், துப்புரவு | — | 91,29 |
| 0216 | வீட்டுவசதி | ... | 4,59,56 |
| 0217 | நகர்ப் பகுதி வளர்ச்சி | ... | 6,45 |
| 0220 | செய்தி—விளம்பரம் | | 1,58,24 |
| 0230 | தொழிலாளரும் வேலை வாய்ப்பும் | — | 2,33,54 |
| 0235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | | 50,30,56 |
| 0050 | ஏனைய சமூகப் பணிகள் | ... | 2,96,05 |

* பெருந்தலைப்பு '' 0252 '' என்பது '' 0250 '' எனக் காட்டப்பட்டுள்ளது.

## பொருளாதாரப் பணிகள்.

| | | | |
|---|---|---|---|
| 0401 | பயிர் வளர்ப்பு | — | 38,94.47 |
| 0403 | கால்நடை வளர்ப்பு | — | 1,73,17 |
| 0404 | பால் பண்ணை வளர்ச்சி | — | 57,05 |
| 0405 | மீன்வளம் | — | 78,61 |
| 0406 | காடு வளர்ப்பும் வனவளப் பாதுகாப்பும் | | 33,75;93 |
| 0407 | மலைத் தோட்டப் பயிர்கள் | | 1,23;58 |
| 0425 | கூட்டுறவு | | 5,73,91 |

| | | வரவுகள் 1988-1989 (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|---|
| 0435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 4,33,96 |
| 0506 | நிலச் சீர்திருத்தம் | 15 |
| 0515 | ஏனைய/கிராம வளர்ச்சித் திட்டங்கள் | 1,00,17 |
| 0551 | மலைப் பகுதிகள் | 39,75 |
| 0701 | பெரிய மற்றும் நடுத்தர பாசனம் | 1,25,81 |
| 0702 | சிறுப் பாசனம் | 1,91,89 |
| 0801 | மின் விசை .. | 1,05 |
| 0802 | பெட்ரோலியம் | 11 |
| 0851 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 4,37,98 |
| 0852 | தொழில்கள் .. | 27,64 |
| 0853 | இரும்பு சாரா சுரங்கவியல், உலோகவியல், தொழில்கள். | 9,22,83 |
| 0875 | ஏனைய தொழில்கள் | 6,9[illegible] |
| 1051 | துறைமுகங்களும் கலங்கரை விளக்கங்களும் | 60,90 |
| 1054 | சாலைகளும் பாலங்களும் | 8,30,26 |
| 1055 | சாலை போக்குவரத்து | 35,37 |
| 1056 | உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து | 1,10,86 |
| 1425 | ஏனைய அறிவியல் ஆராய்ச்சி .. | 1,07 |
| 1452 | சுற்றுலா | 13,34 |
| 1475 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் | 1,85,21 |

## உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும்.

| | | |
|---|---|---|
| 1601 | மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள் | 4,37,13,69 |
| 1603 | மத்திய ஆயத்தீர்வை வருவாயின் மாநிலங்களின் பங்கு. | 5,15,49,36 |
| | மொத்தம்—உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும். | 9,52,63,05 |

## பொதுவான பணிகள்.

| | | |
|---|---|---|
| 2011 | மாநில சட்டமன்றங்கள் | 1,11,78 |
| 2012 | ஆளுநர் | 56,58 |
| 2013 | அமைச்சரவை | 27,90 |
| 2014 | நீதி நிருவாகம் | 24,39,51 |

| | | செலவுகள் 1988-1989 (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|---|
| 2015 | தேர்தல்கள் | 12,99,18 |
| 2020 | வருமானம், செலவினங்கள் மீதான வரிகளை வசூலித்தல். | 1,24,62 |
| 2029 | நிலவரி | 21,54,71 |
| 2030 | முத்திரைத்தாள்கள், பத்திரப் பிரிவு | 11,17,90 |
| 2035 | சொத்துரிமை மூலதனப் பற்று—வரவு மீதான ஏனைய வரிகளை வசூலித்தல் | 1,05,97 |
| 2039 | மாநில ஆயத் தீர்வைகள் | 4,11,19 |
| 2040 | விற்பனை வரி | 20,73,78 |
| 2041 | வண்டிகள் மீதான வரிகள் | 3,56,24 |
| 2045 | பண்டங்கள், பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும். | 84,45 |
| 2047 | ஏனைய வரி விதிப்புப் பணிகள் | 1,08,92 |
| 2048 | கடன் குறைப்பு அல்லது தவிப்புக்கான நிதி ஒதுக்கம் | 22,61,75 |
| 2049 | வட்டி கொடுத்தல் | 3,05,04,15 |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 1,57,03 |
| 2052 | தலைமைச் செயலகம்—பொதுவான பணிகள் | 10,56,59 |
| 2053 | மாவட்ட நிருவாகம் | 63,58,84 |
| 2054 | கருவூலம்—கணக்குகள் நிருவாகம் | 16,72,33 |
| 2055 | காவல் | 1,45,79,27 |
| 2056 | சிறைச்சாலைகள் | 13,99,98 |
| 2058 | எழுதுபொருள்—அச்சு | 18,47,63 |
| 2059 | பொதுப் பணிகள் | 26,77,79 |
| 2070 | ஏனைய நிருவாகப் பணிகள் | 20,87,03 |
| 2071 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் | 1,84,14,88 |
| 2075 | பல்வகைப் பொதுவான பணிகள் | 13,62,10 |
| | மொத்தம்—பொதுவான பணிகள் | 9,53,49,42 |

<u>சமூகப் பணிகள்.</u>

| | | |
|---|---|---|
| 2202 | பொதுக் கல்வி | 7,42,63,30 |
| 2203 | தொழில் நுட்பக் கல்வி | 26,73,63 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் பணிகளும் | 7,33,96 |
| 2205 | கலை பண்பாடு | 9,63,89 |
| 2210 | மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் | 2,17,13,84 |

| | | செலவுகள் 1988-1989 (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 2211 | குடும்ப நலன் | 43,54,56 |
| 2215 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 92,03,42 |
| 2216 | வீட்டு வசதி | 17,65,76 |
| 2217 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 34,18,45 |
| 2220 | செய்தி விளம்பரம் | 4,12,73 |
| 2225 | ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் நலன். | 93,60,20 |
| 2230 | தொழிலாளரும் வேலைவாய்ப்பும் | 20,54,87 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 1,58,27,27 |
| 2236 | சத்துணவு | 90,57,73 |
| 2245 | இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு | 8,75,42 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் | 1,51,49 |
| 2251 | தலைமைச் செயலகம்—சமூகப் பணிகள் | 3,75,89 |
| | மொத்தம்—சமூகப் பணிகள் | 15,66,03,40 |

## பொருளாதாரப் பணிகள்.

| | | |
|---|---|---|
| 2401 | பயிர் வளர்ப்பு | 1,04,03,72 |
| 2402 | மண்வள-நீர்வளப்பாதுகாப்பு | 15,60,12 |
| 2403 | கால்நடை வளர்ப்பு | 37,52,11 |
| 2404 | பால்—வெண்ணை வளர்ச்சி | 2,96,98 |
| 2405 | மீன்வளம் | 6,44,85 |
| 2406 | காடு வளர்ப்பும், வனவிலங்குகளும் பாதுகாப்பும் | 18,00,57 |
| 2407 | மலைத் தோட்டம் பயிர்கள் | 3,03,91 |
| 2408 | உணவு, சேமிப்புக் கிடங்கு வசதி | |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி | 12,84,63 |
| 2425 | கூட்டுறவு | 51,65,67 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 6,39,09 |
| 2501 | ஊரக வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள் | 30,10,04 |
| 2505 | ஊரக வேலை வாய்ப்பு | 1,24,96,13 |
| 2506 | நிலச் சீர்திருத்தம் | 33.70 |
| 2515 | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 59,51,58 |
| 2551 | மலைப் பகுதிகள் | 6,49,43 |

| | | செலவுகள் 1988-89 (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 2701 | பெரிய மற்றும் நடுத்தரப் பாசனம் | 73,48,13 |
| 2702 | சிறு பாசனம் | 15,13,84 |
| 2711 | வெள்ளக் கட்டுப்பாட்டு வடிகால்கள் | 1,78,07 |
| 2801 | மின்விசை | 2,93,00.00 |
| 2851 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 68,59.88 |
| 2852 | தொழில்கள் | 9,22,06 |
| 2853 | இரும்புசாரா சுரங்கவியல், உலோகவியல் தொழில்கள் | 1,11,52 |
| 2875 | ஏனைய தொழில்கள் | |
| 3051 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள் | 87,28 |
| 3052 | கப்பல் போக்குவரத்து | 18 |
| 3053 | பொதுமக்கள் விமானம் போக்குவரத்து | 9,86 |
| 3054 | சாலைகளும் பாலங்களும் | 91,23,82 |
| 3055 | சாலைப் போக்குவரத்து | 7,85 |
| 3056 | உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து | 25.74 |
| 3425 | ஏனைய அறிவியல் ஆராய்ச்சி | 3,31,31 |
| 3435 | உயிரின வாழ்க்கை சூழல்—சுற்றுச் சூழல் | |
| 3451 | தலைமைச் செயலகம்— பொருளாதாரப் பணிகள் | 3,72,67 |
| 3452 | சுற்றுலா | 58,52 |
| 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பும் புள்ளி விவரங்களும் | 4,87,95 |
| 3456 | நுகர் பொருள் வழங்கல் | 1,05,93.62 |
| 3475 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் | 3,04,49 |
| | மொத்தம்—பொருளாதாரப் பணிகள் | 11,65,28,22 |

உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும் :

| | | |
|---|---|---|
| 3604 | உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் அளிக்கப்படும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 77,62,97 |
| | மொத்தம்— உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும். | 77,62,97 |
| | மொத்தம்—வருவாய்க் கணக்கில் செலவு | 37,63,04,04 |

## அத்தியாயம் 111

### தமிழ்நாடு தொகு நிதி—மூலதனக் கணக்கு—செலவுகள்.

| | | செலவுகள் 1988—1989 (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| | **பொதுவான பணிகளில் மூலதனக் கணக்கு :** | |
| 4058 | எழுதுபொருள்—அச்சுத்துறை குறித்த மூலதனச் செலவு | 9,25 |
| 4059 | பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 10,16,69 |
| 4070 | ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு .. | 18,48 |
| | மொத்தம்—பொதுவான பணிகளின் மூலதனக் கணக்கு | 10,44,42 |
| | **சமூகப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு :** | |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு குறித்த மூலதனச் செலவு. | 7,23,13 |
| 4210 | மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு. | 7,47,49 |
| 4211 | குடும்ப நலன் குறித்த மூலதனச் செலவு | 87,58 |
| 4215 | குடிநீர் வழுங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 5,31,63 |
| 4216 | வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 3,08,24 |
| 4220 | செய்தி—விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | 19,89 |
| 4225 | ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு. | 6,90,47 |
| 4235 | சமூகப் பாதுகாப்பு, நலன் குறித்த மூலதனச் செலவு | 51 |
| 4236 | சத்துணவு குறித்த மூலதனச் செலவு | 30,10 |
| 4250 | ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 26,05 |
| | மொத்தம்—சமூகப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு. | 31,65,09 |
| | **பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு :** | |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு .. | 1·68,89 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 1,81,19 |
| 4403 | கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 10,38 |
| 4404 | பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு மீன் வளம் | 51.10 |
| 4405 | மீன்வளம் குறித்த மூலதனச் செலவு ... | 95.21 |
| 4406 | காடு வளர்ப்பு, வனவிலங்குகள் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு. | 18,85,48 |
| 4407 | மலைத்தோட்டம் பயிர்கள் குறித்த மூலதனச் செலவு | 37.91 |
| 4408 | உணவு சேமிப்புக் கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு. | 30.00 |

| | பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு —தொடர்ச்சி. | செலவுகள் 1988—1989 (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 4415 | வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு. | 21.44 |
| 4425 | கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 15,36,96 |
| 4435 | ஏனைய வேளாண்மை திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | (—) 3 |
| 4515 | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 7,52 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 5,30,42 |
| 4575 | ஏனைய சிறப்புப் பகுதிகளின் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 21,51 |
| 4701 | பெரிய, நடுத்தர பாசனம் குறித்த மூலதனச் செலவு | 41,92,37 |
| 4702 | சிறு பாசன வசதி குறித்த மூலதனச் செலவு | 2,16,78 |
| 4711 | வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 2,14,03 |
| 4851 | கிராமத் தொழில்கள் சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 52,53 |
| 4853 | இரும்பு சாரா சுரங்கவியல், உலோகவியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 10 |
| 4859 | தொலைத் தொடர்பு —மின்னணுவியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 1,42,11 |
| 4860 | நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 4,73,42 |
| 4875 | ஏனைய தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | [illegible],63,39 |
| 5051 | துறைமுகம், கலங்கரை விளக்கம் குறித்த மூலதனச் செலவு. | 57,17 |
| 5052 | கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | |
| 5054 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 35,69,85 |
| 5055 | சாலைகள், போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 2,45,00 |
| 5056 | உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 15,14 |
| 5452 | சுற்றுலா குறித்த மூலதனச் செலவு | 92,64 |
| 5465 | பொதுவான நிதி —வணிக நிறுவனங்களின் முதலீடுகள் | .. |
| 5475 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 6,56 |
| | மொத்தம்— பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு. | 1,48,19,07 |
| | மொத்தம்—வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு. | 1,90,28,58 |

## நிறுவன நிதி.

சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரின் மேம்பாட்டுக்காக அல்லாமல், வேளாண்மைத் துறை, தொழில் துறை, ஏனைய பணித் துறைகளுக்கும் வங்கிகளிடமிருந்து உரிய கால அளவில் கடன் வசதியைப் பெறுவதற்கும், அப்பணியினைக் கண்காணிப்பதற்கும் அரசுத் துறைகள்/முகவரமைப்புகளுக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையே தொடர்பு அமைப்பாக இருக்க, நிறுவன நிதித் துறை 1983 ஜூலையில் ஏற்படுத்தப்பட்டது.

2. 1988–ஆம் ஆண்டில் வேளாண்மை, தொழில் பணித்துறைகள் போன்றவற்றில் வளர்ச்சி சாதனையின்கீழ் கடன் ஒதுக்கீடு வருமாறு :

| | 1988 ஆம் ஆண்டு ஏஏபி திட்டத்தின் கீழ் மொத்த கடன் ஒதுக்கீடு. | வழங்கிய மொத்த கடன் தொகை. | சாதனை சதவீதத்தில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்) | | |
| வேளாண்மைத் துறை | 900.21 | 1,063.36 | 118 |
| தொழில் துறை | 241.79 | 229.96 | 95 |
| பணிகள் | 262.94 | 302.90 | 115 |
| மொத்தம் | 1,404.94 | 1,596.22 | 144 |

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம்.— சுய வேலை வாய்ப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்காக படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குக் கடன் வழங்க இத் திட்டம் வகை செய்கிறது. 1988–89 திட்டத்திற்காக வரையறுக்கப்பட்ட இலக்கு 18,100 விண்ணப்பங்களாகும். அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 2,990.96 இலட்சமாகும். மேற்சொன்ன தொகையில் 31–7–1989 வரையில் 8,371 கடன்கள் ரூ. 1,409.89 இலட்சத்திற்கு வழங்கப்பட்டன. இது 48.5 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கிராமத்திலுள்ள ஏழை மக்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம்.—கிராமத்திலுள்ள ஏழை மக்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் நோக்கமானது, மக்கள் தொகையில் 300 நபரில் ஒரு பயனீட்டாளருக்கு உதவி புரிவதாகும்.

தொழில் உரிமையாளர்களுக்கு (மகளிர்) வழங்கிய கடன்:— 1989-ம் ஆண்டு மார்ச் இறுதியில், இத்திட்டத்தின்கீழ் மகளிருக்கு (தொழில் உரிமையாளர்) வழங்கிய கடன் தொகை ரூ. 8,715.19 இலட்சமாகும். இம் மாநிலத்தில் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் மொத்தம் 2,13,483 பேர்.

முன்னுரிமைத்துறையில் நலிந்த பிரிவினருக்கு வழங்கிய கடன்:—1988 டிசம்பர் இறுதியில், முன்னுரிமை துறையில் நலிந்த பிரிவினருக்கு வழங்கிய கடன் மொத்தம் ரூ. 933.16 கோடியாகும். இதில் 26.15 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். ஒதுக்கப்பட்ட மொத்த முன்பணத்தில் இம் மாநிலத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கிய முன் பணத்தின் பங்கு 11.41 சதவீதமாகும். இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைக் காட்டிலும் அதாவது 10 சதவீதம் என்கிற இலக்கினைக் காட்டிலும் அதிகமாகும். 1988 டிசம்பர் இறுதியில் 20 அம்சத் திட்டத்தின்கீழ வழங்கப்பட்டு நிலுவையாக உள்ள முன் பணம் ரூ. 636.14 கோடியாகும். அதன் மூலம் 18.36 இலட்சம் பேர் பயனடைந்தனர்.

முன்னுரிமைத் துறைக்கான முன்பணமும், வேறுபட்ட வட்டி வீத முன்பணமும்: 1988 டிசம்பர் இறுதியில், இம் மாநிலத்தில் வணிக வங்கிகள் அளித்த முன்னுரிமைத் துறைக்கான முன்பணம் என்பதன் கீழ் நிலுவையாகவுள்ள முன்பணம் ரூ. 3,542.65 கோடியாகும். மொத்தக் கடனில் முன்னுரிமை துறைக்கான முன் பணத்தின் விகிதாச்சாரம் 43.3 சதவீதமாகும். ஆனால் வரையறுக்கப்பட்ட விகிதாச்சாரம் 40.0

சதவீதமாகும். வேறுபட்ட வட்டிவீதத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு நிலுவையாக வுள்ள முன்பணம் ரூ. 53.38 கோடியாகும். அதன் மூலம் இம்மாநிலத்தில் பயனடைந்தோர் 4.29 இலட்சமாகும். முந்தைய ஆண்டில் மொத்த முன் பணத்தில் வேறுபட்ட வட்டிவீத முன்பணத்தின் சதவீதம் 0.8 சதவீதமாகும். அதன் கணக்கு விவரங்கள் வருமாறு:—

(1988 டிசம்பர் இறுதியில் வழங்கப்பட்டு நிலுவையாகவுள்ளவை.)

(ரூபாய் கோடியில்.)

| வங்கித் தொகுதி. | மொத்த வைப்பீடு. | மொத்த முன்பணம். | முன்னுரிமைத் துறைக்கான மொத்த முன்பணம். | மொத்த முன் பணத்தில் சதவீதம். | வேறுபட்ட வட்டிவீத முன்பணம். | முந்தைய ஆண்டின் மொத்த பணத்தில் சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| இந்திய ஸ்டேட் வங்கி கிளை வங்கிகள் | 2,053.13 | 2,318.66 | 1.045.99 | 45.1 | 16.27 | 0.9 |
| நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் | 5,441.27 | 4,710.93 | 2,160.25 | 45.9 | 35.98 | 0.9 |
| தனியார் துறை வங்கிகள் | 1,074.60 | 745.27 | 274.07 | 36.8 | 1.05 | 0.2 |
| வட்டார கிராமப் புற வங்கிகள் | 31.77 | 45.65 | 41.99 | 92.0 | 0.08 | 0.3 |
| வெளி நாட்டு வங்கிகள் | 233.16 | 354.57 | 20.42 | 5.8 | | |
| பெரு மொத்தம் | 8,833.93 | 8,175.08 | 3,542.73 | 43.3 | 53.38 | 0.8 |

## அத்தியாயம் 11.

### கைத்தறித் துணிகள் மற்றும் கதர்த் துறை.

### கைத்தறி மற்றும் பஞ்சாலையும்.

1. நடவடிக்கைகள்:—கைத்தறித் தொழிலின் வளர்ச்சி, மற்றும் உயர்வுக்கான நிகழ்ச்சி நிரல்களை திட்டம் இடுவதற்கும், அமைப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை முகமையாக தொடர்ந்து வருகிறது.

**வேலை இலக்கு மற்றும் சாதனைகள்:**

1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் தறிகளின் எண்ணிக்கை.—மாநிலத்திலுள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில் 2.58 இலட்சம் தறிகள் 1665 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 31 மார்ச் 89 முடிய அமைக்கப் பெற்றுள்ளது.

2. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை.—1988-89ம் ஆண்டுக்கு குறியீடாக 1900 இலட்சம் மீட்டர் உற்பத்தி நிர்ணயிக்கப்பட்டு எய்துவதற்காக மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ.20,368.90 இலட்சம் மதிப்புள்ள 1,388.84 இலட்சம் மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 21,600.82 இலட்சம் மதிப்புள்ள 1,491.54 இலட்சம் மீட்டர் 31—3—1989 வரை இசைவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

3. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை நிதி ஏற்பாடு செய்து கொடுத்தல்.—தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுசங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் இரண்டும் பயன்படுத்திய நடை முதல் ரூபாய் 180.76 கோடியாகும். 1988-89-ன் போது அரசு வட்டி மான்யமாக ரூ. 150 லட்சம் வழங்கியுள்ளது.

4. கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் கீழ்க்கண்ட திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.—

(1) வீடு மற்றும் தொழிற்கூட திட்டம்.

(2) ஜனதா துணி திட்டம்.

(3) தள்ளுபடி மான்ய திட்டம்.

(4) சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்.

(5) பொது சிக்கன நிதித் திட்டம்.

(6) கைத்தறி நெசவாளர்களை விடுவிக்கும் திட்டம்,

(7) கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டம்.

(8) கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் மேல் படிப்புக்காக உதவி.

(9) சீருடை துணி விநியோகம்.

(10) கோ-ஆப்டெக்ஸிற்கு அங்காடி உள்ளமைப்பு மற்றும்

(11) கைத்தறி ஒதுக்கீடு கோட்பாடு மற்றும் செயலாக்கு பிரிவு நிறுவுதல்.

5. அறிக்கை ஆண்டில் செயற்படுத்தப்படும் புதிய திட்டங்கள்:

(1) நொராடு திட்டம்.—நடைமுறையில் உள்ளபடி திட்டங்களை தவிர, கிராமப் பகுதிகளில் வறுமையின் பிடியில் அவதியுறும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தினால் நொராடு உதவியுடன் தொடங்கி நடத்தப் பெறும் திட்டத்திலிருந்து மானியம் பெற்று பிரத்தியேக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஒரு சங்கத்திற்கு ரூ. 10 இலட்சம் வீதம் மொத்தம் 50 இலட்சம் செலவில் 5 சங்கங்கள் நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

(2) சொந்தத்தில் தறியில்லாத பெண் கைத்தறியாளர்களுக்கு தறி வழங்கும் திட்டம்:—தொடர்ந்த வேலை வாய்ப்பினை உறுதி செய்து கொள்ளும் பொருட்டும், மற்றும் கூலி காப்புறுதி அளிக்கும் பொருட்டும் 1000 பெண்களை அழுத்தம், நலி சோர்வின்றி நெய்யக்கூடிய வகையில் தறிகளை அளித்து, பல பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்க செயல்முறைத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த 1,000 பெண்கள் 100 பேர் கொண்ட குழுக்களாக பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கூட்டுறவு திட்டங்களிலும் சேர்க்கப்படுவர். இத் திட்டத்திலுள்ள 10 பிரத்தியேக பெண்கள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கும் விதமாக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்க திட்டத்துடன் இத் திட்டம் இணைக்கப்படும்.

தற்போது துர்ப்பாக்கியமான வறுமை நிலையில் இருக்கும் பெண்களுக்கு இச் செயல்முறைத் திட்டம் வேலை வாய்ப்பு வசதிகளைக் கொண்டு வரும். மேலும் இது சுயமதிப்பையும், சுய நம்பிக்கையும் அவர்கள் இடையே வளர்க்கும். இத் திட்டத்தின் மொத்த செலவு ரூ. 25 இலட்சமாக இருக்கும். இதில் ரூ. 10 இலட்சம் மானியம் மற்றும் 15 இலட்சம் கடன்.

3. இலவச கைத்தறி சேலைகள் மற்றும் வேஷ்டிகள் வறுமை கோட்டின் கீழ் வரும் குடும்பங்களுக்கு அளித்தல்.—1989-90ல் ஒரு குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சியாக நாட்டில் முதன் முறையாக சேலைகள் மற்றும் வேஷ்டிகள் ரூ. 27.50 கோடி செலவில் ஏழை வீட்டாருக்கு வழங்கிட அரசு செயல்முறைத் திட்டமிட்டுள்ளது. இது இரண்டு நோக்கங்கள் கொண்டது:

(அ) ஏழைகள் மீது அரசு கொண்டுள்ள கருணையின் அடையாள செயலாக வறுமை கோட்டின் கீழே வாழ்ந்து கொண்டிருக்கும் 50 இலட்சம் மக்களுக்கு இலவச ஆடை வழங்குதல்.

(ஆ) ஏழை நெசவாள வீட்டாரைச் சார்ந்த 1 இலட்சம் பேருக்கு ஒழுங்கான தொழில்.

<u>தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம்.</u>—கூட்டுறவு அமைப்பிற்கு அப்பாற்பட்டுள்ள கைத்தறி மற்றும் துணை தொழிலுக்கு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் (வரை) நிதி உதவியினை கடன்கள் வடிவில் ஏற்பாடு செய்து வருகிறது. 1988-89ல் கைத்தறி கழகம் 2906 தனியார் துறை கைத்தறி நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனம் ரூ. 360.68 இலட்சம் தொகைக்கு வழங்கியுள்ளது.

கைத்தறித் துறையின் முன்னேற்றம் மற்றும் செயல் நோக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

**<u>கைத்தறி மற்றும் துணிநூல் துறை முன்னேற்றம்—ஒரு கண்ணோட்டம்.</u>**

| (1) | 1986-87 (2) | 1987-88 (3) | 1988-89 (4) |
|---|---|---|---|
| 1. தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் : | | | |
| (1) நெசவாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 1,667 | 1,673 | 1,668 |
| (2) தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 3.91 | 3.97 | 2.58 |
| (3) ஆண்டொன்றுக்கு உற்பத்தி (ரூபாய் கோடியில்). | 174.31 | 193.24 | 203.68 |
| (4) ஆண்டொன்றுக்கு விற்பனை (ரூபாய் கோடியில்). | 169.94 | 209.15 | 216.00 |
| (5) நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 80.78 | 97.70 | 102.26 |
| 2. கோ-ஆப்டெக்ஸ்— | | | |
| (1) கொள்முதல் (ரூபாய் கோடியில்) | 80.58 | 79.22 | 71.50 |
| (2) விற்பனை (ரூ. கோடியில்) | 91.33 | 113.09 | 100.00 |
| (3) பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூ. கோடியில்). | 75.00 | 75.00 | 78.50 |
| (4) விற்பனை நிலையங்கள் எண்ணிக்கை | 545 | 533 | 492 |

| | | | |
|---|---|---|---|
| **3. கூட்டுறவு நூற்பாலைகள் :** | | | |
| (1) கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 4.50 | 4.54 | 4.59 |
| (2) முதலீடு ரூபாய் இலட்சத்தில் | 5,491.52 | 6,542.58 | 5,215.00 |
| (3) உற்பத்தி ரூபாய் இலட்சத்தில் | 8,385.32 | 11,599.14 | 13,507.37 |
| (4) விற்பனை ரூபாய் இலட்சத்தில் | 9,398.45 | 11,272.09 | 13,886.61 |
| (5) நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 1,970.00 | 4,246.02 | 2,285.00 |
| **4. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு—** | | | |
| (1) துணிகளை வெளுத்தல், சாயமிடல் | ... | 26.59 கிலோ கிராம். | 24.57 |
| **5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம்—** | | | |
| (1) அனுமதிக்கப்பட்ட கடன்களின் .. எண்ணிக்கை. | 2,522 | 2,690 | 2,906 |
| (2) அனுமதிக்கப்பட்ட கடன்தொகை.. (ரூபாய் இலட்சத்தில்) | 371.20 | 400.63 | 360.68 |
| **6. தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்—** | | | |
| (1) சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) .. | 13.077 | 14,499 | 8,408.00 |
| (2) விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 212.33 | 268.71 | 170.04 |

## பட்டு வளர்ப்பு.

இம்மாநிலத்தில் பட்டு உற்பத்தியை அதிகரிக்கவும். கிராமங்களில் கூடுதல் வேலை வாய்ப்பை உருவாக்கவும், 1979 ஆம் ஆண்டில் பட்டுப்புழு வளர்ப்பிற்கென்று தனியாக துறை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பட்டுப்புழு வளர்ப்புக்கு ஊக்கமூட்டி உதவி யளிக்கும் கொள்கை முதலில் உருப்பெற்றது.

திட்டப்பணி. —பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தனியாகத் துறை ஏற்படுத்திய பின்னர் இந்த ஆண்டில், முதன் முறையாக தண்டுப் பதியன்களுக்குப் பதிலாக வேர்ப்பதியன் களைப் பயிரிடுவதை நோக்கமாகக் கொண்ட சோதனைத் திட்டம் ஒன்று மேற்கொள் ளப்பட்டது: 1988 —89-ம் ஆண்டில் 4,000 ஏக்கர் பரப்பில் (நிலத்தை) முசுக்கொட்டை செடி பயிரிட வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 4,100 ஏக்கா பரப்பில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம 3,850 விவசாயிகள் முசுக்கொட்டை செடி சாகுபடியில் ஈடுபட்டிருந்தனர். முதலில் இலக்கிடப்பட்டவாறு 4,000 விவசாயிகளுக்கு உதவித்தொகையுடன், பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. பழங்குடியினர் பகுதி அல்லாத பிற பகுதியில் வசிக்கின்ற பழங்குடியினருக்கு உதவுவதற்காக முதன்முறையாக திட்டம் ஒன்று தொடங் கப்பட்டது. பெரியார் மாவட்டத்திலுள்ள கடம்பூர், பர்கூர் மலைப்பகுதிகளில் வசிக் கின்ற மொத்தம் 54 பழங்குடியினர் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். இத் திட்டத்திற்குப் பழங்குடியினரிடமிருந்து கிடைத்துள்ள வரவேற்பு ஊக்கமளிப்ப தாக உள்ளது. பெரியார் மாவட்டத்திலுள்ள மாடஹள்ளிப் பண்ணையில், முசுக் கொட்டைச் செடி சாகுபடியிலிருந்து பட்டுப்புழு வளர்ப்பை பிரிப்பதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, 125 ஏக்கரில் முசுக்கொட்டை செடிகள சாகுபடி செய்யப்பட்டன. பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொள்வதற்காகச் சுற்று

புறக் கிராமங்களில் நிலமற்ற 125 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு முசுக்கொட்டைச் செடியின் இலைகளைப் பறிக்கின்ற உரிமை அளிக்கப்பட்டது. மொத்த நிதி யொதுக்கமான ரூ. 384.31 இலட்சத்துக்கு மாறாக 1988—89-ஆம் ஆண்டில் திட்டப் பணியின் கீழ் ரூ. 361.55 இலட்சம் செலவு ஏற்பட்டது.

• வேறு வகையில் சொல்லப்போனால், இந்த ஆண்டிற்கான பட்டுப்புழு முட்டை உற்பத்தி, விநியோகம் செய்யும் திட்டமும் கைக்கொள்ளப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 15 மில்லியன் முட்டைக்கு மாறாக மாநிலத்திலுள்ள பட்டுப்புழு முட்டை வித்தகங்களின் 14.82 மில்லியன் முட்டை உற்பத்தி செய்யப்பட்டன.

அந்த ஆண்டிற்கான திட்ட இலக்கான 80 இலட்சம் கிலோகிராம் பட்டுக் கூடுகளுக்கு மாறாக 80.02 கிலோகிராம் பட்டுக் கூடுகளும் அதைப் போன்றே, திட்ட இலக்கான 3.00 இலட்சம் கிலோகிராம் கச்சாப் பட்டும் உற்பத்தி செய்யப்பட்டன. இம்மாநிலத்தில், பட்டுநூல் சுற்றுவதை ஊக்கப்படுத்தவும், அதன் மூலம் கர்நாடகத்திற்கு அதிக அளவில் பட்டுக்கூடுகள் அனுப்புவதைத் தடுக்கவும், நடைமுதல் மூலதனத்திற்கு வட்டி செலுத்துவதற்குரிய உதவித் தொகைத் திட்டமொன்று தொடங்கப்பட்டது. 1988—89ஆம் ஆண்டில் 103 தனியார் திட்டங்களுக்கு உதவித்தொகை அளிக்கப்பட்டது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்.**—1981—82ஆம் ஆண்டில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டுப்புழு வளர்ப்பைச் செயற்படுத்தத் திட்டம் தொடங்கப்பட்டது. 1988—89ஆம் ஆண்டில், திட்ட இலக்கான 180 ஏக்கருக்கு மாறாக 151 ஏக்கர் முசுக்கொட்டைச் செடி சாகுபடியின்கீழ் கொண்டுவரப்பட்டது. திட்ட இலக்கின்படி சாகுபடி நிலத்தின் பரப்பில் குறைவு ஏற்பட்டதற்குக் காரணம் மலைப்பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததேயாகும். அரசு, ரூ. 16.2 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டுக்கு வகை செய்தது. அந்த ஆண்டில் ரூ. 11.95 இலட்சம் ரூபாய் செலவிலேயே திட்ட சாதனை எய்தப்பெற்றது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்.**—மலைப்பகுதியில் வாழ்கின்ற பழங்குடியினர் குடும்பங்களின் சமுதாயப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம், திருச்சிராப்பள்ளி, தென்ஆற்காடு, தருமபுரி, வடஆற்காடு மாவட்டங்களிலுள்ள மலைப்பகுதிகளில் பட்டுப்புழு வளர்ப்புத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

1988—98ஆம் ஆண்டில், 300 குடும்பங்களை பட்டுப்புழு வளாப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற திட்ட இலக்கின்படி பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 300 குடும்பங்கள் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின கீழ் கொண்டுவரப்பட்டன. அந்த ஆண்டிற்கான நிதியொதுக்கீடு ரூ. 73.22 இலட்சம் ஆகும். ரூ. 70.90 இலட்சம் செலவிலேயே திட்டச் சாதனை எய்தப் பெற்றது.

**மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம்.**—மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி, அண்ணா, காமராஜர், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மாதிரி நர்ஸரி பண்ணைகள், நாற்றங்கால் பண்ணைகள், பயனடைவோரை மையமாகக் கொண்ட திட்டம் போன்ற பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆண்டில் 100 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடியைச் சாகுபடி செய்ய வேண்டும் என்று திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 200 விவசாயிகளைக் கொண்டு 100 ஏக்கரில் முசுக்கொட்டை செடிகள் சாகுபடி செய்யப்பட்டன. அந்த ஆண்டிற்கு அனுமதியளிக்கப்பட்ட நிதியொதுக்கீடு ரூ. 10.18 இலட்சம் ஆகும். ஏற்பட்டசெலவு ரூ. 9.75 இலட்சம் மட்டுமேயாகும்.

## புதிய திட்டங்கள்.

**போர்டு ஃபவுண்டேஷன் நிறுவன நிதியுதவி பெற்ற திட்டம்.**—200 பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பின் கீழ் உதவியளிக்கும் திட்டமாகக் கருதப்பட்ட ஃபோர்டு ஃபவுண்டேஷன் நிறுவன நிதியுதவி பெற்ற இத் திட்டம் (கட்டம் I) 1984-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 31—12—1988-ல் முடிவடைந்தது. இத திட்டத்தின் தொடர்ச்சியாக II-ஆம் கட்டத்திற்கான திட்டம் மூன்றாண்டுகளுக்கும் மேலான கால அளவில் ரூ. 33.48 இலட்சம் கொண்ட முழு மானிய உதவியுடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, பட்டுநூல் சுற்றுவதிலும், இளம்புழு வளர்ப்பிலும் நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த பெண்களை ஈடுபடுத்தி, தருமபுரி, சேலம், பெரியார் ஆகிய மாவட்டங்களில் செயற்படுகின்ற வகையில் பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

பட்டுப்புழு வளர்ப்பின் மூலம் சுயவேலை வாய்ப்பை அளித்து பெண்களின் நிலையை மேம்படுத்த ஃபோர்டு ஃபவுண்டேஷன் நிறுவனத்திடமிருந்து 75,000 அமெரிக்க டாலர்களைக் கொண்ட முடிவான மானியம் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்விட்சர்லாந்து மேம்பாட்டுக் கூட்டுறவு திட்டம்.—1987 நவம்பர் திங்களில் ஸ்விட்சர்லாந்து அரசுக்கும், இந்திய அரசுக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இதன்படி, மாநில அரசின் பங்குத் தொகையான ரூ. 21.90 இலட்சத்தையும், ஸ்விட்சர்லாந்து அரசின் பங்குத் தொகையான ரூ. 99.90 இலட்சத்தையும் கொண்டு 3 ஆண்டுகளுக்கும் மேலான கால அளவில் பெரியார், தருமபுரி மாவட்டங்களில் 3 பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஸ்விட்சர்லாந்து மேம்பாட்டுக் கூட்டுறவு உதவித் தொகைத் திட்டத்தின் மற்றொரு கூறு, மழைபொழியும் நிலைமைக்கு ஏற்ப முசுக்கொட்டைச்செடி சாகுபடியைமேற்கொள்ள செய்வதாகும். இத்திட்டத்தின்கீழ் 1989—90ஆம் ஆண்டின் சாகுபடி பருவத்தில் நாற்றங்கால்களை இலவசமாக விநியோகிப்பதற்காக 7.20 இலட்சம் நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பட்டுப்புழு முட்டை, பட்டுப்புழுக் கூடுகள் உற்பத்தி செய்யும் பகுதிகள், கிராமப் பகுதிகள் ஆகியவற்றில் நோய்த் தடுப்பு முறைகளை எடுத்துக்கூறும் பயிற்சிக் குழுக்களும், நடமாடும் பட்டுக்கூடு அங்காடிகளும் செயற்பட்டு வருகின்றன. திட்டம் செயற்படும் முறையைக் கண்காணிப்பதற்கு நிருவாகப் பிரிவு ஒன்றும் செயல் பட்டு வருகிறது.

உலக வங்கி உதவித் தொகை திட்டம்—இத்தொழில் வளர வாய்ப்புள்ள 9 மாவட்டங்களில் 30,000 ஏக்கரில் முசுக்கொட்டைச்செடி சாகுபடியை அதிகரிப்பதற்கானதிட்டம் ஒன்றுக்கு உதவித்தொகை பெறுவதற்காக உலக வங்கியின் உதவி நாடப்பட்டது. மதிப்பீடு செயற்குழு, 1988 அக்டோபர் திங்களில் இந்தியாவிற்கு வந்து மாநில மத்திய அரசு அதிகாரிகளுடன் விரிவான விவாதங்களைச் செய்தது. திட்டச் செலவுகள் உட்பட திட்டத்திற்கான நிதியொதுக்கீடு ரூபாய் 41.77 கோடியாகும்.

உலக வங்கியின் உதவி பெறத் திட்டத்தின் முடிவில் அரசு சார்பற்ற பிற துறையில் பெருகிய வேலை வாய்ப்பு 1 இலட்சம் மனித உழைப்பு ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கக்கூடும் என்று தொடர் அடிப்படையில் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திட்டம் 1989—90ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படவிருக்கிறது.

## அத்தியாயம் 12.

### நல வாழ்வு இந்திய மருத்துவம் ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை

### பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவு.

**பிறப்பு இறப்பு :**

1. 1986-ம் வருட பிறப்பு இறப்பு திருமண பதிவுச் சட்டம் (1886-ம் வருடத்திய மத்திய சட்டம் V) இந்த சட்டத்தின்கீழ் பிறப்பு இறப்பு பதிவுகள் விருப்பத்துட் பட்டவை. இந்தச் சட்டம் மொத் தொகையில் சிறுபான்மையினரிடையே அமுல் படுத்தபபடுகிறது. அதாவது கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் இந்திய வாரிசுரிமை சட்டம் நடைமுறையில் உள்ளவர்களுக்கு மட்டுமே. இந்தச் சட்டத்தின் கீழ் எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்கள், தாசில்தார்கள், துணைத் தாசில்தார்கள் மாவட்டப் பதிவாளர்கள் சார்பதிவாளர்கள் மற்றும் இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம் 1972-ன்படி திருமணப் பதிவாளர்கள் ஆகியோர் பிறப்பு இறப்புப் பதிவாளர்கள் ஆவார்கள். இந்த பதிவாளர்கள் யாவரும் அவர்கள் இந்தச் சட்டப்படி பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவுகளின் நகல்களை ஒவ்வொரு காலாண்டு பிறப்பு இறப்பு திரு மணங்கள் தலைமைப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். இவ்வடிப்புகளின் நகல்கள் அட்டவணை செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறது.

இவ்வாண்டில் பிறப்பு, இறப்புகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. இதுபோல் முந்தைய ஆண்டிலும் பிறப்பு, இறப்புகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

2. தமிழ்நாடு மாநகர் முனிசிபல் சட்டம் 1919.—(அ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தங்கள் பதிவு செய்யும் வெளிநாட்டவர்களின் பிறப்பு, இறப்புகளின் வடிப்புகளை இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். சென்னை, மதுரை மாநகராட்சி சுகாதார அதிகாரிகள் இவ்வடிப்புகளை அனுப்பு கிறார்கள். இவ்வலுவலக இவ்வடிப்புகள் அட்டவணை செய்யப்பட்டு பாது காக்கப்படுகின்றன. இம்மாதிரி பிறப்பு, இறப்புகள் பற்றி இவ்வாண்டு சென்னை மாநகராட்சியிடமிருந்து அறிக்கைகள் வரப்பெறவில்லை. கடந்த ஆண்டு 174 அறிக்கைகள் பெறப்பட்டது.

(ஆ) இவ்வாண்டு மதுரை மாநகராட்சியிடமிருந்து பிறப்பு, இறப்புகள் குறித்து அறிக்கைகள் ஒன்றும் வரப்பெறவில்லை. முந்தைய ஆண்டின் பிறப்பு இறப்பு பற்றி அறிக்கைகள் பெறப்படவில்லை.

(இ) கோயம்புத்தூர் மாநகராட்சியிடமிருந்து பிறப்பு இறப்பு பற்றிய அறிக் கைகள் ஏதும் பெறப்படவில்லை.

3. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920.—இம்மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் வெளிநாட்டவர்களில் பிறப்பு இறப்பு குறித்த வடிப்புகளை இவ் வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். குறித்த காலங்களில் பிறப்பு, இறப்பு குறிப்பு களின் வடிப்புகள் பெறப்பட்டு அட்டவணை செய்து பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாண்டு பிறப்பு அறிக்கைகள் 10-ம் இறப்பு அறிக்கைகள் 7-ம் பெறப்பட்டன. கடந்த ஆண்டு 14 பிறப்பு அறிக்கைகளும் 10 இறப்பு அறிக்கைகளும் பெறப்பட்டன.

4. கன்டோன்மென்ட் கோர்ட் : தமிழ்நாட்டில் உள்ள கன்டோன்மெண்டுகளில் பதியப்படும் வெளிநாட்டவர்களின் பிறப்பு இறப்புகளின் வடிப்புகள் அதாவது வெலிங்டன் (நீலகிரி மாவட்ட) கன்டோன்மெண்ட் செயின்ட் தாமஸ் மவுண்ட் மற்றும் பல்லாவரம் (செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம்) கன்டோன்மென்ட்களிலிருந்தும் வடிப்புகள் பெறப்பட்டு அட்டவணை செய்து இவ்வலுவலகத்தில் பாதுகாக்கப் படுகின்றன. இவ்வாண்டு பிறப்பு மற்றும் இறப்பு அறிக்கைகள் பெறப்படவில்லை. முந்தைய ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு வடிப்புகள் 20 பெறப்பட்டன.

5. பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் 1969.—இந்தச் சட்டப்படி கிராமப் புறங்களின் பிறப்பு இறப்புகள் கட்டாயப் பதிவு செய்யப்பட வேண்டும். வெளி நாட்டவர்கள் பொறுத்து பிறப்பு இறப்பு வடிப்புகள் இந்த சட்டத்தின்படி அனுப்பப் படவேண்டும். பெறப்படும் வடிப்புகள் இவ்வலுவலகத்தில் அட்டவணை செய்து பாதுகாக்கப்படுகின்றன. முந்தைய ஆண்டு பிறப்பு அறிக்கைகள் 15-ம் இறப்பு அறிக் கைகள் 10-ம் பெறப்பட்டன. இவ்வாண்டு பிறப்பு மற்றும் இறப்பு அறிக்கைகள் பெறப் படவில்லை.

### 2. திருமணங்கள்

(அ) இந்திய கிறிஸ்துவ திருமண சட்டம் 1872 :

(1) இந்தச் சட்டத்தின்கீழ் திருமணம் செய்விக்கக் கூடியவர்கள் வருமாறு :—

(1) பிரிவு 7-ன்படி திருமணப் பதிவாளர்கள் ;

(2) பிரிவு 6 மற்றும் 9-ன்படி உரிமம் பெற்றவர்கள் :

(3) ரோம், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, சர்ச்சுகளில் பாதிரியார்கள் :

(4) இதர சர்ச்சுகளில் அபிஷேகம் பெற்ற பாதிரிமார்கள். வெளிநாட்டவர்களின் திருமணப் பதிவுகளின் வடிப்புகளை திருமணப் பதிவாளர்கள் உரிமதாரர்கள் பாதிரிமார்கள் மாதாமாதம் அனுப்புகிறார்கள். இந்திய கிறிஸ்துவர்களின் திருமண வடிப்புகள் ஒவ்வொரு காலாண்டுக்கும் அனுப்பப்படுகின்றன.

(ஆ) இவ்வாண்டில் 23,762 திருமண வடிப்புகள் பெறப்பட்டன. அவற்றில் 7 வெளிநாட்டவர்களுக்கும், 23,761 இந்திய கிறிஸ்துவர்களுக்கும் சார்ந்தவை. கடந்த ஆண்டு பெறப்பட்ட 18,475 திருமண வடிப்புகளில் 85 வெளிநாட்டவர்களும் 18,390 இந்திய கிறிஸ்துவர்களுக்கும் சார்ந்தவை.

(இ) பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், 1936.—இந்தச் சட்டத்தின் கீழ் பதிவாளர்கள் இந்திய பதிவுச் சட்டம் பிரிவு 4-ன் கீழ் நியமிக்கப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் ஆவார். திருமணம் நடத்தி கொடுத்த புரோகிதர் திருமணம் செய்து வைத்தபின் திருமணச் சான்று மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பவேண்டும். இதைப் பதிவாளர் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். பதிவேட்டில் குறித்தபடி சான்று இவ்வலுவலகத்திற்கு ஒவ்வொரு காலாண்டும் அனுப்பப்பட வேண்டும். இந்த வடிப்புப்பணி அட்டவணை செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாண்டில் திருமணங்கள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. கடந்த ஆண்டில் திருமணம் பதிவு செய்யப்படவில்லை.

## 3. நிதிநிலைமை

பிறப்பு இறப்பு திருமணச் சட்டங்கள் கீழ் இவ்வாண்டு வருவாய் ரூ. 2,07,779.20. கடந்த ஆண்டு வருவாய் ரூ. 1,66,352.70 இந்த ஆண்டு பணியாளர்கள் செலவு ரூ. 84,900.10 கடந்த ஆண்டு செலவு ரூ. 69,737.40.

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர் :

பேறுகாலத்திற்கு முன்னும் பின்னும் ரூ. 200 கர்ப்பிணிகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.—பேறுகாலத்திற்கு முன் பின் இரண்டு மாதங்களுக்கு மாதம் ரூ. 50 வீதம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவி வழங்க அரசு இத்திட்டத்தை அமுல் நடத்துகிறது.

குடும்ப நலத் திட்டப் பணியில் பொது சுகாதாரத் துறையின் சாதனை.—குடும்ப நலத் திட்டத்தின் கீழ் நிரந்தர அறுவை சிகிச்சை மற்றும் கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர்களில் 80 சதவிகிதம் சாதனையை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை பணியாளர்களே ஆற்றியுள்ளனர்.

துணை சுகாதார நிலையங்கள்.—3,000 முதல் 5,000 மக்கட் தொகைக் கொண்ட பகுதிக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற கணக்கில் ஒரு துணை சுகாதார நிலையம் உண்டாக்கப்பட்டு ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திற்கும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் சுகாதார பணியாளர்கள் அம்மக்கட் தொகைப் பகுதிக்கு நோய்த் தடுப்பு மற்றும் சுகாதாரப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

துணை சுகாதார நிலையங்கள் கட்டுதல்.—மைய அரசின் பரிந்துரைப்படி குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளைக் கொண்டு இத்துணை நல நிலையங்களுக்கான கட்டிடம் கட்டப்படுதல் வேண்டும். பகுதி 2 நிதி ஒதுக்கீட்டில் கீழ் தமிழக அரசு இக்கட்டடங்கள் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது.—

| | |
|---|---|
| மொத்த துணை சுகாதார நிலையங்கள் | 8,681 |
| கட்டிடங்கள் தேவைப்படும் துணை சுகாதார நிலையங்கள் | 3,508 |
| சொந்தக் கட்டிடத்தில் செயல்படும் துணை சுகாதார நிலையங்கள். | 5,172 |

துணை சுகாதார நிலையத்திற்கான கட்டிடங்கள் தன்னிறைவுத் திட்டம், கிராம குடும்ப நலத்திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் டானிடா மற்றும் மக்கள் பங்கேற்புத் திட்டம், மலைப் பிரதேச வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டம் ஆகியவைகளின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

<u>சிறு சுகாதார நிலையங்கள் திட்டம், தமிழ்நாடு:</u>—"கிராம சுகாதார கைடு" திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக சிறு சுகாதார நிலையங்கள் நோய் தீர்ப்பு தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்காக அரசு சார்பற்ற நிறுவனங்களினால் மாநில மற்றும் மைய அரசு நிதி உதவி பெற்று நடத்தப்படுவதாகும். ஒவ்வொரு நிலையமும் 5,000 முதல் 10,0000 குடும்பங்களுக்காக செயல்படுகிறது. இம்மாநிலத்தில் தேவைக்கேற்ப துணை சுகாதார நிலையங்கள் இல்லாதிருந்த 1977-78-ல் சிறு சுகாதார நிலையங்கள் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

சிறு சுகாதார நிலையங்களில் நலப்பணிகள் பகுதி நேர மருத்துவ அதிகாரிகள் மற்றும் நலப் பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. தற்போது. 31—3—1989 அன்று தமிழ்நாட்டில் 209 சிறு சுகாதார நிலையங்கள் இயங்கி, வருகின்றன. நிதி உதவியானது மாநில அரசின் பங்கு ரூ. 9,000 என்ற அளவிலும், மைய அரசின் பங்கு ரூ. 9,000 என்ற அளவிலும் எஞ்சிய ரூ. 9,000 தொண்டு நிறுவனங்களையும் சாரும.

<u>பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டம்.</u>—மைய அரசின் பரிந்துரைக்கேற்ப பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டம் கிராமப்புறங்களில் 3,000 முதல் 5,000 மக்களுக்கு ஒரு இணை ஆண் மற்றும் பெண் நலப் பணியாளர்கள் மூலம் துணை சுகாதார நிலையம் வாயிலாக, இதுகாறும் நடத்தப்பட்டு வந்த தனித்தனி நலத் திட்டங்களுக்கு மாற்றாக குடும்பநலம் உள்ளிட்ட அனைத்து நலத் திட்டங்களையும் உள்ளடக்கி அடிப்படை நலப்பணிகளை நல்குவதே ஆகும்.

<u>குழந்தை உயிர் பிழைப்பு நெறிமுறைகள் :</u>

<u>தடுப்பூசித் திட்டம்.</u>—பெரியம்மை, நரம்புச் சிலந்தி நோய் மற்றும் பிளேக் ஆகிய நோய்களை அறவே ஒழித்துவிட்ட நிலையில் மாநில அரசு இளம்பிள்ளை வாத நோயினை 1994-ஆம் ஆண்டிற்குள் ஒழித்திட உறுதி பூண்டுள்ளது.

1985–86 முதல் நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் யாதெனில் அனைத்து கர்ப்பிணிகளுக்கும் 2 தவணை இசிவு நோய் தடுப்பூசி போடுதலும், அனைத்து தகுதியுள்ள குழந்தைகளுக்கும் பி.சி.ஜி. (காச நோய்க்கெதிரான தடுப்பூசி) போடுதலும் ஒரு தவணை தட்டம்மை தடுப்பூசி போடுதலும், 3 தவணை முந்நோய்த் தடுப்பூசி (டி.பி.டி) போடுதலும் மற்றும் இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து கொடுத்தலும் ஆகும்.

கிராமப்புறங்களில் ஒவ்வொரு புதன் கிழமையும் அந்தந்த கிராமங்களிடையே தடுப்பு ஊசி போடப்படுகிறது. நகர்ப்புறங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் குறிப்பிட்ட இடங்களில் அதாவது சத்துணவுத் திட்ட மையம், குழந்தை நல நிலையம், ஒருங்கிணைந்த குழந்தை நல திட்டம் அங்கன்வாடி, ஆரம்பப்பள்ளி முதலான இடங்களில் தடுப்பூசி போடப்படுகிறது. மற்றும் நகர்ப்புறங்களிலும் புதனன்றே தடுப்பூசி போடப்படுகிறது.

<u>இசிவு நோய்க்குத் தடுப்பூசி :</u>

கர்ப்பிணிகளுக்கு இசிவு நோய்களைத் தடுக்க 2 தவணை இசிவு நோய்த் தடுப்பூசி நான்கு வார இடைவெளியில் போடப்படுகிறது. 1988–89-ல் 12.17 இலட்ச இலக்கெதிராக 10.53 இலட்சம் கர்ப்பிணிகளுக்கு இசிவு நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

<u>இளம்பிள்ளை வாத நோய்க்கெதிரான தடுப்பூசி :</u>

குழந்தைகளுக்கு அவை பிறந்த 6 வாரத்திலிருந்து 12 மாதங்களுக்குள் குழந்தைகளுக்கு 3 தவணை வாய்வழி சொட்டு மருந்து ஒவ்வொரு அளவுக்கும் 4 வார இடைவெளியில் கொடுக்கப்படுகிறது. அடிப்படையாக 3 தவணை சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஊக்குவிப்பு தவணை 16வது மாதத்தில் கொடுக்கப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டு 9.72 இலட்சம் இலக்கிற்கு 10.25 இலட்சம் குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கப்பட்டது.

(0-வயது) பிறந்த குழந்தைக்குச் சொட்டு மருந்து கொடுக்கும் திட்டம் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இது தவிர 9 ஆம் மாதத்தில் தட்டம்மை ஊசியுடன் இளம்பிள்ளை வாத சொட்டு மருந்து கொடுப்பதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

<u>தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய்களுக்கெதிரான தடுப்பூசி.</u>—ஆறு வாரம் முதல் 12 மாத வயது குழந்தைகளுக்கு 3 தவணை முந்நோய் தடுப்பூசி (டி.பி.டி) நான்கு வார இடைவெளியில் போடப்படுகிறது. நடப்பு ஆண்டில் 9.72 இலட்சம் இலக்குக்கு 11.05 இலட்சம் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி போடப்பட்டது. இது தவிர, ஊக்குவிப்பு தவணை தடுப்பூசி 16ஆம் மாதத்தில் போடப்படுகிறது.

**தட்டம்மைக்கெதிரான தடுப்பூசி :**

தட்டம்மைக்கெதிரான தடுப்பூசி 9 முதல் 12 மாத குழந்தைகளுக்குப் போடப் படுகிறது. ஒரே ஒரு தவணை மட்டுமே போடப்படுகிறது. மைய அரசு கொடுத்த 8.72 லட்சம் குழந்தைகள் இலக்குக்கு 10.67 இலட்சம் குழந்தைகளுக்கு இத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

**பி.சி.ஜி. (காச நோய்க்கெதிரான தடுப்பூசி) :**

பி.சி.ஜி. தடுப்பூசி பிறந்த குழந்தைகளுக்கும், ஒரு வயதிற்குட்பட்ட குழந்தை களுக்கும் போடப்படுகிறது. நடப்பு ஆண்டில் 9.72 இலட்சம் குழந்தைகள் இலக் கிற்கு எதிராக 11.92 இலட்சம் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி போடப்பட்டது.

**பற்றாமை நோய்களுக்கெதிரான சிகிச்சை :**

கர்ப்பகாலத்தில் ஊட்டச்சத்துக்குறைவு சோகை தடுப்பு.— ஊட்டச் சத்துக் குறைவு, சோகை நோய் கர்ப்பிணிகளிடையே கடைசி 3 மாத கர்ப்ப காலத்தில் பரவலாக உள்ளது. இதைத் தடுக்க இரும்பு மற்றும் போலிக் அமிலம் மாத்திரைகள் (எப்.எஸ்.டி. பெரியவை) கொடுக்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர், சங்க நல செவிலியர், பகுதி செவிலியரது மேற்பார்வையில் கிராம நல செவிலியரால் இந்த இரும்புச் சத்து மாத்திரை கொடுக்கும் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. 1988–89-ல் 13.40 இலட்சம் கர்ப்பிணிகள் இலக்கிற்கு எதிராக 10.33 இலட்சம் கர்ப்பிணிகளுக்கு இரும்புச்சத்து மாத்திரை வழங்கப்பட்டது.

**குழந்தைகளிடையே இரத்த சோகைத் தடுப்பு :**

இரும்பு மற்றும் போலிக் அமிலம் மாத்திரைகள் (எப்.எஸ். டி. சிறியவை) மற்றும் இரும்புச்சத்து டானிக் 1 முதல் 5 வயது குழந்தைகளுக்கு இரத்த சோகையைத் தடுப் பதற்காக கொடுக்கப்படுகிறது. 1988–89-ல் 30 இலட்சம் இலக்கிலும் எதிரே 21.77 இலட்சம் குழந்தைகளுக்கு மேற்கண்ட மாத்திரை மற்றும் திரவம் கொடுக்கப்பட்டது.

**குழந்தைகளிடையே தடுக்கக்கூடிய பார்வைக்குறைவு தடுப்பு :**

ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளிடையே உயிர்ச்சத்து 'ஏ' குறைபாடு காரணமாக ஏற்படும் பார்வைக் குறைவு நோயைத், தடுக்க ஐந்து வயது வரையிலான குழந்தைகளுக்கு 6 மாதம் தொடங்கி 5 வயது வரை 6 மாத இடைவெளியில் 2 இலட்சம் அகில உலகு அளவு உயிர்ச்சத்து 'ஏ' திரவம் வாய் வழி கொடுக்கப் படுகிறது. 1988–89-ல் இத்திட்டத்தின்கீழ் 100 விழுக்காடு இலக்கு (அதாவது 30 இலட்சம்) எட்டப்பட்டது.

**வாய்வழி உமிழ்நீர் வறட்சி போக்கும் சிகிச்சைத் திட்டம் :**

வாய்வழி உடல்நீர் வறட்சிப் போக்கும் சிகிச்சைத் திட்டம் மத்திய அரசு உதவியுடன் 1986–87 முதல் தமிழ்நாடு அரசினால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சில மாவட்டங்கள் வீதம் பல கட்ட அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1989–90-ல் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. வயிற்றுப்போக்கினால் ஏற்படும் குழந்தைகள் உயிரிழப்பைக் குறைக்கும் நோக்கத் துடன் இத்திட்டம் துவக்கப்பட்டு உடல்நீர் வறட்சியைத் தடுப்பதற்கு வயிற்றுப் போக்கின்போது வீட்டில் உள்ள திரவ ஆகாரங்களைக் கொண்டும் வாய் வழி உப்புக் கரைசல் கொடுப்பதன் மூலமும் சமூக அளவில் கிராம அளவிலான பணியாளர் களைக் கொண்டு கடுமையான உடல் வறட்சியை போக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் வயிற்றுப் போக்கினால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைக்கும் நோக்கத் துடன் செயல்படுத்தப்பட்டது.

1. மருத்துவ அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்குப் பயிற்சி.

2. தாய்மார்களுக்கும் மக்களுக்கும் நல கல்வி மற்றும் பயிற்சி.

3. வாய்வழி வறட்சிப் போக்கும் கரைசல் தயாரிப்பதற்கான உப்புப் பொட்டலங்கள் வழங்குதல்.

4. பணியாளர்களைத் திரட்டி திட்ட செயலாக்கக் கண்காணிப்பு.

**கடுமையான மூச்சுக் குழல் தொற்றுக் கட்டுப்பாடு திட்டம் :**

இத்திட்டம் தமிழ்நாட்டில் சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் டானிடா திட்டத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் முன் மாதிரித் திட்டமாக இந்திய அரசு உதவியுடன் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல்பட உள்ளது.

பள்ளி நலத் திட்டம் :

தமிழ்நாட்டில் 153 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 40 தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளிலும் பற்றி சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் பரிசோதிக்கப்பட வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கையும் பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கையும் வருமாறு :—

| வருடம். | கிராமப்புறம். | | நகர்ப்புறம். | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1986–87 | 5,89,000 | 5,05,100 | 4,00,000 | 2,26,768 | 7,31,868 |
| 1987–88 | 5,89,000 | 4,92,697 | 4,00,000 | 2,01,422 | 6,94,119 |
| 1988–89 | 5,89,000 | 4,88,156 | 4,00,000 | 4,47,408 | 9,35,564 |

பள்ளி குழந்தைகளுக்கு இசிவுநோய் தடுப்பூசி திட்டம் :

பத்து மற்றும் பதினாறு வயதுடைய பள்ளிக் குழந்தைகளுக்கு இசிவுநோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. 1998–89ஆம் ஆண்டிற்கான சாதனை விவரம் வருமாறு :—

| வருடம். | 10 வயது. | | 16 வயது. | |
|---|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. |
| | (இலட்சத்தில்). | | | |
| 1988–89 .. .. | 5.61 | 7.19 | 9.25 | 4.53 |

ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டம் :

மத்திய அரசு ஆதரவுடன் ஒருங்கிணைந்த சேய் நல திட்டத்தின் கீழ் குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் அடங்கிய நலிந்த பிரிவினருக்கு ஒருங்கிணைந்த நலப்பணிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் ஏனைய நல திட்டங்களுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

டானிடா :

தாய்சேய் நலத் திட்டங்கள் முழுமையாக செயல்படுவதற்கு டானிடா நிறுவனம் உதவி புரிகின்றது. தமிழ்நாட்டில், இந்தத் திட்டம் தென் ஆற்காடு மற்றும் சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது. இத் திட்டத்தின்கீழ் துணை சுகாதார மையங்களுக்கு கட்டிடங்கள் மற்றும் பிரசவம் பார்ப்பதற்கு வேண்டிய உபகரணங்கள், மருந்துகள் ஆகியவை தரப்படுகின்றன. இந்த ஆண்டு டானிடா திட்டத்தின் முதற் பகுதி முடிந்து இரண்டாவது பகுதி ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஊட்டச்சத்து ஆராய்ச்சி மையம், சென்னை :

சென்னை இயக்குநரகத்தில் உள்ள சத்துணவு மையம் சத்துணவு சமைக்கும் அறிவியல் துறைப் பயிற்சித் திட்டம் மூலம் மருத்துவர் மற்றும் பல்வேறு சமூக நலப் பணியாளர்களுக்கு இப்பயிற்சியை அளிக்கிறது.

சத்துணவு உடலியல், வேதியல், இனத்திற்கினம் மாறுபடும் உணவு பழக்க வழக்க முறைகள் இவைகள் பற்றி நோய்கூறு ஆய்வுகள் மைய அரசு மற்றும் மாநில சத்துணவு மையங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. சத்துணவுக் கல்வி மற்றும் சமைக்கும் முறைகள் பற்றி நேர்கின்ற செயல் விளக்கம் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம் 1980–81 முதல் 1980 வரை.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தேவர் திருமகன், காமராசர், வ.உ. சிதம்பரனார், திண்டுக்கல் காயிதே மில்லத், செங்கை, வேலூர், அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை

சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் படிப்படியாக அமல் நடத்தப்பட்டது. ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அதன் துணை நல நிலையங்கள் மூலம் கிராமப்புற நலப்பணி மற்றும் அப்பணியில் பயிற்சி ஆகியவை பல்நோக்கு நலப்பணியாளர்கள் மூலம் அளிக்கப்படுகிறது. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான நலப் பாது காப்புத் தேவையை இத்துறை தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துணவுத் திட்டத்தின் உதவியோடு தன் பொறுப்பை ஆற்றியுள்ளது.

## மலைப்பகுதி மற்றும் மலைவாழ் மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.

### துணைத் திட்டங்கள் :

மலைவாழ் பகுதி வளர்ச்சித் திட்டம்.—மலைவாழ் மக்களின் வளர்ச்சித் திட்டமானது உதகமண்டல மாவட்டதில் 194 சுகாதார கிளை நிலையங்களில் தற்போது செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது அனுமதியளிக்கப்பட்ட அனைத்து கிளை நிலையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பணியாளர்கள் மகப்பேறு, குழந்தை நலம், நோய் தடுப்பு, குடும்ப நலம், ஊட்டச்சத்து சுகாதார நலக் கல்வி போன்ற அனைத்து தேவைகளையும் ஒட்டு மொத்தமாக வழங்கு கிறார்கள்.

நடப்பு ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 42 கிளை நிலையங்களில் 17 கிளை நிலையங் கள் முழுவதுமாக கட்டப்பட்டு செயல்படுகின்றன. எஞ்சிய 25 கிளை நிலையங்களில் அமைப்பு நடந்து கொண்டு இருக்கிறது.

### ஒருங்கிணைந்த மலை வாழ் மக்களின் நலத் திட்டம் மற்றும் துணை திட்டம்:

நமது இந்திய அரசின் வரையீட்டின்படி, மலைவாழ் பகுதியில் 3,000 மக்கள் தொகைக்கு ஒரு சுகாதார கிளை நிலையம் அமைக்கப்படுகிறது. இதன்படி 61 சுகாதார கிளை நிலையங்கள் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்திலும், 50 சுகாதார கிளை நிலையங்கள் ஒருங்கிணைந்த மலைவாழ் பகுதி வளர்ச்சித் திட்டத்திலும் செயல்படுத்தப்படுகிறது.

இந்த சுகாதார நிலையங்கள் அடிப்படை தேவைகளை தாய்சேய் நலம், குடும்ப நலம், நோய்த் தடுப்பு முதலான பணிகளை செயல்படுத்துகின்றன.

### தொற்று நோய் கட்டுப்பாடு:

கடுமையான குடல் இறைப்பை நோய்கள், கடுமையான வயிற்றுப் போக்கு, வாந்திபேதி, மலேரியா, முறைக் காய்ச்சல், டைபாய்டு காய்ச்சல், யானைக்கால் நோய், மூளைக்காய்ச்சல், காச நோய் முதலானவை பெரிய அளவில் பரவும் தொற்று நோய்கள் ஆகும். தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்தக்கூடிய நோய்கள், இளம்பிள்ளை வாதம் தட்டம்மை, கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான், இசிவு நோய் ஆகியவை யாகும். இந்நோய்கள் கட்டுப்படுத்த நிறைவேற்றிடும் திட்டங்களினால் இந்நோய் களினால் ஏற்படும் இறப்புகள் நலவுகள் குறைந்து உள்ளது. தொழுநோய் பால் வினை நோய்கள் (STD and AIDS) ஆகியவைகளும் முக்கியமான சுகாதாரப் பிரச்சினையாகும். இதனை அடியோடு ஒழிப்பதற்கு தகுந்த கட்டுப்பாடு திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

### தொற்று நோய்கள்:

தொற்று நோய்களினால் மக்கள் நலம் மற்றும் பொருளாதாரம் பாதிப்பதுடன் நோய்களையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்துகின்றன. தகுந்த நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அறிவிப்புக்கள் செய்வதன் மூலம் இந்நோய்கள் பரவுவதை தடுக்க முடியும். 1939 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தின் 56 மற்றும் 66 பிரிவுகளில் தொற்று நோய்கள் கண்டவுடன் பொது மக்கள், தனி மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் கட்டாயமாக அறிவிப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### வயிற்றுப்போக்கு:

இந்நோய் தண்ணீரின் மூலம் வெகு விரைவாக பரவுவதுடன் அதிக அளவில் உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதால் இது மிகக் கடுமையான தொற்று நோய்களில் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. ஆண்டு முழுவதும் இந்நோய் ஏற்படும்போது தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட அதிக கவனம் செலுத்தப்படுகிறது. 1988—89 ஆம் ஆண்டில் 17,723 நபர்கள் கடுமையான குடல் இறைப்பை நோய்களா லும், 1,625 நபர்கள் வாந்திபேதி நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டது.

## ஒருங்கிணைந்த நோய் நுண்ணுயிர் கட்டுபாட்டுத் திட்டம்:

மலேரியா முறைக் காய்ச்சல். யானைக்கால் நோய், நரம்புச் சிலந்தி மற்றும் பிளேக் முதலான நுண்ணுயிர் வழி பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கண்காணிப்பு (மற்றும்) நோய் நுண்ணுயிர் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், மலேரியா ஒழிப்புத் திட்டம், நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம் (மற்றும்) யானைக்கால் நோய் கட்டுப்பாடு திட்டம் ஆகியவற்றின்கீழ் பணிபுரியும் பணியாளர்களைக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## மலேரியா (ம) தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம்:

தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் திருத்தப்பட்ட செயல் திட்டமாக மாநிலத்தில் 1977 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது. இச்செயல் திட்ட செலவுகள் அனைத்தும் மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. இச்செயல் திட்டத்திற் குண்டான பொருள்கள் (ம) உபகரணங்கள் அனைத்தும் 50 சதவீதம் மாநில அளவிலும் 50 சதவீதம் மத்திய அளவிலும் செயல்படுத்தப்படுகிறது. 1988—89 ஆம் ஆண்டிற்கான மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 76,226. இதில் சென்னை மாநகரத்தில் மட்டும் 45 சதவீதம் பதிவாகியுள்ளது.

## மூளைக்காய்ச்சல் நோய் :

இந்நோயை ஒழிப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மலேரியா திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களாலும் மற்றும் இது சம்பந்தப்பட்ட சாதனங்களாலும் நிறைவேற்றப்படுகிறது. 1988-89 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 12 மாவட்ட சுகாதாரப் பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 218 என்றும் இறந்தவர்களின் எண்ணிக்கை 95 நபர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

## யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம்:

தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் 1957 ஆம் ஆண்டு அமல்படுத்தப் பட்டது. குறைந்த அளவே அடிப்படை வசதிகள் இருப்பதை முன்னிட்டு இச்செயல் திட்டம் 35 நகர் பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 21 நோய்க் கட்டுப்பாட்டு பிரிவுகளும் 8/9 42 இரவு நேர சிகிச்சை நிலையங்களும், தலைமை நிலைய பிரிவு ஒன்றும் சென்னையில் ஆய்வுப் பிரிவு ஒன்றும் 70 லட்சம் மக்களின் பாதுகாப்பிற்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1988—89 ஆம் ஆண்டில் 10,25,209 இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. அவர்களில் 10,896 பேருக்கு மைக்ரோபைலேரியா புழு இருப்பதாகவும் அவர்களுள் 2,366 பேர்களுக்கு நோய் உள்ளதாகவும் கண்டறியப்பட்டது. இத்திட்டத்திற்குண்டான சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் செலவுகள் மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இப்போது இதை செயல்படுத்தப்படும் செலவுகள் அனைத்தையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

## பிளேக் நோய்:

1965 லிருந்து தமிழ்நாட்டில் மனிதருக்கு பிளேக் நோய் இல்லை. பிளேக் நோய் பரவும் பகுதிகள் சிலவற்றில் காட்டெலிகளிடையே பிளேக் தொற்று நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தருமபுரி, பெரியார், நீலகிரி, வடார்க்காடு மாவட்டங்களிலும், வேலூர், குன்னூர், உதகமண்டலம் நகராட்சிகளிலும் நோய் பகுதிகளில் எலி ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

## நரம்புச் சிலந்தி நோய்:

இம்மாநிலத்தில் நரம்புச் சிலந்தி நோய் ஒழிக்கப்பட்டு விட்டது. அப்படி இருந்தும் அண்டை அயல் பகுதிகளிலிருந்து இந்நோய் பரவாமல் இருக்க தேடும் நடவடிக்கை மக்கள் நலக்கல்வி மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அண்டை அயல் மாநிலங்களிலும் இந்நோய் அறவே ஒழிக்கப்படுவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இந்திய அரசின் அறிவுரைப்படி நரம்புச் சிலந்தி நோய் கண்டு பிடிப்புத் திட்டம் ஆண்டுக்கு 2 முறை நடைபெற்று வருகிறது. 1986 ஆம் ஆண்டு அயல் மாநிலத்திலிருந்து வந்த 4 பேர்களுக்கும் 1987 ஆம் ஆண்டு ஒருவருக்கும் இந்நோய் இருப்பதாக கண்டு பிடிக்க பட்டது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்ததுடன் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டன. அண்டை மாநிலங்களிலும் இந்நோய் அடியோடு ஒழிக்கும்வரை இத்திட்டம் தொடர்ச்சியாக செயல்படுத்தப்படும்.

## காலா ஆஜார் ( KALA AZAR ):

இந்நோய் முன்னொரு காலத்தில் சென்னை மாநகரில் காணப்பட்டது. பின் இந்நோய் இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்பட்டது. பிறகு தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் டி.டி.டி. மற்றும் பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பினால் சிறிது சிறிதாக மறைந்து வந்தது. இருந்தும் 1979 ஆம் ஆண்டில் ஒரு சிலருக்கு இந்நோய் இருந்தது. பின் டி.டி.டி. பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பது சிறிது சிறிதாக நிறுத்தப்பட்டதின் காரணமாக பீகார் மாநிலத்தில் இருந்து இங்கு வந்த சிலரால் இந்நோய் பரவ ஆரம்பித்தது.

## பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு நிலையம், ஓசூர்:

10–2-1987 முதல் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இந்நிலையத்தில் பூச்சிகள் மற்றும் விலங்குகளால் ஏற்படும் நோய்கள் பற்றிய பூச்சியியல் மற்றும் (SERUM) ஊனீர் ஆய்வுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

## பார்வைக்கோளாறு கட்டுப்பாடு திட்டம்:

பார்வைக்கோளாறு திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் பலநோக்கு சுகாதார பணியாளர்கள் புற நோயாளிகளைக் கண்டறிந்து புரை அறுவை சிகிச்சைக்கு நடமாடும் கண்சிகிச்சைப் பிரிவில் ஓரளவு புரை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முழு அளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 145 கண் சிகிச்சை உதவியாளர்கள், பள்ளி குழந்தைகளின் பார்வை தன்மையை கண்டறிந்து வெளிப்புற நோயாளிகளாக சிறு அளவிலான நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் சரியான பார்வை அளிப்பதற்கு கண்ணாடி அணிய பரிந்துரைப்பதுடன் புரை நோய்களையும் கண்டறிகின்றனர்.

## பிறப்பு-இறப்பு பதிவு:

குடிமுறைப் பதிவு.—1969 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மத்திய அரசின் பிறப்பு, இறப்பு சட்டம் மற்றும் அதையொட்டி 1977 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பிறப்பு, இறப்பு பதிவு விதிகளின்படி, பிறப்பு இறப்புக்களைப் பதிவு செய்தல் மாநில முழுவதும் கட்டாயமாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பொதுசுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தலைமைப் பதிவாளராகச் செயல்படுகிறார்.

## மாதிரிப் பதிவுத் திட்டம்:

பிறப்பு, இறப்பு வீதங்களின் சரியான மதிப்பீடுகளை அறியும் நோக்கத்துடன் இந்திய அரசின் முதன்மை பதிவாளரின் தொழில் நுட்ப வழிகாட்டுதல்படி தமிழ் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பொது சுகாதாரத் துறையின் பார்வையில் 150 கிராமப் பிரிவுகளிலும் மக்கள்தொகை கணக்கெடுப்பு துறை பார்வையில் 40 கிராம பிரிவு மற்றும் 40 நகர்ப்புற பிரிவுகளிலுமாக அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசின் முதன்மைப் பதிவாளரால் வெளியிடப்பட்ட மாதிரிப் பதிவுத் திட்டத்தின்கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு வீதம் பின்வருமாறு:—

| வருடம். | கிராமப்புறம். | நகர்ப்புறம். | இரண்டும் சேர்ந்து. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **பிறப்பு வீதம்.** | | | |
| 1988 (தற்காலிகம்) | 23.2 | 21.1 | 22.5 |
| **இறப்பு வீதம்.** | | | |
| 1988 | 10.2 | 7.1 | 9.2 |
| **சிசுக்களின் மரண வீதம்.** | | | |
| 1988 (தற்காலிகம்) | 84 | 51 | 74 |

## டானிடா நிதியுதவி பெறும் தமிழ்நாடு பகுதித் திட்டம்.

**முன்னுரை:**

இந்திய அரசிற்கும் டென்மார்க் அரசிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்களில் ஆரம்ப சுகாதார நலத்திட்டத்திற்கு டானிடா 1981 ஆம் ஆண்டு முதல் உதவி வருகிறது. சுகாதார வசதிகள் குறைவாக உள்ள சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள் இத்திட்டத் தின்கீழ் அடங்கும்.

இத்திட்ட மாவட்டங்களில், சுகாதார வசதிகளை வலுவூட்டி சுகாதாரம் மற்றும் குடும்பநலச் சேவைகளை திறமையாகப் பயன்படும் வண்ணம் செய்து அதனால் கிராம மக்களின் சுகாதார நிலையை மேம்பாடடையச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

**திட்ட அமைப்பு:**

திட்டமிடல், செயலாக்கம் மற்றும் மதிப்பீடு ஆகியவை திட்ட இயக்குநரின் பொறுப்பாகும். தடுப்பு மருந்து இயக்குநர், மருத்துவப் பணிகள் இயக்குநர், ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநர் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் ஆகியவர் களுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை அமல்படுத்துகிறார். துணைத் திட்ட இயக்குநர் (பயிற்சி), துணைத் திட்ட இயக்குநர் (வழிப்படுத்துதல்) மற்றும் ஆய்வு, கணக்கு அலுவலர் மற்றும் ஏனைய அலுவலர்கள் மாநில மட்டத்தில் திட்ட இயக்குநருக்கு உதவியாய் உள்ளனர். மாவட்ட அளவில், மாவட்ட அளவிலான அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மாவட்ட திட்ட அலுவலர் திட்டப் பணிகளைச் செயல்படுத்துகின்றார். உதவித் திட்ட அலுவலர், பயிற்சி ஒருங்கிணைப்பாளர், செவிலியர் மற்றும் ஏனைய அலுவலர்கள் மாவட்ட திட்ட அலுவலருக்கு உதவியாய் உள்ளனர். இரு திட்ட மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு சுகாதார மாவட்டங்களிலும் மாவட்டப் பயிற்சிக் குழுக்கள், மருத்துவர், செவிலியர் மற்றும் சுகாதாரப் பயிற்சியாளர் ஆகியோருடன் சுகாதாரப் பணியாளர்களுக்கு பணிவிடைப் பயிற்சி அளிக்க நிறுவப்பட்டுள்ளது.

**1. துணை நல நிலையங்கள் அமைத்தல்:**

5,000 மக்கட் தொகைக்கு ஒரு துணை நல நிலையம் என்ற கோட்பாட்டிற்கிணங்க, இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக 680 துணை நல நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து 1,380 துணை நல நிலையங்களுக்கும் தேவையான நலப் பணியாளர்கள் பெட்டி (கிட்ஸ்) மருந்துகள், அறை கலன்கள், கருவிகள், அச்சிடப்பட்ட படிவங்கள் மற்றும் தகவல் தொடர்பு வழிச் சாதனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**2. சுகாதார வசதிகளுக்கான கட்டுமானம் மற்றும் பழுது பார்த்தல்:**

**கட்டுமான முன்னேற்றம்—(அ) துணைச் சுகாதார அளவில்:**

| | |
|---|---|
| துணைச் சுகாதார நிலையங்கள் .. .. | 525 |
| சுகாதார மேற்பார்வையாளர் குடியிருப்பு. | 282 |
| சுற்றுச் சுவர் .. | 126 |
| உறிஞ்சுக் குழிகள் | 745 |
| கம்பி வலைகள் .. | 184 |
| மின் வசதி .. .. | 66 |

**(ஆ) ஆரம்ப சுகாதார நிலைய அளவில் :**

| | |
|---|---|
| பொது பக்க மருத்துவமனைகள் | 16 |
| மருத்துவ அலுவல் குடியிருப்பு | 36 |
| சுற்றுச் சுவர் | 26 |
| அறுவை அரங்கு சரிசெய்தல் | 26 |
| கூட்ட மற்றும் பயிற்சி அரங்குகள் | 69 |
| கிரில்கள் .. | 9 |

(இ) வட்ட அளவில் :

அறுவை அரங்கு

பிரசவ பிரிவு

குழந்தைகள் பிரிவு

பழுது பார்த்தல் :

| | |
|---|---|
| துணைச் சுகாதார நிலையங்கள் | 261 |
| ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 68 |

3. ஆரம்ப சுகாதார நிலையங்களை வலுவூட்டுதல் :

இரு திட்ட மாவட்டங்களிலும் உள்ள 69 ஆரம்ப சுகாதார நிலையங்கட்கும் கீழ்க் கண்ட உள்ளீடுகள் நோய்த்தடுப்பு, குணம் ஆதல் போன்றவைகள் முன்னேறும் வகையில் வழங்கப்பட்டுள்ளன. மரச்சாமான்கள், மருத்துவம் மற்றும் அறுவை உபகரணம், ஸ்டாப் நர்ஸ், பெண் நர்சிங் உதவியாளர் பழுதுபட்ட வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள், குளிர்சாதன வசதிகள், பரிசோதனை நிலைய உதவியாளர் பயிற்சி, மக்கள் தொடர்பு சாதனங்களான இசைத்தட்டுக்கள், மெகாபோன்கள், படக்கருவி, கேஸெட், படிப்பெருக்கி, சமையல் பாத்திரங்கள்.

4. பயிற்சியும் நல்ப் பணியாளர் திறன் மேம்பாடும் :

அனைத்து சுகாதார ஊழியர்கட்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கும் வகையில் இரண்டு மாவட்டங்களிலும் ஆறு மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளது. இது களப்பயிற்சியாகும். திறன் மேம்பாடைய துணைச் சுகாதார நிலைய அளவிலும் கிராம அளவிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதுவரை கீழ் கண்டுள்ள பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன :—

(அ) பெண் சுகாதாரப் பணியாளர், பெண் சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோருக்குப் பணியிடைப் பயிற்சி.

(ஆ) மலைஜாதிப் பெண்களுக்கான உதவி சுகாதாரப் பணியாளர் பயிற்சி.

(இ) பலநோக்கு பெண் சுகாதாரப் பணியாளர் பயிற்சி.

(ஈ) ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு நிர்வாகப் பயிற்சி.

(உ) மருத்துவ அலுவலர், பெண் சுகாதார மேற்பார்வையாளர், பெண் சுகாதாரப் பணியாளர், மதிய உணவு அமைப்பாளர்கள் முதலானோர்க்கு உயிர்ச்சத்து "ஏ" தொடர்பான பயிற்சி.

(ஊ) தடுப்பு மருந்து நடவடிக்கை.

(எ) கருத்தடை சாதனம் பொருத்தும் பயிற்சி.

செவிலியர் பயிற்சி :

இத்திட்டத்தின் ஊக்கத்தினால் சென்னையிலே பெண் நவ மேற்பார்வையாளர்களுக்கு செவிலியர்க்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது 30 பெண்கள் இரண்டாவது கட்டமாகப் பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளனர். கூடுதல் உபகரணங்கள் இப் பயிற்சி பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி நிலையங்களை வலுவூட்டுதல் :

கிராம சுகாதாரப் பயிற்சி நிலையம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பயிற்சி மையங்கள், பெண் சுகாதாரப் பணியாளர் பயிற்சி நிலையங்கள் ஆகியவைகளுக்கு மரச்சாமான்கள், புத்தகங்கள் சமுதாயத் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள் போன்றவைகள் வழங்கப்பட்டுள்ளன.

5. தாதியர் பயிற்சி :

4,577 தாதியர்களுக்கு பயிற்சியும் 3,077 பயிற்சி பெற்ற தாதியர்களுக்கு மறு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தாதியர்க்குத் தேவையான பொருட்களும் வழிகாட்டு நூல்களும் வழங்கப்பட்டுள்ளது.

6. புதுமையானத் திட்டங்கள் :

சுகாதாரம் மற்றும் குடும்பநல சேவைகளின் முன்னேற்றத்திற்குக் கீழே காணும் புதுமையான மாற்றுத் திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன :—

1. கிராம சுகாதார நல நிலையம், இன்னாடு, கல்ராயன்மலை மூலம் மலை ஜாதி மக்களுக்கு மருத்துவ வசதி அளித்தல்.

2. இரண்டு ஒன்றியங்களில் துணைச் சுகாதார நிலையத்திற்கு இரண்டு பெண் சுகாதாரப் பணியாளர் நியமனம் செய்தல்.

3. பேறு காலத்தின்போது உபயோகித்து பின் எறிந்து விடக் கூடிய பிரசவ சாதனங்களை கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்குதல்.

7. விரிவுபடுத்தப்பட்ட தடுப்பு மருந்து நடவடிக்கை :

மாநில அளவிலிருந்து கிராம அளவு வரை உள்ள குளிர்பதன சாதனங்கள் வலுவூட்டப்பட்டு மருந்தின் வீரியத்தைப் பாதுகாத்து தடுப்பூசி போட்டுக் கொள்வோர் எண்ணிக்கை பெருகும் வகையில் செய்யப்பட்டுள்ளது.

8. குடிநீர் வசதி :

828 துணைச் சுகாதார நிலையங்கள் மற்றும் பெண் சுகாதார மேற்பார்வையாளர்கள் குடியிருப்பு 61 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்பட்டுள்ளது.

9. செய்தித் தொடர்பு :

அனைத்துச் சுகாதாரப் பணியாளர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட நிறுவன முகவர்கள் மற்றும் கிராம இளைஞர்களுக்குச் செய்தித் தொடர்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கைப்பிரதி புத்தகங்கள், சார்ட், பண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டு சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தொடர்பு சாதனங்களான பதிவு நாடாக்கள், புரொஜெக்டர்கள், மெகாபோன்கள், கேஸெட் முதலியன இரு மாவட்டங்களுக்கும், 69 ஒன்றியச் செய்தித் தொடர்புக் குழுவிற்கும் வழங்கப்பட்டுள்ளது. படக் காட்சிகள், கலாச்சாரப் பாடல்கள், நாடகங்கள், பொம்மலாட்டங்கள் மற்றும் கிராமிய நிகழ்ச்சிகள், கிராம அளவில் நடத்தப்பட்டுள்ளது.

10. திட்ட விரிவாக்கம் :

தற்போது கொடையளிப்போர்கள் இத்திட்டத்தை இரண்டாம் கட்டமாக, மேலும் மூன்றாண்டுகள் தொடர இசைந்துள்ளதால் ரூ. 16.26 கோடி மூலதனத்துடன் கூடிய இரண்டாம் கட்ட திட்ட அறிக்கை மைய அரசு, டேனிடா மற்றும் திட்ட அலுவலர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது.

11. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு :

திட்ட நடவடிக்கைகள் திட்டம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவால் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது. இடைக்கால மற்றும் இறுதி மதிப்பீடு, வல்லுநர்கள் குழுவால் நடத்தப்பட்டுள்ளது. மதிப்பீடு மற்றும் ஆய்வுத் துறையாலும் திட்டச் செயல்பாடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நல நிர்வாகத் தகவல் முறை மேலும் எளிதாக்கப்பட்டு 1—4—1989 முதல் நடைமுறைப்படுத்த களம் ஆய்வு செய்யப்பட்டது.

12. திட்ட இரண்டாம் நிலைக்குத் திட்டமிடல் :

இக்காலக் கட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் விடுபட்ட வேலைகளை பூர்த்தி செய்ததோடு இத்திட்டத்தில் இரண்டாம் நிலைக்குத் தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் திட்டமிடுதலும் மிகக் குறைந்த அளவுப் பணியாளர்களுடன் இடைக்காலத் திட்டமாக நிறைவேற்றப்பட்டது.

13. நிதி நிலை முன்னேற்றம் :

1988–89ஆம் வருடத்தில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 93.99 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

இங் நோய்த்தடுப்பு மருந்து நிறுவனம்.

1. வெறிநாய்க்கடி மருந்து தயாரிக்கும் பிரிவு :

இத்துறை வீரியம் குறைந்த............ (British Pharmasuticals Limited) மருந்து போன்ற வெறிநாய்க்கடி மருந்து மாதிரிகள் தயாரித்து வழங்கும் பணியில் ஈடு பட்டுள்ளது. இத் தயாரிப்புப் பணிக்காக 2—3 மாதங்கள் வயதுடைய, நோய் நொடி யற்ற நல்ல உடற்பாங்குடைய செம்மறியாட்டுக்குட்டிகள் வாங்கப்படுகின்றன; குன்னூரிலுள்ள பாஸ்டர் நிலையத்திலிருந்து வாங்கப்பட்ட 600இல் ஒரு பங்கு தொற்று நச்சுத்தன்மை கொண்ட கிருமிகள் கொண்டு அந்த ஆட்டுக் குட்டிகளின் மூளை அடுக் குப் பகுதியில் தொற்று நோய்த்தடுப்பு ஊசி போடப்படுகின்றன. தொற்று நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்ட 6—7 நாட்களுக்குப் பின்னர், அந்த செம்மறியாடுகள் வெறி நாய்க்கடி நோய்க்கு உள்ளாகின்றன. அவற்றைக் கொண்டு அவற்றின் மூளை தனியே எடுக்கப்பட்டு உறைய வைக்கும் அறைகளில் சேமித்து வைக்கப்படுகின்றன. இந்த மூளையை ஒருவித இரசாயனச் சேர்மானத்துடன் கலந்து ஒரு படித்தான நிலைப் படுத்தி பீட்டா பிரிமியோலாக்டோன் கொண்டு வீரியம் குறைக்கப்பட்ட 10 சதவீதம் கரைசல் உருவாக்கப்படுகிறது. பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் 5 சதவீதத் தடுப்பு மருந்து வீரியச் சோதனை பாதுகாப்பான தன்மை பற்றிய நுண்ணுயிரியல் சோதனை ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படுகின்றன.

கடந்த ஆண்டு வரையிலும், நமது மாநிலத்தில் தேவையில் 50 விழுக்காடு குன்னூரிலுள்ள பாஸ்டர் நிலையத்திலிருந்து பெறப்பட்டது. மாநிலத்தின் முழுத் தேவையையும் நிறைவு செய்யும் வகையில் உற்பத்தி தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்புப் பிரிவு : Phrophylecitic Vaccine Section.

காலரா தடுப்பு மருந்து, டைபாய்டு தடுப்பு மருந்து ஆகியவை நோய்த்தடுப்பு மருந்து தயாரிப்புப் பிரிவில் தயாரிக்கப்படுகின்றன. இவை நம் மாநிலத்தின் தேவை யையும் பிற மாநிலத் தேவைகளையும் நிறைவு செய்வதுடன், வெள்ளம், வறட்சி போன்ற அவசர காலங்களின் தேவையையும் நிறைவு செய்கின்றன. பல்வேறு வகைப் பணியாளர்களுக்கு இவை குறித்துப் பாட வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இப் பிரிவில் அசிட்டிலின் திரவத்தின் கிருமியை வைத்து கொன்று, உறைய வைத்து, உலர்த்தப்பட்ட டைபாய்டு தடுப்பு மருந்து தயாரிக்கப்படுகிறது.

தேசிய அளவில் அவசரத் தேவை ஏற்பட்டபோது இந்நிறுவனம் டெல்லிக்கு மட்டுமல்லாது நாட்டிலுள்ள ஏனைய பெரிய மாநிலங்களுக்கும் 25 இலட்சம் '' டோஸ்'' களுக்கும் மேற்பட்ட காலரா தடுப்பு மருந்தைத் தயாரித்து வழங்கி அரசுக்கு கணிச மான வருமானம் ஈட்டித்தந்துள்ளது. ('' டோஸ் ''—ஒரு வேளை மருந்து.)

3. இசிவு நோய்த் தடுப்புத் துறை :

(1) நிணநீரைச் செழிப்பாக்கும் பிரிவு.—இந்தப் பிரிவு, நமது மாநிலத்திற்கும் ஏனைய வெளியிடங்களுக்கும் பாம்புக்கடி விஷ முறிவு மருந்தும் தயாரித்து வழங்கு கின்றது.

உயிர்காக்கும் மருந்துகளின் உற்பத்தியை 10,000 குப்பிகளாக உயர்த்த வேண்டு மென்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமென்றபோதிலும், மாநிலத்தின் தேவை அதி கரித்துள்ளதால், கூடுதல் ஈடுபொருள் ஏதுமின்றி துறை கிட்டத்தட்ட 15,000 மருந்து குப்பிகளைத் தயாரித்தது. மாநிலத்தின் தேவை முழுவதையும் சமாளிக்க உற்பத்தி அளவு 30,000 குப்பிகளாக உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. நிணநீர் நிலைப்படுத்தும் பிரிவு :

இப்பிரிவு இசிவு நோய்த்தடுப்பு (P.T.A.P.) மருந்துகளைத் தயாரிக்கின்றன; இவற்றுடன்கூட நோயைக் குணப்படுத்துவதற்கான இசிவு நோய்த்தடுப்பு மருந்து உற் பத்திக்கு ஏதுவாக குதிரைகளுக்குத் தொற்று நோய்த்தடுப்பு மருந்து செலுத்துவதற் குரிய உயர் அடர்வு கொண்ட இசிவு நோய் நுண்ம நச்சூட்டுப் பொருளையும் இசிவு நோய்த் தடுப்பு மருந்துகளையும் வழங்குகின்றன.

5. தொண்டை அழற்சி—இசிவு நோய்த் தடுப்பு மருந்து :

தொண்டை அழற்சி நோய்த்தடுப்பு மருந்தான டிப்திரியா டாக்ஸாய்டு தயாரிக் கும் முதன்மையான நோக்கத்துடனும், நம் மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்ய வும் நம் நாட்டின் E.P.I. திட்டத்திற்கு உதவும் வகையிலும் நோய்த்தடுப்பு சக்தியைத் தூண்டும் (Duel Antigen) மருந்து தயாரிப்பதற்காக டெட்டனஸ் டாக்ஸாய்டு என்னும் மருந்துடன் கலப்பதற்காகவும் ' கிங் நிறுவனத்தில் ' தொண்டை அழற்சி நோய்த்தடுப்பு மருந்து தயாரிப்பு பிரிவு ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரு துறைகளிலும் பெரும் மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து நாட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு சுத்தமான காற்றோட்ட வசதிகளும் ஏனைய நவீன வசதிகளும் செய்து கட்டிடங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. எல்லா வகையான உள்ளூர் சாதனங்களும் நிறுவப்பட்டுள்ளன. இந்த முன்னேற்றத்தில் நிறைவடைந்து இப்பிரிவைப் பார்வையிட்ட பல ஆலோசகர்கள், குறிப்பாக 'யூனிசெஃப் டானிடா' நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், இந்த மேம்பாடுகளைக் கண்டு மன நிறைவடைந்து நோய்த்தடுப்பு மருந்தை தயாரிக்கவும், சோதனையிடவும் நவீன எந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு ஏறக்குறைய ரூ. 80 இலட்சம் வரையில் உதவித் தொகையை வழங்கியுள்ளனர். முத்தடுப்பு மருந்து தயாரிப்பில், தேசிய E.P.I. திட்டத்தில் இது ஒரு பெரிய சாதனையாகும். அனைத்து நாடுகள் நிலையில், மருந்துத் தேவையை இது நிறைவு செய்கிறது.

## 6. நோய் நுண்ம நச்சாய்வுப் பிரிவு :

நோய் நுண்ம நச்சாய்வுத் துறையின் முக்கிய நோக்கம், நோயறிதலும், ஆராய்ச்சிப் பணிகளுமாகும்.

E.P.I. நோய்த்தடுப்பு மருந்துகளை குறிப்பாக இளம்பிள்ளை வாதம், தட்டம்மை ஆகிய நோய்களுக்கான தடுப்பு மருந்துகளைப் பெற்று, வழங்கி, பயன்படுத்தும் அனைத்து நிலைகளிலும் குளிர்பதன முறையில் வைத்துத் தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறது குறித்துக் கண்காணிப்புச் செய்வதற்கு நம் நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட 12 நிலையங்களில் இதுவும் ஒன்றாகும். இது தொடர்பாக, துறை ஆற்றிய நற்பணியைப் பாராட்டும் வகையில், இத்துறையின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு, கணிசமான அளவு நிதியுதவி அளிக்க மத்திய அரசு முன் வந்துள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில், மூளைக்காய்ச்சல் பரவியுள்ள பகுதிகளில் ஊனீர் சோதனை ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, மலேரியா நோய் ஒழிப்புத் தேசிய திட்டத்துடன் இனி வரும் ஆண்டுகளில் அயல்நாட்டு உடனுழைப்பு பணி ஒன்றும் மேற்கொள்வதற்கான திட்டம் உருவாகி வருகிறது. தமிழ்நாடு அரசு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு வழங்கிய ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கீடுகளைக் கொண்டு, இத்துறையின் விரிவாக்கப் பணிகளும் நவீனப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

## 7. நுண்ம (திசு) வளர்ப்புக் கரைசல் தயாரிப்புப் பிரிவு :

பல்வேறு வகை நுண்ம/திசு வளர்ப்பு கரைசல்கள் தயாரிப்புப் பணியை இப்பிரிவு கவனிக்கிறது. அடிப்படைக் கரைசல், செறிவூட்டப்பட்ட கரைசல், தெரிந்தெடுக்கும் வகை (பிரித்தெடுக்கும் வகை) கரைசல், குறித்துக்காட்டும் வகைக் கரைசல் என்று நுண்மச் சோதனைச் சாலைகளில் பயன்படுத்தப்படும் கரைசல்கள் பலதிறப்பட்டவையாகும். (இக்கரைசல்களை 'ஊடகம்' என்றும் அழைக்கலாம்) இது முற்றிலும் தனி நபரின் நேரடி கவனிப்பில் செய்ய வேண்டிய பணியாகும். எல்லா வகை பொது நிலை (ஊடக) கரைசல்களையும், சிறப்பு நிலை (ஊடக) கரைசல்களையும் தயாரிக்கும் முக்கியப் பிரிவு இதுவாகும். இப்பிரிவில் இன்னொரு இன்றியமையாப் பணி, மருந்துகள், மருத்துவக் கருவிகள், பொருட்களுக்கு தொற்றுக் கிருமி நீக்கப் செய்வதாகும்.

## 8. இரத்த சேமிப்பு வங்கிப் பிரிவு :

மாநிலம் முழுவதற்கும் இந்த வகை இரத்த சேமிப்பு வங்கிப் பிரிவு இது ஒன்று மட்டுமே ஆகும். இப்பிரிவில், மாநிலத்திற்குத் தேவையான இரத்த வகைகளுக்குரிய ஊநீரை (Blood Group Serum) தயாரித்து, இரத்த வங்கிகளுக்கு வழங்குகிறது. இரத்தம் செலுத்தும் நோக்கத்திற்காக, அரசு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள எல்லா இரத்த வங்கிகளுக்கும், இந்தப் பிரிவு இதனை வழங்குகிறது. தற்போது, தமிழ்நாட்டில் சுமார் 88 இரத்த சேமிப்பு வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 82 இரத்த சேமிப்பு வங்கிகள் மருத்துவமனைகளுக்கு இரத்தம் செலுத்தும் பணியை அளிக்கின்றன. எஞ்சியுள்ள இரத்த சேமிப்பு வங்கிகள் இன்னும் செயல்படத் தொடங்கவில்லை. தமிழ்நாட்டிலுள்ள எல்லா இரத்த சேமிப்பு வங்கிகளுக்கும், மத்திய இரத்த சேமிப்பு வங்கி இன்றியமையாப் பொருட்களை வழங்கி வருகிறது.

## 9. நோய் சிகிச்சை ஊசி மருந்துப் பிரிவு :

இப்பிரிவில், நோயறி மருந்து, நோய் சிகிச்சை ஊசி மருந்து, தர இருப்புக் (நுண்ணுயிர்/திசு வளர்ப்பு (ஊடகங்கள்) கரைசல்கள் (Standard Stock Cultures) ஆகியவை தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

## 10. நோய் சிகிச்சைப் பிரிவும் நிணநீரியல் பிரிவும் :

(அ) இந்த நோய் சிகிச்சைப் பிரிவில், உடனடியாக நோய் சிகிச்சையளிக்கும் நோக்கத்துடன் பல்வேறு ஆய்வுக்கூடச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. நுண்ணுயிரியல் அது தொடர்பான துறைகளில் பயிலும் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களும், பட்டமேற்படிப்பு பயிலும் மாணவர்கள் இப்பிரிவு அளிக்கின்ற நடைமுறை மருத்துவப் பயிற்சியின் மூலம் பயனடைகின்றனர்.

(ஆ) நிணநீரியல் பிரிவு : இரத்தத்தில் பால்வினை நோயறி (V.D.R.L.) சோதனை ரோஸ் வாலர் சோதனை (Rose waaler Test) பால் பன்னல் சோதனை (Paul Burell Test) கருவுற்றிருப்பதை அறிவதற்காக சிறுநீர்ச் சோதனை (Gravindex) போன்ற சோதனைகளை நோய்களைக் கண்டறிவதற்காக இப்பிரிவில் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) அம்போசெப்டர் (Amboceptor) முயல் குருதி (Rabit Blood) முயல் பிளாஸ்மா (Rabit Plasma) போன்ற நோய் எதிர்ப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

11. திங்கிழைக்கும் நுண்மங்களின் எதிர் நுண்மங்களைப் பெருக்கி இயற்கைக் கோளாறுகளை மட்டுப்படுத்தும் துறை :

இத்துறை, மாநில பகுப்பாய்வுக் கூடமாகச் செயல்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனைகள், மருந்தகங்கள், இரயில்வே பாதுகாப்புப் படைப்பிரிவு, தொழிலாளர் நலக்காப்புறுதி— மருத்துவமனைகள், மாஜிஸ்டிரேட்டு, பிற மாநிலங்கள் முதலிய பல் வேறு பிரிவுகளின் பயனுக்காக வாங்கப்படுகிற மருந்துப் பொருள்களின் பகுப்பாய்வுப் பணியையும் இத்துறை மேற்கொள்கிறது. கிண்டியிலுள்ள மத்திய அரசு நிறுவனமான பி.சி.ஜி. ஆய்வுக் கூடத்திலிருந்து பெறப்படும் பி.சி.ஜி. தடுப்பூசி மருந்தைப் பகுப்பாய்வு செய்வதற்கு இத்துறை தனது அரிய உதவியை அளித்து வருகிறது. பகுப்பாய்வுப் பணியில் தேசியத் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான அறிவிக்கப்பட்ட ஆய்வுக் கூடங்களில் இது ஒன்றாகும்.

இந்நிறுவனம் கடந்த சில ஆண்டுகளில் அனைத்து நடவடிக்கைகளிலும் முனைப்பான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. இதனால் முக்கிய மருந்துப் பொருட்களின் உற்பத்தி கணிசமான அளவு உயர்ந்துள்ளது என்பது வெளிப்படை. மத்திய அரசும், நோய்த்தடுப்பூசி மருந்துகளைத் தயாரித்தல், அவற்றைச் சோதித்தறிதல் ஆகிய பெரும் பணிகள் சிலவற்றில் இந்நிறுவனத்துடன் சேர்ந்து செயல்படுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறது.

12. விலங்கு பராமரிப்புப் பிரிவு :

இப்பிரிவில் கண்டெலி, எலிகள், கினி பன்றிகள், முயல்கள் முதலிய சிறிய விலங்குகள் பராமரிக்கப்பட்டு மாநிலத்திலுள்ள பெரிய ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆய்வுக்கூட சோதனைகள் நடத்துவதற்காக அந்நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

13. நூலகம் :

நுண்ணுயிரியல், நச்சு நுண்ணுயிரியல், நோய் எதிர்ப்பாற்றலியல், உயிர் வேதியல் மற்றும் அவை தொடர்பான துறைகளில் வெளிவரும் தரமான பத்திரிகைகளும் ஆய்வுக் குறிப்பு நூல்களும் இந்நூலகத்தில் கிடைக்கின்றன. நம்நாட்டில் அரிய ஆய்வுக் குறிப்பு நூல்கள் கிடைக்கும் நூலகங்களில் இதுவும் ஒன்றாகும்.

14. தொற்றுநோய்த் தடுப்பு மருந்து நிலையம், முதலுதவி— மருந்தகம் :

குறிப்பாக மஞ்சள் காய்ச்சல் நோய் ( Yellow fever ) இல்லை என்று சான்றிதழ் வழங்கும் பணியை இந்நிலையம் முக்கியமாக மேமற்கொள்கிறது.

15. கல்விப் பணிகள் :

இந்நிறுவனம், நுண்ணுயிரியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமேற்படிப்புக் கல்வி நிலையமாகச் செயல்படுகிறது. அறிவியல் பட்டதாரிகள் அல்லாத பட்டதாரிகளுக்கு முது அறிவியல் (நுண்ணுயிரியல்) படிப்பும் தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் 1944 ஆம் ஆண்டிலிருந்து ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்குப் பட்டபயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது, விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர் நிலை | .. | 1 |
| 2. ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர் நிலை .. | .. | 11 |

நடப்பாண்டில் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை :

| | | |
|---|---|---|
| ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர் நிலை I— | | |
| பயிற்சி உதவித்தொகை பெறுவோர் .. | 17 | |
| பயிற்சி உதவித்தொகை பெறாதவர்கள் .. .. | 15 | 32 |
| ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர் நிலை II .. | | |
| பணியாளர் .. .. .. .. | 34 | 34 |
| மொத்தம் | | 66 |

இந்நிறுவனத்தில் பணிபுரியும் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை .. .. .. .. ..

1988–89 ஆம் ஆண்டு வரவுகளும் செலவுகளும் :

| வரவு. | செலவு. |
|---|---|
| ரூ. | ரூ. |
| 11,82,820.26 | 2,16,12,122.35 |

உற்பத்தி பற்றிய விவரங்கள் :

| | 1988–89. (1989 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் வரையிலும்). | |
|---|---|---|
| **(i) நோய்க்கிருமி ஒழிப்பு கரைசல் தயாரிப்புப் பிரிவு :** | | |
| 1. புட்டிகளில் அடைக்கப்பட்ட கரைசல் | 1,26,456 | (புட்டிகளின் எண்ணிக்கை) |
| 2. கண்ணாடிச் சிமிழ்களில் அடைக்கப்பட்ட கரைசல் .. .. .. | 10,11,850 | லிட்டர். |
| 3. இரத்தம் சுத்திகரிப்புத் திரவம் | 200 | லிட்டர். |
| **(ii) நோய்த்தடுப்பு மருந்துப் பிரிவு :** | | |
| 1. காலரா நோய்த்தடுப்பு மருந்து | 89,70,854 | டோஸஸ். |
| 2. டி. ஏ. நோய்த்தடுப்பு மருந்து | 3,90,186 | டோஸஸ். |
| **(iii) இரத்த வங்கி பிரிவு :** | | |
| 1. இரத்தத் தொகுதி நிணநீர் | 61,840 | 1/2 சி.சி. |
| 2. ஆன்ட்டி ஏ1 (Anti A) | 5,385 | 1/2 சி.சி. |
| **(iv) வெறிநாய்க்கடி தடுப்பு மருந்துப் பிரிவு :** | | |
| 1. வெறிநாய்க்கடி தடுப்பு மருந்து | 26,69,250 | மி.லி. |
| **(v) நச்சு தடுப்பு மருந்துத்துறை (Department of Anti toxin) :** | | |
| 1. நரம்பிசிவு நோய் (பிடிஏபி) | 11—63,640 | டோஸஸ். |
| 2. ஏ.டி.எஸ். (நோய் குணப்படுத்தல்) | 10,351 | சிறு புட்டிகள். |
| 3. பாம்புக்கடி மருந்து | 1,48,770 | மி.லி. |
| **(vi) நிணநீரியல் பிரிவு :** | | |
| 1. " ஆம்செட்டார் " (ஆண்ட்டிஷீப் செல்ஸ்) (Amboceptor (Antisheep cells) | 117 | மி.லி. |
| 2. " பேக்ட் ஷீப் செல்ஸ் " (Packed sheep cells) | 371.5 | |
| 3. " காம்பிளிமென்ட் " (Complement) | 126 | |
| 4. முயல் குருதி (Rabit Blood) | [illegible] | |
| 5. முயல் பிளாஸ்மா (Rabit Plasma) | | |

(vii) நோய் சிகிச்சை ஊசிமருந்துப் பிரிவு :

| | | |
|---|---|---|
| 1. " நுண்மம் வாழ் திரவம் " (Bacterial Suspension) .. | 3,67,600 | மி .லி. |
| 2. " ஸ்டாக் வேக்சின் " (Stock Vaccine) | 15,946 | |
| 3. " ஹை டைட்டர் நிணநீர் " (High Titre Sera) | 1,369 | |
| 4. " ஆட்டோ ஜெனஸ் வேக்சின் " (Autogenus Vaccine) | 1,458 | |
| 5. சோதனைக்கான பழைய காசநோய் மருந்துவகை— | | |
| 1/100 Dil .. .. .. .. | 1,534 | 1/2 |
| 1/1,000 Dil .. .. .. .. | 5,567 | 1/2 |
| 6. நுண்ம வளர்ப்பு திரவம் (Live Culture) .. | 282 | |
| 7. நுண்ம வளர்ப்பு திடப் பொருள் (Dry Culture) | 12 | |

(viii) நுண்ணுயிர்/திசுவளர்ப்பு (ஊடகப்) கரைசல் பிரிவு (Media Section) :

| | |
|---|---|
| 1. பெரிய அளவு ஊடகம் (அளவில்) .. .. | 19,89,879 |
| 2. தயாரிக்கப்பட்ட ஊடகம் (அளவில்) .. | 1,30,83,758 |
| 3. தொற்றுக் கிருமி நீக்கப்பட்ட பல்வேறு பொருட்கள் .. .. .. .. | 23,827 |

## மருத்துவக் கல்வி.

விரைந்து வளர்ந்து வரும் மருத்துவக் கல்வித் திட்டங்களின் தேவைகளை நிறைவு செய்வது, பொதுமக்களுக்குச் சிறப்பு வாய்ந்த மருத்துவ வசதிகளை அளிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 1965 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வி இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. மருத்துவப் பணி இயக்ககம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இவ்வியக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இந்த இயக்ககம் (1) மருத்துவக் கல்வி ஆராய்ச்சி, (2) நோயாளிகளுக்கான தனிச் சிறப்புச் சிகிச்சை பணி மாற்றம் (3) மருத்துவ ஆராய்ச்சி ஆகிய மூன்று முக்கியமான துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கிறது.

### மருத்துவக் கல்வித் துறையின் வளர்ச்சியும் மேம்பாடும் :

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வித்துறை விரைந்து வளர்த்து மேம்பாடடைந்து வருகிறது. 1957 ஆம் ஆண்டில் மூன்று மருத்துவக் கல்லூரி இருந்தன. இவற்றில் எம்.பி.பி.எஸ். (M.B.B.S) பட்டபடிப்பில் 317 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1964 ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பில் ஐந்து மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 700 மாணவர்கள் சேர்த்து கொள்ளப்பட்டனர். 1966 ஆம் ஆண்டில், இவ்வியக்ககம் ஏற்படுத்தப்பட்டபோது, 7 மருத்துவக் கல்லூரிகள் இருந்தன. இவற்றில் 1,025 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வியக்ககத்தின் கீழ் 21 மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மட்டுமே அப்போது இருந்தன. 1989 ஆம் ஆண்டில் 9 மருத்துவக் கல்லூரிகளும் ஒரு பல் மருத்துவக் கல்லூரியும் இவற்றோடு இணைந்த 33 மருத்துவக் கல்வி நிறுவனங்கள், 24 தொடக்கச் சுகாதார நிலையங்கள், 14 அரசு மருந்தகங்கள் மற்றும் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஆகியனவும் அரசு கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்தன. 1989 ஜனவரியில் ஒவ்வொரு படிப்பிலும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

எம்.பி.பி.எஸ்-1072; பி.டி.எஸ் (B.D.S.)-45; பட்டமேற்படிப்பு பட்டயப்படிப்பு-484; எம்.டி.-263; எம்.எஸ். 150; எம்.டி.எஸ். (MDS)-20; டி.எம். (DM)—17; மற்றும் எம்.சி.எச். (Mch)—36; துணை மருத்துவப் படிப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு;—பிஃபார்ம் (B.Pharm)—56; எம்ஃபார்ம் (M. Pharm)—3; பி.எம்.ஆர்.எஸ்.சி. (B.M.R.Sc)—6; பி.ப்பி.ட்டி. (B.P.T.)—50; பி.எஸ்.சி (செவிலியர் படிப்பு)—30 மற்றும் பி.எஸ்.சி. அடிப்படை செவிலியப்பணி)-25 ஆகும். பொதுத் சுகாதார செவிலிப் பணி பட்டயப் படிப்பு-20; பொது செவிலிப் பணியில் பட்டயப் படிப்பு—750; மருந்தாச்சியலில் பட்டயப்படிப்பு 240; கதிர்வீச்சு உதவியாளர் சான்றிதழ் படிப்பு-40; இருட்டறை உதவியாளர் சான்றிதழ் படிப்பு-40; ஆய்வுக் கூட தொழில் நுட்ப ஆய்வு வல்லுநர் சான்றிதழ் படிப்பு—32; ஆய்வுக்கூட தொழில் நுட்ப பணியாளர் சான்றிதழ் நிலை 25; பல் மருத்துவச் கம்மியர் சான்றிதழ் படிப்பு—6; பல்மருத்துவ நல இயல் வல்லுநர் சான்றிதழ் படிப்பு—6; விழிப்பார்வைத் தேர்வாய்வாளர் சான்றிதழ் படிப்பு 30; கண் மருத்துவ நோய் உதவியாளர் சான்றிதழ் படிப்பு—30; நோயாளி வண்டி உதவியாளர் சான்றிதழ்

படிப்பு 8; ஆர்த்தாப்டிக்ஸ் சான்றிதழ் படிப்பு–6; இ.சி.ஜி. தொழில் நுட்பப் பணியாளர்-மின் இயற்கை முறை மருத்துவ வல்லுநர் சான்றிதழ் படிப்பு–3; ஆகியன துணை மருத்துவ பட்டயப் படிப்புகளாகும்.

## தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் :

தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களும் மருத்துவக் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்து வருகின்றன. வேலூரில் உள்ள கிறிஸ்துவ மருத்துவ கல்லூரிதான் இம்மாநிலத்திலுள்ள மிகப்பழமையான புகழ் வாய்ந்த தனியார் மருத்துவக் கல்லூரி ஆகும்; பட்டப்படிப்பு, உயர் தனிச் சிறப்பு பட்ட மேற்படிப்பு, துறை மருத்துவ படிப்பு ஆகியவை இக்கல்லூரியில் உள்ளன.

1. சென்னையில் உள்ள ஸ்ரீராமசந்திரா மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம், (2) அண்ணாமலை நகரில் உள்ள இராஜாசர் முத்தையா மருத்துவ அறிவியல் கல்லூரி, (3) கோயம்புத்தூர் பீளமேட்டில் உள்ள பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் ஆகிய மூன்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆகும். இவற்றைத் தவிர அரசின் பல்கலைக்கழகத்தின் மருத்துவ குழுவின் உரிய அனுமதியில்லாமல், 11 பல் மருத்துவக் கல்லூரிகள் பல்வேறு வளர்ச்சி நிலைகளில் செயல்பட்டு வருகின்றன.

## மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கை :

எம்.பி.பி.எஸ். (M.B.B.S.) பி.டி.எஸ். (BDS) மற்றும் பிஃபார்ம் (B.Pharm) ஆகியவற்றுக்கு நுழைவுத் தேர்வு மூலம் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். நுழைவுத் தேர்வுக்காக ஒதுக்கப்பட்ட உயரளவு மதிப் பெண்கள் 50 ஆகும்; 2 வகுப்பில் இயற்பியல்,வேதியியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் உயரளவு 200 மதிப்பெண்களுக்கு எவ்வளவு எனக் கணக்கிடப்பட்டு அத்துடன் நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களுடன் சேர்ந்து இறங்குவரிசைபடி நிலை நிர்ணயிக்கப் படுகிறது. தற்போது செயலில் உள்ள இட ஒதுக்கீட்டு விதிகளின்படி தகுதி அடிப்படையில் மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். எம்.பி.பி.எஸ். (M.B.B.S.) பட்டப் படிப்பிற்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 15 சதவிதமாகிய 161 இடங்கள், அகில இந்திய அளவில் தெரிந்தெடுக்கப்படும் மாணவர்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களில் 1988–89-ல் 50 மாணவர்களை மட்டுமே சேர்த்தனர். மையத் தேர்வு முறையினால் ஏராளமான இடங்கள் நிரப்பப்படாமலிருப்பதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்வதில் சில திருத்தங்கள் செய்யக் கருதப்படுகிறது.

## பட்ட மேற்படிப்புகள் :

நுழைவுத் தேர்வு மூலம்தான் பட்ட மேற்படிப்பு பட்டயப் படிப்புகளுக்கும் பட்ட மேற்படிப்புகளுக்கும் மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். நுழைவுத் தேர்வுக்கு 90 மதிப்பெண்களும் பணிக்கு 10 மதிப்பெண்களும் ஒதுக்கப்படுகின்றன. மொத்த இடங்களில் 25 சதவீத இடங்கள் மத்திய அரசுக்கென ஒதுக்கப்படுகின்றன. மாநிலத்திற்கெனவுள்ள இடங்களில் பணியில் உள்ளவர்களுக்கு 60 சதவீத இடங்களும் தனிப்பட்டவர்களுக்கு 40 சதவீத இடங்களும் ஒதுக்கப்படுகின்றன. இப்படிப்புகளில் சேர்த்துக் கொள்ள பரிசீலிக்கப்படுவதற்கு ஒருவர் குறைந்தது 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். தகுதி வரிசையின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டு விதிகளுக்கிணங்க பல்வேறு பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கும் பட்ட மேற்படிப்பு பட்டய வகுப்புகளுக்கும் மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

பட்ட மேற்படிப்பு பட்டயப் படிப்பில் 17 சிறப்புப் பிரிவுகள் உள்ளன; அவற்றில் உள்ள இடங்களின் மொத்த எண்ணிக்கை 484 ஆகும். பட்ட மேற்படிப்பு மருத்துவப் படிப்பில் 17 சிறப்புப் பிரிவுகள் உள்ளன; அவற்றில் உள்ள இடங்களின் மொத்த எண்ணிக்கை 484 ஆகும். பட்ட மேற்படிப்பு மருத்துவப் படிப்பில் 17 சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளில் ஆண்டொன்றுக்கு 263 மாணவர்கள் சேர்ந்து படிக்கலாம். பட்ட மேற்படிப்பு அறுவை மருத்துவயியலில் 5 சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளில் 150 மாணவர்கள் சேர்ந்து படிக்கலாம். மருத்துவ படிப்பில் (Medical Discipline) 5 உயர் சிறப்புப் பிரிவுகள் உள்ளன; அவற்றில் ஆண்டொன்றுக்கு 17 மாணவர்கள் சேர்ந்து படிக்கலாம். அறுவை மருத்துவயியலில் 7 உயர் சிறப்புப் பிரிவுகள் உள்ளன; அவற்றில் உள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை 36 ஆகும்.

## புதிய மருத்துவக் கல்லூரிகள் :

பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி நிறுவனங்களில் உள்ள மருத்துவப் பட்டப் படிப்புகளுக்குள்ள நெரிசலைக் குறைக்க சேலம் மருத்துவக் கல்லூரியும் தமிழ்நாடு நிறுவனங்களுக்குச் சொந்தமான பெருந்துறை மருத்துவக் கல்லூரியும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. பட்டப் படிப்புக்கான மொத்த இடங்களை அதிகரிக்காமல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களை பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கிடையே மறு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## மருத்துவப் பாட முறைகள்—ஒரு கண்ணோட்டம்.

### தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி.

**1988–89.**

பல்வேறு படிப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை.

| வரிசை எண். | கல்லூரியின் பெயர். | எம்.பி.பி.எஸ். (M.B.B.S.) மொத்த இடங்கள். | பட்ட மேற்படிப்பு. பட்டய படிப்பு. சிறப்புப் பாடப் பிரிவுகளின் எண்ணிக்கை. | பட்ட மேற்படிப்பு. பட்டய படிப்பு. இடங்களின் மொத்த எண்ணிக்கை. | பட்ட மேற்படிப்பு படிப்பு பட்ட வகுப்புகள். சிறப்புப் பாடப் பிரிவுகளின் எண்ணிக்கை. | பட்ட மேற்படிப்பு படிப்பு பட்ட வகுப்புகள். இடங்களின் எண்ணிக்கை. | உயர் சிறப்புப் பாடப் பிரிவுகள். சிறப்புப் பாடப் பிரிவுகளின் எண்ணிக்கை. | உயர் சிறப்புப் பாடப் பிரிவுகள். இடங்களின் எண்ணிக்கை. | துணை மருத்துவ பட்டம். பட்டயம் சான்றிதழ் படிப்புகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 150 | 17 | 235 | 22 | 155 | 11 | 35 | 1,511 |
| | சேலம் மருத்துவக் கல்லூரி .. | 26 | | | | | | | |
| 2 | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 150 | 8 | 62 | 11 | 67 | 3 | 4 | 23 |
| | சேலம் மருத்துவக் கல்லூரி .. | 26 | .. | | .. | | | | |
| 3. | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. | 110 | 6 | 34 | 6 | 36 | 3 | 6 | |
| 4. | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு. | 50 | | | | | | | |
| | சேலம் மருத்துவக் கல்லூரி .. | 25 | .. | .. | .. | ... | | | .. |
| 5. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். .. | 150 | 10 | 37 | 8 | 29 | 1 | 1 | 115 |
| 6. | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. .. | 175 | 9 | 100 | 16 | 87 | 3 | 7 | 169 |
| 7. | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி. | 100 | 1 | 2 | 5 | 9 | | | |
| 8. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோவை. | 100 | 3 | 14 | 2 | 30 | | | 80 |
| 9. | மதுரை பல் மருத்துவக் (பி.டி.எஸ்.) கல்லூரி, மதுரை .. .. | 45 | | | | 20 | | | [illegible] |
| 10. | ஏனைய மருத்துவக் கல்வி நிறுவனங்கள். | | | | | | | | [illegible] |

துணை மருத்துவப் படிப்புகள் :

செவிலிப்பணி, மருந்தாக்கியல், உடற்கூறு பயிற்சி முறையில் சிகிச்சையளித்தல் (Physio Therapy) ஆகிய மூன்று முக்கியமான துணை மருத்துவப் படிப்புகள் நடத்தப் படுகின்றன.

செவிலிப்பணி :

செவிலிப்பணி பாடத்தின்கீழ், பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, பொது சுகாதார பட்டயப்படிப்பு ஆகியவை உள்ளன. சென்னை மருத்துவக் கல்லூரியிலுள்ள செவிலிப் பணி கல்லூரியில் பி.எஸ்.ஸி. செவிலிப்பணி படிப்புகள் நடத்தப்படுகின்றன. பி.எஸ்ஸி அடிப்படை படிப்பில் 25 பேரும், பயிற்சி பெற்ற செவிலியர்களுக்கான பி.எஸ்.ஸி. செவிலிப்பணி படிப்பில் 30 பேரும், பொதுச்சுகாதார செவிலிப்பணி பட்டயப் படிப்பில் 20 பேரும் ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 9 அரசு மருத்துவக் கல்லூரிகளில் பொது செவிலிப்பணி பட்டய வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் ஆண்டுதோறும் 750 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

மருந்தாக்கியல் :

மருந்தாக்கியல் கல்வியில், பட்டயம், பட்டம், பட்ட மேற்படிப்புகள் உள்ளன. மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள 3 அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருந்தாக்கியல் பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. இப்படிப்புகளில் ஆண்டுதோறும் 240 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் பி. பார்ம் பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் மொத்தம் 56 பேர் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். மதுரை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு எம். பார்ம் படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆண்டுதோறும் 3 பேர் சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர். சென்னை மருத்துவக் கல்லூரியிலும் இப்படிப்பைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உடற்கூறு பயிற்சி முறையில் சிகிச்சை அளித்தல் (Phys'o Theraphy)

உடற்கூறு பயிற்சி முறையில் சிகிச்சை அளிக்கும் பட்டப்படிப்புகள்—(1) செயற்கை உறுப்பு மையம், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை, (2) அரசு புதுவாழ்வு-செயற்கை உறுப்பு மையம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள இரு அரசு மருத்துவ நிறுவனங்களில் நடத்தப்படுகின்றன. இப்படிப்புகளில் ஆண்டுதோறும் 50 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு நிறுவனத்திலும் 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் பணிகள் :

நோயாளிகளுக்குச் சிறந்த மருத்துவச்சிகிச்சை அளிப்பது, இவ்வியக்ககத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். தற்போது இவ்வியக்ககத்தின்கீழ் கல்லூரி இணைந்த 33 மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகள் செயல்படுகின்றன. இந்த மருத்துவ மனைகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 16,304 ஆகும். கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் கிட்டத்தட்ட 50 சிறப்புப் பணிகள் உள்ளன. இங்கு சிகிச்சை அளிக்கப்படும் பெரும்பாலான நோயாளிகள், வட்ட, மாவட்ட மருத்துவ மனைகளிலிருந்து சிகிச்சைக்காக அனுப்பப்பட்டவர்களே ஆவர். கல்லூரி இணைந்த மருத்துவமனைகளில், எவ்வகையிலான அவசரச் சிகிச்சையையும் மேற் கொள்வதற்கு ஏற்ற நன்கு பயிற்சி பெற்ற பணியாளர்களுடன் கூடிய அதிநவீன சோதனை/நோயாளி/சிகிச்சைக் கருவிகளும் உள்ளன. 1988-89 ஆம் ஆண்டில் சுமார் 6,25,000 அக நோயாளிகளுக்கும் 1,61,67,000 புற நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனைகளில் இந்த சிகிச்சைப் பணிகள் தவிர தனிச் சிறப்புச் சிகிச்சை அளிப்பதற்கான தனி மருத்துவமனைகளும் உள்ளன. அவை வருமாறு :—

| தொடர் எண். | குறிப்பிட்ட நோய்களுக்குச் சிகிச்சை யளிக்கும் மருத்துவ மனைகள். | எண்ணிக்கை. | மொத்தப் படுக்கைகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தாய்-சேய் நல மருத்துவமனைகள் | 3 | 1,827 |
| 2 | குழந்தைகள் மருத்துவமனை | 1 | 537 |
| 3 | காசநோய் மருத்துவமனைகள் | 3 | 1,180 |
| 4 | மனநலக் காப்பகம் .. | .. | 1,800 |

| தொடர் எண். | குறிப்பிட்ட நோய்களுக்குச் சிகிச்சை யளிக்கும் மருத்துவ மனைகள். | எண்ணிக்கை. | மொத்தப் படுக்கைகள். |
|---|---|---|---|
| 5 | கண்நோய் மருத்துவமனை | 1 | 478 |
| 6 | புற்றுநோய் மருத்துவமனை .. .. .. | 1 | 250 |
| 7 | புதுவாழ்வு—செயற்கை உறுப்பு நிலையங்கள் | 2 | 40 |
| 8 | தொற்றுநோய் மருத்துவமனை | 1 | 50 |
| 9 | காலரா நோய்க்கிருமி சேகரிப்பு நிலையம் | 1 | 28 |

மொத்தமுள்ள 16,304 படுக்கைகளில், 5,500 படுக்கைகள் மகளிருக்கென்றே ஒதுக்கப்பட்டுள்ளன. சுமார் 1,400 படுக்கைகள் குழந்தைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. சுமார் 4,100 படுக்கைகள், பொதுவாக ஆண்கள், மகளிர், குழந்தைகள் ஆகியோருக்காக உள்ளன. ஆண்களுக்கு 5,304 படுக்கைகள் உள்ளன.

## வரவு-செலவுத் திட்டம்.

மருத்துவக் கல்வி இயக்ககத்தின் வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

### மருத்துவக் கல்வி இயக்ககம்.

1988–89, 1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டப் பகுப்பாய்வு.

| தொடர் எண் மற்றும் விவரங்கள். | | 1988–89 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. | | 1989–90 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் ஆயிரத்தில். | சதவீதம். | ரூபாய் ஆயிரத்தில். | சதவீதம். |
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | மருத்துவக் கல்வி | 15,75,39 | 20.93 | 16,88,63 | 21.48 |
| 2 | கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள் .. .. | 51,24,66 | 68.06 | 53,55,16 | 68.11 |
| 3 | மகளிர் நோயியல்-மகப்பேறு மருத்துவம் .. .. | 8,37 | 0.11 | 8,75 | 0.11 |
| 4 | காசநோய் கட்டுப்பாடு | 44,34 | 0.59 | 42,23 | 0.54 |
| 5 | இரத்த சேமிப்பு வங்கி | 1,88 | 0.02 | 1,88 | 0.02 |
| 6 | நடமாடும் மருத்துவ உதவி | 7,82 | 0.10 | 8,08 | 0.10 |
| 7 | பயிற்சி | 89,19 | 1.18 | 91,26 | 1.16 |
| 8 | ஆய்வுக்கூடப் பணிகள் | 1,99,54 | 2.65 | 1,99,86 | 2.54 |
| 9 | நெறிப்படுத்தல்-மேற்பார்வை கொள்கை உருவாக்குதல் .. | 1,71,26 | 2.27 | 1,72,49 | 2.19 |
| 10 | துணை மருத்துவ உதவி | 24,52 | 0.33 | 25,04 | 0.32 |
| 11 | புற்றுநோய்க் கட்டுப்பாடு .. | 1,05,93 | 1.41 | 90,04 | 1.14 |
| 12 | பல் சுகாதாரம், இலவச பல்பொடி வழங்குதல் .. .. | 81,44 | 1.08 | 81,53 | 1.04 |
| 13 | இலவச கண்சிகிச்சை முகாம் | 93,16 | 1.24 | 95,61 | 1.22 |
| 14 | சமூகநலம் .. .. | 2,28 | 0.03 | 2,28 | 0.03 |
| | மொத்தம் | 75,29,78 | 100.00 | 78,62,84 | 100.00 |

## மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலன்.

**நிர்வாகம்:**

• மருத்துவப் பணி இயக்குநர் அவர்கள் இம்மாநிலத்தில் தலைமை மருத்துவ அதிகாரியாக உள்ளார். மருத்துவப் பணித் துறையினைப் பொறுத்துள்ள எல்லாத் திட்டங்களும் (தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் உட்பட) இத்துறை இயக்குநர் அவர்களின் மேற்பார்வையில் உள்ளது.

இம்மாநிலத்திலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவ வசதிகள் விரிவுபடுத்தப்பட்டு மருத்துவமனைகளை மேம்படுத்துவதே இத்துறையில் முக்கிய நோக்கமாகும். சிறப்பு மருத்துவ வசதிகளாவன மகப்பேறு கால நோய் இயல் மற்றும் சேய்நலம், குடும்பநலம், கண் நோய் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை இயல், மேக நோய் இயல், முடவியல் அறுவை சிகிச்சை, பல் மருத்துவம், சோதனைக் கூடம், விபத்து மற்றும் அவசர நோய்க்கான பணிகள், தொழுநோய் ஒழிப்பு, உருக்கிநோய் மற்றும் பலவகைச் சிகிச்சைத் துறைகளில் முன்னேற்றங்கள்.

1988–89ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்தது:—

1. நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் பேராவூரணியில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் புதிய வார்டுகள் கட்டுதல்.

2. கீழ்க்கண்ட ஆறு அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் நோய் சிகிச்சைப் பிரிவுகள் துவக்குதல்:

(1) அரசு மருத்துவமனை, பொன்னேரி, செங்கை–அண்ணா மாவட்டம்.

(2) அரசு மருத்துவமனை, செஞ்சி, தென்னாற்காடு மாவட்டம்.

(3) அரசு மருத்துவமனை, மணப்பாறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(4) அரசு மருத்துவமனை, பாலக்கோடு, தர்மபுரி மாவட்டம் (9–9–1988 முதல் இயங்குகிறது).

(5) அரசு மருத்துவமனை, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.

(6) அரசின் தலைமை மருத்துவமனை, பெரிய குளம், மதுரை மாவட்டம்.

3. கீழ்க்கண்ட மூன்று அரசு மருத்துவமனைகளில் கண்நோய் சிகிச்சைப் பிரிவுகள் துவங்குதல்:

(1) அரசு தலைமை மருத்துவமனை, சிவகங்கை (பசும்பொன் தேவர் திரு மகனார் மாவட்டம்.)

(2) அரசு மருத்துவமனை, உளுந்தூர்பேட்டை (தென்னாற்காடு மாவட்டம்).

(3) அரசு மருத்துவமனை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

4. மதுரை மாவட்டம், பெரியகுளத்தில் உள்ள அரசுத் தலைமை மருத்துவமனையில் முடவியல் மற்றும் பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகள் துவக்குதல்.

**1988–89ல் படுக்கை எண்ணிக்கையை அதிகரித்தல்:**

| | |
|---|---|
| 1. மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் | 220 படுக்கைகள். |
| 2. தாலுகா மருத்துவ மனைகள் | 412 படுக்கைகள். |
| 3. தாலுகா அல்லாத இதர மருத்துவ மனைகள் | 20 படுக்கைகள். |

**பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் திட்டம்.**

23—2—1989 அன்று தர்மபுரி மாவட்டம், ஓசூர் அரசு மருத்துவமனையில் இலவச கண்சிகிச்சை முகாம் நடந்தது. அதில் 42 நபர்கள் சோதிக்கப்பட்டதில் மூன்று நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

20—3—1989 அன்று தர்மபுரி அரசுத் தலைமை மருத்துவமனையில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. அதில் 165 நபர்களைச் சோதிக்கப்பட்டதில் 61 நபர்கள் அறுவைச் சிகிச்சைக்கு தகுதியாய் இருந்தனர். அதில் அறுவைச் சிகிச்சைக்கு 55 நபர்கள் மருத்துவமனை அறுவை அரங்கிற்கு கொண்டு வரப்பெற்று, 30 பேர்களுக்கு 20—3—1989 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இத்திட்டத்தினை செயல்படுத்த 15 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டன. கீழ்க்கண்ட மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவுகள் துவங்கப்பட்டன:—

மாவட்டத் தலைமை மருத்துவமனை, சேலம்.

மாவட்டத் தலைமை மருத்துவமனை, ஈரோடு.

மாவட்டத் தலைமை மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.

மாவட்டத் தலைமை மருத்துவமனை, வடலூர்.

மாவட்டத் தலைமை மருத்துவமனை, வேலூர்.

திருச்சிராப்பள்ளி அரசு தலைமை மருத்துவமனையில் இவ்வாண்டு கண் சேமிப்பு வங்கி துவங்க அரசு ஒப்புதல் அளித்தது.

## தேசிய காசநோய்த் தடுப்புத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவ நிலையங்களிலும் காசநோய் கண்டுபிடிக்கும் மற்றும் சிகிச்சைக்கும் வசதிகள் இல்லை. முற்றிய நிலையினை யடைந்து விட்ட காசநோயாளிகளை அனுமதித்து சிகிச்சை அளிப்பதற்கென, தனியே காசநோய் மருத்துவமனைகளும் பொது மருத்துவமனைகளில் காசநோய் வார்டுகளும் உள்ளன.

இருபது அம்சத் திட்டத்தின்கீழ் 1988–89-ம் ஆண்டுக்கு காசநோய்த்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட இலக்கு கீழ்க்கண்டவாறு எய்தப்பட்டுள்ளது:—

| | இலக்கு. | சாதனை. | சதவீதம். |
|---|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்ட காசநோய் நோயாளிகள் எண்ணிக்கை. | 1,00,000 | 1,09,401 | 109 |
| ஆரம்ப சுகாதார நிலையங்களில் செய்யப்பட்ட உமிழ்நீர் ஆய்வு எண்ணிக்கை. | 2,41,800 | 1,11,985 | 46 |
| அவைகளில் ஐயமில்லாத நோயாளிகள் எண்ணிக்கை. | இலக்கு இல்லை. | 891 | |

1988–89-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் காசநோய்த் தடுப்பு திட்டத்தில் கீழ்க் கண்டவாறு பணி நடைபெற்றுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | மார்பு சிகிச்சை செய்யப்பட்டவை | 3,58,297 |
| 2. | உமிழ்நீர் ஆய்வு செய்யப்பட்டவை | 4,12,144 |
| 3. | கண்டுபிடிக்கப்பட்ட காசநோயாளிகள் | 1,09,401 |
| | அவைகளில் தெளிவான உமிழ்நீர் நோயாளிகள் | 16,309 |
| 4. | முற்றிலும் சிகிச்சை பெற்ற காசநோயாளிகள் | 21,598 |
| 5. | காசநோயினால் இறந்தவர்கள் | 505 |
| 6. | பி.ஸி.ஜி. ஊசி போட்டுக்கொண்ட குழந்தைகள் | 11,56,51 |

## முக்கிய துவக்க விழா நிகழ்ச்சிகள் :

1. 23—8—1988 அன்று சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி அரசு தலைமை மருத்துவமனையில். புதியதாகக் கட்டப்பட்ட 250 படுக்கைகள் கொண்ட இருதயச் சிகிச்சை பிரிவுக் கட்டிடத்தை மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் திறந்து வைத்தார்.

2. 24—8—1988 அன்று காயல்பட்டினம் அரசு மருத்துவமனையில், புதியதாகக் கட்டப்பட்ட 24 படுக்கைகள் கொண்ட வார்டு, ஆய்வுக் கூடம் மற்றும் கதிரியக்கப்பிரிவு கட்டிடங்களை அன்றைய தினம் பொறுப்பில் இருந்த மருத்துவப்பணி இயக்குநர் திறந்துவைத்தார்.

3. 1–6–1988 அன்று சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூர் அரசு மருத்துவ மனையில் புதியதாகக் கட்டப்பட்ட எட்டு படுக்கைகள் கொண்ட கண்சிகிச்சைப்பிரிவு, ஆறு படுக்கைகள் அறுவை அரங்கு கட்டிடங்களை சிதம்பரனார் மாவட்டத்தின் ஆட்சியாளர் திறந்து வைத்தார்.

4. மறைந்த பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவின் நூற்றாண்டு விழாவினையொட்டி 9—11—1988 முதல் 14—11—1988 வரைக் கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் இலவச மருத்துவச் சிகிச்சை முகாம் நடைபெற்றது:—

அரசு மருத்துவமனை, திருச்செந்தூர்.
அரசு மருத்துவமனை, கோயில்பட்டி.
அரசு மருத்துவமனை, விளாத்திகுளம்.
அரசு மருத்துவமனை, ஸ்ரீவைகுண்டம்.
அரசு மருத்துவமனை, சாத்தான்குளம்.
அரசு மருத்துவமனை, ஒட்டப்பிடாரம்.

5. செங்கை-அண்ணா மாவட்டத்தில், திருத்தணி அரசு மருத்துவமனையில் புதிய தாகக் கட்டப்பட்ட பத்து படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை வார்டு 1—1—1989 முதல் இயங்கி வருகிறது.

9. செங்கை-அண்ணா மாவட்டத்தில் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில், புதியதாகக் கட்டப்பட்ட இருபது படுக்கைகள் கொண்ட குடும்பநல வார்டு 20—12—1988 முதல் இயங்கி வருகிறது.

## தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் :

தேசிய தொழுநோய் தடுப்புத் திட்டத்தை தமிழ்நாடு கடைப்பிடிக்கிறது. தொழு நோயினைக் கண்டுபிடித்தல், நோய்க்கு சிகிச்சை தொடருதல், நோயாளியை விடுவித்தல் மற்றும் நலக்கல்வி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. 2000 ஆண்டில் இம்மாநிலத்தில் தொழுநோய் முற்றிலுமாக ஒழிக்கப்படுமென்று நம்பப்படு கிறது. இம்மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் மக்கள் தொகையில் நூற்றுக்கு மேற் பட்ட லட்சம் பேர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனரா ? என்று கண்டறிய சோதிக்கப்படுகின்றனர்.

1988–89ஆம் ஆண்டுக்கு தொழுநோய்க்கென மத்திய அரசு கீழ்க்கண்டவாறு இலக்குகள் நிர்ணயித்துள்ளது:—

| செயல் இலக்குகள். | | பயன் இலக்குகள். | |
|---|---|---|---|
| தொழுநோய் கட்டுப்பாடு நிலையம் | 8 | நோய் கண்டு பிடிப்பு. | 70,000 |
| நகர்ப்புற தொழுநோய் நிலையம் | 10 | நோய் சிகிச்சை | 70,000 |
| மாதிரி கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு தனியார் நிறுவனங்களில் சிகிச்சைக்கு படுக்கைகள். .. | 100 | நோயிலிருந்து விடுப்பு | 1,25,000 |

| நிதி ஒதுக்கீடுகள். | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| பணமாக | 108.00 |
| பொருளாக | 35.00 |
| மொத்தம் .. | 173.00 |

அதற்கேற்றபடி கீழ்க்கண்ட நிலையங்களை இவ்வாண்டில் புதியதாக உருவாக்க அரசு ஒப்புதல் அளித்தது:—

1. எட்டு இடங்களில் தொழுநோய் கட்டுப்பாடு நிலையங்கள் துவக்குதல்.

2. பத்து இடங்களில் நகர்ப்புற தொழுநோய் நிலையங்கள் துவக்குதல்.

3. மாதிரி கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு.

**தனியார் நிறுவனங்களில் உள்ள தொழுநோய் படுக்கை பராமரிப்பு :**

1. செயின்ட் தாமஸ் மருத்துவமனை, சேத்துப்பட்டு — 30 படுக்கைகள்
2. நால்தாகுப்பம், எமர்ஜித் லப்ரசி சென்டர், தென்னாற்காடு மாவட்டம். .. 20 படுக்கைகள்
3. வி. எச். எஸ். சக்தி நகர், பவானி, பெரியார் மாவட்டம் .. 20 படுக்கைகள்

மேற்குறிப்பிட்ட தொழுநோய் நிலையங்கள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

சிகிச்சை சம்பந்தமான 1988–89ஆம் ஆண்டில் இந்திய அரசின் இலக்கும் சாதனையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | புதிய நபர்கள் கண்டுபிடிக்கப் பட்டவை. | சிகிச்சைக்காக கொண்டுவரப் பட்டவை. | பூரண குண மடைந்த நபர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. 1988–89—ம்ஆண்டுக்கு இந்திய அரசு நிர்ணயித்த இலக்கு. .. | 70,000 | 70,000 | 1,25,000 |
| 2. 1988–89—ம் ஆண்டில் சாதனை | 1,04,569 | 1,00,394 | 1,14,887 |
| 3. சாதனை சதவீதம் | 149 | 143 | 92 |

**குடும்ப நலத்திட்டம் :**

1988–89ம் ஆண்டுக்கான குடும்பநல திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட இலக்கினை கீழ்க்கண்டவாறு அடைய முடிந்தது :—

| | ஆண்டு இலக்கு. | எய்திய இலக்கு. | சதவீதம். |
|---|---|---|---|
| ஸ்டெரிலைசேசன் | 57,840 | 22,939 | 39.7 |
| ஐ. யூ. டி. | 43,740 | 69,540 | 159.9 |
| ஓரல் பில்ஸ் | 7,350 | 13,548 | 184.3 |
| சி. சி. யூசர்ஸ் | 8,880 | 29,253 | 329.4 |

**டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்:**

தமிழ்நாடு அரசு 1987 ஆம் ஆண்டு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டத்தை இயற்றி 1987 ஆம் ஆண்டில் இப்புதிய மருத்துவப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தியது. 1987 ஆம் ஆண்டு 50—வது திருத்தச் சட்டத்தின் மூலம் மேற்படிச் சட்டம் 1987 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டம் என பின்னர் திருத்தப்பட்டது. தமிழ்நாட்டில், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பகுதியில் உள்ளவை நீங்கலாக ஏனைய பகுதிகளில் அமைந்துள்ள, நவீன மருத்துவம், இந்திய முறை மருத்துவம், ஓமியோபதி மருத்துவம், செவிலிப்பணி, மருந்தாக்கியல், இயன் மருத்துவ இயல் போன்ற துறைகளில் கல்வி கற்பிக்கும் மருத்துவ நிலையங்கள் அனைத்தும் இப்புதிய மருத்துவப் பல்கலைக் கழகத்தின்கீழ் வருகின்றன. இப்புதிய பல்கலைக் கழகத்திற்கு 1988 ஜூலை மாதத்தில் முதல் துணை வேந்தர் நியமிக்கப் பட்ட பின்னர்தான் அது மெய்யாகவே செயற்படத் தொடங்கியது.

ஒரே சீரான கல்வித் தரத்தைப் பேணுவதும், அனைத்து நாட்டு கல்வித் தரத்தின் அளவுக்கு நம் மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்துவதும் இப்புதிய மருத்துவப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கங்களாகும். இந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு, அந்தந்த துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்ட

அதிகாரமளிக்கப்பட்ட ஆய்வு குழுக்களை இப்பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இதற்கு முன்னர் மருத்துவக் கல்லூரிகள் சார்ந்திருந்த பல்கலைக் கழகங்கள் இதுவரை பின் பற்றி வந்த பாடத் திட்டங்களை இக்குழுக்கள் ஆய்வு செய்கின்றன. மேம்படுத்தப் பட்ட இப்புதிய பாடத் திட்டம் வரும் கல்வியாண்டிலிருந்து செயலுக்கு வரக்கூடும். எதிர்பார்க்கப்படும் அளவுக்கு அடிப்படை வசதிகள் ஏதுமின்றி, வகை தொகையில்லா மல் மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக இப்பல்கலைக் கழகம், மருந்து, மருந்தாக்கியல், பல் மருத்துவம் முதலிய துறைகளில், தொழில் முறை கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கான நெறிமுறைகளை வரையறுக்க வல்லுநர் குழு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்பல்கலைக் கழகம், 1989 ஜனவரியில் ''மருத்துவக் கல்வியின் போக்கு'' என்ற தலைப்பில் மாநில அளவில் ஒரு கருத்தரங்கை நடத்தியுள்ளது. கனடா நாட்டின் மேக்மாஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் விக்டர் நியூபெல்டு (Dr. Victor Neufeld) அவர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பு உரை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் அனைத்திலிருந்தும் சுமார் 60 பேராசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர். கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியிலிருந்தும், பிற மருத்துவக் கல்லூரியி லிருந்தும் பேராளர்கள் வந்து கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கின் மூலம் பெற்ற அறிவு, பல்வேறு படிப்புகளுக்கான பாடத்திட்டங்களை நிலை உயர்த்தும்போது பயன்படுத்திக் கொள்ளப்படும்.

## தேர்வு சீர்திருத்தங்கள் :

1. மாணவர்கள், பாடத் திட்டத்தின் கீழ் வரும் எல்லா பாடங்களையும் கற்றுத் தேறும் வகையில் எம்.பி.பி.எஸ். படிப்பில் விருப்ப வினாத்தாள் முறையை இப்பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

2. எழுத்துத் தேர்வுகளிலும், செய்முறைத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெறுவதற்கு தனித்தனியே குறைந்தளவு மதிப்பெண்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

3. விடைத்தாள்களுக்கு மாற்று எண்கள் கொடுக்கப்பட்டு மையமான ஓரிடத்தில் திருத்தப்படுகின்றன.

4. பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, உயர் சிறப்புப் படிப்பு ஆகியவற்றுக்கான செய்முறை, வாய்மொழித் தேர்வுகளைக் கண்காணித்து தேர்வுகளை சீரிய முறையில் நடத்துவதற்கான கருத்துரைகளுடன் அறிக்கை அளிப்பதற்காக ஒவ்வொரு நிலை யத்திற்கும் நோக்கர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு மாநில அரசு மட்டுமே நிதி உதவி அளிக்கிறது. எனினும், நிதி உதவி அளிப்பதற்காக இப்புதிய மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு அங்கீகாரம் அளிக்கும்படி மாநில அரசு, பல்கலைக் கழக மானியக் குழு விற்குக் கடிதம் எழுதியுள்ளது. அரசு 1988–89-ல், இப்பல்கலைக் கழகத்திற்கு வரு வாய் இனச் செலவினங்களுக்காக, ரூ. 31.02 இலட்சம் ஒட்டு மொத்த மானியம் வழங்கியுள்ளது. வருவாய், இனச் செலவுகளுக்காக பல்கலைக் கழகத்திற்கு ஒட்டு மொத்த மானியம் வழங்குவதற்காக அரசு 1989–90 வரவு - செலவு திட்ட மதிப்பீட்டில், அரசு ரூ. 80 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதில் ரூ. 45 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1989–90-ல் மூலதனச் செலவினம் வகையில் இப்பல்கலைக் கழகத்திற்கு மானியம் எதுவும் அனுமதிக்கப்படவில்லை.

மருத்துவ அறிவியலில் முன்னேற்றம் காண ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக வரும் ஆண்டுகளில் பின்வரும் நிலையங்களை ஏற்படுத்த இப்பல்கலைக் கழகம் கருதி யுள்ளது :—

## முதல் முன்னுரிமை :

1. பாடத்திட்ட மேம்பாட்டு மையம்.
2. நவீன கருவிகள் ஆய்வுக் கூட வட்டார நிலையம்.
3. சுகாதார அறிவியல் மருத்துவத் துணைப் படிப்புகளில் பட்ட மேற்படிப் நிலையம்.
4. பொதுச் சுகாதார ஆராய்ச்சி நிலையம்.
5. மருந்து, ஆராய்ச்சி மருத்துவமனைப் பட்ட மேற்படிப்பு நிலையம்.

**இரண்டாவது முன்னுரிமை :**

6. பழமையான மருத்துவ முறை ஆராய்ச்சி நிலையம்.

7. ஒட்டுண்ணி நோய் தொடர்பான பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலையம்.

8. மருந்தாக்கியல் அறிவியல் பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலையம்.

9. ஆசிரியர் பயிற்சி நிலையம்.

10. செவிலிப் பணி பட்ட மேற்படிப்பு நிலையம்.

இப்புதிய பல்கலைக் கழகம் வழங்கும் பட்டங்கள் / தகுதிப் பட்டயங்கள் ஆகிய வற்றிற்கு இந்திய மருத்துவ மன்றம், இந்திய மருந்தாக்கியல் மன்றம் போன்ற மத்திய மன்றங்களில் அங்கீகாரத்தைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மனநோய் நலம்.

**முன்னுரை :**

தமிழ்நாட்டில் ஒரே ஒரு மனநல மருத்துவமனையாகவும், நாட்டிலேயே மூன்றாம் பெரிய மருத்துவமனையாகவும் (1,800 படுக்கை வசதிகள்) விளங்கும் இந்த '' அரசு மனநலக் காப்பகம் '', இவ்வாண்டறிக்கை சம்பந்தப்பட்ட 1988-89 சீராகவே இயங்கி வந்துள்ளது.

**1988-89-ல் பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சி விவரங்கள் :**

நிகழ்ந்து வருகிற இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டங்கள் :—

1. கஞ்சா உபயோகிப்போரின் மனநலப் பிரச்சினைகள்.
2. ஹெராயின் பயன்படுத்துவோரின் மனநலப் பிரச்சினைகள்.
3. மனச்சிதைவு நோயில் மாயக் குரல்கள் பற்றிய இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டம்.

இது தவிர பல்வேறு மாநில மற்றும் தேசிய மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் ஆராய்ச்சி கட்டுரைகள் வாசிக்கப்பட்டு இருக்கின்றன.

**புதிய கட்டிடங்கள் :**

1. இக்காப்பகத்தின் மகளிர் பிரிவில் மற்றுமொரு 20 படுக்கைகள் கொண்ட புதிய பிரிவு.

2. 40 படுக்கை வசதி கொண்ட தனிப்பட்ட போதை அடிமை நீக்க மருத்துவப் பகுதி.

**பயிற்சி :**

இக்காப்பகத்தில் பயிலும் டி.பி.எம்., எம்.டி. (மனநலம்) மற்றும் பி.எச்டி., மாணவர்களோடு, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்தைச் சார்ந்த பிற மருத்துவக் கல்லூரிகள் மற்றும் எம்.ஏ. குற்றவியல் துறை முதலான மருத்துவம் சார்ந்த கல்வி நிறுவனங்களின் மாணவர்களும் வகுப்புகளிலும், நடைமுறைப் பயிற்சிகளிலும் பங்கு பெறுகிறார்கள். இங்குள்ள மருத்துவ நூலகம் மனநலம் மற்றும் மனநலம் சார்ந்த சிறப்புப் புத்தகங்களையும், விஞ்ஞானப் பத்திரிகைகளையும் கொண்டதாக இயங்கு கிறது.

## சேவைகளும், புள்ளிவிவரங்களும் :

சென்னை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் மற்றும் மனநல காப்பகத்தின் கண்காணிப்பாளருமான டாக்டர் (பீட்டர் பெர்னாண்டஸ்), எம்.டி.டிபிஎம்.டிடிடி, எப்சிசிபி. (யூ.எஸ்.எ.) எப்ஐபிஎஸ்., அவர்களுக்கு ஒரு துணை கண்காணிப்பாளரும், நரம்பியல் மனநோய் நிபுணரும், ஒரு நிலை மருத்துவ அதிகாரியும், ஓர் உதவி நிலைய மருத்துவ அதிகாரியும், ஒரு சிறப்பு உதவியாளரும், முதல் நிலை இரண்டாம் நிலைகளைச் சார்ந்த பொருலாளர் மற்றும் செயலாளர்களும், முதல் இரண்டு நிலைகளைச் சார்ந்த செவிலியர் துறை கண்காணிப்பாளர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

வழக்கம்போல் இவ்வருடமும் புறநோயாளிகள் சிகிச்சையும் விரைவான புனரமைப்பும் வலியுறுத்தப்பட்டது. புற நோயாளிகள் பிரிவில் ''குழந்தை வழி காட்டல்'', ''குமரப் பருவம்'', ''போதை அடிமை நீக்கம்'' ''நரம்பு மன நோய்'' போன்ற சிகிச்சை, மின் வலிப்பு சிகிச்சை இவற்றைத் தவிர தொழில் வழி மருத்துவமும், பொழுது போக்கு மருத்துவமும், பிணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. 1988-89-ல் 3,955 பிணியாளர்கள் (68 சதவீதம் ஆண்கள், 32 சதவீதம் பெண்கள்) சிகிச்சை பெற்று இருக்கிறார்கள். பழைய நோயாளிகள், 88,429 பேர் புறநோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். குழந்தை வழி காட்டுதல் மருத்துவப் பிரிவில் 3,471 பழைய நபர்களும், 239 புதிய நபர்களும் பார்க்கப்பட்டு இருக்கிறார்கள். 3,689 நோயாளிகள் உள் அனுமதிக்கப் பெற்றிருக்கிறார்கள் (75 சதவீதம் ஆண்கள், 25 சதவீதம் பெண்கள்).3, 522 நபர்கள் சிகிச்சைக்குப் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒரு நாளில் அதிகபட்சம் உள்நோயாளிகளின் தொகை 1,817. ஒரு நாளைய சராசரி கணக்கெடுப்பு 1,733.

விடுவிக்கப்பட்ட பிணியாளர்களில் 95 சதவிகித மனநிலை முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். 56 பேர் தப்பி ஓடியவர்கள். மொத்த உள் அனுமதியில் 22 சதவிகித பேர் திரும்ப அனுமதிக்கப்பட்டவர்கள். 95 மரணங்கள் இந்த அறிக்கைக்கான ஆண்டில் நிகழ்ந்து இருக்கின்றன. அவற்றில் ஒரு தற்கொலையைத் தவிர பிற அனைத்து மரணங்களும் இயற்கையான காரணங்களால் நிகழ்ந்தவை.

சட்டரீதியாக அனுமதிக்கப் பெற்றவர்களைவிட, தாமாக சேர்ந்த நோயாளிகளின் தொகை அதிகம் (6 சதவிகிதம் மற்றும் 94 சதவிகிதம் முறையாக) உள்நோயாளிகளில் 40 சதவிகிதம் 25—34 வயதுக்கு உட்பட்டவர்கள். 71 சதவிகிதம் இலவச சிகிச்சைப் பெற்றவர்கள். 1988-89 சிகிச்சை பெற்ற உள்நோயாளிகள் 5,421 பேரில் 65 சதவிகிதம் நலம் பெற்று விடுவிக்கப்பட்டார்கள். 31—3—1989-ல் இருந்த வண்ணம் 1,778 பேர் தொடர்ந்து தங்கி இருந்தவர்கள். 83 சதவிகிதம் பிணியாளர்கள் முதிர்நிலை மனநோய்க்காகவும், 12 சதவிகிதம் இளநிலை மனநோய்க்காகவும், 5 சதவிகிதம் மூளை வளர்ச்சி குறைபாட்டிற்காகவும் சிகிச்சை பெற்றவர்கள். சிகிச்சை பெற்றவர்களில் பெரும்பான்மையினர் (57 சதவிகிதம்) மனச்சிதைவு நோய்க்காக பார்க்கப்பட்டவர்கள். மொத்த அனுமதியில் 69 சதவிகிதம் சென்னை—செங்கற்பட்டு மாவட்டங்களிலிருந்தும், 30 சதவிகிதம் மாநிலத்தில் வேறு பல மாவட்டங்களிலிருந்தும், எஞ்சிய 1 சதவிகிதம் அண்டை மாநிலங்களிலிருந்தும் வந்தவர்கள்.

## 20 ஆண்டுகளில் உருவான மாற்றங்கள் :

கடந்த 20 ஆண்டுகளில் உள் அனுமதி புழக்க விகிதம் 3 மடங்காக அதிகரித்து இருக்கிறது. அதாவது 1968-ல் 1,000 படுக்கைகளுக்கு 594 பிணியாளர்கள் என்று இருந்த அனுமதி புழக்கம் 1988-89-ல் 1,961 ஆக உயர்ந்துள்ளது. அதே போல் விடுவிக்கப்பட்டவர்களின் புழக்க விகிதமும் மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. இது உள் நோயாளி சேவைகளை பொதுமக்கள் தாராளமாக பயன்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. உள் அனுமதி முறை மிகவும் எளிதாக்கப்பட்டிருப்பதையும், உள்நோயாளிகள் சிகிச்சை பெறுகிற காலம் மிகவும் குறைந்திருக்கிறது என்பதையும் இது பிரதிபலிக்கிறது. முன்னாளில் உள் அனுமதிக்கப்பட்ட நோயாளி 24 மாதங்கள் சிகிச்சைக்காக தங்கி இருக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ, 24 வாரங்களே போதுமானதாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

## பிற நடவடிக்கைகள் :

புறநகர் மருத்துவச் சேவையாக பூவிருந்தவல்லியில் ஒரு மனநல மருத்துவப் பிரிவு இயங்கி வருகின்றது. இங்கு வாரத்திற்கு 3-ல் இருந்து 9 புறநோயாளிகள் பார்க்கப்படுகிறார்கள். வாரம் ஒரு முறை இயங்கி வருகிற மேல்பாக்கம பராமரிப்பு நிலையத்தில் 36 பேர் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். நாட்பட மனச்சிதைவு நோயாளிகளுக்காகப் (உள்நோயாளிகளும் புறநோயாளிகளும்) புனரமைப்பு, ஒரு ''மாதிரிப் பட்டறையாக'' விளங்குகின்ற தொழில் வழி மருத்துவ மையத்தின் மூலம் முயற்சி செய்யப்படுகிறது.

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

**ஊரக் சுகாதாரப் பணிகள் :**

கி. பி. 2000-க்குள், எல்லோருக்கும் நல்வாழ்வு என்ற குறிக்கோளுக்கேற்ப ஏழாவது திட்ட காலத்தில் 1057 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்திட வேண்டும் என்ற இலக்கை முடித்திட 1222 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 72 சமூக நல நிலையங்களும் 31—3-1989-ல் உள்ளபடி செயல்பட்டு வருகின்றன. இவ்வாரம்ப சுகாதார நிலையங்கள், தமிழ்நாட்டிலுள்ள, கிராமப்புற மக்களுக்கு நோய்த்தடுப்பு நலமேம்பாடு, நோய் சிகிச்சை போன்ற பணிகளை அளித்து வருகின்றன. ஏழாவது திட்டத்தின் அடிப்படைக் கொள்கையின்படி 5,000 மக்கட் தொகைக்கேற்ப ஒரு துணை நிலையமும், 6 துணை நல நிலையங்களுக்கு அல்லது சமவெளியில் 30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் மலைப்பகுதியில் 20,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு சமூக நல நிலையமும் ஏற்படுத்திட பிரேரணைகள் உள்ளன. 1988-89-ல் 274 நடமாடும் மருத்துவக் குழுக்கள் நிலையான ஆரம்ப சுகாதார நிலையங்களாக அரசு ஆணை எம். எஸ். என். 1103, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், நாள் : 23—5—1988-ல் மாற்றப்பட்டன. மேலும் 11 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் அரசு ஆணை 2386, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் நாள் : 9—12—1988-ல் 1988-89-க்கு வழங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

**மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் / சமூக நல நிலையங்கள் :**

ஒவ்வொரு சமூக நல நிலையமும் 30 படுக்கைகள் கொண்டுள்ளது. ஏற்கெனவே உள்ள 6 படுக்கை வசதிகளோடு, 24 படுக்கை வசதிகளுடன் கூடிய வார்டு ஊடுகதிர் பிரிவு மற்றும் கூடுதல் உபகரணங்களோடு இம்மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்புச் சிகிச்சை அளித்திடும் வகையில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சிறப்பு சிகிச்சை நிலையமாக ஊடுகதிர் பிரிவு உபகரணங்கள் மருத்துவ ஆய்வகம் மற்றும் இரத்த சேமிப்பு வங்கியுடன் கூடியவனவாக 30 படுக்கைகளுடன் உள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்திடும் வகையில் மேம்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**சிறு சுகாதார நிலையங்கள் :**

கூட்டுறவு அடிப்படையில் கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த நல்வாழ்வு மற்றும் மருத்துவப் பணிபுரிய முன்வருகின்ற பொதுநல நிறுவனங்கள் சிறு சுகாதார நிலையங்கள் நடத்த ஊக்குவிக்கப்படுகின்றன. 5,000 மக்கள் தொகைக்கு ஒரு நிலையம் வீதம் ஆண்டு செலவினத் தொகை ரூபாய் 27,000 வீதம் இதில் மூன்றில் இரண்டு பங்கு அரசு மான்யத்துடன் நடத்தப்படுகின்றது. இம்மான்யம் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளுடன் அரசு தணிக்கைக்கு உட்பட்டு வழங்கப்படுகின்றது. மீதியுள்ள 1/3 செலவுத் தொகை நன்கொடை மூலம் அல்லது நோயாளிகளிடம் மிகக்குறைந்த கட்டணம் வசூலிப்பதன் மூலம் பொதுநல நிறுவனம் ஈடுசெய்ய வேண்டும்.

1985 ஆம் ஆண்டு இறுதியில் 273 சிறு சுகாதார நிலையங்களுக்கு ஒப்பளிக்கப் பட்டது. இவற்றில் 209 சிறு சுகாதார நிலையங்கள் 1989 மார்ச் 31 தேதியில் செயல் பட்டு வருகின்றன.

இந்த சிறு சுகாதார நிலையங்கள் இதுவரையிலும் இவ்வியக்ககத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் இருந்து வந்து மாவட்ட அளவில் இவ்வியக்ககத்திற்கு கள அலுவலர்கள் இல்லாத காரணத்தால் அரசு இவ்வியக்ககத்தில் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள சிறு சுகாதார நிலையங்கள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து, சென்னை-6 அவர்களுக்கு மாவட்ட அளவில் சுகாதார அலுவலர்கள் சிறு சுகாதார நிலையங்களாக கண்காணித்து, அரசு மானியங்களை வழங்க உள்ளதால் நிர்வாக கட்டுப்பாட்டினை மாற்ற உத்தேசித்து அரசு சிறு சுகாதார நிலையங்கள், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறைக்கு மாற்றப்பட்டது.

**மருத்துவ நல நிலையங்கள் :**

(எம்யுடிபி) சென்னை மாநகர அபிவிருத்தி திட்டப் பிரிவு 2-ன் கீழ் சென்னை நகர குடியிருப்பு பகுதிகளில் ஏழைகளுக்கு மருத்துவ வசதி செய்யும் பொருட்டு 22 மருத்துவ நல நிலையங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் 9 ஒன்றியங்கள் பழங்குடியினர் வாழும் பகுதிகளாக குறிக்கப் பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு முன்பே இவ்வொன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. அதில் ஒன்று மேம்படுத்தப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 1986-87-ல்

வடார்க்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியிலுள்ள நம்மியம்பட்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலையி லுள்ள கீழ்க்காட்டில் ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. இது மட்டுமல்லாமல் மேலும் 12 மருந்தகங்கள் மருத்துவத் துறையிடமிருந்து 1—6—1987 முதல் இத்துறைக்கு மாற்றப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன.

மேலும் கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை என்ற இடத்தில் சிதறிவாழும் பழங்குடி மக்களுக்காக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 30—3—1989 முதல் செயல் பட்டு வருகின்றது.

தேசிய கண் பார்வை குறைப்புத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுத் திட்டம் :

தேசிய கண் பார்வை குறைப்புத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு திட்டம் சாதாரண கண் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும், கண்ணாடி வகை முறைப்படுத்தவும், பள்ளி குழந்தைகளுக்கு கண் பாதுகாப்பு முறைகள் விளக்கவும் ஆரம்ப சுகாதார நிலையங் களில் செயல்படுத்தப்படுகின்றன. இதுவரையில் இத்திட்டம் இம்மாநிலத்தில் 145 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இதற்காக கண் சிகிச்சை உதவியாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன. இதற்காக ரூபாய் 3,000 மதிப்புள்ள உபகரணங்களை இந்திய அரசு வழங்குகிறது. இது ஒரு 100 விழுக்காடு மத்திய அரசு மானியம் பெறும் திட்டமாகும்.

மாநில மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம்.

தமிழ்நாட்டில் மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம் மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலரைத் தலைவராகக் கொண்டு தனித்துறையாக இயங்கி வருகிறது.

2 மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம், கீழ்க்காணும் சட்டங்களை செயல்படுத்து கிறது :

(அ) மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டம்.—இச்சட்டம் தரமுள்ள மருந்து கள் தயாரித்து விற்க உதவி வருகிறது. தவறு செய்பவர்கள் மீது வழக்குகள் தொடரப் படுகின்றன.

(ஆ) மருந்துகள் விலை கட்டுப்பாடு ஆணை.—இச்சட்டத்திற்கு கீழ் நிர்ண யிக்கப்பட்ட விலையில் மருந்துகள் விற்கப்படுகின்றனவா என்று கண்காணிக்கப்பட்டு, அப்படி அதிக விலைக்கு விற்கப்பட்டால் தவறு செய்பவர்கள் மீது வழக்குகள் தொடரப் படுகின்றன.

(இ) மருந்துகள் மற்றும் மாயக் குணமளிப்புகள்.—(ஆட்சேபகரமான விளம்பரங் கள் சட்டம்).—இச்சட்டத்தின்கீழ் இந்த நிர்வாகம் மக்களின் நலத்திற்காக ஆட்சேப கரமான பொய்யான தவறான மருந்து விளம்பரங்கள் செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கிறது.

(ஈ) போதை மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகள் சட்டம் 1985.—இச்சட்டத் தின்கீழ் இந்த நிர்வாகம் போதை மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகளை விற்பனை செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கிறது.

(உ) இறக்குமதி சட்டம்.—இறக்குமதி கட்டுப்பாடு உத்தரவின்படி மருந்து மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் இறக்குமதி தேவைகளைப் பெற மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர் பரிந்துரை செய்கிறார்.

3. ஆய்வு வசதிகள் :

இம்மாநிலத்தில் தயாரிக்கப்பட்டு மற்றும் விற்பனை செய்யப்பட்டுவரும் மருந்துகள் மற்றும் அழகுச் சாதனப் பொருட்களின் தரத்தினை தீவிரமாக கண்காணிக் கும் பொருட்டு நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ள இத்துறையின் மருந்து ஆய்வுக் கூடத்தில் மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் ஆய்வுச் செய்யப்படுகிறது.

4. சாதனைகள் :

மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகத்தின் செயல்முறை சாதனைகள் கீழே தரப்பட்டுள்ளன :

அட்டவணை.

மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகத்தின் செயல்முறை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள்

(1–4–1988 முதல் 31–3–1989 வரை).

| ஆய்வுகள். | | மருந்து மாதிரிகள் எடுத்தல். | | வழக்குகள். | | குறிப்புரை. |
|---|---|---|---|---|---|---|
| இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 36,000 | 41,016 | 4,000 | 4,742 | 150 | 309 | வழக்குகள் விவரம். |

(அ) மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் 1940—

1. தரம் குறைந்த மருந்துகள் தயாரித்தல் / விற்பனை செய்தல் .. .. 21
2. மருத்துவர்களுக்கு மாதிரிக்காக வழங்கப்படும் மருந்துகள் விற்பனைக்கு வைத்திருத்தல் .. .. 23
3. உரிமம் இல்லாமல் மருந்துகள் விற்பனை செய்வது .. 104
4. போலி, கலப்பட மருந்துகள் விற்பனை செய்தல் .. 12
5. மருந்தாளுநர் கண்காணிப்பின்றி மருந்துகள் விற்பனை செய்தல் .. 61
6. மருத்துவமனை மருந்துகள் விற்பனை செய்தல் .. 1
7. மற்ற குற்றங்கள் 76

(ஆ) மருந்துகள் விலைக் கட்டுப்பாடு ஆணை .. .. 5

(இ) மருந்துகள் மற்றும் மாய குணமளிப்புகள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டம் .. .. [illegible]

(ஈ) போதை மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகள் சட்டம் .. .. 1

மொத்தம் 309

## தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து.

சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறைகளில் மோட்டார் வாகனங்களின் அபிவிருத்தி யைக் கருத்திற்கொண்டும், மருத்துவ அலுவலகத்திற்கு பணிக்கு தடங்கல் நேரா வண்ணம் வாகனங்களை உடனுக்குடன் பழுது பார்க்கவும் சீராக பராமரிக்கவும், 1981-ல் இந்நிறுவனம், தனித்துறையாக ஆக்கப்பட்டு, இதன் இயக்குநருக்கு ஒரு துறைத் தலைவருக்குண்டான முழு அதிகாரமும் அளிக்கப்பட்டது. தற்பொழுது ஏறத் தாழ 2,100 ஊர்திகள் இத்துறையில் பேணப்பட்டு வருகின்றன.

துறையின் விரிவாக்கத்தினால், 1 மத்திய பணிமனை, 6 மண்டலப் பணிமனைகள், 9 மாவட்டப் பணிமனைகள், 20 நடமாடும் பணிமனைகள் மற்றும் மறுநிலைப்படுத்தும் பிரிவு மற்றும் வாகனங்களின் மேற்கூடு பழுது பார்க்கும் பிரிவு ஆகியவை தோன்றின. இத்துறையின் நிமித்தம் 672 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இதனால், 1974-ல் 20.8 , விழுக்காட்டில் இருந்த ஓடாத நிலையிலுள்ள எண்ணிக்கை 1989ல் 6.78 விழுக்காட்டிற்கு குறைக்கப்பட்டது.

ஒரு வாகனத்தின் என்ஜின், கியர் பாக்ஸ், போன்ற முக்கிய உதிரி திரட்டுகள் ( Assemblics ) ஒரு குறிப்பிட்ட வருடத்திற்கு பின் மறுசீர்படுத்தப்பட்டால் அது மீண்டும் புத்துயிர் பெற்று புதிய என்ஜின் திரட்டுகள், கியர் பாக்ஸ் திரட்டுக்கள் ஆகியவை மறுநிலைப்படுத்தப்பட்டது. இதனால் ஒரு வாகனத்தின் என்ஜின் பழுது ஏற்பட்டால் அதனை சீராக்கும்வரை அந்த வாகனம் ஓடா நிலையிலிருக்கும், நிலை மாறி, உடனடியாக, மறுநிலைப்படுத்தி தயாராக உள்ள என்ஜின்களை பொருத்தி விரைவில் ஓட வைக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனத்தின் (டீசலில் இயங்குவது) எரிபொருள் குழாய் என்னும் முக்கிய உறுப்பு அடிக்கடி பரிசோதிக்கப்பட வேண்டிய ஒன்று. இது சீராக செயல் பட்டால் அதிகப்படியான எரிபொருள் செலவாவது தவிர்க்கப்படுவதுடன், காற்றில் மாசு அதிகமாக உண்டாகி மக்களுக்கு ஊறு ஏற்படுவது குறையும். இம்மாதிரி 'ப்யூயல்' பம்புகளை தனியார் பட்டறைகளில் கொடுத்து பழுதுபார்ப்பதில் ஆகும் காலதாமதம் மற்றும் அதிக செலவுகள் ஆகியவைகளைக் கருத்திற்கொண்டும், சென்னையில் ஒரு 'ப்யூயல்' டெஸ்ட் பிரான்ச் நிறுவப்பட்டு, அதன் இயக்கம் 1989 ல் தொடங்கி வைக்கப் பட்டது.

இத்துறையில் 1979ல் 20 வருடத்திற்கு மேல் புழக்கத்தில் இருந்து வந்த ஊர்திகள் ஏறத்தாழ 600 ஆகும். அவைகளில் பல 'யுனிசெப்' நிறுவனம் மூலம் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டதாகும். இத்தகைய பழைய ஊர்திகள் பராமரிப்பதிலும், இயக்குவதிலும், அடிக்கடி பழுதுபடும் நிலையும் அரசுக்கு விளக்கி, ஆண்டுதோறும், இத்துறை, ஊர்தி உபயோகிப்பாளர் சார்பாக, இவ்வியக்ககமே அரசுக்கு தகுந்த முறையில் குறிப்புரை அனுப்பி வருடாவருடம், சராசரியாக 30 முதல் 40 ஊர்திகள் மாநில நிதி உதவி யுடனும், மத்திய நிதி உதவியுடன் பதிலமர்த்தப்படுகின்றது.

மேற்கண்ட திட்டங்களை தொடர்வதோடு மட்டுமல்லாது, எட்டாவது ஐந் தாண்டு திட்டத்தில் 50 முதல் 100 படுக்கை வசதிகள் கொண்ட ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனைக்கும், ஆம்புலன்ஸ் மற்றும் பிணவறை ஊர்திகள் வழங்குதல், மற்றும் தார்பாலின் கூரை கொண்ட ஜீப்புகளை பைபர்கிளாஸ் கூரை கொண்ட ஜீப்புகளாக மாற்றுதல் போன்ற புதிய திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## இந்தியமுறை, மற்றும் ஓமியோபதி முறை மருத்துவம்.

இந்திய முறை மருத்துவம் பண்டைநாளில் இந்தியாவில் முழுமையான வளர்ச்சி பெற்று மேன்மையான நிலையில் விளங்கியது. நாம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் இந்தியாவில், மருத்துவ முறையில் மேற்கத்திய முறை மருத்துவம் முதன்மை பெற்றி ருந்தது. இந்தியா விடுதலை அடைந்த பின்னர் இந்திய அரசும், தமிழ்நாடு அரசும். மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, இந்திய முறை மருத்துவம் மீண்டும் முக்கியத் துவம் பெறலாயிற்று. இந்திய முறை, ஓமியோபதி முறை மருத்துவத்தை சிறப்பாகச் சித்தமுறை மருத்துவத்தை மேம்படுத்த தமிழ்நாடு அரசு, தனிக்கவனம் செலுத்தி வரு கிறது.

சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா இந்தியமுறை அரசு மருத்துவமனை வளாகத் தில், இந்திய முறை மருத்துவத்தின் தனி இயக்குநரகம் ஒன்று 1970 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. சென்னை மருத்துவப்பணிகள் குடும்பநல இயக்குநரிடமிருந்து ஓமியோபதிமுறை மருத்துவத்துறை, 1984 ஆம் ஆண்டிலிருந்து இந்த இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

## நிதியொதுக்கம் :

இந்தியமுறை, ஓமியோபதிமுறை மருத்துவத்தின் மேம்பாட்டிற்காகக் கடந்த ஐந்தாண்டுகளாக ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கம் படிப்படியாக அதிகரித்துள்ளது.

| ஆண்டு. | வரவுசெலவுத்திட்ட நிதியொதுக்கம். (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1985-86 | 333.50 |
| 1986-87 | 348.82 |
| 1987-88 | 406.06 |
| 1988-89 | 451.14 |
| 1989-90 | 519.27 |

மருத்துவ உதவி :

பொதுமக்களுக்கு இந்திய முறை, ஓமியோபதிமுறை மருத்துவத்தின் மூலம் மருத்துவ உதவி அளிப்பதற்காக இந்தியமுறை, ஓமியோபதி மருத்துவமுறையைப் பின்பற்றும் கீழ்க்காணும் நிறுவனங்கள் இந்த இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன ;—

(1) பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட 250 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை.

(2) சென்னை, அறிஞர் அண்ணா இந்தியமுறை அரசினர் மருத்துவமனை, (209 படுக்கைகள் கொண்டது).

(3) திருமங்கலம், அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட, 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை.

(4) திருச்சிராப்பள்ளி, மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட சித்தமுறை வார்டுடன் கூடிய சித்தமுறை மருத்துவப் பிரிவு.

(5) மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 15 படுக்கைகள் கொண்ட சித்தமுறை வார்டுடன் கூடிய சித்தமுறை மருத்துவப் பிரிவுகள்:

(i) இராமநாதபுரம் ; (ii) தருமபுரி ; (iii) தூத்துக்குடி ; (iv) கடலூர்.

(6) மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 25 படுக்கைகள் கொண்ட சித்தமுறை வார்டுடன் கூடிய சித்த முறை மருத்துவப் பிரிவுகள்:

(i) ஈரோடு ; (ii) நாகப்பட்டினம் ; (iii) வேலூர் ; (iv) திண்டுக்கல்.

(7) எஞ்சியுள்ள 10 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் சித்தமுறை மருத்துவப் பிரிவுகள் வார்டு இல்லாத சித்தமுறை மருத்துவப் பிரிவுகள்.

(8) 19 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளிலுள்ள ஓமியோபதி மருந்தகங்கள்.

(9) சிதம்பரம் வட்டத்தில் 15 படுக்கைகள் கொண்ட சித்தமுறை மருத்துவ வார்டு உட்பட 70 வட்ட மருத்துவமனைகளில் உள்ள சித்தமுறை மருத்துவப் பிரிவுகள்.

(10) தாம்பரம், வட்ட மருத்துவமனையில் உள்ள ஓமியோபதி மருந்தகம்.

(11) வட்ட மருத்துவமனைகள் அல்லாத 13 மருத்துவ மனைகளிலுள்ள சுகாதார நிலையங்கள் 252-ல் உள்ள சித்தமுறை மருத்துவப் பிரிவுகள்.

(12) அரசினர் சித்த முறை கிராமப்பகுதி மருந்தகங்கள்—21.

(13) அரசினர் சித்தமுறை மருந்தகங்கள்—11.

(14) அரசினர் ஆயுர்வேத மருந்தகங்கள்—5.

(15) அரசினர் ஓமியோபதி மருந்தகங்கள்.—5.

(16) மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலுள்ள பஞ்சகர்மா மருந்தகம் உட்பட 3 ஆயுர்வேத மருத்துவப் பிரிவுகள்.

(17) மலைப்பகுதிகளில் உள்ள சித்தமுறை மருந்தகங்கள்—7.

(18) மலைப் பகுதியில் உள்ள (சேலம் மாவட்டம்) நடமாடும் சித்தமுறை மருத்துவப் பிரிவு —1.

மருத்துவக் கல்வி :

கீழ்க்காணும் 4 இந்தியமுறை ஓமியோபதி முறை, மருத்துவக்கல்லூரிகளும் இந்திய முறை, ஓமியோபதி முறை மருத்துவ இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன:

1. அரசினர் சித்தமுறை மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

2. அரசினர் சித்தமுறை மருத்துவக் கல்லூரி, பழனி.

3. அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி, சென்னை.

4. அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம்.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையிலுள்ள செவிலியருக்கான பயிற்சி வகுப்பு :

சித்த முறை, ஆயுர்வேத முறை, யுனானி முறை ஆகிய மருத்துவ முறைகளில் 15 செவிலியர்களுக்கு மூன்று மாத கால அளவிற்குப் பயிற்சி அளிக்கும் பயிற்சி வகுப்பு இந்த ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்பட்டது.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு :

இம்மருத்துவமனை, ஆண்டுதோறும் 50 மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு இரண்டாண்டு மருந்தாக்கியலில் பட்டயப்படிப்பை போதித்து வருகிறது.

மருந்தாக்ககங்கள் :

மூன்று மருந்தாக்ககங்கள் உள்ளன. அவையாவன :—

1. சென்னை-106, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்தாக்ககம்.

2. பாளையங்கோட்டை, அரசினர் சித்தமுறை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருந்தாக்ககம்.

3. பாளையங்கோட்டையிலுள்ள வட்டார மருந்தாக்ககம். இவை தவிர, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் 3 மாவட்ட மருந்தாக்ககங்களை ஏற்படுத்த 1985-86 ஆம் ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மருந்துகளைச் சோதனை செய்யும் ஆய்வுக்கூடம், சென்னை :

இது தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உதவி பெறும் திட்டங்களின் கீழ், மருந்துகளைச் சோதனை செய்யும் ஆய்வுக் கூடம் ஒன்றுக்குத் தனியான கட்டிடம் ஒன்றில் இடவசதி செய்து கொடுத்துள்ளது. இது, சென்னை-106, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனை வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடமாகும்.

ஆயுர்வேத மொழிபெயர்ப்புப் பிரிவு :

பி.ஏ., எம். எஸ். படிப்பிற்கான பாடநூல்களை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதற்காக கௌரவ தனி அதிகாரி ஒருவரின் கீழ் மொழிபெயர்ப்புப் பிரிவு ஒன்று இந்தியமுறை, ஓமியோபதி மருத்துவ இயக்ககத்தில் செயல்பட்டு வருகிறது. மூன்று நூல்கள் (அதாவது 1. அஷ்டாங்கசங்கிரஹா, 2. சாரக சம்ஹிதா, பாகம், I, II) மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. நாலாவது நூலான சாரக சம்ஹிதா பாகம் III அச்சிடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சித்தமுறை மருத்துவக்குழு, சென்னை :

அரசு, தமிழ்நாடு சித்தமுறை மருத்துவக் குழுவை நீக்கிவிட்டு, அதனை இந்திய முறை, ஓமியோபதி மருத்துவ இயக்ககத்தோடு சேர்த்துவிட்டது. தமிழ்நாடு சித்தமுறை மருத்துவக் குழுவின் பல்வேறு வகையான பணிகளும் இந்தியமுறை ஓமியோபதி மருத்துவ இயக்ககப் பணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன :

நூல்களை மொழிபெயர்த்தல் :

சித்தமுறை மருத்துவ நூல்களைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கக் கருதப்பட்டுள்ளது. கீழ்க்காணும் வகையைச் சேர்ந்தவற்றைத் தமிழ்நாடு சித்தமுறை மருத்துவக்குழு இதுவரை சேகரித்துள்ளது :

| | | |
|---|---|---|
| 1. | அரிதான மீண்டும் அச்சிடப்பட்ட நூல்கள் | 947 |
| 2. | ஓலைச்சுவடிகள் | 867 |
| 3. | கையெழுத்துப் பிரதிகள் | 314 |
| 4. | தட்டச்சு செய்த பிரதிகள் | 362 |
| 5. | மூப்பு பற்றிய தட்டச்சு செய்த பிரதிகள் 2 தொகுதிகள் | |
| 6. | ஏற்கெனவே வெளியிடப்பட்ட சித்தமுறை மருத்துவ நூல்கள் | 67 |

1987-88 ஆம் ஆண்டு வரையில் 12 கட்டுகளைக் கொண்ட ஓலைச் சுவடி எடுத்தெழுதப்பட்டன. 1988-89 ஆம் ஆண்டில் 21 கட்டுகளைக் கொண்ட ஓலைச் சுவடிகள் எடுத்தெழுதப்பட்டன.

1988-89 ஆம் ஆண்டு வரையில் 27 சித்தமுறை மருத்துவ நூல்கள் அச்சிடுவதற்காக ஒப்படைக்கப்பட்டன. இவற்றில், பி.எஸ்.எம். எஸ். படிப்பிற்கான 12 பாட நூல்கள் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டன. எஞ்சியுள்ள 15 நூல்களும் அச்சிடப்பட்டு வருகின்றன.

இந்தியமுறை மருத்துவத்தின் தமிழ்நாட்டுக்குழு, சென்னை.

ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவக் குழு, சென்னை—ஓமியோபதி குழு

31—12—1988 ஆம் நாள் நிலவரப்படி, இந்தியமுறை மருத்துவத்தின் தமிழ்நாட்டுக் குழு, ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவக் குழு, ஓமியோபதி குழு ஆகியவற்றில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டுள்ள இந்தியமுறை மருத்துவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

(1) சென்னை, இந்தியமுறை மருத்துவத்தின் தமிழ்நாட்டுக் குழுவில் பெயரைப் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் :

| | |
|---|---|
| சித்தமுறை மருத்துவம் | 10,161 |
| ஆயுர்வேதமுறை மருத்துவம் | 2,693 |
| யுனானிமுறை மருத்துவம் | 748 |
| மொத்தம் | 13,602 |

(2) சென்னை ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவக்குழுவில் பெயரைப் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் :

| | |
|---|---|
| சித்தமுறை மருத்துவம் | 296 |
| ஆயுர்வேதமுறை மருத்துவம் | 431 |
| யுனானிமுறை மருத்துவம் | 46 |
| மொத்தம் | 773 |

(3) ஓமியோபதி மருத்துவக்குழுவில் பெயரைப் பதிவு செய்தவர்கள் :

| | |
|---|---|
| ஏ. வகை | 365 |
| பி. வகை | 13,733 |
| சி. வகை | 1,443 |
| மொத்தம் | 15,541 |

செங்கல்பட்டிலுள்ள முட்டுக்காட்டில் இயற்கைமுறை மருத்துவத்திற்காக, 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

பரம்பரை சித்தமுறை மருத்துவர்களுக்கு முதியோர் உதவித் தொகை :

சென்னை, இந்தியமுறை மருத்துவ தமிழ்நாட்டுக் குழுவிலும், இந்தியமுறை மருத்துவ கேரள நாட்டுக் குழுவிலும் (கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பரம்பரை சித்தமுறை மருத்துவர்கள்) ''பி'' அல்லது ''சி'' வகையினராகப் பதிவு செய்துகொண்ட ஆண்டு வருமானம் 6,000 ரூபாய்க்கும் குறைவாக உள்ள வேலை செய்ய இயலாத, வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான வருவாய் ஈட்ட இயலாத, 60 வயதைக் கடந்த வயதான பரம்பரை சித்தமுறை மருத்துவர்களுக்கு 13—9—1986 முதல், அரசு மாதமொன்றுக்கு 150 ரூபாயை முதியோர் உதவித் தொகையாக வழங்கி வருகிறது.

இலவச மருத்துவ முகாம் :—அனைத்து மாவட்ட சித்தமுறை மருத்துவ அதிகாரிகளும் மாதமிருமுறை ஊரகப் பகுதியிலுள்ள கிராமங்களில் இலவச மருத்துவ முகாம்களை நடத்தி வருகின்றனர்.

வட்டார அளவில் மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தல் :—வருங்காலத்தில் தொடங்கப்படவிருக்கிற சிறு அளவிலான மூலிகை மருந்தாக்கப் பிரிவின் மூலம் உள்ளூர் தேவைகளைச் சமாளிக்க வட்டார அளவில் இயலக்கூடிய இடங்கள் அனைத்திலும் 25 ஏக்கர் பரப்பளவில் சிறிய அளவிலான மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தும்படி தேசிய தொழில்நுட்பக் குழு கேட்டுக்கொண்டுள்ளது. மத்திய அரசின் உதவியை நாடுவதன் மூலம் மேற்சொன்ன திட்டத்தைச் செயல்படுத்தத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நோய்த்தடுப்பு முறைகள் :—தெரிவு செய்யப்பட்ட, குறிப்பாக, கருவுற்ற தாய்மார்களுக்கு மகப்பேற்றிற்கு முன்னரும், பின்னரும் ஏற்படக்கூடிய நோய்கள், எல்லா வயது தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடிய நோய்கள் ஆகியவை வராமல் தடுக்க இந்தியமுறை மருத்துவத்தின் மூலம் நோய்த்தடுப்பு முறைகளைப் பின்பற்ற நடவடிக்கைகள் எடுக்கும்படி, தேசிய தொழில்நுட்பக்குழு, மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. பயனுள்ள தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வருகின்ற நிதியாண்டிலிருந்து செயல்படுத்துவதற்காக விரிவான திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன.

சித்தமுறை மருத்துவ தேசிய நிறுவனம் அமைத்தல் :—நீண்ட காலத் தேவையாக இருந்து வரும், சித்தமுறை மருத்துவ தேசிய நிறுவனத்தைச் சென்னையில் புறநகர்ப் பகுதியில் அதாவது செங்கை-அண்ணா மாவட்டத்தில் விரைவில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யோகாசனம் :—யோகாசன முறையை, தமிழ்நாட்டில் சிகிச்சை அளிக்கும் முறையாக அரசு அங்கீகரித்துள்ளது. கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவ அதிகாரிகள், உதவி விரிவுரையாளர்கள், உதவி மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கு சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனை, பாளையங்கோட்டை அரசினர் சித்தமுறை மருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் மாதமொன்றுக்கு 300 ரூபாயை மதிப்பூதியமாக அளிப்பதன் பேரில், யோகி எஸ்.ஏ.ஏ. இராமையா, எம்.ஏ. (எஸ்.) அவர்கள் மூலம் யோகாசன முறை பற்றி குறைந்தகால பயிற்சி வகுப்புகளை நடத்தும்படி அரசு ஆணையிட்டுள்ளது. இதன் முதற்படியாக யோகி எஸ்.ஏ.ஏ. இராமையா அவர்கள், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகள், உதவி மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கு 29—4—1987 முதல் 27—5—1987 வரை யோகாசன முறை பற்றிக் குறைந்தகால பயிற்சி வகுப்புகளை நடத்தி யோகாசன முறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட மருத்துவர்களுக்கு அசலிமான சான்றிதழ்களை வழங்கினார்.

<u>ஆராய்ச்சி நடவடிக்கைகள்</u> :—(i) மத்திய ஆராய்ச்சி நிறுவனம் (சித்தமுறை): சென்னை-106 : அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனை வளாகத்தில், மாநில அரசு இடவசதி அளித்த புதிய கட்டிடத்தில் மத்திய ஆராய்ச்சி (சித்த முறை) நிறுவனம் இயங்கி வருகிறது. புதுடில்லியிலுள்ள, ஆயுர்வேத, சித்தமுறைகளில் ஆராய்ச்சி செய்வதற்கான மத்திய குழுவின் கீழ் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. அக நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக 30 படுக்கை வசதிகளையும் இந் நிறுவனம் கொண்டுள்ளது. புற்றுநோய், நீரிழிவு, மஞ்சள் காமாலை முதலிய நோய்கள் பற்றிய ஆராய்ச்சியையும் இந்நிறுவனம் நடத்தி வருகிறது.

(ii) <u>கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி நிறுவனம்</u> :—புதுடில்லியிலுள்ள, ஆயுர்வேத, சித்தமுறை ஆராய்ச்சி நிறுவனத்தின் மத்தியக் குழுவின் கீழ் இந் நிறுவனம் இயங்கி வருகிறது. பின்வருபவை குறித்து இந்த நிறுவனம் ஆராய்ச்சி நடத்தி வருகிறது :

(1) தாவர வேதியியல் பற்றிய ஆராய்ச்சி.

(2) ஆயுர்வேத மருந்துகளை தர நிர்ணயம் செய்தல்.

(3) வட்டார யுனானி முறை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்.

(iii) சென்னை இராயபுரத்தில், வட்டார யுனானி முறை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை யுனானி முறைபற்றி ஆராய்ச்சி செய்யும் மத்தியக் குழு நிறுவியுள்ளது. சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் மத்தியக் குழுவின் உதவி பெறும், யுனானி முறை மருத்துவம் பற்றி ஆராய்ச்சி செய்யும் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது.

# அத்தியாயம்—13

## உள்துறை

## திரைப்படங்களும்—வீடியோவும்.

### (i) திரைப்படங்கள் :

இந்திய அரசு திரைப்படங்களை வெளியிடுவதற்கான உரிய சான்றிதழ்களை வழங்குவதற்கும், திரையரங்குகள் கட்டுதலை ஒழுங்குபடுத்துவதற்கும் திரையரங்குச் சட்டம் (மத்தியச் சட்டம் 1952) இயற்றியுள்ளது.

தமிழக அரசும், தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்கு) சட்டம் 1955-ஐ (சட்டம் IX 1955) இயற்றியுள்ளது. இந்தச் சட்டம் தனிப்பட்டவர்களுக்குத் திரையரங்குகளில் திரைப்படம் காட்ட உரிமம் வழங்க வழி வகுத்துள்ளது. இந்தச் சட்டத்தில் வழி வகுத்துள்ள விதிகளின்படி மாவட்டாட்சியரே மாவட்டங்களின் உரிமம் வழங்கும் அதிகாரியாக உள்ளார். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் காவல் ஆணையர் உரிமம் வழங்கும் அதிகாரி ஆவார். திரைப்படச் சட்டத்தின் கீழ் சென்னை மாவட்டாட்சியருக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் ஏதுமில்லை.

திரைப்படச் சட்டத்தின்கீழ் திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குவதில் கீழ்க் கண்டவாறு இரண்டு நிலைகள் உள்ளன :

1. தடையின்மைச் சான்று வழங்குதல்.

2. 'சி' படிவ உரிமம் வழங்குதல்.

### திரையரங்குகளின் வகைப்பாடுகள் :

தமிழ்நாட்டில் மொத்தம் மூன்று வகையிலான திரையரங்குகள் செயல்படுகின்றன:—

1. நிரந்தரத் திரையரங்கு.

2. பகுதி நிரந்தரத் திரையரங்கு.

3. நகரும் திரையரங்கு.

1970-ம் வருடம் 'பகுதி நிரந்தரத் திரையரங்கு' அரசால் புதிய வகையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இது நிரந்தரத் திரையரங்குகள் என்றே எல்லா வகையிலும் கருதப்படுகிறது. இத் திரையரங்கு ஆரம்பித்த 5 வருடம் முதல் 7 வருட காலத்திற்குள்ளாக நிரந்தரத் திரையரங்காக மாற்றப்படத்தக்கதாகும். நிரந்தரத் திரையரங்குகளுக்கு உரிய விதிகளே பகுதி நிரந்தரத் திரையரங்கிற்கும் கடைபிடிக்கப் படுகிறது.

மேற்கூறிய மூன்று திரையரங்கு வகைகளைத் தவிர திறந்தவெளித் திரையரங்கும் உள்ளது. இந்த திறந்தவெளி திரையரங்கு 1976-ம் வருடம் செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், சோமங்கலம் கிராமத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 31—3—1989 தேதி நிலவரப்படி மாநிலத்தில் உள்ள நிரந்தரம், பகுதி நிரந்தரம், நகரும் திரையரங்குகளின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வரிசை எண். (1) | வகைப்பாடு. (2) | மொத்தம். (3) |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் : | |
| | (1) காற்றுப்பதனம் செய்யப்பட்டது | 117 |
| | (2) பகுதியாக காற்றுப்பதனம் செய்யப்பட்டது | 17 |
| | (3) காற்றுப்பதனம் செய்யப்படாதது | .. 1,209 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 920 |
| 3. | திறந்தவெளித் திரையரங்குகள் | 13 |
| 4. | நகரும் திரையரங்குகள் | .. 1,009 |

(ii) வீடியோ.

இம் மாநிலத்தில், காணொலிக் காட்சிக் கருவிகள் (VCR) மூலம் தொலைக் காட்சியில் திரைப்படங்கள் காட்டுவதை ஒழுங்குபடுத்தவும் மற்றும் அது தொடர்பான துணை விளைவுகள் ஆகியவற்றை முறைபடுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு. தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் (VCR) மூலம் தொலைக் காட்சியில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றியது. இச் சட்டம், தனியார், வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படம் காட்டுவதற்கும், வீடியோ கேசட் விற்பனை நிலையங்களை நிறுவவும் உரிமம் வழங்க வகை செய்கிறது. சென்னை மாநகரில் காவல்துறை ஆணையாளரும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக இருப்பர். இருப்பினும் குடும்ப உறுப்பினர்கள் மட்டும் வீட்டிலேயே திரைப்படம் பார்க்க வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படம் காட்டுவதற்கு இச்சட்டத்தின் விதித் துறைகளுக்கு இணங்க உரிமம் எதுவும் பெறத் தேவையில்லை.

வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் (காணொலிக் காட்சிக்கருவி) மூலம் தொலைக் காட்சியில் திரைப்படம் காட்டுவதற்கு உரிமம் வழங்குவதில் இரண்டு தனிப்பட்ட நிலைகள் உள்ளன:—

1. மறுப்பின்மை சான்றிதழ் வழங்குதல்.
2. 'ஜி' படிவ உரிமம் வழங்குதல்.

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக் காட்சியில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் உரிமம் வழங்கப்பட்ட வீடியோ திரையரங்குகள், வீடியோ கேசட் விற்பனை நிலையங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | வீடியோ திரையரங்குகள் | இல்லை. |
| 2. | வீடியோ கேசட் விற்பனை நிலையங்கள் | 2,222 |

## உரிமை இயல் நீதிமன்றங்கள்

உரிமையியல் நீதிமன்றங்கள் :

சென்னை உயர்நீதி மன்றத்தின் மேல் முறையீடு அதிகார வரம்பு பிரிவு.—

பின்வரும் வகையிலான வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது அதிகரித்துள்ளது:—

1. முதல் மேல் முறையீடுகள்.
2. முதலேற்பு அதிகார வரம்பு மேல் முறையீடுகள்.
3. பரிந்துரைத்து அனுப்பப்பட்ட வழக்குகள்.
4. ரிட் மனுக்கள்.
5. வணிகக் குறி தொடர்பான முறையீடுகள்.
6. பரிந்துரைத்து அனுப்பப்பட்ட தொடர்பான மனுக்கள்.
7. உரிமையியல் பல்வகை மனுக்கள்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் முதலேற்பு அதிகார வரம்பு.— உரிமையியல் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது மட்டும் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. ஏனைய வகைகளைத் தாக்கல் செய்து அதாவது விருப்புறுதி ஆவணம் (உயில்) தொடர்பான அசல் வழக்குகள், திருமண உரிமை தொடர்பான வழக்குகள், அசல் மனுக்கள், நிறைவேற்ற மனுக்கள் போன்றவற்றை தாக்கல் செய்வது குறைந்துள்ளது.

சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றம் :—உரிமையியல் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது மட்டும் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. அசல் வழக்குகள், உரிமையியல் மேல்முறையீடுகள், உரிமையியல் பல்வகை முறையீடுகள், வழக்கிடை விண்ணப்பங்கள், உரிமையியல் பல்வகை மனுக்கள். நிலம் கையகப்படுத்தியது தொடர்பான அசல் மனுக்கள். தொழிலாளர் நலக் காப்புறுதி மனுக்கள் ஆகியவற்றைத் தாக்கல் செய்வது குறைந்துள்ளது.

சிறுவழக்கு நீதி மன்றம்.—சிறுவழக்குகள், பல்வகை மனுக்கள், மோட்டார் வண்டி விபத்துக் கோரிக்கை அசல் மனுக்கள் தாக்கல் செய்வது கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. வாடகைக்கட்டுப்பாடு தொடர்பான அசல் மனுக்கள் தாக்கல் செய்வது சிறிது அதிகரித்துள்ளது. ஊதியம் வழங்கல் சட்டத்தின்கீழ் புதிய விசாரணை விண்ணப்பங்கள், வாடகைக் கட்டுப்பாடு தொடர்பான மேல்முறையீடுகள், தாக்கல் செய்யப்படும் நிறைவேற்ற மனுக்கள் ஆகியவை தாக்கல் செய்யப்படுவது குறைந்துள்ளது. வெளியேற்ற முறையீடுகள், உரிமையியல் பல்வகை அசல் மனுக்கள் தொடர்பான நிறைவேற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்படுவது குறைந்துள்ளது. நகராட்சி வரி விதிப்பு, நகரமைப்புத் திட்டமேல்முறையீடுகள், தேர்தல் மனுக்கள், நகராட்சி தொடர்பான விண்ணப்பம் ஆகியவை எவையும் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியூர் நீதி மன்றங்கள். - (அசல் வழக்குகள்)—மேல்நிலை நீதிமன்றங்கள்.—தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 16,945-லிருந்து 16,938 ஆகக் குறைந்துள்ளது. சேலம், தஞ்சாவூர் மேற்கு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள்:—இந்நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 98,399 லிருந்து 95,589 ஆகக் குறைந்துள்ளது. தென் ஆற்காடு, பெரியார், கன்னியாகுமரி, மதுரை, அண்ணா, திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஏனைய மாவட்டங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

உரிமையியல் மேல்முறையீடுகள்—மேல்நிலை நீதிமன்றங்கள்.—தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3,705-லிருந்து 2,699 ஆகக் கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளது. பெரியார், கன்னியாகுமரி, அண்ணா, தருமபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மட்டும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சிறு வழக்குகள்:—மேல்நிலை நீதிமன்றங்கள்.—கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஏனைய மாவட்டங்களில் வழக்குகள் ஏதும் தாக்கல் செய்யப்பட வில்லை. தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,196-லிருந்து 858 ஆகக் கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள்.—தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை கணிசமாக அதாவது 4,540—லிருந்து 3,286 ஆகக் குறைந்துள்ளது. பெரியார், கன்னியாகுமரி, தருமபுரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலான மாவட்டங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மாறாமல் அப்படியே உள்ளது.

உரிமையியல் பல்வகை மனுக்கள்.—மேல்நிலை நீதிமன்றங்கள்.— தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கை 149,383-லிருந்து 144,365 ஆகக் குறைந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள்.—இந்நீதிமன்றங்களிலும் கூட தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 290,749 லிருந்து 264,523 ஆகக் குறைந்துள்ளது.

வாடகை தொடர்பான நடுவர் மன்ற மேல்முறையீடுகள்.—மேல்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 484—லிருந்து 383 ஆகக் குறைந்துள்ளது. கீழ் நிலை நீதிமன்றங்களில் வழக்குகளின் எண்ணிக்கை மாறாமல் அப்படியே உள்ளது.

அசல் மனுக்கள்.—மேல்நிலை, கீழ்நிலை, நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முறையே 15,066-லிருந்து 11,176 ஆகவும், 5,806-லிருந்து 4,727 ஆகவும் குறைந்துள்ளது.

நொடிப்பு நிலை அறிவிப்பு மனுக்கள்:—மேல்நிலை, கீழ்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை குறைந்துள்ளது. அதாவது முறையே 506-லிருந்து 447 ஆகவும், 72 யிலிருந்து 46 ஆகவும் குறைந்துள்ளது.

நிறைவேற்று மனுக்கள்.—இவ்வகையில் மேல்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த மனுக்களின் எண்ணிக்கை 6,575-லிருந்து 6,161 ஆகவும், கீழ்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 40,123—லிருந்து 39,121 ஆகவும் குறைந்துள்ளது.

வாடகைக் கட்டுப்பாடு தொடர்பான அசல் மனுக்கள்.—கீழ்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் மொத்த எண்ணிக்கை 4,756—லிருந்து 4,113 ஆகக் குறைந்துள்ளது.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.—தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட தொழில் தகராறு குறித்த மனுக்கள் எண்ணிக்கை 559-லிருந்து 857 ஆகக் கணிசமாக உயர்ந்துள்ளது. 33, 33A, 33(C) (2) பிரிவுகளின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கையும் 1250-லிருந்து 1288 ஆக உயர்ந்துள்ளது.

மதுரையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.—தொழில் தகராறுகள் சட்டத்தின் 10ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட தொழில் தகராறு குறித்த மனுக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. அதாவது 284-லிருந்து 568 ஆக 33, 33A, 33 (C) (2) பிரிவுகளின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கையில் மூன்று குறைந்துள்ளது.

கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.—தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட தொழில் தகராறுகள் குறித்த மனுக்களின் எண்ணிக்கை 260—லிருந்து 451 ஆக உயர்ந்துள்ளது. 33, 33 A, 33(C) (2) பிரிவுகளின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 847 லிருந்து 449 ஆகக் கணிசமான அளவிற்கு குறைந்துள்ளது.

சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.—தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 140—லிருந்து 120 ஆகக் குறைந்துள்ளது. 33, 33A, 33 (C) (2) பிரிவுகளின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 208—லிருந்து 246 ஆக உயர்ந்துள்ளது.

1—4—1989 முதல் 31—3—1989 வரையிலான கால அளவில் இயங்கிய தற்காலிக நீதிமன்றங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அட்டவணை.

| | | |
|---|---|---|
| 1. | கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட மாவட்ட நீதிமன்றங்கள். | 10 |
| 2. | மாவட்ட நீதிபதிகள் பதவித்தரத்தில் சென்னை மாநகர் உரிமையியல் நீதி மன்றத்தில் இயங்கிய தற்காலிக நீதிமன்றங்கள் | 6 |
| 3. | தனியார் கல்லூரிகள் மேல்முறையீட்டு நடுவர் மன்றம், சென்னை. | 1 |
| 4. | கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான வழக்குகளுக்கான தனி நடுவர் மன்றம், சென்னை | 1 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான வழக்குகளுக்கான தனி நடுவர் மன்றம், மதுரை | 1 |
| 6. | கூடுதல் தொழிலாளர் நல நீதிமன்றம், மதுரை. | 1 |
| 7. | கூடுதல் தொழிலாளர் நல நீதிமன்றம்-III, சென்னை. | 1 |
| 8. | கூடுதல் துணை நீதிமன்றங்கள் (புதிய இடங்களிலுள்ள தற்காலிக நீதிமன்றங்கள் உட்பட). | 6 |
| 9. | சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்திலுள்ள கூடுதல் உதவி நீதிபதி நீதிமன்றங்கள் (XI முதல் XIX வரையிலான உதவி நீதிபதி நீதிமன்றங்கள்) | 8 |
| 10. | துணை நீதிபதிகள் பதவித் தரத்தில் சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்தில் இயங்கிய துணை (நீதிபதிகள்) நீதிமன்றங்கள். | |
| 11. | கூடுதல் மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் (புதிய இடங்களில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டு உள்ள மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் உட்பட). | 26 |
| 12. | சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் மாவட்ட முன்சிப் பதவித்தரத்தில் வாடகைக் கட்டுப்பாடு குறித்த தற்காலிக நீதிமன்றங்கள். | 4 |
| 13. | 1982–83, 1983–84, 1984–85, 1985–86, 1986–87, 1987–88, 1988–89 ஆகிய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட கூடுதல் மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் நீதிபதிகள் இல்லாததால் இயங்கத் தொடங்கவில்லை. | |
| 14. | குடும்பநல நீதிமன்றம், சென்னை (2–10–1988லிருந்து). | |

## முதலேற்பு வழக்குகள் : சென்னை உயர்நீதிமன்றம்.

| தொடர் எண். வழக்குகளின் தன்மை. | 1-4-87 முதல் 31-3-88 வரை | 1-4-88 முதல் 31-3-89 வரை | 1-4-87 முதல் 31-3-88 வரை | 1-4-88 முதல் 31-3-89 வரை | 1-4-87 முதல் 31-3-88 வரை | 1-4-88 முதல் 31-3-89 வரை |
|---|---|---|---|---|---|---|
| | தொடரப்பட்டவை | | தீர்ப்பு வழங்கப்பட்டவை. | | தீர்ப்பு வழங்கப்படாமலுள்ளவை. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. உரிமையியல் வழக்குகள் | 1,150 | 1,508 | 299 | 292 | 4,535 | 5,751 |
| 2. ஆவணம் தொடர்பான விருப்புறுதி வழக்குகள் | 43 | 39 | 10 | 6 | 146 | 179 |
| 3. திருமண உரிமை தொடர்பான வழக்குகள் | 52 | 34 | 27 | 24 | 105 | 115 |
| 4. அசல் மனுக்கள் | 633 | 592 | 595 | 463 | 732 | 861 |
| 5. நிறைவேற்ற மனுக்கள் | 130 | 84 | 122 | 72 | 92 | 104 |
| மொத்தம் .. | 2,008 | 2,257 | 1,053 | 857 | 5,610 | 7,010 |

## மேலேற்பு அதிகார வரம்பு, சென்னை உயர்நீதிமன்றம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. முதல் மேல்முறையீடுகள் | 1,194 | 1,509 | 659 | 202 | 6,550 | 7,857 |
| 2. முதலேற்பு அதிகார வரம்பு மேல்முறையீடுகள். | 213 | 248 | 148 | 194 | 909 | 963 |
| 3. முத்திரைப் பத்திரம் தொடர்பான மேல் முறையீடுகள். | 218 | 168 | 215 | 314 | 414 | 268 |
| 4. ரிட் மேல் முறையீடுகள், | 2,390 | 1,438 | 1,557 | 1,889 | 3,400 | 2,949 |
| 5. இரண்டாம் மேல்முறையீடுகள். | 1,948 | 1,806 | 1,191 | 954 | 11,727 | 12,579 |
| 6. ஆணைகளுக்கு எதிரான மேல் முறையீடுகள். | 1,239 | 1,074 | 839 | 486 | 4,865 | 5,43 |
| 7. மேல்முறையீட்டு ஆணைகளுக்கு எதிரான மேல் முறையீடு. | 73 | —73 | 59 | 116 | 386 | 343 |
| 8. உரிமையியல் மறு ஆய்வு மனுக்கள். | 3,995 | 3,365 | 4,015 | 4,198 | 10,112 | 9,279 |
| 9. வரி தொடர்பான வழக்குகள். | 1,427 | 1,108 | 283 | 264 | 11,306 | 12,150 |
| 10. வரி தொடர்பான வழக்கு பற்றிய மனுக்கள். | 318 | 265 | 424 | 373 | 579 | 471 |
| 11. மீன் காண் வழக்குகள். | 12 | 13 | | 4 | 73 | 82 |
| 12. திருமண் உரிமை தொடர்பான வழக்குகள். | 42 | 41 | 35 | 40 | 104 | 105 |
| 13. ரிட் மனுக்கள். | 13,661 | 17,289 | 9,137 | 10,299 | 48,723 | 55,713 |
| 14. உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள். | 28 | 23 | 23 | 24 | 121 | 12 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 15. தனி நடுவர் மன்ற மேல் முறையீடு. | 44 | 16 | 2 | 553 | 729 | 192 |
| 16. அவமதிப்பு குறித்த மேல் முறையீடுகள். | 12 | 12 | 5 | 10 | 24 | 26 |
| 17. வணிகக் குறி தொடர்பான மேல்முறையீடுகள். | | 6 | இல்லை | 2 | 47 | 51 |
| 18. வணிகக் குறி தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள். | இல்லை | இல்லை | இல்லை | 1 | 4 | 3 |
| 19. பரிந்துரை வழக்கு குறித்த மனுக்கள். | 10 | 22 | 3 | 5 | 27 | 44 |
| 20. உரிமையியல் பல்வகை மனுக்கள். | 40,208 | 42,617 | 38,273 | 30,779 | 64,748 | 76,586 |
| மொத்தம் | 67,043 | 71,093 | 56,868 | 50,707 | 1,64,848 | 1,85,234 |

மாநகர் உரிமையியல் நீதிமன்றம், சென்னை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. அசல் வழக்குகள். | 13,680 | 11,231 | 10,092 | 8,343 | 19,282 | 23,170 |
| 2. உரிமையியல் மேல்முறையீடுகள். | 913 | 575 | 743 | 638 | 686 | 623 |
| 3. உரிமையியல் பல்வகை மேல் முறையீடுகள். | 251 | 222 | 248 | 211 | 173 | 184 |
| 4. உரிமையியல் பல்வகை மனுக்கள். | 23,993 | 22,920 | 23,672 | 18,721 | 18,299 | 22,498 |
| 5. அசல் மனுக்கள். | 1,206 | 956 | 1,302 | 588 | 890 | 250 |
| 6. நிலம் கையகப்படுத்தியது தொடர்பான அசல் மனுக்கள். | 205 | 64 | 25 | 79 | 431 | 416 |
| 7. நிறைவேற்ற மனுக்கள். | 3,165 | 4,064 | 2,674 | 2,316 | 3,782 | 5,530 |
| 8. தொழிலாளர் நலக் காப்புறுதி அசல் மனுக்கள். | 158 | 96 | 12 | 65 | 341 | 372 |
| மொத்தம் .. | 43,571 | 40,128 | 38,768 | 30,961 | 43,884 | 53,043 |

சிறுவழக்கு நீதிமன்றம், சென்னை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. சிறுவழக்குகள். | 7,227 | 11,973 | 4.614 | 6,085 | 4,883 | 10,771 |
| 2. பல்வகை மனுக்கள். | 21,159 | 23,725 | 20,164 | 25,323 | 9,975 | 8,377 |
| 3. மோட்டார் வண்டி விபத்துக் கோரிக்கை அசல் மனுக்கள். | 2,529 | 3,114 | 2,199 | 2,130 | 4,021 | 5,005 |
| 4. வாடகைக் கட்டுபாடு தொடர்பான அசல் மனுக்கள். | 4,179 | 4,201 | 4,402 | 3,313 | 6,573 | 7,461 |
| 5. புதிய விசாரணை விண்ணப்பங்கள். | | 25 | 69 | 48 | 80 | 57 |
| 6. வாடகைக் கட்டுபாடு தொடர்பான மேல் முறையீடுகள். | 881 | 559 | 847 | 242 | 851 | 1,168 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 7. நகராட்சி வரி விதிப்பு மேல் முறையீடுகள் | 1 | | 14 | | | |
| 8. வெளியேற்ற மேல்முறையீடு கள் | 12 | 10 | 13 | | 10 | 20 |
| 9. நகரமைப்புத் திட்டம் தொடர்பான மேல்முறை யீடுகள் | | | | .. | .. | .. |
| 10. நிறைவேற்ற மனுக்கள் | 736 | 678 | 1,869 | 572 | 259 | 365 |
| 11. ஊதியங்கள் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மேல்முறையீடுகள் | 20 | 2 | 1 | 1 | 19 | 20 |
| 12. தேர்தல் தொடர்பான மனுக்கள் | | | | | | |
| 13. நகராட்சி தொடர்பான விண்ணப்பங்கள் | | | | | | |
| 14. அவசரச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மனு | | | — | | 3 | [illegible] |
| 15. மோட்டார் வண்டி விபத்துக் கோரிக்கை அசல் மனுக் கள் | 96 | 91 | 103 | 98 | 104 | 97 |
| மொத்தம் | 36,907 | 44,378 | 34,285 | 37,812 | 26,778 | 33,344 |
| மேல்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் மேல்முறை யீடுகள் | 7,650 | 6,519 | 5,577 | 6,294 | 8,816 | 8,350 |
| மேல்நிலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் பல்வகை மேல்முறையீடுகள் | 3,705 | 2,699 | 2,411 | 2,805 | 4,835 | 4,677 |
| வாடகைக் கட்டுப்பாடு குறித்த அசல் மனுக்கள் கீழ்நிலை நீதிமன்றங்கள் | 4,756 | 4,113 | 4,884 | 5,340 | 11,691 | 11,588 |

| தொடர் எண் மற்றும் விவரம். | தொடரப்பட்ட வழக்குகள். | | | | தீர்ப்பு வழங்கப்பட்டவை | |
|---|---|---|---|---|---|---|
| | மேல்நிலை நீதிமன்றங்கள். | | கீழ்நிலை நீதிமன்றங்கள். | | மேல்நிலை நீதிமன்றங்கள். | |
| | 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | 1-4-1988 முதல் 31-3-1989 வரை. | 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | 1-4-1988 முதல் 31-3-1989 வரை. | 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | 1-4-1988 முதல் 31-3-1989 வரை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. அசல் வழக்குகள் | 16,945 | 16,938 | 98,399 | 95,589 | 11,524 | 13,973 |
| 2. சிறு வழக்குகள் | 1,196 | 858 | 4,540 | 3,286 | 794 | 563 |
| 3. உரிமையியல் பல்வகை மனுக்கள் | 1,49,383 | 1,44,365 | 2,90,749 | 2,64,523 | 1,38,099 | 1,35,898 |
| 4. வாடகை தொடர்பான நடுவர் மன்ற மேல்முறையீடுகள் | 484 | 333 | 4 | 4 | 177 | 304 |
| 5. அசல் மனுக்கள் | 15,066 | 11,176 | 5,806 | 4,727 | 11,947 | 11,719 |
| 6. நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள் | 506 | 447 | 72 | 46 | 344 | 322 |
| 7. நிறைவேற்ற மனுக்கள் | 6,575 | 6,161 | 40,123 | 39,121 | 5,754 | 5,018 |

| | தீர்ப்பு வழங்கப்பட்டவை. | | தீர்ப்பு வழங்கப்படாமலுள்ளவை. | | | |
|---|---|---|---|---|---|---|
| | கீழ் நிலை நீதிமன்றங்கள். | | மேல்நிலை நீதிமன்றங்கள். | | கீழ்நிலை நீதிமன்றங்கள். | |
| | 1-4-1987 முதல் 31-3-1988 வரை | 1-4-1988 முதல் 31-3-1989 வரை | 1-4-1987 முதல் 31-3-1988 வரை | 1-4-1988 முதல் 31-3-1989 வரை | 1-4-1987 முதல் 31-3-1988 வரை | 1-4-1988 முதல் 31-3-1989 வரை |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. அசல் வழக்குகள் | 85,363 | 92,995 | 26,589 | 30,412 | 1,56,406 | 1,64,087 |
| 2. சிறு வழக்குகள் | 4,432 | 3,907 | 1,122 | 1,417 | 2,284 | 1,606 |
| 3. உரிமையியல் பல்வகை மனுக்கள் | 2,81,170 | 2,47,886 | 52,925 | 52,950 | 1,53,176 | 1,68,362 |
| 4. வாடகை தொடர்பான நடுவர் மன்ற மேல் முறையீடுகள் | 1 | 2 | 601 | 635 | 4 | 6 |
| 5. அசல் மனுக்கள் | 6,626 | 4,840 | 17,504 | 18,554 | 1,619 | 1,478 |
| 6. நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள் | 100 | 61 | 987 | 1,124 | 89 | 74 |
| 7. நிறைவேற்ற மனுக்கள் | 40,317 | 36,098 | 7,795 | 9,103 | 42,531 | 46,249 |

**தொழிலாளர் நல நீதிமன்றங்கள், கோயம்புத்தூர், மதுரை, சென்னை, தொழில் நடுவர் மன்றம், சென்னை.**

| தொடர் எண் மற்றும் நீதி மன்றங்கள்/நடுவர் மன்றங்கள். | தொடரப்பட்ட வழக்குகள். தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தொடரப்பட்டவை 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | தொடரப்பட்ட வழக்குகள். தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தொடரப்பட்டவை 1-4-1988 முதல் 31-3-1989 வரை. | தொடரப்பட்ட வழக்குகள். தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33, 33 (C) பிரிவுகளில் தொடரப்பட்ட வழக்குகள். 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | தொடரப்பட்ட வழக்குகள். தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33, 33 (C) பிரிவுகளில் தொடரப்பட்ட வழக்குகள். 1-4-1988 முதல் 31-3-1989 வரை. | தீர்ப்பு வழங்கப்பட்டவை. தொழில் தாறுகள் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் தொடரப்பட்டவை. 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | தீர்ப்பு வழங்கப்பட்டவை. தொழில் தாறுகள் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் தொடரப்பட்டவை. 1-4-1988 முதல் 31-3-1989 வரை. | தீர்ப்பு வழங்கப்பட்டவை. தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33, 33 (C) பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | தீர்ப்பு வழங்கப்பட்டவை. தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33, 33 (C) பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 1-4-1988 முதல் 31-3-1989 வரை. | தீர்ப்பு வழங்கப்படாமலுள்ளவை. தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தொடரப்பட்டவை. 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | தீர்ப்பு வழங்கப்படாமலுள்ளவை. தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தொடரப்பட்டவை. 1-4-1988 முதல் 31-3-1989 வரை. | தீர்ப்பு வழங்கப்படாமலுள்ளவை. தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33, 33 (C) பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள். 1-4-1987 முதல் 31-3-1988 வரை. | தீர்ப்பு வழங்கப்படாமலுள்ளவை. தொழில் தகராறுகள் சட்டத்தின் 33, 33, 33 (C) பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள். 1-4-1988 முதல் 31-3-1989 வரை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. தொழிலாளர் நல நீதி மன்றங்கள், சென்னை | 559 | 857 | 1,250 | 1,288 | 521 | | 1,404 | 794 | 1,157 | 1,680 | 1,968 | 3,07[illegible] |
| 2. தொழிலாளர் நல நீதி மன்றங்கள், மதுரை | 284 | 568 | 593 | 590 | 229 | 26[illegible] | 200 | 266 | 943 | 1,217 | 2,365 | 2,689 |
| 3. தொழிலாளர் நல நீதி மன்றங்கள், கோயம்புத்தூர் | 260 | 451 | 847 | 449 | 315 | 19[illegible] | 800 | 301 | 659 | 934 | 1,181 | 1,201 |
| மொத்தம் | 1,103 | 1,876 | 2,690 | 2,397 | 1,065 | 793 | 2,404 | 1,361 | 2,759 | 3,831 | 5,514 | 6,966 |
| 4. தொழில் நடுவர் மன்றம், சென்னை | 140 | 120 | 208 | 246 | 93 | 88 | 194 | 234 | 284 | 316 | 324 | 386 |

குடிமைப் பாதுகாப்பு

தமிழ்நாடு ஊர்க்காவல் அமைப்பு தானே முன் வந்து பணிபுரியம் தன்மை வாய்ந்த காவல் துறைக்கு ஒரு இணை படையாக அமைந்து உள்ளது. இதில் ஆண்களும் பெண்களும் வாழ்க்கையில் எல்லா பிரிவினரும் பணி புரிகின்றனர்: அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் 10,010 ஆண்களும் 550 பெண் ஊர்க்காவலர் களும் உள்ளனர். உண்மையில் 8,693 ஆண்களும் 430 பெண்களும் உள்ளனர்.

போக்குவரத்தை ஒழுங்குசெய்தல், முறைக்காவல இரவு சுற்றுக்காவல், பண்டிகை விழா பாதுகாப்பு பணி, அழைப்பு ஆணை சார்வு செய்தல், புள்ளிவிவரங்கள் எடுத்தல் புலன் ஆய்வு, மீட்பு பணி செய்தல், தீயணைப்பு போன்ற தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதிகள் 1963-ம் பிரிவு 11-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தமிழ்நாடு ஊர்க்காவல் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். கொடி நாள் (1938) அன்று உண்டியல் வசூலுக்காகவும் அனுப்பப்பட்டனர். இதைத் தவிர தமிழ்நாட் டுக்கு விஜயம் செய்யும் மிக மிக முக்கியஸ்தார் வரும் இடங்களில் மக்கள் கூட் டத்தை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மத்திய அரசால் நடத்தப்படும் பல்வேறு பயிற்சிகளுக்கு கீழ்க்கண்ட படி, நபர்கள் அனுப்பப்பட்டனர் :—

| வரிசை எண். | பயிற்சியின் பெயர். | பயிற்சி பெற்றவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | டிஸாஸ்டர் ரிலீப்ஃ இன்ஸ்டரக்டர்ஸ் கோர்ஸ் | 2 |
| 2 | யு. எக்ஸ். பி. ரெக்கனிஸனிஸ் ரிப்போர்ட்டிங்கோர்ஸ் | 1 |
| 3 | சிவில் டிபன்ஸ் ஸ்டாப் கோர்ஸ் | 2 |
| 4 | பேசிக் ஃபயர் ஃபைட்டிங் கோர்ஸ் | 2 |
| 5 | அட்வான்ஸ் ரெஸ்க்யூ கோர்ஸ் | 1 |
| 6 | சிவில் டிபன்ஸ் இண்டஸ்டிரியல் செமினார் | 1 |
| 7 | சிவில் டிபன்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்டாப் கோர்ஸ் | 1 |
| 8 | சிவில் டிப்ன்ஸ் இன்ஸ்டர்க்டர்ஸ் கோர்ஸ் | 1 |
| 9 | ஃபர்ஸ்ட்எய்டு மற்றும் கேஸுவர்லிட்டி கோர்ஸ் | 3 |

இந்திய அரசின் 1988-ம் ஆண்டு சுதந்திர தின ஊர்க்காவல்படை பதக்கம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் 1989-ம் ஆண்டு இந்திய அரசின் குடியரசு தின ஊர்க்காவல் படை பதக்கம் தமிழ்நாடு ஊர்க்காவல் படையினர் ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத்தில் 1—4—1988 முதல் 31—3—1989 வரையிலான காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட முடிவு செய்யப்பட்ட நிலுவையாக உள்ள செஷன்ஸ் வழக்குகளைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர் | தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, 1987—88 | 1988—89 | முடிவு செய்யப்பட்ட வழக்குகள். 1987—88 | 1988—89 | நிலுவையாக உள்ள வழக்குகள். 1987—88 | 1988—89 |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | வட ஆற்காடு | 207 | 192 | 173 | 132 | 124 | 184 |
| 2 | தென் ஆற்காடு | 217 | 223 | 192 | 153 | 205 | 275 |
| 3 | செங்கல்பட்டு | 292 | 244 | 222 | 148 | 289 | 385 |
| 4 | கோயம்பத்தூர் | 151 | 132 | 121 | 147 | 87 | 72 |
| 5 | உதகமண்டலம் | 24 | 18 | 27 | 20 | 16 | 14 |
| 6 | பெரியார் | 275 | 133 | 288 | 152 | 62 | 13 |
| 7 | தருமபுரி | 137 | 110 | 91 | 73 | 150 | 187 |
| 8 | கன்னியாகுமரி | 112 | 90 | 76 | 81 | 124 | 133 |
| 9 | மதுரை தெற்கு | 272 | 268 | 177 | 202 | 384 | 450 |
| 10 | மதுரை வடக்கு | 104 | 88 | 84 | 107 | 141 | 122 |
| 11 | புதுக்கோட்டை | 56 | 63 | 56 | 51 | 8 | 20 |
| 12 | இராமநாதபுரம் | 255 | 209 | 272 | 222 | 243 | 230 |
| 13 | சேலம் | 256 | 165 | 223 | 268 | 270 | 167 |
| 14 | தஞ்சாவூர் (கிழக்கு) | 94 | 74 | 109 | 92 | 58 | 40 |
| 15 | தஞ்சாவூர் (மேற்கு) | 148 | 90 | 140 | 103 | 142 | 129 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 203 | 172 | 183 | 194 | 145 | 123 |
| 17 | திருநெல்வேலி | 362 | 315 | 126 | 271 | 654 | 698 |
| 18 | சென்னை | 151 | 146 | 146 | 109 | 95 | 132 |
| | மொத்தம் | 3,296 | 2,732 | 2,706 | 2,525 | 3,197 | 3,404 |

விவர அறிக்கை–3—பகுதி–1.

தமிழ்நாடு மாநிலத்தில் 1—4—1988 முதல் 31—3—1989 வரையிலான காலத்தில் சார்நிலை நீதி மன்றங்களில் தொடரப்பட்ட, தீர்வு செய்யப்பட்ட, தீர்வு செய்யப்படாமலுள்ள குற்றவியல் வழக்குகளின் விவர அறிக்கை வருமாறு :—

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | தொடரப்பட்டவை. | | தீர்வு செய்யப்பட்டவை. | | தீர்வுசெய்யப்படாமல் நிலுவையில் உள்ளவை. | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1987—88 | 1988—89 | 1987—88 | 1988—89 | 1987—88 | 1988—89 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | வட ஆற்காடு | 51,767 | 44,382 | 49,473 | 50,311 | 17,603 | 11,674 |
| 2 | தென் ஆற்காடு | 52,789 | 61,401 | 51,243 | 58,647 | 14,546 | 17,300 |
| 3 | செங்கல்பட்டு | 45,720 | 56,109 | 44,203 | 61,566 | 31,454 | 25,997 |
| 4 | கோயம்புத்தூர் .. | 55,855 | 36,336 | 61,212 | 35,743 | 10,317 | 10,910 |
| 5 | நீலகிரி .. .. | 2,177 | 8,546 | 3,708 | 8,025 | 3,515 | 4,036 |
| 6 | பெரியார் | 50,685 | 46,452 | 43,856 | 38,454 | 19,773 | 27,771 |
| 7 | தருமபுரி | 22,671 | 10,114 | 21,404 | 11,110 | 6,153 | 5,157 |
| 8 | கன்னியாகுமரி | 21,926 | 17,698 | 20,738 | 14,320 | 9,872 | 13,250 |
| 9 | மதுரை | 1,06,179 | 90,684 | 1,03,828 | 96,322 | 28,781 | 23,143 |
| 10 | புதுக்கோட்டை | 13,576 | 14,722 | 11,496 | 15,744 | 5,276 | 4,254 |
| 11 | இராமநாதபுரம் | 48,194 | 44,586 | 46,322 | 43,749 | 12,016 | 12,853 |
| 12 | சேலம் | 51,203 | 44,906 | 52,245 | 49,562 | 14,015 | 9,359 |
| 13 | தஞ்சாவூர் | 49,222 | 48,309 | 43,641 | 46,273 | 26,725 | 28,761 |
| 14 | திருச்சிராப்பள்ளி | 36,010 | 40,936 | 36,996 | 39,091 | 12,145 | 13,990 |
| 15 | திருநெல்வேலி | 58,816 | 57,824 | 48,939 | 49,270 | 21,929 | 30,483 |
| 16 | சென்னை | 2,12,227 | 2,84,571 | 2,07,804 | 2,80,610 | 37,423 | 41,384 |
| | மொத்தம் | 8,79,023 | 9,07,576 | 8,47,008 | 8,98,797 | 2,71,543 | 2,80,322 |

## விவர அறிக்கை B—பாகம் II.

1—4—1988 முதல் 31—3—1989 வரையிலான காலத்திற்கான பாகம் 1, B பகுதிகளில் குறிப்பிடப்பட்ட மொத்தமுன் வழக்குகளில், குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | ஒருவகைசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | விசாரணை முடிவு வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1987—88 | 1988—89 | 1987—88 | 1988—89 | 1987—88 | 1988—89 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | வட ஆற்காடு | 1,547 | 533 | 3,055 | 296 | 5 | 262 |
| 2 | தென் ஆற்காடு | 508 | 1,085 | 469 | 891 | 422 | 616 |
| 3 | செங்கல்பட்டு | 1,388 | 2,198 | 1,574 | 2,613 | 2,489 | 2,074 |
| 4 | கோயம்புத்தூர் | 216 | 452 | 206 | 256 | 140 | 336 |
| 5 | நீலகிரி | 27 | 38 | 26 | 22 | 16 | 32 |
| 6 | பெரியார் | 218 | 874 | 693 | 244 | 102 | 732 |
| 7 | தருமபுரி | 725 | 177 | 738 | 496 | 488 | 169 |
| 8 | கன்னியாகுமரி | 279 | 256 | 286 | 278 | 217 | 195 |
| 9 | மதுரை | 1,374 | 3,481 | 1,303 | 3,141 | 2,786 | 3,126 |
| 10 | புதுக்கோட்டை | 189 | 141 | 193 | 150 | 97 | 88 |
| 11 | இராமநாதபுரம் | 440 | 460 | 368 | 379 | 309 | 390 |
| 12 | சேலம் | 255 | 358 | 456 | 190 | 70 | 130 |
| 13 | தஞ்சாவூர் | 652 | 479 | 532 | 604 | 465 | 330 |
| 14 | திருச்சிராப்பள்ளி | 642 | 1,065 | 854 | 897 | 245 | 413 |
| 15 | திருநெல்வேலி | 1,287 | 1,071 | 982 | 1,461 | 1,050 | 660 |
| 16 | சென்னை | 640 | 402 | 956 | 486 | 337 | [illegible] |
| | மொத்தம் | 10,387 | 12,990 | 12,691 | 12,142 | 9.228 | 9,800 |

தீயணைப்புடையினர்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை, அரசு உள்துறையின்கீழ் ஒரு தனிப்பட்ட துறையாக செயல்படுகிறது. நம்நாட்டிலேயே மிகவும் திறமையுடன் பணியாற்றும் துறைகளில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை தொடர்ந்து இருந்து வருகிறது. மனித உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் தீயினாலும் வெள்ளத்தாலும் ஏற்படும் சேதத்தை தடுத்து பாதுகாப்பு அளிப்பது இத்துறையின் தலையாய பணியாகும். இரவு, பகல் எந்த நேரங்களிலும் பொதுமக்களுக்கு இத்துறை சேவை புரிகிறது.

## தீயணைப்பு நிலையங்கள் :

31—3—1989-ல் உள்ள நிலவரப்படி 174 தீயணைப்பு நிலையங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன. அரசினரால் ஒப்பளிக்கப்பட்ட புதிய பத்து தீயணைப்பு நிலையங்கள் புதிய தீயணைப்பு ஊர்திகள் இல்லாததாலும், இடவசதி கிடைக்கப் பெறாமையாலும், திறக்கப்படாமல் இருக்கின்றன.

## தீ விபத்து மற்றும் அவசர அழைப்புகள் :—

இவ்வருடம் மாநிலத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களும் 11,861 அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. அவற்றுள் 66 போலி அழைப்புகளும், 1,785 அவசரம் மற்றும் மீட்சி அழைப்புகளுக்கும், 10,010 உள்ளபடி தீவிபத்துகளும் ஆகும். அதாவது, உள்ளபடி ஏற்பட்ட தீவிபத்துக்களில் 135 பெருந்தீ விபத்துகள் ஆகும். அதாவது ஒவ்வொரு பெருந்தீ விபத்திலும் தொகை ரூ. 50,000-க்கு மேல் சேதம் அடைந்தன. அல்லது உயிரிழப்புகள் ஏற்பட்டன. 386 அழைப்புகள் நடுத்தர தீவிபத்துக்கள் அதாவது ஒவ்வொரு தீவிபத்திலும் ரூ. 10,000-க்கு மேல் மற்றும் ரூ. 50,000-க்குள் பொருட்கள் சேதமடைந்தவைகள் ஆகும். 9,489 சிறிய தீவிபத்துக்கள் அதாவது ஒவ்வொரு தீவிபத்திலும் ரூ. 10,000 மதிப்புள்ள அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. தமிழ்நாடு முழுவதும் சுமார் ரூ. 962.54 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. சுமார் ரூ. 4,012,28 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் காப்பாற்றப்பட்டன.

## நோயாளர் வண்டி அமைப்புகள் :

1988-89-ஆம் ஆண்டு 2,773 நோயாளர் வண்டி அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. அவற்றில் 272 அழைப்புகள் விபத்துக்கள் அல்லது இலவச அழைப்புகளாகும். 2,501 கட்டண அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. கட்டண அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றிய வகையில் ரூ. 1,29,368.25 வசூலிக்கப்பட்டது.

## மற்ற பணிகள் :

சென்னை-எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் ஒரு அவசரகால ஊர்தி உள்ளது. இவ்வூர்தியில் விபத்தினால் சிதைந்த மோட்டார் வாகனங்களை அகற்றவும் மீட்பு பணியின்போது பெரும் பாரமான கட்டிடப் பணிகளை அகற்றவும் தனித் துணைக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. எளிய தீயணைப்பு சாதனங்களைக் கொண்டு குடிசைகள் நிறைந்துள்ள இடங்களில் 27 புறத் தீயணைப்பு நிலையங்கள், தீவிபத்துக்களை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி பெருஞ்சேதத்தை தவிர்த்தன. இந்தியன் ஆயில் நிறுவனம் இப்புறத் தீயணைப்பு நிலையங்களில் தண்ணீரை சேகரித்துவைக்கும் பொருட்டு 150 பெரிய டிரம்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் குடிசைப்பகுதிகளில் விபத்துக்கள் ஏற்படாவண்ணம் பெரிதும் உதவின. எனவே சென்னை மாநகரில் தீவிபத்துக்கள் இந்த ஆண்டில் கணிசமாக குறைந்துள்ளது என்று புள்ளி விவரங்களிலிருந்து புலனாகிறது. கோடைக் காலம் தவிர்த்து மற்ற காலங்களில் இத்துறை அலுவலர்கள் பள்ளிகளுக்குச் சென்று மாணவ மாணவியருக்கு தீயணைப்பு மற்றும் தீத்தடுப்பு பற்றிய முறைகளைப் பற்றி எடுத்துக்கூற அறிவுறுத்தப்பட்டனர்,

## துறையின் நிதி செலவினம் :

1988-89 ஆம் ஆண்டு இத்துறைக்கு ரூ. 10,05,38,000 ஒதுக்கப்பட்டது. அவற்றில் ரூ. 1,62,70,000 ஊர்திகள் கட்டுமானம் செய்யும் பொருட்டு செலவிடப்பட்டது. இந்நிதி ஆண்டில் 47 ஊர்திகள் கட்டுமானம் செய்யப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் சென்னை நகரில் ஏற்பட்ட குடிசை தீ விபத்துக்களின் விவரங்கள் :

இணைப்பு.

| வருடம். | பெருந்தீ விபத்து. | நடுத்தர தீவிபத்து. | சிறு தீ விபத்து. | மொத்தம். |
|---|---|---|---|---|
| | தீ விபத்துக்களின் எண்ணிக்கை. | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1986 | 7 | 16 | 199 | 222 |
| 1987 | 3 | 9 | 179 | 191 |
| 1988 | 5 | 7 | 125 | 137 |

## தடய அறிவியல்

ஆசியாவிலேயே முதன் முறையாக 1849-ல் தனது தடய அறிவியல் பணியைத் துவங்கிய தடய அறிவியல் துறை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நீதித்துறை நிறுவனங்களுக்கும் சட்ட அமல்படுத்து பிரிவினருக்கும் தமிழகத்திலுள்ள தேசிய வங்கிகள் மத்திய அரசின் பல்வகைப்பட்ட பிரிவுகள் மற்றும் தேசிய வங்கிகளுக்கும் தனது பணியினை செய்து வருகின்றது.

இத்துறையின் தலைமை ஆய்வகத்தில் உயிரியல், துப்பாக்கியியல், வேதியியல், ஆவணம், கலால், கருவிகள் பிரிவு, நிழற்படபிரிவு, தெரியியல், மதுவிலக்கு போதைப் பொருட்கள் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு, குருதி வடிநீரியல் பிரிவு மற்றும் நஞ்சியல், என 13 பிரிவுகளும் உள்ளன. சென்னையில் உள்ள 24 மணிநேரம் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் உட்பட 24 காவல் மாவட்டங்களிலும் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

தனது அறிவியல் பணியுடன் கல்விப் பணியையும் இத்துறை செய்து வருகிறது. தடய அறிவியலில் முதறிவியல் மற்றும் முனைவர் பட்டத்திற்கான வகுப்புகளைப் பல்கலை கழகத்துடன் நடத்திவரும் தனித்தன்மை பெற்ற ஒரே அரசுத்துறை இத் துறையாகும்.

இத்துறையில் 1988 ஆம் ஆண்டில் 1—4—1988 முதல் 31—3—1989 முடிய 99,502 வழக்குகளும் 3,20,725 மாதிரிகளும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஏழாவது திட்டக்காலத்தில் சேலம், வேலூர் ஆகிய இடங்களில் இரு வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. மேலும் பசும்பொன் முத்து இராமலிங்கம் மாவட்டம், அண்ணா மாவட்டம் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட ஆரம்பித்துள்ளது. 24 மணி நேரமும் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தை முதன் முறையாக சென்னையிலேயே நிறுவி எந்த நேரத்திலும் மக்களுக்கு உதவிட செயல்படும் புதிய திட்டத்தை கடந்த ஆண்டு முதல் இத்துறை செயல்படுத்தி வருகிறது. கல்விப் பணிக்காக திட்டங்களைச் செவ்வனே நடத்திட ஏதுவான கல்விப்பணி கட்டடத்தின் முதல் கட்டடப் பணிகள் ரூ. 10 லட்ச அளவில் நிறைவேற்றப்பட்டு இக்கல்விக் கூடம் கடந்த ஆண்டு முதல் இயங்கப்படுகிறது.

மாஸ்செலக்டிவ் டிடெக்டருடன் கூடிய காஸ்குரோமோடோக்ராப் கருவி (8.2 லட்சம்) மற்றும் ரூபாய் 13.74 லட்சம் மதிப்புள்ள ஸ்கானிங் எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப் ஆகிய கருவிகள் இத்துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் வாங்கப்பட்டுள்ளன.

இத்துறை பற்றிய பிற சிறப்பியல்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) இத்துறையானது, குற்ற புலனாய்விற்கு உதவுவதுடன், மருத்துவமனையில் விஷமுறிவு சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு உதவும் வகையில் அவர்களது குருதி, சிறுநீர் முதலியவற்றை ஆய்வு செய்து உடலில் உள்ள விஷம் பற்றிய குறிப்புகள்

அளித்து வருகிறது. சர்ச்சைக்குரிய குழந்தைகள் பிறப்பினால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவிடும் வகையில் பெற்றோர் யார் எனக்கண்டுபிடித்து உதவிடும் வகையில் ஆய்வுப் பிரிவு தனித்து நடத்தப்படுகிறது.

(2) நாட்டிலேயே முதன் முறையாக, மின் திருட்டு வழக்குகளை ஆய்வு செய்ய சிறப்புப் பணியாளர்களை இத்துறை அமர்த்தியுள்ளது.

(3) நேபாள நாட்டில் காத்மண்டுவில் இயங்கும் புதிய தேசிய தடய அறிவியல் ஆய்வகத்தில், முதன் முதலாக பணி அமர்த்தப்பட ஏழு விஞ்ஞானிகளுக்கு ஆறு மாத கால முழுநேர பயிற்சி அளிக்கும் பெருமை இத்துறைக்குக் கிடைத்தது.

(4) மைய அரசின் போபால் விஷவாயு கசிவு சம்பந்தமான மேல் நடவடிக்கை ஆராய்ச்சி திட்டங்களில் ஒரு திட்டப்பணி இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

(5) இத்துறையில் இயக்குநராலும் மற்ற விஞ்ஞானிகளாலும் சுமார் 152 ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசிய மாநாடுகளில் படித்தும் மற்றும் விஞ்ஞான இதழ்களில் பதிப்பிட்டும் உள்ளன.

## சென்னை மாநகர காவல்.

அவ்வப்போது சென்னை நகருக்கு வந்து செல்லும் மக்களைத்தவிர சென்னையில் ஐம்பது இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அண்மைக் காலங்களில் சுமார் ஒரு கோடியே ஒன்பது லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் காணாமல் போனதற்காக வழக்குகள் தோராயமாக 4,960 வரை தாக்கல் செய்யப்பட்டது. மொத்த சொத்துக்கள் மீட்பு ரூ. 79 லட்சம் அளவுக்கு உள்ளது. குறிப்பிட்ட இந்த காலக் கட்டத்தில் மீட்கப்பட்ட பொருள்களின் மதிப்பு 72 சதவீதம்.

2. 1—4—1988 முதல் 31—3—1989 வரை தாக்கல் செய்யப்பட்ட 609 கடுமையான குற்றங்களில் 365 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. மற்ற வழக்குகளைக் கண்டுபிடிக்க முயற்சிகள் முழு அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சில பரபரப்பான வழக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

(1) 1—2—1989-ந் தேதி 11.15 மணிக்கு திரு. சந்திரன், ஆ. வ./28, தகப்பனார் பெயர் கோவிந்தன் நாயர், நெ. 4, நெற்குன்றம் பாதை, வடபழனி, சென்னை-26 என்பவர், ஆர் (2) கோடம்பாக்கம் காவல் நிலையம் வந்து 100 அடி ரோடு நெற்குன்றம் பாதை சந்திப்பில் 100 அடி ரோடுக்கு மேற்கு பக்கத்தில் சுமார் 30 முதல் 35 வயதுள்ள ஆண் பிரேதம் தலை, மார்பு, இடது தொடை, வலது தொடை, வலதுகால், இடது கால், வலது கை இடது கை என. எட்டு பாகங்களாகத் தனித் தனியே இருப்பதாக கொடுத்த புகாரின் பேரில் ஆர். 2 குற்ற எண். 300/89 ஊ/பி. 302 இ.த.ச. வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்யப்பட்டது. 1—2—1989-ந் தேதி பிரேத விசாரணை மேற்கொண்டு மேற்படி பிரேதத்தில் எட்டு பாகங்களையும் மருத்துவ பரிசோதனைக்கு சென்னை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

புலன் விசாரணையில் இறந்து போனவர் எஸ். கிருஷ்ணன், ஆ.வ. 38, தகப்பனார் பெயர் சுப்பையா, நெ. 1. அழகிரி நகர், 6-வது தெரு, வடபழனி, சென்னை-26 என தெரியவந்தது. இறந்துபோன எஸ். கிருஷ்ணன், பூந்தமல்லி பல்லவன் போக்குவரத்து பணிமனையில் இளநிலை உதவியாளர் வேலை செய்பவர் என்றும் இவரது அடையாளத்தை உறவினர்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. சாட்சிகள் முருகன் பாவா மற்றும் இதர சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்து எதிரி சிவராஜ், ஆ./வ. 26, தகப்பனார் பெயர் பேச்சிமுத்து, நெ. 75, பெரியார் பாதை, சூளைமேடு, சென்னை-94 எனவும் எதிரி இறந்துபோன எஸ். கிருஷ்ணன், நெ. 1, அழகிரி நகர் 6-வது தெரு, வடபழனி, சென்னை-26 என்ற விலாசமுள்ள தனது வீட்டில் நடத்தி வந்த '' பெர்பெக்ட் இன்டஸ்ட்ரீஸ் பிரஸில் '' வேலை செய்து வந்ததாகவும் இறந்துபோன எஸ். கிருஷ்ணனின் மனைவி வள்ளிமீனாள் என்பவருக்கும் எதிரி சிவராஜுக்கும் கள்ளத் தொடர்பு இருந்ததாகவும் அதன் காரணமாக எதிரி சிவராஜ், கிருஷ்ணன் 31—1—1989-ந் தேதி இரவு வீட்டில் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது இரவு சுமார் 02.00 மணிக்கு கத்தியால் எட்டு துண்டுகளாக வெட்டிக் கொலை செய்து கொண்டு வந்து 100 அடி ரோடு மற்றும் நெற்குன்றம் பாதை சந்திப்பில் உள்ள மைதானத்தில் போட்டு மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்திவிட்டு போனதாகவும் தெரியவந்துள்ளது. எதிரி சிவராஜ் 2—2—1989-ந் தேதி கைது செய்யப்பட்டு எதிரியின் மீது 12—6—1989-ந் தேதி சைதாப்பேட்டை 17-வது குற்றவியல் நீதிமன்றத்தில் சி. சி. எண். 8615/89-ல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராக 19-12-1989-ந் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது.

(2) 27—9—1989 அன்று மாலை 4 மணிக்கு எண். 9, திரு. வி. க. நகர், 9-வது தெரு, புளியந்தோப்பு, சென்னை-12-ல் எதிரி ஜெயகுமார் என்பவரின் மனைவி கௌசல்யா, இவர் ஒரு பழைய சாராய வியாபாரி. இறந்துபோன ராஜு என்பவர் எதிரி ஜெயகுமாருடைய நண்பர். ராஜி என்பவர் எதிரி ஜெயகுமார் வீட்டில் இல்லாதபோது அவருடைய வீட்டிற்கு அடிக்கடி சென்று வருவார். இதனால் தன் மனைவிக்கும், ராஜிக்கும் கள்ள தொடர்பு இருந்ததாக கருதி. சந்தேகித்து ராஜியை கத்தியால் குத்தினார். இது தொடர்பாக பி-1, புளியந்தோப்பு காவல் நிலைய குற்ற எண். 1976-88, ச. பி. 302, இ. த. பி.-ன். கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணைப் பிரிவில் உள்ளது.

(3) கே. 1. குற்ற எண். 4422/88, ச/பி. 376 மற்றும் 302 இ.த.ச.– இந்த கொலை வழக்கானது பெரம்பூரில் கொல்லத் தோட்டத்தில் இருளாபாய் தெரு, நெ. 9 என்ற விலாசத்தில் நடந்தது. கொலைக்கு பின்னர் கொலையை நேரில் பார்த்த கன்னிப்பெண் கற்பழிக்கப்பட்டாள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் ஆனது 17/ 18–9–1988 ஆம் தேதி இரவு சுமார் 2 மணி அளவில் நடந்தது. கொலை செய்யப் பட்டவளின் பெயர் உமா என்ற 23 வயது பெண்மணி ஆவார். இவளை கொலை செய்தவர் இவளின் கணவன் ஆறுமுகம் என்பவரும் அவரின், கூட்டாளியான அருமை நாதன் என்பவரும் ஆவார். கொலைக்கான காரணம் ஆனது இறந்தவரின் நடத்தையில் கணவவான ஆறுமுகம் சந்தேகப்பட்டார். மற்றொரு குற்றவாளியான அருமைநாதன் என்பவன் இறந்தவருடன் கள்ளத் தொடர்பு கொண்டு இருந்து அவளால் பின்னர் நிராகரிக்கப்பட்டவன். எனவே, அவன் ஆறுமுகத்துடன் கூட்டு சேர்ந்து கொண்டான். இருவருமாக அவளை கொலை செய்ய திட்டமிட்டு மேற்படி தேதியன்று அவள் உறங்கிக் கொண்டிருக்கையில் ஒரே கத்தியால் இருவரும் மாறிமாறி அவளை குத்தி ஸ்தலத்திலேயே அவள் மரணம் சம்பவிக்க செய்தார்கள். இந்த கொலையை அஞ்சலை என வழங்கப்படும் அமுலு என்ற 15 வயது பெண் நேரில் கண்டாள். கொலை செய்த பின்னர் மேற்படி குற்றவாளிகள் அந்த கன்னிப்பெண்ணை மிரட்டி மாறி மாறி கற்பழித்தார்கள். 18–9–1988 ஆம் தேதி காலை 7-30 மணிக்கு மேற்படி அஞ்சலை கொடுத்த புகாரின் மீது மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டன. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் மீது உயர் நீதிமன்ற 9–வது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு இருவருக்கும் ஆயுள் தண்டனை விதித்து நீதி வழங்கப்பட்டது.

1989—

(4) கே. 1 குற்ற எண். 1343/89. ச/பி. 302. இ.த. ச.—23–3–1989-ந் தேதி 20.00 மணி அளவில் செல்வம் என்ற மேல்பட்டி பொன்னப்பன் தெரு சுடுகாட்டில் வெட்டியான் கே. 1 செம்பியம் காவல் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் திரு. குப்புசாமியிடம் அன்றைய தினம் சுமார் 7 மணி அளவில் மேல்பட்டி பொன்னப்பன் தெருவைச் சேர்ந்த முத்துகுமரன் என்பவரின் பிரேதம் எரிக்க சுடுக்காட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகவும், அதை எப்போதும்போல் பார்வையிட்டபொழுது கழுத்தில் காயங்கள் தென்பட்டதாகவும் அதைக் கொண்டு வந்தவர்கள் அதற்கான தகுந்த காரணங்கள் கூறவில்லை என்றும் தனக்கு மேற்படி பிரேதத்தின் இறப்பில் சந்தேகம் ஏற்பட்டதால் மேற்கொண்டு ஏதும் செய்யாமல் காவல் நிலையம் வந்த தாகக் கூறி நடவடிக்கை எடுக்க கூறினான். அவனிடம் எழுத்து மூலமாக புகார் பெறப் பட்டு மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் இறந்துபோன முத்துகுமரன் என்பவன் தன்னுடைய உடன்பிறந்த சகோதரர்கள் காந்தி மற்றும் ரகு என்று வழங்கப்படும் ரகுராமன் என்பவனுக்கு கொடுமையான தொல்லைகள் கொடுத்து வந்ததாகவும், தொல்லைகள் தாங்க முடியாமல் 22/23–3–1989-ந் தேதி இரவு மேற்படி முத்துகுமரன் அவன் வசித்து வந்த நெ. 87, மேல்பட்டி பொன்னப்பன் தெரு, சென்னை-11 என்ற விலா சத்தில் உள்ள வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவனுடைய உடன்பிறந்த சகோதரர்களான காந்தி மற்றும் ரகு எனும் ரகுராமன் ஆகிய இருவரும் அவனை முகத்தில் தலக்காணியை வைத்து அவன் மூச்சு விடாமல் செய்ததாகவும், அதே சமயத்தில் அவன் கழுத்தை நெறித்ததாகவும், அவனின் உயிர்நாடியை முட்டியால் இடித்தும் அவனுடைய மரணம் ஸ்தலத்திலேயே சம்பவிக்க செய்தார்கள் என்பது விசாரணையில் தெரியவந்தது. மேற்படி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் இவர்களின் மீதான வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள் ளது.

5. 23–11–1988 ஆம் தேதி இரவு 1 மணிக்கு எதிரி சீனிவாசன் என்பவர் தன் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு தனக்கு பிறந்த குழந்தை தன்னைப்போல் இல்லை என்பதால் அந்த குழந்தையை கொல்லவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் மனைவியை கூட்டிக் கொண்டு கடற்கரையை நோக்கி செல்லும் மின்சார வண்டியில் பயணம் செய்யும்போது, மின்சார வண்டி அடையாறு ரயில்பாலத்தில் செல்லுகை யில் மனைவியின் கையிலிருந்து குழந்தையைப் பிடுங்கி ஆற்றில் வீசியதால் குழந்தை இறந்து விட்டது. இது தொடர்பாக ஜே. 3 கிண்டி காவல் நிலைய குற்ற எண். 3151/88, ச.பி. 302-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரிக்கு 26–8–1989 அன்று ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது.

6. 1–9–1988-ந் தேதி 16-00 மணிக்கு எண். 503, 11–வது பிளாக், கேசவப் பிள்ளை பூங்கா என்ற இடத்தில் வசித்துவரும் சாமிநாதன் என்பவர் அவருடைய மனைவி முருவம்மாளை கைகளால் தாக்கி கொடுங்காயம் உண்டுபண்ணி முதல் விளைவாக இறந்துபோனதால் பி. 4 பேசின்பிரிட்ஜ் காவல் நிலைய குற்ற எண். 486/88, ச.பி. 302 இ.த. பி.ச.–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரிக்கு ஆயுள்தண்டனை நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

7. 31–8–1988 ஆம் தேதி காலை 7.30 மணிக்கு ஈக்காட்டுத்தாங்கல், காந்தி நகரில் எதிரி முரளி, வயது 15 என்பவர் பரிதா வயது 6 என்கிற சிறுமியை கற் பழித்ததன் பேரில் ஜே. 3 கிண்டி காவல்நிலைய குற்ற எண். 2305/88 ச.பி. 376 இதன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரி கைது செய்யப்பட்டார். வழக்கு 3–2–1990 அன்று வாய்தா போடப்பட்டது.

## முக்கிய பணிகள்

1. மேற்படி காலத்தில், திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் மறைவிற்கு பின்னும், திருமதி ஜானகி ராமச்சந்திரன் தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. மந்திரி சபை கலைக்கப்பட்ட பின்னரும் அரசியல் பிரச்சனை அதிகரித்த நிலையில் இருந்த போதிலும் சென்னை நகர காவல் துறையினரால் சட்டம் மற்றும் ஒழுங்கை திறமை யாக பாதுகாக்க முடிந்தது. பல்வேறு அரசியல் கட்சிகள், தொழிலாளர் மற்றும் வகுப்புவாத இயக்கத்தினரால் நடத்தப்படும் போராட்டங்களையும், அரசு ஊழி யர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரால் ஒரு மாத காலமாக நடத்தப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தையும் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டு நடைபெற திறமை யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கோரி அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் நடத்திய ஒரு மாத கால (ஜூன், ஜூலை 1988) போராட்டத் தின்போது சென்னை நகர காவல் துறை உஷார் படுத்தப்பட்ட நிலையில் இருந் தது. அப்போராட்டத்தின்போது ஊர்வலங்களும், மறியல் மற்றும் ஆர்ப்பாட் டங்கள் போன்றவை நடைபெற்றபோதிலும் அனைத்தும் திறமையாக சமாளிக் கப்பட்டு சட்டம் ஒழுங்கிற்கு குந்தகம் விளையாமல் பார்த்துக் கொள்ளப்பட் டது. அதிகபட்சமாக 22–7–1988 அன்று தலைமை செயலகம் முன்பாக நடைபெறு வதாக இருந்த முற்றுகை போராட்டத்தினை காவல் துறையினர் திறமையாக முறியடித்தனர். மேற்கூறிய போராட்டத்திற்கு தீர்வு காணுவதில் நகர காவல் ஆணையாளரின் பங்கினை பாராட்டி ஜேக்டி தலைவர்கள் காவல்துறை ஆணை யாளரைச் சந்தித்து அவருக்கு மாலை அணிவித்தனர்.

3. இந்திய குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் மிக முக்கிய அயல்நாட்டு பிரமுகர்கள் வருகையின்போது சென்னை நகர காவல்துறை அவர்களுக்கு மெச் சத்தகுந்த பாதுகாப்பு வசதிகளை செய்து தந்து குறிப்பாக இந்தியப் பிரதமரின் பாராட்டைப் பெற்றது.

4. 17–9–1989 அன்று தேசிய முன்னணி துவக்க விழாவை குறிக்கும் வகையில் நகரில் அண்ணா அறிவாலயத்திலிருந்து மெரினா வரை நடைபெற்ற மாபெரும் பேரணிக்கும், இந்தியப் பிரதமரின் முன்னிலையில் 28–11–1988 அன்று நேரு நூற்றாண்டை கொண்டாடும் வகையில் நடைபெற்ற பேரணிக்கும் சென்னை நகர காவல்துறை மிக நுண்ணியமாக திட்டமிடப்பட்ட சிறப்பான பாதுகாப்பு ஏற் பாடுகளைச் செய்தது.

5. ஒதுக்கீடு முறையில் பல்வேறு வகுப்பினரின் மக்கள் தொகையை கணக் கெடுக்க ஒரு நபர் குழுவை நியமிப்பது என அரசு அறிவிப்பு வெளிவந்த பின்னர், எந்தவித அசம்பாவித நிகழ்ச்சியையும் நடைபெறா வண்ணம், வன்னியர் பிரச் சனை திறமையாக சமாளிக்கப்பட்டது. நகர காவல் துறையால் விரிவான பந் தோபஸ்து முறைகள் செய்யப்பட்டு, 15–12–1988 நள்ளிரவு முதல் 24 மணி நேர முழு அடைப்புக்கு எந்தவித வன்முறை சம்பவம் இன்றி முடிந்ததற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

6. இலங்கையை சேர்ந்த தமிழ் வியாபாரி ஒருவரின் மகனான மதிவாணன் (வயது 10) என்பவர் ரூபாய் ஏழு லட்சம் பணயத் தொகை கேட்டு கடத்தப்பட்டிருந்த போது, அவ்வாறு கடத்தப்பட்ட சில வாரத்திற்குள்ளாகவே நகர காவல் துறை அதி காரிகள் 25–12–1988 அன்று அதிகாலைப்பொழுதில் மேற்படி மதிவாணனை மீட்டு அவனை கடத்திய டக்லஸ் தேவநாதன் மற்றும் மூன்று பிற இலங்கைப் போராளிகளைப் பிடித்து, அவர்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ்காவலில் அடைத்தது பத்திரிகைகளாலும் பொதுமக்களாலும் ஒருமனதாக பெரிதும் பாராட்டப்பட்டது.

7. 1989 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தலை யொட்டி சென்னை மாநகர காவல்துறைக்கு மிகக் கடுமையான தேர்தல் காவப் பணிகள் இருந்தன. இதன் காரணமாக நகர காவல் துறையினர் ஓய்வு இல்லாமல் 24 மணி நேரமும், தேர்தல் பிரச்சார காலத்தின்போதும், வாக்குப் பதிவின்போதும்,

ஓட்டுக்கள் எண்ணப்பட்ட போதும், தேர்தலுக்கு பிந்திய காலத்திலும், மற்றும் முக்கியமாக 27–1–1989 அன்று வள்ளுவர் கோட்டத்தில் முக்கிய நபர்களும், தேசிய முன்னணி தலைவர்களின் முன்னிலையில் புதிய தி.மு.க. மந்திரி சபை பதவி ஏற்பு விழாவின் போதும், வெகு சிரத்தையான முழு கூச்சுடனான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தனர். நகர காவல் துறையினர் செய்த அப்பழுக்கற்ற பாதுகாப்பு ஏற்பாடுகளின் காரணமாக தேர்தல் எந்த அசம்பாவிதமும் இன்றி நடந்து முடிந்தது.

8. நகர காவல் துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள் அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளன. அவைகளில் குறிப்பிடத் தக்கவையாக போக்குவரத்து இடையூறின்றி சென்றிட ஊர்வலங்களை சாலையின் இடதுபுறம் நடத்திச் சென்ற சாலைச் சந்திப்புகளில் சிறிது நிறுத்தியதையும், மற்றும் காவல் நிலைய அளவில் காவல் துறையினர் மற்றும் பொது மக்களிடையே நல்லுறவு வளர்த்திட பொதுமக்கள் நல்லுறவை வளர்க்கும் மற்றொரு முயற்சியாக ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் போன்றவைகளை ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் நடத்திட வேண்டுமென்று கட்டுப்பாடு சம்பந்தமாக தொழிற்சங்கத் தலைவர்கள் எழுப்பிய பிரச்சினை ஒன்றாக அமர்ந்து விவாதிக்கப்பட்டது. பிற்பாடு தொழிற்சங்கத் தலைவர்களின் விருப்பப்படி எங்கெங்கு தகுந்த இடவசதியும், பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாத சூழ்நிலையும் இருக்கிறதோ அங்கெல்லாம் தொழிலாளர்கள் தங்கள் நிறுவனங்களுக்கு முன்பாக வாயிற் கூட்டங்களை நடத்திக் கொள்ள அனுமதிப்பதென்று முடிவெடுக்கப் பட்டது.

9. தொடர்ந்து, திருட்டுப்போன சொத்துக்கள் நகர காவல் துறையினரால் மீட்கப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றபோது புகார்தாரர்கள் அவற்றை உடனடியாக திரும்பப் பெறுவதற்கு நகர காவல் துறை நீதிமன்றத்தாரின் ஒத்துழைப்புடன் செய்த உதவியாவது வழக்கமாக நடைமுறையினால் ஏற்படும் கால தாமதத்தை தவிர்த்து பொதுமக்களின் பெரும் பாராட்டுதல்களை பெற்றது.

10. இவ்வாறாக நகர காவல் துறை மிகச் சிறப்பான வகையில் மெச்சத்தக்க முறையில் செயல்பட்டு வருகிறது.

## சிறைகள் மற்றும் நன்னடத்தைப் பிரிவு.

இம்மாநிலத்தில் 1988–89 ஆம் ஆண்டில் இருந்த சிறைகளின் எண்ணிக்கை கீழ் வருமாறு.—

| | | |
|---|---|---|
| 1. | மத்திய சிறைகள் | 8 |
| 2. | பெண்கள் தனிச்சிறை, வேலூர் மற்றும் மதுரை. | 2 |
| 3. | பார்ஸ்டல் பள்ளி | 1 |
| 4. | திறந்த வெளிச் சிறைகள் | 2 |
| 5. | தனிக் கிளைச் சிறைகள் | 3 |
| 6. | கிளைச் சிறைகள் | 116 |

### சிறைவாசிகளின் எண்ணிக்கையும், சிறையின் இட வசதியும்:

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி நீங்கலாக சிறைகளில் சிறை வைக்கப்பட்ட எல்லா வகுப்பு சிறைவாசிகளின் தினசரி சராசரி எண்ணிக்கை 8,506 ஆகும். 31–3–1989 அன்று சிறையிலிருந்த சிறைவாசிகள் விபரம் பின்வருமாறு.—

| | | |
|---|---|---|
| 1. | தண்டனை சிறைவாசிகள் | 4,746 |
| 2. | காவல் மற்றும் விசாரணை சிறைவாசிகள். | 6,254 |
| 3. | கடன் சிறைவாசிகள் | 7 |
| 4. | பாதுகாப்பு சிறைவாசிகள் | 679 |
| | மொத்தம் | 11,686 |

மதுவிலக்கு சிறைவாசிகள்.—இவ்வருட ஆரம்பத்தில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கை 297. நேரடியாக அனுமதித்தல், சிறை மாற்றம் மற்றும் இதர வகைகளில் அனுமதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 9,495 ஆகும். இதில் விடுதலை அடைந்தோர் 8,088. வருட இறுதியிலிருந்தவர்கள் 1,407 ஆவார்கள்.

சிறைக் குற்றங்கள்:

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் சிறைவாசிகள் 643 குற்றங்கள் செய்துள்ளனர். அவற்றில் தண்டனை வழங்கப்பட்டது 478 குற்றங்கள். மீதமுள்ள 165 வழக்குகளில் எச்சரிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

தப்பித்தல், திரும்பப் பிடித்தல்:

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் 23 பேர் தப்பிச் சென்றனர். அதில் மீள பிடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர்கள் 6 பேர். இன்னும் பிடிக்கப்படாமலுள்ளோர் 17 பேர் ஆகும்.

பாதுகாப்பு சிறைவாசிகள் :

(காபிபோசா, என்.எஸ்.ஏ., மற்றும் டி.எம்.பி.டி.ஐ. கீழ் கைது செய்யப்பட்டவர்கள்)

இவ்வறிக்கைக்குரிய ஆண்டின் ஆரம்பத்தில் 624 பாதுகாப்பு சிறைவாசிகள் இருந்தனர். இவ்வாண்டில் அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு சிறைவாசிகள் 2,194 பேர். 1,957 பேர் விடுதலை செய்யப்பட்டு ஆண்டு இறுதியில் (31—3—1989) 861 பேர் மீதமுள்ளனர்.

கல்வி:

இவ்வாண்டில் தொடர்ந்து மேல்கல்வி அனுமதி சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டது. அதன்படி கல்வி பயின்றோர்களின் விபரம் பின் வருமாறு.—

| | | |
|---|---|---|
| 1. | தொடக்கக் கல்வி .. | 8 |
| 2. | அடிப்படைக் கல்வி | 7 |
| 3. | பி.ஏ. | 15 |
| 4. | பி.காம் | 1 |
| 5. | எம். ஏ. | 9 |
| 6. | பி.யு.சி. | 1 |
| 7. | பி.எல். .. | 1 |
| 8. | எஸ். எஸ். எல்.சி. | 1 |

நீதி மற்றும் மத போதனைகள்:

நியமனம் செய்யப்பட்ட நீதி மன்றம் மத போதனையாளர்கள் மற்றும் ஆசிரியர்களால் நீதி, மத போதனைகள் போதிக்கப்பட்டன. இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் இந்து மத போதனையாளர்களால் 309 போதனைகளும் முஸ்லீம், கிறித்துவ மத போதனையாளர்களால் முறையே 192, 808 போதனைகளும் செய்யப்பட்டது. மத போதகர்களுக்கு போக்குவரத்துப் படியாக வழங்கப்பட்ட வகையில் மொத்தச் செலவு ரூ. 2,649.65 ஆகும்.

சுகாதாரம்:

பொதுவாக சிறைவாசிகளின் உடல் நலம் திருப்திகரமாகவே இருந்தன.

பார்ஸ்டைல் பள்ளி:

1. இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் பார்ஸ்டல் பள்ளியின் தினசரி சராசரி அடைப்பு 70 ஆகும்.

2. இப்பள்ளி சிறைவாசிகளுக்கு தினமும் 2 மணி நேரம் எழுத்தறிவு கல்வியும், 5 மணி நேரம் தொழிற்கல்வி பயிற்சியும் அளிக்கப்பட்டது. இப்பள்ளிவாசிகளுக்கு அவர்களது தாய் மொழியிலேயே அதாவது தமிழிலேயே கல்வி போதிக்கப்பட்டது.

3. கீழ்க்கண்ட தொழிற்கல்வியில் இப்பள்ளிவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது:—

(அ) தச்சு,

(ஆ) கருமார்,

(இ) புத்தகம் கட்டுதல்,

(ஈ) தையல்,

(உ) விவசாயம்,

(ஊ) கொத்து வேலை,

(எ) சலவை, மற்றும்

(ஏ) பேண்டு வாத்தியப் பயிற்சி.

பள்ளிவாசிகளின் திறமைக்கு ஏற்றாற்போல் தொழிற்கல்வி அளிக்கப்பட்டது.

5 ஆம் தோட்டம் (சேலம்), சிங்காநல்லூர் (கோயம்புத்தூர்) ஆகிய இடங்களி லுள்ள திறந்த வெளிச் சிறைகள் தொடர்ந்து நல்ல முறையில் இயங்கி வந்தன.

நன்னடத்தைப் பிரிவு:

1988–89 ஆம் ஆண்டில் நன்னடத்தைப் பிரிவு தொடர்ந்து நல்ல முறையில் இயங்கி வந்தது.

| | |
|---|---|
| (அ) மண்டல நன்னடத்தை அலுவலர் மற்றும் நன்னடத்தை அலுவலர்களால் 1988–89 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மொத்த எண்ணிக்கை. | 18,183 |
| (ஆ) நன்னடத்தை அலுவலர்களின் அறிக்கையின் பேரில் 1988–89–ல் நீதிமன்றத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 29,623 |
| (இ) 1988–89 ஆம் ஆண்டில் கண்காணிப்பில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 12,602 |

## தமிழ்நாடு காவல்

தமிழ்நாட்டில் (சென்னை மாநகரம் தவிர) 1—4—1988 முதல் 31—3—1989 வரையிலுள்ள காலத்தில் நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய முக்கிய விவரங்கள் வருமாறு :—

2. குற்றங்களின் மொத்த எண்ணிக்கை.—1988–89 நிதியாண்டில் கொலை உட்பட நிகழ்ந்த குற்றங்களின் எண்ணிக்கை 24,523. கடந்த ஆண்டில் இதன் எண்ணிக்கை 25,098ஆக இருந்தது. எனவே, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் 575 வழக்குகள் குறைந்துள்ளன. அதாவது 2.3 விழுக்காடு குறைவு. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் கிழக்கு, விழுப்புரம், செங்கை-அண்ணா மேற்கு, திண்டுக்கல்–காயிதே மில்லத், கன்னியாகுமரி, கோயம்புத்தூர் ஊரகம், பெரியார், சேலம், தர்மபுரி மற்றும் சென்னை இரயில்வே காவல் பிரிவு தவிர இதர மாவட்டங்கள் அனைத்திலும் இவ்வீழ்ச்சி காணப்படுகிறது. இந்த ஏற்றத் தாழ்வுகளைக் காட்டும் மாவட்ட வாரியான விவரங்கள் கீழே தரப்படுகின்றது.

3. ஆய்வில் உள்ள காலத்தில், கொலை, கன்னக் களவு மற்றும் சிறு திருட்டுக்கள் தவிர உள்ள இதர குற்ற நிகழ்வுகளில் வீழ்ச்சி காணப்படுகின்றது.

| குற்றத்தலைப்பு. | 1–4–1988 முதல் 31–3–1989 வரை. | 1–4–1987 முதல் 31–3–1988 வரை. | கூடுதல் (அ) குறைவு. | விழுக்காடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கொலை | 1,459 | 1,382 | 77 | 5.3 |
| சுட்டுக்கொள்ளை | 57 | 61 | (—)4 | (—)6.5 |
| கொள்ளை | 318 | 336 | (—)18 | (—)5.3 |
| கன்னக்களவு | 6,716 | 6,686 | 30 | 0.4 |
| பெரிய திருட்டு | 13,997 | 14,630 | (—)633 | (—)4.3 |
| சிறு திருட்டு | 1,307 | 1,281 | 26 | 1.9 |
| கால் நடைகள் திருட்டு | 669 | 722 | (—)53 | (—)7.3 |
| மொத்தம் | 24,523 | 25,098 | (—)575 | (—)2.3 |

4. கொலை.—1988–89ஆம் ஆண்டுக் காலத்தில் இத்தலைப்பின் கீழ் நிகழ்ந்துள்ள குற்றங்களின் எண்ணிக்கையை (1,459) கடந்த ஆண்டில் நிகழ்ந்த குற்றங்களின் எண்ணிக்கையோடு (1,382) ஒப்பிடுகையில் வழக்குகளின் எண்ணிக்கை 77 உயர்ந்துள்ளது தெரியவரும்; அதாவது 5.3 விழுக்காடு உயர்ந்துள்ளது. சேலம் (145), திருச்சி (107), தர்மபுரி (99) மற்றும் வட ஆற்காடு (87) ஆகிய மாவட்டங்களில் இக்குற்றம் அதிகமாக நிகழ்ந்துள்ளன.

5. கூட்டுக்கொள்ளை.—கடந்த ஆண்டில் இத்தலைப்பின்கீழ் நிகழ்ந்துள்ள குற்றங்களின் எண்ணிக்கை 61; இந்த ஆண்டில் 57 தான். எனவே, இதை ஒப்பிட்டுப் பார்த்தால் 4 வழக்குகள் அதாவது 6.5 விழுக்காடு குறைந்துள்ளது தெரியவரும்.

6. கொள்ளை.—1988–89ஆம் ஆண்டில் இத்தலைப்பின்கீழ் 318 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 1987–88ஆம் ஆண்டில் 336 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு வழக்குகளின் எண்ணிக்கை 18, அதாவது 5.3 விழுக்காடு குறைந்துள்ளது.

7. கன்னக்களவு.—ஆய்விலுள்ள இந்த ஆண்டில் 6,716 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன, கடந்த ஆண்டில் 6,686 வழக்குகள் தான் பதிவு செய்யப்பட்டன. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் 30 வழக்குகள், அதாவது 0.4 விழுக்காடு அதிகரித்துள்ளது தெரியவரும்.

8. பெரிய திருட்டு : கடந்த ஆண்டு இத்தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (14,630) இந்த ஆண்டு (1988–89) பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு. எண்ணிக்கை குறைந்துள்ளது தெரியவரும். அதாவது, 4.3. விழுக்காடு குறைந்துள்ளது.

9. சிறு திருட்டு.—1987–88இல் பதிவு செய்யப்பட்டுள்ள 1,281 வழக்கு எண்ணிக்கையோடு, இந்த ஆண்டு (1988–89) பதிவு செய்யப்பட்டுள்ள 1,307 வழக்கு எண்ணிக்கையோடு ஒப்பிட்டால், குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கை உயர்ந்துள்ளது அதாவது 1.9 விழுக்காடு உயர்ந்துள்ளது, தெரியவரும்.

10. கால்நடைகள் திருட்டு.—இத்தலைப்பின் கீழ் கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்கு எண்ணிக்கையோடு (772) இவ்வாண்டு பதிவுசெய்யப்பட்ட வழக்கு எண்ணிக்கையோடு (669) குறிப்பிடத் தக்க அளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது தெரியவரும். அதாவது, 7.3 விழுக்காடு குறைந்துள்ளது.

11. துப்புத்துலக்கப்பட்ட வழக்கு எண்ணிக்கையின் விழுக்காடு.—1988–89ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 24,523 வழக்குகளில் 8,509 வழக்குகளில் தண்டனைகள் பெற்றுத் தரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு துப்புத்துலக்கப்பட்ட வழக்கு எண்ணிக்கையின் விழுக்காடு 37.4. ஆனால், இந்த ஆண்டு அது 34.7 விழுக்காடு என குறைந்துள்ளது (தண்டனை பெற்றுத் தரப்பட்ட வழக்குகள் மட்டும்).

12. பாதுகாப்ப வழக்குகள்.—கடந்த ஆண்டிலும் இத்தலைப்பின் கீழ் 49,325 வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால், இந்த ஆண்டில் இத்தலைப்பின் கீழ் 44,402 வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. இந்த 44,402 வழக்குகளில் 41,553 '' பவுண்ட் ஓவர் '' செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 46,639 '' பவுண்ட் ஓவர் '' செய்யப்பட்டது.

13. இளங்குற்றவாளிகள்.—ஆய்விலுள்ள இந்த ஆண்டில் 533 சிறுவர்கள் சொத்து வழக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்டுள்ளனர். இதே காலத்தில் கடந்த ஆண்டில் 728 சிறுவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். மாநிலத்திலுள்ள 31 '' பாய்ஸ் கிளப்புகளும் '' மனநிறைவைத் தரத்தக்க அளவில் செயல்படுகின்றன.

14. மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடம்.—ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் உள்ள '' மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடமும் '' மனநிறைவைத் தரத்தக்க வகையில் செயல்படுகின்றன.

15. வசதிகள் மற்றும் நலப் பணிகள்.—காவல் துறையினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு வேண்டிய நியாயமான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

16. '' வழக்கமாகக் குற்றம் புரிவோர் சட்டத்தின்'' கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.—1988–89ஆம் ஆண்டின் முடிவில் இச்சட்டத்தின் கீழ் 32 குற்றவாளிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் 36 பேர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதில் ஆண்டில் (1988-89) இச்சட்டத்தின்கீழ் 29 சம்பவங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

17. தமிழ்நாடு காவல்துறையினரால் செய்யப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க பணிகள்.—இலாபம் கருதி செய்யப்பட்ட கொலைகள்.—(2) கச்சிராப்பளையம் கா.நி.கு. எண். 223/88 (விழுப்புரம் மாவட்டம்) 8—9—1988 அன்று கோட்டக்கர்ரமதூர் என்ற

வாரில் காளியம்மாள், வயது 45, க./பெ. இராமசாமி என்பவர் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். மொத்தம் ரூ. 93,000 பெறுமான அவரது தங்க நகைகளும், ரொக்கமும் திருடப்பட்டிருந்தன. முறையாகவும், அறிவியல் பூர்வமாகவும் செய்யப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளி தாஸ் (எ) இராமதாஸ், த./பெ. தங்கராஜ் என்பவரும் அவரது கூட்டாளிகள் 5 பேர்களும் கைது செய்யப்பட்டு, திருடப்பட்ட முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதி விசாரணையில் உள்ளது.

(2) இ. பட்டினப்பாக்கம் கா.நி. கு. எண். 687/88 (சென்னை நகர்).—22—2—1988 அன்று சென்னை, பட்டினப்பாக்கம் எல்.ஐ.ஜி. கட்டிட கதவிலக்கம் இ.17இல் புஷ்பவதி, க./பெ. ஸ்ரீனிவாசன் என்ற பெண்மணி கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். ரூ. 25,000 பெறுமான அவரது தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன. உரிய நேரத்தில் செய்யப்பட்ட புலன் விசாரணையினால் குற்றவாளி கணேஷ் (எ) கணேசன், த./பெ. செல்லமுத்து என்பவர் அதே தினத்திலேயே கைது செய்யப்பட்டு, முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

(3) திருச்செங்கோடு நகர கா.நி.கு.எண். 434/88 (சேலம் மாவட்டம்).—29—5—1988 அன்று, திருச்செங்கோடு வடிவேல் பிள்ளை தெருவில் வசிக்கும் வாடயம்மாள், வயது 65, கணவர் பெயர் முத்துசாமி கொலை செய்யப்பட்டு அவரது தங்க நகைகள் (ரூ. 60,000) திருடப்பட்டிருந்தன. உரிய நேரத்தில் நடத்தப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளி கிட்டம்மாள் (எ) கிருஷ்ணவேணி, வயது 50, க.பெ. ஆறுமுகம் கைது செய்யப்பட்டு, முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

(4) சத்தி கா.நி.கு. எண். 55/89 (பெரியார் மாவட்டம்)—12—2—1989 அன்று நஞ்சப்பகவுண்டர்புதூர் கிராமத்தில் குற்றவாளி சுப்புராம் (எ) சுப்ரமணி சிவம்மாள், க./பெ. வெங்கட்ராம கவுண்டர் என்பவரைக் கொலை செய்து ரூ. 10,000 பெறுமான தங்க நகைகளைத் திருடினார். குற்றவாளி கைது செய்யப்பட்டு, மொத்த சொத்து மீட்கப்பட்டது. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

(ஆ) கூட்டுக் கொள்ளை.—(1) படாளம் காவல் நிலையம் கு.எண். 145/88 (செங்கை அண்ணா மேற்கு மாவட்டம்).—11—9—1988 அன்று தபால்மேடு கிராமத்தில் குற்றவாளி வீரராகவனும் அவரது கூட்டாளிகள் 7 பேர்களும் சேர்ந்து அங்குள்ள எலாஸ்டிக் கம்பெனிக்குள் நுழைந்து மொத்தம் ரூ. 65,000 பெறுமான "சென்டரிங் ஷீட்டுகள்", இரும்புக் கம்பிகள் மற்றும் பலகைகளை திருடிச் சென்றனர். உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு, முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

(2) தேவக்கோட்டை தாலுக்கா கா.நி.கு.எண். 161/88 (பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்).—14—7—1988 அன்று மாருதிக் கோட்டையில் குற்றவாளி பாரதி, த./பெ. முருகன் என்பவரும் அவரது சகாக்கள் 5 பேர்களும் சேர்ந்து மனுதாரர் கணேசனை வழி மறித்து மொத்தம் ரூ. 94,500 பெறுமான அவரது ஸ்கூட்டர் எண். டிசிஏ 1957, தங்கச் சங்கிலி ஒன்று, மற்றும் ரொக்க ரூபாய் 70,000 ஆகியவற்றினைத் திருடிச் சென்றனர். தீவிர நடவடிக்கையின் காரணமாக 5 குற்றவாளிகளைத் கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

(3) அண்ணா நகர் கா.நி.கு.எண். 1441/88 (மதுரை நகர்).—6—8—1988 அன்று அடையாளம் தெரியாத சில நபர்கள் கே.கே. நகரிலுள்ள மதுரை வங்கிக் கிளை அலுவலகத்துக்குள் நுழைந்து, ஊழியர்களையும், வாடிக்கையாளர்களையும் துப்பாக்கி மற்றும் கத்தி முனையில் மிரட்டி மொத்தம் ரூ. 63,61,195 மற்றும் 55 பைசா பெறுமான ரொக்கத்தையும் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றனர். தீவிரமாகவும், அறிவியல் பூர்வமாகவும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக மதுரையைச் சேர்ந்த நல்லத்தம்பியும் அவரது சகாக்கள் 14 பேர்களும் கைது செய்யப்பட்டனர். மொத்தம் ரூ. 62,13,226 பெறுமான தங்க நகைகளும் ரொக்கம் ரூபாய் 1,190–ம் மீட்கப்பட்டன. 5 குற்றவாளிகள் தலைமறைவாக இருக்கின்றனர். அவர்களைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வழக்கு நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

(4) லத்தேரி கா.நி.கு.எண். 68/88 (வட ஆற்காடு மாவட்டம்).—17—7—1988 அன்று கெரசமங்கலத்தில் குற்றவாளி மேகவா கனகராஜ், த./பெ. கங்கையா என்பவரும் அவரது சகாக்கள் 4 பேர்களும் (அனைவரும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்) மனுதாரர் பரமானந்தத்தின் வீட்டினுள் நுழைந்து ரூ. 90,000 பெறுமான தங்க நகைகளை திருடினர். முறைப்படியும் தீவிரமாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக 31—8—1988 அன்று அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு விசாரணையிலுள்ளது.

(5) கவுந்தம்பாடி கா. நி.கு. எண். 34/89 (பெரியார் மாவட்டம்).—2—2—1989 அன்று புதுத்தோட்டத்தில் குற்றவாளி கிட்டுசாமியும் அவரது சகாக்கள் 4 பேர்களும் சேர்ந்து மனுதாரர் பெரியண்ண கவுண்டரின் வீட்டினுள் நுழைந்து மொத்தம்

ரூ. 20,000 பெறுமான தங்க நகைகளையும் ரொக்கத்தையும் திருடிச் சென்றனர். அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையிலுள்ளது.

(இ) கொள்ளை.—(1) கொடைக்கானல் கா.நி.கு. எண். 31/88 (திண்டுக்கல் காயிதே மில்லத் வட்டம்).— 11—2—1988 அன்று கொடைக்கானலில் குற்றவாளி ஆல்வின் என்கிற சிவா, த./பெ. நடராசன் என்பவரும் அவரது சகாக்கள் இருவரும் சேர்ந்து மனுதாரர் டாக்டர் அனந்தராமசுப்பிரமணியத்தின் வீட்டினுள் நுழைந்து ரூ. 1,53,100 பெறுமான தங்க நகைகளைத் திருடிச் சென்றனர். தீவிர விசாரணையின் காரணமாக குற்றவாளிகள் 7—4—1988-ல் கைது செய்யப்பட்டு, ரூ. 1,20,100 பெறுமான சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

(2) எப். 3 நுங்கம்பாக்கம் கா.நி.கு. எண். 2059/88 (சென்னை நகர்).— 12—7—1989 அன்று நுங்கம்பாக்கம், ஷெனாய் ரோடு கதவிலக்கம் 25-ல் குற்றவாளி தாப்பா என்கிற சுரேஷ், வயது 24, த./பெ. தியாகராஜன் (இலங்கை வாசி) மற்றும் அவரது 3 சகாக்கள் சேர்ந்து மனுதாரர் ஜெயபாண்டியன் வீட்டினுள் நுழைந்து, ரூ. 1,21,000 பெறுமான தங்க நகைகளைத் திருடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணையின் காரணமாக 25—8—1988 அன்று, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, ரூ. 1,19,000 பெறுமான சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையிலுள்ளது.

(3) பி. 4 ரேஸ் கோர்ஸ் கா.நி.கு. எண். 1282/88 (கோவை நகர மாவட்டம்).— 20—10—1988 அன்று கோயமுத்தூர் ஏ.டி.டி. காலனி சாலையில் கோயமுத்தூரைச் சேர்ந்த சித்தார்த்தனன், த./பெ. கிருஷ்ணன் மற்றும் அவரது 3 சகாக்களும் சேர்ந்து மனுதாரர் முருகேசனின் வீட்டினுள் நுழைந்து, ரூ. 85,000 பெறுமான தங்க நகைகளைத் திருடிச் சென்றனர். தீவிர விசாரணையின் காரணமாக 31—12—1988 அன்று, அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு, முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

(4) கீழக்கரை கா.நி.கு. எண். 264/89 (ராமநாதபுரம்).— 8—3—1989 அன்று தளிமண்குண்டு-குத்துக்கல்வலசை சாலையில் முத்துரைவர் சங்கத்தின் அருகில் குற்றவாளிகள் கண்ணன் மற்றும் ஆறுமுகம் ஆகிய இருவரும் மனுதாரர் அப்துல் அஜீசை வழி மறித்து மொத்தம் ரூ. 13,000 பெறுமான வெள்ளி நகை ஆபரணங்களையும், ரொக்கத்தையும் திருடிச் சென்றனர். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையிலுள்ளது.

(ஈ) கன்னக் களவு.—(1) எப். 5 சேத்துப்பட்டு கா.நி.கு. எண். 2002/88 (சென்னை நகர்).— 17—10—1988 அன்று, சேத்துப்பட்டு ஸ்பார்டாங்க் சாலையில் குற்றவாளி நளரமணன், த./பெ. கண்ணன், வேணுகோபால் சாலை, கதவிலக்கம் 12-ல் உள்ள மனுதாரர் நாயக் என்பவரின் இல்லத்தினுள் சுவரேறிக் குதித்து நுழைந்து, மொத்தம் ரூ. 2,00,000 பெறுமான ரொக்கத்தையும், தங்க நகைகளையும் திருடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணையின் காரணமாக 13—11—1988 அன்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு புலன் விசாரணையிலுள்ளது.

(2) டி. 5 மெரினா கா.நி.கு. எண். 1098/88 (சென்னை நகர்).—2—6—1988 அன்று, பெசன்ட் சாலையில் குற்றவாளி கண்ணன் என்கிற கண்ணப்பன் மனுதாரர் சேதுராமலிங்கத்தின் வீட்டினுள் பூட்டையுடைத்து நுழைந்து மொத்தம் ரூ. 3,00,000 பெறுமான தங்க நகைகளைத் திருடிச் சென்றார். அறிவியல் பூர்வமாகவும், முறைப்படியும் மீட்கப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளி கைது செய்யபட்டு முழுச் சொத்தும் சேர்க்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையிலுள்ளது.

(3) சத்தி கா.நி.கு. எண். 368/88 (பெரியார் மாவட்டம்).— 14—7—1988 அன்று, அக்கிரகாரத்தில் குற்றவாளி விஸ்வநாதன், த./பெ. நடேசன், மனுதாரர் ராமச்சந்திரனின் வீட்டினுள் பூட்டை உடைத்து நுழைந்து, மொத்தம் ரூ. 1,55,000 பெறுமான தங்கம் மற்றும் வெள்ளி நகைகளைத் திருடிச் சென்றார். அறிவியல் பூர்வமாகவும் முறைப்படியும் நடத்தப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக 10—8—1988 அன்று, குற்றவாளி கைது செய்யப்பட்டு, ரூ. 1,50,000 பெறுமான சொத்து மீட்கப்பட்டது. குற்றவாளிக்கு 6 மாத கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

(4) சேலம் நகர கா.நி.கு. எண். 284/88 (சேலம் மாவட்டம்).— 6—7—1888 அன்று, சேலம் சொர்ணாம்பிகை தெருவில் பவானியைச் சேர்ந்த குற்றவாளி ஷாஜஹான் மனுதாரரின் வீட்டினுள் சுவரேறி குதித்து நுழைந்து மொத்தம் ரூ.2,37,500 பெறுமான தங்கம், வெள்ளி மற்றும் ரொக்கம் ஆகியவற்றைத் திருடிச் சென்றார். அறிவியல் பூர்வமாக முறைப்படி நடத்தப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக ரூ. 2,33,000 பெறுமான சொத்துக்கள் மீட்கப்பட்டு குற்றவாளியையும் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கு நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

(5) கிள்ளை கா.நி.கு. எண். 14/88 (தென் ஆற்காடு மாவட்டம்).— 16-2-1988 அன்று, சேதுக்கொல்லையில் உத்தமசோழமங்கலத்தைச் சேர்ந்த குற்றவாளி ராஜேந்திரன், வயது 28, த./பெ. துரையரசன் என்பவரும் அவரது இரு சகாக்கள் சேர்ந்து மனுதாரரின் வீட்டின் கூரை வழியாக உள்ளே நுழைந்து மொத்தம் ரூ. 2,75,000 பெறுமான ரொக்கம் மற்றும் தங்க நகைகளைத் திருடிச் சென்றனர். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. அனைத்துக் குற்றவாளிகளுக்கும் தலா ஓராண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

(6) வாய்மேடு கா. நி.கு. எண். 168/88 (தஞ்சை கிழக்கு).— 25—4—1988 அன்று மருதூரில் குற்றவாளி கணேசன், த./பெ. சோமு பிள்ளை, அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோவிலுனுள் நுழைந்து, மொத்தம் ரூ. 1,50,000 பெறுமான மூன்று பஞ்சலோக சிலைகளைத் திருடிச் சென்றார். குற்றவாளி கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

(7) நன்னிலம் கா.நி.கு. எண். 138/89 (தஞ்சை கிழக்கு).— 10—3—1989 மற்றும் 14—3—1989 இடையில் நெம்மேலியம்மன் கோவிலில், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குற்றவாளி ஜெயராமன் (உள்ளூர் எஃப்ஓ.) வயது 35, த./பெ. குஞ்சு வன்னியர் என்பவரும் மற்றும் அவரது சகாவான வைத்தியநாதனும் அக்கோவிலுள் பூட்டை உடைத்து நுழைந்து ரூ. 1,00,000 பெறுமான இரண்டு சிலைகளைத் திருடிச் சென்றனர். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

(உ) <u>திருட்டுக்கள்</u>.—(1) ஈரோடு நகர கா.நி.கு. எண். 1497/88 (பெரியார்).— 18—8—1988 அன்று ஈரோடு பட்டேல் தெருவில் அதே ஊரைச் சேர்ந்த குற்றவாளி பாண்டியன், வயது 25, த./பெ. சேதுராமன், ரூ. 2,50,000 பெறுமான எண். டிடிஓ. 4176 லாரியை திருடிச் சென்றார். 22—8—1988 அன்று குற்றவாளி கைது செய்யப்பட்டு சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையிலுள்ளது.

(2) செங்கல்பட்டு இரயில்வே போலீஸ் கு. எண். 352/88 (ரயில்வே போலீஸ், சென்னை).— 20—6—1988 அன்று சென்னை எழும்பூர் மற்றும் தஞ்சை ரயில் நிலையங்களுக்கிடையில் ரயில் எண். 101 (சென்னை-இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்) இரண்டாவது வகுப்பு பெட்டியொன்றில் போத்தக்குடியைச் சேர்ந்த குற்றவாளி அப்பாஸ், த./பெ. மீரா மொய்தீன், மொத்தம் ரூ. 2,50,000 பெறுமான ரொக்கம் மற்றும் தங்க நகைகளைக் கொண்ட பெட்டியொன்றைத் திருடிச் சென்றார். உரிய காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக குற்றவாளி அதே தினத்தில் கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இக்குற்றவாளிக்கு 5 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

(3) பெரியபாளையம் காவல் நிலைய குற்ற எண். 247/88 (செங்கை அண்ணா மேற்கு மாவட்டம்).— 2—8—1988 அன்று எல்லாபுரத்தில் குற்றவாளி கொல்லா ஜகந்நாதன், த./பெ. கொல்லா கருப்பையா (கொல்லாபுரம்) மொத்தம் ரூ. 1,84,000 பெறுமான தங்க நகைகளைத் திருடினார். குற்றவாளி கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையிலுள்ளது.

(4) ஆற்காடு நகர கா.நி.கு. எண். 256/88 (வட ஆற்காடு).— 29—5—1988 அன்று திரசுத் தோட்டத்தில் (ஆற்காடு) வேப்பங்கிராமத்தைச் சார்ந்த குற்றவாளி வேலு, த./பெ. பெருமாள் மொத்தம் ரூ. 3,50,000 பெறுமான வேலண்ட் லாரி எண். ஐடிஜே. 7900-ஐ ரசாயனப் பொருட்களோடு திருடிச் சென்றார். தீவிர புலன் விசாரணையின் காரணமாக 30—5—1988 அன்று, குற்றவாளி கைது செய்யப்பட்டு திருடப்பட்ட லாரி மீட்கப்பட்டது. குற்றவாளிக்கு 7 வார கால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

(5) நெய்வேலி-2 கா.நி.கு. எண். 320/88 (தென் ஆற்காடு).—10-10-1988 அன்று நெய்வேலியில் அடையாளந்தெரியாத சில நபர்கள் ஜோதி வைத்தியலிங்கம் மினரல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து ரூ. 1,62,500 பெறுமான செப்புக் கம்பிகள் மற்றும் இரசாயனப் பொருட்களைத் திருடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளி சர்க்கரை (என்கிற) சக்கரபாணி, த./பெ. அங்கமுத்து என்பவரும் அவரது 5 சகாக்களும் 20-10-1988 அன்று கைது செய்யப்பட்டு முழுச் சொத்தும் மீட்கப்பட்டது இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையிலுள்ளது.

காவல் புலனாய்வுத்துறை, குற்றப் பிரிவினால் புலனாய்வு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க வழக்குகள். (1) ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலைய குற்ற எண். 51/85 (தென்னாற்காடு மாவட்டம்).— 27-3-1989 அன்று பிற்பகல் 1-50 மணி அளவில் தென்னாற்காடு மாவட்டம் மாமங்கலம் கிராமத்தில் உள்ள இந்தியன் வங்கியினுள் ஆயுதம் தாங்கிய கொள்ளைக்காரர்கள் எட்டு பேர் நுழைந்து துப்பாக்கி காட்டி அச்சுறுத்தி ரொக்கம் ரூ. 12,955 மற்றும் தங்க நகைகள் ஆக மொத்த மதிப்பு ரூ. 24,00,000 தங்க நகைகளை கொள்ளையடித்து வேன் ஒன்றில் தப்பிச் சென்றுவிட்டனர். இவ்வழக்குகளில் புலனாய்வு குற்றப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. புலனாய்வின்

இறுதியில் ஃபாதர் சூசை மாணிக்கம் மற்றும் அவரது பத்து சகாக்கள் கைது செய்யப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும், ரொக்கமும் மீட்கப்பட்டன. குற்றவாளிகள் 11 பேரில் 10 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். இவ்வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

2. திருவான்மியூர் காவல் நிலைய குற்ற எண். 802, 963 மற்றும் 1010/88. (செங்கை-அண்ணா கிழக்கு மாவட்டம்), செங்கை.—அண்ணா மாவட்டத்தில் சென்னையை ஒட்டிய திருவான்மியூர் பகுதியில் ஒரு சிலர் கள்ளச் சாராய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததும், விபச்சாரத்தை தொழிலாக நடத்தி வந்ததும் தெரிய வந்தது. இதுகுறித்து நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. புலனாய்வின்போது ஆட்டோ சங்கர் என்ற கௌரி சங்கர் விபச்சார விடுதியை நடத்தி வந்ததும், அவர் தனக்கு தொழில் ரீதியாக விரோதியாக இருந்தவர்களையும், மேலும் தனக்கு ஏதாவது ஒரு வகையில் பிடிக்காமல் இருந்தவர்களையும், தன்னுடன் மோதலில்ஈடுபட்டவர்களையும், இப்படிப்பட்ட ஆறுபேர்களை கொலை செய்திருந்தது தெரிய வந்தது.

3. இவ்வழக்கின் புலன் விசாரணை குற்றப் புலனாய்வுத்துறை, குற்றப் பிரிவினால் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆட்டோ சங்கர் என்ற கௌரி சங்கரும் மற்றும் அவனுடைய பத்து சகாக்களும் கைது செய்யப்பட்டனர். பிரதான குற்றவாளி சங்கர் மற்ற நான்கு சகாக்கள் குண்டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டவர். மற்ற ஆறுபேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

3. கன்டோன்மென்ட் காவல் நிலைய குற்ற எண். 1665/88 (திருச்சி மாவட்டம்).—1—8—1988 அன்று ராம்ஜி நகரில் குற்றவாளி நாராயணன், வயது 55, த./பெ. சின்னசாமி, தென்னார்குளம், ராம்ஜி நகர் மற்றும் கருப்பன், வயது 22, த.பெ. சாந்தப்பன், திருச்சி ஆகியோர் சந்தேகமான சூழ்நிலையில் குற்றப் புலனாய்வுத்துறை குற்றப் பிரிவினால் பிடிக்கப்பட்டனர். அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் 4—4—1988 அன்று ஆந்திர மாநிலம், ஆனந்தபூர் நகரிலுள்ள வைசியா வங்கியிலிருந்து அவர்கள் திருடிய ரூ. 70,000 பற்றிய தகவல் தெரியவந்தது, ரொக்கம் மீட்கப்பட்டது. (அனந்தபூர் காவல் நிலைய குற்ற எண். 75/88 பிரிவு 350 இதச.) குற்றவாளிகள் இருவருக்கும் 2—12—1988 அன்று ஓராண்டு கால சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

4. கரூர் நகர காவல் நிலைய குற்ற எண். 380/88(திருச்சி மாவட்டம்).—5—5—1988 அன்று கரூர் நகரம் ஜவஹர் பஜாரில் (1) கிருஷ்ணமூர்த்தி, வயது 23, த./பெ. ரவாலட்டு மாரிமுத்து, துவாக்குடி மற்றும் (2) ஹரி என்கிற ஹரிகிருஷ்ணன், வயது 22, த./பெ. ராமையா, எண். 27, 3-வது தெரு, திருவெறும்பூர் ஆகிய இருவரும் தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ரூ. 3,500 — மொத்த மதிப்பு ரூ. 1,50,000 ஆகியவற்றைத் திருடினார். சென்னை குற்றப் புலனாய்வுத்துறை குற்றப் பிரிவினால் நியமிக்கப்பட்ட புலனாய்வுத் தனி குழுவினர் தங்களின் நுண் புத்திக்கூர்மையான விசாரணையின் மூலம் 1—12—1988 அன்று மேற்கூறிய இரு குற்றவாளிகளையும் கைது செய்து அனைத்து பொருட்களையும் மீட்டனர். குற்றவாளிகள் இருவருக்கும் 20—12—1988 அன்று ஏழு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

5. நன்னிலம் காவல் நிலைய குற்ற எண். 268/88 (தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம்).—23—7—1988 அன்று நன்னிலத்தில் குற்றவாளி பழனியப்பன், வயது 34, த./பெ. வைரக்கண்ணன், கோட்டூர் என்பவர் பழமைவாய்ந்த பெருமாள் சிலை ஒன்றுடன் கைது செய்யப்பட்டார். புலனாய்வின்போது மேற்படி இச்சிலை 1986ஆம் ஆண்டு பேரளம் கோவிலிலிருந்து திருடப்பட்டது என்பது தெரிய வந்தது. (பேரளம் காவல் நிலைய குற்ற எண். 129/86 பிரிவு 457, 380 இதச.) குற்றவாளிக்கு 8—12—1988 அன்று ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

6. திருவாரூர் காவல் நிலைய குற்ற எண். 867/88—(தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம்).—23—7—1988 அன்று திருவாரூர் நகரில் குற்றவாளி பாஸ்கர், வயது 34, த. பெ. பரமசிவம், காரிமேடு, திருவாரூர் நகரம் சந்தேகமான சூழ்நிலையில் கைது செய்யப்பட்டு அவரது வாக்குமூலத்தின்பேரில், திருட்டுப்பொருட்களை விலைக்கு வாங்கும் கண்ணன் என்பவரிடமிருந்து "விநாயகர் சிலை" ஒன்று மீட்கப்பட்டது. இச்சிலை செம்பனார் கோவில் கிராமத்தில் கோவில் ஒன்றிலிருந்து திருடப்பட்டதாக வாக்குமூலத்தில் தெரிய வந்தது, (செம்பனார் கோவில் காவல் நிலைய குற்ற எண். 258/88, பிரிவு, 457, 380 இதச. குற்றவாளி பாஸ்கருக்கு இரண்டாண்டு காலம் கடுங்காவல் தண்டனையும், கண்ணனுக்கு 9 மாத காலம் கடுங்காவல் தண்டனையும் 8–12–1988 அன்று விதிக்கப்பட்டது.

18. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் 1988-ஆம் ஆண்டு நடைபெற்ற 32-வது அகில இந்திய காவல் கடமைப் போட்டியின்போது நிகழ்த்தப்பட்ட சாதனைகள் :—தமிழ்நாடு காவல் கடமைப் போட்டிக் குழு 1988-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் தேதியிலிருந்து 30-ந் தேதிவரை ஸ்ரீநகரில் நடைபெற்ற 32-வது அகில இந்திய காவல் கடமைப் போட்டியில் கலந்துகொண்டது. இக்குழு புலனாய்விற்கு

உதவும் அறிவியல் உபகரணங்கள் என்ற போட்டியில் பெருமைப்படத்தக்க அளவில் முதல் இரண்டு இடங்களை பெற்றது. மேலும் இக்குழு கீழ்க்கண்ட போட்டிகளிலும் கலந்துகொண்டது :—

1. தடவியல்.
2. பாதரேகை.
3. காவல் உருவப்படம்.
4. கூர்ந்து ஆராயும் போட்டி.
5. விரல் ரேகை.
6. அறிவியல் தொடர்பான தடயங்களை எடுத்தலும், பாதுகாப்புடன் அனுப்புதலும்.
7. மருத்துவ-சட்ட ரீதியான வாய்மொழிப் போட்டி.
8. நிழற்படம்.
9. சுடுதல்.
10. காவல்துறை நாய்ப்படை.

இக்குழு தங்கப் பதக்கங்கள் நான்கு, வெள்ளிப் பதக்கங்கள் மூன்று, வெண்கலப் பதக்கங்கள் நான்கு ஆகியவற்றைப் பெற்றது.

19. பொது.—சட்டத்தை அமல்படுத்துதல், ஒழுங்கை நிலை நாட்டுதல், குற்றங்களைக் கண்டுபிடிப்பதுடன் நிகழ்வதைத் தடுத்தல் ஆகியவற்றில் 1988–89ஆம் ஆண்டு போதிய கவனம் செலுத்தப்பட்டது. கிராமப்புற கண்காணிப்புக் குழுக்கள், சிறுவர் இல்லங்கள், ஊர்க்காவல் படை மற்றும் காவல்துறையினர்-பொதுமக்கள் விளையாட்டுப் போட்டி குழுக்கள் ஆகியன காவல்துறையினர் மற்றும் பொதுமக்களிடம் நல்ல உறவை மேம்படுத்த உதவின.

## இயக்கூர்திகளின் நிர்வாகம்.

1. பொதுமக்கள் போக்குவரத்து—(அ) பேருந்துகள்.—பொது மக்கள் பொதுவாக பேருந்துகளின் வேகமாகச் செல்லும் வசதிகளைப் பெற விரும்புகின்றனர். இதற்காக பேருந்துகளின் உரிமங்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன. கீழ்க்கண்ட வழிகளில் கூடுதல் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

(1) புதிய வழித்தடங்களில் புதிய உரிமங்களும் தற்போதைய வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகளும் வழங்கப்படுகின்றன.

(2) ஒரு தடத்தில் ஒரு நாளைய போக்குவரத்தை அதிகப்படுத்தியும் தடத்தில் தூரத்தை அதிகப்படுத்தியும் நிர்வகிக்கப்படுகின்றன.

(3) தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்துகளை அதிக மக்கள் பயணம் செய்யும் வண்ணம் பெரிதாக்கியும் புதிய மாடல் வண்டிகளை விட்டும் வசதி செய்யப் படுகின்றன.

(4) பேருந்து வசதிகள் செய்து தர இயலாத ஊரகப் பகுதிகளுக்கு சிறிய பேருந்துகளும், ஈர்ப்பு பேருந்துகளும் சென்று வர ஏற்பாடு செய்யப்படுகின்றன.

(ஆ) உரிமங்கள் வழங்கப்படுதல்.—மாநிலத்திற்குள் ஓடும் பேருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடம் உள்ளன. வெளி மாநிலங்களில் ஓடும் பேருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் மாநிலப் போக்குவரத்து அதிகாரியிடம் உள்ளது. எனினும் மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் உருவானபின் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கும் பொறுப்பு மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களைச் சார்ந்ததாகும். மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் மக்களுக்குத் தேவையான பேருந்துகளை ஏதாவது ஒரு வழித் தடத்தில் இயக்க இயலாத சூழ்நிலை ஏற்படின் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் மாற்று ஏற்பாடுகளைச் செய்வர். இயக்கு ஊர்திகளின் சட்டம் 1939-ன் படி இவர்களால் தனியார் துறையில் உள்ள பேருந்து உரிமையாளர்களுக்கு தேவையான உரிமம் வழங்கப்படும்.

(இ) சிறிய பேருந்துகள்—தமிழ்நாட்டில் உள்ளடங்கிய ஊரகப் பகுதிகளில் சிறிய பேருந்துகள் ஓடுகின்றன. தற்போது 78 பேருந்துகள் சேவைக்குப் பயன்படுத்தப் படுகின்றன. ஒரு பேருந்திற்குத் தள்ளுபடி வரியாக ஒரு காலாண்டிற்கு ரூ. 50 மட்டுமே வசூலிக்கப்படுகின்றது. (வரி ரூ. 40 கூடுதல் வரி ரூ. 10).

(ஈ) ஈர்ப்பு பேருந்துகள்.—15 பேர்களுக்குக் குறைவாக இருக்கை வசதிகள் கொண்ட ஈர்ப்புப் பேருந்துகள் விடப்படுகின்றன. இயல்பு வரிக்கட்டண விகிதத்தில் 3/4 பங்கு வரிதான் இவைகளுக்கு விதிக்கப்படுகின்றன. 31—3—1989-ல் தமிழகத்தில் மொத்தம் 23 ஈர்ப்புப் பேருந்துகள் இயங்குகின்றன.

பயணிப் போக்குவரத்தை நாட்டுடமையாக்கல்.—பயணிப் போக்குவரத்தை நாட்டுடமையாக்கும் பணி 1967 முதலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது மாநில போக்குவரத்து நிறுவனங்களினால் 100-க்கு 68-க்கு மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட இடங்களில் மக்களுக்குத் தேவையான பேருந்துகளை இயக்குவது இந்நிறுவனங்களின் பொறுப்பு ஆகும். இயக்கு ஊர்திகள் சட்டம் பிரிவு 4-ஏவின்கீழ் இவர்கள் மக்களுக்கு தேவையான திட்டங்களை வெளியிடுதல் வேண்டும்.

மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் .— அரசு மாநிலப் போக்குவரத்து கழகங்களை நிறுவி போக்குவரத்துப் பணிகளை கவனிக்கிறது. 31—3—1989-ல் ஒவ்வொரு நிறுவனமும் இயக்கும் பேருந்துகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| வரிசை எண். | போக்குவரத்து நிறுவனத்தின் பெயர். | 31–3–1989ல் உள்ள பேருந்துகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அண்ணா போக்குவரத்துக் கழகம் | 1,096 |
| 2 | சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் | 737 |
| 3 | சேரன் போக்குவரத்துக் கழகம் | 1,383 |
| 4 | ஜீவா போக்குவரத்துக் கழகம் | 625 |
| 5 | கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் | 674 |
| 6 | நேசமணி போக்குவரத்துக் கழகம் | 619 |
| 7 | பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் | 957 |
| 8 | மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் | 623 |
| 9 | பல்லவன் போக்குவரத்துக் கழகம் | 2,193 |
| 10 | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் | 821 |
| 11 | திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் | 699 |
| 12 | தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் | 861 |
| 13 | தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் | 573 |
| 14 | ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் | 437 |
| 15 | அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் | 343 |
| | மொத்தம் | 12,640 |

பேருந்துகள்—தனியார் பேருந்து உரிமையாளர்— வழித்தடங்கள்.

31— 3— 1989-ல் பேருந்துகள் உரிமையாளர் பட்டியல் அவர்கள் வைத்திருக்கும் பேருந்துகளின் எண்ணிக்கை அடிப்படையில் பின்வருமாறு :

| உரிமையாளர் நிலை. | மொத்த பேருந்துகள். |
|---|---|
| (1) | (2) |
| ஒரு பேருந்து மட்டும் | 2,548 |
| இரு பேருந்துகள் | 736 |
| மூன்று பேருந்துகள் | 359 |
| நான்கு பேருந்துகள் | 98 |
| ஐந்து பேருந்துகள் | 70 |

பொதுமக்கள் போக்குவரத்து செயலாக்கம்.—(அ) பேருந்துகள் 31—3—1989-ல் தமிழகத்தில் மொத்தம் 18,452 பேருந்துகள் இயங்கின. அறிக்கை ஆண்டில் இயங்கி வரும் பேருந்து இயங்கி வந்த பேருந்துகளின் விவரங்களும் அவைகளின் பணிச் செயல் விவரங்களும் பின்வருமாறு.—

| வரிசை எண். | விவரம். | பொதுத்துறை. | தனியார் துறை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (1) | பெருநகர்ப்பணி : | | |
| | தடங்களில் ஓடிய பேருந்துகள் | 2,186 | 6 |
| | தடங்களின் தூரம் | 28,833 | 239 |
| | சேவை செய்த தொலைவு | 3,36,216 | 178 |
| | பயணிகளின் எண்ணிக்கை | 1,26,766 | 493 |
| (2) | மாநகர் மற்றும் நகரப்பணி : | | |
| | தடங்களில் ஓடிய பேருந்துகள் | 5,074 | 1,247 |
| | தடங்களின் தூரம் | 62,464 | 27,119 |
| | சேவை செய்த தொலைவு | 7,45,118 | 4,11,319 |
| | பயணிகளின் எண்ணிக்கை .. | 2,09,957 | 94,481 |
| (3) | வெளியூர் சாதாரணப்பணி : | | |
| | தடங்களில் ஓடிய பேருந்துகள் | 4,203 | 3,628 |
| | தடங்களின் தூரம் | 4,57,177 | 2,68,686 |
| | சேவை செய்த தொலவு | 16,29,135 | 13,29,831 |
| | பயணிகளின் எண்ணிக்கை | 1,99,039 | 1,95,880 |
| (4) | வெளியூர் துரிதப்பணி : | | |
| | தடங்களில் ஓடிய பேருந்துகள் | 98 | 33 |
| | தடங்களின் தூரம் | 2,90,148 | 2,724 |
| | சேவை செய்த தொலைவு | 4,04,579 | 11,882 |
| | பயணிகளின் எண்ணிக்கை .. | 46,102 | 2,013 |

31—3—1989-ல் பேருந்துகள் இயக்கப்பட்ட மொத்த தடங்களின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | பணியின் பெயர். | தடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பெருநகர்ப்பணி | 376 |
| 2 | மாநகர், நகர்ப்பணி .. .. | 3,614 |
| 3 | வெளியூர் சாதாரணப்பணி | 5,098 |
| 4 | வெளியூர் துரிதப்பணி .. | 164 |
| | | 9,252 |

(ஆ) ஒப்பந்த ஊர்திகள் .—வாடகைக் கார்களுக்கும் சுற்றுலா வாடகைக் கார்களுக்கும் எவ்வித தடையுமின்றி மாநில முழுமைக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையே ஓடும் அனைத்திந்திய சுற்றுலா வாடகைக் கார்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மாநிலப் போக்குவரத்து அதிகாரிக்கு உள்ளது. மெட்டாடர் ஸ்டான்டர்டு 20 வேன்கள் முதலிய வண்டிகளுக்கு சுற்றுலா வாடகை வேன் அனுமதிச் சீட்டு வழங்கப்பட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வண்டிகளில் மொத்தம் 5 பயணிகள் (ஓட்டுநர் தவிர) பயணம் செய்யலாம். 31—3—1989-ல் மொத்தம் 5648 வண்டிகள் தமிழகத்தில் இயங்கின.

சுற்றுலாத்துறையை வளர்ப்பதற்காக இந்தியா முழுமையிலும் ஓடுவதற்காக கீழ்க்கண்டவாறு ஒப்பந்த ஊர்திகளுக்கான தேசிய அனுமதிகள் வழங்கப்பட்டன:

| வரிசை எண். | வகை. | ஒதுக்கீடு. | வழங்கப்பட்ட அனுமதிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | அனைத்திந்திய சுற்றுலா ஊர்திகள் | 400 | 392 |
| 2 | சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகள் (35 பயணிக்கு மேல் மிகாதவை) | 50 | 50+1* |

* நீதிமன்ற ஆணையில் இயங்குபவை.

கீழ்க்காணும் பட்டியலில் மாநிலத்திற்குள் இயங்கிய ஊர்திகளின் எண்ணிக்கை விவரம்.—

| வரிசை எண் | வகை. | வண்டிகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|
| | | 31—3—1988 | 31—3—1989 |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ஆட்டோ ரிக்ஷா | 19,147 | 22,637 |
| 2 | சாதாரண வாடகைக் கார் .. | .. 2,711 | 2,995 |
| 3 | சுற்றுலா வாடகைக் கார்கள் | 17,570 | 20,688 |
| 4 | ஒப்பந்த பேருந்துகள் | 60 | 60 |
| 5 | சொகுசு ஊர்திகள் | 29 | 29 |
| 6 | அனைத்திந்திய சுற்றுலா ஊர்திகள் | 393 | 392 |
| 7 | சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகள் (35 பயணிக்கு மேல் மிகாதவை) | 50+1* | 50+1* |

* நீதிமன்ற ஆணைப்படி ஓடுவது.

(இ) சரக்கு வண்டிகள்.—வாணிக வளர்ச்சியை ஈடுகொடுப்பதற்காகவும், வாணிகப் பொருட்கள் சாலை வழியே வேகமாகச் செல்வதற்கும், பொதுச் சரக்கு ஊர்திகளுக்கும் தனியார் சரக்கு ஊர்திகளுக்கும் மாநிலம் தழுவிய அனுமதிகள் தடையின்றி வழங்கப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையே பொருட்களின் போக்குவரத்து செம்மையாக நடைபெற கீழ்க்கண்ட ஏற்பாடும் செய்யப்பட்டு வருகின்றன. தமிழகத்துடன் பண்டகப் போக்குவரத்து வசதியை விரும்பும் அண்டை மாநிலங்கள் தமிழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி அனுமதிச் சீட்டுகளின் மேலொப்பம் இடும் முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. அனைத்திந்திய அளவிலும் வாணிகப் பொருட்கள் நடமாட்டம் அதிகரிக்க பொதுச் சரக்கு வண்டிகளும் தனியார் சரக்கு வண்டிகளும் தேசிய அனுமதிகள் வழங்குவதிலிருந்த ஒதுக்கீடு முறை நீக்கப்பட்டுவிட்டது. மாநிலத்தில் வசித்து வரும் எந்த நபரும் அம்மாநிலப் போக்குவரத்து அதிகாரியிடம் தேசிய அனுமதி கோரி விண்ணப்பம் அனுப்பலாம். அந்நபருக்கு 1939 ஆம் ஆண்டு இயக்கு ஊர்திகள் சட்டத்தின் 63 (11) மற்றும் (12) பிரிவுகளின்படி அனுமதிச் சீட்டு வழங்கப்படும்.

தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரம், மகாராட்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களும் கோவா, டையூ, டாமன், பாண்டிச்சேரி, டாட்ரா நாகர்ஹவேலி ஆகிய யூனியன் பிரதேசங்கள் உள்ளடங்கிய பகுதிகள் தென்மண்டலம் என்று பகுக்கப்பட்டுள்ளது. இத்தென் மண்டலத்திற்குள் ஓடும் சரக்கு வண்டிகளுக்கு ஒரு தனி பரிமாற்ற ஒப்பந்தம் செயல்பட்டு வருகின்றது.

## இயக்கு ஊர்திகள் வளர்ச்சி :

மாநிலத்தில் ஓடும் இயக்கு ஊர்திகளின் எண்ணிக்கை சீரான வளர்ச்சி விதத்தில் வளர்ந்து வருகின்றது. 1988 மற்றும் 1989 ஆகிய இரு ஆண்டுகளிலும் அவற்றின் வளர்ச்சிகள் கீழே தரப்பட்டுள்ளன.—

| வரிசை எண் மற்றும் வகை. | வண்டிகளின் எண்ணிக்கை 31-3-1988 | வண்டிகளின் எண்ணிக்கை 31-3-1989 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **அ. தனியார் வண்டி :** | | |
| 1. பேருந்துகள் .. .. | 17,103 | 18,452 |
| 2. ஒப்பந்த வண்டிகள் .. | 39,961 | 46,852 |
| 3. தனியார் போக்குவரத்து வண்டிகள் .. .. | 1,117 | 991 |
| **ஆ. சரக்கு வண்டிகள் :** | | |
| 4. பொதுச் சரக்கு ஊர்திகள் (டிரக்குகள்) .. | 63,550 | 77,611 |
| 5. தனியார் சரக்கு ஊர்திகள் (டிரக்குகள்) .. | 4,135 | 4,474 |
| 6. அனுமதிச் சீட்டு தேவையில்லா சரக்கு ஊர்திகள் .. | 9,232 | 9,989 |
| 7. டிரக்குகளின் இணைப்புகள் .. .. .. | 195 | 229 |
| 8. அனுமதிச் சீட்டு உள்ள இழுவைகள் .. .. .. | 15,545 | 17,133 |
| 9. இழுவைகளின் இணைப்புகள் (அனுமதிச் சீட்டு உள்ளவை) .. .. .. .. .. | 16,891 | 18,301 |
| 10. இணைப்பு வண்டிகள் .. | 2,142 | 2,482 |
| **இ. இதர வகைகள் :** | | |
| 11. அனுமதிச் சீட்டு தேவையில்லாத ஊர்திகள் | 8,35,369 | 9,52,370 |

## வரவு—செலவுக் கணக்குகள் ;

இயக்கு ஊர்திகளின் வரியாகவும், கட்டணமாகவும் இத்துறை வருவாய் வசூலிக்கிறது. அதிகமான வருவாய் வரியின் மூலமாக வசூலிக்கப்படுகிறது. வருவாயின் தலைப்பு வகை விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் மற்றும் தலைப்பு. | 1988–89-ல் வசூலான ரூபாய் (ஆயிரத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| 1. இயக்கு ஊர்திகளின் கட்டணங்கள் | 17,52,17 |
| 2. இயக்கு ஊர்திகளின் வரி | 144,84,47 |
| 3. இதர வருவாய் .. .. | 12,90 |
| மொத்தம் .. | 162,49,54 |

1988–89 ஆம் ஆண்டில் இத்துறையின் நிர்வாகத்திற்கான செலவு ரூ. 411.13 இலட்சங்கள் ஆகும்.

# அத்தியாயம் 14.

## வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.

### இடவசதிக் கட்டுப்பாடு

தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) சட்டம் 30—9—1960 அன்று செயலுக்கு வந்தது. இச்சட்டம், 1973 ஆம் ஆண்டு 23 ஆம் சட்டத்தின் மூலம் மேலும் திருத்தப்பட்டது. குடியிருப்புக் கட்டிடங்களையும் குடியிருப்புக் கல்லாத கட்டிடங்களையும் வாடகைக்கு விடுவதை முறைபடுத்துதல், அத்தகைய கட்டிடங்களுக்கான வாடகையைக் கட்டுப்படுத்துதல், குடியிருப்பவர்களை நியாய மான காரணமின்றி உரிமையாளர் வெளியேற்றுவதைத் தடுத்தல் ஆகியவை இச்சட்டத்தின் நோக்கங்களாகும். சென்னை மாநகரில், மாவட்ட ஆட்சியரே இச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரி ஆவார்.

கட்டிடங்கள் காலியான ஏழு நாட்களுக்குள் அதுகுறித்து தேவையான விவரங் களுடன் அதிகாரம் பெற்ற அலுவலருக்குத் (சென்னை மாவட்டஆட்சியருக்கு) தெரியப் படுத்த வேண்டியது, கட்டிடங்களின் உரிமையாளர்கள், குடியிருப்போர் ஆகியோரின் கடமையாகும்.

அதிகாரம் பெற்ற அதிகாரி, காலியான வளாகங்களை தன்பொறுப்பில் எடுத்துக் கொண்ட பின்னர் குடியிருப்புக் கட்டிடங்களை, பணியிட மாற்றம் செய்யப்பட்டவர், வேறு குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவர் ; அண்மையில் திருமணமானவர் என்ற வகைப்பாடுகளின்கீழ் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ள, தகுதியுள்ள அரசுப்பணியாளர்களுக்கும், அரசு தன் விருப்புரிமை ஒதுக்கீட்டின்கீழ் பதிவு செய்துள்ளவர்களுக்கும் முந்துவரிசை ( Seniority ) அடிப்படையிலும், குடியிருப்புக்கல்லாத கட்டிடங்களை அலுவலகப் பயனுக்காக மாநில அரசு அலு வலகங்களுக்கும் ஒதுக்குவார். இடவசதிக்கட்டுப்பாட்டின்கீழ் வரும் கட்டிடங்களை, அவற்றின் உரிமையாளர், தனது சொந்தப் பயனுக்காக அல்லது பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அல்லது இடித்துக் கட்டுவதற்காக, அரசுக் கட்டுப் பாட்டிலிருந்து விடுவிக்குமாறு இச்சட்டத்தின் கீழ் விண்ணப்பஞ்செய்து கொண்டால் உரியவாறு விசாரணை செய்த பின்னர், அக்கட்டிடங்கள் உரிமையாளர்களுக்கு விடு விக்கப்படுகின்றன.

1988—89 ஆம் ஆண்டில், 139 அரசு அலுவலர்கள், வீடு ஒதுக்கீடு செய்ய வேண்டி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

குடியிருப்புகள் என்ற வகையின்கீழ் 35 கட்டிடங்கள் அறிவிக்கப்பட்டன. அவ்வாறு அறிவிக்கப்பட்ட கட்டிடங்களில், 34 குடியிருப்புக் கட்டிடங்கள், தகுதியுள்ள அரசுப் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

### வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்.

வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கம், 1966 முதல் வீட்டுவசதி வாரியத் தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வீட்டுவசதிச் சங்கங்களின் வகைகளும் அவற்றின் அலுவல்களும் :

வீட்டுவசதிச் சங்கங்களின் நிருவாகம் இரண்டுக்கு முறையில் நடைபெற்று வரு கிறது. மாநில அளவில் தலைமைச் சங்கமும் தொடக்க நிலையில் பல்வேறு வகையான வீட்டுவசதிச் சங்கங்களும் இச்சங்க அமைப்பிலுள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தலைமைச் சங்கமாகச் செயல்படுகிறது. தொடக்க நிலையில் 11 வகையான வீட்டுவசதிச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவற்றின் விவரங்கள் வருமாறு :—

1. தலைமைச் சங்கம். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், சென்னை-7.
2. தொடக்க நிலை வீட்டுவசதிச் சங்கங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | கட்டிட கூட்டுறவுச் சங்கங்கள் | 360 |
| 2. | வீடுகட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள் | 209 |
| 3. | வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் | 181 |
| 4. | வீடுகட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள் | 42 |
| 5. | நகரிய கூட்டுறவுச் சங்கம் | 1 |
| 6. | வாடகைக் குடியிருப்பு வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் | 4 |
| 7. | தொழிலாளர் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் | 37 |
| 8. | வீட்டுமனைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 108 |
| 9. | வீட்டுவசதிப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் | 109 |
| 10. | வட்ட வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் | 165 |
| 11. | ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் | 15 |
| | மொத்தம் | 1,231 |

இந்த வீட்டுவசதிச் சங்கங்கள் தம் உறுப்பினர்களின் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன், வீடுகட்டுவதற்கான மதிப்பீட்டுச் செலவு ஆகியவற்றைப் பொறுத்து ரூ. 6,000 முதல் ரூ. 1 இலட்சம் வரையில் கடன் வழங்குகிறது. சில சங்கங்கள் நிலங்களை வாங்கி அவற்றை வீட்டு மனைகளாக மாற்றி உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்கின்றன.

3. திட்டம் இலக்கு சாதனை :

1. கிராமப் பகுதி வீட்டுவசதித் திட்டம்.—பொருளாதார வகையில் நலிந்த பிரிவினர் என்ற அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ. 700-க்கும் மேற்படாத வருமானம் உடையவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு நிதியுதவி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அரசிடமிருந்தும், அட்கோ நிறுவனத்திடமிருந்தும் நிதிகள் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாண்டில் 21,750 வீடுகளைக் கட்டி முடிக்க அரசு இலக்கு வரையறுத்துள்ளது. இதுவரையில் 19,296 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2. நகர்ப்பகுதி வீட்டுவசதித்திட்டம்.—நகர்ப்பகுதிகளில் வீட்டுவசதி இணையம் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன் பெற்று நகர்ப்பகுதி வீட்டுவசதிச் சங்கங்கள் கடன் வழங்குகிறது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து ஓராண்டிற்கு ரூ. 15 கோடி கடன் தொகை பெறும் பயனீட்டாளர்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

1988–89ஆம் ஆண்டில் திட்ட இலக்கு நிதி இலக்கு முறையே வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 8,000 வீடுகள், ரூ. 35.00 கோடி என்று நிர்ணயித்திருக்கப்பட்டிருக்க தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 7,564 வீடுகள் கட்ட ரூ. 39.17 கோடி கடன் வழங்கியுள்ளது.

4. அறிக்கையாண்டில் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்.—கிராமப்பகுதிகளில் வாழும் குறைந்த வருமானத் தொகுதியினருக்கும் நடுத்தர வருமானத் தொகுதியினருக்கும் இம்மாநிலத்தில் செயல்படும் 165 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் நிதியுதவி அளிப்பதற்காகப் புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானத் தொகுதியினருக்கும் 11.50 சதவீதத்தில் ரூ. 20,000 வரையிலும். நடுத்தர வருமானத் தொகுதியினருக்கு 13.50 சதவீதத்தில் ரூ. 36,000 வரையிலும் கடன் வழங்கப்படுகிறது. அட்கோ 4,950 வீடுகள் குறைந்த வருமான தொகுதியினருக்கு. 3,117 வீடுகள் நடுத்தர வருமான தொகுதியினருக்கு, 1,833 வீடுகள் கட்டுவதற்கான ஒரு திட்டத்திற்கு ரூ. 1,283.28 இலட்சம் அனுமதித்துள்ளது.

5. நிதி ஒதுக்கமும் ஆன செலவும்.—1988–89 ஆம் ஆண்டில் கிராமப்பகுதிகளில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு பெரும் அளவில் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் 16,750 வீடுகளும், சாதாரண திட்டத்தின் கீழ் 5,000 வீடுகளும் ஆக மொத்தம் 21,750 வீடுகள் கட்டுவதற்கு நிதியுதவி செய்ய அரசு உத்தரவிடப்பட்டுள்ளது. கீழ்க் கண்டவாறு சமவெளியில் ரூ. 8,000 என்ற உயரளவுக்கும், மலைப்பகுதிகளிலும் இராமேஸ்வரம் தீவிலும் ரூ. 10,000 என்ற உயரளவுக்கு உட்பட்டு கீழ்க்காணும் முறையில் இவ்வுதவி அளிக்கப்படும்:

| | சமவெளிப் பகுதி களில். | மலைப் பகுதிகளில். |
|---|---|---|
| 1. அட்கோ நிறுவனம் | 4,000 | 4,000 |
| 2. அரசு | 2,000 | 3,500 |
| 3. பயனீட்டாளர்களின் பங்குத்தொகை | 2,000 | 2,500 |
| மொத்தம் .. | 8,000 | 10,000 |

மேலே காட்டப்பட்டுள்ள நிதியுதவி முறையின்படி இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 1,747.80 இலட்சம் ஆகும். இதில் கடன் தொகை ரூ. 1,310.85 இலட்சம் ஆகும். அதன் விவரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| 1. அட்கோ நிறுவனம் வழங்கும் கடன் | ரூ. 870 இலட்சம். |
| 2. அரசு வழங்கும் கடன் .. | ரூ. 440.85 இலட்சம். |
| மொத்தம் .. | 1,310.85 இலட்சம். |

எஞ்சிய தொகையை பயனீட்டாளர்களே ஏற்க வேண்டும் . கடந்த 10 ஆண்டுகளில் இப்பணியில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ள கிராமப்பகுதி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் மொத்தம் 3,66,588 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

## நகர ஊரமைப்புத் திட்டம்.

மக்களுக்கு நலம் பயக்கும் ஒரு நடவடிக்கை என்ற முறையில் நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை முன்னதாகவே உணர்ந்த இந்திய மாநிலங்களுள் தமிழ்நாடு ஒன்றாகும். இந்த அமைப்பினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து, அதனை செயற்படுத்துவதற்காக சென்னை 1922ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்திற்குத் தேவையான சட்ட அங்கீகாரத்தையும் ஆதரவையும் நல்கியது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர நாட்டுபுற அமைப்புத் திட்டச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. முன்னர் இயற்றப்பட்ட சட்டம் நகர்ப்புறப் பகுதிகளுக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. பின்னர் இயற்றப்பட்ட சட்டம் இவ்வாறில்லாமல் மாநிலத்தில் நகர-கிராமப் பகுதிகள் அனைத்திற்கும் பொருந்துமாறு செய்யப்பட்டது.

மாநிலம் முழுவதற்கும் செம்மையான முறையில் பணியாற்றும் வகையில், செவ்விய செயல்முறை பணிக்கான எதிர்காலக் குடியேற்ற முறைகளைத் தயாரிப்பதிலும், ஊரக, நகர்ப்புறத் திட்டங்களை வலுப்படுத்தவும், தற்போதைய நகர அமைப்பு முறை குறித்து ஆய்வு நடத்தப்பட்டு, வட்டார வளர்ச்சி மையங்கள், வளர்ச்சி மையங்கள். வளர்ச்சி நிலையங்கள், பணி மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அலுவல்கள், முக்கிய அலுவல்கள்.—முக்கியமாக இத்துறை நான்கு முக்கியமான பணிகளை ஆற்றி வருகின்றது.—

(1) நிலப்பயன் குறித்த திட்டமிடலைப் பொறுத்தவரையில், இது அரசின் தொடக்கநிலைத் திட்டமிடும் துறையாகச் செயலாற்றி வருகின்றது.—

(2) உள்ளூர் அமைப்புத் திட்டம், நில வரைப் படங்கள் தயாரிப்பைப் பொறுத்தமட்டில் இது உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒரு தொழில் நுட்ப ஆலோசகராகச் செயல்படுகிறது.

(3) உள்ளாட்சி மன்றங்களிலிருந்து வரும் அமைப்புத் திட்டங்கள், கட்டிட அனுமதிகள் அனைத்தையும் பொறுத்தமட்டில், இத்துறை மேல் முறையீட்டு அதிகார மன்றமாகச் செயல்படுகின்றது.

(4) இயற்கைச் சீற்றத்தினின்றும் பாதுகாத்துக்கொள்ளத் திட்டமிடல், சுற்றுப்புறம், சுற்றுப்புறச் சூழல் நிலை, செயல் திட்டங்கள், எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய அல்லது சிறப்பான பகுதிகளுக்கான சிறப்பு வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் இது ஓர் ஒருங்கிணைப்பு அமைப்பாகச் செயற்படுகிறது.

திட்டங்கள் தயாரித்தல்.—வெவ்வேறு திட்டமிடல், வளர்ச்சி-அதிகார மன்றங்களின் சார்பாக, தமிழ் நாடு 1971ஆம் நகர ஆண்டு நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் கீழ் கருதப்படுகின்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் இத்துறை தயாரிக்கிறது.

மாவட்டங்களுக்கான வட்டாரத் திட்டங்கள் :

தமிழ்நாட்டிலுள்ள 20 மாவட்டங்களிலும் மாவட்டம் முழுவதற்குமான ஒரு வகைக் கட்டமைப்புத் திட்டமாகச் செயற்படும் வகையில் மாவட்ட தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரிப்பதில் இத்துறை தற்போது ஈடுபட்டுள்ளது.

நகர்ப்புற குடியிருப்புப் பகுதிகளுக்கான கட்டமைப்புத் திட்டங்கள் :

60 பெரும் நகரங்களுக்கான மேலும் விரிவான திட்டங்களுக்குப் பின்னணியாக அமையும் வகையில் அவற்றிற்கான கட்டமைப்புத் திட்டங்களைத் தயாரிக்கும் பணியையும் துறை மேற்கொண்டுள்ளது.

உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதிகளுக்கான பெருந் திட்டங்கள் :

குடியிருப்புப் பகுதிகளை (அமைதியான பகுதிகள்) தொழிற்சாலைப் பகுதிகளிலிருந்து (சுறுசுறுப்பான, மாசுபடும் பகுதிகள்) காப்பாற்றுவதே இதன் முக்கிய நோக்கமாகும். இத்துறை, சென்னைப் பெருநகர் பகுதிக்கு வெளியில் 113 நகர்புறப் பகுதிகளையும், 134 புதிய நகர்ப்பகுதிகளையும் தெரிந்தெடுத்து அவற்றிற்கான விரிவான பெருந் திட்டங்களையும், புதிய நகர அமைப்புத் திட்டங்களையும் தயாரிக்க உள்ளது.

விரிவான வளர்ச்சித் திட்டங்கள் :

விரைவான வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள நகர்ப்புறங்களின் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 130 பகுதிகளுக்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன. 356 பகுதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு, அவற்றுக்கு விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளன.

இத்துறையின் ஏனைய திட்டமிடல் நடவடிக்கைகள் :

இத்துறையின் ஏனைய திட்டமிடல் நடவடிக்கைகள் வருமாறு :

(1) இயற்கைச் சிற்றத்தினின்றும் பாதுகாத்துக்கொள்ள திட்டமிடல்.

(2). நகரங்களை விண்ணிலிருந்து படம் பிடித்து வரைபடம் தொகுத்தல்.

(3) ஊரக, நகர்ப்புறப் பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏற்ற இடங்களை வகைப்படுத்துதல்.

(4) ஒழுங்கமைவு முறையில் நகர்ப்புற பகுதிகளை ஏற்படுத்துதல்.

(5) பெரிய நகரங்களுக்கான போக்குவரத்து செயல் திட்டங்களைத் தயாரித்தல்.

(6) மத்திய அரசு பொறுப்பேற்கும் சிறிய-நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள், மாநில அரசு பொறுப்பேற்கும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் வரும் திட்டங்களைக் கண்காணித்தல்.

(7) உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு நகர்ப்புற முக்கிய வளர்ச்சித் திட்டங்களின் கீழ் நகர அளவிலான கண்காணிப்புக் குழுக்களுக்கு பணியாளர் உதவி அளித்தல்.

(8) பேருந்து நிலையங்கள், அங்காடிகள், அலுவலகக் கட்டிடங்கள் போன்ற பொது மக்களுக்கான கட்டுமானத் திட்டங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

(9) புறநகர்ப் பகுதி குடியிருப்பு, வீட்டுவசதி-குடிசை மாற்று/மேம்பாட்டுத் திட்டங்கள், ஏனைய திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றுவதில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்குதல்.

(10) தமிழ்நாடு தொழிற்சாலைகள் சட்டம்-விதிகளின்கீழ், தொழிற்சாலைகளுக்கான கட்டிட திட்டம், வரைபடங்களை கூர்ந்தாய்வு செய்து ஏற்பளித்தல்.

4. அனைத்து தலைப்புகள்/திட்டங்களின் கீழ் தனித்தனியாக திட்ட இலக்குகள், சாதனைகள் தொடர்பான பணி முன்னேற்றம்:—

(1) பெருந் திட்டம் :

நிதி ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளவை :

| இலக்கு. | சாதனை. |
|---|---|
| (1) | (2) |
| 10 | 10 திட்டங்களுமே அனுப்பப்பட்டுள்ளன. |

இசைவிற்காக பணிந்தனுப்பப்பட்டுள்ளவை :

| இலக்கு. | சாதனை. |
|---|---|
| (1) | (2) |
| 10 | திருச்சிராப்பள்ளிக்கான பெருந்திட்டம் மட்டும் இசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஏனையவை துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகின்றன. |

நட்டமைப்புத் திட்டம் :

| இலக்கு. | சாதனை. |
|---|---|
| (1) | (2) |
| ' 3 | காஞ்சிபுரம், ஒசூர் தவிர இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஏனைய நகரங்களுக்கான திட்டமைப்புத் திட்டங்கள் தயாரித்து முடிக்கப்பட்டுவிட்டன. |

விரிவான வளர்ச்சித் திட்டங்கள் :

| | இலக்கு. | சாதனை. |
|---|---|---|
| | (1) | (2) |
| (அ) அனுமதி | 20 | 13 |
| (ஆ) இசைவு | 20 | 9 |

நிதி ஒதுக்கீடு செலவும் :

நகர்ப்புறத் திட்டங்கள் :

| 1988–89ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஊக்கத் தொகை. | மொத்த செலவு. | திட்டங்களும் நிறைவேற்றி முடிப்பதற்கான இலக்கும். | | ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (ரூபாய் இலட்சத்தில்) | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 125.00 | 350.00 | 18 | 18 | மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம். |
| 400.00 | 350.00 | 11 | 11 | மத்திய அரசு பொறுப் பேற்கும் சிறிய, நடுத்தர நகர ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள். |

குறிப்பு 1.—மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களின் கீழ் ஒவ்வொரு உள்ளாட்சி மன்ற அமைப்பும் ஒரு சமயத்தில் ஆதாயம் தரும் திட்டங்களுக்காக ரூ. 25 இலட்சம் கடன் உதவி பெறத் தகுதியுடையதாகும். இத்திட்டம் நகராட்சி நகரங்கள், ஊராட்சி நகரங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

குறிப்பு 2.— மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான சிறிய-நடுத்தர நகர ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களின்கீழ் இணை மானிய அடிப்படையில் ஒவ்வொரு நகரமும் ரூ. 120 இலட்சம் கடன் உதவி பெறுவதற்குத் தகுதியுடையதாகும். (மத்திய அரசிடமிருந்து 60 இலட்சம், மாநில அரசிடமிருந்து 60 இலட்சம்) ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத்திட்டம், அருப்புக்கோட்டை, ஆண்டிப்பட்டி, அறந்தாங்கி, இராமநாதபுரம், இராமேஸ்வரம், பட்டுக்கோட்டை, மதுராந்தகம், சத்தியமங்கலம், அரியலூர் ஆகிய ஒன்பது நகர்ங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

# அத்தியாயம் 15.

## தொழில் துறை

### சர்க்கரை.

சர்க்கரைத் தொழில் குறித்த அனைத்து பணிகளையும் மேற்கொள்ள 1989-ம் ஆண்டில் சர்க்கரைத் துறை உருவாக்கப்பட்டது. இத்துறை சிறப்பு ஆணையரின் கீழ் இயங்கி வருகிறது. இவர் கூட்டுறவு சர்க்கரை ஆலையை பொறுத்த மட்டில் மாநில பதிவாளராகவும் அலுவல் வழி கரும்பு ஆணையராகவும் பணிபுரிகிறார். இவரது தலைமையின்கீழ் ஒரு மூத்த அலுவலர் சர்க்கரை இயக்குநராக பணிபுரிகிறார். கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்ட பிரிவு திருச்சியைத் தலைமையாக கொண்டு ஒரு கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் சர்க்கரை ஆணையாளரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

2. 1988-89-ம் ஆண்டில் தமிழகத்தில் மொத்தம் 25 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 12 கூட்டுறவு துறையிலும், 3 பொதுத் துறையிலும் மற்றும் 10 தனியார் துறையிலும் உள்ளன. இவ்வாலைகளின் மொத்த அரவைத் திறன் நாள் ஒன்றுக்கு 48.900 டன்கள் ஆகும். இவற்றில் கூட்டுறவு மற்றும் பொது சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் நாள் ஒன்றுக்கு 23.950 டன்கள் ஆகும்.

3. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் நிலையான அளவில் சர்க்கரை உற்பத்தி செய்து வருகின்றன. சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு இந்தியாவின் உற்பத்தியில் சுமார் 10 சத விதமாகும். இந்தியாவிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளை ஒப்பிடும்பொழுது தமிழ்நாட்டிலுள்ள ஆலைகள் தான் அதிக நாட்கள் அரவை செய்கின்றன. அகில இந்திய அளவிலும் தமிழ்நாட்டிலும் கரும்பு அரவை, சர்க்கரை உற்பத்தி, சர்க்கரை கட்டுமானம் மற்றும் அரவை நாட்கள் ஆகிய விவரங்கள் கடந்த 3 அரவை ஆண்டுகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | கரும்பு அரவை (1) | சர்க்கரை உற்பத்தி (2) | சர்க்கரை கட்டுமானம் (3) | அரவை நாட்கள் (4) |
|---|---|---|---|---|
| | (இலட்சம் | டன்களில்). | | |
| 1985-86— | | | | |
| இந்தியா | 685.76 | 70.16 | 10.23 | 116 |
| தமிழ்நாடு | 84.90 | 8.11 | 9.55 | 194 |
| 1986-87— | | | | |
| இந்தியா | 852.24 | 85.01 | 9.98 | 141 |
| தமிழ்நாடு | 85.20 | 8.14 | 9.55 | 184 |
| 1987-88— | | | | |
| இந்தியா | 939.43 | 91.10 | 9.70 | 153 |
| தமிழ்நாடு | 85.04 | 7.85 | 9.23 | 182 |

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் முழு அரவைத் திறனில் இயங்கும்போது சராசரியாக நாளொன்றுக்கு 50,000 டன்கள் கரும்பு அரவை செய்கின்றன. ஒரு மாதத்திற்கு அனைத்து சர்க்கரை ஆலைகளும் 15 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்கின்றன.

4. நடப்பு 1988-89 ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் 90 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்து 9.16 சதவிதம் சர்க்கரை கட்டுமானத்தில் 8.24 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 28—2—1989 முடிய தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் அரவை செய்துள்ள கரும்பின் அளவு, சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் ஆகிய விவரங்கள் கீழேகொடுக்கப் பட்டுள்ளது.—

| கரும்பு அரவை (இலட்சம் டன்களில்) | சர்க்கரை உற்பத்தி (இலட்சம் டன்களில்) | சர்க்கரை கட்டுமானம். (சதவிகிதத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 47.66 | 4.33 | 10.34 |

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

5. கரும்பு மகசூல்:

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் எடுக்கப்பட்டு முனைப்பான திட்டங்களின் பயனாக ஒரு ஹெக்டேருக்கு கரும்பு மகசூல் மற்றும் சர்க்கரைக் கட்டுமானம் உயர்ந்துள்ளது. கரும்பு அபிவிருத்திக்கென அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் ஆண்டுக்கு சராசரியாக ரூ. 644 இலட்சம் முதலீடு செய்வதன் மூலம் இவ்வுயர்வு ஏற்பட்டுள்ளது. இது மாநில அரசு டன் ஒன்றுக்கு கரும்புக்கு அறிவித்த விலையைவிட ரூ. 14 அதிகமாகும். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் கரும்பு மகசூல் உயர்ந்துள்ளது. இந்திய அளவில் கரும்பு மகசூல் ஹெக்டேருக்கு 60 டன்களாக உள்ளது. கரும்பு மகசூல் தமிழ்நாட்டில் 105 டன்களாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

6. கரும்பு விலை:

1988ஆம் ஆண்டுக்கு குறைந்த பட்ச கரும்பு விலையாக 8.5 சதவிகிதம் கட்டுமானத்திற்கு டன்னுக்கு ரூ. 190 என மத்திய அரசு விலை நிர்ணயம் செய்தது. பின்பு ஜனவரி 1989—ல் சட்ட பூர்வமான குறைந்தபட்ச விலையை டன்னுக்கு ரூ. 195 ஆக உயர்த்தி மத்திய அரசு ஆணையிட்டது. மத்திய அரசின் முந்தைய அறிவிப்பை ஆதாரமாகக் கொண்டு மாநில அரசு 8.5 சசதவிகிதம் சர்க்கரை கட்டுமானத்திற்கு டன்னுக்கு ரூ. 220 ஆக பரிந்துரை விலை அறிவித்தது. பின்பு மத்திய அரசு டன்னுக்கு ரூ. 5 உயர்த்தி ஆணையிட்டதை தொடர்ந்து மாநில அரசும் தனது பரிந்துரை விலையை டன்னுக்கு ரூ. 225 ஆக அறிவித்துள்ளது. இதன் மூலம் இம்மாநிலத்திலுள்ள கரும்பு விவசாயிகள் மத்திய அரசின் சராசரி விலையான டன்னுக்கு ரூ. 224·84 விட ரூ. 259.46 பரிந்துரை விலையாக பெறுவார்கள். அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கம்ப்யூட்டர் இயந்திரம் நிறுவி உள்ளதால் காலதாமதமின்றி சீரான முறையில் கரும்பு விலையை அளித்து வருகின்றன.

7. கரும்பு விவசாயிகளுக்கு லாபத் தொகை பங்கிட்டு கொடுத்தல்:

சில மாநிலங்களில் மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ விலையை விட அதிகமாகவே கரும்பு விலை கொடுக்கப்பட்ட போதிலும் அவைகள் கரும்பு விவசாயிகளுக்கு தங்கள் லாபத்தில் பங்கு கொடுப்பதில்லை. தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் தாங்கள் ஈட்டிய லாபத்திறனை கரும்பு விவசாயிகளுடன் பகிர்ந்துகொள்கின்றன. தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலையில் மொத்தம் 2,05,898 உறுப்பினர்கள் உள்ளனர். உண்மையான விவசாய ஆதரவு நிறுவனமாகத் திகழும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகள் தங்களது இலாபத் தொகையினை தமது அங்கத்தினர்களுக்கு கூடுதல் கரும்பு வழங்குவதால் ஆண்டு தோறும் இவ்வாலைகளுக்கு கரும்பு வழங்குவது உறுதி செய்யப்படுகிறது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் தங்கள் அங்கத்தினர்களுடன் பங்கிட்டுக்கொண்ட லாபத் தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண். | ஆண்டு. | ஆலைகள் எண்ணிக்கை. | கூடுதல் கரும்பு விலையாக வழங்கிய தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1984-85 | 5 | 425.76 |
| 2 | 1985-86 | 6 | 390.77 |
| 3 | 1986-87 | 9 | 555.80 |
| 4 | 1987-88 | 10 | 706.16 |

இலாபத் தொகையினை கூடுதல் கரும்பு விலையாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதால் அவர்களுடைய கரும்பினை வெல்லம் அரைக்க அனுப்புவதிலிருந்து தடுக்கப்படுகிறது. மேலும் இவ்வாறு வழங்கப்படும் தொகையில் ஒரு பகுதி ஆலைப்பகுதி அபிவிருத்தி நிதி ஆலை அபிவிருத்தி நிதி, மற்றும் திருப்பித்தரப்படாத வைப்புத்தொகை ஆகிய இனங்களுக்காக ஆலைக்கு வழங்கப்பட்டு ஆலையின் பொருளாதார நிலை மேம்பாடடைய வழி வகுப்பதுடன் ஆலைப்பகுதியில் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

8. கிராமப்புற மேம்பாடு :—

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கிராமப்புற மேம்பாட்டினை மையமாகக் கொண்டு இயங்கி வருவதால் கிராமங்களை ஆலையுடன் இணைக்கும் சாலை மேம்பாட்டு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. கரும்பு சாலை அபிவிருத்தித்

திட்டம் ஒரு கண்காணிப்பு பொறியாளரின் கீழ் திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள சாலைகளை மேம்பாடு படுத்தவும் புது சாலைகள் உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கான செலவினங்கள் ஆலைக்கு வரும் கரும்பு டன்னுக்கு ரூ. 5 விதம் கரும்பு மேல்வரியாக வசூலிக்கப்படும் தொகையிலிருந்து செலவு செய்யப் படுகிறது. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு மேல் வரியை முறைப்படி செலுத்தி விடுகின்றன. ஆனால் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு மேல்வரி வசூலிப்பதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன. தர்மபுரி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகள் மற்றும் பொது மக்களின் நன்மைக்காக 2 பாலிடெக்னிக்குகள் நிறுவி யுள்ளன. கூட்டுறவு மற்றும் பொது துறை சர்க்கரை ஆலைகள் தங்கள் பகுதியின் மேம் பாட்டுக்காக மத்திய அரசால் பராமரிக்கப்பட்டு வரும் கரும்பு அபிவிருத்தி நிதியிலிருந்து ரூ. 1001.20 இலட்சங்கள் கடனாகப் பெற்றுள்ளன.

9. புதிய ஆலைகள் :

தமிழகத்திலுள்ள 25 சர்க்கரை ஆலைகளும் நாளொன்றுக்கு 48,900 டன்கள் அரவைத் திறனைக் கொண்டுள்ளன. கரும்பு அபிவிருத்தி கொள்கை, திட்டமிடுதல், இலாபத் தொகையை விவசாயிகளுடன் பங்கிட்டு கொள்ளுதல் ஆகிய பணிகளின் காரண மாக இம்மாநிலத்தில் கரும்பு உற்பத்தியில் நிலையான வளர்ச்சி காணப்படுகிறது. கரும்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் மேலும் சர்க்கரை ஆலைகள் நிறுவ அரசு நட வடிக்கை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசு, இம் மாநிலத்தில் நான்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் ஐந்து தனியார் துறை சர்க்கரை ஆலைகளுக்கும் ஆக மொத்தம் 9 சர்க்கரை ஆலைகள் நிறுவ அனுமதி வழங்கியுள்ளது. இவை ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 2,500 டன்கள் அறவைத்திறன் கொண்டவையாக இருக்கும். மேலும் தற்போது இயங்கிவரும் ஆலைகளின் 13 ஆலைகளுக்கு விரிவாக்கம் செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் 8 ஆலைகள் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளாகும். விரிவாக்கம் செய்ய ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது. புதிய சர்க்கரை ஆலைகள் மற்றும் விஸ்தரிப்பு ஆலைகள் உற்பத்தி தொடங்கும்போது தமிழகத்திலுள்ள ஆலைகளின் மொத்த அரவைத் திறன் 86,900 டன்களாக உயரும்.

10. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி திட்டம் (கோஜெனரேஷன்) :

புதிதாக நிறுவப்படும் சிதம்பரம் மற்றும் செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் சோதனை அடிப்படையில் சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி திட்டத் தினைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உயர் அழுத்த கொதிகலன் களை நிறுவி தற்போது கிடைக்கும் அளவு கரும்பு சக்கையைப் பயன்படுத்தி மின் உற் பத்தி செய்து அதிகப்படியாக கிடைக்கும் மின்சாரம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்கப்படும். இத்திட்டம் நிறுவப்பட்டால் சர்க்கரைத் தொழிலில் ஆசியாவில் குறிப் பாக கூட்டுறவுத் துறையிலேயே முதன்மையாகும். இதன் மொத்த செலவுத் தொகை ஒவ்வொன்றிற்கும் ரூ. 484 இலட்சங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசும் மாநில அரசும் தலா ரூ. 97 இலட்சம் மானியமாக வழங்கும். மேலும் ஆண்டு ஒன்றுக்கு பராமரிப்பு மானியமாக ரூ. 52.80 லட்சம் 6 ஆண்டுகளுக்கு வழங்குவது, மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது. உபரியாக உற்பத்தி செய்யப்படும் சுமார் 165 இலட்சம் யூனிட் மின்சாரத்தினை பொது விநியோகத்திற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் வாங் கிக் கொள்ளும்.

11. வேலைவாய்ப்பு :

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் நேரடியாக 13,960 நபர் களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளன. புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவுவதால் வேலை வாய்ப்பு மேலும் உயரும்.

## மின்னியல்—மின்னணுவியல் பிரிவு.

தொழில் வணிக இயக்குநரகம் மின்னணு தொழில்களுக்கென தனியாக தொழிற் பேட்டை ஆரம்பித்து ஊக்கமளித்ததின் விளைவாக 1976-ம் ஆண்டின் இறுதியில் தொலைக்காட்சிபெட்டி, மோட்டார், வானொலிப்பெட்டி, பதிவு நாடா ஒலிப்பான் செயல்முறை கட்டுப்பாடு கருவிகள், மருத்துவ மற்றும் பரிசோதனை சாலை கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் போன்ற சிறுதொழில்கள் 156 இருந்தன. 1988-ம் ஆண்டில் இத்துறையில் பதிவு பெற்ற மின்னணு பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் மொத்த தயாரிப்பு ரூபாய் 486 கோடியாகும்.

அடிப்படை வசதிகள் :—

(1) தொழிற்பேட்டைகள்.— மின்சாரம், மின்னணு மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கென தனியாக தொழிற்பேட்டைகள் 7 அமைக்கப்பட்டது. டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற்பேட்டையில் 104 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வழங்கப்பட்டன. மேலும் பெருங்குடியில் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் அடங்கிய தொழிற்பேட்டை 106 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டு 174 மனைகள் தொழில்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றில் தொழிற்சாலைகளின் உற்பத்தி படிப்படியாக தொடங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதிய மின்னணு தொழில் துவங்க மக்களிடையே ஆர்வமிருப்பதாலும் தொழிற்கூடங்களின் தேவை அதிகமாயிருப்பதாலும் சென்னையைச் சுற்றி காக்கனூர் மற்றும் ஓசூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 5 இடங்களிலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு அவைகளில் அரசாங்கத்தாரால் 34 தொழிற்கூடங்களும் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளில் சொந்தக்காரர்களால் 40 தொழிற்கூடங்களும் நிறுவப்பட்டுள்ளன. இந்த தொழிற்பேட்டைகளில் இயங்கும் தொழிற்கூடங்கள் 5,000-க்கும் அதிகமாக ஆட்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. மின்சாரம் மற்றும் மின்னணு தொழிற்பேட்டையின் விவரங்கள்.

| எண். | இடம். | | தொழிற் கூடங்கள்: திட்டமிடப் பட்டன. | தொழிற் கூடங்கள்: கட்டப் பட்டவை. | தொழிற் கூடங்கள்: உடைமை ஆக்கப் பட்டவை. | மனைகள்: திட்டமிடப் பட்டவை. | மனைகள்: அபிவிருத்தி செய்யப் பட்டவை. | உடைமை யாக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | டாக்டர் விக்கரம் சாராபாய் தொழிற் பேட்டை, சென்னை-41. | | 104 | 104 | 104 | — | — | — |
| 2. | பெருங்குடி, சென்னை-96 | | | | | 174 | 174 | 174 |
| 3. | காக்கனூர் | — | 20 | 14 | 13 | 44 | 44 | 21 |
| 4. | ஓசூர் | — | 12 | 12 | 12 | 22 | 20 | 20 |
| 5. | திருச்சி | — | 12 | 8 | 8 | 65 | 65 | 40 |
| 6. | மதுரை | — | — | | — | 104 | 101 | 41 |
| 7. | கோயம்புத்தூர் | | | | — | 24 | 24 | 24 |

துவங்கப்படவிருக்கும் தொழிற்பேட்டைகள் :

சேலம்.—கட்டுமானப்பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. 51 மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 20 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

வேலூர்.—நிலம் தேர்ந்தெடுக்கும் பணி நடந்து வருகிறது.

சோதனை மற்றும் வளர்ச்சி வசதிகள் :

தமிழ்நாட்டிலுள்ள மின்சாரம் மற்றும் மின்னணு தொழில்களுக்கு மத்திய மின்பொருள் சோதனைச்சாலை, காக்கனூர் மற்றும் மின்னணு சோதனை மற்றும் வளர்ச்சி மையம், அடையாறு ஆகிய மையங்களில் பலவிதமான சோதனைகள் மற்றும் பொருள் வளர்ச்சி வசதிகளை செய்து வருகின்றன. இதைத்தவிர மின்னணு சோதனை மற்றும் வளர்ச்சி மையம், சுற்றுப்புற சூழல் பரிசோதனையும், இதய மின் அலை வரைபட கருவி மூளை அலைவரைப்பட கருவி, அறுவை சிகிச்சை கருவி, இருதய வேலையை சீராக்கு கருவி, ஒலி அலை குழந்தை வளர்ச்சிப் படம் காட்டும் கருவி மற்றும் மருத்துவ இராசயம் சோதனைச்சாலை கருவிகள் ஆகிய உயிர் காக்கும் கருவிகள் சோதனை மற்றும் பழுது பார்க்கும் பணிகளையும் செய்து வருகின்றன.

மத்தியமின் பொருள், சோதனைசாலை, காக்கனூர் ஆனது இயந்திர நிர்ணய செயலகம் வழங்கு பொருள் மற்றும் தீர்வு இயக்குநரகம் இரயில்வே அமைச்சகம் ஆகிய நிறுவனங்களின் இந்திய தர நிர்ணய குறிப்பீட்டின் கீழ் வரும் மின்சார பொருள்களை பரிசோதனை செய்வதற்கும். அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த ஆய்வகம் அரசாங்க துறைகளுக்கு மின்சாரம் பொருட்கள் வாங்கும் விவகாரத்தில் தரநிர்ணயம், ஆலோசனை வழங்குவதற்கும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. இச்சோதனை மையத்தின் 1987—88ம் ஆண்டின் செயல் முறைத் திட்டம் பின்வருமாறு :

பயனடைந்தோர் எண்ணிக்கை—3,678

வசூலிக்கப்பட்ட சோதனைக் கட்டணம்—ரூ. 3,66,845.

மின் அழுத்த உபகரணம் ( Volt Meters ) மின்வோட்ட உபகரணம் ( Ammeters ) மின் ஆற்றல் அளிக்கும் உபகரணம் ( Watt Meters ) ஆகிய கருவிகளை ஒப்பிட்டு பார்த்தலும் மற்றும் முன்மாதிரிக் கருவிகளின் ( Proto-Type ) போன்ற வளர்ச்சி வசதிகளையும் இந்திய தர நிர்ணய குறியீடுகள் ஆங்கில குறியீடுகள் போன்ற குறியீடு களின்படி சுற்றுப்புற சூழல் சோதனைகளையும் அடையாறில் உள்ள மின்னணு சோதனை மற்றும் வளர்ச்சி நிலையம் செய்து வருகிறது. மேலும் இந்நிலையம் தமிழகத்தில் உள்ள பல்வேறு மருத்துவ மனைகளின் உயிர் காக்கும் கருவிகளை பழுது நீங்கி சரி பார்க்கும் வேலையும் செய்து வருகிறது.

ஓசூரிலும், மதுரையிலும் உள்ள மையங்களில் அடிப்படை அளவு பார்த்தல் மற்றும் சோதனை வசதிகள் உள்ளன.

மின் மருத்துவக் கருவிகள் சேவை நிலையம் :

இந்த துறை மருத்துவ மின் கருவிகளை சரிபார்க்கும் நிலையங்களை கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூரிலும் நிறுவியுள்ளது. இந்த மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளையும் அதனைச் சுற்றியுள்ள மருத்துவ நிலையத்திலும் உள்ள மின் மருத்துவ கருவிகளை சோதனை செய்யவும் பழுது பார்க்கவும் உபயோகப் படும் சில நுண்ணிய கருவிகள் இந்த ஆய்வகத்தில் உள்ளன. இந்த நிலையங்கள் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மருத்துவ மனைகளில் உள்ள மருத்துவ மின் அணு கருவிகளைப் பழுது பார்க்கும் வேலைகளை செய்து வருகின்றன.

1988—89-ஆம் ஆண்டில் இந்த நிலையங்கள் பழுது பார்த்த கருவிகளின் எண்ணிக்கையும் அதன் தொகையும் :

| நிலையங்கள் (1) | பழுது பார்த்த கருவிகள் எண்ணிக்கை. (2) | தொகை ரூ. (3) |
|---|---|---|
| **மருத்துவ மின்னணு கருவிகள் நிலையம் :** | | |
| மருத்துவ மின்னணு கருவிகள் நிலையம், கிண்டி | | |
| கிண்டி | 870 | 4,17,523 |
| தஞ்சாவூர் | 875 | 3,35,000 |
| மதுரை | 710 | 1,26,597 |
| கோயம்புத்தூர் | 1,264 | 4,50,100 |

## தொழில் மற்றும் வணிகம்

தொழில்கள் நிலைத்து வளர்வதற்குரிய வளர்ச்சி நடவடிக்கைகளை தொழில் வணிக இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. இவற்றுள் பின்வருபவை அடங்கும்,

சிறு தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் பதிவு செய்தல் : தொழில் கூட்டுறவு சங்கங்களை அமைத்தல், மூலப் பொருள்களையும் இயந்திர சாதனங்களையும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள இன்றியமையாத் தேவைச் சான்றிதழ் களை வழங்குவது, மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கு தொழிற்பேட்டைகள் வடிவில் அடிப்படை வசதிகள் அளிப்பது, தரப்பரிசோதனை வசதி அளிப்பது ; தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவது ; இயந்திர சாதனங்கள் தவணைக் கொள்முதல் முறை யில் வாங்கும் பொருட்டு தொழில் உரிமங்களுக்கு பரிந்துரைகள் செய்தல் மற்றும் உற்பத்திப் பொருட்கள் வழங்குபவர்களாக பதிவு செய்தல் ;கயிறுதொழில் அபிவிருத்தி மற்றும் பொருளாதார ஆய்வு முதற்கொண்டு புள்ளி விவரங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகளையும் கவனித்து வருகிறது. மேலும் சிறு தொழில்கள், சின்னஞ்சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் படித்து வேலையற்ற இளைஞர்கள் வங்கி களிடமிருந்து நிதியுதவி பெற்று சுலபமாகத் தொழில் நடத்துவதற்கு உதவியளிக்கிறது. தொழில் முனைவர் பயிற்சித் திட்டங்களை நடத்துகிறது. கிராம கைவினைஞர் களுக்கு அவர்கள் பல்வேறு தொழில்களில் நிலைத்து இருக்கும் பொருட்டு பல்வேறு தொழில் துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டத் தொழில் மையங்களின் வாயிலாக வட்டியில்லா விற்பனை வரிக்கடன், 15 சதவீதம் மூலதன உதவித் தொகை, வட்டி உதவித் தொகை, சிறு தொழில் சான்றிதழ் பெற்றுள்ள சிறுதொழில் நிலையங் களுக்கு இயந்திரத் தர நிர்ணய நிறுவனத்தின் உதவித் தொகை பெற்றுத்தருவது,

நலிந்துள்ள தொழில்களுக்கு புத்துயிரூட்டுதல், தேசிய பரிசுகள் பெறும் பொருட்டு தகுதி வாய்ந்த சிறு தொழில் நிலையங்களைக் கண்டறிந்து பரிந்துரை செய்தல் ஆகிய வற்றில் இத்தொழில் வணிக இயக்ககம், நற்பயன் அளிக்கும் வகையில் ஈடுபட்டுள்ளது.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்குரிய சுய வேலை வாய்ப்புத் திட்டம் :

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டு, மைய அரசின் இத்திட்டம் மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1988—89 ஆம் ஆண்டில் (சனவரி, 1989 வரையில்) 4,598.14 இலட்சம் கடன் வழங்குவதற்கு 24,216 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப் பட்டன. பரிந்துரை செய்யப்பட்ட 24,216 விண்ணப்பங்களில் 31—1—1989 முடிய 4,606 நபர்களுக்கு ரூபாய் 797.68 இலட்சத்தை வங்கிகள் கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளன. 31—1—1989 வரை சுய வேலை வாய்ப்பு நிறுவனங்கள் தொடங்கும் பொருட்டு வங்கிகளால் 2,326 பேருக்கு ரூ. 396.34 இலட்சம் பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

சிறுதொழில் பிரிவு :

31—3—1989ல் மாநிலத்தில் 1,00,300 நிரந்தர (சான்றிதழ் பெற்ற) சிறு தொழில்கள் செயல்பட்டு வந்தன. இத்தொழில்கள் சுமார் 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளன. 1888—89ல் 12,000 நிரந்தர சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற இலக்கோடு ஒப்பிடுகையில் 1989 சனவரி வரை 9,631 சிறு தொழில் நிலையங்கள் நிரந்தரப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

கைத்தறித் தொழில்கள் மற்றும் கிராம கைவினைஞர்கள் மேம்பாடு :

கைவினைஞர்கள் மற்றும் கைத்திறனாளர்களைக் கண்டறியும் பொருட்டும், அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கும், கைத்திறத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டு அதற்கான சான்றிதழ்களும் தரப்படுகின்றன. 1988—89 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 7,000. 5,047 கைத்தறித் தொழில்கள் 31—1—1889 வரையில் பதிவு செய்யப்பட்டன.

கிராம கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ் நவீன கருவிகளையும், தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துவதில் கிராமக் கைவினைஞர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து, அவர்களது வருவாயை உயர்த்திக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பயிற்சியின் போது உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. அவர்கள் சொந்தமாகவே சிறு தொழில்களை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வழிவகுக்கும் போக்குடன் தொழில் கூடங்களை கட்டுவதற்கும், இயந்தர சாதனங்கள் பெறவும் அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1988—89ம் ஆண்டில் (31—1—1989 வரை) 1,620 பேருக்கு ரூ. 8.97 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒரே கூரை அமைப்பு.—மின் இணைப்பு உள்ளாட்சி அனுமதி போன்ற பல்வேறு அனுமதிகளைப் பெறுவதில் உள்ள தாமதங்கள் பற்றி தொழில் முனைவர்களிடமிருந்து பெறப்படுகின்ற கோரிக்கைகளின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 1988—89-ஆம் ஆண்டில் 31—1—1989 வரை பெறப்பட்ட 2,311 கோரிக்கைகளில் 1848-க்கு தீர்வு காணப்பட்டன. எஞ்சியவை சம்பந்தப்பட்ட துறைகளுடன் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கிராமத் தொழில் திட்டக் கடன்கள் :

கிராமப்பகுதிகளில் அமைக்கப்படும் சிறுதொழில் நிலையங்களுக்கு 6½ சதவீத எளிய வட்டி வீதத்தில், ரூ. 25,000 வரை ஆரம்ப கால நிதியுதவியாக (விதைப்பணம்) தொழில் முனைவர்களுக்கு அளிக்கப்படுகிறது. 1977—89-ல் 31—1—1989 வரை 174 சிறு தொழில் நிலையங்களுக்கு ரூ. 45.54 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நலிந்துள்ள சிறு தொழில்களுக்கு புத்துயிரூட்டுதல் :

நலிந்துள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு மறு வாழ்வு அளிப்பதும் மாவட்டத் தொழில் மையங்களால் கவனிக்கப்படுகிறது. தொழிலதிபரது பங்காக செலுத்தப் படக்கூடிய உதவித் தொகையாக 27 தொழில் நிலையங்களுக்கு ரூ. 5.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் முதலீடு உதவித் தொகை :

குறிப்பிட்ட பின் தங்கிய வட்டங்களில் அமைந்துள்ள தொழில்களுக்கு நிலையான சொத்துக்களின் மதிப்பில் 15 சதவீதம் அதிகப்படியாக ரூ. 15 இலட்சம் வரை உதவித் தொகை அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட இடங்களில் அமைந்துள்ள மின்னணுவியல்

தொழில்கள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களுக்கு 10 சதவீதம் சிறப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1988—89-இல் (சனவரி இறுதி வரை) சிறு தொழில் நிலையங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 48.58 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

**மின் கட்டண உதவித் தொகை :**

1988—89-ஆம் ஆண்டில் (சனவரி இறுதி வரை) சிறு தொழில் நிலையங்களுக்கு மின் கட்டண உதவித் தொகையாக ரூ. 19.58 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ் 1988—89-ல் 3—1—1989 வரை வட்டியில்லா விற்பனை வரிக் கடன் ரூ. 84.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் :**

தமிழ்நாட்டில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பணி சிறப்புற அமைந்துள்ளது. இவை கிராம மக்களுக்கும் கைவினைஞர்களுக்கும் குறிப்பாக தேயிலை, சவ்வரிசி மற்றும் மாவு, தீப்பெட்டி, தோல் மற்றும் கயிறுத் தொழில்களில் பயனுள்ள வேலை வாய்ப்பை அளிக்கின்றன. 31—12—1988-ல் 459 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 5,946.20 இலட்சம், ரூ. 7,288.20 இலட்சம் ஆகும். இச்சங்கங்கள் 95,230 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன.

தமிழ்நாடு மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கி, மாநிலத்திலுள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. தற்பொழுது இந்த வங்கியில் 497 நிறுவன உறுப்பினர்கள் (தொழிற் கூட்டுறவு சங்கங்கள்) உள்ளனர். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 299.57 இலட்சமாகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ. 193.30 இலட்சம். இவ்வங்கி 31—12—1988ல் ரூ. 575.38 இலட்சம் அளவுக்கு வைப்புத் தொகையாக உயர்த்தியுள்ளது. இவ்வங்கியில் முன் ஒதுக்கீடு (ரிசர்வ்) தொகை ரூ. 253.40 ஆகும்.

**இரசாயனப் பிரிவு :**

இப்பிரிவு, தொழில் திட்ட ஆலோசனை முதல் தரக் கட்டுப்பாடு வசதிகள் வரையிலான பல பணிகளை செய்து வருகிறது.

1988—89-ஆம் ஆண்டில் (சனவரி இறுதிவரை) கிண்டியிலுள்ள இரசாயனப் பரிசோதனைக் கூடம், மதுரை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள வட்டார ஆய்வுக் கூடங்கள், தூத்துக்குடியிலுள்ள மாநில உப்பு ஆராய்ச்சி நிலையம், சேலத்திலுள்ள சவ்வரிசி ஆய்வுக் கூடம் ஆகியவற்றில் 11.075 மாதிரிப் பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டன. இரசாயனத் தொழில் தகவல் களஞ்சியம் 752 பேருக்கு தொழில் நுட்ப ஆலோசனைகளையும், 592 திட்டத் தொகுப்புகளையும் வழங்கியுள்ளது. திட்டத் தொகுப்புகள் தொடர்ந்து மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவோடு இணைக்கப்பட்டுள்ள நூலகங்களில் நல்ல நூல்களும் இதர வெளியீடுகளும் உள்ளன. இந்நூலகங்கள், தேவையான தகவல் உதவிகளை அளிக்கின்றன.

இப்பிரிவு, பாரபின் மெழுகு, கந்தகம், உளக்கள எண்ணெய், வீரியமற்ற சாராயம், முதலியன தொழிலியல் மூலப் பொருள் சிறு தொழில் நிலையங்களுக்கு கிடைப்பதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தேவையான பரிந்துரைகளைச் செய்கிறது. 1988—89-ல் 438 சிறு தொழில் நிலையங்களுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலத்திலுள்ள மட்பாண்டத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், தொடர்ந்து மட்பாண்டத் தொழில் நுட்பத் தகுதிப் பட்டயபடிப்பில் 100 பேருக்கு பயிற்சி அளித்து வருகிறது.

கிண்டியிலுள்ள விஞ்ஞானக் கண்ணாடிப் பயிற்சி நிலையத்தில், விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதில் உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இப்பயிற்சி நிலையத்தில் 36 தொகுதி கொண்ட மாணவர்களுக்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 20 மாணவர்கள், வீதம் பயிற்சி அளிக்கப்பட்டது. 1988—89-ல் 37-வது தொகுதியில் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

உப்புத் தொழில்களை அமைப்பதற்கு தொழில் முனைவர்களை இந்த இயக்ககத்தின் உப்புப் பிரிவு ஊக்குவித்து வருகிறது. 1989-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சிறிய அளவில் உப்புத் தயாரிப்பாளர்கள் சுமார் 25 பேருக்கு விஞ்ஞான ரீதியில் உப்புத் தயாரிப்பதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**மின் மற்றும் மின்னணுப் பிரிவு :**

மின் மற்றும் மின்னணுத் தொழில்களில் வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக சாத்தியக் கூறு வசதிகளை ஏற்படுத்தல், திட்டத் தொகுப்புகள் தயாரிப்பதில் உதவி யளிப்பது. மின்னணுச் சாதனங்களுக்குத் தேவையான பரிசோதனை வசதிகள் அளித்தல் முதலிய செயல்களை இத்துறை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

மின்சாரம், மின்னணு மற்றும் மின்னும் கருவிகளுக்கென, தனித் தொழிற் பேட்டைகள் சென்னை, ஓசூர், திருச்சிராப்பள்ளி, காக்கனூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. தொழில் முனைவர் களுக்கு 138 தொழில் கூடங்களும் 241 செப்பனிட்ட மனைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. சேலம் மற்றும் நந்தம்பாக்கத்தில் இரு தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. துவக்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

1988–89-இல் (28—2—1989 வரை) மின்சாரம் மற்றும் மின்னணு பரிசோதனை நிலையங்களில் 5,253 மாதிரிப் பொருள்கள் பரிசோதனை செய்யப்பட்டன. மின்னணு தகவல் களஞ்சியத்திற்கு மாதமொன்றுக்கு சராசரி 160 தொழில் முனைவர்கள் தகவல் கோரி வருகின்றனர். இத்தகவல் களஞ்சியத் திட்டத் தொகுப்பு விற்பனை மற்றும் புகைப்பட படி எடுத்தல் ( Photo Copies ) ஆகியவற்றில் 5,777.00 கட்டணமாக வசூலித்துள்ளது. மின்னணுப் பொருட்களை தயாரிக்கும் தொழில் நிலையங்களுக்கு உதிரி பாகங்களை வழங்குவதற்கென கூட்டுறவுச் சேவை அடிப்படையில் அடையாற்றில் மின்னணு மூலப் பொருள் விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## மாநில புவியியல் மற்றும் சுரங்கம்.

**முன்னுரை :**

புவியியல் மற்றும் சுரங்கங்களை மாநிலத்தில் காணப்படும் கனிம அமைப்பு களைக் கண்டறிந்து கனிமம் சார்ந்த தொழில்கள் அமைதலுக்கு முக்கிய அமைப் பாகவும் உள்ளது. இத்துடன் பெரிய மற்றும் சிறிய வகைக் கனிமங்களை வெட்டியெடுத்தலை அறிவியல் மற்றும் முறையான வழிகளில் மேற்கொள்வதை முறைப்படுத்துதல், அவைகளை தேவைக்கென பயன்படுத்துதல் மற்றும் வருங்காலத் தொழில் தேவைக்கென பாதுகாத்து வைத்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டுள்ளது.

**செயற்பாடு :**

இத்துறையில் கனிம அமைப்புகளைக் கண்டறிய களப்பணி ஆய்வுகளைத் திட்ட மிட்டு செயற்படுத்தவும் மற்றும் சுரங்கப் பணிகளை முறைப்படுத்தலுக்கெனவும் கனிம ஆய்வுப்பணி பிரிவும், கனித நிர்வாகப் பிரிவும் அமைந்துள்ளது. கனிம ஆய்வுப் பிரிவில் ஆண்டிற்கு 15 முதல் 17 ஆய்வுப் பணிகள் திட்ட வகை மற்றும் திட்டம் சாராத வகைப்பணிகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் 3 அல்லது 4 துறப்பணி ஆய்வுகளும் அடங்கும். கனிம நிர்வாகப் பிரிவில் பெரிய மற்றும் சிறிய வகைக் கனிமங்களுக்காக கனிம சலுகைகளை வழங்குதலில் அரசுக்கு தொழில் நுட்ப பரிந்துரை வழங்குதல் மற்றும் சிறந்த கனிம கொள்கைகளை செயற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையின்கீழ் 17 மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கனிம சலுகைக்கென மனுச் செய்துள்ள தளங்களை ஆய்வு செய்து தொழிற் நுட்ப அறிக்கை அளித்தல், அனுமதிச் சீட்டுகள் வழங்குவதற்கென கனிம இருப்புகளைக் கணக்கிடுதல், முறையான சுரங்க மேற் பார்வை, கனிம உற்பத்தியில் குத்தகைதாரரின் கணக்குகளை ஆய்வு செய்தல், ஆண்டு அறிக்கைகள் தயாரித்தல், கனிம உரிம வரி கணக்கீடு மற்றும் சேகரித்தல், சிறுவகைக் கனிமங்களுக்கென உரிம வரி, குத்தகைத் தொகை சேகரித்தல் போன்ற பணிகளில் மாவட்ட அலுவலகங்கள் ஈடுபட்டுள்ளன.

4. பணி முன்னேற்றம் :

(அ) செயல் இலக்கு—

| | இலக்கு | சாதனை | |
|---|---|---|---|
| 1. கனிம ஆய்வுகள் .. | 17 | 16 | |
| 2. சோதனைக்கூட மாதிரிகள் .. | 1,800 | 1,300 | |
| 3. கனிம வருவாய் (ரூபாய் இலட்சங்களில்) | 700 | 569 | (டிசம்பர் 1988 முடிய) |
| 4. கனிம நிர்வாகம் (கனிம மனுக்கள் பரிசீலிக்கப்பட்ட எண்.) | 25 | 50 | |

| (ஆ) நிதி இலக்குகள் திட்டங்கள்— | 1988–89 நிதி மதிப்பீடு. | மறுமதிப்பீடு 1988–89. | 31–3–1989 முடிய செலவினத் தகவல். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| திட்டம் சாராத வகை .. | 53.98 | 59.48 | 62.81 |
| திட்டம் சார்ந்தவகை | 40.68 | 48.31 | 62.20 |
| மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் .. | 4.00 | 3.58 | 3.81 |
| மொத்தம் | 98.66 | 111.37 | 128.82 |

(ஆ) கனிம ஆய்வுகள் :

1. திட்டவகை ஆய்வுப் பணிகள்—

(அ) தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், மகராசகடை மற்றும் நாரளப் பள்ளி காப்புக்காட்டுப் பகுதிகளில் தங்கம் கிடைப்பது பற்றி அறிய விரிவான ஆய்வு.

மகராசகடைப் பகுதியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பகுதிகளின் மூலம் 0.1 மீட்டர் முதல் 2.3 மீட்டர் அகலத்திற்கு ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற நான்கு தங்கம் கொண்ட கனிம அமைப்பு பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு ஒரு டன் பாறை எடை அளவில் 1 கிராம் முதல் 3.5 கிராம் தங்கத்தாது சத்து உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் நீள் வகை சோதனைக் குழிக ளிட்டு பாறை மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் பணி முன்னேறிவருகிறது. 100 பாறை மாதிரிகளும், 300 மண் மாதிரிகளும் சேகரிக்கப்பட்டு தங்கம் மற்றும் பிற மூலங்களின் நுண் அளவு கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் சுரங்கக் குத்தகையற்ற பகுதியில் பழுப்பு நிலக்கரிக்கென விரிவான ஆய்வு.—தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் மற்றும் காட்டுமன்னார்குடி வட்டங்களில் சுமார் 30 ச.கி. பரப்பில் பழுப்பு நிலக் கரிக்கென விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இங்கு திட்டமிடப்பட்ட 30 துறப்பணத் துளைகளில் 18 துளைகள் முடிக்கப்பட்டுள்ளது. அவைகளின் மொத்த ஆழ அளவு 1620 மீட்டர்களாகும். இத்துறப்பணித்துறைகளின் மூலம் இங்கு காணப்படும் பழுப்பு நிலக்கரியின் அளவு 9 முதல் 12.5 மீ. எனவும் மேல் மணல் பொதியளவு 47 மீ. முதல் 70 மீ. எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. 100 பழுப்பு நிலக்கரி மாதிரிகள் சேகரிக்கப் பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளது.

(இ) திருச்சிராப்பள்ளி மற்றும் பெரியார் மாவட்டங்களில் மணிக்கற்கள் மற் றும் குறை மணிக்கற்களுக்கான விரிவான ஆய்வு.—பெரியார் மாவட்டம் சின்ன தாராபுரம்—காங்கேயம் பகுதிகளிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் வட்டம் மணவாடியிலும் மணிக்கற்கள் மற்றும் குறை மணிக்கற்களுக்கென விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 1 செ.மீ. 500 மீ. அளவையில் 25 ச.கி.மீ. பரப் பிலும், 1 செ.மீ. 250 கி.மீ. அளவையில் 5 ச.கி.மீ. பரப்பிலும் முறையான புவியி ல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சரியான சதுர இடைவெளியில் 0.3 முதல் 1.85 மீ. ஆழ வேறுபாடுகள் உள்ள 32 சோதனைக் குழிகளிடப்பட்டன. சின்னதாராபுரம் பகுதியில் 7 முதல் 8 காரட் எடையுள்ள சபையர் (நீலம்) குறை மணிக்கல் கிடைக்கப்பெற்றது.

மணவாடி பகுதியில் 0.2 ச.கி. பரப்பில் 55 ஆழம் குறைவான சோதனைக் குழிகளிடப்பட்டு குறைமணிக்கல் வகை ரூபி (சிஸ்டி) கார்னட் வகையுடன் காணப் படுவது அறியப்பட்டது. பெரியார் மாவட்டத்தில் காணப்படும் மூன்ஸ்டோன் வகை கற்களுக்கென ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(ஈ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணிக்கற்கள் சேகரிப்பு மையம் அமைத் தல்.—கரூரில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கற்கள் சேகரிப்பு மையம், கரூர்-காங் கேயம் பகுதியில் மணிக்கற்கள் மற்றும் குறை மணிக்கற்கள் சேகரிப்பு மற்றும் அவைகளின் விற்பனை முறைகளை கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூர் மற்றும் குளித்தலை வட்டங்களில் ரூபி, அக்ராமணான், மூன்ஸ்டோன் மற்றும் அடுலோரியா போன்ற மணிக்கற்கள் சேகரிக்கப்படும் 7 சிறந்த பகுதிகள் கண்டறியப்பட்டன. மணிக்கற்கள் பட்டை தீட்டப்படும் இடங்களுக்குச் சென்று அவைகள் பட்டை தீட்டும் முறைகள் அறியப் பட்டன. மணிக்கற்கள் மற்றும் குறைமணிக்கற்கள் சோதனை செய்து மதிப்பிட்டு, சான்றிதழ் வழங்க இங்கு ஒரு மணிக்கற்களியல் சோதனைக்கூடம் அமைக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

(ட) புவிபௌதீக மற்றும் புவி இரசாயன பிரிவுகளை சிறப்பாக அமைத்தல்.—புவிபௌதீக பிரிவினை மேலும் சிறப்பாக்க கனடா நாட்டிலிருந்து ரூ. 8 இலட்சங்கள் மதிப்புள்ள உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இன்டியூஸ்ட் போலரிசேஷன் மற்றும் மேக்னடோமீட்டர், புவி இரசாயன மாதிரிகள் நுண்மூலகங்களை கண்டறிய ரூ. 5.1 இலட்சங்கள் மதிப்புள்ள கிராபைட் உலையுடனும் கணிப்பொறி அமைப்புடனும் அப்சார்ப்பன் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஊ) புவிநுட்பவியல் ஆய்வுகள் (மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம்).—குன்னூரில் அமைந்துள்ள புவிநுட்பவியல் அமைப்பு நீலகிரி மாவட்டத்தில் திட்டப் பகுதிக்குட்பட்ட 1340 ச.கி. பரப்பில் நிலச்சரிவுகளையும் நிலச்சரிவுகளுக்கு உட்படக்கூடிய பகுதிகளையும் ஆய்வு செய்கின்றது. புவியியல், வடிகால் அமைப்பு மற்றும் நிலச்சாய்வு வட்டம் பற்றிய வரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்துடன் பாறை அமைப்பு, நிப்பயன், புவிஅமைப்பியல் மற்றும் புவி இயற்குழலியல் போன்றவகையில் வரைப்படங்கள் தயாரிக்கப்படும் பணி முன்னேறிவருகிறது. நிலச்சரிவிற்கு உட்படக்கூடிய பகுதிகளில் காணப்படும் நிலச்சார்வு பகுதிகளில் புவிநுட்பவியல் உபகரணங்களான பீசோமீட்டர் மற்றும் நாடாவகை எக்ஸ்டன்சோமீட்டர் போன்றவை நிறுவப்பட்டுள்ளன. நிலச்சரிவு கண்கோட்டத்தில் பிறதுறைகளிலிருந்து பெறப்படும் வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

## அத்தியாயம் 16.

### செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை.

வளர்ச்சி பெற்று வரும் ஒரு நாட்டில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்ய வேண்டும் என்ற அரசின் முயற்சியில் ஒருங்கிணைந்ததோர் பகுதியாக சமூகக் கல்வியும் மக்களின் பங்கேற்பும் அமைகின்றன. இந்த வகையில்தான் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பணி முக்கியத்துவம் பெறுகிறது. அரசின் கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் விளக்கிச் சொல்வதோடு மட்டும் அதன் பணி நின்று விடுவதில்லை. மக்களாட்சியின் அடித்தளத்தையும் சமூக இலட்சியங்களையும் வலுப்படுத்துவதும் அதன் பணியாக அமைகின்றது. மக்கள் தொடர்பு செய்தி அறிவிப்புச் சாதனங்கள் மூலம் இந்தத்துறை செயலாற்றுகிறது. எல்லா வகையான மக்கள் தொடர்பு செய்தி அறிவிப்புச் சாதனங்களை இந்தத் துறை பயன்படுத்தி அரசின் கொள்கை மற்றும் திட்டப் பணிகளை மக்களுக்கு அறிவிக்கிறது. அதே நேரத்தில் மரபு வழியான மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமும், உள்ளூர் மக்களின் ஆற்றலையும் பயன்படுத்திக் கொள்கிறது. எல்லா வசதி வாய்ப்புகளையும் ஒருங்கிணைத்து மக்கள் தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்தி, மக்களுக்குச் செய்திகள் சொல்லி, கல்வி அறிவு ஊட்டி, விளக்கமளித்து மகிழ்ச்சியூட்டி அரசின் வளர்ச்சிப் பணிகளில் மக்கள் தொடர்ந்து பங்கேற்று வருமாறு செய்து வருகிறது.

இத்துறை 1988–89 ஆம் ஆண்டில் ஆற்றிய பணி விபரங்கள் பின்வருமாறு :—

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்.—21 மாவட்டங்களிலும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். வளர்ச்சிப் பணிகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பணியில் அவர்கள் தொலைக் காட்சி, வானொலி ஆகிய இரண்டு சிறப்பு வாய்ந்த மக்கள் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்துவதுடன் பிற மக்கள் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தி வருகின்றனர். திரைப்படக் காட்சிகளையும் விடியோ படக்காட்சிகளையும் ஏற்பாடு செய்வதுடன் பிற கலாச்சார நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றனர்.

சிறு சேமிப்பு, தீண்டாமை ஒழிப்பு, குடும்ப நலத்திட்டம், முதலமைச்சரின் மதிய உணவு சத்துணவுத் திட்டம் முதலிய சிறப்புமிக்க திட்டங்களை மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு வில்லுப்பாட்டு, நாடகங்கள் பொதுக் கூட்டங்கள் சிறு அளவிலான பொருட்காட்சிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்கின்றனர். இந்த கலாச்சார நிகழ்ச்சிகள் மூலம் திரைப்படக் காட்சிகள் விடியோ படக்காட்சிகள் மூலமும் அரசின் திட்டங்களை மக்களுக்குத் தெரிவித்து வருகின்றனர். மாவட்டங்களில் அரசு விழாக்களையும் தலைவர்களின் நூற்றாண்டு விழாக்களையும் நடத்துகின்றனர்.

செய்தி நிலையங்கள்.—1988–89 ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் உள்ள செய்தி நிலையங்களில் ஆராய்ச்சி மாணவர்களுக்கு பயன்படும் வசதியுடன் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. பொது மக்களின் வசதிக்காக அவ்வப்போது கேட்கப்படும் தகவல்களும் செய்திகளும் இந்நிலையங்களில் அளிக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர்கள் பிற முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் விழாக்களில் ஆற்றும் சொற்பொழிவுகள் பதிவு செய்யப்பட்டு கேசட்டுகள் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. செய்தி நிலையத்திலுள்ள நூலகங்கள் எல்லாத்தரப்பு மக்களின் சேவைகளையும் ஆராய்ச்சி மாணவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதாய் அமைந்துள்ளன. செய்தி நிலயைங்களில் உள்ள திரைப்படப் பிரிவு முறையாகத் திரைப்படக் காட்சிகளை நிலையங்களில் நடத்துவதுடன் வேண்டுகோளின்பேரில் கல்வி நிலையங்களிலும் திரையிட்டுக் காட்டுகிறார்கள். அரசின் திட்டங்கள் வளர்ச்சி பணிகள் பற்றிய விவரங்கள், வீடியோ காட்சிகள் மூலமாகவும் திரைப்படக் காட்சிகள் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகின்றன. தற்பொழுது 4 வீடியோ திரைப்படக் கருவி பொருத்தப்பட்ட வீடியோ வேன் வாங்கப்பட்டு அரசின் செயல்திட்டங்களை காட்சிகள் மூலம் வீடியோ திரைப்படக் காட்சிகளை நடத்தி வளர்சிப் பணி விவரங்கள் மக்களுக்கு சென்றடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

செய்தி வெளியீடு.—மக்கள் அறியவேண்டிய முக்கிய அறிவிப்புகளையும் அரசின் திட்டங்கள் சாதனைகள் பற்றிய செய்திகளையும் சென்னை தலைமை செயலகத்திலுள்ள செய்தி வெளியீட்டுப்பிரிவு செய்தி வெளியீடுகளாக்கி நாளிதழ்களில் அவை வெளிவர ஏற்பாடுகள் செய்கின்றன. 1988–89 நிதியாண்டில் 861 செய்தி வெளியீடுகளும் 9 செய்திக் குறிப்புகளும் வெளியிடப்பட்டன.

செய்தியாளர் கூட்டம்.—மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர், அரசு செயலாளர்கள் ஆகியோர் பங்குபெறும் செய்தியாளர் கூட்டங்களுக்கு அவ்வப்போது ஏற்பாடுகள் செய்கிறது. இந்நிதியாண்டில் 83 செய்தியாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புகைப்படம், வானொலி தொலைக்காட்சி மற்றும் திரைப்படப் பிரிவு மூலம் விளம்பரம்.—அரசு, அரசுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சித் திட்டங்கள் பணிகள் ஆகியவற்றையும் பிரமுகர்களின் வருகை நிகழ்ச்சிகளையும் அரசு சார்பில் நடைபெறும் விழாக்களையும் இத்துறையின் புகைப்படப்பிரிவும் திரைப்படப்பிரிவும் படமெடுத்து மக்கள் பார்வைக்கென வெளியிடுகின்றன. 1988–89 ஆம் ஆண்டில் புகைப்படப்பிரிவு மூலம் 860 நிகழ்ச்சிகள் படமெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளைத் தொலைக் காட்சி நிலையமும் வானொலி நிலையமும் ஒலி, ஒளி பரப்ப ஏற்பாடுகள் செய்கின்றன.

மேலும் இந்நிகழ்ச்சியில் செய்தியாளர்கள் கலந்துகொள்ளும் வகையில் தகுந்த வசதிகளையும் இப்பிரிவு செய்து தருகிறது.

செய்தியாளர் பயணம்.—அரசின் ஆக்கப் பணிகளை மக்களிடையே பரப்பும் பொருட்டு செய்தியாளர்களைத் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்குச் சுற்றுப் பயணமாக இப்பிரிவு அழைத்துச் செல்கிறது. இதுபோன்ற 5 சுற்றுப்பயணங்கள் 1988–89 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

பி.டி.ஐ./யூ.என்.ஐ. செய்திகள்.—இப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பி.டி.ஐ., யூ.என்.ஐ. ஆகிய செய்தி நிறுவன டெலிபிரிண்டர்கள் அளிக்கும் முக்கிய செய்திகளை மாண்புமிகு முதல்வர் அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலர், ஆகியோரின் பார்வைக்கென அனுப்பி வைக்கிறது.

செய்தியாளர் ஓய்வூதியம்.—ஓய்வு பெற்று நலிவுற்ற நிலையில் உள்ள செய்தியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை இப்பிரிவு செயல்படுத்தி வருகிறது. இந் நிதியாண்டில் 9 நலிவுற்ற செய்தியாளர்களுக்கு ஓய்வூதியம் பெறும் அனுமதி வழங்கப்பட்டது.

செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகார அட்டை.—தகுதி வாய்ந்த செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம் அளித்து அவர்களுக்குத் தேவையான வசதிகளை இப்பிரிவு செய்து தருகிறது. 1988 ஆம் ஆண்டில் 216 செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகார அட்டை வழங்கப்பட்டது.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அரசு விருந்தினராகத் தமிழகம் வருகை.—வெளிநாட்டுச் செய்தியாளர்கள் இந்திய அரசு விருந்தினராகத் தமிழகம் வருகை தரும்போது இத்துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவைச் சார்ந்த அலுவலர் ஒருவர் தொடர்பு அலுவலராக இருந்து தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகள் நடைபெறும் இடங்கள், தொழிற்கூடங்கள், சுற்றுலாத் தலங்கள் ஆகிய இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்வது இப்பிரிவின் பணிகளுள் ஒன்றாகும்.

வானொலி மற்றும் தொலைக்காட்சி உரை.—வானொலி மற்றும் தொலைக்காட்சியில் தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகள் திட்டங்கள் பற்றி மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அரசுத்துறை செயலாளர்கள் ஆகியோர் உரையாற்ற உரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

நினைவகங்கள் :

செய்தி, மக்கள் தொடர்புத்துறையின் கீழ் உள்ள நினைவகங்களின் விவரங்கள் :

1. வள்ளுவர் கோட்டம் 2. அண்ணா சதுக்கம், 3. காமராசர் இல்லம் 4. இராசாசி நினைவாலயம் 5. சென்னை கிண்டியிலுள்ள காமராசர் நினைவாலயம் 6. கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபம் 7. எட்டயபுரத்திலுள்ள பாரதியார் மணி மண்டபம் 8. ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம் 9. விருதுநகரிலுள்ள காமராசர் நினைவகம் 10. ஈரோட்டிலுள்ள பெரியார் அண்ணா நினைவகம் 11. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் 12. தருமபுரி மாவட்டம் தொரப்பள்ளியில் உள்ள இராசாசி நினைவகம் 13. காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா நினைவகம் 14. செய்குத்தம்பி பாவலர் நினைவகம் நாகர்கோவில் ஆகிய அனைத்தையும் இத்துறை பராமரித்து வருகிறது.

திருச்சியில் வ.வே.சு. ஐயர் இல்லத்தை அரசு ஏற்றுவிட்டது. அது நினைவகமாக மாற்றப்பட உள்ளது. திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம், நாகர்கோயிலில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லம் ஆகியவற்றை அரசு ஏற்று நினைவகங்களாகப் பராமரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திருப்பூரில் திருப்பூர்க்குமரனுக்கு ரூ. 6.28 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெரினா கடற்கரையில் முன்னாள் தமிழக முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு ரூ. 30 இலட்சம் செலவில் நினைவகம் கட்டப்பட்டுள்ளது. கவிஞர் கண்ணதாசனுக்குக் காரைக்குடியில் ரூ. 25 லட்சம் செலவில் மணிமண்டபம் கட்டப்படவுள்ளது.

வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம்ரூ. 15 இலட்சத்தில் கட்டப்படவுள்ளது. இந்நினைவு வளாகத்தில் தந்தை பெரியார் சிலை மற்றும் வைக்கம் போராட்டத்தில் பங்கு பெற்ற முந்திய கேரள மாநில தலைவர்கள் பெயர் பொறித்த ஸ்தூபி, நூலகம், சிறுவர் பூங்காவுடன் கூடிய தோட்டம் பொழுதுபோக்குத் திடல் ஆகியவை இடம் பெறும். இப்பணி கேரளப் பொதுப்பணித்துறையிடம் வைப்புத் தொகைப் பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. கேரளப் பொதுப்பணித்துறையிடமிருந்து விரிவாக மதிப்பீடு எதிர்பார்க்கப்படுகிறது.

## கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை :

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை அருகில் உள்ள சிறிய பாறை மீது திருவள்ளுவர் சிலை ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இச்சிலை மற்றும் பீடத்தின் மொத்த உயரம் 133 அடியாகும்.

## கலைவாணர் அரசாங்கம், சென்னை :

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கம் சீர்வளி வசதி பெற்ற அரங்கம், அரசு விழாக்கள், தனியார் விழாக்கள் கலை நிகழ்ச்சிகள் போன்றவை இங்கே நடைபெறுகின்றன. அரசுத்துறைக்குச் சலுகைக் கட்டணத்தில் அரங்கம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த அரங்கத்தில் நவீன ஒலிபெருக்கி வசதியும் உண்டு.

## அண்ணா கலையரங்கம், வேலூர் :

வடாற்காடு மாவட்டம், வேலூர் அண்ணா கலையரங்கத்தில் அரசு விழாக்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. திரைப்படக் காட்சிகளும் தினசரி நடத்தப்படுகின்றன. மாவட்டத் தலைநகரங்களில் கலையரங்கம், செய்தி அரங்கங்களைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

## அரசு பொருட்காட்சியகம் :

மாவட்டத் தலைநகரங்களில் தமிழக அரசு பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. 1978 ஆம் ஆண்டிற்கு முன்னால் தனியாரும் பிற நிறுவனங்களும் மாவட்டத் தலைநகரங்களிலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களிலும் பிற இடங்களிலும் இலாப நோக்கோடு பொருட்காட்சிகள் நடத்தி வந்தனர். தனியார் நடத்தும் பொருட்காட்சிகளில் சூதாட்டமும் ஆபாச நடனங்களும் இடம் பெற்றன என்ற விவரம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் 1978 ஆம் ஆண்டிலிருந்து பொருட்காட்சிகளை நடத்தும் உரிமைகள் அனைத்தையும் அரசே எடுத்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அரசு நடத்தும் பொருட்காட்சிகளில், அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்கள் நிறைவேற்றி வரும் பல்வேறு பணிகள் அரங்கங்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு விளக்கப்படுகின்றன. தனியார் துறை நிறுவனங்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விளம்பரம் செய்வதோடு விற்பனையையும் பெருக்குகின்றன. மேலும் இப்பொருட்காட்சிகள் மூலம் நூற்றுக்கணக்கான சிறிய வியாபாரிகள், கலைஞர்கள் படித்த வேலையற்று இருக்கும் இளைஞர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு தொடர்ந்து கிடைக்கிறது.

முதன்முதலாக சேலம் நகரத்தில் 1978-ஆம் ஆண்டு செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் நடத்தப்பட்டது. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இதனைக் கண்டு களித்தனர்.

சேலத்தில் பொது மக்களிடையே பொருட்காட்சிக்கு நல்ல வரவேற்பு இருந்ததால் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் தனியாகப் பொருட்காட்சி பிரிவு ஏற்படுத்தப்பட்டு அப்பிரிவு கீழ்க்கண்ட இடங்களில் அரசு பொருட்காட்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது :—

1. சேலம்.
2. கோயமுத்தூர்.
3. மதுரை.

4. திருச்சி.

5. திருநெல்வேலி.

6. திண்டுக்கல்.

7. ஈரோடு.

8. வேலூர்.

9. கடலூர்.

அரசு நடத்தும் ஒவ்வொரு பொருட்காட்சியிலும் 10-லிருந்து 20-க்கு மேற்பட்ட அரசுத்துறைகள் மத்திய அரசுத்துறைகள் மத்திய களவிளம்பரத்துறை மற்றும் பிற தனியார் நிறுவனங்களும் பங்கு பெறுகின்றன. மேலும் 100-க்கு மேற்பட்ட தனியார் கடைகள் ஏலம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வாணிபம் செய்ய அனுமதிக்கப் படுகின்றன. பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த வளாகம் தனியாக அமைக்கப் படுகிறது. ஒவ்வொரு பொருட்காட்சியும் பொருளாதார ரீதியாக லாபகரமாக நடத்தப்படுகிறது.

பொருட்காட்சியிலிருந்து கிடைக்கும் வருமானம் :

1978-ஆம் ஆண்டு முதல் 1989 மார்ச் மாதம் வரை 50 பொருட்காட்சிகள் மாவட்டத் தலைநகரங்களில் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டுள்ளன. இந்த 50 பொருட் காட்சிகள் மூலம் அனைத்துச் செலவுகளும்போக அரசுக்குக் கிடைத்த நிகர வருமானம் ரூ. 250.09 லட்சம் ஆகும். இப்பொருட்காட்சிகள் மூலம் கிடைக்கும் வருவாயில் 50 சதவீதம் பொருட்காட்சி நடத்த மைதானம் அளிக்கும் நகராட்சி களுக்குப் பல்வேறு நலப்பணிகளை நிறைவேற்ற அரசால் அளிக்கப்படுகிறது.

விளம்பர ஒருங்கிணைப்புக்குழு :

மத்திய மாநில அரசுகளின் பல்வேறு மக்கள் தொடர்பு பிரிவுகளின் நடவடிக் கைகளை ஒருங்கிணைப்பதற்காக இந்திய அரசு உருவாக்கியுள்ள விளம்பர ஒருங் கிணைப்புக்குழு ஒவ்வொரு மாதமும் சென்னையில் கூடுகிறது. இக்கூட்டத்தில் 20 அம்சத் திட்டத்தின்கீழும் இதர கள விளம்பரத் திட்டத்தின்கீழும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆய்வு செய்யப்பட்டு அக்கூட்டத்தில் பரிந்துரைகளின்மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசின் வளர்ச்சிப் பணிகள், அவற்றால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் ஆகியவை, கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் மக்களுக்குத் திரைப்படக் காட்சிகள், சிறு கண்காட்சிகள் ஆகியவற்றின் மூலமும் விளக்கிச் சொல்லப்படுகின்றன. இந்த விளம்பரப் பிரிவுகள் மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்குகின்றன. 1988 ஜூலை மாதத்தில் மத்திய மாநில அரசுகளின் விளம்பரப் பிரிவுகள் இணைந்து அரசு சாதனை விளக்க முகாம் ஒன்றை 7 நாட்களுக்கு பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் விழாவோடு காமராஜர் மாவட்டத்தில் விருதுநகரில் நடத்தியது. அரசின் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைய இது மிகவும் உதவியது.

விழாக்கள் :

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை மக்களுக்கு நினைவூட்டவும், மாபெரும் தலைவர்களின் மகத்தான தியாகங்களை மக்களுக்கு முக்கியமாக இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லவும் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் விழாக்கள், போன்றவை இத்துறையால் நடத்தப்படுகின்றன. 27 பெருந் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களும், தேசிய ஒருமைப்பாடு விழா, தேசிய மறுசமர்ப்பண நாள், பூம்புகாரில் சித்திரை முழுநிலவு நாள், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் விழா உட்பட 8 ஏனைய விழாக்களும் 1988—89-ல் கொண்டாடப்பட்டன.

தமிழரசு அச்சகம் :

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் 9—10—1972-ல் உருவாக்கப்பட்ட தமிழரசு அச்சகம், இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்குகிறது.

தமிழ்நாடு அரசின் அதிகாரப் பூர்வ பத்திரிக்கையான 'தமிழரசு' இதழ்கள் (ஆங்கிலம், தமிழ்) தமிழரசு அச்சகத்தில் அச்சடிக்கப்படுகின்றன. மேலும் கீழ்க்கண்ட இதழ்கள் தமிழரசு அச்சகத்தில் அச்சடிக்கப்படுகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டம் | மாதம் இருமுறை | மத்திய அரசு வெளியீடு. |
| 2. | உழைப்பவர் உலகம் | | மாநில அரசு வெளியீடு. |
| 3. | திருக்கோயில் | | |
| 4. | விளையாட்டு மடல் | | |
| 5. | தமிழகக் கல்வி | காலாண்டு | |

இது தவிர அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் மற்றும் அரசின் முக்கியமான விளம்பர வெளியீடுகள் போன்றவையும் அச்சிடப்படுகின்றன.

தமிழரசு அலுவலகம் :

'தமிழரசு' தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வமான இதழாக வெளியிடப்படுவதற்கு முன்னர் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளிலிருந்து தனித்தனியாக, வெளியீடுகள் வெளியிடப்பட்டு வந்தன. தமிழ்நாடு செய்தி சிரணி இந்துகாம், மேழிச் செல்வம், ஆரோக்கிய மார்க்கம், சென்னை மக்கள் நல்வாழ்வுக் கல்வி, பாக்கியலட்சுமி, திருக்கோயில் முதலியவை தனித்தனியாக அந்தந்தத் துறைகளின் மூலமாக அரசின் கொள்கை விளக்கங்களையும், செயல்முறைத் திட்டங்களையும் மக்களுக்கு தெரிவித்தன. பல்வேறு அரசுத் துறைகளிலுள்ள பத்திரிக்கையாளர்களின் அனைத்து திறனையும் பயன்படுத்தி ஒருங்கிணைந்த இதழாக ஒரே இதழ் வர வேண்டும் என்ற அடிப்படையில் இந்து அறநிலையத்துறை இதழான திருக்கோயில் நீங்கலாக மற்ற இதழ்கள் அனைத்தும் இணைத்து 'தமிழரசு' இதழ் தமிழ்நாடு அரசின் சமூக நல (செய்தி மற்றும் விளம்பரம்) த்துறையின் மூலம் 20—6—1970-ல் உருவாக்கப்பட்டது.

தொடக்க காலத்தில் இவ்விதழின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்புகள் மாதமிருமுறை வெளியிடப்பட்டன. பின்னர் ஆங்கில இதழ் மாத இதழாக மாற்றப்பட்டன.

முதல் இதழ் 1—7—1979-ல் வெளியிடப்பட்டது. தொடக்கத்தில் தமிழில் 30,000 பிரதிகளும் ஆங்கிலத்தில் 3,500 பிரதிகளும் அச்சிட்டு முகவர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மற்றும் சந்தா மூலம் விற்பனை செய்யப்பட்டன. இந் நிதியாண்டில் தமிழ் இதழ் 43,000 படிகளும் ஆங்கில இதழ் 3,500 படிகளும் வெளியாயின.

முதன் முதலில் 'தமிழரசு' இதழின் விலை 0.35 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. பின்னர் 1974-ஆம் ஆண்டு 0.50 காசாகவும், 1—1—1982-லிருந்து 0.75 காசாகவும் 1—7—1986 முதல் ரூ.1 ஆகவும் உயர்த்தப்பட்டு இதழ்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

தமிழரசு சந்தா விவரம் :

தமிழ்பதிப்பு.—

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 24/— |
| அரையாண்டு சந்தா | ரூ. 12/— |

ஆங்கிலப் பதிப்பு :

| | |
|---|---|
| ஆண்டு சந்தா .. | ரூ. 12/— |

அரையாண்டு சந்தா ஏற்கப்படுவதில்லை.

திரைப்படப்பயிற்சி :

திரைப்படத் தயாரிப்பின் பல்வேறு துறைகளிலும் நடிப்பிலும் பயிற்சி தருவதற்காக நமது நாட்டில் உருவாக்கப்பட்ட இரண்டு கல்வி நிறுவனங்களில் சென்னையில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனமும் ஒன்றாகும். இந்நிறுவனம் தமிழக அரசின் செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. கல்விமுறைகளும் தேர்வுகளும் அனைத்தும் மாநில தொழிற்கல்வி குழுவினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

**வரலாறு :**

திரைப்படத் தொழிலில் பல்வேறு வகுப்புகளை நடத்தி இந்நிறுவனம் திகழ்கிறது. ஒளிப்பதிவு மற்றும் ஒலிப்பதிவு பொறியியல் ஆகிய இரண்டு சிறிய வகுப்புகளைக் கொண்டு 1948ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. மேலும் இது மத்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. 1960-ல் இந்நிறுவனம் உயர்நிலைக்கு உயர்த்தப்பட்டு தனித்து இயங்கும் அளவில் திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம் என அழைக்கப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கும் போது, ஒளிப்பதிவு ஒலிப்பொறியியல் மற்றும் படச்சுருள் கழுவுதல் பிரிவுகளில் சான்றிதழ் வகுப்புகள் தொடங்கப் பெற்றன. 1971-ல் நுண்கலை பிரிவு திரைக்கதை வசனம் எழுதுதல் மற்றும் இயக்குதல் படத்தொகுப்பு நடிப்புப் பாடங்களும் தொடங்கப் பட்டன. 1980—81 கல்வி வருடத்தில் தொலைக்காட்சி பாடமும் டிப்ளமா வகுப்புகளில் தொழில் நுட்ப பாடமாக சேர்த்துக்கொள்ளப்பட்டது. தொலைக்காட்சி பாடம் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் விளைவாக இந்நிறுவனம் தமிழ்நாடு திரைப்படம் தொலைக்காட்சி தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம் எனப் பெயர் மாற்றப்பட்டு செய்யப்பட்டது. நமது நாட்டிலேயே படம் கழுவுதல் சம்மந்தமாக வகுப்பு நடத்துவது இந்நிறுவனம் ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்விப் பிரிவு :**

கல்விப் பிரிவில் இந்நிறுவனம் கீழ்க்கண்ட வகுப்புகளை நடத்துகிறது :

| | |
|---|---|
| 1 ஒளிப்பதிவு | 3 வருடங்கள் |
| 2 திரைக்கதை வசனம் எழுதுதல் மற்றும் இயக்குதல் | 3 வருடங்கள் |
| 3 ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல் | 3 வருடங்கள் |
| 4 திரைப்படம் கழுவுதல் | 3 வருடங்கள் |
| 5 படத்தொகுப்பு | 3 வருடங்கள் |
| 6 நடிப்பு | 1 வருடம் (சான்றிதழ் வகுப்பு) |

மேலே குறிப்பிட்டவைகளில் நடிப்பு தவிர மற்றவை யாவும் டிப்ளமோ படிப்புகளாகும். நடிப்புப் பிரிவு மட்டுமே சான்றிதழ் வகுப்பாகும். திரைக்கதை வசனம் மற்றும் இயக்குதல் துறையில் அனுமதிக்கப்படுவதற்கு குறைந்த பட்சம் கல்வித் தகுதி கலை அல்லது விஞ்ஞானத்தில் ஒரு பட்டமும் ஒளிப்பதிவு மற்றும் ஒளிப்பொறியியல் ஒலிப்பதிவு திரைப்படம் கழுவுதல் படத்தொகுப்புப் பிரிவிற்கு அனுமதிக்கப்படுவதற்கு குறைந்த கல்வித் தகுதியாக பௌதிகம் ரசாயனம் மற்றும் சம்பந்தப்பட்ட பாடங்களைக் கொண்ட +2 வகுப்புத் தேர்வும் நடிப்புப் பிரிவில் அனுமதிக்கப்படுவதற்கு பள்ளியிறுதி வகுப்பில் தேர்வும் பெற்றிருக்க வேண்டும்.

அறிக்கையில் உள்ள 1988—89 கல்வி வருடத்தில் முதல்வருக்கு உதவியாக துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள் ஆகியோர் மொத்தம் ௨ பேர் உள்ளனர். 164 மாணவர்கள் பல்வேறு வகுப்புகளில் இந்நிறுவனத்தில் பயின்றனர். கடைசி வருட டிப்ளமா தேர்வுகள் சென்னையில் உள்ள தமிழக அரசின் தொழில் நுட்ப தேர்வுக் குழுவினரால் நடத்தப்பட்டு டிப்ளமோக்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டிப்ளமோக்கள் வழங்கப்படுகின்றது.

1987—88 முதல் பாட திட்டத்தை மாற்றி அமைத்து அந்தந்த வருடம் டிப்ளமோ தேர்வுகள் நடத்தவும் தொலைக்காட்சி பாடத்தை உள்ளடக்கிய மாற்றுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மாற்றி அமைக்கப்பட்டுள்ள பாடத் திட்டமானது நவீன ஒளிப்பதிவு மற்றும் தொலைக்காட்சி கருவிகளில் பயிற்சி பெறும் பயனையும் தொலைக்காட்சி செயல்முறை பயிற்சிகளில் ஆழமான படிப்பினையும் மாணவர் களுக்கு வழங்குகிறது.

**மாணவர் திரைப்படம் :**

பல்வேறு பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் பல குழுக்களை தங்களுக்குள் கொண்டு ஒவ்வொரு குழுவினரும் ஒரு சிறிய சமூகப் படமும் மற்றொரு கருத்து விளக்க செயல்முறைப் பயிற்சியாக அக்கல்வி ஆண்டில் தயாரிக்கின்றனர்.

**தொழில் நுட்பப் பிரிவு :**

இக்கல்வி நிறுவனத்தில் ஒளிப்பதிவு மற்றும் படம் காட்டுதல் பிரிவுகளில் மிக உயர்ந்த தன்னிறைவு பெற்ற புதிய கருவிகளால் பொருத்தப்பட்டு தொழில் நுட்ப தகுதி பெற்றவர்களால் இயக்கப்பட்டு வருகிறது. இவ்விலையுயர்ந்த கருவிகளைக் கொண்டு மாணவர் களுக்குப் பயிற்சி அளிப்பதை முதல் குறிக்கோளாகக் கொண்டாலும் அப்போதைக்கப் போது அரசின் விளம்பர வேலைகளுக்காகவும் திரைப்படப் பிரிவு மற்றும் வணிக வேலைகளுக் காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**வணிகப் பிரிவு :**

இக்கல்வி நிறுவனம் படம் பிடிக்கும் வசதிகளை தனிப்பட்ட படத்தயாரிப்பாளர்களுக்கு குறைந்த வாடகையில் வழங்குகிறது. இந்நிறுவனம் இரண்டு படத் தளங்களைக் கொண்டு உள்ளது. அவற்றில் ஒன்று மாணவர்களுக்காகவும் மற்றொன்று அரசு ஸ்டூடியோ என்ற பெயரில் வெளியிலிருந்து வரும் படத்தயாரிப்புகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. படப் பிடிப்பு, பாடல் பதிவு செய்தல், ஒலிப்பதிவு, கதை வசனம் பதிவு செய்தல், மறு ஒலிப்பதிவு செய்தல், போன்றவையும் வெளித் தயாரிப்பாளர்களுக்கும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவினரின் கருத்து விளக்கப்படங்களும் செய்திப் படங்களும் செய்யப்படுகின்றன. இவ்வாறான வசதியின் நிறுவன எல்லைக்குள்ளே இருப்பது உயர்ந்த நிலையில் உள்ள கலைஞர்கள் தொழில் நுட்ப வல்லுநர்கள் மாணவர்கள் சந்திப்பிற்கு உதவி செய்கிறது.

**விளம்பரம் :**

அரசின் பல்வேறு துறைகளும் அரசின் கீழ்வருகின்ற பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாகப் பத்திரிக்கைகளில் வெளியிடப்படுகின்றன. மேலும் அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் பொது மக்களுக்கு விளக்கும் முறையில் இத்துறையே பல விளம்பரங்களைத் தயாரித்தும் வெளியிடுகிறது. இத்துறை 1988—89-ஆம் ஆண்டில் நாளிதழ்கள், பருவ ஏடுகள், நினைவு மலர்கள் ஆகியவற்றில் ஏறக்குறைய 9,500 விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

**சுற்றுலா**

ஆய்வு ஆண்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளின் வேகம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

**ஆய்வு :**

1988-ஆம் ஆண்டில் 12,39,992 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை தந்தனர். இது, சென்ற ஆண்டு வந்தவர்களை விட 6.5 சதவீதம் அதிகமாகும். இக்கால அளவில் தமிழ்நாட்டுக்கு 3,56,800 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர். இது, சென்ற ஆண்டு வந்தவர்களைவிட 11 சதவீதம் அதிகம். இதே ஆண்டில் உள்நாட்டுப் பயணிகளின் வருகை அதிகரிப்பு விழுக்காடு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை விழுக்காட்டைவிட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துக்கொண்டு வருவதால் அதற்கேற்ப அடிப்படை வசதிகளை மேலும் பெருக்க வேண்டியுள்ளது. எனவே, தற்போதுள்ள வசதிகளை தொடர்ந்து பேணிப் பராமரித்து வரவும் வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவைப்படும் பொருகிவரும் அடிப்படை வசதி தேவைகளை நிறைவு செய்யக் கருதி, வகைகளை ஆய்வு செய்து மேலும் அதிகமான நட்சத்திர ஹோட்டல்களைத் திறப்பதற்கு ஊக்கமளிப்பதன் மூலம் தங்குமிடம் வசதிகளைப் பெருக்க தமிழ்நாடு பெரிய அளவில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கருதப்பட்டது. அதே சமயத்தில், ஏனைய வசதிகளும் போதுமான அளவுக்குச் செய்து தரப்பட வேண்டும்.

**திட்டப் பணிகள் :**

1988-89ஆம் ஆண்டில், மத்திய அரசின் சுற்றுலாத் துறை பின்வரும் இடங்களில் சுற்றுலா வசதிகளை பெருக்க அளித்துள்ள நிதியுதவி விவரம் :—

ஸ்ரீரங்கம் ரூ. 3.5 இலட்சம், பாபநாசம் ரூ. 3.5 இலட்சம், கன்னியாகுமரி ரூ. 3.5 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருதல், ரூ. 11.19 இலட்சம் செலவில் கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் நினைவுப் பாறையில் ஒளியுமிழ் விளக்குகள் அமைத்தல். ரூ. 7.40 இலட்சம் செலவில் மதுரை, வண்டியூர் கண்மாயில் சிற்றுண்டிச்சாலை கட்டுதல் ரூ. 39.07 இலட்சம் செலவில் கன்னியாகுமரிக்கும் விவேகானந்தர் பாறைக்கும் இடையில் படகுப் போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல், அதே காலத்தில் பின்வரும் பணிகள், பகுதி II திட்டங்களுக்கு திட்டப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேம்படுத்தல் ரூ. 3.00 இலட்சம் செலவில், சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் விளம்பரப்படுத்தலும் ரூ. 1.00 இலட்சம் செலவில் தஞ்சாவூரில், சுற்றுலா அலுவலகம் அமைத்தல் ரூ. 10.00 இலட்சம் செலவில் மாவட்டச் சுற்றுலா மையங்களை

மேம்பாடடையச் செய்தல், மத்திய அரசு நிதியுதவிபெறும் திட்டங்களுக்கு ரூ. 20.55 இலட்சம் மாநில அரசின் பங்குத் தொகையாக அளித்தல், ரூ. 1.00 இலட்சம் செலவில் பூம்புகார் சுற்றுலா வளாகத்தை மேம்பாடடையச் செய்தல்.

மேம்படுத்தல்-விளம்பரப்படுத்தல் :

மேம்படுத்தல்-விளம்பரப்படுத்தல் என்பதன்கீழ் இந்தத் துறை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு இடங்கள் பற்றிய மடிப்பு வெளியீடுகள், பட அஞ்சலட்டை, சுவரொட்டி ஆகியவற்றுடன் தொடர்கள் பற்றிய வெளியீடுகள் முதலியவைற்றைத் தயாரித்துள்ளது. தமிழகத்தில் நாட்டுப்புறக் கலைகள் விளக்கிக் காட்டப்பட்டு சுவரொட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய விளம்பர வெளியீடுகள் இந்தியாவில், வெளிநாடுகளிலுமுள்ள சுற்றுலாத் தகவல் மையங்களுக்கு நிதி விநியோகிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு சுற்றுலாப் பயணி களைப் பெருமளவில் கவர்வதற்காக , உள்நாட்டுப் பத்திரிகைகளிலும், பருவ இதழ்களிலும், விளம்பரங்கள் அளிக்கும் வகையில் வண்ண விளம்பர இயக்கம் தொடங்கப்பட்டது. சுற்றுலா மேம்பாட்டின் ஒரு பகுதியாக இத்துறை, சுற்றுலா பற்றிய பொருட்காட்சிகளையும் விழாக்களையும் நடத்தியது. உதகமண்டலம், வேனில் கால விழாவும், கொடைக்கானல், ஏற்காடு ஆகிய இடங்களில் கோடை விழாக்கள் நடத்தப்பட்டன. குற்றாலத்தில் 'சாரல் விழா ' மேட்டூர் அணையில் 'ஆடிப்பெருக்கு ' விழா; கொல்லி மலையில் 'வல்வில் ஓரி விழா ' ஆகியவையும நடத்தப்பட்டன. முக்கியமான சுற்றுலா மையங்களில் ஜனவரித் திங்களில் பொங்கல் சுற்றுலா விழா நடத்தப்பட்டது. 'அனைவருக்கும் கல்வி பயக்கும் சுற்றுலா கல்வி ' என்ற கருத்தை வெளிப்படுத்தும். ''உலக சுற்றுலா தினம் தமிழ்நாட்டில், 1988 செப்டம்பரில் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப் பட்டது. சென்னையில், இல்லத்தரசிகளுக்கான சமையல் போட்டி குழந்தை களுக்கான ஓவியப் போட்டி, ஆகியவற்றுடன், சுற்றுலா தொடர்பான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா, கலந்துரையாடல், பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவையும் நடத்தப்பட்டன. இவற்றுக்குப் பரிசுகளாக விமானங்களில் இலவசமாகப் பயணம் செய்யவும் ஹோட்டல்களில் தங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மேலும் இத்துறை மாநிலத்திற்குள்ளும் புதுடில்லியிலும் நடைபெற்ற பல்வேறு பொருட்காட்சிகளில் கலந்து கொண்டதுடன், கொச்சியில் நடைபெற்ற நறுமணப் பொருட்கள், காட்சியிலும் கலந்து கொண்டது. இத்துறை 1989, ஜனவரித் திங்களில் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய சுற்றுலா தொழில் பொருட் காட்சியில் மனதைக் கவரும் காட்சியரங்கு ஒன்றையும் அமைத்திருந்தது. சென்னையில் நடைபெற்ற சுற்றுலா முகவர்களின் ஆண்டுக் கருத்தரங்கிலும் இத்துறை கலந்து கொண்டது.

சாதனைச் சுற்றுலா :—

ஆய்வு ஆண்டில், சாதனைச் சுற்றுலாவிற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப் பட்டு மலை வழி நடைப் பயணத் திட்டத்திற்கு ஊக்கமளிக்கப்பட்டது.

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் திருச்சியிலுள்ள உணவுக் கலை நிறுவனம் (Food craft Institute) ஹோட்டல் தொழிலின் பல்வேறு பிரிவுகளில் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறது.

ஹோட்டல் தொழில் :

ஹோட்டல்கள் ஒன்று, இரண்டு நட்சத்திரங்கள் என்பதன் கீழ் வகைப்படுத்தப் பட்டு, 6 ஹோட்டல்களை வகைப்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேலும் நிதியுதவிக்காக, 41 ஹோட்டல் திட்டங்களும், எப்.எல். 3 உரிமத்திற்காக 9 செயற்குறிப்புகளும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டுள்ளதால், ஏனைய தொழில்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள், ஊக்கத் தொகைகளை சுற்றுலாத் தொழிலுக்கும் நீட்டிப்பது குறித்தும், இத்துறை பரிசீலித்தது இது குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

தமிழ்நாட்டில், சுற்றுலா வர்த்தக நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக, ஒரு சட்டம் இயற்றுவது தொடர்பான செயற்குறிப்பும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

சுற்றுச்சூழல் இடர்பாடுகளிலிருந்து சுற்றுலா தலங்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும், சுற்றுலாத்துறை பரிசீலித்தது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் :-

''தமிழ்நாடு ஹோட்டல்கள், இளைஞர் இல்லங்கள், பயணவழி உணவகங்கள் (மோட்டல்ஸ்) படகுக் குழாம்கள் ஆகியவற்றின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைத் தொடர்ந்து நிறைவு செய்தது. இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு, சுற்றுலாப் பயணிகளின் பயன் கருதி, பல திட்டமிட்ட சுற்றுலாக்களைத் தொடர்ந்து நடத்தி வந்தது.

## சுற்றுலா-தொழில் பொருட்காட்சி :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 5—1—1989 முதல் 16— 4— 1989 வரையில், சென்னையில் அனைத்திந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சியை நடத்தியது. சென்னை, பொருட்காட்சி மைதானத்தில் 1988–89ஆம் ஆண்டில் நிரந்தரமான சில அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

## எழுது பொருள் அச்சுத்துறை.

எழுதுபொருள் அச்சுத்துறையானது அச்சகங்கள் மற்றும் எழுதுபொருள் கிளை என இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது.

இத்துறையில் கீழ்க்கண்ட அலகுகளின் நிர்வாகம் இயக்ககத்தின் பொறுப்பில் உள்ளது :—

1. எழுதுபொருள் கிடங்கு, இராஜாஜி சாலை, சென்னை-1.
2. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை-79.
3. அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்றக் கட்டிடம், சென்னை-104.
4. அரசு கிளை அச்சகம், ஆணைக்காரன் தோட்டம், சூளை, சென்னை-112.
5. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.
6. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.
7. அரசு கிளை அச்சகம், சேலம்.
8. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.
9. அரசு கிளை அச்சகம், மதுரை.
10. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், அண்ணா சாலை, சென்னை மற்றும் உயர்நீதிமன்ற வளாகத்தில் அமையப்பெற்ற துணை விற்பனை நிலையம்.

வள்ளலார் நகரில் உள்ள அரசு மைய அச்சகம் மற்ற எல்லா அச்சக கிளைகளைக் காட்டிலும் பெரியதாகும்.

இத்துறையில் 1974ஆம் ஆண்டு முதல் மேலாண்மைக் குறிக்கோள் கொண்ட செயல்துறை செயல்படுத்தப்பட்டு, இதுவரை பதினைந்து சுற்றுக்கள் முடியப் பெற்றுள்ளன. 1988—89 ஆம் ஆண்டில் அறிவுத் திறன் பயன்படுத்தல், கடமையினின்று விலகி இருத்தல், நிலுவைகளை தீர்த்தல் படிவங்கள் கட்டுப்படுத்துதல் போன்றவைகளை அட்டவணைப் படுத்துதல், அனுப்புகையில் நிலுவை குறைத்தல், தரக்கட்டுப்பாடு ஆகியவற்றில் குறிப்பிட்ட அளவிற்கு இலக்கு எய்தப்பட்டுள்ளது.

சீரமைப்பு முறையில் மொத்தமாக 27 நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் தேவையற்றதென ஒதுக்கப்பட்டதில் அரசுக்கு ரூபாய் 3.77 இலட்சம் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டு தமிழ்நாடு சட்டசபை தொகுதித் தேர்தலுக்கு வாக்குச் சீட்டுக்கள் மற்றும் தேர்தல் சம்பந்தப்பட்ட வடிவம் கையேடு ஆகியவை குறித்த காலத்தில் அச்சடித்து வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

எழுதுபொருள் பிரிவு :

1988—89ஆம் ஆண்டில் எழுதுபொருட்களின் தேவைக்காக 133 தேவைப் பட்டியல்கள், பணம் வசூல் செய்யப்படும் இலாக்காக்களிலிருந்து பெறப்பட்டு, அதற்கு உண்டான எழுதுபொருள்கள் அனுப்பப்பட்டன. இதன் மூலம் ரூ. 14,51,496.15 பெறப்பட்டது. வருடாந்திர பட்டியல் 1234 மற்றும் நிலுவையிலிருந்த பட்டியல் 1962 இலவசமாக வழங்கும் துறைகளுக்கு வழங்கப்பட்டன.

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் வெளியீடுகளின் 1988—89-ல் விற்பனை விவரம் கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| 1. இலவசமாக அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெளியீடுகளின் மதிப்பு. | 1,67,979.84 |
| 2. ரொக்க விற்பனை செய்யப்பட்ட அரசு வெளியீடுகள் மதிப்பு. | 14,22,017.90 |
| 3. உயர்நீதிமன்ற வளாகத்தில் இருக்கும் அரசு விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்ட அரசு வெளியீடுகளின் மதிப்பு. | 1,34,043.65 |

# அத்தியாயம் 17.

## தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்புத் துறை

### தொழிலாளர் நலம்

தமிழ்நாட்டில் தொழிலாளர்களுக்கிடையே சில கோரிக்கைகள் காரணமாக எழுகின்ற தொழிற் தகராறுகளை தக்க நேரத்தில் தலையிட்டு சமரச முறையில் தீர்த்து வைப்பதோடு மட்டுமல்லாமல் தொழில் அமைதி, தொழிலாளர் நலம் மற்றும் சமுதாய நலம் ஆகியவற்றைப் பேணி காத்து வருவதே தொழிலாளர் துறையின் முக்கிய நோக்கமாகும்.

தொழில் அமைதியை காத்து வருவதுடன் தொழிலாளர் நலச் சட்டங்களை தீவிரமாக அமுல்படுத்துதல். சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தல் ஆகிய வகைகளின் மூலம் அமைப்பு ரீதியான மற்றும் அமைப்பு ரீதியில்லாத தொழில் பிரிவுகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் தொழில் பிரிவுகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணிநிலை மற்றும் நலன் ஆகியவற்றின் உயர்வுக்கு வழி வகுக்கிறது.

தமிழ்நாடு எடைகள் அளவைகள் சட்டம் மற்றும் எடைகள் அளவைகள் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள்) குறித்த விதிகள் செயலாக்கம் மூலம் நுகர்வோரின் நலம் பாதுகாக்கப்படுகிறது.

**செயல்முறை :**

இத்துறை ஆணையாளரை கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கொண்டு இயங்கி வருகிறது. தொழிற்சாலை பிரிவு தொழிலாளர் துறையிலிருந்து 12—8—1978-ல் தனியாக பிரிக்கப்பட்டது.

தொழிலாளர் ஆய்வகத் துறை, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களான 1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள், சட்டம், 1958ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம், 1936ஆம் ஆண்டு சம்பளம் வழங்கும் சட்டம், 1961ஆம் ஆண்டு மகப்பேறு நலச் சட்டம், 1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம், 1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம், 1981ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1946ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (நிலையாணைகள்) சட்டம், 1972ஆம் ஆண்டு பணிக் கொடை வழங்கும் சட்டம், 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1923ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் நீக்குதல்) சட்டம், 1966ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1951ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம், 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் போன்ற சட்டங்களை தீவிரமாக அமுல்படுத்திக் கொண்டு வருகிறது. தொழிற்சாலைகளின் ஆய்வகத் துறை 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களையும் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் அதனைச் சார்ந்த விதிகளையும் தீவிரமாக அமுல்படுத்தி வருகிறது.

மேற்படிச் சட்டங்களின் தீவிர செயல்பாட்டினால் அமைப்பு ரீதியான மற்றும் அமைப்பு ரீதியில்லாத தொழிற் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நிலை, பணி நிலை மற்றும் பணியாளர்களின் நலன் ஆகியவை நல்ல முறையில் பேணி பாதுகாக்கப்படுகிறது. தரப்படுத்தப்பட்ட எடைகள் அளவைகள் சட்டம் 1985 மற்றும் அதன் விதிகளை 1—3—1989 முதல் தமிழ்நாட்டில் அமுல்படுத்துவதின் மூலம் நுகர்வோர் நலம் நல்ல முறையில் பாதுகாக்கப்படுகிறது.

### அட்டவணை 1.

**1988–89 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனைகள்.**

| வரிசை எண். | நடவடிக்கை. | 1988–89ம் ஆண்டிற்கான இலக்கு. | 1988–89ல் ஆண்டில் சாதனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள், உணவகங்கள் மீது தொழிலாளர் உதவி ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட முறையான ஆய்வுகள். | 3,86,000 | 4,10,881 |
| 2 | தொழிலாளர் துணை ஆய்வாளரால் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட முறையான ஆய்வுகள். | 3,200 | 3,731 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 | தொழிலாளர் துணை ஆய்வாளரால் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் உணவகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை ஆய்வுகள். | 8,200 | 19,548 |
| 4 | தொழிலாளர் ஆய்வாளரால், தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் உணவகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை ஆய்வுகள். | 8,200 | 10,771 |
| 5 | தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் உள்ள நிறுவனங்களின் மீது தோட்டத் தொழிலாளர் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள். | 1,600 | 2,045 |
| 6 | தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் மருத்துவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள். | 1,000 | 894 |
| 7 | எடைகள் அளவைகள் சட்டத்தின் கீழ் தொழிலாளர் உதவி ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள். | 2,60,000 | 3,40,440 |

## அட்டவணை 2.

| (1) | (2) |
|---|---|
| எழுப்பப்பட்ட தொழில் தகராறுகள் | 9,923 |
| முடிக்கப்பட்ட தொழில் தகராறுகள் | 8,102 |
| சுமுகமாகத் தீர்க்கப்பட்ட தொழில் தகராறுகள் | 1,887 |
| வேலை நிறுத்தங்கள் | 152 |
| கதவடைப்புகள் | 28 |
| வீணான மனித உழைப்பு நாட்கள் | 28,01,898 |

## அட்டவணை 3.

### சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

**1923 ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீட்டுச் சட்டம்.**

| (1) | (2) |
|---|---|
| 1. இந்நிதியாண்டு தொடக்கத்தில் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள். | 429 |
| 2. பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 1,510 |
| 3. மொத்தம் | 1,939 |
| 4. தீர்த்து வைக்கப்பட்டவை | 1,489 |
| 5. வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை | 1,78,29,881.23 |

**1973 ஆம் ஆண்டு பணிக்கொடைச் சட்டம்:**

| | |
|---|---|
| (அ) பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 1,237 |
| (ஆ) தீர்த்து வைக்கப்பட்டவை | 940 |
| (இ) வழங்கப்பட்ட பணிக்கொடைத் தொகை | 16,92,55.32 |

| (1) | (2) |
|---|---|
| **எடை அளவைகள் சட்டம்:** | |
| (அ) ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் | 2,94,368 |
| (ஆ) கண்டுபிடிக்கப்பட்ட எடைக் குறைவுகள் | 1,756 |
| (இ) தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 13,230 |
| (ஈ) தண்டனையில் முடிவுற்றவை | 10,510 |
| (உ) வசூலிக்கப்பட்ட தண்டத் தொகை | 18,48,985 |

## அட்டவணை 4.

### 1988–89 நிதி இலக்கு.

| (1) | முதலீடு. 1988–89. (2) | செலவு. 1988–89. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. தொழில் உறவு அமைப்பு விரிவாக்கம் | 6.32 | 7.63 |
| 2. செயல்முறை அமைப்பு விரிவாக்கம் | 6.00 | 6.46 |
| 3. பெண் தொழிலாளர்களின் நலத் திட்டங்களுக்கான சிறப்பு அமைப்பு. | 1.80 | 1.81 |
| 4. எடைகள் அளவைகள் அமைப்பு விரிவாக்கம் | 13.49 | 19.45 |

## அட்டவணை 5.

| | | |
|---|---|---|
| 1988–89 ஆம் ஆண்டிற்கான இலக்கு (உரிமக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்கள் சேர்த்து (ரூபாய் இலட்சத்தில்) | ரூ. | 80 லட்சம் |
| 1988–89 ஆம் ஆண்டில் வரவில் எட்டப்பட்ட இலக்கு (உரிமக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்கள் சேர்த்து).— | ரூ. | 1,14,62,264 |
| (அ) மோட்டார் போக்குவரத்துச் சட்டம் | ரூ. | 1,31,518.00 |
| (ஆ) தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் | ரூ. | 3,53,999.00 |
| (இ) பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம். | ரூ. | 52.028.00 |
| (ஈ) எடைகள்—அளவைகள சட்டம் | ரூ. | 1,08,66,319.00 |
| (உ) தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் | | 58,400.00 |
| மொத்தம் .. | ரூ. | 1,14,62,264.00 |

## தொழிற்சாலைகள் சட்டம்.

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை 1948 ஆம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம் மற்றும் 15 இதர தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்துகிறது.

1. தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டங்களை நிர்வகித்தல் தொழிலாளர் சட்டங்களை செம்மையாக செயற்படுத்துதற்கு இவ்வாய்வகத் துறை சீரிய நடவடிக்கை மேற்கொள்கிறது. ஆய்வின்போது காணப்படும் சட்டவிதிகளில் முரண்பாடுகளை நிர்வாகத்தினருக்குத் தெரியப்படுத்தி அதனை களைவதற்கான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கடுமையான முரண்பாடு களை சுட்டிக்காட்டி அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாத சூழ்நிலையில் இறுதியாக வழக்குத் தொடரப்படுகிறது.

வட்டார அலுவலர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாதந்தோறும் தொழிற் சங்க பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அவைகள் உடனுக் குடன் ஆய்வாளர்களால் கவனிக்கப்படுகின்றன.

பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் பணி செய்யும் நிலையை உறுதிப்படுத்த தொழிற்சாலைகளின் வரை படங்கள் தொழிற்சாலை ஆய்வகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டியுள்ளன. தொழிற்சாலை கட்டிடத்தின் உறுதித் தன்மை, காற்றோட்டம், ஒளி, பணி செய்யும் சூழ்நிலைகள் குறிப்பாக உற்பத்தி செய்யும் முறையில் உள்ள ஆபத்துக்கள், இயந்திரங்கள் அமைப்பு, பொருட்களைக் கையாளும் முறைகள் ஆகிய விபரங்களை கவனத்திற் கொண்டு வரை படங்கள் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.

2. பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிற்சி அளித்தல்:

தொழில் பாதுகாப்பு என்ற குறிக்கோளை விரிவுபடுத்தி தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மட்டும் அல்லாமல் கேடு விளைவிக்கக் கூடிய தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொதுமக்களின் நலனும், பாதுகாப்பும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இதனைத் தலைமை தொழிற்சாலை ஆய்வர் தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்தும் பெரும் விபத்து தடுப்புப் பிரிவு ஒன்று சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது. அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகளை ( Hazardous Process Industries ) பொறுத்தவரை மாவட்ட அளவில் அவசரக் கால நிலைமையை சமாளிக்க ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்க மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் உள்ள மாவட்ட அவசர காலக் குழுவுடன் சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டம் மற்றும் விபத்து தடுப்புப் பிரிவு (The testing and safety divisions and major Accident Hazard Control Cell) இணைந்து செயலாற்றுகிறது.

கீழ்க்கண்ட இரு குழுக்கள் தலைமைத் தொழிற்சாலை ஆய்வர் பணி அமைப்பில் உறுப்பினர் செயலாளர் கட்டுப்பாட்டின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது :—

(அ) பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கு மாநில அளவில் உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு (State Level, High Level Tripartite Safety Committee). இது மாநிலத்தில் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கொள்கைகள் வகுக்கும் மாநில அளவிலான முத்தரப்பு தலைமையிடமாகும்.

(ஆ) மாநில அளவில் வல்லுநர் குழு/பணிக்குழு ((State Level, Expert Committe/Task Force) தற்போதுள்ள இரசாயன மற்றும் கேடு விளைவிக்கும் தொழிற்சாலைகளில் போதுமான பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பிடவும் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பெரும் இன்னல்களை தவிர்க்கவும் தகுந்த பாதுகாப்பு நிலைகளை செயல்படுத்த கருத்து தெரிவிப்பது இக்குழுவின் பணியாகும்.

விபத்து தவிர்க்கும் நிலைகள் உற்பத்தித்திறனை அதிகமாக்குதல் மற்றும் தொழிலில் திறமைகளைக் காட்டுதல் போன்றவற்றின் சீரிய முறையில் பங்கு கொள்ள மாநில பாதுகாப்பு விருதுகள் மற்றும் தொழிலாளர்களை ஊக்கப்படுத்த சிரம்வீர் விருதுகள் வழங்கப்படுகிறது. பாதுகாப்புப் பற்றிய கருத்துக்கள் அதிக உற்பத்தி தொழிலில் சிரத்தை மற்றும் வேலை செய்யும் முறையில் புதிய கண்டுபிடிப்பு, முன்னேற்றம் சேதம் மற்றும் விபத்துக்களைக் குறைத்தல் ஆகியவற்றிற்கான கருத்துக்களை எடுத்துக் கூறும் தொழிலாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

3. அழுத்த இயந்திரங்கள் சோதனை :

தமிழ்நாட்டில் 12,400 அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறை தோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்புக்காக வேலை செய்யும்

தன்மைக்கு தகுதிச் சான்று வழங்க வேண்டும் என தொழிற்சாலை சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழிற்சாலை ஆய்வகத்துறை இப்பணியினை தாமே செய்து வருகின்றன. அழுத்த இயந்திரங்களை சோதனை செய்ய சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களுக்கு அதிகாரம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

4. சுகாதார பராமரிப்புத் துறை :

கடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் ( Major Accident Hazardous Control Cell ) இணைந்துள்ள தொழிற்சாலை துப்புரவு சோதனை கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் பணியாற்றுகின்றனர். இவ்வாய்வகத்துறையில் 8 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் பணியாற்றுகின்றனர். தொழிற்சாலை சட்டத்தின்கீழ் சான்றளிக்கப் பட்ட மருத்துவர்களாக நியமிக்கப்பட்டுள்ள உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் தொழிற் சார்ந்த நோய்கள் பரவக்கூடிய அபாயகரமான தொழிற்சாலைகளில் பணி யாற்றுகின்ற தொழிலாளர்களை பரிசோதிக்கின்றனர். ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொழிற்சாலை துப்புரவு சோதனை கூடத்திற்கு நவீன சோதனைத் தளவாடங்கள் நிர்மானிக்கப்பட்டுள்ளன.

உற்பத்தித் திறன் முறைகள்:

உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக ஒரு உற்பத்தித் திறன் பிரிவு தோற்று விக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு ஆலோசனை நல்கும் அமைப்பாக உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் அதிக ஆதாரங்களை பின்பற்றுதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு, இயக்க ஆய்வு நடத்துவது மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்தல் போன்ற பணிகளை இக்குழு கவனித்து வருகிறது.

தொழிலாளர் நலப் பணிகள்:

(அ) தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்:

தீப்பெட்டி தொழிற்சாலைகளில் 14 வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை தடுத்து அக்குழந்தைகளின் குடும்பத்தில் வருவாயை பெருக்குதல் மற்றும் அக்குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை அளித்தல் ஆகியவற்றை தேசிய குழந்தைகள் திட்டக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப் பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சங்கத்தினரால் இத்திட்டம் செயலாற் றப்படுகிறது.

(ஆ) தொழிலாளர் விபத்து ஆயுள் ஈட்டுறுதி தொகுதித் திட்டம்:

1–7–1986-ல் இருந்து காமராசர் மாவட்டத்திலுள்ள தீப்பெட்டி பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பயன் கருதி தமிழக அரசு தொழிலாளர் விபத்து ஆயுள் ஈட்டுறுதித் தொகுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தி பின்னர் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தியது. இத்திட்டம் ஈட்டுறுதி செய்யப்பட்டவர் களுக்குப் பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 14 வயது முதல் 65 வயது வரையிலான தீப்பெட்டி-பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவர். இத்திட்டம் தேசிய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது.

வேலை இலக்கு, முன்னேற்றம் மற்றும் நிறைவேற்றுதல்:

அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகளை பதிவு செய்து அதன் மூலம் பெரும் பான்மையான தொழிலாளர்களை தொழிற்சாலை சட்டத்தின்கீழ் கொண்டு வர ஒவ்வொரு தொழிற்சாலை ஆய்வரும் மாதம் ஒன்றுக்கு 5 புதிய தொழிற்சாலைகளை தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறியீடு நிர்ணயித்து, அக் குறியீட்டை அடைவதற்காக தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

1988 89 ஆம் ஆண்டில் 21,561 முறையான ஆய்வுகள் மேற்கொண்டதோடு விடுமுறை சிறப்பு திடீர் இரவு ஆய்வுகள் மற்றும் மேலாய்வுகள் ஆகியவற்றையும் சேர்த்து 31,522 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூலதனம் உள்ளிட்ட நிதிநிலை மற்றும் உள்ளபடியான செலவினம்:

(பகுதி 2 திட்ட முன் மொழிவு உள்ளிட்ட 1988–89 ஆம் ஆண்டுக்கான உள்ளபடியான செலவு):

| ஒப்புதலளிக்கப்பட்ட மூலதனம். | | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 2.00 | 1. மாநில தொழிற்சாலை ஆய்வகத்தின் ஒன்று சேர்ந்த தொழில் நலம் மற்றும் சுகாதார அலகு மற்றும் ஆய்வுக் கூடம் அமைத்தல். | 1.28 |
| 0.04 | 2. மதுரையில் மருத்துவ கவனிப்பு அலகு ஏற்படுத்தும் திட்டம் (தளவாடங்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது.) | 0.01 |
| 12.15 | 3. பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கும் திட்டம் .. .. | 12.53 |
| 2.07 | 4. சென்னையில் உற்பத்தித் திறன் குழு அமைக்கும் திட்டம். | 1.71 |
| 3.49 | 5. உயரந்தூக்கும் மற்றும் பாரந்தூக்கி கருவிகளை சோதனை செய்யும் திட்டம். | 4.66 |
| 31.00 | 6. தொழிற்சாலை ஆய்வகத் துறையை வலுவாக்குதல் திட்டம். | 28.49 |
| 50.75 | | 48.68 |

சிறப்புத் தகவல்கள்:

1987 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (திருத்தம்) சட்டம் 1–12–1987 முதல் அமுல்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின் மூலம் அபராத விதிகள் கடுமையாக்கப்பட்டு உரிமையாளர் மற்றும் மேலாளர்களை பின் வாங்கச் செய்கிறது. இச்சட்டத்தில் எந்த ஒரு விதியினையாவது மீறுவதற்கு அதிகப்பட்சமாக ரூ. 2,000-யிலிருந்து, ரூ. 1,00,000 ரூபாயாக அபராதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதிகரிக்கப் பட்டுள்ள அபராத விதிகளாலும் செம்மையான சட்ட அமுலாக்கத்தினாலும் விதிமுறைகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

பணியாளரமைப்புச் சட்டங்கள்:

தொழிற்சாலைகள் சட்டம், தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் வரும் தொழிற் கூடங்களின் எண்ணிக்கையும் அவற்றில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டு இருக்கின்றன.—

| தொழிற்கூடங்களின் எண்ணிக்கை. | பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 14,808 | 8,20,469 |

இக்கால அளவில் உரிமக் கட்டணமாக ரூ. 1,07,29,057 வசூலிக்கப்பட்டது.

வழக்குத் தொடருதல்:

இந்த ஆண்டில் 2,510 வழக்குகள் தொடரப்பட்டு 2,134 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. அபராதமாக ரூ. 9,73,116 பெறப்பட்டது.

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த நிலையம் தற்போது தமிழ்நாடு செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தலைமையின்கீழ் உள்ள ஆளுநர் குழுவினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இயக்குநர் ஒருவர் இந்நிலையத்தின் தலைவராக பணியாற்றுகிறார்.

பயிற்சி திட்டங்கள் :

இந்த நிலையம் நிர்வாகப் பணியாளர்களுக்கும், தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் பல்வேறு வகையான பயிற்சித் திட்டங்களை கீழ்க்காணும் தலைப்புகளில் நடத்தி வருகிறது. தொழில் உறவு, பிரச்சனைகளின் தீர்வு, நிர்வாகத்தில் பங்கு, உள் விசாரணை, தொழிலாளர் சட்டங்கள், ஊக்குவித்தல், தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறன், தொழிற்சாலைகளில் ஒழுங்குமுறை, சுயமேம்பாடு.

இத்துடன் சமரச அலுவலர்கள் மற்றும் கிராமப்புற அமைப்பாளர்கள் ஆகியவர்களுக்கு புத்தாக்க பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இதுவரை 26 பயிற்சித் திட்டங்கள் (புத்தாக்க பயிற்சி, இயல்பாக்கப் பயிற்சி உள்ளிட்ட) நடத்தப்பட்டுள்ளன. இதில் 578 பேர் பங்கு பெற்றுள்ளனர்.

பணியிடை பயிற்சித் திட்டம் :

பொதுத் துறை நிறுவனங்கள் அழைப்பை ஏற்று இந்த நிலையம் தொழிலாளர் நிர்வாகத்தில் பல்வேறு பணியிடைப் பயிற்சித் திட்டங்களை, இந்த நிறுவனங்களில் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் பயிற்சிகளை நடத்தி வருகிறது. கோயம்புத்தூரில் உள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்திலும், திண்டுக்கல்லில் உள்ள ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலும் இத்தகைய பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. கேரளா தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு நிலையத்துடனும், ஸ்டேட் பாங்க் அலுவலர் சங்க தொழிற்சங்கத்துடனும் இணைந்து கூட்டாக பல பயிற்சித் திட்டங்களை இந்த கல்வி நிலையம் நடத்தி உள்ளது.

இந்த நிலையம் இதுவரை 566 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி திட்டங்களை நடத்தி உள்ளது. இதில் இதுவரை 24,254 பேர் பங்கு கொண்டுள்ளனர்.

தொழிலாளர் கல்வித் திட்டங்கள் :

1978ஆம் ஆண்டு முதல் இந்த நிலையத் தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டய வகுப்பு ஒன்றினை நடத்தி வருகிறது. இதில் ஆண்டு தோறும் 40 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இந்த படிப்பு தொழிலாளர் அலுவலர் நியமனத்திற்கு முன்னுரிமை தரும் கல்வித் தகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 91 பேருக்கு முதுகலைப் பட்டயங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த நிலையம் தொழிலாளர் நிர்வாகத்தில் ஆண்டுதோறும் 40 மாணவர்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வகுப்புகளையும், 20 மாணவர்களுக்கு முதுகலைப் பட்டப் படிப்பு வகுப்புகளையும் நடத்தி வருகிறது. இந்த வகுப்புகள் சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப் பட்டதாகும். இளங்கலை பட்டப் படிப்பு வகுப்பில் 71 மாணவர்களும் முதுகலைப் பட்ட வகுப்பில் 19 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

நூலகம் :

இந்த கல்வி நிலையத்தில் சிறப்பான நூலகம் ஒன்று இயங்கி வருகிறது. இதில் தொழிலாளர் நிர்வாகம் தொடர்பான 4,773 நூல்களும் 53 மாத இதழ்களும் இடம் பெற்றுள்ளன. இந்த நூலகம் மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், துறை அலுவலர்கள் ஆகியோருக்கு பயன்பட்டு வருகிறது.

வெளியீடுகள் :

1978ஆம் ஆண்டு முதல் " உழைப்பவர் உலகம் " என்னும் தமிழ் மாத இதழ் இந்நிலையத்தால் வெளியிடப்பட்டு வருகிறது. இந்த இதழில் தொழிலாளர்களுக்கு அறிவு புகட்டும் வகையில் உயர்நீதிமன்றங்கள், உச்சநீதிமன்றம் வெளியிடும் தொழிற் தகராறுகள் தொடர்பான தீர்ப்புகளும் விலைவாசி தொடர்பான புள்ளி விவரமும், தொழில் உறவு தொடர்பான பல வகை செய்திகளும் இடம் பெற்று வருகின்றன. தொழிலாளர் சட்டங்களில் தொழிலாளர்களுக்கு தெளிவு காட்டும் வகையில் "கேள்வி பதில் " என்னும் பகுதி இந்த இதழில் வெளியிடப்படுகிறது. இந்தப் பகுதித் தொழிலாளர்கள் அனைவராலும் விரும்பி படிக்கப்படுகிறது " தமிழ்நாடு தொழிலாளர் புள்ளி விவரம் 1987 " எம் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்ப நலம் மேற்பட 1—4—1975 முதல் தன்னாட்சி கொண்ட அமைப்பாக செயல்பட அமைக்கப்பட்டது. இவ்வாரியத் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஆவார்.

1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டத்தின் கீழ்வரும் தொழிலாளி, ஆண்டொன்றுக்கு ரூ. 2 வீதம் நல நிதியும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 4 வீதம் வேலையளிப்பவரும் நிதி செலுத்தி வருகின்றனர். அரசும் ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 2 வீதம் நலநிதி அளித்து வருகிறது. இதனைத் தவிர, அபராதம் செலுத்தப்படாத கூடுதல் தொகை சம்பளத்திலிருந்து பிடித்தம் மற்றும் நன்கொடைகள் ஆகியவைகள் தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படுகின்றன.

இவ்வாரியத்தின் ஆக்கப்பணிகள் கீழே விவரிக்கப்படுகின்றன :

*தொழிலாளர் நல மையங்கள்.*—இம்மாநிலம் முழுமையிலும் 52 தொழிலாளர் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளில் இரு பிரிவுகள் உள்ளன. அவைகள் (1) தையற்பயிற்சிப் பிரிவு (2) குழந்தைகள் காப்பகப் பிரிவு. தையற் பயிற்சி பிரிவில் தொழிலாளர்களைச் சார்ந்த 50 பேர்களுக்கு உடைகள் தயாரித்தல் வேலைகள் மற்றும் அடிப்படை தையற்பயிற்சி ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

குழந்தைகள் காப்பகத்தில் 2½ வயது முதல் 5 வயது வரையிலுள்ள 50 குழந்தைகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களை தகுதியான பாலசேவிகா கவனித்துக் கொள்வர். குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி முடிவில் சான்றிதழ் அளிக்கப்படுகின்றது. குழந்தைகளுக்கு தினமும் மதிய சத்துணவு (தேவையான கலோரி) அளவில் 150 மில்லி பால் தினமும் மற்றும் 2 முட்டை 2 பழங்கள் மோர் ஆகியவை ஒவ்வொரு வாரமும் அளிக்கப்படுகின்றன. இரண்டு ஜோடி சீருடை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. தகுதி வாய்ந்த மருத்துவரால் மாதத்திற்கு இருமுறை குழந்தைகள் உடல் நலம் பரிசோதிக்கப்பட்டு தேவையான மருந்துகள் வாங்கி தரப்படுகின்றன.

*1—4—1988 முதல் 31—3—1989 வரை வாரிய ஆக்கப்பணிகள் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை விவரம்.*

| | திட்டம். | பயனடைந்தோர்கள் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | மூக்கு கண்ணாடி விலையை திரும்ப அளித்தல் | 3,914 | 34,310.00 |
| 2 | தட்டச்சு/சுருக்கெழுத்து பயிற்சி-தேர்வுக் கட்டணம் திருப்பி அளித்தல் .. | 896 | 1,03,676.00 |
| 3 | புத்தக வங்கித் திட்டம் | 5,440 | 2,23,369.55 |
| 4 | இறுதிச் சடங்கு செலவுத் தொகை | 778 | 2,23,100.00 |
| 5 | காது கேட்கும் கருவிகள் | 30 | 15,861.00 |
| 6 | மூன்று சக்கர வண்டிகள் | 7 | 11,960.00 |
| 7 | செயற்கை உறுப்புகள் .. .. | 6 | 3,428.00 |
| 8 | பொறியியல் பட்டப்படிப்பு உதவித் தொகை | 92 | 92,000.00 |
| 9 | மருத்துவ பட்டய ஆய்வு உதவித் தொகை | 50 | 50,000.00 |
| 10 | சட்டப்படிப்பு உதவித் தொகை | 14 | 14,000.00 |
| 11 | விவசாயப் பட்டப் படிப்பு உதவித் தொகை .. | 8 | 8,000.00 |
| 12 | பொறியியல் பட்டப் படிப்பு உதவித் தொகை | 216 | 1,29,600.00 |
| 13 | மருத்துவப் பட்டப் படிப்பு உதவித் தொகை .. | 17 | 10,200.00 |
| 14 | தொழிற்பயிற்சி பட்டயப் படிப்பு உதவித் தொகை | 126 | 37,800.00 |
| 15 | மேநிலைப் படிப்பு .. | 72 | 36,000.00 |

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி.

வேலை வாய்ப்பு :

• தமிழ்நாட்டில் நான்கு மண்டலத் துணை இயக்குநர்களின் அலுவலகங்கள் உள்ளிட்ட 45 அலுவலகங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

வேலை வாய்ப்பு அலுவலகங்களின் புள்ளி விவரங்கள் :

1—4—1988 முதல் 31—3—1989 வரையிலான காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மொத்தம் 5,49,213 விண்ணப்பதாரர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். இந்த அலுவலகங்களுக்கு மொத்தம் 61,677 பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 47,826 விண்ணப்பதாரர்கள் பணிகளில் அமர்த்தப்பட்டு உள்ளனர். 31—3—1989 தேதிய நிலவரப்படி மொத்தம் 26,59,425விண்ணப்பதாரர்கள் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவேட்டிலும் காத்திருக்கிறார்கள்.

வேலை நிலவரத் தகவல் :

வேலை வாய்ப்பு அலுவலகம் (கட்டாய காலியிட அறிவிப்பு சட்டம்), 1959-ன்படி வேலை வாய்ப்பு அலுவலகங்கள் வேலை நிலவரத் தகவல்களை பல்வேறு நிறுவனங்களிலிருந்து காலாண்டு இடைவெளியில் திரட்டுகின்றன.

வேலை நிலவரத் தகவல் திட்டத்தின்கீழ் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியாளர்கள் மற்றும் தனியார் துறையில் வேளாண்மை நீங்கலாக பிற தொழில்களில் 25-ம் அதற்கு மேலும் பணியாளர்களைக் கொண்டுள்ள நிறுவனங்களிலுள்ள பணியாளர்கள் எண்ணிக்கை குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தொழில்துறை வழிகாட்டும் திட்டம் :

மாணவர்கள் மற்றும் வேலை தேடுபவரிடையே தொழிலுக்காக திட்டமிடும் எண்ணத்தை பரப்பும் வகையில் உயர்நிலைப் பள்ளிகளில் மற்றும் கல்லூரிகளிலும் தொழில்முறை வழிகாட்டும் கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. இந்த அறிக்கைக் காலத்தில் மாநிலத்திலுள்ள அனைத்து தொழில்துறை வழிகாட்டும் பிரிவுகளுக்கும் மொத்தம் ரூ. 17,400க்கு இக்கண்காட்சிகள் நடத்தும் பொருட்டு நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தொழில் நெறி ஆராய்வும் புத்தகங்கள் மற்றும் கையேடுகள் வெளியீடும் :

இந்த அறிக்கைக் காலத்தில் (அ) Should you be a Chemist (ஆ) Career opportunities in Retailing என்னும் தலைப்பில் இரண்டு சிற்றேடுகள் இவ்வியக்கக தொழில் நெறி ஆராய்வு மையத்தால் வெளியிடப்பட்டு அனைத்து கள அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கீழ்க்காணும் தலைப்பிட்ட தொழில் நெறிக் கையேடுகள் மற்றும் புத்தகங்கள் சென்னை அரசு மைய அச்சகத்தில் அச்சில் உள்ளன.

(அ) எலக்ட்ரானிக் என்ஜினியர் (ஆங்கிலம்).

(ஆ) ஊனமுற்றோருக்கு தமிழ்நாடு அரசு அளித்திடும் சலுகைகள்.

(இ) விஞ்ஞானம் கலை மற்றும் வணிகத் துறையில் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் சில ஆலோசனைகள்.

இவை தவிர, கீழ்க்காணும் தலைப்புகளிட்ட தொழில் நெறி சுவரொட்டிகள் இவ்வியக்கக திரை அச்சுப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டது. அவை லாமினேட் செய்யப்பட்டுக் கள அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன.

1. They know their destination, Do you ?

2. All roads may lead to Rome but not all careers to sucess. Planned career alone lead to sucess.

இத்தகைய சுவரொட்டிகள் மற்றும் வரைபடங்களை விரைவாகவும் (திறனோடும்) தயாரிக்க ஏதுவாக இவ்வியக்ககதிரை அச்சுப் பிரிவிற்கு ''இருட்டறை'' (Dark Room) ஒன்று பொதுப் பணித்துறை மூலமாக அமைத்துத் தரப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளைக் கம்ப்யூட்டர் மூலம் மேற்கொள்வது :

மத்திய திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் வேலைவாய்ப்பு அலுவலக பணிகளை கம்ப்யூட்டர் மூலம் மேற்கொள்ளும் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது :

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-40 (உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் உட்பட).

2. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், அடையாறு, சென்னை-20.

3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கோயம்புத்தூர்.

4. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருச்சி (துணை வேலைவாய்ப்பு அலுவலகம், கரூர் உட்பட).

தற்போது இதற்கெனத் தேவைப்படும் கம்ப்யூட்டர்களை வாங்குவதற்கான பணிகள் நடைபெறுகின்றன.

வேலை தொடர்பு அலுவலகம் :

இந்த அறிக்கை காலத்தில் தாயகம் திரும்பிய 10 அகதிகளுக்கு சுய தொழில் மேற்கொள்ளும் பொருட்டு நிதியுதவி பெற உதவி செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவு அகதிகளுக்கு வேலைவாய்ப்புகள் பயிற்சி வசதிகள் மற்றும் நிதி உதவி செய்வதற்காக அமைக்கப்பட்டன.

இதே காலத்தில் வேலூரில் உள்ள ஆடை மற்றும் ஹோல்டால் தயாரிக்கும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற விருப்பமுள்ள ஒருவர் பரிந்துரைக்கப்பட்டார்.

கடலூர் மற்றும் நாகப்பட்டினத்திலுள்ள மீன்வள பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் மீன்பிடி பயிற்சிக்கான 5 இடங்களுக்கு அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்தும் தங்கியுள்ள 18 அகதிகளை பரிந்துரை செய்யவும் இப்பிரிவு ஏற்பாடு செய்தது.

இப்பிரிவின் மூலம் தொழில் பழகுநர் (அப்ரண்டீஸ்) பயிற்சிக்கு விண்ணப்பதாரர்கள் பரிந்துரை செய்யப்படுவதோடு மத்திய அரசு சார்பு நிறுவனங்களின் உள்ள காலி பணியிடங்களுக்கும் தாயகம் திரும்பியவர் பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம் :

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உயிர்ப்பதிவேட்டில் 5 ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்கும் கீழ்க்கண்ட 7 பிரிவினருக்கு இவர்களின் குடும்ப வருமானம் ரூ. 2,000-க்குக் குறைவாக இருக்குமானால் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் அளிக்கும் திட்டம் 1—7—1980 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது :

1. பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள்.
2. இடைநிலை ஆசிரியர்கள்.
3. முதுநிலை ஆசிரியர்கள்.
4. உடற்கல்வி ஆசிரியர்கள் (கீழ்நிலை/மேல்நிலை).
5. தமிழ் ஆசிரியர்கள்/மொழி ஆசிரியர்கள்.
6. தொழிற்கல்வி ஆசிரியர்கள்.
7. பட்டயதாரர்கள்.
8. எஸ்.எஸ்.எல்.சி., ப்ளஸ் டு மற்றும் பி.யூ.சி.

வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை மாதம் ஒன்றுக்கு பட்டதாரிகளுக்கு ரூ. 100ம், புதுமுகவகுப்பு, ப்ளஸ் 2 தேறியவர்களுக்கு ரூ. 75ம், பள்ளிஇறுதி வகுப்புத் தேறியவர்களுக்கு ரூ. 50ம் வழங்கப்படுகிறது.

சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் :

இந்த அறிக்கைக் காலத்தில் இவ்வியக்ககத்தில் இயங்கும் சுய வேலைவாய்ப்புப் பிரிவு கீழ்க்காணும் வகையில் சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது :

(அ) வீட்டுவேலை மையம் அமைத்தல் : இத்திட்டத்தின்கீழ் சென்னையில் 9 மையங்களும், வெளி மாவட்டத்தில் 13 மையங்களும் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 66 தொழில் நுட்ப பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள், வேலூர் மற்றும் கோயம்புத்தூர்:**

இப்பிரிவுகளின் முயற்சியின் காரணமாக 428 நபர்களுக்கு ரூ. 63.75 இலட்சப் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் தொழில் துவங்க இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டு மட்டும் இப்பிரிவுகளில் பதிவேட்டில் மொத்தம் 3,712 மனுதாரர்கள் சுய வேலைவாய்ப்புக்காக பதிந்திருந்தனர். 1988–ஆம் ஆண்டு மட்டும் 2,990 விண்ணப்பதாரர்கள் சுய வேலைவாய்ப்பு பெற பதிவு செய்யப்பட்டனர். 3,321 மனுதாரர்களில் பெயர்களே வங்கிகள் மற்றும் மாவட்ட தொழில் மையங்களுக்கு நிதியுதவி வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

**சிறப்புத் திட்டங்கள்:**

தொழில் நுட்ப பயிற்சி சான்றுபெற்றவர்களிடையே சுயவேலைவாய்ப்பு திட்டம் பகுத்துதல் —

இத்திட்டத்தின்கீழ் சுய வேலைவாய்ப்புத் தொழில் துவங்க குடும்பத்தில் ஒருவர் வேலைத் திட்ட நிதியிலிருந்து ஒருவருக்கு கடன் தொகையில் நாலில் ஒரு பங்கு அல்லது அதிகபட்ச மான்யமாக ரூ. 2,000, அதிகபட்ச கடன் ரூ. 10,000 வரை வங்கிகள் மூலம் வழங்க அரசு அனுமதி அளித்ததின்பேரில் 368 நபர்கள் பயனடைந்துள்ளனர். ரூ. 6.21 லட்சம் மான்யமாக அளிக்கப்பட்டது ரூ. 28.16 லட்சம் கடனுதவியாக அளிக்கப் பட்டது.

**ஆதிதிராவிட பழங்குடியினர்க்கான நல்வாழ்வுத் திட்டங்கள் :**

பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேரும் பொருட்டு நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்த அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு இப்பயிற்சி வகுப்புகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய மண்டல மையங்களில் நடத்தப்பட்டது. நான்கு மண்டல மையங்களிலும் மொத்தம் 303 விண்ணப்பதாரர்கள் இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டனர். இதில் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 35 ஆகும்.

**பயிற்சி :**

சிதம்பரத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளில் 96 இருக்கைகளுடன் சிறப்பு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று துவங்கப்பட்டது :

| | | இருக்கைகள். |
|---|---|---|
| 1. | மின்சாரப் பணியாளர் | 32 |
| 2. | கம்மியர் (மோட்டார் வண்டி) | 32 |
| 3. | கம்மியர் (குளிர்பதனம் மற்றும் தட்ப வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்). | 32 |
| | மொத்தம் | 96 |

ஆகஸ்ட் 1988–ல் 48 இருக்கைகளுடன் முதல் யூனிட் சேர்க்கை நடைபெற்றது. ஆகஸ்ட் 89-ல் இரண்டாவது யூனிட்டில் பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு விழுக்காடு உள்ளது:—

| | | சத விகிதம். |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் .. | 80 |
| 2. | பழங்குடியினர் .. | 5 |
| 3. | பிற்பட்டோர் .. | 15 |

ரூ. 6.52 பெறுமானமுள்ள கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கைவினைஞர் பயிற்சி திட்டத்தில் கீழ்க்கண்ட அச்சுத் தொழிற்பிரிவுகள் துவங்கப்பட்டன: —

1. அச்சு இயந்திரம் இயக்குபவர்.
2. கையால் அச்சுக் கோப்பவர்.
3. புத்தகம் கட்டுபவர்.
4. நிழற்படம் எடுப்பவர்

**28 தொழிற்பயிற்சி நிலையங்கள் இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் போர்டு அமைத்தல்:**

28 தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ. 1.45 இலட்சம் செலவில் பவர் பேக்டர் ஒரே சீராக பராமரிக்க இன்ஸ்ட்ருமென்ட் பேனல் போர்ட் அமைக்கப்பட்டது.

நாகப்பட்டினம் தொழிற்பயிற்சி நிலைத்தில் முஸ்லீம் சிறுபான்மையினருக்காக மத்திய நிதியுதவித் திட்டத்தின் கீழ் கம்மியர் (வானொலி மற்றும் தொலைக்காட்சி) தொழிற்பிரிவு 16 இருக்கைகளுடன் ஆகஸ்ட் 1988 முதல் துவங்கப்பட்டது.

ரூ. 0.60 இலட்சம் பெறுமானமுள்ள கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன.

**சங்கராபுரம் சிறுதொழிற் பயிற்சி நிலையத்தை மேம்படுத்துதல் :**

சங்கராபுரத்தில் பழங்குடியினருக்காகத் துவங்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையம் தேசிய வாழ்வியல் பயிற்சிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கீழ்க்கண்ட 3 தொழிற் பிரிவுகளுடன் ஆகஸ்ட் 1989 முதல் முழு அளவிலான தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்தப்படுகிறது :

| | இருக்கைகள். |
|---|---|
| 1. கம்மியர் (உசல்) | 16 |
| 2. கம்பியாள் | 32 |
| 3. கம்மியர் (மோட்டார் வண்டி) | 32 |
| மொத்தம் | 80 |

இத்தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நிரந்தரக்கட்டிடம் கட்ட ரூ. 8.63 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கட்டிடவேலை விரைவில் துவங்கப்பட உள்ளது.

**அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் சேர்க்கை :**

தமிழ்நாட்டில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் 43 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் 1988 சேர்க்கையாண்டில், 9,700 பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டனர்.

**தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புத் திட்டம் :**

1987 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான இத்திட்டம் 8 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 1,475 தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்க இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

**தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் என்.சி.வி.டி. அங்கீகாரம் பெறுதல் :**

1987 ஆம் ஆண்டு இறுதியில் 119 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் என்.சி.வி.டி. அங்கீகாரம் பெற்றிருந்தன. 1988-ஆம் வருடத்தில் 56 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் என்.சி.வி.டி. அங்கீகாரம் பெற்றுள்ளன. எனவே, மார்ச் 1989 வரை 175 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் நிரந்தர என்.சி.வி.டி. அங்கீகாரம் பெற்றுள்ளன.

**தொழில் நுட்ப பணியாளர்களுக்கான மிகு விரைவுத் திட்டம் :**

தொழில் நுட்ப பணியாளர்களுக்கான மிகு விரைவுத் திட்டம் கீழ்க்கண்ட 8 தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது :—

(1) அம்பத்தூர், (2) கோயம்புத்தூர், (3) மதுரை, (4) நாகப்பட்டினம், (5) தேனி, (6) பேட்டை, (7) ஓசூர், (8) என்.எம்.ஆர்.வி. தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்), நாகர்கோவில்.

**தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் :**

தொழிற்பழகுநர் சட்டம் 1961 நாடாளுமன்றத்தில் டிசம்பர் மாதம் 1961-ல் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 130 தொழிற் பிரிவுகளில் பல்வேறு தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநர்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. 14 தொடர் அறிவுரை மையங்களில் தொழிற் பழகுநர்களுக்கு என வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | ஒதுக்கீடு செய்யப்பட்ட இருக்கைகள். | தொழிற் பழகுநர்களின் எண்ணிக்கை. | நிறு வனங் கள். | விழுக் காடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம் | 14,973 | 13,491 | 1,798 | 90 |

## தனியார் தொழிற்பள்ளிகள் சம்பந்தப்பட்ட நிர்வாக அறிக்கை:

மாநிலத்திலுள்ள 155 தனியார் தொழிற்பள்ளிகளில் 11,000 மாணவர்கள் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெறுகிறார்கள். இவ்வாண்டு 15 புதிய தொழில் பள்ளிகளுக்கு மாநில அளவிலான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏறத்தாழ 5,000 மாணவர்கள் பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1988-89 நிதியாண்டில் தனியார் தொழிற்பள்ளிகளுக்கு 20 இலட்சம் ரூபாய் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம் (ட்ரைசம்) :

இத்திட்டம் இத்துறையால் செப்டம்பர் 1979 முதல் நடத்தப்பட்டு வருகிறது. 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 22 தொழிற் பிரிவுகள் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஊரக இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களை சுய வேலையில் அமர்த்த இத்திட்டம் வழிவகை செய்கிறது. பயிற்சியாளர்களுக்கு மாதம் தலா ரூ. 200 உதவித்தொகை வழங்கப்படுகிறது. தலா ரூ. 500 பெறுமான கருவிப்பெட்டி இலவசமாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் நடப்பு ஆண்டில் 885 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும், இதுவரை இத்திட்டத்தின் கீழ் 21,064 பேர்கள் பயிற்சி முடித்து சென்றுள்ளார்கள்.

## உற்பத்தி சார்புப் பயிற்சித் திட்டம்:

இத்திட்டம் அம்பத்தூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் அமுலாக்கப்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களிலிருந்து பணிகள் பெறப்பட்டு அவைகள் ஆக்கப் பெற்று பொருட்களாக செய்து தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையில் 50 சத விகிதம் பணியாளர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. 1-4-1980 முதல் 31-3-1989 முடிய மேற்கூறிய 3 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ. 45,999.65 மதிப்புள்ள 221 பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

| வரிசை எண். | திட்டத்தில் சேராதது. | 1988-89-ல் செலவினங்கள் (இலட்சங்கள்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | தலைமையிடப் பணியாளர்கள் .. | 39.67 |
| 2 | அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் | 604.08 |
| 3 | மாலைநேர வகுப்புகள் .. .. | 5.99 |
| 4 | தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் | 29.52 |
| 5 | வட்டார அலுவலகங்கள் அமைத்தல் | 14.88 |
| 6 | தொழிற்பள்ளிகள் | 20.43 |
| | மொத்தம் | 714.57 |

| வரிசை எண். | திட்டம். | இலட்சங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | மாநில இயக்குநர் அலுவலகத்தைப் வலுப்படுத்துதல் .. | 1.49 |
| 2 | தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் | 14.53 |
| 3 | மத்திய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இளநிலை பயிற்சி அலுவலர்களை முகமையில் அனுப்பிவைத்தல் | 1.32 |
| 4 | தொழிற்பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல் | 136.14 |
| 5 | தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல் | 32.53 |
| 6 | கிராமங்கட்கு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிக்கும் திட்டம் .. .. .. .. .. | 7.48 |
| 7 | மாலை நேர வகுப்புகள் | 2.05 |
| 8 | தொழிற் பிரிவுகளை பலதிறப்படுத்துதல் | 2.01 |
| 9 | மகளிருக்காக புதிய தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடங்குதல் .. .. .. .. | 8.78 |
| 10 | சங்கராபுரத்தில் சிறிய தொழிற்பயிற்சி நிலையம் | 2.63 |
| 11 | தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆறு தொழிற்பிரிவுகளில் மகளிருக்காக தனி பிரிவுகளை ஏற்படுத்துதல் .. .. | 2.00 |
| | | 210.96 |

4,250 ஏனைய சமூகப்பணிகள் குறித்த மூலதனச் செலவுகள்.

# அத்தியாயம் 18

## சட்டத்துறை.

### சட்டமியற்றுதல்.

1988 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து 1989 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் வரையிலான கால அளவின்போது பத்து தமிழ்நாடு சட்டங்களும் தமிழ்நாட்டிற்கான எட்டு குடியரசுத் தலைவரின் சட்டங்களும் வெளியிடப்பட்டன. அவற்றுள், ஒன்று முதன்மைச் சட்டமாகும். எஞ்சியவை திருத்தச் சட்டங்களாகும்.

1. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தச்) சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 1/1988).—இந்தச் சட்டம், கோயம்புத்தூர் சந்தைக் குழுவை கலைத்துக் கைக்கொள்ளும் கால அளவை, 1988 ஆம் ஆண்டு மே 10 ஆம் நாளுக்கப்பால் ஓராண்டுக் கால அளவுக்கு நீட்டிக்கும் பொருட்டு, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவைத் திருத்துவதற்கென இயற்றப்பட்டுள்ளது.

2. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராண்மைச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 2/1988).—இந்தச் சட்டம் 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் (த.நா. சட்டம் 25/1981) ஆகியவற்றைத் திருத்தி அதற்கென நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவை ஓராண்டுக் கால அளவுக்கு நீட்டிப்பதற்கென இயற்றப்பட்டுள்ளது.

3. 1988 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு (திருத்தச்) சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 3/1988).—இந்தச் சட்டம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கான முதல் துணைவேந்தரையும் முதல் பதிவாளரையும், அரசு நியமிப்பதற்கு இயலும் வகையிலும், தமிழ்நாடு சட்டம் 37/1987 வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குள் முதல் துணைவேந்தரையும் முதல் பதிவாளரையும் நியமிக்கப்பட வேண்டுமென அக்கால அளவை நீட்டித்தும், 1987 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக, தமிழ்நாடு சட்டத்தைத் திருத்துவதற்கென இயற்றப்பட்டுள்ளது.

4. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 4/1988).—இந்தச் சட்டம், தனி அலுவலர்களின் நியமன கால அளவை 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் நாளுக்கப்பால் மேலும் ஓராண்டுக்கால அளவுக்கு நீட்டிப்பதற்கு வகைசெய்யும்பொருட்டு இயற்றப்பட்டுள்ளது.

5. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாரச்செலவு நிதிய (திருத்தச் சட்டம்) (குடியரசுத் தலைவரின் சட்டம் 6/1988).—இந்தச் சட்டம், 1989 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையில் நிதியத்தின் உள்ளடக்கத் தொகையினை (Corpus of the Fund) தற்காலிகமாக ரூ. 150 கோடியாக உயர்த்துவதற்கு இயற்றப்பட்டுள்ளது.

6. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 7/1988).—இந்தச் சட்டம், தனி அலுவலர்களின் நியமன கால அளவை 1988 ஆம் ஆண்டு அக்டோபர் 9 ஆம் நாளுக்கப்பால் மேலும் ஓராண்டுக்கால அளவுக்கு நீட்டிப்பதற்கு வகைசெய்வதற்காக இயற்றப்பட்டுள்ளது.

7. 1988 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 11/1988).—இந்தச் சட்டம், தனி அலுவலர்களின் பதவிக்கால அளவை 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாளுக்கப்பால் மேலும் ஓராண்டுக் கால அளவுக்கு நீட்டிப்பதற்கென, 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டத்தைத் திருத்தவும் இந்த நோக்கத்திற்காக தமிழ்நாடு சட்டம் 33/1978 இன் 5 (2) ஆம் பிரிவைத் தக்கவாறு திருத்தவும் இயற்றப்பட்டுள்ளது.

8. 1988 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள், நிலைக்கட்டளைகள் ஆகியவற்றின் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 13/1988.)—இந்தச் சட்டம், பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் நிலைக்கட்டளைகளின் மேலாண்மையானது அரசிடம் ஒப்படைக்கப்பட்டு மேவியுள்ள கால அளவினை 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 ஆம் நாளுக்கப்பால் மேலும் ஓராண்டுக்கால அளவுக்கு நீட்டிக்கும் பொருட்டு

1981 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் நிலைக்கட்டளைகள் ஆகியவற்றின் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 11/1981) திருத்தவும், அந்நோக்கத்திற்கென, அச்சட்டத்தின் 3 மற்றும் 8 ஆம் பிரிவுகளைத் திருத்தவும் இயற்றப்பட்டுள்ளது.

9. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்புகளை நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் 4/1988).—இந்தச் சட்டம், தற்போது இருந்துவரும் பணத்தண்டத்தொகைகளை பெருமளவு (அதிகபட்சம்) ரூ. 2,000 ஆக உயர்த்துவதற்கு வகைசெய்யும் பொருட்டு, 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பினை நிர்ணயித்தல்) சட்டத்தின் (த. நா. சட்டம் 58/1961), 85(1) 86, 87, 88, 89, 90 மற்றும் 91 ஆகிய பிரிவுகளைத் திருத்துவதற்கென இயற்றப்பட்டுள்ளது.

10. 1981 ஆம் ஆண்டு தொழிற் பூசல்கள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1988).—இந்தச் சட்டம், மையச் சட்டம்XIV-1947 இன் 2A பிரிவின்படி எடுக்கப்பட்ட இசைவிணக்க நடவடிக்கை (corcilation proceedings) எதனின்போதும் தீர்வு எதுவும் ஏற்படாதவிடத்து குறையுற்ற தனியொரு தொழிலாளி அத்தகைய தொழிலாளர் நீதி மன்றத்தினால் நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவதற்காக, அரசின் எந்தவிதமான சுட்டுகையுமின்றி நேரடியாகவே, தொழிலாளர் நீதிமன்றத்திற்கு வகுத்துரைக்கப்பட்ட முறையில், மேற்சொன்ன சட்டத்தின் 2-A பிரிவின் கீழ் எழும் பூசல் எதனையும் தொடர்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தொழிலாளர் நீதிமன்றமும் அத்தகைய பூசல் நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவதற்காகத் தன்னிடம் சுட்டியனுப்பப்பட்டுள்ளது போன்றே அத்தகைய பூசலை நீதிமுறையில் தீர்மானிப்பதற்கு முற்படுதல் வேண்டும்; மற்றும் தொழில் பூசல்கள் தொழிலாளர் நீதிமன்றத்தால் நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவது தொடர்பான இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அனைத்தும் அத்தகைய நீதிமன்றத் தீர்மானிப்புக்குப் பொருந்துதல் வேண்டும். மற்றும் பதிவுருக்கள் எவற்றையும் தருவித்தல் மட்டுமின்றி ஆட்களை முன்னிலையாக்குதலைச் செயற்படுத்தவும் அவர்களை உறுதிமொழியின்மீது விசாரணை செய்வதற்கும் அல்லது ஆவணங்களை முன்னிடுமாறு கட்டாயப்படுத்துவதுடன்கூட விசாரணை செய்வதற்கு ஆணைகளைப் பிறப்பிப்பதற்கும், இசைவிணக்க அலுவலருக்கு அதிகாரமளிக்க வகைசெய்யும் பொருட்டு மேற்சொன்ன மையச் சட்டம்XIV-1947-இன் 2-A மற்றும் 11-ஆம் பிரிவுகளைத் திருத்துவதற்கென இயற்றப்பட்டுள்ளது.

11. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருந்துச் சரக்குகள் மற்றும் பிற பொருட்கள் (சட்டமுரணான உடைமை) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 6/1988).—இந்தச் சட்டம், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான மருந்துச் சரக்குகள் மற்றும் பிற மருத்துவப் பொருட்களைச் சட்ட முரணான உடைமையில் வைத்திருக்கும் குற்றத்திற்கு தண்டனை வழங்குவதற்கு வகை செய்வதற்கு இயற்றப்பட்டுள்ளது.

12. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1989).—இந்தச் சட்டம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மதுபான வகைகள் மீது விதிக்கத்தக்க ஆயத்தீர்வையின் பெருமளவு (உயர்ந்தபட்ச) வீதத்தை ரூ. 60 ஆக உயர்த்துவதன் பொருட்டு, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தைச் திருத்துவதற்கென இயற்றப்பட்டுள்ளது.

13. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1989).—இந்தச் சட்டம், தண்டனை வகைமுறைகளின் கடுமையைக் குறைப்பதற்கென 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) 6 மற்றும் 52-E பிரிவின் கீழ் வரும் குற்றங்கள் தவிர பிற குற்றங்கள் அனைத்தையும் இசைந்து தீர்க்கும்பொருட்டு, இச்சட்டத்தின் 4, 4A, 5, 7, 16, 17A மற்றும் 24A பிரிவுகளைத் திருத்த வகைசெய்வதற்கு இயற்றப்பட்டுள்ளது.

14. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1989).—இந்தச் சட்டம், ஊராட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள், மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் மன்றத் தலைவர்கள் ஆகியோரின் பதவிக் காலத்தை மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாக உயர்த்தும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 3/1986) திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் தொடர்பான வகைமுறைகளைத் திருத்தவும் அந்த நோக்கத்திற்கென 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் XXXV-1958) திருத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது.

15. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1989).—இந்தச் சட்டம், ஒவ்வொரு நகராட்சி மன்றத்தின் மன்றத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களின் பதவிக்கால அளவை மூன்றாண்டு

களிலிருந்து ஐந்தாண்டுகளாக உயர்த்தும்பொருட்டு, பின்னர் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டு, கடைசியாக 1986 ஆம் ஆண்டு திருத்தப்பட்டவாறான 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை அந்நோக்கத்திற்காக தக்கவாறு திருத்துவதற்கெனவும், 1989 ஆம் ஆண்டு மார்ச்சு 3-ஆம் நாளன்று முடிவடைவதாய் உள்ள மற்றும் அவ்வாறு பதவி வகித்து வருகிற அனைத்து நகராட்சி மன்றங்களின் தற்போதைய மன்றத் தலைவர்கள் மற்றும் மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை மேலும் இரண்டாண்டுக்கால அளவுக்கு நீட்டிப்பதற்கெனவும், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 8 ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவைத் திருத்துவதற்கென இயற்றப்பட்டுள்ளது.

16. <u>1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராண்மைச் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1989).</u>—சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கான, 1989 ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்களில் நிகழ்வுறு தேர்தலுக்காக மட்டுமே பொருந்துகிற வகையில், தனிவகை முறைகளைச் செய்யவும், மேற்சொல்லப்பட்ட மாநகராட்சிகளின் மன்ற உறுப்பினர்களின் பதவிக்கால அளவை ஆறாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாகக் குறைக்கவும் மற்றும் மேற்சொல்லப்பட்ட மாநகராட்சிகளின் நகரத்தந்தை மற்றும் துணை நகரத் தந்தை ஆகியவர்களின் பதவிக்காலத்தை இரண்டாண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைக்கவும், 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் IV-1919). 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971) மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1981) ஆகிய சட்டங்களைத் திருத்தவும் இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

17. <u>1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கீட்டுச் (முன்வனி மானிய வாக்கெடுப்பு) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 6/1986).</u>—இந்தச் சட்டம், இந்திய அரசியலமைப்பின் 206 ஆம் உறுப்பினையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால், (a) 1989–90 ஆம் ஆண்டு நிதியாண்டில் ஒரு பகுதிக்கு மாநில அரசின் மதிப்பிடப்பட்ட செலவினத்தைப் பொறுத்து முன்னதாகவே வழங்கப்பட்ட மானியங்களையும் ; மற்றும்

(b) அந்த நிதியாண்டில் அதே பகுதிக்கு மேற்சொன்ன நிதியத்தின் மீது சாட்டப்படும் செலவினத்தையும் ; ஏற்பதற்குத் தேவைப்படும் கணிசமான தொகையினை மாநிலத் திரள் நிதியத்திலிருந்து எடுப்பதற்கு வகைசெய்வதற்காகவும் மற்றும் மேற்சொன்ன தொகையினை ஒதுக்கீடு செய்வதற்காகவும் இயற்றப்பட்டுள்ளது.

18. <u>1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/1989).</u>— இந்தச் சட்டம், இந்திய அரசமைப்பின் 204 ஆம் உறுப்பின் (1-ஆம் கூறுடன் ஒரு சேரவைத்து 205 ஆம் உறுப்பினையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் (a) 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்று தொடங்கிய நிதியாண்டிற்கு மாநில அரசின் செலவினத்திற்காக வழங்கப்பட்ட துணை மானியங்களையும்; மற்றும்

(b) அந்த கால அளவிற்கு மாநிலத் திரள் நிதியத்தின் மீது சாட்டப்படும் துணைச் செலவினத்தையும் ; ஏற்பதற்குத் தேவைப்படும் பணத்தை மாநிலத் திரள் நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கு வகைசெய்வதற்காக இயற்றப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 19

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைச் செயலகம்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு, குடியரசு ஆட்சி ரத்து செய்யப்பட்ட பிறகு ஒன்பதாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1989-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27-ஆம் தேதியன்று அமைக்கப் பெற்றது.

### 1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை—அமைப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தேர்ந்தெடுக்கப்பட்ட 234 உறுப்பினர்களை மற்றும் ஒரு நியமன உறுப்பினரையும் கொண்டதாகும். ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திராவிட முன்னேற்றக் கழகம் | 145 |
| 2. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | 28 |
| 3. | இந்திய தேசிய காங்கிரஸ் | 26 |
| 4. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்டு) | 15 |
| 5. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜானகி எம்.ஜி. இராமச்சந்திரன் குருப்) .. .. .. | 1 |
| 6. | ஜனதா தள் | 4 |
| 7. | இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (எல்) | 4 |
| 8. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 3 |
| 9. | தமிழ்நாடு ஜனதா | |
| 10. | தமிழ்நாடு பார்வர்டு பிளாக் | |
| 11. | இந்தியன் உழவர் உழைப்பாளர் கட்சி | 1 |
| 12. | சுயேச்சை | 3 |
| 13. | நியமனம் | 1 |
| | மாண்புமிகு பேரவைத் தலைவர் | 1 |
| | மொத்தம் | 235 |

### 2. பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் :

8—2—1989-ஆம் தேதியன்று பேரவைத் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்கள் நடைபெற்றன. திரு. மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் மற்றும் திரு. பெ. துரைசாமி ஆகியோர் முறையே பேரவைத் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### 3. கூட்டத் தொடர்கள் மற்றும் கூட்டங்கள் :

இவ்வறிக்கை கால கட்டத்தில், ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் ஒரே ஒரு கூட்டத் தொடர் அதாவது முதல் கூட்டத் தொடர்தான் நடைபெற்றது. ஆனால் இந்தக் கூட்டத் தொடர், இரண்டு கட்டத்தில் நடைபெற்றது. முதல் கட்டம் 6—2—1989-ம் தேதியன்று துவங்கப்பெற்று 21—2—1989-ஆம் தேதியன்று முடிவடைந்தது. இரண்டாவது கட்டம் 25—3—1989-ஆம் தேதியன்று துவங்கப் பெற்று 12—5—1989-ஆம் தேதியன்று ஒத்திவைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத் தொடரில் பேரவை 43 நாட்கள் கூடியது. முதல் கூட்டத்தில் 10 நாட்களும், இரண்டாவது கூட்டத்தில் 33 நாட்களும் பேரவை கூடியது.

முதல் கூட்டத் தொடர் 12—6—1989-ஆம் தேதியன்று இறுதி செய்யப் பெற்றது.

## ஆளுநர் உரை.

இக்கால கட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11-ஆம் நாள் சனிக்கிழமையன்று காலை 11.00 மணி அளவில் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் உரையாற்றினார்கள்.

13-2-1989-ஆம் நாளன்று, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று திரு. என். கணபதி அவர்கள் கொண்டு வந்தார்கள். திரு. என். கணேசமூர்த்தி அவர்கள் இதை வழிமொழிந்தார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் ஐந்து நாட்கள் நடைபெற்றன. அதாவது 13-2-1989, 14-2-1989, 15-2-1989, 16-2-1989 மற்றும் 17-2-1989-ஆம் நாளன்று பேரவையில் நிறைவேற்றப் பெற்றது.

## 5. நிதிநிலை அலுவல்கள் :

இவ்வறிக்கை கால கட்டத்தில், கீழே குறிப்பிட்டுள்ள நிதிநிலை அலுவல்கள் நடைபெற்றன.

| | அவைக்கு அளிக்கப்பெற்ற நாள். | விவாதம் வாக்கெடுப்பு நடைபெற்ற நாட்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. 1989-90-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் | 25-3-1989 | பொது விவாதம் 7 நாட்கள். |
| 2. 1989-90-ஆம் ஆண்டிற்கான முன் பண மானியக் கோரிக்கைகள் | 25-3-1989 | 28-3-1989 |
| 3. 1988-89-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி அறிக்கை | 28-3-1989 | 30-3-1989 |

## 6. சட்டமியற்றும் அலுவல்கள் :

இவ்வறிக்கை கால கட்டத்தில், 32 சட்டமுன்வடிவுகள் பேரவையில் அறிமுகம் செய்யப்பெற்று, ஆய்வு செய்து நிறைவேற்றப்பட்டன.

## 7. வினாக்கள் :

இக்கால அளவில், பேரவையில் விடையளிக்கப்பெற்ற உடுக்குறியிட்ட மற்றும் குறுகியகால வினாக்களின் எண்ணிக்கை மற்றும் உடுக்குறியிடாத வினாக்களின் விடைகள் அவையில் வைக்கப்பெற்ற விவரங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 230 |
| குறுகியகால வினாக்கள் | 2 |
| அவையில் வைக்கப்பட்ட உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் | 75 |

## 8. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :

இக்கால அளவில் 14 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பேரவையில் எழுப்ப அனுமதி கோரப்பெற்றது. சம்மந்தப்பட்ட உறுப்பினர்களின் கருத்துக்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியோரின் விளக்கங்களும் கேட்ட பின்னர் அத்தீர்மானங்களை அவையில் விவாதிக்க அனுமதி மறுக்கப் பெற்றது.

## 9. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பின்மீது மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள் :

இக்கால அளவில், சட்டமன்றப் பேரவையின் 55-வது விதியின் கீழ், எழுப்பப் பெற்ற, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பின் மீது, மாண்புமிகு அமைச்சர்கள் 42 விவர அறிக்கையினை பேரவையில் அளித்தார்கள்.

**10. அரசினர் தனித் தீர்மானம் :**

1989-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ஆம் தேதியன்று மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்றும், அதற்குரிய சட்டத்தினை, அந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் விளைவு அளிக்கத் தேவைப்படுகிற அரசமைப்பின் திருத்தத்திற்கான வகை முறைகளையும் மற்றும் நாடாளுமன்றம் தேவையெனக் கருதலாம். நிறைவுறு, இடைவுறு, மற்றும் விளைவுறு வகைமுறைகளையும் உள்ளடக்கிய வகையில், இந்திய அரசமைப்பின் 169-ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறின் கீழ் நிறைவேற்றலாம் என்றும் இப்பேரவை தீர்மானிக்கின்றது".

மேற்படி விவாதத்தில் 10 உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர். மாண்புமிகு முதல் அமைச்சர் விவாதத்திற்கு பதிலளித்தார்.

பிறகு இந்திய அரசியலமைப்பு பிரிவு 169 உட்பிரிவின் (1)-ன்படி மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 99(5)-ன்கீழ் வாக்கெடுப்பு நடைபெற்றதில் பேரவை பின்வருமாறு வாக்களித்தது :—

| | |
|---|---|
| ஆதரிப்போர் | 169 |
| மறுப்போர் | 22 |
| நடுநிலை வகிப்போர் | .. |

அவையில் மொத்த உறுப்பினர்களில் பெரும்பாலோர் வாக்களிக்காமையாலும், மேலும் அவையில் ஆஜரானோரில் மூன்றில் இரண்டு பகுதிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வாக்களித்ததாலும் அரசினர் தனித் தீர்மானம் பேரவையால் நிறைவேற்றப் பட்டதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அறிவித்தார்.

**11. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பொன்விழா :**

1989-ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொன்விழா மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த வரலாறு சிறப்புமிக்க விழாவினையொட்டி. நான்கு முறைக்கு மேல் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய 41 முன்னாள் மற்றும் இன்னாள் உறுப்பினர்கள் முன்னாள் பேரவைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் முன்னாள் மேலவைத் தலைவர்கள் உட்பட கௌரவிக்கப்பட்டனர். மேலும் இன்னாள் பேரவைத் தலைவர் மற்றும் துணைத்தலைவர், முன்னாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளர்கள் மற்றும் இன்னாள் ஆணையர் மற்றும் செயலாளர் ஆகியோரும் இவ்விழாவினையொட்டி கௌரவிக்கப்பட்டனர்.

**12. குழுக்கள் அமைத்தல் :**

இக்கால அளவில் 1989-90-ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவைக் குழுக்கள், அவை ஒவ்வொன்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் அமைக்கப் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | அலுவல் ஆய்வுக் குழு | 9-2-1989 |
| 2. | மதிப்பீட்டுக்குழு .. | 19-4-1989 |
| 3. | பொதுக்கணக்குக் குழு | 20-4-1989 |
| 4. | பொது நிறுவனங்கள் குழு | 19-4-1989 |
| 5. | உரிமைக் குழு | 19-4-1989 |
| 6. | விதிகள்குழு | 27-4-1989 |
| 7. | அவைக் குழு .. .. | 27-4-1989 |
| 8. | சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 24-4-1989 |
| 9. | அரசு உறுதிமொழிக் குழு | 24-4-1989 |
| 10. | மனுக்கள் குழு .. | 24-4-1989 |
| 11. | பேரவை நூலகக் குழு .. .. .. .. | 27-4-1989 |
| 12. | பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.. | 27-4-1989 |

**13. அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

இக்கால அளவில் 353 ஏடுகள் பேரவையில் வைக்கப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| அ. | சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் | 172 |
| ஆ. | அறிக்கைகள் / அறிவிக்கைகள் ஏனைய தாள்கள் | 181 |
| | மொத்தம் | 353 |

# அத்தியாயம் 20.

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.

### கோயம்புத்தூர் மாநகராட்சி.

இம்மாநகராட்சி கோவை மாநகராட்சி சட்டம் 1981-ன் கீழ் கோயம்புத்தூர் நகராண்மை நிர்வாகத்தின் பொறுப்பு வகிக்கிறது.

முன்னேற்றப் பணிகள் எண்ணிக்கை மற்றும் நிதி நிலைமை ஆகிய இரண்டிலும் இலக்கு மற்றும் சாதனை.

| வரிசை எண்ணும் பொறியியர் பிரிவும் | நிதி நிலைமை. இலக்கு. (குறியீடு). | செயல்திறன் சாதனை. | செயல்வடிவில் எண்ணிக்கை. இலக்கு (குறியீடு). | (செயல் திறன்) சாதனை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. கட்டிடங்கள் .. | 240 | 98.09 | 140 எண்கள் | 130 எண்கள் |
| 2. சாலைகள் .. | 110 | 122.61 | 66 எண்கள் | 172 கி. மீட்டர். |
| 3. ஏற்கனவே உள்ள சாலையின் சீப்பேர் வேலை .. | 130 | 166.10 | 122.50 | 96 கி. மீட்டர். |
| 4. சாக்கடை | 130 | 79.26 | 34 | 115 கி. மீட்டர். |

| நலத்துறை. | நிதி நிலைமை. இலக்கு. | சாதனை. | சதவிகிதம். | செயல்வடிவில் எண்ணிக்கை. இலக்கு. | சாதனை. | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. எரு | 42.272 மெட்ரிக் டன். | முழுவதும் | 100 | 42.272 மெட்ரிக் டன். | முழுவதும் | 100 சதவிகிதம் |
| 2. கெட்டியான அசுத்தங்கள் அப்புறப்படுத்துதல் | 42.272 மெட்ரிக் டன். | முழுவதும் | 100 | 16318 மெட்ரிக் டன். | 15386 மெட்ரிக் டன். | 36.40 சதவிகிதம் |
| | வரவு | ரூ. 1,348.95 இலட்சம். | | | | |
| | செலவு | ரூ. 1,337.62 இலட்சம். | | | | |

சிறப்புத் தகவல்கள் :

(1) ரூ. 99.79 இலட்சம் மதிப்புள்ள 662 கடைகள் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 18.15 இலட்சமாகும்.

(2) நகரத்தை சுத்தப்படுத்துவதற்காக ஏற்கனவே உள்ள வாகனங்களுடன் கூடுதலாக வாங்கப்பட்ட வாகனங்களுடன் சேர்ந்து இயக்கப்படுபவை உள்ளவை.

| (1) | எண்ணிக்கை. (2) | மதிப்பு. (3) (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| (1) சிறிய லாரிகள் குப்பைகள் அகற்ற | 6 | 7.50 |
| (2) சிறிய லாரிகள் கழிவு நீர் அகற்ற | 3 | 7.00 |
| (3) பிரண்ட் எண்ட் லோடர் | 1 | 7.25 |

சென்னை மாநகராட்சி.

## முன்னுரை :

சென்னை மாநகராட்சி, கிழக்கிந்திய கம்பெனி வெளியிட்ட நகர ஆட்சி உரிமைப் பத்திரத்தின்கீழ் 29—9—1688 அன்று நிறுவப்பட்டது. 1792ஆம் ஆண்டு நாடாளு மன்றச் சட்டம், மாநகர நகராட்சி வரிகள் விதிப்பதற்கு மாநகராட்சிக்கு அதிகார மளித்தது, அம்மாநகராட்சி, 1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட சட்டப்படிக்கான அதிகாரங்களைப் பெற்றது.

இம்மாநராட்சி, சாலை பராமரிப்பு, தெரு விளக்கு, கல்வி, வெள்ள நீர் வடி கால் பராமரிப்பு, பொதுச் சுகாதாரம், துப்புரவு—தூய்மை, கொள்ளை நோய் கட்டுப் பாடு, பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டுத் திடல்கள், விளையாட்டு அரங்கு கள், இடுகாடு, சுடுகாடு ஆகிய பொதுமக்களுக்கான வசதிகளுக்கு வகை செய்வதற்கான முக்கிய பொறுப்பைப் பெற்றுள்ளது.

## அலுவலகங்கள் :

மாநகராட்சி தன்னுடைய பணிகளையும், அலுவல்களையும் தன்னிடம் நிலை பெற்றுள்ள அலுவல்களை முறைப்படுத்தவும். பொறியியல், துப்புரவு, மின்வசதி, வருவாய், சுகாதாரம் போன்ற பணிகளைக் கவனிக்கவும், வட்ட அதிகாரிகள் என்ற பதவிப் பெயருடைய 10 உதவி ஆணையர்களை நியமித்து, தன்னுடைய நிருவாக முறையை அண்மையில் பரவலாக்கியுள்ளது,

## பணி முன்னேற்றம், நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எய்திய சாதனை :

பெருந்து வழித்தடச் சாலைகள், உள்ளடங்கிய சாலைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், தனியார் தெரு, தெரு விளக்குகள், வெள்ள நீர் வடிகால்கள் போன்றவற்றை மேம்படுத்துதல், கட்டிடங்களை மேம்படுத்துதல், பாலங்கள் கட்டுதல், பாலங்களை மேம்படுத்துதல், போக்குவரத்தை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட 1,324.33 இலட்சம் ரூபாயில் மொத்தம் 874.68 இலட்சம் ரூபாய் அப்பணிகளுக்காக செலவிடப்பட்டது.

1987–88ஆம் ஆண்டின் சொத்துவரி வசூல் 2,250.46 இலட்சம் ரூபாயாக இருக்க, 1988–89ஆம் ஆண்டில் இவ்வசூல் 2,248.24 இலட்சம் ரூபாயாக இருந்தது. அறிக்கை யாண்டில் இவ்வசூல் 2,22 இலட்சம் ரூபாய்க்கு குறைந்துள்ளது,

தொழில் வரி, நிறுவன வரி, விளம்பர வரி, மோட்டார் வாகனங்கள் நிறுத்து வதற்கான கட்டணம் முதலிய வகையில் 1988–89ஆம் ஆண்டில் 319.42 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

## அறிக்கையாண்டில் செயற்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள் :

அப்போதிருந்த மூர் அங்காடியில் கடை வைத்திருந்து பாதிக்கப்பட்ட கடைக் காரர்களின் புது வாழ்விற்காக ரூ, 6.24 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், அல்லிக் குளம் பகுதியில், பன்மாடிக்கட்டிடத் தொகுதி ஒன்றைக் கட்டுவதற்கு மாநகராட்சி வடிவமைத்தது. பன்மாடிக் கட்டிடத்தைக் கட்டும் பணி, ஆயத்த நிலைத் திட்ட மாகத் தமிழ்நாடு மாநிலக் கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக, 100.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்தொகை யில் ரூ. 91.77 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது,

இவ்வாண்டு, 1.57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கொசு ஒழிப்புப் புகை மருந்து எந்திரம் ஒன்று அயல்நாட்டிலிருந்து வாங்கப்பட்டது. அந்த இயந்திரத் தின்மூலம் சென்னை மாநகரில் கொசு ஒழிப்புப் பணி தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டுள்ளது,

சென்னை மாநகராட்சி, கட்டணக் கழிப்பிடங்களைக் கட்டவும், தற்போதுள்ள பொது கழிப்பிடங்களை சீர்படுத்தவும் கருதியுள்ளது, அத்துடன் அரசு மானியத்தி லிருந்து சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் 50.00 இலட்சம் ரூபாய் செலவில் மின்சார தகன மேடை வசதி இரண்டுடன் இடுகாடுகளை மேம்படுத்தவும் எண்ணியுள்ளது.

சென்னை மாநகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் வசிக்கும் குடிசை வாழ் மக்களின் நலத்திற்காக 1988–89ஆம் ஆண்டில் 60.71 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியுடன் கூடிய இந்திய மக்கள் நல்வாழ்வுத் திட்டம் (5) செயற்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம், நகரைச் சுற்றியுள்ள பகுதியில் மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட புதிய முன்னோடி முயற்சித் திட்டமாகும். இது, தனி தொண்டு நிறுவனங்கள் பணிப் பயிற்சியிலும் புதுமுறைகளிலும் ஈடுபடத்தக்க புது முயற்சியாகும்.

சேதமுற்ற மின்கம்பி வடங்களும் புதியனவற்றைப் பழைய வகை மின் பொருத்திகளுக்கும் படிப்படியாக மாற்றியமைக்க அரசுக் கடன்கள் மானியங்கள் என்ற தலைப்பில் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்குகின்ற திட்டம் ஒன்று கருத்தில் உள்ளது. இவ்வாண்டு சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் 1.4 இலட்சம் ரூபாய் செலவில் 71 கிலோ மீட்டர் நீளத்திற்குப் புதிதான புதைவடக்கம்பிகள் மாற்றியமைக்கப்பட்டன.

விபத்தைத் தவிர்க்கும் பொருட்டு துருப்பிடித்த 175 விளக்குக் கம்பங்கள் அகற்றப்பட்டன. உரியவாறு பழுது பார்த்த பின்னர், அவற்றில் 90 விளக்குக் கம்பங்கள் அதே இடங்களில் மீண்டும் அமைக்கப்பட்டன. சென்னை மாநகராட்சியின் எல்லைகளை விரிவுபடுத்தியதன் மூலம் சேர்க்கப்பட்ட முன்னாள் உள்ளாட்சிப் பகுதிகள் உட்பட, சென்னை மாநகரில் தற்போதுள்ள தெரு விளக்குகளை மேம்படுத்துதல், தெரு விளக்குகளைப் புதிதாக நிறுவுதல் ஆகியவை தொடர்பாக, சென்னை மாநகராட்சி ஒவ்வோராண்டும் ஏறக்குறைய ரூ. [illegible]6 இலட்சம் முதல் ரூ. 375 இலட்சம் வரை மதிப்புள்ள பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தது.

<u>நிதி ஒதுக்கீடும், ஏற்பட்ட செலவும் மாநகராட்சி பொருளாதார வகையில் தனித்தியங்கும் தன்மையும் ;</u>

இவ்வாண்டில் பொது நிதியின் கீழ் சேர்ந்து வந்த வருமானம் ரூ. 5,066.29 இலட்சம், பொது நிதியின் கீழ் ஏற்பட்டச் செலவு ரூ. 6,700.62 இலட்சமாகும். மாநகராட்சியின் வரவு-செலவுக் கணக்கின்கீழ் 1988-89ஆம் ஆண்டில் பற்றாக்குறை ரூ. 1,634.44 இலட்சமாகும். இதில் மாநகராட்சிச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட தேய்மானமும் அடங்கும். 31—3—1989ஆம் நாள் நிலவரப்படி, சேர்ந்து வந்த பற்றாக்குறை ரூ. 4,036.72 இலட்சமாகும்.

இவ்வாண்டில் ரூ. 1,472.83 இலட்சத்திற்கு, சாலைகள், கட்டிடங்கள், பாலங்கள், தெரு விளக்குகள் போன்ற சொத்துக்கள் சேர்க்கப்பட்டன. 31—3—1989ஆம் நாள் நிலவரப்படி மாநகராட்சி சொத்துக்களின் இறுதி இருப்பு ரூ 4,744.32 இலட்சம் ஆகும்.

தொடக்கக் கல்வி நிதியின் கீழ் சேர்ந்து வந்த வருமானம் ரூ. 908.05 இலட்சமாகும். செலவு ரூ. 1,333.10 இலட்சமாகும். தொடக்கக் கல்வி நிதியின் கீழ் இவ்வாண்டில் ஏற்பட்ட பற்றாக்குறை ரூ. 424.05 இலட்சமாகும். 31—3—1989 ஆம் நாள் நிலவரப்படி தொடக்கக் கல்வி நிதியின் கீழ் சேர்ந்து வந்த பற்றாக்குறை ரூ. 1,675.97 இலட்சமாகும்.

<u>சிறப்புச்செய்தி ;</u>

1989ஆம் ஆண்டில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் சி.ஐ.டி. நகரிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் 97சதவிதம் பேர் வெற்றி பெற்றனர் என்பது அறிக்கையாண்டில் குறிப்பிடத்தக்க சிறப்புக்குரிய நிகழ்ச்சியாகும் 33 மாணவர்களில் 32 பேர் வெற்றி பெற்றனர். 1989ஆம் ஆண்டில் நடைபெற்ற 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் நுங்கம்பாக்கம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த செல்வன் ஆர். குணசேகரனும், செல்வன் ஜி. வாசுதேவனும் தத்துவப் பாடத்தில் மாநிலத்திலேயே முதல் இடத்தைப் பெற்றனர். இதே பள்ளியைச் சேர்ந்த செல்வன் ஜே. அற்புதராஜ் இதே பாடத்தில் மாநிலத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றான்.

தீ, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தமட்டில் தீ விபத்து உதவி, வெள்ள நிவாரணம், உணவு, உறைவிடத்திற்கு ஏற்பாடு செய்தல், சுற்றுப்புறத் துப்புரவு ஆகியவை வட்ட அதிகாரிகளால் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

புதுடெல்லியிலுள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஒரு பிரிவான மலேரியா ஆராய்ச்சி மையம், மாநகரிலுள்ள 6 கோட்டங்களில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுடன், சோதனை ஆராய்ச்சிகளையும் நடத்தி வருகிறது.

மாநகராட்சி நிலங்கள், நடைபாதைகள், சாலை ஓரங்கள் ஆகியவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், சென்னைப் பெருநகர வளர்ச்சி அதிகார மன்றமும் ஏனைய முகவரமைப்புகளும் தெரிவித்த கட்டுமான மீறல்கள் ஆகியவை குறித்து சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு குற்றவியல் நடைமுறைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தவிர, சிறப்பு துப்புரவுத் திட்டம், இரவு துப்புரவுத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் சாலைகளிலுள்ள குப்பை கூளங்கள் முறையாக அகற்றப்படுகின்றன.

காலரா ஒழிப்பு சிறப்புப் பணி, பெருமழையில் கொசு ஒழிப்புப்பணி ஆகியவற்றை சுகாதாரப் பணியாளர் மேற்கொண்டனர். இராஜாஜி சாலை, ரிசர்வ் வங்கி சுரங்கப் பாதை தொடங்கி காமராஜர் சாலை, அகில இந்திய வானொலி நிலையம் வரையி லான பகுதி '' தூய்மைப் பகுதியாக '' அறிவிக்கப்பட்டது. இப்பகுதி அன்றாடம் காலை 6–00 மணியிலிருந்து இரவு 7–00 மணி வரை முற்றிலும் தூய்மையான பகுதி யாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியிலுள்ள சட்டப்பிரிவு மாநகராட்சியிலுள்ள சட்டப்பணி களைச் சீரமைத்து வந்துள்ளது.

சென்னை மாநகராட்சியிலுள்ள விழிப்புப்பணிப் பிரிவு மாநகராட்சியிலுள்ள பணி யாளர்களின் நடவடிக்கைகளைச் சோதனை செய்து, முறைகேடுகளை விசாரித்து கண்டுபிடித்து, தவறு செய்த அதிகாரிகள் மீது துறை நடவடிக்கை எடுக்கக் கருத்து தெரிவிக்கிறது. இப்பிரிவு உரிமம் பெறாத 73 தொழில்களையும் அனுமதி பெறாத 80 கட்டுமானங்களையும் சொத்து வரி குறைத்து விதிக்கப்பட்ட 27 இனங்களையும் கண்டுபிடித்துள்ளது.

தொழிலாளர்களின் குறைகள், தொழிற் சங்கங்களின் கோரிக்கைகள் ஆகிய வற்றைத் தொழிலாளர் நல அதிகாரிகள் ஏனைய துறைத் தலைவர்களுடன் கலந் தாலோசித்து கவனிக்கின்றனர். 1972ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத் தின் கீழ் 90 இனங்களுக்கு கட்டுப்பாட்டு அதிகாரி தீர்மானித்து ரூ. 4,12,561.12 தொகை 1988–89ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

முடிவு :

தற்போதுள்ள பொதுவான அமைப்புமுறை யினை நிறைவளிக்கும் வகையில் உள்ளது. இயன்ற வரையில் எதிர்வரும் காலத்தில், அதிகாரங்கள் பரவலாக்கப் பட்ட நிலையில் சென்னை மாநகராட்சி அமைப்பு, பொதுப் பயன்பாட்டுப் பணிகளை மேலும் திறம்படவும், செவ்விய முறையில் செயலாற்றும் என்று கருதப்படுகிறது.

## மதுரை மாநகராட்சி.

| | |
|---|---|
| மக்கள் தொகை | 9,95,200 |
| பரப்பளவு | 51.85 ச.கி.மீ. |

1988–89 ஆம் ஆண்டு முழுவதும் தனி அதிகாரி அவர்களால் மாமன்ற வட்டங்களும் மற்ற குழுக் கூட்டங்களும் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டன :

மாமன்ற கூட்டங்கள் நடத்தப்பட்டவை :—

| | | |
|---|---|---|
| (அ) | சாதாரணம் | 14 |
| (ஆ) | அவசரம் | 10 |
| (இ) | ஒத்திவைக்கப்பட்டவை | .. |
| (ஈ) | ஸ்பெஷல் கூட்டம் | 2 |

விவாதிக்கப்பட்ட மொத்த பொருட்கள் மற்றும் முடிக்கப்பட்ட பொருட்கள் விபரம் (விபரங்கள் கீழ்க்கண்டவாறு).

| | | |
|---|---|---|
| (அ) | சாதாரண கூட்டம் | 419 |
| (ஆ) | அவசரக் கூட்டம் | 252 |
| (இ) | ஒத்திவைக்கப்பட்டவை | 26 |
| (ஈ) | ஸ்பெஷல் கூட்டம் | 2 |

**கல்வித் துறை :**

மதுரை மாநகராட்சியில் மொத்தம் 88 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவைகளில் 55 துவக்கப் பள்ளிகளும், 15 நடுநிலைப் பள்ளிகளும் உள்ளன. மாநகராட்சி பள்ளிகளில் மொத்தம் 42,045 மாணவர், மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அதில் ஆண்கள் 19,141 மற்றும் பெண்கள் 22,904 கல்வி பயில்கின்றனர். மதுரை மாநகராட்சி பள்ளிகளில் 40 இளநிலை ஆசிரியர்களும், 1,081 முதுநிலை ஆசிரியர்களும் 162 பட்டதாரி ஆசிரியர்களும், 62 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும், 72 முதல் நிலை தமிழாசிரியர்களும் 86 சிறப்பு ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர்.

கணக்குப் பிரிவு :

பொது நிதிக் கணக்கு.

| | நிதி மதிப்பீடு. 1988—89 | திருத்தப்பட்ட மதிப்பீடு. 1988—89 | நிதி மதிப்பீடு. 1989—90 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| வருவாய் : | | | |
| வரவு | 1,067 | 1,034 | 1,063 |
| செலவு | 1,089 | 1,255 | 1,354 |
| | (—) 22 | (—) 221 | (—) 291 |
| மூலதனம் : | | | |
| வரவு | 875 | 993 | 1,003 |
| செலவு | 858 | 807 | 8 |
| | (+) 17 | (+) 153 | (+) 196 |
| உபரி பற்றாக்குறை | (—) 5 | (—) 68 | (—) 95 |

சுகாதாரப் பிரிவு :

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த அழகான மதுரை இது என்ற சிறப்புப் பெற்ற இம்மீனாட்சி பட்டினம் தற்போது 9,95,200 மக்கள் தொகை கொண்டு பெருமையுடன் திகழ்கிறது.

எந்நேரமும் இயங்கும் 13 தாய்-சேய் நல இல்லங்களும் 2 (இரண்டு) தாய்-சேய் நல நிலையங்களையும் தன்னகத்தே கொண்டு உள்ளது. மக்களுக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற நோய்களை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கென்றே 11 அலோபதி மருந்தகங்களும் மூன்று இந்திய மருத்துவ மருந்தகங்களும் இரண்டு ஆயுர்வேதிக் மருந்தகங்களும் முன்னாள் மேயர் முத்து அவர்களின் பெயரால் ஒரு நடமாடும் மருந்தகமும், இரத்தம், மலம், நீர், சளி ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட ஆய்வுக்கூடம் ஒன்றும் இந்நகரில் மாநகராட்சியின் சார்பாக இயங்கிக் கொண்டு வருகின்றன.

பாலினம் சம்பந்தமாக வருகின்ற இரகசிய நோயைத் தீர்ப்பதற்கென்றே தனியாக வி.டி. கிளினிக் ஒன்றும் இயங்கி வருகின்றது.

1. தாய்-சேய் மற்றும் குழந்தைகள் நலம் (1—4—1988 முதல் 31—3—89)

| | |
|---|---|
| (அ) கர்ப்பிணித் தாய்மார்கள் பதிவு செய்தவைகள் | 19,306 |
| (ஆ) மாநகராட்சி களப் பணியாளர்கள் தாய்-சேய் நல விடுதியில் பார்த்த பிரசவங்களின் எண்ணிக்கை .. | 6,667 |
| மேற்படியார்கள் வீட்டில் பார்த்த பிரசவங்களின் எண்ணிக்கை | 34 |
| மொத்தம் | 6,701 |

| | |
|---|---|
| 2. குடும்ப நலம் (1—4—1988 முதல் 31—3—1989) | 567 |
| ஆண் அறுவை சிகிச்சை | 2,546 |
| பெண் அறுவை சிகிச்சை | 144 |
| மொத்தம் | 3,257 |
| கருத்தடை வளையம் பொறுத்தப்பட்டவை | 2,785 |
| நிரோத் உபயோகித்தவர்கள் | 3,833 |
| உபயோகப்படுத்தப்பட்ட நிரோத் — | 1,705 |

3. நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் :

| | குறியீடு. | போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை. | சதவிகிதம் 1988—89 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| டி.பி.டி. | 24,300 | 24,250 | 96.93 |
| போலியோ .. — | 24,300 | 24,122 | 98.25 |
| டி.டி. (எ.என்.சி.) | 29,150 | 29,082 | 92.41 |
| பி.சி.ஜி. | 24,300 | 22,844 | 92.92 |
| தட்டம்மை .. | 24,300 | 24,634 | 88.37 |
| டைபாய்டு (5—6) | 23,420 | 3,261 | 85.54 |
| டைபாய்டு (10 வருடம்) | 22,270 | 1,124 | 5.05 |

| | |
|---|---|
| மருத்துவப் பணி புற நோயாளிகளைப் பார்வையிட்ட எண்ணிக்கை (ஆங்கில முறை மருத்தகம்.) .. | 5,40,517 |
| பால்வினை நோயிகள் .. — | 7,910 |

பால்வினை நோய்கள்.

முக்கிய புள்ளி விபரம்.

பிறப்பு — இறப்புப் புள்ளி விபரம் ஆயிரங்கள்.

| இனம். | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பிறப்பு விகிதம் | 24.2 | 23.7 | 23.08 | 23.25 | 21.76 | 20.82 |
| இறப்பு விகிதம் | 6.4 | 6.3 | 6.12 | 5.90 | 5.67 | 5.45 |
| சிசு மரணம் | 43.5 | 40.8 | 39.30 | 41.20 | 42.08 | 43.04 |
| இறந்து பிறந்தவை விகிதம் | | | 11.09 | 3.20 | 3.29 | 3.57 |
| பிரசவகால மரண விகிதம் | | | | 0.78 | | |

மணி துப்பரவுப்பணி :

இம்மாநகரில் இவ்வருடம் முதல் மணியடித்து குப்பைகளை அப்புறப்படுத்தும் பணி செவ்வனே துவங்கப்பட்டுள்ளது, தெருவில் குப்பைகளைக் கூட்டி சுத்தம் செய்த பின்பு வியாபாரிகளும் கடைக்காரர்களும் தினமும் காலை 9.30 மணியளவில் தங்கள் ஸ்தாபனங்களின் முன்பாக காகிதங்களையும் குப்பைகளையும் வீதியில் வீசி யெறிந்து பார்ப்பதற்கே அருவருக்கத்தக்கதாக உள்ள நிலையில் " மணியடித்து குப்பைகளைச் சுத்தப்படுத்தி அப்புறப்படுத்தும் முறை" ஏற்படுத்தி நடைபெற்று வருகின்றது.

உரக்கிடங்கு :

இம்மாநகரில் சுமார் 60 ஏக்கர் நிலத்தில் உரக்கிடங்கு ஏற்படுத்தி அங்கு குப்பைகளைச் சேகரித்து வருகின்றது.

பணம் கொடுத்து உபயோகிக்கும் கழிப்பறைகள் இம்மாநகரில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பொதுக் கழிப்பறைகள் | 209 | 283 |
| 2. பொது குளியல் அறைகள் | 43 | 46 |
| 3. பணம் கொடுத்து உபயோகிக்கும் கழிப்பறைகள் | 43 | |

வருவாய் பிரிவு :

1988–89 ஆம் ஆண்டின் கேட்பு வசூல் நிலுவை விபரம்.

| | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1. விளம்பரக் கட்டணம் | 4,12,532.00 | 3,51,468.95 | 61,063.05 |
| 2. ஆக்கிரமிப்புக் கட்டணம் | 2,06,639.00 | 88,634.75 | 1,18,004.25 |
| 3. வண்டி வாகனாதி கட்டணம் | 36,131.00 | 36,331.00 | ... |
| 4. சந்தை வசூல் | 17,40,005.45 | 8,80,450.06 | 8,59,555.45 |
| 5. குடிநீர் கட்டணம் .. | 1,11,11,883.00 | 72,94,335.06 | 38,17,550.00 |

## மின் பொறியியல் பிரிவு :

1. ஏற்கனவே இருந்த 206 டிரான்ஸ்பார்மர்களுடன் கூடுதலாக 28 டிரான்ஸ்பார்மர்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

2. 1988-89 ஆம் ஆண்டில் [illegible],201 புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## பொறியியல் (கு.வ) :

1988–89-ல் அரசு நிதியில் (வறட்சி நிவாரணம்) மாநகராட்சியினால் செய்து முடிக்கப்பட்ட பலவித வேலைகள் விபரம் :—

1. குடிநீர் மெயின் குழாய்கள் பதித்து முடித்தவை :

1988-89 ஆம் ஆண்டில் ரூ. 4.62 இலட்சங்கள் செலவில் 7,933 மீட்டர் நீளத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மெயின் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது.

2. ஆழ்குழாய் கிணற்று நீர் மெயின் குழாய்கள் பதித்து முடித்தவை :

1988–89 ஆம் ஆண்டில் ரூ. 4.22 இலட்சங்கள் செலவில் 8,507 மீட்டர் நீளத்திற்கு ஆழ்குழாய் கிணற்று நீர் மெயின் குழாய்கள் பதித்து முடிக்கப்பட்டது.

3. ஆழ்குழாய் கிணறு அமைக்கும் வேலைகள் செய்து முடிக்கப்பட்டவை :

1988-89 ஆம் ஆண்டில் ரூ. 32.20 இலட்சங்கள் செலவில் 8'' (அங்குல) விட்டமுள்ள ஆழ்குழாய் கிணறுகள் 46 எண்கள் அமைக்கப்பட்டுள்ளது.

(பி) 1988-89 ஆம் ஆண்டில் குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினால் ரூ. 7.40 இலட்சங்கள் செலவில் 6 '' ஆழ்குழாய் கிணறுகள் 37 எண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சி நிதியில் மாநகராட்சி பொறியியல் (கு. வ.) பிரிவில் செய்து முடிக்கப்பட்ட வேலைகள் விவரம்.

1. 1988-89ஆம் ஆண்டில் ரூ.2.20 லட்சங்கள் செலவில் 6''(அங்குல) விட்டமுள்ள ஆழ்குழாய் கிணறுகள் 11 எண்கள் அமைக்கப்பட்டன.

2. 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 11.32 இலட்சங்கள் செலவில் 6,810 மீட்டர் நீளத்திற்கு திறவை சாக்கடை அமைக்கப்பட்டது.

3. 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 1.00 லட்சம் செலவில் 836 மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை மெயின் குழாய் அமைக்கப்பட்டது.

## பொறியியல் (பொது பிரிவு) :

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வந்துள்ள சாலைகள் :

| | கி. மீ. |
|---|---|
| 1. தார் சாலைகள் ... | 267.943 |
| 2. மெட்டல் சாலைகள் ... ... ... ... | 73.692 |
| 3. கிராவல் சாலைகள் ... ... ... ... ... | 36.518 |
| 4. கருங்கல் தளம் அல்லது சிமிண்டு பாவிய சாலைகள் ... | 53.923 |
| 5. கருங்கல் தளம் அல்லது சிமிண்டு பாவிய நடைபாதைகள் | 42.559 |
| மொத்தம் | 474.635 |

நடப்பு ஆண்டில் புதிதாக தார் சாலைகள் 15.00 கி. மீட்டரிலும், மெட்டல் சாலைகள் 6.00 கி. மீட்டரிலும், கல்தளம் 0.615 கி. மீட்டரிலும் போடப்பட்டுள்ளன. அனைத்து கிராவல் மெட்டல் சாலைகள் தார் சாலைகளாக மாற்ற முனைப்புடன் வேலைகள் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மாநகரில் மொத்தம் 21.00 கி. மீட்டர் நீளத்திற்கு புதிதாக தார் மற்றும் மெட்டல் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 31.00 கி. மீட்டர் தூரமுள்ள தார் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மாநகரில் உள்ள சாலைகளைச் செப்பனிட்டுப் பராமரிக்கவும் புதிய சாலைகள் அமைத்த வகையில் ரூ. 142.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. சாலை வேலைகளுக்கு நடப்பாண்டு 176 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

மதுரை, அருப்புக்கோட்டை சாலையில் ராமேஸ்வரம் செல்லும் இருப்புப் பாதைக்குக் குறுக்காக ஒரு மேம்பாலம் கட்டும் வேலை நடைபெற்று வருகிறது. முடிவடையும் தருவாயில் உள்ளது..

மாநகராட்சி கட்டிடங்கள் :

மதுரை மாநகராட்சியில் 62 ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகள், 20 மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகள், 15 மகப்பேறு மனைகள், 15 மருந்தகங்கள், 488 மலக் கழிப்பிடங்கள், 68 சிறுநீர் கழிப்பிடங்கள் ஆகியவை உள்ளன. இவை மாநகர் முழுவதும் வெவ்வேறு பகுதிகளில் உள்ளன.

இவைகள் தவிர, பொது காய்கறி அங்காடிகள் மற்றும் சிறப்பங்காடிகள் உள்ளன. இவைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேவையான இடங்களில் புதியதாகக் கட்டப்பட்டும் வருகின்றன.

நடப்பு ஆண்டில் புதிய கட்டுமானப் பணிகளுக்காக ரூ. 17.50 லட்சமும், கட்டிட பராமரிப்பு வேலைகளுக்காக ரூ. 10.51 லட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.

## நகரமைப்பு பிரிவு.

விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் :

மாநகராட்சி நகரமைப்புப் பிரிவு மதுரை மாநகர் முழுமைத் திட்டத்தினை அமல் செய்வதுடன் மாநகரின் முறையான வளர்ச்சிக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து செயல்படுத்தி வருகிறது. தற்போது மொத்தம் 21 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் அரசு மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநரால் அங்கிகாரம் அளிக்கப்பட்டு அமல் செய்யப்பட்டு வருகின்றன. 13 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் வரைவு நிலையில் உள்ளன.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் :

மாண்புமிகு முதலமைச்சர் உலகத் தமிழ்ச் சங்க மாநாட்டில் அறிவித்த திட்டங்களான புதிய மையப் பேருந்து நிலையம் மற்றும் புதிய ஒட்டுமொத்த விற்பனை வணிக மையம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்துமுகமாக உத்தேச மையப் பேருந்து நிலையத்திற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மையப் பேருந்து மாநகராட்சிக்கு சொந்தமான மதுரை—மேலூர் சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கு இடத்தில் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 6.80 கோடியாகும். இத்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு அரசு நகர் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான நிதியிலிருந்து உரிய நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வரைவுநிலை விரிவு அபிவிருத்தித திட்டம் (தற்போதைய நிலை) மதுரை உள்ளூர் திட்ட குழுமம்.

| வரிசை எண். (1) | உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்டத்தின் பெயர். (2) | பரப்பு (ஏக்கர்). (3) | அறிவிக்கை செய்யப்பட்ட விபரம். (4) | வரைபடம் எண் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரம். (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் : | | | | |
| 1. | மதிச்சியம் பாகம் 2 | 1920 | ந.க 289/50, நாள் 17—12—58. | | |
| 2. | புதூர் பாகம் 1 — — | 1920 | ந.க. 2073/78—மம 2. நாள் 24—5—89. | | |

## நகராட்சி நிர்வாகம்.

**முன்னுரை :**

தமிழ்நாட்டில் 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் உள்ளன. அனைத்து நகராட்சி/நகரியங்களின் பரப்பளவு 1,476 ச.கி.மீ. ஆகும். 1981 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி அனைத்து நகராட்சி/நகரியங்களில் உள்ள மொத்தம் மக்கள் தொகை 72,20,594 ஆகும். இதில் தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை 6,62,594 ஆகும். நகராட்சி குடிசைப்பகுதி வாழ் மக்கட்தொகை 12,00,000 ஆகும்.

மாநில அளவில் நகராட்சி நிர்வாக இயக்குநர் நகராட்சிகளின் நிர்வாகத்தை கண்காணித்து வருகிறார்.

**நகராட்சிகளின் வகைப்பாடு :**

தமிழ்நாட்டில் 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் உள்ளன. அரசு ஆணை எண். 400, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்: 23–3–1983-ன்படி நகராட்சிகளின் வருடாந்திர வருமானம் அடிப்படையில் நகராட்சிகள்/நகரியங்கள் கீழ்க்கண்டவாறு பகுக்கப்படுகின்றன :—

| நகராட்சியின் நிலை. | எண். | கடந்த 3 ஆண்டுகளில் எல்லா இனங்களுக்கான சராசரி மொத்த வருமானம் (மின் துறை வருமானம் உட்பட.) |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) |
| சிறப்பு நிலை | 7 | 100.00 |
| தேர்வு நிலை | 11 | 50.00 |
| முதல் நிலை | 29 | 25.00 |
| இரண்டாம் நிலை | 32 | 10.00 |
| மூன்றாம் நிலை | 19 | 5.00 |
| மொத்தம் | 98 | |

| நகரிய நிலை. | எண். | மொத்த ஆண்டு வருமானம். |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) |
| தேர்வு நிலை | 5 | 10.00 மேல் |
| முதல் நிலை | 1 | 5.00—க்கு மேல் 10.00—க்குள். |
| இரண்டாம் நிலை | 2 | 5.00 வரை. |
| மொத்தம் | 8 | |

**நகராட்சிகளின் பணிகள் :**

நகராட்சி மற்றும் நகரியங்கள், கீழ்க்கண்ட விவரப்படி, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி மற்றும் அத்தியாவசியமான அடிப்படை கட்டாய விருப்பப்பட்ட பணிகளை நிறைவேற்றுவது குறித்து ஆகும் செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து செலவழிக்க வேண்டும். நகராட்சிகள் செய்ய வேண்டிய பணிகள் விபரம் வருமாறு :

**1. கட்டாயப் பணிகள் :**

1. வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களின் நிவாரணப் பணி.

2. பொது சாலைகள், தெருக்கள், சந்துகள், சிறு பால மற்றும் குறுச்சு சாலைகள் பராமரித்தல்.

3. இடைநிலை தவிர்த்த கல்வி.

4. படிப்பறைகள் பராமரித்தல்.

5. பூங்காக்களும், தோட்டங்களும் பராமரித்தல்.

6. விளையாட்டுத் திடல் மற்றும் மனமகிழ் மன்றங்கள், பொது மன்றங்கள் பராமரித்தல்.

7. பொருட்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.

8. தெருக்கள், வடிகால் மற்றும் சாக்கடைகள் தூய்மைப்படுத்துதல்.

9. மருத்துவமனைகளும் மற்றும் மருந்தகங்களும் பராமரித்தல்.

10. தொற்று நோய்கள் தடுப்பு.

11. பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல்.

12. பயன்தரும் மரங்கள் இருபுறங்களிலும் அமைந்த பாதைகள் பராமரிப்பு.

13. தெரு மின்விளக்குகள் பராமரித்தல்.

14. தொடக்கக் கல்வி.

15. குடிநீர் விநியோகம், பொதுமக்கள் மற்றும் தனியார்க்கு குடிநீர் இணைப்பு குழாய்கள்.

16. வடிகால்கள்.

17. நகரமைப்பு.

2. விருப்பப்பட்ட பணிகள் :

1. இடைநிலைக் கல்வி நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் அமைத்தல்.

2. ஏழை எளிய அனாதை இல்லங்கள்.

3. வீட்டுவசதி.

4. கால்நடை மருத்துவமனைகள் ஏற்படுத்துதல்.

## நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் நிதி நிலைமை, 1988–89.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான நகராட்சிகளின் நிதி நிலைமை மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளது. காரணம் என்னவெனில் நகராட்சிக்கு பெரும் வருவாயை ஈட்டித் தரும் சொத்து வரியானது சில வருடங்களாக சில இனங்களைத் தவிர ஏற்றப்படாமல் ஒரே நிலையிலுள்ளது. அதனால் நகராட்சிகள் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான சாலைவசதி, குடிநீர், வடிகால் வசதிகளைக்கூட செய்ய முடியாத நிலையிலுள்ளன. எனவே, நகராட்சிகள் பேருந்து நிலையம், அங்காடிகள் முதலியவைகளைக் கட்டும் பணிகளுக்கு, தமிழக அரசிடமிருந்தும், மைய அரசிடமிருந்தும், அவ்வப்பொழுது நிதி உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இவைகளைக் கட்டுவதனால் நகராட்சிக்கு, கணிசமான வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழக அரசு சத்துணவுத் திட்டம், 1988–89.

5–9 மற்றும் 10–15 வயதுடைய குழந்தைகளுக்கு சத்துணவு திட்டத்தின்படி தமிழ்நாட்டிலுள்ள 100 நகராட்சிகளில் உணவளிக்கும் பொறுப்பு நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2,965 சத்துணவு மையங்கள் நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு, 2.36 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்றுள்ளார்கள். இதற்கான நிதியானது, இயக்குநரகத்தால் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை முன் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

1988–89ஆம் நிதியாண்டில் ரூ. 177 இலட்சம் 5–9 வயது உடையோருக்கும் மற்றும் ரூ. 36 இலட்சம் 10–15 வயதுடையோருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட உணவு பொருட்களுக்கான தொகை இயக்குநரகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளால் நடத்தப்பெறும் 5–9 மற்றும் 10–15 வயதுடையோருக்கான சத்துணவு மையங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரால் முன்மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## மத்திய ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டம், 1988–89.

ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை குறிப்பாக மாவட்ட மற்றும் வட்டத் தலைமையிடங்களாக உள்ள நகரங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் மைய அரசின் நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் வருமாறு :—

1. நிலைய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்:
2. கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வதை தடுத்தல்.
3. நகரங்களில் சிறந்த வாழ்க்கை தரத்தை அளித்தல்

இத்திட்டத்தினால் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டன:—

1. வீட்டு மனைகள் மேம்பாட்டுத் திட்டம்.
2. மண்டிகள் மற்றும் சந்தைகள் ஏற்படுத்துதல்.
3. பேருந்து நிலையங்கள் கட்டுதல்.
4. சாலையை அபிவிருத்தி செய்தல்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 168 பணிகள் ரூ. 2,155 6,16 லட்சத்தில் செயலாக்கப்பட்டன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தினால் 7 நகரங்களில் ரூ. 743.70 லட்சத்தால் செயலாக்கப்பட்டன.

## தமிழ்நாடு நகர மேம்பாட்டுத் திட்டம் :

நகராட்சிகளின் நிதி நிலையைப் பெருக்கும் நோக்கத்துடன் வருவாய் தரும் இனங்களான கடைகள், அங்காடிகள், பேருந்து நிலையங்கள், கட்டண கழிவறைகள் ஆகியவை கட்டுவதற்கு அரசு கடன் வழங்க முன்வந்துள்ளது.

1988–89 ஆம் ஆண்டு 8 நகராட்சிகளில் ரூ. 143.25 லட்சத்தால் இத் திட்டம் செயலாக்கப்பட்டன.

## குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டம் :

எல்லா நகராட்சிகளிலும் பாதாள சாக்கடை அமைப்பது அதிக நிதி வேண்டுவதோடல்லாமல் நீண்ட காலத்தையும் எடுத்துக்கொள்கிறது. நகராட்சிகளின் நிதிப் பற்றாக்குறை காரணமாக பாதாள சாக்கடை அமைக்க வழிவகை இல்லை. எனவே நகராட்சிவாழ் குறைந்த மற்றும் மத்திய வருவாய் தரப்பினரின் வீடுகளில் கீழ்க்காணும் திட்டங்களின் மூலம் குறைந்த செலவிலான நீர் ஊற்றும் கழிப்பிடங்கள் கட்டப்படுகின்றன. மேலும் இத்திட்டத்தினால் உலர் கழிவுறைகளிலிருந்து மலத்தை அகற்றும் துப்புரவுப் பணியாளர்களின் இந்த இழிவுத் தொழிலை அகற்றுவதும் இதன் நோக்கமாகும்.

## 1. உலக வங்கியின் உதவியுடன் செயல்புரியும் திட்டம் :

அரசாணை எண் 483, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்: 21–3–1983 ன்படி இத்திட்டம் 14 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 709.55 இலட்சமாகும். இதில் கடன் மற்றும் மான்யம் முறையே ரூ. 447.02 லட்சம் மற்றும் ரூ. 262.33 லட்சமாகும். இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

29,807 தனியார் வீடுகளில் நீர் ஊற்றும் கழிவறைகளும் 1,201 சீட்டுகள் கொண்ட சமுதாய கழிவறைகள் கட்டப்படவுள்ளது. இதுவரையில் 19,190 தனியார் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

2. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் செயல்புரியும் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 50 சதவிகித மானியத்துடன் அம்பத்தூர், விழுப்புரம் மற்றும் நாகர்கோவில் நகராட்சிகளில் ரூ. 1,11,27,900 மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதற்காக மத்திய அரசின் முதல் கட்ட மான்யத் தொகை ரூ. 27,81,975 விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை சமூக நிறுவனத்தின் மூலம் நிறைவேற்ற அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

3. மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த முன்னேற்ற திட்டம் :

இத்திட்டம் 28 நகராட்சிகளில் நடைமுறையில் உள்ளது. இந்த 28 நகராட்சிகளிலிருந்து தேர்ந்தெடுத்த ஆறு நகரங்களில் குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டம் செயல்முறையில் உள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 150.00 லட்சமாகும். இதிலிருந்து 14,376 தனியார் கழிப்பிடங்களும், 22 சமுதாய கழிப்பிடங்களும் கட்டப்படவுள்ளது. இத்திட்டத்தில் கட்டப்படவுள்ள கழிப்பிடங்களுக்கான பான்ஸ் மற்றும் வளையங்கள் ரூ. 100 மதிப்பீட்டில் இலவசமாக வழங்க யுனிசெப் நிறுவனம் முன் வந்துள்ளது. இதுவரையில் 8,146 தனியார் கழிப்பிடங்கள் ரூ. 76.95 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய ஒருங்கிணைந்த முன்னேற்ற திட்டத்தில் மேலும் 5 நகராட்சிகளில் குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டம் ரூ. 103.37 லட்ச மதிப்பீட்டில் 4,008 கழிப்பிடங்கள் கட்ட இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதுவரையில் 980 கழிப்பிடங்கள் ரூ. 22.44 லட்சத்தில் கட்டப்பட்டுள்ளது.

வறட்சி 1988–89.

1988-89ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததினால் தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. அதனால் தமிழக அரசு நகராட்சி மற்றும் நகரியங்களுக்கு 1988-89ஆம் ஆண்டில் ரூ. 25.680 லட்சங்கள் வறட்சி நிவாரணம் அளித்தது.

கலவைத் உரத் திட்டம் :

விஞ்ஞான முறைப்படி கலவை உரத்தினை, நகர்ப்புற கழிவுப் பொருட்கள் மூலம் தயாரிப்பது நகராட்சிகளில் சுகாதாரத் திட்டங்களின் ஒரு பகுதியாகும். மக்கட் தொகையில் 5 சதவீதம் என்ற குறியீட்டுடன் கலவை உரம் தமிழகத்திலுள்ள 106 நகராட்சி/நகரியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1988-89ஆம் ஆண்டு 2,52,710 டன் கலவை உரம் தயாரிக்க குறியீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கலவை உரத் தயாரிப்பில் நகராட்சிகளை ஈடுபடுத்தவும், ஊக்கப்படுத்தவும் அதிக அளவில் கலவை உரம் தயாரிக்கவும் நகராட்சிக்கு பரிசாக பணமுடிப்புகளும், சுழல் கேடயங்களும் வழங்கப்படுகின்றன.

மாநில அளவில் உர அலுவலரின் உதவியுடன் இத்திட்டத்திற்கு விரிவான தொழில் நுட்பங்களும், கண்காணிப்பும் அளிக்கப்படுகின்றன. இதனால் கலவை உரத் திடலை சீராக வைத்திருக்கவும் அமோக அளவில் தரமான கலவை உரத்தினை தயாரிக்கவும் நகராட்சிகளினால் முடிகிறது.

கழிவுநீர்ப்பண்ணை :

கலவை உரத் திட்டத்தின் ஒரு பகுதியாக கழிவுநீர்த்திட்டம் 23 நகராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. நகர்ப்புற கழிவுநீரினை சேமித்து தேக்கி வைத்து, சீர்செய்து பண்ணைகளில் தென்னை, தீவனப்புல், கரும்பு மற்றும் சிறுதானியப் பயிர்களும், பழப் பயிர்களும், காய்கறி கீரைகளும் லாபகரமாக பயிராகின்றன.

குடும்ப நல நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் :

நகர்ப்புறத்தில் உள்ள ஏழை மற்றும் குடிசைப் பகுதி மக்களுக்காக குடும்ப நலம் மற்றும் தாய் நலம் போன்ற சுகாதாரப் பணிகளின் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய மாநில அரசும் நகர்ப்புற சுகாதாரப் பணியாளர் பதவிகளை தோற்றுவித்துள்ளது.

இப்பணிகளின் முக்கிய நோக்கம் சத்துக்குறைவு மற்றும் நோய்த்தடுப்பு பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

'டி' பிரிவு நகர்ப்புற சுகாதாரப் பணிகளில் கீழ்க்கண்ட அலுவலர்கள் அடங்குவர்:—

| | |
|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | 1 |
| 2. பொது சுகாதாரச் செவிலியர் சுகாதாரப் பார்வையாளர். | 1 |
| 3. பல்நோக்கு சுகாதாரப் பெண் பணியாளர் | 1 |
| 4. தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | |
| 5. பெண் உதவியாளர் | 1 |

நகராட்சிகளில் மருந்தகங்கள் கீழ்க்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன :—

| வ. எண். | மருத்துவ வகை. | மருந்தகங்களின் எண்ணிக்கை. | மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | யுனானி | 3 | 3 |
| 2 | ஆயுர்வேதம் | 14 | 14 |
| 3 | சித்தா | 34 | 34 |
| 4 | ஆங்கிலம் (பொது) | 55 | 55 |
| 5 | ஆங்கிலம் (குடும்ப நலம்) | 78 | 78 |

## தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையம், கோயம்புத்தூர் :

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் அரசாணை எண் 1940, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்: 24—11—1981-ல் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் சொசைட்டி சட்டத்தின்கீழ் பதிவு செய்ய பட்டுள்ளது.

கூடுதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் நிலையில் உள்ள அதிகாரியை இயக்குநராகக் கொண்டு பயிற்சி நிறுவனம் நடத்தப்படுகிறது.

## பயிற்சி நிறுவனத்தின் நோக்கங்கள் :

1. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிலுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

2. உள்ளாட்சி நிறுவனங்களில் பெருமளவில் திறமையை மேன்மையடைய செய்தல்.

இப்பயிற்சி நிறுவனம் வெகு விரைவில் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கான ஆராய்ச்சி மையமாகவும், நகராட்சிகளின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும் வகையில் புள்ளியியல் விவர மையமாகவும் செயல்படவுள்ளது.

## கல்வி :

992 ஆரம்ப (மற்றும்) நடுநிலைப்பள்ளிகளும், 32 உயர்நிலைப் பள்ளிகளும், 34 மேல்நிலைப் பள்ளிகளும் நகராட்சிகளால் பராமரிக்கப்படுகிறது. 11,051 ஆசிரியர்களும், 1,259 ஆசிரியரல்லாத பணியாளர்களும் நகராட்சிகளில் பணி புரிகின்றனர். இவர்களின் பணி நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் உள்ள இணை இயக்குநர் (கல்வி) அவர்களாலும் அவரின் கீழ் இயங்கும் கல்வி பிரிவு அலுவலர்களாலும் கண்காணிக்கப்படுகிறது.

## வீடு கட்டும் முன் பணம் :

1983-84 ஆம் வருடம் முதல் அரசு பணியாளர்களுக்கு வழங்குவது போல் நகராட்சி பணியாளர்களுக்கும் வீடு கட்ட முன் பணம் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் அரசு கடன் ரூ. 50 லட்சம் பெறப்பட்டு இதனை நகராட்சி பணியாளர்களுக்கு முன்னுரிமை பட்டியல்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது. அவ்வாறே 1988-89 ஆம் வருடமும் ரூ. 50 லட்சம் இத்திட்டத்தின்கீழ் கடன் பெறப்பட்டு நகராட்சி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 175 நகராட்சி பணியாளர்கள் பயன் அடைந்தனர்.

நகராட்சித் தேர்தல்கள்.

இம்மாநிலத்திலுள்ள அனைத்து நகர் மன்றங்களுக்கும் 23–2–1986 அன்று தேர்தல்கள் நடைபெற்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் 3–3–1986-ல் பதவியேற்றனர். இவர்களின் மூன்றாண்டு பதவிக்காலம் 3–3–1989-ல் முடிவடைய இருந்தது. இதற்கிடையில் நகர்மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலத்தை ஐந்தாண்டுகளாக அரசு நிர்ணயித்தது.

2. இதற்கேற்ப தற்போதுள்ள அனைத்து நகர் மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 3–3–1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 21.

## பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை.

### அரசு அலுவலர் பயிற்சி நிலையம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையமானது தற்போது பெரியார் மாவட்டத்திலுள்ள பவானிசாகரில் உள்ளது. மேற்படி பயிற்சி நிலையத்தினை செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள மறைமலை நகருக்கு அருகிலுள்ள பெரமானூர் கிராமத்திற்கு மாற்றம் செய்வதற்கு அரசின் செயற்குறிப்பு உள்ளது.

2. தமிழ்நாடு தலைமை கட்டிடக்கலை நிபுணரிடமிருந்து விளக்க வரைபடம் (Master plan) பெறப்பட்டுள்ளது. அதனைப் பார்வையிட்ட பிறகு, முதலில், அலுவலர் பயிற்சி நிலையம் மற்றும் மாநில அரசு ஊரக வளர்ச்சி நிலையத்தினை அரசு (SIRD) ஆரம்பிக்கலாமென்றும் இளநிலை உதவியாளர் முதல் அரசு அலுவலர் மற்றும் இந்திய தேர்வாணையத் தேர்வு எழுதும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலைச்சாதியினர் வகுப்பினர் ஆகியோருக்கு பயிற்சி அளிக்க இடம் ஒதுக்கீடு செய்யலாமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

(3) தற்போது நிலவிவரும் நிதி நிலைமையின் காரணமாக மேற்கண்ட செயற்குறிப்பானது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு சிவில் பணிகளில் கூட்டுக் குழு.

இங்கிலாந்து நாட்டில் இயங்கி வருகின்ற ''விட்லி குழுவின்'' (Whitly Councils) அடிச்சுவட்டில் தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக் குழு 1956 முதல் இயங்கி வருகிறது. இன்று கூட்டுக்குழு மொத்தம் 22 உறுப்பினர்களை கொண்டுள்ளது. அவர்களில் ஒரு பாதி உறுப்பினர்கள் (அலுவலர் பக்கம்) அரசினராலும் மறுபாதி உறுப்பினர்கள் (உறுப்பினர்கள் பக்கம்) அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்களாலும் நியமிக்கப்படுகின்றனர். அரசுத்தலைமைச் செயலர் தன் அலுவலால் குழுவின் தலைவராகவும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையைச் சார்ந்த சார்பு செயலாளர் தன் அலுவலால் குழுவின் செயலாளராகவும் உள்ளனர்.

2. குழுவின் கூட்டம் நடைபெறுவதற்கு குழுவின் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்த பட்சம் ஆறு உறுப்பினர்களாவது இருக்க வேண்டும். குழுவின் சாதாரண கூட்டங்கள் அவ்வப்பொழுது தேவை ஏற்படும்போதும், குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்படவேண்டும். ஆண்டு இறுதிக் கூட்டம் ஆண்டுதோறும் டிசம்பர் திங்களில் நடைபெறும்.

3. பொதுப்பணியில் திறமையினை அதிகரிக்கச் செய்யவும், பணியாளர்கள் நலனை கருதி அவர்களின் குறைகளை கவனிக்கவும், சார்நிலை பணிகளின் (Subordinate Services) பிரதிநிதிகளுடைய பல்வேறு கருத்துக்கள், அலுவலர்களின் அனுபவங்கள் ஆகியவைகளை ஒருமுகப்படுத்தவும் சிவில் பணியாளர்களை பாதிக்கும் விஷயங்கள் கவனிக்க வழிவகை செய்வதோடு அரசு அலுவலர் ஆகிய இருவர் இடையேயும் அதிக பட்ச கூட்டுறவினை நிலவச் செய்வதே இக்குழுவின் நோக்கமாகும்.

4. பணியாளர்களின் பணிநிலைகளைப் பாதிக்கும் எல்லா விஷயங்களும் குழுவின் பார்வைக்கு உட்பட்டதாகும். குழுவின் பரிந்துரைகள் தகுந்த நடவடிக்கைக்கை அரசிற்கு தெரிவிக்கப்படுகின்றன.

5. பெரிய திட்டங்கள், விதிகளைத் தளர்த்துவ்து போன்ற கொள்கைப் பற்றிய முடிவுகள் நீங்கலாக ஏனைய நிர்வாக சார்நிலை பணிகளைச் சார்ந்த அன்றாட பிரச்சனைகளைப் பற்றி துறைத் தலைவர்களும், அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்களின் பிரதிநிதிகளும் விவாதிப்பதற்காக கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என எல்லா அரசுச் செயலாளர்களுக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும்.

6. தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக்குழுவைப்போலவே மாவட்டக் கூட்டுக் குழு 1969 முதல் இயங்கி வருகிறது. மாவட்டக் கூட்டுக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும்.

7. பணியாளர்களின் பிரதிநிதிக்கும், அதிகாரிக்கும் ஒருவரையொருவர் சந்தித்து சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைப் பற்றி பேசவும், நிர்வாகத்தை செம்மைபடுத்தக் கூடிய வழிகளை வகுக் மம்கபடுகுாவட்ட கூட்டுக்குழு பயன்படுகிறது.

8. மாவட்ட கூட்டுக் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டது. ஆறுபேர் அலுவலக பிரதிநிதிகளாகும். மற்ற ஆறுபேர் பணியாளர்களின் பிரதிநிதிகளாகவும் இருப்பர். மாவட்ட ஆட்சியர் தன் அலுவலால் மாவட்ட கூட்டுக்குழுவின் தலைவர் ஆவார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) குழுவின் செயலர் ஆவார்.

௯. 1—4—1988 முதல் 3—3—1989 வரையில் தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக் குழுமுறை கூடியுள்ளது. அக் கூட்டங்களில் 52 பொருட்களைப்பற்றி விவாதிக் கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

நோக்கமும், செய்கடமைகளும்:

அரசுப் பணியாளர் தேர்வாணையங்களுக்குத் தொடர்புடைய காப்புரை இந்திய அரசியலமைப்பு பிரிவுகளின்படி வரையறுக்கப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர் தேர் வாணையம் கீழ்க்கண்ட பொருள்கள்மீது கலந்தாலோசிக்கப்பட பவண்டும் :

(அ) பணியாளர் தேர்வுமுறைகள்

(ஆ) ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு பணிமாற்றம் செய்தல் மற்றும் பதவி உயர்வு அளித்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள்.

(இ) ஒழுங்கு நடவடிக்கை முறைகள்.

(ஈ) அரசு ஊழியர் ஒருவர் தன்மீது தொடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை களிலிருந்து பாதுகாப்பு பெற ஏற்பட்ட செலவினங்களை கோருதல்.

(உ) பணிக் காலத்தில் பணியாளருக்கு ஏற்பட்ட தீங்குகளுக்காக ஓய்வூதியம் அளிப்பு குறித்த கோரிக்கை.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954 தேர்வாணைய அலுவலர் மற்றும் அதன் ஊழியர் ஆகியோரின் அமைப்புமுறை மற்றும் பணிமுறைமைகளை தொகுத்துக் கூறுகின்றது. தேர்வாணையர் தன் செய் கடமைகளை நிறைவேற்றுவதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் வகுக்கப்பெற்ற அதனுடைய நடைமுறை விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கைக்குரிய காலத்தில் தேர்வாணையம் மாநிலத்தின் பல பணிகளிலடங்கிய 965 பணியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்று பதினாறு அறிவிக்கை விளம்பரங் களை தந்துள்ளது.

மாநிலப்பணிகளில் 14 வகை பதவிகளுக்கான 1,626 பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப தேர்வாணையம் பணி வேட்பாளர்களை தெரிவு செய்து பரிந்துரை செய்துள்ளது. மேலும் 1986-இல் நடந்த தொகுதி நான்கின் தேர்வுகள் அடிப்படையில் காத்திருப்போர் பட்டியலிலிருந்து 412 வேட்பாளர்களை கூடுதலாக நியமனத்திற்கு பரிந்துரை செய்தது.

தொகுதி ஐந்தில் அடங்கிய பணிகளுக்கான முதற்கட்ட தேர்வினை எழுதியோரில் 828 பணி வேட்பாளர்கள் இறுதிநிலை தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொகுதி இரண்டில் அடங்கிய 364 பணியிடங்களை நிரப்ப நடந்து முடிந்த எழுத்துத் தேர்வின் அடிப்படையில் 815 பணி வேட்பாளர்கள் வாய்மொழித் தேர்விற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொகுதி பத்தில் அடங்கிய பணிகளுக்கான இறுதிநிலை எழுத்துத் தேர்வுகள் 27—3—1989 முதல் 31—3—1989 முடிய நடைபெற்றன. தேர்வுகளுக்கு அனுமதிக் கப்பட்ட 96 பணி வேட்பாளர்களில் 65 நபர்கள் தேர்வு எழுதினார்கள்.

மாநில பணி மற்றும் சார்புநிலை பணிகளில் 35 பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட நடத்தப்பெறும் எழுத்துத் தேர்வுகளுக்குரிய பாடப் பகுதிகள் தொடர்புடைய பாட வல்லுநர்களால் வகுக்கப்பெற்று தேர்வா ணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

அறிக்கைக்குரிய காலத்தில் தேர்வாணையம் மாநிலப் பணியில் 12 வகைப் பணி. களில் 44 வகை பதவிகளுக்கான 360 தகுதியும் பொருத்தமுடைய பணியாளர்கள் சார்புநிலைப் பணியிலிருந்து மாநிலப் பணிக்கு பணிமாற்றம் மூலமோ அல்லது மாநிலப் பணியிலேயே பதவி உயர்வுமூலமோ பணியில் அமர்த்தப்பெற வந்த கோரிக்கைகள் ஆராயப்பட்டு முடிவுகள் தெரிவிக்கப்பட்டன.

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் பெற 352 பணியாளர்களுக்கு தேர்வாணையம் தன் இசைவினை அளித்தது.

137 மேல்முறையீடுகள், 55 மனுக்கள் மற்றும் மறு ஆய்வு மனுக்கள் மற்றும் 193 ஒழுங்கு முறை நடவடிக்கைகள் மீதான தனது அறிவுரையை தேர்வாணையம் அரசுக்கு தெரிவித்தது.

அறிக்கைக்குரிய இவ்வாண்டில் அரசு 86 நிகழ்வுகளில் வயது வரம்பு மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட விதிகளை தளர்த்தி ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ன் ஒழுங்குமுறை விதி 16 (பி) பிற்பகுதி அடிப்படையில் தேர்வவாணையம் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் 6,629 நபர்களின் பணிமுறைப்படுத்தப்பட தன் இசைவினை அளித்துள்ளது.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் பல்வகை பணியிடங்களில் குறிப்பிடப்பட்ட காலங்களுக்கு மேலும் தற்காலிக நியமனங்கள் தொடர தேர்வாணையம் தன் இசைவினை அளித்துள்ளமை குறித்த விவரபட்டியல் :

| காலம். | ஒப்புதல் வழங்கப்பட்ட நேர்வுகள். | |
|---|---|---|
| | மாநிலப்பணி | சார்பு நிலைப்பணி அமைச்சுப்பணி |
| 3 மாதங்களும் அதற்கு மேலும் | 649 | 140 |
| 12 மாதங்களும் அதற்கு மேலும் | 789 | 315 |
| 18 மாதங்களும் அதற்கு மேலும் | 746 | 73 |
| 24 மாதங்களும் அதற்கு மேலும் | 956 | 221 |

1988 மே மற்றும் நவம்பர் திங்களில் நடைபெற்ற சிறப்பு மற்றும் துறை தேர்வுகளுக்கு விண்ணப்பித்தோரின் விவரம் :

| | 1988 | |
|---|---|---|
| | மே | நவம்பர் |
| சிறப்புத் தேர்வுகள் | 22,151 | 16,822 |
| துறைத் தேர்வுகள் | 18,065 | 14,236 |

மாவட்ட உதவி ஆட்சியாளர், துணை ஆட்சியாளர், காவல் துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வுகள் செப்டம்பரில் 1988 மற்றும் மார்ச் 1989-ல் நடந்தன. இவற்றில் முறையே 60 மற்றும் 67 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழை தாய்மொழியாக பெறாத அகில இந்திய பணிகளைச் சார்ந்த ஆட்சித் துறை காவல்துறை மற்றும் வனத்துறை அலுவலர்களுக்கு 1988 ஜூலையில் நடைபெற்ற தமிழ்ப் புலமைத் தேர்வில் இரண்டு அலுவலர்கள் தேர்ச்சியும் அடைந்தனர்.

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேருவதற்கிய தகுதிகாண் தேர்வு 1989 மார்ச் 30, 31 தேதிகளில் தேர்வாணையம் நடத்தியது. விண்ணப்பத்திருந்த 113 நபர்களில் 76 வேட்பாளர்கள் தேர்வுகளை எழுதினார்கள்.

## ஒழுங்கு நடவடிக்கைகள், தீர்ப்பாயம்.

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு அரசுப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம்) விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளின்படி, அரசுப் பணியாளர்கள்மீது விசாரணை நடத்துவதற்காக, அரசு அமைத்த சம்பந்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றங்களுக்கு, கோயம்புத்தூர், சென்னை ஒழுங்கு நடவடிக்கை ஆணையாளர்களும், சென்னையிலுள்ள மதுரை வட்டார ஒழுங்கு நடவடிக்கை ஆணையாளரும் தலைமை அதிகாரிகளாவர்.

அந்தந்த நடுவர் மன்றங்களின் பணிகள் ஓரளவு நீதிமுறைச் சார்புடைய பணிகளாகும். தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு அரசுப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம்) விதிகளைச் சேர்ந்த 8-ஆம் விதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி, அரசிடமிருந்து உத்தரவு வரப்பெறுவதன் பேரில், நடுவர் மன்றங்கள் விசாரணைகளை நடத்துகின்றன. கடமை தவறிய அலுவலர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டனவா இல்லையா என்பதைக் குறிப்பிட்டு, நடுவர் மன்றங்களின் முடிவு குறித்து அறிக்கைகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேற்சொன்ன நடுவர் மன்றங்கள் வேறு திட்டங்கள் எவற்றையும் செயற்படுத்துவதற்கு தொடர்புடையவை அல்ல.

### படிவம்.

| (1) | கோயம் புத்தூர். (2) | சென்னை. (3) | மதுரை. (4) |
|---|---|---|---|
| 1. 31–3–1988 ஆம் நாள் நிலவரப்படி, முடிவடையாமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 217 | 247 | |
| 2. 1988–89 ஆம் ஆண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 162 | 152 | 199 |
| 3. முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 177 | 139 | 44 |
| 4. 31–3–1989 ஆம் நாள் நிலவரப்படி முடிவடையாமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | 202 | 260 | 155 |

## ஊழல் தடுப்பு கண்காணிப்பு.

இவ்வியக்ககம், காவல்துறைத் தலைவர் அந்தஸ்தில் ஒரு இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகின்றது.

மாநில அரசு அலுவலர்கள் மீதான கையூட்டு மற்றும் ஊழல் குற்றங்கள் குறித்த புகார்கள்/தகவல்கள் மீது இவ்வியக்ககம் விசாரணைகள் மேற்கொள்கிறது. மாநில அரசு கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் மீதும் இவ்வியக்ககம் விசாரணைகளையும், வழக்குகளையும் நடத்துகின்றது. 1988 ஆம் ஆண்டில் ஊழல் தடுப்புச் சட்டம், (சட்டம் 49/88), பிரிவு 2சி-யின் விரிவான விளக்கத்தின்படி '' பொது ஊழியர்கள் '' என்ற அடிப்படையில் (1) அரசிடமிருந்து பொருளாதார உதவி பெறும் ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் அலுவலக நிர்வாகிகள் (2) பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவர், உறுப்பினர், அல்லது அலுவலர்கள் அல்லது பணியாளர் தேர்வு ஆணையத்தினால் நியமிக்கப்பட்ட தேர்வு குழுக்களில் உறுப்பினர் (3) துணை வேந்தர் அல்லது ஆட்சி குழு உறுப்பினர் பேராசிரியர், துணைப் பேராசிரியர், விரிவுரையாளர் அல்லது வேறு ஆசிரியர் அல்லது பல்கலைக் கழக அலுவலர்கள் மற்றும் பல்கலைக் கழகத்தினால் யாருடைய பணிகள் பயன்படுத்தப்பட்டதோ அந்த நபர்கள், (4) அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெறும் கல்வி, அறிவியல், சமூகம், கலை மற்றும் ஏனைய நிறுவனங்களின் மீது நிர்வாகிகள் மற்றும் அலுவலர்கள் மற்றும் (5) எந்த ஒரு பணியில் இருப்பதால் ஒருவர் பொதுப் பணி புரிய வேண்டியுள்ளதோ அல்லது பணிக்கப்பட்டுள்ளாரோ அந்த நபர்கள் ஆகியவர்களும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

பொதுப் பணிகளில் உள்ள கையூட்டு மற்றும் ஊழல்களை குறித்த தகவல்களை சேகரிப்பது இவ்வியக்ககத்தின் ஒரு முக்கியமான பொறுப்பாகும். எனவே, இவ்வியக்ககத்தின் புலனாய்வு அலுவலர்களுக்கு அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களை பிரித்து தனிப்பட்ட முறையில் கண்காணிக்கவும், ஊழலில் ஈடுபடும் அலுவலர்களைத் தெரிந்தெடுத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள தகவல் அறிக்கைகள் அனுப்ப பணிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கக அலுவலர்கள் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் விசாரணைகளில் பல குறிப்பிடத்தக்கவையாகும்.

குறித்த தகவல்கள் அல்லது புகார்கள் மீது விசாரணைகள் மேற்கொள்வதுடன் கூட இவ்வியக்ககம், குறித்த தகவலின்பேரில் லஞ்சம் கேட்டது மற்றும் லஞ்சம் உடனே ஏற்றுக் கொள்ளப்படும் என்று உறுதியாக தெரிந்தால் அத்தகைய புகார்களின் மீது பொறி வைத்து பிடிக்கும் வழக்குகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்கிறது. ஊழல் புரியும் அதிகாரியை பொறி வைத்து பிடிப்பது மற்றும் அவரை கையூட்டு கேட்டு பெற்றுக் கொண்டபின் கையும் களவுமாக கைது செய்வது அன்றாட வாழ்க்கையில் பொது மக்களை பாதிக்கக்கூடிய கொடுமையான ஊழலை எதிர்கொள்ள ஒரு திறம் மிக்க ஆயுதமாகும்.

இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட விசாரணைகள் / வழக்குகளின் விபரம் வருமாறு :—

| விசாரணைகள்/வழக்குகள் விபரம். | வழக்குகள் எண்ணிக்கை. | நபர்கள் பிரிவுகள். | |
|---|---|---|---|
| | | ஏபி. | சி-டி. |
| (1) | (2) | (3) | (4) |
| (அ) முன் விசாரணைகள் | 314 | 233 | 204 |
| (ஆ) விரிவான விசாரணைகள் | 187 | 170 | 155 |
| (இ) முறையான வழக்குகள் | 132 | 137 | 173 |
| (ஈ) பொறி வைத்து பிடித்த வழக்குகள் | 77 | 16 | 96 |
| மொத்தம் | 710 | 556 | 628 |

இவ்வாண்டு 13 நபர்கள், இவ்வியக்கக வழக்குகளில் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றனர். அவர்களின் விபரம் வருமாறு :—

| | |
|---|---|
| (அ) பள்ளித் துணை ஆய்வாளர் | 1 |
| (ஆ) நிலைய தியணைப்பு அதிகாரி | 1 |
| (இ) வனவர் | 1 |
| (ஈ) தலைமை காவலர் | 1 |
| (உ) பஞ்சாயத்து மேற்பார்வையாளர் | 1 |
| (ஊ) பஞ்சாயத்து பொறியாளர் | 1 |
| (எ) தாலூக்கா உதவியாளர்கள் | |
| (ஏ) பதிவுத் துறை உதவியாளர் | |
| (ஐ) கிராம நிர்வாக அதிகாரிகள் | |
| (ஒ) மண்டல போக்குவரத்து அலுவலகத்திலுள்ள இடைத் தரகர்கள். | 1 |

மேற்கூறிய அலுவலர்கள் பெற்ற சிறைத் தண்டனையின் கால அளவு, நீதிமன்றம் அன்று முடிவு அடையும் காலம் முதல் 4 ஆண்டு கடுங்காவல் வரை மற்றும் ரூ. 100 லிருந்து ரூ. 1,000 வரை, ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு, தீர்ப்பாயம் மற்றும் துறை விசாரணைகளின் முடிவில் தண்டனை மற்றும் தண்டனை பெற்றவர்கள் விபரம் :—

| தண்டனை விபரம். | தண்டனை பெற்றவர் எண்ணிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| (அ) பணி நீக்கம் | 6 |
| (ஆ) பணி விலக்கல் | 12 |
| (இ) கட்டாய ஓய்வு | 2 |
| (ஈ) பதவி இறக்கம் | 6 |
| (உ) ஊதிய இறக்கம் | 27 |
| (ஊ) ஓய்வு ஊதியம் பிடித்தம் | 11 |
| (எ) ஊதிய உயர்வு தள்ளி வைத்தல் | 244 |
| (ஏ) கண்டனம் மற்றும் இதர சிறிய தண்டனை | 52 |

1988-89-ஆம் ஆண்டில் துவக்கத்திலுள்ள எல்லா விசாரணைகளையும் முடிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, விழிப்புப் பணி ஆணையருக்கு அதிக எண்ணிக்கையில் அறிக்கை அனுப்பியும், இதர முடிவுகள் எடுக்கப்பட்டும், குறிப்பிடத்தக்க அளவில், நிலுவையிலிருந்த விசாரணைகளும் மற்றும் வழக்குகளும் முடிக்கப்பட்டன. இவ்வாறு 725 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன.

மரபு வழியான புலனாய்வு செயல்பாட்டினை தவிர, ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறையானது, பொதுப்பணிகளில் நிலவும் ஊழலை தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அறிவித்து உத்வேகத்துடன் செயல்படுகின்றது.

1988-89-ல் வேறுபட்ட 15 துறை/நிறுவனங்களை சேர்ந்த 866 அலுவலகங்களில் மாநில முழுவதும் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சோதனைகள், பொதுப்பணிகளில் கால தாமதம், முறைகேடுகள், சாதாரண மனிதனை பாதிக்கும் ஊழல் நடவடிக்கைகள் இவற்றினை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்டன.

பொது பணிகளில் ஊழலை தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக ரூ. 3 லட்சம் அதற்கு அதிகமான தொகை அளிக்கப்பட்ட அரசு பணிகளை நிறைவேற்றுவதில் ஊழல் ஏற்படாமல் இருக்க கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## அண்ணா நிருவாகப் பயிற்சி நிலையம்.

திட்டமிட்ட மற்றும் வளர்ந்துவரும் பொருளாதார நிலை தொடர்பான பிரச்சினைகளின் மீது புதியகோட்பாடுகளின் மேம்பாட்டினை அறிவுறுத்தி தீர்வு காணும் பொருட்டு பகுத்தறிவுப் பயிற்சியை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்தைத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் குறிக்கோள்கள் :

தேசிய வாழ்வின் அனைத்துப் பிரிவுகளிலும் நிர்வாக நுணுக்கங்களையும் கருவிகளையும் பயன்படுத்தும் அவசியத்தை உணரச் செய்தல், இந்தியச் சூழ்நிலைக்கு ஏற்ப, நிர்வாகத்துறையில் அறிவினை வளர்க்கும் விதத்தில் ஆய்வினை மேற்கொள்ளுதல், கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிகள், வெளியீடுகள் மூலமாக நிர்வாகத்துறையில் நுணுக்கங்களை பரப்புதல் நிர்வாகப் பணி வளர்ச்சியின் உறுதுணையாதல் சமுதாய மாற்றங்களுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் உகந்த ஆயுதமாக அதனை மாற்றுதல் முதலியனதாகும்.

நானூற்றுக்கும் மேற்பட்ட நிருவாகப் பயிற்சி திட்டங்களை இந்நிறுவனம் நடத்தி இருக்கிறது, அதன் மூலம் நிர்வாகத்தின் பல்வேறு பணிகள் பற்றி, பொது மற்றும் தனியார் துறையைச் சார்ந்த எட்டாயிரம் மேலாளர்களுக்கு மேல் பயிற்சி அளித்திருக்கிறது.

நிர்வாகத்துறையில் இந்நிறுவனம் பணியாற்றிய பங்கினை அங்கீகரிக்கும் வகையில் இந்திய அரசு கௌரவம் வாய்ந்த பயிற்சி திட்டங்களை இந்நிறுவனத்திற்கு வழங்கி இருக்கிறது. நாட்டின் வேறுபட்ட பகுதியிலிருந்து வரும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளுக்காக மூன்று அபிவிருத்தி பயிற்சிகளை நடத்தி இருக்கிறது. இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கௌரவமிக்க ஆலோசனையை இந்நிறுவனம் மேற்கொண்டு இருக்கிறது. ஒரு சில குறிப்பிட்ட நிறுவனங்களில் உள்ள பிரச்சினைகள் சம்மந்தப்பட்டவை. நிர்வாக வழக்கு சம்மந்தப்பட்டவை. மற்றும் துறைத் தலைமை நிறுவனங்கள், குறிப்பாக கேட்டுக் கொண்டவை போன்று பலவகையில் இப் பயிற்சி திட்டங்கள் மாறுபட்டவையாகும்.

தேசிய நிர்வாகம் முதலான நிறுவனம் பயிற்சிப் பற்றி 16 மி.மீ. வண்ணப் படங்கள் இரண்டை இந்நிறுவனம் தயாரித்திருக்கிறது. மற்ற மாநில அரசு நற் பயனங்களுக்கும் இது முன்னோடி முயற்சியாகும்.

பி.ஹெச்.டி. பட்டப்படிப்பிற்கு பதிவு செய்ய, சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்நிறுவனத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பி.ஹெச்.டி. பயிற்சிகளை நடத்துவதற்கு, பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில அரசு ஏற்படுத்தி இருக்கும் ஒரே அரசு நிறுவனம் இப்பயிற்சி நிலையமாகும்.

முதுகலை டிப்ளமா பயிற்சி உண்மையில் ஒரு புதுமுறை கல்வி பயிற்சியாகும். இளம் மாணவர்களை மேலாளர் பதவிகளை பெறச் செய்யும் வகையில் பிரத்தியேகப் பயிற்சிகளை மற்ற நிர்வாக பயிற்சி நிலையங்கள் கவனம் செலுத்தும் போது, நிர்வாகம் மற்றும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட ஆராய்ச்சிகள் குறித்த தற்போதைய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள பொது மற்றும் நிர்வாகத்துறையில் பணியாற்றிவரும் முதிய மேலாளர்களுககு இப்பயிற்சி உதவுகிறது.

ஈ அண்ணா நிருவாகப் பயிற்சி நிலையத்தில் ஒரு கம்ப்யூட்டர் மையம் ஒன்றை நிறுவ மைய அரசும், மாநில அரசும் பெரும் ஆர்வம் காட்டி வருகிறது. உத்திரப் பிரதேச அரசு நிருவாகப் பயிற்சி நிலையத்தில் 15 பொறிக்கலன்களும், குஜராத் அரசு, சர்தார் படேல் பொது நிருவாகப் பயிற்சி நிலையத்தில் 13 பொறிக் கலன்களும் உள்ளன. அவற்றுடன் ஒப்பிடும் வகையில் 18 பொறிக்கலங்களுடன் இயங்கப் போகும் இப்பயிற்சி நிறுவனத்தில் கம்ப்யூட்டர் மையம் முற்று பெற்றால் நாட்டிலேயே பிற பயிற்சி நிலையங்களில் இது பெரியதாக இருக்கும்.

## பணியாளர் நிருவாக சீர்திருத்தத் துறை.

### I. பரிவுள்ள நிருவாகம்.

புதிய இருபது அம்சத் திட்டத்தின் இருபதாம் அம்சமான "பரிவுள்ள நிருவாகம்" என்பது பின் வருவனவற்றை கடைப்பிடிக்க கருதுகிறது :—

(1) நடைமுறைகளை எளிதாக்குதல் ;

(2) அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் ;

(3) பொறுப்பை வரையறுத்தல் ;

(4) வட்டார அளவிலிருந்து தேசிய அளவுவரை கண்காணிக்கும் முறைகளை மதிப்பிடுதல் ;

(5) பொதுமக்களின் குறைகளை அனுதாபத்துடன் கேட்டு உரிய முறையில் தீர்த்துவைத்தல்.

2. மேற்கூறிய இருபதாம் அம்சத்தின் கீழ் நடைபெறும் செயல்பாட்டை கண்காணிக்கும் பொறுப்பு பணியாளர்—நிருவாக சீர்திருத்தத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

3. நடைமுறைகளை எளிமையாக்குவது பொருத்தமட்டில் பணியாளர்—நிருவாக சீர்திருத்தத் துறையின், நிருவாக அமைப்பு நடைமுறைப்பிரிவு நடைமுறைகளை விவேகமாக சீரமைத்து எளிமைப் படுத்தவும், நிருவாகத்தில் ஒழுங்குபட்ட நடைமுறையை உருவாக்கவும் பல ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. பின் வருவன குறித்து இப்பிரிவு அண்மையில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது :—

(1) சட்டக் கல்வி இயக்ககத்தின் பணிபற்றி ஆய்வு :

(2) பதிவேடுகள், கணக்குகள் ஆகியவற்றை பராமரித்து வருதல், தொடக்க சுகாதார நிலையங்களின் மருத்துவர்கள் புரிய வேண்டிய எழுத்துப்பணியை குறைக்க வேண்டியதன் தேவை ஆகியவை பற்றி ஆய்வு :

(3) வனத்துறை வனச்சரகர்களுக்கு கோட்பாடுகளை வரையறுத்தல்; எல்லையோரப் பகுதி வனச்சரகர்களுக்குரிய முறைகளையும், நடைமுறைகளையும் வரையறுத்தல் ஆகியவை பற்றிய ஆய்வு

நடந்தேறிவரும் திட்டங்கள் தொடர்பாக பல ஆய்வுகளை மதிப்பீடு-செய்முறை ஆராய்ச்சி இயக்ககம் நடத்தி, உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அந்த ஆய்வு அறிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. பொருத்தமான நிலைகளில் திறம்பட்ட கட்டுப்பாட்டிற்கு வகை செய்யும் நோக்குடன், பண வீக்கத்தாலும், ஏனையவற்றாலும் ஏற்பட்டுள்ள இன்றைக் கால மாறுபட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நிதி தொடர்பான அதிகாரங்களை அரசு பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகளுக்கு பகிர்ந்தளித்துள்ளது. பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகள் புரிய வேண்டிய பணி தொடர்பான அட்டவணையை தயாரித்தல், ஓர் ஆண்டிற்குரிய இலக்குகளை வரையிறுத்தல், அவற்றை குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்தல் ஆகியவை பரிவுள்ள நிருவாகத்தின் ஏனைய கூறுகளை கவனித்துக் கொள்கிறது.

## பொதுமக்களின் குறைகளை அனுதாபத்துடன் அணுகி உரிய முறையில் தீர்த்து வைத்தல் :

4. பொதுவாக, பொதுமக்களின் குறிப்பாக நசுக்கப்பட்டவர்களின் துயரங்களை களைதல் என்னும் அரசின் கொள்கை, அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் எய்தக்கருதப்படுகிறது. புகார் பிரிவுகள், தலைமை செயலகத்தின் ஒவ்வொரு துறைகளிலும், துறைத் தலைவர்களின் அலுவலகங்களிலும், மாவட்ட அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நோக்கத்தை எய்தும் பொருட்டு, திங்கட்கிழமை மக்களின் குறைதீர்க்கும் நாளாக எல்லா மாவட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. அப்போது, மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய் கோட்ட அதிகாரி, வட்டாட்சியர், ஏனைய கள அதிகாரிகள் ஆகியோர் தலைமையிடத்தில் தங்கியிருந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களின் குறைகளைத் தீர்க்க உரிய நடவடிக்கையை மேற்கொள்வர். அரசு நியமித்த தனி ஆணையர்களின் ஆய்வு அறிக்கைகளை ஒட்டி, பொது மக்களிடமிருந்து வரப் பெற்ற மனுக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க உறுதி செய்யும் பொருட்டு குறைகளை களைவதற்குரிய நடைமுறை திறம்பட சீரமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு வழங்கப்படும் வெள்ளைநிற இளஞ்சிவப்பு நிற அட்டைகள், அவர்களுடைய குறைகள் எவ்வளவு கால அளவுக்குள் களையப்படும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள இயலச் செய்யும். இது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள பிறிதொரு நடவடிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும்; வருவாய் கோட்ட அதிகாரிகள் முதலியவர்களாலும், ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் ''மனுநீதித் திட்டம்'' என்பதாகும். இதற்கிணங்க, மேற்கூறிய அதிகாரிகள் ஒவ்வொருவரும் தங்கள் சார்நிலை அதிகாரிகளுடன் கிராமத்திற்குச் சென்று, பொதுமக்களின் குறைகளை கேட்டு, அவற்றை வகைப்படுத்தி பெரும் அளவிற்கு அந்த இடத்திலேயே அவைகளைக் களைகின்றனர்.

## ஓய்வூதியக் குறைகள் :

5. அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்றவர்களின் குறைகளை களைவதற்காக பணியாளர் நிருவாகச் சீர்திருத்த துறையில் ஓய்வூதியம் குறைதீர்க்கும் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. பணியாளர்-நிருவாகச் சீர்திருத்த துறையில் அரசு ஆணையாளர்-செயலாளர், நிதித் துறையில் அரசு ஆணையாளர்-செயலாளர், மாநில கணக்குத்துறை துணைத்தலைவர், கருவூலங்கள்-கணக்குகள் துறை இயக்குநர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று நான்கு திங்களுக்கு ஒருமுறை ஓய்வூதியர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளை விவாதிக்கிறது. இதேபோன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஓய்வூதியர் சங்கங்களின் பிரதிநிதிகளை நான்கு திங்களுக்கு ஒருமுறை சந்தித்து, ஓய்வூதியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்கின்றனர்.

6. ஓய்வூதியர் குறைதீர்க்கும் பிரிவு இக்கால அளவில் 6,010 மனுக்களைப்பெற்று 5,690 மனுக்கள் தொடர்பான பிரச்சினைகளை களைந்துள்ளது.

## II. பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத்துறை.

பொது நிருவாகத்தைச் சீரமைக்க மேம்படுத்துவது குறித்து பரிந்துரைகள் செய்வதற்காக, தமிழ்நாடு அரசு 1971 மே திங்களில் திரு டி. ஏ. வர்கீஸ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்தது.

2. இக்குழு, பின்வருவன குறித்து அறிக்கை அளித்தது :

1. வருவாய் வாரியம்.

2. வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம்.

3. சிறுதொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான அனுமதி வழங்கப்படுவதை விரைவு படுத்துதல்.

4. பொதுப்பணித்துறை நிருவாகம்.

5. ஊராட்சி மேம்பாட்டு நிருவாகம்.

6. மாவட்ட வருவாய், பொது (நிருவாகம்).

7. மாநகராட்சி.

8. நெடுஞ்சாலைகள்—கிராமப்பணித்துறை நிருவாகம்.

9. சுகாதாரம் பணிகள் நிருவாகம்.

10. வேளாண்மைத் துறை நிருவாகம்.

11. செயலக நிருவாகம்.

நிருவாகச் சீர்திருத்தக்குழுவின் பரிந்துரைகள் மீது, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

3. பணியாளர்-நிருவாகம் சீர்திருத்தத் துறையிலுள்ள நிருவாகச் சீர்திருத்தப் பிரிவு, நிருவாகச் சீர்திருத்தம் தொடர்பான பணிகளையும் மற்ற அலுவலக மனித ஆற்றல் மேம்பாடு அதாவது அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு பயிற்சித் திட்டங்களை வகுத்து அவற்றை செயல் படுத்தல் தொடர்பாக பணிகளையும், அரசுத் துறைகள் அனைத்தையும் ஆய்வு செய்யும் பணிகளையும் கவனிக்கிறது. இப்பிரிவு பணிகளையும அரசுத் துறைகளில் முறையான மேம்பாட்டை ஏற்படுத்தவும், பல்வேறு அரசுப் பணியாளர்களின் ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோரின் குறைகளைக் களைவதற்கும் பல்வேறு அரசுத் துறைகள், மாநில அரசுத் துறைகள் ஆகியவற்றில் நிறுவன அமைப்பு-நடைமுறை ஆய்வை மேற்கொள்கிறது. பணி விவகாரங்கள், ஒழுங்கு முறை நடவடிக்கைகள் ஊதிய நிர்ணயம் முதலியவை தொடர்பான விவகாரங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசு, சார்நிலை பணி விதிகள், அடிப்படை விதிகள் போன்ற பொது விதிகளை வகுப்பதற்கு இத்துறை பொறுப்பு வகிக்கிறது. அரசுப் பணியாளர் நடத்தை விதிகளின் நிருவாகத்திற்கும் இத்துறையே பொறுப்பு வகிக்கிறது. இவ்விதிகளைப் பின்பற்றி தலைமைச்செயலகத்திலுள்ள பணி ஊதிய நிர்ணயம், அரசுப் பணியாளர் நடத்தை முதலியன தொடர்பான அனைத்து விவகாரங்கள் குறித்து ஆலோசனை பெற இத்துறையை கலந்தாலோசிக்கின்றன. இத்துறை வழங்கும் அறிவுரையை அத்துறைகள் பின்பற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அறிவுரைகளின்று மாறுபட வேண்டியிருப்பின் அது குறித்து பொது நிருவாகத்திற்கு பொறுப்புவகிக்கும் அமைச்சர் உட்பட அமைச்சர்களிடமிருந்து சுற்றோட்ட முறையில் ஒப்புதல் பெறவேண்டும்.

<u>தலைமைச் செயலகத்துறைகள் குறித்த நிறுவன அமைப்பு—செயல் முறைப்பிரிவின் அறிக்கை :</u>

ஐந்தாண்டுத்திட்டங்களைச் செயல் படுத்தியதனால் அரசு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்ததன் காரணமாக அதற்கு நிகராக 1960 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு தலைமைச் செயலகம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கை மூன்றாவது ஊதியக்குழு அறிக்கை அளிக்கப்பட்டபோது இருந்ததைவிட பணியாளர் பெருமளவு அதிகரித்துள்ளது என நான்காவது ஊதியக் குழு அறிந்தது. இந்த சூழ்நிலையில் தலைமைச் செயலகத் துறைகளின் பணிச் சுமையை குறைப்பதற்காக மதிப்பிடுவதற்கும், திறமையை மேம் படுத்தி செலவைக் குறைப்பதற்காக தற்போதுள்ள நடைமுறைகளை சீரமைக்க அமைப்பு—செயல்முறைப்பிரிவு ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இப்பிரிவு அதன் அறிக்கையை. 1987 ஜனவரித் திங்களில் இரு பாகங்களாக அளித்தது. பாகம் I தலைமை செயலகத் துறைகளுக்குத் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை, பாகம் II தலைமைச் செயலகத்துறைகளில் செயல்முறை ஆய்வு.

அமைப்பு—செயல் முறைப்பிரிவு செய்த மதிப்பீட்டின் அடிப்படையில், தலைமைச் செயலகத்தின் தற்போதைய பணியாளர்களை உகந்தவாறு பயன்படுத்தி செலவைச் சிக்கனப்படுத்துவதற்காக, அவர்களை பல்வேறு துறைகளுக்கு அரசு மறு ஒதுக்கீடு செய்துள்ளது.

அமைப்பு—செயல்முறைப் பிரிவு அளித்த அறிக்கையின் இரண்டாம் பாகம் திறமையை மேம்படுத்த தற்போதுள்ள நடைமுறைகளைச் சீரமைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுகிறது. நிறுவன அமைப்பு—செயல்முறைப் பிரிவின் பரிந்துரைகள் பற்றி பரிசீலிப்பதற்குச் செயலாளர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இப்பரிந்துரையின் அடிப்படையில் நிருவாகத்தை விரைவு படுத்துவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்காக தலைமைச் செயலகத்தில் சிறப்புப் பணி அலுவலர் முறை (Desk Officer System) கொண்டுவரப்பட்டுள்ளது.

## விதிகள், புத்தகங்கள் ஆகியவற்றை வெளியிடுதல் :

தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூல் கடைசியாக, 1976 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. தலைமைச் செயலக நடைமுறை நூலின் 1,250 பிரதிகளை மீண்டும் அச்சிடுவதற்கு பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் (பணி-ஏ) துறையின் 31—10—1985 ஆம் நாளிட்ட 1052-ம் எண் அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டது. இதற்கிடையில் தலைமைச் செயலகத் துறைகள் பற்றிய ஆய்வு குறித்த அமைப்பு-செயல் முறைப்பிரிவு 114 ஆம் எண் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரையைப் பரிசீலிப்பதற்கு செயலாளர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பெரும்பாலான பரிந்துரைகள், தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூலின் தற்போதுள்ள விதிமுறைகளைச் சீரமைப்பது தொடர்பானவையாக இருந்ததால், அப்பரிந்துரைகளைப் பரிசீலித்து தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூலில் தேவையான திருத்தங்கள் செய்வதற்காக தனிப்பிரிவு ஏற்படுத்த வேண்டுமென அக்குழு கருத்து தெரிவித்தது. இதற்கிணங்க தனிப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு திருத்தியமைக்கும் பணியை முடித்துள்ளது. இது தற்போது அச்சிடப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம்.

தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், இந்த தீர்ப்பாயம் நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டம், 1985 (மத்திய அரசுச் சட்டம்)-ன் கீழ் 12—12—1985 முதல் அமைக்கப்பட்டுள்ளது. மாநில அரசு ஊழியர்களின் பணி மற்றும் பணியிடங்கள் தொடர்பாக ஏற்படும் வழக்குகள் மற்றும் முறையீடுகள் குறித்து விசாரிக்க நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டம் வழிவகை செய்கிறது. இந்த மாநில நிருவாகத் தீர்ப்பாயம் நிறுவப்பட்ட நாளிலிருந்து, இம் மாநிலத்திலுள்ள உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பு மேற்குறிக்கப்பட்ட இனங்களிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

# அத்தியாயம் 22.

## திட்டமிடல் மற்றும் வளர்ச்சித்துறை.

## மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை கடந்த 15 ஆண்டுகளாக தனித்துறையாகப் பணியாற்றி வருகிறது.

இத்துறையின் கீழ்க் குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :—

(1) மதிப்பீட்டு ஆய்வுகள் மற்றும் தனி ஆய்வுகள்

(2) திட்ட வடிவமைப்பு.

(3) கீழ்க்கண்ட இரண்டு வெளியீடுகளைத் தயாரித்தல் :—

(அ) தமிழ்நாடு—பொருளாதார ஆய்வறிக்கை.

(ஆ) தமிழக அரசின் வரவு செலவுக்—கணக்கில் பொருளாதார மற்றும் பணி வாரியான பகுப்பு.

இயக்குநர் துறையின் தலைவராவார். துறையின் ஆராய்ச்சி மற்றும் நிர்வாகப் பணிகள் அனைத்தும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் நடைபெற்று வருகின்றன.

மாநில மதிப்பீட்டாய்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு ஆணையிடும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன.

மதிப்பீட்டு ஆய்வுகள் மற்றும் தனி ஆய்வுகள்.

மதிப்பீட்டு ஆய்வுப் பணி பொதுவாக மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப் படுகிறது. முதற் கட்டத்தில் செயல்முறைக் குறிப்பேடு படிவங்கள் மற்றும் வினாப் பட்டியல் தயாரித்தல், இரண்டாவது நிலையில் அந்தத் திட்டத்திற்கான களப்பணி மேற்கொள்ளுதல், இறுதியில் மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து அரசுக்கு அனுப்புதல் இத்துறையில் ஒதுக்கீடு செய்யும் திட்டங்கள் தவிர பிற துறைகள் கேட்டுக் கொள்ளும் சிறப்பு மதிப்பீட்டுப் பணிகளும் செய்யப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் பின் வரும் மதிப்பீட்டாய்வு மற்றும் சிறப்பு தனி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற் கான அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(அ) மதிப்பீட்டு ஆய்வுகள்.—(1) தொழிற்சாலை வளாகங்கள்—உட்பிரிவு மதிப் பீட்டாய்வு.

(2) பெரியார்—வைகை மற்றும் கீழ்பவானி பாசன நிலங்களுக்கு முறை வைத்துத் தண்ணீர்விடும் திட்டம்.

(3) தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சித் திட்டம்.

(4) சென்னை நகரில் வீட்டுச் சாதனங்களைப் பழுது பார்க்கும் சேவை மையங்கள்.

(5) நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்குதலும் அதனைப் பயன்படுத்துதலும்.

(6) மானாவாரி சாகுபடித் திட்டம்.

(7) குழாய்க் கிணறுகளைப் பராமரித்தலுக்கான அலுவலர்களை நிர்ணயம் செய்தல்.

(ஆ) சிறப்பு ஆய்வுகள் :

(1) பெரம்பூரில் நவீன ஆட்டிறைச்சிக்கான கட்டிடம் கட்டுதலுக்கான திட்டம்.

(2) செலவினங்களின் பாகுபாடு (1973—1983).

(3) வாய்க்கால்களைச் சீர் செய்த பின்னர் பெரியார்-வைகை பாசன நிலங்களில் உள்ள கிணறுகளில் நீர் அளவு குறைந்தது தொடர்பாக.

(4) அறுவடைக்குப் பின்னர் தானியங்களைச் சேமிப்பது பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.

(5) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு அளிக்கப்படும் உதவிகள் ஊரக வளர்ச்சித் திட்ட மீனவர்களுக்குப் பயன்படுகிறதா என்பது குறித்து.

(இ) இவை தவிர கீழ்க்கண்ட செயற் குறிப்புகள் மீது கருத்துக்கள் வழங்கப்பட்டது

(1) பட்டு வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளைப் பகுத்தாய்ந்து, அரசு பட்டு நூற்பு நிலையங்களின் செயலாக்கம் குறித்து இத்துறையின் கருத்து அனுப்பப்பட்டது.

(2) இவ்வாண்டில் மதிப்பீட்டுக் குழு கூட்டம் ஒருமுறை கூட்டப்பட்டு, இரண்டு மதிப்பீட்டு அறிக்கைகள் விவாதிக்கப்பட்டன. மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டதற்கேற்ப மதிப்பீட்டு அறிக்கைகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(3) சமீபகால மாநிலப் பொருளாதார நிலை குறித்து அறிக்கை தயாரிக்கப் பட்டது.

(4) கன்னியாகுமரி மாவட்ட மீனவர் மேம்பாட்டுக் குழுமத்திற்காகக் கூடுதல் மீனவர் வேண்டி அனுப்பப்பட்ட மீன் துறை இயக்குநரின் கருத்துருவின் மீது இத் துறையின் கருத்துக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டன.

(5) மரவள்ளிக் கிழங்கு சாகுபடி விரிவாக்கத் திட்டத்தின் மீது இத்துறையின் கருத்து அனுப்பப்பட்டது.

(6) " மாநில வரிகள் ஒரு தொகுப்பு " புதுப்பிக்கும் பணி முடிவுற்றது.

(7) " மாதாந்திரப் பொருளாதார விவரம் " தயாரிக்கும் பணி மாதந்தோறும் நடைபெறுகிறது.

(ஈ) தற்சமயம் நடைபெறும் பணிகள்—மதிப்பீட்டு ஆய்வுகள்.

(1) திரைப்படத் துறையில் குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தை அமலாக்குதல்.

(2) சேலம், வட ஆற்காடு. தென்னாற்காடு மற்றும் தர்மபுரி மாவட்டங்களின் மலைவாழ் மக்களுக்கென திட்டங்கள்.

(3) நடமாடும் கால்நடை மருந்தகங்கள்.

(4) ஆதி திராவிடர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.

(5) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கருப்பா நதித் திட்டம்.

(6) கிராமப்புற சாலைகளுக்கான முதலீடு.

(7) விற்பனை வரி வசூலிக்கும் பணியாளர் தொகுதியை ஒழுங்குபடுத்துதல்.

(8) கால்நடை மேம்பாட்டுத் திட்டம்.

சிறப்பு ஆய்வுகள்—

(9) முதலமைச்சரின் வாழ்க்கை வழி கல்வித் திட்டம்.

(10) நீர்ப்பாசனத்திற்கென முதலீடு.

(11) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மான்யம் வழங்குதல்.

(12) (வளர்ப்பு) முத்து தயாரிக்கும் திட்டம்.

(13) குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு எதிர்ப்புள்ள பகுதிகளுக்கான திட்டம் மற்றும் குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்தல் மற்றும் மகப்பேறு காலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் திட்டம்.

<u>பெரியார்—வைகை மேம்பாட்டு திட்டம், மதுரை.</u>

பெரியார்-வைகை மேம்பாட்டுத் திட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக மதுரையில் 1985-ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் துணை இயக்குநர் அலுவலகம் இயங்கி வருகிறது. துணை இயக்குநருக்கு உதவியாக ஓர் ஆராய்ச்சி அலுவலர் மற்றும் சில பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பெரியார்-வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் செயல் விளைவினைக் கணிப்பாய்வு செய்வதற்கான கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்காக இவ்வலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

1. அடிப்படை-அளவீடு நடத்துதல்.
2. சிறப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.
3. இத்திட்டத்தின் பலன்களை மதிப்பீடு செய்தல்.

விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலை, நிலங்களைப் பயன்படுத்தும் விதம், பயிர் செய்யும் முறைகள், மகசூல் நிலை, கடனுதவி, விற்பனை வசதிகள் போன்றவை ஆய்வில் இடம் பெறும். இவ்வாண்டில் கீழ்க்கண்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.:

1. நில அளவில் மேம்பாட்டுத் திட்டம் குறித்த சிறப்பாய்வு.
2. பாசன நிலங்களைக் கணக்கில் சேர்த்தல் குறித்த சிறப்பாய்வு.
3. கண்மாய்கள் பாசனம் குறித்த சிறப்பாய்வு.

இவ்வாண்டு இவ்வலுவலகத்திற்கென ரூ. 4.71 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்ட ஆய்வுப்பணி, திருச்சி :

கண்மாய்கள் மேம்பாட்டு ஆய்வுப் பணிகள் சம்பந்தமாகத் துணை இயக்குநர் அலுவலகம் திருச்சியில் 1987 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. ஐரோப்பியப் பொருளாதாரப் பிரிவினரின் உதவியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. முதல் கட்டமாக செங்கை-அண்ணா, வட ஆற்காடு, தென்னாற்காடு, புதுக்கோட்டை, தேவர் திருமகன்-இராமநாதபுரம் மற்றும் காமராசர் மாவட்டங்களில் 150 கண்மாய்களை மேம்படுத்தும் பணி நடைபெறுகிறது. இவைகளில் 20 கண்மாய்களைத் தேர்வு செய்து ஆராய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டக் களப்பணி இந்த 20 கண்மாய்களிலும் முடிவுற்றுள்ளது. இவ்வாண்டு ரூ. 2.36 இலட்சம் இதற்கென செலவாகியது.

தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை :

இப்பிரிவு பல்வேறு நிர்வாகத் துறையிடமிருந்தும் இதர நிறுவனங்களிடமிருந்தும் கடந்த மற்றும் நடப்பு ஆண்டுக்கான புள்ளிவிவரங்களைச் சேகரித்து அதனடிப்படையில் தமிழ்நாடு பொருளாதாரத்தில் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சியை அளவிடுகிறது.

இவை தவிர விலைவாசி நிலை, வேலை வாய்ப்பு, நிதிநிலை மற்றும் பிரிவு வாரியான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைப் பரிசீலிக்கிறது. '' தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 1987-88 '' அறிக்கை தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிதிப் பிரிவு :

தமிழ்நாடு வரவு-செலவுத் திட்ட பொருளாதார மற்றும் பணிவாரியான பாகுபாடு அறிக்கை, மத்தியப் புள்ளியியல் நிறுவன விதிமுறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படுகிறது. அரசின் இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பொருளாதாரப் பாகுபாட்டினையும், பணி வாரியான பாகுபாட்டினையும் இவ்வாண்டிற்கான அறிக்கை தன்னகத்திலே கொண்டுள்ளது. பொருளாதாரப் பாகுபாட்டில் ஊதியம் மற்றும் சம்பளம், பயிற்சி மற்றும் படிப்புதவித் தொகை, உதவி மானியம், மூலதன ஒதுக்கீடுகள் போன்ற அம்சங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், அரசின் வரவு-செலவுத் திட்டப் பணிகள் பொருளாதாரப் பணிகள், சமூக மற்றும் சமுதாயப் பணிகள் மற்றும் இதரப் பணிகள் எனும் பெரும் தலைப்புகளின் கீழ் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின் 1988-89 ஆம் ஆண்டு வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது.

நூலகம் :

இத்துறையின் நூலகம் தகுதி பெற்ற முழு நேர நூலகர் ஒருவரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. பெருகிவரும் ஆராய்ச்சிப் பணிகளுக்கேற்ப பொருளாதார மற்றும் ஆய்வுப் பணிகள் சம்பந்தமான நூல்கள் ஆண்டுதோறும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு 222 புதிய நூல்கள் வாங்கப்பட்டன. இந்நூலகத்தில் 2,455 நூல்கள் உள்ளன. மேலும் தின/வார/மாத இதழ்களும் (40) வாங்கப்படுகின்றன.

நிதிநிலை :

இத்துறையில் வருமானம் ஈட்டும் இனங்கள் ஒன்றும் இல்லை. இத்துறைக்கான திட்டம் மற்றும் திட்டம் சாரா ஒதுக்கீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டம் சாரா செலவுகள் | 24.09 |
| திட்டச் செலவுகள் .. | 0.88 |
| மொத்தம் | 24.97 |

## மாநிலத் திட்டக்குழு.

மாநில திட்டக்குழு அமைப்பைப் பொறுத்தவரை நிர்வாக ஆண்டில் எந்தவித மாற்றமும் இல்லை. புதிய அரசு பொறுப்பிற்கு வந்தபின் மார்ச் 1989—ல் மாநில முதலமைச்சர் அவர்களே திட்டக் குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

ஆண்டு திட்ட வரைவு 1989–90 :

ஆண்டு திட்ட வரைவு 1989-90 தயாரிக்கும் பொருட்டு பகுதி 2 திட்டங்களுக்கான முக்கிய குழு விவாதங்கள் செயலர்/துறை தலைவர்கள் ஆகியோருடன் அக்டோபர்-நவம்பர் 1988—ல நடைபெற்றன உரிய காலத்திற்குள் ஆண்டு திட்டவரைவு 1989–90 தயாரிக்கப்பட்டது. அதற்கென திட்டங்களுக்கான விளக்கவுரை தயாரிக்கப்பட்டது. 20 அம்ச திட்டம், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், தாழ்த்தப்பட்ட மக்கள் மேம்பாட்டு சிறப்பு திட்டம், அடிப்படை வசதி தேவை திட்டம் மற்றும் வெளிநிறுவனங்கள் உதவி திட்டம் போன்றவை நுல்லியமாக செய்யப்பட்டு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டன.

மாவட்ட அளவில் திட்டமிடல் :

நெல்லை-கட்டபொம்மன் மாவட்ட மாதிரி மாவட்ட திட்டம் தயாரிப்பதில் மாநில திட்டக்குழு முக்கிய அமைப்பாக இருந்து பணியாற்றியுள்ளது. ஊரக வளர்ச்சிக்கான தேசிய நிறுவனத்தின் வழிகாட்டியைக் கொண்டு மாநில திட்டக் குழு அலுவலர்கள் முக்கிய பணியாற்றிய மாதிரி திட்டத்தை திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்காக தயாரித்துள்ளனர்.

4. மாநிலத் திட்டக்குழுவின் பல்வேறு குழுமங்களில் பணிபுரியும் நுட்ப அலுவலர்கள் கீழ்க்காணும் திட்டங்களையும் சம்பந்தப்பட்டுள்ள அறிக்கைகளையும் தயாரித்துள்ளனர் :—

1. பரம்பிக்குளம்–ஆளியாறு பற்றிய தணிக்கை ஆய்வு அறிக்கை.

2. தமிழ்நாட்டில் உள்ள நீர்வள ஆதாரங்களின் கொள்ளளவு மற்றும் அதன் பயன்கள் குறித்து அறிக்கை.

3. ஒருங்கிணைந்த காவிரி மேம்பாட்டு அறிக்கை (தஞ்சை காவிரிப்படுகை).

4. தமிழ்நாட்டில் வட்டார அடிப்படையிலான விவசாய தட்ப வெப்ப நிலை குறித்த விவரங்கள் ஆகியன.

## விலைவாசிப் புள்ளிகள்.

தமிழ்நாடு மொத்த விலைக் குறியீட்டெண் :

தமிழ்நாடு மொத்த விலைக் குறியீட்டெண் 1970–71-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒவ்வொரு வாரமும் கணக்கிடப்படுகிறது. முதன்மைப் பொருட்கள், எரிபொருள் மற்றும் மின்சக்தி உற்பத்திப் பொருட்கள் என்னும் மூன்று பகுதிகளில் உள்ளிட்ட 177 பொருட்களையும் அவற்றின் 510 விலை விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு இக்குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது.

தமிழ்நாட்டின் 1988–89 ஆம் ஆண்டுக்கான மாதாந்திர மொத்த விலைக் குறியீட்டெண்கள் அடங்கிய பட்டியல் அட்டவணை I-ல் உள்ளது.

நுகர்பொருள் விலைக் குறியீட்டெண்கள் அட்டவணை :

1948-ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் பிரிவு 2 (டி)-யின் ஆணையிட்டபடி தொழிலாளர் பிரிவினருக்கான நுகர்பொருள் விலைக் குறியீட்டெண்கள் புள்ளி இயல் இயக்குநரால் தொகுத்து அக்டோபர் 1988 வரை வெளியிடப்பட்டுள்ளன.

தொடர்ந்து 1988 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் சென்னை நகரம், மதுரை, கோவை, கூனூர், சேலம், திருச்சி மையங்களுக்கான குறியீட்டெண்களின் அடிப்படை ஆண்டு 1981—100-க்கு திருத்தியமைக்கப்பட்டு சிம்லா, தொழிலாளர் நலச் செயலகத்தால் வெளியிடப்பட்டு வருகிறது.

1988–89–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், பல்வேறு மையங்களுக்கான நுகர் பொருள் விலைக் குறியீட்டெண்களின் போக்கு பற்றிய ஆய்வுரை பின்வருமாறு :—

தமிழ்நாட்டின் பல்வேறு நிலையங்களுக்கான நுகர்பொருள் விலைக் குறியீட்டெண்கள் அடங்கிய பட்டியல் அட்டவணை-II-இல் உள்ளது.

## மழைப்புள்ளி விவரம் :

1988–89–ஆம் ஆண்டில் (1988 ஏப்ரல் முதல் 1989 மார்ச் வரை) தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் அதாவது சென்னை, செங்கை-அண்ணா, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், திண்டுக்கல்—காயிதேமில்லத், காமராசர், பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய மாவட்டங்களில் சாதாரண மழையும் ஏனைய 10 மாவட்டங்களில் குறைவான மழையும் பெய்துள்ளது. பொதுவாக இவ்வாண்டு தமிழகத்தில் சாதாரண மழை (—17.8 சதவீதம்) பெய்துள்ளது.

1988–89ஆம் ஆண்டில் மாதாந்திர பருவம் மற்றும் ஆண்டு மழை அளவு விவரங்கள் அட்டவணை-III-இல் உள்ளது.

## பயிர் நிலைமையும் வேளாண்மை உற்பத்தியும் :

1988–87 ஆம் ஆண்டில் முக்கியப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடு 1987–88–ஆம் ஆண்டின் ஒப்பிட்டுப்பட்டு விவரங்கள் அட்டவணை-IV-ல் உள்ளன.

## அயல்நாட்டு வாணிபப் புள்ளி விவரங்கள் :

அயல்நாட்டு வாணிபப் புள்ளி விவரங்கள் சென்னை சுங்கத் துறையினரால் வெளியிடப்படும் அன்றாட நாள் பட்டியல்களிலிருந்தும் ஏற்றுமதி/இறக்குமதி செய்யப்பட்ட விவரங்கள், அறிக்கைக் காலத்திற்கு சேகரிக்கப்பட்டன. மற்றும் கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி துறைமுக அலுவலர்களிடமிருந்தும் திருச்சி விமானதள அதிகாரிகளிடமிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

1986–87–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்கள் மூலமாக அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி/இறக்குமதி செய்யப்பட்ட விவரங்கள், அறிக்கைக் காலத்திற்கு சேகரிக்கப்பட்டன. மற்றும் கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி துறைமுக அலுவலர்களிடமிருந்தும் திருச்சி விமானதள அதிகாரிகளிடமிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

1986–87–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்கள் மூலமாக அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி/இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

ஆண்டு 1986–87 :

| வரிசை எண். (1) | துறைமுகத்தின் பெயர். (2) | இறக்குமதி. (3) | ஏற்றுமதி. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 | சென்னை | 2,26,625 | 74,793 |
| 2 | கடலூர் | 1,960 | 85 |
| 3 | நாகப்பட்டினம் | 444 | 800 |
| 4 | தூத்துக்குடி | 34,758 | 19,568 |
| 5 | மீனம்பாக்கம் .. | 26,896 | 46,567 |
| 6 | திருச்சிராப்பள்ளி | | 11 |
| | மொத்தம் .. | 2,90,683 | 1,41,774 |

## தமிழக மாநில வருவாய் :

1987–88–ஆம் ஆண்டில் நடப்பு விலைகளில் மாநில நிகர வருமானம் ரூ. 17,033.92 கோடியாகும். இது 1986–87-ஆம் ஆண்டில் வருமானமான ரூ. 15,496.93 கோடியை விட 9.92 சதவிகிதம் அதிகமாகும். 1986–87-ல் இச்சதவிகிதம் 10.97 ஆக இருந்தது.

1986–87–ஆம் ஆண்டிற்கு நிலையான விலையில் (1980–81) ரூ. 9,945.45 கோடியாக இருந்த மாநில வருமானம் 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 10,461.13 கோடியாக உயர்ந்துள்ளது. 1987–88-ஆம் ஆண்டில் மதிப்பீடு முந்தைய ஆண்டைவிட 5.18 சதவிகிதம் அதிகம்.

## தனி நபர் வருமானம் :

1986–87-ஆம் ஆண்டில் நடப்பு விலையில் ரூ. 2,921 ஆக இருந்த தனி நபர் வருமானம் 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 3,163 ஆக உயர்ந்துள்ளது. நிலையான (1980–81) விலையில் அது ரூ. 1,875-லிருந்து ரூ. 1,943-ஆக உயர்ந்தது.

1987–88-ஆம் ஆண்டிற்கான மாநில வருவாய் துரித மதிப்பீடு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளுக்கான திருத்திய மதிப்பீடுகள் இனங்கள் வாரியாக நடப்பு மற்றும் நிலையான விலைகளில் (1980–81) அட்டவணை V-இல் உள்ளன.

அட்டவணை—I

**தமிழ்நாடு மொத்த விலைக் குறியீட்டெண் (அடிப்படை 1970-71=100)**

(ஆண்டு 1988-89)

| வரிசை எண். | பகுதி. | ஏப்ரல் 1988 | மே 1988 | ஜுன் 1988 | ஜுலை 1988 | ஆகஸ்டு 1988 | செப்டம்பர் 1988 |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| I. | முதன்மைப் பொருட்கள் | 464.01 | 470.55 | 471.79 | 475.71 | 473.50 | 470.00 |
| | 1. உணவுப் பொருட்கள் | 465.35 | 485.37 | 489.52 | 495.70 | 493.73 | 490.15 |
| | 2. உணவல்லாத பொருட்கள் | 453.67 | 444.89 | 441.39 | 441.76 | 439.05 | 435.55 |
| | 3. தாதுப் பொருட்கள் | 501.46 | 501.46 | 501.46 | 501.46 | 501.46 | 501.46 |
| II. | எரிபொருள் மற்றும் மின்சக்தி | 486.91 | 486.91 | 486.91 | 486.91 | 486.91 | 486.91 |
| III. | உற்பத்தி பொருட்கள் | 421.60 | 424.97 | 424.87 | 426.95 | 427.51 | 421.18 |
| | அனைத்துப் பொருட்கள் | 446.08 | 451.01 | 451.62 | 454.60 | 453.68 | 449.05 |

| வரிசை எண். | பகுதி. | அக்டோபர் 1988 | நவம்பர் 1988 | டிசம்பர் 1988 | ஜனவரி 1989 | பிப்ரவரி 1989 | மார்ச் 1989 |
|---|---|---|---|---|---|---|---|
| | | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| I. | முதன்மைப் பொருட்கள் | 481.51 | 489.28 | 499.36 | 491.15 | 497.56 | 480.48 |
| | 1. உணவுப் பொருட்கள் | 509.27 | 523.25 | 534.73 | 524.98 | 510.61 | 491.92 |
| | 2. உணவல்லாத பொருட்கள் | 435.01 | 432.89 | 441.10 | 430.33 | 473.57 | 458.44 |
| | 3. தாதுப் பொருட்கள் | 501.46 | 501.46 | 501.46 | 529.80 | 558.14 | 558.14 |
| II. | எரிபொருள் மற்றும் மின்சக்தி | 486.91 | 486.91 | 486.91 | 488.99 | 495.23 | 495.23 |
| III. | உற்பத்தி பொருட்கள் | 422.56 | 427.85 | 426.88 | 428.74 | 433.81 | 436.45 |
| | அனைத்துப் பொருட்கள் | 455.72 | 462.14 | 467.03 | 463.59 | 469.40 | 461.57 |

அட்டவணை II.

தமிழ்நாட்டின் பல்வேறு மையங்களுக்கான ஆலைத் தொழிலாளருக்கான நுகர்பொருள் விலைக் குறியீட்டெண்கள் அடிப்படை (1960=100) (1982=100).

| 1988—மாதம். | சென்னை. 1960=100 | சென்னை. 1982=100 | கடலூர். 1960=100 | கடலூர். 1935–36=100 | திருச்சிராப்பள்ளி. 1960=100 | திருச்சிராப்பள்ளி. 1982=100 | மதுரை. 1960=100 | மதுரை. 1982=100 |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| ஏப்ரல் | 783 | — | 817 | 3848 | 816 | .. | 802 | .. |
| மே | 788 | .. | 820 | 3864 | 820 | .. | 823 | .. |
| ஜூன் | 799 | — | 833 | 3923 | 807 | .. | 834 | ... |
| ஜூலை | 812 | ... | 854 | 4022 | 816 | .. | 827 | .. |
| ஆகஸ்ட் | 811 | — | 853 | 4018 | 826 | — | 830 | .. |
| செப்டம்பர் | 819 | .. | 839 | 3952 | 803 | .. | 835 | .. |
| அக்டோபர் | 832 | .. | 851 | 4008 | 808 | .. | 864 | 164 |
| நவம்பர் | 848 | 168 | 891 | 4197 | 834 | .. | 870 | 165 |
| டிசம்பர் | 843 | 167 | 891 | 4197 | 883 | 177 | 901 | 171 |
| 1989— | | | | | | | | |
| சனவரி | 843 | 167 | 856 | 4032 | 878 | 176 | 896 | 170 |
| பிப்ரவரி | 843 | 167 | 855 | 4027 | 873 | 175 | 901 | 171 |
| மார்ச் | 832 | 166 | 836 | 3938 | 873 | 175 | 901 | 171 |

| | கோயம்புத்தூர். 1960=100 | கோயம்புத்தூர். 1982=100 | நாகர்கோவில். 1960=100 | நாகர்கோவில். 1939=100 | குன்னூர். 1960=100 | குன்னூர். 1982=100 | சேலம். 1982=100 |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
| 1988— | | | | | | | |
| ஏப்ரல் | 818 | .. | 906 | 4539 | 783 | | .. |
| மே | 819 | .. | 918 | 4599 | 788 | .. | .. |
| ஜூன் | 827 | .. | 953 | 4775 | 790 | — | .. |
| ஜூலை | 851 | .. | 957 | 4795 | 800 | .. | .. |
| ஆகஸ்ட் | 855 | .. | 963 | 4825 | 802 | .. | .. |
| செப்டம்பர் | 852 | .. | 929 | 4654 | 810 | .. | .. |
| அக்டோபர் | 861 | 161 | 937 | 4644 | 816 | 170 | 163 |
| நவம்பர் | 867 | 162 | 936 | 4689 | 830 | 173 | 164 |
| டிசம்பர் | 872 | 163 | 963 | 4825 | 830 | 173 | 164 |
| 1989— | | | | | | | |
| சனவரி | 867 | 162 | 972 | 4870 | 826 | 172 | 163 |
| பிப்ரவரி | 867 | 162 | 969 | 4855 | 826 | 172 | 163 |
| மார்ச் | 867 | 162 | 950 | 4760 | 830 | 173 | 163 |

1988-89 ஆம் ஆண்டில் பெய்த மழை.

| விபரம். | ஏப்ரல். | மே | ஜூன் | ஜூலை. | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர். | டிசம்பர். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| இயல்பான மழை | 47.3 | 71.9 | 45.8 | 60.6 | 94.6 | 107.4 | 186.5 | 182.0 | 78.9 |
| பெய்த மழை | 95.7 | 58.5 | 32.5 | 82.9 | 140.9 | 120.1 | 70.3 | 115.6 | 31.8 |

தமிழ்நாட்டில் 1988-89 ஆம் ஆண்டில் மாவட்டவாரியாகப் பெய்த மழை (மீ) குளிர்காலப் பருவம் மற்றும் மார்ச் 1989.

| விவரம். | ஜனவரி 1989 | பிப்ரவரி 1989 | மார்ச் 1989 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| இயல்பான மழை | 34.9 | 15.2 | 19.9 |
| பெய்த மழை | 2.0 | 0.0 | 26.5 |

தமிழ்நாட்டில் 1988 -89 ஆம் ஆண்டில் பெய்த மழை.

| இயல்பான மழை. | பெய்த மழை. | இயல்பான மழையிலிருந்து சதவித வேறுபாடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 945.0 | 776.8 | 17.8 |

அட்டவணை VI

பயிர் பரப்பு உற்பத்தி விவரங்கள்.

| வரிசை எண். | பயிர்கள். | பரப்பளவு ஹெக்டேரில் (முன் மதிப்பீட்டறிக்கைகளின்படி). 1988-89 | 1987-88 | விழுக்காடு வேறுபாடு. சதவிகிதம். | உற்பத்தி அளவு டன்களில் (முன்மதிப்பீட்டறிக்கைகளின்படி). 1988-89 | 1987-88 | விழுக்காடு வேறுபாடு. சதவிகிதம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | நெல். | 1,862,174 | 1,967,907 | (—)5.4 | 5,522,339* | 5,479,882* | (+)0.8 |
| 2 | சோளம் | 575,134 | 744,687 | (—)22.8 | 543,886 | 7,46,806 | (—)27.2 |
| 3 | கம்பு | 278;152 | 275,265 | (+)1.0 | 291,396 | 283,850 | (—)2.7 |
| 4 | கேழ்வரகு | 186,936 | 189,563 | (—)1.4 | 266,187 | 312,003 | (—)14.7 |
| 5 | துவரை | 159,702 | 119,566 | (+)6.8 | 104,016 | 98.016 | (+)6.1 |
| 6 | கொண்டைக்கடலை | 4,543 | 7,879 | (—)42.3 | 2,939 | 5,025 | (—)41.5 |
| 7 | கொள்ளு | 120,993 | 163,393 | (—)25.9 | 54,134 | 71,627 | (—)24.4 |
| 8 | இதர பருப்பு வகைகள் | 125,766 | 134,379 | (—)6.4 | 25.922 | 18,432 | (—)8.8 |

*நெல்லின் உற்பத்தி அரிசியில்.

துவரையின் உற்பத்தி தோடு நீக்கிய துவரைப் பயிரில்.

168-2—82

அட்டவணை V.

தமிழ்நாட்டில் நிகர மாநில வருவாய் விவரங்கள் (தொழில் வாரியாக, நிலையான (1980-81) விலையில்.

(ரூபாய் இலட்சத்தில்,)

| வரிசை எண். | தொழில். | 1984–85. | 1985–86. | 1986–87. | 1987–88. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் .. | 2,46,707 | 2,72,264 | 2,65,553 | 2,79,698 |
| 2 | வன வளம் .. | 1,613 | 1,617 | 1,975 | 2,232 |
| 3 | மீன் வளம் .. | 4,671 | 3,672 | 4,523 | 4,387 |
| 4 | கனிவளம் மற்றும் சுரங்கம் .. | 4,124 | 4,064 | 4.070 | 3,982 |
| | உள்பொருள்— மொத்தம் :—முதல்நிலை — | 2,57,115 | 2,81,617 | 2,76,121 | 2,90,290 |
| 5 | (1) தொழில் உற்பத்தி (தொழில் சட்டத்துக்குட்பட்டது) .. | 1,45,148 | 1,47,816 | 1,52,562 | 1,54,326 |
| | (2) தொழில் உற்பத்தி (சட்டத்துக்குட்படாதது) .. | 1,05,170 | 1,16,921 | 1,10,610 | 1,07,483 |
| 6 | கட்டுமானம் .. | 39,579 | 41,229 | 46,176 | 51;717 |
| 7 | மின்சக்தி எரிபொருள், குடிநீர் விநியோகம் .. | 3,419 | 9,518 | 8.758 | 9,639 |
| | உள்பொருள்— மொத்தம்— இடைநிலை .. | 2,93,316 | 3,15,484 | 3,18,106 | 3,23,165 |
| 8. | (1) இரயில் போக்குவரத்து ... | 3,642 | 3,801 | 3,604 | 3,604. |
| | (2) போக்குவரத்து மற்றும் இதர பணிகள் .. | 41,582 | 46,587 | 57,543 | 70,968 |
| | (3) செய்தி தொடர்பு .. | 8,610 | 9,016 | 9,886 | 9,886. |
| 9 | வியாபாரம் விடுதிகள்—தங்கும் விடுதிகள் .. | 1,41,362 | 1,47,798 | 1,46,851 | 1,49,470 |
| | உட்பொருள் மொத்தம் போக்குவரத்து செய்திகள் மற்றும் வாணிபம் | 1,95,196 | 2,07,202 | 2,17,884 | 2,33,928 |
| 10 | வங்கி மற்றும் காப்பீடுகள் .. | 33,737 | 41,056 | 45,165 | 45,165 |
| 11 | சொந்தக்குடியிருப்பு மற்றும் ரியல் எஸ்டேட் வியாபாரம் ... | 41,439 | 42,880 | 44,371 | 45,926 |
| | உட்பொருள்— மொத்தம் நிதி—மற்றும் ரியல் எஸ்டேட் .. | 75,176 | 83,936 | 89,536 | 91,091 |
| 12 | பொது நிர்வாகம் .. | 28,124 | 29,001 | 33,219 | 39,204 |
| 13 | மற்ற பணிகள் .. | 54,349 | 51,663 | 59,679 | 68,435 |
| | உட்பொருள் மொத்தம்—சமுதாய மற்றும் தனிநபர் பணிகள்.. | 82,473 | 80,664 | 92,898 | 1,07,639 |
| | உட்பொருள் மொத்தம் கடைநிலை .. | 3,52,845 | 3,71,802 | 4,00,318 | 4,32,658 |
| | நிகரமாநில வருவாய் உற்பத்தி ... | 9,03,276 | 9,68,903 | 9,94,545 | 10,46,113 |
| | மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை '00' .. | 5,13,701 | 5,22,253 | 5,30,529 | 5,38,490 |
| | தனிநபர் வருவாய் (ரூபாயில்) .. | 1,758 | 1,855 | 1,875 | 1,618 |

P. R. பகுதி திருந்திய மதிப்பீடு (Partially Revised Estimate).

Q. E. துரித மதிப்பீடு (Quick Estimate).

## அத்தியாயம் 23.

### மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை.

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை.

இந்தியாவிலேயே; முதன்முதலாக முழு மதுவிலக்கை செயற்படுத்திய மாநிலம் தமிழ்நாடுதான். 1937 தொடங்கி 1947 வரையில் தமிழ்நாட்டில் படிப்படியாக முழு மதுவிலக்கு செயலுக்கு வந்தது. 1937-ல் முதலில் சேலம் மாவட்டத்தில் முழு மதுவிலக்கு செயற்படுத்தப்பட்டது. பின்னர், இது மூன்று மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு அக்டோபரில் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் இம்மாநிலம் முழுவதும் கொண்டுவரப்பட்டது. பிற மாநிலங்களில் முழு மதுவிலக்குக் கொண்டுவரப்படாததால், தமிழ்நாட்டில் மதுவிலக்கு செயற்படுத்தப்படுவது 1971 ஆகஸ்டில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. இந்த நிலைமை, 31—8—1974 வரையில் நடப்பிலிருந்தது. 1974–75 ஆம் ஆண்டில் கள்ளசாராயக் கடைகள் மூடப்பட்டு பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, உரிமம் பெற்ற கடைகளில் விற்பனை செய்யப்படுகிற இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளை ( IMFS ) அருந்துவதற்கு அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டன. 1981 மே திங்களில் மதுவிலக்குக் கொள்கை மாற்றியமைக்கப்பட்டு, தனிப்பட்ட அனுமதிச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் ( IMFS ) சாராயம், கள் ஆகியவற்றை விற்பனை செய்ய ஆணையிடப்பட்டது. 1—1—1987-லிருந்து கள், சாராயத்தின் விற்பனை தடை செய்யப்பட்டது. ஆனால், அனுமதிச்சீட்டு வைத்திருப்பவர்கள் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகளை மட்டும் ( IMFS ) அருந்த அனுமதிக்கப்பட்டனர்.

மதுவிலக்கு—ஆயத்துறை மாநில அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் முக்கிய துறைகளில் ஒன்றாக இருப்பதால், இத்துறை தலையாய அங்கம் வகிக்கிறது. ஆயத்தீர்வைத் துறைக்குக் கிடைக்கும் வருவாயில் பெரும்பகுதி ஆல்காஹால் வீரியம் குறைக்கப்பட்ட சாராவி, இயல்பு மாற்றப்பட்ட சாராவி, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் ( IMFS ) பீர் ஆகியவற்றின் மீது விதித்து, வசூலிக்கப்படும் உரிமக் கட்டணங்கள் ஆயத்தீர்வை, விற்பவனக்கட்டணம், கூடுதல் விற்பனைக்கட்டணம் முதலியவற்றிலிருந்து கிடைக்கிறது.

மாநிலத்திற்குக் கிடைக்கவேண்டிய வருவாயில் ஏற்படக்கூடிய இழப்புகளையும் பொருட்டு, இந்தியாவில் வெளிநாட்டு மதுவகைகளைத் தயாரிக்கும் பிரிவுகளுக்கு முன்னர் அளித்து வந்த பல்வேறு சலுகைகள் பற்றி, அரசு மறு ஆய்வு செய்து, அவற்றைத் திரும்பப் பெற்றது. இதற்கிணங்க, இந்தியாவில் வெளிநாட்டு (IMFS) மதுவகைகளைத் தயாரிக்கும் பிரிவுகளுக்கு வழங்கப்படும் வீரியம் குறைக்கப்பட்ட சாராவிக்கு ஆயத்தீர்வை விற்பனைக் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து அளிக்கப்பட்ட விலக்குகள் திரும்பப் பெறப்பட்டன. விற்பனை முனையில் ஆயத்தீர்வை மீதான மேல்வரியையும் விற்பனை வரியையும் வசூலிக்கும்பொருட்டு மொத்த விற்பனையாளர் செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை தயாரிப்பாளருக்கு மாற்றப்பட்டது. ஏனைய மாநிலங்களில் விதிக்கப்படும் உயர் வீத வரிகளைக் கருத்திற்கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் ( IMFS ) பீர் ஆகியவற்றின் மீதான ஆயத்தீர்வை, உள்ளூர் பயனுக்கான பீருக்கு விதிக்கப்படும் விற்பனைச் கட்டணம் பீர் முதலியவற்றின் ஏற்றுமதி குறித்து விதிக்கப்படும் ஆயத்தீர்வை, விற்பனைக்கட்டணம் ஆகியவற்றை அரசு உயர்த்தியுள்ளது.

1989 பிப்ரவரியில் செயற்படுத்திய இத்தகைய அனைத்து நடவடிக்கைகளின் பயனாக ஆயத்தீர்வை வருவாய் 1989 பிப்ரவரி, மார்ச் திங்களில் அதிகரித்தது. இதன் காரணமாக 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 120 கோடியாக இருந்த மொத்த வருமானம் 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 141 கோடியாக அதிகரித்தது. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக வருவாய் உயர்வு 1989–90-ல் இன்னும் அதிகமாக இருக்கும்.

**1988–89 ஆம் ஆண்டில் பல்வேறு வாயில்களிலிருந்து ஈட்டிய ஆயத்தீர்வை வருவாய்.**

| விவரங்கள். | தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. நாட்டுச்சாராவி | 68.66 |
| 2. நொதித்த நாட்டு மது (கள்) | 22.93 |
| 3. மாத்தேறல் (Malt-Liquid) | 752.10 |
| 4. அயல்நாட்டு மது வகைகளும், சாராவியும் .. .. .. | 12,497.65 |
| 5. வணிகம் சார்ந்த இயல்பு மாற்றப்பட்ட சாராயமும் மருந்து கலந்த ஒயினும் .. .. .. .. .. | 489.11 |

| | |
|---|---|
| 6. மருத்துவ ஒப்பனைத் தயாரிப்புகள் | 99.6 |
| 7. ஹெம்ப், அபின் ஏனைய மருத்துப் பொருள்கள் | 0.95 |
| 8. அபராதம், பறிமுதல் ஆகிய வகையில் வருவாய் | 4.27 |
| 9. பணிகள்—பணிக் கட்டணங்கள் | 11.25 |
| 10. ஏனைய வரவினங்கள் | 368.94 |
| மொத்தம் | 14,163.69 |
| திருப்பிக் கொடுத்தது .. | 27.70 |
| நிகரத் தொகை | 14,135.99 |

**இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள், பீர், மாஸ் வைன் ஆகிய வற்றைத் தயாரிக்கல் :**

தமிழ்நாட்டில் தற்போது ஐந்து தனியார் தொழிற்பிரிவுகள், வெளிநாட்டு மதுவகைகளைத் தயாரித்து வருகின்றன. தனியார் துறையில் மதுவகைகளைத் தயாரிப்பதற்கான புதிய உரிமம் வழங்கப்படுவதில்லை என்றும், தற்போதுள்ள தொழிற்பிரிவுகள் அவற்றின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு அனுமதிப்பதில்லை என்றும் அரசு ஒரு கொள்கைமுடிவு எடுத்துள்ளது.

**இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனை :**

மாநில அரசின் வருவாய் ஆதாரத்தைப் பெருக்கும்பொருட்டும், சில்லறை விற்பனைக்காக உரிமங்களை வழங்குவதில் வேண்டியவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றதென்ற புகாரைத் தவிர்க்கும்பொருட்டும், அனைவருக்கும் வாய்ப்பளிக்கவும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் சில்லறை விற்பனை உரிமங்கள் வழங்குவதற்கு 1—6—1989 முதற்கொண்டு ஏலமுறையை அறிமுகம் செய்வதென்று இந்த அரசு தீர்மானித்தது. இதன்மூலம் அதிக வருமானம் கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகின்றது.

**கருப்பஞ் சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு :**

சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் துணைப் பொருளான கருப்பஞ் சாற்றுக் கசண்டு, வீரியம் குறைக்கப்பட்ட சாராவி, மது, மருந்துகள், இரசாயனப் பொருட்கள், கால்நடைத் தீவனங்கள், சமையல் எண்ணெய்கள் போன்றவற்றிற்கு மூலப்பொருளாக உள்ளது. மதுவிலக்கு—ஆயத் துறை ஆணையரே மாநில கருப்பஞ் சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு அதிகாரியாவார். அவர் கருப்பஞ்சாற்றுக் கசண்டை சேமித்து வைத்தல், எடுத்துச் செல்லுதல், பயன்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகிறார். இம் மாநிலத்தில் மொத்தம் 27 சர்க்கரை ஆலைகள் உள்ளன

1988–89 ஆம் சர்க்கரை ஆண்டின் தொடக்கத்தில் 1.15 இலட்சம் டன் கருப்பஞ் சாற்றுக் கசண்டு இருப்பில் இருந்தது. நடப்பு ஆண்டில் 423 இலட்சம் டன் கருப்பஞ் சாற்றுக் கசண்டு உற்பத்திச் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கருப்பஞ் சாற்றுக் கசண்டு உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யவும், தொழிற்சாலைகளின் பயனுக்காகவும் தாராளமாக கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஒதுக்கீடு செய்யும் நிலை உருவாகியது. தமிழ்நாட்டிலிருந்து ஒரு லட்சம் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரையில் 73,000 டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்வதற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், இதுவரையில் 35,496 டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**வீரியம் குறைக்கப்பட்ட சாராவி :—**

இம்மாநிலத்தில் மொத்தம் 8 வடிசாலைகள் உள்ளன. இவை ஆண்டொன்றிற்கு 984.80 லட்சம் லிட்டர் வீரியம் குறைக்கப்பட்ட சாராவியை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை ஆகும். கடந்த ஆண்டு இருப்பிலிருந்த 74.91 இலட்சம் லிட்டர் சாராவியையும் சேர்த்து 1988–89 ஆம் ஆண்டில் மொத்தம் 774.20 இலட்சம் லிட்டர் சாராவி வடிசாலைகளிலிருந்து கிடைத்தது. கடந்த ஆண்டில் மொத்த உற்பத்தி 723.31 இலட்சம் லிட்டராகும். சாராய உற்பத்தி, விற்பனையை அரசு தடை செய்துள்ளதன் காரணமாக, இம்மாநிலத்தில் வீரியம் குறைக்கப்பட்ட சாராவி இருப்பு உபரியாக இருந்தது இது ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதுவிலக்கு செயல்படுத்து பிரிவு :

தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்ட விதித்துறைகளையும் அதன்கீழ் இயற்றப்பட்ட பல்வேறு விதிகளையும் ஒழுங்குமுறை விதிகளையும் செயற்படுத்துவதே இம்மாநிலத்திலுள்ள மது விலக்குச் செயற்படுத்து பிரிவின் முக்கியப் பொறுப்பாகும். பிரதேச காவல்துறையினரும் 1—8—1988 ஆம் நாளிலிருந்து இச்சட்டத்தை செயற்படுத்தி வருகின்றனர். கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுதல், கள் இறக்குதல் கள்ளச் சாராயத்தை கள்ளத்தனமாகக் கடத்திச் சென்று விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மதுவிலக்கு செயற்படுத்து பிரிவு இம்மாநிலத்தில் குறைக்கிறது.

கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுதல், மது பானங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல், கள்ளச் சாராயம் காய்ச்சுவோரின் ஏனைய அபாயகரமான நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு எதிராக மதுவிலக்கு செயற்படுத்து பிரிவு இடைவிடாது எடுத்து வரும் நடவடிக்கைகளினால் கள்ளச்சாராயம் காய்ச்சுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு 14 ஆம் சட்டத்தின்கீழ் (குண்டர்கள் தடைச்சட்டம்) 1987 ஆம் ஆண்டில் கள்ளச்சாராயம் காய்ச்சும் 223 பேர் கைது செய்யப்பட்டனர். ஆனால் 1988 ஆம் ஆண்டில் 345 பேர் கைது செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு மாநில வாணிப நிறுவனம் :

தமிழ்நாடு மாநில விற்பனை நிறுவனம் முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் ஒன்றே இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர் ஆகியவற்றை விற்பனை செய்கின்ற மாநில அரசின் மொத்த விற்பனை முகவரமைப்பாகும் இந்நிறுவனம் ஒவ்வொன்றும் 1,000 ரூபாய் மதிப்பு கொண்ட 50,000 சமவிகிதப் பங்குகளைக் கொண்டு 5 கோடி ரூபாய் அதிகாரமளிக்கப்பெற்ற முதலீட்டுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசுக்கு முற்றிலும் சொந்தமானதொரு நிறுவனமாகும். இது 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 23—5—1983 ஆம் நாளன்று நிறுவப்பட்டது. இது 25—7—1983 முதல் செயல்படத் தொடங்கியது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்தக் கொள்முதல், விற்பனை நடவடிக்கைகளை இந்நிறுவனம் கண்காணிக்கிறது. இந்நிறுவனத்தின் தலைவர் இதன் தலைவராக உள்ளார்.

தமிழ்நாடு மாநில வாணிப நிறுவனம் (டாஸ்மாக்) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை விற்பனை செய்ததன் மூலம் இந்த ஆண்டில் மாநில அரசுக்கு 33,997.67 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்தது.

இந்த நிறுவனம் அரசுக்குச் செலுத்திய ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம், கூடுதல் விற்பனைக் கட்டணம் குறித்த விவரங்கள் வருமாறு :—

தமிழ்நாடு மாநில வாணிப நிறுவனத்திடமிருந்து அரசுக்குக் கிடைத்த வருவாய் :

(கணக்குகள்—ரூபாய் கோடியில்).

| விவரங்கள். | 1987–88 | 1988–89 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆயத்தீர்வை | 66.10 | 69.87 |
| விற்பனைக் கட்டணம் (இ.த.வெ.ம.) | 7.72 | 8.50 |
| இ.த.வெ.ம. மற்றும் பீர் குறித்த விற்பனைக் கட்டணம் | 26.10 | 33.39 |
| விற்பனை வரி | 38.80 | 37.83 |
| இறக்குமதி உரிமக் கட்டணம் | 1.04 | 1.10 |
| | 139.56 | 150.69 |

# அத்தியாயம் 24.

## பொதுத் துறை

### கர்நாடக உதவித்தொகை.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பதவி வழி கர்நாடக மான்யம் வழங்கும் அலுவலர் ஆவார். மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியர் (பொது) அவர்கள் பதவி வழி உதவி சம்பள அலுவலராவார்.

2. 1855-ம் ஆண்டு முதல் இன்றுவரை கர்நாடக மானியத் தொகை எவ்வித உயர்வோ மாற்றமோ இன்றி முதல் ஆற்காடு இளவரசரின் குடும்பத்தாருக்கும் சந்ததியினருக்கும் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

3. கர்நாடக மானியத்தில் இரண்டு வகைகள் உள்ளன. அவையாவன: (அ) நிரந்தர மானியம், (ஆ) நிரந்தரமற்ற மானியம்.

(அ) நிரந்தர மானியம் பெற்று வந்தவர் இறந்த பின்பு அன்னாரது வாரிசுதாரர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

(ஆ) நிரந்தரமற்ற மானியம் அரசால் அறிவிக்கை செய்யப்படும் நபர்களுக் வாழ்வு காலம் வரை மட்டுமே வழங்கப்படுகின்றது.

4. 31—3—1989-ல் நிரந்தர மானியம் பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 108 ஆகும். வழங்கப்பட்ட நிரந்தர மானியத் தொகை ரூ. 1,41,456.04 ஆகும்.

5. 31—3—1989-ல் நிரந்தரமற்ற மானியத் தொகையினை பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 5 ஆகும். 1—4—1988 முதல் 31—3—1989 வரை வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ. 1,080 ஆகும்.

6. நிரந்தரம் மற்றும் நிரந்தரமற்ற மானியத் தொகைப் பெறும் ஆடவர்கள் குறித்த நேரடி ஆய்வு (மஸ்டர்) ஆண்டுக்கு இருமுறை (சனவரித் திங்கள் இரண்டாம் நாள் மற்றும் சூலைத் திங்கள் முதல் நாள்) உதவி சம்பள அலுவலரால் மேற்கொள்ளப் படுகின்றது. அவ்வாறே நிரந்தர மானியத் தொகைப் பெறும் 'பெண்டிர்' குறித்த நேராய்வு ஆண்டுக்கொருமுறையும், நிரந்தரமற்ற மானியம் பெறும் பெண்டிருக்கான நேராய்வு (மஸ்டர்) ஆண்டுக்கு இருமுறை அரசால் நியமனம் செய்யப்பட்ட பெண் கண்காணிப்பாளரால் மேற்கொள்ளப்படுகின்றது.

7. ஆற்காடு இளவரசர் மாதந்தோறும் பட்டப் படியாக ரூ. 6,096.00 கல்லறைகள் படியாக ரூ. 444.08-ம் பெறுகிறார். திரு. ஜி.எம். அப்துல் காதர் என்பவர் தற்போதைய ஆற்காடு இளவரசராக ஏற்படைத்து அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

8. சம்பள அலுவலர் அலுவலகத்தில் பணி அமைப்பு செலவு தமிழ்நாடு அரசால் முகமைப்பணிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்னர் நடுவன் அரசால் செலவு ஈடு செய்யப்படுகின்றது.

9. ஒவ்வொரு நிதியாண்டுதோறும் நடுவர் அரசால் ஒதுக்கப்படும் நிரந்தர ஆண்டு ரூ. 1,50,000—லிருந்து இந்த கர்நாடக மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.

### மக்கள் தொகைக் கணக்கெடுப்பு.

மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறையின் (மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்திற்கு உட்பட்ட ஒரு துறை) பணிகள் பற்றிய விவரங்கள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன :—

1. ஆதிதிராவிடர்/பழங்குடியினரின் படித்தவர்கள், வேலை செய்பவர்கள்/வேலை செய்யாதவர்கள், திருமணமானவர்களா என்பது ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களும் தனிப்பட்ட ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மக்கள் தொகை பற்றிய புள்ளி விவரங்களும் அடங்கிய வெளியீடுகள் [பாகம் IX (i) மற்றும் பாகம் IX(ii) அந்த ஆண்டில் வெளியிடப் பட்டன.

2. தரைபடங்களுடனும், குறிப்புகளுடனும் பல்வேறு புள்ளி விவரங்களை அளிக்கின்ற தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிலப்படத் தொகுதி அட்டவணைப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு அச்சிடத்தயார் நிலையில் உள்ளது.

3. தமிழ்நாட்டில் எஞ்சியுள்ள மாவட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கையேடுகள் அறிக்கை ஆண்டில் வெளியிடப்பட்டன.

4. ஆலடிப்பட்டி கிராமம், தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் இசைக்கருவிகள் பற்றிய சிறப்பு ஆய்வுகள் குறித்த அறிக்கைகள் முடிவு செய்யப்பட்டு, அச்சிடுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுதிகள் விரைவில் வெளியிடப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

5. 'விஸ்வனூர் கிராமம்' மன்னார்குடி நகரம் ஆகியவை பற்றிய சிறப்பு ஆய்வு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் பிறப்பு, இறப்பை மாதிரி பதிவு செய்தல் சம்பந்தப்பட்ட பணியில் மாநிலத்திலுள்ள மொத்தம் 330 மாதிரிப் பிரிவுகளில் 180 பிரிவுகளை மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்ககம் கடந்த ஆண்டுகளில் கவனித்ததைப் போன்றே இந்த ஆண்டும் கவனித்தது. மாநில தேசிய அளவில் நிகழக் கூடிய பிறப்பு இறப்புகளைப் பற்றி நம்பகமாக மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு பிறப்பு இறப்பு நிகழ்ந்த போதே பகுதிநேரக் கணக்கெடுப்பவர்கள் உடனுக்குடன் அவற்றை மாதிரிப் பிரிவுகளில் தொடர்ச்சியாகப் பதிவு செய்யும் முறையையும் அதனைத் தொடர்ந்து மேற்பார்வை யாளர்களால் (மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலர்) 6 திங்களுக்கொருமுறை தனிப்பட்ட முறையில் விசாரணை செய்யும் முறையையும் அதனையடுத்து ஏட்டுவழிப் புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப்பார்ப்பதையும், இடத்திற்கே சென்று மறுசரிபார்ப்புச் செய்யும் முறையையும் இத்திட்டம் கொண்டுள்ளது.

7. தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட 5 மாவட்டங்களில் 20 கிராமத் தொகுதி களிலும், 10 நகரத் தொகுதிகளிலும் 1988 நவம்பர் திங்கள் 22ஆம் தேதியிலிருந்து டிசம்பர் திங்கள் 10ஆம் தேதி வரை 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவர அட்டவணைகளுக்கான முதல் முன்சோதனை நடத்தப்பட்டது. முடிவுகள் அட்டவணையிடப்பட்டு, 1988 டிசம்பர் திங்கள் இறுதியில் இந்தியப் பதிவுத் துறையின் தலைவருக்கு அனுப்பப்பட்டன.

## முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம்.

முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் 1974ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகின்றது. இவ்வலுவலகத்தில் துணைச்செயலாளர் பதவித் தரத்தில் உள்ள தனி அலுவலரின் கீழ் மூன்று பிரிவுகள் உள்ளன. பொதுமக்களின் குறைகளை, சம்பந்தப்பட்ட அலுவலர் களுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைப்பதே இத்தனி அலுவலகத்தின் பணியாகும். 31—3—1988-ம் நாள் முதல் குடியரசுத் தலைவரின் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட தால் இத்துறையின் பெயர் ஆளுநரின் சிறப்பு அலுவலகம் என்ற பெயர் மாற்றத்துடன் 1—4—1988 முதல் 26—1—1989 வரை செயல்பட்டு வந்தது. 27—1—1989 முதல் முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் என்றபெயர் மாற்றத்துடன் செயல்பட்டு வருகிறது.

2. பொது மக்களிடமிருந்து முதலமைச்சர், ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்படும் குறைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் தனி அலுவலரால் அலுவலகத்தில் நேரில் பெறப்படும் மனுக்கள் ஆகியவை எந்த அதிகாரிகளால் தீர்க்கப்படவேண்டுமோ அவர் களுக்கு தனி அலுவலரால் அனுப்பிவைக்கப்பட்டு எடுத்த நடவடிக்கை குறித்து அறிக்கைகள் அவர்களிடமிருந்து பெறப்படுகின்றன. மாநில அரசின் எந்த அதிகாரி களையும் நேரடியாக தொடர்பு கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கப்படுள்ளார்.

3. ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவை பெற்றுத் தருமாறு கேட்டு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சமுதாயத்தில் நலிவுற்ற வர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், விதவைகளின் கோரிக்கைகள், முதியோர் ஓய்வூதியம் கேட்டு வரும் விண்ணப்பங்கள், விபத்து நிவாரண நிதி கேட்டு வரும் விண்ணப்பங்கள் மற்றும் தீர்வு காணப்படாத நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பொதுமக்களது கோரிக்கைகள் ஆகியவை ஒரு தனிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தனி நடவடிக்கைக்காக அனுப்பப்படுகின்றன. அவர் களிடமிருந்து முடிவான அறிக்கை பெறும்வரையோ அல்லது மனுதாரர்களின் குறைகள் தீர்க்கப்படும் வரையோ உரிய தொடர் நினைவூட்டுக் கடிதங்கள் அவ்வப்போது அனுப்பப்படுகின்றன.

4. மனுக்கள் மீதான தொடர் நடவடிக்கையினை சிறப்பாகவும், திறமையாகவும் கவனிப்பதற்காக குடியரசு தலைவர் ஆட்சிக்காலத்தில் கீழ்க்காணும், புதிய சிறப்புப் பதிவேடுகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

1. தொடர் நடவடிக்கையினைக் காண விரும்பும் மனுக்களுக்கான பதிவேடு.

2. நேரில் கொடுக்கப்பட்ட மனுக்கான பதிவேடு.

3. உடல் ஊனமுற்றோர் அளித்த மனுக்களுக்கான பதிவேடு

4. மந்தனம் மற்றும் கூர் உணர்வுடைய மனுக்களுக்கான பதிவேடு. மேற்கூறிய பதிவேடுகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை காலத்திலும் நல்ல முறையில் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன.

1—4—1988 முதல் 31—3—1989 வரையிலான ஓராண்டில் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | ஆளுநரின் தனிப்பிரிவு. | முதலமைச்சரின் தனிப்பிரிவு. |
|---|---|---|
| 1—4—1988 முதல் 26—1—1989வரை | 3,25,706 | .. |
| 27—1—1989 முதல் 31—3—1989 வரை | | 1,25,412 |

1—4—1988 முதல் 31—3—1989 முடிய ஓராண்டில் பெறப்பட்ட மொத்த மனுக்களில் (அதாவது 4,51,118) 4,45,796 மனுக்களின் மீதான நடவடிக்கை முடிவுற்றது.

முறையீட்டுப் பிரிவு.

பொதுமக்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் உள்ள குறைகளைப் பரிவோடு கவனித்து அவற்றை நிவர்த்தி செய்ய அணி அமைப்பு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கருதித் தலைமை செயலகத்தில் ஒரு முறையீட்டுப் பிரிவு இயங்கி வருகின்றது.

அரசு பணியாளர்களிடமிருந்து கீழ்க்காணும் முறையீடுகள் பொதுவாக இப்பிரிவிற்கு வருகின்றன:—

(அ) சம்பளம், ஓய்வூதியம், படிகள் கொடுக்கப்படவில்லை என்று அல்லது, கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படும் முறையீடுகள்:

(ஆ) பதவிகளில் பணியை உறுதி செய்யாமல் நீண்ட காலத்திற்கு தற்காலிக மாகவே பணியாற்ற அனுமதிப்பதாகக் கூறும் முறையீடுகள்;

(இ) சம்பள நிர்ணயம் பற்றிய முறையீடுகள் ;

(ஈ) ஓய்வூதியத்தை முடிவு செய்வதிலும் அல்லது ஆண்டுதோறும் ஊதிய உயர்வு வழங்குவதிலும் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறையீடுகள்.

(உ) மாற்றல் கோரி வரும் வேண்டுகோள்கள் அடிக்கடி மாற்றுவதாகக் கூறும் முறையீடுகள்.

(ஊ) பயணப்படி பொது வருங்கால வைப்பு நிதி முதலியவற்றைக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறையீடுகள்.

பொது மக்களிடமிருந்தும் மனுக்கள் இப்பிரிவிற்கு வருகின்றன. பட்டாக்கள் வழங்கும்படியும், புறம்போக்கு நிலங்களையும், வீட்டு மனைகளையும் ஒதுக்கித் தரும் படியும், உயிருக்குப் பாதுகாப்பு அளிக்கும்படியும், வேலை வாய்ப்புக் கோரியும், நிதியுதவி கோரியும், தியாகிகள் ஓய்வூதியம், அடிப்படை வசதிகள் கோரியும் முறையீடுகள் வருகின்றன,

அரசுப் பணியாளர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் முகவரியிட்டு வருகின்ற புகார்கள் தவிர தலைமைச் செயலாளருக்கும் மத்திய அமைச்சர்களுக்கும், தலைமை அமைச்சருக்கும், குடியரசுத் தலைவருக்கும் முகவரியிட்டு வருகின்ற புகார்களைப் பொதுத் துறையிலுள்ள முறையீடுகள் மற்றும் முன்பணம் பிரிவு கவனிக்கிறது. அந்த புகார்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி அவை தலைமைச் செயலகத்துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பொதுவாக அரசுப் பணியாளர்களுக்கும், பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கும் பொது மக்களுக்கும் சட்டப்படி தங்களுக்கு சேரவேண்டியவற்றை வாங்கித் தருவதில் அல்லது அவர்களின் குறைகளை உடனுக்குடன் களைவதில் இப்பிரிவு ஒரு கர்த்தாவாக செயல்பட்டு வருகிறது.

நாளொன்றுக்கு ஏறத்தாழ 100 மனுக்கள் மத்திய அரசின் பல்வேறு துறைகளிலிருந்து இத்துறையில் பெறப்படுகிறது. இவை செயலகத்துறையில் உள்ள குறை தீர்க்கும் அலுவலகத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது. அம்மனுக்கள் மீதான குறைகளை பரிசீலனை செய்வது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1—4—1988 முதல் 31—3—1989 வரையிலான காலத்திற்கு இக்குழுவிற்கு எத்தனை மனுக்கள் வந்தன எத்தனை? மனுக்கள்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:—

| | வந்த மனுக்கள். | மேல் நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்ட மனுக்கள். |
|---|---|---|
| மாநில மனுக்கள் | 24,824 | 24,824 |
| மத்திய மனுக்கள் | 29,768 | (மனுக்கள் மீது துறைகளால் எடுக்கப்படும் நடவடிக்கைப் பற்றிய அறிக்கைகள் பெறப்பட்டு மத்திய அரசுக்கு பதில் அனுப்பிவைக்கப்படுகிறது. |

## தேர்தல்கள்.

### வாக்காளர் பட்டியல் திருத்தம் :

தமிழ்நாட்டில் உள்ள எல்லா சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் தீவிரமாக திருத்தும் பணி 1—1—1988-ம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு நடைபெற்றது.

வாக்காளர் பட்டியல்கள் இறுதியாக 19—5—1988 அன்று வெளியிடப்பட்டன.

1984ஆம் ஆண்டு மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 3,09,57,439. தீவிர திருத்தப் பணிக்குப் பிறகு, தமிழ் நாட்டிலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 3,54,62,607 ஆகும். இதில் ஆண்கள் 1,79,32,561, பெண்கள் 1,75,30,046 பேர். தீவிர திருத்தப்பணியின் காரணமாக வாக்காளர் பட்டியலின் எண்ணிக்கையில் 45,05,168 நபர்கள் அதிகரித்தனர். இது 1984 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் எண்ணிக்கையை விட 14.5 விழுக்காடு அதிகமாகும். இந்த வாக்காளர் பட்டியலின் அடிப்படையில்தான் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

2. வாக்குரிமை வயதை 21 லிருந்து 18ஆக குறைக்கும் அரசியல் சட்டத் திருத்த மசோதா சட்டமாக நிறைவேறுவதை எதிர்பார்த்து, வாக்காளர் பட்டியலில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயர்களையும் சேர்க்கும் நோக்குடன் 1—4—1989 நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு சிறப்புத் திருத்தப்பணி மேற்கொள்ள தேர்தல் ஆணைக்குழு பணித்தது. அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### தேர்தல் நடத்துதல்.

### தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு பொதுத் தேர்தல்.

30—1—1988 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவை கலைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு 1989 ஜனவரியில் பொதுத் தேர்தலை நடத்த இந்தியத்தேர்தல் ஆணையம் நிர்ணயித்தது.

மொத்தம் 6051 பேர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தனர். இவர்களில், 210 பேர்களின் வேட்பு மனுக்கள் பரிசீலனை நாளன்று நிராகரிக்கப்பட்டது. போட்டியிலிருந்து 2820 பேர் விலகிக் கொண்டனர். 3021 பேர் தேர்தலில் போட்டியிட்டனர். மதுரை கிழக்கு மற்றும் மருங்காபுரி தொகுதி ஒவ்வொன்றிலும் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் மரணமடைந்ததால், இவ்விரு தொகுதிகளிலும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இந்த இரு தொகுதிகளைத் தவிர்த்து மீதமுள்ள 232 தொகுதிகளில் 21—1—1989 அன்று காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்குப்பதிவு நடைபெற்றது.

3,54,62,607 வாக்காளர்களுக்காக தமிழ்நாட்டில் மொத்தம் 42,878 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. முன்னாள் படைவீரர்கள் மற்றும் முன்னாள் காவலர்கள் தேர்தல் பாதுகாப்புப்பணிக்காக அமர்த்தப்பட்டனர். அசம்பாவிதம் ஏதுமின்றி தேர்தல் அமைதியாக நடைபெற்றது. மொத்தம் 2,45,95,590 பேர் இத்தேர்தலின் வாக்களித்தனர். 22—1—1989 அன்று வாக்கு எண்ணிக்கை தொடங்கப் பெற்று 23—1—1989 அன்று அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளின் முடிவுகளும் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்காக ரூ. 8,62,98,000 செலவிடப்பட்டது. அரசியல் சட்டம் 333-ன் பிரிவின்படி ஆங்கிலோ-இந்திய வகுப்பினரான திரு. ஆஸ்கார் சி. நிகிலி, 5—2—1989 அன்று சட்டப் பேரவை உறுப்பினராக ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டார்.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட தொகுதிகளான மதுரை கிழக்கு மற்றும் மருங்காபுரி ஆகியவற்றிற்கு தேர்தல் நடத்தக்கோரும் அறிவிக்கை 7—2—1989 அன்று வெளியிடப்பட்டது. 11—3—1989 அன்று இரண்டு தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடைபெற்றது.

<u>மாநிலங்களுக்கான இடைத்தேர்தல்</u> : மாநிலங்களவையில் இரண்டு காலியிடங்களை நிரப்புவதற்காக, இடைத்தேர்தல் அறிவிக்கையை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டது. 20—3—1989 அன்று தேர்தல் நாளாக அறிவிக்கப்பட்டது. திரு. விடுதலைவிரும்பியும், திரு. நா. கிருட்டிணனும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## தேர்தல் வழக்கு மனுக்கள்.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் நாள் அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்கு நடந்த பொதுத் தேர்தல் சம்பந்தமாக 16 தேர்தல் வழக்கு மனுக்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளது.

டில்லி உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த மூன்று மேல்முறையீடு மனுக்கள் மீது தீர்வு காணப்படாமல் இன்னும் நிலுவையில் உள்ளன.

## முன்னாள் படைவீரர் நலம்.

போர் விதவைகள், ஊனமுள்ள படைவீரர்கள் அவர் தம் குடும்பத்தாரின் மறுவாழ்வு மற்றும் புனர்வாழ்வு மற்றும் படைவீரர்களின் குடும்ப நலனை கவனித்திடும் முதன்மையான பொறுப்பு மாநில அளவில் முன்னாள் படைவீரர் நல இயக்கத்திற்கும் மாவட்ட அளவில் முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முன்னாள் படைவீரர்களுக்கான பல்வகையான நிதியுதவிகள் இத்துறையால் நிருவகிக்கப்படும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்புநிதி என்ற நிதிகளிலிருந்து வழங்கப்படுகிறது.

இத்துறையில் அனைத்து நிருவாகச் செலவினங்களும் மத்திய மற்றும் தமிழக அரசால் 50:50 விகிதத்தில் செலவிடப்படுகிறது.

<u>2. கொடிநாள் :</u>

மேதகு தமிழக ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட கொடிநாள் நிதியின் ஆளுகைக்குழு தீர்மானித்தபடி ஒவ்வொரு வருடமும் டிசம்பர் திங்கள் 7-ம் நாள் கொடி நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு கொடிநாள் நிதி வசூலில் அதிக நிதியினை திரட்டி அதற்கான கேடயத்தை பெற்று தக்கவைத்துள்ளது. மேலும் 1987-ம் ஆண்டு கொடிநாள் நிதி இலக்கான ரூ. 88 லட்சங்களுக்கு பதிலாக ரூ. 1,01,95,682.46 நிதியினை திரட்டியுள்ளது. 1988-ம் ஆண்டிற்கான கொடிநாள் நிதி இலக்கான ரூ. 1.00 கோடிக்கு 30-4-1989 வரை ரூ. 26,55,973.66 வசூலாகியது.

<u>3. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி :</u>

தமிழ்நாட்டில் உள்ள முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர் மறுவாழ்வுத் திட்டங்களுக்கென இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. 1—4—1988 முதல் 31—3—1989 தேதியுடன் முடிவுறும் நிதியாண்டில் பல்வேறு உதவிகளுக்காக ரூ. 59.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்நிதி அரசு இணைச்செயலாளர், பொது (முன்னாள் படைவீரர்)த் துறை அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினால் நிருவகிக்கப்படுகிறது.

<u>4. முன்னாள் படைவீரர் நல தொகுப்பு நிதி :</u>

இந்நிதி மேதகு தமிழக ஆளுநரைத் தலைவராகக் கொண்ட மேலாண்மைக் குழு ஒன்றால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோரின் தேவைக்கேற்ப வட்டி மானிய வங்கி கடனுதவி கல்வி உபகாரச் சம்பளம் போன்ற உதவிகள் வழங்கப்படுவதுடன் போரில் உயிரிழந்தோர் கைம்பெண்களுக்கு வருடாந்திர வாழ்க்கைச் செலவு மானியம் போன்ற நிதி உதவிகளும் வழங்கப்படுகின்றன. 1988—89-ம் ஆண்டில் இந்நிதியிலிருந்து ரூ. 5.78 இலட்சம் உதவி வழங்கப்பட்டது.

## 5. புதிய திட்டங்கள் :

ஆண்டுதோறும் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோரின் நலனின் தேவைக்கேற்ப பல புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு :—

### 1. தையல் பயிற்சி நிலையங்கள் :

இத்துறையின் கீழ் தையற்பள்ளி நிலையங்கள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் முன்னாள் படைவீரர் மற்றும் படைவீரர்களின் பெண்டிருக்கு இலவசமாக 6 மாத பயிற்சி மற்றும் ஓராண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்பொழுது ரூ. 50 மதிப்புள்ள மூலப் பொருட்கள் தொகையாக மாதம் ரூ. 60 வழங்கப்படுகிறது.

இந்த தையற்பயிற்சி நிலையங்களில் பயின்ற பெண்டிர் நிரந்தர வருவாய்ப்பெறும் பொருட்டு மாவட்ட சமூக நல அலுவலர்களால் 3,27,892 சீருடைகள் தைப்பதற்கு துணிகள் வழங்கப்பட்டு ரூ. 9.16 இலட்சம் கூலியாக வருவாய் ஈட்டியுள்ளனர். இதனால் 606 பெண்கள் பயனைடந்துள்ளனர்.

### 2. பெட்டிக் கடைகள் :

முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் விதவைகளுக்கு சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 305 பெட்டிக்கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இக்கடையினை நடத்துபவர்கள் மாதம் ரூ. 400-லிருந்து ரூ. 1,000 வரை பொருளீட்டுகின்றனர்.

### 3. படைவீரர் மாளிகை :

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியின் வருமானத்தை பெருக்கிட வேண்டி திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், கோவை, தஞ்சாவூர், மதுரை, சிவகாசி ஆகிய இடங்களில் 73 இலட்சம் ரூபாய் செலவில் படைவீரர் மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக சராசரியாக வருடத்திற்கு 15 இலட்ச ரூபாய் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கு வருவாய் கிடைக்கிறது.

### 4. மாவட்ட முன்னாள் படைவீரர் நிலையங்கள் கட்டுதல்

பல்வேறு காரணங்களை முன்னிட்டு மாவட்ட தலைமையிடத்திற்கு வருகை தரும் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கு வசதியாக மாவட்ட படைவீரர் மையங்கள் கன்னியாகுமரி, புதுக்கோட்டை பெரியார், இராமநாதபுரம், அண்ணா, பசும்பொன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறைந்த வாடகையில் தங்கும் வசதிகள் உள்ளன. இம்மையங்களில் மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகங்கள் இயங்கி வருகிறது. முன்னாள் படைவீரர்களின் பொழுதுபோக்கு நூலக வசதி மற்றும் பல வசதிகள் உள்ளன. ஓய்வூதியம் பெற விண்ணப்பிக்கும் முறைகள் மற்றும் அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பயன்கள் குறித்து தகவல் அளிக்கும் மையமாகவும் இவைகள் செயல்பட்டு வருகின்றன.

### 5. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பள்ளி :

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் பயிற்சி பெறும் வகையில் செங்கல்பட்டு (இ) கிண்டி, சென்னை, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் ஆகிய மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சிகளுக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ. 120 பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 1,320 பேர் பயன்பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் 120 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 6. முன்னாள் படைவீரர்களுக்கென 12 படுக்கைகள் கொண்டவார்டுகள் கட்டுதல்:

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச சார்ந்தோர் பயன்பெறும் பொருட்டு மருத்துவமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கென 12 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 17 தாலுகா மருத்துவமனைகளில் ரூ. 8 லட்சம் செலவில் வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் தலைமை மருத்துவமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கென 12 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றும் கட்டப்பட்டு திறக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

### 7. சுயவேலை வாய்ப்பு (பெக்சம்) :

முன்னாள் படைவீரர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெறும் பொருட்டு மோட்டார் வண்டி ஓட்டுநர் பயிற்சி, பால்பண்ணை, கோழிப்பண்ணை அமைத்தல், தொலைக்காட்சி பெட்டி பழுதுபார்த்தல் போன்றவைகளில் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை செயல்படுத்த புதுதில்லி மத்திய புனரமைப்பு இயக்கம் தேர்ந்தெடுத்த ஆறு மாநிலங்களில்

தமிழநாடும் ஒன்றாகும். இத்திட்டம் வட ஆற்காடு மாவட்டத்தில் திறம்பட செயல்படுத்தப்பட்டதை தொடர்ந்து 1988–89-ம் ஆண்டிலிருந்து தருமபுரி மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 469 முன்னாள் படைவீரர்களும் 10 படையினரும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 138 முன்னாள் படைவீரர்களுக்கு கடனுதவி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு 130 முன்னாள் படைவீரர்கள் தங்கள் சுயதொழிலினை துவங்கியுள்ளனர்.

8. சுயவேலை வாய்ப்பு (சேம்பெக்ஸ்: I)

இத்திட்டத்தின் கீழ் 57 வயதிற்கு மிகாத முன்னாள் படைவீரர்கள் சுயதொழில் செய்திட ஏதுவாக எவ்வித சொத்து ஜாமினுமின்றி ரூ. 12 லட்சம் வரை சிறுதொழிற்சாலைகள் அமைத்திட கடனுதவி அளிக்கப்படும். இவர்களின் பங்கு மூலதனம் 10 சதவிகிதமேயாகும். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாயிலாக 303 முன்னாள் படைவீரர்கள்/விதவையர்களுக்கு ரூ. 924.2 லட்சங்கள் கடனுதவி அனுமதியாகியுள்ளது.

9. செம்பெக்ஸ் (II)

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் உழவுத் தொழில் மற்றும் அதன் சார்புடைய குடிசைத் தொழில்களை முன்னாள் படைவீரர்கள் துவங்கிட ரூ. 5 லட்சம் வரை வங்கி கடன்வசதி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 196 முன்னாள் படைவீரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

10. முன்னாள் படைவீரர்களை வேலையில் அமர்த்தும் அதிகாரம் :

இயக்கம் மற்றும் மாவட்ட படைவீரர் நல அலுவலங்களின் 1–4–1982 முதல் சிறப்பு வேலைவாய்ப்பு பிரிவு இயங்கி வருகிறது. 15,335 முன்னாள் படைவீரர்கள் இப்பிரிவுகளில் தமது பெயர்களை பதிவு செய்து தனியார் நிறுவனம், மாநில மற்றும் மத்திய அரசு துறைகளின் வேலைகளுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றனர். இப்பிரிவின் மூலம் இதுவரை 7,231 முன்னாள் படைவீரர்கள் பொருத்தமான பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

11. மாவட்ட ஆட்சியர்களால் முன்னாள் படைவீரர்களுக்கென குறைதீர்க்கும் நாள் நடத்துதல் :

முன்னாள் படைவீரர்களுக்கென தனியாக குறைதீர்க்கும் திட்டத்தினை எல்லா மாவட்ட ஆட்சியர்களும் செயல்படுத்த வேண்டுமென அரசு உத்திரவிட்டதற்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னாள் படைவீரர்களுக்கென தனியாக குறைதீர்க்கும் நாள் நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது. இதனால், மதுரை, திருநெல்வேலி, தென் ஆற்காடு, தருமபுரி மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய மாவட்டங்களில் 334 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளது.

12. கேன்டீன் வசதிகள் :

முன்னாள் படைவீரர்கள் அவர்களுக்கு தேவையான பொருட்களை குறைந்த விலையில் சி.எஸ்.டி. கேன்டீன்களில் பெறும்பொருட்டு தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் கேன்டீன் வசதிகள் ஏற்படுத்தித் தரும்படி மத்திய அரசினை வேண்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வடஆற்காடு, சென்னை, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, நீலகிரி, திருநெல்வேலி, மதுரை, பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராசர் மாவட்டங்களில் கேன்டீன் வசதிகள் உள்ளன.

13. பொதுப்பணிகளில் முன்னாள் படைவீரர்கள் :

சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலின்போது பாதுகாப்பு மேற்கொள்வதற்காக 23,800 முன்னாள் படைவீரர்கள் சிறப்பு காவலர்களாக பணியமர்த்தப்பட்டனர்.

14. குடும்பநல திட்டத்தில் முன்னாள் படைவீரர்களின் சேவையினை பயன்படுத்தல் :

குடும்ப நலத் திட்டத்தினை கிராமப்புற மக்களிடையே பரப்பும் திட்டத்தில் முன்னாள் படைவீரர்களை ஈடுபடுத்துதல் திட்டத்தின்கீழ் மாவட்ட குடும்ப நல அலுவலர்களால் முன்னாள் படைவீரர்களுக்கான குடும்ப நல கருத்தரங்கு பயிற்சி நடத்தப்பட்டது. இக்கருத்தரங்குகளில் முன்னாள் படைவீரர்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர்.

**15. தேசிய கல்வியறிவு கூட்டுக்குழுவில் முன்னாள் படைவீரர்களின் சேவையினை பயன்படுத்தல் :**

தேசிய கல்வியறிவு பரப்பும் தூத்துக்குழுவில் முன்னாள் படைவீரர்களை மனம் செய்வது தொடர்பாக தமிழகத்தில் தென்ஆற்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதனால் அநேக முன்னாள் படைவீரர்கள் வேலைவாய்ப்பு பெற வாய்ப்புள்ளது.

**16. முன்னாள் படைவீரர் கழகம் :**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் ஒன்று தனியே ஆரம்பிக்கப்பட்டு 1956-ஆம் ஆண்டு கம்பெனி சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது ஆகும். இக்கழகத்தின் மூலதனத்திற்கென தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ. 15 லட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் வாகன வசூல் பிரிவு, பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்து கட்டணம் வழங்கும் பிரிவு மற்றும் அச்சகம் இக்கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயில் மற்றும் கேஸ் நிறுவனத்தின் முன்னாள் படைவீரர்களை பணியமர்த்தல் பணியும் இக்கழகத்தால் ஏற்று நடத்தப்பட்டு வருகின்றது. வாகன வசூல் பிரிவு கோவை மாநகராட்சியிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் வாயிலாக 205 முன்னாள் படைவீரர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

### பிரதேச இராணுவப் பகுதி.

**காலாட்படை (வட்டார இராணுவப் படை), திருச்சிராப்பள்ளி :**

தன்விருப்பப் பயிற்சி பின்வரும் தன் விருப்பப் பயிற்சி காலியிடங்கள் இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டன. இக்காலியிடங்களின் பதவி உயர்வு நிலைகளில் வல்லுநர்கள் முன் பயிற்சி நடத்துவதற்காகப் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

| | அதிகாரிகள். | இளநிலை கமிஷன் அதிகாரிகள். | ஏனைய பதவித் திரத்தினர். |
|---|---|---|---|
| (அ) ஒரு மாதம் | 1 | 2 | 119 |
| (ஆ) இரு மாதங்கள் | | 4 | 104 |
| (இ) மூன்று மாதங்கள் | 1 | 11 | 107 |

**படைக்கு ஆளெடுப்பும் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்குப் பயிற்சியும் :**

1988 டிசம்பரிலிருந்து 1989 சனவரி வரை இப்படைப் பிரிவில் 35 பேர் சேர்க்கப்பட்டனர். அவ்வாறு புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு 2–1–1989 முதல் 31–1–1989 வரை 30 நாட்களுக்குப் பயிற்சியும் அதனைத் தொடர்ந்து 1–2–1989 முதல் 31–3–1989 வரையில் இரு மாத ஆளெடுப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. தொடக்கப் பயிற்சியின் பின்வருவனவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

(அ) உடற்பயிற்சி.

(ஆ) டிரில்

(இ) அடிப்படை ஆயுதப் பயிற்சி.

(ஈ) வரைபடம் படித்தல்.

(உ) கல்வி

(ஊ) போர்க்களத் தந்திரம்.

(எ) முதலுதவி.

(ஏ) பாதுகாப்பு.

(ஐ) இருளில் ஆயுதங்களைக் கையாளுதல் இரவில் நீர் பயணம் ஆகிய வற்றில் பயிற்சி பெறப் பயிற்சி.

(ஒ) போர்க்களப் பொறியியல்.

(ஓ) அவசரக்கால அழைப்புகளுக்குப படைப்பிரிவினைத் திரட்டி நடத்திச் செல்வதில் பயிற்சி.

(ஔ) டிரில் ஆயுதப் பயிற்சி, போர்க்களத் தந்திரம், போர்க்களப் பொறியியல் பாதுகாப்பு ஆகியவற்றில் விரிவுரை, செயல் முறை விளக்கம்.

(ஃ) குறைவான தூரத்திலிருந்து சுடுதல்.

பயிற்சியாளர்களுக்கு 7.62 மி.மி. வகை துப்பாக்கி கொண்டு குறைவான தூரத்திலிருந்து சுட பயிற்சி அளிக்கப்பட்டது. பலன் திருப்திகரமாக உள்ளது.

ஆண்டு பயிற்சி :

எல்லாப் படைப் பிரிவுகளுக்குமான ஆண்டுப் பயிற்சி முகாம் ஆண்டு முழுவதும் இருக்குமாறு தற்போது திருத்தப்பட்டுள்ளது. 1988–89ஆம் ஆண்டுக்கான பயிற்சி முகாம் பின்வருமாறு நடத்தப்பட்டது:

| | |
|---|---|
| (அ) 1988 மே 1 முதல் 1989 ஜூன் 30 வரை | 1 படைப்பிரிவு. |
| (ஆ) 1988 ஆகஸ்டு 17 முதல் 1988 ஆகஸ்டு 31 வரை<br>1988 அக்டோபர் 21 முதல் 1988 டிசம்பர் 5 வரை .. | 2 படைப் பிரிவுகள். |
| (இ) 1988 செப்டம்பர் 20 முதல் 1988 நவம்பர் 23 வரை .. | 1 படைப்பிரிவு. |
| (ஈ) 1988 டிசம்பர் 28 முதல் 1989 ஜனவரி 31 வரை | 1 படைப்பிரிவு. |
| (உ) 1989 பிப்ரவரி 1 முதல் 1989 மார்ச் 1 வரை | 1 படைப்பிரிவு. |

நிரந்தரப் பணியாளர் உட்பட பின்வரும் பணியாளர்கள் ஆண்டுப் பயிற்சியில் கலந்து கொண்டனர் :

| | |
|---|---|
| (அ) அதிகாரிகள் | 6 |
| (ஆ) இளநிலை கமிஷன் அதிகாரிகள் | 28 |
| (இ) ஏனைய பதவித்தரத்தினர் | 654 |
| | 688 அதாவது 97.8 சதவீதம். |

செயல்பணிகள் :

1989 பிப்ரவரி 11 முதல் 16 வரையில் 12 படைப்பிரிவுகள் துர்க் விஜய் என்ற தரைப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்தின. இளநிலை கமிஷன் அதிகாரிகள் ஐவரும் ஏனைய பதவித் தரத்தினர் 12 பேரும் இப்பயிற்சியில் கலந்து கொண்டு படைப் பிரிவினர் முன்னணிப் பகுதியைக் காப்பதற்கான பயிற்சி பெற்றனர். இளநிலை கமிஷன் அதிகாரி ஒருவரும் ஏனையத் தரத்தினர் மூவரும் 152 படைப் பிரிவுகளுடன் பயிற்சியை மேற்கொண்டனர். இளநிலை கமிஷன் அதிகாரிகள் நால்வரும் ஏனைய பதவித் தரத்தினர் 9 பேரும் 41ஆம் பிரிவு கமான்டருடன் பயிற்சி பெற்றனர். இப்பிரிவு 1989 பிப்ரவரி 10 முதல் 16 வரையில் பயிற்சி பெற்றது.

ஆண்டு சுடுப் பயிற்சி வகைப்பாடு :

இப்படைப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பணியாளர்களும் பசுமலைப்பட்டி சுடு பயிற்சி களத்தில் தொலைவில் இருந்து சுடும் பயிற்சியும், செங்கல்பட்டு கனசுடு பயிற்சிக் களத்தில் அருகில் இருந்து சுடும் பயிற்சியும் முடித்தனர்.

## காலாட் படைப்பிரிவு (ப்ரதேச இராணுவப் படை) கோயம்புத்தூர்.

இப்பிரிவில் நடத்தப்பட்டப் பயிற்சி மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு :

(அ) சுயப் பயிற்சி

(ஆ) ஆட்சேர்ப்புப் பயிற்சி

(இ) ஆண்டு பயிற்சி

சுயப் பயிற்சி :

அறிக்கை ஆண்டில் பின்வரும் சுயப் பயிற்சிக்களுக்கான காலியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன:

| | அதிகாரிகள். | கமிஷன் அந்தஸ்து பெற்ற இளநிலை அதிகாரிகள், | ஏனைய பதவித்தர அதிகாரிகள். |
|---|---|---|---|
| (அ) 1 திங்கள் | | 2 | 125 |
| (ஆ) 2 திங்கள் | | 3 | 166 |
| (இ) 3 திங்கள் .. | | 4 | 91 |

சுயப் பயிற்சிக்கு தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள் பின்வரும் பதவித் தரங்களுக்கான பயிற்சிகளை மேற்கொண்டனர்.

(அ) வகுப்புக்கு எடுக்கும் முன் பெறும் பயிற்சி :

(1) அணித் தளபதி

(2) அணி படைக்கலன் (கமிஷன் அந்தஸ்து பெறாத அதிகாரிகள்)

(3) படைப் பிரிவு கல்வி ஆசிரியர்கள்.

(4) வண்டி ஓட்டுதலும் பராமரிப்பும் (கமிஷன் அந்தஸ்து பெறாத அதிகாரிகள்)

(5) உடற்பயிற்சி

(6) சினிமா புரொஜக்ஷனிஸ்ட் (திரைப்படம் காட்டுபவர்)

(ஆ) பதவித் தரத்திற்கு முன் பெறும் பயிற்சி :

(1) அணி மையப் பதவித் தரம்

(2) படைக்கலம் பயிற்சி மையப் பிரிவு.

(3) சமிக்ஞை பயிற்சி மையப் பிரிவு

(4) கவாத்து (DRILL) மையப் பதவித் தரம்

(இ) பதவி உயர்விற்கான பதவித் தரம்:

(1) உம்மேத்வார்

(2) லான்ஸ் நாயக்-நாயக்

(3) நாயக்-ஹவில்தார்

(4) ஹவில்தார்-நாயக் சுபேதார்.

இராணுவப் படைக்கு ஆள் எடுத்தலும் பயிற்சி அளித்தலும் :

இவ்வாண்டில் மொத்தம் 114 சிவிலியன்கள் பயிற்சிக்காகச் சேர்க்கப்பட்டனர். அரசுப் பணியாளர் எவரும் இப்படையில் சேர வரவில்லையென்பது வருந்தத் தக்கது.

புதிதாகச் சேர்க்கப்பட்ட பணியாளர்களுக்கு பிரதேச இராணுவப் படை இயக்ககம் வரையறுத்த பயிற்சிப் பாடத்திட்டத்திற்கேற்ப 12 வாரம் தொடர்ச்சியாக பணிப் பயிற்சி அளிக்கப்பட்டது. அனைவரும் சிறந்த முறையில் பயிற்சி பெற்றனர்.

ஆண்டு பயிற்சி முகாம் :

ஆண்டு பயிற்சி முகாம்களை ஆண்டு முழுவதும் நடத்தும் ஏற்பாட்டின் காரணமாக பின்வருமாறு ஆண்டுப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன:

(அ) இரண்டு கம்பெனிகள்—15–5–1988 முதல் 14–7–1988 வரை.

(ஆ) ஒரு கம்பெனி 15–5–1988 முதல் 14–10–1988 வரை.

(இ) ஒரு கம்பெனி 1–1–1988 முதல் 30–11–1988 வரை.

(ஈ) ஒரு கம்பெனி 1–12–1988 முதல் 31–1–1989 வரை.

(உ) ஒரு கம்பெனி 1–2–1987 முதல் 31–3–1989 வரை.

பர்மா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து திரும்புவோரின் மறுவாழ்வு

மறுவாழ்வுத் துறையில், பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்களுக்கு மறுவாழ்வு வசதியும் மற்றும் இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வருபவர்களுக்கு நிவாரண உதவியும் வழங்கப்படுகிறது. பர்மாவிலிருந்து இந்திய வம்சா வழியினர் 1–6–1983-ல் தாயகம் திரும்பத் தொடங்கியது முதல் 1988 மார்ச் மாதம் முடிய மொத்தம் 1,44,353 பேர்கள் தாயகம் வந்துள்ளனர். இலங்கையிலிருந்து இந்திய வம்சா வழியினர் 1–11–1964 முதல் தாயகம் திரும்பத் தொடங்கியது முதல் 1989 மார்ச் மாதம் முடிய 4,60,038 நபர்கள் அடங்கிய 1,15,632 குடும்பங்கள் இந்தியா வந்து சேர்ந்திருக்கின்றனர். இந்திய வம்சா வழியினர் 1975 ஜூலை மாதம் முதல் வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பத் தொடங்கினர். இதுவரை 2,055 நபர்கள் அடங்கிய 501 குடும்பங்கள் வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர்.

2. இந்திய வம்சா வழியினர் பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து தாயகம் திரும்புதல் ஏறக்குறைய முடிந்துவிட்டது. கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கையில் நிலவி வரும் இனக் கலவரத்தினால் இந்திய வம்சா வழியினர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

25–7–1983 முதல் 31–3–1989 வரை மொத்தம் 1,33,833 அகதிகள் இந்தியா வந்துள்ளனர். இவ்வாறு வந்த அகதிகளில் ஆதரவற்றவர்களை அகதிகளுக்கான முகாம்களில் தங்க வைத்து நிவாரண உதவி அளிக்கப்பட்டு வந்தது.

இலங்கை அகதிகள் தங்குவதற்காக தமிழ்நாட்டில், சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை தவிர்த்து மற்ற அனைத்து மாவட்டங்களிலும், திருச்சியிலுள்ள கொட்டப்பட்டு, மண்டபம் (இராமநாதபுரம் மாவட்டம்) மற்றும் விளாங்குடி (மதுரை மாவட்டம்) முகாம்கள் உட்பட மொத்தம் 172 அகதிகள் நிவாரண மையங்கள் திறக்கப்பட்டன. 29–7–1978ல் ஏற்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையின்படி அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் பணி 24–12–1987 முதல் தொடங்கிவிட்டதால், அகதிகள் தங்கும் முகாம் 31—3—1989ல் 2-ஆக குறைக்கப்பட்டு விட்டது. 31–3–1988 முடிய, அகதிகள் நிவாரண மையங்களிலிருந்து தங்கியிருந்து 4,725 குடும்பங்கள் கொண்ட 19,986 அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

மறுவாழ்வு உதவி பெற்று குடியமர்ந்த பின்பு, தற்காலிக குடிசை அமைத்துக் கொள்வதற்காக சில இனங்களில் ரூ. 700 குடிசை மான்யமாக வழங்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிரந்தர வீடு கட்டுவதற்காக கிராமப்புறங்களில் வசிப்பவருக்கும் ரூ. 6,000-ம் நகர்ப்புறங்களில் வசிப்பவர்களுக்கு 10,000 அதிக பட்ச கடனுதவி அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்த அரசு நிலம் கிடைக்கப் பெற்றால் அவற்றை வீடு கட்ட இலவசமாக தாயகம் திரும்பியவர்களுக்கு நில ஒப்படை செய்து கொடுக்கப்படுகிறது. வீட்டுக் கடன் மூன்று தவணைகளாக வழங்கப் படுகிறது. ஒவ்வொரு தவணையை சரியான முறையில் உபயோகிக்கப்பட்டுள்ளதா என்று சரிபார்த்த பின்பே அடுத்த தவணை வழங்கப்படுகிறது.

தாயகம் திரும்பியோரின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பள்ளியோடு இணைந்த விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 60 முதல் ரூ. 90 வரை உதவிப் பணமாக அளிக்கப்படுகிறது. இவர்கள் கல்வி பெறும் படிவத்தைப் பொறுத்து ஆண்டு ஒன்றிற்கு ரூ. 15 முதல் ரூ. 150 வரை புத்தகங்களுக்கான மான்யம் வழங்கப்படுகிறது.

மாநிலத்திலுள்ள எல்லா அரசுக் கல்லூரிகளிலும தாயகம் திரும்புவோரின் குழந்தைகளுக்காக இரண்டு இடங்கள் வீதம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தொழில் துறை பட்டப் படிப்புகளுக்கு பின்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன:

| கல்விப் பிரிவின் பெயர். | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள். | இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள். |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 1. மருத்துவ பட்டப்படிப்பு | 4 | 2 |
| 2. பொறியியற் பட்டப்படிப்பு | 1 | 1 |
| 3. கால்நடை மருத்துவ பட்டப்படிப்பு | 2 | 1 |
| 4. சட்டத் துறை பட்டப்படிப்பு | 2 | 2 |
| 5. தொழில் நுட்பப் படிப்பு .. | 2 | 3 |

மேலும் இந்த மாநிலத்தில் இயங்கும் தொழில் பயிற்சி நிலையங்களில் 5 சதவீதம் இடம் தாயகம் திரும்பியோரின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

3. கீழ்க்கண்ட மறுவாழ்வு திட்டங்களில் தாயகம் திரும்பியவர்கள் குடியமாத்தப்படுகின்றனர்:—

(1) மலைத் தோட்டத் திட்டங்கள்.

(2) வேளாண்மைத் திட்டங்கள்.

(3) தொழில் திட்டங்கள்.

(4) வணிகக் கடன்/சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள்.

# அத்தியாயம் 25

## பொருப் பணித்துறை.

### நீராவி கொதிகலன்கள் :

இவ்வாண்டு இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923ன்படி தலைமை நீராவி கொதிகலன்கள் ஆய்வாளர்கள் நிர்வாகம் நடந்து வருகின்றது.

1988-89 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்படும் பட்டியலின்படி தமிழ்நாட்டில் உள்ள மொத்த கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்களின் எண்ணிக்கை 2,100 ஆகும். இவற்றில் 2,070 கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்கள் இயங்கும் நிலையைப் பொறுத்து இயங்குவதற்கு சான்றிதழ்கள் இத்துறையில் வழங்கப்பட்டு உள்ளன. சில கொதிகலன்களை பழுதுபார்க்க வேண்டியுள்ளதாலும், மற்றும் சில வணிக சூழ்நிலையைப் பொறுத்தும் இயங்காமல் இருக்கின்றன. பழுது பார்க்க வேண்டிய கொதிகலன்களை வட்ட நீராவி கொதிகலன்கள் ஆய்வாளர்கள் பழுது பார்ப்பதற்கு முன்பும் பின்பும் ஆய்வு செய்கிறார்கள்.

### கொதிகலன்களை உலோக ஆய்வு செய்தல் :

இந்திய கொதிகல விதி வரம்புகள் (ரெகுலேசன்ஸ்) 1950—க்கு சமீபத்தில் விதி வரம்பு பிரிவு (ரெகுலேசன்) 391-க்கு மத்திய அரசால் திருத்தம் வழங்கப் பட்டது. அதன் படி கொதிகலன் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 50 ஆண்டுகள் முடிவுற்ற கொதிகலன்களை உலோக ஆய்விற்கு (மெகானிகல் டெஸ்ட், கெமிகல் டெஸ்ட், மெட்டலோ கிராபிக் டெஸ்ட்) உட்படுத்தப்பட்டு, மத்திய அரசுக்கு சொந்தமான பொது நிறுவனமாகிய பாரத் கனாக தொழிற்சாலையின் சோதனைக் கூடத்தில் சோதனை செய்யப்பட்டு சோதனையில் தேறிய கொதிகலன்களை மேற்கொண்டு இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கொதிகலன்களை பழுதுபார்க்க தயாரிக்கு நீராவிக் குழாய்கள் அமைத்தல் மற்றும் குழாய்கள் அடைப்பான்கள் வால்வுகளை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பற்றவைப்பாளர்களின் (வெல்டர்ஸ்) வேலைத் திறன் தகுதியை உரிய வழி முறையில் செயல்முறையாக சோதித்து சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இந்திய கொதிகலன் விதி 7-ன்படி பதிவு செய்யப்பட்ட கொதிகலன்களின் விவரமும் பிற மாநிலத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கொதிகலன்கள் மற்றும் வெளி மாநிலத்திற்கு அனுப்பப்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கையும் கீழ்வருமாறு குறிக்கப்பட்டுள்ளன:—

| | | எண்ணம். |
|---|---|---|
| சென்ற ஆண்டின் முடிவில் உள்ள மொத்த கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்களின் எண்ணிக்கை. | | 2,036 |
| சேர்க்க : | | |
| இவ்வாண்டு பதிவு செய்யப்பட்ட | | |
| கொதிகலன்களின் மொத்த எண்ணிக்கை ... | 61 | 64 |
| எக்னாமைசர்கள் ... ... ... ... | 3 | |
| பிற மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட கொதிகலன்கள் எண்ணிக்கை. | | 11 |
| கழிக்க : | | |
| பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்ட கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்களின் எண்ணிக்கை. | | 11 |
| 1988—89 ஆண்டு இறுதியில் செயற்படும் பட்டியலின்படி தமிழ்நாட்டில் உள்ள கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்களின் எண்ணிக்கை. | | 2,100 |

### விபத்து :

இந்த நிதியாண்டில் 1988—89-ல் கொதிகலன்களினால் விபத்து ஏதும் நிகழவில்லை.

### வரவுகளும்—செலவுகளும் :

கொதிகலன் ஆய்வுக் கட்டணம், பதிவுக் கட்டணம், கொதிகலன் தயாரிக்கப்படும் ஒவ்வொரு நிலையிலும் ஆய்வுக் கட்டணம் ஹெஸடர் ஆகியவைகளின் இயந்திர சோதனைக கட்டணம், பற்றவைப்பாளர்களுக்கு (வெல்டர்ஸ்) நடத்தப்படும் தேர்வுக் கட்டணம் வரைப்பட ஆய்வுக் கட்டணம் வகையராக்கள் மூலம் வசூலிக்கப் பட்ட மொத்த கட்டண தொகை.

| | ரூபாய். |
|---|---|
| வரவு ... ... — — ... ... — | 43,23,480 |
| இத்துறையில் இவ்வாண்டில் செலவழிக்கப்பட்ட தொகை — | 19,35,523 |

## மின் ஆய்வுத் துறை

1910 ஆம் ஆண்டு இந்திய மின்னியல் சட்டத்தின்கீழ் இந்த மின் ஆய்வுத் துறை ஒரு சட்டரீதியான அமைப்பாக இயங்கி வருகிறது. மின் விபத்துக்களிலிருந்து பொது மக்களையும் சொத்துக்களையும் பாதுகாப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இத்துறை செயல்படுகிறது.

தொழில் வளர்ச்சி மற்றும் சினிமாத் துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இத்துறை செயல்பட்டு வருகிறது. அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 761 இலட்சம் வருவாய் ஈட்டித் தருகிறது.

தமிழக அரசின் கீழ்க்கண்ட சட்டம் மற்றும் விதிகள் இத்துறையால் அமுல் படுத்தப்படுகிறது:—

(1) 1939 ஆம் ஆண்டு மின் தீர்வை சட்டம் மற்றும் விதிகள்.

(2) 1962ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வு வரி சட்டம் மற்றும் விதிகள்.

(3) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்கு) சட்டம் மற்றும் விதிகள்.

(4) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டுடமை சட்டம் மற்றும் விதிகள்.

வருவாய் :

(அ) தமிழ்நாடு மின்சார (நுகர்வு வரி) சட்டம் 1962-ன் கீழ் வசூலிக்கப்பட்ட வரி விவரம் :—

| | (ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| (1) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் சக்தி விற்பனை மூலமாக வசூல் .. | 300.67 |
| (2) மின் உரிமதாரர்கள் மூலமாக வசூல் — — | .. |
| (3) மின் சக்தியை உற்பத்தி செய்து நுகர்வு மூலமாக — | 230.83 |
| (ஆ) 1956 ஆம் ஆண்டு இந்திய மின் விதிகளின்படி வசூலான கட்டணத் தொகை. | 135.15 |
| (இ) திரையரங்கு ஆய்வுக் கட்டணம் — — — | 4.00 |
| (ஈ) இதர இனங்கள் மூலமாக — — — — | 1.42 |
| (உ) 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார தீர்வைச் சட்டத்தின்படி தீர்வை வசூல் தொகை. | 89.00 |
| மொத்தம் — | 761.04 |

## நிலத்தடி நீர்

**மழை பெய்யளவு ஆய்வு :**

480 மழை பெய்யளவு நிலையங்களிலிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு மழை பெய்யளவு மாறுபாடுகள் நீர் மட்ட ஏற்ற இறக்கங்களுடன் ஒப்புமை செய்யப்பட்டிருக்கின்றன. மழை பெய்யளவு விவரங்கள் ஆவணம் செய்யப்பட்டு பலவிதமான உபயோகப்படுத்தும் முகமைகளான தமிழ்நாடு நீர் வழங்கும் மற்றும் கழிவு நீர் வாரியம் விவசாயத் துறை நீர்ப்பாசனம் முதலியவற்றிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

**நீர்வடிநில ஆய்வு :**

மழைப்பெய்வு நீர் ஆவியாதல் மண் ஈர அளவுகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை அறியவேண்டிய இத்துறை தமிழ்நாடு முழுவதும் பரவலாக அமைந்த மண் பகுதிகளில் 13 இடங்களில் நீர்வடி நில ஆய்வகங்கள் நிறுவியுள்ளன. இந்த ஆய்விலிருந்து சேகரிக்கப்படும் விவரங்கள் நிலத்தடி நீர் இருப்பைக் கணக்கிட உபயோகப்படுகின்றன.

**நீர் மட்டக் கவனித்தல் :**

தமிழ்நாட்டில் தற்போதுள்ள கிட்டத்தட்ட 2,100 பார்வைக் கிணறுகள் ஆய்வுக் கிணறுகளாக தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு திங்களும் பார்வைக் கிணறுகளின் நீர்மட்டம் கவனித்தல் தொடரப்படுகின்றது. நீர் மட்ட ஏற்ற இறக்க அளவுகளின் ஆய்வு ஒரு இடத்தில் நிலத்தடி நீரின் இருப்பை கணக்கிட பெருமளவு உதவுகின்றது. நீர்மட்ட விவரங்களை கொண்டு நிலநீர் செய்தி வெளியிடு ஒவ்வொரு திங்களும் தயாரிக்கப்பட்டு உபயோகப்படுத்தும் முகமைகளான தமிழ்நாடு நீர் வழங்கும் மற்றும் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை, அண்ணா பல்கலைக் கழகம் முதலியவற்றிற்கு அனுப்பப்படுகின்றன.

**நில அமைப்பு புகைப்பட ஆய்வு :**

விண்வெளி மற்றும் தொலை உணர்வுப் புகைப்படங்களைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தின் நிலவியல் நில அமைப்பியல் நில உபயோகம் முதலியவற்றை ஆய்ந்தறிந்து வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு வரைபடங்களில் நிலத்தடி நீர் கிடைக்க வாய்ப்புள்ள இடங்கள் குறிக்கப்படுகின்றன. 24,000 ச.கி.மீ. பரப்பளவில் ஆய்வு நடத்தப் பெற்றுள்ளது.

**நிலத்தடி நீர் விரிவாக்கத் திட்டம் :**

நிலத்தடி நீர் ஆய்விலிருந்து சேகரிக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு கிராமத்தின் நிலத்தடி நீர் நிலைமை எந்தவிதமான கிணறுகள் எடுக்கலாம் போன்ற விவரங்கள் விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் தெரிவிக்கப்படுகின்றன. இத்திட்டம் 1988-89-ல் 1,140 கிராமங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**கிணறுகளுக்கு இடையே உள்ள தூரத்தைக் குறைக்க நீர் இறைவை சோதனை:**

நிதியளிக்கும் நிறுவனங்கள் சிறுபாசனத் திட்டங்களுக்கு கடன் உதவி செய்கின்றன. இரண்டு கிணறுகளுக்கு இடையேயுள்ள தூரங்கள் 150 மீட்டரிலிருந்து 200 மீட்டர் வரை இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதை மனதில் கொண்டு தமிழ்நாடு முழுவதும் 513 நீர் இறைவைச் சோதனைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனைக் கொண்டு இடைவெளி தூரத்தைக் குறைக்க 'நபார்டு' நிறுவனத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இது மிகவும் உபயோகமாக இருக்கும்.

**நில இயற்பியல் ஆய்வு :**

நிலத்தடி நீர் ஆய்வில் நில இயற்பியல் ஆய்வு நிலத்திற்கு அடியில் உள்ள நில நீரியல் தன்மைகள் அதாவது நீர்ப் படிவத்தின் ஆழம் வேறுபட்ட பாறைகள் நீரின் தரம் ஆகியவற்றை அறிய ஆற்றப்படுகின்றது. அது நிலப்பரப்பின் ஆற்றும் ஆய்வு. நிலத்தடிநீர் ஆய்வு என பாகுபடுத்தப்படுகிறது. நிலப்பரப்பில் ஆற்றும் ஆய்வு நிலத்தடியில் உள்ள வேறுபட்ட படிவங்களை அறிய ஆற்றப் படுகின்றது. நிலத்தடி ஆய்வின் மூலம் துளைக் கிணறுகள் மின் ஆய்வு செய்யப் படுகின்றன. இதனால் சரியான விகிதத்தில் கிணறுகள் அமைக்க பரிந்துரை செய்ய முடிகிறது. நிலப்பரப்பு ஆய்வின் மூலம் 4,025 இடங்கள் இந்த ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

**புவிவேதியியல் ஆய்வு :**

பார்வைக் கிணறுகள், துளைக் கிணறுகள், ஆறுகள் இவற்றிலிருந்து அவ்வப்பொழுது சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் வேதியியல் பூர்வமாக விவசாயத்திற்கும் குடிப்பதற்கும் ஏற்றவையாக இருக்கின்றனவா என்று பகுத்தாய்ந்து உணரப்படுகின்றது. இப்பணி சென்னை மற்றும் தஞ்சாவூர் ஆய்வகங்களில் மேற் கொள்ளப் படுகின்றது. இந்த ஆண்டில் 11,769 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டிருக்கின்றன.

**ஆலோசனைப் பணி:**

பொதுப் பணித் துறையில் நிலத்தடி நீர் பிரிவு ஆலோசனைப் பணியை விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் அரசு துறைகளுக்கும் பௌதீக ஆய்வின் மூலம் ஆய்வு செய்து கிணறுகள் தோண்டவும் துளைக் கிணறுகள் துளையிடவும், இருக்கும் கிணறுகளை ஆழப்படுத்தவும் தகுதியான இடங்களை தேர்ந்தெடுத்துக் கொடுக்கின்றது. விவசாயப் பெரு மக்கள் இத்திட்டத்தினால் வீணான செலவைக் குறைக்க முடிகிறது. இந்தக் கால கட்டத்தில் 2,885 கலந்தறிதல் பணிகளை விவசாயிகளுக்கும் அரசுக்கும் மற்ற துறைகளுக்கும் இத்துறை செய்து கொடுத்திருக்கிறது.

கடல்நீர் உட்புகு ஆய்வு :

மீஞ்சூரின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அதிகமான அளவில் நீர் எடுக்கப் படுகிறது. இப்பகுதியின் கடல் நீர் உட்புகு ஆய்வுகள், மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. நல்ல நீர் படிவங்கள் இப்பகுதியில் இருப்பதால் அதிகப்படியான அளவில் நிலத்தடி நீர் எடுக்கப்படுகின்றது. இது பின்னர் கடல்நீர் உட்புகுதலுக்கு மூல காரண மாகலாம். இதைத் தடுக்க 1988–89 ஆம் ஆண்டில் 250 கி.மீட்டர் அளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

துளையிடும் பணி :

ஆய்வின் ஒரு பகுதியாக துளைக் கிணறுகள் போடும் பணி நிலத்தடி நீர் பிரிவினால் மேற் கொள்ளப்படுகிறது. மண் படிவங்களை அடிப்படையாகக் கொண்டு சோதனைக் கிணறுகள் அமைக்கப்பட்டு நீர் இறைவைச் சோதனைகள் செய்யப்படுகின்றன. பின்னர் இத்துறை கிணறுகள் உபயோகிப்போர் முகமைகளான தமிழ்நாடு நீர் வழங்கும் மற்றும் கழிவு நீர் வாரியம், பஞ்சாயத்து ஒன்றியம் முதலியவற்றிற்கு குடிநீர் உபயோகத்திற் காக ஒப்படைக்கப்படுகின்றன. இந்த ஆண்டில் 199 துளைக் கிணறுகள் துளையிடப் பட்டிருக்கின்றன.

நிலப்பரப்பு நீரும் நிலத்தடி நீரும் ஒருங்கிணைத்து உபயோகித்தல்:

இத்துறையானது தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் நிலப்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்து பயன்படுத்தும் ஒரு முன் னோடித் திட்டப் பணியை மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ்க்கண்ட பணிகள் 1988–89 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்டு செப்டம்பர் 1988-ல் பணி முடிக்கப்பட்டது:

(1) 35 கிணறுகளில் இருந்து நீரை வெளிக் கொண்டு வரும் பணி.

(2) 34 கிணறுகளில் நீர் மட்டம் கவனித்தல்.

(3) நீர்மாதிரி பகுப்பாய்வு—831 மாதிரிகள்.

(4) மண் மாதிரி பகுப்பாய்வு—108 மாதிரிகள்.

கழிவு நீர்க் குட்டையினால் ஊற்றின் தன்மை ஊற்றுக்களின் ஆய்வு ஆகியவற்றை அறிய வேண்டி இத்துறை 30 கழிவு நீர்க் குட்டைகளில் ஊற்றாய்வுப் பணி மேற் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளில் நீர்மட்ட ஏற்ற இறக்கங்கள் அறியப்படுகின்றன. நீர் அறைவைச் சோதனைக்கும் மேற் கொள்ளப்பட்டிருக்கி கின்றன.

நீரின் தூய்மைக் கேடு ஆய்வு :

தொழிலக நீரியியற் கழிவுகளாலும், உரங்களினாலும் நீரின் தூய்மைக் கேடு ஏற்படுகின்றது. பொன்னையாறு, காவிரி, தாமிரபரணி ஆற்றுப்படுகைகளில் தொழிலக நீரியற் கழிவினால் ஏற்படும் பாதிப்பை அறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 22 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்விற்காக நீர் மாதிரிகள் சேகரிக்கப் பட்டு பகுத்தாயப் பட்டிருக்கிறது.

நீர் ஆய்வு நிறுவனம் :

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆற்றுப் படுகைகளின் நீர் உள்ளாற்றலை கவனித்து மதிப்பிடவும் நீர் ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கழக உதவியுடன் நீர் மேலாண்மையை ஏற்படுத்த இந்நீர் ஆய்வு நிறுவனம் விலை யுயர்ந்த கருவிகளையும் மேலை நாடு சென்று முற்போக்கு தொழில் நுட்பங்களையும் அறிந்து வந்த அதிகாரிகளையும் பெற்றிருக்கிறது. வைகைப் படுகையில் நீர் வாய்ப்பு ஆய்வு பற்றி முதல் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கழகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு பாம்பார் ஆற்றுப் படுகைகளில் முடிக்கப்பட்டிருக்கிறது. பாலாரின் படுகையில் நீர் வாய்ப்பு பற்றிய ஆய்வு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

விவரங்கள் சேகரித்தல் :

நிலத்தடிநீர் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் விவரங்களைப் பெற்று நிரப்புகத்தில் வைத்துக் கொள்ளும் கருவி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இக் கருவியைக் கொண்டு நிலத்தடி நீர் கணக்கிடுதலுக்கு தேவையான விவரங்களான மழையளவு, நீர் மட்ட அளவு, முதலிய ஆவண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

1988–89 ஆம் ஆண்டின் திட்டப் பணிகளுக்கான செலவினங்கள்:

| வரிசை எண்ணும் கணக்குத் தலைப்பும். | 1988–89 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு | 1988–89 ஆம் ஆண்டின் செலவினம். | குறிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| I திட்டப் பணிகள்—ஆய்வுப் பணிகளும் வெள்ளத்தடுப்பும்—சிறுபாசனமும். | | | |
| நெறிப்படுத்துதலும் நிர்வாகமும்: | | | |
| தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் நிறுவன அமைப்பை (சிறு பாசனம்) வலுப்படுத்தல். | 60.61 | 55.63 | |
| | 60.61 | 55.63 | |
| II) ஆய்வு: | | | |
| (1) நிலத்தடி நீர் ஆய்வு | 114.06 | 102.75 | |
| (2) செயற்கை முறையில் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குதல். | | | |
| (3) தூய்மைக் கேடு ஆய்வுத் திட்டம். | ... | ... | |
| (4) மதுரையில் நிலத்தடி நீர் பிரிவில் புவி இரசாயனவியல் ஆய்வுக் கூடத்தை அமைத்தல். | .. | .. | |
| | 114.06 | 102.75 | |
| வேளாண்மை மற்றும் இதர பணிகள் மேற்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும் இணைத்துப் பயன்படுத்தும் திட்டம். | 3.25 | 3.27 | |
| | 3.25 | 3.27 | |

## பாசனம்.

பொதுப் பணித்துறையில் பாசனப் பிரிவு, பெரிய நடுத்தரப் பாசனப் பிரிவு, சிறு பாசனப் பிரிவு, ஆய்வுப் பிரிவு, நிலநீர்ப் பிரிவு என பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு தலைமைப் பொறியாளரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது. பெரிய பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த தனித்தனி தலைமைப் பொறியாளர் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றன. தற்போது அத்தகைய பதவிகள் இரண்டு உள்ளன. அவையாவன : தலைமைப் பொறியாளர், பெரியாறு-வைகை; தலைமைப் பொறியாளர், தேசிய நீர் பாசன நிருவாகத் திட்டம்.

ஆராய்ச்சித் துறையில் கண்டுள்ள மேம்பாடுகளைத் தொடர்ந்து நீர் விசை தொடர்பான தொழில் நுட்ப பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பூண்டியில் நீர் விசை —நீரியல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு தலைமைப் பொறியாளர் பதவி தரத்தை சேர்ந்த இயக்குநர் ஒருவர் தலைவராக உள்ளார்.

ஒவ்வொரு வடிநிலத்திலும் மேற்பரப்பு நீர்வளம், நில நீர்வளமும் எந்த அளவுக்கு உள்ளது என்பதை மதிப்பிட ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் நிலநீர் பிரிவின்கீழ் நீர் ஆதார நீர் அதன் ஆதார நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க நாட்டு நிதி உதவியுடன் 1984 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பாசன நிருவாகம் பயிற்சி நிலையம் ஒன்று திருச்சியில் இயங்கி வருகிறது. பல்வேறு வகைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், நீர் நிருவாகத் தொழில் நுட்ப உத்தியைப் பற்றி உழவர்களுக்கு அறிவுறுத்துவதுமே இதன் தலையாய நோக்கமாகும்.

பெரிய பாசன ஏற்பாடுகளின் இயக்கம், பராமரிப்பு ஆகியவற்றுக்கும் பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) பொறுப்பு வகிக்கிறார். இத்துடன் ரூ. 50.00 இலட்சத்திற்கு மேல் செலவு பிடிக்கும் சிறு பாசனப் பணிகளின் செயலாக்கமும் இவருடைய அதிகார வரம்பின்கீழ் வருகின்றது. சென்னை மாநகரில் உள்ள அடையாறு, கூவம், ஓட்டேரிநல்லா ஆகிய நீர் வழிகளையும், ஆந்திரப் பிரதேசத்தின் எல்லையிலிருந்து மரக்காணம் வரை ஓடும் பக்கிங்ஹாம் கால்வாயையும் பராமரிக்கும் பொறுப்பும் இவரையே சார்ந்ததாகும். மாநிலங்களுக்கிடையேயான ஆற்றுநீர் பிரச்சினைகள் குறித்தும், பாசனம் தொடர் பான கொள்கை விஷயங்கள் குறித்தும் அரசுக்கு இவரே ஆலோசனை நல்குகிறார்.

உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பெரியாறு-வைகை திட்டத்தை நவீனமயமாக்கும் பணி மதுரையில் உள்ள தனியானதொரு தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெற்று வருகின்றது.

தலைமைப் பொறியாளர் (தேசிய நீர் நிருவாகத் திட்டம்) உலக வங்கியுடன் தேசிய நீர் நிருவாகத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்.

தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்) 100 ஏக்கர்களுக்கு மேற்பட்ட ஆயக் கட்டுப் பகுதியைக் கொண்ட ஏரிகளையும், அணைக்கட்டுகளிலிருந்து நீர் பெறும் ஏரிகளையும் பராமரிப்பதற்குப் பொறுப்பு வகிக்கிறார். (மேற்சொன்ன வகையின் கீழ் வராத சிறு ஏரிகள், குட்டைகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப் பட்டு வருகின்றன.) இவற்றுடன், சிறு பாசன சிறப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் ஏரியை நவீனப்படுத்தும் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகிய வற்றுக்கும், வறட்சிப் பாங்கான பகுதிகளுக்காக திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தவும் தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்) பொறுப்பு வகிக்கிறார்.

தமிழ்நாட்டின் நிலத்தடி நீர்ப் பிரிவு ஒரு தனி தலைமைப் பொறியாளரின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இப்பிரிவு, நவீன அறிவியல் முறைகளைப் பின்பற்றி, நிலத்தடி நீர்வளமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து, கிடைக்கக் கூடிய நீரளவை மதிப்பீடு செய்து, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கும் பெருக்குவதற்கும் ஏற்ற முறைகளைத் தெரிந்தெடுக்கிறது.

பெரும் பாசன, நடுத்தரப் பாசன, சிறு பாசனத் திட்டப் பணிகள், ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டப் பணிகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்து அவற்றுக்கான வரைபடங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல் முதலான பணிகளைத் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) பொறுப்பிலிருக்கும் ஆய்வுப் பிரிவு கவனித்து வருகிறது.

*இயக்குநர் (நீர்விசை-நீரியல் ஆராய்ச்சி நிலையம், பூண்டி):*

நீர்விசை-நீரியல் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக, நீர்விசை-நீரியல் நிலையம் என்ற பெயரில் ஆராய்ச்சி நிலையம் ஒன்று பூண்டியில் இயங்கி வருகிறது. இந்நிலையம், தலைமைப் பொறியாளர் பதவித்தரத்தில் உள்ள இயக்குநர் ஒருவரின் தலைமையில் இயங்குகிறது. பல்வேறு பாசனப் பணிகளை வடிவமைத்துச் செயல்படுத்துகையில் எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து இந் நிறுவவை மாதிரி ஆய்வுகளை மேற்கொள்கிறது. நீர்த் தேக்க வண்டல் படிவு குறித்த ஆய்வு நீர்த் தேக்க நிர்வாகம் குறித்த ஆய்வு முதலியவை உட்பட பல்வேறு ஆய்வுப் பணிகளையும் இந்நிலையம் மேற்கொள்கிறது.

*1988–89 ஆம் ஆண்டில் சாதனை:*

*குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டம்:*

திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், பழனி வட்டத்திற்கருகில், அமராவதி வடிநிலப் பகுதியில் குதிரையாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் ஒன்று கட்டும் பணி ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு 900.23 இலட்சம் ரூபாயாகும். இத்திட்டப் பணி, 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்களில் தொடங்கப்பட்டு 1989 மார்ச்சு திங்களில் முடிக்கப் பட்டது. இத்திட்டம் முடிக்கப்பட்டதனால் 1,560 எக்டேர் புன்செய் நிலங்கள் புதி தாகப் பாசனம் பெறுவதுடன், 8,094 எக்டேர் நன்செய் ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசன வசதி நிலைப்படுத்தப்படும். இத்திட்டத்தை விரைவில் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.

## ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத் திட்டம்:

இராமநாதபுரம் மாவட்டத்தில், விருதுநகர் வட்டத்தைச் சேர்ந்த ஆனைக் குட்டம் கிராமத்திற்கருகே அர்ஜுனா நதிக்குக் குறுக்கே 127.20 மில்லியன கன அடி கொள்ளளவுள்ள ஒரு நீர்த் தேக்கம் கட்டுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 444.45 இலட்சம் ஆகும். இத் திட்டப்பணி 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்களில் தொடங்கப்பட்டு 1989 மார்ச்சுத் திங்களில் முடிக்கப்பட்டது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வரும் இத் திட்டப் பணியை முடிப்பதன் மூலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் கூடுதலாக 1,820 எக்டேர் ஆயக் கட்டுப் பகுதி பாசனம் பெறும்.

## வைகை ஆற்றுக்கு வெள்ளத் தடுப்புக் கரை அமைத்தலும், பார்த்திபனார் பொறி மதகிற்குக் கீழே அமைந்துள்ள வெள்ளத்தால் சேதமுற்ற வைகைக் கால்வாய் களை சீரமைத்தலும்:

வைகை ஆற்றுக்கு வெள்ளத் தடுப்புக் கரை அமைக்கவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பார்த்திபனார் பொறி மதகிற்குக் கீழே அமைந்துள்ள வெள்ளத்தால், சேதமுற்ற வைகை கால்வாய்களைச் சீரமைக்கவும் இச்செயற் குறிப்பு வகை செய் கிறது. இத்திட்டப் பணி 600.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ''வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணியின்'' கீழ் மேற் கொள்ளப்படுகிறது. இப்பணி, 1984 செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்டு 1989 மார்ச்சுத் திங்களில் முடிக்கப்பட்டது.

## கொல்வார்பட்டி நீர்த் தேக்கத் திட்டம்:

காமராசர் மாவட்டம், சாத்தூர் வட்டத்தைச் சார்ந்த கொல்வார்பட்டி கிராமத் திற்கருகிலுள்ள அர்ஜுனா நதியின் குறுக்கே 178 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் பணி 1982 ஆகஸ்ட்டுத் திங்கள் தொடக்கத்தில் மேற் கொள்ளப்பட்டது. இந்த உத்தேசப் பணிகளுக்கு 740.00 இலட்சம் ரூபாய் செல வாகுமென மதிப்பிடப்பட்டது. இத் திட்டப் பணியைச் செயற்படுத்துவதன் மூலம், 2,660 எக்டேர் பரப்பளவுள்ள ஆயக்கட்டுப் பகுதி பயனுறும். இத்திட்டப் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

## பொதுப்பணித்துறை (கட்டிடப்பிரிவு.)

பொதுப்பணித்துறையானது சில கிளைப் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பொதுச் சேவை நிறுவனம் ஆகும். பொதுப்பணித்துறையின் கட்டிடப்பிரிவானது மருத்துவம், கல்வி, விவசாயம், பொதுப்பணி மற்றும் இதர அரசுத்துறைகள் சம்பந்தப்பட்ட கட்டி டங்களின் கட்டுமானபணிகளையும் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்புகளையும் ஏற்று செயல்படுத்தி வருகின்றது. அத்துடன் அரசு சார்பு நிறுவனங்கள், சுயாட்சி அமைப்பு கள் மற்றும் அரசுத் தொடர்பான இதர அமைப்புக்கள் போன்ற கட்டிடங்களின் கட்டு மானப் பணிகளையும் நூற்றுவீதக் கட்டடங்களின் கட்டணம் பெற்று செய்து வருகின்றது.

மேலும், இவைகள் தவிர பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவானது அரசுத்துறை அல்லாத மற்றும் அரசு சார்புத்துறைகளுக்கும்கூட கட்டிடங்கள் கட்ட தற்போதையத் தொழில் நுட்ப அடிப்படையில் திட்டம் மற்றும் வடிவமைப்பு போன்றவற்றைத் தேவையான அளவு செய்து தரும் பணிகளில் முக்கிய ஆலோசனை வழங்கி வருகிறது. பொதுப்பணித்துறை கட்டிட மைய ஆய்வுக்கூடம் கட்டடம் கட்டுவதில் புதிய மூலப் பொருட்களை புகுத்தி தனது பணியை செய்து வருகிறது. மேலும், இப்பிரிவானது விரைவான வடிவமைப்பு அமைப்பதற்காக ஒரு சிறு கணக்கு இயந்திரத்தையும் வாங்கி யுள்ளது.

## நிதி ஒதுக்கீடு :

1988-89ஆம் ஆண்டுக்காக பொதுப்பணித்துறையில் கட்டடப்பிரிவு மேற்கொள்ள விருக்கும் அரசுத்துறை கட்டடங்கள் கட்டும் பணிக்காகவும் அவற்றைப் பராமரிப்பதற் காகவும் ரூ. 827.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அரசுத்துறை கட்டிடங்கள் மேம்பாட்டிற்காகவும், பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்காகவும் ரூ. 363.25 இலட்சம் நிதி ஒதுக்கீடும் மற்றும் பிற துறைகள் சார்ந்த இன்ன பிற செலவுக்காகவும் இதர கோரிக்கைகளின் கீழ் ரூ. 464.01 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

அரசுத்துறை சம்பந்தப்பட்ட கட்டிடங்களின் கட்டுமானப் பணிக்காக கீழ்க்கண்ட விவரங்களின்படி ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 3566.71 இலட்சமும் மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் அடங்கும் :—

| | (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|
| (1) பொதுப்பணிகள் | 1,176.12 |
| (2) கல்வி | 533.44 |
| (3) மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் | 1,182.82 |
| (4) குடும்ப நலம் | 88.79 |
| (5) குடியிருப்பு | 294.02 |
| (6) செய்தி மற்றும் விளம்பரம் | 10.20 |
| (7) ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 40.25 |
| (8) சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம் | 13.05 |
| (9) விவசாயம் | 53.38 |
| (10) கால்நடைப் பராமரிப்பு | 13.30 |
| (11) ஊரக வளர்ச்சித் திட்டம் | 11.30 |
| (12) பிற மலைப்பகுதித் திட்டம் | 122.84 |
| (13) பிற தனிப்பகுதித் திட்டம் | 27.20 |
| மொத்தம் .. | 3,566.71 |

ஒவ்வொரு துறையின் செயல் விளக்கங்கள் கீழே விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது:

## 1. பொதுப்பணி :

(1) சிவகங்கையை தலைமையிடமாகக் கொண்டு பசும்பொன்தேவர் திருமகனார் மாவட்டம் :

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம், பிற மாவட்ட அலுவலகக் கட்டிடங்கள், மாவட்ட அதிகாரி குடியிருப்புகள் மற்றும் பொது வசதி கட்டிடங்கள் ஆகியவை ரூ. 6.43 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு, 1988ஆம் ஆண்டு ஜூலை திங்களில் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இது தவிர வாகனப் பட்டறை, காவல் நிலையம் மற்றும் தீயணைப்பு நிலையம் ஆகிய கட்டுமானப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் வெகு விரைவில் முடிக்கப்படும்.

(2) விருதுநகரைத் தலைமையிடமாக்க் கொண்டு காமராசர் மாவட்டம் :

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் பிற முக்கிய அலுவலகக் கட்டிடம் ஆகிய பணிகள் ரூ. 5.08 கோடியில் கட்டிமுடிக்கப்பட்டு 1988ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இது தவிர காவல் நிலையம், மாவட்ட ஆட்சியரின் குடியிருப்பு மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் குடியிருப்பு ஆகியப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன.

(3) இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு இராமநாதபுரம் மாவட்டம் :

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் பிற முக்கிய அலுவலகக் கட்டிடம், மாவட்ட அதிகாரிகள் குடியிருப்புக்கள் ஆகியவை ரூ. 3.65 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 1988ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவை தவிர, ரூ. 82 இலட்சம் செலவில் சாலை அமைக்கும் பணியும், ரூ. 9 இலட்சம் செலவில் தீயணைப்பு நிலையம் கட்டும் பணியும் முன்னேற்றத்தில் உள்ளன.

(4) திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் :

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி ரூ. 368.50 இலட்சம் செலவிலும், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டும் பணி ரூ. 60.50 இலட்சம் செலவிலும் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு வ.உ.சி. மாவட்டத்திற்கான பெருந்திட்ட வளாக வரைபடத் தலைமைக் கட்டிட கலைஞர் அவர்களால் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளது.

வட ஆர்காடு மாவட்டம் வேலூரில் ரூ. 4.34 கோடியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும்பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி 1989 டிசம்பரில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தனியார் கட்டிடங்களில் வாடகை முறையில் இயங்கும் வருவாய்த்துறை அலுவலகங்களையும், வசதியற்ற மற்றும் மிகப் பழைய நிலையில் உள்ள அரசு கட்டிடங்களில் இயங்கி வரும் வருவாய்த்துறை அலுவலகங்களையும், நல்ல போதிய வசதியுடன் கூடிய வருவாய்த்துறை அலுவலகங்களாக மாற்றியமைப்பதற்காக தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் பல இடங்களில் வட்ட அலுவலகங்கள், வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் மற்றும் வேளாண்மை வருமான வரி அலுவலகங்கள் ஆகிய கட்டுமானப் பணிகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

ஆ. பொதுப்பணித்துறை :

மாநிலத்தில் பல பகுதிகளில் இயங்கும் பொதுப்பணித்துறை அலுவலகங்களுக்கு போதுமான வசதிகளை செய்து தரும் பொருட்டு கோட்ட அலுவலகங்கள், உபகோட்ட அலுவலகங்கள், பிரிவு அலுவலகங்கள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள் மற்றும் விருந்தினர் மாளிகைகள் ஆகிய கட்டுமானப் பணிகள் போன்ற பல நல்ல திட்டங்களுக்கு பகுதி 2 திட்டங்களின் மூலம் ஒவ்வொரு வருடமும் அரசு அங்கீகாரம் அளித்து வருகிறது.

இ. கருவூலம் மற்றும் கணக்குத்துறை :

மாநிலத்தின் பல பகுதிகளில் இயங்கும் கருவூலத்துறைக்கு போதுமான அலுவலக வசதிகளை செய்து தரும் பொருட்டு அரசு பல நல்ல திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

ஈ. நீதித்துறை நிர்வாகம் :

மாநிலத்தின் பல பகுதிகளில் நீதிமன்ற கட்டிடங்கள் கட்டுவதற்கும் பொதுமக்கள் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கு போதுமான பிற வசதிகளை செய்து தரும் பொருட்டும் பல நல்ல திட்டங்களுக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

உ. வணிகவரித்துறை :

பெரும்பான்மையான வணிகவரித்துறை அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களில் வாடகை முறையில் இயங்குவதால் வாடகை கொடுப்பதற்கு அதிகமான தொகை செலவிடப்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக வணிவரித்துறைக்கு அரசு பல திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

2. கல்வி.

சிறந்த கல்வி செய்து தரும் பொருட்டு மாநிலத்தில் பல இடங்களில் அரசு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், விஞ்ஞானக்கூடங்கள் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்க அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து இம்மாநிலத்தின் பல இடங்களில் பல அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணியில் இதுவரையில் 48 இடங்களில் ரூ. 44.15 இலட்சத்தில் பணிகள் முடிக்கப்பட்டும், 46 இடங்களில் ரூ. 67.40 இலட்சத்தில் பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன. கல்லூரி கல்வித் திட்டத்தின் கீழ், விடுதி/கூடுதல் வகுப்பறை கூடம் கட்டும் பணிகள் 5 இடங்களில் ரூ. 14.73 இலட்சத்தில் முடிக்கப்பட்டும், கூடுதல் வகுப்பறை கூடம்/விடுதி/நூலகக் கட்டிடம் கட்டும் பணிகள் 9 இடங்களில் ரூ. 138.65 இலட்சத்தில் முன்னேற்றத்திலும் உள்ளன.

## 3. மருத்துவம்

### அ. மருத்துவக் கல்வி :

பொது மக்களுக்கு சுகாதாரமான சிறந்த வாழ்வை வழங்குவதற்கு அரசு மிகுந்த அக்கறையும் தனிக்கவனமும் எடுத்து வருகிறது. அது தொடர்பாக 1988–89ஆம் ஆண்டு மருத்துவக் கல்வி, பொது சுகாதாரம் மற்றும் இந்திய மருத்துவ முறை போன்ற பணிகளுக்கு கட்டடங்கள் கட்ட அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. அவற்றுள் குறிப்பாக சென்னை மருத்துவக் கல்லூரியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை வளாகத்தில் மாணவிகளுக்காக விடுதி கட்டும் பணி ரூ. 100 இலட்சத்திலும், அரசு கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை வளாகத்தில் முதுநிலை பட்டப்படிப்பு மாணவிகளுக்கு விடுதி கட்டும் பணி ரூ. 30 இலட்சத்திலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் அரசு பொது மருத்துவமனையில் இதய சிகிச்சைத் துறையில் விபத்துப் பிரிவு மற்றும் விபத்து அவசரப் பிரிவு கட்டிடத்தில் மேல் கூடுதலாக ஏழு மாடிக் கட்டிடம் கட்டும் பணிக்காக ரூ. 126 இலட்சத்திற்கும், சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு கட்டும் பணிக்காக ரூ. 199 இலட்சத்திற்கும், சென்னை பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் தரைதளம் மற்றும் பைல் அடித்தளத்துடன் கூடிய நான்கு தளமும் அமைப்புடன் கூடிய புற்றுநோய்ப்பிரிவு கட்டும் பணிக்காக ரூ. 45 இலட்சத்திற்கும், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவிச் சலவைக்கூடம் கட்டும் பணிகளுக்காக ரூ. 38.13 இலட்சத்திற்கும் ஏற்கெனவே அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்கண்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இதைத் தவிர, சென்னை அண்ணாநகரில் கண், மூக்கு, தொண்டை நோய்களுக்காக ரூ. 50 இலட்சம் மதிப்பில் மருத்துவமனை கட்டுவதற்கும் அண்ணாநகர் அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் உடல் ஜீரண வியாதிகளுக்கான துறைக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்காக ரூ. 58 இலட்சத்திற்கும், சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் முடவியல் மருத்துவமனை கட்டும் பணிக்காக ரூ. 30 இலட்சத்திற்கும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கோபால்ட் கதிர்வீச்சுப் பிரிவு கட்டும் பணிகளுக்காக ரூ. 40 இலட்சத்திற்கும், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கோபால்ட் கதிர்வீச்சுப் பிரிவு கட்டும் பணிகளுக்காக ரூ. 36 இட்லசத்திற்கும் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு இப்பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

### 2. சுகாதாரம் மற்றும் குடும்பநலம் :

மாநிலத்தின் பல பகுதிகளில் வாழும் பின்தங்கிய கிராமப்புற மக்களின் சுகாதார மேம்பாட்டிற்காக அரசு பல திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. அவற்றுள் சென்னை மருத்துவப் பணி இயக்கக அலுவலக வளாகத்தில் குடும்ப நல இயக்கக அலுவலகக் கட்டடத்திற்காக ஏற்கனவே உள்ள ஆரம்ப சுகாதார இயக்கக கட்டடத்தின் மேல் 5–வது மற்றும் 6–வது தளம் கட்டும் பணிக்கு ரூ. 62 இலட்சத்திற்கும் சென்னை நகரின் சுற்று வட்டாரத்தில் உள்ள 10 நகராட்சிகளில் உலக வங்கி நிதி உதவியுடன் படுக்கைகள் வசதியுடன் கூடிய மகப்பேறு மற்றும் அறுவை அரங்கம் கட்டும் பணிகளுக்காக ரூ. 124 இலட்சத்திற்கும் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 3. பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ தடுப்பு பணிகள் :

பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் சுகாதார மேம்பாட்டிற்காக அரசு பல திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

மாநிலத்தின் பல மாவட்டங்களில் பல புதிய மருத்துவமனைக் கட்டடங்களைக் கட்டுவதற்கும், நடைமுறையில் உள்ள மருத்துவமனைக் கட்டடங்களை விரிவு படுத்துவதற்கும் அரசு மேலும் ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றுள் 28 மருத்துவமனைக் கட்டிடங்கள் முடிவடைந்துள்ளன. இவைகளில் குறிப்பாக மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் ரூ. 20 இலட்சம் மதிப்பில் 24 படுக்கைகள் கொண்ட வார்டு, 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு, அறுவை அரங்கம், கதிர்வீச்சுப் பிரிவு மற்றும் மருத்துவ அதிகாரி குடியிருப்புக்கள் ஆகிய கட்டிடப் பணிகள், மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் 49 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பேறு மற்றும் அறுவை அரங்கம் கட்டும் பணி ரூ. 15 இலட்சத்திலும், விருதுநகரில் 48 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டும் பணி ரூ. 15.20 இலட்சத்திலும் மற்றும் சிவகங்கையில் 48 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டும் பணி ரூ. 15.20 இலட்சத்திலும் ஆகும்.

மேலும், 56 இடங்களில் மருத்துவப் பணி கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. அவற்றுள் குறிப்பாக நாகப்பட்டினத்தில், கும்பகோணம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பகுதி கட்டும் பணிகள் ஒவ்வொரு இடத்திலும் ரூ. 13.00 இலட்சத்திலும் பண்ருட்டியில் 25 படுக்கைகள் கொண்ட பிரிவு புறநோயாளிகள் பிரிவு பிணவறை பிரிவு மற்றும் அறுவை அரங்கம்

ஆகிய கட்டுமான பணிகள் ரூ. 41.00 இலட்சத்திலும் கிருஷ்ணகிரியில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு அறுவை அரங்கம் மற்றும் சமையலறைபிரிவு ஆகியவை கட்டுமான பணிகள் ரூ. 20.50 இலட்சத்திலும், கடலூரில் புறநோயாளிகள் பிரிவு கட்டும் பணி ரூ. 13.00 இலட்சத்திலும் மற்றும் சாத்தூரில் புறநோயாளிகள் பிரிவு அறுவை அரங்கம் மற்றும் மருந்தகம் ஆகிய கட்டும் பணிகள் ரூ. 17.00 இலட்சத்திலும் ஆகும்.

குடும்பநலத் திட்டத்தினை நன்கு செயல்படுத்தும் பணியில் முதல்நிலை பெற்றதற்காக மாநில அரசிற்கு இந்திய அரசினால் வெகுமதியாக ரூ. 2.50 கோடி வழங்கப் பட்டதில், 12,20 மற்றும் 40 படுக்கைகள் கொண்ட பிரிவு 35 இடங்களில் கட்ட திட்டமிடப்பட்டு அவைகளில் 16 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டும் மீதமுள்ள 19 இடங்களில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலும் உள்ளன.

மேலும், பின்தங்கிய கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களின் சுகாதார மேம்பாட்டினை கருத்திற்கொண்டு மாநிலத்தின் பல கிராமங்களில் அடிப்படை சுகாதார மையங்களைக் கட்டும் பணிகளுக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இப்பணிகள் மேற்குறிப்பிட்டுள்ள இந்திய அரசினால் அளிக்கப்பட்ட வெகுமதி ஒப்புதலில் அடங்கும். பொதுவாக இவ்வடிப்படை சுகாதார மையங்கள் மருத்துவக் கட்டிடம் மருந்துவப் பணியாளர் குடியிருப்பு வளாகம், சுற்றுச்சுவர், ஆகியப்பணிகளைக் கொண்டதாகும்.

## 4. குடியிருப்பு

மாநிலத்தின் பல பகுதிகளில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள், வருவாய்த்துறை, அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், தீயணைப்புத்துறை, வேளாண்மைத்துறை, வணிகவரித்துறை, சிறைத்துறை மற்றும் கால்நடைத்துறை இன்னும் பிற துறை அலுவலர்களுக்கும் நல்ல குடியிருப்பு வசதிகளையும் பிற வசதிகளையும் செய்து கொடுப்பதை கருத்திற்கொண்டு அரசு பல திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

### 1. பொதுப்பணித்துறை :

அரசு பொதுப்பணித்துறையில் உதவி/இளம் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு வசதிகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள் மற்றும் விருந்தினர் மாளிகைகள் ஆகிய கட்டுமான பணிக்கு ஒப்பளிப்பு அளித்துள்ளது.

### 2. வருவாய்த்துறை :

அரசு வருவாய்த்துறையின் வட்டாட்சியர், சார்பு வட்டாட்சியர், கோட்ட வருவாய் அதிகாரி மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோருக்கு நல்ல வசதிகளுடன் கூடிய குடியிருப்புக்களை கட்டிக் கொடுப்பதற்கு பல திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

### 3. காவல்துறை :

அரசு காவல்துறை அலுவலர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டவும் அங்கீகாரம் அளித்துள்ளது.

### 4. தீயணைப்புத்துறை :

அரசு தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டவும் அங்கீகாரம் அளித்துள்ளது.

### 5. வேளாண்மைத்துறை :

வேளாண்மையானது தமிழ்நாட்டில் தலைமைத் தொழிலாக உள்ளதால் அரசு திட்டக் காலங்களில் நாட்டின் பல பகுதிகளில் வேளாண்மையை மேம்படுத்த பல புதிய திட்டங்களை அங்கீகரித்து உள்ளது. இத்திட்டங்களில் குறிப்பாக விதை சுத்திகரிப்பு நிலையங்கள், விதை கிடங்குகள், ஜெனரேட்டர் அறை மற்றும் அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவை அடங்கும். அவற்றுள் மகளிர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் டான்வா மையக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்காக தமிழ்நாட்டில் 6 இடங்களில் அலுவலகக் கட்டடம், விடுதி கட்டடம் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் ஆகிய கட்டுமானப் பணிகளுக்கு ரூ. 159.30 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து பணிகள் யாவும் முடியும் தருவாயில் உள்ளன.

## பயிற்சி வழிக் தொடர்புத் திட்டம்.

இந்தத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்பட்டு வருகின்றது. மாநிலத்தில் ரூ. 640 இலட்சம் மதிப்பில் (ரூ. 560 இலட்சம் கட்டடப் பணிகளுக்காகவும் மற்றும் ரூ. 80 இலட்சம் இயந்திரங்களுக்காகவும்) 80 தகவல் தொடர்பு மையங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்து அவற்றுள் 75 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு வேளாண்மைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 5 மையப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்த மையங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடித்ததற்காக பொதுப்பணித்துறையை உலக வங்கி பாராட்டி உள்ளது.

## ஊட்டச்சத்துத் திட்டம்.

நம்மாநிலத்தில் 1981 முதல் உலகவங்கியின் உதவியோடு தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ஒவ்வொரு கட்டமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டிடை அபிவிருத்தி குழுவின் கீடனுதவியில் செலவிடப்படாமல் மீதம் உள்ள நிதியினை பயன்படுத்தும் மூகமாக சென்னையில் ரூ. 50 இலட்சம் மதிப்பில் தகவல் மையம்கட்ட திட்டமிடப்பட்டு, இத்திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான இடம் சென்னை—தரமணிக்கு அருகே உள்ள கத்திவாக்கம் கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப்பணியில் பைல் அடித்தளப்பணி முடிக்கப்பட்டு, மேற்கட்டுமானப் பணி எல்லா கட்டடங்களிலும் துவங்கப்பட்டு விட்டது.

## கால்நடைத்துறை :

இவ்வாண்டில் கால்நடைத் துறை மேம்பாட்டுக்காக நாட்டில் பல இடங்களில் பலதரப்பட்ட கட்டிடப்பணிகளை மேற்கொள்ள அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இராணிப்பேட்டையில் அனரோபிக் வேக்சின் நிலைய கட்டிடம் கட்டுவதற்கு அரசு ரூ. 16.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்து பணி செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. சேலம் மாவட்டம் நாமக்கல்லில் உள்ள லட்டிவாடி கிராமத்தில் அரசு ஒரு கால்நடை கல்லூரியை நிறுவ உத்தேசித்துள்ளது. வேளாண்மை பல்கலைக்கழகம் 1.73 கோடி மதிப்புள்ள பணிகளை பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைத்துள்ளது. பணிகள் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

## சமூக நலம் மற்றும் மறுவாழ்வு :

அரசு மேற்கண்ட திட்டத்தின்கீழ் பல கட்டிட பணிகளுக்குப் ஒப்புதல் அளித்து உள்ளது. அவற்றுள் மண்டபம் முகாமில் ரூ. 7.00 இலட்சத்தில் ஆர்.சி.சி. தண்ணீர் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு அனுமதித்துள்ளது. இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

## தோட்டக் கலை :

அரசு தோட்டக் கலைத்துறையில் பல் பணிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள் மாவட்ட கூட்டமைப்புக் கமிட்டி கூட்டத்தில் நீலகிரி தோட்டக்கலை முன்னேற்றத் திட்டத்தின்கீழ் ரூ. 57.00 இலட்சத்திற்கு தகவல் மையம் மற்றும் பயிற்சி நிலைய கட்டிடம் ஆகியவை நஞ்சநாடு மற்றும் கல்லாற்றில் கட்டவும் ஊட்டி தோட்ட பண்ணைக்கு வேலி போடவும், 12 கிடங்குகள் கட்டவும் பொட்டானிக்கல் தோட்டத்தில் கண்ணாடி மாளிகை அமைக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. 5ஆவது மாவட்ட கமிட்டிக் கூட்டத்தில் ரூ. 20.50 இலட்சம் மதிப்பீட்டில் 7 கிடங்குகள் மற்றும் 1 தகவல் மற்றும் பயிற்சி நிலையம் ஊட்டியில் கட்டவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை :

மாநிலத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்காக பல இடங்களில் விடுதிகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றுள் 23 இடங்களில் விடுதிகள் கட்டும் பணிக்கு 1986-87 முதல் 1987-88 வரை ரூபாய் 135.69 இலட்சங்களுக்கு (ரூபாய் 55.21, ரூபாய் 80.48) அனுமதி அளிக்கப்பட்டு அவற்றில் 4 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டும், 17 விடுதிப் பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன. மீதமுள்ள 2 பணிகளுக்கு மறு ஆட்சி ஒப்பளிப்பு அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

அரசு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுற்றுலாத் துறை, மீன்வளத் துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, மருத்துவத் துறைகளைச் சார்ந்த 6 பணிகளுக்காக ரூபாய் 35.54 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. மேலும் முந்தைய ஆண்டுகளில் ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவுறாமல் இருந்த பணிகளும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இவ்வாண்டில் 28 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

## பழங்குடியினர் நலத்திட்டம் :

இவ்வாண்டில் தமிழ்நாடு அரசு பொது சுகாதாரத்துறை, மருத்துவத்துறை, தோட்டக்கலைத் துறைகளைச் சார்ந்த 6 பழங்குடியினர் நலப் பணிகளுக்கு ரூபாய் 42.70 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்தது. மேலும் முந்தைய ஆண்டுகளில் ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவு பெறாமல் இருந்த பணிகளும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இவ்வாண்டில் இருபணிகள் முடிக்கப்பட்டன.

## பதிவுத்துறை :

பதிவுத்துறைக்கு போதுமான வசதிகளுடன் அலுவலக கட்டிடங்கள் கட்டுவதற்கு ரசு பல திட்டங்களுக்கு ஒப்புதல் அத்துள்ளது.

**சிறைத்துறை :**

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மத்திய சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் ஆகிய வற்றில் சிறை கைதிகளுக்கு கூடுதல் இட வசதிகள் செய்தல் குளியலறை, கழிப்பறைகள் கட்டுதல் தண்ணீர் வசதி செய்தல் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல் ஆகிய பணி களுக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. அவற்றுள் சில பணிகள் மத்திய அரசின் 50 சதவீத நிதி உதவியின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டு அப்பணிகள் ஆரம்ப நிலையில் உள்ளன.

**ஊரக வளர்ச்சித்துறை :**

பவானிசாகரில் இயங்கிக் கொண்டிருந்த மாநில ஊரக வளர்ச்சி நிலையம் தற்போது சென்னைக்கு அருகில் மாற்றப்பட்டிருப்பதால் அதற்கான புதிய கட்டிடம் கட்டுவதற்கான கருத்துருவை ஊரக வளர்ச்சித்துறை ரூபாய் 56.10 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி உள்ளது. இக்கட்டிடம் கட்டுவதற்கான தொகை முழுவதும் ஐரோப்பிய பொருளாதார குழுவின் நிதி மற்றும் நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்துத் துறை :**

போக்குவரத்துத் துறைக்கு போதுமான வசதி அளிப்பதற்கு மாநிலத்தில் பல பகுதிகளில் கட்டிடப்பணிகள் மேற்கொள்வதற்கு அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது.

**நினைவகங்கள் :**

தமிழ்நாட்டில் தமிழ் பண்பாட்டை மேம்படுத்துவதற்கான நினைவகங்களும், சிலைகளும் எழுப்புவதற்கு அரசு பல திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றுள் திருப்பூர் குமரனுக்கு நினைவகம் கட்டவும், காட்சி அறை, நூலகம் மற்றும் படிப்பறை ஆகியவற்றை கொண்டதாகவும் உள்ள கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சென்னை காந்தி மண்டபத்தில் தற்போது உள்ள பொருட்காட்சி மற்றும் நூலக கட்டிடத்தில் மாற்றங்களும், கூடுதல் கட்டிடங் களும் கட்டுவதற்கு ரூ. 5 ,06 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து பணிகள் முன்னேற் றத்தில் உள்ளன. மேலும் ரூ. 432 இலட்சத்தில் கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு நினை வகம் அமைக்கவும், கேரளா மாநிலம் வைக்கத்தில் ரூ. 15 இலட்சத்தில் தந்தை பெரியாருக்கு நினைவகம் அமைக்கவும் அரசு ஒப்புதல் அளித்து பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட உள்ளன.

**வைப்புத் தொகை பணிகள் (ஐ.யு.டி.பி.)**

பொதுப் பணித்துறையின் கட்டிடப் பிரிவானது ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் நகர ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட கட்டிடப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அவற்றுள் பல நகராட்சி கள் மற்றும் பேரூராட்சிகளில் பேருந்து நிலையம், கடைகள் வளாகம் மற்றும் வாரச் சந்தைகள் கட்டும் பணிகள் ரூபாய் 318.58 இலட்சத்திற்கு முடிவடைந்து விட்டன. மேலும் பேருந்து நிலையம், தினச்சந்தை மற்றும் கடைகள் வளாகம் கட்டும் பணிகள் ரூபாய் 1,125.82 இலட்சத்துக்கு முடிவடைந்து விட்டது. மேலும் பேருந்து நிலையம் தினச் சந்தை மற்றும் கடைகள் வளாகம் கட்டும் பணிகள் ரூபாய் 1,125.82 இலட்சத் திற்கு மாநிலம் முழுவதும் 71 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**1. வைப்புத் தொகை (பிற பணிகள்) :**

அரசு, மாநிலம் முழுவதும் விடுதி கட்டிடங்கள் மற்றும் பிற கட்டிடப் பணிகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதை தவிர, ரூபாய் 27.60 இலட்சம் மதிப்பில் மதுரை கார்ப்பரேஷனுக்காக தாத்தநேரி இடுகாட்டில் மின்சார எரிப்புச் சாதனம் அமைக்கும் பணி செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் ஊட்டியில் பழங்குடிகள் அருங்காட்சியகம் கட்டும் பணிக்கு ரூபாய் 100 இலட்சத்திற்கும், சைதாப்பேட்டை பஞ்சாயத்து இல்லத்தில் ஊரக வளர்ச்சித் துறைக்கு கட்டிடம் கட்டும் பணிக்கு ரூபாய் 366 இலட்சத்திற்கும் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

கடலூரில் ரூபாய் 31.25 இலட்சத்தில் முன்னாள் படைவீரர்களுக்கு ஜவான்ஸ் பவன் கட்டும் பணி, கொடைக்கானலில் ரூபாய் 5.70 இலட்சம் செலவில் முன்னாள் படை வீரர்களுக்கு ஓய்வு இல்லம் கட்டும் பணி, சைதாப்பேட்டை தாலுக்கா வெங்கடா புரம் கிராமத்தில் ரூபாய் 19.25 இலட்சத்தில் முன்னாள் படைவீரர் நல மையக் கட்டிடம் கட்டும் பணி ஆகிய பணிகள் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முன் னேற்றத்தில் உள்ளன. மேலும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் பாளையங் கோட்டையில் ரூபாய் 27.66 இலட்சத்தில் முன்னாள் படைவீரர் நல இயக்ககத்துக்காக ஜவான்ஸ் பவன் கட்டும் பணி, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் சிவகெங் கையில் ரூபாய் 15.65 இலட்சத்தில் முன்னாள் படைவீரர் நல மையம் கட்டிடம் கட்டும் பணி, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி டி. பி. சானடோரியத்தில் ரூபாய் 9.15 இலட்சத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்காக 20 படுக்கைகள் கொண்ட டி. பி. பிரிவு கட்டும் பணி ஆகியவற்றுக்கு அரசு ஒப்புதல் அளித்து பணிகள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பணிகள் :

தொழிலாளர் நலக் காப்பீட்டுக் கழகத்துடன் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்தவும் அவற்றை நன்முறையில் பராமரிக்கவும் தனியாக ஒரு தொழிலாளர் நலக் காப்பீட்டுக் கழக பொறியியல் பிரிவு கண்காணிப்புப் பொறியாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது.

பராமரிப்பும் பழுதுபார்க்கவும் :

அரசுத்துறை சம்பந்தப்பட்ட அனைத்து அரசு கட்டிடங்களையும் பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் போன்ற பணிகளை இத்துறையானது மேற்கொண்டு வருகிறது. அத்துடன் அரசுக்குச் சொந்தமான பூங்காக்கள், புல்தரைகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் முதலியவற்றையும் பராமரித்து வருகிறது.

## தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம்.

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதையும், அதனை நன்கு பிரபலப்படுத்துவதையும் பிரதானக் குறிக்கோளாகக் கொண்டு, 1988—89-ம் ஆண்டிலும், சூரிய சக்தி, காற்று சக்தி, நீர் மின் சக்தி முதலான திட்டங்களில் தனது கவனத்தைத் தொடர்ந்து செலுத்தி வருகிறது. குறிப்பாக காற்று சக்தி திட்டங்களை நிறைவேற்றுவதில் கணிசமான முன்னேற்றம் காணப்படுகிறது. நிறுவன சாண எரிவாயு அமைப்புகளைப் பிரபலப்படுத்துவதிலும், ஸ்டர்லிங் இயந்திரங்கள், காசிபையர்ஸ் போன்று கருவிகளை நன்கு பயன்படுத்துவதற்கும், கிராமியப் பகுதிகளில் நிர்ம எரிவாயுவை மேலும் நன்கு பயன்படுத்திடவும் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. கிராமப்புறங்களில் போதிய எரிசக்தி பெறும் வண்ணம் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மேலும் புதிய திட்டங்களாகிய எரிசக்தி மரம் வளர்த்தல் போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழகக் கிராமங்களில் கால்நடைகளைப் பயன்படுத்தி பெறக்கூடிய இழுவைச் சக்தியை மேம்படுத்திட டிராபிகல்டர் என்னும் கருவியை உபயோகிக்க ஒரு திட்டம் துவக்கப்பட்டது.

1. சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் :

இதுவரையிலும் நாளொன்றுக்கு 4.88 லட்சம் லிட்டர் நீரை சுடுநீராக்குத் திறனுள்ள 157 சூரிய சுடுநீர் சக்தி சுடுநீர் அமைப்புகளை ரூ. 2.76 கோடி செலவில் அமைப்பதற்காக, மைய அரசின் மரபு வழிசாரா எரிசக்தி துறை ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ. 2.24 கோடி செலவில் 4.50 லட்சம் லிட்டர் நீரை சூடாக்கவல்ல மொத்தம் 140 சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. தவிரவும், வால்பாறை என்னும் இடத்தில் தென்னிந்திய மலைப் பயிர் வளர்ப்போர் சங்கத்தில் 55 முதல் 60 டிகிரி சென்டிகிரேட் அளவுள்ள, மணிக்கு 2,000 கிலோ கிராம் திறனுள்ள சூரிய வெப்பக் காற்றமைப்பு ஒன்று நிறுவப்பட்டு திருப்திகரமாக செயல்பட்டு வருகிறது.

1986—87-ம் ஆண்டு முதல், சமையல் செய்திடவும், குளிப்பதற்காகவும் உபயோகப்படுத்திட அனேக சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளை, உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் மற்றும் தொழிற்சாலைகளிலுள்ள சிற்றுண்டி சாலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன.

வீடுகளுக்கான சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் :

பொதுவாக மேற்கூறிய சாதனங்களை உபயோகிப்போர் திருப்தியடைந்துள்ளனர். தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், நாளொன்றுக்கு 100 லிட்டர் நீரை சூடாக்கக் கூடிய வீடுகளுக்கான சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளை தமிழ்நாடு முழுவதும் அமைத்திடும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதுவரையிலும், 674 அமைப்புகள் நிறுவி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் ஒரு அமைப்புக்கான செலவில் 50 சதவீதம் அல்லது ரூ. 3,000. இதில் எது குறைவானதோ, அந்த அளவுக்கு மரபு வழிசாரா எரிசக்தி துறை மானியம் வழங்குகிறது மீதமுள்ள 50 சதவீத செலவு தொகையில் 40 சதவீதம் அல்லது ரூ. 1,500 இதில் எது குறைவானதோ, அந்த அளவுக்கான மானியமாக தொகையை தமிழக அரசு வழங்குகிறது. இதுபோன்ற வீடுகளுக்கான சூரிய சக்தி சுநீர் அமைப்பு களை நிறுவி பயன்பெற்று வருபவர்களில் பலர் இந்த அமைப்புகள் மிகப் பயனுள்ளதெனவும், நன்கு செயல்பட்டு வருவதாகவும் கூறுகின்றனர்.

காற்றுச் சக்தி.

மின் உற்பத்திக்கான காற்றாலைகள் :

ஒவ்வொன்றும் 55 கிலோவாட் திறன் கொண்ட 10 காற்று சுழல் வான்கள் அடங்கிய காற்றாலை தொகுப்பு 18-1-1986-ல் சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள தூத்துக்குடிக்கு அருகில் முல்லைக்காடு என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. அதே ஆண்டில் 55 கிலோவாட் திறன் கொண்ட மேலும் 6 இயந்திரங்கள் நிறுவி இந்தக் காற்றாலை விரிவாக்கப்பட்டது. பின்னர் 1987-ல் இதே போன்று கூடுதலாக நான்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டன. ஆக, தொகுக்கப்பட்ட 20 காற்றுச் சுழல் வான்கள் கொண்டதோர் காற்றலை மொத்தம் 1.1 மெகவாட் திறனுள்ள அமைப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த காற்றாலைத் தொகுப்பு 31—3—1989 வரையிலும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 38 லட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

1.35 மெகவாட் திறன் கொண்ட இரண்டாவது செயல் விளக்கக் காற்றுப்பண்ணை ஒன்று சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கயத்தாறு என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. ஒவ்வொன்றும் 90 கிலோ வாட் திறனுள்ள 15 காற்று மின்னாக்கிகள் 1988-ல் ஆண்டு மார்ச்சு மாதம் நிறுவப்பட்டன. இயந்திரங்களின் விலையாகிய 1.5. கோடி ரூபாயை மரபு வழிச்சாரா எரிசக்தி துறையும் இதர அமைப்புச் செலவு தொகை சுமார் ரூ. 65 லட்சத்தை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு மின்வாரியமும் சமமாக ஏற்றுக்கொண்டன. இந்த அமைப்பின் மூலம் 31-3-1989 வரையிலும் மொத்தம் 22 லட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

டானிடா நிதி வழங்கு திட்டத்தின் கீழ் ரூ. 17.5 கோடி மதிப்புள்ள ஒவ்வொன்றும் 5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு மிகப்பெரிய காற்றாலைத் தொகுப்புக்கு மரபு வழிச்சாரா எரிசக்தித் துறை ஒப்புதல் வழங்கியது. இவை சிதம்பரனார் மாவட்டத்துள்ள கயத்தாறிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முப்பந்தல் என்னுமிடத்திலும் அமைக்கப்படும். இதற்கான உத்தேச அமைப்புச் செலவுத் தொகை ரூ. 4.5 கோடியை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும். தமிழ்நாடு மின்சார வாரியமும் சமமாக ஏற்றுக் கொள்ளும் இந்த இரண்டு காற்றாலைத் தொகுப்புகளும் 1990 ஏப்ரல் மாதத்தில் நிறுவப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. டானிடா நிதி வழங்கு திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 90 கிலோவாட் திறன் கொண்ட முன்னோடி காற்று மின்னாக்கிகள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சுல்தான்பேட்டையிலும், மற்றொன்று திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கஸ்தூரி ரங்கபுரம் கிராமத்துக்கு அருகே புளியங்குளம் என்னும் இடத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு இயந்திரங்களுக்கான முழுவிலையாகிய ரூ. 25 லட்சத்தை மரபு வழிச்சாரா எரிசக்தி துறை வழங்கியது. இயந்திரங்களை நிறுவுவதற்கான இதர செலவுகள் ரூ. 8 லட்சமும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் சமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விரு இயந்திரங்களும் 1988 ஜூன் மாதம் நிறுவப்பட்டு 31-3-1987 வரையிலும் 2.81 லட்சம் யூனிட்டுகள் மின்சார உற்பத்தி செய்துள்ளன.

நீர் இறைப்பதற்கான காற்றாலைகள் :

மரபு வழிசாரா எரிசக்தி துறை 1988-ம் ஆண்டில், 100 நீரிறைக்கும் காற்றாலைகள் நிறுவிட ஒப்புதல் வழங்கியது. இவையாவும் 1988-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கு முன்பாகவே நிறுவப்பட்டன. அக்டோபர் மாதம் 150 காற்றாலைகள் அமைத்திட ஒப்பளிப்பு பெறப்பட்டது. இதில் 78 காற்றாலைகள் 31-3-1989 வரையிலும் நிறுவப்பட்டன. இக்காற்றாலைகளின் செயல் திறனைக் கண்காணிக்க, உபயோகிப்பாளரால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காற்றாலைகளின் செயல்பாடு குறித்த விபரம் தெரிவிப்பதற்காக படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இப்படிவம் மறுமொழி அஞ்சல் அட்டைகளில் உபயோகிப்பாளருக்கு அனுப்பப்படுகிறது. காற்றாலைகளின் செயல்பாடுகளில் ஏற்படும் குறைபாடுகளை தெரிவித்தால் உடனுக்குடன் அவற்றை வினியோகித்த நிறுவனங்களின் உதவியுடன் சரிசெய்யப்படுகின்றன. இதுவரையிலும் 475 நீரிறைக்கும் காற்றாலைகள் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளன.

சாண எரிவாயு கலன்கள் :

கால்நடைகளின் சாணம் மற்றும் வீணாகிய காய்கறிகள் முதலானவற்றிலிருந்து மிகுந்த அளவிலான எரிவாயு உற்பத்தி செய்ய முடியும். இது மலிவான மற்றும் சக்தி வாய்ந்த எரிபொருள் ஆகும். எரிவாயு உற்பத்திக்குப்பின் அதிக வளமான உரமும் கிடைக்கிறது. வீட்டு உபயோகத்திற்காக நிறுவப்படும் சாண எரிவாயுக்கலன்கள் அமைக்கும் பணியினை ஊரக வளர்ச்சித்துறை இயக்ககம் கவனித்து வருகிறது. பெரிய அளவிலான சாண எரிவாயுக்கலன்கள் அமைக்கும் பணி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டம் இந்த நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட புதிய செயல் திட்டமாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 44.74 லட்சம் மதிப்புள்ள 47 எரிவாய்க்கலன்கள் நிறுவுவதற்கான கருத்துருக்கள் மரபு

வழிச்சாரா எரிசக்தி துறைக்கு அனுப்பப்பட்டன. அவற்றுள் ரூ. 33.46 லட்சம் மதிப்புள்ள 38 திட்டக் கருத்துருக்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டது. இதுவரையிலும் ரூ. 19.46 லட்சம் செலவில் 22 அமைப்புகள் நிறுவப்பட்டன.

**வளியாக்கிகள் மற்றும் ஸ்டர்லிங் இயந்திரங்கள் :**

இந்த திட்டம் 1987–88-ம் ஆண்டில் துவக்கப்பட்டது. இதுவரையிலும் 5 கிலோவாட் திறன் கொண்ட 10 வளியாக்கிகள் நிறுவப்பட்டுள்ளன. இது தவிர ஒவ்வொன்றும் 5 குதிரைச்சக்தி உள்ள 30 ஸ்டர்லிங் இயந்திரங்களும் நிறுவப்பட்டன. இந்த இயந்திரங்கள் பயன்படுத்துவோரிடையே மிகவும் பிரபலமாகியுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம் :**

1988–89-ம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம் தமிழகத்திலுள்ள கீழ்க்காணும் வட்டாரங்களில் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) காட்டாங்குளத்தூர் | செங்கல்பட்டு மாவட்டம். |
| (2) சர்க்கார்சாமகுளம் | கோயம்புத்தூர் மாவட்டம். |
| (3) பரங்கிப்பேட்டை | தென்னாற்காடு மாவட்டம். |
| (4) ஆலந்துார் | திருச்சி மாவட்டம். |
| (5) திருமங்களம் | மதுரை மாவட்டம். |
| (6) பழனி | காயிதே மில்லத் மாவட்டம். |
| (7) வாலாஜா | வட ஆற்காடு மாவட்டம். |

இத்திட்டத்தின் நோக்கம், நீரிறைக்கும் காற்றாலை அமைத்தல், சமூக சாண எரிவாயு கலன்கள் நிறுவுதல், சூரிய அடுப்புகள் விற்பனை மற்றும் செயல்முறை விளக்க மளித்தல், பிரியாகினி என்னும் இரும்பு அடுப்பு வழங்குதல், நல்ல செயல்திறனுள்ள புட்வால்வு வழங்குதல், பல நோக்கு இழுவை சாதனம் வழங்குதல், மின்அடுப்புகள் வழங்குதல் போன்ற எரிசக்தி சேமிப்பு அமைப்புகளைப் பிரபலப்படுத்துவதேயாகும். ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டங்களை நிறைவேற்றும் வட்டாரங்களில் உள்ள உபயோகிப்பாளர்களுக்கு இத்தகைய எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் யாவும் இனாமாகவோ அன்றி மானிய விலையிலோ வழங்கப்படுகிறது.

**பம்ப் செட்டுகளில் மாறுதல்கள் செய்தல் :**

விவசாயத்திற்கு நீரிரைக்க பயன்படுத்துகிற பம்ப் செட்டுகளில் சிறிய மாற்றங்கள் செய்வதன்மூலம் மிகுந்த அளவில் எரி சக்தியினை சேமிக்க முடியுமென்று கண்டறியப் பட்டுள்ளது. இதன்மூலம் 10 முதல் 30 சதவீதம் வரையிலும் மின்சார செலவினை குறைத்திடவியலுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள வால்வுகளுக்கு பதிலாக உயர்ரக வால்வுகளைப் பொருத்துவது மற்றும் குழாய்களை மாற்றுவது போன்றவையே இதில் செய்யப்படும் மாற்றங்கள் ஆகும். 1988–89-ல் இதுபோன்ற பணிகள் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால், பெட்ரோலியம் கன்சர்வேசன் ரிசர்ச் ஆஸோசியேசன் என்னும் நிறுவனத்தின் உதவியுடன் 300 பம்ப் செட்டுகளில் செய்யப் பட்டுள்ளன. 1988–89-ல் மேற்படி பெட்ரோலிய சேமிப்பு ஆய்வு சங்கம், மேலும் 150 பம்பு செட்டுகளில் இத்தகைய பணிகள் செய்திட நிதி ஒதுக்கியுள்ளது. மேலும அதிக திறனுள்ள உயர்ரக வால்வுகள் பொருத்திட, ரூரல் எலக்டிரிபிகேசன் கார்பரேஷன் ஆப் இந்தியா என்ற நிறுவனம், நிதியுதவி வழங்கிட முன் வந்துள்ளது.

# அத்தியாயம்—26

## வருவாய்த் துறை

### வேளாண்மை வருமானவரி.

தமிழ்நாடு வேளாண்மை வருமானவரி சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 1955-ன் பிரிவு 5) தொடர்ந்து வேளாண்மை வருமான வரித்துறையினரால் அறிக்கை ஆண்டில் அமுல் செயயபபட்டு வநதது. இச்சட்டத்தின்கீழ் முந்தைய ஆண்டில் வரிதாரர்கள் அனைவரும் சம்பாதித்த வேளாண்மை வருமானத்தின் மீதோ அல்லது முந்தைய ஆண்டில் வரிதாரர்களாயிருந்து தன்வசம் வைத்துக்கொண்டிருந்த மொத்த நிலங்களின் மீதோ வருடாந்திரத்தில் வரி விதிக்கப்படுகிறது.

1. வருவாய் அடிப்படை மற்றும்; 2. இலக்கமுறை அடிப்படை என்ற இரு வகையில் வரிவிதிப்புகள் செய்யப்படுகின்றன.

பணி முன்னேற்றம் :

நடப்பு ஆண்டில் மொத்தம் முடிக்கப்படவேண்டிய (இணக்கமுறை மற்றும் வருவாய் அடிப்படை) கோப்புகள் 32,071. இவற்றில் 31,400 கோப்புகள் முடிக்கப் பட்டு, 671 கோப்புகள் நிலுவையில் இருந்தன. இவை தவிர 1—4—1988 அன்று 638 கோப்புகள் நிலுவையில் இருந்தன. இக்கோப்புகளில் 216 கோப்புகள் அறிக்கை ஆண்டில் முடிக்கப்பட்டு 422 கோப்புகள் நிலுவையில் இருந்தன.

சீராய்வு மனுக்கள் மற்றும் தன்னிச்சை சீராய்வு மனுக்கள் :

ஆண்டு ஆரம்பத்தில் 257 சீராய்வு மனுக்கள் நிலுவையில் இருந்தன. 87 மனுக்கள் இவ்வாண்டில் வரப்பெற்றன. மொத்தம் 344 மனுக்களில், 177 மனுக்கள் தீர்க்கப் பட்டு 167 மனுக்கள் நிலுவையில் இருந்தன.

ஆண்டு ஆரம்பத்தில் 83 தன்னிச்சை சீராய்வு மனுக்கள் நிலுவையில் இருந்தன. 73 மனுக்கள் இவ்வாண்டில் வரப்பெற்றன. மொத்தம் 156 மனுக்களில் 24 மனுக்கள் தீர்க்கப்பட்டு 132 மனுக்கள் நிலுவையில் இருந்தன.

கேட்பு வசூல் மற்றும் நிலுவை :

பழைய பாக்கிகளையும் சேர்த்து மொத்தம் வசூல் செய்யப்பட வேண்டிய கேட்புத் தொகை ரூ. 1,083.06 இலட்சத்தில் இவ்வாண்டில் ரூ. 682.64 இலட்சம் வசூல் செய்யப்பட்டது. வேளாண்மை வருமான வரியில் சராசரி வருடாந்திர வரவு ரூ. 7 கோடியாகவும் வருடாந்திர நிர்வாக செலவு ரூ. 1.25 கோடியாகவும் உள்ளது.

பயிரிடத்தக்க தரிசு நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்தல் :

பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் தகுதிவாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றது. 5 நபர்களோ அல்லது அதற்கு குறைவாகவோ உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது இதற்கு குறைவாக வருமானமிருப்பின் அவர் ஏழை எனக் கருதப்படுகிறார். அவ்வாறே ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருப்பின் அக்குடும்பத்தின் மாத வருமானம் ரூபாய் 250 அல்லது அதற்கு குறைவாக இருந்தால் குடும்பத் தலைவர், ஏழை எனக் கருதப்படுகிறார்.

2. போரில் இறந்த மற்றும் ஊனமுற்ற முன்னாள் படை வீரர்களின் குடும்பத்தினர் மற்றும் பாதுகாப்புப் படையினரின் குடும்பத்தினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் வகையைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகள், பொதுக்காரியங்களுக்காக நிலஎடுப்பு செய்ததால் நிலமற்றவர்கள், விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளர்கள் முன்னாள் படை வீரர்கள், பர்மா மற்றும் இலங்கை அகதிகள் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற் கொல்லர்கள், இதர நிலமற்ற ஏழைகள், விடுவிக்கப்பட்ட கைதிகள் ஆகியோருக்கு இதே முன்னுரிமையில் நில ஒப்படை செய்யப்படுகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயர்ந்த பட்ச பரப்பு, ஏற்கனவே அவருக்குச் சொந்த மான நிலப்பரப்புடன் சேர்த்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செய் என்று அமையும் வகையில் ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலமதிப்பு அதிகமாக உள்ளதால், அங்கு உயர்ந்தபட்சம், புன்செய் நிலமாயிருந்தால் ஒரு ஏக்கரும், நன்செய் நிலமாயிருந்தால் அரை ஏக்கரும் ஒப்படைக் குப்பின் தகுதி வாய்ந்த ஒரு நபர் வைத்திருக்கலாம்.

4. நிலங்கள் கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. நில ஒப்படை பெற்றவர், ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத் திற்குள் நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். குறைந்தபட்சம் 10 ஆண்டு காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அல்லது உரிமை மாற்றம் செய்யவோ கூடாது. ஆயினும்,

பயிரிடுவதற்காக கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை பெற்றவரே நிலத்தை பயிரிட வேண்டும். அல்லது அவருடைய குடும்பத்தினரோ அல்லது கூலிபெறும் தொழிலாளர்களைக் கொண்டோ அந்த நிலத்தைப் பயிரிடவேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக்கூடாது.

5. 1–4–1988 முதல் 31–3–1989 வரை சுமார் 5,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்கு 4,500 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

6. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆணையின்மீது சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர் ஒப்படை சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் மேல் முறையீட்டதிகாரியாவார். ஒப்படை சம்பந்தப்பட்ட விஷயங்களில் கொள்கை முடிவு அரசின்பாற்பட்டது.

## வெள்ளமும் புயலும்

1987-ம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையினால் சொற்ப பலன்களே ஏற்பட்டதால் வறட்சி நிலவியது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இருந்தன. இப் பகுதிகளுக்கு 1988 மார்ச்சு மாதத்திற்குபின் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. குடிநீர் பிரச்சனையை சமாளிக்க போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட நிவாரணப் பணிகளைத் தவிர, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிலவரி வஜா போன்ற சலுகைகளும் அளிக்கப்பட்டன.

2. தீ விபத்து ஏற்படும் நேரங்களில், முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூ. 400-ம் பகுதியாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூ. 200-ம் மானியமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதைத் தவிர, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி அல்லது லுங்கி மற்றும் ஒரு சேலை ஆகியவைகளையும் வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது. உயிர் இழப்பு ஏற்படும் இனங்களில், இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ. 2,000 அவர்களின் குடும்ப மறுவாழ்விற்காக வழங்கப்பட்டு வருகிறது.

3. 1988–89-ம் ஆண்டு மாறுபட்ட பருவநிலையினால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கோடு பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 15,27,270.45-க்கு நிலவரி வஜா வழங்குவதற்கான ஆணையினை அரசு பிறப்பித்துள்ளது. மேலும் குடிநீர் வசதிகளுக்காக அரசு ரூ. 449.16 இலட்சத்தினை கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றும் நோக்குடன் வழங்கி ஆணையிட்டுள்ளது :—

| வ.எண். | திட்டத்தின் பெயர். | வழங்கப்பட்ட தொகை. (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | ஆழ்குழாய் கிணறுகள் (போர்வெல்) | 171.25 |
| 2 | திறந்தவெளி கிணறுகள் (ஓபென் வெல்) | 122.00 |
| 3 | உறை கிணறுகள் (ரிங்வெல்) | 4.56 |
| 4 | கிணறுகளை ஆழப்படுத்துதல் | 39.85 |
| 5 | நடப்பிலுள்ள குடிநீர்த் திட்டங்களை செப்பனிடுதல் மற்றும் பைப் லைன்களை நீட்டித்தல். | 83.00 |
| 6 | ஆழ்குழாய் கிணறுகளை சுத்தப்படுத்துதல் மற்றும் செப்பனிடுதல் | 1.00 |
| 7 | பில்டர் பாயிண்டுகளை இந்தியா மார்க்-II பம்புகளாக மாற்றி அமைத்தல் | 27.50 |
| | மொத்தம் | 449.16 |

ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினால் செயலாக்கப்பட்டு வருகிறது. 685 ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு அனைத்தும் போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்கப் பட்டது. இதைத் தவிர, குறைந்தபட்ச தேவை திட்டத்தின்கீழ் 2,000 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

1988-ம் ஆண்டு நவம்பர் 25 மற்றும் 26 தேதிகளில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளச் சேதத்தில் துயருற்ற மக்களுக்கு நிவாரணமாக கீழ்க்கண்ட நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| துயர் துடைப்புப் பணிகள். | ஒதுக்கப்பட்ட தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| எரு மற்றும் பருப்பு பொருட்களுக்கு மானியம் .. | 10,64,460 |
| 50 சதவீதம் மானியமாக பூச்சி மருந்து மிக அதிக தொகை யாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 45 வீதம் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மொத்தம் 6,836 ஹெக் டேருக்கு வழங்கப்பட்டது. | 1,53,810 |

இதைத்தவிர தஞ்சாவூர், செங்கை-அண்ணா, புதுக்கோட்டை மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களில் கடும் மழையினால் மொத்தம் 4,608 குடிசைகள் முழுமையாகவும், பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. அரசு நிலை ஆணைகளின்கீழ் அனைத்து உதவி களும் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்டன. மரணம் ஏற்பட்ட நேர்வுகளிலும் உதவித் தொகை வழங்கப்பட்டது. இவைகளைத் தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்கு வசதியும், உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

## நிலச்சீர்திருத்தங்கள்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (58/61) (நிலத்தின் மீது உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டம், வேளாண்மை நிலையங்களின் மீது உச்ச வரம்பை நிர்ணயித்து, உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்களைக் கையகப் படுத்தி இது போன்ற நிலங்களை நிலமற்றோருக்கும், கிராமங்களில் வறிய நிலையிலுள்ள ஏனைய மக்களுக்கும் வழங்குவதற்கு வகை செய்கிறது. இதனால் ஒருசிலரிடம் மட்டுமே வேளாண்மை நிலங்களும், சொத்துக்களும் குவிந்து விடாமல் தடுக்கப் படுகிறது.

(1) அவ்வப்போது திருத்தப்பட்டவாறான தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டம்.

(2) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துதல்) சட்டம்.

(3) தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம்.

(4) தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) சட்டம்.

(5) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவுருச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர் (உடைமை உரிமை அளித்தல்) சட்டம்.

(7) தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை அளித்தல்) சட்டம்.

(8) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம் முதலான சட்டங்களைச் செயற்படுத்தும் நடவடிக்கையை நிலச்சீர்திருத்தங்கள் இயக்ககம் மேற்கொண்டு வருகிறது.

2. ஏழு மாவட்டங்களில் உதவி ஆணையாளர்கள் (நிலச் சீர்திருத்தங்கள்) பணி யாற்றி வருகின்றனர்.

<u>நிலச்சீர்திருத்த நடுவர் மன்றங்கள் இரண்டு :</u>

இம் மாநிலத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி தலைமை தாங்கும் நிலச் சீர் திருத்த நடுவர் மன்றங்களில் ஒன்று தஞ்சாவூரிலும், மற்றொன்று மதுரையிலுமாகச் செயற்பட்டு வருகின்றன. இவை தவிர, நிலக் குத்தகைத் தகராறுகளைத் தீர்த்துவைக்க 11 வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் திருவாரூர், திருநெல்வேலி, கும்பகோணம் லால்குடி, திருச்சி மற்றும் மன்னார் குடியிலுள்ள வருவாய் நீதிமன்றங்கள் 1—9—1989 முதல் கலைக்கப்பட்டது. மீதமுள்ள ஐந்து மன்றங்கள் இயங்கி வருகின்றன.

(அ) நிலச் சீர்திருத்தங்கள்.

(ஆ) நகர்ப்பகுதி நில உச்சவரம்பு, நகர்ப்பகுதி நிலவரி,

(இ) வேளாண்மை வருமானவரித் துறைகள்

ஆகிய துறைகளுக்கு சிறப்பு ஆணையாளர்-நிலச்சீர்திருத்த ஆணையாளரே தலைவராவார். பின்னர்த் திருத்தப்பட்டவாறான தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்தின்மீது உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின்கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்கள், தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரிநிலத்தை ஒரு வகை செய்தல்) விதிகளில் வரையறுக்கப்பட்டவாறு, முன்னுரிமை அடிப்படையில் தகுதிவாய்ந்த நபர் களுக்கு ஒப்படை செய்யப்படுகின்றன.

| | 1988-89-ல் நிர்ணயிக்கப்பட்ட திட்டச் சாதனை. | எய்திய சாதனை. |
|---|---|---|
| | (1) | (2) |
| உபரி நிலங்கள் ஒப்படை | 2500-00 ஏக்கர். | 3018-00 ஏக்கர். |
| நிலம் பெற்றவர்களுக்கு நிதி யுதவி. | ரூ. 24,00,000.00 | ரூ. 23,94,000.00 |

<u>நிலவரி.</u>

ஒரு நிலத்தின் இனம், வளம், தரம் ஆகியவைகளைப் பொருத்து நிர்ணயிக் கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். இதனை ஆதாரமாகக் கொண்டு விதிக்கப்படும் நிலவரி, தலமேல்வரி, கூடுதல் தவரி, கூடுதல் தண்ணீர் வரி, என்பது இதன் பிற அம்சங்களாகும். நிலவரியில் ஒரு ரூபாய்க்கு 45 பைசா வீதம் வசூ லிக்கப்படும் தலவரியும் உயர்ந்த பட்சமாக 250 பைசா வரையில் வசூலிக்கப்படும் மேல்வரியும் நிலவரியுடன் வசூலிக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களுக்கான வரி களாகும். இவை வசூலிக்கப்பட்டவுடன், அந்தந்த பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்து ஒன்றியத்துக்கும் ஊரக வளர்ச்சி பணிக்காகப் பிரித்து கொடுக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு ஆணை நாள் 22—6—1967-ன்படி 1—6—1967 முதல் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரியை ரத்து செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல் 13—9—1972-ல் 1—7—1971 முதல் 5 ஏக்கர் மற்றும் அதற்கு குறைவாக நஞ்சை நிலங்கள் உள்ள தனி நபருக்கு மொத்த நஞ்சை தீர்வையில், புஞ்சை நிலத் தீர்வை அளவுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

வருவாய் அலுவலர்கள், கிராமங்களில் நிலவரியை, 'இணங்கச் செய்தல் அடிப்படையில் நிலவரியினை வசூல் செய்கின்றனர். அரசு தனது 1—7—1986-ம் நாள் ஆணையில் நிலவரியினை வசூலித்தலில், வலுக்கட்டாயப்படுத்தும் நட வடிக்கையில் ஈடுபடக்கூடாது என உத்திரவு பிறப்பித்துள்ளது.

2. நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மற்றும் முடித்த சாதனை :

| நிதிஆண்டு 1988-89 | கேட்பு | வசூல் (கூடுதல் வசூல் உட்பட) | பாக்கி. | அதிகவசூல். |
|---|---|---|---|---|
| நிலுவை | 33,39,96,577.22 | 3,61,23,115.02 | 25,75,11.945 | 7,69,777.05 |
| நிகரம் | கேட்பு | | பாக்கி | |
| நடப்பு | 22,19,69,299.59 | 15,49,45,697.45 | 58,24,407.93 | 7,28,50,010.06 |

நிலுவையில் உள்ள வரியினை வசூல் செய்து முடிப்பதற்கான பிப்ரவரி முதல் 16 வாரங்களுக்கு பிரதி வாரம் 2.07 கோடி ரூபாய் வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. பசலி ஆண்டு மே மாதத்திற்குள் இந்த இலக்கினை அடைதல் வேண்டும். 31—3—1989 அன்று நிலுவையில் 12 சதவிதம் கேட்பினையும், நடப்பில் 67 சதவிதம் கேட்பினையும் அடைந்துள்ளனர்.

பாசன வருவாய் :

பாசன வருவாய் சம்பந்தப்பட்ட சட்டங்களில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. நஞ்சை நிலங்களுக்கான பாசன வரி நஞ்சை தீர்வையுடன் சேர்க்கப்பட்டு வசூலிக்கப் படுகிறது. புஞ்சை நிலங்களுக்குத் தனியே பாசன வரி விதிக்கப்படுகிறது. இவை இரண்டும் நில வருவாய் கேட்பில் மொத்தமாக சேர்க்கப்படுகின்றன.

2. பாசன வரிவிதிப்பு மற்றும் நீர்ப்பாசனம் சம்பந்தமாக பெறப்படும் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்கள் தொடர்பான அறிக்கை :

31—3—1989 உடன் முடிவடைந்த ஓராண்டு காலத்தில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகளில் முடிக்கப்பட்டவை குறித்த விளக்கம் கீழ்க்கண்டவாறு :

| | 1—4—1988 ஆரம்பித்த நிலுவை. | 1988 பெறப் பட்டவை. | மொத்தம் | 1988-ல் முடிக்கப் பட்டவை. | 31—3—89 நிலுவை. |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. வரிவிதிப்பு சம்பந்தப்பட்ட முறையீடு மற்றும் சீராய்வு மனு. | 8 | 2 | 10 | 8 | 2 |
| 2. நீர்பாசன உரிமம் தொடர்பான முறையீடு மற்றும் சீராய்வு மனு | | 5 | 5 | 2 | 3 |
| மொத்தம் | 8 | 7 | 15 | 10 | 5 |

மக்கள் தொடர்பு திட்டம் / மனுநீதி திட்டம்.

மக்கள் தொடர்பு திட்டம் மற்றும் மனுநீதி திட்டத்தின்கீழ் மாவட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், பல்வேறு துறைத் தலைவர்களுடன் தனது ஆட்சியெல்லைக்குட்பட்ட ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒவ்வொரு மாதம் என்று, சுழற்சி முறையில் சென்று அந்தந்த கிராம மக்களின் குறைகளை அந்தந்த இடத்திலேயே தீர்வு செய்கின்றனர். அது போன்றே கோட்டாட்சியர்கள் தங்களது ஆட்சியெல் லையில் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்குச் சென்று குறைகளை தீர்ப்பர்.

தற்போதுள்ள அறிவுரைகளின்படி சார்நிலை அலுவலர், ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு மனுநீதி நாள் நடப்பதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னதாகச் சென்று, பொது மக்களுக்கு மனுநீதிநாள் குறித்து அறிவிப்பு செய்துவிட்டு, பொது மக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று அவற்றைத் தொடர்புடைய குறிப்பிட்ட துறை அலுவலர் களுக்கு குறைகளை நீக்க ஏதுவாக அனுப்பி விடுகிறார். மக்கள் தொடர்பு நாள் அன்று இந்த அலுவலர் ஏனையத் துறை அலுவலர்களுடன் கிராமத்திற்குள் சென்று முடிவான பதில்களை மனுதாரர்களுக்கு தெரிவிக்கிறார். மேலும் மனுநீதி திட்ட நாளில் பெறப்படும் மனுக்களின் மீதும் நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு முடிவான பதில்கள் அனுப்பப்படுகின்றன.

மாவட்ட வருவாய் அதிகாரியும், மாவட்டாட்சித் தலைவரும் பிரதி மாதம் ஒரு கோட்டத்தில் ஒரு கிராமத்தில் சுழல் முறையில் மனுநீதி திட்டம் நடத்த வேண்டும். அதாவது ஒரு மாதத்தில் இரண்டு மனுநீதி திட்ட நிகழ்ச்சிகள் முறையே மாவட்ட வருவாய் அலுவலரால் ஒரு கோட்டத்திலுள்ள ஒரு கிராமத்திலும், மாவட்டாட்சித் தலைவரால் பிரிதொரு கோட்டத்தில் உள்ள ஒரு கிராமத்திலும் தனித்தனியே நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நில அளவையும் நிலப் பதிவேடுகளும்

**முன்னுரை:—**

நில அளவைப் பதிவேடுகள் பிரிவு நில அளவை நிலவரித் திட்ட இயக்கத்தின் ஒரு அங்கமாகும். இத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. நில அளவை, நிலவரித் திட்ட இயக்குநர் இதன் துறைத் தலைவர் ஆவார். நில அளவைப் பதிவேடுகள் கூடுதல் இயக்குநர், நில அளவை, நிலவரித்திட்ட இயக்குநரின் தொழில் நுட்ப ஆலோசகராக செயல்படுகிறார்.

இத்துறை, தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைச் சட்டம் 192 (சட்டம் எண் 8, 1923-ன்) கீழ் அதன் சட்ட வழிப்பட்ட கடமைகளை செய்து வருகிறது.

தமிழ்நாட்டின் அனைத்து கிராம மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள பகுதிகளுக்கான நிலப்படம் தயாரித்தல் மற்றும் அதனைப் பராமரித்தல் இதன் பொறுப்பாகும். இத்துறை தேவைக்கேற்ப விவசாய நிலப் பகுதிகள், மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் முதல் நில அளவை, மறு நில அளவை அல்லது நுணை நில அளவை, மேற்கொள்கிறது. கடாஸ்டரல் நில அளவையின் குறிக்கோள், கிராம மற்றும் நில உடமைகள் எல்லைகளை வரையறுத்தலாகும், மேலும் (1) நில உடமைகளின் தொகுப்பின் எல்லைகளையும், அதனில் உள்ள விளக்கங்களையும், அளவுகளையும், காட்டும், பெரிய அளவிலான புலப்படம் தயாரித்தல் (2) ஒவ்வொரு நில உடமைகளின் உரிமைதாரர் புலத்தின் எண், தன்மை, உரிமைக்காலம், விஸ்தீர்ணம், மதிப்பீடு போன்ற விவரங்களுடன் கூடிய நிலப்பதிவேடு தயாரித்தலும் ஆகும்.

இத்துறை, மாவட்ட நிலப்படங்கள், வட்ட நிலப்படங்கள் கிராம நிலப்படங்கள் மற்றும் நகர நிலப்படங்கள், தயாரிக்கிறது. இத்துறை அவ்விதம் தயாரிக்கப்பட்ட நில உடமை ஆவணங்களை, விற்பனை மாற்றம், உரிமை வழி மாற்றம் அன்பளிப்பு, பரிமாற்றம், நீதிமன்ற உத்தரவு, பாகப்பிரிவினை முதலிய நிகழ்வுகள் மூலம் அன்றாடம் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் ஆவணங்கள் பிரதிபலிக்கும் வகையில் கொணர்ந்து, நாளதுவரை பராமரிப்பதும், ஆய்வு செய்வதும் இத்துறையின் கடமையாகும்.

இத்துறை அரசின் பிற துறைகளுக்கு நில அளவை குறித்துத் தேவையான நகல உள்ளமைப்புகளை தயாரித்து வழங்குவதுடன், பொதுமக்களுக்கும், சேவை நோக்குடன், அவர்களது நில உடமைகள் குறித்து, அறிய அதாவது புலங்களின் எல்லைகள் அறிதல், வருவாய் ஆவணங்களில் அவர்களது நில உடமை குறித்து பதிதல், உட்பிரிவுகள் ஏற்படும்போதெல்லாம் அம்மாற்றங்களை ஆவணங்களுக்குக் கொண்டு வருதல், புலப்பட நகல்களை வழங்கல் போன்ற தேவைகளை நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம் வசூலித்து, நிறைவு செய்கிறது. பிற துறைகளின் வேண்டுகோளுக்கிணங்க சிறப்பு, நிலப்படங்கள் தயாரிக்கும் பணியையும் இத்துறை மேற்கொள்கிறது. அதற்கான செலவுத் தொகை அத்துறையிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

**செய்கடமை :**

இம்மாநிலத்தில், நடைபெற்று வரும் அனைத்து நில அளவைப் பணிகளையும் நில அளவை, நிலவரித் திட்ட இயக்குநரின் முழுக் கட்டுப்பாட்டிற்குட்பட்டு கட்டுப்படுத்தி, கண்காணித்து வருவது நில அளவைப் பதிவேடுகள் கூடுதல் இயக்குநரின் பொறுப்பாகும்.

சென்னையில் ஒரு நில அளவை மத்திய அலுவலகம் உள்ளது. எல்லா துறை நிலப்படங்களும், அதாவது மாவட்ட நிலப்படம், தெரு நிலப்படம், வட்ட நிலப்படம், கிராம நிலப்படம் முதலியவைகளை வரைந்து, அச்சடித்து, வெளியிடுவதும் இதன் பணியாகும். அதனுடன் நில அளவைத் துறைக்குத் தேவையான அனைத்து நில அளவை உபகரணங்களையும் வழங்குவதும் இதன் பொறுப்பாகும். மாவட்டங்களில் தயாரிக்கப்படும் ஆவணங்கள் இவ்வலுவலகத்தில் பதனிடப்பட்டு, வெளியீடு செய்யப்படுகின்றன. மாவட்டங்களில் அன்றாட உபயோகத்திற்கு தேவைப்படும் அனைத்து நில அளவைப் படிவங்களும், இவ்வலுவலகத்தில் அச்சிடப்படுகின்றன.

சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையைத் தலைவராக கொண்டு மூன்று மண்டலத் துணை இயக்குநர்கள் செயல்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஆறு முதல் எட்டு மாவட்டங்களுக்குப் பொறுப்பாவார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் நில அளவைப் பதிவேடுகள் உதவி இயக்குநர்கள் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு அலுவலகம், இயங்குகிறது. இவ்வுதவி இயக்குநர், அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்முக உதவியாளராகவும் (நில அளவை) செயல் படுகிறார்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு நில அளவை ஆய்வாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். (ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒருவர் வீதம்) இவர்களில் ஒருவர் மாவட்டங்களில் பராமரிப்புப் பணிகளையும் மற்றவர் சுற்றுக் குழு அட்ஹாக் முதலிய பணிகளையும் மேற்பார்வை செய்கிறார்கள். சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் மட்டும் ஒரே ஆய்வாளர் உள்ளார். ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு நில அளவை துணை ஆய்வாளரும், ஒரு வட்ட ஆணை வரைவாளரும் உள்ளனர். குறுவட்ட அளவில் ஒவ்வொரு குறு வட்டத்திலும் ஒரு பிர்க்கா அளவர் பொறுப்பில் உள்ளார்.

**பணி முன்னேற்றம்—குறியீடும் சாதனையும்—எல்லா தலைகள்—திட்டங்களில்**

இத்துறை நீலகிரி மாவட்டத்திலும், பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் மற்றும் காங்கேயம் வட்டங்களில் பாசன திட்டம் மேற்கொள்ளப்பட்ட கிராமங்களிலும் மறு நில அளவைப்பணி மேற்கொண்டது. மாவட்டங்களில் சுற்றுக்குழு மற்றும் பராமரிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்கள், ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பராமரிப்பு பணியும் செய்கின்றனர். பட்டா மாற்றம் இனங்கள், எல்லை வரையறுத்தல் இனங்கள், புலக்கற்கள், ஆய்வு புதுப்பித்தல் பணியும் பல கட்டங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன.

நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்கத்தின் ஒரு அங்கமான நில அளவைப் பிரிவில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான 1988–89 ஆம் வருடத்திற்கான குறியீடு அரசால் அரசு ஆணை பலவகை எண் 637, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் : 26—4—1988-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குறியீட்டின்மீது எட்டப்பட்ட செயல்பாடு ஒவ்வொரு மாதமும் அரசால் ஆய்வும் செய்யப்படுகிறது.

**அறிக்கை காலத்தில் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்கள் குறிக்கோள்—குறியீடு—சாதனை குறித்து.**

அரசு ஆணை நிலை எண் 1177, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள்: 30—10—1987-ல் அனுமதிக்கப்பட்ட கீழ்க்கண்ட திட்டப்பணிகளை, இத்துறை செயல்படுத்தி வருகிறது:—

(1) நத்தம் நில அளவை மற்றும் விவசாயத்திற்கு பயன்படுத்தாத பிற இனங்களில் உபயோகப்படுத்தப்படும் விவசாய நிலங்களை அளத்தல்,

(2) நகரீயம், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை செய்தல்,

(3) மலைக் கிராமங்கள் அளவை செய்தல்,

(4) முன்னரே மறு நில அளவை செய்யப்பட்ட 15 வட்டங்களில் மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டப்பணி செய்தல்.

(5) முதற்கட்ட நில உடமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணி முடிந்த 100 வட்டங்களில் ஆவணங்கள் மேம்பாடு செய்தல்.

குறிக்கோள் :— 1 **நத்தம் அளவை :**

(i) வீட்டுமனை உரிமையாளர்களுக்கு சொத்தின் எல்லைகளை வரையறுத்து வரைப்படத்துடன் கூடிய பட்டா வழங்குதல்.

(ii) நத்தத்தில் காலியாக உள்ள நிலங்களை அடையாளம் காண்பதும், ஆக்கிரமிப்புகளை கண்டுபிடிப்பதும் ஆகும்.

(iii) மாநில அரசுக்கு சொந்தமான, சொத்துக்கள், சமூகச் சொத்துக்களான குளம், சாலை, தரிசு நிலம், மதச் சார்புடைய நிலங்கள், கோவில், மசூதி, தேவாலயம் போன்றவைகளின் நத்தத்தில் உள்ள சொத்துக்கள் மற்றும் ஸ்தலஸ்தாபனம் அரசுக்கு சொந்தமான சொத்துக்களுக்கு தனியாக எல்லை வரையறுத்து பதிவு செய்தல்.

பட்டா நிலங்களுக்கு அருகாமையில் உள்ள விவசாயத்திற்குப் பயன்படுத்தாத பிற பயன்களுக்குப் பயன்படுத்தப்படும் விவசாய நிலங்களை அளவை செய்தல்.

சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலத்தின் பிற 17 மாவட்டங்களில் சுமார் 14,000 ச.கி.மீ. பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. அளவைப் பணிக்கு மாதக் குறியீடு 60 ச.கி.மீ. வருவாயின் தொடர் பணி மேற்கொள்ள ஆவணங்கள் ஒப்படைக்க மாதக் குறியீடு 36 ச.கி.மீ. குறியீடுகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 740.97 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டு, 407.81 ச.கி.மீ. பரப்பிற்கான ஆவணங்கள் நிலவரித் திட்டப் பணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2. நகர அளவை :**

(1) புதிதாகச் சென்னை மாவட்டத்துடன் சேர்க்கப்பட்ட 19 கிராமங்களில் நகர அளவைப் பணி மேற்கொள்ளவும், 1 : 500 அல்லது 1 : 1000 என்ற பெரிய அளவிலான நிலப்படம் தயாரித்தல்.

(2) நகரத்தில் ஏற்படும் நிலப்பிரிவினைகளை ஆவணங்களில் முறையாகவும், நகரத்தில் ஏனையப் பகுதிகளில் மேற்கொள்வதுபோல ஒரே சீராக மேற்கொள்வதற்கும் இதனடிப்படையில் ஆவணங்களும் பதிவேடுகளும் பராமரிப்பதற்காகவும்.

(3) நன்செய் மற்றும் தரிசு நிலங்கள், வீட்டு மனையாகவோ அல்லது விவசாயமற்ற பிற பயன்களுக்கு பயன்படுத்தப்பட்டாலோ, அவைகளை மனை என வகைப்படுத்தி நிலவரி வசூலிப்பதற்கும் உதவுவது, இதன் மூலம் அரசுக்கு கணிசமான வருமானம் கிடைக்கலாம்.

(4) நகர்ப்புற நிலவரித் திட்டம் அமலில் உள்ள பகுதிகளில் நகர்ப்புற நிலவரித் திட்ட அலுவலர்களால் உத்திரவிடப்படும் மாறுதல்களை நகராட்சி மற்றும் வருவாய் கணக்குகளில் மேற்கொள்ளுதல்.

33 நகராட்சிகளில் சுமார் 1,143.05 ச.கி.மீ. பரப்பின் முதல் நகர அளவையும், 76 நகராட்சிகளில் சுமார் 1,200 ச.கி.மீ. பரப்பில், துணை நில அளவை/பதிவு மேம்பாட்டுத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அளவைப் பணிக்கு மாதக் குறியீடு 20 ச.கி.மீ. ஆவணங்கள் ஒப்படைப்பதற்கு மாதக்குறியீடு 12 ச. கி. மீ. குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 104.96 ச.கி.மீ. அளவுப் பணி முடிக்கப்பட்டுள்ளது. 13.66 ச.கி.மீ. பரப்பிற்கான ஆவணங்கள் நிலவரித் திட்ட வருவாய் பின் தொடர் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3. மலைக் கிராம அளவை :

(1) சமூகத்தின் நலிந்த பிரிவினர்களில் மிகவும் நலிந்த பிரிவினரான மலைவாழ் மக்களின் நலன்களை பாதுகாக்க உதவுதல் :

(2) தவறான ஆக்கிரமிப்புகளை தவிர்க்கும் வகையில், கிராம எல்லை மற்றும் ஒதுக்கீடுகளின் எல்லைகளை வரையறுத்தல்.

வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 65 மலை கிராமங்களில் சுமார் 840.20 ச.கி.மீ. பரப்பில் இப்பணி முடிக்கப்படவுள்ளது. அளவைப்பணிக்கு 15 ச.கி. மீட்டரும் ஆவணங்கள் ஒப்படைப்பதற்கு மாதக் குறியீடு 15 ச.கி.மீ. நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 336 ச.கி.மீ. பரப்பளவு அளவைப் பணி முடிக்கப்பட்டு 161.35 ச.கி.மீ. பரப்பிலான ஆவணங்கள் நிலவரித் திட்டப் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. 1960—70 வருட கால கட்டத்தில் மறு நில அளவைப் பணி முடிக்கப்பட்டு 15 வட்டங்களில் மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டம் :

1. பதிவுகள் மேம்படுத்தல்.

(2) பதிவுகள் மேம்படுத்தப்பட்ட நிலையில் ஆவணங்களை அன்றாட நிலைக்கேற்ப பராமரிப்பதற்கு வழி வகுத்தல்.

தென்னாற்காடு, பெரியார் அண்ணா, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 15 வட்டங்களில் 1,084 கிராமங்களில் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. மாதக்குறியீடாக 108 கிராமங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

5. நில உடமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டம் முதற்கட்டபணி முடிக்கப்பட்ட 100 வட்டங்களில் பதிவு மேம்பாடு செய்தல்:

நில உடமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணி முடிந்து, வருவாய் துறைக்கு ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டதற்கும், பராமரிப்பு மீள செயல்படுத்தும் திட்டம் அமுல் செய்யப்பட்ட 1—5—1987 தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில், பதிவு அலுவலரால் உட்பிரிவு கட்டணம் வசூலிக்கப்பட்ட கிராமங்களில் உட்பிரிவு மேற்கொள்ளல்.

(2) பராமரிப்பு மீள செயல்படுத்தும் திட்டம் பயனுள்ள முறையில் அமல் படுத்துவதை எளிதாக்குதல்.

மாதக் குறியீடாக 993 கிராமங்கள் நிர்ணயிக்கப்பட்டன. 5,423 கிராமங்களில் பணி முடிக்கப்பட்டது.

6. செலவு மற்றும் பிற விவரங்கள் :

இத்துறையில் செலவினங்கள் நான்கு நிதித் தலைப்புகளில் செயல்படுத்தப்படுகிறது. 1988—89 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ. 19.13 கோடி அளவில் உள்ளது.

இத்துறையின் ஆதரவில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் ஓர் நில அளவைப் பயிற்சிப் பள்ளி ஒரு உதவி இயக்குநரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. இதனில் எல்லா நில அளவை மற்றும் வருவாய் சார் பணியாளர்களுக்கும், நில அளவை மற்றும் நிலவரித் திட்டப் பயிற்சி வழங்கப்படுகிறது. இது நீங்கலாக இ.ஆ.ப.'' அலுவலர்கள் மற்றும் தகுதிகாண் பருவ அலுவலர்களுக்கும் இத்துறை நில அளவைப் பயிற்சி வழங்குகிறது.

(7) முடிவுரை :

நில அளவைப் பதிவேடுகள் துறை, சேவை நோக்கம் கொண்ட ஒரு துறையாகும். எனவே, நிர்வாகச் செலவினங்கள், பட்டாதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதில்லை. ஆனால், நில அளவைக்கற்கள் மற்றும் கூலிக்கான செலவுகள் தீர்மானிக்கப்பட்டு நிலம் அல்லது எந்த புல எல்லை அளவை செய்யப்பட்டதோ, அதன் மீது உரிமையுள்ள நபர்களிடம் பங்குத் தொகை நில வருவாய் நிலுவையாக வசூலிக்கப்படுகிறது.

நிலப்படங்கள் தயாரிந்து, நிழற்பட அச்சு அல்லது ஆப்செட் முறையில் அச்சிடுவதற்கும், ஆவணங்கள் மேம்படுத்து-பாதுகாப்பு வரவும் மைக்ரோ கம்ப்யூட்டர் முறை போன்ற நவீன உத்திகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. மேலும் இத்துறை முன்னரே நிலப்படம் பிரதி எடுப்பதற்கு நிழற்பட நகல் எடுக்கும் எந்திரம் போன்ற இயந்திரங்கள் உபயோகத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. பொது மக்களிடையே நிலப்படம் தேவை குறித்த விழிப்புணர்ச்சி அதிக அளவில் ஏற்பட்டுள்ளதால், பொது மக்களிடையே நிலப்படங்களுக்கான கோரிக்கைகள் பெருமளவில் உள்ளன.

## எஸ்டேட் நிலவரித் திட்டம்.

நிலவரித் திட்டத் துறை ஜமீன்தார்கள் மற்றும் இனாம்தார்கள் போன்ற இடைத்தரகர்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை அரசின் நேரடி ஆளுகைக்கு கொண்டு வருவதற்காகவும், மற்றும் ரயத்துவாரி முறையை மேற்படி பகுதிகளில் அமல் செய்வதற்காகவும் கொண்டு வரப்பட்டது. இதற்கென பல எஸ்டேட் மற்றும் இனாம் உடைமை ஒழிப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டு அமல் செய்யப்பட்டுள்ள .

### செயல்பாடுகள்.

எஸ்டேட் மற்றும் இனாம் உடைமை ஒழிப்புச் சட்டங்களின் கீழ் உடைமைதாரர் அரசினால் எடுத்துக் கொள்ளப்படும் அறிவிப்பு செய்யப்பட்ட பின் தமிழ்நாடு நில அளவை சட்டத்தின்கீழ் நில அளவை செய்து நில அளவை ஆவணங்களை நிலவரித் திட்டத் துறைக்கு அளிக்கிறார்கள். நில அளவை ஆவணங்கள் வரப்பெற்றதும் நிலவரித் திட்டம் பல கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இனாம் ஒழிப்புச் சட்டங்களில் உள்ள விதிகளின்கீழ் நில உடைமையாளர்களின் நில உரிமைகள் சட்டப் பூர்வமாக நிர்ணயம் செய்யப்படுகின்றன. நிலவரித் திட்டம் அமல் செய்யப்பட்ட அன்றாட நிர்வாகப் பணிக்காக 'அ' பதிவேடு, சிட்டா முதலிய நிலவரித் திட்ட ஆவணங்கள் வருவாய்த் துறையில் பராமரிப்புப் பணிக்காக ஒப்படைக்கப்படுகின்றன. தற்சமயம் டெல்லி உச்ச நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதி மன்றம் தடைகள் நீக்கப் பெற்ற உடைமைகளில் நிலவரித் திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

மேற்படி ஒழிப்புச் சட்டங்களின்கீழ் செய்யப்பட்டு வந்த பணிகள் தவிர கீழ்க்காணும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன:—

(1) புதுக்கோட்டை மாவட்ட இணைந்த பகுதியில் மறு நிலவரித் திட்டம் அமல் செய்தல்.

(2) கன்னியாகுமரி மாவட்ட இணைந்த பகுதியில் தமிழ்நாடு சட்டம் 30/1964-ன்கீழ் நிலவரித் திட்டம் அமல் செய்தல்.

(3) வருவாய்ப் பின்தொடர்ப் பணியின் கீழ் ரயத்துவாரி பகுதியில் பட்டாதாரர்களின் பெயர்களை சரியான்படி பதிவு செய்து புதிய 'அ' பதிவேடுகள் வருவாய்த்துறை அன்றாட நிர்வாகத்திற்காக அளிக்கப்பட்டது.

(4) நத்தத்தில் குடியிருப்போருக்கும், மலைவாழ்ப்பகுதி மக்களுக்கும் பட்டா அளிக்கும் பொருட்டும் மனைவரி விதிக்கவும் நத்தம் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பணி முன்னேற்றம் :**

1988–89-ல் நிலவரித்திட்டம் மற்றும் வருவாய் பின்தொடர் பணி கீழ்க்காணும் பரப்பில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

| சட்டம் | கிராமங்களின் எண்ணிக்கை | பரப்பு ச. கி. மீ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சட்டம் 26/1963 | 7 | 7.22 |
| சட்டம் 30/1963 | 1 | 0.81 |
| சட்டம் 31/1973 | 3 | 0.67 |
| வருவாய் பின் தொடர் பணி | 40 | 301.67 |

(5) புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது :

நத்தம் நிலவரித்திட்டம் நத்தம் மற்றும் வேளாண்மைக் கல்லாத பிற பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவிடுதல், மலைக் கிராமங்கள் அளவை செய்தல் மற்றும் நகர அளவை மேற்கொள்ளவும் அரசால் ஆணையிடப்பட்டது. நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாத பிற பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை நிலவரித்திட்டம் மேற்கொள்வதற்காக நிலவரித்திட்ட அறிக்கை 9—11—88-ம் நாளிட்ட அரசின் அரசிதழில் விளம்பரப்படுத்தப்பட்டது. 13,120.90.5 ஹெக்டேர் பரப்பில் நிலவரித்திட்டப் பணி செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டத்தின்படி கணிசமான வருமானம் (வீட்டு மனை வரி) அரசுக்கு கிட்டும். இது ஒரு பொது நலத்திட்டம். இதனால் பயன் அடைவோர்கள் தங்கள் குடியிருப்புக்கு உரிமை கிடைப்பது மட்டுமல்லாமல் அபிவிருத்தி மற்றும் கடன் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாகும்.

(6) செலவின விவரம் :

1988–89 நிதி ஆண்டில் நிலவரித்திட்டத்துறையில் செலவு விவரம் :

| | ஒதுக்கீடு. | செலவினம், |
|---|---|---|
| | (1) | (2) |
| ஏ. சி. வருவாய்ப் பின் தொடர்ப்பணி | 12,56,000 | 13,95,000 |
| ஏ. பி. நிலவரித்திட்டம் மற்றும் மறு நிலவரித் திட்டப்பணி | 32,68,000 | 34,08,000 |
| ஏ. ஏ. நிறிப்படுத்துதலும் மற்றும் நிருவாகமும் | 17,26,000 | 15,30,000 |
| மொத்தம் | 62,50,000 | 66,33.000 |

## நகர்ப்புற நிலவரி மற்றும் நகர்ப்புற நில உச்ச வரம்பு

### நகர்ப்புற நிலவரி.

**முகவுரை :**

1963-ம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1—7—1963-ம் நாள் முதல் சென்னை மாநகரத்தில் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டம் 1966-ம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தினால் 1—7—1963-ம் தேதி முதலே மாற்றி நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அதன்படி சென்னை மாநகரத்தில் உள்ள அனைத்து நிலங்களும், பரப்பளவு எவ்வளவாயிருப்பினும், ஒரே மாதிரியாக சந்தை மதிப்பில் 0.4 சதவீதம் கணக்கிட்டு நகர்ப்புற நிலவரி விதிக்கப்பட்டது. பின்னர் இந்தச் சட்டம் 1971-ம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்தப் பட்ட) சட்டத்தால் (30/71) திருத்தப்பட்டது. இதன்படி இந்தச் சட்டம் மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் நகரங்களுக்கும் 1—7—1971-ம் நாள் முதல் விரிவாக்கப்பட்டது. நகர்ப்புற நிலவரி விதிப்பில் திரு இரண்டுக்கு கீழ் உள்ள நிலங்களுக்கு விலக்கு அளித்தலும், அடிமுறை விதம் வரி விதித்தல் முறையும்,

1—7—1971 முதல் அமுலாக்கப்பட்டது. நில உரிமையாளரால் சொந்தமாக பயன் படுத்தப்படும் நிலங்களுக்கு 25 சதவீதம் வரியில் சலுகையும் வழங்கப்பட்டது. இந்தச் சட்டம் 1972-ம் ஆண்டு (திருத்தப்பட்ட) தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தால் 1972-ம் ஆண்டு மீண்டும் திருத்தப்பட்டது. இதன்படி 1—7—1972 தேதி முதல் நில உரிமையாளரிடமுள்ள மொத்த நிலங்களின் பரப்பில் குறைந்த அங்காடி மதிப்புள்ள முதல் இரண்டு கிரவுண்டு பரப்பளவு நிலத்திற்கு, வரிவிலக்கும் அளிக்கப்பட்டது. நில உரிமையாளரால் சொந்தமாக குடியிருப்பாகப் பயன்படுத்தப்படும் நிலத்திற்கு நகர்ப்புற நிலவரியில் சலுகை 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது. நகர்ப்புற நிலவரி விதிப்பிலிருந்து சமய, அற, கல்வி சம்பந்தமான நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கும் மேற்படி நிறுவன சம்பந்தமான காரியங்களுக்குப் பயன் படுத்தப்பட்டால் விலக்களித்து வழிவகை செய்யப்பட்டது.

1975-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் (திருத்தப்பட்டது 49/75) 1—7—75-லிருந்து நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தினால் சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் (சென்னை மாநகரத்தின் எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள இடங்கள்) நகர்ப்புற நிலவரி விதிப்பு நீட்டிக்கப்பட்டது.

செயற்பாடுகள்—

நகர்ப்புற நிலவரித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் நிலவரிச் சீர்திருத்த ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. அவரது கட்டுப்பாட்டின்கீழ் சென்னை நகரத்திற்கு 4, சென்னை புறநகர் பகுதிக்கு 6, மற்றும் கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய நகரங்களுக்கு தலா ஒவ்வொருவருமாக மொத்தம் 15 நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்கள் நகர்ப்புற நிலவரி பணியினை செயலாக்க பணி புரிகின்றனர். நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்கள் நகர்ப்புற நிலவரி விதிக்க அதிகாரம் பெற்றவர்கள். மேலும், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் அந்தந்த தாலுக்காவைப் பொறுத்தவரை நகர்ப்புற நிலவரி அதிகாரிகளாக வரி வசூலிக்க நியமிக்கப்பட்டுள்ளனர்.

1975-ம் ஆண்டில் திருத்தப்பட்ட சட்டப்படி, வரிவிதிப்பு விகிதம் மாற்றப்பட்டது. 1—7—71 தேதிய அங்காடி மதிப்பு வரிவிதிக்க அடிப்படையாகக் கொள்ளப்பட்டு குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத பயனுக்குள்ள நிலத்திற்கு ஏற்ப வரி விதிக்க சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. நில உரிமையாளரின் சொந்தக் குடியிருப்பு நிலங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை மீளப் பெறப்பட்டது. இதனால் பொது மக்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் முந்தைய ஆண்டுகளை விட நகர்ப்புற நிலவரி 6 முதல் 16 முறை வரை உயர்ந்துள்ளதாக முறையீடுகள் பெறப்பட்டது. எனவே, அரசாணை 1947, வருவாய்த்துறை, நாள் 17—9—1976-ல் பல சலுகைகள் வழங்கியது. மேலும் முறையீடுகளைப் பெற்று விசாரிக்க குழு ஒன்றினையும் அரசு ஆணை 2056, வருவாய்த்துறை, நாள் 4—10—76-ன்படி நியமித்தது. அந்த சிறப்புக் குழுவின் பரிந்துரைப்படி அரசு ஆணை 2625, வருவாய்த் துறை, நாள் 27—12—1976-ல் அரசு பல சலுகைகளை அளித்தது.

மேற்படி அரசாணைப்படி கீழ்க்கண்ட சலுகைகளை அரசு வழங்கியது:—

(1) அரசுக்குத் தனிப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் கல்வி, அற, சமய சம்பந்தமான நிறுவனங்களில் காலியாக மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலம், அதன்மூலம் பெறும் வருவாய் அந்த நிறுவனத்திற்குத் தொடர்பான காரியங்களுக்குப் பயன்படுத்தப் பட்டால் நகர்ப்புற நிலவரியிலிருந்து முழு விலக்குப் பெறலாம்.

(2) சமுதாய மனமகிழ் மன்றங்கள் மற்றும் இதர மன்றம், நிறுவனங்களுக்கும், திரைப்படப்பிடிப்பு நிலையங்கள், சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலங்களுக்கு 50 சதவீதம் நிலவரி குறைக்கப்பட்டது.

(3) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியச் சட்டம் பிரிவு 3(பி)-ன்படி குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும் வரி விதிக்கப்படாத இனங்களாகக் கொள்ளப்பட்டது.

(4) அனைத்து திரைப்பட அரங்குகளுக்கும் 10 சதவீதம் நகர்ப்புற நிலவரியிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டது.

(5) நில உரிமையாளர் தனக்குச் சொந்தமான கட்டிடத்தை தன் சொந்தக் குடியிருப்புக்கு பயன்படுத்தினால் அதற்கு விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் குறைத்து வழங்கிய சலுகை மீண்டும் வழங்கப்பட்டது.

(6) சென்னை நகரில் 1—7—1971 முதல் தீர்மானிக்கப்பட்ட அங்காடி மதிப்பு 1963-ம் ஆண்டு அங்காடி மதிப்பைவிட இரண்டு மடங்குக்கு வரையறுக்கப்பட்டது.

(7) குடியிருப்புக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் மற்றும் குடியிருப்பிற்குப் பயன்படுத்தாத நிலங்கள் ஆகியவற்றிற்கு வரிவிதிக்க நிர்ணயித்த தனித்தனி படிகள் நீக்கப்பட்டன.

(8) அரசு ஆணை 2516 வருவாய்த்துறை, நாள் 4—11—1978-ன் படி அரசு பசலி 1385—லிருந்து சிறுதொழில் சான்றிதழ் பெற்ற நிறுவனங்கள் செலுத்தும் நகர்ப்புற நிலவரியில் 25 சதவிதமும், ஏனைய தொழில் நிறுவனங்களுக்கு 10 சதவிதமும் குறைத்துள்ளது.

மேலும் சட்டப்பிரிவு 27—ன் படி, அரசு எந்தவகையான நிலங்களுக்கும், எந்த தனிப் பட்ட நபரின் நிலங்களுக்கும் முந்தைய காலம் முதலோ அல்லது அப்போதைய காலத்தி லிருந்தோ அவர்களின் தவிர்க்க இயலாத இடர்பாடுகள் காரணமாக நகர்ப்புற நிலவரி கட்ட இயலாத நிலையில் இருப்பதாகத் தீர்மானித்தால் நகர்ப்புற நிலவரியைக்குறைக்கவோ, அல்லது முழுவதுமாக விலக்களிக்கவோ இயலும்.

மேலும் அரசு ஆணை 2526 நாள் 15—6—73-ன்படி நன்செய், புன்செய் நிலங்களாக பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கு 1—7—72 முதல் நகர்புற நிலவரி விலக்களிக்கப்பட்டது. அரசு ஆணை எண். 288 வருவாய் துறை 13—2—76-ல் கிராமப்புற (நத்தம்) நிலங்களாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கும் சட்டத்தை அமுல் படுத்துவதற்குமுன் 5 விளைச்சல் வருடங்கள் தொடர்ந்து நன்செய் அல்லது புன்செய் பயிர் செய்யப்பட்டதாக நில வருவாய் கணக்குப்படி பதியப்பட்ட நிலங்களுக்கும் 7—1—1975 தேதியிலிருந்து நிலவரி விலக்கு வழங்கப்பட்டது.

வரிவிதிப்பு பணி விவரம், வரிவிதிக்கப்பட்ட இனங்கள், வரிவிதிப்பு தொகை ஆகியன ஒவ்வொரு திருத்தப்பட்ட சட்ட வரியாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

| சட்டம். | வரிவிதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | வரித்தொகை. (ரூபாய் லட்சங்களில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966 ம் ஆண்டைய தமிழ்நாடு நகர்புற நிலவரி சட்டம் | 1,26,211 | 81.74 |
| 1971-ம் ஆண்டு திருத்திய சட்டம் | 93,590 | 236.73 |
| 1972 | 37,414 | 168.70 |
| 1975 ,, | 79,211 | 612.59 |

4. <u>பண முன்னேற்றம்:</u>

சென்னை உயர் நீதிமன்றம் தனது முறைமைப் பேரான மனு எண். 4439/78, 4397/78 ஆகியவற்றின் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டப்பிரிவு, 6 (பி) செல்லத்தக்க தல்ல என ஆணையிடப்பட்டது. இதனை எதிர்த்து அரசு உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்து வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, நகர்புற நிலவரி உதவி ஆணையர்களால் வரிவிதிப்பு ஆணைகள் பிறப்பிக்க இயலாமல் போனது.

சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டப் பிரிவு 6 (பி) செல்லத்தக்கதல்ல என தீர்ப்பு கூறியபோதும், நகர்புற நிலவரிச் சட்டத்தின் அட்டவணை விதி 5-ன்படி தொடர்ந்து செல்லுபடி ஆகும் என கருத்து தெரிவித்தது. ஒரு புல எண் அல்லது ஒரு புல உட்பிரிவு எண்ணில் உள்ள நிலத்தின் உடமையாக வரி விதிப்பும் வரிவசூலும் செய்ய இயலும் என்பதால் ஏற்கனவே, ஒன்றுக்கு மேற்பட்ட நிலங்களை ஒருங்கிணைத்து விதித்த நிலவரியை, மீண்டும் புல எண், உட்பிரிவு எண், வரியாக தற்காலிகமாக வரிவிதிக்கலாம் என அரசுக்கு அறிவிக்கப்பட்டது. இவ் வரிவிதிப்பு உச்சநீதி மன்ற தீர்ப்பின்படி மாற்றக்கூடியதாகும். ஏற்கனவே, விதிக்கப் பட்டு வசூலிக்கப்பட்ட நிலவரியில் தற்காலிக நகர்ப்புற நிலவரியை விட கூடுதலாக உள்ள தொகையை வரும் விளைச்சல் ஆண்டுகளுக்கான வரியாக சரிக்கட்டலாம் எனவும், சென்னை நகரில் 2 கிரவுண்டு பரப்பிற்கு கீழும், பிற இடங்களில் 3 கிரவுண்டு

பரப்பிற்கு கீழும் உள்ள நிலங்களுக்கு தற்காலிகமாக வரிவிதிப்பு பூஜ்யமாக இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டது. இதன்படி அரசு, தமது ஆணை எண் 1165, வருவாய்த்துறை, நாள் : 27—7—1987 இல் தற்காலிக வரிவிதிப்பு விதிக்க ஆணையிட்டது. 28—2—1989 தேதிவரை கீழ்க்குறிப்பிட்டபடி தற்காலிக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது:—

| சட்டம். | வரிவிதிக்கப் பட்ட இனங்கள். | வரிவிதிப்பு தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1971ஆம் ஆண்டு திருத்தி சட்டம் | 36,722 | 100.85 |
| 1972ஆம் ஆண்டு திருத்திய சட்டம் | 17,351 | 157.62 |
| 1975 ஆம் ஆண்டு திருத்திய சட்டம் | 31,874 | 2081.90 |
| | (1,398-ஆம் பசலி வரை) | |

5. நடப்பு ஆண்டு அமுல்படுத்தும் புதிய திட்டங்கள் (குறிக்கோள்கள், இலக்கு நிர்ணயம் மற்றும் இலக்கு அடைதல் விவரம்) :

அரசு ஆணை எண் 1465, வருவாய்த்துறை, நாள் : 25—6—1981-ன்படி 1966-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் திருநெல்வேலி நகர கூட்டுப்பகுதி மற்றும் திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரக் கூட்டுப் பகுதியில் பிற இடங்களுக்கும், 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் அமுலில் உள்ள இடங்களுக்கும் இணையாக 1—7—1981 ஆம் தேதி முதல் விஸ்தரிக்கப்பட்டது. மேற்படி விஸ்தரிக்கப்பட்ட இடங்களில் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றுள்ளது. வரி விதிப்பு பணி நடைபெற்று வருகிறது.

நிதி முதலீடு, செலவினம் மற்றும் துறையின் சிக்கனமான நிலை :

நகர்ப்புற நிலவரியில் சென்னை உயர்நீதிமன்றம் பிரிவு 6 (பி) தள்ளுபடி செய்யு முன் திரண்ட வரிவிதிப்பின்படி 28—2—1989 தேதியில் உள்ள 6,057.86 இலட்சம் கேட்புத் தொகையில் அறிக்கை அனுப்பும் ஆண்டில் ரூ. 3,915.04 இலட்சம் வசூலாகி உள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் சட்டப்பிரிவு 6 (பி) செல்லத்தக்கதல்ல என தீர்ப்பு கூறிய பின் 28—2—1989 தேதி வரை பிறப்பிக்கப்பட்ட தற்காலிக வரிவிதிப்புப்படி ரூ. 2,430.37 இலட்சம் மொத்தக் கேட்புத் தொகையாக உள்ளது. எனவே, கூடுதலான எண்ணிக்கையிலான இனங்களில் தற்காலிக வரிவிதிப்பாணையை விட கூடுதல் வரி வசூலாகி உள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டத்தினை அமுலாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 91.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(ii) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978.

முகவுரை :

நகர்ப்புற கட்டுப் பகுதிகளில் உள்ள நிலங்கள் பாரபட்சமின்றி சமூகத்தில் அனைவருக்கும் பயன்படுத்தும் வண்ணம், ஒரு சில நபர்களிடம் நிலங்கள் குவிந்து அதனால் பெரும் இலாபம் ஈட்டும் வண்ணம் ஊக வாணிகம் நடைபெறாமல் தடுத்தல் மற்றும் அந்த நிலங்களில் கட்டிடங்கள் கட்டுவதை ஒழுங்கு படுத்துதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் நகர்ப்புற கட்டுப்பகுதியில் காலி நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கவும் அவ்வுச்சவரம்புக்கு மிகையான காலி நிலங்களை கையகப்படுத்தவும் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 (1976 ஆம் ஆண்டில் 34-வது சட்டம்) இயற்றப்பட்டது.

மேற்படி சட்டத்தை அமுல்படுத்தும்பொழுது பெருமளவில் முறையீடுகள் வந்தன மேலும் பொது மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியதை பத்திரிகைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தன. பொது மக்களின் தேவையினை கருத்தில் கொண்டு, அரசு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு, மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1976 (1976 ஆம் ஆண்டின் 34-வது சட்டம்) ரத்து செய்து தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 (1978ஆம் ஆண்டின் 24-வது சட்டம்)ஐ இயற்றியது. இந்த சட்டம் (பிரிவு 14, 15, 20 (3), 27 மற்றும் 48 தவிர) 3—8—1976 முதல் அமுலுக்கு வந்தது. பிரிவு 14 முதலியவை 17—5—1978 முதல் அமுலுக்கு வந்தன. பிரிவு 20 (3), 1979 ஆம் ஆண்டில் 14-வது சட்டத்தினால் திருத்தப்பட்டு 1—2—1979 முதல் அமுலுக்கு வந்தது. இந்த சட்டம் சென்னை, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகர்ப்புற கட்டுப் பகுதிகளில் அமுலில் உள்ளது.

இந்த சட்டம் ஒவ்வொரு நகர்ப்புறக் கட்டுப் பகுதியில் உள்ள ஒரு நபர், ஒரு குடும்பம் மற்றும் ஒரு தொழில் நிறுவனம் ஆகியவற்றுக்கு கீழ்க் கண்டவாறு உச்ச வரம்பு நிர்ணயிக்கிறது.

| நகர்ப்புற கட்டுப் பகுதி. | ஒரு நபர். | குடும்பம். | தொழில் நிறுவனம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ச.மீ. | ச.மீ. | ச.மீ. |
| சென்னை | 500 | 2,000 | 2,000 |
| மதுரை, கோவை, சேலம், திருச்சி | 1,500 | 3,000 | 3,000 |
| திருநெல்வேலி | 2,000 | 4,000 | 4,000 |

3—8—1976 இல் கட்டப்பட்டிருந்த கட்டிடங்களுக்கு ஒரே அடிப்படையில் 500 ச.மீ. சுற்றுப்பரப்பு அளவாக அனுமதிக்கப்பட்டது. மேலும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு கூடுதல் சுற்றுப்பரப்பாக 500 ச.மீ. அனுமதிக்கப்பட்டது. 3—8—1976இல் மனைப் பிரிவு அங்கீகாரம் பெற்று நிலம் வைத்துள்ள நபர்கள் உச்சவரம்பிற்கு மிகாமல் (அவர்கள் வாங்கும் நிலத்துடன் சேர்த்து) நிலம் வைத்திருப்பவர்களுக்கு அல்லது நிலம் இல்லாத நபர்களுக்கு விற்பனை செய்வதற்காக தக்க வைத்துக் கொள்ளலாம்.

விவசாய நிலங்கள் சட்டத்தின் வரம்பிலிருந்து முழுவதுமாக விலக்கப்பட்டுள்ளன. ஆனால் விவசாயமல்லாத நோக்கங்களுக்காக உபயோக மாற்றம் செய்யப்பட்டால் மேற்படி சட்டம் அமுல் படுத்தப்படும். பிரிவு 22-ன் கீழ், சமூகத்தில் நலிவுற்றவர் களுக்கு வீடு கட்டித் தருவதற்காக நிலத்தினை தக்க வைத்துக்கொள்ள நிலச் சொந்தக்காரர்கள் அனுமதிக்கப்படுவர். சட்டப்பிரிவு 24 இன் கீழ் சமுதாயத்தில் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை அரசு தகுந் தாற்போல் ஒதுக்கீடு செய்யலாம்.

## 3. செயற்பாடுகள் :

மேற்படி 6 (ஆறு) நகர்ப்புற கட்டுப் பகுதிகளில் மொத்தம் 15 தகுதிவாய்ந்த அதிகாரிகள் (சென்னை பத்து, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல் வேலி தலா ஒன்று) மேற்படி சட்டத்தை அமுல்படுத்துவதற்காக உள்ளனர். சட்டத்தை அமுல்படுத்தும் அவர்களின் பணி நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி இயக்குநரால் மேற்பார்வையிடப்படுகிறது. இவர்கள் சட்டத்தின் கீழான மேல்முறையீட்டதிகாரியாகிய சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்தம் கீழ் பணிபுரிகின்றனர். நிலச் சீர்திருத்த ஆணையர் மேற்படி சட்டத்தின் பிரிவு 12-ன்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பிறப்பிக்கும் உத்தரவின்மீது செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் குறித்த அதிகாரி ஆவார்.

சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் உச்சவரம்புக்கு மிகையாக நிலம் வைத்திருப்ப வர்கள் அப்பகுதி சம்பந்தப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். மேற்படி பிரிவு 7 (1) இன் கீழ் அறிக்கை தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 14—9—1978இல் முடிந்துவிட்டது. மேற்படி அறிக்கைகள் தகுதி வாய்ந்த அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு, சட்டத்தின் கீழ் அடங்கியுள்ள வழிமுறை களை அனுசரித்த பிறகு மிகை வெற்று நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. பொது மக்களுக்கு பயன்படும் வண்ணம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை முந்துரிமை அடிப்படையில் அரசு ஒதுக்கீடு செய்கிறது.

**4. சட்டத்தை அமுல் செய்வதில முன்னேற்றம் :**

1976 ஆம் ஆண்டின் சட்டப்பிரிவு 6 (1) மற்றும் 1978 ஆம் ஆண்டின் சட்டப்பிரிவு 7 (1) ஆகியவற்றின் கீழ் இதுவரை 21,633 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 15,317 அறிக்கைகள் உச்சவரம்புக்குட்பட்டதாகக் கருதி தீர்வு செய்யப் பட்டன. 1,120 நேர்வுகளில் தனி நபர் மற்றும் தொழிற்சாலைகளுக்கு உச்சவரம்பி லிருந்து பிரிவு 21-ன் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 3,285 ஹெக்டேர் பரப்பு உள்ளடங்கிய 4,995 நேர்வுகள் தமிழ்நாடு நகர்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப் படுத்துதல்) சட்டம் 1978-ஆல் ஈர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் 2,621 ஹெக்டேர் பரப்பளவு உள்ளடங்கிய 4,531 நேர்வுகளில் பிரிவு 9 (1) இன்கீழ் அறிக்கையும், பிரிவு 9 (4) இன்கீழ் நோட்டீஸும் கொடுக்கப்பட்டுள்ளன. 699 ஹெக்டேர் நிலம் பரப்பு கொண்ட 753 நேர்வுகளில் பிரிவு 11 (1) இன் கீழ் அறிவிக்கைகள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. 437 நேர்வுகளில் அடங்கிய 531 ஹெக்டேர் மிகை வெற்று நிலம் பிரிவு 11 (3) இன் கீழ் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. அவற்றில் 437 நேர்வுகளில் 396 ஹெக்டேர் நிலம் அரசின்பால் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பிரிவு 12இன் கீழ் ரூ. 4,00,000 மிகை வெற்று நிலங்களை கையகப்படுத்தியதற்கு தவணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 237 நேர்வுகளில் 146 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாகச் செலவு :

1988-89 ஆம் ஆண்டின் பணியாளர்களுக்காக ரூ. 52.52 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

# அத்தியாயம் 27.

## ஊரக வளர்ச்சித் துறை.

## பூமிதான மற்றும் கிராம தானம்.

புனிதர் ஆச்சார்ய வினோபா பாவே அவர்கள் பெற்ற பூமிதான நிலங்களை முறைப்படுத்துவதற்காக அதாவது நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கும், பொதுநலத்திற்காகவும் விநியோகித்து நிலைநிறுத்தல் ஆகியவற்றின் பொருட்டு பூமிதான சட்டம் 958-ன்படி, தமிழ்நாடு பூமிதான வாரியம் 1959-ல் துவக்கப்பட்டது.

### பூமிதானம் :

பூமிதான இயக்கம் துவக்கிய காலத்தில் தமிழகத்தில் மொத்தம் 24,394 ஏக்கர் நிலம் பூமிதானமாகப் பெறப்பட்டது. இதில் 22,113 ஏக்கர் நிலம் 19,272 ஏழை, எளிய வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு விவசாயம் செய்துகொள்ளவும், வீடுகள் கட்டிக் குடியிருக்கவும் தானமாக விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. 1988—89 ஆம் ஆண்டில் 4.75 ஏக்கர் நிலம் 97 நபர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது. தவிரவும் ஏற்கனவே வழங்கப்பட்ட நிலங்களில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளையும், தாவாக்களையும் தீர்த்து நிலை நிறுத்தல், புது விநியோகம் செய்தல் ஆகிய பணிகளையும் கவனித்துள்ளது.

### கிராமதானம் :

தமிழ்நாட்டில் இதுகாறும் 2,080 கிராமங்களில் 1,12,878 ஏக்கர் நிலங்கள் கிராம தானத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் 750 கிராமங்கள் '' கிராமதான கிராமங்கள் '' என்று அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கிராமங்களையும் பிரகடனப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பல நிலைகள் உள்ளன.

### பூமிதான அபிவிருத்திப் பணிகள் :

பூமிதான வாரியமானது சில மேசிவ் ஸ்தாபனங்களின் உதவியுடன், அதாவது, சர்வ சேவாப் பண்ணைக்குழுமம், தமிழ்நாடு சர்வோதய மண்டல், மதுரை மாவட்ட நிர்மாண சங்கம், தமிழ்நாடு பூமிதான / கிராமதான அபிவிருத்தி டிரஸ்ட் போன்ற சேவை ஸ்தாபனங்களின் உதவியுடன் பூமிதான நில அபிவிருத்தி பணிகளை கவனித்து வருகிறது.

இந்த சேவை ஸ்தாபனங்களின் மூலம் செய்யும் அபிவிருத்திப் பணிகளுக்கு தாட்கோ, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஒட்டுமொத்த வேளாண்மை பெருக்குத் திட்டம் ஆகியவைகளின் கீழ் மான்யம் பெற்றும், அரசு வங்கிகள் மூலம் கடன் பெற்றும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### (அ) மாணிக்கம்பட்டியில் வளர்ச்சிப் பணி :

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், திருவாதவூர் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது டி. மாணிக்கம்பட்டி என்னும் கிராமம். இக் கிராமத்தில் 41 ஆதிதிராவிட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வருகிறார்கள். இக்கிராமத்தில் 71 ஏக்கர் புஞ்சை நிலம் செப்பனிடப்பட்டு விவசாய நிலமாக அபிவிருத்தி செய்யப்பட்டு பயிரிடப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் 1988—89 ஆம் ஆண்டில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகளின் விபரம்:—

| | |
|---|---|
| (1) தாட்கோ மானியத்துடன் வெட்டப்பட்ட பாசனக் கிணறுகள் .. .. .. .. .. | 6 |
| (2) ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் வெட்டப்பட்டுள்ள கிணறுகள் .. .. .. .. .. .. .. | 4 |
| (3) தாட்கோ மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகள் .. .. | 31 |
| (4) அரசு மானியம் மற்றும் வங்கிக் கடன் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள சாண-எரிவாயுக் கலன்கள் .. .. .. | 10 |
| (5) நூற்பு மையம் ஒன்று கட்டப்பட்டு 30 பெண்கள் நெசவு நெய்வதற்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது .. | |
| (6) 20 வீடுகளில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் மரம் வளர்ப்புத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. | |
| (7) 27 நபர்களுக்கு 27 ஜோடி உழவு மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. | |
| (8) குழந்தைகள் சத்துணவு மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. | |

(ஆ) சாந்திபுரம் வளர்ச்சிப் பணி:

மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டு ஒன்றியத்திலுள்ள சாந்திபுரம் என்னும் கிராமத்தில் 20 ஆதி திராவிட மெம்பர்கள் கொண்ட ஒரு பண்ணை சர்வ சேவாப் பண்ணை குழுமத்தால் நடைபெற்று வருகிறது. இத்திட்ட வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யும் பணிகளுக்காக ரூ. 88,750 அரசு மானியமாக அனுமதிக்கப்பட்டதில் ரூ. 66,718 மட்டும் மேனேஜிங் டைரக்டர், தாட்கோ, விழுப்புரம் மூலமாக வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

(இ) சாணார்பட்டி வளர்ச்சிப் பணி :

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம், சாணார்பட்டி ஒன்றியம் குமாரபாளையத்தில், மதுரை மாவட்ட நிர்மான சங்கத்தால் அபிவிருத்திப்பணி நடைபெற்று வருகிறது. ஒட்டுமொத்த வேளாண்மை பெருக்கத் திட்டத்தின்கீழ் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் ரூ. 60,000 மான்யமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கிராமத்தில் வெட்டப்பட்டு வரும் ஒரு புதிய சமுதாயக் கிணற்றின் வேலைக்காக ரூ. 34,000 மான்யமாக அரசால் அனுமதிக்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது.

(ஈ) ஜாரி உசிலம்பட்டி :

மதுரை மாவட்டம், தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜாரி உசிலம்பட்டி கிராமத்தில் 71 ஆதிதிராவிடர் குடும்பங்கள் கொண்ட ஒரு பண்ணை சர்வ சேவாப்பண்ணை குழுமத்தால் நடைபெற்று வருகிறது. மேற்படி கிராமத்தில் 40 ஏக்கர் நிலச்சீர்திருத்தம் செய்து, 7 பழைய கிணறுகளை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி வெட்டுதல், பாசன வசதிகளுக்காக மின்சார மோட்டார் பம்புசெட்கள் வைத்தல், பைப் லைன் பதித்தல், உழவுமாடுகள் மற்றும் வண்டி மாடுகள் வாங்குதல், பண்ணைக் கருவிகள் வாங்குதல் போன்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக 2,49,700 மான்யம் அரசிடமிருந்து தாட்கோ மூலம் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

(உ) பூமிதான/கிராமதான சர்வோதயக் கூட்டுறவு சங்கங்கள் :

தமிழ்நாட்டில் மொத்தம் 32 கிராமதான சர்வோதய கூட்டுறவுச் சங்கங்கள், 3,515 உறுப்பினர்களைக் கொண்டும், ரூ. 56,148 பங்கு மூலதனத்துடனும் இயங்கி வருகின்றன. தவிர 13 பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 738 உறுப்பினர்களுடனும் ரூ. 2,856 பங்குத் தொகையுடனும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் பெரிதும் நிதிப் பற்றாக்குறையாலும், ஆரம்ப காலத்தில் அரசிடமும், வங்கிகளிலும் பெற்ற சிறு கடன் தொகைகளையும் கட்ட முடியாத நிலையிலும் இருந்து வருகின்றன.

ஜீவன்தாரா திட்டம் :

கிராமதான/பூதான கிராமங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ஜீவன்தாரா கிணறுகள் 1,000 தோண்டுவதற்கு அரசிடமிருந்து பூதான வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் சர்வோதய மண்டல், மாவட்ட நிர்மான சங்கம், பூமிதான/கிராமதான அபிவிருத்தி டிரஸ்ட் போன்ற தொண்டு நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்து, கீழ்க்கண்ட மாவட்டங்களில் இப்பணிகள் முடிவு பெறும் தருவாயில் நடைபெற்று வருகின்றன :—

| | |
|---|---|
| (1) மதுரை மாவட்டம் | 100 |
| (2) திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் | 100 |
| (3) பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம் | 50 |
| (4) இராமநாதபுரம் மாவட்டம் | 50 |
| (5) காமராஜர் மாவட்டம் | 50 |
| (6) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் | 100 |
| (7) சிதம்பரனார் மாவட்டம் | 100 |
| (8) திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 280 |
| (9) தஞ்சை மாவட்டம் | 50 |
| (10) புதுக்கோட்டை மாவட்டம் | 120 |
| மொத்த கிணறுகள் | 1,000 |

### பஞ்சாயத்து காடுகள்.

**ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் / ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் 1988-89.**

சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், பின்வரும் நோக்கங்களை கருத்தில் கொண்டு, ஊரக மக்களின் தீவிர ஈடுபாட்டுடன் மக்கள் இயக்கமாக மொத்த நிதி ஒதுக்கீட்டில் 25 சதவீதத்தைக் கொண்டு 1985-86 ஆம் ஆண்டு முதல், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும், ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழும் தமிழ்நாட்டில் செயலாக்கப்பட்டு வருகின்றது.

(1) ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்றோருக்கு வேலை வாய்ப்பு அளித்தல்;

(2) ஊரக ஏழை மக்களுக்குத் தேவைப்படும் விறகு, கால்நடைத் தீவனம் ஆகியவை கிடைக்குமாறு செய்தல் ;

(3) உயிரின வாழ்க்கைச் சூழலைச் சீராகப் பராமரித்தல்;

(4) சுற்றுச் சூழலை மேம்படுத்தல்.

வனத்துறை, தோட்டக்கலை — வேளாண்மைத் துறைகளிலிருந்து தொழில் நுட்ப உதவிகளைப் பெற்று இத்திட்டம் வளர்ச்சி வட்டாரங்கள் வாயிலாகச் செயலாக்கப் படுகிறது. வளர்ச்சி வட்டாரத்தில் நடைபெறும் சமூகக்காடு வளர்ப்புப் பணிகளை கவனிக்க ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் விரிவாக்க அதிகாரி (சமூகக் காடுவளர்ப்பு) நியமிக்கப்பட்டுள்ளார்.

2. ஆண்டு ஒன்றுக்கு வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு 50 எக்டேரில் மலைத் தோட்டப் பயிர்களை வளர்த்தல் என்பதைக் கணக்கில் கொண்டு (தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 30 எக்டேர்; ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின்கீழ் 20எக்டேர்) இத்திட்டத்திற்குத் தேவைப்படுகின்ற நாற்றுகள் உள்ளூரில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள சிறு உழவர்கள், சொற்ப நிலம் வைத்துள்ள உழவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவைப்படும் பயிற்சிகளையும் இடுபொருட்களையும் அளித்து உருவான ''மக்கள் வளர்க்கும் நாற்றுப்பண்ணைகள்'' (பரவலாக்கப்பட்ட நாற்றுப் பண்ணை) மூலமாக வளர்க்கப்படுகின்றன.

3. பின்வரும் வகைநிலங்களில் மலைத்தோட்டப்பயிர்கள் வளர்க்கப்படுகின்றன:—

(1) சமுதாயப் புறம்போக்கு நிலங்கள் ;

(2) ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினரின் பட்டா நிலங்கள்; கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களின் நிலங்கள்; உச்சவரம்பின்கீழ் வருகின்ற உபரி நிலங்களை ஒதுக்கீடாகப் பெற்றவர்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழுள்ள தனிப் பட்டவர்கள் நிலங்கள் ;

(3) ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினர் வசிக்கின்ற வீடுகளிலும் வீடுகளைச் சுற்றிலுமுள்ள காலி நிலங்கள் (பண்ணைத் தோட்டங்கள்).

4. மரப்பட்டா வழங்கும் திட்டம் :

சமுதாயப் புறம்போக்கு நிலங்களில் நடப்படுகின்ற மரங்கள், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் வாயிலாக, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற வேளாண் நிலங்கள் இல்லாத மகளிருக்கு ''மர அனுமதிகள்'' வழங்குவதன் மூலமாக மர அனுமதி மரப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும். வளர்ச்சி வட்டாரத் தோட்டங்களாக இருந்தால், ஒவ்வொரு குடும்பத்திற்கும், 1 ஏக்கர் பரப்பு நிலத்திற்கும், மலைச்சரிவு அடுக்குத் தோட்டமாக இருந்தால், 1 கி.மீ. தொலைவுள்ள நிலத்திற்கும் மர அனுமதி மரப்பட்டா வழங்கப்படும். பயனீட்டாளர்களுக்கு, மலைத் தோட்டப் பயிர்களை நடவு செய்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புக் கட்டணமும் அனுமதிக்கப்படும். பின்னர், இப்பயனீட்டாளர்கள் மரங்களை அவர்களாகவே பராமரித்து அவற்றிலிருந்து கிடைக்கின்ற முழுப் பயனையும் அவர்களே அனுபவிப்பர்; அவர் இதன்மூலம் அவர்களுடைய குடும்பத்தினர் அதிக வருமானம் ஈட்டுவர். ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் முதலானோரின் பட்டா நிலங்களிலும், நிறுவன நிலங்களிலும் நடப்பட்ட மரங்களை அந்தந்த நில உரிமையாளர்கள் பராமரித்து வருவர். மரம் நடப்பட்ட நாளிலிருந்து 8 ஆண்டுகளுக்கு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான நிதியிலிருந்து பராமரிப்புச் செலவுகள் வழங்கப்படும். இது குறித்த முன்னேற்ற அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

5. இத்திட்டம் செயலாக்கப்படுவது குறித்த மதிப்பீடு, கண்காணிப்பு ஆய்வு ஆகியவற்றின் அடிப்படையில் பட்டா வாங்கியவர்களுக்கு இத்திட்டம் பற்றி அறிவுறுத்தவும் மரப்பட்டா திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகின்ற பயன்கள் பற்றியும், மலைத் தோட்டப் பயிர்களைச் சரிவர பராமரிப்பது பற்றியும் அறியச் செய்யும் பொருட்டு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

6. ஸ்விடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் நிலை II திட்டத்தின்படி, கீழே குறிப்பிட்டுள்ளவாறு 1988–89ல் இத்திட்டத்தை நடைமுறையில் செயலாக்குகின்ற அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சித்துறைக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

<u>அலுவலர்கள் :</u>

(1) உதவித் திட்ட அதிகாரிகள் (ப.நி.).
(2) விரிவாக்க அதிகாரி (சமூகக் காடு வளர்ப்பு).
(3) ஊரக நல அதிகாரிகள்.

<u>அலுவலர் அல்லாதோர் :</u>

(1) நாற்றுப்பண்ணை பயனீட்டாளர்கள்.
(2) பெண் காவாலாளிகள்.
(3) சமூகக் காடு வளர்ப்பு மேற்பார்வையாளர்கள்.
(4) பட்டா பயனீட்டாளர்கள்.
(5) பண்ணைப் பயனீட்டாளர்கள்.

சமூகக் காடு வளர்ப்பு திட்டத்தைத் திறம்பட்டமுறையில் செயல்படுத்த மேற்சொன்னவர்களுக்குப் பயிற்சியளிக்க, 1988–89 ஆம் ஆண்டில் 14.96 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ஏற்படுத்தப்பட்ட அமைப்பு மற்றும் 31–3–1989 ஆம் ஆண்டு வரையில் ஏற்பட்ட (1988–89 ஆம் ஆண்டில்) முன்னேற்றம் ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

<u>சுருக்கம்.</u>

1–3–1989 ஆம் நாள் வரை சமூகக்காடு வளர்ப்புத் திட்டப் பணிகளில் ஏற்பட்ட முன்னேற்றம்.

| நிதியொதுக்கம். | தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம். | ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **I. நிதிச்சாதனை :** | | | |
| திட்ட இலக்கு | 1,209.500 | 545.500 | 1,755.000 |
| சாதனை | 1,176.547 | 599.295 | 1,795.842 |
| **II. திட்டச் சாதனை—வளர்க்கப்பட்ட மரக்கன்றுகள் :** | | | |
| திட்ட இலக்கு .. .. | 395.081 | 168.933 | |
| சாதனை .. .. | 349.250 | 189.908 | |
| **நடப்பட்ட மரக்கன்றுகள் :** | | | |
| திட்ட இலக்கு | 392.493 | 173.383 | |
| சாதனை .. | 281.288 | 162.366 | |
| **மரக்கன்றுகள் நடப்பட்ட பரப்பு :** | | | |
| திட்ட இலக்கு | 16,823 | 8,702 | |
| சாதனை | 12,917 | 7,825 | |
| **இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பண்ணைகள் :** | | | |
| திட்ட இலக்கு | 50,337 | 17,138 | |
| சாதனை | 68,499 | 26,240 | |
| **வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை :** | | | |
| திட்ட இலக்கு | 23,000 | 21,000 | .. |
| சாதனை | 15,894 | 14,144 | .. |

ஊராட்சி வளர்ச்சி.

கிராம நிலையில் ஊராட்சிகளாகவும், வட்டார நிலையில் ஊராட்சி ஒன்றியங்களாகவும் அமைத்து 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டம் இயற்றப்பட்டது. ஊராட்சி ஒன்றியமானது ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளின் இணையமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மற்றும் பேரூராட்சி தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் அங்கத்தினர்களாக இருப்பார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பொது மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

தமிழ்நாடு ஊராட்சி அமைப்பு கிராம அளவில் ஊராட்சி, வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியம், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற மூன்றடுக்கு முறையினை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டரீதியான அமைப்பாக இருப்பினும், செயற்கடமைகள் எதுவும் அவற்றிற்கு ஒப்படைக்கப்படவில்லை. அம்மன்றங்கள், கிராமம் மற்றும் வட்டார அளவில் ஊரக மக்கள் மேம்பாட்டிற்கான உற்பத்தி பெருக்கிடும் வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அரசுக்கு ஆலோசனை கூறும் ஒரு அமைப்பாக செயல்படுகின்றன. மேலும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்கின்றன. கிராமம் மற்றும் வட்டார அளவிலான இரண்டு அடுக்குகளாலேயே செயலாக்க கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன.

(1) நடைமுறையிலுள்ள நிர்வாகம்:

ஊரக வளர்ச்சித் திட்ட பொறுப்பிலுள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரே மாநில அளவில் சமுதாய முன்னேற்றம் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் செயல் திட்டங்களை இயக்கவும், அவற்றைக் கண்காணிக்கவும் பொறுப்புள்ளவராகிறார். அவர் மாநில அளவில் ஊரக வளர்ச்சி துறையின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடுகிறார். மாநிலம், மாவட்டம், கோட்டம், வட்டாரம் மற்றும் கிராம நிலையிலான நிர்வாக அமைப்பு முறைகள் கீழ்க்கண்டவாறு உள்ளன:

| | |
|---|---|
| (அ) மாநில அளவில் .. | ஊரக வளர்ச்சி ஆணையர். |
| (ஆ) மாவட்ட அளவில் | மாவட்ட ஆட்சியாளர்கள். |
| (இ) கோட்ட அளவில் | கோட்ட வளர்ச்சி அலுவலர்கள். |
| (ஈ) வட்டார அளவில் .. | வட்டார வளர்ச்சி அலுவலர்கள். |
| (உ) கிராம அளவில் | ஊராட்சி மன்றத் தலைவர். |

ஊரக வளர்ச்சி ஆணையர் மாநில அளவில் ஊராட்சி ஒன்றியங்களை ஆய்விடுவதற்கு சட்டப்பூர்வமான அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட அளவில் ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றனர். அதற்கிணங்க அவர்கள் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கின்றனர். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் அலுவல் வழித்தலைவர்களாகவும் உள்ளனர். தமிழ்நாட்டில் தற்சமயம் 25 மாவட்ட வளர்ச்சி மன்றங்களும், 58 வளர்ச்சி கோட்டங்களும் உள்ளன. 385 வளர்ச்சி வட்டாரங்களும் உள்ளன. அவற்றுள் கல்ராயன் மலை வட்டாரம் நீங்கலாக 384 ஊராட்சி ஒன்றியங்களால் 12,616 ஊராட்சிகளை உள்ளடக்கி இயங்கி வருகின்றன.

(2) வரித்தண்டல்.—தமிழ்நாட்டில் மொத்தம் 12,616 ஊராட்சிகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958 பிரிவு 119 (1)-ன்படி ஒவ்வொரு ஊராட்சியிலும் வீட்டுவரி, தொழில்வரி மற்றும் வாகன வரி ஆகியவரிகள் வசூலிக்கப்படுகின்றன. 1988-89 ஆம் ஆண்டிற்குரிய வரித்தண்டல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| | (ரூபாய் இலட்சங்கள்). |
|---|---|
| (அ) வீட்டு வரி | 324.75 |
| (ஆ) தொழில் வரி | 40.66 |
| (இ) வாகன வரி ... | 17.75 |

(3) நிதி நிலைமை :—பயன் தரும் தொழில் முயற்சிகள் மூலம் வருவாய் 1988-89 ஆம் ஆண்டில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பயன் தரும் தொழில் முயற்சிகள் மூலம் கிடைத்த மொத்த நிகர வருவாய் ரூ. 202.11 இலட்சங்களாகும்.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் :

வளர்ச்சித்துறையின்மூலம் செயற்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் 1988-89-ம் ஆண்டில் எய்திய சாதனைகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகின்றன:—

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1982-83 முதல் 1984-85 வரையுள்ள ஆண்டுகளில்) நிதியுதவி அளிக்கப்பட்டு பல்வேறு காரணங்களால் வறுமைக் கோட்டினைக் கடக்க இயலாத பழைய பயனாளிக் குடும்பங்களுக்கு மத்திய அரசு வழங்கியுள்ள வழிமுறைகளுக்கேற்ப நிதியுதவி அளிக்கப்பட்டது. மேலும் புதிய பயனாளிக் குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பயனாளிக் குடும்பத்திற்கும் ரூ. 3,000 வரை மானியம் வழங்கப்பட்டது.

1988-89 ஆம் ஆண்டில் 82,248 பழைய பயனாளிக் குடும்பங்களுக்கு உதவியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 87,320 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டன. புதிய பயனாளிக் குடும்பங்கள் இலக்கு 1,42,680 ஆகும். இலக்கினை கடந்து 1,69,883 குடும்பங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. இங்ஙனம் பயன்பெற்ற மொத்த பயனாளிக்குடும்பங்கள் 2,57,203. இதில் 1,27,191 குடும்பங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவை. 1,03,278 குடும்பங்கள் பல்வேறு தொழிற் பணிகள் (ஐ. எஸ்பி.) பிரிவின்கீழ் நிதியுதவி பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக 4693 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 5155 இலட்சங்கள் இத்திட்ட செயலாக்கத்தில் செலவு செய்யப்பட்டது. இத்தொகையில் 4396.41 இலட்சங்கள் பயனாளிக் குடும்பங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டது. மேற்கண்ட மொத்த பயனாளிக் குடும்பங்களுக்கும் 38,04.67 லட்சங்கள் வங்கிக் கடனாக வழங்கப்பட்டது.

2. கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம் (டிரைசம்):

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அம்சமாகும். பயிற்சி காலத்தில் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. இத்தொகை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

1988-89 ஆம் ஆண்டில் 12,957 கிராமப்புற இளைஞர்கள் இத்திட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்டனர். அவர்களில் 275 நபர்கள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரும் ஆவர். பயிற்சி பெற்றவர்களில் 4,817 நபர்கள் தாங்களாகவே சுய வேலை வாய்ப்புகளை அமைத்துக் கொண்டனர். 4,545 நபர்கள் கூலிபெறும் வேலையில் அமர்ந்துள்ளனர்.

3. கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்:—

இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாகும். கிராமப்புற பெண்களுக்கு வருவாய் அளிக்கும் தொழில்களை உருவாக்கி, அவர்களின் குடும்ப பொருளாதார நிலையினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

1988-89ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் நான்கு மாவட்டங்களிலும் 22,765 பெண்கள் பயனடைந்தனர். அவர்களுக்கு 291.73 இலட்சங்கள் மானியமாக வழங்கப்பட்டது. வங்கிக் கடனாக வழங்கப்பட்ட தொகை ரூ. 583.46 இலட்சங்களாகும்.

4. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் :

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் 1980-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினை மத்திய/மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

சமுதாயக் காடு வளர்ப்பு, தொகுப்பு வீடுகள் அமைத்தல், கிராமப்புற சுகாதார கழிப்பறைகள் கட்டுதல் போன்றவை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் அங்கங்களாகும். 1988-89 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 6755 இலட்சங்களாகும். கடந்த ஆண்டு செலவிடப்படாமல் மீதியிருந்த தொகையையும் சேர்த்து நடப்பு ஆண்டில் ரூ. 8814.68 இலட்சங்கள் இத்திட்ட செயலாக்கத்திற்காக செலவிடப்பட்டது. ரூ. 314.23 இலட்சங்கள் மனித உழைப்பு நாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இலக்கினையும் கடந்து 442.41 இலட்சங்கள் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன. 57,564 பல்வேறு வகையான பணிகளை எடுத்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டு, 38,259 பணிகள் இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டன. இத்திட்டப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் ஒரு பகுதி உணவு தானியமாக வழங்கப்படுகிறது. 1988-89-ம் ஆண்டில் 38,431.56 மெட்ரிக் டன் அரிசியும் 25,411.679 மெட்ரிக் டன் கோதுமையும் ஊதியமாக வழங்கப்பட்டன.

சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தில் 12,917 ஹெக்டேர் நிலப்பரப்பில் 349.254 இலட்ச மரக்கன்றுகள் நடப்பட்டன. தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் இனத் தவர்களுக்கு 41,520 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 41,480 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 448 கிராமப்புற சுகாதார கழிப்பறைகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டு 448 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

5. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் :

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் ஒரு மத்திய அரசு திட்டமாகும். மத்திய அரசின் நூறு சதவீத உதவியுடன் இத்திட்டம் 1983–84-ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கீழ்க்காணும் இரண்டு பெரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது:—

(அ) ஊரக நிலமற்றோர் குடும்பங்களில் குறைந்தளவு குடும்பத்தில் ஒருவருக் காவது வருடத்தில் 100 நாட்களுக்காவது வேலை வாய்ப்புகளை உறுதி செய்தல்.

(ஆ) கிராமப்புற பொருளாதாரத்தில் துரித வளர்ச்சிக்காக தொழில் ஆதாரங் களை வலுப்படுத்தி நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் சமூகக் காடுகள் வளர்த்தல், இந்திரா நினைவு குடியிருப்புகள் கட்டுதல், ஊரக சுகாதார கழிப் பறைகள் அமைத்தல் மற்றும் பலநோக்கு சமுதாய நிலையங்கள் கட்டுதல் போன்ற பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன.

1988–89-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ. 4,540 இலட்சங்களாகும். நடப்பு ஆண்டில் மேற்கண்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 4,130 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித் துறைக்கு 193.373 இலட்ச மனித உழைப்பு நாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதற்கும் மேலாக 236.199 இலட்ச மனித உழைப்பு நாட்கள் நடப்பு ஆண்டில் உருவாக்கப்பட்டன. இத்திட்டப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஊதியத்தின் ஒரு பகுதி உணவு தானியங்களாக வழங்கப்பட்டன. இவ்வகையில் 20,292.053 மெட்ரிக் டன் அரிசியும் 13,632.247 மெட்ரிக் டன் கோதுமையும் வழங்கப்பட்டன.

சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் 1988–89-ம் ஆண்டில் 7,825 ஹெக்டேர் நிலப்பரப்பில் 181.612 இலட்ச மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்திரா நினைவு குடியிருப்புகள் அமைக்கும் பணியில் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் இனத்தவர் களுக்கு 26,970 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது. இதில் நடப்பு ஆண்டில் 26,917 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 703 ஊரக சுகாதார கழிப்பறைகள் அமைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கும் மேலாக 703 கழிப்பறைகள் அமைக்கப்பட்டன. பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 8 பல்நோக்கு சமுதாய நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 2.64 இலட்சம் வீதம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதியினை மத்திய/மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன. இத்திட்டத்தின் கீழ்

(அ) நீர்பாசனக் கிணறுகள் மற்றும் பம்பு செட்டுகள் அமைக்கவும் ;

(ஆ) நில மேம்பாடு மற்றும் பணியாளர் செலவுக்காகவும் ;

(இ) எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் மற்றும் முரட்டு தானியங் களுக்கான சிறுவிதை மூட்டைகள் வழங்கவும் நிதியுதவியளிக்கப்படுகிறது.

1988–89-ம் ஆண்டில் சிறுபாசனம், நிலமேம்பாடு மற்றும் பணியாளர்கள் செலவு ஆகிய பணிகளுக்கு ரூ. 966.55 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. இதனால் 17,058 இலட்சங்கள் விவசாயக் குடும்பங்கள் பயனடைந்தனர். 15,609 ஹெக்டேர் நிலம் இதன் மூலம் கூடுதல் பாசன வசதி பெற்றது.

நிலமேம்பாடு மற்றும் பணியாளர் செலவு ஆகிய பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 132.39 இலட்சமாகும். இதன்மூலம் விவசாயக் குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. 3,650 ஹெக்டேர் நிலம் மேம்படுத்தப்பட்டது.

7. தேசிய சரிமவாயு திட்டம் :

தேசிய சரிமவாயு திட்டம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டுவரும் மத்திய அரசு திட்டமாகும். சரிமவாயு ஒரு பெரும் புதுப்பித்துக் கொள்ளத்தக்க எரிசக்தியாக இருப்பதால் தேசிய சரிமவாயுத் திட்டம் இருபது அம்சத் திட்டத்தில் ஒரு அம்சமாக சேர்க்கப்பட்டுள்ளது.

1988–89-ம் ஆண்டில் 14,000 கரிமவாயுக் கலன்கள் அமைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்தது. நாட்டிலேயே மிக அதிகபட்சமாக 13,488 கலன்கள் தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டன. 1988–89-ம் ஆண்டில் கரிமவாயுக் கலன்கள் அமைக்கும் பயனாளிகளுக்கு மானியத் தொகையாக ரூ. 226.78 இலட்சம் மத்திய அரசால் விடு விக்கப்பட்டது. கரிமவாயுக் கலன்கள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பற்றி கொத் தனார்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

## 8. தேசிய சூளா அடுப்புத் திட்டம் :

தேசிய சூளா அடுப்புத் திட்டம் மற்றுமோர் மத்திய அரசு திட்டமாகும். கிராமப் பகுதிகளில் சமையலுக்காக தேவைப்படும் எரிசக்தி தட்டுப்பாட்டினை தீர்க்க வழி வகை செய்யும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் குறைந்தது 25 சதவீதம் எரிபொருளை சிக்கனப்படுத்தும் நிலையான மற்றும் கொண்டு செல்லக்கூடிய ஆகிய இரு மாதிரிகளில் சூளா அடுப்புகள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டது. 1988–89-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 1,20,000 சூளா அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இலக்கிற்கு மேலாக 1,18,043 சூளா அடுப்புகள் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தின் பயனாக 1988–89-ம் ஆண்டில் 474 புகையில்லாக் கிராமங்கள் உருவாக்கப்பட்டது.

## 9. கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் :

இம்மாநிலத்தில் வாழ்மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முடிவு செய்தது. இதனை சீரியமுறையில் செயல்படுத்தும் பொருட்டு கை பம்புகள் மற்றும் மின்சாரத்தால் இயங்கும் பம்புகளை பராமரிக்க ஓர் மூன்றடுக்கு நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதன்படி கிராம அளவில் பயனாளிக் குடும்பங்களிலிருந்து ஒருவரை காப்பாளராகவும் வட்டார அளவில் பிட்டர் மெகானிக் ஒருவரையும், கோட்ட அளவில் இளநிலை பொறியாளர் ஒருவர் தலைமையிலான நடமாடும் வண்டியுடன் கூடிய குழு ஒன்றும் பம்புகள் பராமரிப்புக்காக செயல்பட்டு வருகிறது. தவிர ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத் திலும் உதவி செயற்பொறியாளர் ஒருவர் தலைமையில் தனி பிரிவும் அமைக்கப் பட்டுள்ளது.

31–3–1989 அன்று தமிழ்நாட்டில் செயல்பட்ட மொத்த கைப்பம்புகளின் எண் ணிக்கை 94,420 ஆகும். விசை பம்புகள் எண்ணிக்கை 15,573 ஆகும்.

## வானொலிப் பெட்டிகள் நிறுவுதல் :

வானொலிப் பெட்டி ஒரு பெரும் தகவல் தொடர்பு சாதனமாகும். வானொலி மூலம் கிராமப்புறங்களில் மூலை முடுக்குகளில் வாழும் மக்களையும், தொடர்பு கொள்ள முடியும். வானொலிப் பெட்டி ஒரு பொழுது போக்கு சாதனமாக விளங்குவ தோடன்றி வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, சமூகக்கல்வி, கல்வி, சுகாதாரம் சமூகப் பொருளாதாரம் முதலிய துறைகளில் மக்களுக்கு அறிவூட்டுவதில் ஒரு முக்கிய பங்கேற்கிறது.

சமுதாய வானொலிப் பெட்டிகளை பராமரிக்கும் பணி தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தைச் சார்ந்தது. 31–3–1988 அன்று தமிழ்நாட்டில் இந்நிறுவனத்தில் பராமரிப்பின்கீழ் மொத்தம் 39,984 சமுதாய வானொலிப் பெட்டிகள் இயங்கி வந்தன.

## பயிற்சித் திட்டம் :

கிராமப் புறங்களில் மனித சக்தியை மேம்படுத்துவதற்கு பயிற்சி வழி ஒரு தூண்டுதலாகும். இப்பயிற்சி சமுதாய வளர்ச்சியின் துவக்கத்திலிருந்து ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சி யளிப்பதற்கான ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்னையில் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. மேலும் ஐந்து ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையங்கள் சத்திய விஜயநகரம், தே. கல்லுப்பட்டி, கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, பவானிசாகர் ஆகிய இடங்களில் இயங்கி வரு கின்றன.

தவிர மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் அனுப்பி வைக்கப்படும் ஊரக இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு [illegible] பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1988–89-ம் ஆண்டில் ஊரக [illegible] பயிற்சி நிலையங்களின் 804 ஊரக இளைஞர்களுக்கு இவ்வலுவலக பயி[illegible] பட்டது.

கால்நடை பராமரிப்புத் திட்டம் :

1988–89-ம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 24 இரண்டாவது கால்நடை மருந்தக கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 7.25 இலட்சம் மானியமாக அரசு ஒதுக்கீடு செய்தது. 1988–89 ஆம் ஆண்டில் மூன்று கால்நடை மருந்தக கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

மீன் வளர்ப்புத் திட்டம் :

தீவிர மீன் வளர்ப்புத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் மானியமாக அரசு ஒதுக்கீடு செய்தது. இத்தொகையில் நடப்பு ஆண்டில் ரூ. 5.66 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டது.

ஊரக சுகாதாரம் :

சிறப்பு பெருந்திட்டத்தின் கீழ் 16,000 வருவாய் கிராமங்களில் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுக் கழிப்பிடங்கள் 1982–83-ம் ஆண்டு முதல் மூன்று கட்டங் களில் கட்டப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக 3,740 கழிப்பிடங்கள் கட்டு வதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, 3,738 பொதுக் கழிப்பிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக 7,686 பொதுக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டு 7,579 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. ஆக மொத்தம் 11,317 பொதுக் கழிப்பிடங்கள் ரூ. 1,742.85 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

சமூகக் கல்வி மானியம் :

1988–89-ம் ஆண்டில் ரூ. 14.5 இலட்சம் சமூகக் கல்வி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையிலிருந்து 12,875 சமூகக் கல்வி நிலையங்களிலும் 384 தகவல் நிலையங்களிலும் பொதுமக்களுக்கு பயனளிக்கக்கூடிய தமிழரசு, கூட்டுறவு, திட்டம் மற்றும் பஞ்சாயத்து செய்தி ஆகிய மாத இதழ்கள் வாங்கப்படுகின்றன.

ஈமச் சடங்கு நிதி உதவி :

இத்திட்டத்தின் கீழ் 1988–89-ம் ஆண்டில் ரூ. 49.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கு கீழே உள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மற்றும் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாற்றம் பெற்றவர்கள் ஆகியோரது குடும்பத்தில் இறப்பு நேரிட்டால், ஈமச்சடங்குகளை மேற் கொள்ள ரூ. 100 நிதி உதவி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்களால் வழங்கப்படுகிறது.

## பேரூராட்சிகள்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் தற்போதுள்ள பஞ்சாயத்து நிர்வாகம் உருவானது. இதற்கு முன் நாட்டாண்மைக் கழகங்கள், ஊராட்சிகள், சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் ஆகியவை தனி அலகுகளாக இயங்கிவந்தன. 1958-ம் வருட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், தமிழ்நாட்டில் தற்போதுள்ள ஊராட்சி நிர்வாக நடைமுறையை அறிமுகப்படுத்தியது. நிர்வாக நலன் கருதி 7–5–1981-ம் ஆண்டு முதல் பேரூராட்சிகள் துறைத் தனித் துறையாக இயங்கிவரு கிறது. மாநில மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கான சுமார் ஒரு கோடி மக்கள் 645 பேரூராட்சிகளில் வாழ்கின்றனர். பேரூராட்சிகளின் எண்ணிக்கையும் அவற்றின் தரமும் கீழ்வருமாறு ஆகும்.

| | |
|---|---|
| (1) இரண்டாம் நிலை | 79 |
| (2) முதல்நிலை | 266 |
| (3) தேர்வுநிலை | 283 |
| (4) நகரியங்கள் | 17 |
| மொத்தம் | 645 |

1. பேரூராட்சிகளின் கடமைகள் :

பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு, பேரூராட்சிகளுடையது. அவற்றிலும் கட்டப்பாட்டு விருப்பு உரிமைப் பணிகள் (Obligatory and discretionery) ஒப்படைக்கப்பட்டுள்ளன. சாலைகள் பராமரிப்பு, குடிநீர் வழங்குதல் தெரு விளக்குகள் அமைத்தல், தெருக்களை தூய்மைப்படுத்துதல் ஆகியவை பேரூராட்சிகளின் கட்டப்பாட்டுப் பணிகளில் சிலவாகும்.

2. பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்கள் ·

கீழ்க்கண்டவை பேரூராட்சிகளின் முக்கிய நிதி ஆதாரங்களாகும்:—

(1) வீட்டு வரி ;

(2) தொழில் வரி ;

(3) வாகன வரி.

இவை தவிர முத்திரை வரி மீதான மேல்வரி, கேளிக்கை வரி, அபாயகரமானதும் ஆபத்து விளைவிக்கக்கூடிய உரிமங்கள், பயன்தரத்தக்க தொழில்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் முதலியவை பேரூராட்சியின் இதர வருவாய்களாகும். மேலும் பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்களை பெருக்குவதற்குரிய வழிவகைகளைக் கண்டறிய தமிழ்நாடு அரசு ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்து அக்குழு தனது பரிந்துரைகளை முடிவு செய்து அரசுக்கு அனுப்பியுள்ளது.

3. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் :

மொத்தம் உள்ள 645 பேரூராட்சிகளில் 236 பேரூராட்சிகளில் கூட்டு குடிநீர்த் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் 96 பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்தத் தேர்வு செய்யப்பட்டு வேலைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள 313 பேரூராட்சிகளில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியுதவியுடனும், அரசின் நிதியுதவியுடனும் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர 72 பேரூராட்சிகளில் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 42.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டத்தை உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. ஐரோப்பிய பொருளாதாரக் குழு வளர்ந்துவரும் நகர்ப் பகுதிகளில் குடிநீர் திட்டத்தை மேம்படுத்த நிதியுதவி அளித்து வருகிறது. இப்பணிகள் தற்பொழுது முன்னேற்ற நிலையில் உள்ளன.

புதியதாக மேம்படுத்தப்பட்ட பகுதிகளில் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவுச் செய்ய கைபம்புகளை பேரூராட்சிகள் பராமரித்து வருகின்றன. இந்த கை பம்புகள், மற்றும் விசை பம்புகளை பழுது பார்க்கவும், பராமரிக்கவும் 1988—89ம் ஆண்டுக்கு குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் ரூ. 51.25 இலட்சம் முழு மானிய நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் சரிவர பராமரிக்கப்பட, பழுதுபட்ட குழாய்களை மாற்றியமைப்பதற்கு 1988—89 ஆம் ஆண்டிற்கு ரூ. 20 இலட்சம் அரசு நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

4. துப்புரவு:

முறையான துப்புரவு இன்மையும், கழிவு நீர், வடிகால் நீர் அகற்றப்படாததும் தான் பேரூராட்சியின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். பேரூராட்சிகளில் உள்ள மொத்தம் 8,946 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் 4,486 கி.மீ. நீளத்திற்கு மட்டும் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1988—89 ஆம் ஆண்டில் பேரூராட்சிப் பகுதிகளில் வடிகால்கள் அமைப்பது முக்கிய குறிக்கோளாக எடுத்துக் கொள்ளப்பட்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட நிதி பயன்படுத்தி இத் திட்டப் பணிகள் செயல்படுத்தப் பட்டு உள்ளன. இருப்பினும் இப்பிரச்சினையில் ஒரு பகுதியை மட்டுமே தற்போது தீர்க்க முடிந்துள்ளது.

பேரூராட்சிகளின் எல்லைக்குள் 1,10,386 உலர் கழிப்பிடங்கள் உள்ளன. இந்த உலர் கழிப்பிடங்கள் 879 துப்புரவு பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்படுகின்றன. இன்னமும் மலத்தை மனிதன் தலையில் சுமந்துச் செல்லும் அவல நிலை இருந்து வருகிறது. இந்த நிலையை அறவே ஒழிக்க மாநில மற்றும் மத்திய அரசு பேரூராட்சிகளில் உள்ள உலர் கழிப்பிடங்களை, சுகாதாரக் கழிப்பிடங்களாக மாற்றுவதற்கு உதவி செய்து வருகின்றன.

துப்புரவு பணிகளை நல்ல முறையில் கவனிக்க கீழ்க்கண்ட திட்டங்கள் மூலம் நிதி ஆதாரம் அளிக்கப்பட்டு வருகிறது:—

(1) மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உதவி (மத்திய அரசுத் திட்டம்) (மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம்)

(2) மாநில அரசு மானியும், கடன், பயன்பெறுவோர் பங்கு (40:40:20).

(3) மாநில அரசு யூனிசெப் நிறுவன உதவியுடன் (40:40:20).

(4) சிறிய நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (கடன்).

மேற்கண்ட நான்கு திட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப்பட்டால் ஏறக் குறைய 23,000 கழிப்பிடங்களை மாற்றியமைக்கப்படும். 1989—90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்த மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வை தவிர, வீட்டு வசதி நகர்ப் பகுதி வளர்ச்சி வாரிய (அட்கோ) கடன் உதவியுடன் பேரூராட்சிகளில் தனியார் வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்க நிதியுதவி கோரும் கருத்து ஆய்வில் உள்ளது.

இடவசதி இன்மை காரணமாக தனியாக கழிப்பிடங்கள் அமைக்க முடியாத இடங்களில் ரூ. 30,000 மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடங்கள் கட்டிவிட முடிவு செய் யப்பட்டுள்ளது. இதன்படி 1988—89 ஆம் ஆண்டில் 25 சமுதாயக் கழிப்பிடங்களை அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட் டுள்ளன.

பெருமளவு எண்ணிக்கையில் பொதுமக்கள் கூடுமிடங்களில் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு, பொது மக்கள் சுகாதார சூழ் நிலையில் வாழ வசதி செய்யப்பட்டுள்ளன. 1988—89 ஆம் ஆண்டில் 20 பேரூராட்சி களில் கட்டணக் கழிப்பிடங்களை அமைக்க ரூ. 20 லட்சம் அரசு நிதி உதவி அனுமதிக் கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சிறு, நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனியார் மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள் அமைக்க ரூ. 55.97 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள் ளது. 1988—89 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம், அரியலூர், ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த இடங்களில் 4,857 வீட்டு கழிப்பிடங்களும் 16 சமுதாய கழிப்பிடங்களும் கட்டப்படவுள்ளன.

## 5. கழிவுப் பொருட்களை அகற்றுதல்:

கழிவு பொருட்களை அகற்றுவது பேரூராட்சிகளில் அடுத்த முக்கிய பிரச்சினை யாகும். பேரூராட்சிகளில் இன்னமும் கழிவுப் பொருட்களை மாட்டு வண்டிகள் மூலம் அகற்றும் முறை நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த நிலை மாற்றியமைக்க கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு திருக்கோவிலூர், கழிஞ்சூர், பருகூர், பல்லடம், கரம்பைக்குடி, தாமரைக்குளம், இலஞ்சி, காயல்பட்டினம் ஆகிய 8 பேரூராட்சிகளுக்கும் தானியங்கி உழுவை, இழுவை மற்றும் தொட்டியுடன் (Power tiller with Tanker and Trailor) வாங்கி வழங்க அரசு நிதி உதவி ரூ. 6 லட்சம் (75 சதவிகித மானியம் 25 சதவிகித கடன்) அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 6. சாலைகள் பராமரித்தல்:

பேரூராட்சிகள் கீழ்க்கண்டவாறு சாலைகள் பராமரிக்கப்படுகின்றன:—

| | |
|---|---|
| (1) மண் சாலைகள் .. | 1,448 |
| (2) சரளைக்கல் சாலைகள் | 1,483 |
| (3) கப்பிச் சாலைகள் | 4,342 |
| (4) தார் சாலைகள் | 1,128 |
| (5) சிமிட்டி சாலைகள் | 234 |

பேரூராட்சிகளில் நிதி ஆதாரம் மிகவும் நலிந்த நிலையிலிருப்பதால், பேரூராட்சி களில் சாலைகள் பராமரிப்பது மிகவும் கடினமாக உள்ளது. இந்த நிலையை தவிர்க்க, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் நிதி உதவி அளிக்கப்பட்டு, பேரூராட்சி களில் சாலைகள் வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 1988—89 ஆம் ஆண்டில் நிதி வசதியற்ற பேரூராட்சிகளில் உள்ள சாலைகளின் தரத்தை உயர்த்த அரசு ரூ. 25.00 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

## 7. கோயில்-நகரங்கள் மேம்பாடு:

அரசு இத் திட்டத்தைச் செயற்படுத்த 7 பேரூராட்சிகளுக்கு 1988—89ல் ரூ. 5.00 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த உதவி மூலம் கோயிலுக்கு வரும் பயணி களும் இப்பேரூராட்சி பொது மக்களும் பயன் பெறும் வண்ணம் அத்தியாவசிய அடிப் படை வசதிகளான சாலைகள், தங்குமிடம், வணிகவளாகங்கள் முதலிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## 8. பயன்தரத்தக்க முயற்சிகள்:

1988—89 ஆம் ஆண்டில் மத்திய அரசு, ஆண்டிப்பட்டி, அரியலூர், இராமேச் வரம் ஆகிய மூன்று நகரங்களில் ஒருங்கிணைந்த சிறு நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக் கப்பட்ட ரூ. 300 இலட்சத்தில் பயன் தரத்தக்க முயற்சிகளுக்காக ரூ. 244.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. ஒருங்கிணைந்த சுற்றுலா மையங்கள் மேம்பாட்டுத் திட்டம்:

இராமேசுவரம், கன்னியாகுமரி, மாமல்லபுரம் போன்ற சுற்றுலா மையங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் கட்ட அரசு ரூ. 58.00 இலட்சம் அனுமதித்துள்ளதில் 50 சதவீதம் நிதியுதவியும், 50 சதவீதம் கடனும் ஆகும். இவ்வேலைகள் முடியும் நிலையில் உள்ளன.

10. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்:

தற்போது இத்திட்டம் ஊரக பேரூராட்சிகளில் செயற்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் போதிய வேலை வாய்ப்பு அறவே இல்லாத ஆண்களுக்கும், பெண் களுக்கும் பயன் தரத்தக்க வேலை வாய்ப்பை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். 1988–89 ஆம் ஆண்டில் 259 பேரூராட்சிகளில் ரூ. 581.190 இலட்சம் செலவில் 3,795 நிலையான சமுதாய உடமைகளை உருவாக்க அனுமதி வழங்கப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இவை தவிர சாலைகளை மேம்படுத்துதல், சிறு பாலங்கள் அமைத்தல், போதிய குடிநீர் வழங்குதல், வணிக வளாகங்கள் கட்டுதல், வடிகால் வசதிகள் செய்தல் பேரூராட்சி அலுவலங்கள் ஆகியவைகளை அரசு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமும், ஊரக நில மற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்ட நிதியிலிருந்து தொகுப்பு வீடுகள் கட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ''யூனிசெப்'' உதவியுடன் பெரியார் மாவட்டத்தில் தீவிர துப்புரவு திட்டத்தின் கீழ் 35,000 தனிக் கழிப்பிடங்களும் கட்டப்படவுள்ளன.

10. அடிப்படை புள்ளி விவரங்கள்:

| பேரூராட்சிகளின் தனிநபர் வருமானம். | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| ரூபாய் 25-க்கு கீழ் .. | 199 |
| ரூபாய் 26 முதல் ரூபாய் 50 வரை | 244 |
| ரூபாய் 51 முதல் ரூபாய் 75 வரை | 91 |
| ரூபாய் 76-க்கு மேல் | 111 |
| | 645 |

குடிநீர் விநியோகம்:

| | |
|---|---|
| ஒழுங்குபடுத்தப்பட்ட குடிநீர் திட்டம் உள்ள பேரூராட்சிகள் எண்ணிக்கை. | 236 |
| ஆயுள் காப்பீட்டுக் கடன் மற்றும் அரசு மானியத்துடன் நடைமுறையில் உள்ள குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை. | 96 |
| உலக வங்கி உதவியுடன் செயல்படும் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை. | 72 |

மதிப்பீடு: ரூ. 42.84 கோடி

| | | |
|---|---|---|
| கை பம்புகள் .. .. | 15,595 | எண்ணிக்கை |
| விசை பம்புகள் .. .. | 2,654 | ,, |
| மேல்நிலை தொட்டிகள் .. | 1,723 | ,, |
| தரைமட்ட நீர்த் தேக்கங்கள் | 1,065 | ,, |
| தாணியங்கி அழுத்தத் தொட்டிகள் | 143 | ,, |
| ஆழமற்ற கிணறுகள் .. | 3,026 | ,, |
| ஆழ் கிணறுகள் .. | 4,196 | ,, |
| திறந்த கிணறுகள் .. | 11,742 | ,, |

**பேரூராட்சிகளில் பராமரிக்கப்படும் சாலைகள்:**

| | கி.மீ. |
|---|---|
| சிமெண்ட் சாலைகள் | 234 |
| தார் சாலைகள் ... | 1,128 |
| கருங்கல் ஜல்லி சாலைகள் | 1,440 |
| சரளைக்கல் சாலைகள் | 1,488 |
| மண் சாலைகள் | 4,342 |

**பராமரிக்கப்படும் தெரு விளக்குகள்:**

| | |
|---|---|
| சோடியம் ஆவி விளக்குகள் .. .. | 1,357 |
| பாதரச விளக்குகள் .. | 3,783 |
| 4 அடி குழல் மின் விளக்குகள் | 1,58,523 |
| 3 அடி குழல் மின் விளக்குகள் | 2,032 |
| சாதாரண விளக்குகள் .. | 8,369 |
| மொத்தம் | 1,74,064 |

| | |
|---|---|
| பணியாளர் குடியிருப்புகள் .. | 937 |
| தெருக்களின் நீளம் கி.மீ. .. | 8,627 |
| வடிகால்களின் நீளம் கி.மீ. .. .. .. | 4,486 |
| அலுவலக கட்டிடம் உள்ள பேரூராட்சிகள் .. | 508 |

**பயன்தரும் இனங்கள்:**

| | |
|---|---|
| பேருந்து நிலையங்கள் ... | 224 |
| தனியார் சந்தைகள் .. | 64 |
| பேரூராட்சி அங்காடிகள் ... .. | 1,624 |
| வாரச் சந்தைகள் .. ... .. .. .. | 215 |
| வண்டிப் பேட்டைகள் ... .. .. .. | 67 |
| ஆடு அடிக்கும் தொட்டிகள் .. ... .. .. .. | 308 |
| பயணிகள் விடுதிகள் .. .. .. .. | 79 |
| கட்டணக் கழிப்பிடங்கள் ... .. .. .. | 301 |
| சலவைத் துறைகள் .. .. .. .. | 90 |
| வானொலிப் பெட்டிகள் .. ... .. .. .. | 3,343 |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் ... .. .. .. | 863 |
| படிப்பகங்கள் ... .. ... ... .. ... | 773 |
| திரையரங்குகள் .. .. .. .. .. .. | 598 |

# அத்தியாயம் 28.

## சமூகநலத் துறை

## சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு.

முன்னுரை:

இளைஞர் நீதிச் சட்டம், 1986, மற்றும் பரத்தமைத் தடுப்புச் சட்டம் 1956-ன் கீழ் சட்ட விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் ஆகியவற்றினை, சமூகநலத்துறையின்கீழ் இயங்கும், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை கவனித்து வருகின்றது. புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் (ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் அனாதைகள்) குற்றம் இழைத்த சிறார்கள் மற்றும் ஆதரவு இன்றி தவிக்கும் பெண்டிர் மற்றும் சிறுமிகள் ஆகியோரின் பாதுகாப்பு பயிற்சி மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றினை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநிலத்தில், 2-10-1987 முதல் இளைஞர் நீதிச் சட்டம் 1986 (தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920 நீக்கப்பட்டது) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

துறையின் நடவடிக்கைகள்:

(அ) பதினான்கு கூர்நோக்கு இல்லங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. இவை குறுகிய காலவரையறை நிறுவனங்களாகும். இக்கூர்நோக்கு இல்லங்கள், இளைஞர் நலக் குழுமம் மற்றும் இளைஞர் நீதிமன்றங்கள் விசாரணைக்குட்படும் ஆதரவற்ற, குற்றமிழைத்த சிறுவர், சிறுமியரை விசாரணைக் காலங்களில் பொறுப்பேற்கின்றன. இக்கூர்நோக்கு இல்லங்கள் 11 அரசினராலும், ஏனைய 3 தனியார் இல்லங்கள் அரசினரின் நிதியுதவியுடனும் நடத்தப்படுகின்றன.

(ஆ) இளைஞர் நீதிச்சட்டம் 1986-ன்படி, இம்மாநிலத்தில் இயங்கும் 20 சிறப்பு இளைஞர் இல்லங்களில் 3 சிறப்பு இல்லங்களும், 7 இளைஞர் இல்லங்களும் அரசினராலும், மீதமுள்ள 10 நிறுவனங்கள் அரசினரின் நிதியுதவி பெற்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. குற்றமிழைத்த சிறார்கள் சிறப்பு இல்லங்களிலும், புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் (ஆதரவற்ற கைவிடப்பட்ட மற்றும் அனாதைகள்) இளைஞர் இல்லங்களிலும் அனுமதிக்கப்படுகின்றனர். '' மனவளர்ச்சி குன்றிய சிறார்கள் சென்னை பால விகாரின் ஆதரவில் இயங்கும் தனியார் இளைஞர் இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர்.''

(இ) அரசாணை 1819, சமூகநலத்துறை, நாள் 29-9-1987-ன்படி ஒரு தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களைக் கொண்ட 13 இளைஞர் நலக் குழுமங்கள் புறக்கணிக்கப்பட்ட சிறார்களின் வழக்குகளை கவனிக்க அமைக்கப்பட்டுள்ளன. இக்குழு மக்களுக்கான செலவினத் தொகை ரூ. 7.12 இலட்சம், 1989–90 ஆம் ஆண்டில் பகுதி திட்டப் பணியால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நீதிச் சட்டம் 1986–ல் பிரிவு 7(2)–ன்படி, குற்றம் புரிந்த சிறார்கள் வழக்குகளை விசாரிக்க இளைஞர் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் வரை (பிரிவு 5–ன்படி) ஓர் இடைக்கால நடவடிக்கையாக தலைமைக் குற்றவியல் நீதிபதி, உட்கோட்ட குற்றவியல் நீதிபதி, பெருநகர் குற்றவியல் நீதிபதி மற்றும் முதன்மை குற்றவியல் நீதிபதி ஆகியோருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) பரத்தமைத் தடுப்புச் சட்டம் 1956–ன்படி எட்டு (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் சிறுமியர் மற்றும் பெண்கள் நீதிமன்ற விசாரணை காலங்களில் பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையறையுள்ள நிறுவனங்கள் நீண்டகால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு நுழைவாயில்களாகும். அரசினர் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் (நீண்டகால வரையறை) 1956ஆம் ஆண்டின் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் பெண்டிர் மற்றும் சிறுமியர்கட்கு புகலிடமும், பயிற்சியும் மறுவாழ்வும் அளிக்கின்றன. இத்துறையில் ஆறு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் உள்ளன.

(உ) அரசினரால் நடத்தப்படும் மூன்று பிற்காப்பு நிறுவனங்கள் (ஒன்று மகளிருக்கும், இரண்டு சிறார்களுக்கும்) சீர்திருத்த இல்லங்களில் இருந்து நீக்கப்படும் இல்லவாசிகளுக்கு, தொழிற் கல்வி பயிற்சியினை வழங்குவதுடன், அவர்கள் சுய வேலைக்கு தகுதி பெறுமளவுக்கு தொடர்ச்சியாக பயிற்றுவிக்கின்றனர். உடைகள், உள்ளாடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியினை பயிற்றுவிக்கும் தொழில் நிறுவனம் ஒன்று, வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவன இல்லவாசிகள், பர்மா மற்றும் இலங்கை அகதிப் பெண்கள் மற்றும் உள்ளூர் பெண்கள் ஆகியோர் இந்நிலையத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

(ஊ) அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8ஆம் வகுப்புவரை கல்வி அளிப்பதுடன், இவை கல்வித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட கல்விப் பிரிவுகளாக இயங்கி வருகின்றன. இவை நீங்கலாக 2 சிறப்பு இல்லங்களில், உயர்நிலைப் பள்ளிப் பிரிவு இயங்கி வருவதுடன், 10ஆம் வகுப்பு வரை உயர் கல்வி கற்பிக்கப்படுகிறது. உயர் கல்வியில் நாட்டமுள்ள இல்லவாசிகள் மேல்நிலைப்பள்ளி/கல்லூரி, தொழிற்பயிற்சி நிறுவனங்கள்/பல் தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

(எ) இல்ல நீக்கம் செய்யப்பட்ட பின்னர், மறுவாழ்வுக்கென கீழ்க்குறிப்பிட்டுள்ள வருமானம் ஈட்டக்கூடிய தொழில்கல்வி பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு பயிற்றுவிக்கப் படுகின்றன :—

(அ) தச்சு, தையல் மற்றும் பூ வேலை, நெசவு, பாய் நெசவு, கருமாரப்பணி, உலோகப்பணி, தோட்டம் மற்றும் வேளாண்மை, கொத்து வேலை, புத்தகம் கட்டுதல், இசைக்கருவி, மாட்டுப்பண்ணை, சோப்பு தயாரித்தல்.

(ஆ) இளைஞர் மற்றும் பெண்களுக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு, கீழ்க்குறிப் பிட்டுள்ள தொழில் பயிற்சி அலகுகள் பின் இயந்திர மயமாக்கப்பட்டுள்ளன.

(1) தஞ்சாவூர், அரசினர் இளைஞர் இல்ல தையல் பிரிவு மற்றும் சென்னை, அரசினர் பெண்கள் இல்ல தையல் பிரிவு.

(2) செங்கல்பட்டில் உள்ள நெசவுப் பிரிவு.

(3) தஞ்சாவூர் மற்றும் இராணிப்பேட்டையில் உள்ள தச்சுப் பிரிவுகள்.

(4) சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் உள்ள சலவையகப் பிரிவு.

இவை தவிர, சென்னை, அரசினர் பெண்கள் இல்லத்தில், ஒரு குழந்தைகள் பராமரிப்பு பிரிவும், சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில், 20 இல்லவாசிகளுக்கென ஒரு இல்லவியல் பயிற்சியும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பற்றவைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற் கூடம் ஒன்று இராணிப்பேட்டை, அரசினர் இளைஞர் இல்லத்தில் இயங்கி வருகிறது.

(ஏ) சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் மூன்று இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை இளைஞர் நல குழுமம் மற்றும் இளைஞர் நீதிமன்றம் மூலமாக அனுப்பப்படும். சிறுவர் சிறுமியரின் மனோநிலையினை ஆராய்ந்து இது குறித்து அறிக்கையினை அருகில் உள்ள கூர்நோக்கு இல்லங்களுக்கு அனுப்புகின்றன. இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற்குழுவினரால் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்கள் மீதான செலவினம் அரசினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## பணிமுன்னேற்றம் குறித்த விவரங்கள்—இல்லங்களும், செயல்பாடுகளும்.

1988–89 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விபரம் வருமாறு :—

| | செயல்திறன் குறியீடு. | | | நிதிக் குறியீடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு. | அடைவு. (பயன்பெற்றோர் நிறுவனம்). | அடைவு சதவீதம். | இலக்கு. | இலக்கு அடைவு. | அடைவின் சதவீதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) (ரூபாய் இலட்சத்தில்.) | (7) |
| 1. இல்லவாசிகளுக்கு நோட்டுப்புத்தகங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்குதல். | 14 | 14 | 100 சதவீதம். | 0.65 | 0.65 | 100 சதவீதம். |
| 2. கல்விப்பிரிவுக்கு எழுது பொருட்கள் வழங்குதல் | 14 | 14 | 100 சதவீதம் | 0.25 | 0.25 | 100 சதவீதம். |
| 3. இல்லவாசிகளுக்கு உடைகளும், படுக்கைகளும் வழங்குதல். | 78 | 78 | 100 சதவீதம் | 6.69 | 5.55 | 82 சதவீதம். (இல்லவாசிகள் எண்ணிக்கை குறைவுற்றதால்). |
| 4. நிறுவனங்களுக்கு மருந்துகள் வழங்குதல். | 9 | 9 | 100 சதவீதம் | 0.70 | 0.70 | 100 சதவீதம். |
| 5. மூலப்பொருட்கள் வழங்குதல் | 46 | 46 | 100 சதவீதம் | 6.28 | 5.69 | 90 சதவீதம். (இல்லவாசிகள் குறைவினால் தொழிற்பிரிவுகளுக்குத் தேவையான அளவு மட்டுமே மூலப் பொருட்கள் பெறப்பட்டது.) |
| 6. சீர்திருத்தப்பள்ளிகளில் இருந்து அனுப்பப்பட்ட இளம் குற்றவாளிகளுக்குத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி. | 30 | 24 | இல்ல நீக்கம் செய்யப்பட்ட இல்லவாசிகள் கிடைக்கப் பெறாததால் 24 இல்ல வாசிகள் மட்டுமே சேர்க்கப்பட்டனர். | 0.20 | 0.20 | 100 சதவீதம். |
| 7. ஒழுக்கநெறி தவறியவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க தமிழ்நாடு நலநிதிக்கு நிதிஉதவி. | 100 | .. | உயர்மட்ட குழுவினரால் இல்லவாசிகள் தேர்வு முடிவு செய்யப்படவில்லை. | 2.50 | .. | இறுதி நிதி மதிப்பீடு (1988–89)ல் நிதி ஒதுக்கீடு சரண்டர் செய்யப்பட்டது. இல்லவாசிகள் தேர்வு முடிவு செய்யப்படவில்லை. |

இளைஞர் நலக்குழும அமைப்பு மற்றும் மேலாண்மை விதிகள் தொகுக்கப்பட்டு, அரசினர் ஆணை எண் 1193, சமூகநலம், நாள் 28–4–1988-ன் படி தமிழ்நாடு இளைஞர் நலக்குழுமம் விதிகள் 1987 அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு பெறப்பட்டன.

நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரங்கள் :

இத்துறையின் 1988–89ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீடு ரூ. 229.61 இலட்சம். மானியம் உதவியாக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ. 8.31 இலட்சமாகும்.

இத்துறையின் 1988–89ஆம் ஆண்டின் செலவினம் ரூ. 244.17 இலட்சமாகும்.

முடிவுரை :

(அ) இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகளுக்கு மறுவாழ்வு வழங்குவதன் தொடர்பாக ''கஸ்தூரிபாய் காந்தி மறுவாழ்வு கூட்டுறவுச் சங்கம்'' என்ற பெயரில் ஒரு தொழிற் கூட்டுறவுச்சங்கம் துவக்கப்பட்டு, இச்சங்கம் தொழில் வணிகத் துறைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில், இத்துறையின் செயல்படுத்தப்படும் அனைத்து பயிற்சிகளும் மேற்கொள்ளும் வகையில் இச்சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காலணிகள் தயாரித்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றில் 3 பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. '' தாட்கோ '' நிறுவனத்தின் சிறப்பு ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் மூலமாகவும் மற்றும் தொழில் வணிகத்துறையின் ஊரகத் தொழில் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் இப்பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி திட்டங்கள் முடிவடைந்த பின்னர், இக்கூட்டுறவுச் சங்கம் சங்க உறுப்பினர்களால் (இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகள்) நிரந்தர உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

(ஆ) சீர்திருத்த இல்லங்களில் இருந்து பயிற்சி முடிந்த இல்லவாசிகளுக்கு மறுவாழ்வு வழங்க (1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல். (2) வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல். (3) வேலைத்திறனுள்ள மாணவர்களுக்கு கருவிகள் வழங்குதல் போன்ற வகைகளில் உதவிகள் செய்யப்படுகின்றன. திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000 மற்றும் திருமணச் செலவுகளுக்கென ரூ. 100 அரசினால் வழங்கப்படுகிறது.

## முதியோர் உதவித் தொகை

முதியோர் உதவித் தொகை திட்டங்கள் (தமிழ்நாடு மாநிலத்தில் செயல்படுத்தபடுவது பற்றிய குறிப்பு.)

உற்றார் உறவினர் ஆதரவின்றி, வாழ வழியற்றவர்களுக்குச் சமுகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட முதியோர் உதவித் தொகை திட்டங்களை மாநில அரசு செயல்படுத்துகிறது :—

(அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் (1–4–1962 முதல்).

(ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் (1–1–1974 முதல்).

(இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைத்) திட்டம் (1–6–1975 முதல்).

(ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்) திட்டம் (21–8–1981 முதல்).

(உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகைத் திட்டம் (21–8–1981 முதல்).

1. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் ):

குருடு, தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு மற்றும் அவயமிழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்த பட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பு 65 ஆகும். இந்தத் திட்டம் 1–4–1962 முதல் செயல்படுத்தப்படுகிறது.

**2. முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்:**

1—11—1974 முதல் இந்தத் திட்டம் 55 வயது நிரம்பிய ஆதரவற்ற உடல் ஊன முற்றோர்களுக்கு அமலாக்கப்பட்டது. 1975 இல் குறைந்த பட்ச வயது வரம்பு 45 ஆகக் குறைக்கப்பட்டது. கண்பார்வையற்ற ஆதரவற்றவர்கள் வயது வரம்பின்றி தகுதி பெறுவர். என்று 1979 ஆம் ஆண்டில் அரசு ஆணையிட்டது.

50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் உடல் ஊனமுற்ற ஆதரவற்ற நபர்கள் இந்த உதவித் தொகை பெறத் தகுதியானவர்கள்.

**3. முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் :**

1—6—1975 முதல் இந்தத் திட்டம் 45 வயது நிரம்பிய ஆதரற்ற விதவைகளுக்கு அமலாக்கப்பட்டது. 1978-ல் இந்த குறைந்தபட்ச வயது வரம்பு 40ஆக குறைக்கப் பட்டது.

**4. முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் :**

21—8—1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அமலாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

**5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை :**

கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கும் சில நிபந்தனைகளுக்குட் பட்டு முதியோர் உதவித் தொகைத் திட்டத்தில் அனைத்து சலுகைகளையும் அளிக்க 1984 இல் அரசு ஆணையிட்டது. 1986 இல் 30 வயதுக்கு குறையாத கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றப் பெண்களுக்கு உதவித் தொகை கிடைத்திட இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

**6. உதவித் தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படும் முறை :**

மேற்கண்ட திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு அளிக்கும் அதிகாரம் கோட்டாட்சியர்களுடையது. கோட்டாட்சியரின் ஆணையை எதிர்த்து மாவட்ட ஆட்சியர்களுக்கு மேல்முறையீடு (முத்திரைக் கட்டணமின்றி) செய்ய மனுதாரருக்கு வாய்ப்புள்ளது.

**7. உதவித் தொகை :**

முதியோர் உதவித் தொகைத் திட்டம் அமல்படுத்தப்பட்ட நாளாகிய 1—4—1962 முதல் 31—3—1979 வரை ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 20 உதவித் தொகையாக அளிக்கப்பட்டது 1—4—1979 முதல் 31—3—1982 வரை மாதம் ரூ. 25 ஆகவும் 1—4—1982 முதல் இதுநாள் வரை மாதம் ரூ. 35 ஆகவும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை பண அஞ்சல் மூலம் உதவித் தொகை பெறுபவர்களின் முகவரிக்கு வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கமிஷன் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கின்றது.

**8. இலவச கைத்தறி ஜனதா ஆடைகள் வழங்குதல் :**

ஆண்டுக்கு இரு முறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் அன்று உதவித் தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வண்ண/வெள்ளைச் சேலையும் 1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த கைத்தறித் துணிகளின் விலை விவரங்கள் பின்வரு மாறு :—

(அ) ஒரு கைத்தறி ஜனதா வேட்டி ரூ. 38.25

(ஆ) ஒரு கைத்தறி ஜனதா வண்ணச்சேலை ரூ. 32.90

**9. இலவச அரிசி மற்றும் மதிய சத்துணவு வழங்குதல் :**

1—11—1980 முதல் உதவித் தொகை பெறும் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு கிலோ சன்ன ரக அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

15—1—1983 முதல் உதவித் தொகை பெறுபவர்களுக்கு முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி உதவித் தொகை பெறுபவர்களுக்கு நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவில் இருக்கும். சத்துணவுக்காகச் செலவு ஒரு நபருக்கு ஒரு வேளைக்கு 93 பைசா (இதர செலவுகள் நீங்கலாக) ஆகிறது.

| | |
|---|---|
| அரிசி | 200 கிராம், |
| பருப்பு | 15 கிராம், |
| எண்ணெய் | 10 கிராம். |
| காய்கறி மற்றும் தானியம் | 50 கிராம். |

இந்த மதிய சத்துணவு பெறுபவர்களுக்கு மட்டும் வாரம் ஒரு கிலோ அரிசிக்குப் பதிலாக 15—1—1983 முதல் வாரம் அரைக் கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

10. முதியோர் உகதவித் தொகைத் திட்டத்தின்கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை மற்றும் அதிக பட்சத் தோராயமாக ஆண்டுச் செலவினம் :

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம். | 1,63,698 |
| (ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம். | 20,504 |
| (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம். | 1,17,018 |
| (ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்) திட்டம். | 45,772 |
| (உ) முதியோர் உதவித் தொகை (கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள்) திட்டம். | 25,697 |
| மொத்தம் | 3,72,689 |

ஒரு நபருக்கு ஓராண்டில் செலவிடப்படும் விவரங்கள் அடங்கிய அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதிகபட்சம் தோராயமாக ஆண்டுச் செலவினம் ரூ. 33.65 கோடியாகும்.

## தொகை விவரங்களடங்கிய அட்டவணை.

| வரிசை எண்ணும் செலவின் விவரமும். | சத்துணவு உட்கொண்டால் | | சத்துணவு உட்கொள்ளாவிடில் | |
|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | ஆண். | பெண். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 உதவித் தொகை மாதம் ரூ. 35 வீதம் 12 மாதங்களுக்கு (35×12), | 420.00 | 420.00 | 420.00 | 420.00 |
| 2 உதவித் தொகை அனுப்புவதற்கான பண அஞ்சல் அட்டைக்கான விலை உட்பட மாதம் ரூ. 1.60 வீதம் 12 மாதங்களுக்கு (1.60×12). | 19.20 | 19.20 | 19.20 | 19.20 |
| 3 பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் ஆண்டுக்கு இருமுறை இலவச துணிகள் வழங்குதல்— | | | | |
| (அ) இரண்டு கைத்தறி ஜனதா வேட்டிகள் ஒன்று ரூ. 28.25 வீதம். | 56.50 | | 56.50 | |
| (ஆ) இரண்டு கைத்தறி ஜனதா வண்ணச்சேலைகள் ஒன்று ரூ. 32.90 வீதம், | | 65.80 | | 65.80 |
| 4 மதிய சத்துணவு உட்கொள்பவர்களுக்கு வாரம் அரை கிலோ சன்னரக அரிசி (ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 2.25 (1/2×52×2.25). | 58.50 | 58.50 | | |
| 5 மதிய சத்துணவு உட்கொள்ளாதவர்களுக்கு வாரம் ஒரு கிலோ சன்னரக அரிசி (ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 2.25 (52×2.25). | | | 117.00 | 117.00 |
| 6 ஆண்டு முழுவதும் இலவச மதிய சத்துணவு ஒரு நபருக்கு ஒரு வேளை உணவுக்கான செலவு 93 பைசா (0.93×365). | 339.45 | 339.45 | .. | .. |
| மொத்தம் .. | 893.60 | 902.95 | 612.70 | 622.00 |

முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஓராண்டில் ஒரு நபருக்கு அரசு செலவிடும் அதிக பட்ச தோராயமான ஆண்டு செலவு (முதியோர் உதவித் தொகை பெறுபவர்) ரூ. 903×3,72,689

ரூ. 33,65,38,161

சமூக நலம்.

சமூக நலத்திட்டம் பின்வருமாறு விரிவான முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(I) குழந்தை நலன்.

(II) மகளிர் நலன்.

(III) உடல் ஊனமுற்றோர் நலன்.

(IV) தமிழ்நாடு சமூக நல வாரியம்.
உதவி செய்யும் திட்டம்.

<u>உதவி செய்யும் திட்டம் :</u>

அரசின் பல்வேறு திட்டங்களின் நோக்கங்கள், அவற்றினால் பயனடைந்தோர் திட்டத்தின் இலக்கு, சாதனை ஆகியவை பற்றிய விவரங்கள் அட்டவணை 1, 2, 3 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சமூக நல வாரியம், அட்டவணை 3இல் குறிக்கப்பட்டுள்ள சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

அட்டவணை 1—குழந்தை நலன்.

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | நோக்கங்கள். | இலக்கு. 1988–89. திட்ட இலக்கு. | நிதி இலக்கு. | சாதனை. திட்ட இலக்கு. | நிதி இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1 | குழந்தைகள் நல ஒருங்கிணைந்த பணிகள். | 0–6 வயது வரையுள்ள குழந்தைகள், கருவுற்ற மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கான சுகாதாரப் பணிகள், சத்துணவு அளித்தல் ஆகிய வற்றுக்கு வகை செய்தல். | | குழந்தைகள் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம். 404.08 புதிய துணைச் சத்துணவு—141.72 2 முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு குழந்தைகள் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் துணைச் சத்துணவு வழங்கல். 100.49. | திட்டங்கள்—65 மையங்கள்—5,607 2 வயதுக்கு குறைவாகவுள்ள 104,272 குழந்தைகளும், 2 வயது முதல் 4 வயது வரையுள்ள 207,281 குழந்தைகளும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 58,118 பேரும் பயனடைந்துள்ளனர். | 571.68<br>124.79<br>169.26 |
| 2 | தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம். | நகர, கிராமப் பகுதிகளிலுள்ள 2 முதல் 4 வயது வரையுள்ள சிறார் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்கள், ஆகியோரின் ஊட்டச் சத்தின்மையைப் போக்கி உடல் நலம் மேம்பாடடையச் செய்தல், சிறார் கல்விக்கு வகை செய்தல். | 2,350,500 | 374.54 | குழந்தைகள் 1,814,880 முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் 2.31 இலட்சம் 9,000 மையங்கள் மூலம் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் 30,641 மகளிருக்கு வேலை வாய்ப்பளித்தல், கிராமப் பகுதியில் 123,483 பேரும். நகர்ப்புறப்பகுதியில் 4,840 பேரும் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். | 383.71 |
| 3 | தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம். | 6 மாதத்திலிருந்து 36 மாதங்கள் (3 வயது) வரையுள்ள குழந்தைகள் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கும் சத்துணவு வழங்கல். | | ஜே.இ. சத்துணவு வழங்கும் பணிகள் 687.0 ஜே.எப். பயிற்சி 4.80. | 568,703 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். | 797.06 |

108-2—99

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 4 | மலை பழங்குடியினர் துறைத் திட்டம்—(அ) பழங்குடியினருக்கான பால்வாடிகள் (ஏ.ஜே.ஜே.ஏ.), | பழங்குடியினர் பகுதியிலுள்ள 2 முதல் 4 வயது வரையிலான சிறார் களுக்குக் கல்வி கற்பித் தல் மற்றும் பழங்குடி யினருக்கு சத்துணவு, உடல் நலம் பற்றிய கல்வி கற்பித்தல். | .. | ஏ.ஜே.ஜே.ஏ. 2.46 | 6,363 பேர் பயனடைந்துள்ளனர், | 8.89 |
| | (ஆ) சிறார் பள்ளிகள் (ஏ.ஜே.ஜே.சி.). | | | ஏ.ஜே.ஜே.சி. 5.34 | 1,390 பேர் பயனடைந்துள்ளனர். | 1.72 |
| 5 | சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள்.—மகப்பேறு, குழந்தை நலப்பணி மையங்கள் திட்டக்காலம் 30–9–1989 அன்றுடன் முடிவடைந் தது. இது மேலும் 31–12–1989 ஆம் நாள் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. | திட்டப் பகுதியில் வாழ் கின்ற மக்களின் (மேம் படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகள்) சுகாதார வசதி, சத்துணவு ஆகியவற்றை மேம்படுத்தல். | 242 மையங்கள். | 26.57 | 126+31 (157) மையங்கள் 219 மையங்கள் மூலம் 2 முதல் 4 வயது வரையுள்ள 7,378 குழந்தைகளும், முதியோர் ஓய்வூதியம் பெறுகின்ற 23 பேர்களும் பயனடைந்துள்ளனர். | 22.71 |
| 6 | ஆதரவற்ற குழந்தை களுக்கான மறுவாழ்வு நிலையங்கள் (இந்திய அரசின் திட்டம்). | 5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறு வாழ்வு அளித்தல்—மாநில மத்திய அரசுகள் 50 : 50 என்ற விகிதத்தில் நிதியுதவி அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தொண்டு நிறுவனங் களின் செலவில் 90 சத வீதத்தை அவை உதவி மானியமாக வழங்கி வருகின்றன. | | | 149 நிறுவனங்கள் மூலம் 13,430 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். | |
| 7 | குழந்தை நல இல்லம் இந்தியக் குழுவுக்கு நிதியுதவி. | இந்த இல்லத்தின் பரா மரிப்புப் பணிக்கு மாநிலத்தின் மூலம் நிதியுதவி அளிக்கப் படுகிறது. | | ரூ. 30,000 | 1 இல்லம் (தஞ்சாவூர்). | ரூ. 30,000 |

அட்டவணை—2.

மகளிர் நலன்.

| (1) | (2) | (3) | (4) | (5) (ரூபாய் இலட்சத்தில்.) | (6) | (7) (ரூபாய் இலட்சத்தில்.) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 1 | அனாதை இல்லங்கள் | அனாதை இல்லங்களிலுள்ள 5 முதல் 18 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவு, உறைவிடம், உடை, பாட நூல்கள், நோட்டுப் புத்தகங்கள், மருத்துவ உதவி, 5ஆம் வகுப்பு வரை கல்வி கற்பித்தல் ஆகியவற்றுக்கு வகை செய்தல். | 5,200 | 81.95 | 4,200 | 81.51 |
| 2 | சேவை இல்லங்கள் | 18 முதல் 40 வரையுள்ள வறிய விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்கள் ஆகியோருக்கு மேனிலைக் கல்வி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி அளித்தல். | 100 பயிற்சியாளர்கள். | 2.66 | 1 இல்லங்கள் 100 பயிற்சியாளர்கள். | 2.81 |
| 3 | ஆசிரியர் பயிற்சி நிலையம் | மாநில அரசின் உதவி பெறும் துறையின் சேவை இல்லங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் 2 தேர்ச்சி பெற்ற 18 முதல் 20 வரையுள்ள பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிக்க வகை செய்தல். | 100 பயிற்சியாளர்கள். | 2.66 | 1 இல்லம் (பல்லாவரம்) 100 பயிற்சியாளர்கள். | 2.81 |
| 4 | பணிபுரியும் மகளிருக்கான இல்லம். | பணிபுரியும் மகளிரின் பாதுகாப்பிற்கு வகை செய்தல். | 340 | 5.17 | 7 இல்லங்கள் 240 | 4.01 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய் இலட்சத்தில்.) | (5) | (6) | (7) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|---|
| 5 | வறிய நிலையிலுள்ள விதவைகளின் பெண்கள் திருமணத்திற்கு நிதியுதவி அளித்தல். | 3,000 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ள ஆதரவற்ற விதவைகளின் பெண்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு 1,000 ரூபாயை நிதியுதவியாக அளிப்பதன் மூலம் உதவி செய்தல். | 1,015 விதவைகள் | 10.15 | 1,020 விதவைகள் | 10.20 |
| 6 | அனாதைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி அளித்தல். | வறிய நிலையிலுள்ள 18 முதல் 30 வரையுள்ள வயதுத் தொகுதியைச் சேர்ந்த அனாதைப் பெண்களுக்கு 1,000 ரூபாய் நிதியுதவி அளித்தல். | 200 பெண்கள் | 2.00 | 194 பெண்கள் | 1.94 |
| 7 | வறிய நிலையிலுள்ள குழந்தைகளுக்கு பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குதல். | இடைநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலுகின்ற வறிய நிலையிலுள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு உதவி செய்தல். | 4,000 | 3.39 | 4,000 | 3.19 |
| 8 | மகளிர் மன்றங்கள் | கிராமப் பகுதிகளிலுள்ள பல்வேறு சமுதாய, பொருளாதார நிலையைச் சேர்ந்த பெண்களை ஒன்றாகச் சேர்த்தல். | 11,520 | 49.83 | 11,520 | 49.83 |
| 9 | விதவைகள் மறுமணத்தை ஊக்குவித்தல். | ஒவ்வொரு தம்பதிக்கும் 5,000 ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்குவதன் மூலம் விதவைகளுக்கு மறுவாழ்வளித்தல். | 100 தம்பதிகள் | 5.00 | 100 தம்பதிகள் | 5.00 |
| 10 | தொண்டு முகவரமைப்புகள் மூலம் (இந்திய அரசின் திட்டம்) பணிபுரியும் மகளிருக்கான இல்லங்களைக் கட்டுதல். | நிதியுதவி அளித்தல் — கட்டிடம் கட்டுவதற்காகும் செலவில் 75 சதவீதத்தை மத்திய அரசும் 15 சதவீதத்தை மாநில அரசும் மானியமாக் வழங்குதல். | 3 இல்லங்கள் | 1.00 | இல்லை (தொடக்க நிலையில் உள்ளது). | இல்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | தொண்டு நிறுவனங்கள் நடத்துகின்ற சேவை இல்லங்களுக்கு மானியம் வழங்குதல். | ஆதரவற்ற மாணவிகளுக்கு பள்ளி இறுதி வகுப்பு (திட்டத்தில் சேராதது) மற்றும் 10 ஆம் வகுப்பு (திட்டத்தில் சேர்ந்தது) ஆகியவற்றின் பாட முறையில் குறுகிய காலப் பயிற்சி அளித்தல். | | | 2 இல்லங்கள் | |
| 12 | இலவசமாகத் தையல் எந்திரங்கள் வழங்குதல். | 20 முதல் 40 வயது வரையுள்ள உடல் ஊனமுற்ற, பொருளாதார நிலையில் நலிவுற்ற பெண்களுக்கு உதவுதல். | 899 | 7.60 | 897 | 8 .84 |
| 13 | வழிகாட்டும் அமைப்பு .. | ஆயுள் ஈட்டுறுதிக்கழகம் மற்றும் வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றிடமிருந்து வரவேண்டிய தொகையைப் பெறுவதற்கு உதவி செய்தல். ஆதரவற்ற பெண்கள் இலவசமாகச் சட்ட உதவியைப் பெற உதவுதல். பல்வேறு சமூக நலத் திட்டங்களின் கீழ் மகளிர் அரசின் உதவியைப் பெற வழிகாட்டுதல். | | | 20 அமைப்புகள் 21,000 பெண்கள் பயனடைந்துள்ளனர். | |
| 14 | பணிமையங்கள், உற்பத்திப் பிரிவுகள். | குடும்பத்தின் ஆண்டு வருமானம் 6,400 ரூபாய்க்கும் குறைவாக உள்ள பெண்களுக்கு பல்வேறு தொழில்களில் ஓராண்டிற்குப் பயிற்சி அளித்தல். | 444 | .36 | 33 மையங்கள், 429 பேர்கள். | 30.1 |
| 15 | எழுதுபொருள் தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | வறிய நிலையிலுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல். | | | 13 சங்கங்கள் மூலம் 150 பெண்கள் பயனடைந்துள்ளனர். | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | வறிய நிலையிலுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பளித்தல். | | | | | | | |
| | (அ) கயிறு தயாரிக்கும் பிரிவு, நல்லூர், தஞ்சாவூர் மாவட்டம். | | வறிய நிலையிலுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பளித்தல். | 346 பெண்கள். | | | 346 பெண்கள் பயனடைந்துள்ளனர். | |
| | (ஆ) பட்டுநூல் நூற்பு சங்கம், சேலம். | | | 50 பெண்கள். | | | 50 பெண்கள் பயனடைந்துள்ளனர். | |
| | (இ) பனைபடு பொருட்கள் உற்பத்திச் சங்கங்கள். | | | 250 பெண்கள். | | | 250 பெண்கள் பயனடைந்துள்ளனர்: | |
| | (ஈ) திரவ சோப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் பவுடர் தயாரிப்புச் சங்கம். | | | 25 பெண்கள். | | | 25 பெண்கள் பயனடைந்துள்ளனர். | |
| | (உ) மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் — | | | 20,000 பெண்கள். | | | 74 சங்கங்கள், 20,000 பெண்கள் பயனடைந்துள்ளனர். | |
| 17 | வாழ்க்கைத் தொழில் பயிற்சி. | | ஆண்டு வருமானம் 6,400 ரூபாய்க்கும் குறைவாக உள்ள பெண்களுக்கு நிதியுதவி அளித்தல். அரசு அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் தட்டச்சு, சுருக்கெழுத்து. கணினிப் பொறியை இயக்குதல் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல். தட்டச்சுப் பயிற்சிக்கு 150 ரூபாயும், சுருக்கெழுத்துப் பயிற்சிக்கு 200 ரூபாயும், கணினிப் பொறியை இயக்கும் பயிற்சிக்கு 1,500 ரூபாயும் பயிற்சி உதவித் தொகையாக வழங்குதல். | சிறப்புத் திட்டம் : 5,000 மாணவர்களுக்கு தட்டச்சுப் பயிற்சி அளித்தல். 500 மாணவர்களுக்கு கணினிப் பொறியை இயக்குவதில் பயிற்சி அளித்தல். | 7.50 | 5,000<br>500 | | 7.50 |
| | | | | சாதாரண திட்டம் : 1,500 | 2.70 | 1,500 | | [illegible] |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | சுயவேலைவாய்ப்புத் திட்டம் : (அ) சிறு தொழில் தொடங்குதல். | ஆதரவற்ற விதவைகள் கணவனால் கைவிடப்பட்ட மனைவிமார் ஆகியோருக்கு வங்கிக் கடன் வழங்குதல். ஆண்டு வருமானம் 6,400 ரூபாய்க்குக் குறைவாக உள்ள கிராமப் பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல். | 11,626 சங்கங்கள். | 69.76 | 25.86 | 11.1 |
| | (ஆ) சாக்குக்கட்டி தயாரிப்பு மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள். | | 17 மாவட்டங்களில் 750 சங்கங்கள். | 60.60 | 750 | 60.60 |
| | (இ) காலணிகள் தயாரிப்போர் சங்கங்கள். | ஆண்டு வருமானம் 6,400 ரூபாய்க்கும் குறைவாக உள்ள கிராமப் பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு வேலை வாய்ப்பளித்தல். இந்த சங்கங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட செருப்புகளை பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்குதல். | 39 சங்கங்கள் | 9.78 | 39 சங்கங்கள் குழந்தைகள் அணிந்துகொள்ளும் 11,64,012 ஜதை செருப்புகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. 53,563 செருப்புகள் தயாரிக்கப்பட்டு அனாதை இல்லங்களுக்கு வழங்கப்பட்டன. பெண்கள் அணிந்து கொள்ளும் 3,27,178 செருப்புகள் தயாரிக்கப்பட்டு இருப்பில் உள்ளன. | 4.37 |
| 19 | மகளிர் மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் (குழந்தைகளுக்கான துணை உணவைத் தயாரிப்பதற்கானவை). | பெண்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்கு வகை செய்தல். | 1,650 பெண்கள் பயனடைந்துள்ளனர். | 68.16 | 1,073 பெண்கள், 22 சங்கங்கள். | 68.16 |

அட்டவணை 3—உடல் ஊனமுற்றோர் நலன்.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சிறப்புப் பள்ளிக் கல்வி — | உடல் ஊனமுற்றோருக்குத் தனிக் கவனமும் கல்வியும் அளித்தல். | | | பள்ளிகள்—23,<br>பயனடைந்தோர் 1,900 குழந்தைகள்,<br>XII ஆம் வகுப்பு வரை.<br>பார்வையிழந்தோர் அரசினர் பள்ளி .. 11<br>காது கேளாதோர் .. 10<br>கை, கால் ஊனமுற்றவர் 1<br>மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளி ... 1<br>23 | |
| 2 | தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளுக்கு நிதி உதவி. | | | | பயனடைந்தோர் :—<br>XII ஆம் வகுப்பு வரை 3,873 குழந்தைகள்<br>பள்ளிகள் 25.<br>கண் பார்வையற்றோருக்கான பள்ளி .. 9<br>காது கேளாதோருக்கான பள்ளி 11<br>மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி .. 2<br>தொழு நோயால் பாதிக்கப்பட்டவருக்கான பள்ளி 1<br>கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளி .. 2<br>25 | 64.47 |
| | ஆசிரியர்களுக்குப் பயிற்சி : | கண் பார்வையற்றோருக்கும் காது கேளாதோருக்கும் கல்வி கற்பிக்க சிறப்பு வகை பயிற்சி அளித்தல். | | | கண் பார்வையற்றோருக்கான 25 பேர் ஆசிரியர்கள்.<br>கண்பார்வையற்றோருக்கு— ரூ.<br>காது கேளாதவர்களுக்கான ஆசிரியர்கள் 10 பேர்.<br>காது கேளாதவர்களுக்கு ரூ. | 1.57<br>9.81 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | தையல் மிஷின்களை இலவசமாக வழங்குதல். | 6,400 ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானமுள்ள கைம் பெண்கள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல். | 4,500 | 38.25 | 4,316 | |
| 5 | மனவளர்ச்சி குன்றியவருக்கான அரசினர் பள்ளி. | சிறப்புக் கல்வியும் இலவச தங்குமிட வசதியும், ஆடைகள், மருத்துவ உதவி ஆகியவையும் அளித்தல். | | | குரோம்பேட்டையில் ஒரு பள்ளி 50 மாணவர்கள். | 2.83 |
| 6 | கண் பார்வையற்ற பெண்களுக்கான அரசினர் புதுவாழ்வு இல்லம். | வறிய, ஆதரவற்ற பெண்களுக்கு (18 முதல் 40 வயது வரை உள்ளவர்கள்) புகலிடமாக இருப்பது; மேலும் நெசவுத் தொழிலிலும் சாக்கட்டித் தயாரிப்பதிலும் பயிற்சி அளிப்பது. | 40 பெண்கள் | | இல்லம்—1<br>இல்லத்திலுள்ள பெண்கள்—29 | 60.00 |
| | அரசினர் வட்டார பார்வையற்றோருக்கான எழுத்துமுறை அச்சகம். | அரசினர் பள்ளிகளிலும் அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கான (Braily Text Books) பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குதல். | | | அச்சகம் 1 | 3.08 |
| | தொண்டு நிறுவனங்களுக்குப் பராமரிப்பு மானியம். | 8 முதல் 14 வயது வரையிலான உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குமான தொண்டு இல்லங்களுக்கு நிதி உதவி வழங்குதல். | | 2.20 | பயனடைந்த நிறுவனங்கள் 21<br>குழந்தைகள்— 741 | 2.20 |
| 1 | மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மானியம் வழங்குதல். | மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் பயிற்சி அளித்து, கல்வி புகட்டி, கவனித்துக் கொள்ளத்தக்க வகையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல். | 2 | 1.75 | 25 ஆசிரியர்கள். | 1.75 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 10. | கண்பார்வையற்றவர்களை மணந்துகொள்ளும் நல்ல நிலையிலுள்ளவர்களுக்குச் சலுகை. | கண்பார்வையற்றவர்கள் மணம் முடித்துக்கொள்வதை ஊக்குவித்தல். | 40 தம்பதியினர். | 2.40 | 40 தம்பதியினர். | 2.40 |
| 11. | வட்டாரப் புதுவாழ்வு மையங்கள் மூலமாக உடல் ஊனமுற்றவருக்கு உதவி. | மருத்துவ உதவி, தொழில் உதவி, பொருளாதார உதவி, சமூக உதவி போன்ற புதுவாழ்வு உதவி அளிக்க ஏற்பாடு செய்தல். | மையங்கள்-5<br>960<br>4,800 | 34.78 | மையங்கள்— 5.<br>90 முதல் 95 சத[illegible] ரை. | 34.77 |
| 12. | கை, கால் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்புகளை வழங்கும் துணை நிலையம். | மருத்துவ உதவி, அறுவைச் சிகிச்சை மூலம் சரி செய்தல், பயிற்சி ஆகியவற்றுக்கு வகைசெய்தலும் கருவிகள், சாதனங்கள் வழங்குதலும். | நிலையம்-1 முற்றிலும் கை, கால் ஊனமுற்றவர்களுக்கான பள்ளியுடன் இணைந்தது. | 3.01 | மையம்-1<br>மாணவர்-100 | 3.17 |
| 13. | வேலைவாய்ப்பற்ற கண் பார்வை இழந்தோர்க்கு இடருதவி. | வேலைவாய்ப்பற்ற கண் பார்வை இழந்தோர்க்கு இடருதவித் தொகை வழங்குவதன்மூலம் உதவி அளித்தல்— பட்டப் படிப்பு பயின்றவர்க்கும் பட்டதாரிகளுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100. புகுமுக வகுப்பு, மேல்நிலை வகுப்பு படித்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 75. பள்ளி இறுதிப் படிப்பு படித்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50. | | 2.60 | 781 பேர். | .6 |
| 14 | மத்திய அரசின் திட்டப் பகுதியில் வாழும் உடல் ஊனமுற்றவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கும் பணி. | காட்டாங்குளத்தூர், திருக்கழுக்குன்றம் பகுதியில் உள்ள உடல் ஊனமுற்றோர்க்கு உதவி. | | | திட்டப்பகுதி-2 பயன் பெறுவோர்-1,000 பேர். | 9.70 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | பெட்டிக்கடை—சுயவேலை-வாய்ப்பு சிறப்புத் திட்டம். | வேலைவாய்ப்பற்ற உடல் ஊனமுற்ற வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பெட்டிக் கடைகளை இலவசமாக வழங்குதல். | பெட்டிக் கடைகள்-750 *சு.வே.வா.-1,300 தனித் திட்டம்-2,600. | 1.50<br>8.00<br>33.66 | 750 பெட்டிக் கடைகள்.<br>1,300 சுய வேலை வாய்ப்பு.<br>2,600 தனித் திட்டம். | 1.50<br>8.00<br>32.00 |
| 16 | மூன்று சக்கர வண்டிகளை இலவசமாக வழங்குதல். | கை, கால் ஊனமுற்ற வறியவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல். | | | 1,000 பேர். | 15.00 |
| 17 | சக்கர நாற்காலிகளை இலவசமாக வழங்குதல். | வாத நோயால் பாதிக்கப்பட்ட ஏழை நோயாளிகளுக்கு உதவுதல். | | | 1,000 பேர். | 1.00 |
| 18 | உடல் ஊனமுற்ற மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை. | எட்டாம் வகுப்பு வரை தமிழ்நாடு அரசினர் படிப்புதவித் தொகை 9-ஆம் வகுப்பு முதல் தொழில்நுட்பக் கல்விப் படிப்புக்கும், தொழிற்சாலைப் பயிற்சிக்கும் மத்திய அரசின் படிப்புதவித் தொகை. | | | 10,400 மாணவர்கள். | மத்திய அரசு படிப்புதவித் தொகை—ரூ. 22.50. மாநில அரசு படிப்புதவித் தொகை—ரூ. 4.85. |
| | பெட்ரோலுக்கு உதவித் தொகை. | சொந்தமாக மோட்டார் வாகனங்கள் வைத்திருக்கும் உடல் ஊனமுற்றோருக்கு 50 சதவிகிதம் உதவித் தொகை வழங்குதல். | இது மத்திய அரசின் திட்டமாகும். இத் திட்டம் 1988-89 இல் மாநில அரசுக்கு மாற்றப்பட்டது. | | | |
| 20 | கண்பார்வையற்றோருக்கு (உரிய வயதடைந்தோர்) அரசினர் தொழிற்சாலைகள் பயிற்சி மையம். | பொருத்துநர்-எந்திரம் இயக்குநர் தொழிற் பயிற்சி வகுப்பு, புத்தகம் அடிப்படை தொழில் பயிற்சி வகுப்பு, புத்தகம் கட்டுதல், மின் வேலை ஆகியவற்றில் கல்வி-நடைமுறைப் பயிற்சி அளித்தல். | | 3.68 | நடப்பாண்டில் 30 பேர்கள்—இதுவரை 865 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது—360 பேருக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. | |
| 21 | உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு பயணச் சலுகை. | உடல் ஊனமுற்ற குழந்தைகள் வீட்டிலிருந்து பள்ளி செல்லவும், மருத்துவமனை செல்லவும் இலவச பேருந்து பயண அனுமதி அட்டைகள் வழங்கப்படுகின்றன. | | | 2,400 மாணவர்கள். | 7.25 |

**18. இளம்பிள்ளை வாத நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கும் திட்டத்தைச் செயல் படுத்தல் (மத்திய அரசு).**

இத்திட்டம், 1988-89 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 1992-93 ஆம் ஆண்டு வரை, தமிழ்நாடு முழுவதும், 5 நிலைகளில் செயற்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதல் நிலை, 1989 ஜனவரியில் தொடங்கப்பட்டது. முதல் நிலையில் '' இத்திட்டம் '' மாநிலம் முழுவதிலுமுள்ள 19 மாவட்டங்களைச் சேர்ந்த 38 வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரு வளர்ச்சி வட்டாரங்கள் என்ற விதத்திலும் சென்னை மாவட்டத்தில் 9 கோட்டங்களிலும் இத்திட்டம் செயற் படுத்தப்படுகிறது. ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்குச் சராசரியாக மக்கள் தொகை ஓர் இலட்சமாகும். மத்திய அரசு இத்திட்டத்தின் மூலம் முதல் நிலைக்கு ரூபாய் 109.50 இலட்சம் வழங்கியுள்ளது. பணியில் ஏற்பட்ட முன்னேற்றம் வருமாறு :—

(i) இத்திட்டத்தைச் சேர்ந்த சுமார் 5,241 பணியாளர்களுக்குப் பணிநோக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

(ii) அப்போது இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எடுக்கப்பட்டது.

(iii) 1989 மார்ச்சுக்குள் 16 மாவட்டங்களைச் சேர்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்களில் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சோதனை நடத்தி முடிக்கப்பட்டது. சென்னை, செங்கற்பட்டு, நீலகிரி, காமராஜர் ஆகிய மாவட்டங்களில் இச்சோதனை நடந்தேறி வருகிறது.

(iv) இம்மாநிலத்தின் 16 மாவட்டங்களில் மருத்துவக்குழு இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களைச் சோதனை செய்து அளித்த உதவி பற்றிய விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும், உதவியின் தன்மையும். | உதவி தேவைப் படுபவர் களின் எண்ணிக்கை. | உதவி அளிக்கப் பட்டவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 அறுவை சிகிச்சைக்காக தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 1981 | 94 |
| 2 பயிற்சி முறை சிகிச்சை | [illegible],942 | [illegible]8 |
| 3 கால் ஊனமுற்றோர் காலில் அழுத்தம் ஏற்படாமல் நடக்கும்படி உதவ இணைத்துக் கட்டப்படும் வரிச்சல் (Caliper). | 3,876 | |
| 4 ஊன்று கோல்கள் | 316 | |
| 5 சக்கர நாற்காலிகள் | 177 | 2 |
| 6 மூன்று சக்கர சைக்கிள்கள் | 450 | 450 |
| 7 பள்ளிகளில் சேர்த்தல் | 568 | |
| 8 சிகிச்சைக் காலத்தில் பயிலுவதற்குரிய பள்ளிகளில் சேர்த்தல். (Transitional School). | 340 | |
| 9 படிப்புதவித் தொகை | 2,058 | |
| 10 கடனுதவி | 957 | 63 பரிந்துரைக்கப்பட்டது. |
| 11 வேலை வாய்ப்புகள் | 203 | 203 பரிந்துரைக்கப்பட்டது. |
| 12 முதியோர் உதவித்தொகை.. | 125 | 125 பரிந்துரைக்கப்பட்டது. |
| 13 பணி இல்லங்களில் சேர்த்தல் | 317 | 6 பரிந்துரைக்கப்பட்டது. |
| 14 பராமரிப்பு மானியம் .. .. | 94 | ... |

தமிழ்நாடு சமூகநல வாரியம் அளிக்கும் உதவி—

நிதியுதவி அளித்தல், தொழில் நுட்ப வழிகாட்டுதல்.—தொண்டு நிறுவனங்கள், தங்கள் பணிகளை மேம்படுத்தவும், விரிவுபடுத்தவும், வலுப்படுத்தவும், புதிய பணிகளைத் தொடங்கி செய்யவும் தமிழ்நாடு சமூகநல வாரியம் அவற்றிற்கு நிதி உதவி அளிப்பதோடு, தொழில் நுட்ப வழிகாட்டவும் செய்கிறது. ஆண்டு மானியமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,000-க்கு மேற்படாமல் 50 சதவிகித இணை மானியமும் திட்டக்கால மானியத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு ரூபாய் 10,000-மும் அளிக்கப்படுகின்றன.

| ஆண்டு. | இலக்கு. | திட்டச்சாதனை | நிதி. | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு. | சாதனை. (ரூபாய் இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1988-89 (ஆண்டு மானியம்). | 206 நிறுவனங்கள். | 202 நிறுவனங்கள். பயனடைந்தோர் 9,737. | 3.80 | 3.80 |
| 1988-89 (திட்டக்காலம்) | 33 நிறுவனங்கள். | 33 நிறுவனங்கள். பயனடைந்தோர் 2,040. | 2.78 | 2.78 |

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

தமிழக அரசின் சத்துணவு முயற்சிகளின் திறன், பயனடைவோரின் எண்ணிக்கை, பயன் ஆகியவற்றை மேம்படுத்துவதே தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும். ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்படக் கூடிய நலிந்த பிரிவினரான 6—36 மாதக் குழந்தைகளுக்கு முதற்கண் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆயினும் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலையிலுள்ள கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பள்ளிப் பருவமடையாக் குழந்தைகள் போன்றவர்களும் பயனடையும் வகையில் ஊட்டச்சத்துத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மற்ற ஊட்டச்சத்துத் திட்டங்களுடன் ஒப்பிடும்போது இத்திட்டம் இரண்டு சிறப்பு இயல்புகளைக் கொண்டுள்ளது :—

(1). இத்திட்டம் செயல்படும் மாவட்டங்களில் உள்ள கிராமப் பகுதிகளில் தகுதியுள்ள குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களின் வளர்ச்சியை முறையாகக் கண்காணிக்கும் முறையை ஏற்படுத்துவது.

(2). ஊட்டச்சத்து மேம்பாடு அடையும்வரை அதற்கான ஊட்டச்சத்துணவை வழங்குவதுடன் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்துக் கல்வி அளித்து தங்கள் உணவுப் பழக்க வழக்கங்களில் சரியான மாற்றங்களை ஏற்படுத்துவது.

2. திட்டம் செயல்படும் விதம்.—மதுரை, அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிதம்பரனார், வடஆற்காடு மற்றும் செங்கல்பட்டு ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள 173 வட்டாரங்களில் இத்திட்டம் படிப்படியாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், முதலமைச்சர் சத்துணவு திட்டத்துடன் இணைந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டாரங்களிலும், செங்கல்பட்டு மாவட்டத்தின் 8 வட்டாரங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 4 வட்டாரங்களிலும் திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமாக செயல்பட்டு வருகிறது.

ஊட்டச்சத்துப் பணிகளின் கீழ் திட்டம் செயல்பட்டு வரும் ஒவ்வொரு கிராமத்திலும் சமுதாய ஊட்டச்சத்து மையம் அமைக்கப்பட்டு அதன் மூலம் பணிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு 1,500 மக்கள் தொகைக்கும் ஒரு ஊட்டச்சத்து மையம்

அமைக்கப்பட்டு அதற்கு பொறுப்பான ஒரு ஊட்டச்சத்துப் பணியாளர் அமர்த்தப்பட்டுள்ளார். இவ்வாறு 9,000 ஊட்டச்சத்து மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 1,189 மையங்கள் இந்த ஆண்டிலிருந்து செயல்படுகிறது. புதுக்கோட்டை உட்பட திட்டம் செயல்படும் பகுதிகளில் உள்ள 6—36 மாதக் குழந்தைகளின் எடை எடுக்கப்பட்டு தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் ஆகியோருக்கு இணை உணவு வழங்கப்படுகிறது. தாய்மார்களுக்குச் சத்துணவுக் கல்வி அளிக்க இணை உணவு வழங்கப்படுகிறது. இதற்கான சத்துமாவு கர்நாடக மாநிலத்திலுள்ள மாநில ஆக்ரோ கார்ன் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெறப்படுகிறது.

கர்நாடகத்திலிருந்து இவ்வாறு பெறப்படும் சத்துமாவில் அடங்கியுள்ள பொருட்களும், அளவுகளும் வருமாறு :

| | |
|---|---|
| 1. கோதுமை | 35 பாகம். |
| 2. பொட்டுக்கடலை | 10 |
| 3. கடலை பிண்ணாக்கு | 10 |
| 4. வெல்லம் | 30 |
| 5. சோளம் | 25 |
| 6. வைட்டமின் | 1 |
| 7. தாது உப்புகள் | 1 |

சத்துணவு சம்பந்தமான சுகாதாரப் பணிகளை ஊட்டச்சத்துப் பணியாளர்கள் மேற்கொள்கின்றனர். 6 மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' சத்து திரவத்தை கொடுக்கும் பணியையும், 4 மாதங்களுக்கு ஒரு முறை குழந்தைகளுக்கு பூச்சி நீக்கு மருந்தை முறையாக கொடுக்கும் பணியையும் தற்போது ஊட்டச்சத்துப் பணியாளர்கள் செய்து வருகின்றனர். பல நோக்கு சுகாதாரப் பணியாளர் மூலம் தடுப்பூசிகள் போடும் பணி செய்யப்படுகிறது. மாநில அளவில் மேற்கொள்ளப்படும் பலநோக்கு சுகாதாரப் பணிகளில் ஒரு பகுதியான திட்டப் பகுதிகளின் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு அதில் ஒரு ஆண் மற்றும் பெண் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

3. ஆய்வுகள்.—தொடர்புப் பிரிவின் கல்வி உதவி சாதனங்களின் பயன் மற்றும் பயன்படும் விதம் பற்றிய ஆய்வு சென்னையிலுள்ள பெர்குசன் அண்டு கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. செயல் தேர்வு வட்டாரங்கள்.—செங்கல்பட்டில் உள்ள திருக்கழுக்குன்றம் ஒரு செயல் தேர்வு வட்டாரமாக தேர்ந்தெடுக்கப்பட்டு சில சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இது போன்ற 6 மாவட்டங்களிலும் செயல் தேர்வு வட்டாரங்கள் கண்டறியப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளன.

அவையாவன.—மதுரை மாவட்டத்தில் கிழக்கு மதுரை, இராமநாதபுரத்தில் கரியப்பட்டி, வடஆற்காடு மாவட்டத்தில் ஆற்காடு, செங்கல்பட்டில் சோழவரம், சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடி, புதுக்கோட்டையில் குன்னாண்டார் கோயில் ஆகியன. இந்த வட்டாரங்களில் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. கிழக்கு மதுரை (மதுரை மாவட்டம்) | சுகாதாரப் பணியாளர், ஊட்டச் சத்துப் பணியாளர், சத்துணவு அமைப்பாளர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி. |
| 2. கரியப்பட்டி (இராமநாதபுரம் மாவட்டம்). | ஷை. |
| 3. ஆற்காடு (வடஆற்காடு மாவட்டம்) | ஷை. |
| 4. தூத்துக்குடி (சிதம்பரனார் மாவட்டம்). | புத்தறிவுப் பயிற்சி மறு சீராய்வுக் கூட்டம், மருத்துவச்சி பயிற்சி, சமையல் பயிற்சி மற்றும் பெண்கள் தொடர்புக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி. |
| 5. திருக்கழுக்குன்றம் (செங்கற்பட்டு மாவட்டம்). | (மறு சீராய்வுக் கூட்டம், மருத்துவச்சி பயிற்சி, புத்தறிவுப் பயிற்சி) |

5. மற்றவை :

(1) வயிற்று பூச்சி நீக்கம், தடுப்பூசி போடுதல், வயிற்று போக்கு ஆகியவை பற்றிய பயிற்சிப் படங்கள் தயாராகி வருகின்றன.

(2) கீழ்க்கண்ட உதவி சாதனங்கள் பெறப்பட்டன :

(அ) 4 பயிற்சி படங்களில் படப் பிரிண்டுகள் கூடுதலாக வாங்கப்பட்டன.

(ஆ) யூ. மாட்டிக் கேசெட்டுகளின் படங்கள் மாற்றப்பட்டன.

(இ) 16 மி.மீ. படம் ; டேப் போட்டு படம் ஓட்டுதல் மற்றும் உபகரணங்கள் வைக்க உதவும் ஸ்டாண்டு.

6. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் 1988-89 வருடத்திற்கான இலக்குகளும் குறியீடுகளும் :

| விவரம். (1) | இலக்கு 1988-89 (2) (சதவீதத்தில்.) | சாதனையின் சதவீதம். (3) |
|---|---|---|
| ஊட்டச்சத்துப் பணிகள்— | | |
| 1. ஊட்டச்சத்து மையத்தில் எடை எடுக்கப்படும் குழந்தைகள். | 90 | 92 |
| 2. இணை உணவு பெற தகுதி பெறும் குழந்தைகள் | 25 முதல் 35 வ | 23 |
| 3. ஊட்டச்சத்து மையத்தில் வயிற்று பூச்சி நீக்க மருந்து கொடுக்கப்படும் குழந்தைகள். | 90 | |
| 4. வைட்டமின் 'ஏ' திரவம் கொடுக்கப்படும் குழந்தைகள். | 90 | |

சுகாதாரப் பணிகள்.—சுகாதாரத் துறைக்கு தனி இலக்கு குப்ப

அத்தியாயம் 29.

தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை.

தொல் பொருள் இயல்.

1. கல்வெட்டியல்.—கல்வெட்டாய்வாளர்கள், இவ்வாண்டில் தஞ்சாவூர், செங்கை-அண்ணா, மதுரை, கோயம்புத்தூர் முதலிய மாவட்டங்களில் 256 கிராமங்களில் ஆய்வு செய்து சுமார் 256க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களை நகல் எடுக்கும் பணியையும், சுமார் 125க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களையும் அந்த இடத்திலேயே பார்த்து படித்து எழுதும் பணியையும் மேற்கொண்டனர். 225க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் முதல் முறையாகவும் 135-க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் இரண்டாம் முறையாகவும் படிக்கப் பட்டன.

சுமார் 23 ஓலைச்சுவடிகள் படித்து எடுத்து எழுதப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை குளுவ நாடகம், தாயுமானவர் பாடல், முத்து வீரப்ப மன்னர் பொன்னையாசாமி பாடல், நடந்த கும்மிப்பாடல், முத்துத்தாண்டவர் பதுமம் முதலிய தலைப்புகளாகும்.

பன்னட்டார் செப்பு பட்டயம், வீரப்ப நாயக்கர் செப்புப் பட்டயம் ஆகியவை உட்பட சுமார் 8 செப்புப் பட்டயங்கள் படித்து எழுதப்பட்டன.

பத்துக்கும் மேற்பட்ட வரலாற்று ஆய்வு கட்டுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. வரலாறு மற்றும் நாணயவியல் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு நான்கு ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன.

தஞ்சாவூர், செங்கை-அண்ணா, மதுரை ஆகிய மாவட்டங்களின் தொல்லியல் வரலாறு பற்றிய துணை நூல் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை, கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு வட்டெழுத்து, சிற்பம், ஆகமம், சமஸ்கிருதம் ஆகியவை குறித்துப் பயிற்சியளிப்பதுடன் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களுக்கு நேரில் அழைத்துச் சென்று காட்டி நடைமுறை பயிற்சி அளிக்கப்படு கிறது.

மாநில முழுவதும் '' உலகமரபு விழா '' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புதர்களை அகற்றியும் தேவையற்ற, செடிகொடிகளைக் களைந்தும் பல பழஞ்சின்னங்கள் தூய்மைப்படுத்தப்பட்டன. ஆர்வமுள்ள மாணவர்கள் நமது பண்பாட்டை விளக்கும் பழஞ்சின்னங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் பணியைப் பாராட்டும் வகையில் பங்கு பெற்றவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. எம்.பில்., மற்றும் டாக்டர் பட்டம் பெற ஆய்வு செய்யும் ஆராய்ச்சி மாணவர் களுக்குக் கல்வெட்டு மற்றும் வரலாறு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

2. வரலாற்றுக்குள் முற்பட்டக்கால தொல்பொருளியல்.—தர்மபுரி மாவட்டத்தில் பதினைந்து இடங்களில் ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வின்போது பெருங்கற்கால சின்னங் கள், தொல்லுயிர் எச்சங்கள் (Vestiges) கண்டுபிடிக்கப்பட்டன. பேராசிரியர் இராபர்ட் புரூஸ்ஃபூட் என்பவருடைய (Pre Historic and protc-histcric of India) என்ற நூல் படிக்கப்பட்டு ஆய்வுக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன.

செங்கை—அண்ணா மாவட்டத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட பகுதிகள் குறித்து விரிவான குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்திரம்பாக்கம், நம்பாக்கம், வடமதுரை, கிருஷ்ணாபுரம், ரங்காபுரம், எருமைவெட்டிப் பாளையம், கனிர் பாளையம், பிளேஸ் பாளையம், பெரியபாளையம் ஆகிய பகுதிகளில் மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டு, சேகரிக்கப்பட்ட பழங்காலச் சின்னங்கள் பூண்டி அருங்காட்சியகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன,

நெல்லை—கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் பழங்கற்கால நுண் கற்காலப் பகுதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றுள் வழுதியூர், நரியூத்து, வல்லவன்கோட்டை, துலுக்கப்பட்டி, இனாம் கோயில், தென்மலை, கூத்தாம் புளி, நாசரத்து, சாயர்புரம், கட்டாலங்குளம், மெய்ஞானபுரம், குதிரை மொழித்தேரி ஆகியவை அடங்கும்.

3. தொல்பொருள் அலுவலர் பிரிவு :— 1988–89ஆம் ஆண்டில் சுமார் 500 கிராமங்களில் ஆய்வு மேற்கொண்டு கிடைத்தற்கு அரிதான தொல்பொருட்களான காசுகள் (சோழர், பாண்டியர், ஆற்காடு நவாப், மராட்டியர்) பெருங்கற்கால பானை களின் சில்லுகள், பழைய கற்கால கருவிகள் ஆகியவை சேகரிக்கப்பட்டன. இவை மாவட்டங்களிலுள்ள துறை அருங்காட்சியகங்களில் மக்களின் பார்வைக்கு வைக் கப்பட்டுள்ளன.

தொல்பொருள் ஆய்வுப் பணிகளில் ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, அதனைப் படித்து எழுதுவது மற்றொரு முக்கியப் பணியாகும். இவ்வாண்டில் சுமார் 20 ஓலைச் சுவடிகள் அல்லாத வேறு சுவடிகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மருத்துவம், இராமாயணம், கிருஷ்ண நாடகம், அஸ்தகம், பழமொழி, மூதுரை முப்பது போன்றவை குறிப்பிடத்தக்கவை.

ஊர்களிலுள்ள கோயில்களில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அங்குள்ள உதிரி சிற்பங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இன்றுவரை படியெடுக்கப்படாத அல்லது பார்க்கப்படாத கல்வெட்டுக்கள் பார்வையிடப்பட்டன.

தொல்பொருள் அலுவலர்கள் தாம் மேற்கொண்ட கள ஆய்வையும் புதிய கண்டுபிடிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு சுமார் 25 ஆய்வுக் கட்டுரைகளை அளித்துள்ளனர்.

4. அருங்காட்சியகங்கள்.— இம்மாநிலமெங்கிலும் இத்துறையின்கீழ் 15 அருங்காட்சியகங்கள் உள்ளன. சுமார் 29 சுடுமண் பாவைகள், கீரைப்பூச்சு உருவங்கள், மட்கலையங்கள், 70 காசுகள், 7 சிற்பங்கள், ஓலைச் சுவடிகள், கற்கருவிகள், பானை ஓடுகள், மராட்டியர் கால ஓவியங்கள், 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட கடிகாரம் ஆகியவை சேகரிக்கப்பட்டு இந்த அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன. இந்த அருங்காட்சியகங்களை இதுவரை 73,780 பேர் பார்வையிட்டுள்ளனர்.

5. வெளியீடுகள்.— கீழ்க்காணும் தமிழ் நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன:—

1. ''கல்வெட்டு'' (இதழ் எண். 22, 23)— காலாண்டு இதழ்.
2. தஞ்சாவூர் இராசராசன் வரலாற்றுக் கூடம்— கையேடு.
3. தமிழக வரலாற்றுச் சின்னங்கள்.
4. அருண்மொழி.
5. இராமலிங்க விலாசம்— அருங்காட்சியகக் கையேடு.

6. பாதுகாப்பு.—திருமலை நாயக்கர் மஹால், தஞ்சாவூர் அரண்மனைக் கட்டிடங்கள், தரங்கம்பாடியிலுள்ள டானிஷ்பார்க் கோட்டை, இராமநாதபுரம் அரண்மனையிலுள்ள இராமலிங்க விலாசம் போன்ற முக்கிய வரலாற்றுச் சின்னங்கள் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் சிதம்பரனார் மாவட்டம் ஓட்டப்பிடாரத்திலுள்ள பிரிட்டிஷ் கல்லறை, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள சின்னையன்குளம், மதுரை மாவட்டம் அழகர் கோயிலிலுள்ள திருமலை நாயக்கர் மண்டபம், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தஞ்சை அரண்மனை போன்ற சின்னங்கள் இத்துறையால் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்படுவது தொடர்பாக தேவையான அரசிதழ் அறிவிக்கை பெறப்பட்டுள்ளது. பூலாவுடையார் கல்வெட்டு, திருப்பாலைத்துறை பாலைவனநாதர் கோவிலிலுள்ள இராட்சச நெற்களஞ்சியம், ஆலம்பாடி பாறை ஓவியங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் பாச்சூர் சிவன் கோயில், பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்திலுள்ள மருதுபாண்டியர் கோட்டை, காஞ்சிபுரம் சொக்கீஸ்வரர் கோயில், கூரம் சிவன் கோயில், தஞ்சாவூர் மாவட்டத்தில் மனோரா, வட ஆர்க்காடு மாவட்டம் கூழம்பந்தல் திருப்பருத்திக்குன்றம் சந்திரபிரபா கோயில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அழகிய முங்கவம் சிவன் கோயில் மதுரை மாவட்டம் ஆனைமலை தீர்த்தங்கரா சிற்பங்கள் பிராமிக் கல்வெட்டுக்கள், லாடன் கோயில் ஆகிய சின்னங்களுக்கு விவரங்கள் சேகரித்து அரசிதழில் தொடக்க அறிக்கைகள் இப்போது வெளியிடப்பட்டுள்ளன. காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள சித்தையன் கோட்டை, செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள செரப்பஞ்சேரி சிவன் கோயில், காளையார் கோயிலுள்ள மருது சகோதரர்கள் கல்லறை ஆகிய சின்னங்கள் குறித்த வரலாற்று தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. திருப்பாலைத்துறையிலுள்ள வன பாலைவன நாதர் கோயில், திருப்பருத்திக் குன்றத்திலுள்ள சமணர் கோயில், சிவகங்கை அரண்மனை ஆகிய சின்னங்கள் தொடர்பாக தொடக்க அறிக்கை வெளியிடப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தஞ்சாவூர் அரண்மனையில் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இராமசாமி மஹால், பிள்ளைச் சத்திரம் ஆகியவற்றில் கழிவு நீரகற்று பணிகள் இடையார்பாக்கம் சிவன் கோயில், திருவெள்ளாறை ஸ்வஸ்திக் கிணறு ஆகிய சின்னங்களுக்கு வேலி அமைப்புப் பணிகளும், பராமரிப்பு பணிகளும் மற்றும் பழுது பார்த்தல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. மதுரை அழகர் கோயிலிலுள்ள திருமலை நாயக்கர் மண்டபத்தை முழுமையாக பழுது பார்த்து பராமரிக்க ரூ. 2.3 இலட்சத்திற்குரிய மதிப்பீடு ஒப்புதலுக்காகவும் அனுமதிக்காகவும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இப்பிரிவில் எஞ்சிய 55 சின்னங்கள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

7. நிழற்படங்கள் :—கங்கை கொண்ட சோழபுரம், போருவாம்பட்டி ஆகிய இடங்களில் அகழாய்வுப்பணி நடைபெறும்போது போதிய நிழற்படங்கள் எடுக்கப் பட்டுள்ளன.

தஞ்சாவூர், செங்கம், திருநின்றவூர், மதுரை, கம்பம், எசாலம், சேலம், நாமக்கல், திருநெல்வேலி, திருப்புடைமருதூர், காஞ்சிபுரம், தரங்கம்பாடி கோட்டை, ஆற்க் காடு, மகிமண்டலம், பூண்டி, பத்தூர், உத்திரமேரூர், நாவல்பாக்கம், வந்தவாசி, கரூர், மணிமங்கலம், செரப்பணஞ்சேரி, திருவொற்றியூர், திருமுல்லைவாயில், திருவேற்காடு, திரிசூலம், திருத்தணி, மாங்காடு, விளக்கணம்பூண்டி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட முகாம்களின்போது, வெண்கலத் திருவுருவச்சிலைகள் ஓவியங்கள் மற்றும் அரும்பொருட்கள் நிழற்படமெடுக்கப்பட்டுள்ளன.

முகாம்களில் எடுக்கப்பட்ட அனைத்து நிழற்படங்களும் நகல்கள் எடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டன. அவற்றுள் போரூர் மைல் கல்லிலுள்ள கல்வெட்டு, திருவெண் காடு, வடக்காலத்தூர், செம்பியன் மாதேவி ஆகிய இடங்களில் உள்ள கல்யாண சுந்தரர் சிலைகள், காமராசவல்லி, மேலப் பெரும்பள்ளம், திருவிடைமருதூர் சிற் பங்கள், தஞ்சாவூர் வெண்கல திருமேனிகள், கொற்கை, அழகன்குளம் அகழாய்வு திருவரங்கம் ஓவியம், பல்லவர் காலக் கலையில் பூதகணங்களின் சிற்பம் ஆகியவற் றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவற்றின் நிழற்படங்கள் விற்பனைக்காக தயா ரிக்கப்பட்டுள்ளன.

பூண்டி அருங்காட்சியகங்களில் பொது மக்கள் பார்வைக்கு வைப்பதற்காக, பெரிய அளவிலான வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள், தற்கால கருவிகள், இஸ்லாமியர்களின் கட்டிட கலை நிழற்படங்கள், மதுரை சித்திரை பொருட்காட்சி யில் பல அளவுகளில் வைப்பதற்கான நிழற்படங்கள் தர்மபுரி காசுகள், கரூர் காசுகள் காஞ்சி கல்வெட்டு, தஞ்சை அருண்மொழி கல்வெட்டு, நந்திவர்மன் கல்வெட்டு, தங்க காசு குறிஞ்சிப்பாடியில் கண்டுபிடிக்கப்பட்ட இதர பழம்பொருட்கள் போன்ற இத் துறையின் அண்மைக்கால கண்டுபிடிப்புகளின் நிழற்படங்களும் பெரிய அளவில் தயா ரிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 560 நிழற்படப் பிரதிகள் எடுக்கப்பட்டன.

### அரசு அருங்காட்சியகம்.

இவ்வருங்காட்சியகத்தின் 1988—89ஆம் ஆண்டிற்கான சேகரிப்புகளின் விவரங் களும் அரிய மற்றும் சிறப்புடைய பொருட்களின் பேர்களும், புதியதாக சேகரிக்கப் பட்ட பொருட்களின் விவரங்களும் கீழ் வருமாறு :—

**சேகரிப்புகளின் வகைகள் :**

இவ்வருங்காட்சியகத்தில் பலவகை பொருட்கள் உள்ளன. அவை தொல்பொரு ளியல், மானிடவியல், நாணயவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல் மற்றும் வளர்கலைப் பிரிவைச் சார்ந்தவை.

தொல்பொருளியல் பிரிவு :—இதில் சிற்பங்கள் உலக பிரசித்திப்பெற்ற படிமங் கள், மரசிற்பங்கள் உலோகப் பொருட்கள் முதலியவைகள் உள்ளன.

மானிடவியல் பிரிவு :—இதில் பழங்கால படைக்கல, தோல் பொம்மலாட்டம், பழங்குடிகளின் பொருட்கள் ஆபரணங்கள் கதக்களி பொம்மைகள், இசைக் கருவிகள் முதலியவைகள் உள்ளன.

நாணயவியல் பிரிவு :—இதில் நாணயங்கள், தபால் தலைகள், பதக்கங்கள், சரித்திரக்கால பத்திரங்கள் முதலியவை உள்ளன.

விலங்கியல் பிரிவு :—இதில் முதுகெலும்பற்ற, முதுகெலும்புள்ள, நிலத்திலும், சமுத்திரத்திலும் வாழும் விலங்குகள், பூச்சிகள், பறவைகள் மற்றும் பாலூட்டிகள் போன்றவைகள் உள்ளன.

தாவரவியல் பிரிவு.—இதில் பலவகைத் தாவரங்கள், மருத்துவ தாவரங்கள் பொருளியப் பொருட்கள், பானங்கள், அழகு சாதனங்கள் மற்றும் வாசனைப் பொருட்கள் உள்ளன.

புவியியல் பிரிவு.—இதில் பாறைகள், கனிமம் பொருட்கள் ரத்தினங்கள், பாசில்கள் மற்றும் தாதுப் பொருட்கள் உள்ளன.

வளர்கலைப் பிரிவு.—இதில் பலவகை ஓவியங்கள் உள்ளன.

**அரிய மற்றும் குறிப்பிடத்தக்க பொருட்கள் :**

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தை சார்ந்த ஸ்ரீநிவாசா படிமம் மதுரையிலுள்ள வருமானவரி துறையிலிருந்து வாங்கப்பட்டது.

## புதியதாக சேகரிக்கப்பட்ட பொருட்கள் (1988-89) :

தொல்பொருள் பிரிவு.—புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குளத்தூர் வட்டத்திலிருந்து தவழும் கிருஷ்ணன், ஒரு கை விளக்கு மற்றும் ஒன்பது பொருட்கள் கோயம்புத்தூர் மாவட்டம், பவானி வட்டத்திலிருந்து இரண்டு பாலகிருஷ்ணர், ஸ்ரீதேவி, பூதேவி, தன்வந்தரி படிமங்கள் நான்கு பொருட்கள் மற்றும் விஷ்ணு படிமம், தஞ்சாவூரிலுள்ள கும்பகோணம் வட்டத்திலிருந்து இரண்டு பொருட்கள் மற்றும் திருச்சி மாவட்டத்திலுள்ள உடையார் பாளையத்திலிருந்து துர்கா, திருவாசி ஆறு தேவி படிமம் திருநெல்வேலி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்திலிருந்து பலவகைப் பொருட்கள், செங்கல்பட்டிலுள்ள மதுராந்தகம் வட்டத்திலிருந்து மூன்று படிமங்கள், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள குடவாசல் வட்டத்திலிருந்து விஷ்ணு ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் தேவி படிமங்கள், தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி வட்டத்திலிருந்து தவழும் கிருஷ்ணன், தேவி இரண்டு படிமங்கள் மற்றும் ஏழு பலவகைப் பொருட்கள், தஞ்சாவூர் சீர்காழியிலிருந்து தூபக்கால், ஐந்து முக்காலி, மணி, நான்கு கிண்ணங்கள் மற்றும் இருபத்தி மூன்று பொருட்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலிருக்கும் திருவாடானை வட்டத்திலிருந்து சந்தான கோபாலன், தவழும் கிருஷ்ணன் இரண்டு, ஐந்து கை விளக்குகள், ஆறு கிண்ணங்கள், கிலுகிலுப்பை இரண்டு, மூன்று கரண்டிகள், முக்காலி, குத்துவிளக்கின் உடைந்த பாகங்கள், நிறைகோலின் சங்கிலி, மூன்று மூடிகள், ஏழு பொருட்கள் ; செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் வட்டத்திலிருந்து விஷ்ணு, ஸ்ரீதேவி இரண்டு, பூதேவி இரண்டு, ஸ்ரீநிவாசா, ஒரு கிண்ணம் மற்றும் தவழும் கிருஷ்ணன் ; செங்கல்பட்டிலுள்ள காஞ்சிபுரம் வட்டத்திலிருந்து ராம படிமம் புதைப்பொருள்களாக பெறப் பட்டன. சிவகங்கையிலுள்ள ( C. J. M. Cour; )-விருந்து உடைக்கப்பட்ட கடவுள், தேவி பீடம், ப்ரபாவளி கம்பி, பீடங்கள், விஷ்ணு படிமங்கள் இரண்டு, சுதர்சனம், திருமலிசை ஆழ்வார், இரண்டு காளி படிமங்கள் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களாக பெறப்பட்டன.

கலைப்பொருட்களை வாங்குவதன்கீழ் லஷ்மி, விலங்குகள் வடிவமைப்பு கொண்ட காஞ்சிபுரம் பட்டுப்புடவை, வரையப்பட்ட காப்பர் தட்டு, ஜாம்பவன், தெலுங்கில் எழுதப்பட்ட பனவோலை படிகள் இருபத்தைந்து உட்கார்ந்த நிலையில் மகாலஷ்மி, மிருதுவான கல்லினால் செய்த வேணு கோபால சங்குசக்கரம் முதலியவை வாங்கப்பட்டன. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்பத்தூர் வட்டத்திலிருந்து சுப்பிரமணிய கற்சிலை மற்றும் தேவி, மதுரை வருமானவரி துறையி லிருந்து ஒன்பது பொருட்கள், மூன்று புகைப்படங்கள் யுத்தம் கார்ன்வாலிஸ், மிலிடரி சம்பவங்கள் — விஷ்ணு கற்சிலை, ஐந்து உலோகப் பொருட்கள், விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் வேலைப்பாடுடன் தட்டு, கற்பூர ஆராத்தி எடுக்கும் தட்டு, வேலைப்பாடுகளுடன் மண்டபம் மற்றும் நின்ற நிலையில் தேவி.

- மானிடவியல் பிரிவு :

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த ஆண்டிப்பட்டி வட்டத்திலிருந்து தொன்னூற் றிரண்டு தங்கம் மற்றும் பித்தளை பொருட்கள், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த குன்றத்தூர் வட்டத்திலிருந்து இருபத்திரண்டு தங்க துண்டுகள், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் வட்டத்திலிருந்து ஒரு ஜோடி தங்க கம்மல், ஒரு மூக்குத்தி ஆகியவை ; திருச்சி மாவட்டத்திலுள்ள லால்குடி வட்டத்திலிருந்து நசுங்கிய தங்கக் கிரீடம் இரண்டு, உடைந்த வெள்ளிக் காப்புத் துண்டுகள் எட்டு மற்றும் உடைந்த அலுமினிய காப்புத் துண்டுகள் இருபத்தேழு ஆகியவை அண்ணா மாவட்டத்திலுள்ள பழனி வட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து ஒரு ஜோடி தங்க காது வளையம், ஒரு ஜோடி தங்க துண்டுகள் மற்றும் உடைந்த ஒரு உலோக சிறிய கிண்ணம் ஆகியவை ; திருச்சி மாவட்டத்திலிருக்கும் மணப்பாறை வட்டத்திலிருந்து தங்க மூக்குத்தி இரண்டு, தங்க காதணி இரண்டு மற்றும் ஒரு மோதிரம் ; பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டத்திலுள்ள சிவகங்கை வட்டத்தி லிருந்து பதினான்கு வெள்ளித் துண்டுகள், இரண்டு வெண்கலத் துண்டுகள், ஒரு மண் கிண்ணம் ஆகியவை புதைப் பொருளாய் பெறப்பட்டன. வேலூரிலுள்ள திரு. கண்ணபிரான் என்பவரிடமிருந்து பதினாறு தெருக்கூத்து பாத்திரங்களின் உடைகள் வாங்கப்பட்டன.

தாவரவியல் பிரிவு.—பதினைந்து தாவரங்களின் வண்ணப்படங்கள், காளான் களைப் பற்றிய இருபத்தியொரு படங்கள் 18, 8, என்ற அளவில் சுவர் ஓவியம் ஒன்று (மழைக்காடுகள்) மற்றும் வண்ண ஸ்லைடுகள் 4' 1 ½' அளவில் தயாரிக் கப்பட்டன. பிறகு முப்பது இருவிதை தாவரங்கள் சேகரிக்கப்பட்டன.

சிறுவர் அருங்காட்சியகம்.— இந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து பதினாறு பொம்மைகள் திருமதி இந்திராணி வெங்கட்ராமன் அவர்களிடமிருந்து வெகுமதியாகப் பெறப்பட்டன.

வளர்கலைக்கூடம்.— நூற்று இரண்டு ஓவியங்கள் மற்றும் கற்சிலைகள் வாங்கப் பட்டன.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் 1988—89ஆம் ஆண்டில் 11 வெளிநாட்டு மாணவர்கள் தமிழ் கற்றுள்ளனர். இவர்களுள் நால்வர் கனடா நாட்டிலிருந்தும், டென்மார்க், தாய்லாந்து, இஸ்ரேல், ஸ்விட்சர்லாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒருவரும் பயன் பெற்றுள்ளனர். நிறுவனத்தில் தமிழ் ஆராய்ச்சிச் சிக்கல்கள் கருத்தரங்கு என்ற தலைப்பில் 13 திங்கள் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. 30—11—1988—ல் ''தமிழ் வளர்ச்சியும் ஆராய்ச்சியும்—எழுத்தாளர் பங்கு'' என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றுள்ளது. நிறுவனத்தில் ஆய்வு மன்றக் கருத்தரங்குகளாக 12 கருத்தரங்குகளில் பல்வேறு தலைப்பிலமைந்த 36 எழுத்துரைகள் படிக்கப் பெற்று விவாதிக்கப் பெற்றன.

டாக்டர் இராதாகிருஷ்ணன் மற்றும் நேரு நூற்றாண்டு விழாக் கருத்தரங்குகளும் நிகழ்த்தப்பட்டன.

நிறுவன ஆய்வாளர்கள், ஆராய்ச்சி அலுவலர்களால் 52 வாரக் கருத்தரங்குகள் நிறுவனத்தில் நடத்தப்பெற்று கட்டுரைகள் படிக்கப் பெற்றன.

பாவாணர் அறக்கட்டளையின் சார்பில் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தப்பட்டது.

1989ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ''இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர் வழங்கியவை'' என்ற தலைப்பிலமைந்த தேசியக் கருத்தரங்கம் ஒன்று மாண்புமிகு கல்வியமைச்சர் க. அன்பழகன், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் முனைவர் தமிழ்க்குடிமகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கப்பட்டது.

செக்கோஸ்லோவேகியா நாட்டு, சார்லஸ் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் யரோ வாசேக் அவர்கள் நிறுவனத்தில் பல்கலைக் கழக நல்கைக்குழு பண்பாட்டுப் பரிவர்த்தனைத் திட்டத்தின் அடிப்படையில் நிறுவனத்திற்கு வந்து இரண்டு திங்கள் பணியாற்றி நிறுவனத்தின் சார்பாக ''Tamil Reader Volume Introducing Sangam' என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்தப் பருவ காலத்தில் நான்கு ஆய்வாளர்கள் நிறுவன வாயிலாக டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். 12 ஆய்வாளர்களுக்கு டாக்டர் பட்ட ஆய்விற்கான வாய்மொழித் தேர்வு நடைபெற்றுள்ளது. மொழிபெயர்ப்பியல், சுவடியில் பட்டய வகுப்புகள் மூலம் அறுவர் பட்டயம் பெற்றுள்ளனர். இந்த நிதி ஆண்டில் ஏறத்தாழ 1,000 நூல்கள் நூலகத்திற்கு வாங்கப் பெற்றுள்ளன. தமிழகத்தில் ஆசியர்கள், ''Hand–book Tamil an Auto Instructional Course'' தொல்காப்பியம்—சொல்லதிகாரம்—எச்சவியல் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கப்பூர், மலேசியா, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வந்த தமிழ் அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள் நிறுவனத்தில் நடத்தப் பெற்றன.

தானே தமிழ் கற்கும் கருவிநூல் தயாரிப்புப் பணி, 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழில் சமூகவியல், தமிழரல்லாதார்க்கு தமிழிலக்கணம், மொழி பெயர்ப்புப் பயிற்சிக் கையேடு, அகநானூறு ஹால சத்தசதி ஒப்பீட்டாய்வு, மொழி பெயர்ப்பு—ஓர் அறிமுகம், திருவாசகம் ஆங்கில மொழி பெயர்ப்பு, தமிழக இலங்கை ஊர்ப்பெயராய்வு, தமிழக நாட்டுப்புறத் தெய்வங்கள், தெருக்கூத்து, களப்பிரர் காலத்திய தமிழக வரலாறு, பதினெட்டாம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு, பண்டைத் தமிழர் தொழில்கள், தமிழ் வேற்றுமையுருபுகளும் ஆங்கில முன்னொட்டுகளும் என்பன நடைமுறையில் உள்ள திட்டப் பணிகளாகும்.

## தமிழ் வளர்ச்சி.

தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் இத்துறையின் தலையாய பணியாகும். அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்ட நிறைவேற்றத்தை விரைவுபடுத்தும் பணிகளும், தமிழ் மொழி வளர்ச்சி தொடர்பான பணிகளும் இத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1. அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :

அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை முனைப்புடனும், செம்மையாகவும் செயற்படுத்த மாவட்ட நிலையில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும் ஆய்வு செய்கின்றனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் 8 அரசு துறைத் தலைமை அலுவலகங்களையும் (இதில் தன்னாட்சி நிறுவனங்களும் அடங்கும்) 7 மாவட்டாட்சியர் அலுவலகங்களையும் ஆய்வு செய்துள்ளார். மாவட்டங்களில் உள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் 1,020 சார்நிலை அலுவலகங்களை ஆய்வு செய்துள்ளனர்.

**2. மொழி பெயர்ப்புப் பணி :**

(அ) பல்வேறு துறையைச் சார்ந்த படிவங்கள், நூல்கள் 3,809 பக்கங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இறுதி ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இத்துறையின் ஏழாம் ஐந்தாண்டு திட்டத்தில் பகுதி-11 திட்டத்தின் கீழ் செயற்படும் 5 கூர்ந்தாய்வு கண்காணிப்பாளர்கள் இவ்வாண்டில் (1988–89) 2,189 பக்கங்கள் மொழி பெயர்த்துள்ளனர். 7,535 பக்கங்கள் கூர்ந்தாய்வு செய்துள்ளனர்.

**3. தமிழ்த் திட்டச் செயலாக்கப் பயிற்சி :**

இவ்வாண்டில் உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, வணிகவரித் துறை, மீன்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வனத்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை, பணியாளர்களுக்கான துறைப் பயிற்சியின்போது தமிழ்த் திட்டச் செயலாக்கப் பயிற்சியை இத்துறை உதவி இயக்குநர்கள் அளித்தனர். அத்துடன் திங்கள் தோறும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இளநிலை உதவியாளர்களுக்கான பயிற்சியில் தமிழ்த் திட்டப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

**4. அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் அகவை முதிர்ந்த 30 தமிழறிஞர்கள் நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் ரூ 250 வழங்கப் பெறுகின்றது. அதன்படி 21 தமிழறிஞர்கள் 1988—89 ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர் 15—1—1989 நாளன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் நிதியுதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சிறப்புச் செய்யப்பட்டனர். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 322 தமிழறிஞர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

**5. தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் தமிழில் சிறந்த நூல் வெளியிடுவதற்கு நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெறுகிறது. வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பெறும் நூல்களை அச்சிடுவதற்கு ஆகும் செலவில் பாதி (அல்லது) ரூ. 8,000 இதில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்பெற்று வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் 1988–89-ல் 35 நூல்களுக்கு நிதியுதவி வழங்கப் பெற்றது.

**6. வெளிமாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் தமிழ் வளர்ச்சிக்கான நிதியுதவி வழங்கும் திட்டம் :**

| தொடர் எண். | நிறுவனம் | நோக்கம் | தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூ. |
| 1. | இந்திய மொழிகள் நிறுவனம், மைசூர். | தமிழ்ப் பட்டய வகுப்பு நடத்தல். | 15,000 |
| 2. | தேசிய உயர்நிலைப்பள்ளி, கல்கத்தா. | தமிழ் வகுப்பு நடத்தல். | 15,000 |
| 3. | பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி, திருவனந்தபுரம். | ஆராய்ச்சிப் பணிகள் கட்டடம் கட்ட. | 2,87,000 |

**7. திரு. வி. க. விருது :**

தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் பெயரில் விருது ஒன்றினை ஆண்டுதோறும் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு ரூ. 10,000 பரிசு வழங்க அரசு 1979-ஆம் ஆண்டு ஆணையிட்டது. 1986, 1987, 1988-89 ஆம் ஆண்டுகளுக்கான திரு. வி. க. விருது முறையே கவிஞர் கா. மு. ஷெரீப், நா. சுப்பு ரெட்டியார் திரு. மணவை. முஸ்தபா ஆகியோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டது.

**8. தமிழ் நூல் விவர அட்டவணை :**

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் தமிழ் நூல் விவர அட்டவணை தொகுக்கும் பணி 1960 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இது வரையில் 8 தொகுதிகள் 23 பகுதிகளாக அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டுள்ளன. இப்போது 1936 முதல் 1940 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு விளக்கக் குறிப்புகள் தொகுக்கப் பெறுகின்றன.

**9. சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம் :**

சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம் என்ற ஒன்றினைத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை மேற்கொண்டுள்ளது. கம்பராமாயணம் பாலகாண்டம், நற்றிணை ஆகிய தமிழ் இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

**10. தமிழில் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் :**

தமிழில் சிறந்த நூல்கள் எழுதுவதை ஊக்குவிக்கும்வகையில் 21 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1987-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 19 தலைப்புகளில் 37 சிறந்த நூல்களுக்கு 15–1–1989 அன்று நடைபெற்ற வள்ளுவர் விழாவில் நூலாசிரியர்களுக்குப் பரிசுகளும், பதிப்பகத்தார்க்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**11. சங்கப்புலவர்களுக்கு நினைவுத் தூண் நிறுவுதல் :**

சங்க காலத்தில் வாழ்ந்த சான்றோர்கள், பிற்காலங்களில் வாழ்ந்த சான்றோர்கள் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவுதல், நினைவு விழாக்களை நிகழ்த்துதல் முதலிய பணிகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது. தமிழ்ச் சங்கத்துத் தலைமைப் புலவர் மாங்குடி மருதனார், இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், கரூரில் வாழ்ந்த பத்திற்கும் மேற்பட்ட சங்கப் புலவர்கள், ஒக்கூரில் வாழ்ந்த மாசாத்தியார் மாசாத்தனார் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பியும் அவர்தம் பாடல்களைக் கல்வெட்டில் பொறித்தும் விழா எடுக்கும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

**12 நிலவியல் பெயர்கள் :**

நிலவியல் பெயர்களுக்கான தமிழ் எழுத்துக் கூட்டல் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. மைய நிலவியல் துறை, இருப்பூர்தித் துறை, அஞ்சல் துறை ஆகியவற்றால் வேண்டப்படும் ஊர்களுக்குரிய நிலவியல் பெயர்களுக்கு எழுத்துக் கூட்டல் வழங்கப்பட்டு வருகிறது. அண்மையில் மாநிலப் பெயர் ஆணைக் குழு ( State Place Name Authority ) என்னும் அமைப்பு ஒன்றை அரசு இத்தொடர்பில் அமைத்துள்ளது. இலக்கணப் பிழைகளுடனும், பொருட் பிழைகளுடனும் அமைந்துள்ள ஊர்பெயர்களை உரியவாறு திருத்திச் சரியான பெயர்களைக் குறிப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**13. தெருப்பெயர்களைத் திருத்தியமைத்தல் :**

மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி முதலியவற்றில் அமைந்த தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயர்களை நீக்க அரசு ஆணையிட்டுள்ளதனையடுத்துப் பரவலாகத் தெருப் பெயர்கள் சிதைவுற்ற தன்மையில் பொருளற்ற முறையில் பிழைபாடுகளுடன் எழுதப்பட்டு வருகின்றன. இக்குறைபாடுகளை நீக்கித் தெருப்பெயர்களை உரியவாறு அமைக்கும் பணியும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**14. மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி வழங்கல் :**

தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாட்டினைக் காக்க அருந்தொண்டாற்றியவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. தமிழ் மொழி, பண்பாடு வரலாற்றை மேம்படுத்துவதற்குப் பாடுபட்டவர்களை ஊக்குவிக்கத் தனி மானியங்களும், ஊக்கத் தொகைகளும் வழங்க கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பினைத் தமிழ் வளர்ச்சித் துறை ஏற்றுள்ளது. இதுவரை 379 பேர் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மத்திய சங்கீத நாடக அகாடமியின் திட்டங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காக மாநில அரசால் தோற்றுவிக்கப்பட்ட தன்னாட்சிக் கலை வளர்ச்சி நிறுவனமாகும். தமிழ்க் கலையை வளர்ப்பதில், குறிப்பாக பாரம்பரியக் கலையான கிராமியக் கலை சிதைந்துவிடாமல் காப்பதிலும் அவற்றைப் போற்றி வளர்க்கவும் மன்றம் பாடுபட்டு வருகின்றது.

### தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தல் :

மாநிலங்களிடையே கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் கலைக் குழுக்களை ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலங்களுக்குச் சென்று நிகழ்ச்சிகள் நடத்தும் மத்திய சங்கீத நாடக அகாதெமித் திட்டத்தின்கீழ் 1988–89 ஆம் ஆண்டு கோவா, பஞ்சாப் ஆகிய மாநிலத்திலிருந்து 30 கலைஞர்கள் கொண்ட கலைக் குழுக்கள் தமிழகம் வந்து சென்னையிலும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களின் தலை நகரங்களில் நிகழ்ச்சிகளை நிகழ்த்தி மக்களின் பாராட்டைப் பெற்றது. அதே போல் தமிழகக் கலைக் குழுக்கள் நாட்டியம் மற்றும் கிராமியக் கலைக் குழுக்கள் அஸ்ஸாம், மிஜோராம் மற்றும் உத்திரப் பிரதேச மாநிலங்களுக்குச் சென்று அந்தந்த மாநிலங்களில் 6 நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தியுள்ளது.

பழம்பெரும் கலைமேதைகளின் பிறந்த நாட்களை மன்றம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. இந்த வகையில் பம்மல் சம்பந்த முதலியார் விழாவினை சென்னையிலும், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் பிறந்த நாளினை மன்றம் நெல்லை சங்கீத அகாதெமியுடன் இணைந்து 29–11–1988 தேதியில் சிறப்பாக நடத்தியது. பேராசிரியர் துரைராஜ் அவர்களின் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் மற்றும் கலைமாமணி ஹெரான் ராமசாமியின் 'திருமலை நாயக்கர்' நாடகத்தினையும் மற்றும் இந்நிகழ்ச்சியில் நலிந்த கலைஞர்கள் 10 நபர்களுக்கு மேடைப் பொருட்கள் ஆடை ஆபரணங்கள் வாங்க தலா ரூ. 1,000 உதவி மானியம் வழங்கிச் சிறப்பித்தது.

மறைந்த சாகித்திய கர்த்தா பாபநாசம் சிவன் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மன்றம் சீரும் சிறப்போடும் திருவையாறு தமிழிசை மன்றத்துடன் இணைந்து 7–10–1988 தேதியில் வெகுசிறப்பாக நடத்தியது. அவ்விழாவில் கலைமாமணி திருமதி கே.ஜே. சரசா குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெற்றது. அதேபோல் நாதசுரச் சக்கரவர்த்தி டி.என். இராஜரத்தினம் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியை டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் கரூர் நாரத கான சபாவுடன் இணைந்து மன்றம் நிகழ்த்தியது. அதைத் தொடர்ந்து டிசம்பர் திங்கள் 9 ஆம் நாள் பொள்ளாச்சி தமிழிசை சங்கத்துடன் இணைந்து தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் பிறந்த நாளையும் சிறப்புடன் மன்றம் நடத்தியது. இந்நிகழ்ச்சியில் நலிந்த கலைஞர்கள் 10 பேர்களுக்கு ரூ. 200 வீதம் இசைக் கருவிகள், உடைகள் மற்றும் நாடகத்திற்கு வேண்டிய பொருட்களை வாங்க மன்றம் மானியமாக வழங்கியது.

வறுமையில் வாடும் வயோதிகக் கலைஞர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் 1988-89 ஆம் ஆண்டில் 300 கலைஞர்களுக்கு மாதம் ரூ. 150 வீதம் உதவி மானியம் பெற தேர்ந்தெடுத்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிடும்போது 1988–89 ஆம் ஆண்டில் கூடுதலாக 100 கலைஞர்களுக்கு உதவி மானியம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால் அறிக்கை ஆண்டு வரை 2,167 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

சிறந்த தமிழ் நாடகங்கள் தயாரிக்க மானிய உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1988-89 ஆம் ஆண்டு 'வெள்ளைப் புறா' என்ற தமிழ் நாடகத்திற்கான சென்னை கோபி தியேட்டர்ஸ்க்கு மானிய உதவியாக ரூ. 10,000 நிதி உதவி அளித்துள்ளது. அதேபோல் நடன கலா நிலையம் (கலைமாமணிகள் திரு. நடராஜ்-சகுந்தலா) அவர்களின் நாட்டிய நாடகம் தயாரிக்க மானிய உதவி கோரி கலைமாமணி எம்.கே. சரோஜா அவர்கள் மன்றத்திற்கு விண்ணப்பித்திருந்தார். அவருடைய விண்ணப்பத்தைப் பெற்று மன்றம் ரூ. 1,000 உதவி மானியம் வழங்கியது.

தொழில் நுட்பக் கலைஞர்களை உருவாக்கும்பொருட்டு அருகிவரும் வீணை, தம்புரா, மிருதங்கள் போன்ற இசைக் கருவிகளைத் தயாரிக்க இவ்வாண்டு முதல் மன்றம் ஒரு திட்டத்தினை வகுத்து, ஏற்கனவே இத்துறையில் இருந்துவரும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு பயிற்சியளித்து, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் உபகாரச் சம்பளத்தினை மன்றம் வழங்குவதோடு, அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 600 வீதம் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான 1988-89 ஆம் ஆண்டு ரூ. 26,820 மன்றம் செலவு செய்துள்ளது.

1988-89 ஆம் ஆண்டு இசை, நாட்டியம், நாடகம் ஆகிய துறைகளில் சிறந்த நூல் வெளியிட மானிய உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு ரூ. 3,217 செலவாகியுள்ளது.

ஆண்டுதோறும் சென்னை திரைப்படத் தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தில் பயிற்சிப் பெறும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு ரூ. 1,003.40 செலவாகியுள்ளது.

ஆண்டுதோறும் சென்னை சங்கீத வித்வத் சபையின் ஆதரவில் நடைபெறும் இசைப் பயிற்சிப் பள்ளி நிருவாகச் செலவிற்காக ரூ. 5,000 நிதி உதவியை மன்றம் அளித்து வருகின்றது.

பண்டித ஜவஹர்லால் நேரு நூற்றாண்டையொட்டி சென்னை மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் மன்றம் ஒரு வார காலத்திற்கு குழந்தைகளுக்கான நாட்டியத்தினை ஏற்பாடு செய்தது. அவ்வகையில் மன்றத்திற்கு ரூ. 10,000 வரை செலவாகியுள்ளது.

முன்னாள் தமிழக ஆளுநர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் வீணை இசைக் குழுப் போட்டிக்காக ஒரு வெள்ளி வீணையைப் பரிசளித்தார்கள். ஆண்டுதோறும் இத்திட்டத்தினை மன்றம் நடத்தி வருகின்றது. இவ்வாண்டு இதற்காக ரூ. 6,507.70 செலவாகியுள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற ஆன்மீகக் கலை விழாவிற்காக மன்றம் அரசு இசைக் கல்லூரி மாணவர்களை மேற்குறிப்பிட்ட விழாவில் கலந்துகொள்ள அனுப்பிய வகையில் ரூ. 25,906.30 செலவாகியுள்ளது.

## கலைஞர்கள் யார் எவர் பதிப்பித்து வெளியிடுதல் :

தமிழகத்தினைச் சார்ந்த புகழ்பெற்ற கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய 'யார் எவர்' என்ற நூலை மன்றம் பதிப்பித்து வெளியிட உள்ளது. அதன் முதற்படியாக இசை-நாட்டியம் ஆகிய துறைகளிலுள்ள கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைச் சேகரிப்பதற்காக ரூ. 11,076.00-ஐ மன்றம் செலவழித்துள்ளது.

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் சிறந்த சபைகளை, அவை ஆற்றிவரும் கலைப்பணியின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து, அவற்றின் ஆதரவில் தகுதி வாய்ந்த இளம் கலைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்து, இக்கலைஞர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக மன்றம் ஒரு திட்டத்தினை வகுத்து, சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றது. ஆண்டுதோறும் இசை (பக்க வாத்தியம் உள்பட) நாட்டியத் துறைகளில் சிறந்து விளங்கும் 18 வயதிலிருந்து 30 வயதுக்குட்பட்ட 15 முதல் 18 கலைஞர்களை பூர்வாங்கச் சோதனை மூலம் தேர்வு செய்து, அவர்களுக்கு தகுந்த நான்கு சபைகளின் நிகழ்ச்சிகள் நடத்த மன்றம் ஊக்குவித்து வருகின்றது. இத்திட்டத்திற்காக 1988—89 ஆம் ஆண்டு ரூ. 1,36,707.75 வரை மன்றம் செலவு செய்துள்ளது.

வறுமையில் வாடும் கலைஞர்கள் இறந்துவிட்டால், அக்கலைஞரின் குடும்பத்திற்கு, ஈமக் கிரியைக்காக மன்றம் இறந்த கலைஞரின் குடும்பத்திற்கு ரூ. 300 வீதம் உதவி மானியம் வழங்கி வருகின்றது. அந்த வகையில் 1988-89 ஆம் ஆண்டு ரூ. 2,400 செலவு செய்துள்ளது.

புகழ்பெற்ற வறுமையில் வாழும் கலைஞர்கள் இறந்துவிட்டால், அக்கலைஞர்களின் ஆதரவற்ற குடும்பங்களுக்கு அரசு ரூ. 2 இலட்சத்தை வங்கியில் சேமித்துள்ளது. அதில் கிடைக்கும் வட்டியிலிருந்து ஒவ்வொரு கலைஞர்களின் குடும்பங்களுக்கும் ரூ. 2,000 உதவி மானியமாக மன்றம் வழங்கி வருகின்றது. மானியம் அளித்த வகையில் ரூ. 6,000 வரை செலவாகியுள்ளது.

## ஊரகக் கலைப் பயிற்சி மையம் :

ஊரகக் கலைகளான கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து ஆகிய கலைகளை வளர்த்திடும்வண்ணம், அக்கலைகளில் ஆர்வமுள்ள சிறார்களுக்கு மாவட்டந்தோறும் கிராமியக் கலைப் பயிற்சி மையம் அமைத்து, அதன்மூலம் பயிற்சி அளிக்க மன்றம் ஒரு திட்டத்தினை வகுத்துள்ளது. பல அரிய கலைஞர்களைக் கொண்டு பாடப் புத்தகங்கள் வகுத்து, அவற்றை அரசுக்கு அனுப்பியுள்ளது. தற்போது இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 7,706.65 வரை செலவாகியுள்ளது.

மன்றம் பகுதி-2 திட்டத்தின்கீழ் புதிய நாடகம் தயாரிக்க மானியமாக ரூ. 50 ஆயிரம் ஒதுக்கியுள்ளது. சிறந்த நாடக வல்லுநர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு நாடகத்திற்கும், நாடகம் தயாரித்து நடத்த ரூ. 10,000 மானியம் அளித்து வருகின்றது. இவ்வாண்டு இத்திட்டத்தின்கீழ் சென்னை தொழிலாளர் தியேட்டர்ஸ் நாடகக் குழுவினரின் 'தீரன் சின்னமலை' என்ற நாடகத்திற்காக ரூ. 10,000 மானியமாக வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு.

ஓவியம், சிற்பம், கைவினை முதலிய நுண்கலைகளின் மேம்பாட்டுக்காக "தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு" என்னும் கைவினைக் கலைமன்ற அமைப்பு, தமிழக அரசால் 1975-ல் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையில் இயங்கி வரும் இக்கலை மன்றம், தமிழ்நாட்டில் நுண்கலைகளின் வளர்ச்சிக்காக, ஆண்டுதோறும் பல கலைத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

ஓவியம், சிற்பம் முதலிய கலைகள்—அதில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்கள்—அவர்களின் கலைப்படைப்புகள்—இன்றைய கலைச்சூழல் ஆகியவற்றைப் பற்றிய ஒரு பொது அறிவை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலுள்ள ஓவிய, சிற்பக் கலைஞர்களிடமிருந்து கலைப் படைப்புகளை வரவேற்று கலைக்காட்சி அமைத்து, காட்சியில் மிகச் சிறப்பாக விளங்கும் கலைப் படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்குதல்; தமிழ்நாட்டின் தலை சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களில் இருவருக்கு ஆண்டுதோறும் "கலைச் செம்மல்" பட்டம் வழங்கி பாராட்டிப் பரிசு வழங்குதல்; தமிழ்நாட்டின் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளி மாணவர்களிடையே நுண்கலையறிவைப் பேணி வளர்க்கவும், புதிய அணுகுமுறை நுணுக்கங்களைக் கற்பிக்கவும் உதவும் வகையில் கலையாசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டத்தினை நடத்துதல்; பொது மக்களிடையே கலையறிவை மேம்படுத்தவும், இன்றைய கலை வளர்ச்சியினைத் தெரியப்படுத்தவும் மாவட்டந்தோறும் சிறந்த ஓவிய சிற்பக் கலைஞர்களைக் கொண்டு செய்ல்விளக்கத் தொடர் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்து, பள்ளி மாணவர்களிடையே ஓவியப்போட்டி நடத்துதல்; தமிழ்நாட்டிலுள்ள கலை அமைப்புகளுக்கு கலைப்பணியாற்றுவதற்காக மானியம் அளித்தல்; கலைஞர்கள் தங்களது தனி-நபர்-கண்காட்சியை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் கலைப் படைப்புகளை குழுவின் திரட்டலுக்காக வாங்குதல்; பல்வேறு கலைப் பிரிவைச் சார்ந்த கலைஞர்களிடையே கருத்துக் கொள்கொடை நடைபெறும் வண்ணம் ஆண்டுதோறும் கலைஞர்கள் முகாம் நடத்துதல்; மாநிலங்களுக்கிடையே கலாச்சார நல்லுறவை வளர்த்துக் கொள்ள கலைக்காட்சிகள் பரிமாற்றம் செய்து கொள்ளுதல்; இளங்கலைஞர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், அவரவர் சார்ந்த கலைத்துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் உதவித் தொகைகள் வழங்குதல்; "நுண்கலை" என்னும் கலையிதழை ஆண்டிற்கிருமுறை வெளியிடுதல் போன்ற கலைப் பணித் திட்டங்களை ஓவிய நுண்கலைக்குழு செயற்படுத்தி வருகிறது.

<u>1988-89ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் :</u>

1988 ஜூன் திங்கள் 23ஆம் நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு, தமிழ்நாட்டின் சிறந்த ஓவிய, சிற்பப் படைப்பாளர்களின் படைப்புகள் அடங்கிய ஒரு கலைக்காட்சி காட்சியை, பெரியார் மாவட்ட அரசு அருங்காட்சியகத்துடன் இணைந்து ஈரோட்டில் நடத்தியது. இக்காட்சியை பெரியார் மாவட்ட ஆட்சியர் அவர்கள் துவக்கி வைத்தார். இக்காட்சி நடைபெற்ற காலத்தில் பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி மாணவர்களிடையே ஓவியப் போட்டி நடத்தப்பட்டு இப்போட்டியில் சிறப்பாக ஓவியம் வரைந்திருந்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் காட்சியின்போது மாலை நேரங்களில் ஓவிய சிற்பக் கலைகளைப் பற்றிய செயல் விளக்கப் பொழிவுகள் நடைபெற்றன. கலைத் தொடர்பான படங்களும் பொது மக்களுக்குக் காட்டப்பட்டன.

ஜூலைத் திங்கள் 23ஆம் நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு தமிழ்நாட்டின் சிறந்த ஓவிய சிற்பப் படைப்பாளர்களின் படைப்புகள் அடங்கிய ஒரு கலைக்காட்சியை மதுரை மாவட்ட அரசு அருங்காட்சியகத்துடன் இணைந்து மதுரையில் நடத்தியது. இக்காட்சியை தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைக் கூடுதல் செயலாளர் அவர்கள் துவக்கி வைத்தார். இக் காட்சி நடைபெற்ற காலத்தில் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி மாணவர்களிடையே ஓவியப்போட்டி நடத்தப்பட்டு, இப்போட்டியில் சிறப்பாக ஓவியம் வரைந்திருந்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. காட்சி நடைபெற்ற காலத்தில் மாலை நேரங்களில் ஓவிய, சிற்பக் கலைகளைப் பற்றிய செய்ல் விளக்கப் பொழிவுகளும் "பழங்கலை", "நவீனக்கலை" "நாட்டுப் புறக்கலை" மற்றும் "பழங்குடி கலை" ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கமும் நடத்தப்பட்டது.

ஓவிய நுண்கலைக்குழு தனது வருடாந்திரக் கலைக்காட்சியை 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களின்போது சென்னை அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள "வளர் கலைக் கூடத்தில்" நடத்தியது. தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைக் கூடுதல் செயலாளர் அவர்கள் இக்காட்சியை துவக்கி வைத்து, "மூத்தக் கலைஞர்கள்" பிரிவைச் சார்ந்த 5 கலைஞர்களுக்குத் தலா ரூ. 5,000 ரொக்க விருதுகளையும், "இளங்கலைஞர்கள்" பிரிவைச் சார்ந்த 5 கலைஞர்களுக்கு தலா ரூ. 2,000 ரொக்க விருதுகளையும்

வழங்கினார். இவ்விழாவின்போது, 1988—89ஆம் ஆண்டின் சிறந்த ஓவிய, சிற்ப படைப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த திரு. எஸ். கன்னியப்பன், திரு. எம். ரெட்டப்ப நாயுடு ஆகியோரின் சீரிய கலைப்பணிகளைப் பாராட்டும் வகையில் தலா ரூ. 8,000 ரொக்க விருதும், ''கலைச்செம்மல்'' விருதும் வழங்கப்பட்டது.

ஓவிய, சிற்பக் கலைகளின் இன்றைய வளர்ச்சியையும், தமிழ்நாட்டுக் கலைஞர்கள்—தமிழ் நாட்டின் பண்பாடு—மேம்பாடு ஆகியவற்றை விளக்கும் கட்டுரைகள் கொண்ட ''நுண்கலை'' என்னும் கலையிதழ், 1989 ஆகஸ்ட் திங்களிலும், 1988 மார்ச் திங்களிலும் வெளியிடப்பட்டன.

செப்டம்பர் திங்கள் 6 ஆம் நாள் முதல் 21 நாட்களுக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த பள்ளிகளில் பணிபுரியும் கலையாசிரியர்களுக்கு இராமநாதபுரத்திலும், 1989 மார்ச்சுத் திங்கள் 6 ஆம் நாள் முதல் 21 நாட்களுக்கு நீலகிரி மாவட்டத்தை சார்ந்த கலையாசிரியர்களுக்கு உதகமண்டலத்திலும், ஓவியம், சிற்பம், வரைவு, புதி போவியம் ஆகிய நுண்கலைகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டன. இப்பயிற்சிகளின் இறுதியில் பயிற்சியின்போது உருவாக்கப்பட்ட படைப்புகள் காட்சியாக வைக்கப் பட்டன.

1988 அக்டோபர்த் திங்கள் 26 ஆம் நாளிலிருந்து 10 நாட்களுக்கு தருமபுரி மாவட்டம் ஒகனேகல்லில் ''ஓவியக்கலைஞர்கள் முகாம்'' நடத்தப்பட்டது. இம்முகாமில் தமிழ்நாட்டின் 12 ஓவியக்கலைஞர்கள் பங்கு கொண்டனர். இம்முகாமில் பங்கு கொண்ட கலைஞர்கள் உருவாக்கிய படைப்புகள் தருமபுரியில் காட்சியாக நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் முதல் ஒரு வார காலத்திற்கு நடத்தப்பட்டது. இக்காட்சியின் போது, ஓவிய, சிற்பக் கலைகளைப் பற்றிய செயல்விளக்கப் பொழிவுகளும் நடைபெற்றது. கலைத் தொடர்பான படங்களும் பொதுமக்களுக்குக் காட்டப்பட்டன;

மாநிலங்களுக்கிடையே கலைக்காட்சி நடத்துதல் திட்டத்தின்கீழ், இராசஸ்தான் மாநில அகாதமியுடன் இணைந்து ஜெய்ப்பூரில் டிசம்பர்த் திங்கள் 27 ஆம் நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு தமிழ்நாட்டுக் கலைஞர்களின் ஓவிய சிற்பப் படைப்புகள் கலைக் காட்சியாக நடத்தப்பட்டது. இக்காட்சி டிசம்பர் திங்கள் 27 ஆம் நாள் இராசஸ்தான் மாநில ஆளுநர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் செயலாளர் அவர்கள் காட்சி துவக்க விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு சிறப்பித்தார்.

தமிழ்நாட்டின் 26 ஓவியச் சிற்பக் கலைஞர்களது படைப்புகள் ஓவிய நுண்கலைக் குழுவின் திரட்டலுக்காக வாங்கப்பட்டது.

இளங்கலைஞர்களுக்கு படிப்புதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 22 மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பள்ளிகளில் பயிலும் 100 இளங்கலைஞர்களுக்கு, தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் நகரில் ஒரு பயிற்சி முகாம், சென்னை ஜவகர் சிறுவர் இல்லத்துடன் இணைந்து ஓவிய நுண்கலைக்குழு 1989 ஜனவரி திங்கள் 28 ஆம் நாள் முதல் ஒரு வார காலத்திற்கு நடத்தியது. இம்முகாம் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் துணைச் செயலாளர் அவர்கள் துவக்க நாள் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார்.

''தமிழ் நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்கள்—யார் எவர்'' (இரண்டாம் பதிப்பு) வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டு தலைசிறந்த ஓவிய/சிற்பக் கலைஞரும், சென்னை அரசு கலைத்தொழிற் கல்லூரியின் முன்னாள் முதல்வருமான திரு. தனபால் அவர்களைப் பற்றி காணொலி பதிவு செய்யப்பட்டது.

## மொழி பெயர்ப்பு.

தலைமைச் செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்களிலும் ஆட்சி மொழிக் கொள்கை முழுமையாகச் செயல்படுத்தப்பட்டபோதிலும், 1988-89 அறிக்கை யாண்டில், பல்வேறு துறைகளின் மொழியாக்கப் பணிகளை இப்பிரிவு செய்து வந்துள்ளது.

பொதுக் கணக்கு ஆய்வுக்குழு, பொது நிறுவனங்கள் குழு அறிக்கைகள், அவற்றின் மீதான துறையின் கருத்துக்கள், சுற்றோட்டக் குறிப்புகள், ''காபிபோசா'' சட்டத்தின் கீழ் பிறப்பிக்கும் தடுப்புக் காவல் ஆணைகள், தடுப்புக் காவலில் வைப்பதற்கான காரணங்கள், பாரானாரி கருத்துகள், மன்னிப்புக் கோரிக்கை மனுக்கள் முதலியன இப்பிரிவில் மொழியாக்கம் செய்யப்பெற்றவைகளில் குறிப்பிடத்தக்கவை ஆகும். பொதுத் துறையின் பரம இரகசியப் பிரிவும், சட்டம்—ஒழுங்கு பிரிவும் அனுப்பும் கடும் மந்தனக்

கோப்புகள் அனைத்தையும் மொழியாக்கம் செய்யும் பணி இப்பிரிவைச் சேர்ந்ததேயாகும் வன-மீன் துறை, நிதித்துறை ஆகிய துறைகளிலிருந்து இரகசியக் கோப்புகள் இதுவரை கண்டிராத அளவிற்கு இவ்வாண்டில் வந்தன. காவல் நிலையங்கள் இந்திய அரசுக்குத் தமிழில் செய்து கொள்ளும் முறையீடுகளை, இப்பிரிவு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அளிக்கின்றது. திட்டமிடல்-வளர்ச்சித் துறை அமைச்சரவையின் பரிசீலனைக்காக அனுப்பும் இரகசியக் குறிப்புக்கள், சட்டப்பேரவைத் துறை அனுப்பிய பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழு அறிக்கைகள் ஆகிய குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கப்பட வேண்டிய (கோப்புகள்) பணிகள் இவ்வாண்டு முழுவதும் தொடர்ந்து இப்பிரிவுக்கு அனுப்பப்பெற்று மொழியாக்கம் செய்யப் பெற்றன.

வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின் போது பல்வேறு துறைகள் அனுப்பும் கொள்கை விளக்கக்-குறிப்புகளைத் தமிழாக்கம் செய்வதும், பிற துறைகள் அனுப்பும் தமிழாக்கங்களைச் சரிபார்த்துத் திருத்தங்கள் செய்வதும் இப்பிரிவின் முதன்மையான பணிகளாக இருந்தன. இப்பிரிவில் இந்த ஆண்டில் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம், மத்திய மாநில உறவுகள் குறித்த சர்க்காரியா கமிஷன், விழிப்புப் பணிக்குழு அறிக்கை, காவலர் பதக்கத் தகுதியுரை, ஆளுநர் அவர்களின் ஆலோசகர்களிடமிருந்து வரப்பெற்ற முக்கியமான கோப்புகள், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான கோப்புகள் ஆகியவை மொழியாக்கத்திற்காக வரப்பெற்றன. இப்பிரிவு இதனை உடனுக்குடன் மொழியாக்கம் செய்து அனுப்பி வைத்தது.

வரவு-செலவுத் திட்ட ஆவணங்களையும் துணை மதிப்பீடுகள் முதலியவற்றையும் மொழிபெயர்ப்பதற்காக இப்பிரிவின் பணியாளர்களின் ஒரு தொகுதியினர் வழக்கம் போல் இவ்வாண்டும் நிதித்துறைக்கு அனுப்பப்பட்டனர். அதுபோன்றே சட்டப் பேரவைக் கூட்டங்கள் நடைபெறும் போதெல்லாம் ஒவ்வொரு கூட்டத் தொடருக்கும் ஒரு மொழிபெயர்ப்பாளரை இப்பிரிவு அனுப்பி அத்துறையின் கோப்புகளை உடனுக்குடன் அங்கேயே மொழி பெயர்த்து தருகிறது.

இப்பிரிவில் பகுதிநேர மலையாள மொழி பெயர்ப்பாளர், திருநெல்வேலி, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்ட அரசிதழ்களில் மலையாள மொழியில் வெளியிடப்படுவதற்கான அறிவிக்கைகளை மலையாளத்தில் மொழி பெயர்ப்பு செய்து கொடுக்கிறார். அத்துடன் மலையாளத்தில் பெறப்படும் மனுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பணியையும் அவர் கவனித்து வருகிறார்.

இந்தி மொழி பெயர்ப்புகளை கவனித்துக்கொள்வதற்காக இந்தி மொழிபெயர்ப்பாளர் இப்பிரிவில் உள்ளார்.

தெலுங்கு, உருது, கன்னட மொழிப்பெயர்ப்புகளை தக்கவரிடம் தந்து மொழியாக்கம் பெறப்படுகிறது.

## அத்தியாயம் 30.

## போக்குவரத்து நிறுவனம்.

### சாலை போக்குவரத்து நிறுவனம்.

சாலை போக்குவரத்து நிறுவனமானது தமிழ்நாடு அரசு 1960 ஆம் ஆண்டு சங்கப்பதிவு விதியின் கீழ் 1976 ஆம் ஆண்டு மாநில போக்குவரத்து கழகங்களுக்கு சேவை செய்வதற்காக துவங்கப்பட்டது. இந்நிறுவனம் மேலாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளித்தல், போக்குவரத்து கழகங்களின் உதிரி பாகங்களை ஆய்வு செய்தல், ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

சாலை போக்குவரத்து நிறுவனம் 1988–89 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளில் புரிந்த சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) ஆராய்ச்சிப் பிரிவு.—இந்த ஆண்டில் 31 (முப்பத்தி ஒன்று) புதிய ஆராய்ச்சிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டன. டயர் புதுப்பித்தல் முறை பற்றிய ஆய்வு விபத்தில் சம்பந்தப்பட்ட ஓட்டுநர்களின் சமுதாய பொருளாதார பின்னணி பற்றிய ஆய்வு, தேசிய நெடுஞ்சாலையின் குறிப்பிட்ட பகுதிகளில் நிகழும் விபத்துக்கள் பற்றி ஆய்வு, போக்குவரத்து கழகங்களின் உதிரி பாகங்கள் உபயோகம் 1988-ல் போக்குவரத்து கழகங்களில் நிகழ்ந்த விபத்துக்கள் குறித்து செய்யப்படும் ஆய்வு என்பது போன்ற ஆராய்ச்சி நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

(ஆ) சோதனைச் சாலை.—வாகன உதிரி பாகங்களில் தரத்தைச் சோதனை செய்வதற்காக சோதனை சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்வருடம் போக்குவரத்து கழகங்களிலிருந்து பெறப்பட்ட 32 உதிரி பாகங்கள் சோதனை செய்யப்பட்டன. இது தவிர வாகன உதிரி பாகங்களை தயாரிக்கும் பிற கம்பெனிகளுக்காகவும் சோதனை செய்யப்பட்டது.

(இ) பயிற்சி (1–4–1988 முதல் 16–2–1988).—1988–89 ஆம் ஆண்டில் 30 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அனைத்து போக்குவரத்து கழகங்களை சேர்ந்த 595 பயிற்சியாளர்கள் இந்தப் பயிற்சிகளில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

(ஈ) ஓட்டுநர் பயிற்சி.—இந்நிறுவனத்தை ஓட்டுநர் பயிற்சி பிரிவு ஒன்று கும்மிடிபூண்டியில் நிறுவப்பட்டுள்ளது. இந்த வருடம் 600 பயிற்சியாளர்கள் ஓட்டுநர் பயிற்சி பிரிவில் நான்கு பிரிவாக சேர்க்கப்படுகின்றனர். 31–3–1989 வரையில் 307 பயிற்சியாளர்கள் இரண்டு பிரிவாக பயிற்சி பெற்றனர்.

கணனி.—சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கணனி பிரிவில் நடைபெறுகின்ற முக்கியமான வேலைகளை இரண்டு பிரிவாக பிரிக்கலாம்.

(1) தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்து கழகங்களாகவும் மற்றும் ஆராய்ச்சி பணிகளுக்காகவும் தேவையான சாப்டுவேர் பேக்கேஜ் தயாரித்தல்.

(2) (அ) போக்குவரத்து கழகஙகளில் விபரங்களை கணனியின் உதவி கொண்டு சீரமைத்து ஏபிசி, டயர் திறனாய்வு, மற்றும் நிதிப்பணி, உருளை (டயர்) மற்றும் மின் இயக்கியின் பணிகள் முதலியவற்றுக்கு தேவையான விபரங்களை கணனியின் மூலம் சீரமைத்தல்.

(ஆ) தொழிற்சாலை கணக்கியல் தேர்வு, வணிகவியல் பயிற்சியாளர்கள் தேர்வு, மேற்பார்வையாளர்கள் தேர்வு, போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப்படும் மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு, கும்மிடிப்பூண்டியில் உள்ள ஓட்டுநர் பயிற்சி பள்ளிக்கு மாணவர்கள் தேர்வு, அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவி பொறியாளர்கள் (பயிற்சி) தேர்வு, மற்றும் நிர்வாக இயக்கம், நிதி கட்டுப்பாடு, போக்குவரத்துக் கழகங்களின் விபத்துக்களை பற்றி ஆய்வு செய்தல் போன்ற பணிகளை இக்கணனியின் மூலம் செய்யப்படுகிறது.

### சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் நிறுவனம், ஈரோடு.

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மோட்டார் வாகன ஆய்வு ஒட்டிய பொறியியல் கல்லூரி 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கீழ்க்கண்ட ஐந்து பிரிவுகளில் பட்டங்கள் தரப்படுகின்றன :—

1. மோட்டார் வாகனத்துறை.
2. பொறியியல் துறை.
3. போக்குவரத்துத் துறை.
4. கம்ப்யூட்டர் துறை.

5. எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தொடர்புத் துறை.

இக்கல்லூரியில் பயின்ற மாணவர்களின் முதல் பிரிவு 1988-ல் வெளி வந்துள்ளனர். தற்போது ஆராய்ச்சி, திசயமைவு கொண்ட பொறியியற் கல்லூரியில் மொத்தம் 654 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். மேலும் ஆராய்ச்சி செய்வதற்கான உள்ளமைப்பு வசதிகள் இக்கல்லூரியில் ஏற்படுத்தப்படுகின்றன.

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை :

தமிழக அரசு ஆணைப்படி பெரியார் மாவட்டம் பெருந்துறையில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ''இராமலிங்கம் காச நோய் மருத்துவ மனைக்கு'' சொந்தமான இடத்தில் நிறுவப்பட்ட அந்த மருத்துவ மனையின் கட்டிடத்தில் மராமத்து வேலைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது 180 மாணவர்கள் (1986–87, 1987–88, 1988–89 ஆகிய மூன்று கல்வி ஆண்டுக்கும்) தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் 60 மாணவர்களும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 60 மாணவர்களும், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் 60 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள்.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையானது, தமிழ்நாட்டிலுள்ள அரசு சாலைகள் மற்றும் பாலங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கும், ஊரகப் பணிகள் திட்டத்தை செயலாக்குவதற்கு தேவையான தொழில் நுட்ப வழிக்காட்டலை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்குவதற்கும் பொறுப்பு வகிக்கின்றது.

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, 31–3–1989 ஆம் தேதிய நிலவரப்படி, நெடுஞ்சாலைப் பிரிவால், பராமரிக்கப்படும் பல்வேறு இன சாலைகளின் மொத்த நீளம் 46,313 கி.மீ. ஆகும்.

| சாலைகளின் இனம். | நீளம். (கி.மீ.ல்) |
|---|---|
| (1) | (2) |
| மாநில நெடுஞ்சாலைகள் | 1,885 |
| பெரிய மாவட்டச் சாலைகள் | 14,008 |
| இதர மாவட்டச் சாலைகள் | 30,40 |
| மொத்த நீளம். | 46,313 |

(2) இதர சாலைகள் திட்டம்.— ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் ரூ. 50,000-க்கு மேற்பட்ட மதிப்பிலான பெரிய/சிறிய பாலங்கள், தாம்போகிகள், மதகுப்பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலைகளை மேம்பாடு செய்தல் போன்ற மூலப் பணிகள் பகுதி 2 திட்டத்தில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. சாலைகளையும் பாலங்களையும் பராமரிப்பதில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ. 50,000-மும் அதற்கு மேற்பட்ட மதிப்பிலான சாலை மற்றும் பாலப்பணிகள் முடிக்கப்பட்ட பின்னர், அவை அரசின் நிதியைக் கொண்டு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையால் பராமரிக்கப்பட வேண்டும் என்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(3) தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் / சுரங்கப்பாதைகள் கட்டுதல்.— அணுகுசாலைகள் உட்பட புதியதாக இரயில்வே மேம்பாலங்கள்/சுரங்கப்பாதைகள் கட்டத் தேவைப்படும் மதிப்பீட்டுத் தொகையை மாநில அரசும், இரயில்வே துறையும் 50 : 50 என்கிற விகிதத்தில் பங்கேற்றுக் கொள்கின்றன. ஆளில்லா இருப்புப்பாதைக் கடவுகளை ஆட்களைக் கொண்டு இயக்குதல், தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளின் தரம் உயர்த்துதல் மற்றும் தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்கு பதிலாக மேம்பாலம்/சுரங்கப்பாதைகள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக மாநில அரசால் முன்னதாக செலவிடப்படும் தொகையினை திரும்பப் பெறுவதற்காக இந்திய அரசின் இரயில்வே அமைச்சகம். ''இயில்வே பாதுகாப்புப் பணிகள் நிதி'' என்கிற ஒரு நிதியினை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்கு பதிலாக மேம்பாலம்/சுரங்கப்பாதைகள் கட்டுவதற்கென்று மேல்குறிப்பிட்டுள்ள நிதியிலிருந்து 80 விழுக்காடு நிதியினை மாநில அரசுக்கு வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மரங்கள் நடுதல்.— சுற்றுப்புற சூழ்நிலை பராமரிப்பதற்காகவும், சாலையை உபயோகிப்பவர்களுக்கு நிழல் கொடுப்பதற்காகவும், சாலையோரங்களில் பெருமளவில் நிழல் தரும் மரங்களை வளர்க்கும் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மரங்கள், அவற்றின் நுகர் உரிமைகளின் மூலம் அரசுக்கு ஒரு வகை வருவாயையும் ஏற்படுத்துகின்றது. இப்பணியினால், ஊரக வேலை வாய்ப்பும் மற்றும் ஊரக தொழில் வளர்ச்சியும் உருவாகின்றது. தற்போது, டிம்பர் எரிபொருள், எண்ணெய், கனிகள் மற்றும் மலர்கள் வழங்கும் பயனுள்ள மரங்கள் பலவற்றை வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சீரான கண்காணிப்புடன் தொகுதி மர வளர்ப்பு நுணுக்கங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இதனால் மரங்களின் ஆயுள் விகிதம் கூடுதலாகின்றது.

(6) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்.

1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் 100 விழுக்காடு மைய அரசு நிதியுதவியுடன் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு ஆண்டில் 100 நாட்கள்வரை, ஊரகப்பகுதிகளிலுள்ள ஒவ்வொரு நிலமற்ற ஏழை விவசாய குடும்பத்திலும் குறைந்த பட்சம் ஒரு நபருக்கு வேலை வாய்ப்பினை உறுதியளிப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தின் கீழ் இருபது அம்சத் திட்டம் மற்றும் குறைந்த அளவில் தேவைத் திட்டங்களில் இடம் பெற்றுள்ள செயல் திட்டங்கள் செயலாக்கத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஊரக இணைப்புச் சாலைகள் அமைப்புப் பணிகளும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறையால் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், தொழிலாளிகளுக்கு அளிக்கப்படும் கூலித் தொகை பணியின் மொத்த மதிப்பில் சுமார் 50 விழுக்காடு அளவில் இருக்கும்.

இத்திட்டம் செயல்படுத்த தொடங்கியதிலிருந்து இத்திட்டத்தின் கீழ் 4,917 கி.மீ. நீளமுள்ள சாலைகளை ரூ. 61.03 கோடி மதிப்பில் அமைக்கும் 1,419 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

1989 மார்ச் திங்கள் வரை, 3,356 கி.மீ. நீளமுள்ள 1,305 சாலை அமைப்புப் பணிகள் ரூ. 52.36 கோடி மதிப்பீட்டுத் தொகையில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1989 மார்ச் திங்கள் இறுதி வரை இத்திட்டத்தின் கீழ் 287.25 இலட்சம் மனித திறன் நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 40,315 டன் அளவு தானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. 3,178 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

4. பணிகளின் முன்னேற்றம் அனைத்து தலைப்புகள்/திட்டங்களின் கீழ் தனித்தனியாக செயல் மற்றும் நிதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளும் நிறைவேற்றப் பட்ட சாதனைகளும் :—

| தலைப்புகள் திட்டங்கள். | பணியின் தன்மை. | செயல்பாடு பற்றியது. | | நிதிபற்றியது. | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு. | சாதனை | இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அ. திட்டப்பணிகள் (மாநில அரசு நிதி). | | | | | |
| 1. மாநில நெடுஞ் சாலைகள். | 1. சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 2 பணிகள் 5.00 கி.மீ. நீளம். | 2 பணிகள் 5.00 கி.மீ. நீளம் | 426.55 | 426.55 |
| | 2. பாலங்களை திரும்பக்கட்டுதல். | 4 பணிகள். | 4 பணிகள். | | |
| 2. பெரிய மாவட்டச் சாலைகள். | 1. சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 7 பணிகள் 32 கி.மீ. நீளம். | 7 பணிகள் 32 கி.மீ. நீளம். | 408.93 | 408.93 |
| | 2 பாலங்களைத் திரும்பக் கட்டுதல். | 14 பணிகள். | 14 பணிகள். | | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 3. இதர மாவட்டச் சாலைகள். | 1. சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 29 பணிகள் 130கி.மீ. நீளம். | 29 பணிகள் 130 கி.மீ. நீளம். | 341.65 | 341.65 |
| | 2. பாலங்களை கட்டுதல். | 10 பணிகள். | 10 பணிகள். | | |
| 4. இதர சாலைகள் | 1. சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல். | 17 பணிகள் 17 கி.மீ. நீளம். | 17 பணிகள் 47கி.மீ. நீளம். | 182.22 | 182.22 |
| | 2. பாலங்களை திரும்பக் கட்டுதல். | 15 பணிகள். | 25 பணிகள். | 43.51 | 43.51 |
| 5. கருவிகளும், தளவாடங்களும். | ... | ... | | | |
| 6. மரங்கள் நடுதல். | 1 பனை மரங்கள் வளர்த்தல். | 1,44,92,100 மரங்கள். | 1,44,92,100 மரங்கள். | | |
| | 2. இதர மரங்கள் வளர்த்தல். | 54,700 மரங்கள். | 54,700 மரங்கள். | 39.58 | 39.58 |
| 7. தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுகளுக்கு பதிலாக மேம்பாலம்/சுரங்கப் பாதைகள் கட்டுதல். | ... | 3 பணிகள். | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. | 130.15 | 130.15 |

**ஆ. மைய அரசுத் திட்டம்: —**

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம். | | | 157பணிகள் 444.00 கி.மீ. நீளம். | 692.76 | 688.01 |
| | | வழங்கப்பட்ட உணவு தானியங்களின் மதிப்பு. | | 97.38 | 112.89 |

**இ. திட்டம் சாராப் பணிகள் : 1988—89 : —**

(அரசு சாலைகளைப் பராமரித்தல் (மாநில அரசு நிதி): —

| (1) | நிதிஒதுக்கீடு இலக்கு. (2) | சாதனை. (3) |
|---|---|---|
| **(1) மாநில அரசு சாலைகள் : —** | | |
| (அ) மாநில நெடுஞ்சாலைகள் — — | 350.00 | 350.00 |
| (ஆ) மரங்கள் நடுதல் மற்றும் பராமரித்தல் — | 7.00 | 7.00 |
| (இ) பெரிய மாவட்டச் சாலைகள் — — | 2,250.00 | 2,250.00 |
| (ஈ) மரங்கள் நடுதல் மற்றும் பராமரித்தல் — | 33.00 | 33.00 |
| (உ) இதர மாவட்டச் சாலைகள் — — | 2,100.00 | 2,100.00 |
| (ஊ) மாநகரச் சாலைகள் ... ... | 92.00 | 92.00 |
| மொத்தம் | 4,832.00 | 4,832.00 |

**(2) கருவிகளும் தளவாடங்களும் :—**

| | | |
|---|---|---|
| (அ) மோட்டார் வாகனங்கள் பராமரிப்பு | 150.00 | 150.00 |
| (ஆ) எரிபொருள் பயனீட்டளவு | 50.00 | 50.00 |
| (இ) இதர பராமரிப்பு | 250.00 | 250.00 |
| (ஈ) புது விநியோகம் | 5.00 | 5.00 |
| மொத்தம் | 455.00 | 455.00 |

**(3) கட்டிடங்கள் :—**

| | | |
|---|---|---|
| (அ) விலை மற்றும் வரிகள் | 13.00 | 13.00 |
| (ஆ) பராமரிப்பு | 75.00 | 75.00 |
| மொத்தம் | 88.00 | 88.00 |

(8) முடிவுரை:— இந்திய திட்டக்குழு 1985—90 ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசு திட்டங்களில் சாலைகளும், பாலங்களும் பாலங்களுக்கும் என்று ரூ. 130.00 கோடி மூலதன செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 1988—89—ம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டு காலத்திலேயே மொத்தம் ரூ. 149.29 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது ஒப்புதலளிக்கப்பட்டுள்ள திட்ட மூலதனம் ரூ. 130.00 கோடியை மிஞ்சி விட்டது. 31—3—1990 வரையிலான ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவாகக்கூடிய மொத்தத் தொகை ரூ. 196.79 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## (ii) தேசிய நெடுஞ்சாலை.

நெடுஞ்சாலைத் துறையின் ஒரு பிரிவான தேசிய நெடுஞ்சாலை 1971-ல் துவக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) கட்டுப்பாட்டின்கீழ் நடத்தப்படுகிறது. தற்போது இந்தப் பிரிவின்கீழ் கவனிக்கப்படும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும்.

(1) தேசிய நெடுஞ்சாலைகள் (மத்தியப் பகுதி திட்டம்):—தேசிய நெடுஞ்சாலைகள் மைய அரசின் சொத்தாகும். தேசிய நெடுஞ்சாலைகள் பராமரிப்பு, மற்றும் மேம்பாடு வேலைகள் மைய அரசால் அவர்களின் சொந்த நிதியிலிருந்து முழு நிதி உதவியுடன் செய்யப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைகளின் பணிகளை மாநில அரசின் நெடுஞ்சாலை துறையின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவுதான் மைய அரசின் சார்பாக செயல்படுத்துகிறது. இதற்கு மைய அரசு நடந்த பணிகளின் மதிப்பில் 9 விழுக்காட்டிற்கு முகமை தொகை கொடுக்கிறது. தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகள் நீளமான 125.86 கி.மீ. சேர்ந்து தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 1883 கி.மீ. ஆகும். மொத்த நீளம் கீழ்க்கண்டவாறு அடங்கியுள்ளது.—

| | |
|---|---|
| இருவழிப்பாதை அகலம் .. | 1,843 கி.மீ. |
| ஒரு வழிப்பாதை அகலம் .. | 40 கி.மீ. |
| மொத்தம் | 1,883 கி.மீ. |

தேசிய நெடுஞ்சாலைகளை பராமரிப்பதோடு கீழ்க்கண்ட மூலப் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன:—

(1) இருவழிப்பாதையாக அகலப்படுத்துதல்.

(2) பலவீனமான இருவழிப்பாதை பகுதிகளை வலுப்படுத்துதல்.

(3) ஒரு வழிப்பாதையை இருவழிப்பாதையாக அகலப்படுத்தி வலுப்படுத்துதல்.

(4) வளைவுகளை நேராக மேம்பாடுகள் மற்றும் சாலை சந்திப்பு மேம்பாடுகள்.

(5) மேல்/கீழ் பாலங்கள் கட்டுதல்.

(6) புறவழிச்சாலைகள் அமைத்தல்.

(7) பெரிய மற்றும் சிறிய பாலங்களை கட்டுதல்.

(8) சிறுபாலங்கள் கட்டுதல்.

(9) மரங்கள் நடுதல்

2. மத்திய சாலை நிதித் திட்டம் (மாநில அரசு பகுதி).—மத்திய சாலை நிதியானது காலக்கழிவில்லாத நிதியாகும். மத்திய சாலை நிதி சம்பந்தமாக 13—5—1988-ல் மக்கள் பேரவை/மாநில பேரவைகளால் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, மோட்டார் சாராவி மற்றும் டீசல் ஆகியன மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வை, ஆயத்தீர்வை அடிப்படை விலையில் 5 விழுக்காட்டிற்கு குறையாமல் ஒதுக்கப்பட்டு சாலைகள் மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் அனுமதிக்கப்படும்.

3. தேசிய நெடுஞ்சாலைகள் நகர்ப்பகுதி இணைப்புகள் (மூல வேலைகள்)—(மாநிலப்பகுதி திட்டம்).—மக்கள் தொகை 20,000 மும் அதற்கு மேலும் உள்ள நகர்ப் பகுதி எல்லைக்குள அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலை நகர்ப் பகுதி இணைப்புகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மொத்த தேசிய நெடுஞ் சாலை நகர்ப்பகுதி இணைப்புகளின் நீளம் 125.85 கி.மீ.

இத் தேசிய நெடுஞ்சாலை நகர்ப்பகுதி பராமரிப்பிற்கு ஆண்டொன்றுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 16,000 வீதம் மைய அரசின் நிதி உதவி கிடைக்கிறது. இதற்கு மேல் ஆகும் கூடுதல் நிதியை மாநில அரசு அளிக்கிறது. இச் சாலைப்பகுதிகளை நிரமான முறையில் பராமரிக்க, மேம்பாட்டு வேலைகள் மாநில பகுதி-2 திட்டத்தின்கீழ் கட்டம் கட்டமாக செயலாக்கப்படுகிறது.

4. பழங்குடியினர் பகுதி வளர்ச்சித் திட்டம் (மாநில அரசு பகுதி திட்டம்).—பழங்குடியினர் பகுதிகள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப் பட்டு அடிப்படை வசதிகள் இந்தப் பகுதிகளுக்கு அளிக்க குறிப்பிட்ட திட்டங்கள் தீட்டப்பட்டன., முழுவதும் சாலைத் தொடர்பே இல்லாத பழங்குடியினர் சிற்றூர் களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்து போக்குவரவு வசதி செய்தல் இவற்றில் முதன் மையானதாகும். ஆகையால் சாலைகள் அமைப்பு மிக முக்கியமாக பங்கேற்கிறது. இத்திட்டத்தின்கீழ், சாலை வேலைகள், பின்வரும் தெரிந்தெடுக்கப்பட்ட பழங்குடி யினர் பகுதிகளில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. (1) ஏற்காடு மலை, (2) கொல்லி மலை, (3) கல்வராயன் மலை, (4) அரனூத்துமலை, (5) பச்சமலை (சேலம் மாவட்டம்), (6) ஜவ்வாது மலை, (வடஆற்காடு மாவட்டம்), (7) கல்ராயன் மலை, (தென்னாற்காடு மாவட்டம்), (8) சித்தேரி மலை, (தர்மபுரி மாவட்டம்), (9) பச்சமலை(திருச்சிராப்பள்ளி மாவட்டம்), இந்தத் திட்டம் 1976–77-லிருந்து துவக்கப்பட்டு மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

5. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி மாவட்டம்) (மத்திய ஆதரவு திட்டம்).—மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே உரியது இத்திட்டங்களின் நோக்கங்கள் மலை சிற்றூர்களின் சமூக பொருளாதார நிலையை, மேம்படுத்துதல், வெவ்வேறு திட்டக் கூறுகளான வேளாண்மை, கால்நடை, வனங்கள் தொழில்கள், சுற்றுலா ஆகியவற்றின்கீழ் செயலாக்கப்படும் இடங்களுக்கு தொடர்பு/வழி ஏற்படுத்துதல், சமூக பொருளாதார செயல்களுள்ள ஊர் மையங்களுடன் பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிட சிற்றூர்களை இணைத்தல் ஆகியவையாகும். இத்திட்டம் 1975-ம் ஆண்டில் துவக்கப்பட்டு தொடர்ந்து நடை பெறுகிறது.

6. மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தித் திட்டம் (மத்திய ஆதரவு திட்டம்).—இத்திட்டத்தின் நோக்கம் தமிழ்நாட்டில் மேற்கு மலைத்தொடர் பகுதியில் மலைப் பகுதியில் வாழும் மக்களின் தரத்தை உயர்த்துவதற்காகவும், மலை விளைப்பொருட் களை மலையிலிருந்து சமவெளிக்கு வணிக வாய்ப்பிற்காக சாலைத் தொடர்பு ஏற்படுத்த லாகும். இத்திட்டம் கோவை, மதுரை, திண்டுக்கல், காயிதேமில்லத், காமராசர்; திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்முறை யிலுள்ளது.

## பணிநிறைவேற்றத்தில் இலக்கு மற்றும் சாதனைகள்.

### I. தேசிய நெடுஞ்சாலைகள் :

(1) மூல வேலைகள் :

செயல் :

| நடவடிக்கை. | 1988–89-க்கு இலக்கு. | 1988–89-ல் சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. செமிடென்ஸ் கார்பெட் மற்றும் பிர்மிக்ஸ் கார்பெட் (தார்பரப்பு) (கிலோ மீட்டர்கள்) .. | 68.00கி.மீ. | 45.65 கி.மீ |
| 2. சிறுபாலங்கள் (எண்கள்) | 90 எண்கள். | 68 எண்கள். |
| 3. பாலங்கள் (எண்கள்) | 4 எண்கள். | |

| நிதி. | 1988–89-க்கு ஒதுக்கீடு. | 1988–89-ல் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சங்களில்.) | (ரூபாய் லட்சங்களில்.) |
| தேசிய நெடுஞ்சாலை (மூல வேலைகள்) | 1,571.00 | 1,600.66 |

### II. தேசிய நெடுஞ்சாலை பராமரிப்பு :

| | | |
|---|---|---|
| சாதாரண பழுதுபார்த்தல் | 170.00 | 171.92 |
| காலமுறை புதுப்பித்தல் .. | 417.57 | 418.28 |
| வெள்ளைச் சேதங்கள் பழுதுபார்த்தல் (தொடர்ச்சி). | 19.73 | 19.68 |
| வெள்ளச் சேதங்கள் பழுதுபார்த்தல் (புது). | | |
| தனி பழுதுபார்த்தல் (தொடர்ச்சி) .. | 37.41 | 37.41 |
| தனி பழுதுபார்த்தல் (புது) | 1.52 | 1.72 |

### மத்தியசாலை நிதித் திட்டம் :

செயல் :

| நடவடிக்கை. | 1988–89-ல் இலக்கு. | 1988–89-ல் சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தார் பரப்பு (கி.மீ.) | | |
| 2. சிறுபாலங்கள் (எண்கள்) | 67 எண்கள் | |
| 3. பாலங்கள் (எண்கள்) | | 1 எண். |

| நிதி. | 1988—89-ல் ஒதுக்கீடு. | 1988—89-ல் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (லட்சங்கள்.) | (லட்சங்கள்.) |
| மத்தியசாலை நிதி | 14.79 | 14.36 |

## III. தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகள் (மூலப்பணிகள்) :

| செயல் நடவடிக்கை. | 1988–89-ல் இலக்கு. | 1988–89-ல் சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தார் பரப்பு | | |
| 2. பாலங்கள் | | |

| நிதி. | 1988–89-ல் ஒதுக்கீடு. | 1988–89-ல் செலவு. |
|---|---|---|
| (1) | (2) (லட்சங்கள்.) | (3) (லட்சங்கள்.) |
| தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புறம் (மூல வேலைகள்) பாகம். | 15.00 | 15.00 |
| தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகள் (பராமரிப்பு) (மைய அரசு பங்கு 19.47 லட்சங்கள்). | 41.50 | 41.96 |

## IV. பழங்குடியினர் பகுதி வளர்ச்சித் திட்டம் :

செயல் :

| நடவடிக்கை. | 1988–89-ல் இலக்கு. | 1988–89-ல் சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சாலை— தார்பரப்பு (கி.மீ.) | 19.30 கி.மீ. | 24.35 கி.மீ. |
| 2. சிறுபாலங்கள் (எண்கள்) | 80 எண்கள் | 48எண்கள். |
| 3. பாலங்கள் (எண்கள்) | 2 எண்கள். | 6 எண்கள் (தாம்போகிகளுக்கு சேர்த்து) |

| நிதி. | 1988–89-ல் ஒதுக்கீடு. | 1988–89-ல் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (லட்சங்கள்.) | (லட்சங்கள்.) |
| ப.ப.வ.நி. | 110.10 | 110.47 |

## V. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

செயல் :

| நடவடிக்கை. | 1988–89-ல் இலக்கு. | 1988–89-ல் சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சாலை—தார் பரப்பு (கி.மீ.) | 86.96 கி.மீ. | 31.16 |
| 2. சிறுபாலங்கள் (எண்கள்) | 88 எண்கள் | 88 எண்கள். |

| நிதி. | 1988–89-ல் ஒதுக்கீடு. | 1988–89-ல் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (லட்சங்கள்.) | (லட்சங்க.) |
| மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 65.00 | 65.00 |

## VI. மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தித் திட்டம்:

| செயல் : நடவடிக்கை. | 1988—89-ல் இலக்கு. | 1988 89-ல் சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (கி·மீ.) | |
| 1. சாலை தார் பரப்பு (கி.மீ.) | 12.20 | 9.40 |
| 2. சிறுபாலங்கள் (எண்கள்) | 18 எண்கள். | 10 எண்கள். |
| 3. பாலங்கள் (எண்கள்) | 6 எண்கள் | 1 எண். |

| நிதி. | 1988—89-ல் ஒதுக்கீடு. | 1988—89-ல் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (லட்சங்கள்.) | (லட்சங்கள்.) |
| மேற்குமலை அபிவிருத்தித் திட்டம் | 25.36 | 25.53 |

ஏ. வனத்துறை நிதிகள்

(மேற்கு மலை அபிவிருத்தித் திட்டக் கோட்டத்தால் செயலாக்கம்.)

| செயல். | மொத்த சாதனை. |
|---|---|
| கடமலைக்குண்டு—வெள்ளிமலை வரையுள்ள தற்போதுள்ள கட்டைவண்டிப் பாதையில் கி.மீ. 0/0 — 41/0 மதிப்பீடு ரூ. 260 லட்சங்கள். | சாலை வேலைகள் முடிந்து விட்டன. வடிகால் வசதிகள் 185 எண்கள், சிறிய பாலங்கள் 6 எண்கள் முடிந்து விட்டன. கி.மீ. 0/2-ல் பெரிய பால வேலை முன்னேற்றத்திலுள்ளது. |

| நிதி. | 1988—89-ல் ஒதுக்கீடு. | 1988—89-ல் செலவு. |
|---|---|---|
| | 27.00 லட்சங்கள். | 27.08 லட்சங்கள். |

### (ஈ) மரங்கள் நடுதல் :

மைய அரசு ஆண்டுத் திட்டம் 1988—89-ல் நிழல் தரு மரங்களை நடுவதற்கு, இரண்டு ஆண்டுகளுக்கு அவற்றின் பராமரிப்புக்கு தேசிய நெடுஞ்சாலை ஓரமாக 94.2 கிலோ மீட்டர்களுக்கு ரூ. 42.305 லட்சங்கள் ஒப்புதலளித்தது. 1988—89-ல் பனை மற்றும் பிற மரங்கள் 10,20,896 நடப்பட்டன.

### (iii) நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-I.

நகர்ப்புறங்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கோடு தமிழக அரசு சென்னை நகரில் உலக வங்கியின் உதவியுடன் 1971-ம் ஆண்டு முதல் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. முதலாவதாக சென்னை நகர மேம்பாடு திட்டம் 1 ஆனது 1977 முதல் 1980 வரை செயல்படுத்தப்பட்டது. பின்னர் அதன் 2-ம் கட்டம் 1981-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டங்கள் சென்னை மாநகரத் தேவைகளை நிறைவு செய்வதில் உதவியாக அமைந்துள்ளன.

சென்னை மாநகரில் செயல்படுத்தப்பட்ட மேற்கண்ட திட்டங்களின் மூலம் பெறப்பட்ட அனுபவங்களால் தமிழக அரசு சென்னை மாநகர் உள்ளிட்ட மேலும் 9 நகரங்களுக்கு இத்திட்டங்களை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் பெயர் "தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்" என்பதாகும். இது உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டமானது சென்னை மாநகரம், கோவை, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர் மற்றும் வேலூர் நகரங்களை உள்ளடக்கியது. இதன் மூலம் மாநில அரசின் நகர வளர்ச்சி கொள்கையின் பயன் மாநிலம் முழுமைக்கும் சென்றடையவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது 1988-ம் ஆண்டில் தொடங்கப்பட்டு 5 முதல் 6 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டம் 5 பகுதிகளை உடையது. போக்குவரத்து மேம்பாடு அதில் ஒன்றாகும். நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் மூலம் இந்த பகுதி செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் ரூ. 100.00 கோடிகளில் செயலாக்கம் செய்யப்பட உள்ளது. இதில் கட்டுமானப் பணிகளில் ஏற்படும் செலவினங்களில் 75 விழுக்காடு உலக வங்கியினால் ஈடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் சாலைகள் மேம்பாடு செய்தல் வட்ட சாலைகள் அமைத்தல் புறவழிச் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

வேலைகள் கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன :—

(1) சாலையின் திறன், சரியான இணைப்பு அமைப்புகள் உருவாக்கி சாலை உபயோகிப்பாளர்களின் தேவைகளை நிறைவு செய்தல்.

(2) சாலை விதிகளைப் பயன்படுத்தும் வகையில் மேம்பாடுகள் செய்தல்.

(3) பாதசாரிகள் மற்றும் மெதுவாக செல்லும் வாகனங்களுக்கு வழிவகைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவை ஆகும்.

**செயல்பாடுகள் :**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள் சென்னை மாநகர வளர்ச்சித் திட்டம் 1 மற்றும் 2 மற்றும் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித்திட்டங்களின் பணிகளும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பிரிவின் பொறுப்பில் செயலாக்கப்பட்டு வருகின்றது.

**வேலை முன்னேற்றம் இலக்கு மற்றும் சாதனை :**

**செயல் இலக்கு, தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் :**

(1) 14 வேலைகளுக்கு ரூ. 55.20 கோடிக்கு அரசிடம் இருந்து நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

(2) 4 வேலைகளுக்கு ரூ. 1246.30 இலட்சம் மதிப்பீட்டில் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(3) 3 வேலைகளுக்கு ஒப்பந்தங்கள் இறுதியாக்கப்பட்டு 1988—89-ம் ஆண்டில் ஒரு வேலை செயலாக்கம் துவங்கப்பட்டுள்ளது.

(4) மீதமுள்ள பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி வெவ்வேறு நிலைகளை எட்டியுள்ளது.

**சென்னை நகர மேம்பாட்டு திட்டம் 1 மற்றும் 2 :**

உள்வட்ட சாலை கி.மீ. 0/0-17,450-ல் நிலம் கையகப்படுத்துவதினால் உள்ள சிறு பகுதி நீங்கலாகவும் மற்றும் 2 சிறுபாலவேலைகள் நடைபெற்று வருகின்ற பகுதியும் தவிர எல்லா இடங்களிலும் பணிகள் முடிவடைந்து விட்டன. வைத்தியநாத முதலி சாலையில் உள்ள சாலை மேம்பாலப்பணி எடுத்துக் கொள்ளப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளது.

நிதி இலக்கு (ரூபாய் இலட்சங்களில்).

| திட்டம். (1) | ஒதுக்கீடு. (2) | செலவு விவரம். (3) |
|---|---|---|
| தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் .. | 184.03 | 186.33 |
| ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம். | 13.10 | 13.10 |
| சென்னை நகர மேம்பாட்டு திட்டம் 1 | 39.22 | 39.19 |
| சென்னை நகர மேம்பாட்டு திட்டம் 2 | 2.66 | 2.74 |

**அறிக்கை ஆண்டில் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்கள்:**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டமானது 1988—89-ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட புதிய திட்டமாகும்.

## நகர்ப்புற வளர்ச்சி திட்டம்.

**முன்னுரை :**

நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டப் பிரிவு தமிழ்நாடு வளர்ச்சி திட்டத்தின் கீழ்வரும் பணிகளையும், சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம் I, II ஒருங்கிணைந்த மாநகர வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் கீழ் வரும் எஞ்சியுள்ள பணிகளையும் நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் உலக வங்கி உதவிபெறும் ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் 75 சதவீதம் செலவை உலக வங்கி அளிக்கிறது.

சென்னை மாநகரம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர் ஆகிய நகரங்களில் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

**நோக்கங்கள் :**

பின்வரும் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு பணிகள் தெரிந்தெடுக்கப்படுகின்றன:

1. போக்குவரத்து நிர்வாகம், சரக்குகள், பயணிகள் போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைக் குறைந்த செலவில் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து அதனைச் சீரிய முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் சாலைப்பணிகளில் செய்யப்படும் மூலதன முதலீட்டைக் குறைத்தல்.

2. போக்குவரத்துத் திறத்தையும் அரசுப் போக்குவரத்துப் பணியின், குறிப்பாக நகர்ப்புற ஏழை மக்களுக்கு அளிக்கப்படும் போக்குவரத்து வசதியின் தரத்தையும் மேம்படுத்தல்.

3. சாலையைப் பயன்படுத்துவோரின் தேவைக்கு முன்னுரிமை கொடுத்து நகர்ப் புற சாலையின் திறனளவை அதிகரித்தல்.

4. போக்குவரத்து விதி முறையை மேலும் செம்மையாகச் செயற்படுத்தல்.

5. பாதசாரிகள், மெதுவாக செல்லும் வண்டிகளின் பயணப் பாதுகாப்பு நிலைமைகளை மேம்படுத்தல்.

6. மாநகர நிலப் பயன், சுற்றுப்புறச் சூழல், நகர்ப்புற வளர்ச்சி ஆகியவை குறித்த நோக்கங்களை எய்தும் வகையில் சாலைப் பணித்திட்டங்களை வகுத்தல்.

**தேர்வும், வரம்பும் :**

போக்குவரத்து, பொருளாதார மதிப்பீடு, சமூகப் பயன்கள், ஆகியவற்றின் அடிப் படையில் இத்திட்டத்தின்கீழ் பணி தெரிந்தெடுக்கப்படுகின்றது. ஒரு பணி குறித்து பொருளாதார மதிப்பீடு செய்யும்போது அப்பணியின் பல்வேறு விருப்பு வழிகள் குறித் தும் பொருளாதார ஆய்வு செய்யப்படுகிறது. குறைந்தது 12 சதவீதம் என்ற வீதத்தில் வருமானம் தரக்கூடிய ஒரு திட்டம் தெரிந்தெடுக்கப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் 5 முக்கிய அம்சங்களில் பயணியர் சரக்குப் போக்கு வரத்து நிர்வாகத் திட்டம் ஒன்றாகும். இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 100.30 கோடியாகும். பயணியர் சரக்குப் போக்குவரத்துத் திட்டம் 1982—ல் தொடங்கப் பட்டது. 1984-ல் நிறைவேற்றி முடிக்க திட்டமிடப்பட்டது. நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டப்பிரிவு இப்பணியைச் செய்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் சுற்றுச்சாலை அமைத்தல், கிளைச்சாலை அமைத்தல், பாலங் கள் கட்டுதல், இருப்புப்பாதைக் கடவுக்குப் பதிலாக சுரங்கப்பாதை அமைத்தல், தற்போதுள்ள சாலைகளையும், பாலங்களையும் மேம்படுத்தல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

**பணிக்கு அனுமதி அளித்தல் :**

ரூ. 55.01 கோடி செலவாகக்கூடிய 16 பணிகளுக்கு (பணிகளின் பட்டியல் I-வது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது) அரசு 1988-89ல் அனுமதி அளித்துள்ளது. இவற் றுள் ரூ. 52.23 கோடி செலவாகக்கூடிய 14 பணிகளை நெடுஞ்சாலை-கிராமப்பணிகள் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டப் பிரிவு செயல்படுத்தவிருக்கிறது. ரூ. 2.78 கோடி செலவாகக்கூடிய எஞ்சிய 2 பணிகளை சென்னை மாநகராட்சி செயல் படுத்தவிருக்கிறது.

மேற்சொன்ன 14 பணிகளில் ஒரு பணி 1988—89-ல் தொடங்கப்பட்டுவிட்டது.

1988–89-ல் அதாவது திட்டத்தின் முதல் ஆண்டில் ரூ. 1.66 கோடி. செலவாகி யுள்ளது.

## அட்டவணை—I.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சரக்குப் போக்குவரத்து, பயணிப் போக்குவரத்து நிருவாகத் திட்டம் ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்ட பணி 1988—89 ஆம் ஆண்டில் செயல்படுத்துதல்.

| வட்டம். | மாநகரம். | பணியின் பெயர். | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சென்னை | சென்னை | கூவம் பாலத்தை மேம்படுத்தல் | 255.00 |
| 2. சென்னை | சென்னை | IRR 0.0 கி.மீ. முதல் 4.475 கி.மீ. வரை நான்கு பகுதிச் சாலையாக அகலப்படுத்துதல் | 400.00 |
| 3. சென்னை | சென்னை | IRR 4/475 கி.மீ. முதல் 6/615 கி.மீ. வரை | 300.00 |
| 4. சென்னை | சென்னை | IRR 8/615 கி.மீ. முதல் 11/720 கி.மீ. வரை | 258.00 |
| 5. சென்னை | சென்னை | 17/5 கி.மீட்டரிலிருந்து 25/6 கி.மீ. வரை உள்வட்டச் சாலையின் வடக்கு விரிவுப் பகுதி அமைத்தல்—சென்னை மாநகரில் 5/2 கி.மீட்டரிலிருந்து 4/16 கி.மீ. வரை TPP சாலையை சந்திக்கும். | 640.00 |
| 6. சென்னை | சென்னை | சென்னை மாநகரில் TPP சாலையின் 4 6 கிலோ மீட்டரை விரைவுப் போக்குவரத்து சாலையின் 13/0 கிலோ மீட்டரை இணைக்கும் MOR சாலையை வலுப்படுத்துதலும் அகலப் படுத்தலும். | 250.00<br>250.00 |
| 7. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகரில் கிழக்கு, மேற்கு மின் நிலைய சாலை உட்பட, 0/0 கி. மீ. விருந்து 1/6 கி. மீட்டர் வரை உள்ள குறுக்குச் சாலையையும் 0/0 கி. மீட்டரிலிருந்து 1/2 கி. மீட்டர் வரை உள்ள 100 அடி சாலையையும் மேம்படுத்தல். | 140.00 |
| 8. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகரில் ரயில்வே சுரங்கப்பாதை மீண்டும் கட்டுதலும் பெரிய கடைவீதி, பாரத ஸ்டேட் பாங்க் சாலை, மருத்துவமனை சாலை ஆகியவை சந்திக்கும் சாலையை மேம்படுத்தலும். | |
| 9. கோயம்புத்தூர் | | கோயம்புத்தூர் நகரில், குறுக்குச் சாலையில் 0/2 கி. மீட்டரில் சாலை மேம்பாலம் கட்டுதல். | 300.00 |

| | | | |
|---|---|---|---|
| 10. மதுரை | மதுரை | மதுரை மாநகரில் தே. 7ன் சேலம்—மதுரை பிரிவில் 436/85 கி.மீ. முதல் 440/730 கி.மீ. வரை மதுரை கிளைச் சாலையில் இரு பக்கமும் சைக்கிள் பாதையும் இணைப்புச் சாலையும் அமைத்தல். | 175.00 |
| 11. மதுரை | மதுரை | மதுரை மாநகரில் எல்லிஸ் நகரையும் மதுரை கிளைச் சாலையையும் இணைத்து மதுரை சந்திப்புக்கு அருகே திண்டுக்கல் சாலையில் மேம் பாலம் கட்டுதல். | 525.00 |
| 12. மதுரை | மதுரை | மதுரை மாநகரில் அண்ணாநகர் 80 அடி சாலையையும் காம ராஜர் சாலையையும் இணைத்து, வைகை ஆற்றுக் குக் குறுக்கே மேம்பாலம் கட்டுதல். | 370.00 |
| 13. திருச்சி | திருச்சி | திருச்சி நகரில் உள்ள சாலை மேம்பாலங்களை மீண்டும் கட்டுதல் உட்பட 50/6 கி. மீட்டரிலிருந்து 52/2 கி. மீட்டர் வரை புதுக்கோட்டை சாலையை மேம்படுத்தல். | 610.00 |
| 14. திருச்சி | திருச்சி | திருச்சி நகரில் சாலை ரோடை யும் கரூர் கிளைச் சாலையை யும் இணைத்து இணைப்புச் சாலை அமைத்தல். | 350.00 |
| சென்னை மாநகராட்சி நிறைவேற்றும் திட்டங்கள் : | | | |
| 15. சென்னை மாநகராட்சி | | உள்வட்டச் சாலையின் கீழ்ப் பாக்கம் பிரிவில் உள்ள சாலை யை மேம்படுத்தல். | 224.00 |
| 16. சென்னை மாநகராட்சி | | நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை போக்குவரத்து பாதுகாப்பு சாலை) | 54.00 |
| | | | 5501.00 |

<u>சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I, II :</u>

சென்னை பெருநகர் பகுதியில் மேம்பாட்டிற்கான நிதியுதவியைப் பெருவதற்கு உலக வங்கித் திட்டம் கொண்டுவரப்பட்டது. சென்னைப் பெருநகரப் பகுதிகளின் பல துறைகளை மேம்படுத்துவதற்கு தமிழ்நாட்டிற்கு நீண்ட காலத்தவணை அடிப் படையில், கடன் வசதி அளிக்க அனைத்து நாட்டு வளர்ச்சி அதிகார மன்றம் முன் வந்தது. அத்துறைகளுள் ஒன்று சாலையாகும். இதன்கீழ், உள் சுற்றுச் சாலை அமைத்தல், நடைபாதை, மிதி வண்டிப்பாதை, வண்டிப்பாதை, பாதசாரிகள் சுரங்கப் பாதை, பாலங்கள் ஆகியவை அமைத்தல், சந்திப்புப் பகுதி மேம்பாடுகள் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டம், சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I, II என படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1-ன் திட்டப் பணிக்காலம் 1980 முதல் 1986 வரை ஆகும்.

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1-ஐ பொறுத்த வரையில் கட்டிடப் பணிகளுக்கான செலவில் 45 சதவீதம் ஈடுசெய்யப்படுகிறது. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II-ஐப் பொறுத்தவரை, கட்டிடப்பணிகளுக்கான செலவில் 55 சதவீதம் ஈடுசெய்யப்படுகிறது.

முடிக்கப்பட்ட பணிகள், நடந்தேறிவரும் பணிகள் ஆகியவற்றின் பட்டியல், அட்டவணை II—ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1988—89 ஆம் ஆண்டுச் செலவு :—

| | |
|---|---|
| சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I | ரூ. 39.19 இலட்சம் |
| சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II | ரூ. 2.70 இலட்சம் |

மாநகர ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் :

சென்னை பெருநகரப் பகுதிக்குள் அமைந்துள்ள, நெடுஞ்சாலைகள்—ஊரகப் பணிகள் துறை, சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் பொறுப்பிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட சாலைகளின் மேம்பாட்டிற்கு, இத்திட்டம் வகை செய்கிறது.

முடிக்கப்பட்ட பணிகள், நடந்தேறிவரும் பணிகள் ஆகியவற்றின் பட்டியல், அட்டவணை III-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1988—89 ஆம் ஆண்டுச் செலவு :—

மாநகர ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ரூ. 13.10 இலட்சம்

அட்டவணை II

சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் 1

1988—89 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகள் :

1. கூவத்தின் குறுக்கே பாலம் கட்டுதல் உட்பட தேசிய நெடுஞ்சாலை 3ஐ இணைக்கும் வகையில் 0/0-11/7 கி.மீ. வரையில் உள் சுற்றுச் சாலை அமைத்தல் (நிலை 1) நிலம் கையகப் படுத்தல் தொடர்பான மூன்று வழக்குகளில் நீதிமன்றத் தடை ஆணையின் கீழ் உள்ள 65.00 மீட்டர் நீளம் நீங்கலாக, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. — ரூ. 333.186 இலட்சம்

நடந்தேறி வரும் பணி :

1. தண்டையார்பேட்டை இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள வி.எம். வீதியில் சாலை இருப்புப் பாதைக் கடவு அமைத்தல் — ரூ. 434.50 இலட்சம்

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

11/7 கி.மீ. முதல் 17/4+55 கி.மீ. வரையில் உள் சுற்றுச் சாலை அமைத்தல்.

13/727 மற்றும் 13/759—770 கி.மீட்டரில் இரு சிறு பாலங்கள் கட்டுதல் நீங்கலான, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன — ரூ. 381.00 இலட்சம்

அட்டவணை III

மாநகர ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் :

1988—89 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பணி :

1. கோட்டூர்புரத்திற்கு அருகில், பொறியியல் கல்லூரியையும் (Turn Bulls) டர்ன் புல்ஸ் சாலையையும் இணைத்து அடையாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுதல் — ரூ. 176.00 இலட்சம்

நடைபெற்று வரும் பணிகள் :

1. பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் புதிய ஆவடி சாலைச் சந்திப்பிலிருந்து வைணவக் கல்லூரி வரை (5/4—7/6 கி.மீ.) மேம்பாட்டுப் பணிகள். — ரூ. 100.00 இலட்சம்

1490-1690 சங்கிலிகள் 2010-2323 சங்கிலிகள் நீளமுள்ள பகுதிகள் நீங்கலான அனைத்துப் பகுதிகளிலும் பணி முடிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய பகுதிகளில் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது:

2. எம்.பி. 20 சாலையின் 5/0 கி.மீட்டருக்கும் எம். எம். சாலையின் 13/4 கி.மீட்டருக்கும் இடையில் இணைப்பு சாலை ஒன்றை அமைத்து மேம்படுத்தலும், வேளச்சேரிக்குக் கிளைசாலை அமைத்தலும் .. ரூ. 60.00 இலட்சம்.

வேளச்சேரி கிளைச்சாலை : 0/0-0/0325 கி.மீ. வரையிலுள்ள பகுதியில் நிலம் கிடைக்காததால் பணி நடைபெறவில்லை.

தரமணி இணைப்புச்சாலை : ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு குடிசை அமைந்துள்ள பகுதி நீங்கலான, அனைத்துப் பகுதிப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

3. டி.பி.பி. சாலையின் 5/2 கி.மீட்டரில் பாலம் ஒன்றைக் கட்டுதல் ரூ. 300.00 இலட்சம்

பாலம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது அணுகு சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## சிறு துறைமுகங்கள்.

தமிழ்நாடு துறைமுகத்துறை, தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. கடலூர் நாகப்பட்டினம் ஆகிய இடைநிலைத் துறைமுகங்களும், இராமேஸ்வரம் பாம்பன் கீழக்கரை குளச்சல், வாலிநோக்கம், கன்னியாகுமரி ஆகிய ஆறு சிறு துறைமுகங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள மாநிலத் துறைமுக அலுவலர் இத்துறையின் தலைவர் ஆவார்.

## வானிலை மற்றும் போக்குவரத்து :

கடலூர் துறைமுகம்.— ஆண்டு முழுவதும் வழக்கமான பருவ நிலை காணப்பட்டது. இந்த ஆண்டில் பருவ நிலைக் கோளாறு ஏதும் ஏற்படவில்லை.

இவ்வாண்டில் இத்துறைமுகத்திற்கு 19 கப்பல்கள் வந்தன. 16 கப்பல்கள் வெளிச்சென்றன. சென்ற ஆண்டில் 9 கப்பல்கள் வந்தன. 10 கப்பல்கள் வெளிச்சென்றன.

இந்த ஆண்டில் இத்துறைமுகத்தில் 1,65,324 மெட்ரிக் டன் எடையுள்ள சரக்கு கையாளப்பட்டது.

1,62,132 மெட்ரிக் டன் சரக்கு இறக்குமதி செய்யப்பட்டது. ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கின் எடை 3,192 மெட்ரிக்டன். கோதுமை முக்கிய சரக்காக இருந்தது.

3,192 மெட்ரிக் டன் எடையுள்ள பெல்ட்ஸ்பார் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1987–88-இல் 9.151 மெ.ட. எடையுள்ள பெல்ட்ஸ்பார் ஏற்றுமதி செய்யப்பட்டது.

நாகப்பட்டினம் துறைமுகம்.— டிசம்பர் 1988 மற்றும் சனவரி 1989 தவிர மற்ற மாதங்களில் வானிலை சாதாரணமாக இருந்தது.

அறிக்கைக்குரிய இவ்வாண்டில் 23 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வருகை புரிந்தன. 24 கப்பல்கள் இத்துறைமுகத்திலிருந்து வெளி சென்றன. சென்ற ஆண்டு இவை முறையே 38 கப்பல்கள் 36 கப்பல்கள் என இருந்தன.

இவ்வாண்டு மொத்தம் 60,682 மெட்ரிக்டன் எடையுள்ள சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யயப்பட்டது.. 1987–88இல் 24,276.5 மெட்ரிக் டன் எடையுள்ள சரக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதியாயின.

44,915 மெட்ரிக் டன் எடையுள்ள சரக்கு இறக்குமதி செய்யப்பட்டது. 15.767 மெட்ரிக் டன் எடையுள்ள சரக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கோதுமை முதன்மைச் சரக்காக இருந்தது.

இந்த ஆண்டு 15,767 மெட்ரிக் டன் எடையுள்ள சரக்கு ஏற்றுமதியாயின. 1987–88 இல் இது 12,946.5 என இருந்தது.

இத்துறைமுகத்தில் ஆண்டு முழுவதும் சரக்கு போக்குவரத்து நடைபெறும். பயணிகள் கப்பல் ''எம்.வி. சிதம்பரம்'' தீ விபத்துக்குள்ளான காரணத்தால் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிற்கு செல்லும் பயணிகள் போக்குவரத்து 12—2—1985 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இராமேசுவரம் துறைமுகம்.— நவம்பர் 1988 மற்றும், டிசம்பர் 1988-இல் வடகிழக்குப் பருவக்காற்று காரணமாக வானிலையில் மாறுதல் ஏற்பட்டது. மற்ற காலங்களில் சாதாரண வானிலை நிலவியது.

''எம்.வி. இராமானுஜம்'' என்ற பயணிகள் கப்பல் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அகதிகளை ஏற்றிச் செல்லுகிறது. இப்பணிக் கென்று இக்கப்பல் மைய அரசின் உள் துறையில் முழு உரிமையாக வாடகைக்கு அமர்த்தப்பட்டது. ஆகும். 17,226 அகதிகள் இராமேசுவரத்திலிருந்து இலங்கைக்கு இக்கப்பலில் இவ்வாண்டில் சென்றுள்ளனர்.

பாம்பன் துறைமுகம்.— வடகிழக்கு பருவ நிலையால் நவம்பர் 1988-லிருந்து சனவரி 1989 வரை வானிலையில் மாற்றம் ஏற்பட்டது. மற்ற மாதங்களில் வானிலை சீராக இருந்தது.

இந்த ஆண்டில் 83 கலங்கள் பாம்பன் கால்வாயைக் கடந்து செல்ல வழிகாட்டப்பட்டுள்ளன. இத்துறைமுகத்தில் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து கிடையாது.

குளச்சல் துறைமுகம்.—வானிலை சாதாரணமாக இருந்தது. குறிப்பிடத்தக்க மாறுதல் ஏதும் இல்லை.

இந்த ஆண்டில், இரண்டு கப்பல்கள் இத் துறைமுகத்திற்கு வந்தன இரண்டு கப்பல்கள் இத்துறைமுகத்தை விட்டுச் சென்றன.

25,800 மெட்ரிக் டன் எடையுள்ள இல்லுமினைட் மணல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

மற்ற துறைமுகங்கள் :

(கன்னியாகுமரி, கீழக்கரை மற்றும் வாலி நோக்கம்).

வானிலை சாதாரணமாக பருவகாலத்தை ஒட்டியே இருந்தது.

வாலி நோக்கம் துறைமுகம் :

இத் துறைமுகம் ஒரு சிறு துறைமுகமாகும். இது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. கப்பல்கள் இத் துறைமுகத்திற்கு, கப்பல்களை உடைத்தெடுப்பதற்காக வருகின்றன. இதுவரை மூன்று கப்பல்கள், உடைத்தெடுப்பதற்காக இத் துறைமுகத்திற்கு வந்துள்ளன.

கன்னியாகுமரி :

படகுப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி மேற்பார்வையிடுவது மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தால் கரைக்கும், விவேகானந்தர் நினைவு பாறைக்கும் இடையே நடத்தப்படும் பயணிகள் போக்குவரத்தை மேற்பார்வையிடுவது ஆகிய பணிகளை இத் துறைமுகம் முக்கியமாகக் கவனித்து வருகிறது.

## தமிழ்நாடு இயக்கூர்திகள் இயக்ககம்

மோட்டார் வாகன பராமரிப்புத்துறை 1977 ஆம் ஆண்டு முதல் ஒரு இயக்குநரைக் கொண்டு தனித்துறையாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இத்துறை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் பணித்துறையாக இயங்கிக் கொண்டு வருகிறது. தற்பொழுது இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 14 தானியங்கிப் பணிமனைகளும் ஒரு சுத்திகரிப்பு நிலையமும் தமிழ்நாடு அரசின் பல துறைகளுக்கு சொந்தமான சுமார் 7,000 வாகனங்களை பழுது பார்த்தும் பராமரித்தும் இயங்கி வருகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 10 எரிபொருள் வழங்கும் நிலையங்கள் சென்னையில் இரண்டும், தஞ்சாவூர், சேலம், மதுரை, கோயம்புத்தூர், கடலூர், திருச்சி, தர்மபுரி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று வீதமும்) அரசு துறைக்குச் சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும் பொருட்டு இயங்கி வருகின்றது.

வாகனங்கள் செலவினங்களுக்காக கணக்குகள் அதன் தொடர்பான பதிவேடுகள் ஆகியவற்றை தணிக்கை செய்யவும் எரிபொருள் தவறான முறையில் பயன்படுத்துவதை கண்டுபிடிக்கவும் மற்றும் வாகனங்களை முறையற்ற வகையில் பராமரிப்பதை கண்டு பிடிக்கவும் இதன்மூலமாக வாகனங்களை நல்ல முறையில் பயன்படுத்துவதிலும் பராமரிப்பதிலும் முன்னேற்றம் காணவேண்டும் என்ற நோக்குடன் திட்டம் தீட்டப்பட்டு அதன் தொடர்பாக வாகனங்கள் தணிக்கைக் குழு செயலாற்றிக் கொண்டு வருகிறது.

பணியிடை பயிற்சி என்றும் திட்டம் ஓட்டுநர்களுக்கு வாகனங்களை சிறிய முறையில் பராமரிக்கவும் ஓட்டவும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதற்கென இத்துறைக்கு ஒரு தானியங்கிப் பொறியாளர் மற்றும் 8 ஓட்டுநர் பயிற்சியாளர்கள் பதவிகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சியின் முடிவில் ஓட்டுநர்களுக்கு சான்றிதழும் அளிக்கப்படுகிறது.

துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் பயிற்சியின் மூலம் ஊர்தியின் உருளைகளை குறிப்பிட்ட நேரம் மற்றும் கிலோமீட்டரிலும் புதுப்பித்தல் மின்கலங்களை முதிர்வடையா முன்பே மாற்றுதலை தவிர்த்தல், எரிபொருள் செலவிடுதல், சிக்கனம் ஊர்திகளை சரியான முறையில் பராமரித்தல் நெருக்கடி பழுதுபடல்களை சரிபார்த்தல் முதலியவைகளை அறிந்து கொள்கின்றனர். இதன் மூலம் ஊர்தி பராமரிப்பு செலவு குறைவதுடன் ஊர்திகளின் ஆயுட்காலம் நீட்டிக்கப்பட்டு ஊர்தியின் ஓட்டமும் முறைப்படுத்தப்படுகிறது.

1—4—1983 முதல் வாகனங்கள் பராமரிக்க பொது வரவு செலவு திட்டம் இத்துறையில் புகுத்தப்பட்டு அதன் மூலம் பராமரிக்க முழு தொகையினையும் இத்துறைக்கு பிரித்து கொடுக்கப்பட்டதன் மூலம் இதுநாள்வரை வண்டிக்கு சொந்தமான அதிகாரிகளால் பராமரிக்கப்பட்டு வந்த முறைக்கு பதிலாக இத்துறையே எல்லா வாகனங்களையும் பழுதுபார்ப்பதையும் பராமரிப்பதையும் செயல்படுத்தி வருகிறது.

இத்துறையின் திறமையை முடுக்கிவிடுவதற்காகவும் வாகனங்கள் பராமரிப்புத் திட்டத்தினை அபிவிருத்தி அடையச் செய்வதற்காகவும் ''சி.பி.எம்.'' முறையின் மூலம் அடுக்கு பாகங்கள் பொருத்தும் முறை புகுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள பலன்களையும் இத்துறை அடைந்துள்ளது.

(அ) வாகனங்கள் பணிமனையில் நிறுத்தப்பட்டிருக்கும் காலம் குறைக்கப்பட்டுள்ளது.

(ஆ) வாகனங்களுக்கு தேவையான பழுதுகளை நீக்கும் பொருட்டு, பழுதடைந்த அடுக்கு பாகங்கள் எடுக்கப்பட்டு முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(இ) அடுக்கு பாகங்களை முழுவதுமாக பழுது பார்க்கும் பணி விலை மதிப்பு மிக்க கருவிகளைக் கொண்டும் சிறப்பாக தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளைக் கொண்டும் பார்க்கப்படுவதால் பூரணமாக பழுதுபார்க்கும் நிலை உறுதியாக்கப்பட்டுள்ளது.

(ஈ) அடுக்கு பாகங்கள் பூரணமாக பழுதுகள் நீக்கப்படுவதால் வாகனங்கள் ஓடிக் கொண்டு இருக்கும்பொழுது பழுதடைவது தவிர்க்கப்பட்டுள்ளது.

(உ) வாகனங்களுக்கு விரைவாக பழுதுகள் நீக்கப்படுவதால் அவைகளை சாலையில் ஓடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

(ஊ) வாகனங்கள் சாலையில் ஓடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் செயல் அலுவலர்கள் அதிகமான திட்டப்பணிகளை ஆய்வு செய்ய முடிவதோடு தரமான பணிகள் புரியும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குவிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் மூலம் அரசுக்கு வாகனங்களைப் பராமரிப்பதன் மூலம் ஏற்படும் செலவுகள் குறைவதோடு மட்டும் அல்லாமல் வாகனங்கள் ஆண்டில் அதிகமாக சாலையில் ஓடும் நாட்களை அதிகப்படுத்தி இருப்பதன் மூலம் பல துறைகள் திட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றிட உதவி புரிய முடிகிறது.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.